வ்யா.—[సాకిమర్థం న సేవ్యతే - ஸாகிமர்த்தம்நஸேவ்யதே] ப்ராப்தமன்றென்னவொண்ணாது, துஃகநிவர்த்தகமன்றென்ன வொண்ணாது; "வயிறுநோவாநின்றது, சவி" என்பாரைப்போலே, அநிச்சைசொல்லிக் கைவாங்குமித்தனையிறே யுள்ளது. அர்த்தத்தில் மாறாட்டமில்லை, ப்ரதிபத்தியில்மாறாட்டமேயுள்ளது!. இந்நிழலிலேயிருந்துவைத்து "ஓதுங்கிற்றிலேன்" என்பாரைச செய்யலாவதில்லையே!. "இவர்கண்ணாலகாண்கிறவிஷயங்களுக்கு அவ்வருகறியாதிருக்கிறாராகில், நம்மையும் அவ்விஷயங்களோபாதி யிவர்கண்ணுக் கிலக்காக்கினால் விரும்பாதொழியாரிறே!" என்று பார்த்து, (க) உகந்தருளினநிலங்களிலேவந்து ஸந்நிதிபண்ணி யிவரைவிஷயீகரித்து, தன்படிகளை (உ) அடையக் காட்டிகொடுத்து, தன்னாலல்லது செல்லாதபடிபண்ணி யிவரையநுபவிப்பித்து, இங்கேயிருந்தே பரமபதத்திலுள்ளார்படி யாம்படிபண்ணி, அத்தேசப்ராப்தியையு மிவர்க்குப் பண்ணிக்கொடுத்தானென்கிறது-இப்ப்ரபந்தங்க ளெல்லாவற்றாலும். ... ... ...

அ.—இனி ஸேவியாதிருக்கைக்கு நிமித்தந்தானென்னென்ன வருளிச்செய்கிறார் (வயிறித்யாதி;) சிறுப்பிள்ளைகள், விளையாட்டில்பராக்காலே, "உண்ணவா" என்றழைத்தால், "எனக்கு வயிறுநோகிறது, வேண்டா" என்று, பசியாநிற்கச்செய்தேயும் சொல்லுவர்கள்: அதுக்குமேலே மாதாபிதாக்கள் நிர்ப்பந்தித்தழைக்கப்புக்கால், "நீங்களே சவியுங்கோள், அதாவது-வையுங்கோள், நான் (ங) ஸர்வாத்மநா உண்ணவருகிறதில்லை" என்று அஸௌக்யம் (ச) வஹிக்குமாப்போலே, ஈச்வரன் (ரு) ஸர்வத்ர இருந்து ஹிதம்செய்யவந்தாலும் விஷயப்ராவண்யத்தாலே நிஷேதிப்பர்களென்று கருத்து. அநிச்சை சொல்லி - வேண்டாமையைச்சொல்லியென்கை. இந்த ச்லோகத்துக்கு ரிஷியினுடைய ஈடுபாடு தோற்ற ஒருதாத்பர்யத்தையருளிச்செய்கிறார் (அர்த்தத்திலித்யாதிவாக்யத்வயத்தாலே.) ஆக, இவ்வாழ்வாரும் பகவத்ப்ரவணரன்றிக்கே விஷயப்ரவணராயிருந்தாரென்று பூர்வவ்ர்த்தம் சொல்லிற்றாய்த்து. இப்படியிருக்குமிவரை ஈச்வரன் திருத்தின ப்ரகாரமென்னென்ன; அத்தையருளிச் செய்யாநின்றுகொண்டு, ப்ரமாணமும் காட்டுகிறார் (இவர்கண்ணாலித்யாதி.) இப்ப்ரபந்தங்களெல்லாவற்றாலுமென்றது-ஆறு ப்ரபந்தங்களாலுமென்றபடி. அர்ச்சாவதாரப்ராவண்யாதிகள் இப்ப்ரபந்தங்களிலே யுண்டாகையால் ஈச்வரன் இவற்றைக்காட்டித்திருத்தினது அர்த்தஸித்தம்.*

(க) உகந்தருளின நிலங்கள் - எம்பெருமான் விரும்பி வர்த்திக்குமிடங்கள்; அதாவது-திவ்யதேசங்கள். (உ) அடைய - எல்லாம். (ங) ஸர்வாத்மநா - எல்லாப்படியாலும். (ச) வஹித்தல் - மேற்கொள்ளுதல். (ரு) ஸர்வத்ர - எங்கும்.

மூலம்.—வாடினேன்;

வ்யா.—“இவர் பக்கல் (க) அத்வேஷமும் விஷயங்களினுடைய (உ) லாகவமுமே இவரை மீட்கைக்குப் (ங) பரிகரமாகவும், இவருடைய ரஸிகத்வமே தன் வாசி யறிகைக்குப் (ச) பற்றாசாகவும், அநாதிகாலம்பண்ணின பாபாம்சத்தை நம் க்ர்பைக்கு விஷயமாக்குவோம்” என்றுபார்த்து, இவர் விஷயங்களின் வாசியறிந்து, தன்னையறிகைக்கு, கிழிச்சீரையோடே தநத்தைக் கொடுப்பாரைப்போலே, தனக்கு வாசகமான திருமந்த்ரம் முன்னாகத் தன்ஸ்வரூபரூபகுணவிபூதிகளை (ரு) அடங்கக்காட்டிக்கொடுக்க, கண்டனுபவித்து, அயோக்யனான வென்னை அதுதானே ஹேதுவாக விஷயீகரித்தான்! என்று (சு) க்ர்தஜ்ஞராகையாலே, ஒருக்கால் சொன்னத்தை ஒன்பதின்கால் சொல்லிக்கூப்பிடுகிறார். பகவத்விஷயத்தில் நேர்கொடுநேர் செய்யலாவதொன்றில்லை, செய்யவேண்டுவதுமொன்றில்லை; பண்ணின வுபகாரத்துக்கு க்ர்தஜ்ஞராமித்தனையே வேண்டுவது (எ) அசித்வ்யாவ்ர்த்திதோற்ற. ... *

அவதாரிகை.—முதற்பாட்டு. நம்மாழ்வார், ஸர்வேச்வரனை ஸாக்ஷாத்கரித்தவநந்தரம், தாம்பெற்ற பேறறியாதே “இந்நின்ற நீர்மையினி யாமுறாமை” என்று கீழ்நின்ற நிலையை அநுஸந்தித்தாப்போலே, இவரும், பகவத்விஷயீகாரம் பிறந்தபின்பு தாம்கீழ் நின்றநிலையையெல்லாம் (அ) அநுஸந்தித்து “வாடினேன்” என்கிறார்.

வ்யா.—(வாடினேன்) கொம்பையிழந்த தளிர்போலே. (கூ) ஆச்ரயத்துக்கு அழிவில்லாமையாலே இன்னம்நோக்குவோம்என்னில்; நோக்குகைக்கு யோக்யதை யுண்டென்கை. “அநந்யா ராகவேணாஹம்”

அ.—இவரைத் திருத்துகைக்கு நிமித்தத்தையும், முதல்திருமொழியின் தாத்பர்யத்தையு மருளிச்செய்கிறார் (இவர்பக்கலித்யாதி.) லாகவமென்றது - அல்பாஸ்திரத்வாதிகள். கிழிச்சீரை - த்ரவ்யமிருந்தபுடவை. க்ர்தஜ்ஞரானால் ப்ரத்யுபகாரம்பண்ணாதே கூப்பிடுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (பகவதித்யாதி.) *

முதற்பாட்டு.—(வாடினேனித்யாதி-) தம்மை அவன்கடாக்ஷித்தால் அவனையநுபவிக்கு மத்தனைபோக்கி, பூர்வவ்ர்த்தத்தைத் தாம் சொல்லுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (நம்மாழ்வாரித்யாதி.) வாடினேனென்கிறாரென்றது- பூர்வவ்ர்த்தத்துக்கெல்லாம் உபலக்ஷணம்.

உலர்ந்தேனென்னாதே, “வாடினேன்” என்றதுக்கு தாத்பர்ய மருளிச்செய்கி

ஐ.) ஆச்ரயத்துக்கு - ஆத்மஸ்வரூபத்துக்கென்றபடி.

(க) அத்வேஷம் - த்வேஷமில்லாமை. (உ) லாகவம் - இலேசாயிருக்கை. (ங) பரிகரம் - கருவி. (ச) பற்றாசு - ஹேது. (ரு) அடங்க - எல்லாம். (சு) க்ர்தஜ்ஞர் - நன்றிமறவாதவர். (எ) அசித்வ்யாவ்ர்த்தி - அசித்து - உயிரில்லாதது, அதினின்றும் வேறுபட்டிருக்கை. (அ) அநுஸந்திக்கை - நினைக்கை. (கூ) ஆச்ரயம் - பற்றுமிடம்.

வ்யா.—"அநந்யாராகவேணுஹம்" என்கிற பிராட்டியோடொத்தப்ராப்தி ஸகலாத்மாக்களுக்கு முண்டானபின்பு, இப்ப்ராப்தியை யுணர்ந்தால், அநாதிகல மிழந்தவர்க்கு "வாடினேன்" என்னத்தட்டில்லையிறே. [यश्च रामं न पश्येत्तु - யச்சராமம்நபச்யேத்து] [रामं - ராமம்] என்றது-கண்ணுக்கு வகுத்த விஷயத்தை; காணுதிருக்கிருன் யாவனொருவன். [यः - ய:] எத்தனையேனு முயர்ந்தவனுகவுமாம். [तु - து] இதுதப்பினும். தப்பாதது தப்பினல் வருமதுஇவ்வளவன்று என்கைக்காகவிசேஷிக்கிறது. [यं च रामो न पश्यति - யஞ்சராமோநபச்யதி] எத்தனையேனும் சிறியாரும் இவர்கண்பார்வைக் கிலக்காகாதாரில்லை. [यं - யம்] எத்தனையேனும் சிறியவனென்கிறது. எத்தனையேனும் சிறியாரிறே இவர்கண்ணிற்பார்வைக் கிலக்காவார். [யாருமோர்நிலைமையனென வறிவரிய வெம்பெருமான்|யாருமோர்நிலைமையனென வறிவெளியவெம்பெருமான்] ப்ரஹ்மாதிகளுடைய ஜ்ஞாநத்துககும் அவிஷயமாயிருக்கும்; (௧) ஓரிடைச்சிக்கும் (௨)வேடனுக்கும் கைப்புகுந்திருக்கும. எத்தனையேனு முயர்ந்தவனுகிலும் (௩) பெருமாளுடைய ஒருநாளைப் புறப்பாடு காணுகில் அவன்பெரியனலலன்; எத்தனையேனும் சிறியனுனவன் பக்கலிலும் தப்பாது அவருடைய பார்வை; தப்புகிருன் யாவனொருவன், அவன் அவஸ்துககளோடு மெண்ணபபடான்; எண்ணப்படாமையிலே யெண்ணப்படும்; - எல்லாரும் நிந்தித்து "சீ, சீ" என்னப்படும். இவனைநிந்திப்பார் வஸிஷ்டாதிகள் துடக்கமானர் நால்வரிருவரோ வென்னில் [निन्दितस्सर्वलोकेषु - நிந்திதஸ் ஸவேஸ்ல் லோகே] [लोके - निन्दितः, லோகே-நிந்தித:] இவனைநிந்திக்கைக்குரியரல்லாதாரில்லை.

அ.—"வாடிவாடுமிவ்வாணுதல்" என்கிறபடியே பிராட்டிவிஷயத்தில் சொல்லத்தக்க வார்த்தையைத் தாமிபபோது சொல்லக்கூடுமோ வென்ன வருளிச்செய்கிருர் (அநந்யேத்யாதி.) தாய்மார் "வாடிவாடும்" என்றுசொன்ஞர்களேயாகிலும், இவர்தாம் அவ்விஷயத்தி லிவ்வார்தையைச்சொல்லித் தம்மைத்தாமேநிந்தித்துக்கொள்ளக்கூடுமோவென்ன; த்ர்ஷ்டாந்தமுகேநவருளிச்செய்கிருர் (யச்ச ராமமென்றுதுடங்கி, வாடினேனென்றல்லது வார்த்தையில்லையிறே யென்னுமளவும்.) "ய:" என்று மேலெடுத்தப்ரதீகத்தை, (விஷயத்தை) என்றவநந்தரம் அநுஸந்தித்துக்கொள்வது. (௪) ப்ராதாந்யே சகாரமென்றருளிச்செய்கிருர் (எத்தனையேனு முயர்ந்தவனித்யாதி.) இதுவென்றது - தன்னுடைய ஸேவையென்கை, தப்பாதது - பெருமாளுடைய கடாக்ஷம். "ராமச்ச" என்றநவயித்து அதிநிக்ர்ஷ்டனையும் கடாக்ஷிக்குமவரென்கிற ப்ராதாந்யத்தை விவக்ஷித்தருளிச்செய்கிருர் (எத்தனையேனும் சிறியாருமித்யாதி,) "यं" "யம்" என்றது நிக்ர்ஷ்டவிஷயமாவானென்னென்ன வருளிச்செய்கிருர் (எத்தனையேனுமித்யாதி.) உத்க்ர்ஷ்டரைக் கடாக்ஷியாமல் நிக்ர்ஷ்டரைக்கடாக்ஷிப்பரென்னுமதுக்கு ஸம்வாதம் (யாருமித்யாதி.) பூர்வார்த்தத்தில் தாத்பர்யத்தை யருளிச்செய்யாநின்று கொண்டு, "நிந்தித:" இத்யாதிக்கவதாரிகை யருளிச்செய்கிருர் (எத்தனையேனுமித்யாதி வாக்யஷட்கத்தாலே.)

(௧) இடைச்சி - யசோதைப்பிராட்டி. (௨) வேடன்-குஹப்பெருமாள், (௩) பெருமாள் - நம்பெருமாள். (௪) ப்ராதாநயே சகாரம் - உயர்வுசிறப்பும்மை,

மூ.—வாடி

வ்யா.—விஷயப்ரவணனானவன், இப்போது பழியாய் மேல் நரகமாயிருக்கச்செய்தே, தான் "நல்லது செய்கிறேம்" என்றிருக்குமிறே; அப்படி, தான் "நல்லது செய்கிறேம்" என்றிருக்குமோ வென்னில் [ஸ்வாத்மாப்யேநம் விகர்ஹதே] தானும் தன்னைநிந்தித்துக் கொள்ளும். (க) திருக்கைத்தலமிழந்தவன், "(உ) இற்றைப்புறப்பாடு காணப்பெறாத நாம் கர்ப்பூரமும் எலுமிச்சங்காயும் பெற்றோமாகில்முடிந்துபிழைக்கலாய்த்து!" என்றிருக்குமிறே; ஒருநாளைப் புறப்பாடிழந்தார்வார்த்தையிது வானால், அநாதிகாலமிழந்தவர்க்கு, வாடினேன்! என்றல்லது வார்த்தையில்லையிறே. (வாடினேன்) என்றவிதுதான் எவ்வவஸ்தையைப்பற்றச் சொல்லுகிறவார்த்தை?;-விஷயப்ரவணராய்ப் போந்தபோது அவற்றையநுபவித்துக் களித்துப்போருகையாலே வாட்டமில்லை, பகவத்விஷயத்தில் கைவைத்தபின்புதானே வாட்டமில்லை; ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்து பூர்வவ்ருத்தத்தையநுஸந்தித்தபோதைவார்த்தை. ப்ராப்திஸமயத்திலிறே பூர்வவ்ருத்தத்தை ஸ்மரியாதொழிவது, "[illegible]" "நோபஜநம்ஸ்மரந்" என்னுமளவும் வந்ததில்லையிறே; ஜ்ஞாநலாபவேளையாகையாலே பூர்வவ்ருத்தந்தானிவர்க்கு ப்ரத்யக்ஷம்போலேயிறே தோற்றுகிறது.

(வாடி) என்கிற (௩) இவ்வநுபாஷணம், இரண்டிடத்திலும் பொருள் பெற்றுக்கிடக்கிறது.

அ.—மேலுக்கவதாரிகை (விஷயேத்யாதி.) ஆழ்வார்தம்மை நிந்தித்தமைக்குப் பின்னையுமொருத்ருஷ்டாந்தம் (திருக்கைத்தலமித்யாதி.) கைவைத்த-இச்சரீரத்தோடே பகவதநுபவம்பண்ணின. (வாட்டமில்லை) என்றவநந்தரம், எங்கேயென்னில் என்று சேஷம். ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால் பூர்வவ்ருத்தஸ்மரணம் வருவானென்னென்ன வருளிச்செய்கிறார் (ப்ராப்தீத்யாதி வாக்யத்வயத்தாலே.) வாடினேன் - விஷயபரனாய்க் கெட்டேனென்னுமது இவ்வாழ்வார்க்குச் சேராது, விஷயபரராயிருந்தபோது களிப்புண்டாகையாலே கெட்டேனென்னக் கூடாமையாலே; இப்போது விஷயபரதை யில்லாமையால் (ச) ஸுதராம் கெட்டேனென்னக் கூடாது என்னும்சங்கையிலே யருளிச்செய்கிறார் (ஜ்ஞாநேத்யாதி;) முன்புத்தை விஷயஸங்கம் இப்போது ப்ரத்யக்ஷம்போலே விசதமாகத் தோற்றுகையாலே இப்போது க்லேசம் பிறக்கையாலே சொல்லுகிறாரென்று கருத்து.

"வாடினேன், வருந்தினேன்" என்னுமளவும்(ரு)பௌர்வாபர்யம்தோற்றியிருக்கவும், "வாடி" என்ற (சு) ல்யபந்தமானபுநருக்திக்குப்ரயோஜநம்காட்டுகிறார் (வாடியித்யாதி.) இத்தால்-கீழ் "வாடினேன்" என்றதுக்கு-சிரகாலஸம்பந்தமும், மேலேவருகிறதுக்கு அத்யந்த ஸந்நிஹிதத்வமும் தோற்றுவிக்கையாலே, அதுக்கு ப்ரயோஜநமுண்டென்றதாய்த்து. பொருள் - ப்ரயோஜநம்.

(க) திருக்கைத்தலம் - திருக்கைத்தலஸேவை. (உ) இற்றை - இன்றைய. (௩) அநுபாஷணம்-அநுவாதம். (ச) ஸுதராம் - மிகவும். (ரு) பௌர்வாபர்யம்-முன்பின்னாயிருக்கை. (சு) ல்யபந்தம் - வினையெச்சத்தொடர்.

மூ.—வருந்தினேன் மனத்தால்; பெருந்துயரிடும்பையில்

ப-ரை.—பெருந்துயர் - மிகுந்ததுன்பத்துக்குக் கொள்கலமாய், இடும்பையில் - துன்பங்களுக்கெல்லாம் ஹேதுவான சரீரத்திலே,

வ்யா.—அநாதிகாலம் இவ்விழவு ப்ரவர்த்தமாய்ப் போந்ததென்றும், மேலே ஓரநர்த்தத்தை விளைத்ததென்றும் தோற்றுகிறது. விஷயப்ராவண்யம் (க) காதாசித்கமாய் அநுதாபம்பிறந்து மீளுகையன்றிக்கே அநாதிகால மிதுவே யாத்ரையாய்ப்போந்ததென்றும், இவ்வளவன்றிக்கே இதுக்குமேலே விளைந்ததோரநர்த்தத்தைச்சொல்ல வொருப்பட்டமையும் தோற்றுகிறது. மேல் விளைந்தஅநர்த்தந்தானேதென்னில் (வருந்தினேன்மனத்தால்) மாநஸமான க்லேசத்தை அநுபவித்துப்போந்தேன். இந்த்ரியங்கள் விஷயங்களிலே ப்ரவணமாய் அவற்றையநுபவிக்கக்கோலி அவற்றை லபியாமையாலும், லபித்தாலும் அவற்றிலநுபவிக்கலாவதொன்றில்லாமையாலும், மாநஸமான க்லேசத்தை யநுபவித்துப்போந்தேன்; ஸர்வேந்த்ரியங்களுக்கும் (உ) கந்தமானமநஸ்ஸை (ங) ப்ரத்யகர்த்தப்ராவணமாக்க மாட்டாமையாலே, மாநஸமான க்லேசத்தை யநுபவித்தேன். இத்தால் சொல்லிற்றாய்த்து- சப்தாதிவிஷயங்களிலே ப்ரவணனாய் திருவடிகளை யொருநாளும் நினைக்கப்பெற்றிலேனென்றபடி. (பெருந்துயரிடும்பையிற்பிறந்து) விஷயங்களிலே ருசியைப்பிறப்பித்து, வாஸநையையுண்டாக்கி, ராக த்வேஷங்களைமிகுத்து, இதிலுண்டானஅவித்யாகர்மங்களும் சரீராரம்பஹேதுவாகவந்து பிறந்தேன். துயரென்று - து:கம்; இடும்பையென்றும்-து:கம். இத்தால் - சரீரந்தான் (ச) து:காயதநமுமாய், து:கஹேதுவுமாயிருக்குமென்கை. து:காயதநமுமாய் மேலே அநேக து:கங்களை விளைக்கவும்வற்றாயிருக்கை.

அ.—சிரகாலஸம்பந்தத்தையும் மேலே ஸந்நிஹிதமாக வோரநர்த்தமுண்டென்றுமத்தையு முபபாதிக்கிறார் (அநாதீத்யாதி.) பிற்வாக்யவிவரணம் (விஷயேத்யாதி.)

சப்தார்த்தமருளிச்செய்து, மாநஸமான க்லேசத்துக்கு மூன்றுஹேதுக்களைக்காட்டாநின்றுகொண்டு, தாத்பர்யமருளிச்செய்கிறார் (இந்த்ரியங்களித்யாதி வாக்யத்வயத்தாலே.) ப்ரத்யகர்த்தமென்று - ஜீவேச்வர தத்த்வங்களை.

சரீரத்தை "பெரிதானதுயர்" என்றும் "இடும்பை" என்றும் இப்படிலக்ஷணயாவருளிச்செய்ததுக்கு தாத்பர்யமருளிச்செய்கிறார்(விஷயங்களிலேயித்யாதி.) இதில் - சரீரத்தில்.

(க) காதாசித்கமாய் - ஒருக்காலுண்டாய். (உ) கந்தம்- மூலம். (ங) ப்ரத்யகர்த்த ப்ராவணமாக்குகை - ஆத்மப்ராவணமாக்குகை. (ச) து:காயதநம் - து:க்கத்துக்கு, ஆயதநம் - கொள்கலம்.

மூ.—பிறந்து | கூடினேன்;

ப-ரை.—பிறந்து - உண்டாய், கூடினேன் - சரீரம் என்றும் ஆத்மா என்றும் பகுத்தறியக்கூடாதபடி ஒன்றாய்ப் பொருந்தினேன்;

வ்யா.—"பெருந்துயரிடும்பையிற்பிறந்து-கூடி-வாடினேன்" என்னாதே, முதலிலே "வாடினேன்" என்பானென்னென்னில்; கர்மஸம்பந்தம்அநாதியாய் அசித்ஸம்ஸர்க்கமும் ப்ரவாஹரூபேண நித்யமாயிருக்கையாலே, நடுவேயொன்றைப்பிடித்துச் சொல்லுகிறார். (பிறந்து) ஜந்மமரணங்களில்லாத ஆத்மா "செத்தான், பிறந்தான்" என்று, வ்யவஹாராஸ்பதமாகையாலே. (கூடினேன்) நித்யமாய் ஏகரூபமாய் ஜ்ஞாநாநந்தலக்ஷணமாய் பகவச்சேஷமான ஆத்மாவை, (க) "தேவோஹம், மநுஷ்யோஹம்" என்னலாம்படியானபடி. (கூடினேன்) (உ) அசித்ஸம்ஸர்க்கந்தான் ஸத்தாப்ரயுக்தமென்னலாம்படி பொருந்தினபடி. (கூடினேன்) என்கையாலே - இதுதான் ஆத்மாவுக்கு ஸ்வரூபமன்று, ஔபாதிகம்-வந்தேறி, என்னுமிடம்தோற்றுகிறது. ராஜபுத்ரன் வழிபோகாநிற்க வேடர்கையிலே யகப்பட்டாப்போலேயிறே ஆத்மாவுக்குஅசித்ஸம்ஸர்க்கந்தான் வந்தபடி. (ங) அயஃபிண்டத்தை அக்நியினருகே வைத்தால் அக்நிபரமாணுக்கள் ஸூக்ஷ்மரூபேண அதிலே ஸங்க்ரமித்தாதல் வாஸநையாலேயாதல் அதினுடைய ஔஷ்ண்யஸ்வபாவத்தையும் நிறத்தையும் பஜித்து அதுதானென்னலாமாப் போலே,

அ.—அர்த்தஸ்வபாவத்தாலே, முந்துற "பெருந்துயரிடும்பையிற் பிறந்து கூடினேன், கூடி யிளையவர்தம்மோடு அவர்தருங்கலவியேகருதியோடினேன், ஓடி-மநத்தால்-வருந்தினேன், வருந்தி-வாடினேன், வாடி, உய்வதோர்பொருளால்-நாடினேன், நாடி நான்-நாராயணாவென்னும் நாமம்- கண்டுகொண்டேன்" என்றந்வயித்தர்த்தம் சொல்லலாயிருக்க, இருந்தபடியே அந்வயித்துஅர்த்தம் சொல்லுகை சேருமோவென்னும் சங்கையை யநுவதிக்கிறார் (பெருந்துயரித்யாதி.) 'கூடி" என்றது-கீழ்ப்பதங்களையும் மேல்பதங்களையும்அர்த்தஸ்வபாவத்துக்கநுகுணமாகவெடுக்க வேண்டும் பதங்களுக்கும் உபலக்ஷணம். இத்தைப்பரிஹரிக்கிறார்(கர்மேத்யாதி.)இப்போது ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்துகீழ்ப்பட்ட ப்ரமாதங்களை யநுஸந்திக்குமவர்க்கு சரீரஸம்பந்தாதிகள் ப்ரவாஹதோ நித்யங்களாகையாலே,ஒன்றை யிட்டு க்ரமேணவருளிச்செய்கிறாரென்று கருத்து. "கூடினேன்"என்றதுக்கு ஒரு காலாவதி சொல்லாமையாலே பலித்தவர்த்த மருளிச்செய்கிறார் (அசித்ஸம்ஸர்க்கந்தானித்யாதி.) சில நாள் பிரிந்தவற்றுக்கன்றோ கூடுகையென்னலாவது, (ச) ஸத்தாப்ரயுக்தம் என்னுமாப்போலே யிருந்தால் இச்சப்தம் ப்ரயோகிக்கப் போமோவென்ன வருளிச்செய்கிறார் (இதுதானித்யாதி;) பின்பொருநாள் வரையிலே கழியக்காண்கையாலே ஜ்ஞாநம் பிறந்தவிவர் "கூடினேன்" என்னலாமே யென்றுகருத்து. "வந்தேறி" என்னுமத்தை த்ருஷ்டாந்த முகேந விவரிக்கிறார் (ராஜபுத்ரனித்யாதி.) இப்படி ஔபாதிக மானால் "தேவோஹம்" என்று தத்ஸ்வரூபமாக ப்ரமிக்கக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அயஃபிண்டேத்யாதி.) வாஸநையாலே யாதல் - சிரகால ஸம்பந்தத்தாலே யாதலென்றபடி.

(க) தேவோஹம், மநுஷ்யோஹம் - நான்தேவன், நான்மநுஷ்யன். (உ) ஸம்ஸர்க்கம்-செயற்கை. (ங) அயஃபிண்டம் - இரும்புருளை. (ச) ஸத்தாப்ரயுக்தம்-உடன்பிறந்தது.

மூ.—கூடி யிளையவர்தம்மோடவர்தரும்

ப-ரை.—கூடி - இப்படி நெடுங்காலம் பொருந்தி யிருந்து, இளையவர் - யுவதிகளான ஸ்த்ரீகள், தரும் - கொடுக்கிற,

வ்யா.—இவ்வாத்மாவும் அசித்ஸம்ஸர்க்கத்தாலே அதுதானென்னலாம்படி அசித்கல்பமானபடி. (க) பரமாணுப்பற்று சிவப்புமாறினாலும் வாஸனையாலேசுடும்.

(கூடி) சரீரவிச்லேஷம் அஸஹ்யமாம்படி பொருந்ினபடி. ஜ்ஞாநம் பிறந்தால் சரீரவிச்லேஷந்தான் ப்ரார்த்தித்துப் பெறவேண்டும்படி யானபடி. கூடி என்கையாலே-அநாதிகாலம் இத்தோடே பொருந்திப் போந்தமையும், இதுக்குமேலே ஓரநர்த்தம் விளைந்ததென்றும் தோற்றுகிறது.

மேல்விளைந்த அநர்த்தந்தானென்னென்னில் (இளையவர்தம்மோ டவர்தரும் கலவியேகருதி யோடினேன்) (இளையவர்) "சப்தாதிவிஷயப்ராவண்யம் அநர்த்தம்" என்று ஆராயவுமொட்டாதே, பகவத்விஷயத்தில் நன்மையை யறிந்து அதிலே மூளவுமொட்டாதே✝, பருவத்தையிட்டுப் பகட்டித் துவக்குவர்கள். (தம்மோடு) "छायावत्सत्त्वमनुगच्छेत्" "சாயாவாஸத்த்வமநுகச்சேத்" என்கிறதுவுமெல்லா மிங்கே. நல்லதொரு பூமாலைகண்டால், தன் தலையிலே வைத்தல் தன்னையொருவனுக நினைத்திருத்தல் செய்யாதே, அவர்கள்போனஅடிவழியே போமித்தனை. "येनयेन धाता गच्छति तेनतेन सह गच्छति" "யேநயேநதாதாகச்சதி தேநதேநஸஹகச்சதி" என்கிறதுவுமெல்லாமிங்கே.

(அவர்தரும்கலவி)கிட்டினபோதுசிரித்து வார்த்தைசொல்லியிருந்து, "இனியிவன் கைப்பட்டான்" என்றறிந்தால், தங்களைக்கொண்டு எழவாங்கியிருப்பர்கள்.

அ.—வாஸனையாலே அதுதான் என்னலாம்படி யெண்ணுமதெங்கே யென்னவருளிச்செய்கிறுர் (பரமாணுவித்யாதி.)

"கூடினேன்" என்றதுக்கு - தேவோஹம்என்று தாதாத்ம்யப்ரமம் வரும்படி கூடினேனென்று தாத்பர்ய மருளிச்செய்து, அதுக்கு சரீரவிச்லேஷமஸஹ்யமாம்படி கூடினேனென்று தாத்பர்யாந்தரம் விவக்ஷித்து, அநுபாஷணத்துக்கு தாத்பர்யமருளிச்செய்கிறுர் (சரீரேத்யாதி.) சரீரவிச்லேஷமஸஹ்யமாவதெப்போதென்னவருளிச்செய்கிறுர் (ஜ்ஞாநமித்யாதி.) முந்தின தாத்பர்யத்திலே அநுபாஷணத்துக்கு ப்ரயோஜநத்தை யருளிச்செய்கிறுர்(கூடியென்கையாலேயித்யாதி.) இரண்டாம் தாத்பர்யத்திலே ப்ரயோஜநம் - சரீரவிச்லேஷமஸஹ்யமான கூடுமாத்ரமன்றிக்கே ஸ்திதிஹேதுவானவன் ஏகயத்நம்பண்ணும்படிகூடி மேலுமநர்த்தம் விளைத்துக்கொண்டமையை ஸூசிப்பிக்கை யென்று கண்டுகொள்வது.

பகட்டி - அஜ்ஞாநத்தை விளைத்து. "தம்" என்றத்தாலே தோற்றின ப்ராதாந்யத்தை விவக்ஷித்தருளிச்செய்கிறுர் (சாயேத்யாதி.) விவரணம் (நல்லதித்யாதி.) ப்ரமாணாந்தரகதநமுகேந பரிஹரிக்கிறுர் (யேநேத்யாதி.)

கலவியேகருதி என்னலாயிருக்க, "அவர்தரும்" என்றுவிசேஷித்தவருடைய ஹார்த்தபாவம் (கிட்டினவித்யாதி) தௌர்ப்பல்யம் தோற்ற விசேஷித்தாரென்று கருத்து.

(க) பரமாணுப்பற்று - (நெருப்பினுடைய) மிகவும் நுண்ணிய கண்டத்தின் ஸம்பந்தம். ✝"பொருந்தவுமொட்டாதே" என்று சிலஸ்ரீகோசங்கள்.

மூ.—கலவியேகருதி | ஓடினேன்;

ப-ரை.—கலவியே - ஸம்ச்லேஷத்தையே, கருதி - நினைத்து, அவர்தம்மோடு- அவர்கள்போன அடிவழியே, ஓடினேன்-பின்தொடர்ந்தோடினேன்;

வ்யா.—(கலவியேகருதி) அநுபவித்து என்பது (க) அநுபாவ்யந்தானுண்டாகிலிறே; இவனுடைய மநோரதமேயாகையாலே (கருதி) என்கிறது. மநோரதந்தான் மாறுதிறே அதுக்கடியான பாபம்கிடக்கையாலே. அநுபவிக்கலாவதொன்றில்லாவிட்டால் மீளவிறேயடுப்பது, அவர்கள் இருய்க்கவிருய்க்க "நன்மையுண்டு" என்று மேன்மேலன மநோரதம்செல்லாநிற்குமாய்த்து அதுக்கடியான பாபம் கிடக்கையாலே. ஒருவிஷயத்தி லநுபவிக்கலாவதொன்றில்லாவிட்டால் மீளலாமிறே, அத்தைவிட்டு மற்றொன்றறியப்போய் அதிலுமொன்றும் காணவிட்டால் பின்னையு மவ்வருகே போகாநிற்குமத்தனையிறே (ஓடினேன்) விஷயங்கள்தன்னில் அரைக்ஷணம் கால்தாழப்பண்ணவல்லதொரு விஷயந்தானில்லையிறே; (உ) போகோபகரணம்கொண்டுபுக்கு ஸ்நாநத்துக்கிடாகப்புறப்படும் விஷயமிறே. இவற்றின்தோஷத்தைத் தானுமறிந்து, அத்தைமறைக்கைக்கிடான போகோபகரணங்கள் கூட்டிக்கொடுத்திறே தானுமநுபவிக்கப்புகுவது. ப்ரத்யக்ஷம் அகிஞ்சித்கரமாகிற விஷயமிறே. இவற்றினுடைய தோஷந்தான், சாஸ்த்ரங்கொண்டறியவேண்டாதே கண்ணாலேகாணலாம்படி யிருக்கசெய்தே, கண்டுமீளவொண்ணாதபடி யிருக்கிறதிறே!. விஷயப்ராவண்யமாவது - பாம்பு படத்தைவிரித்துக்கொண்டுநின்றால் அது அள்ளிக்கொள்ளப் புகுகிறதறியாதே அதின்நிழலிலே யொதுங்கத் தேடுமாப்போலேயிருப்பதொன்றிறே§. உயிர்க்கழுவிலே யிருந்தவன் (௩) பிபாஸையும் வர்த்தித்துத் தண்ணீரும்குடித்துப் பிறக்கும் ஸுகம்போலேயிறே விஷயாநுபவத்தால் பிறக்கும் ஸுகமாகிறது. துக்கங்களிலே (௪) ஒன்றை ஸுகம் என்று நிர்வசித்துக்கொள்ளுகிறானித்தனையிறே; "ஸுகதுஃகைகலக்ஷண" "ஸுகபாவைகலக்ஷணு" என்கிறவதுவேயிறே ஸுகம்.

அ.—"கலவியே கருதி" என்ற ஏவகாரத்தாலே - வேறொன்றைக் கருதுகை தோற்றுமையாலே யருளிச்செய்கிறார் (மநோரத மித்யாதி.) ஹேத்வந்தரம் (அநுபவிக்கவித்யாதி.) இருய்க்கைக்கு ஹேது (அதுக்கடியானவித்யாதி.) மேலுக்கவதாரிகை (ஒருவிஷயத்திலித்யாதி.) போனேன் என்னாதே, "ஓடினேன்" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (விஷயங்களித்யாதி வாக்யத்வயத்தாலே.) ஒருவிஷயத்தை யநுபவித்து ஸ்நாநத்துக்குப் புறப்படும்படி கண்டால் ஓடக்கூடுமோ வென்ன வருளிச்செய்கிறார் (இவற்றினித்யாதி.) வ்யாக்யாதாவினீடுபாடு (இவற்றினுடைய வித்யாதி.) த்ர்ஷ்டதோஷமின்றிக்கே மேலுமநர்த்தகரமென்கிறார் (விஷயேத்யாதி.) இப்படி (௫) தோஷபூயிஷ்டமானத்திலே யிவன்ப்ரமிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (உயிர்க்கழுவித்யாதி வாக்யத்ரயத்தாலே.)

(க) அநுபாவ்யம் - அநுபவிக்குமது. (உ) போகோபகரணம்-அநுபவிக்கைக்குக்கருவி. (௩) பிபாஸை - தாஹம். (௪) ஒன்றை - அஜ்ஞாநத்தை. (௫) தோஷபூயிஷ்டம் - குற்றங்கள்நிறைந்தது. § "விஷயப்ராவண்யந்தான், ஆடுகிறபாம்பின் நிழலிலே யொதுங்கி விடாய்தீர நினைக்குமோபாதியிறே" என்று சில ஸ்ரீகோசங்கள்.

மூ.—ஓடி யுய்வதோர் பொருளா

ப-ரை.—ஓடி-இப்படி ஓரிடத்திலும்கால்தாழாதே விஷயங்கள்தோறும் விசேஷம் தேடிக்கொண்டோடி, மனத்தால் - விஷயங்களிலே சென்ற சிந்தையாலே, வருந்தினேன் - துக்கத்தை அநுபவித்தேன்; பின்பு, வாடினேன் - கொள் கொம்பில்லாக்கொடிபோலே வாடிப்போந்தேன்; வாடி - வாட்டத்தையுடையனாயிருந்து, உய்வது - உஜ்ஜீவநத்துக்குடலான, ஓர்பொருளால் - ஒருநல்ல அர்த்தத்தாலே (ஸர்வேச்வரன்க்ர்பையாலே),

வ்யா.—(ஓடி) முன்பெல்லா மிப்படியேயாய்ப் போரச்செய்தே ஒருநன்மையுண்டாய்த்தென்று தோற்றுகிறது. ஸர்வசக்தி, "ரக்ஷிப்போம்"என்று கைநீட்டி யெடுக்கப்பார்த்தாலும், எட்டாதபடி கைகழியப்போனேன்.

(உய்வதோர் பொருளால்) விஷயங்களிலே கைகழியப்போயோடி இளைத்துவிழுந்த விடத்திலே, "இனியிவன் தானாக மீளமாட்டான்" என்றதுதானே ஹேதுவாக ரக்ஷிக்கவொருப்பட்ட ஸர்வேச்வரன் க்ர்பையாலே. உஜ்ஜீவநோபாயமா யிருப்பதொரு நல்ல அர்த்தத்தாலே. நல்ல அர்த்தமென்கிறது - பகவத்க்ர்பையை. கௌரவத்தாலே "உய்வதோர்பொருள்" என்று மறைத்துச் சொல்லுகிறார்; நாலாம்பாட்டிலே, "ஆழியானருளே" என்று அது தன்னைத் தெரியவருளிச்செய்வர். நம்மாழ்வார், அவ்வளவு போகப்பொறுமை நடுவே "மயர்வறமதிநல மருளினன்" என்றாரிறே. ("நானேநாநாவிதநரகம்புகும் பாவம்செய்தேன்" என்றும்)§ "பாவியேனைப் பலநீகாட்டிப் படுப்பாயோ" என்றும் - நானே விநாசத்துக்கீடான பரிகரம் தேடிக்கொள்ள, எனக்கு உஜ்ஜீவிக்கலாவதொரு உபாயமுண்டாய்த்து!. ※ அஸந்நேவவான வென்னை "ஸந்தமேநம்" "ஸந்தமேநம்" என்னப்பண்ணிற்றொரு நல்ல அர்த்தமுண்டாய்த்து.

அ.—"ஓடி" என்கிற அநுவாதத்தாலே - கீழே "ஓடினேன்" என்றவிடத்தில் யாத்ர்ச்சிக ஸுக்ர்தாதிகள் ப்ரஸங்கிக்க வொண்ணாதபடி யோடுகையை ஸூசிப்பிக்கைக்கு ப்ரயோஜநமென்றும், ல்யப்பாலே - ஓரிடத்தில் இளைப்பாய் விழுந்தமை தோற்றுகையால் அதுவே மேல் அவன் க்ர்பைக்கு ஹேதுவாகிறதென்றும் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (முன்பெல்லா மித்யாதி வாக்யத்வயத்தாலே.)

"ஓடி" என்றது ஹேதுவானமையைக் காட்டாநின்றுகொண்டு, தாத்பர்யமருளிச்செய்கிறார் (விஷயங்களிலே யித்யாதி.) சப்தார்த்தம் (உஜ்ஜீவநேத்யாதி.) நாலாம்பாட்டிலே ※அருளைச்சொன்னால்,முதற்பாட்டிலும் அதுவேயாகவேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (நம்மாழ்வாரித்யாதி.) இத்தால் - ஏககண்டராகையாலே இதுவே விவக்ஷிதமென்று கருத்து. "பலநீகாட்டி" என்னுமதில் த்ர்ஷ்டியின்றிக்கே, "பாவியேனை" என்றதிலே நோக்காக வருளிச்செய்கிறார் (பாவியேனையித்யாதி.) இத்தால்-"உய்வது"என்னும்அம்சத்துக்குக் கருத்துச் சொல்லிற்றாய்த்து. "ஓர்" என்றதுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (அஸந்நேவேத்யாதி.)

§ குண்டலத்தில் அடங்கிய க்ரந்தம் சில ஸ்ரீகோசங்களில்பாடம்.

மூ.—வுணர்வெனும்பெரும்பதந் தெரிந்து | நாடினேன்; நாடி

ப.உரை.—உணர்வு எனும் – ஜ்ஞாநமாகிற, பெரும் - பெரிய, பதம்-ஸ்தாநத்தை, தெரிந்து - இருந்தபடியே அறிந்து, நாடினேன் - "பகவத்விஷயம் நன்று, ஸம்ஸாரம் தீது" என்று ஆராய்ந்தேன்; நாடி- ஆராய்ந்து,

வ்யா.—(உணர்வெனும் பெரும்பதம்) [విజ్ఞానంయదిదంప్రాప్తమ్- விஜ்ஞாநம்யதிதம்ப்ராப்தம்] கிடக்கைப்பாயிலே வெள்ளங்கோத்தாப்போலே. (பெரும்பதம்) "அவன்றான் வேண்டா, தத்விஷய ஜ்ஞாநமே யமையும்" என்னும்படி இதினுடைய பெருமை. (திரிந்து) விஷயங்கள்தான் (க) ஸாவதியாகையாலே அவற்றில்அநுபவிக்கலாவதொன்றில்லாமை முட்டமீண்டேன். (தெரிந்து) என்று பாடமாகில், ஜ்ஞாநம்பிறந்தவாறே எல்லாம் இருந்தபடியே தெரிந்தது. ஆகையாலே, முன்பெல்லா மிருட்சியாய்ப்போந்தமை தோற்றுகிறது. (நாடினேன்) ஜ்ஞாநம்பிறந்தவாறே, "நாம் கீழ்ப்பட்டதென், மேல்படப்புகுகிறதென்!" என்னுமாராய்ச்சி பிறந்தது.

(நாடி) இதரவிஷயங்களைப் பெறவேணும் என்று புத்திபூர்வமே ப்ரவர்த்தித்தாலும் (௨) அநர்த்தாவஹமாமதத்தை போக்கி பலிப்பதொன்றில்லை; பகவத்விஷயத்தில் ஆராய என்றிழிந்தமாத்ரத்திலே (௩) பலவ்யாப்தியுண்டு.

அ.—உணர்வாகிற பெரியபதம்-ஸ்தாநமே என்று சப்தார்த்தமாய், இத்தை *பதமாகச் சொன்னருண்டோரென்ன வருளிச்செய்கிறார் (விஜ்ஞாநமித்யாதி) "స్థానమార్జితమ్" "ஸ்தாநமார்ஜிதம்" என்றதிலேநோக்கு.. "విజ్ఞానంయదిదంప్రాప్తం యదిదంస్థానమార్జితమ్ | జన్మాన్తరేపిమే దేవమాభూత్తస్య పరిక్షయః." అస్యార్థః-యత్ వేదాన్తప్రసిద్ధంవిజ్ఞానంప్రాప్తం అయత్నలబ్ధమ్, ఇదమేవార్జితం సంపాదయితుమాశాసితం స్థానంయత్, తస్యజన్మాన్తరేపిపరిక్షయోమాభూదితి. "விஜ்ஞாநம் யதிதம்ப்ராப்தம்யதிதம் ஸ்தாநமார்ஜிதம் | ஜந்மாந்தரேபிமேதேவ மாபூத்தஸ்ய பரிக்ஷயஃ." அஸ்யார்த்தஃ-யத் வேதாந்தப்ரஸித்தம் விஜ்ஞாநம் ப்ராப்தம் அயத்நலப்தம், இதமேவார்ஜிதம் ஸம்பாதயிது மாசாஸிதம் ஸ்தாநம் யத், தஸ்ய ஜந்மாந்தரேபி பரிக்ஷயோமாபூதிதி. ப்ராப்தம் - தானேவந்ததென்று அர்த்தம்திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (கிடக்கையித்யாதி.) "திரிந்து" என்றதுக்கு-மீண்டென்று அர்த்தமாய், ஹேதுபூர்வக மருளிச்செய்கிறார் (விஷயங்களித்யாதி ;) இந்தபாடத்திலே "ஓடித்திரிந்து" என்று அந்வயிப்பது. அவன்றான் மீளமாட்டானென்று கீழேயருளிச்செய்தது- "தெரிந்து" என்ற பாடத்தைப்பற்ற வென்று கண்டுகொள்வது.

"நாடி" என்ற அநுபாஷணத்துக்கும்-கீழே "நாடினேன்" என்றதுக்குக்கீழ்ப்பட்டதிலே அபுத்தி பூர்வக ப்ரவர்த்தியான வளவன்றிக்கே புத்திபூர்வகமாக ப்ரவர்த்தித்தாலும் ப்ரயோஜநமில்லாமையை நன்றுகவிசாரித்தமை தோற்றவும், "கண்டுகொண்டேன்" என்னுமதுக்கு ஹேதுவாகவும் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இதரேத்யாதி வாக்யத்வயத்தாலே.)

(க) ஸாவதி - அளவுடையது. (௨) அநர்த்தாவஹம் - தீங்கைவிளைக்குமது. (௩) பலவ்யாப்தி - பலத்தோடேசேருகை.

## மூ.—நான் கண்டுகொண்டேன்

ப-ரை.—நான்- திருநாமஞ்சொல்லுகைக்கு யோக்யதையில்லாத நான்,

வ்யா.—(நான்) "ஓடினேன்" என்ற நான். (க) ராவணபவநத்திலே நெடுநாள் அவனெச்சில்தின்று வளர்ந்தவன் ஒருமுழுக்கிடாதே ராமகோஷ்டிக்கு ஆளானாப்போலேயீ. வேல்வெட்டிநம்பியார், பிள்ளை கிழக்கே (உ) முக்காதமாற்றிலே யெழுந்தருளியிருக்கச்செய்தே, ஒரு (ங) திருக்காத்திகையிலே, "புறம்பே சிலரைக்கேட்டால் எளியன் என்றிருப்பர்கள், இதுபரிஹரிக்க வல்லாருமில்லை, இத்தைச்சொல்லி (ச)வரக்காட்டவேணும்" என்று ஓராள் கொடுத்து வரக்காட்டினார்; அது (ரு) என்னம்புதென்னில்; "பெருமாள் கடலைசரணம்புகுகிறவிடத்தில் (சு) ப்ராங்முகத்வாதி நியமோபேதராய்க்கொண்டு சரணம்புக்கார், இதரோபாயங்களோபாதி (எ) ப்ரபத்தியும் (அ) ஸஹாயாந்தர ஸாபேக்ஷமோ?" என்றுவரக்காட்ட; "அந்தவுபாயத்துக்கு (கூ) உடன்வந்தியாயிருப்பதொன்றன்று, உபாயபரிக்ரஹம் பண்ணினவருடைய ஸ்வபாவத்தாலே வந்தது, ராக்ஷஸஜாதீயராவார் தண்ணியராய் அநதிகாரிகளாயிருக்க, அவர்களிலே யொருவனை ஸ்ரீவிபீஷணாழ்வானிறே 'సముద్రంరాఘవోరాజాశరణంగన్తుమర్హతి' 'ஸமுத்ரம்ராகவோராஜா சரணம்கந்துமர்ஹதி' என்று இவர்க்கு உபதேசித்தான், அவன் பக்கல் நியதி கண்டிலோம், இவர்பக்கலிலே கண்டோம்." இத்தால் சொல்லிற்றாய்த்தென்னென்றால்; அநதிகாரியானவனுக்கு அதிகாரம் ஸம்பாதிக்கவேண்டா, அதிகாரியானவனுக்கு அநதிகாரம் ஸம்பாதிக்கவேண்டா, நின்றநிலையிலே அதிகாரிகளாமித்தனை. ஸர்வாதிகாரமென்றபடி. (கண்டுகொண்டேன்) தநமிழந்தவனுக்கு தநலாபம்போலே யிருக்கையாலும், (க0) தாயப்ராப்தமாயிருக்கையாலும். (நான்கண்டுகொண்டேன்) கெடுத்தவன் தானே கண்டாப்போலே யிருக்கை.

அ.—"கண்டுகொண்டேன்" என்ற(கக)உத்தமனாலே தோற்றாநிற்கவும் "நான்" என்றதுக்கு பாவமருளிச்செய்கிறார் (ஓடினேனித்யாதி.) இத்தால்- பகவத் விஷயத்திலிழிவார்க்கு அதிகாரஸம்பத்தி தேடவேண்டா என்று பலிக்கையால், இதுக்கு ஸம்வாதமருளிச்செய்கிறார் (வேல்வெட்டி யித்யாதி.) திருக்காத்திகை- ஸ்வாமி உத்ஸவகாலம். எளியனென்றிருப்பர்கள் - லகூகரிப்பர்கள்.

(க) ராவணபவநம் - ராவணனுடைய அரண்மனை. (உ) முக்காதமாறு - முக்காதவழி. (ங) திருக்காத்திகை- திருக்கார்த்திகை. (ச) வரக்காட்டுகை-அனுப்புகை. (ரு)என்னம்புது-(வார்த்தைப்பாடு)என்ன! (சு)ப்ராங்முகத்வாதிநியமோபேதராய் - கிழக்குமுகமாய்நிற்கை முதலிய நியமங்களோடே கூடினவராய். (எ) ப்ரபத்தி - சரண்புகல். (அ) ஸஹாயாந்தர ஸாபேக்ஷம் - வேறொருதுணையை விரும்புமது. (கூ) உடன்வந்தி-கூடவருமது; ஸஹஜம். (க0) தாயப்ராப்தம்-பாகத்தால் வருமது. (கக) உத்தமன்-தன்மையிடம். யீ"அர்ஹனானாப்போலே" என்றும்பாடம்.

மூ.—நாராயணாவென்னும் நாமம் ‖க‖ ஆவியே ! அமுதே !

ப-ரை.—நாராயணாஎன்னும் - நாராயணாஎன்கிற, நாமம் - திருநாமத்தை,
கண்டுகொண்டேன் - காணப்பெற்றேன். ... ... ... ... (க)
எல்லாப்படியாலும் ஹேயரான் ஸ்த்ரீகளை, ஆவியே - ப்ராணபூதையான
வளே !, அமுதே-அம்ர்தம்போலே போக்யையானவளே !,

வ்யா.—(நாராயண) ப்ரணவமாதல் நமஸ்ஸாதல் சதுர்த்தியா
தல் கூட்டாமையாலே, திருவிடையாட்டத்திலே யிழியவமையும்,
பலபர்யந்தமாகைக்கு ஸாங்கமாகவும் வேண்டாவென்கிறது. (என்
னும் நாமம்) என்னும் என்கிறது-பலகால் ஆதரித்துச்சொல்லுகிற
அநந்யபரமான †நாராயணநுவாகப்ரஸித்தி. நாமம்என்கையாலே-
இருந்தபடியே உத்தேச்யம், இச்சைபிறந்தபோதே காலம், சொ
ல்லுவோமென்றவன் அதிகாரிஎன்கிறது. "திருமந்த்ரம்சொல்லும்
போது (க) ப்ரயதராய்க்கொண்டு சொல்லவேணுமோ, வேண்டா
வோ?" என்று (உ) ஜீயர் பட்டரைக்கேட்க; "வேண்டா"
என்றருளிச்செய்தார்; "கங்கையாடப்போமவனுக்கு நடுவேயொரு
(ங)உவர்க்குழியிலேமுழுகிப்போகவேணுமோ, இந்நன்மையெல்லா
முண்டாக்கப்புகுகிறது §கீழ் அயோக்யதையித்தனையும்போக்கமா
ட்டாதோ" என்றருளிச்செய்தார். ... ... (க)

அ.—இரண்டாம்பாட்டு.—அநாதிகாலம் "பகவத்தத்த்வ
மென்றொன்றுண்டு" என்றுமறியாதே விஷயப்ரவணராய்ப் போரு
கையாலே, "வாடினேன்" என்றும் "இளையவர்-கலவியேகருதி யோ
டினேன்" என்றுமிறே கீழ்ச்சொல்லிநின்றது ; அதிலநுபவித்த
வகைகளையும், காலமடங்க வ்யர்த்தமே போய்த்தென்றும் சொல்லி,
இப்படி போனகாலமும் வ்யர்த்தமாகாதபடியான திருநா
மத்தைக் காணப்பெற்றேனென்கிறார்.

வ்யா.—(ஆவியேயமுதே) "ஆவியே யமுதே யலைகடற்கடை
ந்தவப்பனே" என்றும் "ஆவியேயாரமுதே யென்னையாளுடைத்
தூவி யம் புள்ளுடையாய்" என்றும் பகவத்விஷயத்திலே சொல்ல
க்கடவ வார்த்தையை அப்ராப்த விஷயத்திலே சொன்னேன்.

அ.—திருவிடையாட்டம்-ஐச்வர்யம்; நாராயணசப்தார்த்தமான உபயவிபூத்
யைச்வர்யத்திலே நானுமொருவனென்றறிய வமையுமென்றபடி. ... (க)

இரண்டாம்பாட்டு.— (ஆவியேயித்யாதி.) போனகாலமும் வ்யர்த்தமாகா
தபடி யென்றதக்கு- "சென்றநாள் செல்லாத செங்கண்மாலெங்கள்மா | லென்ற
நாளெந்நாளும்நாளாகும்" என்கிறபடியே போனகாலத்தையும் நல்லநா
ளாக்கும். பாட்டின்நுனியிலே தாத்பர்யத்தை வ்யக்தமாக வருளிச்செய்கிறாரென்று
கண்டுகொள்வது.

விஷயாநுபவத்தின் வகைகளைச் சொல்லுகிறவர் "ஆவியே யமுதே" என்று
இவ்வகைசொன்னதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆவியேயித்யாதி.)

†"நாராயணாநுவாகத்தில் சென்று கேட்டுக்கொள்ளுங்கோளென்கை. (நாமம்)"
என்று சில ஸ்ரீகோசங்கள். (க) ப்ரயதர் - சுத்தியுடையவர். (உ) ஜீயர்-நஞ்சீயர்.
(ங) உவர்க்குழி - உப்புஜலமுள்ளபள்ளம். § "கீழ் யோக்யதை யித்தனையும்
உண்டாக்கமாட்டாதோ" என்று சிலஸ்ரீகோசங்களிற் பாடம்.

மூ.—எனநினைந்துருகி, அவரவர் பணைமுலைதுணையா-
பாவியேனுணராதெத்தனைபகலும்பழுதுபோயொழிந்தனநாள்கள்;
தூவிசேரன்னம் துணையொடும்புணரும் சூழ்புனற்குடந்தையேதொழுது, என்-
நாவினாலுய்யநான்கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்.

ப-ரை.—என-என்று அநேகங்களைச்சொல்லி, நினைந்து-அவர்கள்தரும்சிற்றின்பத்தைநினைத்து,உருகி-நீர்ப்பண்டம்போலே உருகி, அவரவர்-அவ்வவஸ்த்ரீகளுடைய,பணை-பெருத்த, முலை-தோலும் மாம்ஸமுமான ஸ்தநங்களை, துணையா-ரக்ஷகமாகக்கொண்டு,பாவியேன்!-விஷயங்களின் துன்மையையும் அவற்றால் வரும்அநர்த்தத்தையும் பாராதே கண்டவிடமெங்கும் கால்தாழ்ந்து போந்தநான், உணராது-"ஸர்வேச்வரனேநமக்குரக்ஷகன்" என்று அறியமாட்டாதே, எத்தனை பகலும் நாள்களும்-காலமெல்லாம், பழுதுபோய் ஒழிந்தன- "பழுதேபலபகலும்போயின" என்றும் "அவத்தே அருமந்த காலத்தைப் போக்கி" என்றும் சொல்லுகிறபடியே வ்யர்த்தமாய்க் கழிந்துபோயின; தூவி - சிறகை, சேர் – உடைத்தாகையால் வந்த அழகையுடைய, அன்னம் - ஹம்ஸமானது, துணையொடும் - தன்பேடையோடே, புணரும் – ஸம்ச்லேஷித்து வர்த்திக்குமதுமாய், புனல் - ஜலத்தால், சூழ்- சூழப்பட்டிருப்பதான, குடந்தை - திருக்குடந்தையில் ஆராவமுதாழ்வாரை, தொழுது- ஸேவித்து, நான் - விஷயங்கள்தோறும் பசையுண்டென்று ஓடித்திரிந்தநான், உய்ய - உஜ்ஜீவிக்கும்படியாக, நாராயணாஎன்னும் நாமம் - நாராயணா என்னும் திருநாமத்தை, என்நாவினால் - பிறரை ஸ்தோத்ரம்பண்ணித்திரிந்த என் நாவாலே, கண்டுகொண்டேன் - புகழ்ந்து காணப்பெற்றேனென்கிறார். ... ... (௨.)

வ்யா.—தாரகத்வமும் (௧) கண்ணழிவற்று போக்யதையும் கண்ணழிவற்றிருப்பது பகவத்விஷயமே யிறே; தாரக மின்றிக்கே பாதகமுமாய், போக்யதை யின்றிக்கே பீபத்ஸமுமா யிருக்கிற விஷயங்களிலேயாயத்து வார்த்தை சொல்லிப் போந்தது. "త్వంజీవితం త్వమసి మే హృదయం ద్వితీయం" "த்வம் ஜீவிதம் த்வமஸி மேஹ்ருதயம் த்விதீயம்" என்றிறே சொல்லிப்போந்தது. (எனநினைந்து) "(௨) இப்புடைகளில் நினைப்பது அநேகத்தையிறே" என்றாய்த்து ஜீயரருளிச்செய்வது. பிள்ளை, "இங்ஙன் நினைந்து வாய்விடமாட்டாதே 'நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்' என்று இங்ஙனே சொல்லலாமோ?" என்று ஜீயர்க்கு விண்ணப்பஞ்செய்ய; "நீரிவரிலும் பக்தராயிருந்தீர்" என்றருளிச்செய்தார்.

அ.—தாத்பர்யார்த்தம் (தாரகமித்யாதி.) பீபத்ஸமுமாயென்றது - ஹேயமுமாயென்றபடி. ஒருநாயிகாவிஷயத்திலே யொருவன் சொல்லுமத்தை ஸம்வாதமாகக்காட்டுகிறார் (த்வமித்யாதி.) ஜீவிதமென்றது - "ஆவியே" என்றதுக்கு ஸதர்சம். ஹ்ருதயமென்றது-ஹ்ருதயாபிமதை யென்றபடி. "என" என்றது-அநேகங்களை யென்றதாய், அருளிச்செய்கிறார் (இப்புடைகளிலித்யாதி.) "என" என்றது-என்று என்றாய், அதுதானும்-சொல்லவென்றதாய், அருளிச்செய்கிறார் (பிள்ளையித்யாதி.) நீரிவரிலும் பக்தராயிருந்தீரென்றது-ஆழ்வார் பகவத்விஷய ரஸ்யதையாலே யிப்படி யருளிச்செய்தார், நீரவரைக்காட்டிலும் ரஸிகராயிருந்தீரென்றபடி.

(௧) கண்ணழிவு - குற்றம். (௨) இப்புடைகளில் - இந்தப்ரகாரங்களிலே.

(எனநினைந்துருகி) இங்ஙனே அநுஸந்தித்து, நீர்ப்பண்டம்போலே மயங்கிக்கிடப்பர். எத்தனைவிஷயங்களிலே யிப்படி கால்தாழ்ந்துபோந்ததென்னில் (அவரவர்) காலம்அநாதி, ஆத்மா நித்யன், பரிக்ரஹித்தசரீரங்களுக்கு எல்லையில்லை, அவ்வோ சரீரங்கள்தோறும் விஷயங்களுக்கும் எண்ணில்லை; அவ்விஷயங்கள்தோறும் கால்தாழ்ந்திறேபோந்தது; ஆசையாலே,. (அவரவர்) என்னுமித்தனை. (பணைமுலை) ஒருத்தன்நோவுப்பட்டான் என்றால், பிற்பாடராயிறு முதவப்பெற்றிலோம்; "[illegible]" "ஹ்ரீரேஷாஹிமமாதுலா," "ந த்யஜேயம்" "நத்யஜேயம்" என்னுமவனன்றோ. "(௧) இளிம்பனுமிருந்தான் அகப்பட்டான், இனி இவன் கையிலுள்ளதடங்க நம்மது" என்று அதுவேபொருளாகப்பணைக்குமாய்த்து. நம்மைப்பெறவேணுமென்று உருகிறான் என்றால் இரங்கி உடம்புகொடுக்குமத்தனை நீர்மையில்லையே!. (பணைமுலைதுணையா) ஸ்தநங்களாகிற பெரிய ஸ்திமயமான (௨) க்ரந்தியைப்பற்றி, "தயாதற்கு பகன்றன்னையன்றி மற்றிலேன்தஞ்சமாகவே" என்றிருக்குமாப்போலேயிறேயிருப்பது. "இப்போது சாபலத்தாலே விரும்புகிறேன்" என்றிருக்கை யன்றிக்கே அத்ருஷ்டத்தையும் இதுதானே தருவதுபோலேயாய்த்து அநுஷ்டிப்பது. அத்ருஷ்டத்தை மறந்தபடி. "துன்னுகுழல் கருநிறத்தென் துணையே" என்றிருக்குமத்தையிறே யிங்கேநினைப்பது.

(பாவியேன்) நித்யமாய் ஏகரூபமாய் ஜ்ஞாநாநந்தலக்ஷணமாய் ஈச்வரனுக்கு ஸ்ரீகௌஸ்துபத்தோபாதியாயிருக்கிற ஆத்மவஸ்து படும் (௩) எளிவரவேயிது!. (உணராது) இவ்விஷயத்துக்கு நம்மை வகுத்ததென்று உணரமாட்டாதே.

---

பணைக்குமாய்த்து - பெருக்குமாய்த்தென்றபடி. தங்களிடத்திலே பொருந்தியிருந்தவனுக்கு ஹாநிவந்தால் இதுவேஹேதுவாகப் பணைக்கைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (நம்மையித்யாதி.) ஈச்வரனைப்போலே த்ருஷ்டாத்ருஷ்ட பலமாதுமென்னுமத்தை விவரிக்கிறார் (இப்போதித்யாதி.) அத்ருஷ்டத்தையுமென்றது-அத்ருஷ்ட ஸாதகத்தையுமென்றபடி. ரம்பாஸம்போகாதிகளும இதுவேயென்று எண்ணி, வேறே அத்ருஷ்டஸாதகத்தையும் மறந்திருக்குமென்றுகருத்து. அவரவர் துணையா என்னாதே, "பணைமுலைதுணையா" என்றதுக்கு தாத்பர்யமருளிச்செய்கிறார் (துன்னுகுழலித்யாதி.)

ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்து அநுதபிக்கும்தசையிலே "பாவியேன்" என்னக்கூடாமையால், இது க்லேசஸூசகமான பாசுரமென்று வ்யாக்யாநித்தருளிச்செய்கிறார் (நித்யமாயித்யாதி.) இவ்விஷயத்துக்கு - பகவத்விஷயத்துக்கு.

---

(௧) இளிம்பன் - சதுரப்பாடில்லாதவன்; ஸுலபன்.

(௨) க்ரந்தி - முடிப்பு. (௩) எளிவரவு - ஏழைமை.

(எத்தனைபகலும் பழுதுபோயொழிந்தனநாள்கள்) எத்தனைகாலமுண்டு இப்படி வ்யர்த்தமேபோகிறது. காலமடங்க வ்யர்த்தமேபோய்த்து. அனைக்கு அவ்வருகுபட்ட கீரோபாதியிறே. "[illegible]" "வயோஸ்யாஹ்யநிவர்த்ததே." (பழுதுபோயொழிந்தனநாள்கள்) இளையபெருமாளைப்போலே கண்ணுறங்கவும் அவஸரமின்றிக்கே போகக்கடவகாலம், அநர்த்தத்தோடேபோய்த்தது. கைங்கர்யத்தோடே (க) அடிக்கழஞ்சுபெற்றுச் செல்லக்கடவ காலம், பழுதேபோய்த்தது.

(தூவிசேரித்யாதி) இப்படி கைகழிந்தது உகந்தருளினநிலங்களிங்கேயாகையாலே ஸ்வரூபம்பெற்றுமீண்டது. தூவி-சிறகு. சிறகால்வந்தஅழகையுடைத்தாயஅன்னம் (உ) ஸஹசரத்தோடேபுணர்ந்து வர்த்திக்கிற தேசம். ஸர்வபூதசரண்யமான தேசம். அன்னத்தோடு ஸர்வதாஸாம்யம்சொல்லலாயிருக்கையாலே, பெரியபிராட்டியாரோடே ஆராவமுதாழ்வார் ரமித்துவர்த்திக்கிற தேசம். சரண்யவஸ்து குறைவற வர்த்திக்கிற தேசம். பொறுப்பாருமுண்டாய் பொறுப்பிப்பாருமுண்டாகையாலே குறைவற்ற தேசம். (சூழ்புனல்) அசேதநமானஜலமும் அங்கேவந்தால் ஒருக்கால் சூழவாய்த்துப்போவது. * நாபார்த்தர்க்கு ச்ரமஹரமானதேசம். (குடந்தையெழுந்து) "[illegible]" "அவசாஃப்ரதிபேதிரே" என்கிறபடியே - நம்பக்கல் ஒரு நினைவின்றிக்கேயிருக்க, தொழுதுகொடுநிற்கக்கண்டார். (என்நாவினால்) "ஆவியேயமுதே" என்ற என் நாவினால். இப்ப்ரஜையைப்பெற்றுவாழ்ந்தேன்! என்பாரைப்போலே. கரணம் இவ்வுபெற்றபேற்றுக்குப் பாங்காயிருக்கையாலே, வேறொரு சரீரபரிக்ரஹம்பண்ணிலும், என்நா என்னலாமிறே. இதரரை ஸ்தோத்ரம்பண்ணித்திரிந்த இவ்வுடம்போடே.

---

"எத்தனைபகலும்-நாள்களும்-பழுதுபோயொழிந்தன" என்றுஅந்வயமாய், பலித்தஅர்த்தம் (காலமடங்கவித்யாதி.) "போய்" என்றதுக்குபாவம் (அனைக்கித்யாதி.)போனகாலத்துக்கு க்லேசித்தாருண்டோவென்ன அருளிச்செய்கிறார் (வயோஸ்யாஇத்யாதி.) "பழுது" என்ற பதப்ரயோகத்துக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இளையவித்யாதி.) கீழ்வாக்யவிவரணம் (கைங்கர்யேத்யாதி.)

"சேர்" என்றது - அநுரூபமென்றும் அருளிச்செய்கிறார் (சிறகாலித்யாதி.) சரண்யமான தேசமானமையை உபபாதிக்கிறார் (அன்னத்தோடித்யாதி) "என்" என்றது- நைச்யத்திலே யாக்கி யருளிச்செய்கிறார் (ஆவியே இத்யாதி.) கொண்டாட்டமாகத் தாத்பர்யாந்தரம் (இப்ப்ரஜையையித்யாதி.) ஸ்வரூபஜ்ஞானம் பிறந்தபின்பு பூர்வவ்ர்த்தமுடையனுகையைக் கொண்டாடலாமோவென்ன (கரணமித்யாதி.) நா சரீரைகதேசமாகையாலே, (இதரரைஸ்தோத்ரம்பண்ணித்திரிந்த விவ்வுடம்போடே) என்றது.

---

(க) அடிக்கழஞ்சுபெறுகை-ஓரடி, கழஞ்சுபொன் பெறுகை; ச்லாக்யமென்றபடி. (கழஞ்சு-பன்னிரண்டு பணவிடை கொண்டநிறை.) (உ) ஸஹசரம்-தன்னுடன் ஸஞ்சரிப்பது; பேடை.

(உய்யநான்கண்டுகொண்டேன்) "மறந்தமதியின்மனத்தால்—இறந்தேனெத்தனையும்" என்றநான், உஜ்ஜீவிக்கும்படி கண்டுகொண்டேன். (கண்டுகொண்டேன்) திருமந்த்ரத்திலுடைய அர்த்தத்தை அநுஸந்தித்தால் அது ஸ்வரூபமாயிருக்குமாப்போலே, சப்தத்தைச் சொல்லுகையும் ஸ்வரூபமாயிருக்குமிறே. இப்படி ப்ராப்யமாயிருந்தத்தைக் காணப்பெற்றேனென்கை. (நாராயணாவென்னும் நாமம்) "நா வாயிலுண்டே" என்னுமத்தை. * நா வாயிலுண்டாக * ஓவாதுரைக்குமுரையிறே. [நா வாயிலுண்டே] இது முந்துறமுன்னம் தேடிப்போகவேண்டாவே. [நமோநாராயணவென்றோவாதுரைக்குமுரையுண்டே] ஓவாதொழிகையும் உரையாகிறது - உச்சரித்து விடாதே சொல்லவேணுமென்கிறதன்று; எட்டு அக்ஷரமாகையாலே நடுவே யிளைக்க வேண்டாதே, சொல்லி யிளைப்பாறலா மென்கை. ஸஹஸ்ராக்ஷரிமாலாமந்த்ரமாய், "இதசப்பதில் நாமத்தைப்புக்கும் போகவமையும்" என்னும்படியிராதொழிகை (என்னுநாமம்) முன்பு இழந்தகாலமும் வ்யர்த்தமாகாதபடியான திருநாமத்தைக்காணப்பெற்றேன். [சென்றநாள்செல்லாத செங்கண்மாலெங்கள்மா லென்றநாளெந்நாளும்நாளாகும்] செங்கண்மாலெங்கள்மால் என்பதொருநாளுண்டாகில். [சென்றநாள்செல்லாத - எந்நாளும்நாளாகும்] திருமந்த்ரத்தைச்சொல்லுகைக்குறுப்பாகையாலே போனகாலமும் நல்லகாலமாய், செல்லுகிறகாலந்தானே நல்லகாலம். திருமந்த்ரஞ்சொல்லமேல்தானே ஓராநர்த்தம் விளையாதிறே. ... ... (௨)

மதிப்ரஷ்டனான நானென்றர்த்தாந்தரம் (மறந்தவித்யாதி.) ஸ்வரூபஸ்திருஞல் அர்த்தாநுஸந்தாநமொழிய சப்தாநுஸந்தானம் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (திருமந்த்ரத்திலுடைய வித்யாதி.) § என்னுமத்தையென்றது - என்கிற பாட்டையென்கை; அநந்தரம், "கண்டுகொள்வது" என்றபூரிப்பது. ¶ (க) கதகாலம் நல்லநாளாமோவென்ன வருளிச்செய்கிறார் (திருமந்த்ரத்தையித்யாதி.) (திருமந்த்ரத்தை) என்றவநந்தரம், ஒருநாள் என்று சேஷம். ஆக, ஒருநாள் திருமந்த்ரத்தை யநுஸந்தித்தால் அநாதிகாலமுண்டான ப்ராதிகூல்யங்களெல்லாம் உருமாய்ந்துபோகையாலும், மேல் ஆநுகூல்யங்களை விளைக்கையாலும், வர்த்தமாநகாலத்தில் ரஸ்யதாதிசயத்தால்வந்த ஏற்றத்தாலும், ஸர்வகாலமும் ஸார்த்தகமாய்த்தென்றுகருத்து. "செல்லாத" என்று-பவிஷ்யத்காலத்தைச்சொல்லுகிறது. (௨)

§ "திருநாமம் சொல்லுகை உஜ்ஜீவநஹேது என்னுமதுக்கு ப்ரமாணங்காட்டுகிறார் (நா வாயிலித்யாதி)" என்றஅரும்பதாந்தரத்தில் வாக்யத்தை இங்கும் கூட்டிக்கொள்வது. ¶ "உரைக்குமுரையிறே - மந்த்ரமென்றபடி. 'என்னும் நாமம்' என்று பாவநத்வ ப்ரஸித்தியைப்பற்ற வருளிச்செய்கிறார் (முன்பிழந்தகாலமித்யாதி.)" என்று அரும்பதாந்தரத்தின் வாக்யம்.

(க) கதகாலம் - போனகாலம்.

மூ.—சேமமேவேண்டித்தீவினைபெருக்கித்தெரிவைமாருருவமேமருவி
ஊமனார்கண்டகனவிலும்பழுதாயொழிந்தன கழிந்தவந்நாள்கள்;
காமனார்தாதை, நம்முடை யடிகள், தம்மடைந்தாரமனத்திருப்பார் —
நாமம்நானுய்யநான்கண்டுகொண்டேன்நாராயணாவென்னும்நாமம்.

ப-ரை.—சேமமே - யாவராலும க்ஷேமத்தையே, வேண்டி - விரும்பி, அதற்கு வேண்டும் நற்காரியங்கள் செய்யாதே, தீவினை - பாபங்களை, பெருக்கி - அதிகரிக்கச் செய்து, தெரிவைமார் - ஸ்த்ரீகளுடைய, உருவமே - வடிவழகையே, மருவி - நற்றுணையாகக்கருதி, கழிந்த - கழிந்தொழிந்த, அந்நாள்கள் - பெறவொண்ணாத காலமெல்லாம், ஊமனார் - ஊமைகள், கண்ட —, கனவிலும் - கனவிலுங்காட்டில், பழுதாய் - வ்யர்த்தமாய், ஒழிந்தன - போயின; ஆதலால், காமனார் - மந்மதனுக்கு, தாதை - தமப்பனாய், நம்முடை - நம்போல்வாரெல்லாருக்கும், அடிகள் - ஸ்வாமியாய், தம் - தன்னையே, அடைந்தார் - சரணமபற்றினவர்களுடைய, மனத்து - நெஞ்சில், இருப்பார் - நீங்காதிருப்பவரான ஸர்வேச்வரனுடைய, நாராயணாவென்னும் - நாராயணா என்கிற, நாமம் - திருநாமத்தை, நான் - விஷயசபலனாய்த்திரிந்த நான், உய்ய - உஜ்ஜீவிக்கும்படி, கண்டுகொண்டேன் - காணப்பெற்றேன் எனகிறார். (௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு.—(சேமமேவேண்டி) “சத்ருக்களாலே ராஜாக்களாலேயிட்டாரால் நமக்கொரு நலிவு வாராதொழியவேணும், எல்லாராலும் ரக்ஷைபெற்றுச் செல்லவேணும்” என்றாய்த்து நெஞ்சால் நினைத்திருப்பது. (தீவினைபெருக்கி) ரக்ஷையே பெற்றுச்செல்ல வேணுமென்றிருந்தால், அதுக்கீடானபடியான ஸுக்ருதியைப் பண்ணாதே பாபத்தையாய்த்து (க) கூடுபூரிப்பது. (தெரிவைமாருருவமே மருவி) நல்லதைவேண்டியிருக்கச் செய்தே அதுவாராதே, செய்ததின்பலமிறே வருவது; பண்ணிவைத்த பாபங்கள் கொடுபோய் விஷயங்களிலே மூட்டும். (உருவமே மருவி) அகவாயிலிழியில் த்யஜிக்கலாமிறே. அகவாய் நஞ்சாய், (உ) ஸ்வகார்யபராயிறே யிருப்பது. அகவாயிலேயிழியில் அநாத்மகுணம் கண்டு பிளலாயிருக்குமிறே; வடிவில் தோஷங்களை மறைத்திறே வைப்பது. (மருவி) அத்தையே (௩) சுபாச்ரயமாக மநநம்பண்ணியாய்த்திருப்பது.

அ.—மூன்றாம்பாட்டு.—(சேமமேயித்யாதி) கீழ்ப்பாட்டிலே “பழுதுபோயொழிந்தன” என்னுமத்தை ஸ்பஷ்டமாக உபபாதித்துக்கொண்டு, பின்னையும் சிறிதுகளை அநுஸந்தித்து அநுதபிக்கிறாரென்று ஸங்கதியையுட்கொண்டு வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (சத்ருக்களித்யாதி.) “சேமம்” என்றது - க்ஷேமமென்றாய், அதுதானும் - ஸ்திதிபரிபாலநமாய், இத்தைச்சொன்னது - அபூர்வார்த்தப்ராப்திரூபமான யோகத்துக்கு முபலக்ஷணமென்று திருவுள்ளம்பற்றி, இவ்விரண்டும் ப்ரார்த்யமாகையாலே *சேமபதார்த்தம் கீழருளிச்செய்து, யோகபதார்த்தமருளிச் செய்கிறார் (எல்லாராலுமித்யாதி.) ரக்ஷைபெறறென்றது - இஷ்டத்தையடைந்தென்றபடி. இப்படி சரீரரக்ஷணம் சொன்னது ஆத்மரக்ஷணத்துக்கு முபலக்ஷணமாக்கி யருளிச்செய்கிறார் (நல்லத்தையித்யாதி.) அகவாய்போலே வடிவிலும் தோஷமில்லையோவென்ன அருளிச்செய்கிறார் (வடிவிலித்யாதி.)

(க) கூடுபூரிக்கை - உறையைநிறைக்கை. (உ) ஸ்வகார்யபரர் - தங்கள் ப்ரயோஜநத்தில் ஊற்றமுடையவர்கள். (௩) சுபாச்ரயம் - த்யாநவிஷயம்.

(ஊமனார் கண்டகனவிலும் பழுதாய்) ஊமனார் - ஊமைகள். (ஊமைகண்ட கனவிலும் பழுதாய்.) ‡ ஊமை கண்டகனா வாய்விட மாட்டானித்தனை, நினைத்திருக்கும்; அங்ஙனுமன்றியே, நெடுநாள் அநுபவித்துப் போந்த விஷயங்களில் போயிருந்து, அநந்தரம் நினைத்திருக்கைக்கு மொன்று மின்றிக்கே யிருக்கை. அங்ஙனன்றியே, ஊமை கண்டகனா வாய்விடமாட்டிற்றிலனாகிலும் நினைத்திருக்கலாம், இவை நினைக்கில் (க) பயாவஹமாகையாலே நினைக்கவுமொண்ணாதென்கை. ஸ்ம்ருதி விஷயமாவதொன்றில்லை, ஸ்ம்ருதிவிஷயமாய்த்த துண்டாகில் பயாவஹமாயிருக்கும். (ஒழிந்தனகழிந்தஅந்நாள்கள்) [నమే దుఃఖం ప్రియాదూరే నమే దుఃఖం హృతేతివా | ఏతదేవానుశోచామి వయోస్యాహ్యతివర్తతే, நமேதுக்கம்ப்ரியா தூரே நமேதுக்கம்ஹ்ருதேதிவா | ஏததேவாநுசோசாமி வயோஸ்யாஹ்யதிவர்த்ததே] ப்ரியையானவள் தூரவிருந்தாளென்று வெறுத்திருக்கிறோமல்லோம், அது நாலுபயண மெடுத்துவிடத் தீரும்; வலியரக்ஷஸ்ஸாலே (உ) அபஹ்ருதையென்று வெறுத்திருக்கிறோமல்லோம், அது அவன்றலையறுக்கத்தீரும்; நமக்கு சோகநிமித்தமிதுவே [வயோஸ்யாஹ்யதிவர்த்ததே, வயோஸ்யாஹ்யதிவர்த்ததே] போனகாலத்தை அம்பாலே மீட்கவொண்ணாதே!

நீர்பற்றிச்சொல்லுகிற விஷயத்துக்கு இந்த தோஷங்களில்லையோவென்ன (காமனார்தாதை) உருவமே மருவிலும் பசைபோரும், உடம்பைப் பற்றிலும் ஊதியம்போரும். ¶ தன்வடிவாலே நாட்டையடையப் பகட்டித்திரியுமவனுக்கும் உத்பத்திஸ்தானம். தன்கையில் நாட்டார் படுவதடங்க அவன்றான் இவன்கையிலே படும்; "ஸாக்ஷாந்மந்மத மந்மதः" "ஸாக்ஷாந் மந்மதமந்மதः." (நம்முடையடிகள்) கீழில் விஷயங்களுக்குச் சொன்ன குற்றமில்லாததுவேயன்று இதுக்குவாசி; அவை அப்ராப்தவிஷயம், இது ப்ராப்தவிஷயம். (நம்முடையடிகள்) ஸர்வஸ்வாமி.

(தம்மடைந்தார் மனத்திருப்பார்) வடிவைக்காட்டித் துவக்கிக்கையிலுள்ள தடங்க அபஹரித்து உடம்புகொடாதே எறவாங்கியிருக்கை யன்றிக்கே, ஆசாலேசமுடையார்நெஞ்சு விட்டுப்போயிருக்கமாட்டாதவன்.

---

நிஸ்ஸாரத்வமும் பயாவஹத்வமுமான * பழுதாகையை நிகமிக்கிறார் (ஸ்ம்ருதீத்யாதி.)

மேலுக்கவதாரிகை (நீர்பற்றி யித்யாதி.) பசை - ஸாரம். ஊதியம்போரும் - வ்ருத்தியுண்டாமென்றபடி. காமயதிதிகாம: என்ற வ்யுத்பத்தியையுட்கொண்டு அருளிச்செய்கிறார் (நாட்டையித்யாதி.) காமனுக்குத்தாதை என்றத்தாலே - காமன் அழகுக்குத்தோற்றுப் பிள்ளையானானென்று தோற்றுகையாலே யருளிச் செய்கிறார் (தன்கையிலித்யாதி.)

---

‡ குண்டலிதக்ரந்தம் சிலஸ்ரீகோசங்களிலில்லை. (க) பயாவஹம் - அச்சத்தை விளைக்குமது. (உ) அபஹ்ருதை - அபஹரிக்கப்பட்டவள். ¶ "நாட்டையடையத் தன்வடிவாலே பகட்டித்திரியுமவன்" என்றானல் அரும்பதத்தின் ப்ரதிகத்துக்குச் சேரும்.

(க) கலவிருக்கையான பரமபதத்தையும் விட்டு, நெஞ்சே கலவிருக்கையாகக் கொள்ளும். (தம்மடைந்தார்மனத்திருப்பார்நாமம்) இவ்வர்த்தமித்தனைக்கும் வாசகமான திருநாமம். தேஹகுணமும், ஸர்வஸ்வாமித்வமும், ஸௌலப்யமும், வாத்ஸல்யமுமிறே இதுக்கு அர்த்தமாய்த்தது. (நானுய்ய நான் கண்டுகொண்டேன்) "అసన్నేవ" "அஸந்நேவ" என்று முடியும்படியான நான் உஜ்ஜீவிக்கும்படி கண்டுகொண்டேன். (நான் கண்டுகொண்டேன்) இனிக்காட்சியில்லையோ ! என்னும்படி கைகழிந்த நான், (உ) உத்தேச்யஸித்தியுண்டாகப் பெற்றேன். "இனிஸத்தையுண்டாகமாட்டாது, காட்சியுண்டாகமாட்டாது" என்னும்படியான நான், உஜ்ஜீவிக்கவும்பெற்று, காணவும் பெற்றேனென்கிறார். (நானுய்ய, நான்) என்று இருக்கால் சொல்லுகிறது - லாபத்தால் வந்த ப்ரீதிக்குப் போக்குவிட்டுச்சொல்லுகிறார். (நாராயணாவென்னும் நாமம்) "శాన్తో దాన్త ఉపరతస్తితిక్షుస్సమాహితో భూత్వాత్మన్యేవాత్మానం పశ్యేత్" "சாந்தோதாந்த உபரதஸ்திதிக்ஷுஸ்ஸமாஹிதோபூத்வா ஆத்மந்யே வாத்மாநம்பச்யேத்" என்று (௩) சமதமாத்யுபேதர் சொல்லக்கடவ திருநாமத்தைச் சொல்லப்பெற்றேன். "சேமமேவேண்டித் தீவினைபெருக்கித் தெரிவைமாருருவமேமருவி" என்று அநாத்மகுணோபேதனாய்ப் போந்தநான் ஆத்மகுணோபேதர் பெறும் பேற்றைப்பெற்றேன். ... ... ... ... (௩)

---

"மனத்தேயிருப்பார்" என்று ஸாவதாரணமாக்கி, பரமபதத்திலிருப்பு இல்லையோவென்னவருளிச்செய்கிறார் (கலவிருக்கையானவித்யாதி.) இவ்வர்த்தமித்தனைக்கு மென்றது - "நாமனார்" இத்யாதி பதத்ரயார்த்த மித்தனைக்குமென்றபடி. இரண்டாம் * நானுக்கர்த்தம் (இனியித்யாதி.) இல்லையோவென்றது - இல்லையேயென்றபடி. இிரண்டுவாக்யத்திற்சொன்ன தாத்பர்யத்தையும் கூட்டி ஒரு * நானுக்கே கருத்தாக வருளிச்செய்கிறார் (இனிஸத்தை யித்யாதி.) ஆனால் இருக்கால் சொல்லுவானென்னென்னும் சங்காநுவாதபூர்வகம் பரிஹரிக்கிறார் (நானுய்யவித்யாதி.) "மனத்திருப்பார்நாமம் - நான்கண்டுகொண்டேன்" என்று அந்வயித்திருக்கவும், "நாராயணாவென்னும் நாமம்" என்றதுக்குக்கருத்தருளிச்செய்கிறார் (சாந்தஇத்யாதி.) "நான்கண்டுகொண்டேன்" என்று (௪) அநுஷங்கித்து தாத்பர்யமருளிச்செய்கிறார் (சேமமேயித்யாதி.) ... ... ... (௩)

நாலாம்பாட்டு.—(வென்றியே யித்யாதி) கீழ்ப்பாட்டிலே * சேமமேவேண்டித் தீவினை பெருக்குகைக்கு ஹேது - அர்த்தேஷணையாதல் தேஹாத்மாபிமானமாதலென்று காட்டாநின்றுகொண்டு, திருமந்த்ரத்தைக் கண்டுகொண்டதுக்கு ஹேதுவையும் (௫) முக்தகண்டமாக வருளிச்செய்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

---

(க) கலவிருக்கை - நெஞ்சுபொருந்தியிருக்கை; ஓலக்கம்; கொலுச்சாவடி: நித்யவாஸம்பண்ணுமிடம்; "இறைப்பொழுதில் பாதாளம் கலவிருக்கைகொடுத்துகந்தவம்மான்" என்னக்கடவதிறே. (உ) உத்தேச்யஸித்தி-தான்ஆசைப்பட்டது கைகூடுகை. (௩) சமதமாத்யுபேதர் - சமம் தமம் முதலிய குணங்களோடு கூடினவர்கள். (௪) அநுஷங்கித்து - சேர்த்து. (௫) முக்தகண்டமாக- விடப்பட்டமிடற்றையுடையராய்; வெளிப்படையாகவென்றபடி.

மூ.—வென்றியேவேண்டிவீழ்பொருட்கிரங்கி வேற்கணார்கலவியேகருதி,
நின்றவாநில்லாநெஞ்சினையுடையே னென்செய்கேன்!; நெடுவிசும்பணவும்-
பன்றியா யன்று பாரகங்கீண்ட பாழியான், ஆழியானருளே,
நன்றுநானுய்ய நான்கண்டுகொண்டேன் நாராயணாவென்னும்நாமம். (௪)

ப-ரை.—வென்றியே - எல்லார்பக்கலிலும் ஜயத்தையே, வேண்டி-அபேக்ஷித்து, வீழ்-நசிக்குந்தன்மையுள்ள, பொருட்கு-தநத்துக்கு, இரங்கி-துக்கித்து, வேல்கணார்-வேல்போன்ற கண்ணையுடைய ஸ்த்ரீகளது, கலவியே-ஸம்ச்லேஷத்தையே, கருதி-நினைத்து, நின்றவாநில்லா-ஒன்றிலும் நிலைபெற்றிராத, நெஞ்சினை-நெஞ்சை, உடையேன்-உடையநான், என்செய்கேன்-உன்னைப்பெறுகைக்குறுடான ஓர்உபாயமும் செய்யவல்லேனல்லேன்; அன்று-பூமியை ப்ரளயங்கொண்ட அந்நாளிலே, நெடு-உயர்ந்த, விசும்பு-ஆகாசத்தை, அணவும் - தழுவும்படி வளர்ந்த, பன்றியாய்-வராஹரூபங்கொண்டு, பாரகம்-பூமியை, கீண்ட-உத்தரித்த, பாழியான்-மிடுக்கையுடையனாய், ஆழியான்-விரோதிகளை நிரஸிக்கைக்குத் திருவாழியைக்கையிலேயுடைய ஸர்வேச்வரனது, அருளே-க்ருபையாலே, நான் நன்றுஉய்ய நாராயணா என்னும் நாமம் நான் கண்டுகொண்டேன்—. (௪)

வ்யா. — நாலாம்பாட்டு.—(வென்றியேவேண்டி) பிதாவாகவுமாம், ஆசார்யனாகவுமாம், வென்றியேயாய்த்து இவன் வேண்டியிருப்பது. தன்னையொழிந்தாரைக் கீழ்ப்படுத்தி தான் மேலாகவாய்த்து வேண்டியிருப்பது. தோல்வி குணமாம் விஷயத்திலேயாய்த்து வெல்ல நினைத்திருப்பது.

(வீழ்பொருட்கிரங்கி) கையில் சிறிது அர்த்தமுண்டாய் அத்தாலேயிறே யிவனொருவனையும் மதியாதிருப்பது. அது அஸ்திரமானபடியாலே அபஹ்ருதமாயிருக்குமிறே; அத்தையிழந்து கூப்பிடாநிற்கும். கௌரவ்யராயிருப்பார்பக்கல் அபிமாநம் பண்ணக்கடவதன்றிக்கே யிருக்க, அபிமாநம்பண்ணி வர்த்தித்ததுக்குமேலே இரங்கக்கடவதல்லாததுக்கு இருந்து கண்ணநீர் பாயாநிற்கும். அங்ஙனன்றிக்கே, தேஹாத்மாபிமாநத்தைப் பண்ணி தன்னையெல்லார்க்கும் மேலாகநினைத்துப்போந்ததுவே யன்றியே, அஸ்திரமானவுடம்பை "நித்யமாக வேணும்" என்று சோதியாநிற்கு மென்னவுமாம்.

அ.—"அஹங்காராபஸம்ஸ்ருஷ்டஸ்ய" "ஆர்த்தாதுராநுகம்பகதஃ" என்கிறபடியே - இவனுடைய அர்த்தாபிமாநத்தால் வந்த மேனாணிப்பைச் சொல்லுகிறதென்று தாத்பர்யம் திருவுள்ளம்பற்றி, வென்றி-ஜயமாய், ஸ்வோத்கர்ஷம்மேலிட்டென்று அர்த்தமாய், இது அநுதாபஹேதுவானபடியை யருளிச்செய்கிறார் (பிதேத்யாதி.) இவ்வர்த்தம், "வென்றியே" என்கிற ஸாமாந்ய நிர்த்தேசத்தாலே ஸூசிதமாகிறதென்னுமத்தைக் காட்டுகிறார் (தன்னையித்யாதி.) இது அதிக்ரூரதோஷமானமையை உபபாதிக்கிறார் (தோல்வியித்யாதி.)

வீழ்கையே-போகையே ஸ்வபாவமான, பொருட்கு-தநத்துக்காக, இரங்கி-க்லேசித்தாளன்று சப்தார்த்தமாய், ஹேதுபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (கையிலித்யாதி வாக்யத்ரயத்தாலே.) இரண்டுபதங்களாலும் பலித்தஅர்த்தத்தைத் தொகுத்தருளிச்செய்கிறார். (கௌரவ்யராயித்யாதி.) அபிமாநம் - அர்த்தாபிமாநகார்யமென்றபடி. வெற்றிக்குஹேது-தேஹாத்மாபிமாநமென்றும் பொருள். தேஹாத்மாபிமாநம் என்னும் பதத்வயத்துக்கு அர்த்தாந்தரமருளிச்செய்கிறார் (அங்ஙனன்றிக்கேயித்யாதி.)

(வேற்கணார்கலவியேகருதி) கையில் (க) அர்த்தமுண்டானகாலம் (உ) பார்யையைச் செங்கற்சீரைகட்டிக் கூப்பிட்டுத் திரியவிடுமவன் (க) அர்த்தமிழந்து கூப்பிடாநின்றால், அல்லாதாரோடொக்க அவளும் வினவப்புகுருமே; இவனைக்கண்டவாறே, "அவ்வர்த்தத்தை யெல்லாம் இட்டு ஒருபணியாகப் பூட்டிக்காணப்பெற்றிலோம்" என்று மநோரதியா நிற்கும். கெடுத்தபொன்னை யிப்போது பூட்டத்தேடும்.

(நின்றவாநில்லா நெஞ்சினையுடையேன் என்செய்கேன்) ¶ உர்வசி ஸாலோக்யத்துக்கு நாடடங்க ஸாதநாநுஷ்டாநம் பண்ணாநிற்க, நேர்கொடு நேர் அவள்தான்வந்து உபஸ்தாநம்பண்ணி முன்னே நிற்க, அர்ஜுநன் [க0 நமஸ்கரித்துக் கடக்கநின்றானிறே விரக்தியாலே; இப்படிப்பட்டவன்,

கலவிசெய்தென்னாதே, "கருதி" என்கையாலே - அம்மநோரதமாத்ரந்தான் அர்த்தமிழந்தபோது மற்றவிஷயத்தில் நிஷ்பலமாகையாலே, பார்யாவிஷயமாக்கி தாத்பர்யமருளிச்செய்கிறார் (கையிலர்த்தமித்யாதி) இதுமுந்தினதாத்பர்யத்துக்குச்சேரும். பொருள் - சரீரமென்ற பக்ஷத்தில், "வேற்கணார்" என்றது-ஸர்வ விஷயமாகக் கண்டுகொள்வது. செங்கற்சீரைகட்டி - காவிப்புடவை யுடுத்து.

(க) அர்த்தம் - தநம். (உ) பார்யை - மனைவி.

¶ அவிவேகிகளுக்கன்றோ மாஸ்ஸங்கலக்கும், விவேகிகளுக்குக் கலங்குமோவென்ன (உர்வசிஸாலோக்யத்துக்கித்யாதி.) அதாவது - புரூரவா என்கிற ராஜா வேட்டைக்குப் புறப்பட்டவிடத்திலே, சாபோபஹதையாய்க் கொண்டு உர்வசிபூமியிலேவந்து ஸஞ்சரியாநிற்க, இவனைக்கண்டு "ஸ்த்ரீயாகவேணும்" என்று அபேக்ஷிக்க, "நான்சொன்னபடியே செய்தாயாகில் அப்படியே செய்கிறேன்" என்று அவள்சொல்ல, "அதாவதேது?" என்ன, "எப்போதும் என்ஸமீபத்திலே இரண்டு ஆட்டுக்குட்டியைக் கட்டிவைக்கவேணும், வெளியிலே நக்நனாய் என்முன்னேயிருக்கவொண்ணாது, இருந்தாயாகில் அப்போதேவிட்டுப்போகிறேன்" என்று சொல்ல, "அப்படியே செய்கிறேன்" என்று சிரகாலம் அவளோடே ஸம்ச்லேஷித்துக்கொண்டிருக்கிறவளவிலே, இவளுக்கும் சாபமோக்ஷம்பிறந்து, இந்த்ரனுடைய ஆஜ்ஞையாலே யிவளையழைத்துக்கொண்டு போவதாக கந்தர்வர்கள்வந்து, ஒருராத்ரியிலே யிவளுமவனுமாகக் கூடி யிருக்கிறவளவிலே, அவனுடைய புடவையையும் அந்த ஆட்டுக்குட்டிகளையும் அபஹரித்துக்கொண்டுபோக, ஆட்டுக்குட்டிகள்போகையாலே மிகவும் துக்கிதையாய் மீட்டுக்கொண்டுவரச்சொல்ல, அவன்போகாதே வெறுமனேயிருக்க, "உன்னை புருஷனென்றிருந்தேன், நீயுமென்னைப்போலே ஸ்த்ரீயானாய்!" என்று க்ஷேபோக்தியைப்பண்ண, அவனும் அந்த நக்நவேஷத்தோடே புறப்பட, அவ்வளவிலே ஒருமின்மின்ன, அந்தவெளியாலே அவனைக்கண்டு "வெளியிலே யென்முன்னே நக்நனாயிருந்தாய்" என்றுசொல்லி அந்த ராஜாவை விட்டு ஸ்வர்க்கத்திலேபோனாள்; அநந்தரம், அந்தராஜா ப்ராந்தனாய்க்கொண்டு அந்தவேஷத்தோடே ஸஞ்சரியாநிற்க, இவனுடைய வ்யஸநத்தைக் கண்டு உர்வசிமீளவும்வந்து "துக்கப்படவேண்டா, உன்னாலே யுண்டானகர்ப்பம் என்வயிற்றிலே யிருக்கிறது, ஒருவருஷம் சென்றவாறே ஒருபிள்ளைபிறக்கும், அந்தப்பிள்ளையையு முனக்குக்கொடுத்து உன்னோடேயொருநாள் ஸம்ச்லேஷிக்கிறேன்" என்றுசொல்லிப்போய், ஒருவருஷம்சென்றவாறே திரும்பவந்து பிள்ளையுங்கொடுத்து ஒருநாள்ஸம்ச்லேஷித்திருந்து மீளவும் ஸ்வர்க்கத்துக்குப் போம்போது,

'తస్యాహం నిగ్రహం మన్యే వాయోరివ సుదుష్కరమ్" "தஸ்யாஹம்நிக்ரஹம் மந்யே வாயோரிவஸுதுஷ்கரம்" என்று-ப்ரதிகூல வாயுவைப் பிடித்துக் கூடுகட்டிலும் என்னெஞ்சைப்பிடிக்கப்போகாது என்றானிறே. (க) ஒருவிஷயங்களிலே அரைக்ஷணம் கால்தாழாத நெஞ்சையுடையேனான நான், இந்நெஞ்சைப்பரிகரமாகக்கொண்டு உன்னைப்பெறுகைக் கீடான உபாயாநுஷ்டாநம் பண்ணவென்பதொன்றுண்டோ; உன்னையிழக்கைக்கு உறுப்பாமித்தனை. (என்செய்கேன்) அர்ஜுநனுக்கு பதினெட்டு (உ) ஓத்திலும் (ங) சோகத்தை உத்பாதித்தாப்போலே, கண்டதெல்லாம் இவர்க்கு பயாவஹமா யிருக்கிறபடி.

நீரிப்படி யிருந்தீராகில் உமக்குப் பேற்றுக்கடி யெத்தாலே யென்றிருந்தீரென்ன; ப்ரளயங்கொண்ட பூமி தன்னுடைய ரக்ஷணத்தில் அஸமர்த்தமாய் அத்தை ரக்ஷித்தான் யாவனொருவன், அவனாலே யென்கிறார் (நெடுவிசும்பணவும் பன்றியாயன்று பாரகங்கீண்ட பாழியான் ஆழியானருளே) ப்ரளயங்கொண்ட பூமிக்கு ஸ்வரக்ஷணத்தில் அந்வயமுண்டாமன்றிறே விஷயங்கொண்ட நெஞ்சை யுடையேனான நான் எனக்கு ஹிதசிந்தை பண்ணுவது. ஆகாசாவகாசம் வெளியடையும்படி விம்ம வளர்ந்தவன். ரக்ஷ்யத்தின் னாவல்லாநபடி.

"நெஞ்சைப்பிடிக்கவொண்ணாது" என்றஅர்ஜுநனுடைய உட்கருத்தை யருளிச்செய்கிறார் (ஒருவிஷயங்களிலே யித்யாதி.) த்ருஷ்டாந்தபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அர்ஜுநனுக்கித்யாதி.) கண்டதெல்லாம் - விஷயங்களெல்லாமென்றபடி.

(அடி) என்றவாதாரம், ஹேதுவென்றும் சொல்லுப்பெறுமென்னும் அர்த்தாஹரிப்பது. இப்படி ப்ரசாத்யம் கண்டுகொள்வது.

பூர்வார்த்தத்தை யெல்லாமுட்கொண்டு இப்பதத்துக்குட்கருத்தை யருளிச்செய்கிறார் (ப்ரளயங்கொண்டவித்யாதி.)

அவனோடே கூடவந்த கந்தர்வர்கள் அந்தராஜாவைப்பார்த்து "உனக்கு வேண்டினதொருவரத்தைக் கேட்டுக்கொள்" என்ன; "எனக்கு ஊர்வசீஸாலோக்யம் வேணும்" என்ன; அவர்கள் ஒருஅக்நியைக்கொடுத்து "இத்தால் யாகம்பண்ணினதே யுண்டாகில் தத்ஸாலோக்யம் பெறலாம்" என்றுசொல்லிப் போனார்கள். அந்தராஜாவும், அந்தஅக்நியைக் கொண்டு வாராநிற்க, பழைய ப்ராந்தி தலையெடுத்து ஒருஅரசின்கீழ் அந்தஅக்நியைவைத்து மறந்துபோய், தன்பட்டணத்துக்குவந்து, மீளவும்நினைத்து அரசடியிலேசெல்ல, அந்தஅக்நியானது (ச) சமீவ்ருக்ஷரூபமாய்க் கொண்டு அந்தஅரசோடேகூடியிருக்க, அதிலே யொருகொம்பை முறித்துக்கொண்டுவந்து கடைந்து அக்நியையுண்டாக்கி அந்த அக்நியாலே யாகத்தைப்பண்ணி ஊர்வசிஸாலோக்யத்தை யடைந்தானும்; அத்தைச்சொல்லுகிறது. (திருவாய்மொழி - கூ-பத்து, ம - திருவாய்மொழி * மாலைநண்ணி ப்ரவேசத்தின் அடையவளைந்தானரும்பதத்தில் வாக்யம்.)

(க) "ஒருவிஷயத்திலே" என்னும்பாடம் கோசாந்தரங்களிற் கண்டுகொள்வது. (உ) ஓத்து - வேதம்; இங்கு, பகவத்கீதையின் அத்யாயத்தைச்சொல்லுகிறது. (ங) சோகம் - மனவருத்தம். (ச) சமீவ்ருக்ஷம் - வன்னிமரம்.

பாய்த்து ரக்ஷகனானவன் வடிவைப் (௧) பாரித்தபடி. பூமி ப்ரளயததிலேபுக்கு முடிந்துபோகப்புக்கவாறே, நீருக்கும் சேற்றுக்கும்(௨) இறாயாத மஹாவராஹமானான். ஜலஸம்ர்த்தி காணப் பணைக்கும் வடிவைக் கொண்டான். [மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப்பன்றியாம்] "மஹிஷியுடம்பு பேணாதே பாசிதூர்த்தது" என்றவாறே,(௩) காந்தனானதானும்உடம்புபேணாதே, மாசேறின வுடம்பை யுடையனானான். [மானமிலா] ஈச்வரத்வாபிமாநம் (௪) பின்னாட்டாதபடி யிருக்கை. மாயாம்ர்கத்தைக் கண்டபோது இனத்தில் மான்கள் வந்துமோந்துபார்த்து, "விஜாதீயம்" என்றுகடக்கப்போய்த்தினவிறே; அங்ஙனன்றியே, "ஜ்ஞாநஸம்ஸ்ரய-ஸந்த்யே" "ஆத்மாநம் மாநுஷம்மந்யே" என்கிறது இங்கும் அநுவர்த்தித்தபடி. (பாரகங்கொண்ட) பூமிப்பரப்படங்க அண்டபித்தியோடே புக்குச் சேர்ந்ததனை ஒட்டுவிடுவித்து எடுத்த. (பாழியான்) மிடுக்கையுடையவன். (ஆழியான்) ரக்ஷிக்குமிடத்து ஒரு பரிகராபேக்ஷையில்லை; ஒரு பரிகரங்கொண்டு ரக்ஷிக்கப்பார்த்தானாகில் அநுக்கூலமான பரிகரமுடையவன். (அருளே) அபிமாநம் பண்ணக்கடவதல்லாத விஷயங்களிலே அபிமாநம் பண்ணியும், சோகிக்கக்கடவதல்லாததுக்கு சோகித்தும், நரகாவஹமான விஷயங்களை அநுபவிக்க மநோரதித்தும், "நின்றவா நில்லா நெஞ்சினையுடையேன்" என்று இப்படி கைகழிந்தவென்னை, "இனியிவன் தானாக மீளமாட்டான்" என்றநுவேஹேதுவாக எடுக்கவொருப்பட்ட ஸர்வேச்வரன் க்ர்பையாலே. அருளே என்னவுமாம், அருளாலே என்னவுமாம். (நன்றுநானுய்ய) "வென்றியே வேண்டிவீழ் பொருட்கிரங்கி வேற்கணார் கலவியே கருதி" என்று போந்தவன் சுத்தனானான் என்று தெரியாதபடி (௫) அஸ்ப்ர்ஷ்டஸம்ஸாரகந்தனாம்படி யானேன். (நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும்நாமம்) "வென்றியே வேண்டி வீழ்பொருட்கிரங்கி" என்று - அபிமாநமும்லோபமுமிறே சொல்லிற்று; இப்படிபோந்தநான், (௬) அமாநித்வாத்யாத்மகுணோபேதர் பெறும் பேற்றைப் பெற்றேன். ... ... ... ௪

இங்கு மநுவர்த்தித்தபடி என்றது - ஆத்மாநம் வராஹம்மந்யே என்றுஅநுவர்த்தித்தபடி. "பாழியான் ஆழியான்" என்ற பதத்வயத்துக்கும் க்ரமேண பாவமருளிச்செய்கிறார் (ரக்ஷிக்குமித்யாதி வாக்யத்வயத்தாலே.) அடியெது என்றப்ரச்நத்துக்குஉத்தரமானபடியை யருளிச்செய்கிறார் (அருளேயித்யாதி.) சப்தநிர்வாஹபேதமொழிய அர்த்தபேதமில்லை. முந்தினபக்ஷத்தில், மூலத்தில் "அருளே" என்றவநந்தரம், அடியாக என்றுஅத்யாஹரித்து, அந்வயம் கண்டுகொள்வது. ... ௪

(௧) பாரிக்கை - பரப்புகை. (௨) இறாயாத-பின்வாங்காத. (௩) காந்தன் - கணவன். (௪) பின்னாட்டுகை - பின்தொடருகை; அநுவர்த்திக்கை. (௫) அஸ்ப்ர்ஷ்டஸம்ஸாரகந்தன்- ஸம்ஸார ஸம்பந்தம் சற்றுமில்லாதவன். (௬) அமாநித்வாத்யாத்மகுணோபேதர் - பகவத்பாகவத விஷயங்களில் பெருமையில்லாமை முதலிய ஆத்மகுணங்களை யுடையவர்கள்.

மூ.—கள்வனேனானேன்; படிறு செய்திருப்பேன்; கண்டவா திரிதந்தேனேலும், தெளிவுற்றேனானேன்; செல்கதிக்கமைந்தேன்; சிக்கெனத் திருவருள்பெற்றேன்; உள்ளெலா முருகிக்குரல் தழுத்தொழிந்தேன்; உடம்பெலாம் கண்ணநீர்சோர, நள்ளிருளளவும் பகலும் நானழைப்பன் — நாராயணாவென்னும்நாமம். (௫)

ப-ரை.—அவன்கடாக்ஷம்பெறுவதற்குமுன்னே, கள்வனேன் ஆனேன் - அவனுடைமையான ஆத்மாவைக் களவுகண்டேன்; படிறு - மிக்கதீம்பை, செய்து இருப்பேன் - எப்போதும் செய்துகொண்டிருப்பேன்; கண்டஆ - கண்டவிஷயங்கள்தோறும், திரிதந்தேனேலும் - கால்தாழ்ந்து போந்தேனாகிலும், திரு அருள் - அவன்கடாக்ஷத்தை, சிக்கென - திடமாக, பெற்றேன் - அடைந்தேன்; அத்தாலே, தெளிவுற்றேன் ஆனேன் - "அவன்சேஷி, நாம்சேஷபூதர்" என்கிற விவேகமுடையேனானேன்; செல் - அர்ச்சிராதிமார்க்கத்தாலே செல்லக்கடவ, கதிக்கு - பரமபதத்துக்கு, அமைந்தேன் - ஏற்றபடி பூர்ணனானேன்; பின்பு, உள் எலாம் - உள்ளுண்டான எலும்பும் நரம்பும், உருகி - நீராயுருகி, குரல் - கண்டம், தழுத்தொழிந்தேன் - தழுதழுக்கும்படி ஆனேன்; அதுக்குமேலே, உடம்பு எலாம் - சரீரமெங்கும், கண்ணநீர் - ஆநந்தக்கண்ணீர், சோர - பெருகும்படியாக, நள் - செறிந்த, இருளளவும் - ராத்திரிமுழுதும், பகலும் - பகல்முழுதும், நாராயணா என்னும்நாமம் - நாராயணனென்கிற திருநாமத்தை, நான் - அடியேன், அழைப்பன் - அழைக்கப் பெற்றேனென்று களிக்கிறார். ஆத்மாவைக்களவுகாண்கையாவது - ஸ்வதந்த்ரனென்கிற நினைவு. கண்ட ஆறு என்பது - கண்டஆ எனவும், எல்லாம் என்பது - எலாம் எனவும் கிடக்கிறது.

வ்யா.— அஞ்சாம்பாட்டு.— (கள்வனேனானேன்) விபூதயாயு கண்டவனிற்காட்டில் ரத்நாபஹாரம்பண்ணினவனுக்கு பாபம்ப்ரசுரமாயிருக்கும்; ஸுவர்ணத்தை அபஹரித்தவனிற்காட்டில் ப்ராஹ்மணதநத்தை அபஹரித்தவனுக்கு பாபம்விஞ்சியிருக்கும்; த்ரவ்யங்களில்தலையான ஆத்மவஸ்துவையாய்த்து அபஹரித்தது. ஸர்வேச்வரனுடைமையை யாய்த்து என்னது என்றுபோந்தது.

(படிறுசெய்திருப்பேன்) மிடறு நின்றால் சொறியவொண்ணாதாப்போலே (க) பச்யதோஹரனானேன்.

அஞ்சாம்பாட்டு.—(கள்வனென்றித்யாதி.) கீழ்ப்பாட்டிலே "வெந்நீய வேண்டி" இத்யாதிகளுக்கெல்லாம் மூலம் - தேஹாத்மாபிமாநமேயென்று திருவுள்ளம்பற்றி, அத்தை இப்பாட்டிலே யருளிச்செய்கிறாரென்றும், ஆழியானருளாலே தாமுஜ்ஜீவித்தப்ரகாரங்களை யருளிச்செய்கிறாரென்றும் ஸங்கதியையுட்கொண்டு, "கள்வனேனானேன்" என்று பரிதபிக்கைக்கு களவு க்ரூரதமமாக வேண்டுகையாலே, அத்தைநிருபிக்கிறார் (விரும்பித்யாதி.) (விஞ்சியிருக்கும்) என்றவனந்தரம், ஆகையாலே என்று சேஷம்.

படிறு — தீம்பாய், அத்தை, செய்வேனென்னாதே, "செய்திருப்பேன்" என்கையாலே - தடையறச்செய்துகொண்டிருப்பேனென்று, அதுக்கு ஸர்ஷ்டாந்த தாத்பர்ய மருளிச்செய்கிறார் (மிடறித்யாதி.) சொறிய வொண்ணாதாப்போலே யென்றது - சொறிந்துபோக்கவொண்ணாதாப்போலே யென்கை.

(க) பச்யதோஹரன் - பார்த்துக்கொண்டிருக்கையில் திருடுமவன்.

நான் தேஹாத்மாபிமாநம் பண்ணிப்போந்ததுவே யன்றிக்கே, 'ஈசவரசேஷமிவ்வாத்மவஸ்து" என்றிருப்பாரொராஸ்திகனுண்டாகில, "தேஹாதிரிக்தமா யிருப்பதொரு வஸ்துவாவதென்? ஈச்வரனாவதென்?" என்று காணக்காணப்புறிந்தேன். (கண்டவா திரிந்தேனேலும்) முன்னடி தோற்றுமையாலே கைவந்தபடி பரிமாறி னேனித்தனை போநகி, சாஸ்த்ரங்கள் "ஆகாது" என்றத்தையறிந்தும் மீண்டிலேன். [ந்ருஸ்ஸம்ஸ: ந்ரப ஸு] அல்லாதவற்றோடு பரிமாறுமத்தை ஜநபேபசாசமிலேயும் பரிமாறப் பேடும். (தெள்ளியேனானேன்) இப்படியிருாகசெய்தே, ஸாராஸாரவிவேகம்பண்ணி செய்யக்கடவது செய்து அல்லாதது தவிர்ந்துபோருவாரைப் போலே, விவேகமுடையேனானேன் (செலாதிக்காமைந்தேன்) நித்யஸம்ஸாரியாகைக்கு உபபானவற்றைச் செய்துபோந்தநான், "இனியிவன் ஸம்ஸாரத்தாக்கு ஆளாகமாட்டான், பரமபதத்துக்காளாமத்தனை" என்னும்படி யாநந்தேன். செலலக்கடவ ததியுண்டு- பரமபதம், அங்குத்தைக்கு ஆளாருமபடி பூர்ணனானேன். "கண்டவா திரிதந்தேன்" என்றீர், "தெள்ளியேனானேன்" என்றீர், வ்யாவ்ருத்தபாஷணமா யிருந்ததீ! என்ன (செய்வேன்! திருவருள் பெற்றேன்) இனி மீளாதபடி அருளப்பெற்றேன். நீர் பெற்றபேறுதானென்னென்ன (உள்ளெலாமுருகிக் குரல் தழுத்தொழிந்தேன்) உள்ளெலும்பும் நரம்பும்அறவுருகி, அநுநான் த்வநியில தழுதழுப்பிலே தெரியும்படியானேன். உடம்பெலாம கண்ணநீர் சோர) "ஹ்ருஷ்டஸ்வரோ கண்டோ ப்ரஹ்ருஷ்டாங்கருஹோ" "ஆஹ்லாதசீதநேத்ராம்பு: புளகீக்ருத காத்ரவாந்." உடம்படங்க பஞ்சஸ்வரமும் தரிஸரமுமிட்டாபபோலே கண்ணநீர்வெள்ளமிட்டபடி. (நள்ளிருளளவும்பகலும் நானழைப்பன் நாராயணாவென்னும் நாமம்) விஷயாநுபவம்பண்ணிக் களித்திருக்கும் போதோடு விஷயாநுபவம்பண்ணுகைக்கு அர்த்தார்ஜநம்பண்ணும் போதோடு வாசியற எனக்குத் திருநாமம் சொல்லுகையே யாத்ரையாகப் பெற்றேன். ... ... ... ... ... ... ௫

---

பச்யதோஹரதவதன்னை விவரிக்கிறார் (நானித்யாதி.) "கண்டவா" என்றதுக்கு கேட்பாரயாவர்த்யாகையாலே, அத்தையருளிச்செய்கிறார் (முன்னடி த்யாதி.) சபநார்த்தம் (செல்லக்கடவதித்யாதி.) மேலுக்கவதாரிகை (கண்டவா த்யாதி.) * திருவருள்பெற்றத்தாலே நீர்பெற்றதான * தெள்ளியேனாகையும் செலகதிக்கானமையுமாகிறபேறு எங்ஙனே ! என்னும் ப்ரச்நத்தை அநுவதிக்கிறார் (நீரித்யாதி.) தழுதழுப்பிலே - கத்கதஸ்வரத்திலே. அஞ்சுமுத்தாத்தாவடமான்று யிருக்குமது- (பஞ்சஸ்வரமென்றது.) விழுதென்றதே, "சோர" என்றத்தால பலித்தஅர்த்தமிதுவென்றுகொள்வது. "நள்ளிருளளவும்" என்றதுக்கு, "நள்" என்று-சப்தவிசேஷமாய்,அதளவும் மத்யராத்ரத்திலுமென்றுசப்தார்த்தமாய்,காலத்தை இப்படி அருளிச்செய்தவர்க்குஉட்கருத்தருளிச்செய்கிறார்(விஷயேத்யாதி.)

௯.—எம்பிரா னெந்தை யென்னுடைச்சுற்ற மெனக்கர செென்னு டைவாணாள்§, அம்பினா லரக்கர் வெருக்கொள நெருக்கி யவருயிர் செகுத்த வெம்மண்ணல், வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சைமா மணிக்கோயிலே வணங்கி, நம்பிகாள் ! உய்ய நான் கண்டுகொண் டேன் நாராயணாவென்னும்நாமம். (௯)

ப-ரை.—நம்பிகாள்!- பகவத்குணாநுபவத்தாலே பூர்ணராயிருப்பவர்களே!, எம்பிரான் - எனக்குஉபகாரகனாய், எந்தை - எனக்குஉத்தமப்பனாய், என்னுடைச் சுற்றம் - எனக்கு எல்லாவுறவுமுறையுமாய், எனக்கு அரசு - என்னைஆண்டவனாய், என்னுடைவாணாள் - எனக்கு ப்ராணபூதனாய், அரக்கர் - ராக்ஷஸர்கள், வெருக்கொள- அஞ்சும்படியாக, அம்பினால் - பாணங்களினாலே, நெருக்கி - நெருக்கப் பண்ணி, அவர்உயிர் - அவர்கள்ப்ராணனை, செகுத்த - முடித்த, எம்அண்ணல் - என் ஸ்வாமியான ஸர்வேச்வரன் நித்யவாஸம்பண்ணுமதாய், வம்பு - பரிமளம், உலாம்-வீசாநின்றுள்ள, சோலை - பொழிலையும், மா - நீண்ட, மதிள் - மதிளை யுமுடைய, தஞ்சைமாமணிக்கோயிலே - தஞ்சைமாமணிக்கோயிலையே, வணங்கி - ஸேவித்து, நான்உய்ய - உங்களைப்போலே நானும்உஜ்ஜீவிக்கும்படி, நாராயணா என்னும் நாமம் கண்டுகொண்டேன்—.

அ.—ஆறும்பாட்டு.—இத்தை நீர் போர ஆதரியாநின்றீர், இது தனக்கு அர்த்தமென்னென்ன; சொல்லுகிறார். இதினுடைய பாடத்தை ஜபித்து அத்தாலே பலம் பெறவிருத்தல், இத்தாலே பாபத்தைப்போக்கி கர்மயோகத்துக்குடலாக்குதல் செய்கையன்றிக்கே, அர்த்தாநுஸந்தாநத்தாலேபேறு என்று தமக்கு பக்ஷமாகையாலே அர்த்தத்தைச்சொல்லுகிறார். நம்மாழ்வாரும், திருமந்த்ரம் ஓரிடத்திலே ப்ரஸ்துதமானால், முன்னேயாதல் பின்னேயாதல் அர்த்தத்தைச்சொல்லிப்போருவர் அர்த்தப்ராதாந்யம் தோற்ற; ஜ்ஞாநாத் மோக்ஷமாகவேண்டுகையாலே.

வ்யா.—(எம்பிரான்) எனக்குஉபகாரகன். (எந்தை) எனக்கு ஜநகன். (என்னுடைச்சுற்றம்) என் (க) குடற்றுடக்கான எல்லாவுறவுமுறையுமானவன். (எனக்கரசு) என்னை வன்னியமறுத்து ஆண்டவன். (என்னுடைவாணாள்§) என்னுடைய ஆயுஸ்ஸு.

ஆறும்பாட்டு.—(எம்பிரானித்யாதி.) "நம்பிகாள்" என்றபதம் விஷயாந்தரபரரைச்சொல்லுமளவில், இதுக்கு - அர்த்தஜிஜ்ஞாஸையாலே கேட்டார்களென்றும், பகவத்பரரானபோது, இவருடைய அதிகார சோதநார்த்தம் ப்ரச்நம் பண்ணினார்களென்றும் கண்டுகொள்வது; இவ்வர்த்தத்தை யருளிச்செய்கைக்குத்தா னுட்கருத்தை யருளிச்செய்கிறார் (இதினுடையவித்யாதி.)

வன்னியம் - குறும்பு.

(க) குடல்துடக்கு - சரீரசரீரிபாவஸம்பந்தம். § வீரசோழியம் - சந்திப்படலம் - உக - சூத்திரம்.—"ஐம்மூன்றதாமுடல்வன்மைபின்வந்திடிலாறொடைந்தா, மெய்ம்மாண்பதா நவ்வரின்முன்பழிந்துபின்மிக்கணவ்வா - மம்மேல்வரினிருமூன் றுமுடன்மற்றியல்புசந்தி,தம்மாசகலங்கிடப்பின்களாமென்பதாழ்குழலே." (உ-ம்.) பாழ்கும்பி - பாண்கும்பி. வாழ்நாள் - வாணாள்.

(அம்பினாலரக்கர் வெருக்கொளநெருக்கி அவருயிர் செகுத்த எம்மண்ணல்) ஸங்கல்பத்தாலன்றிக்கே அம்பாலே ராக்ஷஸராகும்படி நெருக்கி அவர்களுயிரை முடித்த என் ஸ்வாமி. ஸ்வாமித்வத்தோடே தலைகட்டிற்றாய்நின்றது. இத்தால் சொல்லிற்றாய்த்து - "ஸா ....... ஸுஹ்ருத்கதிர்நாராயண:" "மாதா பிதா ப்ராதா நிவாஸச்சரணம் ஸுஹ்ருத்கதிர்நாராயண:" என்கிற படியே. இதுதான் நமக்குவந்தபடியென்னென்ன (வம்புலாஞ்சோலை மாமதிள் தஞ்சை மாமணிக்கோயிலே வணங்கி) நித்யவஸந்தமான சோலையையும் மாமதிளையுமுடைத்தான தஞ்சை மாமணிக்கோயிலே வணங்கி வந்தது; "எல்லாவுறவுமுறையும் தானே" என்று தோற்றும்படி அவன் நிற்கிற ஸௌலப்யத்தை அநுஸந்திக்கையாலே வந்தது. (நம்பிகாள்!) பகவத்வ்யதிரிக்த விஷயங்களைப் பற்றி தேஹபோஷண பரராயிருக்கிற வவர்களைச் சொல்லிற்றாதல், பகவத்குணாநுபவம்பண்ணி அத்தாலே பூர்ணராயிருக்கிற வவர்களைச் சொல்லிற்றாதல். (உய்ய நான் கண்டுகொண்டேன்) நீங்களெல்லாம் புறம்பேபோய் க்லேசப்படாநிற்க நானுஜ்ஜீவிக்கும்படி காணப்பெற்றேனென்னுதல்; நீங்களுஜ்ஜீவிக்கும் விரகறிந்து கரையேறினாப்போலே நானும் கரையேறப் பெற்றேனென்னுதல. (நாராயணா வென்னும் நாமம்) ஸர்வவிதபந்துவுமவனே என்கிற அர்த்தத்துக்கு வாசகமான திருநாமத்தைக் காணப்பெற்றேன். ... ... ... ... ௬

அ.—ஏழாம்பாட்டு.—அல்லாதாரிநாளிழக்கிறார் (௧) அவிசேஷஜ்ஞராகையாலே, விசேஷஜ்ஞராய் என்றோடு ஸஜாதியராய்க் கிட்டிப்பிரிகிற நீங்களிழக்கிறதென்னென்கிறார்.

(இத்தால - நாராயண: என்கிறபடியே - சொல்லிற்றாய்த்து) என்று வாக்யார்த்தை அருளிச்செய்கிறது. நித்யமானகோயிலையே வணங்கி யென்றும் கோயிலிலேயிருக்கிறவனையென்று லக்ஷணையாகவும் ஜீயர் அருளிச்செய்தார் (நித்யேத்யாதிவாக்யத்வயத்தாலே.) ... ... ... ... (௬)

ஏழாம்பாட்டு.—(இற்பிறப்பித்யாதி.) கீழ்ப்பாட்டிலே "நம்பிகாள்!" என்று பகவத்பூர்ணரைச்சொன்ன பக்ஷத்துக்கு அநுகுணமாக, இப்பாட்டிலே விசேஷஜ்ஞராகவிட்டு, "சொற்பொருளாளீர்!" என்று விசேஷிக்கையாலே பலித்தஸங்கதியை அருளிச்செய்கிறார் (அல்லாதாரித்யாதி.) ஸஜாதியராயென்றது - ஸத்ரசராயென்றபடி. கீழே "நம்பிகாள்" என்று - பகவத்ப்ரவணரானபோது அவர்களைப்பார்த்து வார்த்தைசொன்னவர்; க்ருபையாலே லோகத்திலே கண்வைத்து உபதேசிக்கப் பார்த்தாராய், அதிலே "சொற்பொருளாளீர்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (அல்லாதாரித்யாதி) என்று கண்டுகொள்வது.

(௧) அவிசேஷஜ்ஞர் - அறிவில்கள்.

மூ.—இற்பிறப்பறியீரிவரவரென்னீரின்னதோர்தன்மையென்றுணரீர்;
கற்பகம்புலவர்களைகணென்றுலகில் கண்டவாதொண்டரைப்பாடும் -
சொற்பொருளாளீர்! சொல்லுகேன்வம்மின்; சூழ்புனற்குடந்தையே
தொழுமின் ; நற்பொருள்காண்மின் ; பாடிநீருய்மின் - நாராயணா
வென்னும் நாமம். (எ)

---

ப-ரை.—உலகில் - இப்பூமியிலுள்ளார்க்கு, தொண்டரை - இழிதொழில்செய்துதிரியுமவர்களை, இல் - (அவர்களுடைய) க்ருஹவைலக்ஷண்யத்தையும், பிறப்பு - ஜந்மவைலக்ஷண்யத்தையும், அறியீர் - அறியாதவராய், இவர் - இவரிப்போது ஸம்பந்நரானவர்கள், அவர் - அவர்முன்புதரித்ரராயிருந்தார், என்னீர் - என்று சொல்லமாட்டாதவராய், தன்மை - இவர்கள் ஸ்வபாவம், இன்னதொன்று - இப்படிப்பட்டதொன்று, என்று—, உணரீர் - அறியமாட்டாதவராய்க்கொண்டு, கற்பகம்!- வேண்டிற்றெல்லாம் தரும் கல்பகவ்ருக்ஷம்போலே உதாரரானவர்களே!, புலவர் - கற்றோர்க்கு, களைகண் !- ரக்ஷகரே!, என்று- என்றுசொல்லி, கண்டவா- நெஞ்சில்தோற்றினபடியே, பாடும் - * கவிபோற்றி செய்யுமவராய், சொல் - சப்தத்துக்கும், பொருள் - அர்த்தத்துக்கும், ஆளீர் - நிர்வாஹகர்களான நீங்கள், வம்மின்- வாருங்கள், சொல்லுகேன் - ப்ராப்யவிஷயத்தை நீங்கள் [illegible] சொல்லுகிறேன் என்ன; ஆகில் சொல்லலாகாதோ என்ன; நீர் - [illegible] நீங்கள், புனல் - ஜலத்தாலே, சூழ் - சூழப்பட்ட, குடந்தை - திருக்குடந்தையிலெழுந்தருளியிருக்கும் ஆராவமுதனை, தொழுமின் - சேவியுங்கள்; நாராயணனென்னும் - "எல்லாவுறவுமுடையவனே" என்கிற அர்த்தத்தைச் [illegible] வாசகமான, நாமம் - திருநாமத்தை, பாடி - வாயாரச்சொல்லி; உய்மின் - [illegible]; நல்பொருள்காண்மின் - இது பரமார்த்தங்கிடீர் என்கிறார். எ

---

வ்யா.—(இற்பிறப்பறியீர்) அவர்கள் [illegible] நிலை அறியிகோள், அவர்கள்ஜந்மமறியிகோள். (இவரவரென்னீர்) பண்டு தரித்ரனாய் க்லேசப்பட்டுப் போந்தானொருத்தன் இப்போது ஜீவிக்கப்புக்கால், "இது இவனளவு தன்றிக்கேயிருந்தது, இது வேறே யொருவனடியாகவேணும்" என்று அறியமாட்டாதே, ஸ்ரீயப்பதியைப்போலே பிறப்பேபிடித்து ஸ்ரீமானாய்ப் போந்தானாக நினைத்திருப்புதிகோள். அன்றிக்கே, (இவரவரென்னீர்)என்று-ஒருசொல்லாய், ஒருவர்வாசியுமறியீ ரென்னவுமாம். (இன்னதோர்தன்மையென்றுணரீர்) இவனுக்குள்ளவளவுஇது என்றறியமாட்டீர்.

---

* "இல் - அறியீர், பிறப்புஅறியீர்" என்று சப்தார்த்தமாய், அத்தையருளிச் செய்கிறார் (அவர்களித்யாதி வாக்யத்வயத்தாலே.) இவர் இப்போது ஸம்பந்நரானவர்கள், அவர் முன்பு தரித்ரராயிருந்தார் என்னீரென்று சப்தார்த்தமாய், பலிதார்த்த மருளிச்செய்கிறார் (பண்டித்யாதி வாக்யத்வயத்தாலே.)

(கற்பகம்) "நினையாதேகொடுக்கும" என்புதிகோள். (புலவர்களென்று) விசேஷஜ்ஞராயிருப்பார் சிலர் அர்த்தித்துவந்தால் ஒளித்துப்போமவனை, "எங்களுக்குநிர்வாஹகன்" என்பர்கள். (உலகிற் கண்டவாதொண்டரைப்பாடும்) லோகத்தில் நீசவர்த்திகளாய்த்திரிவாரை, கண்டவாபாடும்–ப்ரதிபந்நங்களைச்சொல்லித்திரிகிற. (சொற்பொருளாளீர்) சப்தத்துக்கும் அர்த்தத்துக்கும் (௧) நிலவரான நீங்கள். சொல்லுடைமைக்கு உங்களிற்காட்டிலில்லை; ப்ரமேய ஜ்ஞாந முடையார் உங்களத்தனையில்லை.

(சொல்லுகேன் வம்மின்) உங்கள் ப்ரமேய ஜ்ஞாநத்துக்கும் சொல்லுடைமைக்கும் (௨) பாத்தம் போரும்படியான விஷயத்தை நான் காட்டித் தர வாருங்கோள். (சூழ்புனல்குடந்தையே தொழுமின்) ஓராறும்படைவீடும் வேணுமே! உங்களுக்குக் கவிபாடும் போது. ஆறும் மலையும் படைவீடும் உள்ளிட்ட பரிகரங்களும் வேணுமே!. (நறபொருள்காண்மின்) நன்றான அர்தத்தைக்கண்டுகொள்ளுங்கோள். பேறும்தானேயாய் தன்னைத்தருவதும் தானேயாயிருக்கை. (பாடிநிரும்மின் நாராயணு வென்னும்நாமம்) வாச்யங்களில் தலையானத்தைக்காட்டித்தந்தேன்; அதுக்கு வாசகமான திருநாமத்தைப்பாடி உஜ்ஜீவியுங்கோளென்கிருர். "யச்ச பரஸ்ஸ மஹேச்வர:" "யஸ்ய பரஸ்ஸமஹேச்வர:" என்றதிறே யிதினுடைய ஸங்க்ரஹத்தை. வாசகங்களில்தலை–அகாரம், வாச்யங்களில் தலை-கீழ்நான்சொன்னது.(௭)

அ.—எட்டாம்பாடடு.—எங்கள் பூர்வவர்த்தத்தைப்பார்த்தால் நீர்சொல்லுகிற அர்த்தத்துக்கு நாஙகள் தேசிகராக வல்லோமோ வென்ன; கெடுவிகாள்! நானன்றே இவ்விஷயத்துக்கு யோக்யனாய் உங்களுக்கு உபதேசிக்கும்படியானேன், ஆனபின்பு இவ்விஷயத்துக்கு ஆளாகாதாருண்டோ என்கிருர.

---

நினையாதேயென்றது - ‡ தேயவஸ்துவின் உத்கர்ஷத்தைநினையாதேயென்றபடி; அவப்ரயோஜநத்தை நினையாதேயென்றுமாம்; யாசகனுடைய குறைகள் நினையாதே யென்றுமாம். உலகில் தொண்டரை - ப்ர்த்யக்ர்த்யம்பண்ணுமவரை, கண்டவாறுமெவறென்றர்த்தமாயருளிச்செய்கிருர் (லோகத்திலித்யாதி.) தாத்பர்யார்த்தம் சொலலுடைமைக்கித்யாதி.)

நன்மையை விவரிக்கிருர் (பேறுமித்யாதி.) * நாராயணபதம் * நற்பொருளுக்கு வாசகமென்னுமதுக்கு ப்ரமாணத்தை யருளிச்செய்கிருர் (யஇத்யாதி.) இதினுடையவென்றது - நாராயணபதத்தினுடையவென்றபடி. ஸங்க்ரஹத்தை - ஸாரத்தை. கீழ்நான்சொன்னதென்றது - "நற்பொருள்" என்றதென்றபடி. (௭)

எட்டாம்பாட்டு.— (கற்றிலேனித்யாதி.) "வாடினேன்" என்று தொடங்கி பூர்வவர்த்தத்தை அநுஸந்தித்துச்சென்று, கீழிரண்டுபாட்டிலே அத்தைவிட்டவர், இதுவும் பூர்வவர்த்தத்தை யருளிச்செய்கைக்கு ஸங்கதி யருளிச்செய்கிருர் (எங்களித்யாதி;) "யாழியானுழியானருளே" என்று ஆழ்வார் * மயர்வறமதிநலமருளப்பெற்றவராகையாலே அவருடைய பூர்வவர்த்தமெல்லாம் அகிஞ்சித்கரமாய்த்தென்றுகருதி, ப்ரச்நம்பண்ணிஞர்களென்று கருத்து. அநுதாபருக்ளுக்கு ந்தஎன்னிடத்திலே யருளினவன்,"நாங்கள் தேசிகராகவல்லோமோ" என்னும் உங்களிடத்தில்அருளக்குறையில்லையென்று உத்தரத்துக்குக்கருத்து.

---

(௧) நிலவர்-ஜ்ஞாதாக்கள். (௨)பாத்தம்-தரம். கலஹாசி. ‡ தேயம்-கொடுக்கத்தக்கது.

**மூ.—கற்றிலேன்கலைகள்; ஐம்புலன்கருதுங்கருத்துளே திருத்தினேன் மனத்தை; பெற்றிலேனதனால் பேதையேன்நன்மை; பெருநிலத்தாருயிர்க்கெல்லாம்- செற்றமேவேண்டித்திரிதருவேன்; தவிர்ந்தேன்; செல்கதிக்குய்யுமாறெண்ணி, நற்றுணையாகப் பற்றினே னடியேன் நாராயணாவென்னும் நாமம். ... ... ... ... (அ)**

ப-ரை.—கலைகள் - சாஸ்த்ரங்களை, கற்றிலேன் - ஓராசார்யனிடத்தில் அப்யஸித்தேனல்லேன்; ஐம்புலன் - ஐந்துஇந்த்ரியங்கள், கருதும் - நினைக்கிற, கருத்துள் - விஷயங்களிலே, மநத்தை - மநஸ்ஸை, திருத்தினேன் - வலியமூட்டிப்போந்தேன்; அதனால் - இப்படிபோருகையாலே, பேதையேன் - அறிவில்லாதநான், நன்மை - நல்லநினைவை, பெற்றிலேன் - பெறுதவனானேன்; பெரு- பெரிய, நிலத்து - பூமியில், ஆர் - நிரம்பியிருக்கிற, உயிர்க்குஎல்லாம் - எல்லா ப்ராணிகளுக்கும், செற்றமே-ஹிம்ஸைபண்ணும் உபாயத்தையே, வேண்டி-நினைத்து, திரிதருவேன் - திரிந்துகொடுபோந்தேன்; இப்படிநெடுங்காலம் திரிந்தேனாகிலும் அவன்கடாக்ஷத்தாலே, தவிர்ந்தேன் - இவையெல்லாம் போகப்பெற்றேன்: செல்கதிக்கு-அர்ச்சிராதிமார்க்கத்தாலே செல்லக்கடவ பரமபதத்துக்குப்போய், உய்யும் ஆறு-உஜ்ஜீவிக்கும்வகையை, எண்ணி-நினைத்து, அடியேன் - சேஷபூதனான நான், நாராயணாஎன்னும்நாமம் - நாராயணா என்கிற திருநாமத்தை, நல்துணையாக-நல்ல ஸஹாயமாக, பற்றினேன் - கைக்கொண்டேன்; ஆனபின்பு, பகவத்விஷயத்துக்கு ஆளாகாதாரில்லை என்கிறார். ... ... ... ... ... ... அ

வ்யா.—(கற்றிலேன்கலைகள்) ஓராசார்யனைப் பின்சென்று அவனுச்சரிக்க அநூச்சாரணம் பண்ணிப்போராமையாலே, சாஸ்த்ரீய ஜ்ஞாநமுண்டாய்த்ததில்லை. (ஐம்புலன்கருதும் கருத்துளே திருத்தினேன் மனத்தை) மநஸ்ஸை பரவிஷயமாக்கி, விஷயங்களிலே ப்ரவணமாகிற பாஹ்யேந்த்ரியங்களை காதாசித்கமாகிலும் விஷயங்களில் நின்றும் மாற்றி ப்ரத்யக்விஷயமாக்கினால் நல்வழி போகைக் குறுப்பாமிறே; ச்ரோத்ராதிந்த்ரியங்கள் விஷயங்களிலே யிழிந்து தான் நினைத்தவழியே கொடுபோக, மநஸ்ஸையும் அதுக்கு உறுப்பாக்கிப்போந்தேன். (திருத்தினேன் மனத்தை) விஷயப்ரவணரானவர்கள், "விஷயப்ராவண்யம்போராது" என்று ஔஷதஸேவை பண்ணி யிருப்பர்களிறே; அப்படியே, விஷயங்களிலே மநஸ்ஸை வலியமூட்டிப்போந்தேன் (பெற்றிலேனதனால்பேதையேன்நன்மை) சாஸ்த்ரீயஜ்ஞாநமு மின்றிக்கே விஷயப்ரவணனாய்ப் போருகையாலே அறிவுகேடனாய் ஹிதசிந்தைபண்ணப் பெற்றிலேன். (பெருநிலத்தாருயிர்க்கெல்லாம் செற்றமேவேண்டித்திரிதருவேன்) எனக்கொரு நன்மை ஸம்பாதியாமையே யன்றிக்கே, பரஹிம்ஸை பண்ணும் விரகே சிந்தித்துப்போந்தேன். எல்லாரையும் ஹிம்ஸித்து நான் ஜீவிக்கும் விரகே பார்த்துப் போந்தேன். "ஒருவனுக்கு பகவத்ஸம்பந்தமுண்டு இல்லை என்று தனக்கே அறியலாம்" என்று பலகாலு மருளிச்செய்வர் ஜீயர். ஒருவன்நோவுபடக்கண்டால்,

"அதனால் - பேதையேன் நன்மை - பெற்றிலேன்" என்று அந்வயித்தருளிச்செய்கிறார் (சாஸ்த்ரீயேத்யாதி.)

"செற்றமே" என்றஏவகாரத்தாலே ஸ்வஜீவநம் வ்யாவர்த்திக்கிறதென்றருளிச் செய்கிறார் (எனக்கித்யாதி.) பரஜீவநம் வ்யாவர்த்யமென்று தாத்பர்யாந்தரம் (எல்லாரையுமித்யாதி.) பரஹிம்ஸை அசாத்தகரமென்னுமத்தை ஐதிஹ்யமுகேந உபபாதிக்கிறார் (ஒருவனுக்கித்யாதி.)

'ஐயோ!'' என்று இரக்கம்பிறந்திருக்கில், ''நமக்கு பகவத்ஸம்பந்தமுண்டு'' என்றறியலாம்; ''அத்தனையும்வேணும்'' என்றிருந்தானாகில், 'நமக்குபகவத்ஸம்பந்தமில்லை'' என்றிருக்கலாம். பெருநிலத்து ஆருயிர்க்கெல்லாமென்னுதல்; பெருநிலத்தாருயிர்க்கெல்லா மென்னுதல்.

(தவிர்ந்தேன்) ஹேதுவறிந்திலேன், தவிர்ந்துகொடு நிற்கக்கண்டேன். '' உய்வதோர் பொருள் '' என்றும் ''ஆழியானருள்'' என்றும், ''சிகெனத் திருவருள பெற்றேன்'' என்றும் கீழ்ச் சொன்னரிறே.

(செல்கதிக்குய்யுமாறெண்ணி) செல்லக்கடவ கதியுண்டு-பரமபதம், அங்கேபுகக்கு உஜ்ஜீவிக்கும்படியை மநோரதித்து. (நற்றுணையாகப்பற்றினே னடியேன்) அம்பியைக்கட்டிக்கொண்டு ஆற்றிலிழிவாரைப்போலேயன்றிக்கே, ''పాథేయంపుణ్డరీకాక్షనామసఙ్కీర్తనామృతమ్'' ''பாதேயம்புண்டரீகாக்ஷநாமஸங்கீர்த்தநாம்ர்தம்'' என்னுமத்தைப் பற்றினேன். அக்கரைப்படுத்திவிடுமத்தைப் பற்றினேன். (நாராயணாவென்னும்நாமம்) அக்கரைப்படுத்தும் வஸ்துவுக்கு வாசகமானதிருநாமம்; 'నయామిపరమాంగతిమ్'' ''நயாமிபரமாம்கதிம்'' என்னக்கடவதிறே. (அ)

அ.—ஒன்பதாம்பாட்டு. அநாதிகாலம் விஷயப்ரவணனாய் பகவத்விஷயத்தில விமுகனாய்ப்போந்த நான், விஷயங்கள்தான் ஸாவதியாய் மீண்டவளவிலே, ஸர்வேச்வரன் தன்க்ருபையாலே கைக்கொண்டானென்கிறஅர்த்தத்தை ''உய்வதோர்பொருளால்'' என்கிறத்தாலே சொன்னார்-முதற்பாட்டில; காலமடங்க வ்யர்த்தமே புறம்பே போக்கினேன் என்றார் — இரண்டாம்பாட்டில் ; ரக்ஷையேவேண்டிறதுக்குவிருத்தமான துஷ்கர்மங்களைப்பண்ணி விஷயப்ரவணனாய் காலத்தையடங்க நிஷ்ப்ரயோஜநமாகப் போக்கினநான், போக்யனுமாய் ப்ராபகனுமான ஸர்வேச்வரனையும அவனுக்கு வாசகமான திருநாமத்தையும் காணப்பெற்றே னென்றார் — மூன்றாம்பாட்டில்;

· பெருநிலத்து - மஹாப்ருதிவியில், ஆர் - நிரம்பியிருக்கிற வென்றும், பெருநிலத்தாரானவுயிர்க்கெல்லாமென்றும் சப்தநிர்வாஹம் காட்டுகிறார் (பெருநிலத்யாதிவாக்யத்வயத்தாலே.)

ஹேதுவறிந்திலேனென்றது - என்னிடத்திலொருஹேதுவறிந்திலேனென்றபடி.

''செல்கதிக்கு'' என்றவநந்தரம், போய்என்று சேஷபூரணம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (செல்லவித்யாதி.) ... ... ... அ.

ஒன்பதாம்பாட்டு.—(குலந்தருமித்யாதி.) நிகமம் அணித்தானவாறே இத்திருவாய்மொழியில் பாட்டுத்தோறும்சொன்ன ப்ரமேயங்களை புத்திஸௌகர்யார்த்தமநுவதியாநின்றுகொண்டு ஸங்கதி யருளிச்செய்கிறார் (அநாதீத்யாதி.) ஸாவதியென்றது - அல்பமாயென்றபடி; இது ''விஷயங்கள்தன்னில் அரைக்ஷணம்கால்தாழப்பண்ணவல்லதொரு விஷயந்தானில்லையிறே'' என்றருளிச்செய்தத்தைப்பற்ற. மீண்டவளவிலே யென்றது - ஒருவிஷயத்தில் நின்றும் மீண்டு விஷயாந்தரத்தில் போகாதே ஓடியிளைத்தவளவிலே யென்கை. (முதற்பாட்டில்) என்றநந்தரம், அருளப்பெற்றவராகையாலே என்று கூட்டுவது. இரண்டாம்பாட்டில் காலம் வ்யர்த்தமேபோக்கினத்தை யெல்லாம், மூன்றாம்பாட்டில் அநுவதித்துக்கொண்டு, தாம்பெற்றபேற்றை அருளிச்செய்தாரென்கிறார் (ரக்ஷையேயித்யாதி.)

மூ.—குலந்தரும்;செல்வந்தந்திடும்;அடியார்படுதுயராயினவெல்லாம்-
நிலந்தரஞ்செய்யும்;நீள்விசும்பருளும்;அருளொடுபெருநிலமளிக்கும்;
வலந்தரும் †; மற்றுந்தந்திடும்; பெற்றதாயினுமாயினசெய்யும்;
நலந்தருஞ்சொல்லை நான்கண்டுகொண்டேன் நாராயணாவென்னும்நாமம்.

ப-ரை.— நாராயணா என்னும் நாமம் - நாராயணா என்கிற திருநாமமானது, தன்னை அநுஸந்தித்தவர்களுக்கு, குலம் - உயர்குலத்தையும் அதுக்கீடான வர்த்தத்தையும், தரும் - கொடுக்கும்; செல்வம் - பகவத்பாகவதவிஷயங்களில்உபயோகிக்கத்தக்க ஐச்வர்யத்தை, தந்திடும் - தரும்; அடியார்-சேஷபூதரானவர்கள், படு-அநுபவித்தேகழிக்கவேண்டிய, துயராயின எலலாம்-துக்கம் என்று பேர் பெற்றவை யெல்லாவற்றையும், நிலந்தரம் செய்யும் - தரைமட்டமாக்கிவிடும்; நீள்விசும்பு- பரமபதத்தை, அருளும் - கொடுக்கும்; அருளொடு - ஜ்ஞாநபக்திகளையும், அதுக்குமேலே, பெருநிலம் - கைங்கர்யமாகிற பெரியஸ்தாநத்தையும், அளிக்கும்-தரும்; வலம் - தன்னை அநுபவிக்கைக்கீடான சக்தியையும், தரும்-கொடுக்கும்; மற்றும் - இவனறியாத எல்லா ஹிதங்களையும், தந்திடும் - செய்துகொடுக்கும்; பெற்ற தாயினும் - சரீரத்தை உண்டாக்கின தாயானைக்காட்டிலும், ஆயின - ஹிதமாயுள்ள ஸ்வரூபஜ்ஞாந விகாஸத்தை; செய்யும் - பிறப்பிக்கும்; நலந்தரும் - கைங்கர்யஸ்ரீயைத் தருவதான, சொல்லை-திருநாமத்தை, நான் - இப்படியிருப்பதொன்றுண்டு என்றறியாதநான், கண்டுகொண்டேன - காணப்பெற்றேனென்று, திருநாமபலத்தைச் சொல்லுகிறார். ... ... ... ... ... ௬

துர்மாநியாய் சோகிக்கக்கடவதல்லாத விஷயங்களுக்கு சோகித்து விஷயப்ரவணனாய் அநாத்மகுணங்களால் குறைவற்றநான், அமாநித்வாத்யாத்மகுணோபேதர்பெறும்பேற்றைப்பெற்றேனென்றார்-நாலாம்பாட்டில்; ஆத்மாபஹாரத்தைப்பண்ணி பரமசோரனாய் வொ வேச்வரனொருவனுளன் என்றிருப்பாருண்டாகில் ¶ உக்த்யாபாஸங்களாலே யில்லைசெய்துபோந்தநான், ஆத்மஸமர்ப்பணம்பண்ணி எம்மிதுவே யாத்ரையாய்ப்போருவார் பெறும் பேற்றைப் பெற்றேனென்றார் - அஞ்சாம்பாட்டில்; “இநுக்காத்தமென்? இதுவந்தபடியென்?” என்ன, ஆர்த்தத்தையும்சொல்லி, ஸம்ஸாரிகளெல்லாமிங்ஙனே க்லேசப்படாநிற்க நானிப்பேற்றைப்பெற்றேனென்றார்-ஆறாம்பாட்டில்; அல்லாதா ரிழக்கிறார்கள் (அவிசேஷஜ்ஞராகையாலே)‡, என்னோடுஸஜாதீயராய் விசேஷஜ்ஞராய்க் கவிபாடித்திரிகிற நீங்கள் இழவாதேகொள்ளுங்கோளென்றார்-ஏழாம்பாட்டில்; “நீர் சொல்லுகிற அர்த்தத்துக்கு நாங்கள் தேசிகராக வல்லோமோ” என்ன, கெடுவிகாள்! நானன்றோ இவ்விஷயத்துக்கு நிலவனாய் உங்களுக்குங்கூட உபதேசிக்கிறேன், ஆனபின்பு பக்வத்விஷயத்துக் காளாகாதாரில்லை என்றார் - எட்டாம்பாட்டில்; “ நீர் திருநாமத்தைப் போர ஆதரியாநின்றீர், இதென்னபலத்தைத் தரவற்று” என்ன, திருநாமபலத்தைச் சொல்லுகிறார் – இப்பாட்டில்.

(நானிப்பேற்றை) என்றவநந்தரம, தஞ்சைமாமணிக்கோயிலே வணங்கி என்று கூட்டுவது.

† “வரந்தரும” என்னுபாடாந்தரம். ¶ “ யுக்த்யாபாஸங்களாலே” என்றும் பாடம். ‡ குண்டலிதக்ரந்தம் சிலஸ்ரீகோசங்களிலில்லை.

வ்யா.—(குலந்தரும்) ஜந்மவ்ருத்தங்களால் குறையநின்றுள்ள ருத்தனுக்கு பகவத்ஸம்பந்தமுண்டானால், இவற்றால் உயர்ந்தானொருத்தன், இவையிரண்டிலுமிவனுக்குத்தாழ்வுண்டாகவும் தானுயர்ந்தானாகவும் நினைத்திருக்கவுங்கூடக் கூசவேண்டும்படியாய்த்து பகவத்ப்ரபாவமிருப்பது. ஆகிலும், பெண்கொடுத்தல் கொள்ளுதல்செய்கிறதில்லை; அதுக்கடி—ஜாதிநிபந்தநமாகை. சலாகை, குணநிபந்தநம்; "श्लाघ्यस्सगुणीतस्य सकुलीनः" "ஸச்லாக்யஸ் ஸகுணீதஸ்ய ஸகுலீநः" என்னக்கடவதிறே. ¶ கண்டதெல்லாம் தர்மஸந்தேஹம் பண்ணக்கடவ தர்மபுத்ரன், பகவத்ப்ரத்யாஸத்தியாலும் அசரீரிவாக்யத்தாலும் விதுரரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்காரம்பண்ணினானிறே; ரிஷிகள், தர்மவ்யாதன் மாம்ஸவிக்ரயம்பண்ணிக் கையொழியுந்தனையும்பார்த்துநின்று தர்மஸங்கடங்கள் கேட்டுப்போனார்களிறே; இங்ஙனன்றாகில், (க) பஞ்சம வேதமான மஹாபாரதத்திலே யெழுதக்கூடாதிறே. கைசிககதையிலே வந்தவாறே, விலக்ஷணனாயிருப்பானொரு ப்ராஹ்மணன் ஆசார வைகல்யத்துக்கு பகவத்ஜ்ஞானமுடையானொரு பாடுவானாலே பரிஹாரமாயிருந்ததிறே. ஸ்ரீவிபீஷணாழ்வான், ராவணனைப்பார்த்து "பெருமாளை சரணம்புகு" என்று சொல்ல; "त्वां तु धिक् कुलपांसनम्" "த்வாம் துதிக் குலபாம்ஸநம்" என்று—நீ இக்குடிக்கு உடலல்ல என்றானிறே. ராவணனுக்கு வார்த்தை சொல்லுகிற விடத்தில, "निशाचर" "நிசாசர" என்று அவனை ராக்ஷஸனாகவும், தான் அல்லனாகவும் சொன்னான்.

---

குலத்தையும் அதுகேடான வாதத்தையும் தருமென்று சப்தார்த்தம் விவக்ஷித்து ஹேதுவருளிச்செய்கிறார் (ஜந்மேத்யாதி. நினைத்திருக்கவுங்கூடவென்றது—தாழ்ந்தசொல்லும் தாழ்வுக்கு ஸூசகமான செயலும் செய்யக்கூடாதென்றபடி.

இப்படி உத்கர்ஷரானால் கொடுத்துக் கொள்ளவேண்டாவோவென்ன வருளிச்செய்கிறார் (ஆகிலுமித்யாதி.) ஜாதிநிபந்தநமென்றது - ப்ராஹ்மணஜாதியிலே பிறந்தவன் அதிலே கொடுத்துக் கொள்ளக்கடவனென்று சரீரஸம்பந்தத்துக்குச் சொன்ன சாஸ்த்ரநிபந்தந மென்றபடி. கொள்வனை கொடுப்பனையில்லாவிட்டால் சலாகையதை யெங்ஙனேயென்னவருளிச்செய்கிறார் (சலாகையித்யாதி.) குணநிபந்தந மென்றது-பகவத்ப்ரஸாதத்தாலே வந்த சேஷத்வஜ்ஞாநநிபந்தந மென்றபடி. சரீரஸம்பந்தம்தவிர த்ரிவிதகரணத்தாலும் பகவத்ப்ரத்யாஸந்நரை ஆதரிசகைக்கு ப்ரமாணம் காட்டுகிறார் (கண்டதெல்லாமித்யாதி வாக்யத்ரயத்தாலே.) ப்ரமாணாந்தரம் (கைசிகேத்யாதி.) (இருந்ததிறே) வராஹபுராணத்திலே என்றுசேஷம். இதிஹாஸச்ரேஷ்டத்தில் ப்ரமாணங்களை யருளிச்செய்கிறார் (ஸ்ரீவிபீஷணாழ்வானித்யாதி.)

---

(க) பஞ்சமவேதம் - அஞ்சாவதுவேதம். ¶ ஸ்ரீவசநபூஷணம் - ௨ - வது ப்ரகரணத்திலுள்ள "தர்மபுத்ரர், அசரீரிவாக்யத்தையும் ஜ்ஞானாதிக்யத்தையுங் கண்டு ஸ்ரீவிதுரரை ப்ரஹ்மமேதத்தாலே ஸம்ஸ்கரித்தார் [வாக்யம் - ௨௩௰]" ரிஷிகள், தர்மவ்யாதன்வாசலிலே துவண்டு தர்மஸந்தேஹங்களை சமிப்பித்துக்கொண்டார்கள் [௨௩௧]" "இவ்வர்த்தம், கைசிகவ்ருத்தாந்தத்திலும்........காணலாம் [௨௩௬]" "விபீஷணனை ராவணன் 'குலபாம்ஸநம்' என்றான்;

இவனேயன்றிக்கே, "[illegible]" "ராக்ஷஸாநாம்பலாபலம்" என்று பெருமாள்தாமுமருளிச்செய்தார். ஆகையாலே, பகவத்ஸம்பந்தம் (க) ஸ்பர்சவேதியாயிருந்தது. (செல்வம்தந்திடும்) ராவணஸம்பந்தமற்றவாறே, "[illegible]" "அந்தரிக்ஷகதஸ்ரீமாந்" என்று ராமஸம்பந்தத்தாலேவந்தஸ்ரீகுடிபுகுந்தது. அன்றிக்கே, அதுதன்னையே சொல்லிற்றாகவுமாம். "[illegible]" "பரித்யக்தாமயாலங்கா" என்று இவன்றானே கைவிடச்செய்தே, ராவணஸம்பந்தமற்றவாறே, ராமஸம்பந்தத்தாலேலங்கைச்வர்யமும் முடியும் அவன்றலையிலேவந்திருந்ததிறே. "நின்னையேதான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்றன்னையே தான்வேண்டும்செல்வம்" என்னக்கடவதிறே; உன்னையேயுகந்து நிலைநில்லாதஸம்பத்தை வேண்டேன் என்றிருப்பாரை அது கைவிடாதாப்போலே யென்கிறார், தாம்விடச்செய்தே தம்மை அது கைவிடாதபடியாலே. அங்ஙனன்றியே, உன்னையுகந்து நிலைநின்றஐச்வர்யத்தைக் காற்கடைக்கொண்டு நீயேயமையு மென்றிருக்குமவனை மோக்ஷஸ்ரீ கைவிடாதாப்போலே யென்றுமாம்.

(அடியார்படு துயராயினவெல்லாம் நிலந்தரஞ்செய்யும்) அடியாருண்டு - தனக்கு அஸாதாரணரானவர்கள்; படுதுயருண்டு - "[illegible]" "அவச்ய மநுபோக்தவ்யம்" என்று அநுபவவிநாச்யமான கர்மங்கள்; அவற்றை யெல்லாம், (நிலந்தரஞ்செய்யும்) நிலத்தோ டொக்கப்பண்ணும் - வெறுந்தரையாக்கும் - கேவலபூதலமாக்கும். அங்ஙனன்றியே, நிலமென்று - அவன்வர்த்திக்கிற இடமாய், தரமென்று - தரணமாய், இடைக்குறைத்தலாய், இவன்பக்கல் நின்றும் கர்மங்கள்தானே நமக்கிருப்பிடமன்றென்று போம்படிபண்ணுமென்றுமாம்; "[illegible]" "யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே | நதத்ரஸஞ்சரிஷ்யந்தி வ்யாதிதுர்ப்பிக்ஷ தஸ்கராः," "சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே," "கோலாடி குறுகப்பெறா."

---

அதுதன்னையே யென்றது-லங்கைச்வர்யந்தன்னையே என்றபடி. தாமென்றது-குலசேகராழ்வாரை. "நீள்செல்வம்" என்றது - விபரீதலக்ஷணையாலே அஸ்திரைச்வர்யத்தைச் சொல்லுகிறதென்று கீழருளிச்செய்து, "நீள்" என்றதாலே - நித்யைச்வர்யமென்று யோஜநாந்தரமருளிச்செய்கிறார் (அங்ஙனன்றியேயித்யாதி.)

கோலாடியென்றது - கோல்நடமாடும்தேசமாய், அத்தால் - ஆஜ்ஞைநடக்குமிடத்திலென்றபடி. குறுகப்பெறா - கிட்டப்பெறாது.

---

பெருமாள் இக்ஷ்வாகுவம்ச்யராகநினைத்து வார்த்தை யருளிச்செய்தார் [உஉஅ]' என்றவாக்யங்கள் இவ்விடத்தில் அநுஸந்தேயம். (க) ஸ்பர்சவேதி - தன்மேலே படும் வஸ்துவின் ஸ்வரூபத்தை வேதகப்பொன்போலே வேறாக்குமது. (வேதகப்பொன்னாவது - அநேகஸித்தௌஷதங்களையிட்டுப் பலகாலுருக்கி குளிகையாகப் பண்ணி ரஸவாதிகள் கையிலிருக்கும் ஸ்பர்சவேதியானபொன். அதுஸ்பர்சமாத்ரத்தாலே இரும்பைப்பொன்னாக்குமாப்போலே யாய்த்து, ஜந்மஸித்தமான கைச்யாதிகளையுடைய விலக்ஷணரான இவர்களோட்டைஸம்பந்தம் நிகர்ஷ்டஜந்மத்தால் வந்த தோஷத்தைப்போக்கி இவனையும் விலக்ஷணனாக்கிவிடும்படி.)

அங்ஙனன்றியே, நிலமென்று–ப்ருதிவ்யாதி பூதங்களாலே ஆரப்தமான சரீரமாய், இவன்பண்ணின கர்மங்களை சரீரத்தளவாக்கும். பக்திமானுக்கு ப்ராரப்தகர்மாவதியா யிருக்கும்; இவ்வர்த்தாநுஸந்தாநத்தைப் பண்ணின ப்ரபந்நனுக்கு இச்சரீராவதியா யிருக்கும்.

(நீள்விசும்பருளும்) விரோதிநிவ்ருத்தியாகிறது– சரீராவதியிறே; அவ்வளவன்றியே, பரமபதந்தையும்கொடுக்கும்.

(அருளொடுபெருநிலமளிக்கும்) அருளோடேகூட, பெரியநிலமுண்டு - பெரிய ஸ்தாநம்- கைங்கர்யமாகிற பெரியபதம்; அத்தைத் தரும். (வரந்தரும்) "ஒழிவில் காலம்" என்று இவனுக்கு ப்ரார்த்தநீயமான கைங்கர்யத்தைக்கொடுக்கும். (வலந்தரும்) என்றாலும், அது தன்னையேகாட்டும். அங்ஙனன்றிக்கே, (வலந்தரும்) என்று- "ஸ ஆத்மதா பலதா" "யஆத்மதாபலதா" என்று தன்னையும் கொடுத்து தன்னையநுபவிக்கைக்கீடான சக்தியையும்கொடுக்கும். நித்யஸம்ஸாரியா யின்றிசென்றவனுக்கும், நித்யாநுபவம்பண்ணுகிற நித்யஸூரிகளோடொக்க அநுபவிக்கைக்கீடான சக்தியையும்கொடுக்கும். அங்ஙனன்றிக்கே, (அருளொடுபெருநிலமளிக்கும் வலந்தரும்) தன்னை ஆச்ரயித்தவர்தங்களவன்றிக்கே, தங்களோடு ஸம்பந்தித்தார்க்கும், தங்களருளோடேகூட, பெரியநிலமுண்டு - பரமபதம், அத்தைக் கொடுக்கவல்லராம்படியான ப்ரஸாதத்தைப்பண்ணும்.

(மற்றுந்தந்திடும்) இவனுக்கு ஹிதமாய் இவனறியாதவற்றையும் தானேகொடுக்கும். "இவன்கார்யம் தானறிந்தானே, நாமன்றோ கடவோம்" என்று தானேகொடுக்கும். ¶கோவிந்தஸ்வாமி, தன்னைக்கண்டநந்தரம், "நான்கூடப்போருவேன்" என்ன; அவனுடையமுன்புத்தைனைவையறிந்து, "நீயிங்கேயிருந்து சிறிதுநாளநுபவித்துவா" என்றானிறே.

---

"பெருநிலம்" என்ற பதத்துக்கர்த்தமான கைங்கர்யத்துக்கு ப்ரார்த்தநீயத "வரம்" என்றத்தாலே சொல்லுகிறதென்றருளிச்செய்கிறார்(ஒழிவிலித்யாதி.)

---

¶ கோவிந்தஸ்வாமிவ்ருத்தாந்தம்;—கோவிந்தஸ்வாமி என்பாரொரு ப்ராஹ்மணன், இதிஹாஸ புராணச்ரவணத்தாலே, க்ருஷ்ணனுடைய பால்யசேஷ்டிதங்களையும் ராஸக்ரீடாதிகளையும் ஸாக்ஷாத்கரித்து, ஸகாமனாய், "முன்பு * காணாராயென் றென்றிருப்பார்க்கு "பரித்ராணாயஸாதூநாம்" என்கிறபடியே காட்டிக்கொடுத்துப் போருமவனன்றோ, நமக்கும் "அவ்வாசையுண்டாகில் ஸித்திமையில்லை, ததர்த்தமாக ஆர்த்திப்போம்" என்று சரீரத்தை ஒறுத்து தபஸ்ஸுபண்ண; இவன்நினைவின்படியே க்ருஷ்ணாவதாரத்திற்படிகளையடைய ஸ்ருஷ்டித்துக்காட்டி அநுபவிப்பித்து, "உனக்குவேண்டுவதென்!" என்றுகேட்டருள; "கூடப்போந்து இப்படி தேவரீரை அநுபவிக்குமித்தனை" என்ன; "நீ தபஸ்ஸுபண்ணும்போது, விஷயவிதூரனாய் அந்நபாநாதிகளையும் கழித்து உடம்பையும் சாரும்பமாக்கிக்கொண்டு போந்தாய், இக்கேயிருந்து செழிம்தபோகங்களையும்கழித்துவா" என்று அவன்கருத்தறிந்து அருளிச்செய்தார்.

மூ.—மஞ்சுலாம்சோலை வண்டறைமாநீர் மங்கையார் வாள்கலிகன்றி-செஞ்சொலாலெடுத்த தெய்வநன்மாலை யிவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்!, துஞ்சும்போதழைமின்; துயர்வரில்நினைமின்; துயரிலீர் சொல்லிலும்நன்றாம்; நஞ்சுதான்கண்டீர் நம்முடைவினைக்கு நாரா யணாவென்னும் நாமம். ... ... ... ... ... (௧0)

ப-ரை.—மஞ்சு-மேகங்கள், உலாம்-[illegible]சரியாநின்றுள்ள, சோலை-சோலையையும், வண்டு - வண்டுகள, அறை - சப்தியாநின்றுள்ள, மாநீர் - மிக்க ஜலத்தையுமுடைய, மங்கையார் - திருமங்கையிலுள்ளார்க்கு ரக்ஷகமான, வாள்-வாளையுடையராய், கலிகன்றி-கலிதோஷத்தைப்போக்கினஆழ்வார், செம்சொலால்-செவ்வியசொல்லாலே, எடுத்த - எல்லார்க்கும் தெரியும்படி அருளிச்செய்ததாய், தெய்வம் - அப்ராக்ருதமாய், நல் - நித்யஸூரிகள அநுபவிக்கலாம்படி நன்றான, மாலை - சொன்மாலையா யிருக்கிற, இவைகொண்டு - இத்திருமொழியாலே, துஞ்சும்போது - சரீராவஸாநத்திலே, அழைமின் [illegible] என்று அழையுங்கள்; துயர்வரில் ..வ்யஸநங்கள் நேரிடும்காலத்திலும், நினைமின் - இத்தையேமநநம்பண்ணுங்கள்; துயரிலீர் - வ்யஸநமற்றநீங்கள்; சொல்லிலும் - சொன்னாலும், நன்றாம் - நன்மையைத்தரும்; நாராயணா என்னும் நாமம் - நாராயணா என்கிற திருநாமமானது, நம்முடை - நம்முடைய, வினைக்கு - பாபங்களைப்போக்குகைக்கு, நஞ்சுதான்கண்டீர் - விஷமாயிராநின்றது கிடீர்! என்கிறார். ம.

(பெற்றதாயினுமாயின செய்யும) மாதா வானவள், சரீரத்துக்கு உத்பாதகையாயிருக்கிறாள்; ஆத்மாவுக்கு ஸ்வரூபமான ஜ்ஞாநவிகாஸத்தைப்பிறப்பிப்பானவனேயிறே. "शरीरमेव मातापितरौ जनयतः" "சரீரமேவமாதாபிதரௌஜநயத:" என்று - விரோதியானசரீரத்தை உத்பாதித்து விடுமளவிறே அவர்களசெய்வது; "स हि विद्यातस्तं जनयति तच्छ्रेष्ठं जन्म" "ஸஹிவித்யாதஸ்தம்ஜநயதிதச்சரேஷ்டம்ஜந்ம" என்று - ஜ்ஞாநப்ரதனுவானவனேயிறே.

(நலந்தரும்சொலலை) ஆரத்தாநுஸந்தாந மொழியவே பாடத்தைச சொன்ன மாத்ரத்திலே பக்தியைப்பிறப்பிக்குமென்னுதல்; நலமென்று - வ்ருத்தமாய், கைங்கர்யத்தைத்தருமென்னுதல்; ஆகையாலே, கைங்கர்யத்துக்கடியான ருசியைப்பிறப்பிக்குமென்னுதல; கைங்கர்யம தருமென்னுதல். (நான் கண்டுகொண்டேன்) இப்படியிருப்பதொன்றுண்டு என்றறியாத நான் காணப் பெற்றேன். (நாராயணாவென்னும நாமம்) "[illegible] सर्वार्थसाधकः" "நமோ நாராயணாயேதிமந்த்ரஸ் ஸர்வார்த்தஸாதக:" என்னுமர்த்தை. ... ... ௬.

வ்யா.—பத்தாம்பாட்டு.—(மஞ்சுலாஞ் சோலை) மேகங்கள் உலாம்படியான ஓக்கத்தை யுடைத்தான சோலை.

அவனேயிறேயென்றது - மந்த்ரப்ரதனான ஆசார்யனிறேயென்கை. இத்தால்-மந்த்ரஸ்வரூபஜ்ஞாநத்தை யுண்டாக்குமென்றதாய்த்து.

"அருளொடுபெருநிலமளிக்கும்வலந்தரும்" என்றதுக்கு - மோக்ஷப்ரதத்வரூபசக்திப்ரதாநம் அர்த்தமான பக்ஷத்திலே, "நலம்" என்றதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார் (நலமென்றித்யாதி.) ஆகையாலே யென்றது - ஸ்வரூபஜ்ஞாந ஜநகமாகையாலே யென்றபடி. இவ்வாக்யத்வயமும் கீழ்ச்சொன்ன அர்த்தத்துக்கு விவரணமென்றுகொள்வது. "என்னும்" என்கிற ப்ரஸித்தியை யிப்பாட்டு ப்ரமேயத்துக்குச்சேர வருளிச்செய்கிறார் (நமஇத்யாதி.) ... ... ... ௬.

(வண்டறை) என்கிறது- * சோலைக்கு விசேஷணமாகவுமாம்; * மா நீர்க்கு விசேஷணமாகவுமாம். ஜலத்தினுடைய ரஸ்யதையாலே வண்டுகள் வண்டோடு மொய்ப்பதென்று ஆற்றுவரவுகளிலே சொல்லுவார்களாய்த்துத் தமிழர். (மங்கையார்வாள்கலிகன்றி) பகவத்ஸம்பந்தத்தை புணர்ந்தவர்கள் பகவத்பலமே பலமாயிருக்குமாப்போலே, திருமங்கையிலுள்ளார் இவர்கையில் வாளே தங்களுக்கு பலமாகவாய்த்து நினைத்திருப்பது.

(செஞ்சொலாலெடுத்த) அதிக்ராதிகாரமாய், ஸம்ஸ்க்ருதமாய், தெரியாத சப்தங்களாலேசொன்ன அர்த்தங்களை, வ்யக்தமாக எல்லார்க்கும்தெரியும்படி செவ்வியசொல்லாலே சொன்ன. (தெய்வநன்மாலை) அப்ராக்ருதமாய், "கேட்டாரார வானவர்கள்" என்று நித்யஸூரிகள் கேட்டு அநுபவிக்கலாம்படியிருக்கிற, மாலை-தொடை. (இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர் ! துஞ்சும்போதழைமின்) சரீராவஸானத்தில் யமவச்யதைக்கு அஞ்சாதே இத்திருநாமங்களைச் சொல்லுங்கோள். (துயர்வரில்நினைமின்) இவ்வருகுண்டான வ்யஸநங்கள் வந்தபோதும், இத்தையேசொல்லுங்கோள். (துயரிலீர் சொல்லிலும்நன்றாம்) "சரீரத்தோடேயிருந்தாலிவையெல்லாம் வருகை ப்ராப்தமன்றோ" என்று இத்தைமதியாதே அநந்யப்ரயோஜநராயிருப்பார்க்கு ஸ்வயம்ப்ரயோஜநம். (நஞ்சுதான்கண்டீர் நம்முடைவினைக்கு) நம்முடைய பாபங்களுக்கு ¶காற்றவொண்ணாத நஞ்சு. (நாராயணவென்னும் நாமம்) "எனக்கென்றும்தேனும்பாலுமமுதுமாய திருமால்திருநாமம்-நானும்சொன்னேன் நமருமுரைமின் நமோநாராயணம்" என்று - நமக்கு இனிய திருநாமமே பாபத்துக்கு நஞ்சு ; அல்லாதனவெல்லாம் ஸம்ஸாரத்திலே வேர்பற்றுகைக்குறுப்பாயிருக்கும். இதினுடைய அர்த்தாநுஸந்தாநமே ஸம்ஸாரத்தை வேரறுப்பது என்னுமிவ்வர்த்தத்தையெல்லாரும் புத்திபண்ணி யிருக்கலாகாதோ ! ... ... ௰.

திருமங்கையாழ்வார்திருவடிகளே சரணம்.

பெரிய வாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அடிவரவு.—வாடினேன் ஆவி சேமம் வென்றி கள்வன் எம்பிரான் இல்பிறப்பு கற்று குலம் மஞ்சு வாலி.

---

பத்தாம்பாட்டு.— (மஞ்சுலாமித்யாதி.) "வண்டறை" என்றது - வண்டுகள் சப்தியாநிற்கிற என்றாய், இது சோலைக்குச் சொல்லுகை லோகஸித்தமென்றும், நீருக்குச் சொல்லுகை கவிஸமயஸித்தமென்றும் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (வண்டறையித்யாதி வாக்யத்வயத்தாலே.) (வாளே தங்களுக்கு பலமாக) என்றதுக்கு - * வாள்வலியால் மந்திரங்கொண்டு உபதேசித்து ரக்ஷிக்கையாலும் இவராலாகை யாலு மென்று கருத்து.

ஆற்றவொண்ணாத - ஸஹிக்கக்கூடாத. "என்னும்" என்றது - போக்யதாதிசயத்தாலே யென்றருளிச்செய்கிறார் (எனக்கித்யாதி.) "கண்டீர்" என்றதுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (அல்லாதனவித்யாதி.)... ... ... ... ௰.

ஜீயர்திருவடிகளே சரணம்.

---

¶ காற்றவொண்ணாத - ப்ரத்யௌஷதமிட்டுக்கக்கவொண்ணாத; பரிஹரிக்கப்போகாத. "ஆற்றவொண்ணாத" என்று அரும்பதத்தின் பாடம்.

## முதற்பத்து-இரண்டாந்திருமொழி-வாலி. ப்ரவேசம்.

வ்யா.—ஸம்ஸாரஸ்வபாவத்தையும் தம்முடைய இதரவிஷய ப்ராவண்யத்தையும் அநுஸந்தித்தருளினவிவர், அந்ரோவுபாடே ஹேதுவாக தன்நிர்ஹேதுகக்ருபையாலே யென்னை விஷயீகரித்து, தன் ஸ்வாமித்வத்தையும் எனக்குக்காட்டித் தந்தானென்றார் – கீழில் திருமொழியில்; "அம்பினாலரக்கர் வெருக்கொளநெருக்கி" என்று – ராமாவதாரம் ப்ரஸ்துதமாய்த்து. திருமந்த்ரமும் ப்ரஸ்துதமாய்த்து. இத்திருமந்த்ரத்துக்கு அர்த்தமாகிறதுதான் – ஸ்வாமித்வஸௌலப்யமிறே. (க) கர்ஷகனானவன் பயிர்த்தலையிலே குடில்கட்டிநோக்குமாப்போலே, ரக்ஷ்யமிருந்தவிடத்தேவந்து ரக்ஷிக்கையிறேஸௌலப்யம்; உகந்தருளினநிலங்களிலேவந்து ஸந்நிதிபண்ணியித்தை நோக்குகையாலேஉடையவனென்று ஸ்வாமித்வப்ரகாசகமுமாயிருக்கிறது.

எதிர்த்தலைபாராதேவந்து அவஸரப்ரதீக்ஷனாய் அந்தர்யாமிரூபத்தாலே யிருக்கிறவிருப்பு, ஸ்வாமித்வ கார்யமிறே; அவ்வளவன்றிக்கே, கண்ணாலே கண்டநுபவிக்கவேணும் என்று அபேக்ஷை பிறந்தவன்று அப்போதே அநுபவிக்கலாம்படி கோயில்களிலே வந்து நிற்கிறவிதுக்கு மேற்படவில்லையிறே ஸௌலப்யத்துக்கு. ஸம்பந்தஜ்ஞாநம் பிறந்தவநந்தரம் அநுபவாபேக்ஷை பிறந்தால், அப்போதே யிவ்வுடம்போடே யடிமைசெய்யலாம்படி யிராதிறே பரமபதத்தில்; "அநுபவிக்கவேணும்" என்று அபேக்ஷைபிறந்தபோதே அவ்வுடம்போடே அநுபவிக்கலாம்படி யிருக்குமிறே உகந்தருளின நிலங்களிலே. இப்படி ஸௌலப்யத்துக் கெல்லையான உகந்தருளின நிலங்களெங்கும் புக்கநுபவிக்கக்கோலி; அதில் இப்பாஷை.

அ.—வாலிப்ரவேசம். கீழ்த்திருமொழியிலே "குடந்தையேதொழுது" என்றும் "தஞ்சைமாமணிக்கோயிலேவணங்கி" என்றும் தமக்குத் திருமந்த்ரலாபம் உகந்தருளின நிலத்திலெம்பெருமானாலே வந்ததாக அநுஸந்தித்து, திருமந்த்ரம் பெற்றமையை யருளிச்செய்தவர், இனி, மேல் திருமொழிகளிலே அர்ச்சாவதாரமே தமக்கு ப்ராப்யமாக அநுஸந்திக்கைக்குக் கருத்து – திருமந்த்ரார்த்தமான ஸ்வாமித்வஸௌலப்யங்களை உகந்தருளின நிலங்களிலே கண்டநுபவிக்கவேணுமென்கை யென்று விவக்ஷித்து, வர்த்தவர்த்திஷ்யமாண கதநமுகேந ஸங்கதி யருளிச்செய்கிறார் (ஸம்ஸாரேத்யாதி.) (ஸ்வாமித்வத்தையும்) என்ற (உ) சகாரம் – ஸௌலப்யத்தை ஸமுச்சயிக்கிறது. "எம்பிரானெந்தை" என்கிறபாட்டு திருமந்த்ரார்த்தப்ரதிபாதகமாகையாலே அதுஉயிர்ப்பாட்டாய், அதிலே "எம்பிரான்" இத்யாதியால் – ஸௌலப்யமும், "அண்ணல்" என்றத்தாலே – அதுக்குஹேதுவான ஸ்வாமித்வமும் ப்ரஸ்துதமான வளவன்றிக்கே, ராமாவதாரமும் திருமந்த்ரார்த்தமும் ப்ரஸ்துதமாய்த்தென்று அவற்றையும் அநுவதிக்கிறார் (அம்பினா லித்யாதி.) காட்டித்தந்த ஸ்வாமித்வ ஸௌலப்யங்களை அர்ச்சாவதாரத்தில் கண்டநுபவிக்கிறாரென்னுமத்தை உபபாதிக்கிறார் (இத்திருமந்த்ரத்துக்கித்யாதி.)

உடைமையைநோக்கும் ஸ்வாமித்வப்ரகாசகமெங்ஙனே யென்ன வருளிச்செய்கிறார் (எதிர்த்தலையித்யாதி.) மேல்திருமொழிகள் அநேகத்தோடும் ஸங்கதியை யருளிச்செய்து, (௩) அவ்யவஹிதமானத்தோடு அருளிச்செய்கிறார் (இப்படியித்யாதி.)

(க) கர்ஷகன் – உழுதொழில் செய்யுமவன். (உ) சகாரம் – உம்மை.
(௩) அவ்யவஹிதம் – பிரிக்கப்படாதது.

மூ.—வாலிமாவலத்தொருவனதுடல்கெட வரிசிலைவளைவித்தன்று,
ஏலநாறுதண்டடம்பொழி லிடம்பெற விருந்தநல்லிமயத்துள்;
ஆலிமாமுகிலதிர்தர வருவரை யகடுறமுகடேறிப்
பீலிமாமயில்நடஞ்செயுந்தடஞ்சுனைப்பிரிதிசென்றடைநெஞ்சே.

ப-ரை.—அன்று - ஸுக்ரீவமஹாராஜர் சரணம்புக அவரை அநுக்ரஹித்த வன்று, வாலி-வாலியென்னும் பேரையுடையனாய், மா-மிக்க, வலம்-பலம் பொருந்திய, ஒருவனது - ஒப்பற்றவனுடைய, உடல்-சரீரம், கெட-சிதறும்படி, வரி-அழகிய, சிலை-வில்லை, வளைவித்து-சரங்கள்பாயும்படி வளைத்து, அவருடைய அநிஷ்டத்தைப்போக்கி, ஏலம்-பரிமளம், நாறு - வீசாநிற்பதாய், தண்-குளிர்ந்து, தடம்-பரந்த, பொழில்-உத்யாநவநங்களிலே, ஸர்வேச்வரன், இடம்பெற-எல்லார்க்கும் காட்சிகொடுக்கைக்காக, இருந்த - ஓலக்கம் கொடுத்துக்கொண்டிருக்கிற, நல்-விலக்ஷணமான, இமயத்துள்-ஹிமவானில்; ஆலி-சிறுதுளியையுடைய, மாமுகில்-மஹாமேகங்களானவை, அதிர்தர - நீர்க்கனத்தாலே முழங்காநிற்பதுமாய், பீலி-தோகையையுடைய, மா-பெரிய, மயில்-மயில்களானவை, அரு-ஒருவராலும்தாவியேறவரிதான, வரை-மலைகளிலே, அகடு-கீழ்வயிறு, உற-தழுவும்படியாக, முகடு-அவற்றின் சிகரங்களில், ஏறி-போய்ஏறி, அங்கே,நடம்செய்யும்-ஆடாநிற்பதுமாய், தடம் - பரந்த, சுனை - சுனைகளை யுடைத்தான, பிரிதி - திருப்பிரிதிஎன்கிற திவ்ய ஸ்தலத்தை, சென்றுஅடை-சென்றுகிட்டப்பாராய், நெஞ்சே!- மநஸ்ஸே ! என்று தம் திருவுள்ளத்தோடே கூட்டுகிறார்... ... ... ... (௧)

நடையாடுமிடத்துக்கெல்லையாயிருக்குமிறே திருமலை, அவ்வளவிலே நில்லாதிறே இவருடைய ஆசையானது, ஆசையாலே உகந்தருளின நிலங்களுக்குஎல்லையான ஹிமவானில் திருப்பிரிதியளவும் சென்று அவ்விடத்தைஅநுபவிப்பதாகத் (௧)திருவுள்ளத்தோடேகூட்டுகிறார். கீழ்த்திருமொழியிலே, "அம்பினாலரக்கர்வெருக்கொளநெருக்கி" என்று – ராமாவதாரமுகத்தாலே விரோதிநிரஸநம் ப்ரஸ்துதமிறே; அவ்வழியாலே, மஹாராஜர் வெறுவியருமாய், தனியருமாய், ஜ்யேஷ்டனாலே நெருக்குண்டு நோவுபட்டிருக்க, அவர் அபேக்ஷியாதிருக்கச்செய்தேயும், "ஸ்ரீராமோ வாநரேந்த்ரஸ்ய" "ஸராமோ வாநரேந்த்ரஸ்ய" என்கிறபடியே–தாமேஅவரிருந்த விடத்தேசென்று அவர்விரோதியைப்போக்கியுபகரித்தாப்போலே, அவன்றானேநம்முடைய குறைகளையுமெல்லாம் தீர்த்து உபகரிக்கைக்காக இங்கே திருப்பிரிதியிலேவந்து எழுந்தருளி யிருந்தான், நெஞ்சே ! அங்கே சென்று கிட்டப்பாராய் என்று திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். முன்பெல்லாம் கண்ணுக்கிலக்கான விஷயங்களிலே ப்ரவணராய்ப் போந்தார் ; பகவத்ஜ்ஞாநம் பிறந்தபின்பும்அவ்வாஸநை அநுவர்த்தித்து, கண்ணுக்குவிஷயமான உகந்தருளினநிலங்களிலே புக்கநுபவிக்கிறார்; "தானுகந்தவூரெல்லாம்" என்னக்கடவதிறே. ...

"ராமாவதாரம் ப்ரஸ்துதமாய்த்து" என்று வர்த்தகீர்த்தநத்துக்கு ஸங்கதியென்னை முதற்பாட்டைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் ( கீழ்த்திருமொழியிலே இத்யாதி.) வெறுவியர் - தரித்ரர். "திருமந்த்ரமும் ப்ரஸ்துதமாய்த்து" என்றதாலே - திருமந்த்ரத்துக்கு பரத்வாதிகளெல்லாம் அர்த்தமாயிருக்க, ஏகதேசமான அர்ச்சாவதாரங்களிலேதானே போவானென்னென்ன ; ச்லோக்திமுகேந வருளிச்செய்கிறார் (முன்பெல்லாமித்யாதி.) ... ... ... ...

(௧) திருவுள்ளத்தோடேகூட்டுகை-அத்திருப்பதியை நெஞ்சுக்கு விஷயமாக்குகை.

வ்யா.—முதற்பாட்டு.—(வாலியித்யாதி) வாலியென்று பேராய், மஹாபலத்தில்வந்தால் தன்னையெண்ணினால் இரண்டாம்விரலுக்கு ஆளில்லாதபடி அத்விதீயனாயிருக்கிறவனுடையவுடலானது சிந்தும்படியாக, தர்சநீயமான வில்லை வளைத்து. வாலியுமழிகையும்கிடக்கச் செய்தே, அக்கையும் வில்லும் சேர்ந்த சேர்த்தியும் தர்சநீயதையும் அநுபவிக்கிறாராய்த்துஇவர். "𑌶𑌤𑍍𑌰𑍁𑌨𑌾𑌶𑌨𑍇" "சத்ருநாசநே" என்கிறது கிடக்க, "𑌶𑌕𑍍𑌰𑌚𑌾𑌪𑌨𑌿𑌭𑍇" "சக்ரசாபநிபே" என்கிறத்தை அநுபவிக்கிறார். உகப்பாரோடு உகவாதாரோடு வாசியற இரண்டுதிறத்தாரையும் அழிக்குமாய்த்து!. [𑌶𑌕𑍍𑌰𑌚𑌾𑌪𑌨𑌿𑌭 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿, சக்ரசாபநிப இத்யாதி] இந்த்ரதநுஸ்ஸுபோலே அநுகூலர்க்கு வைத்தகண் மாறாதே கண்டுகொண்டிருக்க வேண்டும்படி தர்சநீயமாயிருக்கும். [𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾, க்ர்ஹீத்வா] விற்பிடித்த பிடியிலே ப்ரதிகூலர் முடிந்துபோம்படியுமாயிருக்கும். அநுகூலரைஅழகாலே யழியச்செய்யும், ப்ரதிகூலரை அம்பாலே யழியச்செய்யும்.

[எரிசிதறும் சரத்தால்] "𑌦𑍀𑌪𑍍𑌤𑌪𑌾𑌵𑌕𑌸𑌙𑍍𑌕𑌾𑌶𑍈𑌃" "தீப்தபாவகஸங்காசை:" என்கிறபடியே-தொடுத்துவிடும்போதாய்த்து அம்பென்று அறியலாவது; தைக்கும்போது உடம்பிலே நெருப்பைச் சொரிந்துகொண்டாய்த்துத் தைப்பது. [இலங்கையினை] (௧) அந்தகனுங்கூட ப்ரவேசிக்க அஞ்சும்படியானவூரை. [தன்னுடையவரிசிலைவாயிற்பெய்து] ஸர்ப்பம்நாவாலே விழுங்குமாப்போலேயாய்த்து அம்பாலே (௨) க்ரஸிக்கும்படி. வில்லுக்கு வாய் அம்பிறே. வாயான அம்பிலே புகும்படி ப்ரவேசிப்பித்து. [வாய்க்கோட்டம் தவிர்த்து] வாயில், கோடுதலுண்டு-விலங்குதல், அத்தைத் தவிர்த்தானாய்த்து. "𑌨𑌨𑌮𑍇𑌯𑌂" "நநமேயம்" என்றிருந்தவிருப்பைத் தவிர்த்தானாய்த்து. [𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍, கஸ்யசித்] இவர் தம்மை யிதரஸஜாதீயராக்கி வைக்கையாலே மநுஷ்யரென்றே யிருந்தான், இவரேயன்றிக்கே

முதற்பாட்டு.—(வாலியித்யாதி.) தம்முடைய விரோதிகளைப் போக்குகைக்கு உறுப்பாக வாலிவதம்சொல்லவேண்டினால், உடல்கெடுத்து என்னலாமே, "வரிசிலைவளைவித்து" என்னுமதுக்குக்கருத்தென்னென்ன வருளிச்செய்கிறார் (வாலியுமித்யாதி.) "𑌚𑌾𑌪𑍇 - 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾, சாபே - க்ர்ஹீத்வா" என்றது ஆயுதமாகையாலே விரோதிநிரஸநம் அர்த்தலப்யமாயிருக்கவும், "𑌶𑌤𑍍𑌰𑍁𑌨𑌾𑌶𑌨𑍇, சத்ருநாசநே" என்றுவிசேஷித்ததுக்கும் "𑌶𑌕𑍍𑌰𑌚𑌾𑌪𑌨𑌿𑌭𑍇, சக்ரசாபநிபே" என்றுவர்ணிக்கைக்கும்-ரிஷிகொண்டாடுகிறானென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (உகப்பாரோடித்யாதி.) சக்ரசாபநிபங்களான (௩) சாபங்களை சத்ருநாசகமாம்படி (௪) க்ர்ஹீத்வாஎன்றுஅர்த்தம் திருவுள்ளம்பற்றி, தாத்பர்யமருளிசசெய்கிறார் (விற்பிடித்தவித்யாதி.) வில்லானது சத்ருநாசகமானவழியை யுபபாதிக்கிறார் (அநுகூலரையித்யாதி.) இங்கு (அநுகூலரை) இத்யாதி - த்ர்ஷ்டாந்தார்த்தம்.

ப்ரதிகூலரை அம்பாலேயழித்தாரோவென்னவருளிச்செய்கிறார் (எரியித்யாதி.) எடுத்தபாசுரத்துக்கு ப்ரமாணபூர்வகம் அர்த்தமருளிச்செய்கிறா (தீப்தேத்யாதி.) "நநமேயம்" என்றது அதிக்ரூரமானபடியை யருளிச்செய்கிறார் (கஸ்யேத்யாதி.)

(௧) அந்தகன் - யமன். (௨) க்ரஸித்தல் - விழுங்குதல். (௩) சாபம் - வில். (௪) க்ர்ஹீத்வா - எடுத்து.

ஈவரன் என்று சொல்லுகிற அவன்றான் வந்தால்தான் வணங்கவன்றே!. ஸ்வரூபம் கைபுகுந்தால் "नम इत्येववादिनः" "நம இத்யேவவாதிந:" என்றாய்த் திருப்பது; "மம" என்றிருக்கையாய்த்து ஸ்வரூபவிரோதி. அநுகூலபாஷணம் பண்ணுகை ப்ராப்தமாயிருக்க "எனக்கு" என்றபேச்சில் விலங்குதலைத் தவிர்த்தாயாய்த்து. [உகந்தவரையன்] (க) ஈராசு தவிர்த்தபின்பு உகந்தபடி. அவன்றான், "எனக்கு" என்றிருக்குமதத்தைத்தவிர்த்தோமாகில்இனி நமதேயன்றே! என்று இனியனானான். இவன் "என்னது" என்றிருக்குமது தவிர்ந்தால், பின்புள்ளதடையத் திருவிடையாட்டமாயிருக்குமிறே. [அரையன்] இவன்பக்கல் அல்பாநுகூல்யமமைகிறது உடையவனாகையிறே; இவன் ப்ராதிகூல்யத்தில்நின்றும் நிவர்த்தனானவளவு கொண்டு உகக்கும்படியாய்த்து ஸ்வாபாவிகஸம்பந்த மிருப்பது. (அன்று) அன்று அங்ஙனேசெய்தான், இன்றுஇங்கே வந்திருந்தான்.

(ஏலமித்யாதி) வினையுள்ளபோதாய்த்துத் தன்னைப்பேணாதே மேல்விழுந்து வ்யாபரிப்பது, அதுபோனவாறே ராஜபுத்ரனாய்ச்செல்வப்பிள்ளையாய் வளர்ந்த ஸௌகுமார்யம் வந்துமுகம்காட்டுமிறே; அதுக்கீடாக விருக்கிறவிடமாய்த்து. அன்றிக்கே, "அம்புக்குச்செல்லாதவிடத்தை ஆஸநத்தாலேதிருத்துவோம்" என்றுபார்த்து வந்திருந்தபடி யாகவுமாம்; சத்ருக்களையழிக்க வொண்ணாவிட்டால் "அவர்களோடே யெதிரிட்டுக் கொள்வோமல்லோம்" என்றுபார்த்து, (உ) எடுத்துவிட்டு ஆஸநத்தாலே பக்நாபிமாநராக்குமாப்போலே. (ஏலம்நாறு) விட்டுப்போந்த விடத்தை விஸ்மரிக்கும்படிபண்ணும் தேசமாய்த்து; "अधिकं पुरवासाच्च," "அதிகம் புரவாஸாச்ச," "जहौ च दुःखं पुरविप्रवासात्" "ஜஹௌசதுஃகம் புரவிப்ரவாஸாத்." படைவீட்டில் விசேஷேண வுண்டான ப்ரகர்ஷ்டவாஸத்தால் வந்த துக்கமடையப்போம்படி யாய்த்து இங்குத்தைவாஸம். பரிமளத்தையுடைத்தாய் சரமஹரமாய் பரப்பையுடைத்தாயிருந்துள்ளபொழில்.

---

'வாயில் கோடுதல்" என்றவாக்யத்தை விவரிக்கிறார் (அநுகூலேத்யாதி.) அன்று செய்தான் - வாலியைக்கொன்றானென்றபடி.

வினை - யுத்தம். அத்யந்தப்ராதிகூல்யமில்லாதவர்களை வசீகரிக்கைக்கு போன தேசத்திலே ஸ்தாயியாயிருப்போமென்று வந்தானாக தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (அன்றிக்கேயித்யாதி) (உ) எடுத்துவிடும் ராஜாக்கள் நீரும் நிழலும் பார்த்திருக்குமாப்போலே யிருந்தானென்றுகருத்து. நீரும் நிழலும் பார்க்குமிடத்திலே பரிமளத்தைச்சொல்லுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (ஏலமித்யாதி.) விட்டுப்போந்தவிடம் - திருவயோத்யை. "அதிகம்புரீவாஸாத்" பெருமாளுக்கு விப்ரவாஸமானது, புரத்தில்நின்றும் புறம்பேவந்த துஃகம் மிகவும் அதிசயமாகச்சொல்ல வொண்ணாதென்று, அதுக்குஅர்த்தமருளிச்செய்கிறார் (படைவீட்டிலித்யாதி.) இத்தால் - மிகவுமதிகமாக புரத்திலே யிருக்கையாவது யதேஷ்டமாகபிராட்டியோடே ஸஞ்சரிக்கவொண்ணாதே மாதாபிதாக்களுக்கு அடங்கிட தந்துஃகம் தீர்ந்தது திருச்சித்திரகூடத்திலே யானைப்போலே, திருப்பொழிலிலே யிருந்தானென்றதாய்த்து. சப்தார்த்தம் (பரிமளத்தை யித்யாதி.)

---

(க) ஈராசு - த்வைராஜ்யம். (உ) எடுத்துவிடுகை - படையெடுக்கை.

(இடம்பெற) இடம்பெற விருக்கை யாவது – எல்லாருக்கும் காட்சி கொடுக்கைக் கிடாக ஓலக்கமிருக்கை. நித்யஸூரிகளுக்கு ஓலக்கம் கொடுக்கையன்றிக்கே நித்யஸம்ஸாரிகளுக்கும் ஓலக்கம் கொடுத்துக்கொண்டிருக்கை. அவதாரகாலத்தில் காணப்பெறாதாரெல்லார்க்கும் காட்சிகொடுத்துக் கொண்டிருக்கிற விடமாய்த்து. (நல் இமயத்துள்) ஒருகாரியப்பாடொழியவேயும் வர்த்திக்கவேண்டும்படியான தேசமாய்த்து. தன்னநுக்ரஹத்தாலே வர்த்தித்தானாக வேண்டாதே, தேசவாஸந்தானே உத்தேச்யமாகப்போரும்படியிருக்கை. (ஆலியித்யாதி) ஸ்ரீவைகுண்டத்தில் வாத்யகோஷங்களோடும் நித்யஸூரிகள் "𑌅𑌹𑌮𑌨𑍍𑌨𑌮𑌹𑌮𑌨𑍍𑌨𑌮𑍍" "அஹமந்நமஹமந்நம்" என்று களிக்குமத்தோடும்போதுபோக்கியிருக்குமவன், அவ்விழவுதிர, அவை தன்னையுங்கூடமறக்கும்படி, மேகங்கள் கோஷிக்க, மயில்கள் ஆட, அது கண்டு போதுபோக்கிக்கொண்டிருக்கிற விடமாய்த்து. விளையற்று பிராட்டியோடேகூட எழுந்தருளி யிருக்கையாலே மேகத்வநிதான் அநுகூலமா யிருக்குமிறே.

(ஆலியித்யாதி) சிறுதுளியை யுடைத்தான மஹாமேகங்களானவை நீர்க்கநத்தாலே முழங்க. ஆலிமாமுகிலதிர்தர, பீலிமாமயில் நடஞ்செய்யுமாய்த்து; வாத்யங்கள்வாய்த்தால் கூத்தாடுவார்உடம்பு பேசாதிராதிறே; காலுக்கிடாக வாய்த்தவாறே ஆடுவாரைப்போலே, அவைமுழங்க இவைஆடாநிற்குமாய்த்து. (அருவரையித்யாதி) ஒருவரால் தாவியேறவரிதான மலைகளிலே ப்ரீதியாலே யேறில் ஏறுமத்தனையாய்த்து; அவற்றிலே கிழ்வயிறுனைந்து தழுவும்படியாக சிகரத்திலேபோயேறி, சிகரத்திற்பரப்படங்கலும் தன்தோகையாலே பரப்பி மயிலானது ஆடாநிற்குமாய்த்து. ராமாவதாரத்தில் விஜயங்கண்டு வாநரஜாதியாக ஆடினத்தை, இவ்விருப்பைக்கண்டு மயில்கள்ஆடாநிற்குமாய்த்து. (பிரிதிசென்றடைநெஞ்சே) சைதந்யத்தில் குறையநின்றாரும் அத்தேசத்தை ப்ராபித்து ப்ரீதிக்குப்போக்கு விட்டுச் சில வ்யாபாரங்களைப் பண்ணுகிற தேசமானபின்பு, சைதந்யத்தில்குறையற்றிருந்தநீ அத்தேசத்தைச்சென்றுப்ராபிக்கப்பாராயென்கிறார். சைதந்யத்தில் குறையநின்றாரோடு குறைவற்றாரோடு வாசியறவிலவராய்அடிமை செய்யும்படி யாய்த்து விஷயஸ்வபாவம். துரும்பெழுந்தாடுமாய்த்து. ... ... ... ... ... ௧.

---

சப்தார்த்தம் (தன்னநுக்ரஹத்தாலே யித்யாதி.)

வாலிவதம்பண்ணினவர் வந்துவர்த்திக்கிறாரகில் (௧) மால்யவானிற்போலே மேகத்வநி பாதகமாகாதோவென்ன வருளிச்செய்கிறார் (விளையற்றித்யாதி.) வாலிவதம், ராவணவதத்துக்கு உபலக்ஷணமென்று திருவுள்ளம்.

சப்தார்த்தம் (சிறுதுளியித்யாதி.) மயில்நடம்செய்கைக்கு அதிர்தருகைஹேதுவானமையைக்காட்டுகிறார் (ஆலிமாமுகிலித்யாதி வாக்யத்ரயத்தாலே.) அகடு கீழ்வயிறு. தோகையின்கனத்தாலேபறக்கக்கூடாமல் அகடுறவென்றுகருத்து. (௧)

---

(௧) மால்யவான் - ஓர்மலை.

ழூ.—கலங்கமாக்கடல்,அரிக்குலம்பணிசெய்ய, அருவரை யணைகட்டி,
இலங்கைமாநகர்பொடிசெய்தவடிகள்தாமிருந்தநலிமயத்து;
விலங்கல்போல்வனவிறலிரும் சினத்தன வேழங்கள் துயர்கூர,
பிலங்கொள்வாளெயிற்றரியவைதிரிதருபிரிதிசென்றடைநெஞ்சே.

ப-ரை.—மாக்கடல் - மஹாஸமுத்ரங்கள், கலங்க - கலங்கும்படி, அரி தலம்-இடக்கைவலக்கை வாசியறியாத குரங்குக்கூட்டம், பணி - நித்யஸூரிகள் செய்யும் அடிமையை, செய்ய-பண்ணவும், அத்தாலே,அரு-ஒருவராலும் எல்லைகாண வொண்ணாத, வரை - மலைகளைக்கொண்டு, அணைகட்டி - ஸேதுபந்தம்பண்ணி, இலங்கைமாநகர்-லங்கையையும் அதில்குடியேறின ராவணன்முதலான ராக்ஷஸ வர்க்கத்தையும், பொடிசெய்த - பாழ்படுத்தின, அடிகள் - ஸர்வஸ்வாமியானவன், இருந்த - நித்யவாஸம்பண்ணுகிற, நல் இமயத்து - விலக்ஷணமான ஹிமவானிலே; விலங்கல்போல்வன-மலைபோன்ற, விறல் - மிடுக்கையுடையன வாய், இரும்-மிக்க, சினத்தன - கோபத்தையுடையவான, வேழங்கள் - யானைகளானவை, துயர்கூர-கவும்பயப்படும்படியாக, பிலம்-குகைகளை, கொள்-இருப்பிடமாக வுடையன வாய், வாள்-வாள்போன்ற, எயிறு - பற்களையுடைய, அரிஅவை- ஸிம்ஹங்களானவை,திரிதரு-ஸஞ்சரியாநிற்கிற, பிரிதி-திருப்பிரிதியை,நெஞ்சே!—, சென்றடை-சென்று கிட்டப்பாராய் என்று, ராவணவதம்பண்ணினபடியைப் பேசுகிறார். (உ)

அ.—இரண்டாம்பாட்டு.—தம்மிழவைப்பரிஹரித்த ப்ரஸங்க த்தாலே மஹாராஜரிழவைப்பரிஹரித்தபடியைப் பேசினார் முதற் பாட்டில்; மஹாராஜரிழவைப்பரிஹரித்த பின்பிறே பெருமாள் தம்மிழவைப்பரிஹரித்துக்கொண்டது, அந்த க்ரமத்திலே ராவண வதம்பண்ணினபடியைப் பேசுகிறார்.

வ்யா.—(கலங்கவித்யாதி) ஈச்வரன் தன்ஸங்கல்பத்தை நெகிழ ன்றால் பதார்த்தஸ்வபாவங்கள் மாறுமோப்போலே யாய்த்து, சக்ர வர்த்திதிருமகன் முனிந்தாலிருக்கும்படியும். ஒருவரால் கலக்கவொ ண்ணாதகடல் கலங்கும்படியாகவும், நித்யஸூரிகள் செய்யும்அடிமை யஇடக்கைவலக்கைவாசியறியாத குரங்குகள் செய்யும்படியாகவும், நிலாழக்கடவ மலைகள்மிதந்து அணையாய்நிற்கும்படியாகவும் பண்ணி னாய்த்து. (மாக்கடல்-கலங்க) "அப்ரமேயோ மஹோததி:" "அப்ரமேயோ மஹாததி:" என்கிறகடல்கலங்கி கீழ்மண்கொண்டுமேல்மண்ணெறி ம்படியாக. (அரிகுலம் பணிசெய்ய) அஸ்ப்ர்ஷ்டஸம்ஸாரகந்தரான திருவடி, திருவநந்தாழ்வான், ஸ்ரீஸேநாபதியாழ்வான் தொடக்கமானார் செய்யக்கடவ கைங்கர்யத்தை, ஸம்ஸாரிகளுக்கும் பின்னே யெண்ண வேண்டும்படி இடக்கை வலக்கை வாசியறியாத வாநரஜாதி செய்யு ம்படியாக.

இரண்டாம்பாட்டு.— (கலங்கமாக்கடலித்யாதி.) தம்மிழவைப்பரிஹரித்த றது - "பன்றியாயன்று பாரகங்கீண்ட பாழியாறுழியானருளே - நாணுய்ய" னுமத்தைப்பற்ற.

கடல்முதலான பதார்த்தங்கள் ஸ்வபாவங்களைமாறுடிக்கலங்கவும் கைங்கர் பண்ணவும் மிதக்கவும்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (ஈச்வரனித்யாதி.) ரிவால்மாறுடினபடி யேதென்னவருளிச்செய்கிறார்(ஒருவராலித்யாதி.) "பணி" ற பதவாஸனையாலே பலித்தஅர்த்தத்தையருளிச்செய்கிறார்(அஸ்ப்ர்ஷ்டேத்யா ஸம்ஸாரிகளுக்குமென்றது-தேஹபோஷணபரரான மநுஷ்யர்க்குமென்றபடி.

சரீரஸம்பந்தமற்று ஒரு தேசவிசேஷத்திலே போனால் செய்யும் அடிமையை, தாழ்ந்த ஜந்மத்திலே பிறந்து இந்த சரீரத்தோடே செய்யும்படியாக. (அருவரையணைகட்டி) ஒருவரால் எல்லை காணவொண்ணாதமலைகளைக்கொண்டு அணைகட்டி. (இலங்கை) ப்ரஹ்மாதிகளும் (க)நெஞ்சுளுக்கியிருக்கும்ஊரை,(௨) மனிச்சுக்குலையாதபடிநின்றுதுகளாம்படிபண்ணினஸ்வாமிகள். ராவணன்பட்டுக்கிடக்க, அவன்பார்யை "ஆதித்யகிரணங்களிங்குப் புகுந்து ஸஞ்சரியாநின்றனகிடாய்!" என்றாளிறே அப்பரிபவம் பொறாமை பிணமெழுந்திருக்கும் என்று.

கூப்பிடாநிற்கும். இவற்றினுடைய தயநீயதசையைக் கண்டு இன்னதென்று பாசுரமிட்டுச் சொல்லமாட்டாதே, கடக்கநின்று, "தர்ம ஹாநிகிடிகோள்!" என்பாரைப்போலே அவ்யக்தமாகக் கூப்பிடாநிற்கும். [படப்பை] இதாய்த்து ஊரில் † கொடித்தோட்டங்களிரு [ரு க்கும்படி.

இத்தால் – அவனுடைய ஸர்வாதிகத்வத்தையும் அவனையநுபவிப்பதாகச் சொல்லுகிற தங்களுடைய ஸம்ஸாரித்வத்தையு மநுஸந்தித்து, "நாம்சென்றுகிட்டுகையாவதென்!" என்று (க) துணுக்குத் துணுக்கென்னாநிற்பார்கள் ப்ரஹ்மாதிகள்; இவ்வண்டுகளானவை, புஷ்பஸாமாந்யத்தைக்கொண்டு மதுபாநார்த்தமாகமேல்விழாநிற்பது, அக்நியென்று கிட்டமாட்டாதே பிறுய்த்து வெருவுவதாகாநிற்குமாய்த்து. அன்றிக்கே, ஆச்ரயிப்பார்க்கு "[illegible]" "அதஸோ உபயங்கதோபவதி" என்னுமிதுவுமுண்டாய், போக்யதையால் வந்த பயம் என்றுமுண்டாயிருக்கு மென்னுதல். ஆச்ரயணீயவஸ்து ஸுலபமாகையாலே ஆச்ரயிப்பார்க்குத் தந்தாமுடைய அநுபவவிநாச்யமான பாபங்களை யநுஸந்தித்து பயப்படவும் வேண்டா; அசோகபுஷ்பத்தைஅக்நியாகக்கொண்டு வண்டுகளஞ்சுகிறஅச்சமநித்யமாய்ச் செல்லாநிற்கும். ... ... ... ... ... ... சு.

வ்யா.—பத்தாம்பாட்டு.—(கரியவித்யாதி) (உ) கழுத்தேகட்டளையாக நீரைப்பருகுகையாலே கறுத்தநிறத்தையுடைத்தான மஹாமேகங்களுடைய ஸமூஹங்களானவை, முகந்த நீர்க்கனத்தாலே பேர்ந்து போகமாட்டாதே கிடந்தவிடத்தே கிடந்து முழங்க. நீர் குறையும்படி வர்ஷித்து வெளுத்ததுமன்றிக்கே கறுத்து, அதுதான்

"ஓங்குபிண்டியின்செம்மலரேறி வண்டுழிதரமாவேறித் தீங்குயில்மிழற்றும்" என்ற ஸமபிவ்யாஹாரத்தாலேபலித்த தாத்பர்யத்தை யருளிச்செய்கிறார் (இவற்றினுடைய வித்யாதி.)

ப்ராஸங்கிகமான பாட்டுக்கு வ்யாக்யாநம் செய்தருளி, இப்பாட்டிலே "உறுதுயர்" என்றதுக்கு - அயோக்யதாநுஸந்தாநமாக தாத்பர்யம் சொன்ன பக்ஷத்துக்கநுகுணமாக, இப்பாட்டுக்கு ஹார்த்தபாவ மருளிச்செய்கிறார் (இத்தாலித்யாதிவாக்யத்வயத்தாலே.) ப்ரஹ்மாதிகளென்றது-"பிரமனோடு" என்று கீழ்ப் பாட்டில் ப்ரஸ்துதரை; இப்பாட்டில் "ஓதியாயிரநாமங்களுணர்ந்தவர்" என்றது என்று திருவுள்ளம். "உறுதுயர்" என்றது - பாபங்களான பக்ஷத்திலே, பாட்டுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (அன்றிக்கே யித்யாதி.) போக்யதையால் வந்தபயமென்றது-அநுபவிக்க மாட்டாமையால் வந்த பயமென்றபடி. பாட்டு[கூறு த்தெல்லாம் தொகுத்தபாவத்தை யருளிச்செய்து தலைக்கட்டுகிறார் (ஆச்ரயணீய வஸ்த்வித்யாதி) அவனைக்கண்டால் தங்கள்வினைக்கஞ்சவேண்டா, அங்குத்தை ஸுமநஸ்ஸுக்களுடைய ராகவிசேஷத்தைக்கண்டால் தங்களுக்கதில்லாமையாலே சென்றணுகவஞ்சும்படியாயிருக்குமென்றதாய்த்து. ... ... க.

பத்தாம்பாட்டு.—(கரியவித்யாதி.) [சூம

வ்யாவர்த்தகங்களைக்காட்டாநின்றுகொண்டு விவரிக்கிறார் (நீர்குறையும்படி யித்யாதி.)

† "ஊனில்" என்றுசிலஸ்ரீகோசங்கள். (க) துணுக்குத்துணுக்கென்கை- நடுக்கமுடுகை; - பயப்படுகை: கலங்குகையென்றபடி. (உ) கழுத்தேகட்டளையாக- கழுத்தளவாக. பூர்ணமாகவென்றபடி.

மூ.—கரியமாமுகிற்படலங்கள் கிடந் தவைமுழங்கிடக்,களிறென்று-
பெரியமாசுணம் வரையெனப் பெயர்தரு பிரிதியெம்பெருமானை,
வரிகொள்வண்டறை பைம்பொழில் மங்கையர் கலியனதொலிமாலை-
அரியவின்னிசைபாடு நல்லடியவர்க் கருவினை யடையாவே....ய. [ரு

ப - ரை.— கரிய - கறுத்தநிறத்தையுடைய, மாமுகில் - மஹாமேகங்களின், படலங்கள்அவை - கூட்டங்களானவை,கிடந்து - இருந்தவிடத்திலேயிருந்து, முழங்கிட - த்வநிக்க, அந்தத்வநியைக்கேட்டு, பெரிய - பெருத்த, மாசுணம் - மலைப் பாம்புகள், களிறுஎன்று - தங்களுக்கு இரையானயானைகள் வருகிறனஎன்றுநினைத்து, வரையென - மலைபோலே, பெயர்தரு - அஞ்சந்துவரும்படியான, பிரிதி -[ய திருப்பிரிதியில் நித்யவாஸம்பண்ணுகிற, எம்பெருமானை - ஸர்வேச்வரன்விஷய மாக; வரிகொள் - வரியையுடைய, வண்டு - வண்டுகளானவை, அறை - த்வநியா நின்றுள்ள, பை - பரந்த, பொழில் - சோலையையுடைத்தான, மங்கையர் - திரு மங்கையிலுள்ளார்க்கு நியாமகரான, கலியனது - ஆழ்வாருடைய, ஒலி - ஒலியு டைத்தாம்படி அருளிசசெய்த,மாலை-தொடையாய்,அரிய-ஒருவர்க்குமறியவொ[ட்டு ண்ணாதபெருமையையும், இன் - சுவைப்பாட்டையுமுடைத்தாய், இசை - இசை யையுமுடையபாட்டுக்களை, பாடும் - அப்யஸிக்கிறவர்களாய், நல் - ஸர்வேச்வரனு க்கு அந்தரங்கமான, அடியவர்க்கு - அடிமைசெய்யுமவர்களை, அருவினை - மஹா பாபங்கள், அடையா - "சும்மெனாதேகைவிட்டோடி" என்கிறபடியேவிட்டோடிப் போம். ... ... ... ... ... ... (ய)

மேகசகலமுமாயிருக்கையன்றிக்கே மாமுகிலாய், அவைதான் ஒன்றி ரண்டன்றிக்கே ஸமூஹங்களுமானவை, முகந்த நீர்க்கனத்தாலே கால் வாங்கிப்போகமாட்டாதே வாயுவாலும் ப்ரேரிக்க வொண்ணாதபடி கனத்து அவைகிடந்தவிடத்தேகிடந்து,கர்ப்பகேதத்தாலே முக்குவா ரைப்போலே முழங்குமாய்த்து. [உரு

(களிறென்று) நிறத்தினுடையவும் அதிருகிற த்வநியினு டையவும் ஸர்வதாஸாம்யத்தாலே யானையென்று. (பெரியமாசுணம்) பெரியவடிவையுடைத்தாயிருக்கிற மலைபபாம்புகளானவை. ஆனை யை விழுங்கும்படியாய்த்துப் பெருமையிருப்பது. (வரையெனப்பெ யர்தரு) அம்மலைப்பாம்புகளானவைஅவற்றுக்கஞ்சி மலைபோலேபேர் ந்துபோய்,புற்றிலேபுகாநிற்குமென்று."காருடையமின்னென்றுபுற்ற டையும்" என்றும்"பரந்ததலையுடையநாகம்வாரணத்தையஞ்சியொளிக் கும்" என்கிற ப்ரஸித்தியாலும,இப்படி "புற்றிலேயடையும்" என்றரு ளிச்செய்வர்ஜீயர். "இதுவோஇதுக்கருளிசசெய்யும்படி?" என்று பிள்ளைகேட்டருள;"நீரிப்படிகேட்கும்போதுஒன்றைநினைத்தல்லதுகே ளீர்,அத்தைச்சொல்லும்" என்ன;"'பெயருகையாகிறதுதான்-யோக்கு வரத்துஇரண்டுக்கும்ஸாதாரணமாயாய்த்திருப்பது,இனித்தான்மலைக் குச் சிறப்புச்சொல்லுமவர்கள் மலைப்பாம்புகள் ஆனையைவிழுங்கும்

(புகாநிற்குமென்று) என்றவநந்தரம், கூட்டுவது என்று சேஷம். சிறப்பு - உத்கர்ஷம்.

என்னக்கடவர்கள், ஆகையாலே, கரியமாமுகிற்படலங்கள் கிடந்து
முழங்குகிறவற்றைப் பெரிய மாசுணமானது ஆனையாக புத்திபண்ணி
ஆமிஷார்த்தமாக மலை பேர்ந்தாப்போலே கால்வாங்கிவந்துகிட்டா
நிற்குமாய்த்து என்றுமே' என்ன; 'அதுவேயிறே பொருள்!'
என்று போரக் கொண்டாடியருளினார்" என்றருளிச்செய்வர். ஆகை
யிறே பெரியமாசுணமென்றது;-ஆனையைவிழுங்கும்படியாய்த்து இதி
னுடைய பெருமையிருப்பது.

(வரிகொளித்யாதி) வரியையுடைத்தாய்-தர்சநீயமாயிருந்துள்ள
வண்டுகளானவை மதுபாநம்பண்ணிக்களித்து த்வநியாநின்றுள்ள[௰
பரந்தபொழிலையுடைத்தான திருமங்கையிலுள்ளார்க்கு நியாமகரான
ஆழ்வார் ஒலியுடைத்தாம்படி சொன்ன தொடையாய்த்து. (அரிய
இன்னிசை) "திருமங்கையாழ்வார், தம்திருவாயாலே 'அரியவின்னிசை'
என்பதே!" என்றருளிச்செய்வர். ஆழ்வார்திருவரங்கப்பெருமா
ளரையர், சிலரோடேபிணங்கி, கையில் தாளத்தைப்பொகட்டு, "*வாலி
மாவலத்தை யென்றோடே யிசைசொல்லிப்போ" என்றாராம். வாது
பாட்டாகப்பாடுமது என்று ப்ரஸித்தமிறே. இயலிலுமிழியலாம்,
பொருளிலுமிழியலாம்; இசையிலொருவர்க்கு மிழியவொண்ணாது.
* அருமையால் நினைக்கிறது - பெருமையை; * இனிமையால் நினை
க்கிறது - சுவைப்பாட்டை. (அரிய) அருமை பெருமைகளையும் [௨௰
சுவைப்பாட்டையு முடைத்தாயிருக்கை. (நல்லடியவர்க்கு) இத்தை
ப்பாடுமவர்களாய்த்து ஸர்வேச்வரனுக்கு அந்தரங்கராகிறார். (அரு
வினை) அவர்களை, பாபங்கள் வந்துகிட்டாது. ஸர்ப்பங்களானவை
மேகங்களை ஆமிஷமாக புத்திபண்ணி மேல்விழுமாப்போலே, இத்தை
அப்யஸித்தவர்கள் பக்கலிலே ஸர்வேச்வரன் போக்யதாபுத்தி [௨௫
பண்ணி அவர்களுடைய விரோதிகளைப் போக்கி விஷயீகரிக்க அவ
னாலே விஷயீகர்த்தராகப் பெறுவர்கள். இப்பாசுரத்தைச் சொன்ன
வர்களை அச்சொல்வழியே ஸர்வேச்வரன் அவர்களையே யெல்லா
போக்யமுமாக வந்துகிட்டும்; நடுவுபாபங்களுக்கு ஒதுங்க நிழலில்லா
மையாலே யோடிப்போம். ... ... ... ... ௰.

திருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.

பெரியவாச்சான்பிள்ளைதிருவடிகளேசரணம்.

அடிவரவு.—வாலி கலங்க துடி மறம் கரைசெய் பணம் கார்
இரவு ஓதி கரிய முற்ற.

---

*இசையினுடைய அருமைக்கு ஒரு ஸம்வாதமருளிச்செய்கிறார் (ஆழ்வாரித் [௧௫
யாதி.) இயல் - சப்தம். இசை - ராகம். அர்த்தாந்தரம் (அருமையாலித்யாதி.)
பெருமை - அதிசயம். சுவைப்பாட்டை - ரஸ்யதையை. இரண்டர்த்தத்
தையும் க்ரமேண கூட்டி சப்தார்த்தமருளிச்செய்கிறார் (அருமையித்யாதி.) பாட்டுக்
கெல்லாம் தொகுத்தபாவம் (ஸர்ப்பங்களித்யாதி.) ஸர்வேச்வரன்போக்குவானுகில்,
"வினையடையாவே" என்று இவற்றுக்கு கர்த்ருத்வம் சொல்லுகைக்கு [௪௰
ப்ரயோஜநமென்னென்ன வருளிச்செய்கிறார் (இப்பாசுரத்தையித்யாதி.) ௰.

ஜீயர்திருவடிகளேசரணம்.

வ்யா.—தந்திருவுள்ளத்தைக்குறித்து "திருப்பிரிதியை யாச்ரயி" என்று உபதேசித்தார்; அது தம் த்வரைக் கீடாக த்வரிக்கவில்லை; கெடுவாய! நாமிருக்கிற விருப்பில்பொல்லாங்கு கண்டாயே, கடுக[இ ஒருக்ஷணம் முற்பட்டதுடலாக ஆச்ரயிக்கப் பாரா யென்கிறார். கீழே திருமந்த்ரத்தை அநுஸந்தித்தார்; அநந்தரம், மந்த்ரப்ரதிபாத்யமான அர்த்தத்தை அநுஸந்தித்தார்; மந்த்ரத்ரஷ்டாவானவனிருந்த தேசத்தை ஆச்ரயிப்போ மென்கிறார். திருமந்த்ரந்தன்னை அநுஸந்திப்பார்க்கு ப்ரதிபாத்யமான வஸ்துவோபாதி, ரிஷி[ய சந்தோ தேவதைகளென்ன, பீஜசக்திகளென்ன, சோஷண தாஹநாதிகளென்ன, இவை யெல்லாம் அநுஸந்தேயமாகக்கடவது. அது வேண்டுவானென்னென்னில்; "நமோநாராயணாயவென்று - பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர்" என்று - இம்மந்த்ராநுஸந்தாநம்பண்ணுவார் நித்யஸூரிகளாய், அவர்களுடை[யரு ய யாத்ரையாய்த்துஇது; அத்தையிறே குணத்ரயாத்மிகையான ப்ரக்ருதிவச்யனானவிவன் அநுஸந்திக்கபபாக்கிறது; ஆகையாலே, ஒருபாவனையாலே அவர்களோபாதியாகத் தன்னுடைய சரீரத்தையும் பாவித்து அநுஸந்திக்கைக்காக சோஷணாதிகள் வேண்டுகிறது. இனி, ரிஷிசந்தோதேவதைகளை யநுஸந்திக்கிறது-இம்மந்த்ரத்தி[உயிலுண்டான ஆதராதிசயத்தாலே, பீஜசக்திகளை யநுஸந்திக்கிறது - மோக்ஷப்ரதமென்றவ்வழியாலே யிவனுக்கிதில் விச்வாஸம் பிறக்கைக்காக. கீழே "பிரிதிசென்றடை நெஞ்சே" என்றார்; "க்ரமத்திலே செய்கிறோம்" என்றாறியிருந்தது நெஞ்சு; "கெடுவாய்! ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டராயிருப்பார்க்கு அப்படி 'செய்கிறோம்' என்றாறியிருக்கப்போமோ, அப்ராக்ருத சரீரபரிக்ரஹம் பண்ணினார்க்கன்றோ 'பின்னைச்செய்கிறோம்' என்றாறியிருக்கலாவது" என்று - இங்ஙனே ப்ரக்ருதியினுடைய அஸ்திரதையையும், விஷயங்களினுடைய தண்ணிமையையும், பற்றப்படுகிற விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தையும் சொல்லி,

---

அ.—முற்றமூத்துப்ரவேசம்.—கீழ்த்திருமொழியோடேயொருஸங்கதியரு[கூளிச்செய்து, "வதரிவணங்குதுமே" என்றதைக்கடாக்ஷித்து கீழிரண்டுதிருமொழிகளோடு ஸங்கதியருளிச்செய்கிறார (கீழே யித்யாதி.) திருமந்த்ரம் ப்ரஸ்துதமானால் மந்த்ரத்ரஷ்டாவை யநுஸந்திக்க வேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (திருமந்த்ரந்தன்னை யென்று தொடங்கி, விச்வாஸம் பிறக்கைக்காக என்னுமளவும்;) உபாஸகனுக்குத்திருமந்த்ராநுஸந்தாநம்பண்ணுமிடத்தில் ரிஷிசந்தோ[தேவதைகள் வேண்டுமோப்போலே, ஆழ்வாருக்கு மந்த்ரத்தினுடைய ருஷிதேசயதையாலே மந்த்ரப்ரதனிருந்த தேச முத்தேச்யமென்று கண்டுகொள்ளும் என்றருளிச்செய்வர். மேற்சொன்ன மூன்றின ஸங்கதியை, பாட்டுக் கதிகதபூர்வகம் விஸ்தரிக்கிறார் (கீழே யித்யாதி.)

இருந்தபடி யிதுவானபின்பு ஒரு கை கால் முறியவாகிலும் ஒரு க்ஷணம் முற்பட்டதுடலாக ஆச்ரயிக்கப் பாராய்! என்று திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார்.

(முற்றமூத்து) ஹிமவானில் திருப்பிரிதியை யாச்ரயி என்று திருவுள்ளத்தைக்குறித்து உபதேசித்தார்; அது தம் த்வரைக்கு அநுரூபமாக மேல்விழாதே திமிர்த்திருந்தது; "மநஏவமநுஷ்யாணாம்" "மந ஏவமநுஷ்யாணாம்" என்று-பந்தமோக்ஷங்களிரண்டுக்கும் ஹேது மநஸ்ஸிறே, இது பகவத்விஷயத்தில் மேல்விழுகிறதில்லை, இனி பண்டையதுவேயிறே நமக்குநிலை, இனி அவன்றான் விரோதியான இவ்வுடம்போடே தன்னை யாச்ரயித்துப் பெறலாம்படிக் கீடாக இங்கேவந்து ஸந்நிஹிதனானான், இனி இந்தவிரோதியான ப்ரக்ருதிதான் தேஹமாயும் இந்த்ரியங்களாயும் சப்தாதி விஷயங்களாயுமிறே விரோதியாவது, அநுபாவ்ய விஷயங்களில் ப்ரதாநபோக்யங்களாவன-ஸ்த்ரீகளிறே, அவர்கள்தாங்களாகிறார்-தங்களைக்கொண்டு அருமைப்படுத்தி இவன் ஸர்வஸ்வத்தையு மபஹரிக்குமத்தனை போக்கி இவனுக்குத் தங்களுடைய வுடம்புகொடுக்கக் கடவர்களன்றிக்கே, கொடுத்தார்க ளாகில் அதுதன்னில் அநுபாவ்யமொன்றில்லாதபடி அல்பமாய் அஸ்திரமாய் அநர்த்தாவஹமாய் துராராதமாயிறே யிருப்பது: இனி, தேஹமாகிறதுதான்-ஏகரூபமாயிருப்பதொன்றல்லாமையாலே, அவைதன்னுடைய அநுபவ யோக்யமுள்ளது சிறிதுநாளாய், பின்பு அதுவுங்கூட இல்லாதபடியிறே யிருப்பது; இந்த்ரியங்களாகிறவிவை, "ஆநந்தயாதி" "ஆநந்தயாதி" என்கிறபடியே - இவனுக்கு நிரதிசயாநந்தத்தைப் பண்ணிக்கொடுக்கும்; பகவத்விஷயத்துக் குடலாகையன்றிக்கே ஸந்நிஹிதமான க்ஷுத்ரவிஷயங்களிலே மூட்டி துꞏகத்தை விளைக்கக்கடவதாய், பின்பு தானுண்டாயிருக்கச்செய்தேயும் இக்காரியந்தன்னையும் செய்யமாட்டாதபடியாயிறே யிருப்பது; இப்படி யிருக்கையாலே, இவ்வசித்துத்தனக்கே பாங்காயிருக்கிற நாளிலே அவனை யாச்ரயித்துத் தன்னைக்கழித்துக்கொள்கைக்குஉடலாயிருப்பதுமோராகாரமுண்டு; அவன்றானும் இது பாங்கானபோதே தன்னை யாச்ரயிக்கலாம்படி யிங்கே ஸ்ரீபதரியிலே வந்து ஸந்நிஹிதனானான், ஆனபின்பு இது அநுகூலமானபோதே அவனை யாச்ரயித்து இத்தைக்கழிப்பித்துக் கொள்வோமென்றுபார்த்து, அதிலே ஒருப்படுகிறார்.

---

(ஒருகைகால் முறியவாகிலும்) என்றதுக்கு-முறியும்படியாகிலும் ஓடி ஆச்ரயியென்று ச்ரைஷ்ட்யத்திலே தாத்பர்யமாதல், கேவல கரணசைதில்யம் பிறப்பதற்கு முன்னே யென்று தாத்பர்யமாதல் கொள்வது.

இத்திருமொழியிலே "பிரிதிசென்றடைநெஞ்சே" என்றவது அதிகாரதேசமென்றஞ்சித் திமிர்த்திருக்க; ஸந்நிஹிதமாக வதரியிலே வந்தான், அங்கே நம்மை ஆச்ரயி என்று ஸங்கேதம்பண்ணிச்சொல்லுகைக்குப்ரதிக்ரஹணம்பண்ணுகிறார் (முற்றமூத்தென்று.)

மூ.—முற்றமூத்துக் கோல் துணையா முன்னடிநோக்கி வளைந்து -
இற்ற கால்போல் தள்ளி மெள்ள விருந்தங்கிளையாமுன் ;
பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலையூ டுயிரை -
வற்றவாங்கியுண்ட வாயான் வதரி வணங்குதுமே. ... ௧

ப-ரை.—முற்றமூத்து - ஒன்றும் செய்யமாட்டாதபடி மிகவும் கிழத்தனத்தை யடைந்து, கோல் - ஊன்றுகோலை, துணையா - ஸஹாயமாகக் கொண்டு, முன்அடி - முன்னே இடவேண்டும் அடியை, வளைந்து - தலைகவிழ்ந்து, நோக்கி - பார்த்து, இற்றகால்போல் - முறிந்த கால்போலே, தள்ளி - தடுமாறி, அங்கு - ஓரிடத்தில், மெள்ள - மிருதுவாக, இருந்து - உட்கார்ந்து, அதுவும் செய்யப் [௰ பொறுமையாலே, இளையாமுன் - இளைப்புவந்து மேலிடுவதற்குமுன்னே ; பெற்ற தாய்போல் வந்த - பெற்ற தாயின் வடிவுகொண்டு வந்த, பேய்ச்சி - பூதனையுடைய, பெருமுலையூடு - பெரிய முலைவழியே, உயிரை - அவள்ப்ராணனை, வற்ற - பாலோடேகூட வற்றும்படியாக, வாங்கி - உறிஞ்சி, உண்ட - அமுதுசெய்த, வாயான் - திருப்பவளத்தையுடைய ஸர்வேச்வரனெழுந்தருளியிருக்கிற, வதரி - ஸ்ரீபதரியை, வணங்குதும் - வணங்குவோம் என்று தந்திருவுள்ளத்தைக்குறித்தருளிச்செய்கிறார்.

பட்டரை ஒரு வ்யாபாரி, "'இது அல்பம், அஸ்திரம்' என்று இத்தை த்யாஜ்யமாக நினைத்திராநின்றார்கள் சிலர், 'காண்கிற வுடம்புக்கவ்வருகில்லை' என்று இதுதன்னிலே போக்யதாபுத்தி பண்ணியிராநின்றார்கள் சிலர், ஒன்றைப்பற்றி யிவையிரண்டும் [௨௰ நடக்கிறபடி யெங்ஙனே ?" என்றுகேட்க ; "பாக்யாதிகர்க்கு இதினுடைய தோஷதர்சநத்தைக் கொண்டு கை விடுகைக்கு முடலாய், பாக்ய ஹீநர்க்கு இதிலே போக்யதாபுத்திபண்ணி அநர்த்தப்படுகைக்கு முடலாம்படி அவ்வவருடைய புண்யபாபங்களை யிட்டு அதுக்கநுரூபமாகக்காணுமித்தைப்பண்ணிற்று" என்றருளிச்செய்தார்.[௨௫ [బాల్యేక్రీడనకాసక్తాః - பால்யேக்ரீடநகாஸக்தா:] பால்யத்தில் லீலோபகரணங்கொண்டு போதுபோக்கித் திரியும், அல்பம் (க) வெளிச்செறிப்புப் பிறந்தவாறே விஷயங்கள் வந்து கைக்கொள்ளும், பின்னை அவைதன்னையு மநுபவிக்கவொண்ணாதபடி மூப்பு வரும், ஆனபின்பு இது பாங்கான நாளிலே ஒருக்ஷணம் முற்பட்டதுடலாக [௩௰ பகவத்ஸமாச்ரயணம் பண்ணவடுக்கும் என்னுநின்றதிறே. ...

முதற்பாட்டு.—(முற்றமூத்து) பரிணாமி த்ரவ்யத்துக்கு பரிணாமபரம்பரைகள் வரத் தவிராதிறே ; இனி ஒரு அவஸ்தைக்கு அவகாச மில்லாதபடி கழியமூத்து.

சரீரந்தனக்கே ஆநுகூல்யமும் ப்ராதிகூல்யமும் கூடுமோவென்ன; கூடுமென்னுமதுக்கு ஸம்வாதமருளிச்செய்கிறார் (பட்டரையித்யாதி.) ஒருதேஹத்திலிரண்டு ஆகாரம்கூடுமென்னுமதுக்கு ப்ரமாணமும் காட்டுகிறார் (பால்யேத்யாதி.) ...
முதற்பாட்டு.—(முற்றவித்யாதி.)

(க) வெளிச்செறிப்பு - ஜ்ஞாநவைசத்யம்.

(கோல்துணையா) முன்பு தன்னை யெல்லார்க்கும் அபாச்ரயமாகவிறே நினைத்திருப்பது, ஒருபரமசேதநனைப்பற்றுகிறானுமன்றே. ஜீயர், ஸங்க்யஹித்தருளுகிறவன்று, "தண்டதாரணம் பண்ணுகிறமந்த்ரம் - 'நீயெனக்குமித்ரமாய்எல்லாரக்ஷணங்களும் பண்ணவேணும்' என்றாய்த்திருப்பது, அத்தைக்கேட்டு, 'ஒருஸர்வஜ்ஞன் ஸர்வசக்தி பரமசேதநனை ஓராசார்யன் முன்னாக இவ்வார்த்தை சொல்லிவைத்து, இத்தையும் இவ்வார்த்தை சொல்லும்படியான இவ்வாச்ரமப்ராப்திதானென்!' என்றிருந்தேன் காண்" என்றருளிச்செய்வர். (முன்னடிநோக்கி வளைந்து) முன்பு இறுமாப்பாலே தரைபாராதேயிறே திரிவது. சோழர்கள், வெற்றிலை சிலரிடவன்றிக்கே தாங்களே யெடுத்திறே தின்பது, "தலைகவிழ்ந்துவாங்கில் சிலரைவணங்கிற்று" என்னும் துர்மானத்தாலே. "ஜ்யாகாஜஸ்யம்" "த்விதாபஜ்யேயம்" என்பது (க) இயற்றியுண்டான நாளிறே ‡; செயலற்றால் செய்யலாவதில்லையிறே. (இற்றகால்போல்தள்ளி) முறிந்தகால்போலேதடுமாறி. (மெள்ள இருந்து) ஸ்திதியிலுண்டான அருமையாலே இருக்கவொருப்படும்; ஒருமஹாபாரதத்துக்கு வேண்டும் (உ) நேர்த்தி போருமாய்த்து ஒருக்காலிருந்தானாய்த் தலைக்கட்ட. (அங்கிளையாமுன்) இருந்த ஆயாஸந்தான் பொறுமை யிளைக்குமாய்த்து; அக்லேசம் வருவதுக்கு முன்னே.

(பெற்ற தாயித்யாதி) தாய்வடிவுகொண்ட பூதனையுடைய பெரியமுலைவழியே ப்ராணனும்பாலோடொக்கவற்றும்படியாகபுஜிக்குமவனுடைய. அன்றிக்கே, பேய் வற்றும்படி முலையூடு உயிரையுண்ட வாயானென்னவுமாம். பால் நேரானவாறே ப்ராணனும் நேராய்த்து.

இத்தால்—அநுகூலம்போலே தோற்றி ப்ரதிகூலமான ப்ரக்ருதியை க்கழித்துக்கொள்ளப் பார்க்கில், தாய்வடிவைக்கொண்டு அநுகூலரைப்போலே வந்து ப்ரதிகூலமான பூதனையை நிரஸித்தவன் திருவடிகளைப் பற்றவடுக்குமென்கிறார். ... ... க.

---

மிகவும் மூத்தவனுக்குக் கோல் பிடிக்கை ஸ்வதஸ்ஸித்தமா யிருக்கவு மருளிச்செய்ததுக்குக்கருத்து-துணையாகாதத்தைத் துணையாக்கினானென்று தோற்றுகைக்காக வென்று பலித்த தாத்பர்யங்களை யருளிச்செய்கிறார் (முன்பித்யாதி.) பரமசேதநன் தவிர வேறொன்று ரக்ஷகமன்றென்னுமதுக்கு ஸம்வாதம் (ஜீயரித்யாதி.) மந்த்ரம் - "ஸகா மே கோபாய" "ஸகாமேகோபாய" என்றது. ஸ்திதியென்றது - நிற்கையென்றபடி.

பேய் வற்றும்படி யென்றது-பேயின் சரீரம் வற்றும்படி யென்றபடி. முலையூடு பாலையுண்ணக்கூடு மித்தனைபோக்கி, ப்ராணனையுண்ணக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (பாலித்யாதி) பால் நேர்பட்டவளவிலே யிவனுடைய அகடிதகடநாஸாமர்த்யத்தாலே ப்ராணனும் நேர்பட்டது, ஆகையாலே உண்ணக்கூடுமென்று கருத்து. ... ... ... ... ... ... க.

---

(க) இயற்றி - சக்தி. ‡"நாளிலிறே" என்றால் ஸ்வாரஸ்யம். (உ) நேர்த்தி - நேர்தல்: ப்ரயாஸமென்றபடி.

மூ.—முதுகுபற்றிக் கைத்தலத்தால், முன்னொருகோலூன்றி,
விதிர்விதிர்த்துக் கண்சுழன்று மேற்கிளைக்கொண்டிருமி,
இதுவென்னப்பர்மூத்தவாறென் றிளையவரேசாமுன்,
மதுவுண் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே. உ.

ப-ரை.—முதுகு - முதுகை, கைத்தலத்தால் - கையாலே, பற்றி - பிடித்தும், முன் - முன்னே, ஒருகோல் - ஒருகொம்பை, ஊன்றி - ஊன்றிக்கொண்டும், விதிர்விதிர்த்து - உடம்பெல்லாம் நடுங்கியும், கண்சுழன்று - கண்கள் சுழலமிட்டும், மேல் கிளைக்கொண்டு - மேலான த்வநியோடே, இருமி - இருமல் மேலிட்டும்,இப்படியிருப்பதைக்கண்டு,இளையவர் - சிறுவர்கள், "அப்பர் ! - பெரிய [வ
வரே!, மூத்தஆறு - கிழத்தனத்தை யடைந்தபடி, இது என்! - இவ்வளவோ!," என்று - என்றுசொல்லி, ஏசாமுன் - ஏசுவதற்குமுன்னே ; மது - பூவில்தேனை, உண் - பாநம்பண்ணுகின்றுள்ள, வண்டு - வண்டுகள், பண்கள் பாடும் - எல்லாப் பண்களையும்பாடுகிற,வதரி-ஸ்ரீபதரியை,வணங்குதும்-வணங்குவோம்என்கிறார். உ.

வ்யா.— இரண்டாம்பாட்டு.—(முதுகுபற்றிக்கைத்தலத்தால்) [ம்ரு
தௌர்பல்யத்தாலே முதுகு நோமே, ஒரு கையாலே அத்தைப் பற்றும். (முன்னொருகோலூன்றி) முன்பு விழாமைக்காக ஒருகோலை ஊன்றுமாய்த்து. இரண்டருகும் கப்புக்கால் கொடுக்கவேண்டும்படியிறே யிருப்பது. (விதிர்விதிர்த்து) சரீர மெங்குமொக்க நடுங்குமாய்த்து. (கண்சுழன்று) ஓரோ அவயவங்களுக்குப் பிறக்கும் [உம்
விகாரங்கள் சொல்லுகிறது. (மேற்கிளை) மேற்கென்று – மேலாய், மேலிளைப்புக் கொண்டென்னுதல் ; அன்றிக்கே, மேலான கிளையை– உச்சமான த்வநியைக் கொண்டிருமி. (இதுவென்னப்பர் மூத்தவாறு!) இதுதான் ! எல்லாரும் மூக்கக்கடவதிறே, இத்தனை கழியமூக்க லாகாது என்பர்களாய்த்து. அப்பர் என்று - ப்ரக்ருதி, அதின்மேலே[உரு
மூப்பு. (இளையவர்) அவர்களுக்கும் அது வ்யவஸ்திதமாய் தங்களுக்கும் இவை வ்யவஸ்திதமானுப்போலே யிருக்க, ஏசாநிற்பர்கள்.

(மதுவுணித்யாதி) ஒருபண்ணைப்பாடுகையன்றிக்கே, வண்டுகள் மதுபாநமத்தமாய் எல்லாப்பண்களையும் பாடாநிற்கும். (வதரி) ஆக, இக்க்லேசத்தைத் தவிர்க்குமளவே யன்றிக்கே, நிரதிசயாநந்தத்தைப் பெற்றுக் களிக்கலாம்படியான தேசமாய்த்து. ... உ.

அ.—இரண்டாம்பாட்டு.—(முதுகித்யாதி.) முற்றமூத்த ப்ரகாரவிசேஷத்தை விவரிக்கிறாரென்று ஸங்கதி ஸ்பஷ்டமென்று வ்யாக்யாநம் செய்தருளுகிறார் (தௌர்பல்யேத்யாதி.) * கண்சுழலுகை - உபலக்ஷணமாய், ஸர்வாவயவவிகாரங்களும் சொல்லுகிறதென்கிறார்(ஓரோவித்யாதி.)மேலிளைப்புக்கொண்டென்றது- [நரு
மேல் ச்வாஸம் பிறக்கும்படி க்லேசம் கொண்டென்றபடி. "அப்பர்மூத்தவாறு. என்" என்னலாயிருக்க, "இது" என்றத்தால் பலித்தவர்த்தம் (இதுதானித்யாதி.) கழியமூக்கை - கேவலம் சிதிலாவயவனுகை. ப்ரக்ருதி யென்றது - ஸ்வபாவதஃ மூத்தமையைச்சொல்லுகிறதென்றபடி. மூப்பென்றது - மூப்பையும் சொல்லுகிறதென்றபடி.இத்தால்-கழியமூத்தமையைச்சொல்லிற்றாய்த்து.இவையென்றது-[சம்
இளமையும், ஏசுகையுமென்றபடி.

வண்டுகளைப்போலே நமக்கு மலனை வணங்கினால் ஆநந்திக்கலாமென்று முட்கருத்தை யருளிச்செய்கிறார் (ஆகவித்யாதி.) ... ... உ.

மூ.—உறிகள்போல் மெய்ந்நரம்பெழுந் தூன்தளர்ந்துள்ளமெள்கி,
நெறியைநோக்கிக் கண்சுழன்று நின்றுநடுங்காமுன்;
அறிதியாகில் நெஞ்சம்! அன்பா யாயிரநாமம்சொல்லி,
வெறிகொள் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே. ௩.

---

ப-ரை.—மெய் - சரீரத்திலுள்ள, நரம்பு - நரம்புகளானவை, உறிகள் போல் - உறிபோலே, எழுந்து - மேலேகிளம்பி, அதுக்குறுப்பாக, ஊன்-மாம்ஸம், தளர்ந்து - கட்டுக்குலைந்து, அத்தாலே, உள்ளம் - ஹ்ருதயம், எள்கி - ஈடுபட்டு, தூரப்போவதற்காக, நெறியைநோக்கி - வழியைப்பார்த்து, நெடுகப்பார்த்த ஆயாஸத்தாலே, கண்சுழன்று - கண்ணுஞ்சுழலையிட்டு, நின்று-போகமாட்டாதேநின்று, [ம நடுங்காமுன் - நடுங்குங்காலம் வருவதற்கு முன்னமே; நெஞ்சம்! - மநஸ்ஸே!, அறிதியாகில் - ஜ்ஞாநமுண்டானால், அன்பாய் - ஸர்வேச்வரன்பக்கல் பக்தியையுடையையாய், ஆயிரம்நாமம் - அவனுடைய ஆயிரம்திருநாமங்களையும், சொல்லி- வாயாரச்சொல்லி, வெறிகொள்-பரிமளந்தான் ஒருவடிவுகொண்டாப்போலே யிருக்கிற, வண்டு-வண்டுகள், பண்கள்-இசைப்பாட்டுக்களை, பாடும் - பாடாநின்று [ற்று ள்ள, வதரி - ஸ்ரீபதரியை, வணங்குதும் - வணங்குவோமென்கிறார். ... ௩.

---

வ்யா.—மூன்றாம்பாட்டு.—(உறிகளித்யாதி) மெய்யில் - சரீரத்தில், நரம்புகளானவை; பால்யத்தில் மறைந்து கிடந்தவை, சரீரம் பசையற வுலர்ந்தபடியாலே உறிபோலே மேலே (௪) புடைக்குமாய்த்து. அதுக்குறுப்பாக,(ஊன்தளர்ந்து)மாம்ஸம் க்ஷயித்து. [உம் (உள்ளமெள்கி) அத்தாலே ஹ்ருதயமீடுபட்டு. (நெறியையித்யாதி) போக்கை நினைக்குமே, தூரப்போகநினைக்கிறானாகையாலே வழியைப் பார்க்குமே, நெடுகப்பார்த்த ஆயாஸம்பொறாமை கண்சுழலும், பின்பு அடிபேர்ந்திடமாட்டாதே நின்று நடுங்குமாய்த்து.

(அறிதியாகில்நெஞ்சம்)ஜ்ஞாநப்ரஸரத்வாரமாகில்:அவன் [உறு பக்கலிலே அன்பையுடையையாய், சிலவற்றைச்சொல்லி மீளவேண்டாதபடி பாங்கான வளவிலே ஆயிரம் திருநாமங்களையும் சொல்லி. (வெறியித்யாதி) பரிமளத்தை வகுத்தாப்போலே யிருக்கிற வண்டுகள், முக்தர் ஸாமகாநம் பண்ணுமாப்போலே அநுபவத்துக்குப் போக்குவிட்டுப் பாடுகிறனவாய்த்து. ... ... ... ௩.

---

மூன்றாம்பாட்டு.—(உறிகளித்யாதி.) * விதிர் விதிர்த்துக் கண்சுழலுகைக்கு ஹேதுசதநமுகேந * மூப்பை வர்ணிக்கிறாரென்று ஸங்கதியை யுட்கொண்டு, பதவ்யாக்யாநம் செய்தருளுகிறார் (மெய்யிலித்யாதி.) "எழுந்து" என்ற பத வாஸனை (பால்யத்தி லித்யாதி.) புடைக்கும் - (௪) புறம்பும்.

"நெஞ்சம்"என்றது-அண்ணுமைவிளியாய்,அதாவது-ஸமீபத்தேயழைக்கை [கூறு யாய், ஸம்போதநமென்று கண்டுகொள்வது. பாங்கான வளவிலே யென்றது- வர்த்தனானால் திருநாமங்களை முடியச்சொல்ல மாட்டாதே சிலசொல்லி நடுவே மீளவேண்டாத பால்யத்திலே யென்றபடி. ... ... ... ௩.

---

(௪) புடைத்தல் - வீங்குதல்.

மூ.—பீளைசோரக்கண்ணிடுங்கிப் பித்தெழமூத்திருமித்,
தாள்கள்நோவத்தம்மில்முட்டித் தள்ளிநடவாமுன் ;
காளையாகிக் கன்றுமேய்த்துக் குன்றெடுத் தன்றுநின்றான்-
வாளைபாயும் தண்டடம் சூழ் வதரி வணங்குதுமே. ... ௪.

ப-ரை.—கண் - கண்கள், இடுங்கி - நெருங்கி, பீளை - கண்ணழுக்கு, சோர-புறப்படும்படியாகவும், பித்து - பித்தம், எழ - மேலிடும்படியாகவும், மூத்து-கிழத்தனத்தையடைந்து, இருமி - ஆயாஸத்தாலே இருமி, தாள்கள் - கால்கள், தம்மில் முட்டி - தம்மில்ஒன்றோடொன்று தாக்கி, நோவ - நோம்படியாக, தள்ளி-தடுமாறி, நடவாமுன்-நடப்பதற்குமுன்னமே ; காளையாகி-பாலனாய்க் [யி கொண்டு, கன்றுமேய்த்து - கன்றுகளை மேய்த்து, அன்று - இந்த்ரன் கல்வர்ஷத்தை வர்ஷித்த அக்காலத்திலே, குன்று - கோவர்த்தநமலையை, எடுத்து-குடையாகஎடுத்து, நின்றான் - ஏழுநாள் ஒருபடிப்பட தரித்து நின்றவன் எழுந்தருளியிருக்குமிடமாய், வாளை - மத்ஸ்யங்கள், பாயும் - குதித்துப்பாயாநின்றுள்ள, தண் - குளிர்ந்த, தடம்-தடாகங்கள், சூழ் - சூழ்ந்திருப்பதான, வதரி-[யடு ஸ்ரீபதரியை, வணங்குதும் - வணங்குவோமென்கிறார். ... ... ௪.

வ்யா.—நாலாம்பாட்டு.—(பீளைசோரக் கண்ணிடுங்கி) கண்ணானது ஸங்கோசத்தை (க)பஜித்து, பசையற்றபடியாலே பீளைபாய்ந்து. (பித்தெழ) கழிய, மூத்து. (உ) ஸ்காலித்யம் பிறக்கும்படி மூத்து. (தாள்களித்யாதி) ஒரு சஸ்த்ராதிகளாலாதல், மற்றொன்றிலேயிடறியாதலன்றிக்கே, காலோடு காலறைஞ்சுநோவ. தாள்கள் - தம்மில் முட்டி - நோவவென்றபடி. பின்னையும் சாபலத்தாலே போகத்துடங்குமே ; தடுமாறி நடப்பதுக்குமுன்னே.

(காளையாகி) தன்னையாச்ரயித்தார்க்குத் தன்னோடு ஸாம்யாபத்தியைக்கொடுக்குமவன். நித்யயுவாவாகலாம். (கன்றுமேய்த்து) ரக்ஷ்யவர்க்கத்தில் வரையாதே ரக்ஷிக்குமவன். (குன்றெடுத்தன்றுநின்றான்) அரியனசெய்து நோக்குமவனாய்த்து. (வாளையித்யாதி) தனக்கென்னவொரு யோக்யதை யில்லாத பதார்த்தங்களும் களித்து வர்த்திக்கும் தேசமாய்த்து. ... ... ... ... ௪.

அ.—நாலாம்பாட்டு.—(பீளையித்யாதி·)போக்கிலேயொருப்பட்டுநெறியை[நடு நோக்கிநின்று நடுங்கா நின்றாலும் "ஆசைகாதருணையதே" என்கிறபடியே போகநினைத்த விஷயத்திலே ஆசாதிசயத்தாலே போமவனுடையபடியை வர்ணித்தருளுகிறாரென்று ஸங்கதியைத் திருவுள்ளம்பற்றி, "கண்ணிடுங்கி - பீளைசோர" என்றந்வயமுகேந தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கண்ணானதித்யாதி.) பித்த-பைத்யமாய், அதுஎழும்படியாக மூத்தென்று சப்தார்த்தமாய், பலிதார்த்தம் [கூறு (கழியமூத்தென்று.) விவரணம் (ஸ்காலித்யமித்யாதி.) "தம்மில்" என்றதுக்கு வ்யாவர்த்ய மருளிச்செய்கிறார் (ஒருவித்யாதி.) மேலுக்கவதாரிகை (பின்னையுமித்யாதி.) சப்தார்த்தம் (தடுமாறி யித்யாதி.)

மூப்பை நிந்தித்துக்கொண்டு வருகிற ப்ரகரணத்திலே, "காளையாகி" என்று - அவனுடைய யௌவநத்தை யருளிச்செய்தவருக்கு உட்கருத்தை யருளி [சுய ச்செய்கிறார் (தன்னையித்யாதி.) "கன்று" என்றதுக்கு தாத்பர்யம் (ரக்ஷ்யேத்யாதி.) வரையாதே - தரதமபாவம் பாராதே. யோக்யதையில்லாத வென்றது-பகவத்ஸமாச்ரயணத்துக்கு ஜ்ஞாநாதி யோக்யதை யில்லாத வென்றபடி. ... ௪.

(க)பஜித்தல் - அடைதல். (உ) ஸ்காலித்யம் - தடுமாறுகை : வ்யத்யஸிக்கை.

மூ—பண்டுகாமரான வாறும், பாவையர் வாயமுதம்—
உண்டவாறும், வாழ்ந்தவாறு மொக்கவுரைத்திருமி;
தண்டுகாலாவூன்றியூன்றித் தள்ளிநடவாமுன்,
வண்டுபாடும் தண்டுழாயான் வதரி வணங்குதுமே.

ப.உரை.—இவன்நடையைப்பார்த்து "நீ யிங்ஙன் தடுமாறி நடப்பானேன்?", என்று இவனைச் சிலர் கேட்க, பண்டு - தன்னுடைய இளமைப்பருவத்தில், காமரான ஆறும் - ஸ்த்ரீகள் தன்னை விரும்பி யிருந்த படியையும், பாவையர் - அந்த ஸ்த்ரீகளுடைய, வாய் - வாயிலுள்ள, அமுதம்-அம்ர்தத்தை, உண்டஆறும்- தான் புஜித்தபடியையும், வாழ்ந்த ஆறும் - சிற்றின்பத்தை விரும்பி இப்படி [ய கெட்டபடியையும், ஒக்க - ஒருபடிப்பட, உரைத்து - அவர்களோடே சொல்லி, அத்தாலுண்டான ஆயாஸத்தாலே, இருமி - நடுநடுவே இருமி, தண்டு - தடியை, காலா - காலாகக்கொண்டு, கையில் பலமில்லாமையாலே, ஊன்றிஊன்றி - ஓரிடத்திலேயே பலதரமும் ஊன்றி, தள்ளி - இளைத்து, நடவாமுன் - நடப்பதற்குமுன்னே; வண்டு-வண்டுகள், பாடும்-பாடுகிற, தண் - குளிர்ந்த, துழா[யநு யான் - திருத்துழாய்மாலையை யுடைய ஸர்வேச்வரனெழுந்தருளியிருக்கிற, வதரி- ஸ்ரீபதரியை, வணங்குதும் - வணங்குவோம் என்கிறார். ... ... ரு.

வ்யா.—அஞ்சாம்பாட்டு.—(பண்டுகாமரித்யாதி) தனக்கென்ன போக்யதை யுள்ளநாள் நிஷித்தங்களையே முன்னடிதோற்றதேயநுஷ்டித்துப்போரும்; பின்பு பகவத்ஸமாச்ரயணம் பண்ணுமாகிலும் [உம "வணக்கொடு மாள்வது வலம்" என்கிறபடியே-நன்மைக்குடலாய்த் தலைக்கட்டுமிறே; அதுவும் செய்யாதே, சேஷித்தநாள் வ்ர்த்தகீர்த்தநத்தைப்பண்ணிச் செத்துப்போமாய்த்து. (பண்டித்யாதி) முன்பு தான் ஸ்த்ரீகளுக்கு ஸ்பர்ஹாவிஷயமாய்ப் போந்த படியையும்‡, அவர்களுடைய வாகம்ர்தத்தை புஜித்தபடியையும். அன்றிக்கே, அவர்கள்தாங்கள் ஆதரித்துமேல்விழ தானிருந்தபடியாகவுமாம். (வாழ்ந்தவாறும்) "இன்னம் கெடுப்பாயோ" என்கிறபடியே - இப்போது கேடாகவிறே தாம் நினைத்திருக்கிறது.

அ.—அஞ்சாம்பாட்டு.—(பண்டுகாமரித்யாதி.)தாள்கள்தம்மில்முட்டிநோவத் தள்ளிநடக்குமவனைப்பார்த்து, "நீ இங்ஙனே இளைத்துநடக்கப்புகாநின்றாய்"என்று சிலர் வினவ; அவர்களைக்குறித்து இவன்சொல்லுமத்தையும் நடக்கும் ப்ரகாரத்தையு மருளிச்செய்கிறாரென்று ஸங்கதியையுட்கொண்டு, "அவன் சொல்லும் போது காலம் குறுகிற்று, ஹிதம்சொல்லுவாருண்டோ" என்னவேண்டியிருக்க, தாவ்ர்த்த கீர்த்தநம் பண்ணுவதே! என்று ஈடுபாட்டிலே தாத்பர்யமாகவருளிச் செய்கிறார் (தனக்கென்ன வித்யாதி வாக்யத்ரயத்தாலே.) "பாவையருடைய [கரு வாயமுத முண்டவாறும்" என்று கீழருளிச்செய்து, பாவையர்தாங்கள் தன் வாயமுதமுண்டவாறு மென்றர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (அன்றிக்கேயித்யாதி.) "வாழ்ந்த வாறும்" என்றது - விபரீதலக்ஷணையாய், கெட்டவாறுமென்றுக்தி யருளிச்செய்கிறார் (இன்னமித்யாதி.)

‡ "ஸ்த்ரீகள்விஷயமாய் ஸ்பர்ஸ்ஹமண்ணிப் போந்தபடியையும்" என்று சில ஸ்ரீகோசங்கள்.

மூ.—எய்த்தசொல்லோ டீளையேங்கி யிருமியிளைத்துடலம்,
பித்தர்போலச் சித்தம் வேறாய்ப் பேசி யயராமுன்;
அத்த னெந்தை யாதிமூர்த்தி யாழ்கடலைக்கடைந்த —
மைத்தசோதி யெம்பெருமான் வதரி வணங்குதுமே. ... ௬.

ப - ரை.—எய்த்த - பலஹீநமான, சொல்லோடு - பேச்சையுடையனாய், அத்தாலுண்டாகும், ஈளை - கோழையாலே, ஏங்கி - இளைத்து, பின்பு, இருமி - இருமலாலேவருந்தி, அதினாலே, உடலம் - சரீரம், இளைத்து - மிகவும்மெலிந்து, பித்தர் போல - பைத்தியம்பிடித்தவர்களைப்போலே, சித்தம்வேறாய்ப்பேசி-நினைவொன்றும் பேச்சொன்றுமாய், அயராமுன்-தளருவதற்குமுன்பே; அத்தன் - ஸ்வாமியாய், எந்தை - எனக்குப்பிதாவாய், ஆதிமூர்த்தி - ஜகத்காரணபூதனாய், ஆழ் - அகாதமான, கடலை - ஸமுத்ரத்தை, கடைந்த- மந்தரபர்வதம் மத்தாகவும் வாஸுகியென்னும்பாம்பு கடைகயிறாகவும்கொண்டு கடைந்தவனாய், மைத்த - கறுத்த, சோதி- தேஜஸ்ஸையுடையனாய், எம்பெருமான் - என்னை அடிமைகொண்ட ஸர்வேச்வரனுடைய, வதரி - ஸ்ரீபதரியை, வணங்குதும் - ஆச்ரயிப்போமென்கிறார். ... (௬)

(ஒக்கவுரைத்திருமி) இவற்றைச்சொல்லத்துடங்குமே, அநந்தரம் இருமல் வருமே, பின்னையும் சாபலத்தாலே விட்டகுறையிலே சொல்லத்துடங்குமே, ஆக இருமுவது சொல்லுவதாகாநிற்கும். (தண்டுகாலா) காலால் கொள்ளும் காரியத்தை ஒரு தண்டத்தாலேயாய்த்துக் கொள்வது. (ஊன்றியூன்றி) பிள்ளையழகியமணவாளவரையர் இதுக்கு பட்டரருளிச்செய்தாராகச் சொன்னபடி — "ஒருக்கால் சரீரம் ஸ்திதிக்க வேண்டுமென ஊன்றமாட்டானே, தன் கையில் மிடுக்கில்லாமையாலே, பலகாலித்தை யெடுத்தெடுத்துஇடாநிற்கும்" என்று. (தள்ளியித்யாதி) தடுமாறி நடப்பதுக்கு முன்னே.

(வண்டித்யாதி) "அன்று, இன்று" என்னவேண்டாதே, என்றுமொக்க அநுபவமே யாத்ரையாகச் செல்லும் தேசம். சிலநாள் அநுபவித்துப் பின்பிருந்து வ்ர்த்தகீர்த்தநம் பண்ணவேண்டா. ... ௫.

ஆறாம்பாட்டு.—(எய்த்தசொல்லோடு) துடங்கி யெய்க்கையன்றிக்கே முந்துறவே யெய்த்தாய்த்துச் சொல்லுவது; அதுதான்

"உரைத்திருமி" என்னாதே, "ஒக்க" என்கையாலே பலித்தவர்த்தமருளிச் செய்கிறார் (இவற்றையித்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே.)

தாள்கள் தம்மில்முட்டி நொந்தபடியாலே தண்டைக் காலாக்கிக்கொண்டு நடக்கத்துடங்குமென்றருளிச்செய்கிறார் (காலாலித்யாதி.) "ஊன்றியூன்றித்தள்ளிநடக்கும்" என்று பூர்வர்கள் நிர்வாஹமாய், ஒருகால்தானூன்ற சக்தியில்லாமையால் அங்கேதான் பலகாலூன்றுமென்று பட்டர் நிர்வாஹத்தை யருளிச்செய்கிறார் (ஊன்றி யித்யாதி வாக்யத்வயத்தாலே.) ... ... ௫.

ஆறாம்பாட்டு.—(எய்த்தவித்யாதி.) இருமியிருமியுரைக்கத்துடங்கினவளவிலே கண்டு வினவினவன் விட்டுநடக்குமே, இவன் துடங்கினவார்த்தையை விடமாட்டாதே தன்னில் தான் சொல்லுமே, அத்தை வர்ணித்தருளுகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

இருமியிருமியுரைத்தத்தால் இளைப்பு வருகையாலேயெய்த்த சொல் [illegible] விவக்ஷித்தருளிச்செய்கிறார் (துடங்கியெய்க்கையின்றியாதி) எய்த்த [illegible].

மூ.—பப்ப! அப்பர் மூத்தவாறு! பாழ்ப்பது, சித்திரை -
யொப்ப வைக்கள் போதவுந்த வுன்தமர் காண்மினென்று,
செப்புநேர் மென் கொங்கை நல்லார் தாம் சிரியாதமுன்னம்;
வைப்பும் நங்கள் வாழ்வுமானான் வதரி வணங்குதுமே. ... எ.

---

ப - ரை.—சித்திரைஒப்ப - சீயின்திரட்சிபோலே, ஐக்கள் - கோழையானது, போதஉந்த - மிகவும்தள்ளுவதைக்கண்டு, செப்புநேர் - செப்புப்போன்ற, மெல் - மிருதுவான, கொங்கை - ஸ்தநங்களையுடையராய், நல்லார் - இவனுக்குஹிதம் செய்யுமவர்களென்றுநினைத்திருந்தஸ்த்ரீகள், "பப்ப! - பப்ப!, அப்பர்! - கிழவரே!, மூத்தஆறு - நீர் கிழத்தனத்தைஅடைந்தபடி, பாழ்ப்பது-சாலப்பொல்லாது" [ய என்றுசொல்லி, தாம் - வயஸ்ஸம்காசம்உள்ளநாளில் "என்னுடையவன்" என்று ஆதரித்துப்போந்த தாங்களே, இப்போது அருகிருந்த பெண்களைப்பார்த்து, "உன்தமர் - உன்னோடுஉறவுள்ளவர், காண்மின் - இவர்படியைப்பாருங்கள்" என்று - என்றுசொல்லி, சிரியாதமுன்னம் - ஹாஸ்யம்பண்ணுவதற்குமுன்னே; நங்கள் - நம்போல்வாரான ஆச்ரிதரெல்லார்க்கும், வைப்பும்- நிக்ஷேபம்போ [யரு லே ஸாத்யமும், வாழ்வும்ஆனான் - ஸாதநமுமானவனுடைய, வதரி-ஸ்ரீபதரியை, வணங்குதும் - ஆச்ரயிப்போமென்கிறார். ... ... ... (எ)

---

அநந்தரம் ஈளையோடே கொடுபோய்ச் சேர்க்கும். (ஏங்கி) அதி னநந்தரமாக இளைப்புவந்து கைக்கொள்ளுமாய்த்து. (இருமியிளைத்து உடலம்) அதுதான் இருமலுக்கு பூர்வக்ஷணவர்த்தியாயிருக்குமிறே. இருமி, அத்தாலே சரீரம் போரஇளைக்குமாய்த்து. (பித்தர்போலச் சித்தம்வேறாய்ப்பேசி) நினைவொன்றும் சொலவொன்று மாயிருக்கு மாய்த்து. பித்தேறினாரைப்போலே நெஞ்சால் நினைப்பதொன்றாய் வாயால்சொல்லுமதொன்றா யிருக்கு மாய்த்து¶. (சித்தம்வேறாய்ப் பேசி யயராமுன்) இப்படி பேசுகையுங்கூடவரிதாம்படி அயர் [உரு வோடே தலைக்கட்டும்; இப்படி மோஹிப்பதற்கு முன்பே.

(அத்தனித்யாதி) வகுத்த ஸ்வாமியானவன், எனக்கு ஹிதகாம னானவன், ஜகத்காரணபூதனான ஸர்வேச்வரன். (ஆழ்கடலைக் கடை ந்த) அரியன செய்தும் அபேக்ஷிதம் செய்துகொடுக்குமவன். (மை த்தசோதி) அபேக்ஷிதம்செய்யாவிடிலும் விடவொண்ணாதவடிவழகை யுடையவன். வெளுத்தல் சிவத்தல் செய்கையன்றிக்கே, கண்ணுக்குக் குளிர்ந்த தேஜஸ்ஸை யுடையவன். (எம்பெருமான்) அவ்வடிவழகைக் காட்டியென்னையடிமைகொண்டவனுடையவதரியையாச்ரயிப்போம். கூ.

---

ஈளை-கோழை, ஏங்குதல்-பொருமுதலாய், அத்தால்வந்தஇளைப்பைச் சொல்லுகிற தென்கிறார் (அதினித்யாதி.) இப்படிப்பட்ட இளைப்பும் இருமலுக்கு ஹேது [கரு வாய்விடுமென்கிறார் (அதுதானித்யாதி.) போர இளைத்தவாறே நினைத்தபடி சொல்ல வும் வல்லனல்லனென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (நினைவித்யாதி.) சப்தார்த் தம் (பித்தேறினாரை யித்யாதி.) இப்படி பேசுகையும் கூடவென்றது - அபுத்ய சொல்லுமதவும்கூட வென்றபடி.

* மூர்த்திசப்தம் - ஸ்வரூபவாசகமாய், (ஸர்வேச்வரன்) என்கிறது. ... ௬.

---

¶ "பேசுவதொன்றாயிருக்குமாய்த்து" என்று ஸ்ரீகோசங்கள்.

வ்யா.—ஏழாம்பாட்டு.—(பப்ப!) க்ஷுபோக்தியில் இவருடைய அநுகாரமிருக்கிறபடி.வவ்வவென்றபடி. (அப்பர்மூத்தவாறு)எல்லார்க்கும்மூப்புவருகைதவிராதிறே;இத்தனை(க)கழியமூக்கலாமாகாதே! என்பர்களாய்த்து.மூப்பை ப்ரக்ருதியாக்கிஅதிலேமூத்தபடியாகவாய்த்துச் சொல்லுவது. (பாழ்ப்பது)இது(க)சாலப்பொல்லாது. (க)அறப்பொல்லாதாயிருந்ததீ!யிவ்வசித்ஸம்ஸர்க்கம்என்றுவெறுப்புக்குடலாய்த்து.(சீயித்யாதி)பூயபிண்டம்போலேச்லேஷ்மாவானது(உ)போரத்தள்ள.சீத்திரளையொப்பனுக்கள்(உ)போதவுந்த,பப்ப! அப்பர்மூத்தவாறு!பாழ்ப்பது!என்பர்கள். (உன்தமர்காண்மினென்று) இவன்பக்கல் யௌவநமும் கையில் வீசமுமுள்ளவன்று, எல்லாருமொக்க "என்தமர், என்தமர்" என்பர்கள்; கையில் வீசமும்போய், இவனோட்டை ஸம்பந்தம் நமக்குஅவத்யாவஹம் என்று தோற்றும்படி யௌவநமும் போனவாறே, "உன்னுடையவன்" என்றும், மற்றையவளும் "உன்னோடே யன்றோ அவனுக்குறவு" என்றும் தங்களோடே [யடு (௩)தொற்றறச்சொல்லிப் பிணங்காநிற்பர்கள்.(செப்பித்யாதி)இவனைக்கொண்டு போதுபோக்குகைக்காக முலைக்கச்சை நெகிழ்த்தி முலையினுடைய ஸந்நிவேசத்தைக் காட்டுவர்கள்; இவன் கண்ணைவிடுத்து எழப்பார்க்கும்; அத்தைக்கண்டு, "பிள்ளாய்! இவன் இவற்றோடு என்ன வுறவுண்டாய்ப் பார்க்கிறான்" என்று சிரிப்பர்களாய்த்து. [உம செப்புநேர் மென் கொங்கைநல்லார் – அப்பரென்று சிரியாத முன்னமென்னுதல். பண்டு தன் ஸர்வஸ்வத்தை நேர்ந்திறே ஒரு ஸ்மிதம் பெறுவது; இப்போது இவரிருப்புக்கண்டு விட்டுச்சிரிப்பர்களாய்த்து.

(வைப்பும் நங்கள் வாழ்வுமானான்) பரிக்ரஹித்தவன்றே ஸாதநமுமாய்,பின்னை ப்ராப்யனுமானவன் வர்த்திக்கிற வதரிவணங்குதும். ஒருநாள்ஆதரித்துஒருநாள் சிரியாதவனாய்த்து;"அம்ருதம்ஸாதநம்ஸாத்யம்" "அம்ர்தம்ஸாதநம் ஸாத்யம்" என்னக்கடவதிறே. ... ... எ.

---

ஏழாம்பாட்டு.—(பப்பவித்யாதி.) இப்படியெய்த்துக்கிடந்தவன் ஆயுச்சேஷத்தாலே மெள்ளத்தெளிந்து (௪)கந்தவ்யஸ்தலத்திலேசெல்ல,அங்கே இவனுக்குஉத்தேச்யர் இவனை க்ஷேபிக்கும்படியைச் சொல்லுகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

இவருடையவென்றது - இப்பாட்டிலே ப்ரஸ்துதரான ஸ்த்ரீகளுடைய வென்றபடி. ப்ரக்ருதியாக்கி - ஸ்வபாவதர்மமாக்கி. போதவுந்த- போரத்தள்ள. வீசம்-மாகாணிப்பணம். தங்கள் பருவத்தைக்காட்டிச் சிரிக்கும் ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் (அத்தையித்யாதி.) பிள்ளாயென்றது - பெண்பிள்ளாய் யென்றபடி. இவன்மூப்பைக்கண்டு சிரிப்பார்களென்றருளிச்செய்கிறார் (செப்புநேரித்யாதி.) எ.

எட்டாம்பாட்டு.—(ஈசியித்யாதி.) செப்புநேர்மென் கொங்கைநல்லார் முலைக்கச்சைநெகிழ்த்துவது சிரிப்பதான வாறே, இவன் தன் ப்ராப்யம் கைபுகுந்தது என்று அங்கேயிருக்கத்துடங்குமே, அநந்தரம் அவர்கள்பண்ணும் பரிபவப்ரகாரங்களை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

---

(க) கழிய, சால, அற - மிகவும்.(உ) போர, போத-அதிகமாக. (௩) தொற்று-ஸம்பந்தம். (௪) கந்தவ்யஸ்தலம் - போகத்தக்க இடம்.

மூ.—ஈசி போமி னீங்கிரேன்மி னிருமி யிளைத்தீர், உள்ளம்-
கூசியிட்டீரென்று பேசும் குவளை யங்கண்ணியர்பால்,
நாசமானபாசம்விட்டு நன்னெறிநோக்கலுறில்,
வாசம்மல்கு தண்டுழாயான் வதரி வணங்குதுமே. ... ௮.

ப-ரை.—அவர்கள் இப்படிசொல்லச்செய்தேயும் இவர்போகாமையாலே, போமின் - போங்கோள்என்பர்கள்; இருக்கச்சொன்னார்களாக நினைத்து இவர் போகாதிருக்க, ஈசி - சீ!சீ!, ஈங்கு - இங்கு, இரேன்மின் - இராதேகொள்ளுங்கோள் என்ன; "என்தான்?, நான்போகவேண்டுகிறதென்?" என்ன; "இருமி - இருமலாலே, இளைத்தீர் - சரீரம் கட்டுக்குலைந்தீர், இவர்கள்முன்னே இப்படிபடுவதே! [௰ என்று, உள்ளம்கூசியிட்டீர் - ஹ்ருதயம்கூசினீர்," என்றுபேசும் - என்றுசொல்லுகிற, குவளை - குவளைமலர்போலே, அம் - அழகிய, கண்ணியர்பால் - கண்ணையுடையஸ்த்ரீகள்பக்கலுண்டான, நாசமான பாசம்-விநாசத்தைவிளைக்கும் ஸங்கத்தை, விட்டு - தவிர்ந்து, நல்நெறிநோக்கல்உறில் - நல்வழிபோகப்பார்க்கில்; வாசம்- பரிமளம், மல்கு - நிறைந்த, தண் - குளிர்ந்த, துழாயான் - திருத்துழா[௰௩ யையுடைய ஸர்வேச்வரன் நித்யவாஸம்பண்ணுகிற, வதரி - ஸ்ரீபதரியை, வணங்குதும்- வணங்குவோமென்கிறார். ... ... ... ... (௮)

வ்யா.—எட்டாம்பாட்டு.—(ஈசிபோமின்) நடவும்; சீச்சீஎன்றபடி. (போமின்) போகீர் என்பர்கள். என்றவாறே, இருக்கச் சொல்லிற்றாகக்கொண்டு இருக்குமிறே பழையவாஸனையாலே (ஈங்கிரேல்மின்) நீரிருக்கிறவிடந்தன்னை யறிந்திலீரோ, உமக்கு இங்குத்தையிருப்பில் ஓரந்வய மில்லைகாணும், போம் என்பர்கள். "என்தான்? எனக்குப்போகவேண்டுகிற ஹேதுவென்?" என்னுமே (இருமியிளைத்தீர், உள்ளம்கூசியிட்டீர்) என்பர்கள். இருமலாலே போரஇளைத்தீர், உம்மை யறிவீரே, "இவர்கள்முன்னே யிப்படி படுவோமே!" [௨௫ என்று எங்கள் ஸந்நிதியை யநுஸந்தித்து ஹ்ருதயம் கூசினீர் என்று சொல்லுகிற. (குவளை யங் கண்ணியர்பால்) இவனுடைய எளிவரவு காண்கைக்காக ஸாதரமாகப் பார்ப்பர்களாய்த்து. அருநஞ்சாகிலுமாகிறது, ஆரமுதாகிலு மாகிறது, இவர்கள்தான் பார்க்கப்பெற்றோமிறே! என்று இவனுடைய பாவபந்தந்நுக்குடலாயிருக்குமாய்த்து. (நாசமானபாசம்விட்டு) ஏதேனும்தசையிலு மிவனைவிடாதே விநாசத்தை பலிப்பிக்கும்படியான ஸங்கமாய்த்து. வேறுய விஷயத்தில் ஸங்கம் விநாசத்தை பலிப்பிக்குமிறே; அத்தைத் தவிர்ந்து, நல்வழிபோகப்பார்க்கில்; தன்னை ஆச்ரயித்தார்க்குக்கொடுத்து ஆதரிக்கைக்காக மாலையிட்டிருக்கிறவனதான வதரியை வணங்குதுமே. ௮.

மூன்றுமுன்னம் "ஈசி" என்னவொண்ணாமையாலே "போமின்" என்ன, போகாமையாலே "ஈசி" என்கிறார்களென்றுவ்வகுத்தருளிச்செய்கிறார் (நடவுமென்று.) பழைய வாஸனையாலேயென்றது - ப்ரணயரஸத்தாலூடிக்கொண்டு போகச்சொல்லுவது இருக்கைக்காகவேசொல்லுவர்களே, அந்தவாஸனையாலேயென்றபடி. "ஈங்கிரேன்மின்" என்றபின்பும் பாசம் வருகைக்குஹேதுத்வேந "குவளையங்கண்ணியர்" [௬௰ என்றதென்னுமிடம்தோற்ற வருளிச்செய்கிறார் (இவனுடையவித்யாதி.) பேச்சாலே ஆசைபடுத்திருக்கவும் கண்ணாலே வலைத்துவைத்தால்ஸங்கம்வரும்படியை உபபாதிக்கிறார் (அருநஞ்சாகிலுமித்யாதி.) ... ... ... ... ௮.

மூ.—புலன்கள்நையமெய்யில் மூத்துப் போந்திருந்துள்ளமெள்கி,
கலங்க வைக்கள்போதவுந்திக் கண்டபிதற்றுமுன்;
அலங்கலாயதண்டுழாய்கொண் டாயிரநாமம்சொல்லி,
வலங்கொள்தொண்டர் பாடியாடும் வதரி வணங்குதுமே....௯.

ப - ரை.—மெய்யில் - சரீரத்தில், புலன்கள் - இந்த்ரியங்களானவை, நைய-சிதிலமாம்படி, மூத்து - கிழத்தனமடைந்து, அவர்கள் "ஏங்கிரேன்மின்" என்றதுவேஹேதுவாக, இவன், போந்து - ஏகாந்தமானவிடந்தேடிப்போய், இருந்து-அங்கேயிருந்து, உள்ளம்எள்கி - நாம்பட்டதோ ! என்று நெஞ்சுகலங்கியும், கலங்க - வாத பித்த ச்லேஷ்மங்கள் வேறுபட, அத்தாலே, ஐக்கள் - கபமானது, [ம் போதஉந்தி - போரத்தள்ளியும், கண்ட - கண்டத்தையெல்லாம், பிதற்றுமுன்-வாயில்வந்தபடி சொல்லுவதற்குமுன்னே; வலம்கொள் - ப்ரதக்ஷிணம்துடக்கமான அநுகூலவ்ர்த்திகள்பண்ணுகிற, தொண்டர் - சேஷபூதரான ஸ்ரீவைஷ்ணவர்கள், தண் துழாய் - குளிர்ந்த திருத்துழாயால், ஆய - தொடுக்கப்பட்ட, அலங்கல் - மாலையை, கொண்டு - கையிலேந்திக்கொண்டு, ஆயிரம்நாமம்- அவனு [டு டையஆயிரம்திருநாமங்களையும், சொல்லி - அடைவுபடச்சொல்லி, பாடி - வாயாரப்பாடி, ஆடும் - ஆடுகிற, வதரி - ஸ்ரீபதரியிலெழுந்தருளியிருக்கும் ஸர்வேச்வரனை, வணங்குதும் - ஸேவிப்போமென்கிறார். ... ... (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு.—(புலனித்யாதி) சரீரத்தில் இந்த்ரியங்களானவை, ஸந்நிவேசமும் கிடக்கச்செய்தே தந்தாமுடைய [உம விஷயங்களை பரிக்ரஹிக்கவும்மாட்டாதே சிதிலமாம்படி மூத்து. (போந்திருந்து) அல்லாதாரோபாதி காண்பன காணவும் கேட்பனகேட்கவும் பெறுமையாலே, ஆள்நடையாடாத விடந்தேடிப் போந்திருந்து. (உள்ளமெள்கி) "நாம்பட்டதோ!" என்று ஹ்ருதயமானது ஈடுபட்டு. (கலங்கவித்யாதி) தோஷத்ரயமும் தலையெடுத்தவாறே ச்லே [உரு ஷ்மாவானது போரத்தள்ளுமாய்த்து. (கண்ட பிதற்றுமுன்) பின்னை ப்ரதிபந்நங்களைப் பிதற்றுவதுக்குமுன்னே.

(அலங்கலாய) அங்குத்தைக்குச் சாத்தியருளுகைக்கீடான மாலையான திருத்துழாயைக்கொண்டு. (ஆயிரநாமம்சொல்லி) கண்ட பிதற்றுமே அவ்வழியே இந்த்ரியத்துக்கு அடைத்த திருநாமம் [நம சொல்லி; "நா வாயிலுண்டே" இத்யாதிப்படியே.

ஒன்பதாம்பாட்டு.—(புலனித்யாதி.) "ஏங்கிரேன்மின்" என்றசொன்னதே பலித்து விடுகையாலே அவஸாதம் விஞ்சி, விஜநப்ரதேசத்திலே பிதற்றும்படியை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

குவளையங்கண்ணியர் "ஏங்கிரேன்மின்" என்றபின்பு, ஸ்வஜநத்தோடு பரஜநத்தோடு பொருந்தாதே தனியேயிடந்தேடிப்பிதற்றுகை ப்ராப்தமாகையாலே (ஆள் நடையாடாதவிடந்தேடியென்றது.) தோஷத்ரயம் - வாத பித்த ச்லேஷ்ம விகாரங்கள். "கண்ட" என்றது - கண்டத்தையென்றாய், (ப்ரதிபந்நங்களையென்றது.)

அவ்வழியேயென்றது - ப்ரதிபந்நங்களைச்சொன்ன நாவாலேயென்றபடி. இந்த்ரியத்துக்கடைத்தது திருநாமம் என்னுமதுக்குஸம்வாதம்(நாவாயிலித்யாதி.)[கம

ரு.—வண்டுதண்டேனுண்டுவாழும்வதரிநெடுமாலை,
கண்டல் வேலி மங்கைவேந்தன்கலியனொலிமாலை-
கொண்டு தொண்டர் பாடியாடக்கூடிடில், நீள்விசும்பி -
லண்டமல்லால் மற்றவர்க்கோராட்சியறியோமே. ... ௰.

ப - வுரை.—வண்டு - வண்டுகள், தண் - குளிர்ந்த, தேன் - தேனை, உண்டு- பானம்பண்ணி, வாழும் - களித்துவர்த்திக்கிற, வதரி - ஸ்ரீபதரியிலெழுந்தருளி யிருக்கும், நெடுமாலை - ஸர்வாதிகன்விஷயமாக; கண்டல்- தாழைகளை, வேலி-வே லியாகவுடைய, மங்கை - திருமங்கைக்கு, வேந்தன் - ராஜாவான, கலியன் - ஆழ் வார் ரருளிச்செய்த, ஒலி - மாலைகொண்டு - சப்தஸந்தர்ப்பங்களையுடைய [௰ யிப்பத்துப்பாட்டையுங்கொண்டு, தொண்டர் - சேஷபூதரானவர்கள், பாடி-அவன் குணங்களைவாயார அநுஸந்தித்து, ஆடக் கூடிடில் - ப்ரீதிக்குப்போக்குவீடாகஆட ப்பெறில், நீள்விசும்பில் - பரமபதத்தில், அல்லால் - ஒழிய, மற்று - வேறு, ஓர்- ஒரு, அண்டம் - லோகத்தில், அவர்க்கு - அவர்களுக்கு, ஆட்சிஅறியோம் - ஆளு கை யில்லை யென்கிறார். ... ... ... ... ... (௰)

(வலங்கொளித்யாதி) அநுகூலவ்ருத்திகளைப்பண்ணாநின்றுள்ள ஸ்ரீவை ஷ்ணவர்கள்,சாத்துகைக்கிடானமாலைகளையுமேந்தி, திருநாமங்களையும் சொல்லி, பாடுவதாடுவ தாகாநிற்பார்கள் ; அத்திரளிலே புக்கு அவர் களிலே யொருவரா யாச்ரயிப்போம். ... ... ௯.

பத்தாம்பாட்டு.—( வண்டு தண்டே னித்யாதி ) ஸர்வபதா [உ௰ ர்த்தங்களு முத்தேச்ய லாபத்தாலே களித்து வர்த்திக்கும் தேசமாய் த்து; இப்படியிருக்கிற ஸ்ரீபதரியிலே வந்திருக்கிற ஸர்வாதிகனைக் கவிபாடிற்று. (கண்டல்வேலி) கண்டலென்று-தாழை. கடல் அணித் தாகையாலே தாழைக ளுண்டா யிருக்குமிறே. பூத்த தாழைகளை வேலியாகவுடைத்தான திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வாரருளி ச்செய்த மாலை. (கொண்டு தொண்டர் பாடியாடக் கூடிடில்) இவற் றைக்கொண்டு, "வழுவிலாவடிமை செய்யவேண்டும்" என்றிருக்கிற வர்கள் பாடுவ தாடுவதாகக் கூடிடில். நீள் விசும்பு என்கிறது - உபரி தந லோகங்களினுடைய ஸமுதாயத்தை; அதில், (அண்டமல்லால்) பரமபதமல்லது, மற்றவர்க்காட்சியறியோ மென்னுதல்; அன் [ரு௰ றிக்கே, நீள்விசும்பென்கிறது - பரமபதமாய், அதிலல்லால் மற்றோ ரண்டம் அவர்க்குஆட்சியாக அறியோமென்னுதல்.

மெய்யில் - புலன்கள்ளைய - மூத்தித்யாதி, வலங்கொள் தொண்டர் - அலங்க லாயதண்டுழாய்கொண் டாயிர நாமம் சொல்லி - பாடியாடும் வதரி வணங்குதும் என்றுஅந்வயம். ... ... ... ... ... ... ௯.

பத்தாம்பாட்டு.—(வண்டுதண்டேனித்யாதி.)

வண்டு, வாளை, தொண்டர்களைக் கீழேயருளிச்செய்கையாலே, இதிலே வண்டைச் சொன்னது உபலக்ஷணமென்றருளிச்செய்கிறார் ( ஸர்வபதார்த்தங் களுமித்யாதி.)

ப்ரக்ருதி ப்ராக்ருதங்களில் இவர் அருளிச்செய்த தோஷம் ப்ரத்யக்ஷித்து அநுபவியாநின்றோம்; அவ்வோபாதி பகவத்விஷயமாக இவரருளிச் செய்ததும் மெய்யா யிருக்குமிறே; ஆனபின்பு, இவர் விடச்சொன்னவற்றை விட்டு இவர் பற்றச்சொன்னவற்றைப் பற்று[று கையிறே சேதநராயிருப்பார்க்குச் செய்யவடுப்பது. ... ... ய.

அடிவரவு.—முற்ற மூதுகு உறி பீளை பண்டு எய்த்த
பப்ப ஈசி புலம் வண்டு ஏனம்.

திருமங்கையாழ்வார்திருவடிகளே சரணம்.
பெரியவாச்சான்பிள்ளைதிருவடிகளே சரணம். [ய

இத்தை அப்யஸித்தமாத்ரத்திலே பரமபதமுண்டாகக் கூடுமோவென்ன; இது அர்த்தவாதமன்றோ வென்ன வருளிச்செய்கிறார் (ப்ரக்ருதீத்யாதி) ... ய.
ஜீயர்திருவடிகளே சரணம்.

## முதற்பத்து-நாலாந்திருமொழி-ஏனம். ப்ரவேசம்.

வ்யா.—ஸ்ரீபதரியென்றும் பதரிகாச்ரமமென்றும் இரண்டு [யரு திருப்பதியாய், அதில் இங்குத்தை யிருப்பாகிறது-ப்ரஜையினுடைய ரக்ஷணத்துக்குறுப்பாகத் தாய் குடிநீர் குடிக்குமோபாதி யிவை தன்னை வழிப்படுத்துகைக்குறுப்பாகத் தான் (க) தபஸ்ஸுபண்ணி ஹிதகாமனா யிருக்கிற விடமாய், சென்று ஆச்ரயிக்கும் நங்குறையே குறையாக ஆச்ரயணீயனானவன் தன்குறை யறுத்துக்கொண்டிருக்கிற விடமாயிருந்தது; ஆனபின்பு, நாமங்கே போய் ஆச்ரயிப்போமென்று திருவுள்ளத்தோடே கூட்டுகிறார்.

இங்கு திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறவிடமுண்டோ வென்னில்; கீழே "வதரிவணங்குதும்" என்றும் "அறிதியாகில் நெஞ்சம்" என்றும் சொல்லிக்கொடுபோந்து, இதிலும் "துணிவினி[உரு உனக்குச் சொல்லுவன் மனமே" என்று - முடியத் திருவுள்ளத்தைக் குறித்துச் சொல்லிற்றாயிறே யிருக்கிறது. கீழ் தாம் பெற்றதாகச் சொல்லி அர்த்தாநுஸந்தாநம் பண்ணிப்போந்த மந்த்ரப்ரதனான நாராயணன் வந்திருக்கிற தேசமாயிருக்குமிறே. ... ... க

அ.—ஏனமுனாகிப்ரவேசம்.—கீழ்த்திருமொழியிலே-மந்த்ரப்ரதனான நா[கூய ராயணன் வர்த்திக்கிறதேசத்தை யாச்ரயிப்போமென்று திருவுள்ளத்துக்குச் சொல்ல, நமக்கு ஸச்சிஷ்ய லக்ஷணங்களறிந்தன்றோ ஆச்ரயிக்க வடுப்பது என்றிருக்க; அக்குறைதீர்ந்தானா யெழுந்தருளி யிருக்கும் தேசமான பதரிகாச்ரமத்தை யாச்ரயிப்போமென்றருளிச்செய்கிறாரென்று ஸங்கதிதன்னை யருளிச்செய்கிறார் (ஸ்ரீபதரியித்யாதி.) குடிநீர்-கஷாயம். இத்தால்-"சிஷ்யனாய்நின்றது [கூரு சிஷ்யனிருக்குமிருப்பு நாட்டாரறியாமையாலே அத்தையறிவிக்கைக்காக" என்றபடியே சேதநரை வழிப்படுத்துமென்றதாய்த்து. கீழ் மூன்று திருமொழியில் ப்ரமேயத்தையு மநுவதித்து ஸங்கதியை ஸ்புரிப்பிக்கிறார் (கீழித்யாதி.) (இருக்குமிறே) என்றவாக்கரம், இங்கு நான் வர்த்திக்கிறதேசத்தைச் சொல்லுகிறதென்றபடியே. ... ... ... ... ... ... க.

(க) தபஸ்ஸுபண்ணுகை - நரநாராயணனாய்த் திருமந்த்ரோபதேசம்பண்ணுகை.

**மூ.—ஏனமுனாகி யிருநிலமிடந்தன்றிணையடியிமையவர் வணங்க,**
**தானவனாகம் தரணியிற்புரளத் தடஞ்சிலை குனித்த வென்தலைவன்;**
**தேனமர்சோலைக்கற்பகம் பயந்த தெய்வநன்னறுமலர் கொணர்ந்து-**
**வானவர்வணங்குங்கங்கையின்கரைமேல்¶வதரியாச்சிராமத்துள்ளானே.**

---

ப-ரை.—அன்று - பூமியை ப்ரளயங்கொண்டஅக்காலத்திலே, இமையவர்-ப்ரஹ்மாதிகள், இணைஅடி - சேர்த்திஅழகையுடைத்தான திருவடிகளை, வணங்க - ஆச்ரயிக்கும்படியாக, முன் - வராஹகல்பத்தின்ஆதியிலே, ஏனமாகி - பன்றிருபங்கொண்டு, இருநிலம் - பரப்புடைத்தானபூமியை, இடந்து - ஒட்டுவிட்டுவித்தெடுத்து, தானவன் - தநுவம்சத்திற்பிறந்த ராவணனுடைய, ஆகம்-வராதிகளாலே [ய பூண்கட்டின சரீரமானது, தரணியில் - பூமியிலே, புரள - அம்புதைத்துப் புரளும்படி, தடம் - பெரிய, சிலை - வில்லை, குனித்த - வளைத்தருளின, என்தலைவன் - என்ஸ்வாமியான நாராயணன்; தேன்அமர்-தேன்மிக்கு, சோலை-சோலைசெய்திருந்துள்ள, கற்பம் - கல்பகவர்க்ஷமானது, பயந்த - உண்டாக்கின, தெய்வம் - திவ்யமாய், நல் - விலக்ஷணமாய், நறு - பரிமளம்வீசுகிற, மலர் - புஷ்பங்களை, வா[யரு னவர் - தேவர்கள், கொணர்ந்து - கொண்டுவந்து, வணங்கும் - திருவடிகளில் ஸமர்ப்பித்து ஆச்ரயிக்கும்படியாக, கங்கையின்கரைமேல் - கங்காதீரத்திலுள்ள, வதரியாச்சிராமத்து - பதரிகாச்ரமத்திலே, உள்ளான் - எழுந்தருளியிருக்கிறான், நேஞ்சே! அங்கேசென்று ஆச்ரயிஎன்று தந்திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார். ... ... ... ... ... ... (க)

---

வ்யா.—முதற்பாட்டு.—(ஏனமுனாகி யித்யாதி) (முன் - ஏனமாகி) வராஹகல்பத்தினுடைய ஆதியிலே, அண்டபித்தியிலே புக்குச் சேர்ந்து பரப்புடைத்தான பூமியை; அத்தை யெடுக்கைக்கீடான செருக்கையுடைய மஹாவராஹமா யெடுத்துக்கொண்டு. (அன்றிணையடி யிமையவர் வணங்க) அப்போது அந்தஉளைமயிர்களிலே [உறு யொதுங்கிக்கிடந்த ப்ரஹ்மாதிகள், சேர்த்தியழகையுடைத்தான திருவடிகளை யாச்ரயிக்க. "సటకట స్టాసఙ్కటై:" "ஸடாகவிகடஸடாஸங்கடை:" என்னக்கடவதிறே.

---

முதற்பாட்டு.—(ஏனமுனாகி யித்யாதி.) நிலத்துக்கிருமை சொல்லுகையாலே பலித்தவர்த்தம் (அத்தை யித்யாதி.) [கூய

உளைமயிர் - பிடரிமயிர். "నమస్తస్మై వరాహాయ లీలయోద్ధరతే మహీమ్ | ఖురమధ్యగతో యస్య మేరుః ఖణఖణాయతే" "நமஸ்தஸ்மை வராஹாய லீலயோத்தரதே மஹீம் । குரமத்யகதோயஸ்யமேருஃகணகணாயதே" என்கிறபடியேவளர்ந்த திருமேனி யாகையாலே, உபரிதநலோக வர்த்திகள் உளைமயிரிலே யிருக்கை ப்ராப்தமென்று கருத்து. உளைமயிரிலே யிருக்கைக்கு ப்ரமாணம் (ஸடாகவியித்யாதி.) ஸடாகவிகளுக்கு, கடகல்பமாய் - வரண்யத்வேந ஆச்ரயமாயிருக்கிற, ஸடைகளிலே-பிடரிமயிர்களிலே, ஸங்கடை:-நெருங்கி யிருக்கிறவர்களாய் என்றர்த்தம் கண்டுகொள்வது. ப்ரமாணத்திரட்டிலே யானால், "ఉత్తిష్ఠతస్తస్య జలార్ద్రకుక్షేర్మహావరాహస్య మహీం ప్రగృహ్య । విధున్వతో వేదమయం శరీరం రోమాన్తరస్థా మునయస్స్తువన్తి" "உத்திஷ்டதஸ்தஸ்ய ஜலார்த்ரகுக்ஷேர்மஹாவராஹஸ்ய மஹீம் ப்ரக்ருஹ்ய । [சுய விதுந்வதோ வேதமயம் சரீரம் ரோமாந்தரஸ்தாமுநயஸ்துவந்தி" என்கிற வசநத்தை யெடுத்திருக்கிறது.

---

¶ "வதரியாச்சிரமம்" என்றால் இசைக்குச்சேரும்.

மூ.—கானிடையுருவைச்சுடுசரந்துரந்துகண்டு, முன்கொடுந்தொழிலுரவோன்-
ஊனுடை யகலத்தடுகணைகுளிப்ப வுயிர்கவர்ந்துகந்தவெம்மொருவன்;
தேனுடைக்கமலத்தயனொடு தேவர் சென்று சென்றிறைஞ்சிடப்; பெருகு-
வானிடைமுதுநீர்க் கங்கையின்கரைமேல் வதரியாச்சிராமத்துள்ளானே...உ.

ப - ரை.—கானிடை - காட்டில் மறைவது தோற்றுவதாய்த் திரிகிற, உருவை - மாயாம்ர்கமான மானை, கண்டு - பார்த்து, சுடுசரம் - பொறுக்கவொண்ணாதஅம்பை, துரந்து - அதின்மேலேவிட்டு; முன் - ஸுக்ரீவமஹாராஜர் சரணம்புகுந்தவன்று, கொடும்தொழில் - க்ரூரமானசெயலையும், உரவோன்-மிடுக்கையுமுடைய வாலியினது, ஊன்உடை - மாம்ஸம்நிறைந்த, அகலத்து- மார்விலே, அடுகணை - கொலைஅம்பானது, குளிப்ப - அழுந்தும்படிபண்ணி, உயிர் - அவன்ப்ராணனை, கவர்ந்து - அபஹரித்து, உகந்த - "மஹாராஜர் விரோதிபோகப்பெற்றோம்!" என்றுஉகந்த, எம்ஒருவன் - ஒப்பற்றபலமுடையனானஎன்ஸ்வாமி; தேன் - தேனை, உடை - உடைத்தான, கமலத்து - திருநாபீகமலத்திற்பிறந்த, அயனொடு-ப்ரஹ்மாவோடுகூட, தேவர்-தேவர்கள், சென்று சென்று-நான்நானென்றுஇழிந்து, இறைஞ்சிட - ஆச்ரயணத்துக்குறுப்பாக ஸ்நாநம்பண்ண, அத்தாலே, வானிடை - ஆகாசத்திலேயாய், முது - பழைதான, நீர் - ஜலம், பெருகு- மிக்குவருகிற, கங்கையின்கரைமேல் - கங்கைக்கரையிலே, வதரியாச்சிராமத்துள்ளான்—, நெஞ்சே! அங்கேபோய் ஆச்ரயிப்போம்என்கிறார்.

(தானவனித்யாதி) இப்போது, தானவனென்கிறது-ராவணனை. "தையலாள்மேல் காதல்செய்த தானவன் வாளரக்கன்" என்னக்கடவதிறே. தநுவினுடைய வம்சஜனென்று தாநவனென்கிறதாதல், ஆஸுரமான வ்யாபாரங்களை யுடையவனென்றுதல். ராவணனுடைய, வராஹிகளாலே பூண்கட்டி யிருக்கிற சரீரமானது, அம்பு தைச்சு பூமியிலே புரளும்படியாக. (தடஞ்சிலையித்யாதி) "மஹாதநு:" "மஹத்தநு:" என்கிறபடியே அளவுடைத்தான வில்லை வளைத்த. (என்தலைவன்) வீரரஸத்தில் ப்ரதாநனான என்நாயன்.

(தேனமரித்யாதி) ராவணனுடைய மிடுக்காலே கல்பகவ்ர்க்ஷத்தினுடைய பூவைப் பணிப்பூவிட்டுத் திரிவர்களாய்த்து தேவர்கள் முன்பு; அவன் தலை யறுப்புண்டவாறே, அத்தை ப்ராப்தவிஷயத்திலேயாக்கினார்களாய்த்து. தேன்மிக்குச் சோலைசெய்திருந்துள்ள கல்பகமானது உண்டாக்கின, திவ்யமாய் விலக்ஷணமாய் செவ்வியையுடைத்தான பூக்களைக்கொண்டு, தேவர்கள் ஆச்ரயிக்கும்படியாக, கங்காதீரத்திலே ஸ்ரீபதரிகாச்ரமத்திலே வந்து ஸந்நிஹிதனானான். க.

வ்யா.—இரண்டாம்பாட்டு.—(கானித்யாதி) தன்னிலமான காட்டிலே ஸஞ்சரிக்கிற, உருஉண்டு-மான்-மாயாம்ர்கம், அத்தைக்கண்டு.

"சிலைகுனித்த" என்கையாலே ஹிரண்யாக்ஷனைச் சொல்லவொண்ணாதென்றருளிச்செய்கிறார் (இப்போதித்யாதி.) தநுவம்சம் - ராவணனுக்கு மாத்ர்வம்சமாகையாலே, ஸமபிவ்யாஹார தாத்பர்யம் (ராவணனுடையவித்யாதி.)

"வணங்கும்படி - நிலமிடந்து" என்றந்வயம். ... ... ௬.

இரண்டாம்பாட்டு.—(கானிடையித்யாதி.) கோரமான ஸம்ஸாரப்ரளயத்தில் நின்றும் தம்மையெடுத்தபடியாலே, ப்ரஸ்துதமான வராஹாவதாராபதாநத்தில் பூமிப்பிராட்டிக் குபகரித்தவளவன்றிக்கே பெரியபிராட்டியார்க்காக ராவணவதம் பண்ணினமையையநுஸந்தித்தார் கீழ்ப்பாட்டில்; அதுக்கடியான மாயாம்ர்க நிரஸநாதிகளை யருளிச்செய்கிறா ரிப்பாட்டில் என்று ஸங்கதி கண்டுகொள்வது. "பன்றியாய்" என்று முதல்திருமொழியிலே ப்ரஸ்துதமானத்தை, "ஏனமுனாகி" என்று ஸ்மரித்தாரென்று திருவுள்ளம்.

மூ.—இலங்கையும் கடலு மடலரும்துப்பி னிருநிதிக்கிறைவனும்,அரக்கர்
குலங்களும்கெடமுன்கொடுந்தொழில்புரிந்தகொற்றவன்;கொழுஞ்சுடர்சுழன்ற-
விலங்கலினுரிஞ்சிமேல்நின்றவிசும்பில்வெண் துகில்கொடியெனவிரிந்து
வலந்தருமணிநீர்க்கங்கையின்கரைமேல்வதரியாச்சிராமத்துள்ளானே.௩.

ப - ரை.—இலங்கையும் - ஒருவராலுமழிக்கப்போகாத லங்கையும், கடலும்- அதுக்கும் கீழான ஸமுத்ரமும், அடல் அரும் - ஒருவராலும் வெல்ல வொண்ணாத, துப்பில் - பலத்தையுடையனாய், இருநிதிக்கு இறைவனும் - சங்கநிதி பத்ம நிதிகளையுடையனாயிருக்கிற ராவணனும், அரக்கர் குலங்களும் - ராக்ஷஸஜாதியும், கெட-நசிக்கும்படியாக, முன்-ராவணன் கைவிஞ்சினவன்று, கொடு-கொடிய, தொழில் - வ்யாபாரங்களை, புரிந்த - பண்ணின, கொற்றவன்-ராஜாவான ஸர்வேச் வரன்; கொழு - விளங்காநின்றுள்ள, சுடர் - ஸூர்யன், சுழன்ற - சுழலவருகிற, விலங்கலில் - மேருபர்வதத்திலே, உரிஞ்சி - தாக்கி, மேல்நின்ற - அதுக்குமேலே யிருக்கிற, விசும்பில்-ஆகாசத்திலே, வெள்-வெளுத்த நிறத்தையுடைத்தாய், கொடித்துகில் என-த்வஜத்தில்கட்டப்பட்ட துணிபோலே, விரிந்து- பரந்து, வலம் தரும்-வேகத்தாலே பலத்தையுடைத்தாய், மணி-தெளிந்திருக்கிற, நீர்-ஜலம் நிறைந்த, கங்கையின் கரைமேல் - கங்காதீரத்திலுள்ள, வதரியாச்சிராமத்து- ஸ்ரீபதரிகாச்ரமத்திலே, உள்ளான்- நித்யவாஸம் பண்ணுகிறான், நெஞ்சே! அங்கே சென்று கிட்டப்பாராய் என்கிறார். ... ... ... ... ... ... (௩)

(சுடுசரம்துரந்து) ஒருவர்க்கும் தோற்றாதபடி மறைவது தோற்றுவதாய்த் திரிகிற அத்தைக்கண்டு, பொறுக்கவொண்ணாதபடியான அம்பைவிட்டு; முன்பு. († கொடுந்தொழிலித்யாதி) க்ரூரமான செயலையுடையனான வாலியுடைய தசைந்து அகன்றிருந்துள்ள மார்விலே (க) கோலையம்பானது அழுந்தும்படிபண்ணி, அவ்வழியாலே அவனுடைய ப்ராணனை யபஹரித்து, "மஹாராஜர்விரோதி போகப்பெற்றோம்!" என்று உகந்த அத்விதியமான பலத்தை யுடையவன். (தேனித்யாதி) திருநாபீகமலத்தை உத்பத்திஸ்தாநமாக வுடைய ப்ரஹ்மாவோடே தேவர்களானவர்கள் அஹமஹமிகயா இழிந்து, ஆச்ரயணத்துக் குறுப்பாக ஸ்நாநம்பண்ணப்புக்கவாறே, ஒன்றால் குறைதல் நிறைதல் செய்யாதே ஏகரூபமாயிருக்கக்கடவ ஜலம் பெருகுமாய்த்து; திருவடிகள் ஸஹ்யமாகையாலே. (வானிடைமுதுநீர்) ஆகாசத்திலேயாய்ப் பழைதான நீரென்றபடி. ... உ.

வ்யா.—மூன்றாம்பாட்டு.—(இலங்கையுமித்யாதி) ஒருவராலழிக்கவொண்ணாதபடியான லங்கையும், அதுக்குங்கீழாம்படியிருக்கிற கடலும், ஒருவராலடற்க வரிய ஸாமர்த்யத்தை யுடையனாய் ஜ்யேஷ்டனான வைச்ரவணனை வென்று வாங்கின சங்கநிதி பத்மநிதிகளை

"வாலிமாவலத்தொருவன்" என்றத்தை ஸ்மரிக்கிறாரென்று விவக்ஷித்து உரவோன்-மிடுக்கையுடைய வாலியென்றருளிச்செய்கிறார் (க்ரூரேத்யாதி.) தசைந்து - மாம்ஸளமாய். "அடு" - கொல்லுகிற.

ஸஹ்யமாகையாலே - திருக்காவேரிக்கு ஸஹ்யபர்வதம் உத்பத்திஸ்தாநமாறுப்போலேயாகையாலே. ... ... ... ... உ.

மூன்றாம்பாட்டு.—(இலங்கையித்யாதி.) வாலிவதாநந்தரபாவியாய் முதற்பாட்டில் ப்ரஸ்துதமான ராவணவதத்தை ஸப்ரகாரமநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

† "கடுந்தொழில்" என்றும்பாடம். (க) கோலையம்பு - ஹிம்ஸகமானசரம்.

மூ.—துணிவினியுனக்குச்சொல்லுவன்மனமே!தொழுதெழு; தொண்டர்கள்தமக்கு
பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும்பேரருளாளனெம்பெருமான்; [ப்
அணிமலர்க்குழலா ரரம்பையர்துகிலு மாரமும்வாரிவந் தணிநீர்
மணிகொழித்திழிந்தகங்கையின்கரைமேல்வதரியாச்ரமத்துள்ளானே. ௪.

ப - ரை.—மனமே !-நெஞ்சே!, இனி - இப்போது, உனக்கு - விஷயவைல
க்ஷண்ய மறியாத உனக்கு, துணிவு-உறுதியான ஒருவார்த்தையை, சொல்லுவன்-
சொல்லுகிறேன் கேள் என்று ஆழ்வாரருளிச்செய்ய ; அது என்? என்று நெஞ்சு
வினவ ; தொண்டர்கள்தமக்கு - ஆச்ரிதரான நம்போல்வார்க்கு, பிணி - விரோ
தியாயுள்ளவற்றை, ஒழித்து - போக்கி, அமரர் - நித்யஸூரிகளுடைய, பெரு [ம
விசும்பு - பரமபதத்தை, அருளும் - தந்தருளுமவனாய், பேர் அருளாளன் -
பரமக்ருபாவானான எம்பெருமான் - ஸர்வேச்வரன் ; அணிநீர் - தர்சநீயமான
ஜலமானது, மலர் - புஷ்பங்களாலே, அணி - அலங்கரிக்கப்பட்ட, குழலார்-மயிர்
முடியையுடையரான, அரம்பையர்- அப்ஸரஸ்ஸுக்களுடைய, துகிலும்-பரியட்ட
ங்களையும், ஆரமும்-நவரத்நங்கள் கோத்துச்சமைத்த ஹாரங்களையும், வாரி [மரு
வந்து - திரட்டிக்கொண்டும், மணி - ரத்நங்களை, கொழித்து - வாரிக்கொண்டும்,
இழிந்த - வந்திழிகிற, கங்கையின்கரைமேல் - கங்கைக்கரையிலுள்ள, வதரியாச்
சிராமத்து - ஸ்ரீபதரிகாச்ரமத்திலே, உள்ளான் - நித்யவாஸம்பண்ணுகிறான்,
அங்கே சென்று, அவனை,தொழுது - ஸேவித்து, எழு-வாயார ஸ்தோத்ரம்பண்ணு
என்றருளிச்செய்கிறார். ... ... ... ... ... (௪)

யுடையனா யிருக்கிற ராவணனும், அவனுக்கு பலமான ராக்ஷஸஜாதி
யாகவும் மண்ணுண்ணும்படியாக, பண்டு க்ரூரமான வ்யாபாரங்க
ளைப் பண்ணின ராஜாவானவன்.“ఇక్ష్వాకూణామియం భూమిస్సశైలవనకాననా”
“இக்ஷ்வாகூணாமியம் பூமிஸ்ஸசைலவநகாநநா” என்னக்கடவதிறே.
(கொழுஞ்சுடரித்யாதி) ஆதித்யனானவன் சுழலவாராநின் [உரு
றிருந்துள்ள மேருவிலே தாக்கி, மேல்நின்ற, விசும்பிலே- ஆகாசத்தி
லே, வெளுத்தநிறத்தை யுடைத்தான கொடியாடையை விரித்தாப்
போலே, இதுவந்துவிழும்போதை நீர்த்தெளிவிருக்கும்படி. (வலந்
தருமணிநீர்) வேகத்தாலே மிடுக்கையுடைத்தாய்த் தெளிவையுடைத்
தாயிருக்குமாய்த்து. ... ... ... ... ரு.

வ்யா.—நாலாம்பாட்டு.—(துணிவினியுனக்குச் சொல்லுவன் மன
மே தொழுதெழு) இப்போது உனக்கு உறுதியாக ஒரு நல் வார்த்தை
சொல்லுகிறேன், நெஞ்சே ! கேள் ; சொல்லச்செய்தே பின்னை
யும் சொல்லாததின் பலமேயாகாமே, நீயவனைத்தொழுது உஜ்ஜீவி
க்கப்பாராய். [ரு

மேருவாகிற த்வஜஸ்தம்பத்திலே வெளுத்த துகிலாலே கொடியைக்கட்டிவிட்
டாப்போலே ஸ்வச்சமான நீரையுடைத்தான கங்கையென்றருளிச் செய்கிறார்
(ஆதித்யனித்யாதி.) “உரிஞ்சி” என்றதினர்த்தம் (தாக்கியென்றது.) ... ரு.

நாலாம்பாட்டு.—(துணிவினியித்யாதி.) அவதாரத்துக்கு ப்ரதாந ப்ரயோஜந
மான ராவணவதத்தைக் கீழ்ப்பாட்டிலேயருளிச்செய்தவாறே, அதிமாநுஷ [சமி
மானசெயலாகையாலே * அன்று சராசரங்களைவைகுந்தத்தேற்றினமையும் திரு
வுள்ளத்திலே தோற்ற, அந்தப்ரஸங்கத்திலே அவனுடைய மோக்ஷப்ரதத்வத்தை
யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

“ இனியுனக்கு-துணிவாக-சொல்லுவன்” என்று அந்வயித்தருளிச்செய்கிறார்
(இப்போதித்யாதி.)

௫.—பேயிடைக்கிருந்துவந்த மற்றவள்தன் பெருமுலைசுவைத்திடப்;பெற்ற
தாயிடைக்கிருத்தலஞ்சுவனென்றுதளர்ந்திடவளர்ந்தவென்தலைவன்;
சேய்முகட்டுச்சியண்டமும்சுமந்த செம்பொன்செய்விலங்கலிலங்கு-
வாய்முகட்டிழிந்தகங்கையின்கரைமேல்வதரியாச்சிராமத்துள்ளானே.௫,

ப-ரை.—வந்த - தாயின்வடிவுகொண்டுவந்த, பேய் - பூதனையுடைய, இடைக்கு இருந்து - மடியிலே இருந்து, அவள்தன் - அவளுடைய, பெரு - பெரிய, முலை - முலையை, சுவைத்திட - உண்ண; அத்தைக்கண்ட, பெற்ற தாய் - பெற்ற தாயாரான யசோதைப்பிராட்டியானவள், இடைக்கு - தீங்கு செய்யவந்தவர்கள் மடியிலே, இருத்தல் - பொருந்தியிருக்கும் இருப்பைக் கண்டு, அஞ்சுவன் - என்விளைகிறதோ! என்று பயப்படாநின்றேன், என்று - என்று சொல்லி, தளர்ந்திட - கூசிப்பரிந்து வளர்க்க, வளர்ந்த - வளர்ந்தருளின, என்தலைவன் - என்ஸ்வாமியானவன்; சேய் - உயர்ந்த, முகடு-சிகரத்தின், உச்சி- உச்சியிலே, அண்டம் - அண்டத்தை, சுமந்த - தரிக்கிற, செம்பொன்செய் விலங்கலில்-சிவந்தபொன்னால் செய்யப்பட்ட மேருபர்வதத்திலே, இலங்கு-விளங்காநின்றுள்ள, வாய் - இடமுடைத்தான, முகடு - சிகரத்தினின்றும், இழிந்த- வந்துவிழுகிற, கங்கையின் கரைமேல் வதரியாச்சிராமத்துள்ளான்—, நெஞ்சே! அவனைத்தொழுதெழு என்கிறார். ... ... ... ... ... (௫)

நீருறுதியாகச் சொல்லுங்காட்டில் அவன் நம்விரோதியைபபோக்கி நன்மையைத் தருமோவென்ன(பிணியித்யாதி) நம் விரோதியையும் போக்கி பரமபதத்தையும் நமக்குத்தரும். ஒருக்காலாச்ரயித்த மாத்ரத்திலே நம்விரோதியைப்போக்கி நித்யஸூரிகளிருப்பை நமக்குப் பண்ணித்தரும் பெரியக்ர்பாவானான ஸர்வேச்வரன்.

(அணியித்யாதி)க்ர்ஷ்ணன்படியாய்த்துஜலத்தினுடையசெருக்குமிருப்பது. மலராலே யணியப்பட்ட குழலையுடையரான அப்ஸரஸ்ஸுக்களுடைய பரியட்டத்தையும் ஹாரத்தையும் வாரியணிகிற நீரென்னுதல்; அழகியநீரென்னுதல். இவற்றைத் திரட்டிக்கொண்டு தர்சநீயமான நீரானது ரத்நங்களைக் கொழித்துக்கொண்டு வந்திழியாநின்றுள்ளவதரியாச்சிராமத்துள்ளானை - தொழுதெழு என்கிறவிது இத்திருமொழிக்கெல்லாம் க்ரியை. ... ... ... ௪.

வ்யா.—அஞ்சாம்பாட்டு.—(பேயித்யாதி)(வந்த - பேயிடைக்கு இருந்து) யசோதைப் பிராட்டியுடைய வடிவைக் கொண்டு வந்த

"தொண்டர்கள்தமக்கு - பெருவிசும்பருளும், மனமே!தொழுதெழு" என்றவர்க்கு விவக்ஷிதமான வுட்கருத்தையருளிச்செய்கிறார் (நம்விரோதியையித்யாதி.) வாக்யார்த்தத்தையருளிச்செய்கிறார் (ஒருக்காலித்யாதி.)

வஸ்த்ராபஹாரணத்துக்கு ப்ரஸித்தி க்ர்ஷ்ணனிடத்திலேயாகையாலே அத்தை த்ர்ஷ்டாந்திகரித்துக்கொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ர்ஷ்ணனித்யாதி.) "அணிகிறநீர்" என்றது - கரையையலங்கரிக்கிற நீரென்றபடி. ... ௪.

அஞ்சாம்பாட்டு.—(பேயிடைக்கித்யாதி.) துகில்வாரிவந்ததென்னும் ப்ரஸங்கத்திலே க்ர்ஷ்ணனுடைய வஸ்த்ராபஹாரணாபதாநத்தில் செருக்கும் ஸ்மர்தமாய் அதுக்குஹேதுவாக யசோதப்பிராட்டி வளர்த்தபடியை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

"வந்த" என்று விசேஷிக்கைக்குத் தாத்பர்யம் (யசோதையித்யாதி.)

மூ.—தேரணங்கல்குல்செழுங்கயற்கண்ணிதிறத்தொருமறத்தொழில்புரிந்து,
பாரணங்கிமிலேறேழும்முன்னடர்த்தபனிமுகில்வண்ணனெம்பெருமான்;
காரணந்தன்னால் கடும்புனற்கயத்த கருவரை பிளவெழக்குத்தி
வாரணங்கொணர்ந்தகங்கையின்கரைமேல்வதரியாச்சிராமத்துள்ளானே.

ப - ரை.—முன் - ஏழு ரிஷபங்களை நேரேநிறுத்தினவன்று, தேர்-தேர்த்தட்டானது, அணங்கு - வருந்தி ஒப்பாகாநின்றுள்ள, அல்குல் - நிதம்பத்தையுடையளாய், செழு - அழகிய, கயல் - கயல்மத்ஸ்யம்போன்ற, கண்ணிதிறத்து - கண்களையுடைய நப்பின்னைப்பிராட்டியைத் திருமணம்புணருகைக்காக, மறம்-கோபத்தையுடைத்தா யிருப்பதான,ஒரு தொழில்-ஒருசெயலை,புரிந்து-செய்து, பார்-பூமியிலுள்ளார், அணங்கு - நோவுபடும்படியான, இமில் - கருத்துக்களையுடைய, ஏறு - ரிஷபங்கள், ஏழும் - ஏழையும், அடர்த்த-நிரஸித்தவனாய், அத்தாலே, பனி-குளிர்ந்த, முகில்- மேகம்போன்ற, வண்ணன்-திருநிறத்தையுடையனாய், எம்பெருமான்-எனக்கு ஸ்வாமியானவன் ; காரணந் தன்னால் - பகீரதன்செய்த தபஸ்ஸே ஹேதுவாக, கடு - அதிகவேகத்தையுடைய, புனல் - ஜலத்தை, கயத்த - தகைந்த, கரு - பெரிய, வரை - மலையானது, பிளவுஎழ - பிளக்கும்படி, குத்தி - அடித்து, வாரணம் - அங்குண்டானயானைகளை, கொணர்ந்த - தள்ளிக்கொண்டு வந்திழிகிற, கங்கையின்கரைமேல் வதரியாச்சிராமத்துள்ளான்—, அவனை, நெஞ்சே! தொழுதெழு என்கிறார். ... ... ... ... (௬)

பூதனையுடைய மடியிலேயிருந்து,அதுக்குமேலே அவளுடைய பெரியமுலையையுண்டிட. (பெற்றதாயித்யாதி)இத்தைக்கண்ட யசோதைப்பிராட்டியானவள்,நாம் மடியிலேவைத்து முலைகொடுத்துப்போந்த வாஸனைகொண்டு இவன் கண்டவாயகராய நம்மை அநுகரித்து வந்தார் மடியிலே பொருந்தி யவள்முலையுண்கிறதென்று கூசி, அவள் பரிந்து வளர்க்க வளர்ந்த வென்தலைவன்.

(சேயித்யாதி) ஓங்கியிருந்துள்ள சிகரத்தினுடைய வுச்சியாலே அண்டத்தை தரிக்கிற சிவந்தபொன்னாலே செய்யப்பட்ட மேருவிலே விளங்காநின்றுள்ள இடமுடைத்தான சிகரத்தில்நின்றுமிழிந்தகங்கையின்கரைமேலே வதரியாச்சிராமத்திலேவந்து ஸந்நிஹிதனானான்.௫.

வ்யா.—ஆரும்பாட்டு.—(தேரித்யாதி) தேரானது வருந்தி யொப்பாகாநின்றுள்ள, அல்குலையுடையளாய் - நிதம்பப்ரதேசத்தையுடையளாய். அணங்கென்று-நோவுபடுகைக்குப்பேர். தேர்த்தட்டை நிதம்பத்துக்குஒப்பாகச் சொல்லக்கடவர்கள். அழகிய கயலோடொத்த கண்களையுடைய நப்பின்னைப்பிராட்டிக்காக, மறத்தையுடைத்தாயிருப்பதொரு செயலைச்செய்து, பூமியாக நோவுபடும்படியான

"மற்று" என்றதினர்த்தம் (அதுக்குமேலேயென்றது.)பெற்ற தாய் மடியிலேவைக்க அஞ்சினானென்றால், மேலே "வளர்ந்த" என்னக்கூடாமையாலே, அதுக்கிடாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இத்தையித்யாதி.) மிகவும் பரிவோடேவளர்த்தானென்று கருத்து. "வாய்" என்றதினர்த்தம் (இடமுடைத்தானவென்றது.) ... ௫.

ஆரும்பாட்டு.—(தேரணங்கித்யாதி.) வளர்ந்தபின்பு நப்பின்னையைத் திருமணம் புணர்ந்தமையைநினைத்தநுபவிக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(வருந்தியொப்பாகாநின்றுள்ள) என்றதுக்கு, அணங்கென்று - நோவாய், அத்தாலே - மிகவும் ஸத்ர்சமன்றென்று பலித்ததென்றுகருத்து. மறத்தை - ரிஷபங்களினிடத்தில் கோபத்தை.

மூ.— வெந்திறற்களிறும்வேலைவாயமுதும்விண்ணொடுவிண்ணவர்க்கரசும்,
இந்திரற்கருளியெமக்குமீந்தருளு மெந்தையெம்மடிகளெம்பெருமான்;
அந்தரத்தமர ரடியிணைவணங்க வாயிரமுகத்தினு லருளி,
மந்தரத்திழிந்தகங்கையின்கரைமேல் வதரியாச்சிராமத்துள்ளானே.எ

ப - ரை.—வெம்திறல் - மிகுந்த மிடுக்கையுடைய, களிறும் - ஐராவதமென்
றயானையையும்,வேலைவாய்-திருப்பாற்கடலிலுண்டான,அமுதம்-அம்ர்தத்தையும்,
விண்ணொடு- ஸ்வர்க்கத்தையும், விண்ணவர்க்கு அரசும்-தேவர்களுக்கு ராஜாவா
யிருக்கு மிருப்பையும், இந்திரற்கு - ப்ரயோஜநாந்தரபரனுன இந்த்ரனுக்கு,
அருளி-கொடுத்து, எமக்கும் - அநந்யப்ரயோஜநரான என்போல்வார்க்கும், [ம
ஈந்தருளும்-தன்னைக்கொடுத்தருளுமவனுய், எந்தை-எனக்குபிதாவாய்,எமஅடிகள்-
எனக்கு ஸ்வாமியாய், எம்பெருமான் - எனக்கு சேஷியானவன்; அந்தரத்து -
ஸ்வர்க்கத்திலுள்ள, அமரர் - தேவர்கள், அடியிணை - திருவடிகளை, வணங்க -
ஆச்ரயிக்கும்படி; ஆயிரம்முகத்தினுல் அருளி-ஆயிரம் முகங்களாலே புகவேணும்
என்று ஸர்வேச்வரன் திருவுள்ளமாயருள, மந்தரத்து-மந்தரபர்வதத்திலே, [ம௫
இழிந்த - வந்திழிந்த, கங்கையின்கரைமேல் வதரியாச்சிராமத்துள்ளான்—, அவ
னை நெஞ்சே! தொழுதெழு என்கிறுர். ... ... ... ... (எ)

கருத்துக்களையுடைய ரிஷபங்களேழையும் நிரஸித்து, அநந்தரம்,
விரோதிபோகப்பெற்ற ஹர்ஷத்தாலே, குளிர்ந்த மேகம்போலே
யிருந்துள்ள வடிவையுடையனுய், அவ்வடிவாலே யென்னை [உம
அநந்யார்ஹனுக்கினவன்.

(காரணமித்யாதி) ஹரீரதன் கங்கையை யவதரிப்பிக்கிற போது
நடுவழியிலே ஒருமலை தகைந்துகொடுநின்றதாய், அத்தை யிர
ண்டு பிளவாம்படி குத்தி யானைகளையு முருட்டிக்கொண்டு இவ்வருகே
போந்து இழிந்ததாகச் சொல்லக்கடவது. அதுக்கடி யென்னென்றுல்
(காரணந்தன்னுல்) தன்னுடைய தபோபலத்தாலே, ஹஸ்மமாய்க்
கிடந்த தன்னுடைய பாட்டன்மாருடைய சுத்யர்த்தமாக கங்கையைப்
பெறவேணுமென்று, தபஸ்ஸுபண்ணினுனிறே; அந்தகாரணத்தா
லே. பழமையாலேவந்த மிடுக்கையுடைய ஜலத்தையுடைத்தான,
கருவரையானது இரண்டுபிளப்பாம்படி குத்தி அங்குண்டான [௲ம
ஆனைகளைத்தள்ளிக்கொண்டுவந்திழிகிற. அன்றிக்கே,அம்மலைதகைந்த
ளவிலே இந்த்ரனைநோக்கி தபஸ்ஸுபண்ணினுனுய், பின்னை அவன்
தன்சதுர்த்தந்தியையிடுவித்து அமமலையிருபிளவாம்படிகுத்துவித்து
பின்னை அவ்வானைகொண்டுவந்ததாக வொரு ப்ரமாணப்ரஸித்தியு
ண்டு; அத்தைச் சொல்லிற்றுகவுமாம். ... ... அ.

வ்யா.—ஏழாம்பாட்டு.— (வெந்திறலித்யாதி) ஐராவதத்தையும்,
கடலி லம்ர்தத்தையும், ஸ்வர்க்கத்தையும், அத்தோடேகூட தேவர்க
ளுக்கு ராஜாவாயிருக்கு மிருப்பையும், இந்த்ரனுக்குக் கொடுத்தருளி,

“இமில்” என்றதினர்த்தம் (கருத்துக்களையுடையது.)

பழமை - ஸ்வபாவம்; அத்தாலே வந்த மிடுக்கு - அதிவேகம். ஜலத்தை [சம
யுடைத்தானவென்றது - * கங்கைக்கு விசேஷணம். ... ... ... கூ.

ஏழாம்பாட்டு.—(வெந்திறலித்யாதி.) நப்பின்னைப்பிராட்டிக்குத் தன்னைக்
கொடுத்த வளவன்றிக்கே ப்ரயோஜநாந்தர பரனுக்கும் அபேக்ஷித ஸம்விதாநம்
பண்ணினுனென்று அநுஸந்திக்கிறுரென்று ஸங்கதியுட்கொண்டு வாக்யார்த்த மரு
ளிச்செய்கிறுர் (ஐராவதத்தையுமித்யாதி.)

மூ.—மான்முனிந்தொருகால்வரிசிலைவளைத்தமன்னவன்; பொன்னிறத்தரவோன்-
ஊன்முனிந் தவனது டலிருபிளவா வுகிர்நுதி மடுத்து, அயனரனைத் -
தான்முனிந்திட்ட வெந்திறற்சாபந்தவிர்த்தவன்; தவம்புரிந்துயர்ந்த-
மாமுனிகொணர்ந்தகங்கையின்கரைமேல்வதரியாச்சிராமத்துள்ளானே.

ப - ரை.—ஒருகால் - பிராட்டி "இம்மானைப்பிடித்துத்தரவேணும்" என்று அபேக்ஷித்தபோது, மான் - மான்வடிவுகொண்டுவந்தமாரீசனை, முனிந்து - பின் தொடர்ந்துசென்றும் அது கைக்குளெட்டாமையாலே கோபித்து, வரி - அழகிய சிலை - வில்லை, வளைத்த - அதின்மேலேஎய்த, மன்னவன் - ராஜாவாய்; பொன்னிறம் - பொன்போலும்நிறத்தையும், உரவோன்-மிடுக்கையுமுடைய ஹிரண்யனை, [ம] முனிந்து - ஆச்ரிதவிரோதியென்றுசீறி, அவனது - அவனுடைய, ஊன் - மாம்ஸம் நிறைந்த, உடல் - சரீரமானது, இருபிளவா - இரண்டுகூறும்படி, உகிர் - நகங்களின், நுதி - நுனியை, மடுத்து - புகுத்தவனாய்; அயன்தான் - முன்பு "என் தலையையறு" என்றுஅநுமதிபண்ணினப்ரஹ்மாதானே, அரனை - ருத்ரனை, முனிந்து-கோபித்து,இட்ட-"கபாலியாகக்கடவாய்" என்றுசபித்த, வெந்திறல் -[மிகு] மிகவும்க்ரூரமான,சாபம் - சாபத்தை, தவிர்த்தவன் - போக்கின ஸர்வேச்வரன்; தவம்புரிந்து - தபஸ்ஸைபண்ணி, உயர்ந்த - அத்தாலேப்ரஹ்மர்ஷியான, மாமுனி - விச்வாமித்ரன், கொணர்ந்த - பெருமானையும் இளையபெருமானையும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டுசென்ற, கங்கையின்கரைமேல் வதரியாச்சிராமத்துள்ளான்—, நெஞ்சே! தொழுதெழுஎன்கிறார். ... ... ... ... (அ)

எனக்குத் தன்னைத் தந்தருளின. (எந்தை) எனக்கு ஜநகன், எனக்குஸ்வாமி, இவற்றாலே யென்னை அநங்யார்ஹனாக்கினவன்.

(அந்தரத்தமரரித்யாதி) ஸ்வர்க்கத்தில் தேவர்கள் திருவடிகளை யாச்ரயிக்க,ஒருமுகஞ்செய்துவந்து புகில் கடல் பொறாதென்று பார்த்து, "ஆயிரம்முகத்தினாலே போய்ப்புகு" என்று, ஸர்வேச்வரன் திருவுள்ளமாயருள; அப்படி மந்தரபர்வதத்தில் நின்றும் வந்திழிந்ததாய்த்து. அன்றிக்கே, கங்கைதன்னை யாச்ரயிக்க அதுதா னருளுகை யாகவுமாம். (ஆயிரமுகத்தினால்) மேருவிலேயிழிந்து, மந்தரத்திலேயிழிந்து, ஹிமவானிலேயிழிந்து, இங்ஙனே பலவகைகளாலே வரும் படியைச் சொல்லக்கடவதிறே. .. ... ... எ.

வ்யா.—எட்டாம்பாட்டு.—(மான்முனிந்தித்யாதி) பெருமானை

"எமக்கும்" என்றத்தால் - களிறுமுதலானவற்றைத் தமக்குத் தந்தானென்று தோற்றினாலும், அதுஇவர் ப்ரக்ருதிக்குச் சேராதென்றுவிவக்ஷித்து, (தன்னை)என்று அத்யாஹரித்தருளிச்செய்கிறார் (எனக்கித்யாதி.)

"நாளுநந்திருவுடை யடிகள்தம் நலங்கழல் வணங்கி" என்கிற விடத்தில் "வணங்கி" என்கிறவிது-வினையெச்சமாய்; வணங்கவென்றுஅர்த்தமா யிருக்கிறதென்று வ்யாக்யாநம் செய்தாப்போலே, இங்கே "அருளி" என்றத்தை - அருள என்றாக்கி, இம்முகத்தினால் புக என்றுஅத்யாஹாரமும் திருவுள்ளம் பற்றி, ஒரு யோஜனை யருளிச்செய்கிறார் (ஸ்வர்க்கத்தி லித்யாதி.) இந்த யோஜனையில், "அடியிணை" என்றதுக்கு ஸ்வாரஸ்யமுண்டென்று திருவுள்ளம். "அருளி" என்ற புதஸ்வாரஸ்யத்தைப்பற்ற யோஜநாந்தரம் (அன்றிக்கே யித்யாதி) இந்தயோஜனையில், "மந்தரம்" என்று - பஞ்சமியன்றிக்கே, ஸப்தமியாய், அது உப லக்ஷணமென்று கருத்து. ... ... ... ... ... ... எ.

"இம்மானைப் பிடித்துத்தரவேணும்" என்று பிராட்டியருளிச்செய்ய, அவரும் அதின்பின்னே தொடர்ந்து போனவிடத்து மாயாம்ருகமாகை யாலே அதுபிடிதாராதேயொழிய, அத்தைச்சீறி, அதின்மேலே தர்சநீயமான வில்லைவளைத்த செருக்கன். (பொன்னிறத்துரவோனித்யாதி) பொன்போலேயிருந்துள்ள நிறத்தையும் மிடுக்கையுமுடையனானவன். ஹிரண்யனென்றபடி; அவனுடைய துர்மாநத்தாலேவளர்ந்த மாம்ஸத்தைச்சீறி, அதுக்குஆச்ரயமான வுடலானது இருபிளவாம்படி திருவுகிரினுடைய நுனியை மாட்டி.

(அயனித்யாதி) பிராட்டிதிறத்திற்செய்யுமத்தை ஒருசிறுக் [ம கன் விஷயத்திலே செய்தான்; அவன்விஷயத்திற்செய்தத்தை துர்மாநியான ருத்ரன்விஷயத்திலே செய்தானாய்த்து. முற்பட இவன் செருக்கித்திரிகிறது பொறுக்கமாட்டாமை, (க) செய்திடுவானுக்கு என்று "என்தலையையறு" என்று அநுமதிபண்ணி, பின்னையும் தானே இவனை "இப்படிசெய்தான்" என்று-"कपाली त्वं भविष्यसि" "கபாலீத்வம் ஃபவிஷ்யஸி" என்று பழியிட்டானாய்த்து. பெற்ற தமப்பன் பகையாக, அவனி லண்ணியவுறவா யுதவுமவனாய்த்து.

(தவமித்யாதி) தவம்புரிந்துயர்ந்த மாமுனிகொணர்ந்த வென்கிறது – விச்வாமித்ரனை. அவன் க்ஷத்ரியனா யிருக்கச்செய்தேயும் தபோபலத்தாலேப்ரஹ்மர்ஷியானானிறே. அவன்பெருமாளையும்இளையபெருமாளையும் நடத்திக்கொண்டுவந்தது அக்கரையேயாகையாலே, அத்தைச்சொல்லிற்றாகவுமாம். தபஸ்ஸைச்செய்து உயர்ந்தவென்றபடி. இதுக்கு, ஸ்ரீபராங்குசதாஸர், "ஜீயா! 'மாமுனிபுகன்ற' என்று பாடபேதத்தைப்பண்ணி அதினுடைய ப்ரபாவத்தைப் பிள்ளைகளுக்குச்சொல்லிக்கொடுபோந்தானிறே! அத்தைச்சொல்லிற்றாகவுமா [உரு மே!" என்ன; "அதுக்கு நமக்கு பலம்போராது" என்றருளிச்செய் வர். அன்றிக்கே, ஸ்ரீராமன்றன்னையே சொல்லுகிறதாய், அவன் கொடுவந்த கங்கையென்னுதல். ... ... ... ... அ.

---

எட்டாம்பாட்டு.—(மானித்யாதி.) இந்திரற்கருளின வளவன்றிக்கே அநந்யையானவளுக்கும் அர்ப்பகனுக்கும் பிச்சையாண்டிக்கும் கூடக் கையாளாய் அபேக்ஷிதங்கள் செய்யுமவனென்று சீலகுணாநுஸந்தாநம் பண்ணுகிறாரென்று ஸங்கதி.

"ஒருகால் - மானைமுனிந்து - வரிசிலைவளைத்த மன்னவன்" என்று அந்வயம் விவக்ஷித்து ஸ்லோகமாக தாத்பர்ய மருளிச்செய்கிறார் (பெருமாளையித்யாதி.) "ஒருகால்-" ஒரு கால விசேஷத்திலே.

(பிராட்டி) இத்யாதிவாக்யத்துக்கு - அபிமதையாய் நித்யாநபாயிநிக்குக் கையாளானமையைக்காட்டிலும் ஆசாலேசமுடைய ப்ரஹ்லாதன் சொலவுக்குக் காரியம் செய்ததேற்றம்; அதிலும், அரன்சாபம் தீர்த்த தேற்றமென்று ஈடுபாட்டிலே தாத்பர்யம். "அயன் - தான்முனிந்திட்ட" என்கையாலே-முனிகைக்கு யோக்யதையில்லாமை தோற்றுகையாலே, அத்தை யருளிச்செய்கிறார் (முற்படவித்யாதி.)

சப்தார்த்தம் (தபஸ்ஸையித்யாதி.) ஜீயாவென்றது-நம்பிள்ளையை பூஜ்யோக்தியாலே ஸம்போதித்தபடி. (அதுக்கு நமக்கு பலம்போராது) என்றதுக்கு - ஆழ்வார் திவ்யஸூக்தியைத் திருத்தி பாடபேதம்பண்ணுகைக்கு பலம் போராதென்று நம்பிள்ளை யருளிச்செய்தாரென்று கருத்து. ... ... ... அ.

---

(க) செய்திடுவானுக்கு - செய்யக்கடவன்: "பட்டிடுவானுக்கு" என்றாற்போலே'

மூ.—கொண்டல் மாருதங்கள் குலவரை தொருநீர்க்குரைகடலுலகுடனனைத்தும்-
உண்டமாவயிற்றோ னொண்சுடரேய்ந்த வும்பருமூழியுமானான்;
அண்டமூடறுத்தன்றந்தரத்திழிந்தங்கவனியாளலமரப் பெருகும்-
மண்டுமாமணிநீர்க்கங்கையின்கரைமேல்வதரியாச்சிராமத்துள்ளானே. ௧.

ப - ரை.—கொண்டல் - மேகங்களையும், மாருதங்கள் - வாயுஸமூஹத்தை யும், குலவரை - குலபர்வதங்களையும், தொருநீர் - ஜலஸம்ருத்தியையுடைத்தாய், குரை - சப்தியாநின்றுள்ள, கடல் - ஸமுத்ரங்களையும், உலகுஉடன்-பூமியையும், அனைத்தும் - மற்றுமுள்ளபதார்த்தங்களையும், உண்ட - அமுதுசெய்தருளின,மா - பெரிய, வயிற்றோன்-திருவயிற்றையுடையனாய்;ஒள் - ப்ரகாசிக்கிற, சுடர் - சந் [ம
த்ரஸூர்யர்களை,ஏய்ந்த-உடைய, உம்பரும்-மேலுலகங்களையும்,ஊழியும்-கல்பங்களை யும்,ஆனான்-ப்ரகாரமாகவுடையனாயிருக்கிற ஸர்வேச்வரன்;அன்று-பகீரதன்கங்கை யைஅவதரிப்பிக்கிறபோது, அண்டம் - ப்ரஹ்மலோகத்தை, ஊடுஅறுத்து - இடை வெளியாக்கிக்கொண்டு, அந்தரத்து - ஆகாசத்தில்நின்றும், இழிந்து - கீழிழிந்து, அவனியாள்-ஸ்ரீபூமிப்பிராட்டியானவள்,அலமர-பொறுக்கமாட்டாதே வருந் [டுரு
தும்படி, பெருகும் - ப்ரவஹிக்குமதாய், மண்டு - நெருங்கி, மா - நிறைந்து, மணி - தெளிந்த, நீர் - ஜலத்தையுடைத்தான, கங்கையின்கரைமேல்வதரியாச்சி ராமத்துள்ளான்—. ... ... ... ... ... (௧)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு.—(கொண்டல் மாருதங்கள்)மேகங்க ள், வாயுஸ்கந்தம், குலபர்வதங்கள், ஜலராசியை யுடைத்தாய் [உம
வோஷியாநின்றுள்ள கடல்,லோகங்களோடேஸர்வபதார்த்தங்களையும் வைக்கப்பட்ட. (மாவயிற்றோன்) இவற்றை வயிற்றிலே வைத்தவிடத் திலும் இவைதா னளவுபட்டு வயிறே பெருத்திருக்கை. "வல்வயிற்று ப்பெருமான்" என்னக்கடவதிறே. (ஒண்சுடரித்யாதி) சந்த்ரஸூர்யர் களை யுடைத்தான உபரிதநலோகத்தையும், காலவிசேஷமான காலத் தையும், தான் என்று சொல்லலாம்படியானான். இவை ப்ரகாரமாக, தான் ப்ரகாரியாய்நின்றான்.

(அண்டமித்யாதி) அண்டமுண்டு - ப்ரஹ்மலோகம், அதின்நடு வே வழிகண்டுபோந்து,அதுக்குஇவ்வருகில் அந்தரிக்ஷத்திலே போந் திழிந்து,எல்லாவற்றையும்பொறுக்கக்கடவ,அவனியாளுண்டு-பூ [நமி
மி, அவள் பொறுக்கமாட்டாதே தடுமாறும்படி பெருகுமாய்த்து. (மண்டுமாமணிநீர்) எங்குமொக்கப்பரந்து பெருநீராய், அதடையத் தெளிந்திருப்பதான கங்கையின்கரையிலே. ... ... ௧.

ஒன்பதாம்பாட்டு.—(கொண்டலித்யாதி.) அரனை வெந்திறற்சாபம் தவிர்த்த வளவேயோ, ஸர்வவிஷயமாக ஆபத்ஸகனன்றோ என்றநுஸந்திக்கிறானென்று [கூடு ஸங்கதி கண்டுகொள்வது.

வாயுஸ்கந்தமென்றது - வாயுஸமூஹமென்றபடி. "மா" என்று விசேஷித்தது க்குத் தாத்பர்யம் (இவற்றை யித்யாதி.) பெருத்திருக்கை-மாஹாத்ம்யத்தை யுடை த்தாயிருக்கை ; "అణ్డానాంత్వదరమాన స్థిస్థః" "அண்டாநாம்த்வதநாம மாந்திலந்த:" என்ற ச்லோகமநுஸந்தேயம். ... ... ... ... ௧.

மூ.—வருந்திரைமணிநீர்க்கங்கையின் கரைமேல் வதரியாச்சிராமத்துள்ளானை,
கருங்கடல்முந்நீர் வண்ணனையெண்ணிக் கலியன்வாயொலிசெய்தபனுவல்
வரஞ்செய்தவைந்துமைந்தும்வல்லார்கள், வானவருலகுடன்மருவி,
இருங்கடலுலகமாண்டு வெண்குடைக்கீ ழிமையவராகுவர்தாமே. ம.

ப - ரை.—வரும் - பெரியவேகத்தோடேவருகிற, திரை - அலைகளையுடைத்தாய், மணி - தெளிந்த, நீர் - ஜலத்தையுடைத்தான, கங்கையின்கரைமேல் - கங்கைக் கரையிலுள்ள, வதரியாச்சிராமத்து - ஸ்ரீபதரிகாச்ரமத்திலே, உள்ளானை - நித்ய வாஸம்பண்ணுமவனாய், கரு - கறுத்த, முந்நீர் - மூன்றுவகைப்பட்டநீரையுடைத்தான, கடல்வண்ணனை - கடல்போன்றதிருநிறத்தையுடையவனை, எண்ணி - அநுஸந்தித்து, கலியன் - ஆழ்வாரருளிச்செய்ததாய், ஒலிசெய்த - சப்தஸந்தர்ப்பமான, பனுவல்வாய் - பாட்டுக்களில், வரம்செய்த - ச்ரேஷ்டமாகப்பண்ணின, ஐந்தும்ஐந்தும் - இப்பத்துப்பாட்டுக்களையும், வல்லார்கள் - அர்த்தத்தோடுசொல்ல வல்லவர்கள்; இரு - பெரிய, கடல் - கடலாலேசூழப்பட்ட, உலகம் - இப்பூமியை, வெள் - வெளுத்த, குடைக்கீழ் - குடைநிழலின்கீழேயிருந்து, ஆண்டு - செங்கோல்செலுத்தி, பின்பு, வானவர் - இந்த்ராதிதேவர்களுக்கு நிர்வாஹகனான ப்ரஹ்மாவினுடைய, உலகுடன் - ஸத்யலோகத்தையும், மருவி - கிட்டி அநுபவித்து, இமையவர்ஆகுவர் - நித்யஸூரிகளோடு ஒருகோவையாகப்பெறுவர். (ம)

வ்யா.—பத்தாம்பாட்டு.—(வருமித்யாதி) பெரியவேகத்தோடே வருகிற, திரைகளையுடைத்தாய்த்தெளிந்தஜலத்தையுடைத்தான கங்கையின்கரைமேலே ஸ்ரீவதரிகாச்ரமத்திலேயிருக்கிற ஸர்வேச்வரனைக் கவிபாடிற்று. (கருங்கடல்முந்நீர்) முந்நீரான கருங்கடல். ஆற்றுநீர், ஊற்றுநீர், வர்ஷஜலமான மூன்றுவகை நீரையுடைத்தாய்க் கறுத்தநிறத்தையுடைய கடல்போலேயிருக்கிற நிறத்தையுடையவனை அநுஸந்தித்து ஆழ்வாரருளிச்செய்தபாட்டுக்களிவைதான்!. (வரம்செய்த) ஸமவத் ப்ரஸாதலப்யமான பத்துப்பாட்டையும் வல்லவர்கள். அன்றியே, வரிஷ்டமான பத்துப்பாட்டையுமென்னுதல். (வானவரித்யாதி) பெரியகடல்சூழ்ந்தபூமியை (க) ஏகாதபத்ரமாக நடத்தி, பின்பு ப்ரஹ்மபதத்தைநிர்வஹித்து, அநந்தரம் நித்யஸூரிகளோடொருகோவையாகப்பெறுவர். இத்தால்சொல்லிற்றாய்த்து - இவனதிஸந்திபண்ணினவற்றை யெல்லாம் தருமென்றபடி.

"அறிவுடையார் அபுருஷார்த்தமென்று காற்கடைக்கொண்ட ஐச்வர்யத்தை 'வேண்டேன்மனைவாழ்க்கை' என்றும் 'போந்தேன்' என்றும் (உ) வீதராகராய்ப்போந்தவிவர், இப்போது ஐச்வர்யத்தை பலமாகச்சொல்லுவானென்?" என்று ஜீயர் பட்டரைக்கேட்க;

பத்தாம்பாட்டு.—(வருந்திரையித்யாதி) இவைதானென்று - வ்யாக்யாதர்வாக்யமாதல், "பனுவல்" என்றஆழ்வார்கருத்தாதல். அர்த்தக்ரமத்தைப்பற்ற "இருங்கடலுலகம்-வெண்குடைக்கீழ்-ஆண்டு - வானவருலகுடன் மருவி - இமையவராகுவர் தாமே" என்று அந்வயித்தருளிச்செய்கிறார் (பெரியகடலித்யாதி.)

(போந்தேனென்றும்) என்ற வநந்தரம், துறந்து என்று சேஷம்.

(க) ஏகாதபத்ரமாக - ஈரரசன்றிக்கே. (உ) வீதராகர் - விரக்தர்.

"திருமங்கையாழ்வாரவதரித்தபின்பு, த்யாஜ்யமானஐச்வர்யமும் பரம புருஷார்த்துக்குள்ளே புக்குப்போய்த்துக்காணும்–'ஈச்வரனேயாகவுமாம் நித்யஸூரிகளேயாகவுமாம் ராஜாவாகவுமாம் பறித்துஹாமவத சேஷமாக்கலாமாகில்' என்றுமிவரிருப்பது" என்றருளிச்செய்தாராம்.

அடிவரவு.—ஏனம் கான் இலங்கை துணிவு பேய் தேர் வெந்திறல் மான் கொண்டல் வருந்திரை கலை.

திருமங்கையாழ்வார்திருவடிகளே சரணம்.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

---

"வேண்டேன்மனைவாழ்க்கையை" என்னுமவர்தாமே ஐச்வர்யத்தைபலமாகச் சொல்லுகையாலே, ஓரகாரத்தாலே த்யாஜ்யமானது ஆகாராந்தரேணஉபாதேயமாய்த்தென்று விவக்ஷித்து, பட்டர் பரிஹரித்தமையை யருளிச்செய்கிறார் (திருமங்கையாழ்வாரித்யாதி.) உள்ளே புக்கபடி யெங்ஙனேயென்ன (ஈச்வரனேயித்யாதி;) ஈச்வரபதார்த்தமாகவுமாம், பாகவதபதார்த்தமாகவுமாம், ராஜத்ரவ்யமாகவுமாம், ததீயர்க்கு விநியோகமானாலதுவே புருஷார்த்தமென்றிருப்ப ரென்றபடி. ஈச்வரபதார்த்தத்தை பாகவதசேஷமாக்கினால் அது அவனுக்குகப்பாகையாலும் ராஜத்ரவ்யத்தைப் பறித்து பாகவதசேஷமாக்கினால்ப்ரத்யவாயமின்றிக்கே ஸ்வரூபாநுரூபமாகையாலும் அவை கூடிற்றே யாகிலும், பாகவத பதார்த்தத்தைப் பறித்து பாகவதர்க்குக்கொடுக்கக்கூடுமோ வென்னில்; அவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களென்றறியாதே பறித்தானாகிலும் தோஷமுண்டாகையாலே அதுவே பாகவதவிஷயத்திலே விநியோகமானால் அந்ததோஷம் வாராதென்று கருத்தாகவுமாம். ஸம்பந்நராய்ச் சிலரிருந்தால் நிரவகாசராயிருப்பார்க்கு அவர்கையில் நின்றும் பறித்துக்கொடுத்தால் அவர்கள் பாகவதசேஷமாய்த்தே! என்று உகப்பராகையாலே, தோஷமில்லை யென்று கருத்தாகவுமாம். இங்ஙனன்றாகில், பாகவதஸ்வத்தையெடுத்து பாகவதர்க்குக்கொடுக்கைக்கு சாஸ்த்ரம் இசையாதிறே; ப்ரஹ்மபதத்தளவும் சொன்னது - ஐச்வர்யத்துக்கு மேலெல்லை யாகையாலே. ௰.

ஜீயர்திருவடிகளே சரணம்.

## முதற்பத்து, அஞ்சாந்திருமொழி - கலையும். ப்ரவேசம்.

வ்யா.—ஸௌஹரி ஹோமத்துக்குறுப்பாக அநேகம் வடிவுகொண்டாப்போலே ஆச்ரிதரையநுபவிப்பிக்கைக் குறுப்பாக உகந்தருளின நிலங்களெங்கும் புகுந்து ஸந்நிபண்ணினானாய்த்து அவன்; இனி, இவர்தாமும் * தானுகந்த வூரெல்லாம் தன்தாள்பாடி எங்கும் புக்கநுபவிக்கையிலே யாய்த்து அபேக்ஷை பண்ணியிருப்பது.

---

அ.—கலையும் கரியும் ப்ரவேசம். கீழ் நாலு திருமொழிகளாலும் - தமக்குண்டான மந்த்ரலாபத்தையும், மந்த்ரார்த்தத்தையும், நரநாராயணரூபேண அவதரித்துத் திருமந்த்ரத்தை வெளியிட்டதேசத்தில் தமக்குண்டான ப்ராவண்யத்தையுமருளிச்செய்தாரே யாகிலும், ஸாளக்ராமம் தொடக்கமான திவ்யதேசங்களை விரும்புவானென்னென்கிறசங்கையிலே, இவர் விரும்புகைக்குஹேதுவை யருளிச்செய்யக் கோலி, அதுக்குறுப்பாக அவன் பலபடி யிருக்கைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (ஸௌபரியித்யாதி.) அவன் பலபடியிருந்தால் இவர்தாம் பலபடி அநுபவிக்கைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (இனியித்யாதி.)

மூ.—கலையும் கரியும் பரிமாவும் திரியும் கானம் கடந்துபோய்ச் –
சிலையுங்கணையுந் துணையாகச் சென்றான் வென்றிச் செருக்களத்து;
மலைகொண்டலைநீரணைகட்டி, மதிள்நீரிலங்கைவாளரக்கர் –
தலைவன்தலைபத்தறுத்துகந்தான் சாளக்கிராமமடைநெஞ்சே!.௧.

---

ப - ரை.—சக்ரவர்த்தித்திருமகன், சிலையும் - வில்லையும், கணையும் - அம்பு
களையும், துணையாக - ஸஹாயமாகக்கொண்டு, கலையும் - மான்களும், கரியும் -
யானைகளும், பரிமாவும் -குதிரைகளும், திரியும் - ஸஞ்சரிக்கிற, கானம் - காட்
டை, கடந்து - தாண்டி, போய் - நெடுந்தூரம்போய், வென்றி - ஜயத்தையுடை
த்தானபோரைவிளைக்கக்கடவ, செருக்களத்து-யுத்தபூமியிலே, சென்றான் - பு [ய
குந்து, அலை - அலையையுடைய, நீர் - ஸமுத்ரத்தை, மலைகொண்டு - மலையால்,
அணைகட்டி - ஸேதுபந்தநம்பண்ணி, மதிள் - மதிளையும், நீர் - கடலாகிறஅக
ழையுமுடைய, இலங்கை - லங்கையைத்தனக்குநகரமாகவுடையனாய், வாள் -
ருத்ரனால்கொடுக்கப்பெற்றவாளையுடையனாய், அரக்கர்தலைவன் - ராக்ஷஸர்க்குத்
தலைவனானராவணனுடைய,தலைபத்து-பத்துத்தலைகளையும்,அறுத்து-சேதித்து,[மகு
உகந்தான் - ஆச்ரிதர்விரோதிபோகப்பெற்றோம்!என்றுஉகந்துநித்யவாஸம்பண்ணு
கிற, சாளக்கிராமம் - ஸ்ரீஸாளக்ராமத்தை, நெஞ்சே!—,அடை - கிட்டப்பாராய்
என்கிறார். ... ... ... ... ... ... ... ... (௧)

---

ஒருவிஷயத்தை அநுபவிக்கப்புக்கால் அவ்விஷயத்தில் அவ
யவங்கள்தோறும்ஸ்பர்சிக்கிறபண்ணுமாப்போலேயாய்த்துஇவரெ [உம
ங்கும் புக்கநுபவிப்பதாகப் பாரிக்கிறதுவும். ஆக, விரோதிநிரஸநசீல
னுமாய், ஆச்ரிதஸம்ச்லேஷைகஸ்வபாவனுமாய், ப்ரஹ்மாதிகளாபந்ந
ராமன்று அவ்வாபத்துக்களைப்போக்கி அவர்களுக்குதுஃகநிவர்த்தகனா
யிருக்கிறவன், நித்யஸூரிகளோடு தன்பக்கல் ருசியுடையாரோடு
கேவலப்ராஹ்மணரோடுவாசியற ஸர்வஸமாச்ரயணீயனாய்க் கொண்டு
ஸ்ரீஸாளக்ராமத்திலேவந்து ஸந்நிஹிதனானான், அங்கே போயவனை
யாச்ரயிப்போமென்று திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். கோஸல
ஜநபதமாகப் பெருமாளதா யிருக்குமாப்போலே, ஒருமண்டலமாக
த்தனக்கு விஷயமாகக்கொண்டு ஸந்நிஹிதனாய்க் குறைவற வர்த்திக்
கிற தேசமாய்த்து. ... ... ... ... *

---

விஷயமொன்றாயிருக்க, எங்கும் தனித்தனியே புக்கநுபவிக்க வேண்
டுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (ஒருவிஷயத்தை யித்யாதி.) ஆகவென்
றது - ஆகையாலே யென்றபடி. “ஊரான் குடந்தையுத்தமன்” என்றத்தைப
பற்ற (ஆச்ரிதஸம்ச்லேஷைக ஸ்வபாவனுமாய்) என்றது. “வெந்தாரென்பும்”
என்கிறபாட்டைக்கடாக்ஷித்தருளிச்செய்கிறார்(ப்ரஹ்மாதிகளித்யாதி;) கபால[நமு
க்திமோசகம் வேதாபஹாராணாதிகளுக்கு முபலக்ஷணமென்று திருவுள்ளம். “தொ
ண்டாயினரும்” என்கிறபாட்டைப்பற்ற (நித்யஸூரிகளோடித்யாதி.) கீழ்ச்சொ
ன்னவரெல்லாருமாச்ரயிக்கும்படி யிடமுடைத்தா யிருக்குமோவென்ன(கோஸலே
த்யாதி;) மலையாகையாலே ஒருமண்டலப்பரப்புப்பெருத்திருக்கு மென்றுகருத்து.
விஷயமாக - வாஸஸ்தாநமாக. ... ... ... ... *

வ்யா.—மூதற்பாட்டு.—(கலையித்யாதி) கலைமுதலானவைகளை வர்த்திக்கக்கடவதான காட்டைக் கடந்து போய். (சிலையும் கணையும் துணையாகச்சென்றான் வென்றிச்செருக்களத்து) "தேவநேநவநம் மத்வா" என்கிறபடியே - படைவீட்டில் நின்றும் காட்டிலே புகுரு கையன்றிக்கே, காட்டில் நின்றுமாய்த்துக் காட்டிலே வந்து புகுந்தது; அப்படியே, இங்கும், து:ஷ்டஸத்த்வப்ரசுரமான காட்டைக்கழிந்து பின்னை யுத்தபூமியிலே யாய்த்து வந்துபுகுந்தது. கலைகளையும் ஆனை களையும் குதிரைகளையு முடைத்தாயிருக்கிற காட்டைக் கடந்துபோய், வென்றிச்செருக்களத்திலே வந்து புகுந்தான். அங்குப்போய்ப் புகு கிற விடத்துத் துணையாரென்னில் (சிலையும் கணையும் துணையாக) வில்லு மம்பும் துணையாக வாய்த்துப் போய்த்தது. லக்ஷ்மணாதிகளோ வென்னில்; அவர்களையும் ஓரவயவவிசேஷங்களாக நினைத்திருந்தாரித் தனை போக்கி, தனித்தொருதுணையாக நினைத்திருந்திலராய்த்திவர்.

---

மூதற்பாட்டு.—(கலையுமித்யாதி.) "தானவனுகம்தரணியிற்புரள" என்றும் [மு "இலங்கையும்கடலும்" என்றும் கீழ்த்திருமொழியிலே ப்ரஸ்துதமான ராமசரிதந் தான், "త్వాదృగ్గుణోనానుబభూవిథ రాఘవత్వేయస్తావకం చరితమన్వహమన్వభుఙ్క్త। స్తోత్రైర్వహన్తహనుమాన్ పరమాంవిముక్తిం బుద్ధ్యావిధూయ చరితంతవసేవతేస్మ" "தாத்ருக்குணோநநுபபூவிதராகவத்வேயஸ்தாவகம்சரிதமந்வஹமந்வபுங்க்தே। ஸோத்ரைர்வஹந்தஹநுமாந்பரமாம் விமுக்திம்புத்த்யா விதூயசரிதம்தவஸேவதேஸௌ" என்கிறபடியே நித்யாநுபாவ்யமாய்த் தலைக்கவற்றாகையாலே அத்தை யநுபவி க்கிறாரென்று அவதாரிகையிட்டுக்கொள்வது.

காடானபோதே ம்ர்கம் முதலானவை யுண்டாயிருக்குமே, அவற்றையிட்டு விசேஷிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (கலையித்யாதி.) இத்தால் - விஜந வநத்திலே யெழுந்தருளுவதே! என்றீடுபடுகிறாரென்றதாய்த்து. கரியைப் [உரு பற்றவும் கலையைமுற்படவெடுத்தது - இவர்கள் நிலையைக் கொலைத்தது கலையெ ன்று "கானிடையுருவை" என்கிறபாட்டிலே ப்ரஸ்துதமான மாயாம்ர்கத்தின் தௌஷ்ட்யத்தைப்பற்ற. "அரக்கர்தலைவன் தலைப்பத்தறுத்துகந்தான்" என்ன வே, செருக்களத்துக்குப்போகை அர்த்தஸித்தமாயிருக்கவு மருளிச்செய்ததுக்கு தாத்பர்யமருளிச்செய்கிறார் (தேவநேநேத்யாதி வாக்யத்வயத்தாலே.) இத்தால்- நடுவிலாச்சிக்காகக் காடேறப்போனாலும் அவ்வளவிலே மீண்டுவரப்பெற்றதே! ஸீதாவியோக வ்யாஜேந யுத்தரங்கத்திலே போகவேண்டிற்றே! என்றீடுபாடு தோற்றுகிற தென்றதாய்த்து. கீழ் தாத்பர்யங்களை யருளிச்செய்து, சப்தார்த்த மருளிச்செய்கிறார் (கலைகளையுமித்யாதி.) "சிலையும்கணையும் துணையாக" என்ற பத ஸ்வாரஸ்யத்தாலே-செருக்களத்துச்சென்றது காவதவர்த்தாந்தமாகச்சொல்லு[கரு லாயிருந்ததேயாகிலும், கானம்போய் என்னாதே "கடந்து" என்ற பதஸ்வாரஸ்யத் தாலே - லங்கையில் யுத்தரங்கமேயாகவேணு மென்று விவக்ஷித்து, ஆனால் தநுர் பாணங்களே துணை யென்னக்கூடுமோ வென்கிற சங்கையை உத்க்ஷேபிக்கிறார் (லக்ஷ்மணாதிகளோ வென்னிலென்று.) ஆதிசப்தத்தாலே - ஸுக்ரீவ மாருதி விபீ ஷணர்களைச் சொல்லுகிறது. இளையபெருமாள் "రామస్యదక్షిణోబాహు:" "ராம ஸ்யதக்ஷிணோபாஹு:" என்னும்படி யிருக்கையையும், ஸுக்ரீவர் (க) ஏகக்ரீவ ராய்ப்போந்தபடியையும், திருவடி திருவடிகளாய்ப் போந்தபடியையும், ஸ்ரீ விபீஷணாழ்வானை இக்ஷ்வாகுவம்ச்யராக நினைத்தபடி யாலே ராம பாஹ்யன் தாநாபிஷிக்தரானபடியையு முட்கொண்டு பரிஹரிக்கிறார் (அவர்களையுமித்யாதி.)

---

(க) ஏகக்ரீவர் - ஒருமிடறாயிருப்பவர்.

முதலிகளடங்கலும்பெருமாளுக்குக்குழைச்சரக்கானார்களாயித்தனையி
றே;"ராமலக்ஷ்மணகுப்தாஸா."(வென்றிச்செருக்களத்து) நலியவே
ணுமென்னு மபிஸந்தி யுண்டாய் நலியாத மிதுனங்களைத் தப்பிப்போ
னால் பின்னையும்போய்ப்புகுமிடம்யுத்தபூமியாய்த்து. வென்றியை[ரு
யுடைத்தான போரை விளைக்கக்கடவ யுத்தபூமியிலே.

அங்குப்போய்ப்புக்கபின்பு செய்த சேஷ்டிதங்களைச் சொல்லுகி
றதுமேல் (மலையித்யாதி) பெரியக்ஷோபத்தை யுடைத்தான கடலை,
நீரிலே ஆழக்கடவ மலைகளைக் கொண்டு அணையாகக்கட்டி, மதிளையும்
அதுக்ககழான கடலையு முடைய லங்கையைக்கலவிருக்கையாகவுடை
யனுமாய், ஒருதேவதையை யாச்ரயித்து அதின்பக்கலிலே ஒரு
வாளைப்பெற்று அது தனக்கரணாக நினைத்திருப்பானாய், ஸர்வர்க்குக்
கெல்லாம் நியாமகனா யிருக்கிற ராவணனுடைய தலைகள் பத்தையும்
அறுத்து,"தேவர்களும்தந்தாமுடைய குடியிருப்புப்பெற்றார்கள்! ருஷி
களும்தந்தாமுடைய ஆச்ரமங்களிலேயிருந்து தபஸ்ஸுபண்ணப் [யரு
பெற்றார்கள்!" என்றுஉகந்தவன் ; அப்படி ஆச்ரிதவிரோதியைப்
போக்கிப் பிற்பட்டார்க்கு முதவுகைக்காக வந்துவர்த்திக்கிற ஸ்ரீஸா
ளக்ராமத்தை யாச்ரயிக்கப் பாராய் நெஞ்சே ! என்கிறார். ... க.

அ.—இரண்டாம்பாட்டு.—ராவணனை நிரஸித்தபடியைச் சொ
ல்லிற்று-முதற்பாட்டில் ; அதுக்குறுப்பாக அவனுடைய முதல்நாளை
ப்படையெழுச்சி சொல்லுகிறது - இதில்.

---

முதலிகளடங்கலுமென்றது - மற்றுமுள்ள வாநரமுதலிகளெல்லாரு மென்றபடி.
(குழைச்சரக்கு) குழையென்று - பையாய், பையில் சரக்குப்போலே ரக்ஷ்யமெ
ன்றபடி.

"வென்றி" என்று விசேஷிக்கையாலும் - காட்டைப்பற்றவும் பாதகத்வத்தி
லாதிக்யம் ஸூசிதமாகிறதென்கிறார். நலியவேணுமென்னுமபிஸந்தியில்லாதமிருக
ங்களுள்ள காட்டைத்தப்பிப்போகப் பெற்றால் நலிகைக்குஇப்போது வரப்புகுகிறா
ரென்று (க) விஜிகீஷுக்க ளிருக்குமிடத்தில் புகவேண்டிற்றே என்று கருத்து.
சப்தார்த்தம் (வென்றியையித்யாதி.)

மேலுக்கவதாரிகை(அங்கித்யாதி.)"செருக்களத்து-சென்றான்" என்றது- [கடல
ஸமுத்ரதீரத்திலே படையெடுத்து விட்டபோதே போய்ப்புக்கது ஸித்தவத்கரி
த்தருளிச் செய்தாரென்று திருவுள்ளம்பற்றி, ஸமுத்ரத்தில் ஸேதுபந்தநத்தையும்
அங்குப்புக்குச்செய்த செயலாக வருளிச்செய்தாரென்று கண்டுகொள்வது. ஒரு
தேவதை - ருத்ரன். அரணாக - ரக்ஷகமாக. "సహిదేవైరుదీర్ణస్య రావణస్యవధార్థిభిః|
అర్థితో మానుషేలోకే జజ్ఞేవిష్ణుస్సనాతనః" "ஸஹிதேவை ருதீர்ணஸ்ய ராவணஸ்ய
வதார்த்திபி: । அர்த்திதோ மாநுஷேலோகே ஜஜ்ஞேவிஷ்ணுஸ்ஸநாதந:" என்றும்
"దేవయంభవతాం రక్ష్య భవద్విషయవాసినః" "தேவயம்பவதாரக்ஷ்யா பவத்விஷ
யவாஸிந:" என்றும் சொல்லுகிறபடியே - இவர்களுக்காக ராவணன்தலையை
யறுத்தானாகையாலே வந்தவுகப்பை யருளிச்செய்கிறார் (தேவர்களுமித்யாதி.) க.

இரண்டாம்பாட்டு.—(கடஞ்சூழித்யாதி.) அரக்கர்தலைவன்தலைபத்தறுத்த[உய
பின்பு இலங்கை பொடியாம்படி சரந்துரந்தா னென்னுமது கூடாமையாலே,
தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ரவணனையித்யாதி.) அதுக்குறுப்பாக - நிரஸநத்து
க்குறுப்பாக. இத்தால் - படையெடுத்து வந்திருந்த அம்பு கோத்தானாகையாலே
தலையறுத்து விட்டாரென்று கருத்து.

---

(க) விஜிகீஷுக்கள் - ஜயிக்கவேணுமென்னும்இச்சையுடையவர்கள்.

மூ.—கடஞ்சூழ்கரியும் பரிமாவு மொலிமான்தேரும் காலாளும்-
உடன்சூழ்ந்தெழுந்தகடியிலங்கைபொடியாவடிவாய்ச்சரந்துரந்தான்;
இடஞ்சூழ்ந்தெங்குமிருவிசும்பிலிமையோர்வணங்கமணங்கமழும் -
தடஞ்சூழ்ந்தெங்குமழகாய சாளக்கிராமமடை நெஞ்சே!. ... ௨.

---

ப-ரை.—கடம்சூழ் - மும்மதங்களையுடைய, கரியும் - யானைகளும், பரி
மாவும் - குதிரைகளும், ஒலி - சப்தியாநின்றுள்ள, மாத்தேரும் - மஹாரதங்க
ளும், காலாளும் - பதாதிகளும், உடன்சூழ்ந்து - ஒன்றாகத்திரண்டு, எழுந்த -
கிளர்ந்துதோற்றின, கடி-அரணையுடைத்தான, இலங்கை-லங்கையிலுள்ளதூர்வர்க்
கமானது,பொடியா-நீரும்படிச்சீடாக, வடி - கூரிய, வாய் - வாயையுடைத் [ய
தான, சரம் - பாணங்களை, துரந்தான் - ப்ரயோகித்த சக்ரவர்த்தித்திருமகன்,
இரு - பரப்பையுடைத்தான, விசும்பில் - ஸ்வர்க்கத்தில் வஸிக்கிற, இமையோர் -
தேவர்கள், இடம்எங்கும் - பூமிப்பரப்பெல்லாம், சூழ்ந்து - பரவி, வணங்க -
ஆச்ரயிக்கத்தக்கதாய், மணம் - செங்கழுநீர்முதலியபுஷ்பங்களின்வாஸனையை,
கமழும் - வீசாநின்றுள்ள, தடம் - தடாகங்களாலே, சூழ்ந்து -சூழப்பட்டிரு[யிரு
ப்பதாய், எங்கும் - எல்லப்பக்கங்களிலும், அழகாய - அழகையுடைத்தாயிருக்கிற,
சாளக்கிராமம்அடைநெஞ்சே!—. (௨)

---

வ்யா.—(கடஞ்சூழித்யாதி) ஜிஷிதான் படை யெழுச்சியைச்
சொன்ன க்ரமத்திலே சொன்னரிவரும். மதஜலத்தை யுடைத்தாய்
மலை வடிவுகொண்டு நடந்தாப்போலே யிருக்கிற ஆனைத்திரளும், [உய
அதுக்கநந்தரம் குதிரைத்திரளும், கோஷத்தையுடைத்தா யிருந்து
ள்ள பெரிய தேர்களும், காலாளும், இவை யுடைய ஒன்றாகத்திர
ண்டு பெரியகிளர்த்தியோடே தோற்றின அரணுடைத்தான லங்கை,
"ஶ்மஶாநஸத்ருஶீ பவேத்" "ச்மசாந ஸத்ர்ஸீ ஹவேத்" என்கிறபடியாய்ப் போ
ம்படிக்கீடாக,வடித்தவாயையுடைத்தான சரத்தைநடத்தினுய் [உரு
த்து. (இடமித்யாதி) ஹூமியி லவகாசமுள்ள விடமெங்கும் பரந்து
கொண்டு பரப்புடைத்தான ஸ்வர்கத்தில் தேவர்க ளாச்ரயிக்க, பரி
மளப்ரசுரமான தடாகங்களை யுடைத்தாய் எங்குமொக்க தர்சநீயமா
யிருக்கிற ஸ்ரீஸாளக்ராமத்தை யாச்ரயிக்கப்பார்.... ... ௨.

---

க்ரமத்திலேயென்றது-ரத கஜ துரக பதாதிகளாகிற சதுரங்கஸேனையை[நய
ச்சொல்லும் க்ரமத்திலே யென்றபடி. "கடம்" என்றதினர்த்தம் (மதஜலத்தை
யென்றது.) ஆனைகளை வர்ணிக்கிற விடத்திலே, "விலங்கல்போல்வன" என்று
வர்ணிக்கையாலே அது இங்கு விவக்ஷித மென்றருளிச்செய்கிறார் (மலையித்யாதி)
மதஜலமுண்டாவது ஒரு வயோவிசேஷத்திலே யாகையாலே அப்போதையில்
மஹத்வம் த்யோதிதமென்று கருத்து. மாத்தேர் என்னும் வல்லொற்று மெல் [நரு
லொற்றாய், மாந்தேர் என்றாய், அதுதானும், குந்தம் என்னுமது குன்றம்என்று
கிடக்கிறாப்போலே"மான்றேர்" என்றுகிடக்கிறதென்று திருவுள்ளம்பற்றி (பெரிய
தேர்களுமென்றது.) "மால்" என்று - பெருமையாய், "வன்றாளினிணைவணங்கி"
என்கிறவிடத்தில், வலிமையை யுடைய தாளென்ற வோபாதி, "மான்றேர்"
என்று - மாலானதேரென்கிறதென்றாகவுமாம்.கடி-கட்டுடைமையாய்,அரணை [சய
யுடைத்தாயென்றபடி. வடித்த - கூரிடப்பட்ட. (ஆச்ரயிக்க) என்ற வாக்ரம்,
தக்கதாய் என்றுசேஷம். சரந்துரந்தான், அவனுக்கிடமாயிருக்கிற சாளக்கிராமம்
என்றந்வயம். ... ... ... ... ... ... ௨.

மூ.—உலவுதிரையும் குலவரையு மூழிமுதலாவெண்டிக்கும்,
நிலவும் சுடரு மிருளுமாய் நின்றான் ; வென்றிவிறலாழி -
வலவன்;வானோர்தம்பெருமான்;மருவாவரக்கர்க்கெஞ்ஞான்றும்-
சலவன்;சலஞ்சூழ்ந்தழகாய சாளக்கிராமமடை நெஞ்சே!. ... ௩.

---

ப - ரை.—உலவு - ஸஞ்சரியாநின்றுள்ள, திரையும்-அலையையுடையகடலும், குலம் - ச்லாக்யமான,வரையும் - பர்வதங்களும், ஊழிமுதலா - காலம்முதலாக, எண்திக்கும் - எட்டுதிக்கிலுள்ள பதார்த்தங்களும், நிலவும் - சந்த்ரனும், சுடரும் - ஸூர்யனும், இருளும் - அந்தகாரமுமாகியஇவற்றுக்கு, ஆய் - ப்ரகாரியாய், நின்றான் - நின்றவனாய், வென்றி - ஜயத்தையும், விறல் - மிடுக்கையு [மு முடைய, ஆழி - திருவாழியை, வலவன்-வலத்திருக்கையிலுடையனாய், வானோர் தம் - ப்ரஹ்மாதிகளுக்கு, பெருமான் - ஸ்வாமியாய், மருவா - தன்னைக்கிட்டி ஆச்ரயியாத, அரக்கர்க்கு - ராக்ஷஸர்கள்விஷயத்தில், எஞ்ஞான்றும் - நித்ராஸமயத்திலுங்கூட, சலவன் - பகைமைபாராட்டுமவன் நித்யவாஸம்பண்ணுமதாய், சலம்-ஜலத்தாலே, சூழ்ந்து - சூழப்பட்டு, அழகாய - அழகாயிருக்குமுள்ள, [மரு சாளக்கிராமமடைநெஞ்சே!— ... ... ... ... (௩)

---

வ்யா.—மூன்றாம்பாட்டு.—(உலவித்யாதி) ஸஞ்சரியாநின்றுள்ள திரையையுடைத்தாய் – பெரியகோஷத்தை யுடைத்தான கடலும், மலையும்துடக்கமாக. (ஊழிமுதலா எண்டிக்கும்) காலோபலக்ஷித மான ஸகலபதார்த்தங்களுமான எட்டுதிக்கும், சிலநாள் வர்த்திக்க [உம க்கடவராயிருக்கிற சந்த்ரஸூர்யர்களும், அதுக்கெதிரான இருளுமா ய், அதடைய "தான்" என்கிற சொல்லாலே சொல்லலாம்படி தன க்கு ப்ரகாரமாகவுடையனாய் நின்றான். இத்தால் – ஜகதாகாரனாய் நிற்குந்நிலை சொல்லிற்று ; மேல் – அஸாதாரண திவ்யவிக்ரஹயுக்த னான நிலையைச்சொல்லுகிறது(வென்றியித்யாதி) ஆச்ரிதரக்ஷணத்[உரு துக்குப் பரிகரமான திருவாழியை வலவனாகை யுடையவன். (வா னோர்தம் பெருமான்) ப்ரஹ்மாதிகளுக்கு ஆச்ரயணீயனானவன். (மரு வா) கண்வளர்ந்தருளும்போதும், தன்னோடு பொருந்தாத அஸுரவர் கத்துக்கு,"அவுணர்க்கென்றும்சலம்புரிந்து" என்கிறபடியே – சாத்ர வத்தையுடையனா யிருக்குமவன் ; ஏவம்விதனானவன் வந்து ஸந்நிதி பண்ணுகிற ஜலஸம்ருத்தியை யுடைத்தாய் தர்சநீயமாயிருக்கிற. ௩.

---

அ.—மூன்றாம்பாட்டு.—(உலவுதிரையு மித்யாதி.) இப்படி படையெழுச்சி யோடே வந்த ராவணனை நிரஸித்த வநந்தரம், "తమస్సపరమోధాతా శంఖచక్రగదాధరః" "தமஸ:பரமோதாதா சங்கசக்ரகதாதர:" என்றும் "భవాన్నారాయణో దేవః" "பவாந்நாராயணோதேவ:"என்றும் பெருமானுடையபரத்வம் ஸ்புட [௩௫ தரமாகச் சொல்லப்படுகையாலே, இவரும் அந்த பரத்வத்தை யருளிச்செய் கிறா ரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

பலிதம் (பெரியவித்யாதி.) (துடக்கமாக) என்றவநந்தரம், பெரும்பெருத்த பதார்த்தங்களும் என்று சேஷம். எட்டுதிக்கும் - எட்டுதிக்கிலுள்ள பதார்த்தங்களும். நிலவு - சந்த்ரன். வென்றி – ஜயத்தையும், விறல் - அதுக்குறு [சும ப்பான மிடுக்கையு முடைய, "ஆழி" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கி றார் (ஆச்ரிதேத்யாதி.) "எஞ்ஞான்றும் - மருவாவரக்கர்க்கு - சலவன்" என்றந்வ யம் விவக்ஷித் தருளிச்செய்கிறார் (கண்வளர்ந்தித்யாதி.) இத்தால் - நித்ராஸமய த்திலும் ப்ரதிபக்ஷத்தின்மேலே சீற்றமுடையவரென்று, "కాలాగ్నిసదృశః క్రోధే" "காலாக்நிஸத்ருச:க்ரோதே" என்னும் குணநிக்யம் சொல்லிற்று. ... ௩.

மூ.—ஊரான்; குடந்தையுத்தமன்; ஒருகா லிருகால் சிலைவளையத்—
தேராவரக்கர்தேர்வெள்ளம்செற்றான்; வற்றாவருபுனல்சூழ்—
பேரான்; பேராயிரமுடையான்; பிறங்குசிறைவண்டறைகின்ற—
தாரான்; தாராவயல் சூழ்ந்த சாளக்கிராமமடைநெஞ்சே. ௪.

ப-ரை.—ஊரான் - திருவூரகத்தைத்தனக்கு வாஸஸ்தாநமாக வுடையனாய்; "கிடந்தவாறெழுந்திருந்து பேசு" என்று ஆச்ரிதர்நியமிக்கும்படிக்கீடாக, குடந்தை - திருக்குடந்தையில்க ண்வளர்ந்தருளுகிற, உத்தமன் - புருஷோத்தமனாய்; ஒருகால் - கரன் முதலானோர் எதிர்த்தபோது, சிலை - வில்லினுடைய, இருகால் - இரண்டுகோடியையும், வளைய - வளைத்துத் தம்முடையவல்லமையைக்காட்ட, [ய தேரா - இவனை நம்மால் வெல்லமுடியாது என்று ஆராய்ந்தறிய மாட்டாத, அரக்கர் - ராக்ஷஸருடைய, தேர்வெள்ளம் - ரதஸமூஹங்களை, செற்றான் - நிர்நாம் நிர்நாமம்படி பண்ணினவனாய்; வற்றா - வற்றுதலின்றிக்கே, வரு - மேல்மேலும் வெள்ளமிடாநின்றுள்ள, புனல் - ஜலத்தாலே, சூழ் - சூழப்பட்ட, பேரான் - திருப்பேர்நகரில் நித்யவாஸம்பண்ணுமவனாய்; ஆயிரம்பேர்உடையான் - தன்குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான அநேகம்திருநாமங்களை யுடையனாய், பிறங்கு - நெருங்கி யிருந்துள்ள, சிறை - சிறகுகளையுடைய, வண்டு - வண்டுகளானவை, அறைகின்ற - ஆளத்திவைத்துப்பாடாநின்றுள்ள, தாரான் - திருத்துழாய்மாலையையுடையனான ஸர்வேச்வன் எழுந்தருளியிருக்குமதாய், தாரா - தாராஎன்னும்ஜலபக்ஷிகள் நிறைந்த, வயல் - வயல்களாலே, சூழ்ந்த - சூழப்பட்ட, சாக்ளகிராமம் - ஸ்ரீஸாளக்ராமத்தை, நெஞ்சே! அடை—. ... (௪)

அ.—நாலாம்பாட்டு.—அதுக்கும் முன்னே யுண்டான வரவயவ்ஜைத்தாந்தத்தைச் சொல்லுகிறது.

வ்யா.—(ஊரான்) திருவூரகத்தைத் தனக்கிருப்பிடமாக வுடையவன். (குடந்தை யுத்தமன்) அவாகள் அபேக்ஷையின்றிக்கேயிரு[உறு க்க ஆஸ்ரிதரக்ஷணத்துக்காகத் தானே திருக்குடந்தையிலே வந்து சாய்ந்தருளின நீர்மையி லேற்றத்தை யுடையவன். அன்றிக்கே, (திருக்குடந்தை - ஊரான் - உத்தமன்) என்றும் சொல்லவுமாம். (ஒருகால்) ஒருக்கால். (இருகால்சிலை வளைய) வில்லிரண்டுகோடியும் வளையும்படியாக. ராவணன் வளையாமையாலே வில்லை வளைத்தான். (தேராவரக்க ரித்யாதி) "சக்ரவர்த்தித்திருமகனிறே நமக்கெதிரியாய் வருகிறான்!" என்று மதிக்கவறியாத ராக்ஷஸருடைய தேர்வெள்ளத்தை

நாலாம்பாட்டு.—(ஊரானித்யாதி.) கீழ்ச்சொன்ன ராவணவதந்தான் வாநர வீரர்களும் தாங்களுமாய்ச் செய்ததாகையாலே அதிலு மத்புததமமாகத் தனியே நின்று வென்ற வீர ரஸந்தன்னை யநுஸந்திக்கிறாரென்று விவக்ஷித்து, "தேர்[கூடு வெள்ளம்" என்றபதத்திலே நோக்காக அவதாரிகை யருளிச்செய்கிறார் (அதுக்கு மித்யாதி.)

அவர்கள் - திருக்குடந்தையிலுள்ளார். அபேக்ஷை-ரக்ஷாபேக்ஷை. "கால்" என்று - வில்லின் நுனியாய், அருளிச்செய்கிறார் (வில்லித்யாதி.) (ராவணன்) என்றது-உபலக்ஷணமாய், "கரமேயம்" என்னத்தக்க கராதிகளைச்சொல்லுகிற[து. "தேரா" என்று - விசாரியாதவென்றாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (சக்ரவர்த்தித் திருமகனிறே யித்யாதி.)

மூ.—அடுத்தார்த்தெழுந்தாள்பிலவாய்விட்டலறவவள்மூக்கயில்வாளால் விடுத்தான்; விளங்குசுடராழிவிண்ணோர்பெருமான்; நண்ணார்முன் கடுத்தார்த்தெழுந்தபெருமழையைக்கல்லொன்றேந்தியினநிரைக்காத் தடுத்தான்; தடஞ்சூழ்ந்தழகாய சாளக்கிராமமடைநெஞ்சே. ரு.

ப-ரை.—அடுத்து - மேல்விழுந்துகிட்டி, ஆர்த்து - ஆரவாரித்துக்கொண்டு, எழுந்தாள் - கிளர்ந்துதோற்றின சூர்ப்பநகையானவள், பிலம் - குகைபோன்ற, வாய்விட்டு - வாயைத்திறந்து, அலற - கூப்பிடும்படி, அவள் - அவளுடைய, மூக்கு - மூக்கை, அயில் - கூர்மைபொருந்திய, வாளால் - வாளாலே, இளையபெருமாளைக்கொண்டு, விடுத்தான்-அறுத்தவனாய்; விளங்கு - மிகவும் ப்ரகாசியாநின் [ற] துள்ள,சுடர் - ஒளியை யுடைத்தான, ஆழி - திருவாழியையுடையனாய், அத்தாலே, விண்ணோர் - நித்யஸூரிகளுக்கு, பெருமான் - நிர்வாஹகனாய்; இந்த்ரன் ஏவுதலாலே, கடுத்து - பெரியவேகத்தோடே, ஆர்த்து - சப்தித்துக்கொண்டு, எழுந்த - தோற்றின, பெருமழையை - மஹாவர்ஷத்தை, நண்ணார்முன் - அவனுக்கு நப்பகைவரான இடையர் முன்னே, இனம் - கூட்டமாயுள்ள, நிரைக்கா - பசுக்களின் [ர]க்ஷிக்கைக்காக, கல்லொன்று - கோவர்த்தநமென்றும்ஒருமலையை, ஏந்தி - தரித்து, தடுத்தான் - அம்மழையை மறுத்தவன் நித்யவாஸம் பண்ணுமதாய், தடஞ்சூழ்ந்து - தடாகங்களாலே சூழப்பட்டு, அழகாய - அழகாயிருந்துள்ள, சாளக்கிராமமடைநெஞ்சே!—. ... ... ... ... ... (ரு)

அழியச்செய்தானாய்த்து. (வற்றுவித்யாதி) நின்ற நீர் வற்றாக்கடவ [து] தன்றிக்கே மேன்மேலே வாராநின்றுள்ள புனலையுடைத்தா யிருக்கிற திருப்பேரைத் தனக்கு வாஸஸ்தாநமாக வுடையவன். (பேராயிர முடையான்) தன்குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான அநேகம் திருநாமங்களையுடையவன்.

அந்நாமத்வாரா அநுபவிக்கும் வடிவைச்சொல்லுகிறது [உடு] (பிறங்கித்யாதி) நெருங்கியிருந்துள்ள சிறகையுடைத்தான வண்டுகளானவை மதுபாநம் பண்ணிஅறையாநின்றுள்ள மாலையை யுடையவன். (தாராவித்யாதி) ஊரடங்கலும் மநுஷ்யர் குடியிருப்பு நெருங்கியிருக்குமாப்போலே, தாராவாகிற பக்ஷிகளாலே நெருங்கியிருந்துள்ள வயலாலேசூழப்பட்டிருந்துள்ள சாளக்கிராமமடைநெஞ்சே. ... ச.

அ.—அஞ்சாம்பாட்டு.—அதுக்கு முன்னான சூர்ப்பநகாநிரஸநத்தை யருளிச்செய்கிறார்.

வ்யா.—(அடுத்து)மேல்விழுந்துவந்துகிட்டி.(ஆர்த்தெழுந்தாள்) ஆரவாரத்தைப்பண்ணிக்கொண்டு கிளர்ந்து வந்து தோற்றினவள்,

மேலுக்கவதாரிகை(அந்நாமத்வாரேத்யாதி.)அறையாநின்றுள்ள-சப்தியா [நின்றுள்ள]. ... ... ... ... ... ... ... ச.

அஞ்சாம்பாட்டு.—(அடுத்தார்த்தித்யாதி.) தேரோவரக்கர் தேர்வெள்ளத்தை நிரஸிக்கைக்குக் காரணமென்னென்கிற சங்கைக்குப் பரிஹாரந்தோன்ற வவதாரிகை யருளிச்செய்கிறார் (அதுக்கித்யாதி.)

(கிளர்ந்துவந்துதோற்றினவள்)என்கையாலே - பிராட்டிபக்கல்அபசாரப்[பட] ப்படி தோற்றுகிறது.

மூ.—தாயாய்வந்த பேயுயிரும் தயிரும் விழுதுமுடனுண்ட -
வாயான் ; தூயவரியுருவிற்குறளாய்ச் சென்று மாவலியை -
யேயானிரப்ப மூவடிமண் ணின்றே தாவென்றுலகேழும் -
தாயான் ; காயாமலர்வண்ணன்;சாளக்கிராமமடைநெஞ்சே. சூ.

ப-ரை.—தாயாய் வந்த - தாயவடிவு கொண்டுவந்த, பேய் - பூதனை யுடைய, உயிரும்-ப்ராணனையும், தயிரும்-யசோதைப்பிராட்டி தோய்த்து வைத்த தயிரை யும், விழுதும் - கடைந்துதிரட்டின வெண்ணெயையும், உடன்உண்ட - ஒக்க அ முதுசெய்த, வாயான் - திருப்பவளத்தையுடையனாய், ஏயான்-இரத்தற்குத்தகாத தான், தூய - பரிசுத்தமாய், வரி - அழகாயிருந்துள்ள, உருவின்-ரூபத்தையுடை [ய ய, குறளாய் - வாமநனாய், மாவலியை - மஹாபலிபக்கலிலே, சென்று - போய், இன்றே - இப்போது, மூவடிமண்தா என்று - மூன்று அடி நிலம் தரவேணும் என்று, இரப்ப - யாசிக்க, அவன் நீர்வார்த்துத் தந்தவுடனே, உலகு ஏழும் - ஏழுலோகங்களையும், தாயான் - தாவி அளந்துகொண்டவனாய், காயாமலர் - கா யாம்பூப் போன்ற, வண்ணன் - திருநிறத்தையுடைய ஸர்வேச்வரன் நித்ய [யிரு வாஸம்பண்ணுகிற, சாளக்கிராமமடை நெஞ்சே!—.... ... ... (சூ)

ஸிலம்போலேயிருக்கிற வாயைத்திறந்து கூப்பிட, அவளுடைய மூக்கை. (அயில்) கூர்மை. கூரிய (க) திருக்குற்றுடைவாளைவாங்கி ப்போக்கிறான். ( விளங்கித்யாதி ) கையுந்திருவாழியுமான சேர்த்தி யழகைக்காட்டி நித்யஸூரிகள்கார்யத்தை நிர்வஹித்துக்கொண்டு[உயி போருகிறவன். (நண்ணாரித்யாதி) சத்ருக்கள் முன்பே இந்த்ரனுடைய அஹிஸந்திபூர்வகமாக வருகிறதாகையாலே பெரியவேகத்தோடே வோஷித்துக்கொண்டு தோற்றின மஹாவர்ஷத்தை கோவர்த்த கிரியையரித்து, பண்ணின வுபகாரத்தையு மறியாதே ஸ்வரக்ஷணத் துக்குப் பரிகாரமுமில்லாத பசுக்களை நோக்குகைக்காகத் தடுத்தா[உரு னாய்த்து. தடாகங்களாலே சூழப்பட்டு தர்சநீயமான. ... ... ரு.

வ்யா.—ஆறும்பாட்டு.— ( தாயாயித்யாதி ) தாய்வடிவைக்கொ ண்டுவந்த பூதனையுடைய வுயிரையும், யசோதைப்பிராட்டியுடைய

அவள்மூக்கைப்போக்கினவர் இளையபெருமாளேயாகிலும்,"రామస్య దక్షిణో బాహుః" "ராமஸ்ய தக்ஷிணோபாஹு:" என்கிறபடியே அவயவபூதராகையைப் பற்றப் பெருமாள் போக்கினாரென்னத்தட்டில்லை.

இப்படி மஹர்ஷிகளுக்கு உபகாரகனான வளவன்றிக்கே ஜ்ஞாநாதிகரான ஸூரிகளுக்கும் அஜ்ஞர்களான பசுக்களுக்கு முபகரிக்குமவனென்று திருவுள்ள த்தில் தோற்றி யருளிச்செய்கிறாரென்று "விளங்குசுடர்" இத்யாதி பாட்டுசே ஷத்துக் கவதாரிகை கண்டுகொள்வது. சத்ருக்கள்முன்பே யென்றது - எதிரிட்டு வந்த இந்த்ராதிகள் முன்பே யென்றபடி. யத்வா, நந்தவ்ரஜத்திலுள்ளாரென்றாய், இந்த்ரனுக்கு க்ரோதநீயத்வம் சொல்லவுமாம். "கடுத்து" என்றதினர்த்தம் (வேகத் தோடே யென்றது;) "கடுகவர" என்னக்கடவதிறே. ... ... ரு.

ஆறும்பாட்டு.—(தாயாயித்யாதி.) பசுமேய்க்கும் பருவத்திற்செய்த கோ வர்த்தநோத்தரணத்திலு மாச்சர்யாவஹ மாகையாலே சைசவத்தில் சரிதத்தை யநுஸந்தித்துக்கொண்டு, க்ர்ஷ்ணாவதாரத்தோடு (உ) தோள்தீண்டியான வாமந வ்ர்த்தாந்தத்தை யநுஸந்திக்கிறா ரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(க) திருக் குற்றுடை வாள் - குறு - சிறிய, உடைவாள் - அரையில்தரிக்கும் கத்தி
(உ) தோள்தீண்டி - புஜஸ்பர்சி, ஸமமென்றபடி.

மூ.—ஏனோரஞ்ச வெஞ்சமத்து ளரியாய்ப் பரியவிரணியனை-
ஊனாரகலம்பிளவெடுத்த வொருவன் ; தானே யிருசுடராய்,
வானாய்த், தீயாய், மாருதமாய், மலையா யலைநீருலகனைத்தும்-
தானாய்த் ; தானுமானான்றன் சாளக்கிராமமடைநெஞ்சே. எ.

ப-ரை.—ஏனோர் - சத்ருக்களான அஸுரர்கள், அஞ்ச - பயப்படும் படியாக, வெம் - க்ரூரமான, சமத்துள் - யுத்தத்திலே, அரியாய் - நரஸிம்ஹரூபத்தை யுடையனாய்க் கொண்டு, பரிய - தடித்த சரீரத்தை யுடையனான, இரணியனை - ஹிரண்யனுடைய, ஊனார்-மாம்ஸம் நிறைந்த, அகலம்-மார்பை, பிளவு எடுத்த-இழித்துப்பொகட்ட, ஒருவன் - ஒப்பற்ற பலத்தை யுடையனாய் ; தானே - இப்படிப்பட்டவன் தானே, இருசுடராய் - சந்த்ரஸூர்யர்களாயும், வானாய்-ஆகாசமாயும், தீயாய் - அக்நியாயும், மாருதமாய் - காற்றாயும், மலையாய் - மலைகளாயும், அலைநீர் - அலையையுடைய ஸமுத்ரத்தால் சூழப்பட்ட, உலகுஅனைத்தும் - எல்லாலோகங்களும், தானாய் - தான் என்னலாம்படி நின்றவனாயும், தானுமானான்றன் - இப்படி ஸர்வாந்தர்யாமியான ஸர்வேச்வரனெழுந்தருளியிருக்கிற, சாளக்கிராமமடை நெஞ்சே!—. ... ... ... ... ... (எ)

தயிரையும், வெண்ணெயையுமொக்க அமுதுசெய்த திருப்பவளத்தை யுடையவன். அநுகூலஸ்பர்சமுடைய த்ரவ்யமும் ப்ரதிகூலருடைய ப்ராணனு மொக்க தாரகமாக வளர்ந்தவன். (தூயவித்யாதி) கண்ணழிவற்ற வாமநவேஷத்தை யுடையனாய். அம்புக்குச் செல்லாத இடத்தை அழகாலே வசீகரிக்கும்படியான வாமநவேஷத்தை யுடையனாய்க்கொண்டு சென்று. (ஏயானிரப்ப) "மோஹஸஹஸ்ர ப்ரதாதாரம்" "[illegible]" "ந ஜ்யாந்த ப்ரதிக்ரஹணீயாத்" என்று - இரப்புத் தகாத தான் சென்றிரக்க. (மாவலியையேயானிரப்ப) "கொடேன்" என்றே அஹிஸந்தி பண்ணியிருந்த அவன்பக்கலிலே இரப்ப என்னவுமாம். மூவடிமண் இப்போதேதரவேணு மென்று வேண்டிக்கொண்டு, அவனநுமதி பண்ணின வநந்தரம் மறுமநஸ்ஸுப் படுவதுக்கு முன்னே வளர்ந்து லோகங்களேழையு மளந்துகொண்டவன். (தாயான்) தாவினவன். (காயாமலர்வண்ணன்) அவ்வடிவைக்கொண்டாய்த்து பூமியையளந்தது. கூ.

"தயிரும்விழுதும்" என்றது த்ருஷ்டாந்ததயா என்னுமதுதோற்ற, உட்கருத்தை யருளிச்செய்கிறார் (அநுகூலேத்யாதி;) அநுகூலஸ்பர்சமுள்ளது தாரகமானாப்போலே, ப்ரதிகூலருடைய ப்ராணனும் தாரகமாவதேயென்றுகருத்து. இத்தால் - ப்ரதிகூலநிரஸநமிவனுக்கு ஜந்மஸித்த மென்றதாய்த்து. (கண்ணழிவற்ற) என்றதுக்கு விவரணம் (அம்புக்கித்யாதி.) தூய - பரிசுத்தமான, வரி - அழகையுடைத்தான, உருவின்- ரூபத்தை யுடைய, குறளாயென்றுசப்தார்த்தம். (ஏயான்) ஏய்கை - பொருந்துகையாய், இரப்புப்பொருந்ாதவனென் றருளிச்செய்கிறார் (மோஹஸஹஸ்ரேத்யாதி.) இப்பக்ஷத்தில், "மாவலியை யேயானைதானிரப்ப, தூய வரியுருவிற்குறளாய்ச் சென்று - மூவடிமண்ணின்றே தாவென்றுலகேழும்தாயான்" என்றந்வயம். அடைவேஅந்வயமாய், "இரப்ப" என்றத்தை இரப்பனென்று உத்தமனாக்கி, ஏகாரம் அவதாரணார்த்தமாக யோஜநாந்தரமருளிச்செய்கிறார் (கொடேனித்யாதி.) ... ... ... ... ... ... ... கூ.

மூ.—வெந்தாரென்பும் சுடுநீறும் மெய்யிற்பூசிக் கையகத்தோர் –
சந்தார்தலைகொண்டுலகேழும் திரியும்பெரியோன், தான்சென்றுஎன் –
எந்தாய்! சாபம் தீரென்ன ; இலங்கமுதுநீர் ‡ திருமார்வில் –
தந்தான் ; சந்தார்பொழில்சூழ்ந்த சாளக்கிராமமடைநெஞ்சே. அ.

ப-ரை.—வெந்தார் - தஹநம் பண்ணப்பட்டவர்களுடைய, என்பும் - எலும்பை மாலையாக தரித்தும், சுடுநீறு - அந்தசரீரங்களைக் கொளுத்தின சாம்பலை, மெய்யில் - தன்னுடம்பில்,பூசியும் - பூசிக்கொண்டும்,சந்துஆர் - துளைகளையுடைத்தாய், ஓர் - ஒருவராலும்நிறைக்கவொண்ணாத,தலை - ப்ரஹ்மகபாலத்தை, கையகத்து-கையிலே, கொண்டு- ஏந்திக்கொண்டும், இச்சாபத்தை நீக்கவல்லா [மு ருண்டோஎன்று, உலகேழும் - ஸகலலோகங்களிலும், திரியும் - திரியுமவனாய், பெரியோன்றான் - அழித்தல் தொழிலுக்கு நாம் கடவோம் என்று பெருமை பாவித்திருக்குமவனான ருத்ரன், சென்று - ஸர்வேச்வரன்பக்கல் போய், "என் எந்தாய்! - எனக்குஹிதபரனானவனே !, சாபம்-இந்தசாபத்தை, தீர்-போக்கியருளவேணும்," என்ன - என்று ப்ரார்த்திக்க ; இலங்கு- விளங்காநின்றுள்ள, [மூ திருமார்வில் - தன்திருமார்விலுண்டான, அமுதுநீர் - அம்ருதஜலத்தை, தந்தான்- தெளித்தப்போக்கினவன் நித்யவாஸம்பண்ணுமதாய், சந்து - சந்தநவ்ருக்ஷங்கள், ஆர் - நிறைந்த, பொழில்-சோலைகளாலே, சூழ்ந்த-சூழப்பட்டிருப்பதான, சாளக்கிராமமடை நெஞ்சே!—. ... ... ... ... (அ)

வ்யா.—ஏழாம்பாட்டு.—(ஏனோரித்யாதி) சத்ருக்களான ஆஸுர ப்ரக்ருதிகளஞ்சும்படியாக, யுத்தத்திலே நரஸிம்ஹமாய். (பரியவிரணியனை) ஊர்மாநத்தாலே தடித்த ஹிரண்யனை. "உடம்பையொழிய ஆத்மாவு மொன்றுண்டு, அத்தை யுடையானொருவனுண்டு, அவனைப் பெறவேணும்" என்னும் மென்மையும் கலந்துவளர்ந்த வுடலன்றே!. மாம்ஸப்ரசுரமாயிருக்கிற மார்வைப் பிளவுசெய்த அத்விதீய [உரு ன்; அப்படிப்பட்டவன்தானே, சந்த்ரஸூர்யர்களுக்கு அந்தராத்மதயாபுக்கு இவர்கள் தானென்னலாம்படியாய், ஆகாசமாய், தேஜஃபதார்த்தமாய், வாயுதத்வமாய், கார்யகோடியில் மலையாய், கடல் சூழ்ந்த பூமியடைய தான் என்னலாம்படி ஜகதாகாரனாய் நின்றநிலையைச்சொல்லுகிறது. (தானுமானான்) அஸாதாரண திவ்ய [ரூப விக்ரஹயுக்தனு யிருக்கிறவன். ... ... ... ... எ

எட்டாம்பாட்டு.—(வெந்தாரென்பும்) வெந்தவர்களுடைய எலும்பும் அது சுட்ட சாம்பலும் உடம்பிலே பூசி, கையிலே,

ஏழாம்பாட்டு.—(ஏனோரித்யாதி.) கீழ்ப்பாட்டில் த்ரிவிக்ரமாபதாநம் ப்ரஸ்துதமாகையாலே, அதுதானும் வ்யாப்திக்குப்ரத்யபிஜ்ஞாபகமாகையாலே[ரூ ஸ்மர்தமான வ்யாப்திக்கும் "எங்குமுளன்" என்ற சிறுக்கன் வார்த்தையை மெய்யாக்கின நரஸிம்ஹாவதாரம் ப்ரயோஜகதயா ஸ்மர்தமாய், அத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"பரிய" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (உடம்பையித்யாதி.)மென்மையும்கலந்தென்றது-பகவத்பரனுடம்புபோலே நினைந்துநைந் [உரு து க்ர்சமாயிருக்கு மதுவும் கலந்தென்றபடி. இங்ஙனன்றாகில், "ஊனுரதலம்" என்றபோதே பருத்திருக்கை அர்த்தஸித்தமிறே ; இப்படி விசேஷிக்க வேண்டாவிறே யென்று திருவுள்ளம். ... ... ... ... எ.

‡ "இலங்கு மதுநீர்" என்றும் சில ஸ்ரீகோசங்கள்,

மூ.—தொண்டாமினமு மிமையோருந்துணைநூல் மார்விலந்தணரும்,
அண்டா! எமக்கேயருளாயென்றணையுங்கோயிலருகெல்லாம்,
வண்டார்பொழிலின் பழனத்து வயலினயலே கயல் பாயத்
தண்டாமரைகள்முகமலர்த்துஞ்சாளக்கிராமமடைநெஞ்சே. ௯

ப-ரை.—தொண்டாம் இனமும்-அவனுக்கே எல்லாகைங்கர்யங்களும் செய்து போரும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய திரளும், இமையோரும் - நித்யஸூரிகளும், துணைநூல்-இரண்டுபூணூல்தரித்த, மார்வின் - மார்பினையுடைய, அந்தணரும் - ப்ராஹ்மணரும், "அண்டா - அண்டங்களுக்கெல்லாம் நிர்வாஹகனானவனே, எமக்கு - ஆச்ரயணீயரான எங்கள் விஷயத்திலே, அருளாய் - க்ருபைசெய்தருளவேணும்," என்று - என்று தனித்தனியே சொல்லிக்கொண்டு, அணையும் - வந்து ஆச்ரயிக்கிற, கோயில் - கோயிலினுடைய, அருகு எல்லாம்-ஸமீபஸ்தலங்களெங்கும், வண்டு - வண்டுகளாலே, ஆர் - நெருங்கப்பட்டிருந்துள்ள, பொழிலின் - சோலையிலுண்டான, பழனத்து அயல் - நீர்நிலங்களின் சுற்றுப்புறத்திலுள்ள, வயலின்-வயலில்நின்றும், கயல் - கயல்மத்ஸ்யங்களானவை, பாய - அந்த நீர்நிலங்களிலேபாய, தண் - குளிர்த்திமாறாத, தாமரைகள் - தாமரைமொட்டுக்களானவை, முகம் அலர்த்தும் - முகவிகாஸத்தை யடையாநின்றுள்ள, சாளக்கிராமமடை நெஞ்சே!—. ... ... ... ... ௯.

சந்துகளார்ந்திருந்துள்ள தலையைக்கொண்டு. எல்லா நரம்புகளும் வந்துகூடினவிடத்திலேயிறே ஛ேதித்தது. (உலகிறந்த்யாதி) கூறு செய்தவூரிலே கையும் கைத்தலையுமாய்த் திரிவாரைப்போலே, ஈச்வராபிமானியாய்த் தன்னாஜ்ஞை நடத்திப்போந்தவிடத்திலே கையுமோடுமாய்த் திரிந்த ஈச்வராபிமானியானவன் சென்று, "என் ஸ்வாமீ! என்னுடைய சாபத்தைப்போக்கவேணும்" என்ன. (¶திருமார்வில்-இலங்கமுதுநீர் - தந்தான்) விளங்காநின்றுள்ள திருமார்வில் அம்ருத ரூபமான ஜலத்தைக் கொடுத்து அவனுடைய சாபமோக்ஷத்தைப் பண்ணினவன். (சந்தார்பொழில்) சந்தநத்தாலே நிறைந்த பொழிலாலே சூழப்பட்ட. ... ... ... ... ௮.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு.— (தொண்டாமினமும்) "வழுவிலா வடிமைசெய்யவேண்டுநாம்" என்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய

எட்டாம்பாட்டு.—(வெந்தாரித்யாதி.) கீழ்த்திருமொழியிலே, "ஊன்முனிந்தவனதுடலிருபிளவா வுகிர் நுதிமடுத்து" என்று-அர்ப்பகனை ரக்ஷித்த ந்ருஸிம்ஹாபதாநாநந்தரம் அரன் சாபம் தவிர்த்தது ப்ரஸ்துதமானபடியாலே, இங்கும் கீழ்ப்பாட்டில் நரஸிம்ஹாவதாரம் ப்ரஸ்துதமாகையாலே ✽ வெந்திறற்சாபம் தவிர்த்தபடியை ஸவிஸ்தரமநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

சந்துகள் - நரம்புகள். "தலை" என்னவமைந்திருக்க, "சந்தார்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எல்லாநரம்புகளு மித்யாதி.) இத்தால் - ப்ராணவியோகம் பிறக்கும்படி மர்மத்திலே சேதித்தானாகையாலே தோஷாதிக்யம் விவக்ஷிதமென்று கருத்து. கூறுசெய்த - பங்கொண்ட. கைத்தலை - கைவிலங்கு. ... ... ... ... ... ... ௮.

¶ "இலங்கு - திருமார்வில் - அமுதநீர் - தந்தான்" என்றுல் ஸ்வரஸம்.

திரளும், நித்யஸூரிகளும், கேவலப்ராஹ்மணரும். "విద్యావినయసమ్ప న్నే బ్రాహ్మణే" "வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே" என்று பிரித்தாரிறே ஹாஷ்யகாரர். (அண்டா) தேவனே. எங்களுக்காச்ரயணீயனானவனே! எங்களுக்கருளவேணும் என்று தனித்தனியே சொல்லாநி[ம] ன்றுகொண்டு சேருகிற கோயிலரு கெல்லாம். (வண்டாரித்யாதி) வண்டுகளாலே மிடையப்பட்டுள்ள பொழிலிலுண்டான, பழனமுண்டு – நீர்நிலங்கள், அதினுடைய பர்யந்தங்களிலுண்டான வயலிலே நின்று கயலானது இந்த நீர்நிலங்களிலே வந்து பாய. (தண்டாமரைகள் முகமலர்த்தும்) கூத்தாடுமவர்கள் வாய்க்க அடியிட்டால் [ம ஸஹ்ஸ்யராயிருப்பார் தம் முகவிகாஸத்தாலே கொண்டாடுமாப்போலே, தாமரைகள் முகமலர்த்துமாய்த்து. ... ... சு.

அ.—ஒன்பதாம்பாட்டு.—(தொண்டாமித்யாதி.)கீழ்ப்பாட்டுக்களெல்லாவற்றுலும் - ராமக்ருஷ்ணதிருபேண அவதரித்துச் செய்தவற்றையெல்லாம் ஸ்ரீஸாளக்ராமத்திலே தர்மையக்யத்தாலே யநுபவித்தாராய், இனி ஸ்ரீஸாளக்ராமத்தை[மு யே ஸர்வருமாச்ரயிக்கும்படியைச் சொல்லுகிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"బ్రహ్మవిత్ బ్రాహ్మణః" "ப்ரஹ்மவித் ப்ராஹ்மண:" என்கிற ந்யாயத்தாலே.

"தொண்டாமினமும்" என்கிற ஸாமாந்யோக்திக்குள்ளே அந்தணரு மந்த:ப்ரவிஷ்டராயிருக்க தனித்தருளிச்செய்ததுக்கு த்ருஷ்டாந்த கதநமுகேந தாத்பர்யமருளிச்செய்கிறார் (வித்யேத்யாதி) "విద్యావినయసమ్పన్నే బ్రాహ్మణే గవి హస్తిని। శుని చైవ శ్వపాకే చ పణ్డితాః సమదర్శినః" "வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணேகவிஹஸ்திநி | சுநிசைவச்வபாகேச பண்டிதாஸ்ஸமதர்சிந:" என்கிறவசநத்தில், "విద్యావినయసమ్పన్నే కేవలబ్రాహ్మణే గోహస్తిశ్వశ్వపాకాదిషు" "வித்யாவிநயஸம்பந்நே கேவலப்ராஹ்மணேகோஹஸ்திச்வாச்வபாகாதிஷு" என்று வித்யாவிநய ஸம்பந்நன் தொண்டுபடுகைக்குஹேது-ஜ்ஞாநாதிகனென்றும்,நூலையேதுணையாகவுடைய[உரு த்விஜனை கேவலப்ராஹ்மணனென்றும் பிரித்தருளிச்செய்தாரென்றும் உட்கருத்து; கவாதிபதங்களிலே விசேஷண மிடாமையாலும், "வித்யாவிநயஸம்பந்நே" என்றதுக்கு ப்ரதிகோடி சொல்லவேண்டுகையாலும் பிரித்தாரென்று கண்டுகொள்வது. அண்டத்தை - ஆகாசத்தை, உடையவன், அண்டனென்றும், பலிதார்த்தம் (தேவனேயென்று.)"எமக்கு"என்றபதத்தை "அண்டா" என்றவிடத்தில்[கூய அநுஷங்கித்து, அத்தால் பலிதமருளிச்செய்கிறார் (எங்களுக்கித்யாதி.) மிடைய-நெருங்க. "அயலேயான - வயல்"என்றந்வயித்து (பர்யந்தங்களிலுண்டானவென்றது.) வண்டுகள் காயகராகவும்,கயல்கள் நர்த்தகராகவும், கமலங்கள் கண்டுகக்குமவர்களாகவும் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (கூத்தாடுமவர்களித்யாதி.)

பத்தாம்பாட்டு.—(தாராவித்யாதி.) [கூ

தொண்டாமினம் முதலானார் வர்த்திக்கை ஆச்சர்யமல்லாமையாலே, பக்ஷிவிசேஷங்கள் திவ்யதேசத்தைப்பற்றிக்கிடப்பதே! என்றுகூபட்டு விசேஷிக்கிறு

மூ.—தாராவாரும் வயல்சூழ்ந்த சாளக்கிராமத்தடிகளைக் -
காரார் புறவின் மங்கைவேந்தன் கலியனொலிசெய் தமிழ்மாலை,
ஆராருலகத்தறிவுடையா ரமரர் நன்னாட்டரசாளப் -
பேராயிரமுமோதுமின்க ளன்றி யிவையே பிதற்றுமினே.... ய.

ப-ரை.—உலகத்து - இந்தலோகத்திலே, அறிவுடையார் ஆரார் - அறிவுடையவர்கள் எல்லாரும், அமரர் - நித்யஸூரிகளுடையதாய், நல்நாடு - விலக்ஷணமான பரமபதத்தை, அரசாள - அரசாளும்படி, பேர்ஆயிரமும் - அவனுடைய ஆயிரம் திருநாமங்களையும், ஓதுமின்கள் - சொல்லப்பாருங்கள் ; அன்றி - அப்படி சொல்லமாட்டீராகில் ; தாரா - தாராஎன்னும் பக்ஷிகள், ஆரும் - [மி]நிறைந்த, வயல் - வயல்களாலே, சூழ்ந்த - சூழப்பட்ட, சாளக்கிராமத்து - ஸ்ரீஸாளக்ராமத்திலே வந்து கிட்டிநிற்கிற, அடிகளை - ஸர்வஸ்வாமி விஷயமாக ; கார்ஆர் - மேகங்கள் நிறைந்திருந்துள்ள, புறவின் - சூழலையுடைய, மங்கை - திருமங்கைநாட்டுக்கு, வேந்தன் - அரசனான, கலியன் - ஆழ்வார், ஒலி - ஒலியையுடைத்தாம்படி, செய் - அருளிச்செய்த, தமிழ்மாலை - தமிழ்[மி]ருமாலையான, இவையே - இப்பத்துப்பாட்டையே, பிதற்றுமின் - அடைவுகெடச் சொல்லப் பாருங்கோள். ... ... ... ... ... ய

வ்யா.—பத்தாம்பாட்டு.—(தாராவித்யாதி)தாராக்களாலே நிறைந்திருந்துள்ள வயல் சூழ்ந்த ஸ்ரீஸாளக்ராமத்திலே வந்து ஸந்நிஹிதனான ஸர்வஸ்வாமியைக் கவிபாடிற்று. (காராரித்யாதி) மேவங்களினுடைய நிரந்தர ஸஞ்சாரத்தை யுடைத்தான பர்யந்தத்தையுடைய திருமங்கைக்கு ராஜாவான ஆழ்வார், ஒலியுடைத்தாம்படியாகச் சொன்ன தொடை. (ஆராருலகத்தறிவுடையார்) லோகத்தில் அறிவுடையராயிருப்பாரார்; நித்யஸூரிகளுடைய, நன்னாடு-பரமபதம், அத்தை, "ஆண்மின்கள் வானகம்" என்கிறபடியே-தாங்க[உடு]ளிட்ட வழக்காம்படி நடத்த, ஆயிரந்திருநாமங்களையும் வாயாலே சொல்லப்பாருங்கோள் ; அங்ஙனன்றிக்கே, (இவையே பிதற்றுமினே) இவற்றையே அடைவுகெடச் சொல்லப்பாருங்கோள். "ஸங்கீர்த்தயேஜ்ஜஹந்நாய௦ வேஷம்வாபிஸமீரயேத்." ... ... ய.

அடிவரவு.— கலை கடம் உலவு ஊர் அடுத்து தாய்
ஏனோர் வெந்தார் தொண்டு தாரா வாணிலா.

திருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

சென்று திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார் (தாராக்களாலே யித்யாதி.) ஸமுத்ரதீரமாகையாலே (நிரந்தரஸஞ்சாரத்தை யென்றது.) இத்தால் - பரமோதாரரான ஸ்ரீமஹாபாகவதர் வர்த்திக்கும் தேசத்திலிருக்குமவரென்றாப்ததமத்வம்ஸூசிதமாய்த்து.(என்கிறபடியே)என்றவந்தரம், அவர்கள்தான் என்றசேஷம்;அங்ஙனன்றாகில்,கீழ்(அத்தை)என்றதுக்குஅந்வயமில்லை.ஆயிரந்திருநாமங்களைச்சொல்லுங்கோள், கூடாவிட்டால் இப்பத்துப்பாட்டையும்சொல்லுங்கோளென்றாப்போலேசொன்னவிடமுண்டோவென்னவருளிச்செய்கிறார்(ஸங்கீர்த்தயேதித்யாதி.) ... ... ... ... ... ... ய.

ஜீயர்திருவடிகளேசரணம்.

மூ.—வாணிலாமுறுவல்சிறுநுதற்பெருந்தோள்மாதரார்வனமுலைப்பயனே
பேணினே னதனைப்பிழையெனக்கருதிப் பேதையேன் பிறவிநோயறுப்பான்
ஏணிலேனிருந்தேனெண்ணினேனெண்ணி யிளையவர்கலவியின்றிறத்தை
நாணினேன்வந்துன்றிருவடியடைந்தேன்நைமிசாரணியத்துளெந்தாய். க

ப.ரை.—நைமிசாரணியத்துள் - நைமிசாரண்யத்தி லெழுந்தருளியிருக்கிற, எந்தாய் - என்ஸ்வாமீ!, வாள்நிலாம் - ஒளிபொருந்தி யிருக்கிற, முறுவல் - பற்களையும், சிறு - சிறிய, நுதல் - நெற்றியையும், பெரு-பெருத்த, தோள் - தோள்களையுமுடையரான, மாதரார் - ஸ்த்ரீகளுடைய, வனம் - அழகிய, முலையே - ஸ்தநங்களையே, பயன் - பரமப்ரயோஜநமாக, பேணினேன் - ஆதரித்துக்கொ[ண்டு போந்தேன் ; பேதையேன் - அறிவுகேடனானநான், அதனை - அத்தை, பிழையென - தப்பென்று, கருதி - நினைத்து, பிறவிநோய் - ஸம்ஸாரமாகிற வ்யாதியை, அறுப்பான் - போக்கிக்கொள்ளும் உபாயத்தை, ஏணிலேன்இருந்தேன் - எண்ணாதிருந்தேன்;எண்ணினேன்-இதற்குமுன்புநின்றநிலையைஆராய்ந்தேன்;எண்ணி-இப்படிஅநுஸந்தித்து,இளையவர்-இளம் பெண்களுடைய, கலவியின்திறத்தை - ஸம்ச்லேஷ விஷயத்தை, நாணினேன் - லஜ்ஜித்தவனாய், உன் - சேஷியான உன்னுடைய, திருவடி - திருவடிகளிலே, வந்து - கிட்டி, அடைந்தேன்-சரணம் புகுந்தேன் என்கிறார். ... ... ... ... (க)

முதற்பத்து - ஆறுந்திருமொழி - வாணிலா - ப்ரவேசம்.

வ்யா.—திருவுள்ளத்தைக்குறித்து, "உகந்தருளின நிலங்களை ஆச்ரயி" என்று பலகாலும் சொல்லிக்கொண்டு போந்தார் – கீழ் ; அதுவும் அப்படியே செய்வதாக வொருப்பட்டது ; அநந்தரம், தாம் தம்முடைய நிர்ஷத்தை யநுஸந்தித்து, தம்முடைய பூர்வவ்ருத்தத்தையும், விஷயப்ராவண்யத்தையும், ஆர்த்தவிஷயத்தில் ஐயோ! என்றுதே போந்தபடியையும், பரஹிம்ஸையே யாத்ரையாய்ப்போந்தபடியையும், இவற்றையிடைய முன்னிட்டு, "ராவணோநாமதுர்வ்ருத்த:" என்று ஸ்ரீவிபீஷணாழ்வான் ஆகாசத்திலே நின்று ஸ்வ நிகர்ஷத்தைச்சொல்லிசரணம்புக்காப்போலே, இவரும் தம்முடைய அநந்யகதித்வத்தை விண்ணப்பஞ்செய்து, திருநைமிசாரண்யத்திலே நிற்கிற ஸர்வேச்வரன் திருவடிகளிலே பெரியபிராட்டியார்முன்னிலையாக சரணம் புகுகிறார். ... ... ... ...

வ்யா.—முதற்பாட்டு.— (வாணிலாமுறுவல் சிறுநுதற் பெருந்தோள் மாதரார் வனமுலைப்பயனே பேணினேன்) இதுஎன்னுடைய

அ.—வாணிலாமுறுவல் ப்ரவேசம். கீழஞ்சுதிருமொழிகளாலும் - மந்த்ரமந்த்ரார்த்தங்களை லபித்த ஆழ்வார், தன்நெஞ்சும் தம்மோடொருமிடறானவாறே மந்த்ர விவரணமான த்வயத்தில் பூர்வகண்டார்த்தாநுஷ்டாநம் பண்ணுகிறார் என்று ஸங்கதிதோற்ற வருளிச்செய்கிறார் (திருவுள்ளத்தை யித்யாதி.) "தேனுடைக்கமலத்திருவினுக்கரசே" என்றத்தைப்பற்ற (பெரியபிராட்டியார் முன்னிலையாக) என்றது. ... ... ... ... ... ...

முதற்பாட்டு.—(வாணிலாவித்யாதி.) ப்ரபத்தி ஸர்வாதிகாரமன்றோ, பூர்வவ்ர்த்தத்தை யநுஸந்தித்து அநுதப்தஹ்ர்தயராய் அவற்றையெல்லாம் விட்டுவந்து

பூர்வவ்ருத்தமிருந்தபடி யென்கிறார். விஹிதங்களை யநுஷ்டிக்கு
சமக்ஷமாக்ஷ்யாத்ம ஜ்ஞாநோபேதரா யிருப்பாரிறே யிதுக்கதிகாரிகள்;
அதில் நான் செய்து நின்றதில்லை யிதுவென்கிறார்.

(வாணிலாமுறுவல்) ஒளியானது, நிலாவாநின்றுள்ள - [ரு
வர்த்தியாநின்றுள்ள, முறுவலென்னுதல்; அன்றிக்கே, ஒளியானது
இதுக்கிலக்கானாருடைய நெஞ்சு விட்டுப்போகாதே வர்த்தியாநின்றுள்
ள முறுவலென்னுதல். நுதல் - நெற்றி; அதுவும் சிறுத்திருக்கை.
இல்லையாகில், பும்ஸ்த்வமங்கியா யிருக்குமிறே. (பெருந்தோள்) ஹோ
க்தாவி னளவல்லாதபடி போக்யதை கரைபுரண்ட தோள். (மாதரா [ா
ரித்யாதி) ஒளி நிலாவாநின்றுள்ள முறுவலையும் அளவுபட்ட நுதலை
யும் போக்யதா ப்ரகர்ஷத்தை யுடைத்தான தோள்களையு முடைய
ரான ஸ்த்ரீகளுடைய ஸந்நிவேசத்துறை யுடைத்தாயிருக்கிற மாம்ஸ
க்ரந்தியையே ப்ரயோஜநமாக ஆதரித்துக் கொடு போந்தேன்.
(பயனேபேணினேன்) அவ்வருகில் அதிஷ்டமாகவும் நினைத்திருப்பது
இதுதன்னையே யாய்த்து. தங்களுடைய அவயவசோபையாலே யிவ
னை யகப்படுத்தி இவன் கையிலுள்ள ஸர்வஸ்வத்தையு மபஹரித்து,
இவனகப்பட்டான் என்றறிந்தவாறே, பின்னை யிவன் நினைத்தபடி
தங்களைக் கொடுக்கக்கடவரல்லாத ஸ்த்ரீகளுடைய மாம்ஸக்ரந்தியை
யேப்ரயோஜநமென்றுப்ரமித்து ஆதரித்துப் போரப்பேணினேன். [உ௰
அதுதன்னில் அநுஸாவ்ய மொன்றில்லையே; அதிலே ருசியுண்டாக
நினைத்து ஆதரிக்கிற விவன் ப்ரமமேயிறே யுள்ளது. (அதனைப் பிழை
யெனக் கருதி) இப்படி நெடுநாளாதரத்துக்கு விஷயமாய்ப்போந்
து இன்றாகப் பிழையென்று நெஞ்சிலேபட்டது. விஷய ப்ரவண
னானவன், "நீ அவற்றைவிடு" என்றால் விடானிறே; இவர்க்கிப்போது
இவைதன்னை விடுகைக்கு உவாத்து இவைதானே யாய்த்து.

ஆச்ரயிக்கவேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (விஹிதங்களை யித்யாதி
வாக்யத்வயத்தாலே) பூர்வார்த்தம் ப்ரபத்திக்கு விரோதியென் றநுஸந்தித்தா
ரல்லர், ஸாதநாந்தரங்களுக்கு விருத்தங்களைச் செய்து போந்தேனாகையாலேஉபா
யாந்தரசூந்யனென்று தம்முடைய ஆகிஞ்சந்யத்தை முன்னிடுகிறாரென்று [கூ௰
கருத்து. இதுக்கென்றது - இந்த பகவத்விஷயத்தில் முமுக்ஷுவாயிழிகிறது
க்கென்கை. அதாவது - பக்தியென்றபடி.

கீழ்ச்சிலபதங்களுக்கர்த்தமருளிச்செய்து, வாக்யார்த்த மருளிச்செய்கிறார்
(ஒளியித்யாதி.) "வனம்" என்றதினர்த்தம் (ஸந்நிவேசத்துறையென்றது.) "பயனே"
என்றவிடத்தில்,ஏகாரத்தை"முலை" யென்றவிடத்திலேக்கூட்டியருளிச்செய்து, [கூரு
"பயனே" என்றவிடத்திலேதானே யாக்கி அதிருஷ்டம் வ்யாவர்த்யமாக ஆர்த்
தாந்தர மருளிச்செய்கிறார் (அவ்வருகிலித்யாதி.) முதல்யோஜனைக்கு விவரணம்
(தங்களுடைய வித்யாதி.) அதுபோக்யமாயன்றேயிருப்பது, ப்ரமித்தேனென்பா
னென்னென்ன வருளிச்செய்கிறார்(அதுதன்னிலித்யாதிவாக்யத்வயத்தாலே.) உவா
ல் - ஆதிக்யம். இன்றுபிழையென்று கருதுகிறவர், அப்போது ஆதரிப்பானென்னெ
ன்ன வருளிச்செய்கிறார் ( விஷயப்ரவணனானவனித்யாதி. ) அன்று சொன்னாலும்
விடாதவர் இப்போது பிழையென்று கருதுகைக்கு ஹேதுவேதென்ன வருளிச்
செய்கிறார் (இவர்க்கித்யாதி.) உவாத்து - உபாத்யாயன்.

அதாகிறது-அவர்களுடைய அநாத்மகுணங்களை அநுஸந்தித்தவாறே கடுக விட்டுக்கொடு நிற்கலாமிறே. இன்று தப்பென்று விட்டுக்கொடு நிற்கவேண்டுமிவற்றையாய்த்து நெடுநாள் ப்ரயோஜநமாக வாஷ்டி பண்ணிப்போந்தது. (பேதையேன்) இன்று பிழையென்று கைவிட வேண்டும்படியான வித்தை அநாதிகால மாதரித்துப் போரவேண்டின ஹேதுவென்னென்ன (பேதையேன்) அறிவுகேடு எத்தைப் பண்ணுது தான்!. (பிறவியித்யாதி) இப்படி அறிவுகேடனுகையாலே "ஸம்ஸாரமாகிறது அல்பம், அஸ்திரம், து:கோவஹம், ஆனபின்பு இத்தைத்தவிர்த்துக்கொள்ளவேணும்" என்னும் மநோரதத்தை யுடையேனன்றிக்கே யிருந்தேன். (ஏணிலேன்) இத்தைத் தவிர்த்துக்கொள்ளுகைக்கீடான வுயர்த்தியை யுடையேனல்லேனென்னுதல். (இருந்தேன்) நன்று என்றநுஸந்தித்துப் போந்தவித்தைத் தண்ணிது என்று விட்டாரே, அநந்தரம் உத்தேச்ய பூமியிலே போய்ப் புகப்பெற்றிலரே, நடுவில்நிலையை யாய்த்து இருந்தேன் என்கிறது. "ஓடினேன்" என்றவிவர் இருக்கைக்கவகாசமில்லை. "வஸ்யைவவ்யதிஷ்டத" என்னுமாப்போலே. (எண்ணினேன்) "நாம் முன்பு செய்து போந்ததென், நாந்நாமார், இனிச்செய்து வர்த்திக்க வடுப்பதென்" என்று ஆராயத்தொடங்கினேன். (எண்ணி) இப்படி அநுஸந்தித்து. (இளையவர் கலவியின் திறத்தை நாணினேன்) தங்கள் பருவத்தாலே இதினுடைய தண்மை நெஞ்சிற்படாதபடியாக மறைத்துக்கொடுபோருகிறவர்களுடைய கலவியிடையாட்டத்தை இப்போது லஜ்ஜித்தேன். ஆண்பிள்ளைச் சோருள்வியை ஸ்த்ரீயென்று பின்தொடருமாப்போலேயிருப்பதொன்றிறே சப்தாதி விஷயங்களிலே போக்யதாபுத்தி பண்ணிப் பின்தொடருகையாகிறதிது. வெளிச்செறிப்புப் பிறந்தவநந்தரம் லஜ்ஜித்துக் கைவாங்க வேண்டுமத்தையிறே நெடுநாள் ஆதரித்துப்போந்தது.

(வந்துன் திருவடி யடைந்தேன்) நெடுநாள் ப்ரயோஜநம் என்று ஆதரித்து ஒருநாளாக லஜ்ஜித்துக்கைவாங்க வேண்டும்படி யன்றிக்கே,

---

"பேதையேன்" என்றது - கீழ்க்கும் ஹேதுவான வளவன்றிக்கே, மேலுக்கும் ஹேதுவென்றுநின்றுகொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படியித்யாதி.) "சேண்" என்றுப்போலே "ஏண்" என்று - உயர்த்தியாய், அநுகூலவ்ருத்தியால் வந்த வுயர்த்தியைச்சொல்லுகிறதென்கிறார் (இத்தையித்யாதி.) (இருந்தேன்) என்றதுக்கு - அங்குமன்றிக்கே யிங்குமன்றிக்கே யிருந்தேனென்று விஷாதத்திலே யாக்கிக் கீழருளிச்செய்து, பிழையெனக்கருதி யிருந்தேன் - நிர்ப்பரனாயிருந்தேனென்னும் தாத்பர்யாந்தரத்தை யருளிச்செய்கிறார் (ஓடினே னித்யாதி.) முன்பின அர்த்தத்துக்கு த்ருஷ்டாந்தம் (கஸ்தஇத்யாதி.) (இடையாட்டத்தை) என்றவநந்தரம், கண்டு என்றுசேஷம். * நாணுகைக்கு ஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார் (ஆண்பிள்ளையித்யாதி.) சோருள்வி - சேர்றுக்கு நிர்வாஹகை. சோறுக்குகிறவளென்றபடி. ஆண்பிள்ளைச் சோருள்வியென்றது - ஸ்த்ரீவேஷங்கொண்ட புருஷனென்றபடி.

மூ.- சிலம்படியுருவிற்கருநெடுங்கண்ணார்திறத்தனாயறத்தையேமறந்து
புலன்படிந்துண்ணும்போகமேபெருக்கிப்போக்கினேன்பொழுதினைவாளா;
அலம்புரி தடக்கை யாயனே ! மாயா! வானவர்க்கரசனே! வானோர்
நலம்புரிந்திறைஞ்சுந்திருவடியடைந்தேன்நைமிசாரணியத்துளெந்தாய்.உ

ப-ரை.—நைமிசாரணியத்துளெந்தாய்!—, சிலம்பு - சிலம்பையணிந்து, உருவின் - அழகாயிருந்துள்ள, அடி - பாதங்களையும், கரு - கறுத்து, நெடு - நீண்ட, கண்ணார் திறத்தனாய் - கண்களையு முடைய ஸ்த்ரீகளிட்டவழக்காய், அறத்தை- நிலைநின்ற தர்மமானவுன்னை, மறந்தே - சற்றேனும் நினையாமல், புலன் - இந்த்ரியங்கள், படிந்து - பொருந்தி, உண்ணும் - அநுபவிக்கிற, போகமே- [ம] போகத்தையே, பெருக்கி - மேலேமேலே பெருகச்செய்து, பொழுதினை - பகவந் குணாநுபவத்தில் போக்கத்தக்க அருமந்த காலத்தை, வாளா - வ்யர்த்தமாக, போக்கினேன் - போக்கிவிட்டேன்; அலம்புரி - கலப்பையாகிற ஆயுதம் தரித்த, தடம் - பரந்த, கை - திருக்கைகளை யுடையனாய், ஆயனே! - இடைச்சாதியில திருவவதரித்தவனாய், மாயா!-ஆச்சர்யச்செய்கை யுடையனாய், வானவர்க்கு- [மு] ப்ரஹ்மாமுதலானவர்களுக்கு, அரசனே! - தலைவனானவனே!, வானோர் - நித்யஸூரிகள், நலம்புரிந்து - அன்பையுடையராய்க் கொண்டு, இறைஞ்சும் - ஆச்ரயியாநின்றுள்ள, திருவடி - தேவர் திருவடிகளை, அடைந்தேன்-அடைக்கலமாகவந்து கிட்டினேன் என்கிறார். ... ... ... ... ... (உ)

என்றுமொக்க ப்ரயோஜந ரூபமான திருவடிகளிலே வந்து [உ] சரணம் புகுந்தேன். (நைமிசாரணியத்துளெந்தாய்) அவன்பக்கல் ப்ரயோஜநமுள்ளன வாங்கிப் பின்னைக் கைவிடுமாகில் இவனுக்கல்லா தாரில் வாசியில்லையிறே; அங்ஙனன்றிக்கே, நிருபாதிக வெந்தை-வாய ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் வகுத்தஸ்வாமியாய் இவன்றான் நெடு நாளையிழவை யநுஸந்தித்து வெறுத்தால் "பிழைபுகுந்ததாகில் [உ] அதுக்குப் பரிஹரிக்கைக்கு நானிருந்தேன்,செய்யலாவதுண்டோ" என்றெடுத்து முகத்தைத் துடைத்துக் குளிர முகந்தருமவனாயிருந்தான்.

அ.—இரண்டாம்பாட்டு.— திருவடிகளிலே விழுந்து சரணம்புக்க வாறே முன்பு தாம் செய்துபோந்த படிகளடங்கலும் தோன்றிற்று; அத்தாலே, போக்கினேன் பொழுதினை வாளா என்கிறார். [க]

வ்யா.—(சிலம்படி) சிலம்பையுடைய அடியாய்த்து. (உருவில்) அதுதன்னிலே செம்பஞ்சையு மிட்டுவைப்பார்களாய்த்து இவனைத் துவக்குகைக்காக. (கருநெடுங்கண்ணார்) கறுத்து நெடும்பரப்பையுடைத்தா யிருந்துள்ள கண்களாலே நோக்குவார்களினுடைய;

பயனேபேணினேன், பேதையேன் பிறவிநோ யறுப்பானேனணிலேன் - [க] அதனைப்பிழையெனக்கருதி - இருந்தேன், எண்ணினேன், எண்ணி, எந்தாய்! என்றந்வயம். ... ... ... ... ... ... ௪

இரண்டாம்பாட்டு,—(சிலம்படியித்யாதி.) கீழ்ப்பாட்டிலே அவன்திருவடிக ளிலே விழுந்தபடியை அநுஸந்தித்தவாறே, முன்பு விஷயாந்தரங்களிலே விழும படிகள் தோற்றி அத்தை யநுஸந்தித்துஅநுதபிக்கிறாரென்று ஸங்கதியருளிச் [சு] செய்கிறார் (திருவடிகளிலேயித்யாதி.) வாளா - வ்யர்த்தமாக.

"உரு"என்று-அழகாய், (க) லாக்ஷாரஸத்தால் வந்தவழகைச் சொல்லுகிறதெ ன்கிறார் (அதித்யாதி.)

(க) லாக்ஷாரஸம் - செம்பஞ்சுக்குழம்பு.

இவன் இதிலே துவக்குண்டு காலிலே விழுந்து பின்னை அவர்கள் தங்களை விட்டு அவர்களுடைய கயாமங்யமுள்ள தேசத்திலே (க) அறுவாய்த்துத்திரியுமாய்த்து. (அறத்தையே மறந்து) ஸ்த்ரீகளுக்கு வழியறித்திடுமது மறக்கவொண்ணாதே; தன்னுடைய வுஜ்ஜீவநத்துக்குஉபாயமானத்தையே யாய்த்து வருந்தி மறப்பது. (புலனித்யாதி) கொண்டிதிரியும் பசுப்போலே இந்த்ரியங்கள்தான் விஷயங்களிலே மண்டியாய்த்திருப்பது முதல்தன்னிலே; அதுக்குமேலே, விஷயஸந்நியியுள்ள விடத்திலே வர்த்தித்து, இந்த்ரியங்களுக்கு விஷயங்களிலே போக்யதா பலுத்தியையைப் பிறப்பித்து, அவைஅவற்றிலே மேல்விழுந்து ஸஜிக்கும்படி அத்தால் வந்த போகத்தையே பெருக்கி. (போக்கினேன்) ஸமவத்விஷயத்திலே அடிக்கழஞ்சு பெற்றுச்செல்லக்கடவ காலத்தை வ்யர்யமே போக்கினேன்.

(அலம்புரி நடக்கை யாயனே) இவன் கையிலுள்ளத்தை அபஹரிக்கை யன்றிக்கே, இவனுக்கு அமையும் என்னும்படி ஸர்வஸ்வத்தையும் கொடுக்குமவ னாய்த்து. அலமென்னக் கொடுக்கும் நடக்கையை யுடையவனென்னுதல்; அலமென்றது - ஹலமென்றபடியாய், கலப்பையை யரித்த திருக்கையை யுடையவனென்னுதல். (மாயா) இவன் ஒருநாள் திருவடிகளிலே விழுந்தால் பின்னையிவனுடைய நெடுநாளை யிழவு மறக்கும்படி முகங்கொடுக்கும்படிக் கடியான ஆச்சர்யகுணசேஷ்டிதங்களை யுடையவனே. (வானவர்க்கரசனே) ப்ரஹ்மாதிகளுக்காச்ரயணீயனாயுள்ளவனே.

(வானோரித்யாதி) நித்யாநுபவம் பண்ணுகிற நித்யஸூரிகள் இதுக்கு முன்பொருநாளும் கண்டறியாதாப்போலேயிருக்க ஸ்நேஹத்தைச் செய்து ஆச்ரயியாநின்றுள்ள திருவடிகளிலே வந்து சரணம்புகுந்தேன். (நைமிசாரணியத்துளெந்தாய்) பரமபதத்திலே நித்யஸூரிகளுக்கநுபாவ்யனாய்க்கொண்டு அவர்களுக்கு ஓலக்கம் கொடுத்துக்கொண்டிருக்கக்கடவநீ எனக்கு உன்திருவடிகளிலேவந்து சரணம் புகலாம்படி ஸந்நிஹிதனானகையாலே சரணம்புகுந்தேன். ௨.

சிலம்படியில் விழுகைக்கு ஹேது - கண்ணழகென்று விவக்ஷித்து, அதுக்கும் "திறத்தனாய்" என்றதுக்கும் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இவனித்யாதி.) (க) அறுவாய்க்கை - அறுவே போதுபோக்காகை. அதுவேகாலக்ஷேபமாயென்றபடி. "அறத்தையே" என்ற ஏவகார தாத்பர்யகதநமுகேந தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஸ்த்ரீகளுக்கித்யாதி.) "போகமே பெருக்கி" என்னவமைந்திருக்க, "புலன்படிந்துண்ணும்" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (கொண்டிதிரியுமித்யாதி.) கொண்டிதிரிகை - பட்டி மேய்கை. "போகமே" என்ற ஏவகார தாத்பர்யம் (பகவத்விஷயத்திலே யித்யாதி.) ... ... ... ௨.

(க) அறுவாய்த்து - விநோதம்பண்ணிக்கொண்டு; ஸம்சயித்தலென்றுமாம்.

மூ:—சூதினைப்பெருக்கிக்களவினைத்துணிந்துசுரிகுழல்மடந்தையர்திறத்துக் காதலேமிகுத்துக்கண்டவாதிரிந்ததொண்டனேன், நமன்றமர்செய்யும் வேதனைக்கொடுங்கி நடுங்கினேன்;வேலைவெண்டிரையலமரக்கடைந்த நாதனே!வந்துன்றிருவடியடைந்தேன்நைமிசாரணியத்துளெந்தாய்!.ங

ப-ரை.—வெள் - வெளுத்த, திரை - அலைகளையுடைய, வேலை - திருப்பாற்கடலை, அலமர - கலங்கும்படி, கடைந்த - கடைந்து தேவர்களுக்கு அம்ர்தம்தந்து ரக்ஷித்த, நாதனே! - ஸ்வாமியாய், நைமிசாரணியத்துள் - நைமிசாரண்யத்தில் வந்து ஸந்நிதிபண்ணி, எந்தாய்! - எனக்கு உபகாரகனானவனே!; பொருள்தேடுகைக்காக, சூதினைப்பெருக்கி-பகலெல்லாம் சூதாடியும், களவினைத்துணிந்து-இரவிலே களவுகண்டும்; சுரி - சுருண்ட, குழல் - மயிர்முடியையுடைய, மடந்தையர் திறத்து - ஸ்த்ரீகள் பக்கலிலே, காதல்மிகுத்து - மிகுந்த ஆசையையுடையனாய், கண்டவா-கண்ணுக்குத்தோற்றின விஷயங்களிலே, திரிந்த - யதேச்சமாக நடந்து, தொண்டனேன்-அவர்களுக்கு பரிசர்யைபண்ணிப்போந்தநான்; நமன் தமர் - யமபடரானவர்கள், செய்யும் - பண்ணுகிற, வேதனைக்கு-ஹிம்ஸையை நினைத்து அஞ்சி, ஒடுங்கி - அவயவங்களெல்லாம் தம்தம் நிலைகுலைந்து, நடுங்கினேன் - நடுங்கினவனாய், உன்திருவடி - தேவரீர் திருவடிகளிலே, வந்து அடைந்தேன் - வந்து சரணம் புகுந்தேன் என்கிறார். ... ... (ங)

அ.—மூன்றாம்பாட்டு.—“போக்கினேன் பொழுதினை வாளா” என்றார்; சிலவற்றைச்செய்திறேபோதுபோக்குவது, செய்தபடிதானெங்ஙனே யென்ன; அதுதன்னைச் சொல்லுகிறார்.

வ்யா.—(சூதினைப்பெருக்கிக்களவினைத்துணிந்து) பகலெல்லாம் சூதுபொருதுதோற்றவன், குறைவறக்கொடுக்கக்கண்டவாறே, “இவன் பக்கலிலே கனக்கவுண்டாகையிறே யிவன்தருகிறது” என்று ராத்ரியில் களவுகாண அத்யவஸிபபது இவன் க்ருஹத்திலேயாய்த்து. ஆக, காணவும் கொண்டு காணுதபடியும் கொள்ளுமாய்த்து. இவைதான் நிஷித்தாநுஷ்டாநமாகையாலே இவைதன்னையே சொல்லிற்றாகவுமாம். அன்றிக்கே, ஆஸ்திக்யமுடையனாயிருப்பானொருவன், “கெடுவாய்! ஈச்வரனென்பானொருவனுண்டுகாண்” என்றால், நாஸ்திக்யத்தாலே பச்யதோஹரனாய், “ஈச்வரனிறைவனார்!” என்றும் ஆத்மாபஹாரம் பண்ணியுமாய்த்துப் போந்தது.

மூன்றாம்பாட்டு.—(சூதினையித்யாதி.) கீழ்ப்பாட்டிலே - கணைகழுக்குத்தோற்றுக் காலிலேவிழுந்து அவர்கள் நெஞ்சுருகாவிட்டாலும் அவர்கள் சதாஸம்பந்தமுள்ள தேசத்தை விரும்பி தத்ப்ராப்யர்த்தைபண்ணி த்ரவ்யார்ஜநமுகேந அவர்களைக்கிட்டி போகத்தைப் பெருக்கினபடியைச் சொல்லி, “வாளா” என்றருளிச்செய்தார்; இதில் - த்ரவ்யார்ஜநம் பண்ணினபடியைச் சொல்லுகிறாரென்று ஸங்கதி யருளிச்செய்கிறார் (போக்கினேனித்யாதி.) சிலவற்றை - த்ரவ்யார்ஜநப்ரகாரங்களை.

சூதையும் களவையும் த்ரவ்யார்ஜநத்துக்கு சேஷமாக வருளிச்செய்து, யோஜநாந்தரமருளிச்செய்கிறார்(இவைதானித்யாதி.) ஈச்வரனை வாதமுகத்தாலில்லைசெய்கை - சூதென்றும், ஸ்வாநுபவத்தாலில்லைசெய்கை - களவென்றும் மூன்றாம்தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அன்றிக்கேயித்யாதி.) இவ்விரண்டு யோஜனையிலும் வாளா போது போக்கின ப்ரகாரங்களேதென்ன; பின்னையும் சிலவற்றைச் சொல்லுகிறாரென்று ஸங்கதி.

மூ.—வம்புலாங் கூந்தல் மனைவியைத்துறந்து பிறர்பொருள் தாரமென்றிவற்றை -
நம்பினாரிறந்தால்நமன்றமர்பற்றியெற்றிவைத்து,எரியெழுகின்ற
செம்பினாலியன்றபாவையைப் பாவீ! தழுவெனமொழிவதற்கஞ்சி
நம்பனேவந்துன்றிருவடியடைந்தேன்நைமிசாரணியத்துளெந்தாய். ௪

ப - ரை.—நம்பனே! - விச்வஸநீயனாய், நைமிசாரணியத்துள்ளெந்தாய்!—, வம்புலாம் - பரிமளம்வீசாநின்றுள்ள, கூந்தல் - குழலையுடையளான, மனைவியை-தன்பார்யையை, துறந்து - விட்டு, பிறர்பொருள் - பிறர்த்ரவ்யமும், பிறர் தாரம் - பிறர்மனையாட்டிகளும், என்றுஇவற்றை - ஆகியஇவைகளை, நம்பினார்-விரும்பினவர்கள், இறந்தால் - இறந்துபோனால், நமன்தமர்-யமபடர்கள், பற்றி-[மு ருகைக்கு ஆயிரம்பேராகவந்து பிடித்துக்கொண்டு, எற்றி - மிகவும்ஹிம்ஸித்து, தங்கள்கைசலித்தவாறே, வைத்து - அவர்களைஓரிடத்திலேபொகட்டு, செம்பினால்-செம்பாலே, இயன்ற - செய்யப்பட்டதாய், எரிஎழுகின்ற - நெருப்புப்பொறி வீசாநின்றுள்ள, பாவையை - ஒருஸ்த்ரீப்ரதிமையைக் கொடுவந்து முன்னே நிறுத்தி, பாவீ! - பாபியானநீ, தழுவுஎன - இத்தைத்தழுவக்கடவாய் என்று[மு சொல்லுகிற, மொழிவதற்கு - கடுஞ்சொற்களுக்கு, அஞ்சி - பயந்து, உன்திருவடி வந்து அடைந்தேன்—. ... ... ... ... ... (௪)

(வம்புலாமித்யாதி) இப்படி த்ரவ்யார்ஜநம் பண்ணினால் அதுகொண்டு கொள்ளும்காரியத்தைச்சொல்லுகிறது. "விரிகுழலாரிற்பட்டு" என்கிறபடியே - மயிர் பேறாதே யிருக்கில் அதிலேஈடுபடுவர், மயிர்சுழன்று முடித்திருக்கில் அதிலேயீடுபடுவர், ஏதேனுமாக அவர்களிருந்தபடியமையுமாய்த்து இவர்க்கீடுபடுகைக்கு; "என்னை யுன்செய்கை நைவிக்கும்" என்னுமாப்போலே. (கண்டவா திரிந்த) "பசு:" என்னுமாப்போலே கண்ணுக்குத் தோற்றின விஷயங்களில், இவைசாஸ்த்ரங்கள்நிஷேதித்தவிடமென்று மீண்டபடியிவதில்லை; தோற்றினபடி மூலையடியே திரிந்தவித்தனை. (தொண்டனேன்) தொண்டனாகிறான் - பரதந்த்ரன். அது அப்ராப்த விஷயங்களிலே யானபோது, ‡ அபகர்ஷஹேதுவாகக்கடவது; ப்ராப்தவிஷயங்களிலே யானபோது, உத்கர்ஷஹேதுவாகச் சொல்லக்கடவது. (நமன்றமரித்யாதி) இப்படி முறைகெட வர்த்திக்கையாலேயமபடர்பண்ணும்வேதநையையநு[ஙு ஸந்தித்து அஞ்சி, ஸர்வாவயவங்களு மொடுங்கி சரீரந்தான் எடுத்தெடுத்து அறையத்துடங்கும்.

(வேலையித்யாதி) ப்ரயோஜநாந்தர பரர்க்காகக் கடலை நெருங்கக் கடைந்து அபேக்ஷிதஸம்வியாநம் பண்ணும்படியன்றோ இவ்வாத்மாவோடுதேவர்க்குண்டானஸம்பந்தம். (வந்தித்யாதி) ப்ரஹ்மாதி[ஙு களுக்கு ஆச்ரயணீயனாய்க் கொண்டு அவர்களுடைய கூக்குரல் கேட்கைக்காக அங்கே திருப்பாற்கடலிலே சாய்ந்தாப்போலே, எனக்கு வந்துசரணம்புகலாம்படி இங்கேவந்துஸந்நிதிபண்ணியருளிற்றிறே. ஙு

"வேலைவெண்டிரை-நாதனே" என்றநுஷங்கித்து, அத்தை ஸத்ருஷ்டாந்தமாக விவக்ஷித்து, "நைமிசாரணியத்துளெந்தாய்" என்றதுக்குத் தாத்பர்யாந்தரமும மருளிச்செய்கிறார் (ப்ரஹ்மாதிகளுக்கித்யாதி.) ... ... ... ஙு

‡ "சிறுமைக்குடலாகச்சொல்லக்கடவது" என்று சிலஸ்ரீகோசங்கள்.

அ.—நாலாம்பாட்டு.—அத்தனையோ, இன்ன மேதேனும் செய்த
துண்டோவென்ன ; இன்னமும் செய்தது குவாலென்கிறார்.
வ்யா.—(வம்பித்யாதி) நித்யாபூர்வமான குழலையுடைய மனைவி
யை யென்னுதல், பரிமளத்தை யுடைத்தான குழலென்னுதல். [ரு
அக்நிஸாக்ஷியாகக் கைப்பிடித்த ஸ்த்ரீயையாய்த்து த்யஜிப்பது. விஷ
யாந்தரங்களிலே ஸ்ப்ருஹையைப்பண்ணுமே ; அவற்றில் வந்தால்
வம்புலாங்கூந்தலாகவும் வேண்டாவாய்த்து, பிறரதாமித்தனையே
யாய்த்து ஆதரிக்கைக்கு வேண்டுவது. பரதார பரத்ரவ்யங்களை
விரும்பினவர்கள்இறந்தால். (நமனித்யாதி) ஸர்வேச்வரன் தன்னோடு [க0
டொக்க ஸமமாக ஆராய்ந்து கேட்பானொருவனாக விட்டவனாய்த்
து - யமனாகிறான் ; அவன்றான், தன்னோடொப்பார் சிலரை யாய்
த்து வரவிட்டது; அவர்கள்தாங்கள் ஒரு நைக்கு ஆயிரம்பேராக
வந்து பற்றுவர்களாய்த்து; பின்னை, இவனுடம்புதன்னோடேயெற்று
வர்கள் ; அநந்தரம், தங்கள் கை சலித்தவாறே போகட்டு [கரு
இட்டுவைப்பர்கள். "இவரித்தனைபோதுஸ்த்ரீகளையொழிய இருக்கவல்
லரோ ! அவளை யழைப்பியும்" என்பர்கள் ; இவனும், "நம்மை
நலிவதெல்லாம் நலிந்தார்களாகில் இனி அவளை யழைக்கிறார்களி
த்தனையிறே" என்று குறுவிழிகொண்டு கிடக்கும் ; (எரியித்யாதி)
எரிஎழாநிற்பதாய், செம்பாலே செய்யப்பட்ட பாவையை,பாவி! [உ0
தழுவு என்பர்களாய்த்து.

---

நாலாம்பாட்டு.—(வம்புலாமித்யாதி.) "சுரிகுழல் மடந்தையர் திறத்துக் காதல் மிகுதியாலே கண்டவாதிரிந்தேன்" என்றிர் ; அப்படி அபிமதைகளான ஸ்த்ரீகளை சாஸ்த்ரீயமாகக் கைப்பிடித்துக்கொண்டால் *நமன்றமர்வேதனைக் கொடுக்கவும் வேண்டாதே காதல் தீர்த்துக்கொள்ளலாமே, இறக்கஞ்சுவானென், அஞ்சும்படி பின்னையும் செய்ததுண்டே யென்னு மீச்வராபிப்ராயத்தை யருளிச்செய்கிறார் (அத்தனையோ வித்யாதி.)

வம்பு - புதுமை, உலாவாநின்றுள்ள - வர்த்தியாநின்றுள்ள, கூந்தலென்று
ரு யோஜனை யருளிச்செய்கிறார் (நித்யேத்யாதி.) இத்தால் - வாரிமுடித்து வள
ர்க்கும் பருவமென்று கௌமாரம் தோற்றுகிறது. மனைவி - க்ருஹிணீஎன்று, [கஉ
அந்தபதவாஸலை (அக்நீத்யாதி.) இத்தால் - விஹிதபரித்யாகம் பண்ணினமையைச்
சொல்லிற்று. பரதாரத்துக்கு விசேஷணமிடாதே யருளிச்செய்ததுக்குத் தாத்
பர்யம் (விஷயாந்தரங்களிலே யித்யாதி வாக்யத்ரயமும்.) ஸமமாகவென்றது-
சேதநரிடத்தில் பக்ஷபாதமின்றிக்கே யென்கை. யமனையிட்டு படரை நிரூபிக்கை
யாலே, "யச்சீலஸ்ஸ்வாமீதச்சீலோதாஸ:" என்கிற வசநத்தை யுட்கொ [கரு
ண்டருளிச்செய்கிறார் (அவன்றானித்யாதி.) பஹுவசநப்ரயோக தாத்பர்யம் (அவர்
கள்தாங்களித்யாதி.) கைசலிக்க நலிந்தபின் இவனைக்குறித்து "பாவையைத்
தழுவு" என்றுசொல்ல ப்ரஸக்தியுண்டோ, இவனயர்த்துக்கிடவானோவென்ன வரு
ளிச்செய்கிறார் (இவரித்யாதி.)

கெடுவாய் ! அவர்களொழிச்சினவன்றாகிலும் அநுதாபம்பிறந்து உகந்தருளிற்றொரு திருவாசலிலே யொதுங்கினாயாகில் இன்றெங்களுக்குக் கைசலியாதொழியலாய்த்து என்பர்களாய்த்து. (மொழிவதற்கஞ்சி) அவர்கள் பண்ணும் நலிவைப்பொறுக்கலாமாகாதே ! : க்ரூரமான பேச்சாய்த்துப் பொறுக்கப்போகாதது. (நம்பனே வந்துன் திருவடியடைந்தேன்) ஏதேனும் தோற்றிற்றுச் செய்து திரிந்தார்க்கும் வந்து பற்றலாம்படி சரண்யனானநீவந்து ஸந்நிஹிதனாகையாலே திருவடிகளிலேசரணம்புகுந்தேன்.(நைமிசாரணியத்துளெந்தாய்) இவன் விஷயங்களில்ப்ரவணனாகிறது கண்ணுக்கிலக்காகையிறே; அவ்வோபாதி நம்மையும்கண்ணுக்கிலக்காக்கவே இவன்நம்பக்கலிலே ப்ரவணனுமென்று உன்னைக்கண்ணுக்கிலக்காக்கிக்கொடுவந்துநின்றாய். நிஷேயவிதியும் கிடக்கச்செய்தே அப்ராப்தவிஷயங்களில் ப்ரவணனாகிறது அவைகண்ணுக்கிலக்காகை(க) சுட்டியிறே; விதிவிஷயமுமாய் உத்தேச்யமானவது ஸந்நிஹிதமானால் இவன்விரும்பானோ என்று உன்னைக் கண்ணுக்கிலக்காக்கி வைத்தாய். ... ... ... ௪.

அ.—அஞ்சாம்பாட்டு.— அத்தனையோ, இன்னமேதேனுமுண்டோவென்ன ; திருவுள்ளத்துக்குப் பொறுக்க வொண்ணாதவையுமெல்லாம் செய்துபோந்தேனென்கிறார்.

"பாவீ!" என்றுஸம்போதித்தவர்களுடையவுட்கருத்தை "நரகேபச்யமாநஸ்து†யமேந பரிபாஷித: । கிம்த்வயாநார்ச்சிதோதேவ: கேசவ: க்லேசநாசந:" என்கிற வசநத்தை யுட்கொண் டருளிச்செய்கிறார் (கெடுவாயித்யாதி) யமன் சொன்ன வார்த்தை இவர்களும் சொல்லுவர்களென்று கருத்து. ஒழிச்சினவன்றாகிலுமென்றது - "ஈசியோமி னீங்கிரேன்மின்" என்றுதள்ளிவிட்ட வன்றாகிலுமென்றபடி. தழுவுஎன தழுவுவதற்கஞ்சியென்ன வேண்டியிருக்க, "மொழிவதற்கு" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அவர்களித்யாதி) "தழுவு" என்கிற சப்தச்ரவணத்தின் கொடுமை, தழுவி யிளைப்பாறலாம்படி யிருக்குமதென்கை. இவர்தாம் "அஞ்சிவந்தடைந்தேன்" என்கையாலே - இப்படிசெய்து போந்தேனென்னுமது அர்த்தஸித்தம்; ஆகையாலே, (செய்ததுகுவாலென்கிறார்) என்று அவதாரிகையருளிச்செய்தார். கண்ணுக்கிலக்காக்கினால் பற்றுகைக்குடலாமோவென்ன வருளிச்செய்கிறார் (நிஷேயவிதியுமித்யாதி.) ... ... (௪)

அ.—அஞ்சாம்பாட்டு.— ( இடும்பையித்யாதி. ) பரதார பரத்ரவ்யாபஹாரம் பண்ணினேனென்னாநின்றீர் ; "ச்லோகார்த்தேந ப்ரவக்ஷ்யாமி யதுக்தம் க்ரந்தகோடிபி: । பரோபகார: புண்யாய பாபாயபரபீடநம்" என்கிறபடி யறிந்து சிலர்க்கு ஸத்கரித்திருந்தீராகில், "தர்மேணபாபமபநுததி" என்கிறபடியே கீழ்ச்சொன்ன பாபம் கழிந்துகொடுநிற்கும்; அதுகிடக்கிடீர், வேறேதேனு முண்டாகில் சொல்லிக்காணுமென்னு மீச்வராபிப்ராயத்தை யருளிச்செய்கிறார் (அத்தனையோவித்யாதி.)

(க) சுட்டியிறே-ஹேதுவாகவன்றோ. குறித்தென்றுமாம். † "தப்யமாநஸ்து" என்றும் பாடம்.

மூ.—இடும்பையாலடர்ப்புண்டிடுமினோதுற்றென்றிரந்தவர்க்கில்லையேயென்று
நெடுஞ்சொலால்மறுத்தநீசனேனந்தோ! நினைக்கிலேன்வினைப்பயன்றன்னை;
கடுஞ்சொலார்கடியார்காலனார்தமரால்படுவதோர்கொடுமிறைக்கஞ்சி,
நடுங்கிநான்வந்துன்றிருவடியடைந்தேன்நைமிசாரணியத்துளெந்தாய். ரு.

ப-ரை.—நைமிசாரணியத்துளெந்தாய்—, இடும்பையால் - தாரித்ர்யத்தாலே, அடர்ப்பு உண்டு - நெருக்குப்பட்டு, துற்று - ஒருகவளம் சோறாகிலும், இடுமின் - இடுங்கோள், "ஓ! என்று - என்று தங்கள் வறுமை தோற்றக்கூப்பிட்டு, இரந்தவர்க்கு - யாசித்தவர்களுக்கு, இல்லையேஎன்று - உங்களுக்குக்கொடுக்கைக்கு ஒரு பொருளுமில்லையேஎன்று, நெடும்சொலால் - கடுஞ்சொல்லாலே, மறுத்த - தடுத்துச் சொன்ன, நீசனேன் - மிகத்தண்ணியனான, நான் - அடியேன், அந்தோ! - ஐயோ!, வினைப்பயன் தன்னை - கீழ்ச்செய்த பாபத்தின் பலத்தை, நினைக்கிலேன் - நினைக்கமாட்டாதவனாய்க்கொண்டு, கடும் - க்ரூரமான, சொலார் - சொலலையுடையராய், கடியார் - க்ரூரமான செயலையுமுடையரான, காலனார்தமரால் - யமபடராலே, படுவது - படக்கடவதாய், ஓர்கொடு - மிகக்கொடிதாயிருந்துள்ள, மிறைக்கு - ஹிம்ஸை[யி]யைநினைத்து, அஞ்சி - பயந்து, நடுங்கி—, உன்திருவடி வந்துஅடைந்தேன்—. (ரு)

வ்யா.—(இடும்பையாலடர்ப்புண்டு) தாரித்ர்யத்தாலே நெருக்குண்டு. (இடுமினோதுற்றென்றிரந்தவர்க்கு) ஆரேனுமாகிலுமெல்லாருங்கூட எனக்கொருக்கால் வாயிலேயிடுகைக்கு வேண்டுவது தரவேணும் என்று, "முனியே!" என்பாரைப்போலே கூப்பிடுமாய்[உ]த்து. துற்றாகிறது - ஒருக்கால் வாயிலே யள்ளியிடுமதாய்த்து. (துற்றென்றிரந்தவர்க்கு) இப்படியே தயநீயமாம்படி சொல்லிக் காலைக் கட்டினவர்களுக்கு. (இல்லையே யித்யாதி) அவர்களுக்கு இல்லையே! என்னும்போதுசொல்லும்வார்த்தையிற்கொடுமையையநுஸந்தித்து.

"இடுமின்"என்கிறவஹுவசநத்தையும்,"ஓ!"என்கிற ஆர்த்தயத்யோதகசப்[உடு]தத்தையும், "துற்று" என்கிற ஏகவசநத்தையும் கடாக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஆரேனுமித்யாதி) நிரதிசய புருஷார்த்தத்துக்காக ஆழ்வார் "முனியே! நான்முகனே!" என்று பெருமிடறுசெய்து கூப்பிடுமாப்போலே, இவனும் தாரித்ர்யத்தாலே நெருக்குண்டு க்ஷுத்பார்த்தனாய்ப் பலரைக் குறித்து ஒருகவளத்தையிடச்சொல்லிப் பெருமிடறுசெய்து கூப்பிடுமென்று கருத்து.[௩ய] "இடுமின்" என்றதே இரப்பாயிருக்கவும், "இரந்தவர்க்கு"என்கையாலேஃலித்த அர்த்தம் (இப்படியே யித்யாதி.) பாத்ரவ்யாபஹாரத்தாலே ஸம்பந்நராயிருக்கிற வளவிலே, பசித்தவன்வந்து சோறிடு என்ன; இவன் இல்லையென்ன; ஒருதுற்றிடுமின் என்ன; எல்லார்க்குமாகத் தான் இல்லையேஎன்ன; "ஓ!" என்று ஆர்த்தனாக; தான்நெடுஞ்சொல்லாலேஇல்லைஎன்ன; அவன் காலிலேவிழ; இவன்[௩டு]பால் மறுத்த பசுவுதைத்துக் கொள்ளுமாப்போலே உதைத்துக்கொண்டு போன கொடுமையைத் திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டு தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அவர்களுக்கில்லையே யித்யாதி.) (அநுஸந்தித்து) என்றவநந்தரம், நீசனேனென்கிறார் என்று கூட்டுவது.

மூ.—கோடியமனத்தால்சினத்தொழில்புரிந்துதிரிந்து நாயினத்தொடுந்திளைத்திட்டு ஓடியுமுழன்றுமுயிர்களைகொன்றேனுணர்விலேனாதலால், நமனூர்ப்பாடியைப்பெரிதும்பரிசழித்திட்டேன்; பரமனே! பாற்கடற்கிடந்தாய்! நாடிநான்வந்துன்றிருவடியடைந்தேன்நைமிசாரணியத்துளெந்தாய். ௬.

ப-ரை.—பரமனே! - எல்லாரிலும் உயர்ந்தவனாய், ஆச்ரிதர்கார்யம் செய்கைக்காக, பாற்கடல் - க்ஷீராப்தியில், கிடந்தாய் - கண்வளர்ந்தருளுமவனாய், நைமிசாரணியத்துளெந்தாய்—, கோடிய - நல்விஷயங்களில் புகாத, மனத்தால் - மநஸ்ஸையுடையனாய், சினம் - பிறர்க்குக் கோபமுண்டாகத்தக்க, தொழில்-செயல்களை, புரிந்து-செய்தவனாய், நாயினத்தொடும் - நாய் முதலானவற்றோடுகூட, திரிந்து - வேட்டையாடி, திளைத்திட்டு - களித்தவனாய், பிறரை வருத்துகைக்காக, ஓடியும் - நெடுந்தூரம் ஓடிச்சென்றும், உழன்றும் - வருந்தியும், உயிர்கள் - ப்ராணிகளை, கொன்றேன் - கொன்றவனாய், உணர்விலேன் - ஸர்வேச்வரனொருவனுளன் என்று அறியாமற்போந்தேனான, நான் - அடியேன், நாடி - ஆராய்ந்து, உன் திருவடி வந்து அடைந்தேன்—; ஆதலால் - அத்தாலே, நமனூர்பாடியை - யமபுரமான நரகத்தின், பரிசு - நிலைமையை, பெரிதும் - மிகவும், அழித்து இட்டேன் - அழித்துவிட்டேனென்கிறார். ... ... (௬)

நாமிவனையொன்றபேக்ஷித்துவர இவன் இல்லையென்ற பாசுரத்தைக் கேட்டு இன்னமும் ஜீவிக்க விருக்குமதில் இத்தனை நஞ்சு பெற்றோமாகில் முடிந்து போகலாய்த்தே! என்று காலதத்வமுள்ளதனையும் அவன் நெஞ்சு புண்பட்டுக்கிடக்கும்படி சொன்ன கொடுமையைச் சொல்லுகிறதாய்த்து. (அந்தோ!) என்கிறாராய்த்து - மேல்வருகிற நலிவை அநுஸந்தித்து. (நினைக்கிலேன் வினைப்பயன் றன்னை) கீழ்ச்செய்த செயல்தானே யநுஸந்திக்க வரிதாயிருந்த பின்பு, அதின் ஃபலமாய் வருமதுதானே யநுஸந்திக்கப் போகாதிறே. (கடுஞ்சொலாரித்யாதி) வெட்டியசொல்லை யுடையராய், க்ரூரமான செயலை யுடையராயிருந்த யமபடராலே படக்கடவதான கொடிய மிறுக்கை யநுஸந்தித்து. (நடுங்கி நான் வந்துன் திருவடி யடைந்தேன்) தேவர்திருவடிகளிலே வந்து சரணம்புகுந்தேன். (நைமிசாரணியத்துளெந்தாய்) இரந்தார்க்கு இல்லையென்று மறுத்துப்போந்த வெனக்கு நானிரவாதிருக்க நீவந்து ஸந்நிஹிதனாய்த்தது எனக்கு உபகரிக்கைக்காகவன்றோ. இவற்றால் சொல்லிற்றாய்த்து-முன்பெல்லாம் தோற்றினபடி செய்து திரிந்து அவற்றுக்கு வரும் ஃபலத்தைக்கேட்டு ஃபயப்பட்டுப் போக்கடிதேடி, புறம்பொரு புகல் காணாமையாலே தேவர்திருவடிகளிலே சரணம் புகுந்தேனென்கிறார்.

அந்தக்கொடுமையின் சரமாவதிதன்னைக் காட்டுகிறார் (நாமிவனையித்யாதி.) பயன் என்னாதே, "பயன்றன்னை" என்ற ப்ராயோக்ய மெத்தைப்பற்ற வருளிச்செய்தாரென்ன வருளிச்செய்கிறார் (கீழ்ச்செய்தவித்யாதி.) நெடுஞ்சொலால்மறுத்ததுக்குத் தக்கஃபலமாக, "கடுஞ்சொலார்கடியார்" என்றுவிசேஷிக்கிறார் என்று கண்டுகொள்வது. மேலேஃபயகார்யமான நடுக்கத்தைச்சொல்லுகையாலே, "அஞ்சி" என்று தத்காரணமான அநுஸந்தாநத்தைச்சொல்லுகிறதென்கிறார் (அநுஸந்தித்து) என்று.

அ.—அரும்பாட்டு.—அத்தனையோ, இன்னம் செய்ததுண்டோ வென்ன ; (க) கைதொடனாய்க் கொன்றேபோந்தே னென்கிறார்.

வ்யா.—(கோடியமனத்தால்) அநுகூல விஷயத்திலும் நெஞ்சு விலங்கியாய்த் திருப்பது. (சினத்தொழில் புரிந்து) மறச்செயல்[ற செய்து. (திரிந்து நாயினத்தொடும் திளைத்திட்டு) ஹிம்ஸா ஸஹார்யங்களோடே வேட்டையாடித் திரிந்தபடியைச் சொல்லுதல், தண்ணியவர்களோடே கூடி விளையாடிக் களித்துத் திரிந்தபடியாதல். (ஓடியும்) *"ஒருவனை ஹிம்ஸிக்கலாம், பதின்காதமாறு போகலாமோ" என்றால், தட்டுப்பாராதே அவ்வளவும் ஓடியும். (உழன்[ய றும்) ஹிம்ஸித்ததாம்போது சால வருந்த வேணும் என்றால் அப் படி வருந்தி வ்யாபரித்தும். (உயிர்களே கொன்றேன்) ப்ராணவிச் லேஷ பர்யந்தமாக்கிப்போந்தேன் ; புடவையுரிந்து விட்டிலேன். (உணர்விலேன்) ஸர்வேச்வரனொருவனுளன் என்னும் இச்சாண்சந்தை யும் நெஞ்சிற்படாதபோதுசெய்யாததுண்டோ. (ஆதலால் நமனார்[ பாடியைப்பெரிதும் பரிசழித்திட்டேன்) என்று - வக்ஷ்யமாணத் உத்தேசித்துச் சொல்லுகிறதாகவுமாம் ; அன்றிக்கே, கீழோடே சேரவு மருளிச்செய்வர். யமனுடைய ஆஜ்ஞைநடவாதபடி அதைத் வென்றேன். யமபுரத்தை வென்றேனென்றபடி. அன்றிக்கே, கீழோ டேயானபோது, "இவனை நலியவிவன்மாட்டான், வேறேயொரு[உம படைவீடும் ஒரு புதுக்கோமுற்றவனு மிடவேணும்" என்னும்படி பாபங்களையே பண்ணிப்போந்தே னென்னுதல்.

---

அரும்பாட்டு.—(கோடியவித்யாதி.) த்ரவ்யலோபத்தாலே சிலரை ஸத்கரிக்க மாட்டிற்றிலீராகிலும், "அஹிம்ஸாப்ரதமம் புஷ்பம்" என்றும் "அஹிம்ஸா ப்ரதமோதர்ம:" என்றும்சாஸ்த்ரம்சொல்லிவைத்ததிறே; அதுண்டாகிலவற்றுச்செ ல்லாம் வந்ததென்னென்னு முட்கருத்தை ஸூசிப்பிக்கிறார் (அத்தனையோவென்று.)

கோடுதல் - விலங்குதலாய், ஸர்வவிஷயத்திலும் விலங்கின மநஸ்ஸா லென்று சப்தார்த்தமாய், ஃபலிதத்தை யருளிச்செய்கிறார் (அநுகூலேத்யாதி.) இத்தால் - ஒருக்காலும் நெஞ்சிரமில்லையென்றதாய்த்து. "திளைத்திட்டு" என்றதி ன் ஃபலிதார்த்தம் (வேட்டையாடி யென்றது.) ஆறு-வழி. வருந்தவேணும் - ப்ரயா யாஸப்படவேணும். இச்சாண் சந்தையென்றது - இந்த ஸ்வல்பமான வாக்யமென் றபடி. நமனூரானவர், பாடியை - தன்னூரை - நரகத்தை, பெரிதும் - பெரிய தாக்கும், அதாவது - பாபிகளைக்கூட்டி நியமிக்கும், பரிசு - ப்ரகாரத்தை, அழி த்திட்டே னென்று வாக்யார்த்தம் விவக்ஷித்து, "ஆதலால்" என்றதுக்கர்த்தவய மருளிச்செய்கிறார் (ஆதலாலித்யாதி வாக்யத்வயத்தாலே.) வக்ஷ்யமாணத்தை [கூறு வென்றது-"திருவடியடைந்தேன்"என்னுமது ; இப்போது, உணர்விலேன் - பரம னே! பாற்கடற்கிடந்தாய்! நாடிநான் வந்துன்றிருவடி யடைந்தேன் - ஆத லால், நமனூர்பாடியை - பரிசழித்திட்டேன் என்றந்வயம். கோமுற்றவனும் - ராஜ்யத்தையும்.

---

(க) கைதொடனாய் - ஸஹாயபூதனாய். கைவிடாதே யென்றுமாம்.

மூ.—நெஞ்சினால்நினைந்தும் வாயினால்மொழிந்தும்நீதியல்லாதனசெய்தும்
துஞ்சினார்செல்லும்தொன்னெறிக்கேட்டே துளங்கினேன்;விளங்கனிமுனிந்தாய்!
வஞ்சனேனடியேன்நெஞ்சினிற்பிரியா வானவா!தானவர்க்கென்றும்-
நஞ்சனே!வந்துன்திருவடியடைந்தேன்நைமிசாரணியத்துளெந்தாய். ௭.

ப-ரை.—விளங்கனி - பழங்கள் நிறைந்த விளாவின் வடிவு கொண்டுவந்த கபித்யாஸுரனை, முனிந்தாய்-கோபித்துநிரஸித்தவனாய், வஞ்சனேன் அடியேன் - நினைவொன்றும் சொலவொன்றுமான என்னுடைய, நெஞ்சினில் - ஹ்ருதயத்தில் புகுந்து, பிரியா - விடாதே யிருக்கிற, வானவா - நித்யஸூரி நிர்வாஹகனாய், என்றும் - எப்போதும், தானவர்க்கு-அஸுரர்களுக்கு, நஞ்சனே - ம்ருத்யுவானவனாய், நைமிசாரணியத்துள்எந்தாய்—, நீதி அல்லாதன-சாஸ்த்ரங்கள் "ஆகாது" என்றவற்றை, நெஞ்சினால் - மநஸ்ஸாலே, நினைந்தும் - நினைத்தும், வாயினால் - வாயாலே, மொழிந்தும் - சொல்லியும், செய்தும் - சரீரம் நோம்படிவருந்தியாகிலும் செய்தும் போந்து, துஞ்சினார் - முடிந்தவர்கள், செல்லும் - போகத்தக்க, தொல்-பழையதான, நெறி-நரகமார்க்கத்தை, கேட்டே - கேட்டமாத்ரத்திலே, துளங்கினேன் - நடுங்கினவனாய்க்கொண்டு, உன்திருவடிவந்து அடைந்தேன்—.

(பரமனே) ஒருஹேதுவின்றிக்கே யிருக்கச்செய்தே, ஔதார்யம் பண்ணுமிடத்தில் உனக்கவ்வருகொருவரில்லாதபடி யிருக்கிறவனே. (பாற்கடற்கிடந்தாய்) அதுக்குறுப்பாக அடுத்தணித்தாகத் திருப்பாற்கடலிலேவந்துசாய்ந்தருளினவனே. (நாடிநான்வந்துன் திருவடியடைந்தேன்) பரஹிம்ஸையேபண்ணித் தோற்றினபடி திரிந்து அதுக்குவரும் ஃபலத்தைக் கேட்டஞ்சி அநந்தரம் நமக்குப்புகலேதோ! என்று ஆராய்ந்து திருவடிகளிலேவந்து சரணம்புகுந்தேன். (நைமிசாரணியத்து ளெந்தாய்) நான்நாடிக்கிட்டினேனாக நினைத்திருந்தேன், நீயெனக்குமுன்பேநாடிபூர்வஜனாய் திருநைமிசாரண்யத்திலேவந்து ஸந்நிஹிதனானாய். ... ... ... ௯.

வ்யா.—ஏழாம்பாட்டு.—(நெஞ்சினாலித்யாதி) (நீதியல்லாதன - நெஞ்சினால் நினைந்தும், வாயினால் மொழிந்தும் - செய்தும்) கீழெல்லாம் - தாம்செய்த தப்புக்களைச் சொல்லிக்கொடுபோந்தார்; அவற்றையெல்லாம்திரளச்சொல்லுகிறாராய்த்து—(நீதியல்லாதன) என்று. மநோவாக்காயங்கள் மூன்றாலும் நிஷித்தங்களையே அநுஷ்டித்துப்போந்தவர்கள் முடிந்தால் போம்வழியுண்டு - நரகத்துக்குப்போம் வழி, அத்தைக்கேட்டுத் துளங்கினேன். (தொன்னெறி) "ஜரதச்சாச்வதேமதே" என்று - பரமபதத்துக்குப்போம்வழியோபாதி யிதுவும் பழையதிறே; இனி, அதிலிதுக்குவாசி—ஆளொழுக்கறுமையிறே. (கேட்டே துளங்கினேன்) அநுபவித்தன்றிக்கே, ச்ரவணவேளையிலே நடுங்கினேன்.

அடுத்து - அநுரூபமாய். (பூர்வஜனாய்) என்றதுக்கு - "மஹாபுருஷபூர்வஜ" என்ற வசநத்திலே நோக்கு. ... ... ... ... ௯.

ஏழாம்பாட்டு.—(நெஞ்சினாலித்யாதி.) ஸங்கதி ப்ரதர்சநம் பண்ணுகிறார் (கீழெல்லாமித்யாதி.)திரள - ஸங்க்ரஹமாக. வாக்யார்த்தம் (மநோவாக்காயங்களித்யாதி.) "செல்லும்" என்ற விசேஷண லப்யார்த்தம் (இனிஅதிலித்யாதி.) "கேட்டே" என்ற ஏவகார வ்யாவர்த்யம் (அநுபவித்தித்யாதி.)

மூ.—ஏவினார்கலியார்நலிகவென்றென்மேலெங்ஙனேவாழுமாறு; ஐவர் கோவினார்செய்யுங்கொடுமையைமடித்தேன்; குறுங்குடிநெடுங்கடல்வண்ணா! பாவினாரின்சொல்பன்மலர்கொண்டுன்பாதமேபரவிநான்பணிந்து, என் நாவினால்வந்துன்திருவடியடைந்தேன்நைமிசாரணியத்துளெந்தாய்.அ.

ப-ரை.—குறுங்குடி - திருக்குறுங்குடியி லெழுந்தருளியிருக்கிறவனும், நெடு- பரந்தாழ்ந்த, கடல் - ஸமுத்ரத்தின், வண்ணா - நிறம்போன்றவடிவழகையுடைய வனே!, நைமிசாரணியத்துளெந்தாய்—, கலியார் - கலிகாலமானது, நலிக என்று - இவனைவருத்துங்கோள் என்று, என்மேல் - விரோதி நிரஸநஸ்பாவன் படிகளை அநுஸந்தித்திருக்கும் என்பக்கல், ஐவர்-அஞ்சு இந்த்ரியங்களையும், ஏவி[டு னார் - ஏவிற்று; அந்த இந்த்ரியங்கள், வாழும் ஆறு எங்ஙனே - ஜீவிக்கும் விரகு ஏதோ?; கோவினார் - ப்ரபலமான அவ்வைந்தும், செய்யும் - பண்ணத்தக்க, கொடுமையை-க்ரூரமான செயல்களை, மடித்தேன் - திருப்பிவிட்டவனுமக்கொ ண்டு, என்நாவினால் - அநர்த்தங்களை யுண்டாக்கக்கடவ பேச்சுக்கள் சொல்லிப் போந்த என்நாக்காலே, பா-நல்லசந்தஸ்ஸுக்கள், ஆர்-நிறைந்த, இன்சொல்-[டு இனிய சொற்களாகிற, பல்மலர் - பலபுஷ்பங்களையும், கொண்டு—, பரவி - வாய் வந்தபடி வாழ்த்தி, உன்பாதமேபணிந்து - தேவர் திருவடிகளிலே விழுந்து, உன்திருவடிவந்து நான் அடைந்தேன்—. ... ... ... ... (அ)

அதின்மலத்தையும் ஸஜிக்குமதனையன்றோ வென்ன (விளங்க னிமுத்யாதி) மலத்தையுதிர்த்தது, பக்வமலாநுபவம்பண்ணவேண்டா வென்றுகருத்து. (விளங்கனிமுனிந்தாய்) கனியாகிறஅஸுரனைநிரஸி த்தவனே. விரோதிநிரஸநஸ்வபாவனானநீ என்விரோதியையும் போ க்கவேணுமென்கிறார். (வஞ்சனேனடியேன்நெஞ்சினிற் பிரியா வான வா) அடியேனென்று அஹங்காரமாக நானொரு உக்திமாத்ரத்தைச் சொல்ல, அத்தை ஸஹ்ருதயமாக்கி, நித்யஸூரிகளுக்கே உன்னை [உடு யநுபவிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கக்கடவநீ என்னுடைய ஹ்ரு யத்திலேபுகுந்து விடாதே யிருந்தாய். (தானவர்க்கித்யாதி) அஸுர வர்மத்துக்குஎன்றுமொக்கநஞ்சானவனே! உன்திருவடிகளிலேவந்து சரணம்புகுந்தேன். (நைமிசாரணியத்துளெந்தாய்) நன்னெறிகாட்டு கைக்கனித்தாகநீவந்திருந்தாய்.தொன்னெறிக்கெதிர்த்தட்டானத்தை யாய்த்து நினைக்கிறது. ... ... ... ... எ.

நீதியல்லாதவற்றை கரணத்ரயத்தாலும் செய்தால் பலாநுபவம்பண்ணாதே திருமோவென்னும் ஹ்ருதயாபிப்ராயத்தை யநுவதித்து, அதுக்குஉத்தரமாக விரோ தியான மலங்களை யுதிர்த்த நீ என் விரோதியான மலங்களையுமுதிர்க்க வேணு மென்னும் கருத்தாலே அந்த அபதாநத்தை யருளிச்செய்கிறா ரென்கிறார் (அதி[நடு னித்யாதி.) (கருத்து) என்றவநந்தரம், வனச்சத்தைக் காட்டினாய் என்று பூரி த்துக்கொள்வது. கனியாகிற வஸுரனையென்றது - அஸுராவிஷ்டமான வ்ருக்ஷ த்தேசமாகையாலே. இங்கு "எந்தாய்" என்றது - அபயப்ரதத்தனை யும் ஸம்ஸாரத்திலே ப்ரவர்த்திப்பிக்கும் பித்ருத்வத்தைப் பற்றவென்று விய ஷித்தருளிச்செய்கிறார் (நன்னெறியித்யாதி.) ... ... ... எ.

வ்யா.—எட்டாம்பாட்டு.—(ஏவினூர்கலியார்) கலியாரென்கிறூராய்த்து கலிகாலத்துக்கஞ்சினபடியாலே. கலியாரானவர், கலியுங்கோள் என்று என்மேலே அஞ்சுஇந்த்ரியங்களையும் ஏவினூர். (எங்ஙனே வாழுமாறு) அவரெங்ஙனே யினி ஜீவிக்கும்படி. என்தான்? ஏவிற்றூகில் வந்ததென்னென்னில் (ஐவரித்யாதி) மநஸ்ஸுக்கு சேஷமாய், இந்த்ரியங்கள், அதுபோனவழியே யிவை போகக்கடவதாயிருக்க அது தவிர்ந்து, இவைதா னிப்போது மநஸ்ஸைச் சுமையெடுக்கத்துடங்கிற்றூய்த்து ; இவைதான் நினைத்தபடி செய்யும் க்ரூரமான செயல்களைத் திரிய விடுவித்தேன். [ம

ஆரைப்பற்றித்தான் நீரிவற்றைத்திரியவிடுவித்ததென்ன (குறுங்குடி நெடுங்கடல் வண்ணூ) திருக்குறுங்குடியிலே ச்ரமஹரமான வடிவைக்கொடுவந்து நீ ஸந்நிஹிதனூகையாலே. (பாவினூரித்யாதி) நல்லஹந்தஸ்ஸுக்கள் ஆர்ந்திருந்துள்ள இனியசொற்களாகிற பலமலர்களையுங்கொண்டு அடைவுகெட ஸ்தோத்ரம்பண்ணித் திருவடிகளி[மரு லே விழுந்து. (என்நாவினூல்) அநர்யங்களை விளக்கைக் குறுப்பானவற்றையே சொல்லிப்போந்த என்நாவாலே. (நைமிசாரணியத்துளெந்தாய்) ஸ்துத்யனூன நீ என்னுடைய ஸ்துதிக்குவிஷயமாகைக்காய்க்கொண்டு திருநைமிசாரண்யத்திலே வந்துஸந்நிஹிதனூனூய். அ.

எட்டாம்பாட்டு.—(ஏவினூரித்யாதி.) "தொன்னெறிகேட்டே துளங்கினேன்" என்று பூர்வவ்ருத்தத்துக்கஞ்சின ஆழ்வார் அவனுடைய விரோதிநிரஸந ஸ்வபாவாநுஸந்தாநத்தைப் பண்ணினபடியாலே அச்சங்கெட்டுத் தாமப்போதிருந்த படியைப் பேசுகிறூரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

கலி யேவிற்று என்றூதே, பூஜ்யோக்தி தோன்ற வருளிச் செய்ததுக்குத் தாத்பர்யம் (கலியாரித்யாதி.) "எங்ஙனேநான்வாழுமாறு!" என்று க்லேசிக்கி[உரு றதாக அர்த்தம் விவக்ஷித்தால், மேலே "கொடுமையை மடித்தேன்" என்னுமது சேராமையாலே, அதுக்கநுகுணமாக வருளிச்செய்கிறூர் (அவரித்யாதி.)

"என்நாவினூல் - பாவினூ ரின் சொல் பன்மலர்கொண்டு - பரவி - உன்பாதமேபணிந்து - வந்துன் திருவடியடைந்தேன்" என்றந்வயம் விவக்ஷித்தருளிச்செய்கிறூர் (நல்லவித்யாதி.) ஸ்துதிப்ரணாமபூர்வகமாச்ரயித்தேனூகையாலே கொடு [நடு மையை மடித்தேனென்று கருத்து. ... ... ... ... அ.

அ.—ஒன்பதாம்பாட்டு.—(ஊனிடையித்யாதி.) வடிவைசுஹாச்ரயமாய்க்கொண்டு நீர் ஸ்துதி ப்ரணாமபூர்வக மாச்ரயித்து இந்த்ரியங்களை வென்றேனென்றீர், ஆகில் அந்திமஸ்ம்ருதியும் பண்ணினீராகில் அபேக்ஷிதம் தானே கைக்கூடிறதென்ன ; அங்ஙன் சொல்லவொண்ணூது, "உன்றன்சரணமேசரணமென்றிருந்தே[நடு ன்" என்கிறூரென்று ஸங்கதி கண்டுகொள்வது. இத்தால் - எப்போதைக்கு முன்திருவடிகளே யுபாயம், உபாய ஃபலமாய் வந்த பேறுகளைச் சொன்னேனித்தனை யென்று கருத்து.

௯.—ஊனிடைச்சுவர்வைத்தென்புதூணட்டியுரோமமேய்ந்தொன்பதுவாசல்
தானுடைக்குரம்பைபிரியும்போதுன்றன்சரணமேசரணமென்றிருந்தேன்;
தேனுடைக்கமலத்திருவினுக்கரசே! திரைகொள்மாநெடுங்கடற்கிடந்தாய!
நானுடைத்தவத்தால்திருவடியடைந்தேன்நைமிசாரணியத்துளெந்தாய். ௯

ப-ரை.—தேன் - மதுவை, உடை - உடைத்தான, கமலம் - தாமரைப்பூவை யிருப்பிடமாகவுடைய, திருவினுக்கு - பெரியபிராட்டியார்க்கு, அரசே - வல்லப னாய், திரைகொள் - அலையையுடைத்தாய், மா - பரந்த, நெடு - ஆழ்ந்த, கடல்- திருப்பாற்கடலிலே, கிடந்தாய் - கண்வளர்ந்தருளினவனாய், நைமிசாரணியத் துள்-திருநைமிசாரண்யத்திலெழுந்தருளியிருக்கிற, எந்தாய்! - பரமோபகார [ய கனே!, ஊன் - மாம்ஸத்தை, இடை - நடுநடுவே, சுவர்வைத்து - சுவராக வை த்து, என்பு - எலும்பை, தூண் - தூணாக, நாட்டி - நட்டு, உரோமம் - மயிரா லே, மேய்ந்து - மூடப்பட்டதாய், ஒன்பதுவாசல் - நவத்வாரங்களை, உடை - உடைய, குரம்பை - குடிலாகிற இச்சரீரத்தை விட்டு, பிரியும்போது - பிரியுங் காலத்தில், உன்றன்-தேவரீருடைய, சரணமே - திருவடிகளே, சரணம் என்று - ரக்ஷகமாக வேணும் என்று, இருந்தேன் - நினைத்திருந்தேன் ; இப்போது, நா னுடை - என்னுடைய, தவத்தால் - தபஸ்ஸாலே, திருவடி - தேவர் திருவடி களை, அடைந்தேன் - கிட்டப்பெற்றே னென்று களிக்கிறார். ... (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு.—(ஊனிடைச்சுவர்வைத்து) மாம்ஸ த்தைஇடையிடையேசுவராகவைத்து; அன்றிக்கே, மாம்ஸப்ரசுரமான சரீரத்தைச் சுவராக வைத்து ; எலும்பைத்தூணாகநாட்டி ; ரோம த்தாலே மேய்ந்து. (ஒன்பது வாசல்தானுடைக் குரம்பை) "நவ த்வாரே புரே" என்று - எங்கேனும் புக்கு எங்கேனும் புறப்பட லாம்படி யிறே யிச்சரீரந்தா னிருப்பது. ராஜபுத்ரன் ஒருகுடிலிலே யொதுங்கினாப்போலே, நித்யமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய் [உடு ஏகரூபமாயிருக்கிற ஆத்மவஸ்து, கர்மத்தாலே ஜ்ஞாநஸங்கோச த்தைப் பிறப்பிப்பதான சரீரத்திலே யகப்பட்டதாய்த்து. (பிரியும் போது) அதிலே புகுகைக்கொரு கர்மம் பண்ணிவைத்த வோபாதி அத்தை விடுகைக்கு மொருகர்மம் பண்ணிவைக்குமே ; அப்போ தைக்கு, உன் திருவடிகளே புகல் என்று அத்யவஸித்தேன். [கூய

நீரிப்படி நினைத்திருந்ததென்ன பற்றாசு கொண்டுதானென்னில் (தேனுடைக்கமலத்திருவினுக்கரசே) புருஷகாரபூதையான பி ராட்டியோடணைந்தவனாகையாலே மறமான செயல் செய்யமாட்டா யென்னுமத்தாலே. புருஷகாரபலத்தாலே.

ஊனாலே - மாம்ஸத்தாலே, இடையை - நிறையையுடைய சரீரத்தை யென் றர்த்தாந்தரம் (அன்றிக்கே யித்யாதி.) சரீரத்தை யென்றது - சரீரைக தேசத் தையென்றபடி. இங்ஙனன்றாகில், மாம்ஸாஸ்த்யாதி மயமான சரீரத்தைச்சொ ன்னால் எலும்பைத்தூணாகச்சொல்லாதிறே. "ஊனிடை" என்று-மூழ்ச்சொல் லென்றும் சொல்லுவர்கள். (தூணாக) என்றது - சுவரில் கூச்சுக்கால்களாக வென் றபடி. "மேய்ந்து" என்றது-செத்தையாலே மூடுகை. "குரம்பை" என்ற படி [சய வாஸகை (ராஜபுத்ரனித்யாதி.) குரம்பை - குடீரம்.

மறமான செயல் செய்யமாட்டாயென்றது - கோபத்தால் வந்த தண்டனை பண்ணமாட்டாயென்றபடி. ஸித்தம் (புருஷகார பலத்தாலே யென்றது.) இத் தால் - பூர்வவண்டத்தில் ஸ்ரீமத்பதார்த்தமநுஸந்திக்கப் பட்டது.

ரூ—ஏதம்வந்தணுகாவண்ணநாமெண்ணியெழுமினோதொழுதமென் றிமையோர்
நாதன்வந்திறைஞ்சும்நைமிசாரணியத்தெந்தையைச்சிந்தையுள்வைத்து
காதலேமிகுத்தகலியன் வாயொலிசெய் மாலைதான் கற்றுவல்லார்கள்,
ஓதநீர் வையகமாண்டு வெண்குடைக்கீ ழும்பருமாகுவர்தாமே. ம.

ப-ரை.—ஏதம் - துக்கங்கள், வந்து அணுகாவண்ணம் - வந்து கிட்டாதபடி, நாம்—, எண்ணி - மநோரதித்து, தொழுதும் - அவனைத்தொழுது உஜ்ஜீவிப்போம், எழுமின் என்று - ஒருப்படுங்கோள் என்று, இமையோர் - தேவர்களும், நாதன் - அவர்களுக்கு நிர்வாஹகனான இந்த்ரனும், வந்து இறைஞ்சும் - வந்து ஆச்ரயிக்கிற, நைமிசாரணியத்து எந்தையை - திருநைமிசாரண்யத்தி லெழுந்தருளியிருக்குமென்ஸ்வாமியை, சிந்தையுள்வைத்து - ஹ்ருதயத்தில்வைத்துக்கொண்டு, காதல் - பகவத்விஷயத்திலாசை, மிகுத்த - மிகுந்து வருகிற, கலியன் - ஆழ்வார், வாய் - அருளிச்செய்த, ஒலிசெய்மாலை - சப்தஸந்தர்ப்பங்களை, கற்று வல்லார்கள் - அர்த்தத்துடன் கற்கவல்லவர்கள் ; நீர் - ஜலஸம்ருத்தியையுடைய, ஓதம்-கடலாலே சூழப்பட்ட, வையகம்-இப்பூமியை, வெள்-வெளுத்த, குடைக்கீழ் - குடைநிழலின் கீழே, ஆண்டு - செங்கோல் செலுத்தி, உம்பரும் ஆகுவர் - நித்யஸூரிகளோடும் ஒரு கோவையாகப் பெறுவரென்கிறார். ம.

(திரையித்யாதி) ச்ரமஹரமான திருப்பாற்கடலிலே வந்து கண்வளர்ந்தருளினவனே. (மாநெடுங்கடல்)பரப்பிலுமாழத்திலுமாய்த்து. (நானுடையித்யாதி) தம்முடைய வ்ருத்தியிருந்தபடியடைய கீர்த்தித்தாரிறே முன்பே ; இனி, நானுடைத்தவமென்கிறது - அவன்றன்னை. நான் பண்ணின தபஸ்ஸாலே திருவடிகளிலே வந்து சரணம்புகுந்தேன். (நைமிசாரணியத்துளித்யாதி) ஜமதக்ஸிஷ்டி பண்ணியும் அவதரித்தும் உகந்தருளினநிலங்களிலே வந்து ஸந்நிஹிதனுயுமிறே ஸௌலப்யத்தை உத்பாதிப்பது. ... ... ... கூ.

வ்யா.—பத்தாம்பாட்டு.—(ஏதமித்யாதி) து:கங்கள் வந்து கிட்டாதபடியை மநோரதித்து,அவனைத் தொழுதுஜ்ஜீவிப்போம்,ஒருப்படுங்கோள் என்று, தேவர்களோடேகூட அவர்களுக்கு நிர்வாஹகனான இந்த்ரன் வந்தாச்ரயிக்கிற திருநைமிசாரண்யத்திலே வந்து ஸந்நிஹிதனான ஸ்வாமியை ஹ்ருதயத்திலே வைத்து. அன்றிக்கே,

"திரை" இத்யாதியாலே - "ஏஷநாராயணச்ஸ்ரீமாந்" என்கிற வசநத்தின்படியே நாராயண பதார்த்தமநுஸந்திக்கப் பட்டது, "உன்றன் சரணமே" என்று உபாயாரணமாக அநுஸந்தித்தவர், "நானுடைத்தவம்" என்கைக்குக் கருத்தென்னென்னு மத்தை ஸநியாமகமாக வருளிச்செய்கிறார் (தம்முடைய வித்யாதி.) சப்தார்த்தம் (நானித்யாதி.)அவனே தம்முடைய தபஸ்ஸென்னும்படி அவன்பண்ணின வ்யாபாரமென்னென்ன ; "எந்தாய்" என்றத்தை யுட்கொண்டருளிச் செய்கிறார் (ஜமதித்யாதி.)

பத்தாம்பாட்டு.—(ஏதமித்யாதி.)

"ஏதம்வந்தணுகாவண்ண நாமெண்ணி - தொழுதும் - எழுமினோ" இத்யாத்யந்வயம் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (து:கங்களித்யாதி.)

நித்ய ஸூரிகளோடே ஸ்ரீ ஸேநாபதியாழ்வார் வந்து ஆச்ரயிக்கிற வென்னுதல். (காதலே மிகுத்த) ஸமஸ்த விஷயத்திலாசை மிகுந்து வருகிற ஆழ்வாரருளிச்செய்த சப்தஸந்தர்ப்பத்தை அர்த்தஸஹிதமாகக் கற்கவல்லவர்கள். இருந்தவனுக்கு ஒதுங்க நிழல் பண்ணிக்[கு]கொடுத்தபடி யாய்த்து. (ஓதநீர் வையகமாண்டு) நித்யஸூரிகளோடொரு கோவையாமதுதானே ஸித்தமிறே. அபேக்ஷையுண்டாகில் ஐச்வர்யத்தையும் நிர்வஹித்துப் பின்னை நித்யஸூரிகள் படித்தைப் பெறுவர். ... .. ... ... ௰.

அடிவரவு.—வாள் சிலம்பு சூது வம்பு இடும்பை கோடிய நெஞ்சு ஏவினார் ஊன் ஏதம் அங்கண்.

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

இமையோர்நாதன் - ஸ்ரீஸேநாபதியாழ்வா னென்னும் பக்ஷத்தில், நாமுங்களுக்கு ஏதம் வந்தணுகாவண்ண மெண்ணிவந்தோம், தொழுதும்-எழுமினோ என்று சொல்லும்படி யிருக்கிற நைமிசாரணியத்தெந்தை என்றத்யாஹரித்துயோஜித்துக் கொள்வது. அன்றிக்கே, ஸீலாமூஹவாலாஹ ப்ரயுக்த ஏதமென்று விவக்ஷித்து, முன்புத்தைப்போலே அந்வயித்துக்கொள்ளவுமாம். (இருந்தவன்) இத்யாதிவாக்யத்துக்கு, "சிந்தையுள் வைத்து" என்று தன்னெஞ்சிலிருந்தவனுக்குக் காதலாலிறநிழல் பண்ணிக்கொடுத்தாரென்றுகருத்து. ஐச்வர்யத்தையும்ஃபலமாகவிவ[ரு]ளிச்செய்கைக்கு - "இருங்கடலுலகமாண்டு" என்கிற பாட்டிலே ஒரு பரிஹாரமருளிச்செய்தாராய், இங்கே பரிஹாராந்தர மருளிச்செய்கிறார் (நித்யஸூரிகளோடித்யாதி.) அன்றிக்கே, ஏகபரிஹாரமேயாய், ஸாமவத கைங்கர்யத்திலபேக்ஷையுண்டாகிலென்று சொல்லவுமாம். ... ... ... ௰.

ஜீயர்திருவடிகளேசரணம்.

முதற்பத்து, ஏழாந்திருமொழி—அங்கண். ப்ரவேசம்.

வ்யா.—"ஒன்பது வாசல்தானுடைக் குரம்பை பிரியும்போது உன்றன்சரணமே சரணமென்றிருந்தேன்" என்றுரே; நீரிப்படி ஒரு தலையிலத்யவஸாயமாகச் சொல்லுகிறதென்தான்? இத்தலையில் செயலற்ற வளவிலே ப்ரஹ்லாதாதிகளுடைய ப்ரதிஜ்ஞா ஸம காலத்திலே

அ.—அங்கண் ப்ரவேசம். மேழ்த்திருமொழியிலே-ஆழ்வார் தம்முடைய பூர்வவ்ருத்தகவுக ஃமேவ அநந்யோபாயத்வத்தை முன்னிட்டு ஒருக்காலைப்போலே ஒன்பதின்காலும் "திருவடியடைந்தேன்" என்று பெரியபிராட்டியார் புருஷகாரமாக ஆச்ரயித்தபடியை யநுஸந்தித்தநச்வரன், "மோக்ஷயிஷ்யாமி கருத்துக்கிஷ்ணுமாஷ்த்ரவாஸிகம் ! ஜனம்ப்ரவ்ருத்ய மிவமேஷ்வதியாக்ரபஸர்ப்பதி" என்னும்படி யிருப்பானுகையாலே, இவரத்யவஸாயத்தளவு ஸஹிக்கமாட்டாதே, "படமாகமசேஷாணும்ஸாயுஜ்யாம்" என்கிறபடி இவர்க்குப்போலியான ஜெக்கனுக்குதவி அவ்வடிவை யெல்லார்க்குமாக்கிக் கொண்டிருக்க சிக்கவேழ்குன்றத்திலிருப்பைக்காட்ட, கண்டனுபவிக்கிறொன்று ஸங்கதிதன்னை யருளிச்செய்கி[ற]ார் (ஒன்பதிந்பாதி.)

மூ.—அங்கண் ஞாலமஞ்ச வங்கோ ராளரியாய், அவுணன்
பொங்க வாகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்;
பைங்கணானைக்கொம்பு கொண்டு பத்திமையாலடிக்கீழ்
செங்கணாளி யிட்டிறைஞ்சும் சிங்கவேழ்குன்றமே. ... க.

ப-ரை.—"ஸர்வேச்வரன் எங்குமுளன்" என்று ப்ரதிஜ்ஞைபண்ணின ப்ரஹ்லாதனைப்பார்த்து அவன் தமப்பனான ஹிரண்யன் "இங்கில்லை" என்று ஒரு தூணைத்தட்ட, அங்கு - அவன் ப்ரதிஜ்ஞைபண்ணின அவ்விடத்திலேயே; அம் - அழகியதாய், கண் - இடமுடைத்தான, ஞாலம் - பூமியெல்லாம், அஞ்ச-பயப்படும்படி, ஓர் - இதுக்குமுன்பு ஒருவரும் கண்டறியாத, ஆள் அரியாய் - நரஸிம்ஹரூபியாய்த்தோற்ற; அத்தைக்கண்டு, அவுணன் - ஆஸுரப்ரக்ருதியான ஹிரண்யன், பொங்க - கிளர; ஆகம் - அவனுடைய சரீரத்தை, வள்உகிரால் - கூர்மையுள்ள திருவுகிரால், போழ்ந்த - பிளந்து பொகட்ட, புனிதன் - ஹாவசுத்தியையுடைய ஸர்வேச்வரன், பின்புள்ளாருடைய விரோதிகளைப் போக்குகைக்காக வர்த்திக்கிற, இடம்-ஸ்தாநமாவது; செம்கண்-கோபத்தால்சிவந்தகண்களையுடைய, ஆளி - ஸிம்ஹங்களானவை, பை - பசுமையையுடைய, கண் - கண்களையுடைத்தான, ஆனை - யானைகளின், கொம்பு-கொம்புகளை, கொண்டு - பறித்துக்கொண்டு, பத்திமையால் - பகவத்பக்தியாலே, அடிக்கீழ் - திருவடிகளிலே, இட்டு - ஸமர்ப்பித்து, இறைஞ்சும் - ஆச்ரயிக்கிற, சிங்கவேழ்குன்றம் - சிங்கவேழ்குன்ற; அங்குப்போய் நெஞ்சே! நாம்தொழுதும் என்கிறார். ... ... க.

ப்ரதிஜ்ஞைபண்ணினவிடத்திலே வந்து ஸந்நிதிபண்ணி அவனுடைய விரோதியைப்போக்கி உபகரித்திலோமோ, அதுதான் அக்காலமொன்றிலுமேயாய் பிற்பட்டகாலத்தி லுள்ளார்க்கு மிழக்கவேண்டாதபடி "உன்னைப்பிரமாணித்தார் பெற்றபேறு" என்கிறபடியே ஆச்ரிதராநுரெல்லார்க்குமாகச்செய்த செயலன்றோ, ஆனபின்பு உம்முடையபோல்வார்க்கு இழக்கவேண்டாதபடி சிங்கவேழ்குன்றிலே வந்து நீர்கிட்டி யநுபவிக்குமதுவே குறையாக நாம் வந்திருந்தோமே, இப்படியிருக்க ஒருதலை யத்யவஸாயமேயாக நீர் சொல்லுவானென்? என்று, தான் சிங்கவேழ்குன்றிலேவந்து ஸந்நிதி பண்ணினபடியைக் காட்டிக்கொடுக்க; அங்கே புருஷகாரபூதையான பிராட்டியாரோடேகூட வெழுந்தருளி யிருக்கிற விருப்பை யநுஸந்தித்து ஹ்ருஷ்டராய், உத்தேச்யனா யிருக்கிறவன் வந்திருக்கிற தேசமாகையாலே அங்குள்ளதடைய உத்தேச்யமாய், சிலரால் வந்தணுக வொண்ணாதபடி ஸுரக்ஷிதமாக வெழுந்தருளி யிருக்கப்பெற்றது! என்றுதிருவுள்ளத்தோடேகூடிப்போ யநுபவிக்கையிலே யொருப்படுகிறார். ... ... ... ... *

"பிரமாணித்தார் பெற்றபேறு" என்றதுக்குத்தாத்பர்யம்-அன்று இந்த்ரனுக்குக்காரியம் செய்தநீ இன்றுஎனக்கும் செய்யவேணுமென்றுவழக்குச்சொல்லிக் காரியங்கொள்ளலா யிருக்கையாலே, அன்றுஓராச்ரிதனுக்குச்செய்தது இன்றெல்லார்க்குமாகச் செய்ததாமென்று. பிராட்டியாரோடே யென்றது-"அல்லிமாதர்"என்றத்தைப்பற்ற. "நல்லநெஞ்சே" என்றத்தைப்பற்ற (திருவுள்ளத்தோடே யென்றது.) இத்திருமொழியாலே உத்தரவண்யார்யமானப்ராப்யாநுபவம் பண்ணுகிறாரென்று கருத்து. ... ... ... ... ... ... ... *

வ்யா.—முதற்பாட்டு.— ( அங்கண்ஞாலமஞ்ச ) அழகிதான இடத்தையுடைத்தாயிருந்துள்ள ஜமியாக அஞ்ச. நரஸிம்ஹமாய்த் துத்தான் த்ரம்ஷ்ட்ராகூணத்துக்காகவிறே; அங்ஙனேயிருக்கச்செய்தேயும் இதினுடைய விளைவதறியாமையாலே ஜமத்தாக நடுங்கிற்றாய்த்து. இதெவ்வளவாய்த்தலைக்கட்டுகிறதோ என்றிருந்ததாய்த்து. (அங்கு) அவன் ப்ரதிஜ்ஞை பண்ணின அவ்விடந்தன்னிலே. (ஓராளியாய்) இதுக்கு முன்போரிடத்திலும் கண்டறியாத நரஸிம்ஹமாய். (அவுணன்பொங்க) ஆஸுரப்ரக்ருதியான ஹிரண்யன், கிளர்ந்தானாய்த்து, நரஸிம்ஹத்தைக்கண்டகாட்சியிலே. இதுக்குமுன்பொருவன் "நான்எதிரி" என்றுதோற்றக்கண்டறியானே, இவனுடைய தோற்றரவிலே கிளர்ந்தானாய்த்து; அவனுடைய சரீரத்தைக் கூரியதிருவுகிராலே யிருபிளவாம்படி பண்ணின. சில அசித்பதார்த்தங்களை வகிர்செய்யுமாப்போலே யாய்த்துப் போழ்ந்தபடி. (போழ்ந்த புனிதனிடம்) ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளில்வந்தால்ப்ரஹ்மாதிகளையேவித்தான்கடக்கவிருக்கும்; அங்ஙனன்றியே, தானே கைதொட்டு வ்யாபரிக்கையாலே பிறந்த சுத்தியைச் சொல்லுகிறது. அவனப்படி பின்புள்ளார்க்கு உதவுகைக்காக வர்த்திக்கிற ஸ்தானம்.

(பைங்கணித்யாதி) ஹிரண்யனைக்கண்ட நரஸிம்ஹத்துக்குச் சீற்றம் மாறாதாப்போலே, ஆனைகளைக்கண்ட ஸிம்ஹங்களுக்கும் சீற்றம் மாறாதே யிருக்கும்படி. (பைங்கண்) ஜாத்யுசிதமான பசுமையை யுடைத்தாயிருக்குமாய்த்து. (கொம்புகொண்டு) ஆனையினுடைய மஸ்தகத்தைக் கிழித்து அதினுடைய கொம்பைப்பறித்து, ஸமஷ்ஸக்தியாலே திருவடிகளிலே யிட்டு ஆச்ரயியாநிற்குமாய்த்து ஸிம்ஹங்களானவை. *யதி நஃ புருஷோத்ஸவதியிறே. செங்கணாளி—பைங்கணானைக்கொம்புகொண்டு பத்திமையா லடிக்கீழ் – இட்டிறைஞ்சும். (செங்கணாளி) இவற்றுக்கானைகளின்மேலே சீற்றம்மாறாதே யிருக்கச்செய்தேயும், ஸமஷ்ஸக்தி ஒருபடிப்பட்டுச் செல்லுமாய்த்து. சீற்றம் விக்ருதியாய், ஸமஷ்ஸக்தி ப்ரக்ருதியா யிருக்குமாய்த்து. ... ... ... ... ... ௧.

அ.—முதற்பாட்டு.— (அங்கணித்யாதி.)

விளைவதறியாமையாலே யென்றது - ஆச்ரிதவிரோதியைப் போக்குகைக்காகக் கொண்டசீற்றம்என்றறியாமையாலே யென்கை. ஜமியாகஅஞ்சஹிரண்யன் கிளர்ந்ததுக்குஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார் (நரஸிம்ஹத்தையித்யாதி.) போழ்ந்தபடி - பிளந்தபடி. சுத்தியை - ஸாவசுத்தியை.

"செங்கணாளி" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (ஹிரண்யனை யித்யாதி.) *வலிமிக்கசீயமராம விராமாநுசனோடொப்பார், பரவாதிமத்தஜங்கள் மேல் கொண்ட சீற்றத்தோடே யிருக்கச்செய்தேயும், ஸமவத்ஸக்தி குறைவற்றிருப்பரென்று ஸ்வாபதேசம். ... ... ... ... ௧.

மூ.—அலைத்தபேழ் வாய் வாளெயிற்றோர் கோளரியாய், அவுணன்-
கொலைக்கையாளன் நெஞ்சிடந்த கூருகிராளனிடம்;
மலைத்தசெல்சாத்தெறிந்த பூசல் வன்துடி வாய் கடுப்பச்
சிலைக்கைவேடர் தெழிப்பறாத சிங்கவேழ்குன்றமே. ... ௨.

ப-ரை.—அலைத்த - சிற்றத்தாலே நாவானது நின்றவிடத்தில்நில்லாதபடி சலியாநின்றுள்ள, பேழ் - பெரிய, வாய் - வாயையும், வாள் - ஒளிதங்கின, எயிறு-பற்களையும், ஓர் - ஒப்பற்ற, கோள் - மிடுக்கையுமுடைய, அரியாய் - ஸிம்ஹமாய்க்கொண்டு; கொலை-கொல்லுகையே ஸ்வபாவமான, கையாளன்-கையையுடையனான, அவுணன் - ஹிரண்யனுடைய, நெஞ்சு - மார்வை, இடந்த - கிழித்துப்பொகட்ட, கூர் உகிராளன் - கூரிய திருவுகிரையுடைய ஸர்வேச்வரன் நித்யவாஸம்பண்ணுகிற, இடம்-ஸ்தாநமாகிறது; மலைத்த-வேடரால் தகையப்பட்டவர்களாய், செல் - தீர்த்தயாத்ரை போகாநிற்கிற, சாத்து - ஸமூஹமானது, எறிந்த - இட்ட, பூசல்-யுத்தத்திலே, வல் - மிகவும் த்வநியாநின்றுள்ள, வாய்-வாயையுடைத்தான, து -உடுக்கைமுதலிய வாத்யங்கள், கடுப்ப-சப்திக்கவும், சிலை-வில்லை, கை - கையிலேயுடையரான, வேடர் - வேடருடைய, தெழிப்பு - ஆரவாரமானது, அறாத - எப்போதும் மாறாத, சிங்கவேழ்குன்றம்—. ... ௨.

வ்யா.—இரண்டாம்பாட்டு.—(அலைத்த) சிற்றத்தாலே கடைவாய்களோடே நாக்கை யெற்றிக்கொள்ளாநின்றுள்ள பெரியவாயையும், ஒளியையுடைத்தான எயிற்றையுமுடையஅத்விதீயமான மிடுக்கை யுடைத்தான ஸிம்ஹமாய். (அவுணன் கொலைக்கையாளன்) நாட்டார் பரஹிம்ஸை பண்ணுவது தந்தாமுடைய ப்ரஜைகளுடைய ரக்ஷணத்துக்காகவிறே; இவனுக்கது போய், ப்ரஜையை ஹிம்ஸிக்குமது ஸஹித்ததாய்த்து. பரஹிம்ஸைபண்ணுகைக்கு தேவதைகள்பக்கலிலே வரம்பெற்று அதுதானே யாத்ரையாய்த் திரிகிற அஸுரனுடைய நெஞ்சை யிடந்த கூரிய திருவுகிரை யுடையவன் வர்த்திக்கிற ஸ்தாநம்.

(மலைத்தவித்யாதி) திரள் திரளாக தீர்த்தயாத்ரை போகாநிற்பர்களே; அவர்களைப்பறிக்கைக்காக அங்குண்டான வேடர் வந்து மலைத்து மேல்விழுவர்க்ள்; இவர்களுமவர்களோடே யெதிர்ப்பர்கள். (எறிந்தபூசல்) எறிதல் - இடுதல்; இட்டபூசல். அவர்களிவர்களைச்சூறைகொள்ளுகிற பூசலிலே. (வன்துடி வாய் கடுப்ப) கேட்டபோதே முடியும்படியான த்வநியை யுடைத்தா யிருக்கிற துடியானது கடுப்ப.

இரண்டாம்பாட்டு.—(அலைத்தவித்யாதி.)ஞாலமஞ்சவூளரியானப்ரகாரத்தை வர்ணிக்கிறுரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

"கோள்" என்றதினர்த்தம் (மிடுக்கையென்றது.) கொலைக்கையாளனை - அவுணன் - நெஞ்சிடந்த என்றந்வயம்.கொலையே ஸ்வபாவமாக வுடைய கையையுடையவனென்று சப்தார்த்தம்; அத்தை யுபபாதிக்கிறுர் (நாட்டாரித்யாதி.) வாக்யார்த்தம் (பரஹிம்ஸையித்யாதி.)

மலைத்த-தகையப்பட்ட, செல்சாத்து-செல்லாநிற்கிறஸமூஹமென்றுசப்தார்த்தமாய், அத்தை வர்ணிக்கிறுர் (திரளித்யாதி.) சூறை - புடவை. கடுப்ப-சப்திக்க.

௩.—ஏய்ந்தபேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாய், அவுணன்-
வாய்ந்த வாகம் வள்ளுகிரால் வகிர்ந்த வம்மானதிடம்;
ஓய்ந்த மாவு முடைந்த குன்று மன்றியு நின்றழலால்
தேய்ந்தவேயுமல்லதில்லாச் சிங்கவேழ்குன்றமே. ... ௩.

---

ப-ரை.—ஏய்ந்த - வடிவுக்குத்தக்க, பேழ் - பெருத்த, வாய் - வாயையும்,
வாள் - வாள்போன்ற, எயிறு - பற்களையும், ஓர் - ஒப்பற்ற, கோள் - மிடுக்
கையுமுடைய, அரியாய்-நரஸிம்ஹரூபியாய்க்கொண்டு, அவுணன்-ஆஸுரப்ரக்ரு
தியான ஹிரண்யனுடைய, வாய்ந்த-நரஸிம்ஹத்துக்குத் தகும்படி வளர்ந்த, ஆகம் -
சரீரத்தை, வள்உகிரால் - கூரிய திருவுகிராலே, வகிர்ந்த - அநாயாஸேந [மு
றித்துப் பொகட்ட, அம்மானது - ஸர்வேச்வரனுடைய, இடம் - ஸ்தாநமாவது;
ஓய்ந்த - ஸாரமில்லாத நிலத்தில் ஸஞ்சரிக்கையாலே ஓய்ந்து கிடக்கிற, மாவும் -
மிருகங்களும், உடைந்த - திக்குதலி உடைந்த, குன்றும் - சிறுமலைகளும், அன்
றியும் - அதுக்குமேலே, நின்று - தன்னிலேயுண்டான, அழலால் - நெருப்பாலே,
தேய்ந்த - குறைக்கொள்ளியாய்க் கிடக்கிற, வேயும் - மூங்கிலும், அல்லது - [மு
ஒழிய, இல்லா - வேறில்லாத, சிங்கவேழ்குன்றம்—. ... ... ௩.

---

(சிலைக்கை) கையில் வில்லை யுடையராயிருந்துள்ள வேடருடைய ஆர்ப்பரவம் மாறாத தேசமாய்த்து; அவர்கள் கையில் ஸ்யாவஹமான துடியோசையும் பறிக்கிற ஆர்ப்பரவமுமேயாய்ச் செல்லாநிற்குமாய்த்து. உகந்தருளின நிலங்களிலே யுள்ளதாகையாலே, அவர்கள்கையில் துடியோசையோடு அவர்களைப் பறிக்கிற த்வநியோடுவாசியற உத்தேச்யமாயிருக்கிறதாய்த்து. நரஸிம்ஹத்தினுடைய சீற்றத்தோடு அங்குள்ளாருடைய சீற்றத்தோடு அவர்கள் வ்யாபாரத்தோடு வாசியற்றிருக்கிறதாய்த் திவர்க்கு. ... ... ... ... ௨.

மூன்றாம்பாட்டு.—(ஏய்ந்தவித்யாதி) வடிவிற்பெருமை [உடு
க்குத் தகுதியானபெரியவாயையும்; வாள்போலேயிருந்துள்ளஎயிறெ
ன்னுதல், ஒளியை யுடைத்தான எயிறென்னுதல். (ஓர்கோளரி
யாய்) மிடுக்கையுடைய அத்விதீய நரஸிம்ஹமாய். அவுணனுடை
ய – ஆஸுர ப்ரக்ருதியானவனுடைய, வாய்ந்தவாகமுண்டு – நரஸிம்
ஹத்துக்குத் தகுதியாம்படி வளர்ந்த சரீரம், அத்தைக்கூரிய[திரு
வுகிராலே வகிர்ந்த ஸர்வேச்வரனுடைய ஸ்தாநம்.

---

“தெழிப்பு” என்றதினர்த்தம் (ஆர்ப்பரவமென்றது.) தீர்த்தயாத்ரை போ
கிறவர்களுடைய கூறைகொள்ளுகிற வேடரை யிவர் வர்ணிப்பானென்னென்ன
வருளிச்செய்கிறார் (உகந்தருளினவித்யாதி.) இத்தால் - “யஸ்யாநுக்ரஹமிச்சாமி
தஸ்யவித்தம்ஹராம்யஹம்” என்கிற ஈச்வரனோபாதி அவர்களும் கைம்முதல் [கூறு
வாங்கி அநந்யகதிகளாக்கி விட்டு இவர்களுடைய ஸர்வஸ்வத்தையும் ஆனியைப்
போலே அந்நரஸிம்ஹத்துக்கு சேஷமாக்குமவர்களாகையாலே உத்தேச்யமாய்
வர்ணித்தாரென்றதாய்த்து. ... ... ... ... ௨

மூன்றாம்பாட்டு.— (ஏய்ந்தவித்யாதி.) இவரவன்வாயைப்பார்த்துக் கொண்
டிருக்குமவராகையாலேயிவருமவன்வாயை வர்ணிக்கிறாரென்றுமஸ்ரீகண்டு[சம
கொள்வது.

மூ.—எவ்வும் வெவ்வேல் பொன்பெயரோ னேதலனின்னுயிரை-
வவ்வி ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்த வம்மானதிடம்;
கவ்வுநாயும் கழுகு முச்சிப்போதொடு கால் சுழன்று
தெய்வமல்லாற் செல்லவொண்ணாச் சிங்கவேழ்குன்றமே. ௪.

ப-ரை.— எவ்வும் - துக்கத்தைப் பண்ணுகிறதாய், வெம் - க்ரூரமான, வேல்-வேலையுடைய, ஏதலன் - சத்ருவான, பொன்பெயரோன் - ஹிரண்யனுடைய, இன் உயிரை - நற்சீவனை, வவ்வி - பரிக்ரஹித்து, ஆகம் - அவன் சரீரத்தை, வள்ளுகிரால் வகிர்ந்த அம்மானதிடம்—; கவ்வும் - கண்டாரை யெல்லாம் கவருமதான, நாயும்-நாய்களும், கழுகும் - அப்படிப்பட்ட கழுகுகளும், உச்[மு சிப்போதொடு - ஆதித்யனும், கால்சுழன்று - கால்தடுமாறுமதாய், தெய்வம் அல்லால் - தன்னை விரும்பித்தொழும் ஆஸ்ரீதர்க்கொழிய, செல்ல ஒண்ணா - சென்று கிட்டவொண்ணாத, சிங்கவேழ் குன்றம்—. ... ... ... ௪.

(ஓய்ந்தமாவும்‡) தளர்ந்து பசையற்ற நிலத்தில் ஸஞ்சாரத்தாலே அந்நிலத்துக்கடைத்த திர்யக்குக்களும் ஓய்ந்திருக்கு மாய்த்[மடு து. (உடைந்தகுன்றும்) தொட்டாரோடே ஷோஷமாம்படி நிக்கதுவி யுடைந்த குன்றும், அதுக்குமேலே, தன்னிலே யுண்டான அழலாலே தேய்ந்த மூங்கிலுமல்ல தில்லாத சிங்கவேழ்குன்றமே. தன்னிலேயுண்டான நெருப்பாலே தேய்ந்த வேய்களும், *வண்டினமுரலுஞ்சோலை யோபாதியாகத்தோற்றுகிறதாய்த்திவ[உ௰ ர்க்கு. "அதுவிதுவுதுவென்னலாவனவல்ல" என்னக்கடவதிறே. பிறர்க்குக்குற்றமாய்த்தோற்றுமவையும் உபாதேயமாய்த் தோற்றுகையிறே ஒருவிஷயத்தை உகக்கையாகிறது. ... ... ௩.

நாலாம்பாட்டு.— (எவ்வும் வெவ்வேல் பொன்பெயரோன்) கையும் வேலுமா யிருக்கிற விருப்பைக்கண்டகாட்சியிலே, [உரு

"மா‡" என்று - நாலுகாலுடைய ஜந்துக்களாய், ம்ருகங்களைச் சொல்லுகிறது. தேய்ந்த - குறைக்கொள்ளியான. குறைக்கொள்ளியைக் கொண்டாடுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (தன்னிலேயித்யாதி.) அவன் ஸம்பந்தமுள்ளதெல்லா முத்தேச்யமாய்த் தோற்றுகைக்கு ஹேதுவை யருளிச்செய்கிறார் (பிறர்க்கித்யாதி.) ஆக, நரஸிம்ஹம் தன்னிலுண்டான கோபாக்நியாலே குன்றுபோன்ற ஹிரண்யன்நெஞ்சுடைந்து தத்ரத்யரான ராக்ஷஸராகிற துஷ்டம்ருகங்கள் ஓய்ந்து கிடக்கிறபடிக்கு ஸ்மாரகமாய் இவர்க்குத்தேச்யமாய்த் தோற்றுகிறதென்றதாய்த்து. ... ... ... ... ... ... ௩.

நாலாம்பாட்டு.— (எவ்வுமித்யாதி.) கீழ் "கோளரியாய்" என்று - மிடுக்கைச் சொன்னது உபபத்தமென்று தோற்ற, சத்ருவான ஹிரண்யனை வர்ணிக்கிறு[௪௫ ரென்று வஹமறி கண்டுகொள்வது.

‡ "மாவே கருமையும் பெருமையும் நிலனும், மேவியகாற்காலுடையவும் வண்டும், பூவுறைதிருவெனவாறையும் பொருந்தும்" என்று நிகண்டு.

அது உடம்பிலே தைத்தால் பிறக்கும் து:க்கமெல்லாம் பிறக்கும்படியிருக்கை. எவ்வத்தைப் பண்ணாநின்றுள்ள வெவ்விய வேலையுடைய, பொன்பெயரோனுண்டு-ஹிரண்யன். எவ்வம் - து:க்கம். ஏதலன்-சத்ரு. சிறுக்கனுக்கு சத்ருவானபோதே தனக்கும் சத்ருவாயிருக்கிறானாய்த்து. "சத்ருக்ருஹத்தில் போஜிக்கவுமாகாது" என்றானிறே. பாண்டவர்களுக்கு சத்ருவானபோதே தனக்கும் சத்ருவானபடி; அவனுடைய இன்னுயிரை - அவன்விரும்பின வுயிரை. (வவ்வி) பரிக்ரஹித்து; "பௌஜநார்த்தநஃக்ருஷ்யஃ" என்கிறபடியே.

(கவ்வுநாயும்) ஆரேனுமாகக்கண்டபோதே கவ்வியல்லது நி[ய ல்லாதநாயும், அப்படி கவ்வும் கழுகும். (உச்சிப்போதொடு கால்சுழன்று) ஆதித்யனும் அந்நிலத்திலே வந்தவாறே,கால்தடுமாறிச்சுழன்று வாராநிற்குமாய்த்து. உச்சிப்போதுண்டு - ஆதித்யன், அவனோடேகூட, கவ்வுநாயும் கழுகுமாகக் கால் சுழன்று வாராநிற்கு மென்னுதல்; அன்றிக்கே, உச்சிப்போதோடே,காலுண்டு-காற்று,அது [யரு சுழன்றுவாராநிற்கும். நிலவெம்மையைச்சொன்னபடி. அத்தேசத்தைச்சென்று ப்ராபிக்க ஆசைப்படுகிறவர், "தெய்வமல்லால் செல்லவொண்ணா" என்கிறாராய்த்து, நரஸிம்ஹத்தினுடைய அழகைக் கண்டு கண்ணெச்சில்படுவாரில்லையென்னுமத்தைப்பற்ற. "அந்தியம் போதி லரியுருவாகி யரியையழித்தவனைப்பல்லாண்டு" என்னு [உய மவர்களிறே. அநாஸ்ரிதர்க்குச் சென்று கிட்ட வொண்ணாதாய்த்து. ஹிரண்யன்போல்வார்க்குச்சென்று ப்ரவேசிக்கப்போகாதாய்த்து.௪.

"த்விஷதந்நம் நபோக்தவ்யம் த்விஷந்தம் நைவபோஜயேத் | பாண்டவாந் த்விஷஸேராஜந் மமப்ராணாஹிபாண்டவா:" என்ற வசநத்தை யுட்கொண்டு கீழ்ச் சொன்ன அர்த்தத்தை ஸாதிக்கிறார் (சத்ருக்ருஹத்திலித்யாதி.) [உரு

உஷ்ணகிரணனான ஆதித்யனுக்கும் கால் தடுமாறும்படி யென்னென்ன வருளிச்செய்கிறார் (நிலவெம்மையித்யாதி.) தாம் கிட்டவாசைப்படுகிறவர் "தெய்வமல்லால் செல்லவொண்ணா" என்னக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அத்தேசத்தை யித்யாதிவாக்யத்ரயத்தாலே.) இங்கு, "தெய்வம்" என்றதுக்கு - "விஷ்ணுர்தேவ:" என்கிறபடியே மங்களாசாஸநபரன்விநா ஆஸுரப்ரக்ருதிகளுக்குக்கிட்ட வொண்ணாதென்று தாத்பர்யம் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (அநாஸ்ரிதர்க்கித்யாதி.) "ஸீதோபவஹநூமத:" என்கிறபடியே அந்நிலவெம்மைதானே குளிர்த்தியைக் கொடுக்குமென்று கருத்து. ... ... ௪.

அஞ்சாம்பாட்டு.—(மென்றவித்யாதி.) சக்ரவர்த்தித்திருமகன்விற்பிடித்தபிடியிலே அஸுரர்மண்ணுண்ணுமாப்போலே, நரஸிம்ஹத்தின் வாயில்பிறக்கும் விக்[ஙரு ருதிகளிலேயும் நசிப்பர்களென்று திருவுள்ளம்பற்றி, *ஏதலனின்னுயிரை வவ்வினதக்கு ஹேதுவான * மென்றபேழ்வாயை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

மூ.—மென்றபேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாய், அவுணன்-
பொன்றவாகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்;
நின்றசெந்தீ மொண்டுசூறை நீள் விசும்பூடிரிய†
சென்றுகாண்டற்கரிய கோயில் சிங்கவேழ்குன்றமே. ரு.

---

ப-ரை.—மென்ற - சிற்றத்தாலே அசையாநின்றுள்ள, பேழ் - பெரிய, வாய்- வாயையும், வாள் - வாள்போன்ற, எயிறு - பற்களையும், கோள் - மிடுக்கையுமுடைய, ஓர் அரியாய் - அத்விதீயநரஸிம்ஹமாய், அவ்வடிவைக் கண்டபோதே, பொன்ற - நசித்த, அவுணன் - அஸுரனான ஹிரண்யனுடைய, ஆகம் - சரீரத்தை, வள்உகிரால் - கூரியதிருவுகிராலே, போழ்ந்த - இருபிளவாம்படி பண்ணின, புனிதன் - பாவசுத்தியையுடைய ஸர்வேச்வரனெழுந்தருளி யிருக்கிற, இடம் - ஸ்தாநமாவது ; நின்ற - குறைவற்றுக்கிடக்கிற, செந்தீ - சிவந்த அக்நியை, சூறை - சுழல்காற்றானது, மொண்டு - முகந்துகொண்டு, நீள்விசும்பூடு - பரந்த ஆகாசத்தினிடையிலே, இரிய - சிதறவோடுகையாலே, சென்று - அருகே போய், காண்டற்கு-காண்கைக்கு, அரிய- எல்லார்க்கும் அரிதாயிருக்கிற, கோயில் - திருப்பதியான, சிங்கவேழ்குன்றமே—. ... ... ... (ரு)

---

வ்யா.—அஞ்சாம்பாட்டு.—(மென்றவித்யாதி) சிற்றத்தாலே மடித்த பெரியவாயையும், வாள்போலே யிருந்துள்ள எயிற்றையும், மிடுக்கையுமுடைய அத்விதீய நரஸிம்ஹமாய். (அவுணன் பொன்ற) நரஸிம்ஹத்தினுடைய தோற்றரவிலே பிணமானானாய்த்து. (ஆகமித்யாதி) பின்னையும் சிற்றம் மாறாமையாலே பிணத்திலே வ்யாபரித்தானித்தனை யாய்த்து. (புனிதனிடம்) பிறர்க்கு உபகரித்தானாயிருக்கையன்றிக்கே தன்விரோதியைப் போக்கின சுத்தியோகத்தை நினைக்கிறதாய்த்து.

(நின்றவித்யாதி) குறைவற்றுக்கிடக்குமாய்த்து அக்நி, அத்தை முகந்துகொண்டு, சுழல்காற்று, பரப்பை யுடைத்தான ஆகாசத்திலே இரிய - அங்கே சிதறவோட, ஆர்ப்பரவத்தைப் பண்ணவென்னுதல்; (எரிய) என்று பாடமாகில், ஆகாசந்தானே (க) இந்தனமாக எரியவென்றபடி. (சென்று) இப்படி யிருக்கையாலே ஒருவர்க்கும் சென்று காண்கைக்கரிதா யிருக்குமாய்த்து. பரமபதத்தோபாதி யிந்நிலத்துக்கும் நமக்கு ஐயப்படவேண்டா என்று ஹ்ருஷ்டராகிறார். ... ... ... ... ரு.

---

பொன்ற - நசித்த. மென்றவாயைக்காணவே பொன்ற வாகமாய்த்தென்று கருத்து.

"சூறை" என்றதினர்த்தம் (சுழல்காற்றென்றது.) (எரிய) என்ற பாடத்திலே, சூறைவீச அது நீள்விசும்பூடு (எரிய) என்றத்யாஹரித்துக்கொள்வது. ரு.

ஆறும்பாட்டு.—(எரிந்தவித்யாதி.) * அங்கண்ஞால மஞ்சின வளவன்றிக்கே, "நவாயுஃபஸ்பர்ஷேயதாயவாஸ்தம் சமிரவீதிசோகச்யக்விச்வாப்யசலேசலாஸா சலகுலா|நஹச்சப்ரச்யோதிக்வஷிதமபிபாயோநரஹரௌ த்வயிஸ்தம்ஹேசம்ஹத்ய புஷிஸதிஹேஸுர்ஷா ஹுஜ" என்கிறபடியே-தேவர்களும் மஞ்சும்படியானபடியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

---

† "எரிய" என்று பாடாந்தரம். (க) இந்தநம் - விறகு.

௬.—எரிந்தபைங்கணிலங்குபேழ்வாயெயிற்றொடிதெவ்வுருவென்று
இரிந்து வானோர் கலங்கியோட விருந்த வம்மானதிடம்;
நெரிந்தவேயின் முழையுள்நின்று நீணெறிவா யுழுவை
திரிந்தவானைச்சுவடு பார்க்கும் சிங்கவேழ்குன்றமே. ௬.

ப-ரை.—எரிந்த - சீற்றத்தாலே எரியாநிற்பதாய், பை-பசுமையான, கண் - கண்களையும், இலங்கு - ஒளிவிடாநின்றுள்ள, பேழ்வாய் - பெரியவாயையும், எயிற்றொடு - பற்களையுமுடைத்தாயிருக்கிற, வடிவைக்கண்டு, இது எவ்வுரு ! - இது என்னவடிவு !, என்று - என்றுஅஞ்சி, வானோர் - தேவர்கள், இரிந்து - அங்கேயிங்கே சிதறி, கலங்கி-கால்தடுமாறி, ஓட - ஒருவர் புக்கவிடத்தில் ஒருவர்புகாதே[ய] ஓடும்படியாக, இருந்த - எழுந்தருளியிருக்கிற, அம்மானது - ஸர்வேச்வரனுடைய, இடம் - ஸ்தானமாவது ; நெரிந்த - ஒன்றோடொன்று சேர்ந்திருந்துள்ள, வேயின் - மூங்கிலின், முழையுள்நின்று - துளைவழியாக, உழுவை - புலிகளானவை, நீள் நெறிவாய் - பெரியவழியிலே, திரிந்த - ஸஞ்சரியாநின்றுள்ள, ஆனை - யானைகள் போன, சுவடு - அடையாளத்தை, பார்க்கும்- ஜிக்ராணத்தாலே[ய] பாராநின்றுள்ள, சிங்கவேழ்குன்றம்—. ... ... ... (௬)

வ்யா.—ஆறும்பாட்டு.—(எரிந்தவித்யாதி) சீற்றத்தாலே பொரியாநிற்பதாய் ஜாதிப்ரயுக்தமான பசுமையை யுடைத்தான கண்ணையும், உஜ்ஜ்வலமாகாநின்றுள்ள பெரிய வாயையும், எயிற்றையுமுடைய வடிவைக்கண்டு.(இதெவ்வுருவென்று) "இற்றைக்கு முன்பு[உம] கண்டறியாததொன்றாயிராநின்றது ! இதென்ன வடிவு !" என்றஞ்சி, தேவர்களானவர்கள் (ஆர்ப்பரவத்தைப்பண்ணி) † அங்கேயிங்கே சிதறிக் கால் தடுமாறி, ஒருவர் புக்கவிடத்திலே யொருவர் புகாதே யோடும்படியா யிருந்த ஸர்வேச்வரனுடைய ஸ்தாநம்.

(நெரிந்தவித்யாதி) நெருக்கத்தாலே ஒன்றோடொன்று இறை[உறு]ந்து நெரிந்திருந்துள்ள மூங்கில்துளைவழியே – அந்த த்வாரத்தாலே, உழுவையுண்டு - புலி, அது, நீணெறிவாயிலே - பெருவழியிலே, ஸஞ்சரியாநின்றுள்ள. (ஆனைச்சுவடு பார்க்கும்) ஆனையினுடைய மஸ்தகத்தைப்பிளந்துஅத்தைப்பாநம்பண்ணுகைக்காகஆனை போகிற பெருவழியிலே அவற்றைச்சுவடொத்தி நிற்குமாய்த்து,[கூம] ஆஸுரப்ரக்ருதிகளாயிருப்பாரை யழியச்செய்கைக்கு நரஸிம்ஹம் அடிச்சுவடொத்துமாப்போலே. ... ... ... ௬.

மூலத்திலே (எயிற்றொடு) என்ற வநந்தரம், இருக்கிறவடிவைக்கண்டு என்றத்யாஹாரம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (சீற்றத்தாலே யித்யாதி.) "இரிந்து" என்றதினர்த்தம் (அங்கேயிங்கேசிதறி) என்றது. [கூடு

(த்வாரத்தாலே) என்றவநந்தரம், புறப்பட்டு என்று சேஷம். இத்தால் - ஒன்றோடொன்று சேர்ந்திருந்துள்ள மூங்கில்களைத் தன் பலத்தாலே நீக்கி வெளிக்கண்டு புலி வெளிநிலத்திலே புறப்பட்டதென்று வம்சாதிஸித்தியையச் சொல்லிற்றாய்த்து. (சுவடொத்திநிற்கும்) என்றதுக்கு - இங்குமந்யாக்ராணம் பண்ணுநிற்குமென்று கருத்து. ... ... ... ... ... ௬.

† குண்டலிதக்ரந்தம் சில ஸ்ரீகோசங்களி லில்லை.

மூ.—முனைத்த சீற்றம் விண்சுடப்போய் மூவுலகும் பிறவும்
அனைத்துமஞ்சவாளரியா யிருந்த வம்மானதிடம்;
கனைத்த தீயும் கல்லுமல்லா வில்லுடைவேடருமாய்த்
தினைத்தனையும் செல்லவொண்ணாச் சிங்கவேழ்குன்றமே. ஏ.

ப-ரை.—முனைத்தசீற்றம் - மிக்க கோபமானது, போய் - இக்குன்றம் போய், விண்சுட - ஆகாசத்தைச் சுடும்படியாகவும், மூவுலகும் - மூன்றுலோகங்களிலுள்ளவர்களும், பிறவும் - மற்றும், அனைத்தும் - ப்ரஹ்மாதிலோகங்களிலுள்ளவர்களும், அஞ்ச - பயப்படும்படியாகவும், ஆளரியாய் - நரஸிம்ஹரூபியாய், இருந்த - எழுந்தருளி யிருக்கிற, அம்மானது - ஸர்வஸ்வாமியுடைய, இடம் - ஸ்தானமாவது ; கனைத்த - எரியும்போது த்வநியாநின்றுள்ள, தீயும் - அக்நியையும், கல்லும் - அத்தாலே வேகிற கற்களையும், அல்லா - இவற்றிலுங் காட்டில் க்ரூரராய், வில் - வில்லை, உடை - கையிலே யுடையரான, வேடருமாய் - வேடர்களையுமுடைத்தாய், அநாஸ்ரிதர்களுக்கு, தினைத்தனையும் - க்ஷணகாலமாகிலும், செல்ல ஒண்ணா - கிட்டவொண்ணாத, சிங்கவேழ்குன்றம்—. முனைத்தலென்றும், சீற்றமென்றும் - கோபமாய், மிக்ககோபமென்றபடி. (ஏ)

வ்யா.—ஏழாம்பாட்டு.—(முனைத்தவித்யாதி) மிக்கசீற்றமானது போய் அந்தரிக்ஷத்தைச்சுட. (மூவுலகு மித்யாதி) த்ரைலோக்யமும் ப்ரஹ்மாதிகளுடைய குடியிருப்பும் எங்குமொக்க அஞ்சும்படியாக ; ஆண்மையை யுடைய வென்னுதல், மநுஷ்யத்வமும் ஸிம்ஹத்வமும் கலந்திருக்கையைச் சொல்லிற்றுதல்.

(கனைத்த) த்வநியாநின்றுள்ள அக்நியும் – எரிகிறபோதை வெடுவெடென்கிற த்வநியை யுடைத்தான அக்நியும், அதிலே வைக்கோல் போர்போலே வேகிற கல்லும்¶.

(அல்லாவித்யாதி) இங்ஙனெரிகிற நெருப்பிலும் கல்லிலும் அடியிடலாம், அங்குத்தை வேடர்முகத்தில் விழிக்க வொண்ணாதாய்த்து அவர்களுடைய க்ரௌர்ய மிருந்தபடி. (தினைத்தனையும்)உகவாதார்க்குக் கண்ணாலே காணலாம்படி சென்றுகிட்டிக் கண்ணெச்சிறபடவொண்ணாதபடி யிருந்த தேச மாய்த்து. ... ... ஏ.

ஏழாம்பாட்டு.—(முனைத்தவித்யாதி.) "எரிந்தபைங்கண்" என்றத்தால் தோற்றின சீற்றத்தின்எல்லைநிலத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி கண்டு கொள்வது.

"ஆள்" என்றதினர்யம் (ஆண்மையையென்றது.) அதாவது - சேவகத்தனம். "ஆள்" என்றதுக்கர்யாந்தரம் (மநுஷ்யத்வமுமித்யாதி.)"அல்லா" என்றுவிசேஷிக்கையாலேவேடர்க்குஆயிக்யம்தோற்றுகிறதென்கிறார் (இங்ஙனித்யாதி.)"தினைத்தனையும்-" தினையென்று - ஸூக்ஷ்மமானயாங்யமாய், எள்ளத்தனை யென்னுமாப்போலே யாய், பரிமிதகாலத்தைச்சொல்லுகிறதென்று விவக்ஷித்து, வாக்யத்துக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (உகவாதார்க்கித்யாதி.) ... ... ஏ.

எட்டாம்பாட்டு.—(நாத்தழும்ப வித்யாதி.) ஓர்ஹகநிர்ஹரத்தாலே விக்ஞதியை யடைந்து ஹிரண்யனைக்கொன்றபடியை யநுஸந்தித்தாராய், பின்பு ப்ரஹ்மாதிகளாலே ஸ்துத்யனாயிருக்கும்படியை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

¶ "அக்நியாலே த்ர்ணம்போலே வேகிறகல்லும்" என்று சில ஸ்ரீகோசங்கள்.

மூ.—நாத்தழும்ப நான்முகனு மீசனுமாய் முறையா
  லேத்த அங்கோராளரியா யிருந்த வம்மானதிடம்;
 காய்த்த வாகை நெற்றொலிப்பக் கல்லதர் வேய்ங்கழைபோய்,
 தேய்த்ததீயால் விண்சிவக்கும் சிங்கவேழ்குன்றமே. அ.

ப-ரை.—நா - நாவானது, தழும்ப - தழும்பேறும்படியாக, நான்முகனும் - நான்கு முகத்தையுடைய ப்ரஹ்மாவும், ஈசனும் - ருத்ரனும், ஆய் - தந்தாமுடைய தரம் குலையாதபடியாக, முறையால் - "அவன்சேஷி, நாம்சேஷபூதர்" என்னும் முறையாலே, ஏத்த - ஸ்தோத்ரம்பண்ண; அவர்களுக்கு ஸ்துத்யனாய்க்கொண்டு, அங்கு - அவ்விடத்திலே, ஓர் ஆளரியாய் இருந்த அம்மானதுஇடம்—; [ய காய்த்த - காய்கள் நிறைந்த, வாகை - வாகைகளின், நெற்று-நெற்றுகள், ஒலிப்ப- சப்திக்கும்படியாக, கல்அதர்-கல்வழியிலே யுண்டான, வேய்ங்கழை - குழல் மூங்கிலானது, போய் - ஆகாசத்ளவு யளாவும்படி ஓங்கி, தேய்த்த - தன்னி லே உராய்கையாலுண்டான, தீயால் - நெருப்பாலே, விண் - ஆகாசம், சிவக்கும் - சிவந்துகிடக்கிற, சிங்கவேழ்குன்றம்—. ... ... ... (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு.—(நாவித்யாதி) நாவானது தழும்பே றும்படியாக, சதுர்முகனும், தேவர்களில் தலையான ருத்ரனும், முன்பு ஹிரண்யனுக்கஞ்சி மநுஷ்யவேஷங்கொண்டுதிரிந்தவர்கள், அவன் பட்டபின்பு தந்தாமுடைய தரம் குலையாதபடி முறையாலே வந்து சேஷித்வ ப்ராப்தியாலே ஸ்தோத்ரம்பண்ண; அவர்களுக்கு [உ ஸ்துத்யனாய்க்கொண்டு, அவ்விடத்திலே இதுக்கு முன்பநுபவித்தறி யாத நரஸிம்ஹமாய்க்கொண்டிருக்கிற ஸர்வேச்வரனுடைய ஸ்யாநம்.

(காய்த்தவித்யாதி) காய்த்த வாகைகளிலேநெற்றானதுத்வநிப்ப. பாலை நிலத்துக் கடைத்த வ்ருக்ஷங்களிவையும் சொல்லக்கடவ திறே. (கல்லதர் வேய்ங்கழைபோய்) கழையென்று- மூங்கிலா [உ ய், அதரென்று-வழிக்குப்பேர். கல்வழியிலேயெழுந்த, வேய்ங்கழை யுண்டு - குழல் மூங்கில், அது அந்தரிக்ஷத்தளவும் வளர்ந்து தன்னிலே யிழைந்து அத்தாலே யுண்டான அக்நியானது, மேலெழுந் தாலே ஆகாசம் கறுத்திருக்குமாப்போலே இந்தநெருப்பாலே சிவ ந்து கிடக்குமாய்த்து. இத்தால் - அகவாயடங்க ப்ரஹ்மாதிக [ந ளுடைய ஸ்தோத்ரமாய்க் கிடக்கும்; புறவாயடங்கலும் வாகை நெற்றினுடைய த்வநியாய்க்கிடக்கும். ... ... அ.

"ஈசனுமாய்" என்கையாலே - முன்பு மநுஷ்யராயிருந்தமை ஸூசிதமாய் த்தென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (நாவானித்யாதி.)

பாலைநிலத்துக்கு - நிர்ஜலதேசத்துக்கு. முளைத்த சீற்றம் போய் விண் [கூ சுடும்படி யிருந்த நரஸிம்ஹத்தின் சீற்றம் மாறுகைக்கு மெள்ள ப்ரஹ்மாதிகள் வந்து ஸ்துதிக்குமாப்போலே, விண்சிவக்கும்படியானமூங்கிலிலுண்டான அக்நிக்கு அஞ்சி காட்டுவாகைகள் ஸ்துதிக்கிறன வென்று விவக்ஷித்துக் கருத்தரு ளிச்செய்கிறார் (இத்தாலித்யாதி.) (அகவாய்) என்கிறது - உள்ளிருக்கிற நரஸி ம்ஹவிஷயத்திலே யென்கை. (புறவாய்) என்றது - அந்த திவ்யதேசத்தைச் [சுற் சுற்றிலு முண்டான மூங்கில் விஷயத்திலென்கை. ... ... அ

மூ.—நல்லை நெஞ்சே ! நாந்தொழுதும் ; நம்முடை நம்பெருமான்
அல்லிமாதர் புல்க நின்ற வாயிரந்தோளனிடம்;
நெல்லிமல்கிக் கல்லுடைப்பப் புல்லிலையார்த்ததர்வாய்
சில்லிசில்லென்றொல்லறாத சிங்கவேழ்குன்றமே. கூ.

ப-ரை.—நம்முடை - நமக்கு ஆச்ரயணீயனாய், நம்பெருமான்-நமக்குஸ்வாமியாய், அநுகூலர் பக்கலிலும் ஆச்சீற்றம் புகுகிறதோ ! என்று அத்தையாற்றுகைக்காக, அல்லிமாதர் - தாமரைப்பூவையிருப்பிடமாக வுடைய பெரியபிராட்டியார், புல்க - "அகலகில்லேனிறையும்" என்று கட்டிக்கொள்ளும்படி, நின்ற - எழுந்தருளியிருக்கிற, ஆயிரம்தோளன் - ஆயிரம் திருத்தோள்களையுடைய ஸர் [ம வேச்வரனுடைய, இடம் - ஸ்தாநமாவது ; நெல்லி - நெல்லிமரங்கள், மல்கி - நிறைந்து, கல் - கற்களை, உடைப்ப - உடையப்பண்ணும்படியாகவும், புல்இலை - பனையோலையானது, ஆர்த்து - ஓசைப்படும்படியாகவும், அதர்வாய் - வழியிலே, சில்லி - சில்லீபி என்னும் பக்ஷிகள், சில்லென்று ஒல்அறாத - சில்லென்னும் ஓசை மாறாதபடியுமான, சிங்கவேழ்குன்றம்—; நல்லைநெஞ்சே!- எனக்குப்பாங்கான [மரு நெஞ்சே!, நாம்தொழுதும் - நாம்அங்கேசென்று அவனைத் தொழுது உஜ்ஜீவிப்போமென்று தந்திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார். ... ... (கூ)

வ்யா. - ஒன்பதாம்பாட்டு.— (நல்லைநெஞ்சே) எனக்குப் பாங்கானநெஞ்சே. ஸம்போதித்து, (நெஞ்சே நீயெனக்குப்பாங்காயிறே யிப்பேறுபெற்றது. (நாந்தொழுதும்) நாம்தொழுதுஉஜ்ஜீவிப்போம். இது,இத்திருமொழியிற்பாட்டுக்கெல்லாம் க்ரியாபதம். (நம்முடைநம்பெருமான்) நித்யஸூரிகளுக்கநுபாவ்யனாயிருக்குமாப்போலே நமக்கும் ஆச்ரயணீயனாய்க்கொண்டுவந்துஸந்நிதிபண்ணினஸர்வேச்வரன். (அல்லியித்யாதி) ப்ரஹ்மாதிக ளாச்ரயிக்க தேவர்கள் கலங்கி யோடப் புக்கவாறே, ப்ரதிகூல நிரஸநத்துக்காக இவ்வடிவுகொ[உரு ண்டதுபோய் அநுகூலர்பக்கலிலேயும் வந்துஹேலிக்குமளவாய்த்தோ! என்று அந்தச்சீற்றத்தை ஆற்றுகைக்காகப் பெரியபிராட்டியார் வந்து கட்டிக்கொள்ளுமாய்த்து. (ஆயிரந்தோளன்) இவளணைத்தால் இவளைக்கட்டிக்கொள்ள ஆயிரம்தோளுண்டாமாய்த்து.

ஒன்பதாம்பாட்டு.—(நல்லைநெஞ்சேயித்யாதி.) நான்முகனு மீசனுமேத்தச்[கூடி செய்தேயும் சீற்றம்மாறாதேயிருக்க பிராட்டி போய் ஸம்ச்லேஷித்துச் சீற்றத்தை மாற்றினபடியை யநுபவிக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

நல்லையான நெஞ்சே என்று விசேஷணமாக வொருயோஜனை யருளிச்செய்து, நெஞ்சே நீநல்லை யென்று அந்வயித்து யோஜநாந்தரம்(ஸம்போதித்தித்யாதி.)(பெற்றது) என்றவநந்தரம், என்கிறாரென்றுமாம் என்றுகூட்டுவது. இங்ங[கூடு னன்றாகில்,(ஸம்போதித்து)என்றுசொல்லவேண்டாவிறே. நம்பெருமான் என்னவமைந்திருக்க, "நம்முடை" என்று விசேஷித்தத்தாலே-தாம் நிரூபகரானமை தோற்றுகையாலே, அத்தை ஸத்ருஷ்டாந்த முபபாதிக்கிறார் (நித்யேத்யாதி)"அயர்வறுமமரர்கள்" என்னக்கடவதிறே.

ஹிரண்யனுடையநெஞ்சிடந்தபோது,அவனெலும்புடையும்படியும்,அவனு[சாய் டைய ஆர்த்துக்கொள்ளுகையும், அவன் ரக்தம் சில்லென்று புறப்படும்படியும், அத்தேசத்தைக் கண்டவுடனே ஸ்ம்ருதி விஷயமாகிறதென்னும் கருத்தாலே வர்ணிக்கிறாரென்று கொள்வது.

மூ.—செங்கணாளியிட்டிறைஞ்சும் சிங்கவேழ்குன்றுடைய
எங்களீசனெம்பிரானை யிருந்தமிழ் நூற்புலவன்
மங்கையாளன் மன்னுதொல்சீர் வண்டறைதார்க்கலியன்
செங்கையாளன்செஞ்சொல்மாலைவல்லவர் தீதிலரே. ௰

---

பதவுரை.—செம் - சிவந்த, கண் - கண்களையுடைய, ஆளி - ஸிம்ஹங்கள், தங்களுக்கு ப்ரதிகூலமான ம்ருகங்களைக் கொன்று அவற்றை, இட்டு - திருவடிகளிலே ஸமாராதனோபகரணமாக ஸமர்ப்பித்து, இறைஞ்சும் - ஆச்ரயியாநின்றுள்ள, சிங்கவேழ்குன்று - சிங்கவேழ் குன்றத்தை, உடைய - வாஸஸ்தாநமாக வுடையனாய், எங்கள் - ஸம்ஸாரிகளான நம்போல்வார்க்கும், ஈசன் -ஸ்வாமியாய், [ய எம்பிரானை - எனக்கு உபகாரகனான ஸர்வேச்வரன் விஷயமாக ; இரு - ஒருவராலும் கரைகாண வொண்ணாத, தமிழ்நூல் - தமிழ்சாஸ்த்ரத்தில், புலவன் - வல்லவராய், மங்கைஆளன் - திருமங்கைக்கு ராஜாவாய், தொல் - அநாதியான, மன்னு - பாரதந்த்ர்யத்திலே நிலைநின்ற, சீர் - ஸ்ரீயையுடையராய், வண்டு - வண்டுகள், அறை-சப்தியாநின்றுள்ள, தார் - மாலையையுடையராய்,செம்கையாளன்-மிக [மி வும் ஔதார்யத்தை யுடையரான, கலியன் - ஆழ்வாரருளிச்செய்த, செம்சொல் மாலை-செவ்விய சொல் தொடையை, வல்லவர் - அர்த்தத்துடன் கற்கவல்லவர்கள், தீதுஇலர் - பொல்லாங்கு இல்லாதவராவர் என்கிறார். ... ... (௰)

---

(நெல்லியித்யாதி)நெல்லிகளானவை மிக்கு கற்களை உடையப்பண்ணுமாய்த்து. நெல்லிமரங்கள் வேரோடிக் கற்களை உடையப்பண்ணும். (புல்லிலையார்த்து) மூங்கிலிலைகளானவை த்வநிக்க வென்னுதல், பனையோலைஓசைப்பட வென்னுதல். அதர்வாயிலே - வழியிடத்திலே ; சில்லியுண்டு-சில்வீடு, அது,சில்லென்னாநிற்குமாய்த்து- ஒரு சப்தாகாரத்தைப பண்ணாநிற்குமாய்த்து. ஒல்லறாத-த்வநி மாறாத. ... ௬.

வ்யா.—பத்தாம்பாட்டு.—(செங்கணித்யாதி) வீரஸ்ரீயாலே [உ சிவந்த கண்களையுடைய ஆளிகளானவை தங்களுக்கு ப்ரதிகூலமான ம்ருகங்களை யழியச்செய்து அவற்றைத் திருவடிகளிலே ஸமாராதநோபகரணமாகக் கொண்டுவந்து போகட்டு ஆச்ரயியாநிற்குமாய்த்து. ஸ்ரீவண்டாகர்ணாழ்வான் "இது ப்ராஹ்மணசவம், உத்தமம்" என்று "இதுபுதிசு"என்றானிறே.சிங்கவேழ்குன்றம்தனக்குவாஸஸ்தாந[ஸ்த மாக வுடையவன். ஸம்ஸாரிகளான நம்போல்வார்க்கும் சென்றாச்ரயிக்கலாம்படி யிருக்கிற உபகாரகனை. (இருந்தமிழ்நூற்புலவன்)ஒருவரால் கரைகாணவொண்ணாதபடி யிருக்கிற தமிழ் சாஸ்த்ரோக்தமானபடியைக் கரைகண்ட ஜ்ஞாநாதிக்யத்தை யுடையவர். (மங்கையாளன்) திருமங்கைக்கு நிர்வாஹகரானவர்.(மன்னுதொல்சீர்)நிலைநின்ற

---

சில் வீடென்றது - பக்ஷிவிசேஷம். இப்படி நரஸிம்ஹாவதாரப்ரகாசத்தில் த்வநிக்கு ஸூசகமான தேசமாகையாலே "நாம் தொழுதும்" என்கிறாரென்று கருத்து. ... ... ... ... ... ௬

பத்தாம்பாட்டு.—(செங்கணாளியித்யாதி.)

"நவம்சவமிதம்புண்யம் வேதபாரகமச்யுத|யஜ்ஞசீலம் மஹாப்ராஜ்ஞம்[சயி ப்ராஹ்மணம் சிவமுத்தமம்" என்கிற வசநத்தையுட்கொண்டு உத்தார்யத்தை ஸமர்த்திக்கிறார் (ஸ்ரீவண்டாகர்ணாழ்வா னித்யாதி.)

பாரதந்த்ர்ய ஸ்ரீயை யுடையவ ராய்த்து; "லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" வண்டுகளானவை மதுபாநம்பண்ணி அறையாநின்றுள்ள மாலையை யுடைய ஆழ்வார். (செங்கையாளன்) மஹோதாரன். இப்ரபந்தத்தைப் பிறர்க்கநுஸாவ்யமாம்படி பண்ணித்தந்தவரிறே. [ரு (செஞ்சொல்மாலைவல்லவர்) அரியஅர்த்தத்தை உள்ளபடி காட்டவற்றான செவ்விய சொல்தொடைவல்லவர். (தீதிலரே) நரஸிம்ஹம் விரோதியைப்போக்குகையாலே அவர்களுக்குப் பொல்லாங்கு வாராதிறே. ௰.

அடிவரவு—அங்கண் அலை ஏய்ந்த எவ்வும் மென்ற எரி
முனைத்த நா நல்லை செங்கண் கொங்கு.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

---

அறையாநின்றுள்ள - சப்தியாநின்றுள்ள. செம் - அழகான, கையை யாளுமவனென்று சப்தார்த்தம் (மஹோதாரனென்று.) ... ... ... ௰.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

## முதற்பத்து - எட்டாந்திருமொழி - கொங்கு. ப்ரவேசம்.

விரோதிநிரஸநசீலனாய், ஆஸ்ரிதஸம்ச்லேஷ ஸ்வபாவனாய், ஸர்வாநுராத்மாவா யிருக்கிற ஹரியானவன், வாயாலே திருநாமஞ்சொன்னானென்று ஒருசிறுக்கனுக்குத் தமப்பன் பகையாக உதவிற்றுருவடிவைக்கொண்டுவந்து தோற்றி, அவனுடைய விரோதி [உய யைப்போக்கி உபகரித்தவன், அவனொருவனளவிலேயும் பர்யவஸிக்கையன்றிக்கே திருநாமஞ்சொன்னாரெல்லாருடைய ஸம்ஸாரதுரிதத்தைத் போக்குகைக்காகத் திருமலையிலே வந்து ஸந்நிஹிதனானான், நாமங்கேபோயநுபவிப்போமென்று திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். தமிழ்பாஷைநடையாடுகிறதுக்கும் எல்லையானநிலமாயிருக்குமிறே. *

---

அ.—கொங்கலர்ந்த ப்ரவேசம்.—கீழ்த்திருமொழியிலே, "நின்ற செந்தீ மொண்டு சூறை நீள்விசும்பூடிரிய" என்றும் "கனைத்த தீயுங்கல்லும்" என்றும் "தேய்த்த தீயால் விண் சிவக்கும்" என்றும் - விரோதிகளுக்கு துஷ்ப்ரவேசமாயிருக்கும்படியை யநுஸந்தித்து, "நெஞ்சே நாம் தொழுதும்" என்றும் அநுஸந்தித்தார்; இப்படி நிலவெம்மையை யநுஸந்தித்ததே ஹேதுவாக, பரம [கூய காருணிகனான ஸர்வேச்வரன் இவரிடத்தில் தன்னுடைய படிகளைக் காட்டிக்கொடுக்க, கண்டநுபவிக்கிறாரென்று ஸங்கதி யுட்கொண்டருளிச் செய்கிறார் (விரோதீத்யாதி.) "பொங்குநீர் செங்கயல் திளைக்குஞ்சுனை" என்றிறே அநுஸந்திக்கிறது. குருந்தம், புள், பேய், மாமருதுகளை நிரஸித்தபடியைச் சொல்லுகையைப்பற்ற (விரோதிநிரஸநசீலனையென்றது.) "கோத்தங்காயர்தம் பாடியில் [கூரு குரவை" இத்யாதியைப்பற்ற (ஆஸ்ரிதஸம்ச்லேஷ ஸ்வபாவனையென்றது.) "பாருநீரெரிகாற்றினோடு" இத்யாதியைப்பற்ற (ஸர்வாநுராத்மாவாயென்றது.) "திண்டிறலரியாயவன்" என்றத்தைப்பற்ற (ஹரியானவனித்யாதி.) "பேசுமின் திருநாமம்" என்கிறபாட்டைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (அவனொருவனித்யாதி.) திருமலையை யநுபவிக்கைக்கு நியாமகாந்தரம் (தமிழித்யாதி.) இத்தால் - [சய சிங்கவேழ்குன்றத்திலே தாமெழுந்தருளினால் அங்குள்ளார் வடுகராய் தாம் தமிழராகையாலே * போதயந்த: பரஸ்பரம் பண்ணுகைக்குச் சேரவிழாமையாலே, இத்திருமலையிலேயிரண்டும் கலசியிருக்குமென்று அநுபவிக்கிறாரென்றுகருத்து. *

மூ.—கொங்கலர்ந்த மலர்க்குருந்த மொசித்த கோவல னெம்பிரான்,
சங்குதங்குதடங்கடல் துயில்கொண்ட தாமரைக்கண்ணினன்,
பொங்குபுள்ளினைவாய்பிளந்த புராணர்தம்மிடம்; பொங்குநீர்
செங்கயல் திளைக்குஞ்சுனைத் திருவேங்கடமடை நெஞ்சமே. க.

ப.உரை.—சங்கு - சங்குகள், தங்கு - பொருந்தி, தடம் - பரந்திருந்துள்ள, கடல் - திருப்பாற்கடலில், துயில்கொண்ட - யோகநித்திரை செய்யுமவனாய், தாமரைக்கண்ணினன் - தாமரைமலர்போன்ற திருக்கண்களை யுடையனானவன், கோவலன் - அங்குநின்றும் க்ருஷ்ணனாய் வந்து திருவவதரித்து, கொங்கு - பரிமளம், அலர்ந்த - வீசாநின்றுள்ள, மலர்-புஷ்பங்கள் நிறைந்த, குருந்தம்-குரு [ம ந்து வடிவுகொண்டு வந்த அஸுரனை, ஒசித்த - நிரஸித்து, பொங்கு - பெரியகிளர்த்தியோடே வந்த, புள்ளினை - பகாஸுரனுடைய, வாய் - வாயை, பிளந்த - கிழித்துப்போகட்டவனாய், எம்பிரான் - இப்படி விரோதிகளைப் போக்குகையாலே எனக்கு உபகாரகனாய், புராணர்தம் - புராணப்ரஸித்தனான ஸர்வேச்வரனுடைய, இடம்-ஸ்தாநமானது; பொங்குநீர்-மிக்க ஜலத்தையுடைத்தாய், செம்- [மரு இளமையாலே சிவந்த, கயல் - கயல்மத்ஸ்யங்களானவை, திளைக்கும் - களித்து வர்த்தியாநின்றுள்ள, சுனை-சுனைகளையுடைய, திருவேங்கடம்-திருமலையாம்; நெஞ்சமே! - மநஸ்ஸே!, அங்கே சென்று, "தாழ்சடையும் நீண்முடியும்" இத்யாதிப்படியே எழுந்தருளியிருக்குமவனை, அடை - கிட்டப்பாராய் என்கிறார். ... (க)

வ்யா.—முதற்பாட்டு.—(கொங்கலர்ந்த)பரிமளத்தை ப்ரவஹி [உம யாநிற்பதான மலரை யுடைத்தான. (குருந்தமொசித்த) அடியே பிடித்துத்தலையளவும் பூத்து தர்சநீயமாய் அஸுராவேசத்தாலே கலிய தாகத்தேடிநிற்க ; "இதழுகிதாயிருந்தது, முறித்துக்காரியங்கொள்ளுவோம்" என்றுஒசித்தானாய்த்து.(கோவலனெம்பிரான்) க்ருஷ்ணனாய்வந்தவதரித்துக் குருந்தை முறித்தாப்போலே, என்விரோதியைப் போக்கி யெனக்கு உபகரித்தவன். அதின்நிலையின்படி காரியஞ்செய்கையன்றிக்கே என்னுடைய காரியஞ்செய்த உபகாரகன். (சங்கித்யாதி) இவ்வவதாரத்துக்கடியாகத்திருப்பாற்கடலிலேவந்து ஸந்நிதிபண்ணினபடியைச் சொல்லுகிறது.சங்கென்றுபேர்பெற்றவையடைய சேரா நிற்பதாய்,கண்வளர்ந்தருளுகைக் கீடான பரப்பையுடைத்தான [ரூம திருப்பாற் கடலிலே, கண் வளர்ந்தருளினவன். (பொங்கித்யாதி) பெரியகிளர்த்தியோடே மிகைத்துவந்துதோற்றின பகாஸுரனை வாயைக்கிழித்து, இப்படிவிரோதிகளைப் போக்குகை பழையதாகச்செய்துபோருகிறவர் வந்து வர்த்திக்கிறஸ்தாநம். (பொங்கித்யாதி) ஜலத்தினுடையஸம்ருத்தி கயலினுடையகளிப்புக்கீடாயிருக்குமிறே.[ரூடு

முதற்பாட்டு.—(கொங்கித்யாதி) ஹிரண்யன் தான் * கொலைக் கையாளனாய் தன்னுடைய விரோதித்வந்தோற்ற விருந்தான், குருந்தம் முதலானவை ஆநுகூல்யந்தோற்ற வந்து வஞ்சகங்களாயிருக்கையாலே அவனிலும் க்ரூரங்களென்று திருவுள்ளத்திலே தோற்றி அவற்றை யருளிச்செய்கிறாரென்று அவதாரிகை யிட்டுக்கொள்வது. [சம

அழித்தவென்னாதே, "ஒசித்த" என்றதுக்கு வாஸநை (அடியேபிடித்தித்யாதி) இந்தால்-மாயாம்ருகத்தைம்ருகமென்றுபிடிக்கத்தேடினாப்போலேபூத்தமரமென்றே பூவுகிறாதபடிபேர்த்தானென்றதாய்த்து. குருந்தொசித்ததேதமக்குபகாரமாகஇத் தால்அர்த்தமாமருளிச்செய்கிறார் (அதின்நிலைவித்யாதி.) நீர்ப்பசையற்றநிலமாகையாலேஜைத்ரமானாயிருக்குது,அதுக்கு ப்ரதிபர்ஷமான நிலமென்றுதோற்ற [சடு "பொங்குநீர்" என்கிறாரென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஜலத்தினித்யாதி.)

மூ.—பள்ளியாவதுபாற்கடலரங்கம்;இரங்க வன் பேய்முலை
பிள்ளையா யுயிருண்ட வெந்தை பிரானவன் பெருகுமிடம் ; -
வெள்ளியான் கரியான் மணிநிறவண்ண னென்றெண்ணி நாடொறும்
தெள்ளியார்வணங்கும்மலைத் திருவேங்கடமடைநெஞ்சமே. உ.

ப-ரை.—வல் - வலியநெஞ்சுடையளான, பேய் - பூதனையுடைய, முலை - முலைகளானவை, இரங்க - தானேசுரக்கும்படியாக, பிள்ளையாய் - சிறியகுழவி வடிவுகொண்டு, உயிர் - அவளுடைய ப்ராணனையுங்கூட, உண்ட - அமுதுசெய்தருளினவனாய், எந்தை - எனக்கு குலநாதனாய், பிரான் அவன் - உபகாரகனான ஸர்வேச்வரனானவன், பள்ளியாவது-ஆச்ரிதரக்ஷணார்த்தமாகக் கண்வளர்ந்தரு [ழு ளும் படுக்கையாவது, பார்கடல் - திருப்பாற்கடலும், அரங்கம் - திருவரங்கம் பெரியகோயிலுமாம் ; பெருகும் - வளருகிற, இடம் - ஸ்தாநமாவது; தெள்ளியார் - அநந்யப்ரயோஜநரான திருமழிசைப்பிரான் போல்வார், "பாலின்நீர்மை செம்பொன் நீர்மை" இத்யாதிப்படியே, க்ர்தயுகத்தில், வெள்ளியான் - வெளுத்த நிறத்தையுடையவன், கலியுகத்தில், கரியான் - கறுத்தநிறத்தை யுடையவன்,[ழு த்வாபரயுகத்தில், மணிநிறவண்ணன் - நீலமணிபோன்ற நிறத்தையுடையவன், என்று எண்ணி - என்று பலகாலும் இவ்வடிவுகளை அநுஸந்தித்து, "ஒழிவில்கால மெல்லாமுடனாய் மன்னி" என்கிறபடியே, நாடொறும் - நாள்தோறும், வணங்கும் - திருவடிகளிலேவிழுந்து ஆச்ரயிக்கிற, மலை - மலையான, திருவேங்கடம் - திருமலையாம்; நெஞ்சமே!—,அடை-அங்கேசென்று கிட்டப்பாராய் என்கிறார். (உ)

இளமையாலே சிவந்தநிறத்தையுடைய கயல்களானவை களித்து வர்த்திக்கிற சுனைகளையுடைய திருமலையைஅடைநெஞ்சே யென்கிறார். க.

வ்யா.—இரண்டாம்பாட்டு.—( பள்ளியாவது பாற்கட லரங்கம்) ப்ரஹ்மாதிகளுக் காச்ரயணீயனாய்க்கொண்டு கண்வளர்ந்தருளுகிறது திருப்பாற்கடல் படுக்கை; அவ்வளவும் சென்று கிட்டமாட்டாத [உரு ஸம்ஸாரிகளுக்காக, கோயில். (இரங்கவித்யாதி) முலையை ஸ்பர்சித்தவளவிலே நெகிழ்ந்து முலைசுரக்கும்படியாக வென்னுதல் ; அன்றிக்கே, அவள் கதற வென்னுதல். வன்மையையுடைத்தான நெஞ்சையுடைய பூதனையுடைய முலையைப் பிள்ளையாயே யுண்டானாய்த்து. மௌக்த்யத்தாலேஉயிருக்கும்முலைக்கும்வாசியறியாதேஅமு [கூழ து செய்தானாய்த்து. (எந்தைபிரானவன் பெருகுமிடம்) எனக்கு குலநாயனான வுபகாரகன் வர்திக்கிற தேசம். பெருகுகை - வளருகை. அத்தால் - வர்திக்கையைச் சொன்னபடி.

"சங்குதங்குதடங்கடல்துயில்கொண்டதாமரைக் கண்ணினன்"என்றத்தைமுந்துற அநுஸந்தித்து, பாட்டுஅநுஸந்திக்கைஅந்வயம். ஆக, இப்பாட்டால்-திருமலை [நரு சென்றுகிட்டலாம் தேசமாகையாலே விரோதிக ளநுகூலவேஷத்தாலே வந்தாலும் திருவேங்கடமுடையான் அவர்களை நிரஸிப்பனென்றுசொல்லிற்றாய்த்து.க.

இரண்டாம்பாட்டு.—(பள்ளியித்யாதி.) கீழ்ப்பாட்டில் - க்ஷீராப்திசாயித்வம் பின்னாட்டி, ஸ்ரீரங்கசாயித்வத்தையும் யசோதைதொட்டிற்கிடையையும் ஸ்மரிப்பிக்கஅநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. [சழ

பிள்ளையா யுயிருண்ணக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (மௌக்த்யத்தாலேயித்யாதி.) (வர்திக்கையைச் சொன்னபடி) என்றதுக்கு - தொட்டிற்பிள்ளை பேயுயிருண்டபின்பு நிற்கக்கற்றது திருமலையிலே என்று கருத்து.

மூ.—நின்றமாமருதிற்றுவீழ நடந்த நின்மலன் ; நேமியான்;
என்றும்வானவர்கைதொழுமிணைத்தாமரையடியெம்பிரான் ;
கன்றிமாரிபொழிந்திடக் கடிதாநிரைக்கிடர்நீக்குவான்
சென்றுகுன்றமெடுத்தவன் திருவேங்கடமடைநெஞ்சமே.ரு.

ப-ஸா.—நின்ற - அஸுராவேசத்தாலே பேராதேநின்ற, மாமருது - பெரிய மருதமரமானது, இற்றுவீழ - முறிந்து விழும்படியாக, நடந்த - நடுவே தவழ்ந்துபோன, நின்மலன் - நிர்மலமான மநஸ்ஸையுடையனாய் ; விரோதிகளை நிரஸிக்கைக்காக, நேமியான் - கருதுமிடம் பொருதுவரும் திருவாழியைத் திருக்கையிலே யுடையனாய் ;வானவர் - நித்யஸூரிகள், என்றும் - எப்போதும், கைதொ[ழு
ழும் - ஸேவித்துக்கொண்டிருப்பதாய், தாமரை - தாமரை மலர்போன்ற, இணை அடி - இரண்டுதிருவடிகளையுடைய, எம்பிரான் - உபகாரகனாய் ; திருவாய்ப்பாடியிலுள்ளார் இந்த்ரனுக்கு வர்ஷார்த்தமாக இடும்விருந்தைப் பெருமையாலே, கன்றி - கோபித்து, அவன், மாரி - மஹாவர்ஷமாக, பொழிந்திட - வர்ஷிப்பிக்க, ஆ-பசுக்களுடைய, நிரைக்கு-திரள்களுக்குண்டான, இடர்-துக்கத்தை, நீக்கு[வு
வான்-போக்கி அவற்றையும் இடையரையும் ரக்ஷிக்கைக்காக,கடிது-சடக்கென,சென்று - போய், குன்றம் - கோவர்த்தநமலையை, எடுத்தவன் - குடையாகதரித்த ஸர்வேச்வரன் எழுந்தருளியிருக்கிற, திருவேங்கடம் - திருப்பதியை. நெஞ்சமே—, அடை - ஆச்ரயி என்கிறார். ... ... ... ... (ரு)

(வெள்ளியானித்யாதி) கொண்டகொண்டவடிவெல்லாமிவர்க்கு உத்தேச்யமாயிருக்கிறதாய்த்து அவன்கொண்ட வடிவானையாலே. க்ருதயுகத்தில் வெளுத்தநிறத்தை யுடையனாய், கலியுகத்தில கறுத்த நிறத்தை யுடையனாய், த்வாபரயுகத்தில் வந்தவாறே ச்யாமமான நிறத்தையுடையனாயிருக்குமென்று இவ்வடிவுகளை அநுஸந்தித்து, தெள்ளியாருண்டு-அநந்யப்ரயோஜநரானவர்கள், நாடோறும் வணங்கு[உடு
வர்களாய்த்து. நித்யஸூரிகளைப்போலே நித்யாநுபவம் பண்ணும் மலையான. ... ... ... ... ... உ.

வ்யா.—மூன்றாம்பாட்டு.—(நின்ற) அஸுராவேசத்தாலே பேராதேநின்ற, மாமருதுண்டு - பெரியமருது ; அவ்வருகே விழுந்தவிது இவ்வருகேயாய்த்ததாகிலசெய்வதென் ! என்று ஐயப்பட[க்கூடு
வேண்டும்படியா யிருக்கிறதாய்த்து; அது முறிந்து விழும்படியாக.

(அநந்யப்ரயோஜநரானவர்கள்) என்றது-"பாலினீர்மைசெம்பொனீர்மை" இத்யாதியாலேஅநுபவிக்கையேப்ரயோஜநமாயிருந்த திருமழிசைப்பிரான் போல்வார்களென்கை. (மலையான) என்ற வநந்தரம், திருவேங்கடமித்யாதியைப் பூரிப்பது என்று திருவுள்ளம். ... ... ... ... ... ... உ.

மூன்றாம்பாட்டு.—(நின்றமாமருதித்யாதி.) "பெருகுமிடம்" என்றத்தாலே - நிற்கக்கற்றவன் என்று தோற்றினவளவன்றிக்கே நடைகற்றுச் செய்தவற்றை அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

மருதானபோதே நின்றிராதோ, "நின்ற" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார்(அஸுரேத்யாதி.)(நின்றமாமரம்)என்றும்பாடமுண்டென்று சொல்[சுய
லுவர்கள். "மா" என்றதுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார் (அவ்வருகேயித்யாதி.) (இவ்வருகே) என்கையாலே - தாமும் க்ருஷ்ணனு மொருப்ரதேசத்திலேயிருந்தமை தோற்றுகிறது.

மூ.—பார்த்தற்காயன்று பாரதம்கைசெய்திட்டு வென்றபரஞ்சுடர்;
கோத்தங்காயர்தம்பாடியில் குரவைபிணைந்த வெங்கோவலன்;
ஏத்துவார்தம்மநத்துள்ளான்; இடவெந்தைமேவியவெம்பிரான்;
தீர்த்தநீர்த்தடஞ்சோலைசூழ் திருவேங்கடமடை நெஞ்சமே.ச.

ப-ரை.—அன்று - பாண்டவர்தூதனாய்ச்சென்று தூர்யோதநாதிகளை ஒருப்ப டுத்தப்பார்த்தவன்று, அவர்கள் ஒருகோற்குத்து நிலமும் கொடோம்என்ன, பாரதம் - மஹாபாரதயுத்தத்திலே, பார்த்தற்கு ஆய் - அர்ஜுநனுக்குக் கையாளாய் நின்று, கைசெய்திட்டு-கையுமணியும் வகுத்து,வென்ற - அவர்களை ஜயித்து, தர்மபுத்ரனை முடிசூடுவித்து த்ரௌபதியைக் குழல்முடிப்பித்து, அத்தாலே, பரஞ்சுடர் - திருமேனியில்மிக்க ஒளியையுடையனாய்; ஆயர்தம்பாடியில் - திருவாய்ப்பாடியிலே, எங்கோவலன் - ஆச்ரிதர்பக்கல் வாத்ஸல்யத்தாலே கோபகுலத்திலவதரித்து, குரவை - குரவைக்கூத்தில், கோத்துப்பிணைந்த - தானுமொருவனாய்க் கைகோத்து ஆடினவனாய்; ஏத்துவார்தம் - அக்கூத்திலே ஈடுபட்டு அவனை வாயாரவாழ்த்துமவர்களுடைய, மநத்து-மநஸ்ஸில்,உள்ளான்- விடாதே யிருக்குமவனாய்; இடவெந்தை - திருவிடவெந்தையிலே, மேவிய - நித்யவாஸம் பண்ணுகிற, எம்பிரான் - ஸர்வஸ்வாமியானவன் எழுந்தருளியிருப்பதாய், தீர்த்தம் - பாவநமான, நீர் - ஜலத்தையுடைய, தடம் - தடாகங்களாலும், சோலை - பொழில்களாலும், சூழ் - சூழப்பட்டிருக்கிற, திருவேங்கடம் அடை நெஞ்சமே—.

"குரவையென்ப கைகோத்தாடல்"என்று நிகண்டு.கோத்தங்கு என்றதைகோ தங்கு என்றுபிரித்து - கோஸம்ருத்தியையுடைய என்றும் சொல்லுவர். (ச)

நெஞ்சில் நினைவின்றிக்கே அது முறியும்படி நடந்த சுஷ்டியையுடையவன். (நேமியான்) தான் கைதொட்டு வ்யாபரிக்கவேண்டா, தன்னையொழிய விரோதியைப் போக்குகைக்கீடான பரிகரமுண்டாயிருக்கச் செய்தேயிறே தான் வந்தகப்பட்டது!.(என்றுமித்யாதி) நித்யஸூரிகள் ஒருநாடாகப்பரிய விருக்குமவன்கிடீர் தனியே புகுந்தகப்பட்டான்!.(கன்றியித்யாதி)பெரியசீற்றத்தையுடையனாய்க்கொண்டு இந்த்ரனைவன்மேவங்களை ஏவ,அவையும்அவன்கருத்தை யநுவர்த்தித்துமாரிபொழிந்திட.(ஆநிரைக்கிடர்நீக்குவான்-கடிது-சென்றுகுன்றமெடுத்தவன்) ஸ்வரக்ஷணத்துக்குப்பரிகாரமில்லாதவற்றின்மேலே ஒருதுளி விழுவதற்கு முன்பே, அவற்றுக்கிடர் வாராதபடியாகக் கடுநடையிட்டுச் சென்று கோவர்த்தநத்தை யெடுத்தவன். (திருவேங்கட மடை நெஞ்சமே) ஒருமலையை யெடுத்துப் பரிஹரித்தவன் ஒருமலையிலே நின்று ரக்ஷிக்கப்பார்த்தான், அவனை ஆச்ரயிக்கப்பார் நெஞ்சே யென்கிறார். ... ... ... ... ங

"நின்மலன்" என்ற பதவாஸனை (நெஞ்சிலித்யாதி.)நினைவு - அஸுராவிஷ்டமென்கிற நினைவு. அன்று சென்று குன்றென்றை ஏந்தினதும், இன்று குன்றில் நின்றதும் என்றும்ஆச்ரிதர்க்காகவென்றருளிச் செய்கிறார் (ஒருமலையையித்யாதி) ஒருமலை ஆதேயமாய் ரக்ஷணோபகரணமாய், திருமலை ஆதாரமாய் ரக்ஷணோபகரணமாய்த்து,என்றும்திருமலைபோலேகாணும் ரக்ஷித்ததென்று திருவுள்ளம். ங.

வ்யா.—நாலாம்பாட்டு.—(பார்த்தற்காய்)பார்த்தனுக்காக.(அன்று பாரதம்கைசெய்திட்டு)பாரதஸமரத்திலே கையுமணியுமாகவகுத்துப் படையொருத்தி. (வென்றபரஞ்சுடர்) தோல்வி துர்யோதநாதிகள் தலையிலேயாய் வெற்றி தன்தலையிலேயாம்படியாகவாய்த்து அவர்கள் விஷயத்தில் பண்ணினஓரம். (பரஞ்சுடர்)தர்மபுத்ரன்றலையிலே அபிஷேகத்தை வைத்து த்ரௌபதி குழல்முடித்தபின்பு திருமேனியிற்பிறந்தஔஜ்ஜ்வல்யம்; "ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் | லப்த்வா ப்ரியம்." (கோத்தித்யாதி) திருவாய்ப்பாடியிலே அங்கே குரவைக்கூத்திலே தன்னையுமொருவனாக இடையிலே தொடுத்து. (குரவைபிணைந்த வெங்கோவலன்) குரவைக்கூத்தை மன்றிலேயாடி ஆச்ரிதர்க்கத்தைப் பின்னிக்கொடுத்தவன். (ஏத்துவார்தம் மனத்துள்ளான்) குரவைக்கூத்தை அநுஸந்தித்து அதிலே யீடுபட்டு ஏத்துமவர்களுடைய ஹ்ருதயத்தை விடாதே வர்த்திக்குமவன். (இடவெந்தை) பெரியபிராட்டியார்க்காகத் திருவிடவெந்தையிலே வந்து ஸந்நிஹிதனானாப்போலே யாய்த்து ஏத்துமவர்கள்நெஞ்சு விட்டுப்போக மாட்டாதபடி. (தீர்த்தநீரித்யாதி) எல்லாஸம்ருத்தியையும் பண்ணிக்கொடுக்கவற்றான ஜலஸம்ருத்தியை யுடைத்தாய் ச்ரமஹரமா யிருந்துள்ள சோலையாலே சூழப்பட்ட. ... .. ... ச

நாலாம்பாட்டு.—(பார்த்தற்கித்யாதி.) ஒரு வ்ருக்ஷத்தையும் ஒரு பக்ஷியையும் பேயையும் மருதையும் வென்றவளவேயோ, அதிரமஹாரதரான பீஷ்மத்ரோணாதிகளை யெல்லாம் திரட்டிக்கொண்டு கிடந்த துர்வர்க்கத்தையும் வென்றான், அப்படிப்பட்டவன், அவலைகள் கைகளிலே யகப்பட்டுக் கூத்தாடுகிறானென்று அவனுடைய * வீரச்ருங்கார ரஸத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

தன் தலையிலே யென்றது - தானென்கிற சொல்லுக்குள்ளேயான தர்மபுத்ராதிகள் விஷயத்திலே யென்றபடி. ஓரம் - பக்ஷபாதம். கீழ்ச்சொன்ன அர்த்தத்துக்கு த்ருஷ்டாந்தம் (ராக்ஷஸேந்த்ரமித்யாதி) "அபிஷிச்யசலங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் | க்ருதக்ருத்யஸ்ததாராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ." "எம்" என்றதுக்குத்தாத்பர்யம் (குரவையித்யாதி.) பின்னி - பூர்ணமாகவென்றபடி. "தீர்த்தம்" என்றபதம் - பாவநத்வத்தைச் சொல்லுகையாலே அது உபலக்ஷணமாய், த்ருஷ்டாத்ருஷ்ட ஸகலபலப்ரதத்வத்தையும் சொல்லுகிறதென்று வ்யக்தித்தருளிச்செய்கிறார் (எல்லாவித்யாதி.) ... ... ... ச.

அஞ்சாம்பாட்டு.—(வண்கையானித்யாதி.) கீழே - ஆச்ரிதர்க்காக தௌத்யஸாரத்யங்களைப்பண்ணினபடியாலேகையரானாக்கினபடி சொல்லிற்று; அவ்வளவன்றிக்கே, ஆச்ரிதர்க்காகத்தன்னை யிரப்பாளனாக்கியும் மழுவேந்திக்கொடுத்தும் பலவிடங்களிலேயும் அவலாப்ரதீக்ஷனாய் அரைகுலையத் தலைகுலைய வந்ததயினபடியை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

மூ.—வண்கையானவுணர்க்குநாயகன் வேள்வியிற்சென்று மாணியாய்
மண்கையாலிரந்தான்; மராமரமேழு மெய்த வலத்தினன் ;
எண்கையானிமயத்துள்ளானிருஞ்சோலைமேவியவெம்பிரான்;
திண்கைமாதுயர்தீர்த்தவன் திருவேங்கடமடைநெஞ்சமே. ௫.

ப-ரை.—வண்கையான் - உதாரமான கையையுடையனாய், அவுணர்க்கு - அஸுரர்களுக்கு, நாயகன் - தலைவனான மஹாபலியினுடைய, வேள்வியில் - யாகசாலையிலே, மாணியாய் - ப்ரஹ்மசாரியாய், சென்று - போய், மண் - பூமியை, கையால் - தன்கையாலே, இரந்தான் - யாசித்தவனாய்; க்ர்ஷ்ணனை நலிவதாக அஸுராவேசத்தாலேநின்ற, மராமரம்ஏழும் - ஏழுஸாலவ்ர்க்ஷங்களையும், [மு எய்த - ஒருபடிப்படப்போக்கின, வலத்தினன் - மிடுக்கையுடையனாய்; ஆச்ரித விரோதி நிரஸநபரிகரமான திவ்யாயுதங்களை தரிக்கைக்கு, எண்கையான் - அநேகம் திருக்கைகளையுடையனாய்; இமயத்து உள்ளான் - ஹிமவானில் திருப்பிரிதியிலெழுந்தருளியிருக்குமவனாய்; இருஞ்சோலை - தெற்குத்திருமலையான திருமாலிருஞ்சோலையிலே,மேவிய-நித்யவாஸம்பண்ணுகிற, எம்பிரான்-ஸர்வஸ்வாமி [யிரு யாய்; முதலையின்கையிலே யகப்பட்ட, திண் - பலிஷ்டமான, கை - துதிக்கையையுடைய, மா - ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய, துயர் - துக்கத்தை, தீர்த்தவன் - போக்கின ஸர்வேச்வரன் ஸந்நிதிபண்ணியிருக்கிற, திருவேங்கடம் அடை நெஞ்சமே!—.

கைம்மா என்று ஒருசொல்லாகவுமாம்: கைம்மா - யானை. ... (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு.—(வண்கையானித்யாதி) உதாரனாயிருந்தானாய்த்து. ஆஸுரப்ரக்ருதிகளுக்குத்தலைவனாயிருந்தானேயாகிலும், ஔதார்ய மென்றொரு குணம் கிடக்கையாலே அம்பாலே அழிக்கலாயிருந்ததில்லை. இவன்றான் கொடுக்க வுகந்திருந்தான்; அவன்உகந்தவழியேவாங்குவோமென்று தன்னையிரப்பாளனாக்கி[உடு வாங்கினனாய்த்து. (மாணியாய் மண் கையாலிரந்தான்) அவனுடைய யஜ்ஞவாடத்திலே இரப்பிலே தகணேறின வடிவைக் கொண்டு சென்று, தன் கையிலே பருத்திபட்டபன்னிரண்டும்பட்ட பூமியை யிரந்தானாய்த்து. (மராமரம்) ஆஸ்ரிதரை விச்வஸிப்பித்தும் கார்யம் செய்துகொடுக்குமவன். (வலத்தினன்) மிடுக்கையுடையவன். [கூமி

மஹாவலி வண்கையானாயிருந்தது ஸ்ரிய:பதி மாணியாகைக்கு ஹேதுவென்று மிடந்தோற்ற வருளிச்செய்கிறார் (உதாரனாயித்யாதி.) பருத்திபட்ட பண்டு படுகையாவது-கொட்டைவாங்கிப் பன்னிச்சுருட்டி நூலாக்கியும் பாவோடி நெய்து மடித்து விற்றப் போகடும்படியும், தோய்த்து உலர்த்தி உடுத்துக் கிழித்துவிடும்படியும் சேதநர்க்கு வச்யமாகை.தார்ஷ்டாந்திகத்தில்,ஈச்வரன் தன்[கூரு னில் விஸ்ருஷ்டமாக்கி, பஞ்சீக்ருதமாக்கி, அண்டமாக்கி, தேவாதிசரீரங்களாக்கி, லோகவ்யவஸ்திதியுண்டாக்கி, அவாந்தர ஸ்ருஷ்டியைப்பண்ணி, ரக்ஷித்து ப்ரஹ்மாதிகளுக்காக்கி, ப்ரளயத்திலே யெடுத்துவயிற்றிலேவைத்து, வயிற்றிலேவைத்து, உமிழ்ந்து, பின்பு ஸம்ஹ்ருதமாக்கியும் செய்தபடிகளை யெண்ணிக் கண்டு கொள்வது. ஆக,இத்தால் - கேவலம் ஸ்வாதீநமான தென்றதாய்த்து. "த்வம் [சமி நிர்மிதாஜாரமாச தவ த்ரிலோகீகிம்ஹீக்ஷணீயம்ஸீதே ஹவதாஹ்ஸுராபா | மத்யே தயாதுகவிசக்ரமிஷேஜமச்சேத்த்வத்விக்ரமை:கயுமிவச்ருதிரஞ்விதாஸ்யாத்" என்கிறதநுஸந்தேயம்.

மூ.—எண்டிசைகளுமேழுலகமும்வாங்கிப்பொன்வயிற்றிற்பெய்து
பண்டோராலிலைப்பள்ளிகொண்டவன்; பான்மதிக்கிடர்தீர்த்தவன்;
ஒண்டிறலவுணனுரத்துகிர்வைத்தவன்; ஒள்ளெயிற்றொடு
திண்டிறலரியாயவன் திருவேங்கடமடை நெஞ்சமே. ௬.

ப-ரை.—எண்திசைகளும் - எட்டுதிக்குக்களோடேகூடின, ஏழுலகமும் - ஏழுலோகங்களையும், பண்டு - மஹாப்ரளயகாலத்தில், வாங்கி - அமுதுசெய்து, தன்னுடைய, பொன் - ச்லாக்யமான, வயிற்றில் - திருவயிற்றிலே, பெய்து - வைத்து, ஓர் - ஒரு, ஆலிலை - ஆலந்தளிரிலே, பள்ளிகொண்டவன் - கண்வளர்ந்தருளினவனாய்; பால் - ப்ரகாசகனான, மதிக்கு - சந்த்ரனுக்குவந்த, இடர் - [ம] க்ஷயத்தை, தீர்த்தவன் - போக்கினவனாய்; ஒண்திறல் - மிக்கமிடுக்கையுடைய, அவுணன் - அஸுரனான ஹிரண்யனுடைய, உரத்து - மார்விலே, உகிர்வைத்தவன் - திருவுகிரைவைத்துக் கிழித்துப்பொகட்டவனாய்; அதுக்காக, ஒள் - ஒளிதங்கின, எயிற்றொடு - பற்களையும், திண் - சலியாத, திறல் - மிடுக்கையுமுடைய, அரியாயவன் - நரஸிம்ஹரூபியானவன் நித்யவாஸம்பண்ணுகிற, திருவேங்கடமடை நெ[ம௦] ஞ்சமே—. ... ... ... ... ... ... (௬)

(எண்கையான்) ஆச்ரிதவிரோதிநிரஸநத்துக்குறுப்பான திவ்யாயுதங்களையரிக்கைக்கும்பலதிருக்கைகளையுடையவனென்னுதல். அன்றிக்கே, திருவட்டபுயகரத்தைச் சொல்லிற்றாகவுமாம். (இமயத்துள்ளான்) ஹிமவானில் திருப்பிரிதியிலே வந்து ஸந்நிஹிதனானவன். (இருஞ்[உ௦] சோலையித்யாதி) ம்லேச்சபூமியான தெற்கில்திருமலையிலே வந்து ஸந்நிஹிதனானவன். (திண்கைமா துயர் தீர்த்தவன்) ஸ்ரீகஜேந்த்ராழ்வான் முதலையாலே யீடுபட்டு ப்ரதிக்ரியை பண்ணமாட்டாத வளவிலேவந்து அவனுடைய து:க்கத்தைப் போக்கி ரக்ஷித்தவன். (திண்கை)தன்னையொழிந்தவற்றையடையஇடர்படுத்துமவன்முனிடர்[உரு] பட அத்தைப் பரிஹரித்தானென்கை. (திருவேங்கடம்) ஸ்ரீகஜேந்த்ராழ்வான் வ்யாபாரம் ஓவுந்தனையும் பார்த்திருந்து, பிற்பாடனான குறைதீர ஆச்ரிதர்க்கு முற்பாடனா யுதவுகைக்காக வந்திருக்கிற தேசமாய்த்து. ... ... ... ... ... ௫.

(பலதிருக்கைகளையுடையவன்) என்றது-"எண்கையான்-"எண்ணப்பட்டகையானென்றசப்தார்த்தத்தைப்பற்ற. இத்தால்-"தோள்களாயிரத்தாய்"என்றத்தை நினைக்கிறது. "மா" என்று - ஆனையாய், இப்போது இந்த அபதாநத்தை யருளிச்செய்ததின் கருத்தைக்காட்டுகிறார் (ஸ்ரீகஜேந்த்ரேத்யாதி.) ... ... ௫.

ஆறும்பாட்டு.—(எண்டிசைகளுமித்யாதி.) மாணியாயிரந்து கொண்டத்தையொரு சிறுப்பிள்ளையாயுண்ட சமத்தும், மதிகெட்டுப்போகாதபடி நோக்கின[௩௦] சமத்தும், அரைகுலையத் தலைகுலைய வரவேண்டாதே * ஸமஸமய ஸமுத்பவம் திருவுள்ளத்திலேதோற்றி யருளிச்செய்கிறாரென்று அவதாரிகையிட்டுக்கொள்வது.

மூ.—பாருநீரெரிகாற்றினோடாகாசமு மிவையாயினான்;
பேருமாயிரம் பேசநின்ற பிறப்பிலி பெருகுமிடம்;-
காரும் வார்பனி நீள் விசும்பிடைச் சோருமாமுகில் †தோய்தர
சேருவார்பொழில்சூழெழில் திருவேங்கடமடைநெஞ்சமே. எ.

ப-ரை.—பாரும் - பூமியும், நீர் - ஜலமும், எரி - அக்நியும், காற்றினோடு - வாயுவும், ஆகாசமும் - ஆகாசமும், இவை - ஆகிய பூதபஞ்சகமும், ஆயினான் - தானேயாயிருக்குமவனாய்; ஆயிரம்பேரும் - ஆயிரம்திருநாமங்களையும், பேச - சொல்லி ஆச்ரயிக்கலாம்படி, நின்ற - நித்யவாஸம் பண்ணுமவனாய், பிறப்பிலி - பிறப்பின்றிக்கே தான்தோன்றியான ஸர்வேச்வரன், பெருகும் - வளருகிற, [யி]இடம் - ஸ்தாநமாவது; காரும் - மேகங்களும், வார்பனி - மிக்கபனியும், நீள் விசும்புஇடை - பெரிய ஆகாசத்தின் இடையிலே, சோரும் - சொரியும்படி யிருப்பதாய், மாமுகில் - பெரியமேகங்கள், தோய்தர - படியும்படி, சேரு - தருதியாக, வார் - நீண்ட, பொழில் - சோலையாலே, சூழ் - சூழப்பட்டு, எழில் - அழகை யுடைத்தான, திருவேங்கடமடை நெஞ்சமே—. ... ... ... (எ)

வ்யா.—ஆறும்பாட்டு.—(எண்டிசையித்யாதி) எட்டு திக்குக்களோடே கூடியிருந்துள்ள லோகங்களேழையும் வாங்கி, ச்லாக்யமான திருவயிற்றிலே வைத்து, பண்டு பவனாயிருப்பதொரு ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின அகடிதகடநா ஸாமர்த்யத்தை யுடையவன். (பால்மதிக்கிடர் தீர்த்தவன்) பால்மதியுண்டு - ஸந்த்ர[உயி]ன், அவனுக்கு யக்ஷ்மிலோப பர்யநமாக வோரிடர் வர, அது அவ்வளவாகாதபடி பரிஹரித்து அவனிடரைப் போக்கினவன். (ஒண்டிறலித்யாதி) மிக்க மிடுக்கை யுடையனா யிருந்துள்ள ஹிரண்யனுடைய வுரஸ்ஸிலே திருவுகிரை வைத்தவன்; அதுக்குறுப்பாக, அழகிய திருவெயிற்றோடேகூடவலியாதமிடுக்கையுடையநாரஸிம்ஹ[உரு]மானவன். திருமந்த்ரம் சொன்ன சிறுக்கனுக்கு உதவினவன், திருநாமம் சொன்னாரெல்லாருடையவும் ஸம்ஸாரது:ரிதத்தைப் போக்குகைக்காக வர்த்திக்கிற திருமலையை அடையப்பாராய். ... சூ.

"பேசுமின்திருநாமம்" இத்யாதிபாட்டை யுட்கொண்டு, சிங்கவேழ்குன்றத்திலரியானவனோ டொருஸாம்யத்தை வெளியிடாநின்றுகொண்டு, "அரி" என்றதுக்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (திருமந்த்ரமித்யாதி.) ஹரதிஹரி: என்கிற யோகார்த்தத்திலே நோக்கு. இத்தால் - சிங்கவேழ்குன்றத்தில் ருட்யா ஹரிபதவாச்யன், யோகசக்த்யா திருவேங்கடத்திலே வாச்யனா யிருக்கிறானென்று ஸம்மதிஸூசிதமாய்த்து. ... ... ... ... ... ஸு.

† "சேருமாமுகில்" என்று பாடாந்தரம்.

வ்யா.—ஏழாம்பாட்டு.—(பாரித்யாதி) ஹஅதபஙகத்தையும் சொ
ல்லுகையாலே - ஜமதிகாரனாய் நிற்கும்படியைச்சொல்லிற்று. தான்
கொடுத்த வுடம்பைக்கொண்டு தன்னுடைய திருநாமத்தைச் சொல்லி
ஆச்ரயிக்கலாம்படி நிற்கிறவன். (பிறப்பிலி பெருகுமிடம்) அகர்ம[ரு
வச்யனாய் இதரவிஸஜாதியனாய் ஜமத்தின்படி யன்றிக்கேயிருக்கிறவன்
வர்த்திக்கிற விடம்.(காரித்யாதி) மேவங்களும், மிக்கபனியும்,பெரிய
ஆகாசத்தினிடையிலே சொரிவதாய், பெரியமேவங்கள் படியும்படி
நீண்டசோலை சூழப்பட்ட திருவேங்கடம்; பெருகின மிக்கஜலத்தை
யுடைத்தாய்,ஆகாசத்திலே வர்ஷிக்கிற மேவங்களானவை. (சேரும்)[ய
என்றுபாடமானபோது, சேருகிற-ஸ்பர்சிக்கும்படி சேருகிற - கிட்டு
கிற.பரந்தபொழிலாலே சூழப்பட்டு எழிலையுடைத்தான திருமலையை.
காரும்-பெருகுகை. வார் – மிகுகை. ... ... எ.

---

ஏழாம்பாட்டு.—(பாருநீரித்யாதி.) கீழ்ப்பாட்டில் - * எங்குமுளன் கண்ண
னென்றமகனைக்காய்ந்தஹிரண்யநிரஸநார்யமாகதத்ஸமகாலத்திலேதோற்றின[ய
ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம் ப்ரஸ்துதமாகையாலே ஸம்ஹிதமான ஜமதிகாரதையை
யநுஸந்தித்து, திருநாமஞ்சொல்ல ஸஹியாத ஹிரண்யனைக்கொன்றவன் நின்ற
விடமாகையாலே திருநாமங்கள் சொல்லலாம்படியு மிருக்கிறனென்றநுஸந்திக்கி
றாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

"பிறந்தவாறும் வளர்ந்தவாறும்"என்று-பிறப்புசசொல்லி யிருக்க,"பிறப்[உய
பிலி" என்னக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அகர்மேத்யாதி.)

"நீள் விசும்பிடை, காரும் - மேவமும், வார்பனியும் சோருமதாய், மா
முகில் தோய்தரும்படி சேருவார் பொழிலாலே சூழப்பட்டதுமாய், எழிலையுடைத்
தான திருவேங்கடம்" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி யொருயோஜனை யருளிச்
செய்கிறார்(மேவங்களுமித்யாதி.)பெரியவாகாசத்தினிடையிலே யிருக்கிறமேவ[உரு
ங்களும் மிக்கபனியும் சோருவதாய் என்று வாக்யத்தை அந்வயித்துக்கொண்டு,
திருவேங்கடத்துக்கு விசேஷணமாக்கிக்கொள்வது. இங்ஙனன்றாகில், மேவங்கள்
சோருவதான பெரிய மேவங்களென்ன வொண்ணாதிறே. சோருவதாய் - சொரி
யும்படி யிருப்பதாய். "தோய்தர" என்றதினர்த்தம் (படியும்படியென்றது.) நீண
டவென்றது-"சேருவார்" என்றதினர்த்தம். "சேருவார்" - தகுதியாகநீண்ட[கூய
வென்றபடி. அன்றிக்கே, "காரும்வார்பனி" என்று - ஸமஸ்தபக்ஷமாய், காராநிற்
கிற - பெருகாநிற்கிற, வார்பனியானது - மிக்கஜலமானது, நீள்விசும்பிடைச்
சொரியும்படி யிருப்பதான மாமுகிலானவை, தோய்தர - ஸ்பர்சிக்கைக்கு, சேரு-
அநுரூபமான, வார் - நீண்ட, பொழில் சூழெழில் திருவேங்கடமென்று க்ரமே
ண வொருயோஜனையைவிவக்ஷித்துத்தாத்பர்யத்தையருளிச்செய்கிறார்(பெரு[கூரு
கினவித்யாதி.) (சேருமாமுகில்) என்ற பாடாந்தரத்திலே, நீள் விசும்பிடைச்
சோராநிற்கிற - நடந்து வாராநிற்கிற, மாமுகிலென்று சப்தார்த்தம். இப்போது,
காராநிற்கிற வார் பனியையுடைத்தாயென்று விசேஷணமாக்கிக்கொள்வது. எ.

எட்டாம்பாட்டு.—(அம்பரமித்யாதி.) கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துதமான ஜமதி
காரத்வமாத்ரமன்றிக்கே உபயவிஹூதியோகத்தையுமநுஸந்தித்துக்கொண்டு[சய
"ஸ்ரீயாஸார்த்தம் ஜமத்பதி:" என்கிறபடியே அங்கிருக்கு மிருப்பை யநுஸந்திக்கி
றரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

மூ.—அம்பர மனல் கால் நிலம் சலமாகிநின்ற வமரர்கோன் ;
வம்புலா மலர்மேல் மலி மடமங்கைதன் கொழுநனவன் ;
கொம்பினன்னவிடைமடக்குறமாதர் நீளிதணந்தொறும்
செம்புனமவை காவல்கொள் திருவேங்கட மடைநெஞ்சமே. அ

ப-ரை.—அம்பரம் - ஆகாசம், அனல் - அக்நி, கால் - காற்று, நிலம் - பூமி, சலம் - ஜலம், ஆகிய பஞ்சபூதங்களும், ஆகிநின்ற - தானேயா யிருக்குமவனாய், அமரர் - நித்யஸூரிகளுக்கு, கோன் - தலைவனாய், வம்பு - பரிமளம், உலாம்-வீசு கிற, மலர்மேல் - தாமரைமலரின்மேலே, மலி - எப்போதுமிருக்குமவளாய், மடம்-மடமைக்குணம் நிறைந்த, மங்கைதன்-பெரியபிராட்டியார்க்கு, கொழு [மு நனவன் - நாயகனான ஸர்வேச்வரன் நித்யவாஸம்பண்ணுமிடமாய், கொம்பு அன்ன - வஞ்சிக்கொம்பு போன்ற, இடை - இடுப்பையும், மடம் - மடப்பத்தை யுமுடைய, குறமாதர் - குறப்பெண்கள், நீள் - உயர்ந்த, இதணம்தொறும் - பரண் கள்தோறும் இருந்து, செம் - தினைமுதலிய பயிர்களாலே சிவந்த, புனமவை - கொல்லைநிலங்களை, காவல்கொள்-காத்துக்கொண்டிருப்பதான, திருவேங்கடம்- ஸ்ரீவேங்கடாத்ரியை,நெஞ்சமே !—, அடை - கிட்டப்பாராய் என்கிறார்.

நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்று பெண்களின்குணங்கள் நான்கு; இங்கு, மடமையைச் சொல்லுகிறது : மடம் - ஒடுக்கம். ... ... (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு.— (அம்பரமித்யாதி) ஜகதாகாரனாய் நிற்கும்படியைச் சொல்லுகிறது. (அமரர்கோன்) இத்தால் - [உப அஸாதாரணமான திவ்யவிக்ரஹயுக்தனாய், * அயர்வறு மமரர்க ளதிபதியாயிருக்கும்படியைச்சொல்லுகிறது.(வம்புலா)நித்யஸூரிகள் ஓலக்கங் கொடுக்கப் பிராட்டியும் தானுமாய் பரமபதத்திலே யிரு க்குமிருப்பைச் சொல்லுகிறது. செவ்விமாறாத மலரை வாஸஸ்தான மாகவுடைய பெரியபிராட்டியார்க்கு வல்லபனானவன். (கொம்பித்யா தி) வஞ்சிக்கொம்போடொத்த இடையையும் ஆத்மகுணங்களையு முடைய, குறமாதருண்டு - குறப்பெண்கள்; ஓக்கத்தை யுடைத்தான பரண்கள்தோறும். (செம்புனம்) பாலைநிலமாகையாலே நில ப்ர யுக்தமான சிவப்பைச்சொல்லுதல். தினைமுற்றி நுணிபழுத்த வள விலே கிளிகள் புறாக்கள் கடியாதபடி நோக்குகிற திருமலையை. அ.

"அமரர்கோன்" என்ற பதச்சேர்த்தியால் ஸித்தஅர்த்தத்தை யருளிச்செய்கி றார் (நித்யேத்யாதி.) வம்புலா - பரிமளமுலாவாநின்றுள்ள, மலர்மேல் மலி - ஸம்ச்லேஷித்தையாயிருந்துள்ள, மடமங்கை - ஸௌந்தையையுடைய பிராட்டியென்று சப்தார்த்தமாய், வாக்யத்துக்கு ஸித்தார்த்த மருளிச்செய்கிறார் (செவ்வியித்யாதி.) வம்பு-புதுமையாய்,அத்தாலே - செவ்வியென்ற தென்னவுமாம்."கொழுநன்"[நகு என்றதினர்த்தம் (வல்லபனென்றது.) இன் - சாரியைச்சொல்லாய், கொம்பன்ன வென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (வஞ்சியித்யாதி.) "இதணம்" என்றதினர்த்தம் (பரணென்றது.) "செம்புனம்" என்றதுக்கு - கதிர்நுணிபழுக்கையாலே வந்த சிவப்பென்று யோஜநாந்தர மருளிச்செய்கிறார் ( தினையித்யாதி. ) புறாக்கள் - கபோதங்கள். ... ... ... ... ... ... அ.

மூ.—பேசுமின்திருநாமமெட்டெழுத்தும்சொல்லிநின்று, பின்னரும்
பேசுவார்தம்மை யுய்யவாங்கிப் பிறப்பறுக்கும் பிரானிடம்;
வாசமாமலர் நாறுவார்பொழில் சூழ்தருமுலகுக்கெல்லாம்
தேசமாய்த் திகழும்மலைத்திருவேங்கடமடை நெஞ்சமே. கூ

ப-ரை.—பேசும் - எல்லாராலும் உச்சரிக்கப்படுமதாய், இன் - நாவுக்கு இனிய, திருநாமம் - திருநாமமான, எட்டெழுத்தும் - எட்டுத்திருவக்ஷரத்தையும், சொல்லி நின்று - ஒருதரம் அநுஸந்தித்து, அத்தோடே கைவாங்குகை யன்றிக்கே, பின்னரும் - பின்னையும், பேசுவார்தம்மை - அநுஸந்திக்குமவர்களை, உய்ய-உஜ்ஜீவிக்கும்படி, வாங்கி - அங்கீகரித்து, பிறப்பு - அவர்களுடைய ஸம்ஸார ஸம்பந்தத்தை, அறுக்கும் - போக்கித்தந்தருளுகிற, பிரான் - மஹோபகாரகன் நித்யவாஸம் பண்ணுகிற, இடம் - ஸ்தாநமாவது; வாசம் - பரிமளத்தையுடைத்தாய், மா - ச்லாக்யமான, மலர் - புஷ்பங்கள், நாறு - கமழாநின்றுள்ள, வார் - பரந்த, பொழில் - சோலைகளாலே, சூழ்தரும் - சூழப்பட்டிருப்பதாய், உலகுக்கு எல்லாம்-எல்லாலோகங்களுக்கும், தேசமாய்-ஒளியை விளைக்கத்தக்கதாய், திகழும் - பரமபதம்போலே விளங்குகிற, மலை - மலையான, திருவேங்கடம் - திருமலையை, நெஞ்சமே அடை—. ... ... ... (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு.—(பேசுமினித்யாதி)(பேசுவார்தம்மையுய்யவாங்கிப் பிறப்பறுக்கும்பிரானிடம் - பேசுமின் திருநாமமெட்டெழுத்தும்சொல்லிநின்று) என்று - இத்தனையும்பரோபதேசமாய், (வாசமாமலர்)என்று - மேலித்தனையும்ஸ்வகதமாகவருளிச்செய்கிறாரென்றுமாம். அன்றிக்கே, திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறாராகவுமாம். (பேசுமி னித்யாதி) ஓரதிகாரி ஸம்பத்தி வேண்டாவிறே பெற்ற தாய் பேர் சொல்லுவார்க்கு; அப்படியே, இடர் வந்தபோது எல்லாருமொக்கச் சொல்லிக்கொடுபோரக்கடவதான இனிய திருநாமமான எட்டெழுத்தையும் சொல்லிநின்று.

ஒன்பதாம்பாட்டு.—(பேசுமினித்யாதி.) "வைகுண்டேது பரே லோகே ஶ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: । ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ" என்கிறபடியேயிருக்குமிருப்பைக் கீழ்ப்பாட்டிலே "அமரர்கோன்" இத்யாதியாலே அநுஸந்தித்தவர், "த்யக்த்வா வைகுண்டமுத்தமம் | ஸ்வாமிபுஷ்கரிணீதீரே ரமயா ஸஹ மோததே" என்று வந்தபடியை யநுஸந்தித்து, அவன் வந்ததுக்கு ப்ரயோஜநத்தை யருளிச்செய்கிறார் என்று அவதாரிகை கண்டுகொள்வது.

"பேசுமின்" என்னுமது க்ரியாபதத்வேந ப்ரஸித்யமாகையைப்பற்றவொரு யோஜநை யருளிச்செய்கிறார் (பேசுவாரித்யாதி.) (திருநாம மெட்டெழுத்தும் சொல்லிநின்று, பின்னரும்-பேசுவார்தம்மையுய்யவாங்கிப்பிறப்பறுக்கும் பிரானிடம்-பேசுமின் என்று இத்தனையும் பரோபதேசமாய்) என்று வாக்யத்தை அந்வயித்துக் கொள்வது. ப்ரகரணஸ்வாரஸ்யத்துக்கு அநுகுணமாக, பேசுமதாய் இனிய திருநாமமென்று ஸமஸ்தபதமாக்கி யருளிச்செய்கிறார் (அன்றிக்கேயித்யாதி.) பரோபதேசமென்னும் பக்ஷத்திலே பஹுவசநப்ரயோகத்தாலே எல்லாரையும் சொன்னதுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார் (ஓரதிகாரீத்யாதிவாக்யத்வயத்தாலே) பாட்டெல்லாவற்றையும் திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறாரென்னும் பக்ஷத்திலே அர்த்தமருளிச்செய்கிறார் (அப்படியேயிடரித்யாதி.) அன்றிக்கே, இரண்டாம் யோஜநைதன்னிலே, பேசும் என்ற ஸாமாந்யோக்திக்குத் தாத்பர்யம் (ஓரதிகாரீத்யாதிவாக்யம்) என்று கொள்ளவுமாம்.

மூ.—செங்கயல்திளைக்குஞ்சுனைத் திருவேங்கடத்துறைசெல்வனை
மங்கையர்தலைவன் கலிகன்றி வண்டமிழ்ச்செஞ்சொல்மாலைகள்
சங்கையின்றித் தரித்துரைக்க வல்லார்கள், தஞ்சமதாகவே
வங்கமாகடல் வையம் காவலராகி வானுலகாள்வரே. ம.

ப-ரை.—செம் - இளமையாலே சிவந்த, கயல் - கயல்மத்ஸ்யங்கள், திளைக்கும் - களித்துவர்த்திக்கிற, சுனை - சுனைகளையுடைய, திருவேங்கடத்து - திருமலையில், உறை - நித்யவாஸம் பண்ணுகிற, செல்வனை - ஸ்ரீய:பதிவிஷயமாக, மங்கையர் - திருமங்கையிலுள்ளார்க்கு, தலைவன் - ராஜாவாய், கலிகன்றி - கலிதோஷத்தைப் போக்கினஆழ்வார், வண்-அழகிய, தமிழ் - தமிழ்பாஷையால், சொல் - [ம அருளிச்செய்த, செம் - செவ்விய, மாலைகள் - சப்தஸந்தர்ப்பங்களை, தரித்து - நெஞ்சிலே தரித்து, உரைக்க வல்லார்கள் - சொல்லவல்லவர்கள் ; தஞ்சமதாக - நிச்சயமாக, வங்கம் - மரக்கலங்கள் நிறைந்த, மா-பெரிய, கடல் -ஸமுத்ரத்தால் சூழப்பட்ட, வையம் - பூமிக்கு, காவலராகி - ரக்ஷகராய்க்கொண்டு, வானுலகு - பரமபதத்தை, ஆள்வர்-ஆளப்பெறுவர்; இவ்வர்த்தத்தில், சங்கை இன்றி - ஸந் [மரு தேஹமின்றிக்கே யிருங்கோ ளென்கிறார். ... ... ... (ம)

ஒருக்கால்சொன்னோமிறேஎன்றுகைவாங்கியிருக்கையன்றிக்கே, (பின்னரும்) பின்னையுமென்றபடி. வாயாலே திருநாமத்தைச் சொல்லுமவர்களுக்குஸத்தாஹாநிவாராமேஅவர்களுஜ்ஜீவிக்கும்படிஅங்கீகரித்து, பின்னையும் அவர்களுக்குவிரோதியான ஸம்ஸாரஸம்பந்தத்தை[உம யறுத்துக்கொடுக்குமுபகாரகன் வர்த்திக்கிற ஸ்தாநம். "ஆக்கைபுகாமலுய்யக்கொள்வான் நின்றவேங்கடம்" என்னக்கடவதிறே. (வாசமித்யாதி) பரிமளத்தை யுடைத்தாயிருந்துள்ள மலராலே கமழாநின்றுள்ள பரந்த பொழிலாலே சூழப்பட்டிருப்பதுமாய். (உலகுக்கெல்லாம் தேசமாய்த்திகழும்மலை) "நீணிலத்துள்ளது" என்கிறபடியே-பரமபதத்துக்குண்டான ஏற்றம்போலே திருமலை யிங்கே யாகையாலேஸம்ஸாரமுத்தேச்யமாம்படி யிருக்கிறதாய்த்து. "திலதமுலகுக்காய்" என்னக்கடவதிறே. "நிலமகள்தன் நெற்றிக்குத் திலதமாய் நின்ற" என்று இட்டுவைத்தான். ... ... ... கூ.

வ்யா.—பத்தாம்பாட்டு.—(செங்கயலித்யாதி) முக்தர்என்று [௩ம மொக்ஷபந்சவிம்சதி வார்ஷிகராய் ஷோடசவர்ஷவமே யாத்ரையாய்க்

'உய்யவாங்கி" என்ற வநந்தரம், "பின்னரும்" என்றபதத்தைஅநுஸந்தித்துக்கொண்டருளிச்செய்கிறார்(பின்னையுமவர்களுக்கித்யாதி.) ஸம்ஸாரவிமோசநமே [ வேங்கடத்தானுகைக்கு ப்ரயோஜந மென்னுமதுக்கு ஸம்வாதம் ( ஆக்கையித்யாதி.) உலகுக்கெல்லாம்தேஜஸ்கரமாய்ப்ரகாசிக்கும் மலை யென்று சப்தார்த்தம். [௩௫ "சென்று கைதொழுவார்கள்- தேவர்கள்" என்ற பாசுரசேஷத்திலும் நோக்காகத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (நீணிலத்தித்யாதி.) திலதமாகப் பின்னையும் சொன்னாருண்டோவென்ன ; தமிழனும்சொன்னானென்கிறார்(நிலமகளித்யாதி.) கூ.

பத்தாம்பாட்டு.—(செங்கயலித்யாதி.) "பொங்குநீர் செங்கயல் திளைக்கும் சுனை" என்று முதற்பாட்டிலேசொன்னவிசேஷணத்தை யிங்கே நிகமத்திலேயு[சம மருளிச்செய்தவருடைய வுட்கருத்தையருளிச்செய்கிறார்(முக்தரித்யாதி.)இத்தால்-

களிக்குமாப் போலே, யௌவநப்புகராலே சிவந்த நிறத்தையுடைய கயல்களானவை ஒன்றோடொன்று களித்து வர்த்தியாநின்றுள்ள சுனைகளையுடைத்தான திருமலையிலே நித்யவாஸம் பண்ணுகிற ஸ்ரீயபதியை. (மங்கையர்தலைவன்) திருமங்கைக்கு நிர்வாஹகரான[ரு] ஆழ்வார், அழகிய தமிழில்செவ்வியசொல்லாலேசெய்த தொடையை யபித்துச்சொல்லவல்லவர்கள் ; நிச்சிதமாகவே, கடல்சூழ்ந்த பூமிக்கு ரக்ஷகராய், பின்பு நித்யவிபூதியும் தாங்களிட்ட வழக்காம்படி ஆகப் பெறுவர்கள். இதுகூடுவதொன்றோ வென்னில் (சங்கையின்றி) இதில் சங்கைபண்ணவேண்டா. ... ... ௰.

அடிவரவு.—கொங்கு பள்ளி நின்ற பார்த்தன் வண்மை எண்டிசை பார் அம்பரம் பேசு செங்கயல் தாய்.

திருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

---

தாமும் "மீளுய்ப்பிறக்கும் விதியுடையேனுவேனே" என்று மநோரதிக்கிறார்[ம்ரு] என்றதாய்த்து. "வண்" என்றதினர்த்தம் (அழகியவென்றது.) "தஞ்சமதாகவே" என்றதுக்கு பலிதார்த்தம் ( நிச்சிதமாகவேயென்றது. ) (வாறுலகாள்வர்;-சங்கையின்றி) இருங்கோள் என்று கூட்டிக்கொள்வது. ... ... ௰.

ஜீயர்திருவடிகளேசரணம்.

முதற்பத்து-ஒன்பதாந்திருமொழி-தாயேதந்தை. ப்ரவேசம்.

வ்யா.—திருமலையை யாச்ரயியென்று திருவுள்ளத்தைக்குறித்து உபதேசித்தார் கீழ் ; அப்படியே அதுவும் பாங்காய் தாமும் அநுபவிப்பாராய் திருமலையிலே வந்து புகுந்தார். ஸர்வஸ்வாமியாய் நிருபாதிக பந்துவுமானவனிங்கேவந்து ஸந்நிஹிதனுகையாலே தம்முடைய அபேக்ஷிதங்களெல்லாம் பெறலாமென்று; அக்ரூரன் "மாமக்ரூரேதிவக்ஷ்யதி" என்றுமநோரதித்துக்கொண்டுவந்தாப்போலேயும்,

---

அ.—தாயேதந்தைப்ரவேசம்.—கீழ்த்திருமொழியிலே - "திருவேங்கடமடைநெஞ்சமே" என்று பலகால் சொல்லிக்கொண் டநுபவிக்க விழுந்தவர், இத்திருமொழியிலே - பூர்வவ்ருத்தத்தைச் சொல்லிக்கொண்டு சரணம் புகுருகைக்கு ப்ரஸங்கமென்னென்கிற சங்கையிலே யருளிச்செய்கிறார்(ஸர்வஸ்வாமியித்யாதி) "யோசநுப்ஜேர்விம்ஷத்தே சேவரஸ்ருதி ஸம்ஸ்திதாம் । ஸோவதீர்ணோஜமத்யர்வே மாமக்ரூரேதிவக்ஷ்யதி" என்று ப்ரமாணசேஷம்.

ஸ்ரீபுண்டரீகன் மநோரதம் போலேயும், இவரும் மநோரதித்துக்
கொண்டு வந்தவிடத்தில், அப்படி யெதிரே வருதல் அணைத்
தல் ஓர்இன்சொல் சொல்லுதல் "க்ரியதாம்" என்று கைங்கர்யத்தி
லே யேவுதல் செய்தருளக் காணாமையாலே மிகவும் நொந்து, [நி
த்யஸந்நிதியு முண்டாய் நினைத்தது செய்து தலைக்கட்டுகைக்கீடான
சக்தியுமுண்டாய் ப்ராப்தியு முண்டாயிருக்க, அபேக்ஷிதம் செய்யா
தொழிகிறது - செய்தருள நினையாமைக் கீடாயிருப்பதொருஹேது
இத்தலையிலே யுண்டாகையிறே என்று கைவாங்கினவர்; பின்னையு
ம் கைங்கர்யத்திலுண்டான வாபலாதிசயத்தாலே தவிரமாட்டாமை[ய
மீண்டு, என்னுடையபாபங்களைப்பார்த்தால், அவங்யங்களை வங்ய
ங்களாக நினைந்தும், போக்யமில்லாதவிடத்திலே போக்யபுத்தியை
ப்பண்ணியும், பரஹிம்ஸையைப் பண்ணியும், ஆர்த்தவிஷயங்களிலே
ஐயோ! என்னாதேயும், உன்னை யொழியப் புறம்பே காலத்தைப்
போக்கியும் போந்தேன், இங்ஙனே போந்தேனேயாகிலும், இப்போது
தேவரை யொழியச்செல்லாமையுண்டாய் வந்தேன், இத்தலை சேஷ
மாய், தேவர் சேஷியாய், விடவொண்ணாதபடியான ஸம்பந்தமு முண்
டாய், என்குற்றங்களைப் பொறுப்பிக்கைக்குப்பிராட்டிஸந்நிதியுமுண்
டானபின்பு, என் அபராதங்களைப் பொறுத்தருளி என்னுடைய
ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியைக் கொண்டருளவேணுமென்று, பெ
ரியபிராட்டியார் புருஷகாரமாகத் திருவடிகளிலே விழுந்து சரணம்
புகுகிறார். இதுதான் * வாணிலாமுறுவலிலே செய்ததன்றோ வெ
ன்னில்; ஸுகுமாரராயிருக்குமவர்கள் விடாய்த்தால் பலகாலும்
முகத்திலே நீரை யள்ளி யிறட்டுக்கொள்ளுமாப்போலே பலகா
லும் ப்ரபத்தி பண்ணும்படியாய்த்து இவருடையமார்த்தவ மிருப் [உடு
பது. ஒருக்கால், பெற்றிலோம் என்று கைவாங்குமளவன்றிக்கே
பெற்றவளவும் ப்ரபத்திபண்ணுவராய்த்து; "நிபபாத விபீஷண:"
என்று அவன்திருவடிகளிலே விழுந்து சரணம் புக்காப்போலே
யாய்த்து. ... ... ... .. ... *

---

ஸ்ரீபுண்டரீகன்மநோரதமென்றது-திருக்கடல்மல்லையிலே ஸ்ரீபுண்டரீகனென்கி[ருஷி
ற ருஷி கடலை வற்றஇறைத்து க்ஷீராப்திசாயிக்குக்கைங்கர்யம்பண்ண நினைத்தநினை
வென்றபடி. கைவாங்கினவரென்றது - "நோயேபட்டொழிந்தேன்" என்றத்தைப்
பற்ற. கீழே "திருவேங்கடமடைநெஞ்சமே" என்றவர் "நோயேபட்டொழிந்தேன்"
என்றத்தாலே கைவாங்கினது அர்த்தஸித்தமென்று கருத்து. (மீண்டு) என்றதுக்கு,
(சரணம்புகுகிறார்)என்றத்தோடந்வயம். (பார்த்தால்) என்றதுக்கு, (போந்தேன்)
என்றத்தோடந்வயம். "எங்கள் மாதவனே" என்றத்தைப்பற்ற (பெரியபிராட்டி
யாரித்யாதி.) கீழ்த்திருமொழிகளில் தோற்றின பௌநருக்த்யத்தைப்பரிஹரித்து,
இதில் பாட்டுத்தோறும் "வந்தடைந்தேன்" என்கைக்குத் தாத்பர்ய மருளிச்செ
ய்கிறார் (ஒருக்காலித்யாதி.) பபாத என்னாதே "நிபபாத" என்றத்தாலே - பல
கால் சரணம்புக்கானென்று கருத்து. ... ... ... *

மூ.—தாயே தந்தையென்றும் தாரமே கிளை மக்களென்றும்
நோயேபட்டொழிந்தே னுன்னைக்காண்பதோராசையினால்;
வேயேய்பூம்பொழில்சூழ் விரையார் திருவேங்கடவா!
நாயேன்வந்தடைந்தேன்; நல்கியாளென்னைக்கொண்டருளே. க.

---

ப.ரை.— வேய் - மூங்கில்கள், ஏய் - நெருங்கி யிருப்பதாய், பூ - புஷ்பித்து, விரைஆர் - பரிமளம் மிக்கிருப்பதான, பொழில்சூழ் - சோலையாலே சூழப்பட்டிருக்கிற, திருவேங்கடவா - ஸ்ரீவேங்கடாத்ரியைநிரூபகமாக வுடையவனே, ஸர்வவித பந்துவான தேவரீ ரிருக்க, தாயே யென்றும் - தாயல்லாதாளைத் தாயா ரென்றும், தந்தையே என்றும்-தந்தையல்லாதவனைத் தகப்பனென்றும், தாரமே என்றும்-[ம மனையாளல்லாதவளை மனையாட்டி யென்றும், கிளையே என்றும் - பந்துக்களல்லாதவர்களை பந்துக்களென்றும், மக்களே என்றும் - மக்களலலாதாரைப் பிள்ளைகளென்றும் நினைத்து, நோய்பட்டு ஒழிந்தேன் - அநர்த்தப்பட்டுப் போந்தவனாய், நாயேன் - நாய்போலே மிகத்தண்ணியனான நான், உன்னை - நிருபாதிக பந்துவான தேவரீரை, காண்பது-காணவேணுமென்கிற, ஓர் ஆசையினால்-ஒரு[மி ஆசையாலே, வந்து - தேவரீர்திருவடிகளிலே வந்து, அடைந்தேன் - சரணம் புகுந்தேன்; என்னை - தாஸபூதனான வென்னை, நல்கி - க்ருபைசெய்து, ஆள் கொண்டருள் - அடிமைகொண்டருளவேணு மென்கிறார். ... ... (க)

---

வ்யா.—முதற்பாட்டு.—(தாயேபித்யாதி) "மாதாபிதாப்ராதா" "ப்ராதா பர்த்தாச" "ஏகைகபலலாபாய" என்கிறபடியே-தேவ[உம் ரீ ஸர்வவிதபந்துவுமா யிருக்க, ஸோபாதிகபந்துக்களாய் இத்த லையில் ப்ரயோஜந முள்ளநாள் கொண்டு இவனுக்கு உதவவேண்டு மென்று தங்களைக்கொண்டு அகலநின்று அபகாரத்தையே பண்ணுமவர்களையே பந்துக்களென்று நினைத்து அநர்த்தப்பட்டே னென்கிறார்.

---

முதற்பாட்டு.—(தாயேயித்யாதி.) [உரு

"தாயே" என்கிறவிடத்தில், ஏகாரம்-பிரிநிலையேகாரமாய், தாயாகாதவளைத்தாயே யென்றிருந்தேனென்று தாத்பர்யமாய், இதுதானும் எல்லாபடிகளிலும்அநுவர்த்திக்கையால் ஒருவர்க்கு மொருஸம்பந்தமும் வாஸ்தவமாகஇல்லையென்று பலிக்கையாலே, வேங்கடவனே யிவையெல்லாமாயிருப்பனென்று விவக்ஷித்து ப்ரமாணங்களையும் காட்டாநின்றுகொண்டு தாத்பர்ய மருளிச்செய்கிறார்[ருய (மாதேத்யாதி.)"மாதாபிதாப்ராதாநிவாஸச்சரணம்ஸுஹ்ருத்கதிர்நாராயண:" என்றவிடத்திலும், "அஹஞ்சாவந்மஹாராஜே பித்ருத்வம்நோபலக்ஷயே। ப்ராதா பர்த்தாசபந்துச்ச பிதாச மமராகவ:" "பித்ருமாத்ருஸுதப்ராத்ரு தாரமித்ராதயோபிவா ¶। ஏகைகபலலாபாய ஸர்வலாபாயகேசவ:." "நாராயண:"என்றவிடத்திலும், "ஸர்வம்வாக்யம்ஸாவதாரணம்" என்கிற ந்யாயத்தாலே-நாராயணஏவ[ரு என்று கொள்வது. "மித்ராதயோபிவா" என்கிற விடத்திலே, "வா" என்கையாலே-பித்ருத்வாதிகளில்லை, உண்டானாலும் என்னும் (க) அப்யுபகம்யவாதம் ஸூசிதமாகிறது. ஆக, இந்த ப்ரமாணங்களாலே - மாத்ருத்வாதிகள் மற்றொருவர்க்குமில்லை,எம்பெருமானுக்கே யுள்ளதென்று சொல்லிற்றாய்த்து.ஸோபாதிகபந்துக்களென்றது-தன்னிச்சையாலே ஆரோபிதபந்துத்வவான்க ளென்றபடி. கர்மோபாதிகபந்துக்க ளென்னவுமாம்.

---

¶ "பந்து-மித்ராதயோபிவா" என்றும்காண்கிறது. (க)அப்யுபகம்யவாதம்-ஒத்துக்கொண்டுவாதிக்கை.

தாயேயென்றும் தந்தையேயென்றும் தாரமேயென்றும் கிளையேயென்றும் மக்களேயென்றும் புத்ரமித்ராதிகளையாசைப்பட்டு. (நோயேபட்டு) இவன்பக்கலுபகாரங்கொள்ளலாமென்றுகொண்டு இவனுக்கு உதவவேண்டுமென்று அபகாரத்தைப்பண்ணித் தங்களைக்கொண்டு அகலநினைக்குமவர்களை பந்துக்களென்று நினைத்தால், அவர்கள் பந்துக்ருத்யம் பண்ணக்காணாமையாலே க்லேசமேயிறே ஸிஷ்யிப்பது. இவன் பந்துக்களென்று நினைத்திருக்குமத்தனையிறே, அவர்கள்பக்கல்அதில்லையே. வேறொரு வ்ருத்தாதிகளால் வேண்டாதே அவர்கள்தாங்களே க்லேசத்துக்குடலாயிறேயிருப்பது. (பட்டொழிந்தேன்) பட்டேனென்றபடியாகவுமாம். அன்றிக்கே, நோயேபட்டொழிந்தேன்-விட்டேனென்னவுமாம். ஸமவக்ஷணங்கள்உத்தேச்யமென்றறியும்போது ஸதாசார்யோபதேசமும் சாஸ்த்ரமும்வேணும்; ஸம்ஸாரத்தில் த்யாஜ்யதையில் ப்ரத்யக்ஷமே அமையுமிறே. இவைதானே உபாத்யாயர்களாக வாய்த்து விட்டது. (உன்னைக்காண்பதோராசையினால்) ஸோபாதிக பந்துக்களை பந்துக்களென்று ப்ரமித்து அவர்கள் உதவவேண்டுமென்று உதவக் காணாமையாலே நிருபாதிக பந்துவானவுன்னைக் காணவொண்ணுமோ என்னும்படியாய் உன்பக்கலிலே அவைதானே ஆசையைப் பிறப்பித்தன.

---

"கிளையேயென்றும்" என்றது-ஸம்பந்திகளேயென்றுமென்றபடி. "தாயேதந்தை" இத்யாதிக்கு - ஸ்தநந்தயாவஸ்தா ப்ரப்ருதியான இவனுடைய * பாந்தவாபாஸலோலத்வத்தை அடைவே யருளிச்செய்கையிலே தாத்பர்யமென்று திருவுள்ளம். இவன் "தாய்" என்று ஆதரித்தானாகில்அவர்களாலே நோயேபடவேண்டுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (இவன்பக்கலித்யாதி.) கொண்டு - வாங்கிக்கொண்டு. இத்தால் - இவனாதரிக்கைக் குறுப்பாகத் தாங்களும் தாய்நினைவுகொண்டு வருமத்தனை போக்கி இவனுக்கு உதவுகைக்குறுப்பான தாய் தந்தையன்றிக்கே, பலியிடக்கொடுத்தும்தாங்கள் விற்றுஜீவிக்குமவர்களுண்டென்றதாய்த்து. "தாயே" இத்யாதிகளில் ஏவகாரங்களுக்குத் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் (வேறொருவித்யாதி.) இத்தால் - அவர்களுடைய அபகாரத்தாலே நோவுபடுகையன்றிக்கே அவர்கள்ஸ்வரூபமேநோய்க்கு நிதாநமென்றவ்யாவர்த்தகங்களென்றதாய்த்து. இப்பக்ஷத்தில், அவர்கள் நியதஸ்வபாவராகையாலே நினைத்து நினைத்து துஃகிக்கைக்குறுப்பாயிருப்பர்களென்று திருவுள்ளம்.முழுச்சொல்லாக ஓர்ய மருளிச்செய்து, பதச்சேதவிவக்ஷயா அர்த்தாந்தரம் (அன்றிக்கேயித்யாதி.) அநாதியாக ஆதரித்தே போந்தவனுக்கு இப்போது விடுகைக்கு நிமித்தமென்னென்ன வருளிச்செய்கிறார் (ஸம்ஸாரேத்யாதி.) விசேஷதர்சநத்தால் அநாதிப்ரமம்நிவ்ருத்தமாய்த்தென்று கருத்து. (அமையுமிறே) என்றவநந்தரம், ஆகையாலே என்று சேஷம். விடுகைக்கு ஹேதுவான வளவன்றிக்கே, ஈச்வர விஷயராகஹேதுவுமாய்த்தின வென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஸோபாதிகேத்யாதி.)

(வேயித்யாதி) ப்ரயோஜநமுள்ள நாள் கொண்டு உதவவே ண்டுமென்றாக அகலிற்கையன்றிக்கே, முன்பெல்லாமகலநின்று கார்ய வேளையிலே வந்து முகங்காட்டி உபகரிக்குமவனாயிருந்தாய் நீ. வே ய்கள்ஏய்ந்திருப்பதாய். (பூம்பொழிலித்யாதி) "ஸர்வகந்த:" என்[று] றவஸ்துஉள்ளேயிற்கிறதென்றுதோற்றும்படியாய்த்திருக்கிறது; அப் பரிமளம்வழிகாட்டவந்தேன்.(வேங்கடவா)அவனுடையவாத்ஸல்யமு ம்ஸாபலமும்ப்ரத்யக்ஷிக்கலாயாய்த்திருக்கிறது. அகர்மவச்யனுய்பரமப டத்திலேநித்யஸூரிகளுக்குஓலக்கம்கொடுத்திருக்குமவன், இவைநோவு படுகிற ஸம்ஸாரத்திலே,ப்ரஜை விழுந்த கிணற்றிலே ஒக்கவிழுந்து[ய] எடுக்கும் தாயைப்போலே இங்குவந்திருக்கிறது ரக்ஷிக்கைக்காக விறே. (நாயேன்) நான் செய்து கொண்டபடியைப் பார்த்தால், புறம்புத்தைக்கும் ஆகேன், தேவர்க்குமாகேன். புறம்பே போகில் கல்லைவிட்டெறிவர்கள், உள்ளேபுகுரில் தொட்டனவும் தீண்டினவும் போகடவேண்டிவரும்.(வந்தடைந்தேன்) அநந்யகதித்வத்தாலே[ய்] திருவடிகளிலே வந்து சரணம் புகுந்தேன். நீரே யிப்படிசெய்து கொண்டீராகில் இப்போது நம்மைச்செய்யச்சொல்லுகிற தென் னென்ன (நல்கி) அந்த க்ஷுத்ரபதார்த்தத்தையே ராஜபுத்ரன் செ ருக்காலே மேல்விழுமிறே. (ஆளென்னைக்கொண்டருளே) நீயே, ஸர்வவிஷயவாத்ஸல்யமுடையவனென்று நினைத்து "அஹம்ஸர்வம்கரிஷ்யாமி"[உ] என்று நித்யஸூரிகளைக் கொள்ளுமடிமை யென்னைக் கொண்டருள வேணும். ... ... ... ... ... க.

அ.—இரண்டாம்பாட்டு.—வைஷ்ணவர்களல்லாதாரை வைஷ்ணவர்க ளென்று நினைத்திருந்தேன், அக்குற்றத்தைப் பொறுத்தருளவேணு மென்று சரணம் புகுந்தார்-முதற்பாட்டில்; போக்யமல்லாதவற்றிலே போக்யதாபுத்திபண்ணிப்போந்தேன், அக்குற்றத்தைப் பொறுத் தருளவேணுமென்றுசரணம் புகுகிறாரிதில்.

"உனவே" என்று முன்னிலைதோற்றச் சொன்னபோதே ஸம்போத்யதோற்றி யிருக்கவும், "வேங்கடவா!" என்றுஸம்போதித்தவர்க்குஉட்கருத்தையருளிச்செய கிறார்(ப்ரயோஜநமித்யாதி.)பூத்தபொழிலானபோதே, விரையானது-பரிமள [நூய] மானது, ஆர்ந்திருக்குமே, "விரையார்" என்று விசேஷிப்பானென்னென்ன வரு ளிச்செய்கிறார் (ஸர்வகந்தஇத்யாதி.) இத்தால் - "விரையார்" என்று - ஸர்வேச்வ ரனுடைய பரிமளம் பூர்ணமாய்த்தென்று கருத்து. இப்படி வர்ணித்ததுக்கு ப்ர யோஜநம் காட்டுகிறார் (அப்பரிமளமித்யாதி.) "முகங்காட்டி யுபகரிக்கு மவனாயிருந்தாய் நீ" என்று மேல்சொன்னஅர்த்தம் பதரூபமானபடியையுபபா[தூ] திக்கிறார் (அவனுடையவித்யாதி.) தீண்டினவுமென்றது-பரம்பராஸ்பர்சமுள்ளனவு மென்றபடி.மேல்விழுமிறே-வேட்டைக்குஉபயுக்தமென்றுஅபிநிவிஷ்டனுமிறே. க.

இரண்டாம்பாட்டு.—(மானேயித்யாதி.)

மூ.—மானேய்கண்மடவார் மயக்கிற்பட்டு மாநிலத்து
நானே நாநாவிதநரகம் புகும் பாவம்செய்தேன் ;
தேனேய்பூம்பொழில்சூழ் திருவேங்கடமாமலையென்
ஆனாய்! வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே. ௨.

ப-ரை.—தேன் - வண்டுகள், ஏய் - நிறைந்த, பூ - பூக்களையுடைய, பொழில்-சோலையாலே, சூழ் - சூழப்பட்ட, திருவேங்கடமாமலை - திருமலையை வாஸஸ்தாநமாகவுடையனாய், என் - என்னுடைய குற்றங்களை, ஆனாய் - ஆனைபோலேபொறுக்குமவனே!, மான்ஏய் - மான்போன்ற, கண் - கண்களையும், மடவார் - மடப்பத்தையுமுடைய ஸ்த்ரீகளது, மயக்கில் - கண்மயக்கிலே, பட்டு - அகப்பட்டு, மாநிலத்து - மஹாப்ருதிவியிலே, நாநாவிதநரகம் - பலவிதமான நரகங்களிலும், புகும் - ப்ரவேசிக்கும்படியான, பாவம் - பாபத்தை, நானே - அடியேன் ஒருவனுமே, செய்தேன் - பண்ணினவனாய்க்கொண்டு, வந்து—, அடைந்தேன் - தேவரீர் திருவடிகளைச் சரணமாகப்பற்றினேன் ; அடியேனை-சேஷபூதனான வென்னை, ஆள்கொண்டருள் - அடிமைகொண்டருளவேணு மென்கிறார். ... ... (௨)

வ்யா.—(மானேயித்யாதி) மானேய்ந்திருக்கிற நோக்கையுடைய. அகவாய் நஞ்சாயிருக்கச்செய்தேயும் இவனை யொழியச் செல்லாதாரைப்போலே யிருக்க நோக்குமவர்களாய்த்து. அகவாயாராய்கைக்கிடான வளவில்லையே யிவனுக்கு ; கார்யஸமயா ஆராயாநிற்கச் செய்தேயும்அநந்யப்ரயோஜநைகளாகநோக்குகிறார்களாகக்கொண்டு அதிலே துவக்குண்ணு மாய்த்து. (மடவார்) நாண், மடம், அச்சம் என்கிற விவற்றில் மடப்பத்தை யுடையராயிருப்பார்களிறே. அத்தாலே சொல்லுகிறது - ஸமஸ்தகல்யாண குணாத்மகமான விஷயத்துக்குள்ளதெல்லாம் தங்களுக்குண்டாக நினைத்திருப்பது. (மாநிலத்தில்-நாநாவித நரகம்-நானே - புகும் பாவம் செய்தேன்) வேதநாஹைத்துக் கெல்லையில்லையிறே ; அவர்களை கர்மாநுகுணமாக அநுபவிப்பிக்கைக்கு லோகங்கள்தோறும் பண்ணிவைக்கும் நரகங்களுக்கும் ஓரவயியில்லையிறே ; அவையெல்லாவற்றுக்கும் நானொருவனுமே தேவையறுக்கும்படியான பாபத்தைப் பண்ணினேன். ஈச்வரனுக்குஜகந்நிர்வாஹம் நடக்கவேண்டில் வேறேசில நரகங்கள்ஸ்ருஷ்டிக்கவேணும். ஸ்ரீராமாயணத்திலே கைகேயியை "நீயென்ன நரகத்திலே புகக்கடவை" என்றுண்டு, அவ்விடத்தை வாசியாநிற்க, நம்பிள்ளை, "முன்பே ஸ்ருஷ்டமான நரகங்கள் போராதென்கிறதோ" என்ன ; "அழகிதாகச் சொல்லிற்று" என்று ஜீயரருளிச்செய்தார்.

அழகில் மண்டியென்னாதே, "மயக்கிற்பட்டு" என்கைக்குக் கருத்தருளிச்செய்கிறார் (அகவாயித்யாதி) அவர்கள் கண்ணாலே மயக்கினால் இவன் கண்ணைக்காணாதே மயங்குவா னென்னென்ன வருளிச்செய்கிறார் (அகவாயித்யாதி வாக்யத்வயத்தாலே.) நெஞ்சுநஞ்சாம்படி யிருக்குமவர்களை "மடவார்" என்று ஸவ்யந்தயே நிருபகமாகச் சொல்லப்போமோவென்னவருளிச்செய்கிறார்(அத்தாலே யித்யாதி.) (தேவையறுக்கும்படி) அதாவது-இன்னார்க்கின்ன நரகம் என்று எல்லார்க்குமாகவிட்ட நரகத்தை எல்லாருடைய பாபங்களை யுடையனாய் ஒருவர்க்கு மில்லாதபடி பண்ணுகை.எல்லாநரகத்துக்கு மொருவனே விஷயமாகக்கூடுமோவென்ன ; கூடுமென்னுமதுக்கு ஸம்வாதமாக ஐதிஹ்ய மருளிச்செய்கிறார் (ஸ்ரீராமாயணத்திலே யித்யாதி.)

மூ.—கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன்றிலாமையினால்;
என்றேனுமிரந்தார்க்கினிதாகவுரைத்தறியேன் ;
குன்றேய் மேகமதிர் குளிர்மாமலை வேங்கடவா !
அன்றே வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே. ௩.

ப-ரை.—குன்று - மலைகளிலே, ஏய் - தங்கியிருந்துள்ள, மேகம் - மேகங்களானவை, அதிர்-கர்ஜனத்தாலே முழங்காநிற்பதாய், குளிர்-குளிர்த்திமாருதத்தாய், மா-பெருமைமிக்கிருப்பதான, மலைவேங்கடவா-ஸ்ரீவேங்கடாசலத்தை நிரூபகமாகவுடையவனே!, குறிக்கோள் ஒன்று-"தேஹத்துக்குவேறாய் ஆத்மா என்றதொன்றுண்டு" என்னும் அறிவு, இலாமையினால் - அடியேனுக்குப்பிறவாமையாலே, பல்உயிரை-எல்லாப்ராணிகளையும், கொன்றேன்-ஹிம்ஸித்துக்கொண்டுபோந்தவனாய், இரந்தார்க்கு-யாசித்தவர்களுக்கு, "தன்கையில் காசில்லாமையாலே யன்றோ இவனிங்ஙன் சொல்லுகிறது" என்று அவர்கள் நினைக்கும்படி, இனிதாக - நல்வார்த்தைகளாலே, என்றேனும்-ஒருகாலத்திலும், உரைத்தறியேன்-சொல்லியறியாதவனான அடியேன், அன்றே-அப்போதே, வந்து அடைந்தேன்—; அடியேனை ஆள்கொண்டருள்—.

(தேனித்யாதி) தேனென்று-வண்டென்னவுமாம். (என்றேனும்) அவ்வானை வர்த்திக்கிற மலையிலுள்ளதுதன்னையே காட்சியாகக் கொடுக்கவமையும். ஆனை – பெரிய குற்றங்களைக் காணுக்கண்ணிட்டு, பொறுக்க வரியன செய்யவற்றா யிருக்கையும், ஸதாதர்ஸநீயமாயிருக்கையும். (வந்தித்யாதி) "நாநாவித நரகம்புகும்பாவம்செய்[உய
தேன்" என்ற நானே வந்தடைந்தேன் ; அநாதிகாலஸேவம் பண்ணும் போதை க்லேஸத்துக்கெதிர்த்தட்டான ஸுகைகதாநமாயிருக்கும் கைங்கர்யத்தை யென்னைக் கொண்டருளவேணும். காமுகனுக்கு அங்கநாபரிஷ்வங்கம்போலே ரஸிக்குமிறே ஸேஷபூதனுக்கு கைங்கர்யம் ; "ரமமாணஃ." ... ... ... ... உ.

அ.—மூன்றும்பாட்டு.—பக்தர்களல்லாதாரை பக்தர்களென்றும்போக்யமல்லாதார்பக்கலிலே போக்யதாபுத்தி பண்ணியும் போந்தவளவேயோ, தேவர்திருவுள்ளத்துக்கு அஸஹ்யமாம்படி பரஹிம்ஸையே பண்ணிப்போந்தே னென்கிறார்.

"மாமலையென்னுனாய்" என்றஸமஹ்வ்யாஹாரலப்யார்த்தத்தையருளிச்செய[கூய
கிறார் (அவ்வானையித்யாதி.) (ஆனை) என்றவநுஷங்கம், என்கிறது என்றுசேஷம். (கண்ணிட்டு) என்றவநுஷங்கம், இருக்கையும் என்றுசேஷம். (தர்சநீயமாயிருக்கையும்) என்றவநுஷங்கம், உண்டாகையாலே என்று பூரிப்பது. "ஆட்கொண்டருளே" என்றதுக்கு "அடியேனை" என்றது ஹேதுகர்பமென்னுமிடந்தோற்ற தாத்பர்ய மருளிச்செய்கிறார் (காமுகனுக்கித்யாதி.) "ரஸிக்கும்" என்கைக்கு[கூரு
ப்ரமாணம் (ரமமாணஇத்யாதி) "ரம்யமாவஸயம் க்ருத்வா ரமமாணவநேத்ரயஃ | தேவகந்யர்வ ஸங்காஸாஸ்தத்ரதேந்யவஸந் ஸுகம்." ... ... உ.

மூன்றும்பாட்டு.—(கொன்றேனித்யாதி.) மேலிரண்டு பாட்டோடும் ஸங்கதிதன்னை யருளிச்செய்கிறார் (பக்தர்களித்யாதி.)

வ்யா.—(கொன்றேன்) மடிதடவி விட்டிலேன். அர்த்தம் கொடுவந்தானாகில், பின்தொடர்ந்தியறக் கொன்று பறிக்கும்; வெறுங்கையனாகில், நான் அவள்பக்கல் என்கொடுபோகக்கடவேனாக நீ வெறுங்கையே வந்ததுஎன்றுகொல்லுவன். (பல்லுயிரை) அநுதாபம்பிறந்ததில்லை, ப்ராயச்சித்தாதிகாரமுமில்லை. அநுதாபமுண்டாகில் ஒன்றிரண்டளவிலே மீளுமிறே; அப்போதிறே ப்ராயச்சித்தாதிகாரமுமுள்ளது. இப்போது இத்தைக் குற்றமாகச் சொல்லுகிறநீர் அன்று அது செய்வானென்னென்ன (குறிக்கோளொன்றிலாமையினால்) தேஹாதிரிக்தமாயிருப்பதோராத்மவஸ்துவுண்டு, இது செய்யில் நரகாநுபவம் தப்பாதென்றுதல்; அன்றிக்கே, இத்தையுடையானொருவனுளன், அவன் ஸர்வஜ்ஞத ஸுஹ்ருத்தாயிருப்பானொருத்தன், அவனுக்கிது அஸஹ்யமாயிருக்கும் என்று புத்தியிற்படாமையாலே செய்தேன்; அவனைப் பார்த்தல், நாம் நின்றநிலையிது என்றாய்தல் செய்யாமையாலே. ஒருதலையையறியிலும் பரஹிம்ஸையில் ப்ரவர்த்தியானிறே. விஷயார்த்தமாக த்ரவ்யார்ஜநம் பண்ணுகிறநாளில் முன்னடி தோற்றாமையாலே பரஹிம்ஸையைப்பண்ணிப்போந்தீராகில், பின்பு த்ரவ்யங்களும் பெற்று அபிமதவிஷயங்களும் கைபுகுந்து நீருமவளுமாய் ரஸித்திருக்கிற வளவில்தான் ஆர்த்தவிஷயத்தில் ஐயோ! என்றீரோவென்ன (என்றேனுமித்யாதி காத்திகைப்புதியதுக்கும் நாமிடவேணு மென்னுதல், இவன் ஜீவிக்க வேணுமென்னுதல், செருக்காலே யாதல். இட்டறியே னென்பது அதுக்கு ப்ரஸங்கமுண்டாகிலிறே. (இனிதாக) ஒருவனர்த்தித்து வந்தால், இரப்பாளனாய் வந்தவனுக்கு "குறைவறத்தரப்பெற்றிலேன்" என்றுறி வார்த்தைசொன்னானாகில், "இவன்றான் செய்வதென், தன் வெறுமையாலே யன்றோ தாராவிட்டது" என்று அவனும் ஆறிப்போமிறே; அங்ஙனன்றிக்கே, "நாமும் நம்தாரித்ர்யமுமாய்ப் பட்டது படாதே யிவன் வாயில் வார்த்தைகேட்கைக் கென் செய்யஅபேக்ஷித்தோம்" என்று உள்ளதனையும் நெஞ்சு புண்படும்படியாய்த்து இல்லையென்பது.

பின்தொடர்ந்தியற - தன்பின்னே தொடர்ந்துவாராதபடி. அவள் பக்கல் - * மானேய்கண் மடவாள் பக்கல். கீழ் வாக்யத்துக்கு விவரணம் (அநுதாபமுண்டாகிலித்யாதி.) மேலுக்கவதாரிகை (இப்போதித்யாதி.) குறிக்கோள் - ஜ்ஞாநம். "ஒன்று" என்றது - ஒன்றும் என்றாய், அநேகமுண்டாகிலன்றோ ஒன்றும் என்னவேண்டுவதென்ன வருளிச்செய்கிறார் (தேஹேத்யாதி.) (இருக்குமென்று) என்றவநுஸந்தாநம், ஆதல் என்று சேஷம். கீழ்ப்பண்ணின ப்ரச்நத்துக்கு உத்தரமாம்படி தாத்பர்ய மருளிச்செய்து, சப்தார்த்தத்தை யருளிச்செய்கிறார் (அவனையித்யாதி.) இவற்றிலொன்றறிந்தாலமையுமோவென்ன (ஒருதலை யித்யாதி.) மேலுக்கவதாரிகை (விஷயேத்யாதி.) "என்றேனும்-ஒருநாளாகிலும், இரந்தார்க் கினிதாகவுரைத்தறியேன்" என்றதுக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (காத்திகையித்யாதி.) இத்தால்-புண்யத்துக்காகவாதல், ஐயோ! என்றிரக்கத்தாலேயாதல் க்யாதிக்காக வாதல், ஒருநாளும் சோறிட்டதில்லையே, நல்வார்த்தையும் சொல்லியறியே னென்றதாய்த்து.

மூ.—குலந்தானெத்தனையும்பிறந்தேயிறந்தெய்த்தொழிந்தேன் ;
நலந்தானொன்றுமிலேன் ; நல்லதோரறஞ்செய்துமிலேன்;
நிலந்தோய் † நீள்முகில்சேர் நெறியார் திருவேங்கடவா !
அலந்தேன் வந்தடைந்தே னடியேனையாட்கொண்டருளே. ௪.

ப-ரை.—நிலம் - பூமியிலே, தோய் - படிந்த, நீள்முகில் - மஹாமேகங்கள், சேர் - ஸஞ்சரிக்கிற, நெறி - வழியை, ஆர் - உடைத்தான, திருவேங்கடவா - ஸ்ரீ வேங்கடாத்ரி நிர்வாஹகனே!, எத்தனைகுலமும் - எல்லாக்குலங்களிலும், பிறந்து இறந்து-பிறப்பது இறப்பதாய்க்கொண்டு, எய்த்தொழிந்தேன்-இளைத்துப்போனவனாய், ஒருநலமும் இலேன் - ஒன்றிலும் ஒருநன்மையும் இல்லாதவனாய், நல் [ ] லது-ஹிதத்தோடேகூடியிருப்பதாய்நன்மையையுடைத்தான, ஓர்அறமும்-ஒருஸாத நாநுஷ்டாநத்தையும், செய்திலேன் - பண்ணப்பெறுதவனாய்க் கொண்டு, அலந் தேன் - ஜந்மங்கள்தோறும்திரிந்து க்லேசித்த அடியேன், வந்து அடைந்தேன்—; அடியேனை ஆள்கொண்டருள்—. ... ... ... ... ௩

(குன்றேய்மேகமதிர்) குன்றிலேயென்னுதல், குன்றுபோ [ ] லே யென்னுதல். கனக்கநீரைமுகந்தால் ஓரிடத்திலே தங்கிவர்ஷிப்பது. (அதிர்) இரவாதிருக்கச்செய்தேயும் இனிதாகச் சொல்லுவாரைப்போலேயாய்த்து முழக்கமிருப்பது. (அன்றேவந்தடைந்தேன்) அநுதாபம் பிறந்தாதல் ப்ராயஶ்சித்தம் பண்ணியாதலன்றிக்கே, கொன்ற கை கழுவாதே உதிரக்கைகழுவாதேவந்து சரண [ ] ம் புகுந்தேன் ; என்செயலைப்பாராதே ஸ்வரூபத்தைப் பார்த்தடிமை கொண்டருளவேணும். பூர்வ வ்ருத்தத்தைப்பார்த்தால் பரஹிம்ஸையாகில் பண்ணிற்று, இப்போதொரு ஸாதநாநுஷ்டாநம் பண்ணிவந்தாப்போலேயிருக்கச் சொல்லுகிற தென்னென்ன ; அவனையோ பார்த்துத்தம்மைப் பாராதே வார்த்தை சொல்லுகிறார். அவனைப் [ ] பார்த்தால், “அரிஷ்ப்ராணாந் பரித்யஜ்ய” என்றிறேயிருப்பது; “ப்ராணாநபி” என்றுவிட்டது அவற்றைக் குவாலாகநினைத்திராமை. காலிலேவந்து விழுந்தவனை முன்புத்தை ஸாத்ரவம் பாராதே ரக்ஷித்த விதோரேற்றமோ என்றிருக்குமவராய்த்து. ... ... ௫.

குன்றிலேயென்றது-குன்றின் கொடுமுடியிலே யென்றபடி. அன்றிக்கே, [ ] குன்றுகளிலே வர்த்திக்கக்கடவ மேவமென்று கொள்ளவுமாம். இப்படி விசேஷித்ததுக்கு ப்ரயோஜநம் (கனக்கவித்யாதி.) பல்லுயிரைக்கொன்ற வெனக்கு ப்ரதிகோடியாக பல்லுயிருக்கும் ஜீவநப்ரதாநஶீலமாய் இனிதாக வுரைத்தறியாதவெனக்கெதிராக பரமோதாரர் வர்த்திக்கிற தேசத்திலிருக்கும் * ஸ்ரீவேங்கடாத்ரி ஶிவராலய காளமேவத்தை ஸம்போயிக்கிறுரென்று உட்கருத்தையுட் [ ] கொண்டு, * அதிர்ப் பதத்துக்குக் கருத்தருளிச் செய்கிறார் (இரவாதித்யாதி.) “அடியேனை” என்றதுக்கு ஹாவம் (என்செயலை யித்யாதி.) “கொண்டருளே” என்றஇதுக்கு சங்காபரிஹாரரூபேண ஹாவமருளிச்செய்கிறார் (பூர்வேத்யாதி.) “ஆர்த்தோவாயதிவாத்ருப்தஃ பரேஷாம் ஶரணாகதஃ। அரிஃப்ராணாந்பரித்யஜ்ய ரக்ஷிதவ்யஃக்ருதாத்மநா.” அவற்றை - ப்ராணன்களை. ஆத்மநி ஸஹவச [ ] நம். குவாலாக நினையாமைக்கு ஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார் (காலிலேயித்யாதி.) ... ... ... ... ... ... ... ௫

வ்யா.—நாலாம்பாட்டு.—(குலந்தானித்யாதி) குலங்களெங்கும் பிறந்திறந்துதிரிந்தேன். அநுலோம ப்ரதிலோம ரூபத்தாலே பிறந்த பிறவிக்கு ஓரெல்லையில்லையாய்த்து. எல்லா ஜந்மங்களிலும் புக்குப் பிறப்பதிறப்பதாய்இனிப்பிறக்கைக்கீடான கர்மவிசேஷமுண்டாகி[ரு லும் பிறக்கைக்கு க்ஷமனல்லாதபடி யிளைத்தேன்‡. (நலந்தானொன் றுமிலேன்) இப்படி அநேகஜந்மங்கள் பிறந்து மரித்துப் போருகிற விடத்திலும் நடுவேயொரு ஸுக்ருதமாதல் அதுக்கு ஃபலமான ஜ்ஞாநமாதல் உடையேனாய்த்திலேன். (நல்லதோரறம் செய்துமிலேன்) இப்போது நன்மை பிறக்கைக்கடியாக முன்புசெய்ததொன்[ற றில்லையே யாகிலும், மேலொரு நன்மைபிறக்கைக் கீடாக இப்போது ஏதேனு மொரு ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகிறதுண்டோ வென்னில்; ஃபலத்தோடே வ்யாப்தமா யிருப்பதொரு ஸாதநாநுஷ்டாநம் பண்ணப்பெற்றிலேன்.

(நிலமித்யாதி) நிலத்திலேதோய்ந்தமஹாமேகங்களானவை [யிரு போனஅடிப்பாடு ஆர்ந்திருக்குமாய்த்து. கழுத்தேகட்டளையாக நீரைப்பருகி முகந்த நீர்க்கனத்தாலே கால்வாங்கிப் போகமாட்டாதே நகர்ந்து நகர்ந்து துளித்துத்துளித்துக்கொண்டு ஸஞ்சரிக்கிற மேகங்கள் போன அடிப்பாடு தெரியும்படியா யிருக்குமாய்த்து. (அலந்தேன்வந்தடைந்தேன்) ஜந்மபரம்பரைகளிலே அலந்துமுசித்தேன். [உம் (அடியேனை) இனியொருஜந்மம்வருமென்றஞ்சி ஏங்கவேண்டாதபடியான தாஸ்யத்திலே யென்னைமூட்டவேணும். ... ... ௪.

---

நாலாம்பாட்டு.—(குலமித்யாதி.) "பல்லுயிரை - கொன்றேன்" என்கைக்கு நீர்தாம் ஆசந்த்ரார்க்க ஸ்தாயியா யிருந்திரோவென்ன; அதொன்றுமில்லை, நான் பட்ட பாட்டைக் கேளீரென்கிறார் என்று ஸங்கதி கண்டுகொள்வது.

"பிறந்தே" என்கிற ஏவகாரம் பிறவாமலிறப்பில்லாமையால் வ்யாவர்த்தகமன்றென்று பிறப்பினுடைய நைரந்தர்ய ஸூசகமென்று விவக்ஷித்து, ஃபலிதார்த்தமருளிச்செய்கிறார் (குலங்களித்யாதி) பிறப்பும்இறப்பும் விநா வேறு க்ரியையில்லையென்றுகருத்து. "எத்தனையும்" என்றபதத்துக்குத் தாத்பர்யம் (அநுலோமேத்யாதி.)அநுலோமமென்றது - உத்க்ருஷ்டவர்ணன் அபக்ருஷ்டவர்ணத்தில் விவாஹம் பண்ணினபெண்பிள்ளைவயிற்றில்பிறக்கை. ப்ரதிலோமமென்றது-அபக்ருஷ்டவர்ணன் உத்க்ருஷ்டவர்ணத்தில்பரிக்ரஹித்தபெண்பிள்ளைவயிற்றில்பிறக்கை.வாச்யார்த்தமுமேவ"எய்த்தொழிந்தேன்"என்றதுக்குத்தாத்பர்யமருளிச்செய்கிறார் (எல்லாவித்யாதி.) "ஒன்றும்" என்றபதவாஸனை (இப்படியித்யாதி.) "நலந்தானொன்றுமிலேன்"என்றுசொல்லிவைத்து,"நல்லதோரறஞ்செய்துமிலேன்" என்ன ப்ரஸ[க்து க்தி யுண்டோவென்ன வருளிச்செய்கிறார் (இப்போதித்யாதி.)

விவரணம் (கழுத்தேயித்யாதி.) முசித்தேன் - க்லேசித்தேன். ... ... ௪.

அஞ்சாம்பாட்டு.—(எப்பாவமித்யாதி.) இப்படியெல்லாக்குலங்களிலும்புக்குப் பிறக்கைக்கடியான பாபப்ராசுர்யத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. [சம

‡ "... ... ல்லாதபடி யிருந்தேன்" என்று சில ஸ்ரீகோசங்கள்.

மூ.—எப்பாவம் பலவு மிவையே செய்திளைத்தொழிந்தேன் ;
துப்பா! நின்னடியேதுடர்ந்தேத்தவும் கிற்கின்றிலேன் ;
செப்பார்திண்வரைசூழ் திருவேங்கட மாமலை யென்
அப்பா! வந்தடைந்தே னடியேனையாட்கொண்டருளே. ௫.

ப-ரை.—செப்புஆர் - செப்புப்போலே ரக்ஷகமாய், திண் - த்ருடமான, வரை- மலைகளாலே, சூழ் - சூழப்பட்ட, திருவேங்கடமாமலை - திருமலையை வாஸஸ்தாநமாக வுடையனாய், என் - ஆச்ரிதனான யான் போல்வார்க்கு, அப்பா - உபகாரகனானவனாய், துப்பா - ஆச்ரிதர்பாபங்களைப்போக்கி ரக்ஷிக்கைக்கீடான சக்தியையுடையவனே!, எப்பாவம் பலவும் இவையே - பலவகைப்பட்ட பாபங்களையே, செய்து - பண்ணி, இவற்றுக்கு வரக்கடவ பலங்களைக் கேட்டு, இளைத்தொழிந்தேன் - துக்கித்தவனாய், நின் அடி - தேவரீர் திருவடிகளை, துடர்ந்து - பின்சென்று, ஏத்தவும் - பக்திபூர்வகமாக ஆச்ரயிக்கவும், கிற்கின்றிலேன் - சக்தியற்றவனாய், வந்து அடைந்தேன்—; அடியேனை ஆள்கொண்டருள்—. ... ... (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு.—(எப்பாவமித்யாதி) அதிபாதகம், உபபாதகம், மஹாபாதகம் என்றாப்போலே சொல்லுகிற பஹுவிதமான பாபங்களை அநுஷ்டித்து, பின்னை இவற்றுக்கு வரக்கடவ பலங்களைக்கேட்டு க்லேசப்பட்டேன். இப்படி மஹாபாபங்களையே அநுஷ்டித்துக்கொடுபோராநின்றால் நடுவே, யொரு ஸுக்ருதம்பிறந்து அத்தாலே யென்பக்கலிலே ருசியு முண்டாகப் பெற்றதாகில், “நமே ஹக்த: ப்ரணஸ்யதி” என்கிற வார்த்தையை விஸ்வஸித்திருக்கலாமிறே. மஹாபாபங்களைப் பண்ணினானாகிலும் புருஷோத்தம விஷ்யையுண்டாக அவனுக்கு பாபவிமோசந முண்டாகச் சொல்லாநின்றதிறே. (துப்பா) இப்பாபங்களைப்போக்கி உன்னைப்பற்றினாரை ரக்ஷிக்கைக் கீடானசக்தியோகத்தையுடையவனே. (நின்னடியே) ஹக்திபூர்வகமாக உன்றிருவடிகளை வடிம்பிட்டாச்ரயிக்க க்ஷமனாய்த்திலேன்.

(செப்பாரித்யாதி) அரணாகப்போரும்படியான திண்ணிய வரைகளாலே சூழப்பட்ட திருமலையை வாஸஸ்தாநமாக வுடைய நிருபாதிக பந்துவானவனே. (அடியேனை) என்னுடைய பாபாநுகூலமாகவன்றிக்கே உன்னோடுண்டான நிருபாதிக பாந்தவாநுரூபமான கைங்கர்யத்தில் என்னைமூட்டவேணும். ... ... ௫.

“இவையே” என்கிற அவதாரணத்துக்குத் தாத்பர்ய கதந முகேந மேலுக்கவதாரிகை யருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதி.) அல்பம் ஸுக்ருதருசியுண்டானால் பாபங்கள் போமோ, இவ்வசநத்தைவிச்வஸிக்கும்படி யென்னென்ன வருளிச்செய்கிறார் (மஹாபாபங்களையித்யாதி) வசநபலத்தாலேவிச்வஸிக்கத்தட்டென்னென்று கருத்து.

“செப்பு” என்று - ஆபரணத்துக்கு ரக்ஷகமான பாத்ரமாய், அத்தாலே (அரணாக) என்றது. திருமலைக்குப் புறமலை ரக்ஷகமாயிருக்கையாலே தம்முடைய ரக்ஷகவஸ்து ஸுரக்ஷிதமாயிருக்கப் பெற்றதென்று திருவுள்ளமென்று கருத்து. ௫.

ஆறும்பாட்டு.—(மண்ணாயித்யாதி.) இப்படி அதிபாதகாதிகள்பண்ணுகைக்கடி - ஜ்ஞாநதிரோதாநகரமான ப்ராக்ருததேஹஸம்பந்தமென்று, அதுதன்னை அநுஸந்தித்து க்லேசித்து சரணம் புகுகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது

மூ.—மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமாகாசமுமாம்
புண்ணாராக்கைதன்னுள் புலம்பித்தளர்ந்தெய்த்தொழிந்தேன் ;
விண்ணார் நீள் சிகர விரையார் திருவேங்கடவா !
அண்ணா ! வந்தடைந்தே னடியேனையாட்கொண்டருளே. ௬.

ப-ரை.—விண் - ஆகாசத்தை, ஆர் - அளாவும்படி, நீள் - உயர்ந்த, சிகரம் - கொடுமுடிகளையும், விரை-பரிமளத்தையும், ஆர்-உடைத்தான, திருவேங்கடவா-திருமலையைவாஸஸ்தாநமாகவுடையவனாய், அண்ணா - எல்லாவுறவுமுறையுமானவனே!, மண்ணாய்-பூமியாயும், நீராய்-ஜலமாயும், எரியாய்-அக்நியாயும், காலாய்-வாயுவாயும், மஞ்சு-மேகங்கள், உலாவும்-ஸஞ்சரியாநின்றுள்ள, ஆகாசமுமாம்-ஆகாசமுமாகிய[ய பஞ்சபூதமயமானதாய், புண்ஆர் ஆக்கைதன்னுள் - வ்ரணத்தோடொத்த தேஹத்திலே யகப்பட்டு, புலம்பி - அங்கே கிடந்து கூப்பிட்டு, தளர்ந்து - அதுவும் செய்யமாட்டாதே மெலிந்து, எய்த்தொழிந்தேன் - மிகவும் இளைத்தவனான அடியேன், வந்தடைந்தேன்—; அடியேனை ஆள்கொண்டருள்—. ... (௬)

வ்யா.—ஆறும்பாட்டு.—(மண்ணாயித்யாதி) ராஜபுத்ரன் வேடன் கையிலே யகப்பட்டுத் தன்னை வேடனாக ப்ரமிக்குமாப்போலே, நித்யமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமாய் ஏகரூபமாய் ஈஶ்வரஶேஷமான ஆத்மவஸ்து கர்மாநுகுணமாக அசித்தோடே ஸம்ஶ்லிஷ்டமாய்த்து. ஏகரூபமான வஸ்து உபயாத்மகமான தேஹத்திலே யகப்பட்டது. (புண்ணாராக்கை) * புண்ணைமறைய வரிந்திறே உடம்[உம் பிலே வைத்தது. அறிவுடையார், "ஶரீரம் வ்ரணவத்பஶ்யேத்" என்று இதுதன்னையே வ்ரணமாகச் சொல்லாநின்றார்களிறே. தேஹத்திலே புக்ககப்பட்டு, பின்னை அங்கே கிடந்து கூப்பிட்டு, அது தானும் மாட்டாதே தளர்ந்து, பின்னை யிளைத்தேன்.

(விண்ணாரித்யாதி) நித்யஸூரிகள் ஸ்ரீவைகுண்டத்திற்போலே வந்தேத்தும்படியாக ஆகாஶாவகாஶத்தளவும்வளர்ந்தபெரிய கொடுமுடிகளையுமுடைத்தாய் பரிமளப்ரசுரமான திருமலையை வாஸஸ்தாநமாகக்கொண்டு நிற்கிற. (அண்ணா) கீழே, "அப்பா" என்றார் ; இங்கே, அண்ணா என்னாநின்றார். * தாயேதந்தையென்றும் தாரமே கிளைமக்களென்றும்விட்டவுறவுமுறைக்கெதிர்த்தட்டானஎல்லா [கூய வுறவுமுறையு மெம்பெருமானே யென்றாய்த்திவரிருப்பது. (அடியேனை) வெளிறு கழிந்தால் ஸம்பந்தம் நித்யஸூரிகளோடொத்திருக்குமிறே யெனக்கும் ; ஆனபின்பு, அவர்களைக் கொண்டருளுமடிமையை யென்னைக்கொண்டருளவேணும். ... ... ௬.

"அப்பா வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே" என்றத்தாலே-[நூறு பிதாபுத்ரஸம்பந்தமும் தம்முடைய ஸ்வாஹாவிகாகாரமு மறுஸந்தித்தவர் பஞ்சபூதாத்மகமான * புண்ணாராக்கையிலகப்பட்டமைக்கு ஸத்ருஷ்டாந்தமாக ஹேதுவருளிச்செய்கிறார் (ராஜபுத்ரனித்யாதி.) தேஹம் புண்ணாகைக்கு ப்ரமாணங்களை ஸூசிப்பிக்கிறார் (புண்ணையித்யாதி) "ஶரீரம் வ்ரணவத்பஶ்யேதந்நம் வ்ரணலேபநம்| ‡ வ்ரணஶோதநவத்பாநம் வஸ்த்ரஞ்ச வ்ரணபட்டவத்" என்ற ப்ர[சும் மாணசேஷம். வெளிறு - அஸாரம். ... ... ... ... ... ௬.

‡ "வ்ரணஶோதநவத் ஸ்நாநம்" என்றும் ஸ்ரீகோசங்கள்.

மூ.—தெரியேன்பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்;
பெரியேனாயினபின் பிறர்க்கேயுழைத்தேழையானேன்;
கரிசேர் பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடவா!
அரியே! வந்தடைந்தே னடியேனையாட்கொண்டருளே. எ.

ப-ரை.—கரி - யானைகள், சேர் - மிக்கிருப்பதாய், பூ - பூக்கள் நிறைந்த, பொழில் - சோலையாலே, சூழ் - சூழப்பட்டு, கனம் - திர்டமாயிருக்கிற, மாமலை - பெரியமலையான, வேங்கடவா - திருமலையை வாஸஸ்தாநமாக வுடையையாய், அரியே - சத்ருக்களை நிரஸிக்கைக்கு ஸிம்ஹம்போலே செருக்கியிருக்குமவனே!, பாலகனாய் - சிறுப்பிள்ளையானபோது, தெரியேன் - "இதுநன்று, இதுதீது" என்று பகுத்தறியமாட்டாதவனாய், சிறிதஜ்ஞாநம் பிறந்தபின்பு, பலதீமைகள் - அநேகமான கொடிய செயல்களை, செய்து மிட்டேன் - பண்ணிப்போந்தவனாயும், பெரியேன் ஆயினபின் - யௌவநத்தை அடைந்தபின்பு, பிறர்க்கே - ஸ்த்ரீகளுக்கு வேண்டுமவற்றையே, உழைத்து - தேடி, அத்தாலே துக்கித்து, ஏழையானேன் - சதிர்கெட்டுப்போன அடியேன்; ஸர்வேச்வர னொருவனுளன் என்னும் அறிவு பிறந்த பின்பு, வந்தடைந்தேன்—; அடியேனை ஆள்கொண்டருள்—. ... (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு.—(தெரியேனித்யாதி) (பாலகனாய் - தெரியேன்) சிலநாள் அதிசைசவமாய் யுக்தாயுக்தங்களறியாதே கிடந்தேன். அல்பம்அறிவுபிறந்தபின்பு, தோன்றினபடி பலதீமைகள் செய்துதிரிந்தேன். (பெரியேனித்யாதி) அநந்தரம் யௌவநம்வந்து [உ௰ முகங்காட்டினவாறே, நல்லதொரு பூக்கண்டால் என்தலையிலே வையாதே ஸ்த்ரீபரதந்த்ரனாய் அவர்களுக்கேஆவனதேடி உழைவைப்பட்டுச் சதிர்கேடனாய் இளிம்பனானேன்.

(கரியித்யாதி) லீலார்த்தமாக ஆனைகள் வந்து சேரப்பட்டு, பூத்த பொழிலாலே சூழ்ந்து திண்ணிதாயிருக்கிற திருமலையை வாஸ [உரு ஸ்தாநமாக வுடையவனே. (அரியே) என்னுடைய ப்ரதிபந்தகத்தைப்போக்குகைக்கீடான பராபிபவநஸாமர்த்யத்தை யுடையவனே. (ஆட்கொண்டருளே) பிறர்க்கேயுழையாமே ப்ராப்தவிஷயத்திலே கைங்கர்யத்தைக்கொண்டருளவேணும். ... ... எ.

ஏழாம்பாட்டு.—(தெரியேனித்யாதி.) "விசித்ராதேஹஸம்பத்திரீச்வராயநிவேதிதும்" என்றும் "சரீரமாத்யம்கலுதர்மஸாதநம்" என்றும் சொல்லுகிறபடியே ஆவச்யகமானத்தை, "புண்ணாராக்கை" என்று நீர்ஸ்ரஹித்துக்கொண்டு வருவானென்னென்ன; அப்படியே யாயிறே *உன்பூவார்கழல்களிலே ஒருபூவிடப்பெற்றேனாகில்; அங்ஙனன்றிக்கே போனபடியைக்கேளா யென்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. [௩௫

ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான், இளையபெருமாள், ப்ரபந்நஜநகூடஸ்தரான நம்மாழ்வார், இவர்களுக்கெல்லாம் ஆஜந்மஸித்தமான ஸம்வத்ப்ராவண்யம் தலையெடுக்கக் காண்கையாலே தாம்அதிசைசவந்துடங்கிவ்யர்த்தமேபோக்கினபடியை யநுஸந்தித்திக்கிறாரென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (சிலநாளித்யாதி.) த்ருவன் அஞ்சுவயஸ்ஸிலே ஸம்வத்ஸஜநம்பண்ணினபடியையுட்கொண்டருளிச் [௩௰ செய்கிறார் (அல்பமித்யாதி.) "பிறர்க்கே" என்கிற ஏவகாரவ்யாவர்த்யம் (என்தலையிலே யென்றது.)

"அரி" என்று - ஸிம்ஹமாய், அத்தாலே (பராபிபவந ஸாமர்த்யத்தையுடையவனே யென்றது.) ... ... ... ... ... எ.

மூ.—நோற்றேன் பல்பிறவி யுன்னைக்காண்பதோராசையினால்;
ஏற்றேன்;இப்பிறப்பே யிடருற்றன னென்பெருமான்!
கோற்றேன்பாய்ந்தொழுகும் குளிர்சோலைசூழ் வேங்கடவா!
ஆற்றேன் வந்தடைந்தே னடியேனை யாட்கொண்டருளே. அ.

ப-ரை.—தேனீக்களானவை, கோல் - கோல்களிலே சேர்த்துவைத்த, தேன்-மதுவானது, பாய்ந்து - நிறைந்து வழிந்து, ஒழுகும் - வெள்ளமிடாநிற்பதாய், குளிர் - குளிர்த்தியையுடைத்தான, சோலைசூழ் - பொழில்களாலே சூழப்பட்ட, வேங்கடவா - திருமலையை வாஸஸ்தாநமாக வுடையனாய், எம் - ஆச்ரிதரான வெங்களுக்கு,பெருமான்-மஹோபகாரகனாயிருக்குமவனே!, உன்னை-தேவரீரை, காண்பது - காணவேணுமென்கிற, ஓர் - ஒரு, ஆசையினால் - ஆசையாலே, பல்பிறவி - அநேகஜந்மங்க ளுண்டாம்படி, நோற்றேன் - ஸாதநாநுஷ்டாநம் பண்ணிப்போந்த அடியேன், இப்பிறப்பே - இந்தஜந்மத்திலேயே, இடருற்றனன் - ஜந்மந்யாஜ்யம் என்று அறிந்தவனாய், ஏற்றேன் - தேவரீர் கடாக்ஷத்துக்கு யோக்யனானேன் ; அத்தாலே,ஆற்றேன்-மாறிமாறிவரும் பலபிறவிகளை ஸஹிக்கமாட்டாதவனாய், வந்தடைந்தேன்—; அடியேனை ஆள்கொண்டருள்—. ... (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு.—(நோற்றேன்பல்பிறவி) (பல்பிறவி-நோற்றேன்) எனக்குப் பல ஜந்மங்களுண்டாம்படியாக வாய்த்து நான்ஸாதநாநுஷ்டாநம் பண்ணிற்று. இப்படி பிறந்துபோராநிற்கச்செய்தே நடுவே யாத்ருச்சிகமாகவொருஸுக்ருதம்பிறந்தது,அத்தாலே உன்னைக்காணவேணுமென்றாசை பிறந்து, தேவர்க்காம்படி யோக்யனானேன். நீர் யோக்யரென்னுமிட மறிந்தபடி யெங்ஙனே யென்ன(இப்பிறப்பேயிடருற்றனன்)இஜ்ஜந்மந்தன்னிலே, நாம்நின்றநிலை சாலப்பொல்லாதென்று என்னெஞ்சிலேபட்டது.

(கோல்தேனித்யாதி) கோல்களிலே வைத்த தேனானது பாய்ந்து வெள்ளமிட்டுக் குளிர்ந்த சோலையாலே சூழப்பட்ட திருமலையை வாஸஸ்தாநமாகவுடையவனே. (ஆற்றேன்) ஜந்மபரம்பரைகளுக்கு ஆற்றமாட்டாதே திருவடிகளிலேவந்துசரணம்புகுந்தேன்.

எட்டாம்பாட்டு.—(நோற்றேனித்யாதி.) "பிறர்க்கேயுழைத்தேழையானேன்" என்றிருக்கிற நீர் திருமலையளவும் வந்து சரணம் புகுருகைக்கு நிதாநம்சொல்லிக்காணீரென்ன ; நான் ஸம்ஸாரத்தைப் பெருக்கிக் கொள்ளச்செய்தே நீ சில ஸுக்ருதவிசேஷங்களைக் கதிர்பொறுக்கிக் கடாக்ஷித்தாயாக வேணுமென்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

"உன்னைக்காண்பதோ ராசையினால் - பல்பிறவி - நோற்றேன்" என்று யதாச்ருதத்திலே தாம் ஸாதநாநுஷ்டாநம் பண்ணினமை தோற்றுகையால், அநந்யனேயானால், "இடருற்றனன்" "ஆற்றேன் வந்தடைந்தேன்" என்கிற மேலிற்பதங்கள் சேராமையால், (பல்பிறவி) என்றவநந்தரம்,உண்டாம்படி என்று அத்யாஹரித்து அர்த்தமருளிச்செய்கிறார் (எனக்கித்யாதி.) "ஏற்றேன்" என்றதினர்த்தம் (யோக்யனானேனென்றது.) "ஏல்" என்று - தகுதியாய், அத்தாலே ஃலித்ததுஇவ்வர்த்தம் நான்யாத்ருச்சிகாதிகளைத்திரட்டிக்கொண்டதுநீரறிந்ததெத்தாலே யென்னும்சமவதிஹிப்ராயத்தை யருளிச்செய்கிறார் (நீரித்யாதி.)

மூ.—பற்றேலொன்றுமிலேன்; பாவமேசெய்து பாவியானேன்;
மற்றேலொன்றறியேன்;மாயனே!யெங்கள்மாதவனே!
கற்றேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனைவேங்கடவா!
அற்றேன்வந்தடைந்தே னடியேனையாட்கொண்டருளே. ௯.

ப-ரை.—மாயனே - ஆச்சர்ய குணசேஷ்டிதங்களை யுடையனாய், எங்கள் - ஆச்ரிதரான எங்களுடைய குற்றங்களைப் பொறுப்பிக்கும், மாதவனே - பெரிய பிராட்டியாரைத் திருமார்விலேயுடையனாய், கல் - மலைக்குகையிலே யிட்ட, தேன் - தேனானது, பாய்ந்து - மிக்கு, ஒழுகும் - வெள்ளமிடாநிற்பதாய், கமலம்-தாமரைகள் நிறைந்த, சுனை-அருவிகளையுடைய, வேங்கடவா - திருமலையில் நித் [ய யவாஸம் பண்ணுமவனே!, உன்னையொழியப் புறம்பொருவிஷயத்திலும், ஒன்றும் - ஏகதேசமும், பற்று - ஸங்கம், இலேன் - இல்லாதவனாய், பாவமேசெய்து - பாபத்தையேபண்ணி, அத்தாலே, பாவியானேன் - பாபிஷ்டனாய், மற்று - உபாயாந்தரத்தை, ஒன்றும் - ஏகதேசமும், அறியேன் - அறியாதவனான அடியேன்; அற்றேன்-தேவரீருக்கேஅற்றுத்தீர்ந்தவனாய்,வந்துஅடைந்தேன்—;அடியேனை [யரு ஆள்கொண்டருள்—. ... ... ... ... ... (௯)

(அடியேனை யித்யாதி) எனக்காற்றாமையுண்டானால் பிறப்பே யாற்றாமையுடைய வுன்னை, என் ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைத் தரவேணுமென்று ப்ரார்த்திக்க வேண்டுகிறதென்? நான் ஆற்றாமை யுடையேனா யிருந்தேன்; ஆற்றாமை பிறப்ப தெப்போ [உய தோ! என்று பார்த்துநிற்குமவனாயிருந்தாய் நீ. ... ... அ.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு.—(பற்றேலொன்றுமிலேன்) ஸஹவத் ஸம்பந்தத்தை யறுத்துக்கொண்டு கைகழியப்போன வஸ்துவுக்கு ஸஹவத் ப்ராப்திக் கிடாகச் சொல்லலாவ தொருஸுக்ருத மில்லை; அதில்லாமையாலே, பாபங்களையேபண்ணி, பின்னை நிரூபிக்குமிடத்தில் ஜ்ஞாநாநந்தாதிகளை யொழிய பாபங்களையிட்டு நிரூபிக்க வேண்டும்படியானேன். (மற்றேலொன்றறியேன்) ப்ராப்திக்கிடான வுபாய

நான்ப்ரார்த்திக்கைமிகை யென்னுமத்தை யறிந்தே, என்செல்லாமையாலே ப்ரார்த்திக்கிறே னென்னுமுட்கருத்தை யருளிச்செய்கிறார் (எனக்கித்யாதி.) விவரணம் (நானாற்றாமை யித்யாதி.) (இருந்தாய்நீ) என்ற வநந்தரம் [நய இங்ஙனே யிருக்கச்செய்தேயும் ப்ரார்த்திக்கிறே னென்கிறார் என்று பூரிப்பது. அ.

ஒன்பதாம்பாட்டு.—(பற்றேலித்யாதி.) யாத்ருச்சிக ஸுக்ருத மடியாக நாமே யுமக்கு ஸம்ஸாரத்தில்பொருந்தாமையைப் பிறப்பித்தோமாகில்இனிஅபேக்ஷித ஸித்திக்குடலான ஸாதநத்திலே நீரிழிகிறீர், அதுக்கு நம்மைச் சரணம்புகுருவானென்னென்ன;கார்யபலத்தாலேயொருநன்மைஸம்பாவிதமாகச் சொன்னே [நரு னித்தனைபோக்கி என்னைப்பார்த்தா லொரு நன்மையுண்டாக ஸம்பாவிதமோ என்று நின்றுகொண்டு, திருவயோத்யைக்குப் போகச்சொன்னபெருமாளை "ஸஹ ராதுஸ்ஸ்வரணேன ராஜம் நிபீஸ்ய ரவாநந்த:।ஸீதாமுவசாதியஸ்ராராவகுமஹா வ்ரதம்" என்று பிராட்டியை முன்னிட்டு சரணம்புகுந்த இளையபெருமாளைப்போலே, * அலர்மேல்மங்கை யுறை மார்வனைச் சரணம் புகுகிறேனென்று ஸங்கதி [சய கண்டுகொள்வது.

"பற்றேல்" என்றது-பற்றாகிலென்றாய், அதுக்குத்தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸஹவதித்யாதி.)

மூ.—கண்ணாயேழுலகுக்குயிராய வெங்கார்வண்ணனை
விண்ணோர்தாம் பரவும் பொழில் வேங்கடவேதியனை,
திண்ணார்மாடங்கள்சூழ் திருமங்கையர்கோன் கலியன்-
பண்ணார் பாடல் பத்தும் பயில்வார்க்கில்லை பாவங்களே. ௰.

---

ப-ரை.—ஏழுலகுக்கு - ஏழுலோகங்களுக்கு, கண்ணாய் - கண்போலேயும்,உயிராய - ப்ராணன்போலேயு மிருக்குமவனாய், எம் - ஆஸ்ரிதரான எங்களை அநுபவிப்பிக்கைக்கு,கார் - மேகம்போலே கறுத்த,வண்ணன்- திருநிறத்தையுடையனாய், ஸம்ஸாரிகளையன்றியே, விண்ணோர்தாம் - நித்யஸூரிகளுங்கூட, பரவும் - ஸ்துதிப்பதாய், பொழில் - சோலைகளையுடைய, வேங்கடம் - திருமலையை யிருப்பிட [௰ மாக வுடையனாய், வேதியனை - வேதத்தாலே சொல்லப்படு மவனான ஸர்வேச்வரன் விஷயமாக, திண் ஆர் - திண்மையை உடைத்தாய், மாடங்கள் சூழ் - மாடங்களாலே சூழப்பட்ட, திருமங்கையர் - திருமங்கையிலுள்ளார்க்கு, கோன் - ராஜாவான, கலியன் - ஆழ்வார், பண் ஆர் - ஒலியுடைத்தாம்படி அருளிச்செய்த, பத்துப்பாடலும் - பத்துப்பாட்டுக்களையும், பயில்வார்க்கு - அப்யஸிக்குமவர்களுக்கு, பாவங்கள் - எம்பெருமானைக் கிட்டுகைக்கு ப்ரதிபந்தகமாயுள்ள எல்லா பாபங்களும், இல்லை - "தீயினில் தூசாகும்" என்கிறபடியே விட்டோடிப்போம் என்று நிகமிக்கிறார். ... ... ... ... ... (௰)

---

விஷயஜ்ஞாநமில்லை; "அஹமஸ்ம்யபராதாநா மாலய:." (மாயனே) இங்ஙனேயிருந்துள்ளவர்களையும் ரக்ஷிக்கைக்கீடான ஆஸ்வர்யஶக்தியுக்தனே. (எங்கள்மாதவனே) இப்படியிருப்பாருடைய குற்றங்களையும் பொறுப்பித்து ரக்ஷிக்கைக்கடியான பிராட்டியை யுடையையாய் அத்தாலே ஸர்வாபாஸ்ரயபூதனானவனே.

(கல்தேனித்யாதி) முழஞ்சுகளிலே வைத்த தேன்களானவை நிறைந்து வழிந்து வெள்ளமிட்டு ஒழுகிவந்து சுனைகளிலே புகுர,[உ௫ அங்கே தாமரைகள் அலருமாய்த்து.(அற்றேன்)தேவர்திருவடிகளிலே வ்யவஸிதனானேன். (அடியேனை யாட்கொண்டருளே) எனக்குப் புறம்பு பற்றில்லை என்றேனே,எனக்குப்பற்றான நீ லக்ஷ்மீபதியாயிருந்தாயே, ஆனபின்பு, என்னுடைய ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைக் கொண்டருளவேணும். ... ... ... கூ

வ்யா.—பத்தாம்பாட்டு.—(கண்ணாயித்யாதி) ஸகலலோகங்களுக்கும் த்ருஷ்டிபூதனாய், ஸத்தாஹேதுவான ப்ராணனாய், அதுக்குமேலே என்னையநுபவிப்பிக்கைக்காக மேவம்போலேஸ்ரமஹரமான வடிவை யுடையனாய், ஏழுலகத்துள்ளாரோபாதி நித்யஸூரிகளுமொருமூலையிலே புகுந்தேத்துகிற திருமலையை வாஸஸ்தாந [௬௫ மாக வுடைய வேதைகஸமதிகம்யனை யாய்த்துக் கவிபாடிற்று.

---

உக்தார்த்தே ப்ரமாணம் (அஹமித்யாதி) "அஹமஸ்ம்யபராதாநா மாலயோகிஞ்சநோகதி: | த்வமேவோபாயபூதோமே பவேதி ப்ரார்த்தநாமதி: | ஸரணாகதிரித்யுக்தா ஸாதேவேஸ்மிந் ப்ரயுஜ்யதாம்."

பாட்டெல்லாம் கடாக்ஷித்துத் தாத்பர்யம் (எனக்கித்யாதி.) ... க.

பத்தாம்பாட்டு.—(கண்ணாயித்யாதி.) "ஏழுலகுக்கு - கண்ணாய்" என்றதின் தாத்பர்யம் (ஸகலேத்யாதி.)

(தின்னார்) "ஸர்வஜ்ஞகுஶலம்ஜீவேஹ" என்னும்படியாய்த்து. (பண்ணார் பாடல்) பண் மிகுந்திருக்குமாய்த்து ; இவற்றை அப்யஸிப்பார்க்கு ஒருபாபங்களும்வந்துகிட்டாது. ஸம்பவத்ப்ராப்திக்கு ப்ரதிபந்தகங்க ளடங்க வோடிப்போம். "பாவமேசெய்து பாவியானேன்" என்று [ரு இவரும் சொல்லி ஈஸ்வரனும் அத்தைப்பொறுத்தபின்பு இவருக்கு பாபமில்லையே. ஸ்ரீவிபீஷணாழ்வானை "வத்யதாம்" என்றபோது, அது க்கு விஷயமானார் கூடவந்த நால்வரும் பின்னை அவத்யரானார்கள் ; அப்படியே, இவருடைய பரிகரமாய்இவருடையப்ரபந்தத்தைஅபி கரிக்கவே, இவர்கள் பாபங்களைப் போக்குமாய்த்து. ஈஸ்வரனுக்குத்[ம் தம் வ்ஜீத்தஹானியைச் சொல்லிவைத்து, அநந்தரம் "அடைந்தே ன்" என்றதுக்குக் கருத்தென்னென்னில் ; அதுசொன்னால் அவ னிரக்கத்துக்கடியாமே, அவ்விரக்கம் ஸ்வரூபாநுரூபமான கைங்கர்ய த்துக்குடலாம். ... ... ... ... ... ௰

அடிவரவு.—தாய் மான் கொன்றேன் குலம் எப்பாவம் மண் தெரி நோற்று பற்றேல் கண்ணாய் கண்.

திருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

---

இப்போது, "தின்னார்மாடம்" என்கைக்குத் தாத்பர்யம் (ஸர்வமித் யாதி) "பங்கஜிந்யஸ்துஜஜடிலோ ஹரதஸ்த்வாம் ப்ரதீக்ஷதே | பாதுகேதே புரஸ்[உம் க்ஜீத்ய ஸர்வஜ்ஞ குஶலம்ஜீவேஹ." ஸ்ரீபரதாழ்வானூர்த்தி கண்டு பெருமா ளை மூந்தருளுவரென்றுநிர்ணயித்துஎல்லாரும்தேறிக்களித்திருந்தாப்போலே, ஆழ்வா ரார்த்திகண்டுதிருவேங்கடமுடையான்ப்ரஸந்நராகக்கடவரென்றுதேறிதிருமங்கை யிலுள்ளார் களித்தார்களென்று இவ்வாக்யத்துக்குத் தாத்பர்யம். "தின்னார்" என்றது - * திருமங்கைக்கு விசேஷணம். ஆழ்வார்தாம்"பாவியேன்" என்றன்றோ சொன்னார், அவர்ஸம்பந்தங்கொண்டு இவர்கள்பாபங்கள் போம்படி யென் னென்ன வருளிச்செய்கிறார் (பாவமேயித்யாதி.) இதுக்கு த்ருஷ்டாந்தம் (ஸ்ரீ விபீஷணேத்யாதி.)"வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவைஸ்ஸஹ | ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்ராதாஹ்யேஷ விபீஷண:." ... ... ... ௰.

ஜீயர்திருவடிகளேசரணம்.

முதற்பத்து - ஒன்பதாந்திருமொழி ஸம்பூர்ணம்.

ஆக, திருமொழி - ௯ - க்கு, பாட்டு - ௯௰.

வ்யா.—தம்முடைய வெறுமையைச்சொல்லி கைங்கர்ய லாபத்துக்காக சரணம்புக்கார்; பாஷ்யகாரர் சரணம்புக்க வநந்தரம், "ஸ்தூலஸூக்ஷ்மரூபையான ப்ரக்ருதியைக்கழித்துத் தரவேணும், அஹங்கார மமகாரங்களைக் கழித்துத்தரவேணும், விரோதியைப் போக்கித்தரவேணும், பரபக்த்யாதிகளைப்பிறப்பிக்கவேணும்" என்று அபேக்ஷித்தாப்போலே, விரோதிநிரஸநஶீலனாய்ஸர்வரக்ஷகனாய் ஆஶ்ரிதஸ்பர்ஶமுள்ள த்ரவ்யத்தாலல்லது தரியாதானாய் ஆஶ்ரிதஸம்ஶ்லேஷைகஸ்வபாவனாய் ஸர்வஸுலபனாயுள்ள ஸர்வேஶ்வரனை, "என்னுடைய விரோதியைப் போக்கித்தரவேணும், உன்னையல்லது செல்லாமையைப்பிறப்பிக்கவேணும்" என்றபேக்ஷிக்க; உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களையும் செய்கைக்கன்றோ நாமிங்கே வந்து நிற்கிறது என்று திருமலையில் நிலையைக்காட்டி, அநந்தரம் இவர்திருவுள்ளத்திலே வந்து இவர்க்குபரபக்த்யாதிகளைப் பிறப்பித்தானென்கிறது - இத்திருமொழியில். ப்ரபந்நனுக்குமுண்டு பக்தி, பக்திமானாகிற அதிகாரிக்குமுண்டு; "நமஸ்யந்தஶ்ச மாம் நித்யம்" என்று இரண்டிடத்திலும் சொல்லாநின்றதிறே. ... ... ... ... *

அ.—கண்ணார் கடல்சூழ் ப்ரவேசம்.—கீழ்த்திருமொழியில் - இஷ்டப்ராப்தியை அர்த்தித்தார்; இதில் - அநிஷ்டநிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதியருளிச்செய்கிறார் (தம்முடைய வித்யாதி.) (புக்கார்) என்றவநந்தரம், விரோதிநிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிறாரிதில் என்று சேஷம். இஷ்டப்ரார்த்தனையிலே தானே அநிஷ்டநிவ்ருத்தி ஸித்தியாதோ, தனித்தும் ப்ரார்த்திக்க வேணுமோவென்ன; தத்ருஷ்டாந்த கதநமுகேந விஸ்தரமாக ப்ரமேயத்தையு மருளிச்செய்கிறார் (பாஷ்யேத்யாதி.) "மதீயாநாதிகர்மப்ரவாஹப்ரவ்ருத்தாம்" என்றசூர்ணிகையினர்த்தம் (ஸ்தூலேத்யாதி.) இதுக்குக் கீழ் "அநாதிகால" இத்யாதி சூர்ணையில் ப்ரமேயம் (அஹங்காரேத்யாதி.) இதுக்கும் பூர்வமான "மநோவாக்காயை:" இத்யாதி சூர்ணிகாபலிதார்த்தம் (விரோதியைப்போக்கித்தரவேணுமென்றது.) இங்கே வ்யுத்க்ரம மாக வெடுத்ததுக்குக் கருத்து - ப்ரக்ருதி வஶ்யதையாலே அஹங்கார மமகாரங்களும் அவற்றாலே பகவதபசாராதிகளும் பிறக்குமென்கிற க்ரமந்தோற்றவேணுமென்கை. பரபக்த்யாதிகளைப்பிறப்பிக்கவேணுமென்றது- இவையில்லாமையும் கைங்கர்ய விரோதியாகையாலே; ஆகையிறே, ப்ரத்யுக்திரூபமான பகவதுக்த்யநுவாதத்திலே "பரபக்தி பரஜ்ஞாந பரமபக்தி விக்ந ப்ரதிஹதோபி" என்று விரோதித்வந்தோற்ற வருளிச்செய்தது. ஸர்வரக்ஷகனையென்றது-"நீரார்கடலும்"என்றபாட்டைக் கடாக்ஷித்து. "உண்டாயுறிமேல்" என்றபாட்டின் ப்ரமேயம் (ஆஶ்ரிதேத்யாதி.) "மானேய் மடநோக்கி" என்ற பாட்டைப்பற்ற (ஆஶ்ரிதஸம்ஶ்லேஷேத்யாதி) "கோணாகணையாய்" என்றத்தைப் பற்றவாதல். "எங்கள்நம்பீ" என்றத்தைப்பற்ற (ஸர்வஸுலபனையென்றது.) நிலையைக்காட்டி யென்றது - ஸ்ரீஹஸ்தமுத்ரையாலே காட்டினமையைப்பற்ற. "என்னெஞ்சிலுளான்" என்றத்தைப்பற்ற (திருவுள்ளத்திலேவந்தென்றது.) "ஆயனடியல்லது மற்றறியேனே" என்கையைத் திருவுள்ளம்பற்றி (பரபக்த்யாதிகளைப்பிறப்பித்தானென்றது.) உபாஸகனுக்கன்றோ பக்தி, ப்ரபந்நனுக்கும் வேணுமோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ரபந்நனுக்கு மித்யாதி.) "ஸததம்கீர்த்தயந்தோமாம் யதந்தஶ்ச த்ருடவ்ரதா: | நமஸ்யந்தஶ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே." "நமஸ்யந்தஶ்ச" என்றது - ப்ரபத்திபரமாகவுஞ் சொல்லுகிறது. ... *

மூ.—கண்ணார்கடல்சூழிலங்கைக்கிறைவன்றன்
திண்ணாகம்பிளக்கச் சரஞ்செலவுய்த்தாய்!
விண்ணோர்தொழும் வேங்கடமாமலைமேய
அண்ணா! அடியேனிடரைக்களையாயே. ... ... க.

---

ப-ரை.—கண்ஆர் - இடமுடைத்தான, கடல்சூழ் - ஸமுத்ரத்தாலே சூழப்பட்ட, இலங்கைக்கு - லங்கைக்கு, இறைவன்றன் - தலைவனான ராவணனுடைய, திண் - வரத்தாலே பூண்கட்டின, ஆகம் - சரீரமானது, பிளக்க - பிளக்கும்படியாக, சரம் - அம்புகள், செல - செல்லும்படி, உய்த்தாய் - நடத்ினவனாய், விண்ணோர் - ப்ரஹ்மாதி தேவதைகள், தொழும் - ஆஶ்ரயிக்கும்படி, மா - பெருமைபொருந்திய, வேங்கடம் - திருமலையிலே, மேய - நித்யவாஸம் பண்ணுமவனாய், அண்ணா - ஸர்வவித பந்துவுமானவனே !, அடியேன் - சேஷபூதனான என்னுடைய, இடரை - க்லேசத்தை, களையாய் - போக்கி யருளவேணுமென்று சரணம் புகுகிறார். ... (க)

---

வ்யா.—முதற்பாட்டு.—(கண்ணார்கடல்) கண்ணென்று - இடம். இடம்மிக்கிருந்துள்ளகடல். பூமியில் வர்த்திக்கும் பதார்த்தங்களிலு மேற்றமுண்டிறே கடலில் வர்த்திக்குமவை; அவற்றுக் கெல்லாம் வேண்டுமிடம் போந்திருக்கும். அன்றிகே, வைத்த கண் வாங்க வொண்ணாதபடி தர்ஶநீயமான கடலென்னவுமாம். அக்கடலை அகழாக வுடைத்தாகையாலே அரணுடைத்தா யிருக்கிற லங்கைக்கு நிர்வாஹகனாய், அத்தாலே அபிமாநித்திருக்கிற ராவணனுடைய. (திண்ணாகமித்யாதி) ப்ரஹ்மாஸ்த்ராதிகள் வாய்மடியும்படி தேவதைகள் வரத்தாலே திண்ணிதான உடலானது பிளக்கும்படியாக அம்புசெல்லும்படியாக நடத்தினாய். (விண்ணோரித்யாதி) ராவணனாலே குடியிருப்பிழந்த தேவதைகள் இப்போது வந்தாஶ்ரயிப்பர்களாய்த்து. ப்ரஹ்மாதிகளாஶ்ரயிக்கும்ஸ்வபாவனாய்திருமலையைவாஸஸ்தாநமாகக்கொண்டு ஸந்நிதிபண்ணினநிருபாதிகபந்துவே. (அடியேனித்யாதி) இங்குத்தை யிருப்பு இடர்என்றுஎன்னெஞ்சிற் பட்டபின்பு என் கைங்கர்யவிரோதியைப் போக்கியருளவேணும். ... க.

அ.—இரண்டாம்பாட்டு.—ஆக, கீழ்ப்பாட்டிலும் இப்பாட்டிலும்—அவனுடைய விரோதிநிரஸநஶீலதையைச் சொல்லி, என் து:க்கத்தைப் போக்கித் தரவேணு மென்கிறார்.

---

முதற்பாட்டு.—( கண்ணாரித்யாதி. ) அபார பாபஸாகரமத்யே * புண்ணாராக்கையாகிற லங்கையிலே அநர்யார்ஹனாவடியேன் அகப்பட்டு, "நமேயம்" என்கிற ஸ்வாதந்த்ர்யாபிமாந விஶிஷ்டமான மநஸ்ஸாலே அபஹ்ருதனாய்க்கிடக்கிற வடியேனிடரைக் களையவேணுமென்கிறாரென்று அவதாரிகை கண்டுகொள்வது. "இந்த்ரியாநாம் கோரம் யோமநோரஜநீசரம் | விவேகசரஜாலேந ஶமம்நயதி யோகிநாம்" என்னக்கடவதிறே.

"தன்" என்றதினர்த்தம் (அபிமாநித்திருக்கிற வென்றது.) "தன்" என்றத்தாலே - அவன்மதிப்புத் தோற்றுகிறதிறே. ஸமபிவ்யாஹார தாத்பர்யம் (ராவணனாலே யித்யாதி.) ... ... ... ... ... ... ... க

இரண்டாம்பாட்டு.—( இலங்கையித்யாதி. ) அநாத்யவித்யாகர்ம வாஸநா நிவ்ருத்திகளையும் பண்ணித்தரவேணு மென்கிறாரென்று விவக்ஷித்து, ஆகஇரண்டு பாட்டுக்கும் ஸமுதாயேந க்ரோடீகரித்து அவதாரிகை யிடுகிறார் (ஆகவித்யாதி.)

மூ.—இலங்கைப்பதிக் கன்றிறையாயவரக்கர்
குலங்கெட்டவர்மாளக் கொடிப்புள் திரித்தாய்!
விலங்கற்குடுமித்திருவேங்கடம் மேய
அலங்கல்துளபமுடியா யருளாயே. ... ... உ

ப-ரை.—அன்று - முற்காலத்திலே, இலங்கைப்பதிக்கு - லங்காநகரத்துக்கு, இறையாய - ராஜாக்களாயிருந்து அரசாண்டவர்களாய், அரக்கர்குலம்-ராக்ஷஸஜாதியராய், அவர் - "நம்மைவெல்லவல்லாரில்லை" என்று செருக்கித்திரிந்த மாலிமுதலியராக்ஷஸர்கள், கெட்டு - தங்கள் நிலைமைகெட்டு, மாள - பாதாளலோகத்திற்புக்கு ஒளிக்கும்படியாக,புள்கொடி - கருடத்வஜத்தை, திரித்தாய் - சுழற்றிக்கொடு திரிந்தவனாய், விலங்கல் - சந்த்ரஸூர்யர்கள், விலகிப்போக வேண்டும்படி வுயர்ந்திருப்பதான, குடுமி - கொடுமுடியை யுடைத்தாய், திருவேங்கடம் - திருவேங்கட மென்னும் பேரையுடைய திருமலையிலே, மேய - நித்யவாஸம் பண்ணுமவனாய், துளபம் - திருத்துழாயாலாகிய, அலங்கல் - மாலையாலே அலங்கரிக்கப்பட்ட, முடியாய்-திருவபிஷேகத்தை யுடையவனே!, அருளாய்-அடியேன்பக்கல் க்ருபைசெய்து ரக்ஷித்தருளவேணுமென்கிறார். ... ... (உ)

வ்யா.—(இலங்கைப்பதிக்கித்யாதி) ராவணனுக்கு முன்பு குடியிருந்துபோந்த மாலி ப்ரப்ருதிகளை நிரஸித்தபடியைச் சொல்லுகிறது. புற்றானது என்றும் துஷ்டஸர்ப்பங்கள் மாறாதே போருமாப்போலே, என்றுமொக்க ராக்ஷஸருக்குக் குடியிருப்பாயே யாய்த்துப் போருவது. (குலங்கெட் டவர் மாள) பாதாளத்திலே புக்கொளிப்பாரும் பட்டுப்போவாருமாம்படி த்வஜமான பெரியதிருவடியைச் சுழற்றிக்கொடுதிரிந்தவனே. "கீர்த்திஸூதாம்பதாகாம் யோலோகே ப்ராமயதி ப்ரபு:."

(விலங்கலித்யாதி) திருவேங்கடமென்றுதிருமலைக்குப்பேருண்டாகையாலே, தன்மேலே ஸஞ்சரிக்கிற சந்த்ராதித்யர்களுக்கு நேர்கொடுநேர் போகவொண்ணாதே விலங்கிப்போக வேண்டும்படி ஓங்கின ஶிவரத்தையுடைய. (அலங்கலித்யாதி) ரக்ஷணத்துக்கு மாலையிட்டு முடிசூடி யிருக்கிற நீ இனி என்விரோதியைப்போக்குகை யென்றொன்றில்லை, என்பக்கலிலே க்ருபையைப் பண்ணியருளவேணும். ... ... ... ... ... உ.

இலங்கையாகிற பதிக்கு - ஸ்தாநத்துக்கு என்றும் நியமேந "இறையாயவரக்கர்" என்கைக்கு ராக்ஷஸரே ராஜாக்களாகவேணுமோ வென்ன வருளிச்செய்கிறார் (புற்றானதித்யாதி.) இத்தால் - ப்ராக்ருதமான சரீரமானால் விரோதிவர்க்கம் குறைவற்றிருக்கு மென்றதாய்த்து. "கெட்டு" என்றதின் வாஸனை (ஒளிப்பாருமென்றது.) சுழற்றிக்கொடு - அதிலே யேறிச்சுழற்றிக்கொண்டு.

"விலங்கல்" என்று - பர்வதத்துக்கும் பேராகையாலே, "திருவேங்கடம்" என்றத்தோடு பௌநருக்த்யம் வருமென்று, விலங்குதலை யிங்குச்சொல்லுகிற தென்கிறார் (திருவேங்கட மித்யாதி.) விரோதியைப்போக்குகை யென்றொன்றில்லை யென்றது - ஸவாஹநனாய் வந்து நிரஸிக்கும்படி எதிரம்புகோத்த விரோதி யுண்டாய்ப் போக்கவேண்டுவதில்லை யென்கை. அருளவே உருமாயுமவைகிடீர் என் விரோதிகளென்று திருவுள்ளம். ... ... உ.

மூ.—நீரார் கடலும் நிலனும்முழுதுண்டு
ஏராலமிளந்தளிர்மேல்துயிலெந்தாய்!
சீரார் திருவேங்கடமாமலை மேய
ஆராவமுதே! அடியேற்கருளாயே. ... ... ... ௩.

ப-ரை.—நீர்ஆர் - ஜலம் நிரம்பியிருக்கிற, கடலும் - ஸமுத்ரத்தையும், நிலனும் - பூமியையும், முழுது - மற்றுமுள்ள எல்லாப்பொருள்களையும், உண்டு - அமுதுசெய்து, ஒன்றும் செய்யாதாரைப்போலே, ஏர் - அழகியதாய், இளம் - மிகவும்இளையதான, ஆலந்தளிர்மேல் - ஆலந்தளிரிலே, துயில் - கண்வளர்ந்தருளினவனாய், அத்தாலே, எந்தாய் - என்போல்வார்க்கு ரக்ஷகனாயிருக்குமவனாய், சீர்ஆர் - ஐச்வர்யம் மிக்கிருப்பதாய், மா - பெருமைபொருந்திய, திருவேங்கடமலை - திருமலையிலே,மேய -நித்யவாஸம்பண்ணுமவனாய்,காலமுள்ளதனையும் அநுபவித்தாலும், ஆரா-த்ருப்திபிறவாத, அமுதே-அம்ருதம்போலே போக்யனானவனே!, அடியேற்கு - சேஷபூதனான அடியேனை, அருளாய் - இப்போக்யதையை அநுபவிப்பிக்கவேணுமென்கிறார். ... ... ... (௩)

அ.—மூன்றாம்பாட்டு.—(நீராரித்யாதி) ஸர்வரக்ஷகனாய் பூமிக்காக நிர்வாஹகனாயிருந்தபடியைச் சொல்லுகிறது.

வ்யா.—(நீராரித்யாதி) ஜலராசியையுடைய கடலும், அதுக்கு உட்பட்டபூமியும், இத்தையடைய வயிற்றிலே வைத்து. (ஏரித்யாதி) கண்வளர்ந்தருளுகைக்கீடான அழகை யுடைய ஆலின் [உம்முகிழ்விரிந்தவளவான தளிரிலே கண்வளர்ந்து,அந்தஅவடிதவடநாஸாமர்த்யத்தைக் காட்டி யென்னை அநந்யார்ஹனாக்கினவனே. (சீராரித்யாதி) பரமபதத்திற்காட்டிலும் ஐச்வர்யம் மிக்குப் போலே காணும் திருமலையிருப்பது. (ஆராவமுதே) இவ்வம்ருதம் ஸ்வர்மத்திலல்லபோலேகாணு மிருப்பது.(அடியேற்கு) இதுவேஹோம்[உருயமென்றிருக்கிற வென்னை இத்தையநுபவிப்பித்தருளவேணும். ௩.

வ்யா.—நாலாம்பாட்டு.—(உண்டாயித்யாதி) ஆஸ்ரித ஸ்பர்ஸமுள்ள த்ரவ்யத்தா லல்லது யரியாதானாய், அவர்களுக்குத்தன்னைப் பேணாதே கார்யம் செய்யும்படி சொல்லுகிறது. உறிகளிலே சேமித்து வைத்த நறுநெய்யை அம்ருதமாக ஸ்வீகரித்தாய்.

---

மூன்றாம்பாட்டு.—(நீரார்கடலுமித்யாதி.) ஒருகடலுக்குட்பட்ட லங்கையில் விரோதிகளை நிரஸநம்பண்ணின வளவேயோ, கடல்களையும் பூமியையும் ரக்ஷித்திலையோ வென்கிறாரென்று ஸங்கதியருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதி.)

"ஆரா" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இவ்வம்ருதமித்யாதி.) "திருவேங்கடம் மேய" என்ற ஸமஹிவ்யாஹார ஸித்யமாகவுமாம். ௩.

நாலாம்பாட்டு.—(உண்டாயித்யாதி.) மண்ணையுண்ட பிள்ளைக்கும் வெண்ணெயுண்டபிள்ளைக்கும் மண்ணையளந்த மாணிக்குமுள்ள ஸாயுர்ம்யத்தாலே அத்தை அநுஸவிக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

அவர்களுக்கு - இந்த்ராதிகளுக்கு. * வெண்ணெயுண்ட வாயனுக்குறுப்பாகவாதல், மண்ணைக்கொண்ட காலனுக்குறுப்பாகவாதல்.

மூ.—உண்டாயுறிமேல் நறுநெய்யமுதாக;
கொண்டாய் குறளாய் நிலமீரடியாலே;
விண்டோய்சிகரத்திருவேங்கடம் மேய
அண்டா! அடியேனுக் கருள்புரியாயே. ... ... ௪.

தே...... 49, பெரி... ...மட...

ப-ரை.—ஆஶ்ரிதஸுலபனான க்ருஷ்ணனாய் திருவவதரித்து, உறிமேல் - உறிகளிலே சேமித்து வைத்த, நறு - நல்ல, நெய் - நெய்யை, அமுதாக - அம்ருதமாகக்கொண்டு, உண்டாய் - அமுதுசெய்தருளினவனாய், ஆஶ்ரிதரான இந்த்ராதி தேவர்கள் கார்யம் செய்கைக்காக, குறளாய் - வாமநாவதாரம் செய்தருளி, மஹாபலியிடத்தில் நீரேற்றுப்பெற்ற, நிலம் - பூமியை, ஈரடியாலே - இரண்டடியாலே, கொண்டாய் - அளந்து கொண்டவனாய், விண்தோய் - பரமபதத்தளவும் செல்லவோங்கின, சிகரம் - கொடுமுடியையுடைய, திருவேங்கடம் - திருமலையிலே, மேய - பொருந்தி யிருக்குமவனாய், அண்டா - அண்டாந்தர்வர்த்திகளான தேவர்களுக்கு நிர்வாஹகனானவனே, அடியேனுக்கு - ஶேஷபூதனான வெனக்கு, அருள்புரியாய் - உன்கைங்கர்யத்தை க்ருபைசெய்தருளவேணுமென்கிறார். (௪)

(கொண்டாயித்யாதி) ஸர்வாதிகனான நீ வாமநவேஷத்தை பரிக்ரஹித்து, பரப்புடைத்தான பூமியை யிரண்டடியாலேகொண்டாய்.(விண்டோயித்யாதி)பரமபதத்தளவும்செல்லவோங்கினஶிகரத்தையுடைய திருமலையிலே பொருந்தி நிற்கிறவனே.(அண்டா)இடையனே. அன்றிக்கே, அண்டாந்தர்வர்த்திகளுக்கு நிர்வாஹகனானவனே. (அடியேனுக்கித்யாதி) யஶோதைப்பிராட்டியும் இந்த்ரனும் பெற்ற பேற்றினையல்லாத என்னுடைய கைங்கர்யத்தைத் தந்தருளவேணும். ௪.

அ.—அஞ்சாம்பாட்டு.—(தூணாயித்யாதி) இனி இரண்டுபாட்டாலே - தமக்கு உபகரிக்க வொருப்பட்டபடி சொல்லுகிறாராய், அதுக்குறுப்பாகத் திருமலையிலே வந்து நின்றபடியைச் சொல்லி, அநந்தரம் திருவுள்ளத்திற்புகுந்தபடியைச் சொல்லுகிறார்.

வ்யா.—(தூணாய்) முன்பே நரஸிம்ஹத்தைவைத்துப் பண்ணிற்றென்ன வொண்ணாதாய்த்து. "அளந்திட்ட தூணை" என்றாரிறே.

"அண்டா"என்றதுக்கர்த்தமருளிச்செய்கிறார்(இடையனேயித்யாதி·)அருளாயேயென்னாதே,"அருள்புரியாயே" என்றத்தாலே-ஔதவ்யத்தின்பெருமைதோற்றிற்றென்று தாத்பர்யமருளிச்செய்கிறார்(யஶோதையித்யாதி.) (கைங்கர்யத்தை) என்றவநந்தரம்,விரோதியைப்போக்கி என்று ஶேஷம். ... ... ... ௪.

அஞ்சாம்பாட்டு.—(தூணாயித்யாதி.)வாமநாவதாரத்தைக் காட்டிலும் அத்புதமானவேஷங்கொண்ட முன்புத்தை நரஸிம்ஹத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. (இனி இரண்டுபாட்டாலே) என்ற வநந்தரம், திருவநந்தாழ்வானோபாதி என்னை யடிமைகொண்டு கைங்கர்யங் கொண்டருளவேணுமென்று ப்ரார்த்திக்க அவன் என்று இவ்வளவும் கூட்டிக்கொள்வது. இங்ஙனம் கூட்டாவிடில், இப்பாட்டிலும் நெஞ்சில் புகுந்தபடி சொல்லாமையால் சேராதிறே. அதுக்கு - உபகரிக்கைக்கு.

"தூணாயதனூடு"என்றது- தூணேயாயிருக்கிறவதிலே யென்றர்த்தமாய், இப்படி விஶேஷித்ததுக்குத் தாத்பர்யம் ( முன்பேயித்யாதி. ) தூணைமையில் புரையில்லை யென்கைக்கு ஜ்ஞாபகமென்னென்ன வருளிச்செய்கிறார் (அளந்திட்டவித்யாதி.)

மூ.—தூணாயதனூடரியாய் வந்துதோன்றி,
பேணாவவுணனுடலம் பிளந்திட்டாய்!
சேணார்திருவேங்கட மாமலைமேய
கோணாகணையாய்! குறிக்கொள்ளெனை நீயே. ... ... ௫

மூ.—மன்னா!இம்மனிசப் பிறவியைநீக்கித்
தன்னாக்கித் தன்னின்னருள் செய்யுந்தலைவன்,
மின்னார் முகில்சேர் திருவேங்கடம்மேய
என்னானையென்னப்ப ¶னென்னெஞ்சிலுளானே. ௬.

ப-ரை.—"முன்பே நரஸிம்ஹத்தை வைத்து நட்டதூண்" என்னவொண்ணாத படி தானே தனக்குப் பொருத்தம்பார்த்து நட்ட, தூணாய் - வெறுந்தூணேயா யிருக்கிற, அதனூடு - அதினுள்ளே, அரியாய் - நரஸிம்ஹமாய், வந்து தோன்றி - வந்தவதரித்து, "நமக்குமேலே ஸர்வேச்வர னொருவனுளன்" என்று, பேணா - மதியாத, அவுணன் - ஹிரண்யனுடைய, உடலம் - மார்பை, பிளந்திட்டாய் - இரு பிளவாகக் கிழித்துப்பொகட்டவனாய், சேண்ஆர் - மிக்கவுயர்த்தியை யுடைத்தாய், மா - பெருமை மிக்கிருந்துள்ள, திருவேங்கடமலை - திருமலையிலே, மேய - பொருந்தி வர்த்திப்பவனாய், கோள் - மிடுக்கையுடைய, நாகம் - திருவநந்தாழ்வானை, அணையாய் - திருப்பள்ளியாக வுடையவனே!, "சென்றால்குடையாம்" என்கிற படியே ஸகலவிதபரிசர்யைகளும்பண்ணும்படி, எனை - அடியேனை, நீ - தேவரீர், குறிக்கொள் - திருவுள்ளம்பற்றி யருளவேணும். ... ... (௫)

ப-ரை.—"மின்னில் நிலையில" என்கிறபடியே, மன்னா - நிலையில்லாத, இ - இந்த,மனிசப்பிறவியை - மநுஷ்யஜந்மத்தினின்றும்,நீக்கி-விடுவித்து,தன்-தனக்கு, ஆக்கி - ஆளாக்கிக்கொண்டு, தன் - தன்னுடைய, இன் அருள் - பரமக்ருபையை, செய்யும் - பண்ணாநிற்கும், தலைவன் - தலைமையையுடையனாய், மின் - மின்னலாலே, ஆர் - நிறைந்திருந்துள்ள, முகில் - மேகங்களானவை, சேர் - திரண்டு வர்த்திக்கிற, திருவேங்கடம் - திருமலையிலே, மேய - பொருந்தி யிருப்பவனாய், என் - என்னை அநுபவிப்பிக்கைக்கு, ஆனை - ஆனைபோலே அழகிய வடிவை யுடையனாய், என் - எனக்கு, அப்பன் - மஹோபகாரகனானவன், என் - என்னுடைய, நெஞ்சிலே - மநஸ்ஸிலேயே, உளான் - நித்யவாஸம் பண்ணாநின்றானென்கிறார்.(௬)

(அதனூடு) அதினுள்ளே, நரஸிம்ஹமாய்வந்து தோற்றி. (பேணாவவுணன்) ஸர்வேச்வரனைப் பேணுதொழிகையாவது – ஆச்ரிதரை நலிகையாய்த்து; "மமப்ராணாஹி" என்றானே. ஓக்கம் மிக்கிருக்கிற திருமலையிலே நிற்கிற. (கோளித்யாதி) மிடுக்கையுடைய திருவநந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவனே; "ப்ரக்ஷீஷ்ட விஜ்ஞாநபலைகதாமநி." (குறிக்கொளித்யாதி) ப்ராப்தியொத்திருந்தபின்பு அவன்பெற்ற பேறு நானும் பெறுவேனாகத் திருவுள்ளம் பற்றவேணும். ... ... ... ... ... ௫.

அ.—ஆறாம்பாட்டு.—உம்முடையபக்கல் விலக்காமைக்கு அவஸரம் பார்த்திருக்கிற நாம் உம்மை இரக்கவிட்டு வைப்புதோமோ என்று இசைவு பெற்றவாறே, நெஞ்சிலேவந்து புகுந்தான்.

அவன் பெற்றபேறு - திருவநந்தாழ்வான் பெற்றபேறு. ... ... ௫.

ஆறாம்பாட்டு.—(மன்னாவித்யாதி.) கீழ்ப்பாட்டில் "குறிக்கொள்" என்றவர், இப்பாட்டில் "என்னெஞ்சிலுளானே" என்று தம்மிலே அநுஸந்திக்கைக்கு ஸங்கதி யருளிச்செய்கிறார் (உம்முடையவித்யாதி.)

¶ "என்னெஞ்சினுளானே" என்றும்பாடம்காண்கிறது.

மூ.—மானேய்மடநோக்கிதிறத் தெதிர்வந்த
ஆனேழ்விடைசெற்ற வணிவரைத்தோளா!
தேனே!திருவேங்கடமாமலை மேய
கோனே!என்மனம் குடிகொண்டிருந்தாயே. ஏ.

ப-ரை.—மான் - மான்விழியை, ஏய்-ஒத்திருப்பதாய், மடம் - அழகிதாயிருந்துள்ள, நோக்கிதிறத்து - திருக்கண்களையுடையளான நப்பின்னைப்பிராட்டி விஷயமாக, எதிர்வந்த - பகைத்துவந்த, ஆன் - பசுக்களுக்குள்ளே இச்சைப்படி திரியவிட்ட, ஏழ்விடை - ஏழு ரிஷபங்களையும், செற்ற - கொன்று, அத்தாலே, அணி - அழகு மிக்கிருப்பதாய், வரை - மலைபோலே திண்ணிதான, தோளா - திருத்தோள்களை யுடையனாய், தேனே - எனக்குத் தேன்போலே யினியனாய், மா- பெருமைபொருந்திய, திருவேங்கடமலை - திருமலையிலே, மேய - பொருந்தி வர்த்திக்கிற, கோனே - என்னை யடிமைகொண்டவனே, என் - அடியேனுடைய, மனம் - மனஸ்ஸை, குடிகொண்டு - வாஸஸ்தானமாகக்கொண்டு, இருந்தாய் - நிலைபெற்றிரா நின்றாயென்று உகந்தருளிச்செய்கிறார். ... ... ... (ஏ)

வ்யா.—(மன்னுவித்யாதி) அஸ்திரமான இம்மநுஷ்யஜந்மத்தில் நின்று மென்னை நீக்கி. (தன்னுக்கி)(க)தன்னோடொக்கப் பண்ணியென்னுதல்;(உ)தனக்காக்கியென்னுதல்."நிரஞ்ஜந: பரமம்ஸாம்யமுபைதி." (தன்னின்னருளித்யாதி) இவ்வளவும்செய்து பின்னையும் ஒன்றும் செய்யாதானாய் தன் பேறான வருளைப் பண்ணும் தலைமையை யுடையவன். (மின்னுரித்யாதி) மேகமும் மின்னும் சேர்ந்தவிது, பிராட்டியும் அவனும் சேர்ந்தாப்போலேயாய்த் திருப்பது. (என்னுனை) ஸதாதர்சநீயனா யிருக்குமவன். (என்னப்பன்) எனக்கு மஹோபகாரகனானவன். உமக்குப் பண்ணின வுபகாரந்தா னென்னென்ன (என்னெஞ்சிலுளானே) என்னெஞ்சிலேவந்து புகுந்து போகமாட்டுகிறிலன். ... ... ... சு.

வ்யா.—ஏழாம்பாட்டு.—(மானேயித்யாதி)மானேய்ந்த நோக்கையுடையளா யிருக்கிற நப்பின்னைப்பிராட்டிக்கு ஸ்பர்ஹாவிஷயமாயிருக்கைக்காக. மானினுடைய நோக்குப்போலே முக்யமான நோக்கையுடையளாய், அவ்வளவன்றிக்கே முக்தையாயிருக்குமாய்த்து. (எதிர்வந்த) பகைத்துவந்த ருஷபங்களேழையு மழியச்செய்த.

"தன்னோடொக்கப்பண்ணி"என்றதுக்கு ப்ரமாணம் (நிரஞ்ஜநஇத்யாதி.)*ஸ்ரீவேங்கடாத்ரி ஶிவராலய காளமேகத்தோடு ஸாம்யந்தோற்ற "மின்னுர்" இத்யாதியை யருளிச்செய்தா ரென்கிறார் (மேகமுமித்யாதி.) "உளானே" என்கிற ஏவகாரலப்யார்த்தம் (போகமாட்டுகிறிலனென்றது.) ... ... சு.

ஏழாம்பாட்டு.—(மானேயித்யாதி.) நெஞ்சிலே புகுந்து போக மாட்டாதவனவேயோ,தன் வீர்யஶுல்கத்தாலே லப்யையான நப்பின்னையும் தானுமாகக் குடியாயிருந்தா னென்கிறாரென்று அவதாரிகை கண்டுகொள்வது.

"மானேய் - நோக்கிதிறத்து" என்றதுக்குத் தாத்பர்யம் (மானேய்ந்தவித்யாதி)அவள் தன்வீரவாசியைக்கண்டு ஆசைப்படும்படியென்றுகருத்து. நோக்கிலே மடப்பமுந்தோற்று மென்று விவக்ஷித்து,வாக்யஶேஷார்த்தம் (மானினுடைய வித்யாதி.) முக்தையாயிருக்குமென்றது - மௌக்த்யத்தை தோற்றவிருக்கு மென்றபடி.

(க) ஒக்கப்பண்ணுகை - ஸாம்யாபத்தியைக் கொடுக்கை. (உ) தனக்காக்குகை - தனக்குஶேஷபூதனாக்குகை.

௮.—சேயனணிய னெனசிந்தையுள்நின்ற
மாயன்,மணிவாளொளிவெண்டரளங்கள்
வேய்விண்டுதிர் வேங்கடமாமலைமேய
ஆயனடியல்லது மற்றறியேனே. ... ... ... ௮.

ப-ரை.—தன்னைத்தஞ்சமாகப் பற்றாதார்க்கு, சேயன் - மிகவும் தூரஸ்தனாய், தன்னைப்பற்றினார்க்கு, அணியன் - மிகவும் ஆஸந்நனாய், என - என்னுடைய, சிந்தையுள் - மநஸ்ஸிலே வந்து புகுந்து, நின்ற - நித்யவாஸம் பண்ணுமவனாய், மாயன் - யாவருங்கேட்டு ஆஶ்சர்யப்படத்தக்க செய்கைகளை யுடையனாய், வேய் - மூங்கில்களானவை, விண்டு-பிளவுபட்டு,உதிர்-சிந்திக்கிடப்பதாய்,ஒளி- [மு ப்ரகாஶத்தையும், வெண் - வெண்மைநிறத்தையு முடைத்தான, தரளங்கள் - முத் துக்களையும், வாள் - ஒளியையுடைத்தான, மணி-ரத்நங்களையுமுடைத்தாய், மா - பெருமை மிக்கிருந்துள்ள,வேங்கடமலை - திருமலையிலே, மேய - பொருந்தியிருப்ப வனாய், ஆயன் - இடையனான க்ர்ஷ்ணனுடைய, அடி யல்லது - திருவடிகளில் கைங்கர்யமொழிய, மற்று-பரமபதப்ராப்திமுதலியவற்றை, அறியேன்-ஒரு[மு பொருளாக மதித்தறியே னென்கிறார். ... ... ... ... (௮)

(அணிவரைத்தோளா)நப்பின்னைப்பிராட்டிக்கு ஸ்பர்ஶஹா விஷயமாய், ரிஷபங்களுக்கு இளகாததிண்ணிதான தோளையுடையவனே. (தேனே) நப்பின்னைப்பிராட்டிக்காகத் தன்னைப்பேணாதே ரிஷபங்களின் மேலே விழுந்து பண்ணின வ்யாபாரம்,அநுஸந்திக்கிறதம் நெஞ்சுக்குஇனிதா யிருக்கிறபடி. (திருவித்யாதி) அத்தேன் குடிகொண்டவிடமாய்த் து. (கோனே) என்னை அடிமைகொள்ளுகைக்காகத் திருமலையிலே வந்து ஸந்நிஹிதனாய், உன்னுடைய நிரதிஶய ஸௌம்யதையைக் காட்டி என்னை அநந்யார்ஹ மாக்கினவனே. (என்னித்யாதி) ரிஷபங்களையழியச்செய்துநப்பின்னைப்பிராட்டியை லபித்து,அவளோ டேகூட, "அரவத்தமளியினோடும்" என்கிறபடியே வந்து, இனி ஒருக்காலும் பேரான் என்று தோற்றும்படி யிருந்தானாய்த்து. எ.

அ.—எட்டாம்பாட்டு.—ரிஷபங்களை யழியச்செய்து நப்பின்னைப் பிராட்டியைக் கைப்பிடித்துக்கொண்டு என்னுடைய ஹ்ருதயத்திலே வந்து புகுந்தபின்பு, இனிஇம்மாஹாத்ம்யத்துக்கு எடுத்துக்கைநீட்டு கையொழிய வேறெனக் கொன்றறியே னென்கிறார்.

"அணி, வரை" என்கிற விஶேஷண த்வயத்துக்கும் ப்ரயோஜநமருளிச் செய்கிறார் (நப்பின்னையித்யாதி.) இத்தால் - அவள் கண்ணாலேகாண இவன் தோ ளாலேதழுவினானென்றும், இவன் கண்ணழகுக்குத் தோற்றுத்தழுவ அவள் தோள்மிடுக்குக்குத் தோற்றாளென்றும் திருவுள்ளமென்று ஹ்ருதயம். "ஏழ் - [கூடு ஆன் - விடை -" ஆன்களுக்குள்ளே யதேச்சாவிஹாரம் பண்ணவிட்ட விடை களையென்று ஸம்ப்ரதாயம் கண்டுகொள்வது. அரவத்தமளி-ஶேஷனாகிறபடுக்கை.எ.

எட்டாம்பாட்டு.—(சேயனித்யாதி.) "ஆயனடியல்லது மற்றறியேனே" என் றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை (ரிஷபங்களையித்யாதி.) மாஹாத்ம்யத்துக்கு - இவ்விருவருடையகார்யத்துக்கு. எடுத்துக்கைநீட்டுகை-பரிசாரகர்த்யம். வே [சும றெனக் கொன்றறியே னென்றது - * மன்னுவிம்மனிசப்பிறவியை நீங்கப்பண்ணு வித்துக்கொண்டுஅவன்வர்த்திக்கிற தேஶவிஶேஷப்ராப்தி முதலானவை யெனக்கு புருஷார்த்தமாகத் தோற்றவில்லை யிப்போதென்றபடி.

வ்யா.—(சேயனணியன்) அநாஸ்ரிதர்க்கு அத்யந்த தூரஸ்தனாய், ஆஸ்ரிதர்க்கு அத்யந்தம் ஆஸந்நனாயிருக்குமிறே; இரண்டும், பாண்டவர்கள் விஷயத்திலும் துர்யோதநாதிகள் விஷயத்திலும் காணலாமிறே. உகப்பார்க்கு அவன்கையாளாயிருக்குமென்னுமிடம் நீரெங்கேகண்டு சொல்லுகிறீரென்ன (எனசிந்தையுள் நின்றமாயன்) நான் அபேக்ஷியாதிருக்க என்னுடைய ஹ்ருதயத்திலேவந்து புகுந்து நித்யவாஸம்பண்ணுகிற ஆஸ்சர்யபூதன். (மணியித்யாதி) வாளென்றும் (-ஒளி,) ¶ ஒளியென்றும் - ஒளி, இவையிரண்டும் செய்வதென்னென்றால் (மணிவாள் ஒளிவெண்டரளங்கள்) ஒளியையுடைத்தான ரத்நம், ஒளியையுடைத்தாய் நீர்மையை யுடைத்தாயிருக்கிற முத்துக்களை, வேய் விண்டு உதிராநிற்கு மாய்த்து-மூங்கில்களானவை முற்றி வெடித்து முத்துக்களைச் சொரியாநிற்குமாய்த்து; இப்படிப்பட்ட திருமலையை வாஸஸ்தாநமாகவுடைய. (ஆயன்) நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனென்னு மிடத்துக்குஸூசகமிறேயிது. (அடியித்யாதி) இதரநிரபேக்ஷனானவன் அநந்யகதியாய்க்கொண்டு என்பக்கலிலே வந்து புகுர ஸாபேக்ஷனானநான் அவனைவிட்டுப்போவேனோ.அ.

மேலுக்கவதாரிகை (இரண்டுமித்யாதி வாக்யத்வயமும்.) (எங்கேகண்டு) என்றதுக்கு - பாண்டவர்கள் விஷயத்தில்கண்டு சொல்லுகிறீரோ வென்றபடி. இவ்வாழ்வார் "அடியேனையாட்கொண்டருளே," "அடியேனிடரைக்களையாயே," "குறிக்கொள்ளெனைநீயே" என்றுகொண்டு, அவனிருக்கும் தேசத்தில் போகை உத்தேஸ்யமாய் அவ்விடத்தில் கைங்கர்ய தத்விரோதி ப்ராப்திபரிஹாரங்களையே ப்ரார்த்தியாநிற்கவும், அவன்றனக்கு இவர் நெஞ்சில்வருகை உத்தேஸ்யமாய் இவரநாரம்ப வ்ருத்திகளிலபேக்ஷையாலே மஹிஷீ ஸஹிதனாய் அவஸரம் பெற்றவாறே புகுந்துகொடுநின்றான், இத்தைக்கண்டு "எனசிந்தையுள்நின்ற மாயன்" என்கிறாரென்று விவக்ஷித்துத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (நானித்யாதி) இங்ஙனன்றாகில், கீழ் - ஸாமாந்யேந ப்ரார்த்தித்தமைதோற்ற பாட்டுக்கள் பலவுண்டாகையாலே, நானபேக்ஷியாதிருக்க என்னக்கூடாது. ப்ரதீகக்ரஹணபூர்வகம் ப்ரஸ்நம் பண்ணுகிறார் (மணியித்யாதி.) "வாள்" என்றது - * மணிவிசேஷணமாகவும், "ஒளி" என்றது-* தரளபக்ஷத்துக்குவிசேஷணமென்றும்ப்ரத்யுத்தரமானமையைக்காட்டாநின்றுகொண்டு, ப்ரதீகக்ரஹண பூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (மணிவாளொளியித்யாதி.) "வாள் - மணி" என்றது - * வேங்கடத்துக்கு விசேஷணம். * வெண்மையினர்த்தம் (நீர்மையையுடைத்தாய்) என்றது. ரத்நங்களும் முத்துக்களும் கொழிக்கிற தேசவாஸத்வத்தால் ஃலித்தவர்த்தம் (இதரநிரபேக்ஷனானவ னென்றது.) ... ... ... ... அ

ஒன்பதாம்பாட்டு.—(வந்தாயித்யாதி.) "ஆயனடியல்லது மற்றறியேன்" என்று தம்மிலே தாமநுஸந்திக்கவே, எம்பெருமான், இவர் மற்றொன்று சிலவற்றை ப்ரஸங்கித்தார், அவற்றை யறிந்துவிட்டாரா யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

¶ குண்டலிதக்ரந்தம் சிலஸ்ரீகோசங்களிலில்லை.

மூ.—வந்தாயென்மனம் புகுந்தாய் ! மன்னிநின்றாய் !
நந்தாதகொழுஞ்சுடரே ! எங்கள்நம்பீ!
சிந்தாமணியே ! திருவேங்கடம்மேய
எந்தாய்! இனியானுன்னை யென்றும் விடேனே. ... ௯.

ப-ரை.—“ ஆதியஞ்சோதியுருவையங்கு வைத்திங்குப் பிறந்த ” என்கிறபடியே, வந்தாய் - பரமபதத்தினின்றும் நானிருந்தவிடம் தேடிவந்து, என்மனம் - என்மனஸ்ஸிலே, புகுந்தாய் - புகுந்து, மன்னிநின்றாய் - நிலைபெற்று நின்றவனாய், நந்தாத - இடை வெளியில்லாத, கொழும் சுடரே - மிக்கவொளியை யுடையவனாய், எங்கள்-ஸ்ரீதரான வெங்களுக்கு, நம்பீ-தஞ்சமாக விஶ்வஸிக்கத்தக்க [ம வனாய், சிந்தா - குற்றமில்லாத, மணியே - ரத்நம்போலே கண்ணுக்கு இனியனான வனாய், திருவேங்கடம் - திருமலையிலே, மேய - பொருந்திநின்று, எந்தாய் - என்னை உனக்கே உரிமையாக்கிக்கொண்டவனாய், உன்னை - சேஷியான வுன்னை, யான் - சேஷபூதனானவடியேன், என்றும் - எக்காலத்திலும், விடேன் - விடுகிறிலே னென்கிறார். ... ... ... ... ... (௯)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு.—( வந்தாய் ) ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாயிருக்க, இவரபேக்ஷியாதிருக்கச்செய்தேயும் நானிருந்த விடம்தேடிவந்துபுகுந்தானாய்த்து. வரவேண்டாவென்று விலக்கமாட்டாதேயிருந்தார், அதுவேபற்றாசாக ஹ்ருதயத்திலேவந்து புகுந்தான். (மன்னிநின்றாய்)முன்புபுகுரமாட்டாதேநின்றது உறவில்லாமை [உம யன்றிறே,இத்தலையிலிசைவுகிடையாமையிறே ; இனிப்போகில்புகுர அரிதாமென்று அதுவேநிலையாக நின்றானாய்த்து. இப்படியிருக்கிற விடத்து, ஸ்ரீவைகுண்டம் கலவிருக்கையாக விருக்கக்கடவநாம் இங்கேவந்து சிறைப்பட்டோமென்னும் இன்னாப்போடன்றிக்கே, இவர் பக்கலிலேபுகுந்திருக்கப்பெற்றவிது பெறாப்பேறாய், தனக்குப் [உரு பண்டில்லாத ஐஶ்வர்யம் பெற்றானாய் உஜ்ஜ்வலனாகாநின்றானாய்த்து. (நந்தாதகொழுஞ்சுடரே) விச்சேதமில்லாதஔஜ்ஜ்வல்யத்தை யுடையவனே. (எங்கள்நம்பீ) இப்பாழும் தாறை ஒருபடி நிரப்புகை. (சிந்தாமணியே) இவன்ஒன்றை எனக்குஎன்று நினைப்பதுகாண் நாமத்தைக்கொடுக்கைக்குஎன்றிராநின்றானாய்த்து.ஜ்ஞாநம்பிறந்தாலும்[நடம

நானிருந்தவிடம் - * அஹமர்யமிருந்தவிடம். அன்றிக்கே, ( இருக்கச்செய்தேயும்)என்ற வநுஷூரம், வந்தானாய்த்து என்று பூரித்துக்கொண்டு, வ்யாக்யாத்ஜவாக்யமாக்கிக் கொள்வது. (நானித்யாதி) “புகுந்தாய்” என்றதுக்கு ஆழ்வாருடைய ஹார்த்ஹாவமென்று கண்டுகொள்வது.மேலுக்கவதாரிகா ஸூசகமாக தாத்பர்யமருளிச்செய்கிறார்(இப்படியித்யாதி.)பாழும்தாறை - ஆழமான பள்[நரு ளத்தை. விஜாவிஷயஹல ப்ரதமான மணியென்றர்யமாக்கித் தாத்பர்ய மருளிச் செய்கிறார் (இவனித்யாதி.) ஸர்வதா விஜாவிஷயமான மணியென்றர்யமாக்கி, த்யாஜ்யமான மணியுண்டோ இப்படி விசேஷிக்கைக்கென்ன வருளிச்செய்கிறார் (ஜ்ஞாநமித்யாதி.) “ரத்நாநியநயார்யாநி” என்று - ஜ்ஞாநிக்கு த்யாஜ்யங்களுண்டிறேஎன்று திருவுள்ளம்.அன்றிக்கே, சிந்துதல்-சிதறுதலாய், அதில்லா மணி [சும யென்றர்யமாக்கி, அத்தால் ஃலிதார்யம் (ஜ்ஞாநமித்யாதி) என்றுமாம்.

மூ.—வில்லார்மலிவேங்கடமாமலைமேய
மல்லார்திரடோள் மணிவண்ணனம்மானை,
கல்லார்திரடோள் கலியன்சொன்னமாலை
வல்லாரவர் வானவராகுவர்தாமே. ... ... ௰.

ப-ரை.—வில்லார் - வில்லை யிடைவிடாமல் தரித்துநிற்கும் திருவேடுவர்கள், மலி - மிக்கிருக்கிற, வேங்கடமாமலை - திருமலையிலே, மேய - பொருந்தி வர்த்திப்பவனாய், மல்லூர் - மிடுக்கு மிக்கிருப்பதாய், திரள் - திரண்டிருந்துள்ள, தோள்- தோள்களையும், மணி - நீலரத்நம்போன்ற, வண்ணன் - திருநிறத்தையு முடையனான, அம்மானை - ஸர்வேச்வரன் விஷயமாக, கல் - மலைபோலே, ஆர் - திண்[௰மையையும், திரள் - திரட்சியையு முடைய, தோள் - தோள்களை யுடையரான, கலியன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்த, மாலை - மாலாரூபமான இப்பத்துப்பாட்டையும், வல்லாரவர்தாம் - பொருளோடே கற்கவல்லார்கள், வானவராகுவர் - நித்யஸூரிகளைப்போலே கைங்கர்யம் பண்ணப் பெறுவர்கள். ... (௰)

உபேக்ஷியாதாத்நம்.(திருவேங்கடம்மேயவெந்தாய்)திருமலையிலே [௰௫ வந்துபுகுந்துஉன்னுடைய ஸ்வாமித்வத்தைக்காட்டி யென்னை அநந்யார்ஹனாக்கினவனே. (இனியித்யாதி) எனக்காகவந்து நிற்கிறநிலையை விடாய்,ஆனபின்பு நானுனக்காம்படிபற்றின பற்று விடுவேனோ.(என்றும்) இத்தால்-பரஸக்தி பர்யந்தமாகப் பிறந்ததென்றபடி. அரைக்ஷணமவனை யொழியச்செல்லாமை யுண்டாகையிறே-பரஸக்தியாவது, [௨௰ வ்யதிரேகத்தில் ஜீவியாதபடி யானார். ... ... ௬.

வ்யா.—பத்தாம்பாட்டு.—(வில்லாரித்யாதி) பரமபதத்திலே நித்யஸூரிகள் அஸ்யாநே பயசங்கைபண்ணிப் பரியவிருக்கு மவனிறே ஸம்ஸாரத்திலேவந்து ஸந்நிதிபண்ணினான் ; ஸம்ஸாரமாகையாலே ஸ்யாநே பயமாயிருக்குமிறே யிங்கு; ஆகையாலே, அங்குத்தைத் திருவேடுவர் எப்போதும் ஏறிட்ட வில்லுந்தாமுமாய் உணர்ந்து நோக்குவர்களாய்த்து, ஸ்ரீகுஹப்பெருமாள் இராவெல்லாமுணர்ந்து நோக்கினாப்போலே. (மல்லாரித்யாதி) ஸிம்ஹம்கிடந்த முழைஞ்சையாய்த்து இப்படியுணர்ந்து நோக்குகிறது. மிடுக்குமிக்க தோளையுடைய தர்சநீயமான வடிவையுடையனான ஸர்வேச்வரனை. [௰௫

நிற்கிறநிலையை-திருமலையில்நிற்கிறநிலையை.பற்றினபற்று-என்னெஞ்சிலேநீபற்றினபற்று. "என்றும்" என்றது - அல்பகால விலக்ஷயா வருளிச்செய்கிறார் (அரையித்யாதி.) பரஸக்தி யென்றதுக்கு - பரமஸக்தியிலே தாத்பர்யம்."புநர்விச்லேஷ பீருத்வம் பரமாஸக்திருச்யதே" என்னக்கடவதிறே. ... ... ௬.

பத்தாம்பாட்டு.—(வில்லாரித்யாதி.) வில்லை நிரூபகமாகவுடைய வேடரால், மலி - ஸம்ருத்தமாயிருக்கிற, வேங்கடமென்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பரமபதத்திலேயித்யாதி.) "திரள் -" மாம்ஸளமான.

(கல்லாரித்யாதி) இருவர்க்கும் அரணாகப்போரும்படியாய்த்துத் திருமங்கையாழ்வார்தோள் மிடுக்கிருக்கும்படி. (வல்லாரித்யாதி) இவற்றை அப்யஸிக்க வல்லவர்கள், நித்யஸூரிகளுடைய நித்ய கைங்கர்யமே தங்களுக்கு யாத்ரையாகப் பெறுவர்கள். ... ... ௰

' அடிவரவு.—கண் இலங்கை நீர் உண்டாய் தூணாய் மன்று மானேய் சேயன் வந்தாய் வில் வானவர்.

திருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

---

ஆர்தல் -பொருந்துதலாய், கல்லோடொத்த தோளென்று விசேஷிக்கைக்குத்தாத்பர்யம்(இருவர்க்குமித்யாதி;) வேடர்க்கும் வேங்கடத்தானுக்கு மென்றபடி.... ௰.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஜீயர் திருவடிகளேசரணம்.

ஆக, திருமொழி - ௰ - க்கு, பாட்டு - ௱ .

முதற்பத்து ஸம்பூர்ணம்.

ஜீயர்திருவடிகளேசரணம்.

திருமங்கையாழ்வாரருளிச்செய்த

# பெரியதிருமொழிக்கு,

¶ பூர்வாசார்யர்கள் அருளிச்செய்த

# வ்யாக்யாநாந்தரம்.

இவ்வாழ்வாராகிறார் - அநாதிகாலம் ஆத்மாவை வெய்யிலிலே வைத்து உடம்பை நிழலிலேவைத்துப் போந்தா ரொருவராய்த்து. ஆத்மாவை வெய்யிலிலே வைக்கையாவது – ஹேயவ் விஷயத்திலே யிழியாமை ; உடம்பை நிழலிலே வைக்கையாவது - * ஊனுடைக் குரம்பை வாழ்க்கைக்குறுதியேவேண்டிஸம்ஸாரிகளிலேப்ரவணரா[ய ய் அதுவேயாய்ப் போருகை : நிழலாவது--அவன்பாதநிழலேயிறே. [வாஸுதேவதருச்சாயா] போனபோனவிடமெல்லாம் நிழலாயிருக்கை. [நாதிஸீதா நகர்மதா] அறவவ்வவிடுதல் வேர்த்தல் செய்யாதொழிகை. [நரகாங்காரஸமநீ] தானேயேறிட்டுக் கொண்ட நரகமாகிற நெருப்பை யுட்பட அவிக்கவற்று. [ஸாகிமர்த்தம் நஸேவ்யதே] [யரு ப்ராப்தமன்றென்ன வொண்ணாது, ஜ்வரநிவர்த்தகமன்றென்ன வொண்ணாது ; அந்நிழலிலே யிருந்துவைத்தே ஒதுங்கிற்றிலேன் என்பாரைச் செய்யலாவதில்லையே. இனி இவர் கண்ணால் காண்கிற விஷயங்களுக்கு அவ்வருகுமியாராகில் நம்மையும் விஷயங்களோபாதியிவர்கண்ணுக்கிலக்காக்கினால் விரும்பக்கூடுமென்றுபார்த்து,[உ உகந்தருளின நிலங்களிலேவந்து ஸந்நிதிபண்ணி யருளி, இவரை விஷயீகரித்து, தன்படிகளை யடையக் காட்டிக்கொடுத்து, தன்னையல்லது செல்லாதபடி பண்ணி இவரை அநுபவிப்பித்து, இங்கேயிருந்தேபரமபதத்திலுள்ளார்படிபண்ணி அத்தேசப்ராப்தியையும்பண்ணிக்கொடுத்தானென்கிறது-இப்ப்ரபந்தங்களெல்லாவற்றிலும். *

---

¶ மூன்றாம்பத்து முதல்திருமொழி முதற்பாட்டினரும்பதத்தில் "கருமை-பெருமையாக்கி நஞ்சீயர் வ்யாக்யாநம் பண்ணியிருந்தாலும்" இத்யாதி வாக்யத்தால் நஞ்சீயர்வ்யாக்யாந முண்டென்று தோற்றுகிறதாகிலும், இந்த வ்யாக்யாநத்தில் "இப்புடைகளிலே நினைப்பது அநேகத்தை யிறே என்று ஜீயருளிச்செய்வது"[க - ப - க - தி - உ - பா.], "நஞ்சீயர் ஸங்க்ரஹித்தருளுகிற [கூய வன்று......என்றருளிச்செய்வர்" [க - ப - கூ - தி - க - பா.] இத்யாதி வாக்யங்களுண்டாகையால்,இதுநஞ்சீயர்வ்யாக்யாநமன்று ; "வேல்வெட்டிநம்பியார், பிள்ளையை......என்றுகேட்க" [க - ப - க - தி - க - பா.] இத்யாதி வாக்யங்களாலே-நம்பிள்ளைவ்யாக்யாநமு மன்று ; வாதிகேஸரி அழகியமணவாளச் சீயரருளிச்செய்ததா யிருக்கும் என்று சிலர் அருளிச்செய்வர் : ம்ருக்யமாகக் கண்டு கொள்வது.

இவர்பக்கல் அத்வேஷமும் விஷயங்களினுடைய லாவவமுமே இவனை மீட்கைக்குப் பரிகரமாகவும், இவருடைய ரஸிகத்வமே தன் வாசியறிகைக்குப் பற்றுசாகவும், அநாதிகாலம் பண்ணின பாபங்களை க்ஷமைக்கு விஷயமாக்குவோம் என்று பார்த்து, இவர் விஷயங்களின் வாசியறிந்து தன்னையறிகைக்கு, கிழிச்சீரையோடே தநத்தைக் கொடுப்பாரைப் போலே, தனக்கு வாசகமான திருமந்த்ரம் முன்னாக தன் ஸ்வரூபரூபகுணவிபூதிகளைக் காட்டிக்கொடுக்கக் கண்டு அநுபவித்து, அயோக்யனான என்னை அது தானே ஹேதுவாக விஷயீகரித்தான் என்று, க்ருதஜ்ஞராகையாலே, ஒருக்கால் சொன்னத்தை ஒன்பதின்கால் சொல்லிக் கூப்பிடுகிறார். பகவத்விஷயத்தில் நேர்கொடுநேர் செய்யலாவதொன்றில்லை, செய்ய வேண்டுவதுமொன்றில்லை; பண்ணின உபகாரத்துக்கு க்ருதஜ்ஞனுமித்தனையே வேண்டுவது அவிஜ்ஞ்யாவஸ்த்தி தோற்ற. ... ※

முதற்பாட்டு.—நம்மாழ்வார் ஸர்வேச்வரனை ஸாக்ஷாத்கரித்து அநுக்ரஹம் பெற்ற பேறறியாதே "இந்நின்ற நீர்மை இனியாமுறாமை" என்று – கீழ்நின்ற நிலையை அநுஸந்தித்தாற்போலே, இவரும், பகவத்விஷயீகாரம் பிறந்தபின்பும், தாம் கீழ்ப் பிரிவையெல்லாமநுஸந்தித்து (வாடினேன்) என்கிறார். * ஸாயஹ்நாந்நிவாஸ வ்ருக்ஷத்தையிறே யிழந்தது. கொம்பை யிழந்த தளிர்போலேயானேன். * தயரதன் பெற்ற மரதகமணித்தடத்தையிறே பிரிந்தது. "ஜலாந் மத்ஸ்யாவிவோத்த்ருதௌ" என்கிறபடியே – ஜலத்தைப் பிரிந்த மத்ஸ்யம்போலே வாடினேன். "பழுதே பலபகலும் போயினவென்றஞ்சி யழுதேன்" என்றும், "தெரிந்துணர்வொன்றின்மையால் தீவினையேன் வாளா இருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம்" என்றும், "மறந்தேனுன்னை முன்னம்" என்றும், அநாதிகாலம் இழந்த இழவை நினைத்து (வாடினேன்) என்கிறார்.

(வாடி) என்கிற விசேஷணம் இரண்டிடத்திலும் பொருள் பெற்றுக்கிடக்கிறது. அநாதிகாலம் இவ்விழவு ப்ரஸித்தமாய்ப் போந்ததென்றும் மேலே ஒரு நரகத்தை விளைத்ததென்றும் தோற்றுகிறது. மேல்விளைந்த அநர்த்தமேதென்ன (வருந்தினேன் மனத்தால்) மாநஸமான க்லேசத்தை அநுபவித்துப் போந்தேன்; விஷயாநுபவத்தை யாசைப்பட்டு அது கிடையாமையாலே அதுக்கு ஈடாய க்லேசத்தைப்பட்டேன்.

(பெருந்துயரிடும்பையில் பிறந்து) இடும்பையென்றும், துயரென்றும் – து:க்கம்; இரண்டாலும் – மிகவும் பெரிய து:க்கத்தை விளைக்கும் சரீரபரிக்ரஹம் பண்ணியென்றபடி. து:க்காயதநமாய் து:க்கத்தை விளைப்பதுமாயிருக்கை. (கூடினேன்) அசித்ஸம்பந்தம் ஸத்தாப்ரயுக்தம் என்னலாம்படி பொருந்தினேன். (கூடினேன்) என்கையாலே – இதுதான் ஆத்மாவுக்கு ஸ்வரூபமன்று, வந்தேறி என்னு

மிடம் தோற்றுகிறது. அயஃபிண்டத்தை அக்நியினருகே வைத்தால் அக்நிபரமாணுக்கள் ஸூக்ஷ்மரூபேண அதிலே ஸங்க்ரமித்தாதல், வாஸநையாலே யாதல் இதினுடைய ஔஷ்ண்ய ஸ்வபாவத்தையும் ஸஜித்து அது தானென்னலாமாப்போலே, இவ்வாத்மாவும் அசித்[டு ஸம்ஸர்க்கத்தாலே அது தானென்னலாம்படி அசித்கல்பனானபடி. (கூடினேன்) ஶரீரவிஶ்லேஷம் அஸஹ்யமாம்படி பொருந்தினபடி.

(இளையவர்தம்மோடவர்தரும் கலவியேகருதி ஓடினேன்) ஶரீர ஸம்பந்தத்தால் பிறந்த அநர்த்தமிது என்கிறார். (இளையவர்) பருவத்தால் துவக்குமவர்கள். (தம்மோடு) "ஸாமாபாவஸத்வமநுமந்[ய மேத்" என்கிறதுவும் இங்கே. "யேநயேநயாதாமந்வஹதிதேநதேந ஸஹமந்வஹதி" என்கிறதுவுமெல்லாமிங்கே யென்கிறார். (அவர்தரும் கலவி) கிட்டினபோது சிறந்த வார்த்தை சொல்லி, இவனகப்பட்டான் என்றறிந்தவாறே, தங்கள்க்கொண்டு எழவாங்குவர். (தரும்கலவியேகருதி) அநுபவிந்தேன் என்பது அநுபாவ்யந்தானுண்டாகி[டு விறே. இன்னபடி ஸஜிக்கலாம் என்று நினைவொழிய, ஸஜிக்கத்தக்கதொன்றில்லை. உருவங்களிலே யொன்றை ஸுவமென்று பேரிட்டுக் கொண்டாடித் திரிகிறானித்தனை இவன் ப்ராந்தியாலே.

(ஓடி) முன்பெல்லா மிப்படியாய்ப் போரச்செய்தே ஒரு நன்மை யுண்டாய்த்தென்று தோற்றுகிறது. அதேதென்னில் (உணர்வெ[உய் னும் பெரும்பதம்) "விஜ்ஞாநயஜ்ஞம்ப்ராப்தம்" "வரவாறொன்றில்லையால் வாழ்வினிதால்" என்கிறபடியே இங்ஙனே ஸம்பவிப்பது. (பெரும்பதம்) அவன்றான் வேண்டா, தத்விஷயஜ்ஞாநமே யமையும் என்னும்படியாய்த்து இதினுடைய பெருமை. "மறப்பின்மையான் வேண்டுமமாடு" என்றும் "உனக்கேயாளாகும்சிறுகாலத்தை யுறு[உடு மோ" என்றும் சொல்லுகிறபடியிறே யிதினுடைய பெருமை. (திரிந்து) மீண்டு. விஷயங்களி லநுபவிக்கலாவ தொன்றில்லாமையாலே மீட்டி மீண்டு. (தெரிந்து) என்று பாடமாகில், ஜ்ஞாநம் பிறந்தவாறே எல்லாமுள்ளபடி தெரிந்தது. ஆகையாலே, அநாதிகாலம் இருளாய்ப்போந்தமைதோற்றுகிறது. (நாடினேன்) கண்டேன். கா[கூம் ற்றுக்கிடப்பட்ட கலம்போலே ஓடின நான், ஜ்ஞாநம் பிறந்தவாறே, நெங்கூரம் விழப்பட்ட மரக்கலம்போலே தரித்தேனென்கிறார். நாடல் - தேடலாய், ஜ்ஞாநம் பிறந்தவாறே, நாம் கீழ்பட்டதென்? மேல் படப்புகுகிறதென்? என்கிறகேட்டம்பிறந்ததென்கிறது என்றுமாம்.

(நாடி) ஆராய்ந்து. (நான்) ஓடினநான்.— வேல்வெட்டி நம்பியார், பிள்ளையை, "இதரோபாயங்கள்போலே ப்ரபத்திக்கும் ஸஹாயாந்தராபேக்ஷையுண்டோ?" என்று கேட்க; "இது கேட்கைக்கடியென் இப்போது?" என்ன; "சக்ரவர்த்தித் திருமகன் ப்ராங்முகத்வாதி நியமங்களோடே ஶரணம்புக்காரே" என்ன; "அந்த உபாயத்துக்கு உடனவந்துயா யிருப்பதொன்றில்லை, உபாயபரிக்ரஹம் பண்ணினவ

ருடைய ஸ்வபாவத்தாலே வந்தது, ராக்ஷஸஜாதீயராகிறார் - தண்ணியராய் அநதிகாரிகளாயிருக்க, அவர்களிலொருவனான விபீஷணாழ்வான் 'ஸமுத்ரம் ராகவோ ராஜா ஶரணம் கந்துமர்ஹதி' என்று இவருக்கு உபதேஶித்தான், அவன்பக்கல் நியதிகண்டிலோம்.'' இத்தால்[று சொல்லிற்றாய்த்து - அநதிகாரி அதிகாரம் ஸம்பாதிக்கவேண்டா, அதிகாரிக்கு அநதிகாரம் ஸம்பாதிக்கவேண்டா, நின்ற நின்ற நிலைகளிலே அதிகாரிகளாமித்தனை ; ஆகையாலே, ஸர்வாதிகாரமென்றபடி. (நான் கண்டுகொண்டேன்) கெடுத்தவன் கண்டாப்போலேயிருக்கை. (நாராயணாவென்னும நாமம்) ப்ரணவபூர்வகமாக சதுர்த்தீமுடிவாகாமையாலே- இதிலே பிழையவமையும்ஃபலபர்யந்தமாமென்கைக்கு, ஸாங்கமாகவும் வேண்டாவென்கிறது. (என்னும்நாமம்) என்னும் என்கிறது-பலகால் ஆவர்த்திச் சொல்லுகிற அநந்யபரமான நாராயணாநுவாகத்திலே சென்று கேட்டுக்கொள்ளுங்கோளிந்தநாமம். (நாமம்) என்கையாலே - அங்காதி நியமமில்லையென்றபடி. ... ௧.

அவதாரிகை.— இரண்டாம்பாட்டு.— அநாதிகாலம், பகவத்விஷயமென்றொன்றுண்டு என்றுமறியாதே விஷயப்ரவணராய்ப் போருகையாலே, "வாடினேன்" என்றும் "ஓடினேன்" என்றும் கீழ்நின்ற நிலையைச்சொல்லி நின்றது ; இப்படி கழிந்தகாலம் வ்யர்த்தமாகாதபடியான திருநாமத்தைக் காணப்பெற்றே னென்கிறார்.

வ்யா.—(ஆவியேஅமுதே) "ஆவியேயமுதே யலைகடல்கடைந்தவப்பனே" என்றும் "ஆவியே யாரமுதே" என்றும் பகவத்விஷயத்திலே சொல்லக்கடவவார்த்தைகளையாய்த்து இங்குச்சொல்லுகிறது. "ஜீவிதம்த்வமஸி மேஹ்ருதயம்" என்றிறே சொல்லிப்போந்தது. (எனநினைந்து) "இப்புடைகளிலே நினைப்பது அநேகத்தையிறே" என்[உறு று ஜீயரருளிச்செய்வது. (உருகி) "'நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்' என்று இங்ஙனே சொல்லலாமோ?" என்று ஜீயர்க்கு விண்ணப்பஞ்செய்ய ; "நீரிவரிலும் பக்தரா யிருந்தீர்" என்றருளிச்செய்தார். (எனநினைந்துருகி) இங்ஙனே அநுஸந்தித்து நீர்ப்பண்டம்போலே மங்கிக்கிடப்பர். காலமநாதி, ஆத்மாநித்யன், [கூடி பரிக்ரஹித்த ஶரீரங்களுக்கு எல்லையில்லை, அவ்வோ ஶரீரங்கள்தோறும் விஷயங்களுக்கும் எண்ணில்லை, ஆகையாலே (அவரவர்) என்னுமித்தனை. (பணைமுலைதுணையா) * சர்மாஸ்ருங்மாம்ஸ மேதோஸ்திமயமான மாம்ஸபிண்டத்தையிறே துணையாகப்பற்றிப்போந்தது. "மின்னுகுழல் கருநிறத்தென்துணையே" என்னுமாப்போலே இவற்றைத் துணையாகப்பற்றுவது. (பாவியேன்) கீழ்நின்ற நிலையை நினைத்து "பாவியேன்!" என்கிறார். (உணராதெத்தனைபகலும்) அநேககாலம். (பழுதுபோ யொழிந்தன நாள்கள்) * ஒழிவில் காலமெல்லாமுடனாய் மன்னி வழுவிலாவடிமைக்கிட்டுப் பிறந்தவனிறே இக்காலத்தைப் பாழேபோக்கினான்.

(தூவிசேரன்னம் துணையொடும் புணரும் சூழ்புனல் குடந்தையே தொழுது) தூவி - சிறகு. (துணையொடும் புணரும்) ஸஹசரத்தோடே புணர்ந்து வர்த்திக்கிற க்ஷேத்ரம். ஸர்வஸூத ஶரண்யமான க்ஷேத்ரம். அன்னத்தோடே ஸர்வதா ஸாம்யம் சொல்லலாயிருக்கையாலே, பெரியபிராட்டியாரோடே ஆராவமுதாழ்வார் ரமித்து வர்த்திக்கிற க்ஷேத்ரம். (சூழ்புனல் குடந்தை) புனலாலே சூழப்படுகையாலே தாபஹரமான க்ஷேத்ரம். (குடந்தையேதொழுது) ஆராவமுதாழ்வார் வேண்டா, அக்ஷேத்ரந்தானே அமையும். (என்றுவினால்) "ஆவியேயமுதே" என்ற என்நாவினால். இத்தையிட்டிறே "எச்சில் வாயால் தூய்மையில் தொண்டனேன் நான் சொல்லினேன் தொல்லைநாமம்" என்று அநுஸந்தித்தது. (உய்யநான்கண்டுகொண்டேன்) உஜ்ஜீவிக்கும்படி நான்கண்டுகொண்டேன். (நாராயணாவென்னும் நாமம்) முன்பிருந்த காலமும் வ்யர்த்தமாகாதபடியான திருநாமத்தைக்காணப்பெற்றேன்; "சென்ற நாள் செல்லாதே" இத்யாதிப்படியே. ... ... ... ... ... ௨

அ. — மூன்றும்பாட்டு.—அநாதிகாலம் ஶரீரத்துக்கு நன்மை வேண்டி ஓம்மைப்பண்ணிப்போந்த நான் உஜ்ஜீவிக்கும்படி திருநாமத்தைக் காணப்பெற்றேனென்கிறார்.

வ்யா.—(சேமமேவேண்டி) "நாம் திருக்கள் ராஜாக்களுள்ளிட்டார் உடலால் நடக்க நலிவு வாராதொழியவேணும், எல்லாராலும் ரக்ஷை பெற்றுச் செல்லவேணும்" என்றிப்படி நெஞ்சால் நினைத்திருப்பது. (தீவினைபெருக்கி) ரக்ஷை பெற்றுச்செல்லவேணும் என்றிருந்தால், அது வேண்டாம்படி அநேகத்தைப் பண்ணுகைக்கு பாபத்தையேயாய்த்துக் கூடுபூரிப்பது. (தெரிவைமார் உருவமே மருவி) நல்லத்தை வேண்டியிருக்குங் காட்டில் அநுபவாராமே; செய்ததின் ஜலமிறே வருவது. பண்ணினவத்த பாபங்கள் கொடுபோய் விஷயங்களிலே மூட்டும். (உருவமே மருவி) அகவாயிவிழியில் த்யஜிக்கலாமிறே. அகவாயறிந்தால் ஸ்வகார்ய பரராயிறே யிருப்பது. அகவாயிவிழியில் அநாதமசொனம் கண்டிடிலாயிருக்குமிறே. வடிவில்தோஷங்களை மறைத்திறைவைப்பது. (மருவி) இத்தைக்கொண்டு லாஸ்யமாகமநம்பண்ணியாய்த்திருப்பது. (ஊமனார்கண்ட கனவிலும் பழுதாய்) ஊமனார் - ஊமைகள். ஊமன்கண்ட கனவிலும் பழுதாய். ஊமன்கண்டகனா வாய்விடமாட்டாதத்தனை, நினைத்திருக்கும்; அங்ஙனுமன்றியே, நெடுநாளநுபவித்துப் போந்த விஷயங்களிலேபோயிருந்து, அநந்தரம் நினைத்திருக்கைக்கு மொன்றின்றியே யிருக்கை. அங்ஙனன்றிக்கே, ஊமைகண்ட கனா வாய்விட மாட்டிற்றிலனாகிலும் நினைத்திருக்கலாம், இவற்றை நினைத்திருக்கிறது ஹயாவஹமாகையாலே நினைக்கவொண்ணாதென்கை. ஸ்ம்ருதி விஷயமாவதொன்றில்லை; ஸ்ம்ருதி விஷய

மாய்த்ததுண்டாகில் ஸயாவஹமாயிருக்கும். (ஒழிந்தனகழிந்தவந்நாள்கள்) "நமேஜ-ந்வெ0 ப்ரிமா?-ஹே நமே -ந்வெ0 ஹ்ர்தேதிவா । ஏதஷேவாநுமோவாமி வயோஸ்யா வூயதி வர்த்ததே" இத்யாதிப்படியே.

நீர்பற்றச்சொல்லுகிற விஷயத்துக்கு இந்தோஷங்களில்லையோ[று வென்ன (காமனூர்தாதை) உருவமே மருவிலும் ஊதியம்போரும்; "ஸாக்ஷாந் மந்மதமந்மத:" (நம்முடையடிகள்) வகுத்தவிஷயம்.ஸர்வஸ்வாமி. (தம்மடைந்தார் மனத்திருப்பார்) வடிவைக்காட்டி அகப்படுத்திக் கையிலுள்ளதடையபஹரித்துத் தள்ளிக் கதவடைக்குமவர்களைப்போலன்றியே, தன்னைச்சேர்ந்தார் மநஸ்ஸைவிடாதே யிருப்[டு பர்; "கல்லும்கனைகடலும்" இத்யாதி, "நிற்பது மோர்வெற்பகத்து" இத்யாதி. (நாமம் நானுய்ய நான்கண்டுகொண்டேன்) ஸ்வாமித்வ ஸௌலப்ய வாத்ஸல்ய ஸௌஶீல்யாதிகளுக்கு வாசகமான திருநாமத்தைக்கண்டுகொண்டேன்.சேமமேவேண்டித் தீவினைப்பெருக்கிப் போந்த நான் கண்டுகொண்டேன்.(நாராயணவென்னும்நாமம்) குடல்[டு துடக்குடைய திருநாமம். ... ... ... ... ௩.

அ.—நாலாம்பாட்டு.—ப்ரளயங்கொண்ட பூமியை யெடுத்தாப்போலே, ஸம்ஸாரப்ரளயங்கொண்டுஅதிலேஅழுந்துகிறநான்,அவரருளாலே, நீர்மைமிக்க திருநாமத்தைக் காணப்பெற்றே னென்கிறார்.

வ்யா.—(வென்றியேவேண்டி) பிதாவாகவுமாம் ஆசார்யனாகவுமாம் வென்றியாய்த்து இவன்வேண்டியிருப்பது. தன்னையொழிந்தாரை அகப்படுத்தி தான் மேலாகவாய்த்துவேண்டியிருப்பது. கோல்விடுணைமாம் விஷயத்திலேயாய்த்து வெல்ல நினைப்பது. (வீழ்பொருட்கிரங்கி) கையில்சிறிது அர்த்தமுண்டாய் அத்தாலேயிறே யிவனொருவனையும்மதியாதிருப்பது. அது அஸ்திரமானபடியாலே அபஹ்ருதமாயிருக்குமிறே; அத்தை யிழந்து கூப்பிடாநிற்கும். கௌரவ்யராயிருப்பார் பக்கல் அபிமாநம் பண்ணக்கடவ தன்றிக்கே யிருக்க அபிமாநம் பண்ணி வர்த்தித்தும்அதுக்குமேலேஇரக்கக்கடவதல்லாததுக்குஇருந்து கண்ணநீர்பாயாநிற்கும்.அங்ஙனன்றிக்கே,தேஹாத்மாபிமாநத்தைப் பண்ணித்தன்னையெல்லார்க்கும்மேலாகநினைத்துப்போந்து, அதுக்குமேலே,அஸ்திரமானவுடம்பை "நித்யமாகவேணும்" என்று போகியாநிற்குமென்னவுமாம். (வேற்கணார்கலவியே கருதி) கையிலர்த்த முண்டான காலம் ஸ்த்ரீயையைச் செங்கற்சீரைகட்டித்திரியவிடுமவன் அர்த்தமிழந்து கூப்பிடாநின்றால், அல்லாதாரோடொக்க அவளும் வினவப்புகுறும்; அவளைக்கண்டவாறே, அவ்வர்த்தத்தை யெல்லாமிட்டு ஒரு [௫டு பணியாகப் பூட்டிக் காணப்பெற்றிலோம் என்று மநோரதியாநிற்கும். கெடுத்த பொன்னைஇப்போது பூட்டத்தேடும். (நின்றவா நில்லா நெஞ்சினையுடையேன் என்செய்கேன்) உர்வசீ ஸாலோக்யத்துக்கு நாட்டங்க ஸாயநாநுஷ்டாநம் பண்ண, நேரடியே அவள்தானே

வந்து உபஸ்தாநம்பண்ணி முன்னேநிற்க அர்ஜுநன் நமஸ்கரித்துக் கடக்க நின்றானிறே விரக்தியாலே ; இப்படிப்பட்டவன், "தஸ்யாஹம் நிக்ரஹம்மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம்" என்று - ப்ரதிகூல வாயுவைப் பிடித்துக்கூடுகட்டிலும் என்னெஞ்சைப்பிடிக்கப் போகாது [ரு என்றானிறே. ஒருவிஷயத்திலே அரைக்ஷணம் கால்தாழாத நெஞ்சையுடையேனான நான், என்னெஞ்சைப் பரிகரமாகக்கொண்டு உன்னைப்பெறுகைக்கீடான உபாயாநுஷ்டாநம் பண்ண என்பதொன்றுண்டோ. உன்னை யிழக்கைக்குறுப்பா யித்தனை. (என்செய்கேன்) அர்ஜுநனுக்குப்பந்நினைட்டோத்திலும் ஸோகத்தையுத்பாதித்தாப்போலே கண்டதெல்லாமிவர்க்கு ஸயாவஹமாயிருக்கிறபடி.

நீரிப்படி யிருந்தீராகில் உமக்குப் பேற்றுக்கடியெத்தாலே யென்றிருந்தீரென்ன ; ப்ரளயங்கொண்ட பூமி தன்னுடைய ரக்ஷணத்தில் அஸமர்த்தமாய் அத்தை ரக்ஷித்தான் யாவனொருவன் அவனாலே யென்கிறார் (நெடுவிசும்பணவும்பன்றியாயன்றுபாரகங்கீண்டபாழி[ரு யா னாழியானருளே) ப்ரளயங்கொண்ட பூமிக்கு ஸ்வரக்ஷணத்தில் அந்வய முண்டாமன்றிறே விஷயங்கொண்ட நெஞ்சை யுடையேனான நான் எனக்கு ஹிதசிந்தைபண்ணுவது. ஆகாஸாவகாஸம் வெளி படையும்படி விம்ம வளர்ந்தான். ரக்ஷ்யத்தினளவல்லாதபடி யாய்த்து ரக்ஷகனானவன் வடிவைபரிக்ரஹித்தபடி. பூமிப்ரளயத்திலே[உ௰ புக்கு முடிந்து போகப்புக்கவாறே, நீருக்கும் சேற்றுக்கும் இறாயாத மஹாவராஹமானான்;— ஜலஸம்ஸ்ப்ருஷ்டி காணப்பணைக்கும் வடிவைக் கொண்டான். [மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப்பன்றியாம்] மஹிஷியுடம்பு பேறாதே பாசிதூர்த்தது என்றவாறே, காதனான தான் உடம்பு பேறாதே மாசேறின உடம்பை யுடையனானான். [மானமிலா]உரு ஈஸ்வரத்வாபிமாநம் பின்னாட்டாதபடி யிருக்கை. மாயாம்ருகத்தை இனத்தின் மான்கள் வந்து மோந்து பார்த்து, விஸஜாதியம் என்று கடக்கப்போய்த்தின விறே ; அங்ஙனன்றியே, "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்கிற இங்கும் அநுவர்த்தித்தபடி. (பாரகங்கீண்ட) பூமிப்பரப்படங்க அண்டபித்தியோடே புக்குச்சேர்ந்தத்தைஒட்டுவிடு[ந௰ வித்தெடுத்த. (பாழியான்) மிடுக்கையுடையவன். ரக்ஷிக்குமிடத்தில் ஒரு பரிகராபேக்ஷையில்லை. (ஆழியான்) ஒருபரிகரங்கொண்டு ரக்ஷிக்கப்பார்த்தானாகில் அதுக்கீடான பரிகரமுடையவன். (அருளே) அபிமாநம் பண்ணக்கடவதல்லாத விஷயங்களிலே அபிமாநம் பண்ணியும், ஸோகிக்கக்கடவதல்லாததுக்கு ஸோகித்தும், நரகாவஹமான விஷயங்களை அநுபவிக்க மநோரதித்தும், "நின்றவாநில்லா நெஞ்சினையுடையேன்" என்கிறபடியே கைகழிந்தவென்னை, இவன் தானாக மீளமாட்டான் என்று அதுவே ஹேதுவாக எடுக்கவொருப்பட்ட ஸர்வேஸ்வரன் க்ருபையாலே. அருளே என்னவுமாம், அருளாலே என்னவுமாம். (நன்றுநானுய்ய) "வென்றியேவேண்டி வீழ்பொருட்

இரங்கி வேற்கணார்கலவியே கருதி'' என்றுபோந்தவன் ஸூக்ஷ்மஜ்ஞ
னென்று தெரியாதபடி அஸ்பஷ்ட ஸம்ஸாரஜ்ஞனும்படி யானேன்.
(நான் கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்) "வென்றியே
வேண்டிவீழ்பொருட்கிரங்கி'' என்று-அபிமாநமும் லோபமும் [ரு
றே சொல்லிற்று ; இப்படி போந்த நான், அமாநித்வாத்யாத்மகு
ணோபேதர் பெறும் பேற்றைப் பெற்றேன். ... ... ௪.

அஞ்சாம்பாட்டு.—(கள்வனேனானேன்) விறகுகளவுகண்டவனில்
ரத்நாபஹாரம் பண்ணினவனுக்கு பாபம் ப்ரசுரமாயிருக்கும் ; ஸூத்ர
யநத்தை அபஹரித்தவனில் ப்ராஹ்மணயநத்தை அபஹரித்தவ[ம
னுக்கு பாபம் விஞ்சியிருக்கும் ; த்ரவ்யங்களில் தலையான ஆத்மவஸ்
துவையாய்த்து அபஹரித்தது. ஸர்வேஶ்வரனுடைமையையாய்த்து
என்னது என்று போந்தது. (பழுதுசெய்திருப்பேன்) மிடறு தின்
றால் சோறிய வொண்ணாதாப்போலே பஶ்யதோஹரனானேன்.
நான் தேஹாத்மாபிமாநம் பண்ணிப்போந்ததுவேயன்றிக்கே, ஈஶ்வர
ஶேஷம் என்றிருப்பானொரு ஆஸ்திகனுண்டாகில், தேஹாதிரிக்த
மா யிருப்பதொரு வஸ்துவாவதென்? ஈஶ்வரனாவதென்? என்று
காணக்காணப்பறித்தேன். (கண்டவாதிரிதந்தேனேலும்) முன்னடி
தோற்றுமையாலே கைவந்தபடி பரிமாறினேனித்தனைபோக்கி, ஶா
ஸ்த்ரங்கள் ஆகாது என்று மீண்டிலேன். [illegible] அல்லாத வற்[உம
றோடு பரிமாறுமத்தை ஜநகபக்கலிலேயும் பரிமாறத்தேடும்.

(தெள்ளியேனானேன்) இப்படியிருக்கச்செய்தே ஸாராஸாரவிவே
கம்பண்ணி செய்யக்கடவது செய்து அல்லாதது தவிர்ந்துபோவா
ரைப்போலே விவேகமுடையேனானேன். (செல்கதிக்கமைந்தேன்)
நித்யஸம்ஸாரியாகைக் குறுப்பானவற்றைச் செய்துபோந்தநான்,[உரு
"இனி இவன் ஸம்ஸாரத்துக்கு ஆளாகமாட்டான், பரமபதத்துக்கா
ளாமித்தனை'' என்னும்படி சமைந்தேன். செல்லக்கடவதுயுண்டு-பரம
பதம், அங்குத்தைக்காளாம்படி பூர்ணனானேன். "கண்டவாதிரிதந்
தேன்'' என்றீர், "தெள்ளியேனானேன்'' என்றீர், வ்யாஹத பாஷ
ணமாயிருந்ததிஎன்ன (சிக்கெனத்திருவருள்பெற்றேன்) இனிமீளா[கூம
தபடி அருளைப்பெற்றேன். நீர்பெற்ற பேறுதானேதென்ன (உள்
ளெலாமுருகிக்குரல் தழுத்தொழிந்தேன்) உள்ளூ எலும்பும் நரம்பு
மறவுருகி, அதுதான் த்வநியில் தழுதழுப்பிலே தெரியும்படி யா
னேன். (உடம்பெலாம் கண்ணநீர்சோர) [ஆஹ்லாத ஶீதநேத்ராம்
புஃபுளகீக்ருதகாத்ரவாந்] உடம்படங்கலும், பஞ்சஸரமும் த்ரிஸரமு
மிட்டாப்போலே கண்ணநீர் வெள்ளமிட்டபடி. (நள்ளிருளளவுமித்
யாசி) விஷயாநுபவம்பண்ணிக் களித்திருக்கும் போதோடு, விஷ
யாநுபவம் பண்ணுகைக்கு அர்த்தார்ஜநம் பண்ணும்போதோடு வாசி
யற இவனுக்குத்திருநாமம்சொல்லுகையேயாத்ரையாகப்பெற்றேன்.ரு.

அ.—ஆறாம்பாட்டு. இத்தை நீர் போர ஆதரியாநின்றீர், அது தனக்கு அர்த்தமென்னென்ன ; சொல்லுகிறார். பாடத்தைஜபித்து அத்தாலே ஃபலம்பெறவிருத்தல், இத்தால் பாபத்தைப்போக்கி யோகத்துக்கு உடலாக்குதல் செய்கையன்றிக்கே, அர்த்தாநுஸந்தாநந்தாலே[ரு தமக்குப் பேறென்று பக்ஷமாகையாலே அர்த்தத்தைச் சொல்லுகிறார்.

வ்யா.— எம்பிரான்) எனக்கு உபகாரகன். (எந்தை) எனக்கு ஜநகன். (என்னுடைச்சுற்றம்) என்குடல்துடக்குடைய எல்லாவுறவு முறையுமானவன். (எனக்கரசு) என்னை ஈராசுதவிர்த்து ஆண்டவன். (என்னுடைவாணாள்) எனக்கு ப்ராணனானவன். (அம்பினால் வித்யாதி)[ய ஸங்கல்பத்தாலன்றிக்கே அம்பாலே, அரக்கர் நடுங்கும்படி நெருக்கி, அவர்களுயிரைப் போக்கின என் ஸ்வாமி ; "மாதாபிதா ப்ராதா" இத்யாதிப்படியே. (வம்புலாஞ்சோலை) வம்பு - பரிமளம். உலாவுதல் - வர்த்திக்கை. நித்யவஸந்தமான சோலையென்றபடி. (மாமதிள்) பெரிய மதிள். (தஞ்சமா மணிக்கோயிலே வணங்கி) தஞ்சமாக, அவனுக்[ரு தருபின அழகிய கோயிலிலே வணங்கி. மணி - அழகு. (நம்பிகாள்) ஸகலவிஷயத்திலுமுள்ளவையுற்று பூர்ணராயுள்ளீர். ஸகலஜ்ஞாநத்தில் பூர்ணராயுள்ளீரென்னுமாம். (உய்யவித்யாதி) உங்களைப்போலன்றியே, நான் உஜ்ஜீவிக்கும்படி. (நான் கண்டுகொண்டேனித்யாதி) ஸர்வ வியஸநங்களுமமானவனை என்னுடைய அநுஸந்தாநகாலத்திலே [உப நாமம். ... ... ... ... ... சா.

அ.—எழாம்பாட்டு. அல்லாதாரிருக்கிறார்கள் அவிசேஷஜ்ஞராகையாலே, விசேஷஜ்ஞராய் என்னோடு ஸஜாதீயராய்க் கவியாடித் திரிகிற நீங்களிறக்கிற தென்னென்கிறார்.

வ்யா.—(இல்பிறப்பறியீர்) அவர்கள் மாஹாத்ம்யத்திலே நின்ற நிலை அறியீர்கோள் ; அவர்கள் ஜந்மமறியீர்கோள். (இவரிவரென்றீர்) பண்டு க்ஷத்ரியராய் க்லேசப்பட்டுப் போந்தானொருத்தன் இப்போது ஜீவிக்கப்புக்கால், "இது இவனளவதன்றிக்கேயிருந்தது, இதுக்கு வேறேயொருவன் அடியாகவேணும்" என்று அறியமாட்டாதே ஸ்ரீயஃபதியைப்போலே பிறப்பேபிடித்து ஸ்ரீமானைப்போந்தானாக நினைப்புதிகோள். அன்றிக்கே, (இவரிவரென்னீர்) என்று ஒருசொல்லாய், ஒருவாசியறியீரென்னவுமாம். (இன்னதோர் தன்மையென்றுணரீர்) இவனுக்குள்ளவளவு இன்னது என்று அறியமாட்டீர். (கற்பகம்) நினையாதே கொடுக்கும் என்புதிகோள். (புலவர்களைகணென்று) விசேஷஜ்ஞராயிருப்பார் சிலர் அர்த்தித்து வந்தால் ஒளித்து[ரு ப்போமவனை, "எங்களுக்கு நிர்வாஹகன்" என்பர்கள். (உலகில் கண்டவாதொண்டரைப்பாடும்) லோகத்தில் நீசவ்ருத்திகளால் திரிவாரை, கண்டவாபாடும்-ப்ரதிபந்நங்களைச் சொல்லித் திரிகிற. (சொல்பொருளாளீர்) ஸப்தத்துக்கும் அர்த்தத்துக்கும் நிலவரான நீங்கள். சொல்லுடைமைக்கு உங்களிற்காட்டிலில்லை. ப்ரமேயஜ்ஞாநமுடையார் உங்களைத்தனையில்லை. (சொல்லுகேன் வம்மின்) உங்கள் ப்ரமேய

ஜ்ஞாநத்துக்கும் சொல்லுக்கும் பாத்தம் போரும்படியான விஷயத்தை நான்காட்டித்தர வாருங்கோள். (சூழ்புனல் குடந்தையே தொழுமின்) ஓராறும் படைவீடும் வேணுமே உங்களுக்குக் கவிபாடும்போது. ஆறும்மலையும் படைவீடு முள்ளிட்ட பரிகரங்களும்வேணுமே. (நற்பொருள்காண்மின்) நன்றான அர்த்தத்தைக் கண்டுகொள்ளுங்கோள். பேறும்தானேயாய் தன்னைத்தருவதும் தானேயாயிருக்கை. (பாடிநீருய்மினித்யாதி) வாச்யங்களில்தலையானத்தைக் காட்டித்தந்தேன், அதுக்கு வாசகமான திருநாமத்தைப்பாடி உஜ்ஜீவியுங்கோள். "யஃபரஸ்ஸமஹேஶ்வர:" என்றதிறே இதினுடைய ஸங்க்ரஹத்தை. வாசகங்களில்தலை - அகாரம்; வாச்யங்களில்தலை - கீழ் நான்சொன்னது. ... ... ... . . எ.

அ.—எட்டாம்பாட்டு. எங்கள்பூர்வவ்ருத்தத்தைப் பார்த்தால் நீர் சொல்லுகிற அர்த்தத்துக்கு நாங்கள் தேஶிகராக வல்லோமே? என்ன; கெடுவிகாள்!, நானன்றோ இவ்விஷயத்துக்கு யோக்யனாய் உங்களுக்கு உபதேஶிக்கும்படி யானேன், ஆனபின்பு இவ்விஷயத்துக்கு ஆளாகாதாருண்டோ என்கிறார்.

வ்யா.—(கற்றிலேன்கலைகள்) ஓராசார்யனைப் பின்சென்று அவனுச்சரிக்க அநூச்சாரணம் பண்ணிப் போராமையாலே, ஸாஸ்த்ரிய ஜ்ஞாந முண்டாய்த்ததில்லை. (ஐம்புலன்கருதும்கருத்துளே திருத்தினேன்மனத்தை) மநஸ்ஸை பரவிஷயமாக்கி விஷயங்களிலே ப்ரவணமாகிற பாஹ்யேந்த்ரியங்களை காதாசித்கமாகவாகிலும் விஷயங்களினின்றும்மாற்றி ப்ரத்யக்விஷயமாக்கினால் நல்வழி போகைக்குறுப்பாமிறே. ஸ்ரோத்ராதீந்த்ரியங்கள் விஷயங்களிலே யிழிந்து தான் நினைத்தபடியே போக மநஸ்ஸையும் அதுக்குறுப்பாக்கிப் போந்தேன் [உரு

(திருத்தினேன்மனத்தை) விஷயப்ரவணரானவர்கள் விஷயப்ராவண்யம் போராது என்று ஔஷதஸேவை பண்ணியிருப்பார்களிறே; அப்படியே, விஷயங்களிலே மநஸ்ஸை வஸிய முட்டிப்போந்தேன். (பெற்றிலேனதனால் பேதையேன் நன்மை) ஸாஸ்த்ரீயஜ்ஞாநமின்றிக்கே விஷயப்ரவணனாகப்போருகையாலே அறிவுகேடனாய் ஹிதசிந்தநம் பண்ணப்பெற்றிலேன். (பெருநிலத்தாருயிர்க்கெல்லாம்செற்றமேவேண்டித்திரிதருவேன்) எனக்கு நன்மை ஸம்பாதியாமையன்றிக்கே, பரஹிம்ஸை பண்ணும் விரகே சிந்தித்துப்போந்தேன். (பெருநிலத்தாருயிர்க்கெல்லாம்) மஹாப்ருதிவியி லாத்மாக்களுக்கெல்லாம், சினமேவேண்டி. (திரிதருவேன்) இதுவே பணியாகத்திரிந்தேன். (தவிர்ந்தேன்) ஹேது அறிந்திலேன், தவிர்ந்து கொடுநிற்கக் கண்டேன். (செல்கதிக்குய்யுமாறெண்ணி) செல்லக்கடவவழி - பரமபதம், அங்கே புக்கு உஜ்ஜீவிக்கும்படியை மநோரதித்து. ஆறு - வழி. (நல்துணையாகப்பற்றினேனடியேன்) "பாதேயம்புண்டரீகாக்ஷநாம ஸங்கீர்த்தநாம்ருதம்" என்னுமதத்தைப்பற்றினேன். (நாராயணா) ரஸாயநஸேவை பண்ணினேன். (நாராயணாவித்யாதி) "நயாமிபரமாம்கதிம்" என்கிறபடியே அக்கரைப்படுத்தும் வஸ்துவுக்கு வாசகமான நாமம். ... அ.

அ.—ஒன்பதாம்பாட்டு. நீர் இத்திருநாமத்தைப் போர ஆதரியாநின்றீர், இதென்ன நன்மையைத் தருமென்ன; இன்ன நன்மையைத் தருமென்கிறார்.

வ்யா.—(குலந்தரும்) ஸத்வம்ஶ ஸம்பந்தத்தை உண்டாக்கும். வம்ஶத்தால் தண்ணியானொருவன் வம்ஶத்தாலுயர்ந்தா னொருவனுடனே ஸம்பந்திக்க, இன்னானுடைய ஸம்பந்தி என்று இவனையும் உயர்ந்த குலத்திலே எண்ணாநின்றதிறே. (செல்வம் தந்திடும்) ஐஶ்வர்யத்தைத்தரும். *நின்னையேதான் வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்றன்னையே செல்வந்தான் வேண்டி வருமிறே. மோக்ஷஸ்ரீயைத் தருமென்றுமாம். (அடியார் படு துயராயின) ஸத்வத்வேஷஸஹ்ருதரா யிருப்பார் கர்மாநுரூபமாகப்படும் து:க்கங்களை யெல்லாம் ஸ்வல்பஸேஷமாக்கும். "ஆரே துயருழந்தார் துன்புற்றார்" இத்யாதி. (நீள்விசும்பருளும்) பரமபதத்தைக் கொடுக்கும். (அருளொடு பெருநில மளிக்கும்) அருளுடனேகூட, பெருநிலமுண்டு – பெரியஸ்யாநம் கைங்கர்யமாகிற பெரியபதம், அத்தைத்தரும். (வளந்தரும்) "ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டு நாம்" என்று இவனுக்கு ப்ரார்த்தநீயமான கைங்கர்யத்தையும் தரும். (வலந்தரும்) என்றாலும் அதுதன்னையேகாட்டும். அங்ஙனன்றியே, (வலந்தரும்) "ய ஆத்மதா பலதா:" என்று தன்னையுங்கொடுத்து தன்னை அநுபவிக்கைக்கீடான ஶக்தியையும் கொடுக்கும். அங்ஙனன்றிக்கே, (அருளொடு பெருநில மளிக்கும் வலந்தரும்) தன்னை ஆஶ்ரயித்தவர்கள் தங்களளவன்றிக்கே, தங்களுடனே ஸம்பந்தித்தார்க்கும், தங்களருளோடே கூட, பெருநிலமுண்டு - பரமபதம், அத்தைக் கொடுக்க வல்லராம்படியான ப்ரஸாதத்தைப்பண்ணும். (மற்றுந்தந்திடும்) இவனுக்கு ஹிதமாய் இவனறியாதவற்றையும், இவனுக்கிதுவேணும் என்று அவற்றையும் தானேகொடுக்கும். (பெற்றதாயினுமாயினசெய்யும்) "ஶரீரமேவ மாதாபிதரௌ ஜநயத:" என்று ஶரீரத்தளவிலேயிறே அவர்கள்; ஆத்மாவுக்கு ஸ்வரூபஜ்ஞாந விகாஸத்தைப் பிறப்பிப்பானவனேயிறே. "ஸஹிவித்யாதஸ்தம் ஜநயதி தச்ச்ரேஷ்டம்ஜந்ம" என்று – ஜ்ஞாந ப்ரதனானவனேயிறே. (நலந்தருஞ்சொல்லை) இந்த நன்மைக ளெல்லாவற்றையும் தருஞ்சொல்லை. (நான்கண்டுகொண்டேன் நாராயணாவித்யாதி) உறவறிந்த நான். ... ௯.

அ.—பத்தாம்பாட்டு. திருநாமம் சொல்லுகைக்குக்காலம் கழிந்ததென்னவேண்டா, சரமகாலத்திலே சொல்லவுமமையும், இந்த நன்மைகளெல்லாம் தருமென்கிறார்.

வ்யா.—(மஞ்சுலாஞ்சோலை) மஞ்சுகள்படிந்து ஸஞ்சரிக்கிற சோ
லை. (வண்டறைமாநீர்) "ஜலத்தினுடைய ரஸ்யதையாலே ஈக்கள்வண்
டோடு மொய்ப்பது" என்று ஆற்றுவரவுகளிலே சொல்லுவர்களாய்
த்துத் தமிழர். (மங்கையார்வாள்கலிகன்றி) திருமங்கையிலுள்ளார், ஆ
ழ்வார்வாளே தங்களுக்கு பலமாகவாய்த்து நினைத்திருப்பது. (செஞ்
சொலாலெடுத்ததெய்வநன்மாலை) அழகிய செஞ்சொற்களாலே தொ
டுத்த அப்ராக்ருதமான அழகிய மாலை. (இவைகொண்டித்யாதி) ஶ
ரீராவஸாநத்திலே யமவஶ்யதைக்கஞ்சாதே, இத்திருநாமத்தைச்சொ
ல்லுங்கோள். (துயர்வரில்நினைமின்) இவ்வருகுண்டான வ்யஸநங்கள்
வந்தபோதும் இத்தையே சொல்லுங்கோள். (துயரிலீர் சொல்
லிலும்நன்றாம்) மரணதஶையிலே சொல்லவும் நினைக்கவும் போமோ
வென்ன; ஶரீரக்லேஶமற்று அருகேயிருந்தார்சொல்லிலும்இவனுக்கு
நன்மையயக்கும். (நஞ்சுதான்கண்டீர் நம்முடைவினைக்கு) நம்முடைய
துஷ்கர்மங்களுக்கு, ஆற்றவொண்ணாதநஞ்சு. *தேனும்பாலுமமு [௰௫
துமாயதிருமால்திருநாமம், நம்முடைய ப்ராரப்தகர்மத்துக்குநஞ்சு;
இத்தைஉச்சரிபண்ணுங்கோள். ... ... ... ௰.

ஜீயர்திருவடிகளேசரணம்.

## முதற்பத்து - இரண்டாந்திருமொழி - வாடி. ப்ரவேஶம்.

ஸம்ஸார ஸ்வபாவத்தையும்தம்முடைய இதரவிஷய ப்ராவ [௨௰
ண்யத்தையும் அநுஸந்தித்து அஞ்சினவர்க்கு, அவ்வச்சமெல்லாம்
போம்படி, தன் நிர்ஹேதுககிருபையாலே என்னை விஷயீகரித்து, தன்
ஸ்வாமித்வத்தையும் எனக்குக்காட்டியருளினானென்றார்- கீழ்த்திரு
மொழியில்; "அம்பினாலரக்கர் வெருக்கொள நெருக்கி" என்று
ராமாவதாரம் ப்ரஸ்துதமாய்த்து, திருமந்த்ரமும் ப்ரஸ்துதமாய்த்து;
இத்திருமந்த்ரத்துக்கு அர்த்தமாகிறதுதான் - ஸ்வாமித்வ ஸௌலப்
யாதிகளிறே; செய்த்தலையிலே குடில்கட்டிக்கிடந்து நோக்கும் க்ரு
ஷகனைப்போலே ஆஶ்ரிதரிருந்த விடத்திலே உகந்தருளின நிலங்க
ளிலேவந்து நின்றருளி நோக்குகையாலே ஸ்வாமித்வம்ப்ரகாஶித்தது.
எதிர்த்தலைபாராதே அவஸரப்ரதீக்ஷனாய் அந்தர்யாமி ரூபத்தாலே [௫௰
யிருக்குமிது ஸ்வாமித்வ கார்யமிறே. அவ்வளவன்றிக்கே, இவனபே
க்ஷித்தபோதே இக்கண்ணாலே கண்டநுபவிக்கலாம்படி கோயில்களி
லேவந்து நிற்கிறஇதுக்கு மேற்படவில்லையிறே ஸௌலப்யத்துக்கு;
இப்படி ஸௌலப்யத்துக் கெல்லையான உகந்தருளின நிலங்க ளெ
ங்கும்புக்கு, உகந்தருளின நிலங்களுக்கெல்லையான ஹிமவானில் [௫௫
திருப்பிரிதியளவும சென்று, அவ்விடமேதுடங்கி அநுபவிப்பதாகத்
திருவுள்ளத்துடனே கூட்டுகிறார். ... ... ... *

அ.— முதற்பாட்டு. கீழ்-ராமாவதாரம் ப்ரஸ்துதமாகையாலே, வாலிவதம்பண்ணின சக்ரவர்த்தித்திருமகனெழுந்தருளி யிருக்கிற திருப்பிரிதியைச் சேரலாமென்று, திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார்.

வ்யா.—(வாலிமாவலத்து) மஹாபலத்தையுடைய வாலி. வால் என்று - மிடுக்குக்குப்பேர்; மிடுக்கையிட்டு இவனுக்கும் பேராய்த்து. மிடுக்குக்கு இவனை யெண்ணினால் பின்னையெண்ண விரலில்லாமல்நின்றுபோமித்தனை, இவனையொக்கஎண்ணலாவாரில்லை மிடுக்குக்கு. (உடல்கெட) அவனுடைய ஶரீரம்மங்க. (வரிசிலைவளைவித்து) அழகிய வில்லை வளைத்து. வரியென்று-அழகு. ஏலம் - நறுநாற்றம், கமழாநின்றுள்ள. (தண்டடமித்யாதி) நளிர்ந்து பரந்த பொழிலையுடைய இமயத்துள். (ஆலியித்யாதி) ஆலி - சிறுதூறல். சிறுதுளியை யுடைத்தான மஹாமேகங்களானவை நிர்க்கனத்தாலே முழங்க. ஆலிமாமுகிலதிர்தர, பீலிமாமயில் நடம்செய்யும். (அருவரை) ஒருவரால் தாவி யேறவரிதான மலையிலே. அருவரை முகட்டிலே, பீலித்தழையை யுடைய பெரியமயில் தன் கீழ்வயிறு மலைமுகட்டிலே அழுந்தும்படி யேறிநின்று கூத்தாடும். நடம்-கூத்து. (தடஞ்சுனைப்பிரிதி) தடம் - பெருமை. பெரிய சுனைகளையுடைய திருப்பிரிதியைச் சென்றடை நெஞ்சே. ... ... ... ... ௧

அ.— இரண்டாம்பாட்டு, வாநரஜாதியைக் கொண்டு ஸேதுபந்தம்பண்ணி லங்கையை யழித்த சக்ரவர்த்தித்திருமகனிருக்கிற திருப்பிரிதியைச் சென்றடை யென்கிறார்.

வ்யா.—(கலங்கமாக்கடல்) பெரிய கடலானது கலங்க. "சாபமாநய" என்றபோது கடல் கலங்கினபடி. (அரிகுலம் பணிசெய்ய) குரக்குத்திரள் பணிசெய்ய. குலம்—திரள். "குரக்கினப்படைகொடு" இத்யாதி, "குரக்கினத்தாலே குரைகடல்தன்னை" இத்யாதி. (அருவரையணைகட்டி) பெரிய மலைகளாலே கடலை அணைகட்டி. "கல்லார் கடலையடைத்து" இத்யாதி. (இலங்கைமாநகர் பொடிசெய்த வடிகள்) லங்கையாகிற மஹாநகரத்தைப் பாழாகப் பொடிசெய்த ஸர்வஸ்வாமிகள். (இருந்த நல்லிமயத்து) ராவணவதம் பண்ணின ஶ்ரமமாற வெழுந்தருளி யிருக்கிற அழகிய ஹிமவானிடத்து. விலங்கல்-மலை. மலைபோலே வளர்ந்து. (விறல்விரும் சினத்தன வேழங்கள் துயர்கூர) பர்வதோபமமாய் மிடுக்கையுடைத்தாய் மிக்கசினத்தையுடைத்தான ஆனைகள்மிகவும் [illegible]விக்க. (பிலங்கொள்வாளெயிற்றரியவைதிரிதருபிரிதி) பிலத்வாரம் போன்ற பெரிய வாயையும் ஒளியையுடைத்தான பற்களையுமுடைய ஸிம்ஹங்கள் ஸஞ்சரிக்கிற திருப்பிரிதியை அடை நெஞ்சே. ... ... ௨

அ.—மூன்றாம்பாட்டு. நப்பின்னைப் பிராட்டியுடைய ஸம்ச்லேஷ விரோதியைப் போக்கின க்ருஷ்ணனெழுந்தருளி யிருக்கிற திருப்பிரிதியை அடை யென்கிறார்.

வ்யா.—(துடிகொள் நுண்ணிடை) துடியொத்த நேரிய இடை. (சுரிகுழல்) சுருண்டகுழல். (துளங்கெயிறு) ஒளிவிடுகிற ஊதேபங்க்தியையுடைய. (இளங்கொடிதிறத்து) "பதிஸம்யோகஸுலபம் வய:" என்கிறபடியே ஒருகொள்கொம்பு தேட்டமான பருவத்தையுடைய நப்பின்னை விஷயமாக. (ஆயரித்யாதி) இடையருடைய இடியொத்த வெவ்விய த்வநியையுடைய ருஷபங்களைத் திரளாக ஒருக்காலே கொன்றவனிருக்கிற நல்ல ஹிமவானில். (கடிகொளித்யாதி) பரிமளம் மிக்கு நன்றான பூவைப் படுக்கையாகக் கொண்டு. அமளி-படுக்கை. மணியறை-மாணிக்கப்பாறை. அறையென்று - பாறை. மாணிக்கப்பாறையிலுதிர்ந்த நல்லவேங்கைப்பூப்படுக்கையின் மேலே. (வேழம் பிடியினோடு வண்டிசை சொலத் துயில்கொளும் பிரிதி) களிற்றானை பெண்ணானையுடன், வண்டுகளிசைபாட, அப்பாட்டுத் துடைகுத்தாகத் துயிலும் பிரிதியை யடைநெஞ்சே. ... ... ௩.

அ.—நாலாம்பாட்டு. ஆச்ரிதனான ப்ரஹ்லாதன் ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே உதவினவன் வர்த்திக்கிற தேசத்தை அடைஎன்கிறார்.

வ்யா.—(மறங்கொளாளரியுருவென வெருவர) க்ரோதந்தானொருவடிவு கொண்டாப்போலே யிருக்கிற ஸிம்ஹவடிவைக்கொண்டு, வெருவர - பயப்பட. [மூவுலகும் பிறவுமனைத்தும் அஞ்ச] கேட்டார் கேட்டாரெல்லாம் பயப்பட. "பீஷணம்" என்றும் "ம்ருத்யு ம்ருத்யும்" என்றும் சொல்லுகிற வடிவுதானே பயாவஹமாயிருக்கை. (ஒருவனதகல் மார்வம் திறந்து) ஒரு......† த்துக்கொருவன். (அகல்மார்வம்) திருவுகிருக்கு இரைபோரும்படி வரபலம் ஊட்டியாக வளர்ந்த மார்வு. (திறந்து) திறக்கை - நிக்குகையாய், மார்வை நிக்குகையாவது - பிளந்தென்றபடி. (வானவர் மணிமுடிபணிதர) தேவர்கள் அபிஷேகங்களுடனே வந்து திருவடிகளிலே முடிபடவிழுந்து ப்ரணாமம் பண்ணவிருக்கிற நல்ல ஹிமவானில். (இறங்கி யேனங்களித்யாதி) பன்றிகளானவை படிந்து, வளைந்த கொம்புகளாலே யிடந்திட, அருகேகிடந்து அக்நிபோலே ஜ்வலியாநிற்கும் மஹார்க்கமான ரத்நங்கள். (அருவியொடு திரு) அருவிகளோடே அந்த ரத்நங்கள் மலைகளினின்று மிழிகிற பிரிதி சென்றடை நெஞ்சே. ... ௪.

அ.—அஞ்சாம்பாட்டு. அவ்வவதாரங்களுக்கடியாகத் திருப்பாற்கடலிலேவந்து கண்வளர்ந்தருளுகிறபடியை அநுஸந்திக்கிறார்.

வ்யா.—(கரைசெய்மாக்கடல் கிடந்தவன்) ஸகலாத்மாக்களையும் கரையேற்றுகைக்காகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தவன். (கனைகழலமரர்கள் தொழுதேத்த) நூபுராதி த்வநியையுடைய திருவடிகளை ப்ரஹ்மேசாநாதிகள் தொழுது ஸ்தோத்ரம்பண்ண. (அரைசெய்

---

† இவ்விடத்தில் விட்டுப்போன க்ரந்தத்தை கோசாந்தரங்களில் காண்க.

மேகலை) திருவரை பூத்தாப்போலே யிருக்கிற. (அலர்மகளித்யாதி) பெரியபிராட்டியாருடனே பொருந்தியிருக்கிற நல்லஹிமவானிலே. (வரைசெய்மாக்களிறித்யாதி) மலையை யானையாக வகுத்தாப்போலே பெரிய வடிவையுடைய ஆனைகளானவை. ( இளவெதிர்[ரு வளர்முளை) வெதிரிலே-மூங்கிலிலே. வெதிர்வளர்முளை - தடிந்தெழுந்த மூங்கிலிடை முளைத்து வளருகிற இளங்குருத்தைப் பிடுங்கி. (அளைமிகுதேன் தோய்த்து) மலைமுழஞ்சுகளிலேவைத்தபெரிய தேனையழித்து, அதிலே மூங்கிற்குருத்தைத் தோய்த்து. (பிரசவாரி தன்னிளம் பிடிக்கருள்செயும்) பிரசம்-தேன். வாரி யென்பது - வெ[ய ள்ளம். தேனிலே மூங்கிற் குருத்தைத் தோய்த்துக் கொடுத்துத் தன்னிளம் பிடிக்கு, தேன்வெள்ளத்தையும் தண்ணீராக விக்காமல் கொடுக்கு மென்னுதல்; பிரசமென்று - தேனீயாய், மிக்கதேனையழித்து அதில் ஈயை வாரிப்பொகட்டு, அத்தேனிலே இளவெதிர் முளையைத் தோய்த்துக் கொடுக்குமென்றுமாம் : அப்படிப்பட்ட [யரு பிரிதியைச் சென்றடை என்கிறார். ... ... ... ரு.

அ.—ஆறும்பாட்டு. திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளின அப்பொரமனியோடே இங்கே வர்த்திக்கிறபடியை யநுஸந்திக்கிறார்.

வ்யா.—(பணங்களாயிரமித்யாதி) ஸஹஸ்ர ஃணனான அழகிய திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேஶ்வரனே ! என்று. (இணங்கிவானவரித்யாதி) ப்ரஹ்மேஶாநாதிகள் திரண்டு, தங்களுடைய அழகிய அபிஷேகங்களானவை திருவடிகளிலே பணியும்படி யிருந்த அழகிய ஹிமவானில். (மணங்கொளித்யாதி) நறுநாற்றம் கமழாநின்றுள்ள குருக்கத்தி பெரிய கொடிகளை வீசி நிமிர்ந்து, அவை மேவெடாத்தைச்சென்றுமேவத்தைக்கொள்கொ[உரு ம்பாகப் பற்றி. (பிணங்கு பூம்பொழில்) செருந்திக் கொடிகளும் சோலைப்பணைகளும் தன்னிலே செறிந்த பூம்பொழி லென்னுதல்; "சலங்கொண்டு மலர்சொரியும்" என்கிறபடியே - கொம்பும் கொடியும் இசலிப்பூக்கும் பொழிலென்னுதல். (நுழைந்து வண்டிசைசொலும்) முக்தர்ஸாமகாநம் பண்ணுமாப்போலே, † இவ்வண்டுக[கூய ளும் இப்பொழிலிலே நுழைந்து புக்கு மது பாநம் பண்ணிக் களித்து இசைபாடும் பிரிதி சென்றடை நெஞ்சே. ... சு

அ.—ஏழாம்பாட்டு. (கார்கொளித்யாதி) தேவர்கள் புஷ்பவர்ஷ்டி பண்ணி ப்ரணாமம் பண்ணும்படி ஸுலபனா யிருக்கிற திருப்பிரிதியை நெஞ்சே அடை என்கிறார்.

வ்யா.—(கார்கொள்வேங்கைகள்)* மாமேல் மஞ்சுபடிந்தவேங்கைகளென்னுதல் ; காரென்று - பெருமையாய், பெருத்துத் தழைத்த வேங்கையென்னுதல். (கனவரைதழுவிய) பெரிய வரையைத்தழுவிய. (கறிவளர்கொடிதுன்னி) கறியென்பது - மிளகு. பெருக்கக்காய்த்து வளருகிற மிளகுக்கொடி நெருங்கி. (போர்கொள்வேங்கைகள்)

† இங்கேவிட்டிருக்கும் சிலபதங்களை கோஶாந்தரங்களில்கண்டுகொள்வது.

யானையுடனே பொருகிற வேங்கைப்புலிகளானவை. (புனவரைதழு விய) புனங்களையுடைத்தான மலைமுழஞ்சுகளிலே, துணையுடனே யணைந்து கிடக்கும். (பூம்பொழில்இமயத்துள்) (ஏர்கொள்பூஞ்சுனைத் தடம் படிந்து) அழகியபூக்களை யுடைத்தான சுனைகளின்கரையிலே[கு யிருந்து. படிதல் – இருத்தல். (இனமலரெட்டு) * அஷ்டஸா புஷ்பங் களைச் சொல்லுதல்; கைக்கெட்டின பூக்களெல்லா மிட்டென்னுதல்; "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்கிறபடியே. (இமையோர்களி த்யாதி) தேவர்கள், ஆயிரந் திருநாமங்களையுஞ்சொல்லி ஸ்தோத்ரம் பண்ணித் திருவடித்தொழும் பிரிதிசென்றடை நெஞ்சே. ... எ.

அ.—எட்டாம்பாட்டு. ஸர்வஸ்மாத்பரனாய் ஜகத்காரண பூத னை ஸர்வேஶ்வரன் இங்கே யிருந்து அநுஸந்தாநமாக என்றும் ப்ரஹ் மேஶாநாதிகள்வந்துதொழுகிறபிரிதிசென்றடைநெஞ்சே என்கிறார்.

வ்யா.—(இரவுகூர்ந்து) ஆதித்ய கிரணப்ரவேஶமில்லாமையாலே ராத்ரியேயா யிருக்கும். (இருள்பெருகிய வரைமுழை) இருள்மிக்க [மிரு மலைமுழஞ்சுகளிலே. (இரும்பசியதுகூர) பெரும்பசியானது மிக. (அரவமாவிக்கும்) அம்மலைமுழஞ்சுகளிலே கிடக்கிற மலைப்பாம்புக ளானவை பசியாலே இளைத்து நெடுமூச்செறியும். ஆவிக்கை-நெடு மூச்செறிகை. (அகன்பொழில்தழுவிய) உள்ளான சோலையாலே தழுவியுள்ள.ஒருவரால்ப்ரவேஶிக்கவரிய மலையாகிற ஹிமவானி[டமி லே. (பரமனித்யாதி) ஸர்வஸ்மாத்பரனாய் ஜகத்காரணபூதனா யிருந் துள்ள ஸர்வேஶ்வரன், எங்களுக்காக அழகிய காளமேகம் போன்ற வடிவழகோடேயிங்கேயெழுந்தருளியிருந்ததே! என்று, தேவர்கள், ப்ரஹ்மாவோடேகூடச்சென்று திருவடித்தொழும் ஸர்வஜ்ஞ, ரமி.(பெ ருந்தகை) ஸர்வஸ்வாமி; அவனிருக்கிற பிரிதிசென்றடை நெஞ்சே.அ.

அ.—ஒன்பதாம்பாட்டு. திருநாமத்தைச் சொன்னாரை ரக்ஷிக்கைக் காகத் திருப்பிரிதியிலே யிருந்தான், அவனைச்சென்றடை நெஞ்சே என்கிறார்.

வ்யா.—(ஒதியித்யாதி) ஓதியாயிரந் திருநாமமென்கிறது - நாரா யண னென்ற திருநாமத்தை. *ஓராயிரமா யுலகேழளிக்கு மதிறே[டமி அது. திருநாமத்திலே அர்த்தாநுஸந்தாநத்தை யறிந்தவர்களுக்கு. (உறுதுயரடையாமல்) வந்து கிட்டுகிற, துயர் – உத்தராகம், தம் பூர்வாகம்,இவையொன்று மிவனை ஸ்பர்ஶியாதபடி யருளின ஸ்வாமி யெழுந்தருளி யிருக்கிற அழகிய ஹிமவானில் (தாதுமலிகிய பிண்டி விண்டலர்கின்ற) பிண்டி-அசோகு.பிண்டித்தாதும் சுண்ணமும் மிக்கி ருந்துள்ள பூக்கள்அலர, அதில் தேஜஸ்ஸை. (தழல்புரையெழில் நோக்கி) அக்நிஜ்வாலையை யொத்த அழகைப்பார்த்து. (பேதைவண்டு களெரியென வெருவரு) பைதலாய் விஷயவதறியாத வண்டுகள் அக்நி யென்றஞ்சும் திருப்பிரிதியைச் சென்றடை நெஞ்சே. ... ௯.

அ.—பத்தாம்பாட்டு. இத்திருமொழியை அப்யஸிப்பார்க்கு தாபத்ரயாதிகளால் வரும்து:க்கம் வாராதென்கிறார்.

வ்யா.—(கரியமாமுகிற்படலங்கள் கிடந்தலைமுழங்கிட) கறுத்துப்பெருத்த மேகஸமூஹங்கள் பர்வதஶிகரத்திலே கிடந்து முழங்க. படலம்-திரள். அம்முழக்கத்தைக்கேட்டு, யானைகள் பிளிறுகிறனவாகக்கொண்டு. (பெரியமாசுணம்) மாசுணமாகிறது - பெரும் பாம்பு. (வரையெனவித்யாதி) மலைநகர்ந்தாப்போலே கரிய முகிற்கணத்தை யானையாக நோக்கிப் பேர்ந்து போகிற திருப்பிரிதியிலிருக்கிற ஸர்வேஶ்வரனை. (வரிகொள் வண்டறைபைம்பொழில்) வரி-அழகு. அழகிய வண்டுகள் பாடாநின்றுள்ள அழகிய பொழில். பைம்மை - அழகும், குளிர்த்தியும், பரப்பும். இப்படிப்பட்ட பொழிலையுடைய திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகரான விவருடைய இத்திருமொழியில். (அரியவித்யாதி) அருமை - பெருமை யுடைத்தான, இனிய இசையைப்பாடும்அநந்யப்ரயோஜநர்க்கு.(அருவினையடையாவே)து:க்கங்கள் இவனைச்சேராது. ... ... ... ௰.

ஜீயர்திருவடிசரணம்.

முதற்பத்து - மூன்றாந்திருமொழி - முற்றமூத்து. ப்ரவேஶம்.

தந்திருவுள்ளத்தைக்குறித்து,திருப்பிரிதியை ஆஶ்ரயி என்று உபதேஶித்தார்;அதுதம்த்வரைக்கீடாகத்வரித்ததில்லை;கெடுவாய்! நாமிருக்கிறவிருப்பின்பொல்லாங்குகண்டாயே, கடுகஒருக்ஷணம்முற்பட்டதுடலாகஆஶ்ரயிக்கபாராயென்கிறார்.கீழ்-திருமந்த்ரத்தைஅநுஸந்தித்தார்; அக்ஷரம்,மந்த்ரப்ரதிபாத்யமான அர்த்தத்தை அநுஸந்தித்தார்;மந்த்ரத்ரஷ்டாவானவனிருந்ததேஶத்தை ஆஶ்ரயிப்போமென்கிறார். திருமந்த்ரந்தன்னை அநுஸந்திப்பார்க்கு ப்ரதிபாத்யவஸ்துவேயாகி, ருஷி ச்சந்தோ தேவதைகளென்ன,பீஜஶக்திகளென்ன,ஶோஷணதஹநாதிகளென்ன, இவையெல்லாம் அநுஸந்தேயமாகக் கடவது. அது வேண்டுவானென்னென்னில்; "நமோநாராயணாயவென்று-பரமாத்மனைச்சூழ்ந்திருந்தேத்துவர்" என்னும் இம்மந்த்ராநுஸந்தானம்பண்ணுவார் நித்யஸூரிகளாய் அவர்களுடையயாத்ரையாய்த்துஇது; அத்தையிறே முமுக்ஷுகையான ப்ரக்ருதிவஶ்யனானவிவன் அநுஸந்திக்கப்பார்க்கிறது; ஆகையாலே அவர்களோபாதியாகத் தன்னுடைய ஶரீரத்தையும் ஸாவித்து அநுஸந்திக்கைக்காக ஶோஷணாதிகள் வேண்டுகிறது; இனி ருஷி ச்சந்தோ தேவதையை யநுஸந்திக்கிலும் இம்மந்த்ரத்திலுண்டான ஆதராதிஶயத்தாலே பீஜஶக்திகளை யநுஸந்திக்கிறது மோக்ஷப்ரதமென்று அவ்வழியிலே யிவனுக்கும் விஶ்வாஸம் பிறக்கைக்காக. கீழ் - "பிரிதி சென்றடை நெஞ்சே" என்றார்;

க்ரமத்திலே செய்கிறோம் என்று ஆறியிருந்தது நெஞ்சு; கெடுவாய்! ப்ரக்ருதி ஸம்ஸ்ருஷ்டராயிருப்பார்க்கு அப்படி செய்கிறோம் என்றாறியிருக்கப்போமோ, அப்ராக்ருதஸரீரபரிக்ரஹம் பண்ணினார்க்கன்றோ பின்னைச் செய்கிறோமென்றாறியிருக்கலாவதுஎன்று, இங்ஙனே, ப்ரக்ருதியினுடைய அஸ்திரதையையும், விஷயங்களினுடைய தண்மையையும், பற்றப்படுகிற விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தையும் சொல்லி, இருந்தபடியிதுவானபின்பு ஒருகைகால் முறியவாகிலும் ஒருக்ஷணம் முற்பட்ட துடலாக ஆஸ்ரயிக்கப் பாராயென்று திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார். ... ※

அ·—முதற்பாட்டு. (முற்றமூத்து) ஹிமவானில் திருப்பிரிதியை யாஸ்ரயியென்று திருவுள்ளத்தைக் குறித்து உபதேஸித்தார்; அது தம்த்வரைக்கநுரூபமாக மேல்விழாதே திமிர்த்திருந்தது; கெடுவாய்! அங்கே ஸ்ரீவதரியை ஆஸ்ரயிக்க வாராயென்கிறார்.

வ்யா.—(முற்றமூத்து) மூப்பதெல்லாம்மூத்து (கோல்துணை[டுரு யா) முன்பு தானெல்லார்க்கும் ஆஸ்ரயமாகவிறே நினைத்திருப்பது. "துன்னுகுழல் கருநிறத்தென் துணையே" என்று ஒரு பரமசேதநனைத் துணையாகப் பற்றுகிறானுமன்றே; ஒருவிறகையிறே துணையாகப்பற்றிற்று.—நஞ்சீயர் ஸந்யஸித்தருளுகிறவன்று "ஜன்மஸயாரணம்பண்ணும்மந்த்ரம்—நீ எனக்குமித்ரமாய்எல்லா ரக்ஷணை[உயங்களும் பண்ணவேணும் என்றாய்த்து; அத்தைக்கேட்டு, ஒருஸர்வஜ்ஞன் ஸர்வஸக்தி பரமசேதநனை ஓராசார்யன் முன்னாக இவ்வார்த்தையைச் சொல்லிவைத்து இக்காஷ்டத்தையும் இவ்வார்த்தை சொல்லும்படியான இவ்வாஸ்ரம ப்ராப்திதானென்! என்றிருந்தேன்காண்" என்றருளிச்செய்வர். (முன்னடிநோக்கிவளைந்து) வளைகிறா[உநினும் ஒருஸாத்விகன் காலில் வளையாதே, தன் புறவடியை நோக்கிவளைந்தானித்தனை. (இற்றகால்போல்தள்ளி) லங்கிகள் கட்டுக்குலைகையாலே முறிந்த கால்போலே வசமற்றுக் கையாலே யெடுத்து முன்னே தள்ளி. (மெள்ளவிருந்து) அந்த ஆயாஸம் பொறாமல் மெள்ளஇருந்து. கோலையூன்றி, முதுகையூன்றி, முழங்காலையூன்றி, நிலத்தையூன்றி, இப்படியிறே யிருப்பது. (அங்கிளையாமுன்) அப்படியிருந்தது தான்பொறாமல் இளைக்குமாய்த்து. இச்க்லேஸங்கள் வருவதற்கு முன்னே. (பெற்றதாய்போல் வந்தபேய்ச்சி) யஸோதைப்பிராட்டி தேவகிப்பிராட்டியைப்போலே பாவித்து வந்தபூதனை. (பெருமுலையூடுயிரைவாங்கி) பெரியமுலைவழியே இவளுயிரைப்பாலுட[கூடுனே வற்றும்படி வாங்கி யமுதுசெய்தவனுடைய ஸ்ரீவதரியை வணங்குவோம்வா என்கிறார். ... ... ... க.

அ.—இரண்டாம்பாட்டு. நம்மை முன்பு ஆதரித்தவர்கள் அநாதரிக்கும்படி ஶரீரம் ஜரிப்பதுக்கு முன்னே ஸ்ரீவதரியை வணங்குவோம்வா என்கிறார்.

வ்யா.—(முதுகுபற்றிக்கைத்தலத்தால்) நிமிரநின்றவாறே, தௌர்பல்யத்தாலே ஶரீரபாரம் பொறுக்கமாட்டாதே முதுகுநோமே, நொந்தவாறே முதுகை ஒருகையாலேபற்றி. (முன்னொருகோலூன்றி) மற்றைக்கையாலே, முன்னடியிலே ஒருகோலை யூன்றி. (விதிர்விதிர்த்து) நடுங்கி நடுங்கி. (கண்சுழன்று) கண்ணுஞ்சுழலையிட்டு. (மேற்கிளைக்கொண்டு) மேல்மூச்செறிந்து. (இருமி) இவரிப்படி யிளைத்தவாறே, கோழையாரும் முகங்காட்டுவரே, அத்தாலே இருமி. (இதுவென்னித்யாதி) தூரத்திலே இவரைக்கண்டவாறே, இதுவென்! - இங்குவருகிறதென்! என்று தங்களிலே சொல்லி, கிட்டினவாறே அப்பா! மூத்தபடியென்! என்று சிரித்து, முன்பு இவனை யாதரித்துப் போந்த யுவதிகள் ஏசாமுன். (மதுவித்யாதி) மதுபாநம் பண்ணி வண்டுகள் செருக்கிப் பண்பாடாநின்றுள்ள வதரியை ஆஶ்ரயிப்போம். ... ... ... ... ... ௨

அ.—மூன்றாம்பாட்டு. ஶரீரத்துக்குத் தளர்ப்பாடானதில் வதரியை வணங்காயென்கிறார்.

வ்யா.—(உறியித்யாதி) ஶரீரம் மாம்ஸளமாயிருக்குமே பால்யத்தில்; வார்த்தகத்திலே அதுபசையற வுலர்ந்தவாறே, உறிக்கயிறு வரித்தாற்போலே உடம்பு நரம்பெழுமே. (ஊன்தளர்ந்து) மாம்ஸம் க்ஷயித்து. (உள்ளம்வெள்கி) நெஞ்சானது விஷயங்களிலே ஆசையிக்கு; “வெள்குதல்-காமனைப்படரும்” என்றானே. அன்றியே, (எள்கி) என்று பாடமான போது, எள்குதல்-நடுபாடாய், நெஞ்சு தளர்ந்தென்றபடி. (நெறியை நோக்கி) நடுங்கி நடுங்கி நின்று, போகப்புகுகிற வழியின் தூரத்தைப்பார்த்து, அந்த ஆயாஸம் பொறாமல் கண்ணுஞ்சுழலையிட்டு நின்று. (நடுங்காமுன்) அந்த ஆயாஸம் பொறாமல் நடுங்காமுன்; அறிதியாகில், நெஞ்சமே! ஸ்நேஹத்தை யுடையையாய். (பிரநாமம்சொல்லி) அவன் திருநாமங்களிலே, வேண்டியிருந்ததொரு திருநாமத்தைச்சொல்லி. (வெறிகொள் வண்டு பண்கள் பாடும்) நாறுநாற்றத்தை யுடைய வண்டுகள் மதுபாநமத்தமாய் பண் பாடாநின்றுள்ள ஸ்ரீவதரியை வணங்க வாராயென்கிறார். ... ... ... ... ... ௩.

நாலாம்பாட்டு. (பீளைசோரக் கண்ணிடுங்கி) கண்கள் இமை விழுந்து ஸங்கோசித்துப் பீளைபாய்ந்து. (பித்தெழ மூத்திருமி) பிச்சேறினாற்போலே சொல்லுத்தெரியாதே சொல்லும்படி சித்தஸ்வலநம் பிறக்கும்படி ஜரித்து. (தாள்கள் நோவத் தம்மில் முட்டி) நடக்கப்புக்கவாறே, நெகிழ்த்துக் காலிடமாட்டாமே, முழந்தாள்கள்

தன்னிலே யடித்து. (தள்ளிநடவாமுன்) இப்படிக்குத் தள்ளித்தள்ளி நடவாமுன். (காளையாகிக்கன்றுமேய்த்து) பிள்ளையாய் கன்றுகளை மேய்த்து, பக்வனால் பசு மேய்க்கவேணுமே; * கன்று மேய்த்தினி தூகந்தகாளையிறே. (குன்றெடுத்தன்று நின்றான்) இந்த்ரன் கல்வர் [ரு ஷித்தவன்று, கல்லெடுத்துக்காத்து நின்றான். (வாளையித்யாதி) அருக் கயமாகப் பெரிய தடாகங்களிலே வளருகையாலே ஆனைக்கன்றுபோ லே செருக்கி உகளிக்கிற குளிர்ந்ததடாகங்களாலே சூழப்பட்டவத ரியை வணங்குவோம் வா என்கிறார். ... ... ச.

அ.—அஞ்சாம்பாட்டு. பால்யத்தில்விஷயாநுபவம்பண்ணின படி களைக்கிர்த்தித்து அதுவே காலக்ஷேபமாய் முடிந்து போவதற்கு முன்னே, ஸ்ரீவதரியை யாஸ்ரயிப்போம்வா என்கிறார்.

வ்யா.—(பண்டுகாமரானவாறும்) பூர்வத்தில் தான் ஸ்த்ரீகளுக்கு ஆதரணீயனாய்ப் போந்தபடியும். (பாவையரித்யாதி) ஒருபருவத்தில் பெண்களுடைய வாழ்ச்சித்தத்தை ஸ்ருஜித்தபடியும். (வாழ்ந்தவாறும்) தான் ஜீவித்தபடிகளும். (ஒக்கவுரைத்திருமி) இருமலொக்க அவற் றையும் சொல்லி. பூர்வவ்ருத்தத்தைச் சொல்லத்துடங்கி, நடுவே இருமல் வந்தால் இருமி, அநந்தரமாக விட்டுரையிலே சொல்லி, இப்படி இருமலோடொக்க உரைத்து. (தண்டுகாலா வூன்றியூன்றி) தண்டமேகாலாக வூன்றியூன்றி. (தள்ளிநடவாமுன்) இப்படி உடம்[உட பைத் தள்ளித்தள்ளி நடப்பதற்கு முன்னே. (வண்டுபாடுமித்யாதி) திருமேனியில் ஸ்பர்ஶத்தாலே மது ஸ்யந்திக்கிற திருத்துழாயிலே மதுபானம் பண்ணி வண்டுகள் பாடாநின்ற திருத்துழாய் மாலையை யுடையவன் வர்த்திக்கிற திருவதரியை வணங்குவோம். ... ரு.

அ.—ஆறாம்பாட்டு. நம்மை விஷயீகரிக்கைக்கு முற்பாடனாய்வந்த ஸ்ரீவதரியை வணங்குவோம்வா என்கிறார்.

வ்யா.—(எய்த்தவித்யாதி) வார்த்தை சொல்லவும் மாட்டாதே யிளைத்து, நடுவேசளையிரைக்க ஏங்கியேங்கி யிருமி, ஶரீரமும் தளர் ந்து. (பித்தர்போலச் சித்தம்வேறாய்) ஶ்ராந்தரைப்போலே நெஞ்சு கலங்கி. (பேசிஅயராமுன்) சிலவார்த்தைகளை அநந்விதமாகச்சொ[கூட ல்லி அயர்வதுக்கு முன்னே. (அத்தனித்யாதி) எனக்கு ஜநகனுமாய், உத்பாதகனுமாய், என்னை விஷயீகரிக்கவந்து நிற்கிறவன். (ஆழ்கடலைக் கடைந்த) மஹோததி என்கிறகடலை, ஒரு தாழியில் தயிரைக்கடையு மாப்போலே அநாயாஸேந கடைந்த. (மைத்தவித்யாதி) மைமூரி போன்ற தேஜஸ்ஸை யுடைய வடிவழகாலே என்னை யெழுதிக்கொ ண்டவன் ஸ்ரீவதரியை வணங்குதுமே. ... ... சா.

அ.—ஏழாம்பாட்டு. நம்முடைய பொல்லாங்கு சிரியாதே ஆஶ்ரிக்குமவன் வர்த்திக்கிற வதரியை வணங்குவோம்வா என்கிறார்.

வ்யா.—(பப்ப!அப்பர்மூத்தவாறு) பப்ப! என்று சூலைப்புண்டு நடுங்குமாப்போலே நடுங்கும்படியென்! என்று.(பாழ்ப்பது) பாழுமான ஶரீரம். (சீத்திரளையொப்ப) க்ரந்திகள் சீமுற்றினால் இறுகியிருக்குமாப்போலே யிருந்த. (ஐக்கள்போதவுந்த) சீக்கட்டிபோலே ஶ்லேஷ்மம் தள்ள. (உன்தமர்காண்மினென்று) பருவத்திலவனுக்கு நல்லராயிருந்த நீங்கள் பாரீகோள் என்று. (செப்புநேரித்யாதி) செப்பொத்திருப்பதாய் விரஹஸஹமல்லாத மார்தவத்தை யுடையவர் முலைகள்தாங்கள் சிரிப்பதுக்கு முன்னே. (வைப்பித்யாதி) நமக்குச்செய்நிதியுமாய் ஐஶ்வர்யமுமானவன் வர்த்திக்கிற ஸ்ரீவதரியை வணங்குவோம்வா. ... ... ... ... ... எ

அ.—எட்டாம்பாட்டு. அவனிதைகள்பக்கலிலே, நாஶஹேதுவாம்படியான ஸ்நேஹத்தைப் பண்ணாதே, நமக்கு உஜ்ஜீவிக்கலாம்படி ஸ்ரீவதரியிலே ஸ்நேஹத்தைப் பண்ணி வணங்குவோம்வா என்கிறார்.

வ்யா.—(ஈசிபோமின் ஈங்கிரேன்மின்) வருவார்க்கு விரோதமாமே இவன் புக்கிருந்தவாறே; அதுக்காக, சுணைகெட்டோ இங்கிருக்கிறதென்? என்பர்கள். (இருமியிளைத்தீர்) இருமலாலே போர இளைத்தீர். (உள்ளம்கூசியிட்டீர்) நெஞ்சு அஞ்சினீர். (என்றித்யாதி) என்று இப்படி சொல்லுமவர்களாய், குவளைப்பூப்போன்ற கண்ணழகையுடையவர்கள் பக்கல், நமக்கு நாஶகரமான ஸ்நேஹத்தைத் தவிர்ந்து. (நன்னெறிநோக்கலுறில்) நல்வழி போக வேண்டில். (வாசமித்யாதி) பரிமளம் மிக்க திருத்துழாயை யுடையவன் வர்த்திக்கிற வதரியை வணங்குவோம்வா. ... ... ... ... அ.

அ.—ஒன்பதாம்பாட்டு. ஶரீரமானதுதான் ஜரித்து நெஞ்சு கலங்குவதுக்கு முன்னே ஸ்ரீவதரியை வணங்குவோம்வா என்கிறார்.

வ்யா.—(புலனித்யாதி) இந்த்ரியங்கள் ஸ்வம்ஸ்வம் விஷயங்களை க்ரஹிக்கமாட்டாதபடி ஶரீரத்திலே ஜரித்து. (போந்தித்யாதி) முன்பு ஆஶ்ரித்தவர்கள் உபேக்ஷித்து "போ" என்று தள்ள, அவர்கள் பக்கல் நின்றும், போந்திருந்து – ஆளற்றவிடத்திலே போந்திருந்து, "நாம் பட்டதோ!" என்று நெஞ்சு தளர்ந்து கலங்க. (ஐக்கள்போதவுந்தி) ஶ்லேஷ்மம் தள்ளி. (கண்டபிதற்றுமுன்) ஸ்கலித்து தோற்றிற்றுச் சொல்லுவதுக்கு முன்னே. (அலங்கலாயதண்டுழாய் கொண்டு) அலங்கலென்று–மாலையும், ஒளியும். செவ்வித்திருத்துழாய் கொண்டென்னுதல்; தண்டுழாய் மாலையைக் கொண்டென்னுதல். ஆயிரம் திருநாமங்களையும் சொல்லி. (வலங்கொளித்யாதி) வலம்–நன்மை. தங்களுக்கு வேண்டி அநந்யப்ரயோஜநரான ஸ்ரீவைஷ்ணவர்கள் பாடுவதாடுவதாகிற வதரியை வணங்குவோம்வா. ... கூ

அ.—பத்தாம்பாட்டு. இத்திருமொழியை அப்யஸித்தாரிட்டவழக்கு பரமபதமென்கிறார்.

வ்யா.—(வண்டித்யாதி) வண்டுகளானவை குளிர்ந்ததேனைப்பருகி வாழுகிற தேசவிசேஷமான வதரியிலே வர்த்திக்கிற ஸர்வேச [௫ வரனை. (கண்டலித்யாதி) கண்டல் – தாழை. தாழைவேலியாலே சூழ்ந்த திருமங்கைக்கு ராஜாவான திருமங்கையாழ்வார். (நீள்விசும்பித்யாதி) ஸர்வஸ்மாதுபரிதநலோகங்களில் மேலான பரமபதம் அவர்களிட்டவழக்கு. அதொழிய வேறு அவர்களுக்கு ஒரு அநுபவமில்லை.௰

ஜீயர்திருவடிகளே சரணம்.

---

முதற்பத்து – நாலாந்திருமொழி – ஏனம். ப்ரவேசம்.

ஸ்ரீபதரி என்றும் ஸ்ரீவதரிகாஶ்ரமமென்றும் இரண்டு திருப்பதியாய், அதில் அங்குத்தை யிருப்பாகிறது – ப்ரஜையின் ரக்ஷணத்துக் குறுப்பாகத் தாய் குடிநீர் குடிக்குமாப்போலே இவற்றைவழிப்படுத்துகைக் குறுப்பாக தான் தபஸ்ஸுபண்ணி ஹித [௰௫ காமனா யிருக்கிற விடமாய்த்து; இன்றாஶ்ரயிக்கும் நம் குறையே குறையாக ஆஶ்ரயணீயனானவன் தன்குறைவறுத்துக்கொண்டிருந்தது, ஆனபின்பு, நாமங்கேபோய் ஆஶ்ரயிப்போமென்று தம் திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். இங்கு, திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்தவிடமுண்டோவென்னில்; கீழே – "வணங்குதும்" என்றும்[௨.௰ "அறிதியாகில் நெஞ்சமன்பாய்" என்றும் சொல்லிக்கொடுபோந்து, இதிலும் – "துணிவினியுனக்குச் சொல்லுவன் மனமே" என்று முடியத் திருவுள்ளத்தைக்குறித்துச் சொல்லுகிறாராயிருக்கிறது. கீழ் தாம்பெற்றதாக ச்சொல்லி அர்த்தாநுஸந்தானம் பண்ணிப்போந்த மந்த்ரப்ரதனான நாராயணன் வந்திருக்கிற தேசமாயிருக்குமிறே. ❋

வ்யா.— முதற்பாட்டு. (ஏனமுனாகி) வராஹகல்பத்தின் ஆதியைப்பற்ற, (முன்) என்கிறார். (இருநிலமிடந்து) இருமை – பெருமை மஹாவராஹமாய், ரஸாதலத்திலே அழுந்தின பூமியை யிடந்து. (அன்றிணையடி யிமையவர்வணங்க) ராவணவதாநந்தரம் தேவர்கள் வந்து திருவடிகளிலே வணங்க. (தானவனாகம்) ஆகம் – ஶரீரம்.[௩.௰ (தரணியிற்புரள) பூமியிலேபுரள. (தடஞ்சிலை குனித்த வென் தலைவன்) பெரிய வில்லை வளைத்த என்நாயகன். (தேனமர் சோலைக் கற்பகம் பயந்த) வண்டுகள் படிந்த கற்பகச்சோலை பூத்த. (தெய்வ நன்னறுமலர்கொணர்ந்து) அப்ராக்ருதமான செவ்விப்பூக்களைக் கொண்டு. தெய்வமென்று – நறுநாற்றமாய், நறுநாற்றத்தையுடைய நல்ல பூக்களைக் கொண்டு. (வானவர்வணங்கும் கங்கையின் கரைமேல்) ப்ரஹ்மேசாநாதிகள்வந்து ப்ரணாமம் பண்ணுகிற கங்காதீரத்தில். (வதரியாச்சிராமத்துள்ளானை) ஸ்ரீவதரிகாஶ்ரமத்திலே நிற்கிறவன்.௧

அ.—இரண்டாம்பாட்டு. மாயமானைக்கொன்ற சக்ரவர்த்தித்திருமகன் ஸ்ரீவதரிகாச்ரமத்திலே வர்த்திக்கிறானென்கிறார்.

வ்யா.—(கானிடையுருவை) காட்டிடத்திலுண்டான அழகிய மானை. உருஎன்று—அழகு; "உருவாய மானையமையா" என்றாரிறே. (சுடுசரம் துரந்து ஸராக்நியை ஏவி. (கண்டு) தோற்றுவது மறைவதான மானைக்கண்டு. (முன்கடுந்தொழிலுரவோன்) முன் கடிய தொழிலைச் செய்த மிடுக்கன். உரவோன் - மிடுக்கன். (ஊனுடையகலத்து) மாம்ஸம் மிக்க மார்விலே. அகலம் - மார்வு. (அடுகணைகுளிப்ப) கொல்லும்படி தைக்க அடுதல்—கொல்லல். கொல்லுகிற அம்பைப் பெற்றபடி. (உயிர்கவர்ந்துகந்த வெம் மொருவன்) அவனுயிரைவாங்கி, ஆச்ரிதவிரோதி போகப்பெற்றோம்! என்று ப்ரீதனானவன். (தேனித்யாதி) தேன்மாறாத தாமரைப்பூவை யிருப்பிடமாக வுடைய ப்ரஹ்மாவுடனே தேவர்கள் சென்று சென்றிறைஞ்சிட. (பெருகுவானிடை முதுநீர்க் கங்கையின்கரைமேல்) ஆகாசத்திலே பெருகி ஸ்ரீபகீரதனுடைய தபஸ்ஸாலே வந்து பெருகுகிற கங்கைக் கரைமேல் ஸ்ரீவதரிகாச்ரமத்திலுள்ளானவன். ... ... ௨..

மூன்றாம்பாட்டு. (இலங்கையுமித்யாதி) ஒருவராலழிக்க வரிய லங்கையையும், அதுக்கு அகழான கடலையும், ஒருவரால்அடற்க வரிய ஸாமர்த்யத்தையுடையனாய் ஜ்யேஷ்டனான வைச்ரவணனைவென்று வாங்கின ஸங்கநிதி பத்மநிதிகளை யுடையனாயிருக்கிற ராவணனையும், அவனுக்கு பலமான ராக்ஷஸ ஜாதியாக நசிக்கும்படி பண்ணி, இப்படி க்ரூரமான வ்யாபாரங்களைப் பண்ணின ராஜாவானவன். "இக்ஷ்வாகூணாமியம் பூமிஸ்ஸஸைலவநகாநநா"என்னக்கடவதிறே. (கொழுஞ்சுடரித்யாதி) ஆதித்யன் சூழவருகிற மேருவிலேதாக்கி, மேல்நின்றும் விசும்பிலே வெளுத்த துகிற்கொடியை விரித்தாப்போலே அலங்கரித்துக் கொண்டு. வலம் – நன்மை. மணி - அழகு. அத்திரியத்திலவமாஹிக்க அவர்களுக்கு எல்லா நன்மைகளையும் தரும் அழகிய கங்கைக்கரையில் ஸ்ரீவதரிகாச்ரமத்தான். ... ௩.

அ.—நாலாம்பாட்டு. ஆச்ரிதவிரோதிகளைப்போக்கி இவர்களுக்கு பரமபதத்தையும் கொடுக்குமவன் ஸ்ரீவதரிகாச்ரமத்திலே நின்றருளினான், அவனை யாச்ரயியென்று தந்திருவுள்ளத்தைக் குறித்தருளிச்செய்கிறார்.

வ்யா.—(துணிவினியித்யாதி) என் துணிவை யுனக்குச் சொல்லுவன் கேள் நெஞ்சே !. (தொழுதெழு தொண்டர்கள் தமக்கு) தந்திருவடிகளைத் தொழுது உஜ்ஜீவிக்கவேணும் என்றிருக்கு மடியார்க்கு. (பிணியித்யாதி) ப்ராப்ய விரோதிகளையும் போக்கி, * வானவர்நாடான பரமபதத்தைத் தரும். திருவடிகளிலே தொழுத மாத்ரத்திலே யிப்படி செய்யுமோவென்னில் (பேரருளாளனெம்பெரு

மான்) பரமகாருணிகனானவன். என்னையு முட்படக் கைக்கொண்டவனன்றோ. (அணியித்யாதி) அழகிய மலரைக் குழலிலேயுடைய ரம்பைதுடக்கமானாருடைய துகிலையும் ஆபரணாதிகளையும் வாரிக்கொடுவந்து அழகிய நீரானது தூயமாணிக்கங்களைக் கொழித்து இறட்டுகிற கங்கைக்கரையில் ஸ்ரீவதரிகாஸ்ரமத்துள்ளான். ... ௪

அ.—அஞ்சாம்பாட்டு. பூதநாஸ்தநபாநம் பண்ணி வளர்ந்த க்ருஷ்ணன் நித்யவாஸம் பண்ணுகிறான் ஸ்ரீவதரிகாஸ்ரமத்திலே; அவனை யாஸ்ரயிப்போம் வா நெஞ்சே என்கிறார்.

வ்யா.—(பேயிடையித்யாதி) தாயாய்வந்தபூதனைமருங்கிலேயிருந்து ஒக்கவருகிற. (மற்றவள் பெருமுலை சுவைத்திட) "பெருமுலையூடு" இத்யாதி;—பெரியமுலை வழியே அவளுயிரையும் வற்றும்படி உண்டவன். * தாயாய் வந்தபேயிடையிலே யிருந்து பெரிய முலைப்பாலையும், அதுவொழிந்த அவள்ப்ராணனையும் சுவைத்திட. (மற்று) என்றது-முலைப்பாலொழிய அவள் ப்ராணனையு மென்றபடி. (பெற்ற தாயிடைக்கிருந்த லஞ்சுவனென்று தளர்ந்திட) யஶோதைப்பிராட்டி, தன் ஒக்கலையி லெடுத்துவைக்க அஞ்சாநின்றேனென்று தளர்ந்திட. (வளர்ந்த வென்தலைவன்) இப்படிக்குவளர்ந்த என்னாயன். இவளஞ்சுகிறது-கண்டாரெடுத்து முலைகொடுக்க, அவர்கள் நினைவறியாதே அவர்கள் முலையை யுண்ணுநின்றதுக்கு வயிறு பிடித்து அஞ்சுகிறாள்; "நலமே வலிதுகொல்" இத்யாதி. (சேயித்யாதி) உயரமோங்கின ஶிகரங்களினுச்சியாலே அண்டத்தை யரிக்கிற, அழகிய பொன்னாலே செய்யப்பட்ட பர்வதமுண்டு-மஹாமேரு, அதிலே விளங்கி நிற்பதாய், இடமுடைத்தான ஶிகரத்தில் நின்று மிழிந்த கங்கைக்கரையில்வதரியாச்ரமத்திலேவந்து ஸந்நிஹிதனானான். ... ... ... ... ௫.

அ.—ஆறாம்பாட்டு. நப்பின்னைப் பிராட்டியுடைய ஸம்ஶ்லேஷ விரோதியானருஷபங்களைக்கொன்றவன் வதரியாச்ரிரமத்துள்ளான், அவனை ஆஸ்ரயிப்போம் வா என்கிறார்.

வ்யா.—(தோரணங்கல்குல்) தேரொத்த நிதம்பம். (செழுங்கயற்கண்ணிதிறத்து) அழகிய கயல்போன்றகண்ணையுடைய நப்பின்னைப்பிராட்டிதிறத்து. (ஒரு மறத்தொழில் புரிந்து) அத்விதீயமான கொடிய தொழிலை மிகுத்து. புரிதல்-மிகுதல். (பாரணங்குமிலேறேழும் முன்னடர்த்த) பூமியிலுள்ளார், "இவற்றினுடன் க்ருஷ்ணன் பொரப்புகாநின்றான்" என்று க்லேஶிக்க. அணங்கு-வருத்தம். வருந்த என்றபடி. இமில்-கருத்து. (ஏறேழும்முன்னடர்த்த) ருஷபங்களேழையும் முன்பு கொன்ற. (பனிமுகில் வண்ணனெம்பெருமான்) குளிர்ந்த காளமேகம்போன்ற வடிவழகாலே யென்னை அடிமைகொண்டவன். (காரணமித்யாதி) பகீரதன் கங்கையை

பூமியிலே அவதரிப்பிக்கிறபோது நடுவழியிலே ஒருமலை தகைந்து கொண்டு நின்றதாய், அத்தை இரண்டு பிளவாம்படி குத்தி, ஆனைகளையு முருட்டிக்கொண்டு இவ்வருகே போந்திழிந்த தாகச் சொல்லக்கடவது. அதுக்கடியேதென்னென்றால் (காரணந்தன்[ரு ஞல்) தன்னுடைய தபோபலத்தாலே. பஸ்மமாய்க்கிடந்த தன் பாட்டன்மாருடைய ஸாயுஜ்யமாக கங்கையைப் பெறவேணுமென்று தபஸ்ஸுபண்ணினனிறே: அந்தப்பழமையாலே வந்த மிடுக்கை யுடைத்தான ஜலத்தை யுடைத்தான கருவரையானது. கருமை-பெருமை. ஹிமவானாகிற பெரியமலையானது பிளவெழும்படியாகக்[ய குத்திக்கொண்டாய்த்துக் குதித்தது. (வாரணம் கொணர்ந்த கங்கை) அப்பர்வதத்திலுண்டான ஆனைகளை யுருட்டிக்கொண்டு வந்த கங்கைக்கரையில் வதரியாச்சிரமத்துள்ளான். ... ௬.

அ.—ஏழாம்பாட்டு. ப்ரயோஜநாந்தரபரரான இந்த்ராதிகளுக்குங் கூட ஆஸ்வாஸிப்பித்துக்கடல்கடைந்த ஸர்வேஸ்வரன் வந்து வர்த்[யரு திக்கிறான் ஸ்ரீவதரிகாஸ்ரமத்திலே யென்கிறார்.

வ்யா.—(வெந்திறலித்யாதி) பலத்தையும் மிடுக்கையு முடைய ஐராவதத்தையும், கடல்கடைந்த அம்ருதத்தையும், ஸ்வர்கத்துடனேகூட தேவர்களுக்கு ராஜாவாயிருக்கு மிருப்பையும் இந்த்ரனுக்குக் கொடுத்தருளி, எனக்கும் தன்னைத்தந்தருளின. (எந்தை) எனக்குஜநக[உய ன். (எம்மடிகள்) எனக்கு ஸ்வாமி. (அந்தரமித்யாதி) ஸ்வர்கத்தில் தேவர்கள் திருவடிகளையாஸ்ரயிக்க ஒருமுகஞ்செய்து வந்து புகில் கடல் பொறாதென்று பார்த்து, ஆயிரம்முகத்தாலே போய்ப்புகு என்று ஸர்வேஸ்வரன் திருவுள்ளமாயருளி, அப்படிமந்தரபர்வதத்தில் நின்றும் வந்திழிந்ததாய்த்து. அன்றிக்கே, கங்கைதன்னை யாஸ்ர[உரு யிக்க அதுதா னருளுகையாகவுமாம். (ஆயிரமுகத்தினால்) மேருவிலே யிழிந்து, ஹிமவானிலேயிழிந்து, பலமுகமாய் வரும்படியைச்சொல்லக்கடவதிறே. ... ... ... ... ௭.

அ.—எட்டாம்பாட்டு. ருத்ரனுடைய ப்ரஹ்மஸாபத்தைப் போக்கினவன் வர்த்திக்கிறதேஸம் ஸ்ரீவதரிகாஸ்ரமமென்கிறார்.

வ்யா.—(மான்முனிந் தொருகால் வரிசிலைவளைத்த மன்னவன்) மாயமானை முனிந்து அத்தைக்கொல்ல அழகிய வில்லை வளைத்த ராஜா. வரி - அழகு. (பொன்னிறத்துரவோனூன் முனிந்து) பொன்போன்ற நிறத்தையுடையவனாகையாலே அதுவேபேராய், ஹிரண்யனென்று பேரையுடையனாய், மிடுக்கையுடையனாயுள்ளவன். (ஊன்முனிந்தித்யாதி) ஊன்-மாம்ஸம். அவனது, ஊனுடை உடலை-ஸரீரத்தை வெகுத்து, அது இருபிளவாம்படி உகிர்முனையை அழுத்தி. (அயனித்யாதி) ப்ரஹ்மாவானவன் தன்தலையை ருத்ரனறுக்கையாலே அவனை முனிந்து ஸபிக்க, அந்த ஸாபம் தவிர பிக்ஷைபிட்டவன். "பிண்டி"

இத்யாதி, "ஊனமர்" இத்யாதி, "முடையடர்த்த" இத்யாதி, "சந்தார்தலை" இத்யாதி, "பாறேறியுண்ட தலைவாய் நிறைய" இத்யாதி. (தவம்புரிந்திதயாதி) தபஸ்ஸாலே மிகவுமுயர்ந்த ஸௌபரியென் கொடுக்குமிங்கைக்கரையில்வதரியாச்சிராமத்துள்ளான். க்ஷத்ரியன்று தபோபலத்தாலே ப்ராஹ்மரிஷியானாப்போலே, இவனையும் தபோபலத்தாலே (மாமுனி) என்கிறார். ... ... அ.

அ.—ஒன்பதாம்பாட்டு. ப்ரளயாபத்தில் ஜகத்தை யெல்லாம் வயிற்றிலே வைத்து ரக்ஷித்தவன் ஸ்ரீவதரிகாச்ரமத்திலே யுள்ளா னென்கிறார்.

வ்யா.—(கொண்டலி த்யாதி) மேகங்கள், வாயுஸ்கந்தம், குலபர்வதங்கள். ஜலராசியையுடைத்தாய் கோஷிக்கிற கடல், இவற்றுடனே லோகங்களையும் வைக்கப்பட்ட பெரிய வயிற்றை யுடையவன். எழுலகுமுண்டும் இடமுடைத்தாயிருக்கை. (ஒண்சுடரித்யாதி) அழகிய வஜ்ர ஸூர்யர்களையுடைத்தான உபரிதந லோகங்களும், காலபேதமான காலமும், தான் என்று சொல்லலாம்படியானான். இவை ப்ரகாரமாக, தான் ப்ரகாரியாய் நின்றான். (அண்டமித்யாதி) அண்டமுண்டு - ப்ரஹ்மலோகம், அதின்நடுவே வழி கண்டுபோந்து, அதுக்கின்வருகிலோகாலத்திலே யிழிந்து. எல்லாவற்றையும் பொறுக்கக்கடவ அவனியாளுண்டு-ஸூஷ்டி, அவள் பொறுக்கமாட்டாதே அலமாக்குபடி. (பெருகும் மணிமாமணி நீரித்யாதி) எங்கு மொக்கப் பரந்து பெருகாநின்றுள்ள தெளிந்த நீரையுடைய யமுனை. ... ... ... ... க.

வ்யா.—பத்தாம்பாட்டு. (வருந்திரையித்யாதி) பெரிய வேகத்தோடே வருகிற திரைகளை யுடைத்தான தெளிந்த ஜலத்தை யுடைத்தான கங்கையின்கரைமேல் ஸ்ரீவதரிகாச்ரமத்திலே நிற்கிற ஸர்வேச்வரனைக் கவிபாடுவது. (கருங்கடலித்யாதி) ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர், மூன்றுங்கூடித் தான் கறுகியிருப்பதான கடல்வண்ணனை அநுஸந்தித்து, ஆழ்வாரருளிச்செய்த இவைதான். (வாய்ந்த செய்த) ஸகலத் ப்ரஸித்தமான பத்துப்பாட்டையும் வல்லவர்கள். (இருங்கடலித்யாதி) வெண்கொற்றக் குடைநிழலிலே பெரியகடல் சூழ்ந்த ஸூமியை யாண்டு, பின்னை ப்ரஹ்மாதி லோகங்களையாண்டு, பின்பு நித்யஸூரிபதத்தைப் பெறுவார்கள். இத்தால் சொல்லிற்றாய்த்து - இவனையைப்பட்டதெல்லாம் தருமென்றபடி. "அறிவுடையார் அபுருஷார்த்தமென்று காற்கடைக்கொண்ட ஐச்வர்யத்தை 'வேண்டேன் மனைவாழ்க்கையை' என்றும் 'போந்தேன்' என்றும் விதராகராய்ப்போந்தவிவர், இப்போது ஐச்வர்யத்தை ஃபலமாக அருளிச்செய்வானென்?" என்று பட்டரை ஜீயர் கேட்க; "திருமங்கையாழ்வார் திருவவதரித்தபின்பு த்யாஜ்யமானஐச்வர்யமும் பரமபுருஷார்த்தத்துக்குள்ளே புகுந்ததுகாணும்; - ஈச்வரனே யாகவுமாம், நித்யஸூரிகளாகவுமாம், ராஜாவாகவுமாம், பரித்து ஸாமவதசேஷமாக்கலாமாகில் என்றுகாணு மிவரிருப்பது" என்றருளிச்செய்தார். ... ... ... ... ... ய.

ஜீயர்திருவடிகளே சரணம்.

ஸௌபரி போகத்துக்கிடாகப் பலவடிவு கொண்டாப்போலே, ஆஸ்ரிதரை அநுபவிப்பிக்கைக்காக உகந்தருளின நிலங்களெங்கும் ஸந்நிதிபண்ணிற்றாய்த்து அவன்; இனி இவர்தாமும், * தானுகந்த வூரெல்லாம் தன்தாள்பாடி யெங்கும் புக்கு அநுபவிக்கவாய்த்து ஆசைப்பட்டிருப்பது. ஒருவிஷயத்தை அநுபவிக்கப்புக்கால் அவ்விஷயத்தில் அவயவங்கள்தோறும் ஸ்பர்ஸைபண்ணுமாப்போலேயாய்த்து இவரெங்கும்புக்கு அநுபவிப்பதாகப் பாரித்திருக்கிறதும். ஆக, விரோதி நிரஸநஸீலனுமாய், ஆஸ்ரித ஸம்ஸ்லேஷைகஸ்வபாவனுமாய், ப்ரஹ்மாதிகள் ஆபந்நராமன்று அவ்வாபத்துக்களைப்போக்கி அவர்களுக்கு உபத்ரவநிவர்த்தகனா யிருக்குமவன், நித்யஸூரிகளுடன், தன்பக்கல் ருசியுடையாருடன், கேவலம் ப்ராஹ்மணருடன் வாசியற ஸர்வ ஸமாஸ்ரயணீயனாய்க்கொண்டு ஸ்ரீஸாளக்ராமத்திலே வந்து ஸந்நிஹிதனானான், அங்கே சென்று அவனை ஆஸ்ரயிப்போம் என்று திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். ... *

(முதற்பாட்டு. கலையித்யாதி) கலைகளும், யானைகளும், குதிரைகளும் வர்த்திக்கிற காட்டைக் கடந்துபோய். (சிலையுமித்யாதி) வில்லும் அம்பும் துணையாகச் சென்றான் வென்றியை யுடைத்தான ஸமரபூமியிலே. (மலையித்யாதி) பர்வதங்களைக்கொண்டு, அலைமோதுகிற கடலை அணைசெய்து. (மதிளித்யாதி) அரணான மதிளையும், அம்மதிளுக்கு அரணாய் அகழாயிருக்கிற கடலையுமுடைய லங்கையில். (வாளரக்கரித்யாதி) ஒருதேவதையை ஆஸ்ரயித்து, அதின் பக்கலிலே ஒருவாளைப்பெற்று, அது தனக்கு ரக்ஷகமாக நினைத்திருப்பானாய், ராக்ஷஸஜாதிக்கெல்லாம் நிர்வாஹகனாயிருக்கிற ராவணன் தலைபத்தையு மறுத்து, "ஆஸ்ரித விரோதி போகப்பெற்றோம்" என்று உகந்தவன் வர்த்திக்கிற ஸ்ரீஸாளக்ராமத்தை அடை நெஞ்சே என்கிறார். ... ... ... ... ௧

இரண்டாம்பாட்டு. (கடஞ்சூழ்கரியும்) மதஜலத்தை யுடைத்தான ஆனையும். (பரிமா) குதிரை. (ஒலிமான் தேரும்) ஆரவாரத்தை யுடைய பெரிய தேரும்; "ஆனைப்புரவித்தேரொடுகாலாளணிந்து கொண்ட" என்கிற சதுரங்க பலத்துடனே. (உடனித்யாதி) இவையுடனே, பனிமூடினாப்போலே பெருமாளையும் பரிகரத்தையும் சூழ்ந்துகொண்டதாய்த்து. (கடியிலங்கைபொடியா வடிவாய்ச் சரந்துரந்தான்) கடி-அரண். அரணையும் சதுரங்க பலத்தையுமுடைய லங்கை பொடியாக. (வடிவாயித்யாதி) வடி-கூர்மை. கூரிய அம்பை ஏவினான். (இடமித்யாதி) பெரிய ஆகாஸத்தில் தேவர்கள் இடமடையப் புகுந்து வணங்கும். (மணங்கமழுமித்யாதி) நறுநாற்றம் கமழாநின்ற தடாகங்களை யுடைத்தாய் அழகாயிருந்துள்ள சாளக்கிராமத்தை யடைநெஞ்சே. ... ... ... ... ௨.

மூன்றாம்பாட்டு. (உலவுதிரையித்யாதி) ஸஞ்சரிக்கிற திரைக் கிளப்பத்தையுடைத்தான கடலும், மலையும் தொடக்கமான எட்டுதிக்கும், சிலநாள் வர்த்திக்கக்கடவராயிருக்கிற சந்த்ர ஸூர்யர்களும், அதுக்கு எதிரான இருளுமாய், இவையுடைய தான் என்கிற[று சொல்லாலே சொல்லலாம்படி தனக்கு ப்ரகாரமாக வுடையனாய்நின்றான். இத்தால் - ஜகதாகாரனாய் நிற்கும் நிலையைச் சொல்லிற்று. மேல் அஸாதாரண விக்ரஹயுக்தனாய் நிற்கிற நிலையைச் சொல்லுகிறது (வென்றிவிறலாழிவலவன்) ஆச்ரிதவிரோதிகளை வெல்லும் மிடுக்கையுடைய திருவாழியை வலவருகே யுடையவன். (வானோர்[ம தம் பெருமான்) கையுந் திருவாழியுமான அழகைக் காட்டிலெறித்த † நிலாவாகாமே புஜிக்கும் போக்தாக்கள். (மருவாவரக்கர்க்கு) சேராத ராக்ஷஸர்க்கு. (எஞ்ஞான்றும் சலவன்) எப்போதும் எல்லாக்காலத்தும் சத்ரு. (சலஞ்சூழ்ந்தழகாய) ஜலஸம்ருத்தியை யுடைத்தாய் சுற்றும் அத்தாலே ஸ்ரமஹரமாய் அழகுதன்னை வகுத்தாப்போலேயிருக்கிற சாளக்கிராமம். ... ... ... ௩.

அ.—நாலாம்பாட்டு. (ஊரான்குடந்தையுத்தமன்) அதுக்கு முன்னேயுண்டான வ்யவஸ்தானத்தைச் சொல்லுகிறது.

வ்யா.—(ஊரான்) திருவூரகத்தைத் தனக்கு வாஸஸ்தானமாக வுடையவன். (குடந்தையுத்தமன்) திருக்குடந்தையிலே கண்வளர்[உம ந்தருளின ஶீலகுணத்தையுடைய உத்தமன். அன்றிக்கே, திருக்குடந்தையூரான் உத்தமனென்றுமாம். (ஒருகால்) ஒருக்கால். (இருகால்சிலைவளைய) கீழ்க்காலும் மேல்காலுமான சிலை வளைய. (தேராவரக்கரித்யாதி) நாமெதிரிட்டுப் பொரப்புகுகிறது ஆரோடே? நாந்தாமார்? என்று தன்னையும் பெருமானையும் நிரூபிக்க அறியாத[உரு ராக்ஷஸஜாதியைச் செற்றவன். தேர் வெள்ளமென்று—சதுரங்க பலத்துக்கு உபலக்ஷணம். (வற்றாவித்யாதி) மாறாதே வருகிற புனலாலே சூழப்பட்ட திருப்பேர்நகரான். (பேராயிரமுடையான்) ஆச்ரிதர்க்கு இழிந்தவிடமெல்லாம் துறையாம்படி அநேகமாயிரம் திருநாமங்களை யுடையவன். (பிறங்கித்யாதி) மிகவும்பெரிய சிறகையுடைய[ரும வண்டுகள் பாடுகிற மாலையை யுடையவன். (தாராவயல்சூழ்ந்த) தாராவாகிற பக்ஷிகளாலே நெருங்கின வயலாலே சூழப்பட்ட சாளக்கிராமமடை நெஞ்சே. ... ... ... ... ௪.

அ.—அஞ்சாம்பாட்டு. அதுக்கு முன்னான ஸூர்ப்பணகா வைரூப்யத்தை யருளிச்செய்கிறார்.

வ்யா.—(அடுத்து) கிட்டி. (ஆர்த்தெழுந்தாள்) ஆர்த்துக்கொண்டு வந்தாள். சக்ரவர்த்தித்திருமகனை நோக்கி எழுந்து கிட்டினவள். (பிலவாய்விட்டலற) பிலத்வாரம் திறந்தாப்போலே பெரியவாய் விட்டுக்கூப்பிட. (அவள்மூக்கயில்வாளால்விடுத்தான்) அயில்—கூர்மை.

---

† எறித்தல் - ப்ரகாஶித்தல்.

அவளுடைய மூக்கைக் கூரின வாளாலே அம்முகத்தில் நின்றும் விடுத்தவன். "செவியொடுமூக்கு அவளார்க்கவரிந்தான்" என்னக் கடவதிறே. (விளங்குசுடராழிவிண்ணோர்பெருமான்) * பரிதிவட்டம் போலும் சுடராடலாழியிறே. விளங்காநின்றுள்ள தேஜஸ்ஸையுடைய[த் திருவாழியையுடையனாய், விண்ணோர்க்கு நாயகனானவன். (நண்ணாரித் யாதி) ஶத்ருக்கள் முன்னே சினத்து ஆரவாரித்துக்கொண்டுவந்த மஹாவர்ஷத்தை ஒருமலையையெடுத்துக் காத்தவன். தடம்-குளம். குளங்களாலே சூழப்பட்ட சாளக்கிராமமடை நெஞ்சே ... ரு.

ஆறாம்பாட்டு. (தாயாயித்யாதி) தாய்வடிவைக்கொண்டுவந்த பூத[ம் னையுடைய ப்ராணனையும் யஶோதைப்பிராட்டி தயிரையும் வெண் ணெயையும் அமுதுசெய்த திருப்பவளத்தை யுடையவன். (தூயவலி யுருவிற்குறளாயச்சென்று) பழிப்பற்ற அழகை யுடையனாய், அத்தா லே ஸர்வேந்த்ரியங்களையும் அபஹரிக்கும்படி அழகில் பலத் தையுடைய ஸ்ரீவாமநனாய்ச் சென்று. (மாவலியே) மஹாபலியே நா னிரக்க. (மூவடியித்யாதி) மூவடிமண் இப்போதே தரவேணும் என்று வாங்கி, ஸப்தலோகங்களையு மளந்தவன். தாயான் - தாவி னவன்;- கடந்தவன். (காயாவித்யாதி) காயாம்பூப்போன்ற நிறத்தை யுடையவன் சாளக்கிராமமடை நெஞ்சே. ... ... சு.

அ.— ஏழாம்பாட்டு. ஹிரண்யவயவ்ருத்தாந்தத்தைஅநுஸந்திக்கிறார்.

வ்யா.—(ஏரோரஞ்ச) ஶத்ருக்கள் அஞ்ச. (வெஞ்சமத்துள்) யுத்தத்திலே. அரியாய் ஸிம்ஹமாய். (பரியவிரணியனை) பலத் தாலே மிக்க இரணியனை. (ஊனாகலமித்யாதி) மாம்ஸம் நிறைந்த மார்வைப்பிளந்த அத்விதீயன். (இருசுடரித்யாதி) சந்த்ரஸூர்யர்களாய், ஆகாஶமாய், அக்நியாய், காற்றாய், குலபர்வதங்களாய், கடல் [உடு சூழ்ந்த பூமியை யுடைத்தானாய், இவை யெல்லாம் தான் என்று சொல்லலாம்படி இவற்றை ஶரீரமாகக் கொண்டு தான் ஶரீரியாய். (தானுமானானித்யாதி) அஸாதாரண விக்ரஹத்தைச் சொல்லுகிறது. அப்ராக்ருத திவ்யமங்களவிக்ரஹத்தை யுடையவனுடைய சாளக்கிராம மடை நெஞ்சே. ... ... ... ... ... எ.

அ.—எட்டாம்பாட்டு. (வெந்தாரித்யாதி) ருத்ரனுடைய மஹா பாதகத்தைப் போக்கினவன் நித்யவாஸம் பண்ணுகிற ஸாளக்ராம த்தைஅடை நெஞ்சே என்கிறார்.

வ்யா.—(வெந்தாரென்பும்) * பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனுகையாலே, இடுகாட்டிலே வெந்தவர்களுடைய வெந்து வே வாத எலும்பைப் பூண்டு, உடம்பிலே அச்சாம்பலையும்பூசி, கையிட த்து, "மூளையார்சிரம்" என்கிறபடியே - மூட்டுவாயுடைய தலையோ ட்டைக்கொண்டு, ஸப்தலோகங்களையும் ஸஞ்சாரம் பண்ணித்திரி கிற ருத்ரன் தானே சென்று, "என்னையனே! என்ஶாபத்தைப் போக்கி

யருளவேணும் "என்று அர்த்திக்க.(இலங்குமதுநீர்திருமார்வில்தந்தான்) விளங்காநின்ற அழகிய திருமார்வில் மிக்கரஸத்தையுடைய நீரைத் தந்தருளினான்; "முடையடர்த்த சிரமேந்தி" இத்யாதி. சந்தனப்பொழில் சூழப்பட்ட சாளக்கிராமம். ... ... அ.

ஒன்பதாம்பாட்டு. (தொண்டித்யாதி) "வழுவிலாவடிமைசெய்ய வேண்டுநாம்" என்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளும், நித்யஸூரிகளும், ப்ராஹ்மணரும். (அண்டா) பரமபதநிலயனே. அண்டமென்று—பரமபதம்; பரமபதத்தைவிட்டுஇங்கேவந்தது எங்களுக்காக என்கிறார். எங்களுக்கு வேண்டுவன தாராயென்று சேரும்கோயிற்[டு] பக்கமெல்லாம். (வண்டாரித்யாதி) வண்டுகள் மொய்க்கப்பட்ட பொழிலையும், அழகிய நீர்நிலையானவயலும், அதினருகில் மடுவில் கயல்பாய, குளிர்ந்த தாமரைகள் அங்குத்தை மடவார் முகமொக்க மலரும் சாளக்கிராமமடை நெஞ்சே. ... ... ... ...கூ.

பத்தாம்பாட்டு. (தாராவாருமித்யாதி) தாராவாகிற பக்ஷிகளாலே நிறையப்பட்ட வயல்சூழ்ந்த சாளக்கிராமத்தில் ஸ்வாமிகளேயாய்த்துக் கவிபாடிற்று. (காரார்புறவிவித்யாதி) மேகங்கள் நிரந்தரவாஸம் பண்ணுகிற பர்யந்தத்தையுடைய திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகரான ஆழ்வாரருளிச்செய்த தமிழ்மாலை. (ஆராரித்யாதி) லோகத்தில் ஜ்ஞாநாதிகராய் ஆமாறறிவுடையார் யாவர்சிலர், உங்களு[உம்]க்கு பரமபதத்தை ஆளவேண்டி யிருந்தீர்களாகில், அவனுடைய திருநாமங்களைச்சொல்லுங்கோள்; அதுமாட்டீர்களாகில், இத்திருமொழியைச்சொல்லுங்கோளென்கிறார். ... ... ... ம.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

---

முதற்பத்து – ஆறாந்திருமொழி – வாணிலா.ப்ரவேஶம்.

திருவுள்ளத்தைக் குறித்து, உகந்தருளின திருப்பதிகளை ஆஶ்ரயி என்று பலகாலும் சொல்லிக்கொடு போந்தார்; அதுவும் அப்படி செய்வதாக ஒருப்பட்டுநின்றது; அநந்தரம், தம்முடைய நிகர்ஷத்தை தாம் அநுஸந்தித்து, தம்முடைய பூர்வவ்ருத்தத்தையும், விஷயப்ராவண்யத்தையும், ஆர்த்தவிஷயத்தில் ஐயோ! என்னாதேபோந்தபடி[யு]மையும், பரஹிம்ஸையே யாத்ரையாய்ப் போந்தபடியையும், இவற்றையுடைய முன்னிட்டு, "ராவணோநாம துர்வ்ருத்தः" என்று விபீஷணாழ்வான் ஆகாஶத்திலே நின்று ஸ்வநிகர்ஷத்தை முன்னிட்டு ஶரணம் புக்காப்போலே, இவரும் தம்முடைய அநந்யகதித்வத்தை விண்ணப்பஞ்செய்து, நைமிஶாரண்யத்திலே நிற்கிற ஸர்வேஶ்வரன் திருவடியிலே, பெரியபிராட்டியார்முன்னிலையாகஶரணம்புகுகிறார். *

முதற்பாட்டு. (வாணிலாவித்யாதி) ஒளி பரம்பாநின்றுள்ள முறு வலையும், சிறுநெற்றியையும் ஸௌம்யதை மிக்கிருந்த தோளழகை யு முடைய ஸ்த்ரீகளுடைய அழகியமுலையுடனே அணைகையாகிற ப்ர யோஜநத்தையே ஆசைப்பட்டேன். வனமென்பது – அழகு. பேணு தல் - ஆசைப்பாடு; அத்தை (பிழையெனக்கருதி) அது தப்பென்று நினைத்து. (பேதையேன்) அறிவிலேன். (பிறவிநோயித்யாதி) பிறக்கை யாகிற நோயை அறுக்கவேணும் என்று நினையாதே யிருந்தேன். அறி விலியாகையாலே (எண்ணினேன்) நாம் முன்பு செய்ததென்? மேல் செய்யக்கடவதென்? என்றெண்ணினேன். எண்ணல் – ஆராய்தல். [மு (எண்ணி) இப்படிஆராய்ந்து. (இளையவரித்யாதி) தங்கள் பருவ த்தாலே அகவாய் தெரியாதபடி மயக்கி அகப்படுத்திக்கொள்ளும் ஸ்த்ரீகளுடைய கலவியின் ப்ரகாரத்தை நினைத்து லஜ்ஜித்தேன். கல வியின்திறமாவது - அவர்களாதரிக்கும் படியும், உபேக்ஷிக்கும்படி யும் இவனை வையும்படியும், குறிக்கும்படியும், பின்னை உடம்புகொடு து டுக்கும்படியும், பிரியப்புகுகிறேன் என்று முதுகுகாட்டும்படியும், இவையிறே. (நாணினேன்) அநுவதித்தேன். (வந்தித்யாதி) அவர்களை விட்டுவந்து உன்திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய். க.

அ.—இரண்டாம்பாட்டு. திருவடிகளிலே விழுந்து ஶரணம் புக்கவாறே திருவடிகளில் ஸௌம்யதை நெஞ்சிலேபட்டது; இத்தை விட்டுப்பாழே காலத்தைப்போக்கினேனென்று இழந்த காலத்துக்கு அநுதபிக்கிறார்.

வ்யா.—(சிலம்படியுருவில்) சிலம்பாலே அலங்கரிக்கப்பட்ட அடி யையும், வடிவழகையுமுடைய. (கருநெடுங்கண்ணார் திறத்தனாய்) *அஸிதேக்ஷணைகளாயிருக்கிறவர்கள் திரள்களிலே அகப்பட்டு. [உறு திறம் - திரள். ஒருவிஷயத்தில் பூர்ணமாக அநுபவிக்கலாவதில்லை யே. (அறத்தையே மறந்து) "மறந்தேனுன்னை முன்னம்" என்கிற படியே * அறவனையாய்த்து மறந்தது. (க)அனந்தலிலும் வாய்வெருவு வது அவர்களையே யாய்த்து. "அறஞ்சுவராகி நின்ற" என்றும் "க்ரு ஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்கிற தர்மத்தை மறந்து.(புலன்படிந்துண் ணும் போகமேபெருக்கி) இந்த்ரியங்கள் விஷயங்களிலே படிந்து புஜிக்கும் ஸௌமத்திலே ஆசைபெருக்கி. (போக்கினேன் பொழு தினைவாளா) "வாளாவிருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம்" என்று ரிறே ஆழ்வாரும். (அலம்புரிதடக்கையாயனே) கொள்ளுமவர்களு க்கு(உ)அலம்ஹாவம்பிறக்கக்கொடுக்கும்திருக்கையையுடைய க்ருஷ்ண னே. (மாயா) ஆஶ்சர்யமான குணசேஷ்டிதங்களை யுடையவனே. (வானவர்க்கரசனே) ப்ரஹ்மாதிகளுக்கு நிர்வாஹகனானவனே. மா யாவானவரென்று – நித்யஸூரிகளைச் சொல்லவுமாம். (வானோரித் யாதி) நித்யஸூரிகள் மிகவும் ஸ்நேஹித்து இறைஞ்சும் திருவடிகளை யடைந்தேன், நைமிசாரணியத்துளெந்தாய்!. ... உ.

(க)அனந்தல் - நித்ரை. (உ)அலம்ஹாவம் - போதும் என்னும் நிலை.

அ.—மூன்றாம்பாட்டு. "போக்கினேன் பொழுதினைவாளா" என்றாரே, பொழுதுபோக்கினபடி தானென்னென்ன ; இப்படி யென்கிறார்.

வ்யா.—(சூதினையித்யாதி) பகற்பொழுது சூதுபொருது அர்த்தார்ஜநம் பண்ணியும், இரவு களவுகண்டு அர்த்தார்ஜநம் பண்ணத் துணிந்து புறப்பட்டும். இப்படி அர்த்தார்ஜநம் பண்ணிக்கொள்ளும் காரியத்தைச்சொல்லுகிறது மேல் (சுரிகுழலித்யாதி) சுருண்டகுழலாலும் மடப்பத்தாலும் அகப்படுத்திக்கொள்ளுகிற ஸ்த்ரீகள்பக்கல் ஆசையைப் பெருக்கி. "நின்கண்வேட்கை யெழுவிப்பன்" என்னுமதுக்கு எதிர்த்தட்டாயிறே யிருப்பது. (கண்டவாதிரிந்த தொண்டனேன்) தோற்றிற்றுச்செய்து திரிந்த ஹேயன். (நமன்தமரித்யாதி) யமபடர் செய்யும் வேதனைக்கு நடுங்கி ஒடுங்கினேன். (வேலையித்யாதி) வெளுத்த திரைகளையுடைய திருப்பாற்கடலைக் கலங்கும்படி மந்தரபர்வதத்தை அதிலே நட்டுக் கடைந்த என்னாயனே!, வந்துன்திருவடி யடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய். ... ... ௩.

அ.—நாலாம்பாட்டு. அத்தனையோ, இன்னமும் செய்ததுண்டோவென்ன ; இன்னமும் செய்தது குவாலென்கிறார்.

வ்யா.—(வம்புலாங்கூந்தல்) வம்பு - பரிமளம். நறுநாற்றம் கமழாநின்றுள்ள ஸ்வஸ்த்ரீயை விட்டு (பிறர்பொருளித்யாதி) பரத்ரவ்ய பரதாரங்களை ஆசைப்பட்டவர்கள் மரித்தால், அவர்களை யமபடர் தண்டிக்கும்படி சொல்லுகிறதுமேல் (நமன்றமரித்யாதி) யமபடர்வந்து பிடிக்கும்போது எல்லாக்லேசமும் பிறக்கும்படியாய்த்து வந்து பிடிப்பது. (எற்றிவைத்து) இவனைப்பிடித்துத் தகர்த்துவைத்து. (எரியெழுகின்றவித்யாதி) செம்பாலே, இவனாசைப்பட்ட வடிவுபோலே ஒருபாவையைப்பண்ணி, அத்தை எரியெழக்காய்ச்சி, தங்கள் முகத்தை மாறவைத்து, "மஹாபாபீ ! சென்று தழுவிக்கொள்" என்று சொல்லும் வார்த்தை கேட்க அஞ்சி. (நம்பனே வந்துன்திருவடியடைந்தேன்) எல்லாரும்நம்பப்படுமவனே ! , *பற்றிலார்பற்றநின்றவனே, வந்துன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய் !. ௪.

அ.—அஞ்சாம்பாட்டு. அத்தனையோ, பின்னை யேதேனுமுண்டோவென்ன ; திருவுள்ளத்துக்கு அஸஹ்யமானவையு மெல்லாம் செய்துபோந்தே னென்கிறார்.

வ்யா.—(இடும்பையாலித்யாதி) துக்கத்தாலே நெருக்குண்டு. (இடுமினோதுற்றென்றிரந்தவர்க்கு) தாரித்ர்யத்தாலே துக்கித்து, "எனக்கொரு பிடிசோறிடுங்கோள் எல்லாருமாக" என்று வந்திரந்தவர்களுக்கு. (இல்லையேயென்று) அவர்களுக்கு, இல்லை என்னும் போதும், நெடுஞ்சொல்லாலே மறுத்த நீசனேன். குளிர, இல்லை யென்பதும் செய்யாதே. நெடுமையாவது - க்ரௌர்யத்தின் மிகுதி. இவன் "இல்லை" என்ற சொல்லைக்கேட்டு, "அழகிதாக இவன்பாடே வேண்டி வந்தோம், இவன் வார்த்தை கேட்கவேண்டிற்றே, இதிற்காட்டில்

நஞ்சைத்தின்று முடிந்துபோகவமையாதோ" என்றிருந்தவன் நெஞ்சிலே புண்படும்படியாய்த்து "இல்லையே!" என்பது. (நீசனேன்) இப்படி தண்ணியேன். (நினைக்கிலேன் வினைப்பயன்றன்னை) கீழ்ப்பண்ணின பாபஃபலத்தை அநுஸந்திக்க மாட்டாதே யிருந்தேன். (கடுஞ்சொலாரித்யாதி) வெட்டிய சொல்லையும் க்ரௌர்யமான செயலையுமுடையரா யிருப்பாராய், காலனுக்கு அதீநராயிருக்கு மவர்களாலே படும், கொடுமிறையுண்டு-க்லேசம், அதுக்கு அஞ்சி, நான்வந்துஉன் திருவடியடைந்தேன் நைமிசாரணியத்து ளெந்தாய். ... ௫.

அ.—ஆறாம்பாட்டு. அத்தனையோ, இன்னமும் செய்ததுண்டோ வென்ன; கைதொடனாய் பரஹிம்ஸைபண்ணிப்போந்தேனென்கிறார்.

வ்யா.—(கோடியவித்யாதி) கோடுதல்-வளைவு. வக்ரஹ்ருதயனாய், மறச்செயல்செய்து. (திரிந்துநாயினத்தொடுந்திளைத்திட்டு) தண்ணியவர்களோடே இச்செயலுக்குத்துணையாயிருப்பாருடனேகளித்துத் திரிந்து (ஓடியுமித்யாதி) ஒருவனை இன்னவிடத்தேபோனால்ஹிம்ஸிக்கலாம் என்றால், அங்கேசுறவோடியும். (உழன்றும்) இப்படிக்கொத்த காரியங்களிலே உழன்றும். (உயிர்களே கொன்றேன்) ப்ராணிஹிம்ஸையே பண்ணினேன். அதுக்கடி சொல்லுகிறதுமேல் (உணர்விலேனாதலால்) அறிவிலியாகையால். (நமனார்பாடியித்யாதி) யமபுரத்தை வென்றேன். அன்றிக்கே, கீழோடே யானபோது, இவன்பண்ணின பாபத்துக்கு இவன் நலியமாட்டான் என்று, வேறேயொரு படைவீடும் புதுக்கோமுற்றமு மிடவேணு மென்னும்படி பாபங்களையே பண்ணிப்போந்தே னென்னுதல். (பரமனே! பாற்கடல்கிடந்தாய்!) உனக்குசேஷபூதரான ப்ரஹ்மாதிகளுக்குக் கூக்குரல் கேட்கத் திருப்பாற்கடலிலே சாய்ந்தருளினவனே. (நாடியித்யாதி) "நமக்குப்புகலேது" என்று தேடிவந்து உன்திருவடிகளை யடைந்தேன் நைமிசாரணியத்து ளெந்தாய். ... ... ... ... ௬.

அ.—ஏழாம்பாட்டு. த்ரிவிதகரணங்களாலும் நான் செய்யாத அநீதியில்லை யென்கிறார்.

வ்யா.—(நெஞ்சினாலித்யாதி) நீதியல்லாதன நெஞ்சாலே நினைத்தும், வாயாலேசொல்லியும், கையாலேசெய்தும். (துஞ்சினாரித்யாதி) இவர்கள்செத்தால் கொடுபோம்வழியிற் கொடுமையைக்கேட்டு நடுங்கினேன். (விளங்கனிமுனிந்தாய்) விளவாய்நின்ற அஸுரனை முனிந்தவனே. (வஞ்சனேனித்யாதி) அநாதிகாலம் உன்னைவஞ்சித்துப்போந்தநெஞ்சில்பிரியாதே, பரமபதத்திலிருக்கிறப்போலே யிருக்கிறவனே. (தானவர்க்கென்றுநஞ்சனே) ஆஸ்ரிதவிரோதிகளுக்கு என்றும் நஞ்சானவனே!, வந்துஉன்திருவடி யடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய். ... ... ... ... ௭.

எட்டாம்பாட்டு. (ஏவினாரித்யாதி) கலியாரென்கிறாராய்த்து — கலிகாலத்துக் கஞ்சினபடியாலே. கலியாரானவர், கலியுங்கோள்என்று என்மேலே ஐந்து இந்த்ரியங்களையும் ஏவினார்; எங்ஙனே உஜ்ஜீவிக்கும்படி!. (ஐவர்கோவினாரித்யாதி) என்னையும் மநஸ்ஸையும் சுமையெடுத்திக்கொடு திரிகிற ராஜாக்கள் செய்கிற கொடிய செயலைத் திரியவிட்டேன். ஆரைப்பற்றி நீரவற்றை மீட்டதென்ன (குறுங்குடி நெடுங்கடல்வண்ணா) வேறுண்டோ, உன்வடிவழகன்றோ என்கிறார். திருக்குறுங்குடியிலே ஸந்நிஹிதனான உன்னுடைய கடல் போன்ற வடிவழகன்றோ என்னை மீட்டது. (பாவினாரித்யாதி) ஸந்தஸ்ஸுக்களாலே பூர்ணமான அழகிய சொற்களாகிற பலபூக்களையும் கொண்டு. (என்நாவினால்) இதரரை ஸ்தோத்ரம்பண்ணிப்போந்த என்நாவினாலே வந்து உன்திருவடியடைந்தேன் நைமிசாரணியத்துளெந்தாய். ...அ.

ஒன்பதாம்பாட்டு. (ஊனுடைச்சுவர்வைத்து) மாம்ஸமாகிற மண்ணைக்கொண்டு சுவராகவைத்து.(என்புதூண் நாட்டி) எலும்பாகிற தூண்களை நாட்டி வீட்டைச்சமைத்து. (உரோமம்மேய்ந்து)மயிராகிற கற்றையாலே இவ்வகத்தை மேய்ந்து. (ஒன்பது வாசலித்யாதி) ஒன்பது வாசலை யுடைத்தான ம்ஸஹம். (பிரியும்போது) ஶரீரவியோக காலத்துக்கு. (உன்றன்சரணமே சரணமென்றிருந்தேன்) உன்திருவடியே புகலென்றிருந்தேன். என்கொண்டென்ன(தேனுடையித்யாதி)[வும் தேனையுடைத்தான தாமரைப்பூவை யிருப்பிடமாக வுடைய பெரிய பிராட்டியாருக்கு வல்லபனானவனே. (திரைகொளித்யாதி) ஸ்வஸந்நி யாநத்தாலே திரைக்கிளப்பத்தையுடைய திருப்பாற்கடலிலே பள்ளிகொண்டவனே!. (நானுடைத்தவமித்யாதி) உன்னருளாலே உன்திருவடிகளை யடைந்தேன். புண்ணியனே என்று இவருடைய தபஸ்ஸாகிறது அவனருளேயிறே. நைமிசாரணியத்து ளெந்தாய்!. ௯.

பத்தாம்பாட்டு. (ஏதமித்யாதி) து:க்கங்கள் வந்து கிட்டாதபடி மநோரதித்து. (எழுமினோ வித்யாதி) தொழுதெழுமினோ என்று, (க) த்ரயஸ்த்ரிம்ஶத்கோடி தேவர்களுக்கு நாயகனான இந்த்ரன் வந்துஇறைஞ்சும் நைமிசாரணியத்தெந்தையையாய்த்துக் கலிபா[டிய டிற்று. (சிந்தையுளித்யாதி) நெஞ்சிலேவைத்து, பெரிய ஆசையோடே ஆழ்வா ரருளிச்செய்த இத்திருமொழியை அப்யஸித்தவர்கள். (ஓதமித்யாதி) ஸௌபரிஸ்வாமியைப்போலே ஐஹிகபோகத்தில் ஸ்பஹையுண்டாகில் அத்தையுமநுபவித்து, நித்யஸூரிகளிலே ஒருகோவையாகவும் பெறுவர்கள். ... ... ... ௰.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

(க) த்ரயஸ்த்ரிம்ஶத்கோடி - முப்பத்து முக்கோடி.

“ஒன்பதுவாசல் தானுடைக்குரம்பை பிரியும்போ துன்றன் சரணமே சரணமென்றிருந்தேன்” என்றார்; நீரிப்படி ஒருதலையிலய்யவஸாயமாகச் சொல்லுகிறதென்தான்? இத்தலையில் செயலற்றவளவிலே ப்ரஹ்லாதனுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே, ப்ரதிஜ்ஞைபண்ணின அவ்விடத்தேவந்து தோன்றி, அவன்விரோதியைப்போக்கி உபகரித்திலோமோ? அக்காலத்திலுதவாதார் இழக்க வேண்டாதபடி, “உன்னைப் பிரமாணித்தார் பெற்றபேறு” என்கிறபடியே - ஆஶ்ரிதரல்லார்க்குமாகச் செய்த செயலன்றோ? ஆனபின்பு, உம்மைப் போலிருந்தார்க்கு இழக்கவேண்டாதபடி நீர்கிட்டி யநுபவிக்குமிதுவே குறையாகச் சிங்கவேழ்குன்றிலே வந்து நின்றோமே! இப்படியிருக்க, ஒருதலையிலய்யவஸாயமேயாக நீர்சொல்லுவானென்? என்று, தான் சிங்கவேழ்குன்றிலேவந்து ஸந்நிதிபண்ணினபடியைக் காட்டிக்கொடுக்க; அங்கே புருஷகாரபூதையான பெரியபிராட்டியாருடனே கூடவிருக்கிற இருப்பைஅநுஸந்தித்துஹ்ருஷ்டராய், உத்தேஶ்யனு யிருக்கிறவன் வந்திருக்கிற தேஶமாகையாலே அங்குள்ளதடைய உத்தேஶ்யமாய், சிலரால்வந்து அணுகவொண்ணாதபடி ஸுரக்ஷிதமாக எழுந்தருளியிருக்கப் பெற்றோம்! என்று ஹ்ருஷ்டராய் திருவுள்ளத்தோடே கூட்டித் தாமங்கேபோ யநுபவிப்போமென்று பார்க்கிறார். ... ... ...

முதற்பாட்டு. (அங்கண் ஞாலமஞ்ச) அழகிய இடத்தையுடைத்தான பூமியிலுள்ளார், ஹிரண்யனுடைய வரபலத்தை அநுஸந்தித்து, என்னாய் விளைகிறதோ! என்று அஞ்ச. அன்றியே, ஸ்ரீநரஸிம்ஹனுடைய புறப்பாட்டை யநுஸந்தித்து, ஜகதுபஸம்ஹாரம் பிறக்கப்புகுகிறதோ! என்று பயப்பட. (அங்கோராளரியாய்) “ஆங்கே வளர்ந்திட்டு” என்கிறபடியே நரஸிம்ஹமாய். (அவுணன் பொங்க வாகம்) ஹிரண்யனுடைய அகன்ற மார்வத்தை. (வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்) வள்-கூர்மை. கூரிய வுகிராலே பிளந்த புனிதனிடம். (பைங்கணானையித்யாதி) பைம்மை-பசுமையும், அழகும். பசுத்த கண்ணையுடைய ஆனையைக்கொன்று அதினுடையகொம்பைப்பிடுங்கிக்கொண்டு, சிவந்த கண்ணையுடைய யாளியானது, (௧) ஶக்திபுரஸ்ஸரமாக (௨) அக்கோடுகளைத் திருவடிகளிலேயிட்டு வணங்கும் சிங்கவேழ்குன்றமே. ... ... ... ... ௧.

இரண்டாம்பாட்டு. (அலைத்தவித்யாதி) சீற்றத்தாலே கடைவாயுடனே நாக்கைஎற்றிக்கொள்ளுகிறபெரியவாயையுடைய மிடுக்கையுடைய ஸிம்ஹமாய். கோள் - மிடுக்கு. (அவுணனித்யாதி) கொலைக்கையாளனான ஹிரண்யனுடைய நெஞ்சையிடந்த கூர்த்த திருவுகிரை

(௧) ஶக்திபுரஸ்ஸரமாக-ஶக்தியைமுன்னிட்டுக்கொண்டு, (௨) கோடுகளை-கொம்புகளை.

யுடையவனிடம். (மலைத்தவித்யாதி) மலைத்தல்-எதிர்பொருதல். செல் சாத்து - தீர்த்தயாத்ரை போகிற பெருங்கூட்டத்தைப் பறிக்க வந் திட்டவேடர். எறிதல் - இடுதல். (வன்துடியித்யாதி) துடிக்கு வலிமை யாவது-பெருத்திருக்கை. பெரியதுடிவாயிலோசை செவிகடுக்க.[ரு கேட்டவர்கள் செவியும்கூசி நெஞ்சும் நடுங்க. (சிலைக்கையித்யாதி) கையும்வில்லுமாயிருக்கிற வேடருடைய, தெழிப்பு - வ்யாகுலமும், ஆர்த்துக்கொள்ளுகிறஆரவாரமுமாய்க்கிடக்கும்சிங்கவேழ்குன்றமே.

மூன்றாம்பாட்டு. (ஏய்ந்தவித்யாதி) வடிவிற்பெருமைக்குத் தகு தியாயிருந்துள்ள பெரியவாயையுமுடைத்தாய், ஒளியையுடைத்தான பல்லையுமுடைத்தாய், மிடுக்கையுமுடைத்தான ஸிம்ஹமாய். (அவு ணனித்யாதி) ஹிரண்யனுடைய மாம்ஸம்செறிந்த மார்வத்தைக் கூரிய வுகிராலே பிளந்த ஸர்வேஶ்வரனிடம். (ஓய்ந்தவித்யாதி) நிலத்திற் கொடுமையாலே அந்நிலத்தில் வர்த்திக்கிற ஆனை குதிரை துடக்க மானவையும், காட்டுத்தீக் கதுவி விண்டமலைகளும். (அன்றியும்) அதன்றியும். (நின்றித்யாதி) தன்னிலேநின்று இழைந்து நெருப்புப் பற்றி யெரிந்து மிக்க குறைக்கொள்ளியுமொழிய வேறொன்றில் லாத சிங்கவேழ்குன்றமே. ... ... ... ௩.

நாலாம்பாட்டு. (எவ்வுமித்யாதி) எவ்வம்-துக்கம். எல்லாரையும் ஹிம்ஸையக்லேஶத்தைப் பண்ணும் கொடியவேலையுடைய ஹிரண்ய [உயி னுடைய நற்சீவனை வாங்கி; தோற்றாவிலே. (ஆகமித்யாதி) அவனு டைய நெஞ்சைக் கூரிய வுகிராலே பிளந்த ஸர்வேஶ்வரனிடம். (கவ்வுநாயும்) வேற்றாள்கண்டபோதே வந்து துடைகளிலே கடிக்கிற நாயும், அப்படிகடித்து விழவிட்ட பிணங்களைக் கவ்வும் கழுகுகளும். (உச்சிப்போதொடுகால்சுழன்று)மத்யாஹ்நத்திலே(க)சூறாவளியுமாய். கால் - காற்று. (தெய்வமல்லாலித்யாதி) தைவங்களுக்கல்லது செல்ல வரிதாயிருக்கிற சிங்கவேழ்குன்றமே. ... ... ௪.

அஞ்சாம்பாட்டு.(மென்றவித்யாதி)சீற்றத்தாலேபல்லோடுமென்ற பெரியவாயையும், ஒளிவிடுகிற எயிற்றையும், மிடுக்கையுமுடைய ஸிம்ஹமாய். (அவுணன்பொன்ற) ஹிரண்யன் முடிய. (ஆகமித்யாதி) அவனுடைய மார்வத்தைக் கூரியவுகிராலே பிளந்த அம்மானிடம். (நின்றவித்யாதி)மாறாமல்நின்று எரிகிற அக்நியைச்(க)சூறாவளி முகந்து கொடு பெரிய ஆகாஶத்திலே போக. ஸ்வர்காதிலோகங்களிலுள்ள அக்நிஜ்வாலையைக்கதுவி பயப்பட்டுப்போக வென்றுமாம். (சென் றித்யாதி) மநுஷ்யர்க்குச்சென்று காணவரிய கோயில் சிங்கவேழ்[கூடு குன்றமே. ... ... ... ... ... ௫.

ஆறாம்பாட்டு. (எரிந்தவித்யாதி) சீற்றத்தாலே அக்நிஜ்வாலைபோல் ஜ்வலிக்கிற சிவந்த கண்ணையும், ஒளிவிடாநின்ற பெரிய வாயையும், எயிற்றையும் கண்டு. (இதெவ்வுரு வித்யாதி) இதென்னவுரு! என்று பயப்பட்டு, இருவர் ஒருவழிபோகாமே (௧) இரிந்து சிதறியோடும்படி யிருந்த ஸர்வேஶ்வரனிடம். (நெரிந்த வேயினித்யாதி) நெருங்கின மூங்கிற் குத்து முழையுள் நின்று-மலைமுழஞ்சுகளில் நின்றும் புறப்பட்டு. நெருங்கின மூங்கிற்காட்டிடத்துப் பெரு வழியிலே, உழுவையுண்டு - புலி. (திரிந்த வானையித்யாதி) ஸஞ்சரிக்கிற ஆனைச்சுவடு பார்க்கும் சிங்கவேழ் குன்றமே. ... ... ௬.

ஏழாம்பாட்டு. (முனைத்த வித்யாதி) முனை - வலி. வலிய சினத்தாலே - கோபாக்நியாலே, அஸுரிகுலத்தைப் போய்ச்சுடும். (மூவுலகித்யாதி) த்ரைலோக்யங்களும், மற்றுமுள்ள லோகங்களு மெல்லாம் பயப்பட, நாரஸிம்ஹ மாயிருந்த அம்மானிடம். (கனைத்த வித்யாதி) செறிந்த அக்நியும் மலைகளும் வில்லுடை வேடருமாய், [மடு வேறொருவர்க்கும் நினைத்தலையும் சென்று கிட்டவரிய சிங்கவேழ் குன்றமே. ... ... ... ... ... ௭.

எட்டாம்பாட்டு. (நாத்தழும்பவித்யாதி) நாவானது தழும்பேறும்படி சதுர்முகனும் ருத்ரனுமாய். முன்பு ஹிரண்யனுக்கு பயப்பட்டு மநுஷ்ய வேஷங்களையே கொண்டு திரிந்தவர்கள், இப் [உய போது ஹிரண்யன் பட்டவாறே, தங்கள் வேஷங்களையே கொண்டு. (முறையாலேத்த) தங்கள் ஶேஷத்வமுறையால் ஏத்த. (அங்கோரித்யாதி) ஹிரண்யனுடைய மாளிகையில் அவனிருக்கும் மண்டபத்தின் தூணிலே, மிடுக்கையுடைய ஸிம்ஹமாய்த் தோற்றின ஸர்வேஶ்வரனிருந்தவிடம்.(காய்த்தவித்யாதி) காய்த்தவாகைநெற்று[உரு காற்றாலே கலகலென ஶப்திக்க. (கல்லதர்) மலைவழி. கல் - மலை; அதர் - வழி. மலைச்சாரல்வழியில், வேயானது-மூங்கில், ஆகாஶத்திலே கிட்டவளர்ந்து இழைந்து, தன்னிலே நெருப்புக் கொளுந்தியெரிகிற அக்நிஜ்வாலையாலே ஸ்வர்காதி லோகங்கள் சிவக்கும் சிங்கவேழ்குன்றமே. ... ... ... ... ௮.

ஒன்பதாம்பாட்டு. (நல்லநெஞ்சே) எனக்குப் பாங்கான நெஞ்சே. (நாம்தொழுதும்) நாம்தொழுவோம். (நம்முடையித்யாதி) நம்முடைய ஸம்ஸாரது:க்கம் போக, நமக்கு வகுத்த ஸ்வாமியைத்தொழுவோம். (நம்முடை நம்பெருமான்) நமக்கு ஸுலபனான நாயகன்.(அல்லிமாதர் புல்கநின்ற) * அலர்மேல்மங்கை யணைக்க[கூடு அத்தாலே லப்யஸ்வரூபனாய் நின்ற. (ஆயிரந் தோளனிடம்) "தோள்களாயிரத்தாய்" என்கிறபடியே - அநேகமாயிரம் திருக்கைகளையுடையவனிடம். (நெல்லிமல்கி யித்யாதி) நெல்லிமரங்க ளானவை கல்லிடைகளிலே முளைத்து வளர்ந்து, கல்லிடைகளிலே வேரோ

(௧) இரிந்து - ஆரவாரித்துக் கொண்டு.

யாலே, அவ்வேர்கள் பருத்துக் கற்களைப்பேர்க்க. ( புல்லிலை யார்த்து) மூங்கிலிலைகளானவை ஒலிக்க. (அதர்வாய்) அதர் - வழி. வழியிடத்து. சில்லியுண்டு - சில்லீடு, சில்லி சில்லென்று. (ஒல்லறாத) ஒல் - ஓசை. ஓசையறாத சிங்கவேழ்குன்றமே. ... ௯.

பத்தாம்பாட்டு. (செங்கணாளியித்யாதி) சிவந்தகண்ணையுடைய யாளிகளானவை. (இட்டிறைஞ்சும்) யானைக்கோடுகளையிட்டு இறைஞ்சும். ( சிங்கவேழ் குன்றுடைய ) சிங்கவேழ்குன்றைத் தனக்கிருப்பிடமாக வுடைய. (எங்களீசனெம்பிரானை) எனக்கு ஸ்வாமியுமாய் எனக்கு உபகாரகனுமானவனை. (இருந்தமிழ் நூற்புலவன்) பெரிய தமிழ்நூலைச்செய்த ஜ்ஞாநாதிகன். புலவன் - வித்வான். (மங்கையாளன்) திருமங்கைக்கு நிர்வாஹகரானவர். (மன்னுதொல்சீர்) நித்யமான கல்யாணகுணங்களை யுடையருமாய். ( வண்டித்யாதி ) வண்டுகள் மதுபாநம் பண்ணிக்களித்து ஸஞ்சரிக்கிற மாலையை யுடைய ஆழ்வார். (செங்கையாளன் செஞ்சொல்மாலை) உதாரமானஅழகிய கையையுடைய ஆழ்வாரருளிச்செய்த திருமொழியை அப்யஸிக்க வல்லவர்களுக்கு, ஒருநாளும், தீங்குண்டு - பொல்லாங்கு, அது அவர்களுக்கு ஒருக்காலும் வாராது. ... ... ௰.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

---

## முதற்பத்து - எட்டாந்திருமொழி - கொங்கலர்ந்த. ப்ரவேசம்.

விரோதிநிரஸந ஶீலனாய், ஆஶ்ரிதஸம்ஶ்லேஷ ஸ்வபாவனாய், ஸர்வாதாராத்மாவாயிருக்கிற ஹரியானவன், வாயாலே திருநாமஞ்சொன்னானொரு சிறுவனுக்குத் தமப்பன் பகையாக உதவிற்றொரு வடிவைக் கொண்டுவந்து அவன் விரோதியைப் போக்கினவன், அவனொருவனளவில் பர்யவஸிக்கையன்றிக்கே திருநாமம் சொன்னாரெல்லாருடையவும் ஸம்ஸாரது:க்கத்தைப் போக்குவதாகத் திருமலையிலேவந்து நின்றருளினான், அங்கே போய் அநுபவிப்போம் வா என்று திருவுள்ளத்தோடே கூட்டுகிறார். ... ... *

முதற்பாட்டு. (கொங்கித்யாதி) பரிமளம் ப்ரவஹியாநின்ற பூவை யுடைய குந்தாஸுரனை நிரஸித்த க்ருஷ்ணனை என் உபகாரகன். (சங்குதங்கித்யாதி) ஶங்கநிதிதுடக்கமான பதார்த்தங்களை யுடைத்தாய், * தாளுந்தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பிக் கண்வளருகைக்கு வேண்டும் பரப்பை யுடைய கடலிலே கண்வளர்ந்த புண்டரீகாக்ஷன். (பொங்கித்யாதி) பெரியகிளர்த்தியோடே மிகைத்து வந்து தோற்றின பகாஸுரனைவாயைக்கிழித்து, இப்படி விரோதிகளைப் போக்குகை பணிதாகச் செய்து போருகிறவர் வந்து வர்த்திக்கிற ஸ்தாநம்;—மிக்க நீர்வெள்ளத்தை யுடைய சுனைகளிலே களித்துத் துள்ளுகிற அழகிய கயல்களையுடைய திருவேங்கடம்; அத்தை, நெஞ்சே! அடை. ... ... ... ௧.

இரண்டாம்பாட்டு. (பள்ளியாவது பாற்கடல்) ப்ரஹ்மாதிகளுக்காகக் கண்வளர்ந்தருளுகிற படுக்கை, திருப்பாற்கடல். (அரங்கம்) ஸம்ஸாரிகளான ஸ்ரீவைஷ்ணவர்களுக்காகக் கண்வளர்ந்தருளுகிறது, கோயில். (இரங்க வன்பேய்) ஈடுபட்டு முடிய வலியபூதனை. (முலை பிள்ளையாயுயிருண்டவெந்தை) பேய்முலையை, பிள்ளையாய் அவளுயிரையுண்ட உபகாரகன்; அவன் (பெருகுமிடம்) அவன் அபிமதம் ஸித்தித்து வளருகிற விடம். (வெள்ளியானித்யாதி) "முன்னைவண்ணம் பாலின்வண்ணம்" "பாலினீர்மை செம்பொனீர்மை" இத்யாதிப்படியே - வெளுத்த திருநிறத்தை யுடையவன், மணியின்நிறத்தை யுடையவன் யுகந்தோறும் என்றநுஸந்தித்து, நாள்தோறும். (தெள்ளியாரித்யாதி) ஸம்யக்ஸத்த்வஸ்தரானவர்கள் - அநந்ய ப்ரயோஜநரானவர்கள் வந்தாஸ்ரயிக்கும் திருவேங்கடமடை நெஞ்சமே. ... ... ... ... உ.

மூன்றாம்பாட்டு. (நின்ற மாமருதிற்றுவீழவித்யாதி) அஸுரா வேசத்தாலே பேராதே நின்ற பெரியமருதுகள் முறிந்து விழும்படி. (நடந்த நின்மலன்) * இணைமருதிற்றுவீழ நடைகற்ற தெற்றவிறே. (நேமியான்) ஸர்வேஸ்வரன். (என்றுமித்யாதி) "நித்யாஞ்ஜலிபுடாஹ்ருஷ்டா:" என்கிறபடியே - நித்யஸூரிகள் தொழும். (இணைத்தாமரையடியெம்பிரான்) ஒன்றுக்கொன்று ஒப்பான திருவடித் தாமரைகளை யுடைய என்னுயன். (கன்றிமாரிபொழிந்திட) இந்த்ரன் சினந்து மிகவும் கல்வர்ஷத்தைச் சொரிய. (கடிதானிரையித்யாதி) சடக்கெனப் பசுக்களுக்கு வந்த இடரைப்போக்குகைக்காகச் சென்று கோவர்த்தநத்தை யெடுத்தவன் திருவேங்கடமடை நெஞ்சமே. ௩.

நாலாம்பாட்டு. (பார்த்தற்காயன்று) பார்த்தனுக்காக அன்று. (பாரதம்கைசெய்திட்டு) பாரதயுத்தத்தைக் கையுமணியும் வகுத்திட்டு. (வென்ற பரஞ்சுடர்) துர்யோதநாதிகளை வென்ற பரஞ்சுடர். (கோத்தங்காயரித்யாதி) திருவாய்ப்பாடியில் பெண்களுடனே குரவை கோத்து, மன்றிலே குரவைக் கூத்தை விரும்பி யாடினவன். பிணைதல்-விரும்பல் (கோவலன்) கோபாலன். (ஏத்துவாரித்யாதி) தன்னை ஸ்தோத்ரம் பண்ணுமவர்கள் ஹ்ருதயத்தை விடாதே யிருக்குமவன். (இடவெந்தையித்யாதி) எனக்கு உபகரிக்கைக்காகத் திருவிடவெந்தையிலே எழுந்தருளி நிற்கிறவன், பாவநமான ஜலத்தையும் பெரிய சோலையையு முடைய திருவேங்கடமடைநெஞ்சமே! ௪.

அஞ்சாம்பாட்டு. (வண்கையானித்யாதி) ஏற்றார்க்கு மாறாதே கொடுப்பானாய், அஸுரர்க்கு தேவனாயிருக்கிற மஹாபலியாகத்திலே வாமநனாய்ச் சென்று. மாண் - அழகு. (மண்கையாலிரந்தான்) * ஆலம் புரிந்த நெடுந்தடக்கையாலே பூமியையிரந்தான். அவனுடைய

( மராமரமித்யாதி) ஸாலவ்ருக்ஷங்களேழையும் ஓரம்பாலே யெய்த பலத்தை யுடையவன். (எண்கையான்)திருவட்டபுயகரத்திலேயெழுந்தருளி நின்றவன். ( இமயத்துள்ளான் ) ஹிமவானில் திருப்பிரிதியிலே வந்து ஸந்நிஹிதனானவன். (இருஞ்சோலையித்யாதி) ஜலஸம்ருத்தியான தெற்கில்திருமலையிலே வந்து ஸந்நிஹிதனானவன். (திண்கையித்யாதி) திண்மையுடைய கைம்மாவின் துன்பத்தைப்போக்கினவன் திருவேங்கடமடை நெஞ்சமே!. ... ... ரு.

ஆறும்பாட்டு. (எண்டிசையித்யாதி) எட்டுதிக்குக்களையும் திக்குக்களுடனே ஸப்தலோகங்களையும் வாங்கி அழகிய திருவயிற்றிலே வைத்து, ஒருபவனான ஆலந்தளிரிலே கண்வளர்ந்தவன். (பால்மதிக்கிடர் தீர்த்தவன்) சந்த்ரனுக்கு யர்மிலோபம் வரும்படி வந்த ஆபத்தைப் போக்கினவன். (ஒண்டிறலித்யாதி) மிக்க பலத்தை யுடைய ஹிரண்யன்மார்விலே திருவுகிரை வைத்துப் பிளந்தவன். பிளந்தபோதை வடிவை அநுபவிக்கிறார் மேல் (ஒள்ளெயிற்றித்யாதி) “அழகியான் தானே அரியுருவன் தானே” என்கிறபடியே – அழகிய எயிறுகளுடனே திண்ணிய மிடுக்கையுடைய ஸிம்ஹமானவன் திருவேங்கடமடை நெஞ்சமே!. ... ... ... சா.

ஏழாம்பாட்டு. (பாருநீரித்யாதி) ப்ருதிவ்யாதி பஞ்சபூதங்களுமாயினன். ஜகச்சரீரியாய் நிற்கிற நிலை. (பேருமித்யாதி) தான் கொடுத்த கரணங்களைக்கொண்டு ஆயிரம் திருநாமத்தைச் சொல்லித் தன்னை ஆஶ்ரயிக்கும்படி, கர்மவஶ்யமான பிறவியில்லாதவன் மிகவும் விரும்பி வர்த்திக்கிற தேஶம். பேருகையாவது-தேஶத்திலே ஆசை பெருகை. (காருமித்யாதி) மேகங்களும், மிக்கபனியும், பெரிய ஆகாஶத்திடையிலேசொரிவதாய். (மாமுகிலித்யாதி) பெரியமேகங்கள் படியும்படி மேகபதத்திலே சேரும்படி நீண்ட சோலை சூழப்பட்ட அழகிய திருவேங்கடமடை நெஞ்சமே. ... ... எ.

எட்டாம்பாட்டு.(அம்பரமித்யாதி)ஜகதாகாரதையைச்சொல்லுகிறது. (அமரர்கோன்) நித்யஸூரிகளுக்கு * ஸதாபஶ்யந்திக்கு விஷயமானவடிவைச் சொல்லுகிறது. (வம்புலாமித்யாதி) நறுநாற்றம் கமழாநின்றுள்ள மலர்மேலே மிகவும்விரும்பி யிருப்பாளாய், மடப்பத்தை யுடையளாய், “யுவதிஶ்ச குமாரிணீ” என்கிற பருவத்தை யுடையவளுக்கு வல்லபனானவன். (கொம்பினித்யாதி) வஞ்சிக்கொம்பன்ன இடையையும் மடப்பத்தையு முடைய குறப்பெண்கள். (நீளிதணமித்யாதி) நீண்டபரண்களிலிருந்துஅழகியபுனம் காவல்கொள்ளுகிற திருவேங்கட மடை நெஞ்சமே. ... ... ...அ.

ஒன்பதாம்பாட்டு.— (பேசுமினித்யாதி) உங்களுக்கு ஓராயிரம் ஸம்பாதிக்கவேண்டா, பேசப்படுவதாய் இனிய எட்டெழுத்தான திருநாமத்தைச் சொல்லவமையும். (சொல்லிநின்றபின்னரும்) பேசிநின்ற பின்பும். ஒருக்கால் சொன்னோம் என்றிராதே, பின்னையும் திருநாமத்திலாசை யுடையராய்ப் பேசுவார்தங்களை. (உய்யவித்யாதி) அவர்களுக்கு உஜ்ஜீவிக்கும்படி அவர்களை ஸம்ஸாரத்தில் நின்றும் எடுத்து, அவர்கள்பிறப்பையும் போக்கும் உபகாரகன். (வாசமித்யாதி) நறுநாற்றம் கமழாநின்றுள்ள பெரியபூக்களை யுடைத்தாய், ஓங்கின பொழில் சூழப்பட்டு. (உலகித்யாதி) "திலதமுலகுக்காய்" என்கிறபடியே - லோகத்துக்கு தேஜஸ்கரமாம்படி விளங்காநின்றுள்ள திருவேங்கடமடை நெஞ்சமே. ... ... ... ௯.

பத்தாம்பாட்டு. (செங்கயலித்யாதி) அழகிய கயல்கள் களித்து வாழுகிற சுனைகளையுடைய திருமலையிலே நித்யவாஸம் பண்ணுகிற ஸ்ரீயப்பதியை. (மங்கையரித்யாதி) திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகரான ஆழ்வாரருளிச்செய்த, உதாரமாய் அழகிதான சொல்மாலைகள். (சங்கையித்யாதி) ஃபலத்தை யிது தரக்கூடுமோ! என்று அதிசங்கைபண்ணாதே, தரித்துநின்று சொல்லவல்லவர்கள். (தஞ்சமித்யாதி) அறுதியாகவே, * வங்கக்கடல்சூழுலகுக்குக் காவலராகி, பின்னையும் பரமபதத்தை ஆளப்பெறுவர். ... ... ... ... ௰.

ஜீயர்திருவடிகளேசரணம்.

## முதற்பத்து - ஒன்பதாந்திருமொழி--தாயேதந்தை. ப்ரவேசம்.

திருமலையை ஆஶ்ரயிக்கச்சொல்லித் திருவுள்ளத்தைக்குறித்தருளிச்செய்து நின்றார் - கீழ்; அப்படிக்கு நெஞ்சும் பாங்காய் தாமும் திருமலையிலே வந்து புகுந்தார்; ஸர்வஸ்வாமியுமாய் நிருபாதிகபந்துவுமானவன் வந்து இங்கே ஸந்நிதிபண்ணுகையாலே தம்முடைய அபேக்ஷிதங்களெல்லாம் பெறலாமென்று, அக்ரூரன் "மாமக்ரூரேதிவக்ஷ்யதி" என்று மநோரதித்துக்கொண்டு வந்தாப்போலவும், ஸ்ரீபுண்டரீகன்மநோரதம்போலவும், இவரும் மநோரதித்துக்கொண்டு வந்தவிடத்து, அப்படி எதிரேவருதல், அணைத்தல், ஓரின்சொல்லுச்சொல்லுதல், "க்ரியதாம்" என்று கைங்கர்யத்திலே ஏவியருளுதல் செய்யக்காணாமையாலே, ஸந்நிதியுண்டாய், நினைத்தபடிசெய்து தலைக்கட்டுகைக்கு சக்தியுண்டாய், ப்ராப்தி யுண்டாயிருக்க, நம் அபேக்ஷிதம் செய்யாதொழிகிறது - செய்தருள நினையாமைக் குடலாயிருப்பதொரு ஹேது இத்தலையிலே யுண்டாகையிறே என்று கைவாங்கினவர், பின்னையும் கைங்கர்யத்தி லுண்டான சாபலாதிசயத்தாலே, மீண்டும் என்பாபங்களைப் பார்த்தால், அவைக்

ந்துக்கள்பக்கலிலே பந்துத்வப்ரதிபத்தி பண்ணியும், அபோக்
யங்களிலே போக்யதாபுத்தி பண்ணியும், பரஹிம்ஸை பண்ணி
யும், ஆர்த்தவிஷயங்களில் க்ருபைபண்ணாதேயும், உன்னையொழியப்
புறம்பே காலம் போக்கியும் போந்தேன், இப்படிபோந்தநான் இப்[ரு
போது தேவரீரை யொழியச்செல்லாமையை யுடையனாய் வந்தேன்,
இனி விடவொண்ணாத ஸம்பந்த முண்டாய், குற்றங்களைப்பொறுப்
பிக்கைக்குப் பிராட்டிஸந்நிதி யுண்டானபின்பு என் அபராதங்களைப்
பொறுத்தருளி என்ஸ்வரூபாநுரூபமான சேஷவ்ருத்தியைக் கொண்
டருளவேணுமென்று, பெரிய பிராட்டியார் புருஷகாரமாகத் திருவே
ங்கடமுடையான்திருவடிகளிலே சரணம் புகுகிறார். இதுதன்னை
* வாநிலாமுறுவலிலே செய்ததன்றோ வென்னில்; ஸுகுமாரரா
யிருப்பார் விடாய்த்தால் பலகாலும் கர்ப்பூரநிகரத்தை வாயிலிடுமா
ப்போலே, இவரும் பலகாலும் ப்ரபத்தி பண்ணுகிறார்; "நிபபாத
விபீஷண:" என்று அவன் பெருமாள் திருவடிகளிலே விழுந்து [யிரு
சரணம் புக்காப்போலே. ... ... ... ௯

முதற்பாட்டு. (தாயேயித்யாதி) "மாதாபிதாப்ராதா" "ப்ராதா
பர்த்தாச" "ஏகைகமேவலாஹாய" என்கிறபடியே — தேவரே ஸர்வ
விதபந்துவுமாயிருக்க, ஔபாதிகபந்துக்களாய, இத்தலையில்
ப்ரயோஜநமுள்ளநாள் கொண்டு இவனுக்கு உதவவேண்டுமென்று தங்
களைக்கொண்டு அகலநின்று அபராதத்தைப் பண்ணுமவர்களையே
பந்துக்களென்று நினைத்து அநர்த்தப்பட்டேனென்கிறார். தாயே!
என்றும், தந்தையே! என்றும், தாரமே! என்றும், கிளையே! என்றும்,
மக்களே! என்றும். (நோயே பட்டொழிந்தேன்) நோயென்று —
பிறவிக்குப்பேர். பிறந்தே எய்த்தொழிந்தே னென்றபடி. அபந்து[உரு
க்களை பந்துக்களென்று ப்ரதிபத்திபண்ணி, அத்தால் பெற்ற பே
றிது என்கிறார். வேயேய் பூம்பொழில்சூழ் விரையார் திருவேங்க
டவா — உன்னைக்காண்பதோ ராசையினால் - நாயேன் வந்தடைந்தேன்
என்றந்வயம். (உன்னைக்காண்பதோராசையினால்) உன்னைக்காணவே
ணுமென்கிற ஆசையாலே. (வேயித்யாதி) மூங்கிற்குருத்துக்களா[கூய
லும் அழகிய பூம்பொழில்களாலும் சூழப்பட்டு பரிமளப்ரசுரமா
ன திருமலையிலே நித்யஸந்நிஹிதனானவனே. (நாயேன் வந்தடை
ந்தேன்) புறம்பேபோகில் கல்லிட்டெறிவர்கள், உள்ளேபுகுரில் தொ
ட்டதுவும் தீண்டிற்றும் போகடவேணும், பாலும்சோறுமிட்டு வள
ர்த்தவனே தீண்டிலும் குளித்து ப்ராயச்சித்தம்பண்ணவேண்டும்[கூரு
படி தண்ணியேன். நல்கல் - அருட்கொடை. உன் க்ருபையாலே என்
னை அடிமை கொள்ளவேணும். ... ... ... க.

அ.—இரண்டாம்பாட்டு. அபந்துக்களை பந்துக்களாக நினை
த்த அபராதத்தைப் பொறுத்தருளவேணு மென்றார்—முதற்பாட்டில்;
போக்யமல்லாதவற்றிலே போக்யபுத்தி பண்ணிப்போந்தேன்,[சுய
அக்குற்றத்தைப் பொறுத்தருளவேணு மென்று சரணம்புகுகிறார்—
இப்பாட்டில்.

வ்யா.—(மானேய்கண்மடவார்) மான்போன்ற விழிகளையும் மடப்பத்தையு முடையவர்கள். (மயக்கில்பட்டு) அவர்களோட்டைக் கலவியிலே அகப்பட்டு. மயங்கல் - கூடலும், கலத்தலும். * அவர்தரும் கலவியேகருதி ஓடுமெவரிறே. (மாநிலத்து)மஹாப்ருதிவியில். (நானே நாநாவித நரகம்புகும்பாவம்செய்தேன்) நாநாவித நரகம் நானேபுகும் பாபம்செய்தேன். (தேனித்யாதி) வண்டுகள்மொய்த்த பொழிலாலே சூழப்பட்ட திருமலையிலே நின்றருளின. (என்னுய்வந்தடைந்தேன்) எனக்கு ஊர்ஜீயனாயிருக்கிறவன்னை வந்து அடைந்தேன். ஆனையென்றது-செய்ததுக்காகக் காட்சியில்லை யென்று அதுக்குக் கருத்து.[ய இப்படி மஹாபாபங்களைப் பண்ணினுளை, அதுதானே ஹேதுவாக அவனைக்கைக்கொண்டால் கேள்வியில்லை யென்றபடி. (அடியேனித்யாதி) என்னை அடிமை கொண்டருளவேணும். ... ... ௨.

அ.—மூன்றாம்பாட்டு. தேவர் திருவுள்ளத்துக்கு அஸஹ்யமாம்படி பாபங்களை பண்ணிப்போந்தேனென்கிறார்.

வ்யா.—(கொன்றேன்பல்லுயிரை)மடிதடவி விட்டிலேன். அர்த்தம் கொண்டு வந்தானாகில் பின்தொடர்ந்தியறக் கொன்று பறித்தும், வெறுங்கையிலானாய் வந்தானாகில் அவன் பக்கலிலே சில உண்டு என்று போய் அது பெறாச் சினத்தாலே அவனையும் கொன்றேன். (பல்லுயிரை) ஒருவரிருவரல்ல. இது பொல்லாதென்று[உய சொல்லுகிற நீர் இப்படி செய்வானென்னென்ன (குறிக்கோளொன்றிலாமையினால்) அதுக்கடி - பாபங்களை அநர்த்தஹேது என்று ஸங்கல்பியாமல். (என்றேனு மித்யாதி) பசித்துவந்து அர்த்தித்தவர்களுக்குக் குளிர ஒருவார்த்தையும் சொல்லியறியேன். இட்டறியேன் என்பது அந்த ப்ரஸங்கமு முண்டாகிலிறே. (குன்றேயித்யாதி) குன்றேந்த மேகமென்னுதல், குன்றிலே படிந்த மேக [உ௫ மென்னுதல். கழுத்தேகட்டளையாக நீரைப்பருகினது முகட்டிலே படிந்து முழங்குகிற குளிர்மாமலைவேங்கடவா !. (அன்றேயித்யாதி) கொன்ற கை கறைகழுவாதே அன்றே வந்தடைந்தேன். (அடியேனை யாட்கொண்டருள்) * பிழைப்பராகிலும் தம்மடியார் செய்வது பொறுக்கவேணுமே. ... ... ... ... ௩.

நாலாம்பாட்டு. (குலமித்யாதி) "குலங்களாய வீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்" என்றதே, குலங்களில் நான் பிறவாத குலங்களில்லை; "யாதானுமோராக்கை" இத்யாதி. அநுலோம ப்ரதிலோம ரூபத்தாலே நான் பிறந்த பிறவிக்கு ஓரெல்லையில்லை. குலங்களெல்லாவற்றிலும் பிறந்திறந்து திரிந்தேன். (எய்த்தொழிந்தேன்) இப்படி அநாதிகாலம் பிறப்பதிறப்பதாய்த் திரிந்தேன், இளைத்தேன். அப்படி பிறந்திறந்த ஜந்மங்களில்ஏதேனும் நன்மைகள் செய்ததுண்டோவென்ன (நலந்தானொன்று மிலேன்) ஒருநன்மை யென்று பேரிடலாவது க்ரியகரணங்களாலு மில்லை. இப்போதுதான்

ஏதேனும் நன்மை செய்ததுண்டோ வென்ன (நல்லதோரறம் செய்துமிலேன்) ஃபலவ்யாப்தமா யிருப்பதொரு ஸத்கர்மம் பண்ணப்பெற்றிலேன். (நிலமித்யாதி) பூமியிலே நீர் தோயும்படி அருவிகளாலே விழுந்து பெருகும்படி மேகங்கள்வந்து படிந்து வர்ஷிப்பதாய். (நெறியார் திருவேங்கடவா) நித்யஸூரிகளுக்கும் முமுக்ஷுக்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ப்ராப்யமான திருமலையிலே நிற்கிறவனே. அன்றியே, "நெறியார் குழற்கற்றை முன்னின்று" இத்யாதிப்படியே - ஸம்ஸாரத்தைத் துறந்து . திருவேங்கடமுடையானைப் பெறுகைக்கு வழிப்படுகிற உபாஸகரையுடைய திருமலை யென்னுதல். (அலந்தேனித்யாதி) ஜந்ம பரம்பரைகளிலே தோள்மாறி அதிலே யிளைத்து வந்தடைந்தேன், அடியேனை யாட்கொண்டருளே. ...௪.

அஞ்சாம்பாட்டு. (எப்பாவமித்யாதி) அதிபாதகம் உபபாதகம் மஹாபாதகம் என்றாப்போலே சொல்லுகிற பஞ்சவிதமான பாபத்தைப்பண்ணி, தத்ஃபலத்தைக் கேட்டு க்லேஶப்பட்டேன். துப்பா-ஸமர்த்தனே. இப்பாபங்களைப் போக்கி ரக்ஷிக்கைக்கு ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தியுமானவனே. (நின்னடியித்யாதி) உன்திருவடிகளை விடாதே ஆஶ்ரயிக்க வல்லேனாய்த்திலேன். (செப்பார்திண்வரைசூழ்) செப்பம் - வழி, ஆர்தல். நிறைதல். வழியுடையார் வந்து நிறைந்தென்றபடி. ஸ்வரூபாநுரூபமாக வழிப்பட்டவர்கள் வந்துசேருவதாய், திண்ணிய வரைகளாலே சூழப்பட்ட. (திருவேங்கட மாமலை என்னப்பா! வந்தடைந்தேன்) திருமலையிலே யெழுந்தருளி நின்று, என் ஶேஷத்வத்தையும் தேவரீருடைய ஶேஷித்வத்தையும் (க)உதறிப்படுத்தவனே!, அடியேனை யாட்கொண்டருளே. ... ௫.

ஆறாம்பாட்டு. (மண்ணாயித்யாதி) பஞ்சபூதங்களாலே நிர்மிதமான ஶரீரங்களிலே புக்கு, அதுக்குறுதியே வேண்டி, அது கிடையாமல் கூட்பிட்டுத் தளர்ந்தெய்த்தொழிந்தேன். (விண்ணூரித்யாதி) ஆகாஶாவகாஶத்தை உடைத்து வளர்ந்த பெரிய கொடுமுடிகளையும் மிக்க பரிமளத்தையு முடைய திருமலையிலே நின்ற. (அண்ணா) கீழ் "அப்பா" என்றாரே ; இங்கே அண்ணா! என்கிறார் *தாயேதந்தையில் விட்ட வுறவெல்லாமிவனே யாகையாலே. "மாதாபிதா ப்ராதா நிவாஸ:" இத்யாதிப்படியே என்னை யாட்கொண்டருளே.௬.

ஏழாம்பாட்டு. (தெரியேனித்யாதி) * தெரிந்துணர்வொன்றில்லாமையாலே அநேகம் பொல்லாங்கு செய்து விட்டேன். (பெரியேனாகியபின்†) பக்வனானபின்பு.(பிறர்க்கேயித்யாதி) நல்லதொன்று கண்டால் தனக்கென்னத் தவிர்ந்து, விஷயங்களுக்கு வேணும் என்று அவர்களுக்குத் தேடி யிடத்திரிந்தேன் என் கையாலே. * காரியம்நல்லனகளவைகாணில் என் கண்ணனுக் கென்றிருக்குமாப்போலே, நல்லது

(க)உதறிப்படுக்கை - நிஸ்ஸம்ஶயமாக்குகை. † "ஆயினபின்" என்றும்பாடம்.

கண்டால் இன்னாருக்கு என்று ஸமர்ப்பித்திறே போருவது. (கரிசேரித்யாதி) ஆனைகளானவை யினம்பிரியாதே வர்த்திப்பதாய், அழகிய பொழிலாலே சூழப்பட்டு. (கனமாமலைவேங்கடவா) ஸ்வர்ணமிரியென்று பேருடைத்தாய் மஹார்க்கமான பெரியதிருமலையிலே நிற்கிறவனே. (அரியே வந்தடைந்தேன்) ஆச்ரிதவிரோதி நிரஸநசீலரான தேவரீரை வந்தடைந்தேன், அடியேனையாட்கொண்டருளே.

எட்டாம்பாட்டு. (நோற்றேனித்யாதி) அநேகம் ஜந்மங்கள் தபஸ்ஸுபண்ணினேன் உன்னைக்காணவேணுமென்னுமாசையினாலே. (ஏற்றேனிப்பிறப்பே) இப்பிறப்பிலே உனக்கேற்கும்படி சமைந்தேன். (இடருற்றனன்) நான்நின்றநிலை சாலப்பொல்லாது என்று என்நெஞ்சிலே பட்டு சால க்லேசப்பட்டேன். (கோல்தேனித்யாதி) கொம்புகளிலே வைத்த தேனானது கூடுகொள்ளாதே வெள்ளமிட்டுப் பாய்ந்து அருவியாய் ஒழுகுகிற, குளிர்ந்த சோலைகள் சூழப்பட்ட வேங்கடவா !. (ஆற்றேனித்யாதி) ஜந்மபரம்பரைகளுக்கு ஆற்றமாட்டாதே வந்தடைந்தேன், அடியேனை யாட்கொண்டருளே. ... அ.

ஒன்பதாம்பாட்டு. (பற்றேலித்யாதி) ஸ்வத் ப்ராப்தி ஸாதநமாயிருப்பதொன்று உடையேனல்லேன். (பாவமேயித்யாதி) து:ஷ்கர்மங்களைப் பண்ணி, அதுவே எனக்கு நிரூபகமாம்படி போந்தேன். ஆத்மாவை ஜ்ஞாநத்தையிட்டு நிரூபிக்குமாப்போலே, பாபத்தையிட்டு, இவன் பாபகர்மா என்னும்படி போந்தேன். (மற்றேலொன்றறியேன்) உன்னைலபிக்கைக்கு ஒரு உபாயவிஷயஜ்ஞாநமுமறியேன் உன்னை யொழிய. (மாயனே) ஆஸ்சர்யபூதனே சேஷ்டிதங்களையுடையவனே. (எங்கள் மாதவனே) எனக்காகப் பெரிய பிராட்டியாரும் தேவரீரும் வந்து என்னை அவஸரம்பார்த்து விஷயீகரிக்க நிற்கிறவனே. (கல்தேனித்யாதி) மலைத்தேனானவை முழைஞ்சுகள் கொள்ளாதே வழிந்து புறப்பட்டுச் சோருமாப்போலே ஒழுகுவதாய், தாமரைத்தடாகங்களை யுடைத்தான திருமலையிலே நிற்கிறவனே. (அற்றேனித்யாதி) தேவரீருக்கு அநந்யார்ஹ சேஷபூதனானேன், அடியேனை யாட்கொண்டருளே. ... ... கூ.

பத்தாம்பாட்டு. (கண்ணாயித்யாதி) எனக்கு ஸப்தலோகங்களுக்கும் நிர்வாஹகனுமாய், தாரகனுமாய், மேகம்போன்ற வடிவையுமுடையவனை. (விண்ணோரித்யாதி) நித்யஸூரிகள் ஸ்தோத்ராதிகளைப்பண்ணும்படி பெரிய திருமலையிலே நின்றருளின வேதைகவேத்யன். பொழிலென்று – பெருமைக்குப்பேர். (திண்ணாரித்யாதி) திண்மை மிக்க மாடங்களும் மாளிகைகளும் சூழப்பட்ட திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகரான ஆழ்வார் பண்ணிலே பூர்ணமாகப் பாடின பாடல் பத்தையும் அப்யஸிப்பார்க்கு, விரோதி பாபங்களொன்றுமில்லை. ... ... ... ... ... ௰.

ஜீயர்திருவடிகளேசரணம்.

தம்முடைய வெறுமையைச் சொல்லி கைங்கர்யலாபத்துக்காக சரணம் புக்கார் - இத்திருமொழியில்; பாஷ்யகாரர் சரணம் புக்க வநந்தரம், "ஸ்தூலஸூக்ஷ்ம ரூபமான ப்ரக்ருதியைக் கழித்துத் தரவேணும், அஹங்கார மமகாரங்களைக் கழித்துத்தரவேணும், விரோதியைப் போக்கித் தரவேணும், பரபக்த்யாதிகளைப் பிறப்பிக்கவேணும்" என்று அபேக்ஷித்தாப்போலே, இவரும், விரோதிநிரஸந சீலனாய் ஸர்வரக்ஷகனாய் ஆஸ்ரிதஸ்பர்சமுள்ள த்ரவ்யத்தாலல்லது தரியாதானாய் ஆஸ்ரிதஸம்ஸ்லேஷைகஸ்வபாவனாய் ஸர்வஸுலபனாயுமுள்ள ஸர்வேஸ்வரனே, என் விரோதியைப் போக்கித்தரவேணும், உன்னையல்லது செல்லாமையைப் பிறப்பிக்க வேணும் என்றபேக்ஷிக்க; உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களும் செய்ய வன்றோ நாமிங்கேவந்து நிற்கிறது என்று திருமலையில் நின்ற நிலையைக்காட்டி, அநந்தரத்திலே இவர் திருவுள்ளத்திலே புகுந்து இவர்க்கு பரபக்த்யாதிகளைப் பிறப்பித்தா னென்கிறது - இத்திருமொழியில். ப்ரபந்நனுக்கும் பக்தியோகநிஷ்டனுக்கும் பக்தியுண்டே; "நமஸ்யந்தஸ்ச மாம் நித்யம்" என்று இரண்டிடத்திலும் சொல்லா நின்றதிறே. ... ... ... ... ... *

முதற்பாட்டு. (கண்ணாரித்யாதி) கண்ணென்று - இடம். இடமுடைய கடலென்றபடி. பெரிய கடலை அகழாக வுடைய லங்கேஸ்வரனுடைய. (திண்ணாகமித்யாதி) திண்ணிய நெஞ்சு பிளக்கும்படி சரத்தை யேவினான். (விண்ணோரித்யாதி) நித்யஸூரிகள் வந்து கைங்கர்யம் பண்ணுகிற திருமலையிலே நிற்கிறவனே. (அடியேனித்யாதி) என்னுடைய கைங்கர்ய விரோதியைப் போக்கி யருளவேணும். க.

இரண்டாம்பாட்டு. (இலங்கையித்யாதி) "என்னது லங்கை, என்னதுலங்கை" என்று லங்கையாகிறபடைவீட்டுக்கு அபிமாநிகளாக, ராக்ஷஸருடையதிரள்கெட்டுநசிக்கும்படி, கொடியான திருவடிதிருத்தோளிலே நல்தரிக்க விருந்து ஒருசாரிகை வந்தாய். விலங்கல்-மலை. குடுமி - உச்சி. திருவேங்கடமலை யுச்சியிலே மேவிநின்ற. அலங்கல்-மாலை. திருத்துழாய்மாலையைத் திருவபிஷேகத்திலே யுடையதேவரீர், அடியேன்விரோதியைப்போக்கியருளவேணும். ... உ.

அ.—மூன்றாம்பாட்டு. (நீராரித்யாதி) ப்ரளயத்தில் ஜகத்து நசியாதபடி வயிற்றிலேவைத்து ரக்ஷித்தாப்போலே, ஸம்ஸாரமாகிற ப்ரளயத்தில் நான் நசியாதபடி ரக்ஷிக்கவேணுமென்கிறார்.

வ்யா.—(நீரார்த்யாதி) நீர்மிக்க கடலும், மண்ணும், அக்நியும், வாயு, ஆகாசாதிகளெல்லாம் அமுதுசெய்த. (ஏராலமித்யாதி) ஏர் - அழகு. அழகிய ஆலிலைமேலே கண்வளர்ந்தவனே. (சீராரித்யாதி) சீர் - அழகு. அழகிய திருமலையிலே நித்யவாஸம் பண்ணி நிற்கிற ஆராவமுதே! அடியேற்கருளாயே. ... ... ந.

அ.—நாலாம்பாட்டு. (உண்டா யித்யாதி) ஸ்ரீவாமநனாய் இந்த்ரனுக்கு ராஜ்யலாபத்தைப் பண்ணிக்கொடுத்தாப்போலே, எனக்கும் கைங்கர்ய லாபத்தைப் பண்ணித்தரவேணு மென்கிறார்.

வ்யா.—(உண்டாயித்யாதி) உறிகளிலே சேமித்து வைத்த நல்ல நெய்யைக் களவுகண்டு இனிதாக அமுதுசெய்தாய். (கொண்டாயித்யாதி) ஸ்ரீவாமநனாய் "என்காலாலே மூவடி தரவேணும்" என்று மஹாபலியை யிரப்பாலே அளந்து கொண்டாய். (விண்டோயித் [ரு யாதி) ஆகாசாவகாசமடைய வளர்ந்த ஷிவரங்களையுடைய திருவேங்கடம் மேய. (அண்டா) பரமபத நிலயனே !, அடியேனுக்கு க்ஷேமத்தைப் பண்ணியருளவேணும். ... ... ௪.

அ.—அஞ்சாம்பாட்டு. ப்ரஹ்லாதனுடைய விரோதியைப்போக்கினாப் போலே, என் விரோதியைப் போக்கி ரக்ஷிக்க வேணு [௰ மென்கிறார்.

வ்யா.—(தூணாயித்யாதி) தூணனதுக்குள்ளே. (அரியாய் வந்து தோன்றி) "அளந்திட்ட" இத்யாதி. அத்தூணுக்குள்ளே, நரஸிம்ஹமாய் வந்து தோன்றி. (பேணாவித்யாதி) பின்னை, ப்ரஹ்லாதனை ப்பேணாத ஹிரண்யன்மார்வைப் பிளந்திட்டாய். (சேணித்யாதி) [௰ரு சேண் - உயர்த்தி. உயர்த்தி மிக்க திருமலையிலே பொருந்தினவனே. (கோணாகணையாய்) கோள்—மிடுக்கு. ஸர்வேஶ்வரனும் பெரியபிராட்டியாரும் துகைத்தேறிப் பரிமாறாநின்றால், அந்த ஹோமவெள்ளத்தை யாற்றியறுக்கத் திருவநந்தாழ்வானைப் படுக்கையாக வுடையவனே !, அடியேனைத் திருவுள்ளம்பற்று. ... ... ரு.

அ.—ஆறாம்பாட்டு. இவருடைய இசைவுபெற்றவாறே, இவர் திருவுள்ளத்தேபுகுந்தான், அவன் புகுந்தபடியை யருளிச்செய்கிறார்.

வ்யா.—(மன்னாவித்யாதி) அஸ்திரமான ஜந்மத்தைத் தவிர்த்து. (தன்னாக்கி) தன்னுடையவனாக்கி. (தன்னின்னருளித்யாதி) தன் நிர்ஹேதுகக்ருபையைப் பண்ணின என்னையன். (மின்னாரித்யா [உ௰ தி) மின்னையுடைத்தான மேவங்கள் வந்து சேருகிற திருவேங்கடம் மேவின. (என்னானை) இவர் கவிபாடின ஆனையாய்த்து. (என்னப்பனென் னெஞ்சினுளானே) எனக்கு ஜநகனானவன், என்னெஞ்சினுள்ளே புகுந்தான். ... ... ... ௬.

அ.—ஏழாம்பாட்டு. நப்பின்னைப்பிராட்டியாருடைய ஸம்ஶ்லேஷ விரோதியைப் போக்கினாப்போலே, என் விரோதியையும் போக்கியருளவேணு மென்கிறார்.

வ்யா.—(மானேயித்யாதி) மானையொத்த நோக்கையும் மடப்பத்தையு முடைய நப்பின்னைகலவிக்கு விரோதியா யெதிர்ந்து வந்த ஆன்விடை யேழையும் வென்ற அழகிய வரை போன்ற தோளை [உரு யுடையவனே. ஆனென்று - எருது ; ஆன்விடையென்றும் - எருது ; விடையென்றும் - எருது. ஆன்விடை யேழையும் செற்ற என்றபடி. (தேனே) "எனக்குத் தேனேபாலே" இத்யாதி. (திருவேங்கடமித்யாதி) திருவேங்கட மாகிற பெரியதிருமலையிலே நிற்கிற ஸர்வநிர்வாஹகனே. (என்மனமித்யாதி) என்ஹ்ருதயத்திலே, "அரவத்தமளியினோடும்" இத்யாதிப்படியே எழுந்தருளி யிருந்தாயே. ௭.

எட்டாம்பாட்டு.(சேயனித்யாதி) அநாஶ்ரிதர்க்கு தூரஸ்தனாயும், ஆஶ்ரிதர்க்கு எளியனாயு முள்ளவன். எங்கேகண்டோமென்ன (என சிந்தையுள் நின்றமாயன்) என்னெஞ்சிலே நின்ற ஆஶ்சர்யபூதன். (மணிவாளொளிவெண்தரளங்கள்) வாளென்றும்-ஒளி ; ஒளியென்றும் - ஒளி. ஒன்று மணிக்கும், ஒன்று முத்துக்குமாகக்கடவது வேயீன்ற ஒளியையுடைய வெண்முத்தும், ஒளியையுடைத்தான ரத்நங்களையு முடைத்தான திருமலையிலே நின்ற. (ஆயனித்யாதி) க்ருஷ்ணன்றிருவடிக ளொழிய வேறொன்றறியேனே. ... ... ௮.

ஒன்பதாம்பாட்டு.(வந்தாயித்யாதி) பரமபதத்தில்நின்றும் வந்து என்ஹ்ருதயத்திலே புகுந்து ஸ்தாவரப்ரதிஷ்டையாக நின்றாய். (நந்தாதகொழுஞ்சுடரே) நந்துதல் - நஶித்தல். நித்யமாய் அத்யுஜ்ஜ்வலமான அழகிய தேஜஸ்ஸை யுடைய எங்கள்ஸ்வாமீ.(சிந்தாமணியே) சிந்தாமணி என்கிற ரத்நம் எல்லார்க்கும் எல்லாம் கொடுக்குமாப் போலே, எல்லார்க்கும் எல்லாபுருஷார்த்தங்களையும்கொடுக்குமவனே. எங்கேநின்றென்ன; திருவேங்கடம் மேய என்னாயனே. (இனியானுன்னையென்றும்விடேனே) என்விரோதியைப் போக்கி என் அபேக்ஷிதங்க ளெல்லாம் செய்வாயானபின்பு இனியொருநாளும் உன்னைவிடேனே. ... ... ... ... ௯.

அ.—பத்தாம்பாட்டு. இத்திருமொழியை அப்யஸிக்கவல்லார் நித்யஸூரிகள் வரிசையைப் பெறுவரென்கிறார்.

வ்யா.—(வில்லாரித்யாதி) * வேடார் திருவேங்கடமிறே. வில்லை யுடைய வேடர் மிக்குள்ள திருமலையிலே நின்ற. அன்றியே, (வில்லார் மணி) என்று பாடமானபோது, ஒளிமிக்க மணிகளையுடைய திருமலை என்றாகக்கடவது. (மல்லார்திரடோள்) மிடுக்குமிக்கு த்திரண்ட தோள்களையுடைய, (மணிவண்ணனெம்மானை) நீலரத்நம் போன்ற வடிவழகாலே என்னையெழுதிக் கொண்டவன். (கல்லாரித்யாதி) மலைபோன்ற திரண்டுயர்ந்த தோள்களையுடைய ஆழ்வாரருளிச்செய்த இச்சொன்மாலை. (வல்லாரவர்) வல்லார் யாவர்சிலர். (வானவராகுவர்தாமே) பரநிரபேக்ஷராக நித்யஸூரிகள் வரிசையைப் பெறுவர். ... ௰.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

முதற்பத்து ஸம்பூர்ணம்.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

## இரண்டாம்பத்து - முதல்திருமொழி - வானவர். ப்ரவேஸம்.

### வாதிகேஸரி அழகியமணவாளச்சீயர் வ்யாக்யாநம்.

வானவர் ப்ரவேஸம். "அடைந்தே னடியேனை யாட்கொண்டருள்" என்றும் "இனியானுன்னை யென்றும் விடேனே"[ரு என்றும், கைங்கர்ய லாஹத்துக்காகத் திருவடிகளிலே விழுந்து ஸரணம் புக்கு, இக்கைங்கர்யம் நித்யமாய்ச் செல்லவேணுமென்று இதிலே ப்ரேமம் பிறந்ததாய் நின்றது - கீழ்; நமக்கிப்படி இந்த ஸமாயிதான் பிறக்கைக்கடியென்? என்றாராய்ந்த விடத்து, "மந ஏவ மநுஷ்யாணாம்" என்கிறபடியே-நாட்டார் வாஹ்யராயும் குத்ஸிஷ்[யி டிகளாயும் அநர்த்தப்பட்டுப் போகாநிற்க, நமக்குக் கைங்கர்யலாஹத்துக்காகத் திருவடிகளிலே ஸரணம் புகுகையும் அதுதான் நித்யமாய்ச் செல்லவேணு மென்னும் படியான ருசி பிறக்கைக்கும்

---

### பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்.

" அடைந்தே னடியேனை யாட்கொண் டருளே " என்[யிரு றும் "இனியா னுன்னை யென்றும் விடேனே" என்றும் கைங்கர்ய லாஹத்துக்காகத் திருவடிகளிலேவந்து ஸரணம் புக்கு, இக்கைங்கர்யந்தான் நித்யமாய்ச் செல்லவேணு மென்னும்படி அதிலே ப்ரேமம் பிறந்ததாய்நின்றது; நமக்கிப்படி யிந்தஸமாயிதான் பிறக்கைக்கடியென் ? என்றாராய்ந்து பார்த்தார் உபகாரஸ்ம்ருதிக்காக ; அத்தை ஆராய்ந்தவாறே, "மநஏவ" என்கிறபடியே - நாட்டார் வாஹ்யராயும் குத்ஸிஷ்டிகளாயும் அநர்த்தப்பட்டுப் போகாநிற்க நமக்கு கைங்கர்யலாஹத்துக்காகத் திருவடிகளிலே விழுந்து ஸரணம் புகுகையும், அதுதான் அவிச்சிந்நமாய்ச் செல்லவேணு மென்னும்படியான

---

அ.—வானவர் ப்ரவேஸம்.—முதற்பத்தால் - திருமந்த்ரலாஹத்தையும், மந்த்ரார்த்தாநுஸந்தாநஞ் செய்தருளினபடியையும், மந்த்ரம் விளைந்த நிலத்தில் தமக்குண்டான ப்ராவண்யத்தையு மருளிச்செய்து, மற்றும் ஸ்ரீஸாளக்ராம ஸ்ரீநைமிஸாரண்ய ஸ்ரீஅஹோபில ஸ்ரீவேங்கடாசலங்களில் ப்ராவண்யத்தாலே அவற்றை யநுஹவியாநின்றுகொண்டு, தமக்கு ஹகவத்விஷயத்தில் ப்ரீதிகாரித நித்ய கைங்கர்யமே புருஷார்த்தமென்று அறுதியிட்டாராய்த்து; இனி,இரண்டாம்பத்[ரூயி தால் - திருவேங்கடம், திருவெவ்வுளூர், திருவல்லிக்கேணி, திருநீர்மலை, திருக்கடல் மல்லை, திருவிடவெந்தை, திருவட்டபுயகரம், ஸ்ரீபரமேச்சுரவிண்ணகரம், திருக்கோவலூர், இவற்றிலே உகந்தெழுந்தருளி யிருக்கு மெம்பெருமான்களை அஹிநிவேஸாதிஸயத்தாலேபாடாநின்றுகொண்டு,தம்முடைய ஸ்வரூபந்தான் ஹாகவதஸேஷத்வபர்யந்தமா யிருக்கும்படியைச்சொல்லி, கீழ்ப்பத்தில் ப்ரார்த்தித்த[ரூடு கைங்கர்யந்தானும் அவன்நினைவாலே வரவேணுமென்கிற அர்த்தத்தை வெளியிட்டு, அப்புருஷார்த்தத்தை ஓடவைக்கிறாரென்று இப்பத்துக்கு ஸங்கதி கண்டுகொள்வது.

கீழிரண்டு திருமொழிகளோடு ஸங்கதி யருளிச்செய்கிறார் (அடைந்தேனித்யாதி.) "பொங்குபோதியும்" "துவரியாடையர்" என்கிற பாட்டுக்களைக் கடாக்ஷித்து (நாட்டாரித்யாதி.)

மூ.-வானவர்தங்கள்சிந்தைபோலவென்னெஞ்சமே யினிதுவந்து, மா
மானவர்தங்கள்சிந்தை யமர்ந்துறைகின்றவெந்தை, [தவ
கானவரிடுகாரகிற்புகை யோங்குவேங்கடம் மேவி மாண்குற
ளானவந்தணற்கின்றடிமைத்தொழில் பூண்டாயே. க.

---

ப-ரை.—மா-மிக்க, தவம்-தபஸ்ஸையுடைய, மானவர்தங்கள் - மநுஷ்யர்களுடைய, சிந்தை - நெஞ்சில், அமர்ந்து-பொருந்தி, உறைகின்ற - நித்யவாஸம் பண்ணுகிற, எந்தை - என்ஸ்வாமியாய்; கானவர் - வேடர்கள், கார் - வயிரம் பற்றிக்கறுத்த, அகில் - அகில் மரங்களைவெட்டி, இடு - நெருப்பிலிடுகையாலுண்டான, புகை - புகையானது போய் வ்யாபிக்கும்படி, ஓங்கு - உயர்ந்த, வேங்கடம் - திருமலையிலே, மேவி - நித்யவாஸம் பண்ணுமவனாய்; மஹாபலிபக்கல் நீரேற்றவன்று, மாண் - அழகிய, குறளான - வாமநவேஷங்கொண்ட, அந்தணற்கு - ப்ராஹ்மணனான என்ஸ்வாமிக்கு; வானவர்தங்கள் - நித்ய ஸூரிகளுடைய, சிந்தைபோல - ஹ்ருதயத்திற்போலே, இனிது - இனிதாக, உவந்து - உகந்துவந்து, இன்று-இப்போது, அடிமைத்தொழில்-கைங்கர்யம் பண்ணுகையில், பூண்டாயே-அந்வயித்தாயே!, என்நெஞ்சமே! - எனக்குப் பாங்கான மநஸ்ஸே! என்று தந்திருவுள்ளத்தோடேகூடி இனியராகிறார். ... ... ... க.

---

இதெல்லாவற்றுக்கும்அடி என்னெஞ்சிறேஎன்று, தம்திருவுள்ளத்தைக்குறித்து, உன்னாலே இஸ்ஸம்ருத்தியெல்லாம் பெற்றேனென்று திருவுள்ளத்துடனே கூட்டி யினியராகிறார். ... ... *

முதற்பாட்டு. (வானவர்தங்கள்சிந்தைபோல) நித்யஸூரிகள் ஹ்ருதயத்திற்போலே உகந்துவந்து. (மாதவமித்யாதி) மஹாதபஸ்ஸை யுடையரா யிருக்கிற மநுஷ்யருடைய ஹ்ருதயத்திலே நித்யவாஸம் பண்ணுகிற என்ஸ்வாமி. கானவருண்டு-வேடர், அவர்கள்

---

ருசிபிறக்கையும், இஸ்ஸம்ருத்திக்கடி யென்னெஞ்சிறேயென்று, தந்திருவுள்ளத்தைக்குறித்து, உன்னாலே யெனக்கு இஸ்ஸம்ருத்தியெல்லாமுண்டாய்த்தென்று திருவுள்ளத்தோடே கூட்டி யினியராகிறார். *

முதற்பாட்டு.— (வானவரித்யாதி) நித்யஸூரிகள் ஹ்ருதயத்திற்போலே என் ஹ்ருதயத்திலான. (மாதவமானவர்தங்கள்சிந்தை யமர்ந்துறைகின்ற வெந்தை) மஹாதபஸ்ஸை யுடையரா[ நாய் யிருக்கிற மநுஷ்யர்களுடைய ஹ்ருதயங்களிலே அநந்ய ப்ரயோஜநராய்க்கொண்டு நித்யவாஸம் பண்ணுகிற ஸ்வாமி. (கானவரித்யாதி)

---

"என்நெஞ்சமென்பாய்!" என்றத்தைப்பற்ற (திருவுள்ளத்தோடேகூட்டி யென்றது.) இனியராகிறார் - உபகாரஸ்ம்ருதிபண்ணி யுகக்கிறாரென்கை. ... *

முதற்பாட்டு.—(வானவரித்யாதி.) "என்னெஞ்சிலுளானை" என்றும் "என்மனம் குடிகொண்டிருந்தாயே" என்றும் "எனசிந்தையுள்நின்ற மாயன்" என்றும் "என்மனம் புகுந்தாயே" என்றும் சொல்லுகிறபடியே - அவன் தன் திருவுள்ளத்தில் அமர்ந்து வர்த்திக்கிறமையை அநுஸந்தித்து, இப்படி மஹாதபஸ்விஹ்ருதயகமலநிலயனாயிருக்கும் "அந்தணற்கு - அடிமை - பூண்டாயே" என்று நெஞ்சைக் குறித்தருளிச்செய்கிறாரென்று அவதாரிகை கண்டுகொள்வது.

ஹ்ருதயத்திலானவென்றது -* எந்தைக்கு விசேஷணம். இப்பக்ஷத்தில், "இனிதுஉவந்து" என்றதுக்கு - இனிதாக வுகந்திருக்கிற என்று ஸ்வீகார்யமாக்கிக் கொள்வது.

மூ.—உறவுசுற்றமென்றொன்றிலாவொருவனுகந்தவர்தம்மை, மண்மி
பிறவியே கெடுப்பானதுகண்டென்னெஞ்ச மென்பாய்!, [சைப்
குறவர்மாதர்களோடுவண்டுகுறிஞ்சிமருளிசைபாடும் வேங்கடத்
தறவனாயகற்கின்றடிமைத்தொழில்பூண்டாயே. உ.

ப-ரை.—உறவு - கர்மநிபந்தநமான பந்துக்கள், சுற்றம் - ஜ்ஞாதிகள், என்று - என்று இங்ஙனேயுள்ள, ஒன்று-ஒருவுறவையும், இலா-உடையனல்லாத, ஒருவன் - ஒப்பற்றவனாய் ; உகந்தவர்தம்மை - தானுகந்தவர்களை, மண்மிசை - பூமியில், பிறவி - பிறக்கையாகிற ஸம்ஸாரஜந்மத்தை, கெடுப்பான் - போக்குமவனாய் ; குறவர் மாதர்களோடு - குறப்பெண்களோடே, வண்டு - வண்டுகள், குறிஞ்சி [ம் மருள் - குறிஞ்சி என்னும் பண்ணை, இசைபாடும் - இசைத்துப்பாடுகிற, வேங்கடத்து - ஸ்ரீவேங்கடாத்ரியில் நித்யவாஸம் பண்ணுகிற, அறவன் - பரமதார்மிகனை, நாயகற்கு - ஸர்வேஶ்வரனுக்கு, அதுகண்டு - அவன்ஸ்வபாவத்தை அநுஸந்தித்து, என்னெஞ்சம் என்பாய்! - என் நெஞ்சு என்கிற நீ, இன்று - இப்போது, அடிமைத்தொழில்பூண்டாயே—. ... ... ... ... உ.

தங்கள் புனங்களில் மரங்களை வெட்டித்திரட்டி நெருப்பையிடுவர்கள் ; அது அகில்மரமாகையாலே அகிற்புகை ஓங்காநின்றுள்ள திருமலையிலே மேவி. (மாணித்யாதி) அழகிய குறளாய் ப்ராஹ்மண வேஷம் கொண்டவற்கு இன்று கைங்கர்யம் பண்ண ஏன்று கொண்டாயே. ... ... ... ... க.

கானவருண்டு – அங்குத்தைத் திருவேடுவர், அவர்கள் தங்கள் புனங்களிலுண்டான மரங்களைவெட்டித் திரளவிட்டு நெருப்பையிடுவர்கள் ; அதுதான் அகில்மரமாகையாலே அகிற்புகையானது போய் ஆகாஶாவகாஶத்தை யிடமடைக்கும்படி யோங்கின ஶிவரத்தையுடைய திருமலையிலே பொருந்தி வர்த்திக்கிற. (மாண்குறளான [உரு வந்தணற்கு) தன்னுடைமையைப்பெறுகைக்குத் தன்னை யிரப்பாளனாக்கினவற்கு. அந்தணற்கென்றது-ப்ராஹ்மணற் கென்றபடியிறே. மஹாபலிக்கு கொடுத்தல்லது நிற்கவொண்ணாதபடி விநீதவேஷத்தோடே சென்றானாய்த்து. (மாண்குறளான வந்தணற்கு - வானவர் தங்கள்சிந்தைபோலவென்னெஞ்சமே யினிதுஉவந்து-அடிமைத்[கூம் தொழில் பூண்டாயே) நித்யஸூரிகளுடைய ஹ்ருதயம் ஹ்ருவத் கைங்கர்யத்திலே ப்ரவணமாயிருக்குமாப்போலே, நீ இவன்றிருவடிகளிலே உகப்போடே அந்வயித்தாயே. (மாணித்யாதி) அவனடிமை கொள்வதாக வந்து இரந்துநிற்கிறபின்பு நீயுமவன் நினைவின்படியே போகப்பெறுவதே!. ... ... ... ... க.

புனங்களில் - நிலங்களில், (போய்) என்ற வாக்யஶேஷம், வ்யாபிக்கும்படியான என்று ஶேஷம். ஶிவரத்தை யுடையவென்றது - அர்த்த ஸித்யார்த்தம். யோஜநாஸௌகம் (மாணித்யாதி.) இப்பக்ஷத்தில், "உவந்து" என்று - ல்யப்ஸந்தபதம். "மாண்குறள்" என்றதுக்குத் தாத்பர்யார்த்தம் (அவனித்யாதி.) அதாவது - மண்ணிரக்க முன்பு மாண்குறளான வளவன்றிக்கே தம்மை யடிமை கொள்ளுகைக்குத் தம் நெஞ்சிலிப்போதொரு வாமநவேஷங்கொண்டானென்றிருக்கிறாரென்கை. அன்றிக்கே, இப்போது இவ்வவதாரத்தை யநுஸந்திக்கைக்குத் தாத்பர்ய கதநரூபேண இவ்வாக்யம் ப்ரஸ்துதமானதென்று ஏகதாத்பர்யமாகவுமாம். ... ... ... ... ... ... க.

இரண்டாம்பாட்டு. (உறவித்யாதி) கர்மநிபந்தநமான ஒருறவு ஜ்ஞாதிகள் என்று ஒன்றுமில்லாத அத்விதீயன். (உகந்தவரித்யாதி) தானுகந்தவரை யென்னுதல், தன்னையுகந்தவ ரென்னுதல். (மண்மிசை யித்யாதி) பூமியிற்பிறவாமலதுகண்டு, என்னெஞ்ச மென்னுகிற நீ. (குறவர்மாதரித்யாதி) குறவர் பெண்களுடனே, அவர்கள் குழலிலே யிருந்து வண்டுகளானவை குறிஞ்சியிசையையும் பாடும் வேங்கடத்தே நிற்கிற. (அறவன்) ஸ்வரூபன். அறம்—ஸ்வம். நாயகன்—ஸர்வஸ்வாமி; அவனுக்கடிமைசெய்ய ஏறிட்டுக்கொண்டாயே. உ.

---

இரண்டாம்பாட்டு.—(உறவித்யாதி) பந்துக்கள், ஜ்ஞாதிகள் என்று இங்ஙனே கர்மநிபந்தநமாகச் சொல்லலாவதொரு உறவையுடையனல்லாத அத்விதீயன். (உகந்தவரித்யாதி) தான் சிலரை யுகந்து அவர்கள்பக்கலுகப்பாலே அவர்களுக்குப் பாபத்தைப் போக்குதல் பலத்தைக்கொடுத்துவிடுதல் செய்கையன்றிக்கே, ஸம்ஸாரஜந்மத்தைப் போக்கிக்கொடுக்கிற ஸ்வபாவத்தை அநுஸந்தித்து. (உகந்தவர்) தன்னை யுகந்தவர்க்கென்றுமாம். (என்னெஞ்சமென்பாய்) அவனைச் சொல்லுவதோ, உன்னைச் சொல்லுவதோ, உன்னை ஆராரென்றுசொல்லுவேன். ஸம்பாவநாப்ரகாரமிருக்கிறபடி. என்னெஞ்சமென்றபடி. (குறவரித்யாதி) குறப்பெண்களோடே கூட வண்டுகளானவை, குறிஞ்சி இந்தளம் என்கிற பண்களைப் பாடாநிற்கிற. (வேங்கடத்தறவனாயகற்கு) தண்ணீர்ப்பந்தல்வைத்து நம்மடிமைபெறுகைக்குத் தம்மை நமக்குத் தந்துகொடுநிற்கிற பரமதார்மிகன். நம்மை யடிமைகொள்வதாகத் திருமலையிலேவந்து ஸந்நிதிபண்ணின பரமதார்மிகனுக்கு. (அடிமைத்தொழில் பூண்டாயே) அவன் திருமலையிலேவந்து நிற்கிற நிலையை நீயொருபடி ஸபலமாக்கினாயே...உ.

---

இரண்டாம்பாட்டு.—(உறவித்யாதி.) நெஞ்சானது, நீர் நம்மைக் கொண்டாடாநின்றீர், அடிமைத்தொழில் நமக்கு நித்யமாகக் கிடைக்குமோ, விரோதிநிவ்ருத்தி யிலன்றோ நாமிருப்பதென்ன; அவனுடைய மோக்ஷப்ரதத்வத்தைச் சொல்லிக் கொண்டாடுகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

* தாயேதந்தையிலே அவனை ஸர்வவிதபந்துவாக அநுஸந்தித்தவர்தாமே உறவும் சுற்றமுமா யிருக்க, அத்தை இல்லை என்கிறதென்னென்ன; தாத்பர்யமருளிச்செய்கிறார் (பந்துக்களித்யாதி.) "பிறவியே" என்கிற ஏவகாரவ்யாவர்த்யம் காட்டாநின்றுகொண்டு, பாவமருளிச்செய்கிறார் (தானித்யாதி.) பலத்தை - ஐஹிகாமுஷ்மிக பலத்தை. "அதுகண்டு -" அத்தைக்கண்டென்றாய், பலிதார்த்தம் (அநுஸந்தித்தென்றது.) ஸம்பாவனை-கொண்டாட்டம். என்நெஞ்சம் - அண்ணிமைவிளி. அதாவது - ஸமீபஸ்தத்தை யழைக்கை. கீழுக்கு விவரணம் (நம்மையித்யாதி.) ... ... ... ... ... உ.

மூன்றாம்பாட்டு.—(இண்டையித்யாதி.) நித்யவிபூதியில் நித்யகைங்கர்யத்தை யாசைப்படுகிற நெஞ்சை ஆதரத்தாலே மீளவும் கொண்டாடுகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. [சய

மூ.—இண்டையாயினகொண்டுதொண்டர்களேத்துவாருறவோடும் வானிடைக்
கொண்டுபோயிடவுமதுகண்டென்னெஞ்சமென்பாய்!,
வண்டுவாழ்வடவேங்கடமலைகோயில்கொண்டதனோடும் மீமிசை
யண்டமாண்டிருப்பாற்கடிமைத்தொழில் பூண்டாயே. ௩.

ப-ரை.—என்னெஞ்சமென்பாய்! - எனக்குப் பாங்கான நெஞ்சே, இண்டைஆயின - பூமாலைகளை, கொண்டு - கையில் ஏந்திக்கொண்டு, ஏத்துவார் - வாயாலே ஸ்தோத்ரம் பண்ணிக்கொண்டு அடிமைசெய்கிற, தொண்டர்கள் - ஸேவாபூதரையும், உறவோடும் - அவர்கள் ஸம்பந்த முடையாரையும், கொண்டுபோய் - இங்குநின்றும் கொடுபோய், வானிடை - பரமபதத்திலே, இட - வைக்க, அதுகண்டு - அத்தைக்கண்டு; வண்டு-வண்டுகள், வாழ் - வாழாநின்றுள்ள, வடவேங்கடமலை - திருமலையை, கோயில் கொண்டு - தனக்கு வாஸஸ்தாநமாகக் கொண்டு, அதனோடும் - லீலா விபூதியையும், மீமிசைஅண்டம் - பரமாகாசமான நித்ய விபூதியையும், ஆண்டு இருப்பாற்கு - ஆண்டுகொண்டிருக்கிறவற்கு, அடிமைத்தொழில் பூண்டாயே—. ... ... ... ... ... ௩.

மூன்றாம்பாட்டு. (இண்டையித்யாதி) இண்டையென்று—தாமரையும், பூமாலையும். பூமாலைகள் கொண்டென்னுதல்; "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்கிறபடியே. அவர்களை, "ஸபுத்ரபௌத்ரஸ்ஸகணப்ரேத்ய" என்கிறபடியே பரமபதத்தேறக்கொண்டு போகக் கண்டு. (என்னெஞ்ச மித்யாதி) என் நெஞ்சமான நீ,

மூன்றாம்பாட்டு.—(இண்டையித்யாதி) இண்டையென்று - பூமாலைக்குப்பேர். ஆக, பூமாலையென்று பேர்பெற்றவற்றைக் கொண்டு; "எண்டிசையுமுள்ள பூக்கொண்டேத்தி" என்கிறபடியே. (தொண்டர்களேத்துவார்) ஸமவஷ்யிஷயத்தி லடிமைசெய்யுமவர்கள் கையிலே பூமாலைகளைக்கொண்டு வாயாலே யேத்தாநின்றுகொண்டுஅடிமைசெய்கிறவருடைய.(உறவோடும்வானிடைக்கொண்டு போயிடவும்)அவர்களோடு ஸம்பந்திஸம்பந்திகளோடு ஒருநாள் கார்யம்செய்தவர்களோடு வாசியற எல்லாரையுமொக்கக் கொண்டுபோய் நித்யவிபூதியிலேவைக்கும் நீர்மையை யநுஸந்தித்து, என்னெஞ்சமே! இங்குத்தையிருப்புத்தன்னையு மிழக்கிறோமோ என்றஞ்சவேண்டியிருக்க அவ்வருகே போய்அடிமைசெய்யவேணுமென்னுமாசையை யுடையையாவாயே நீ.

"உறவோடும்" என்கிற உகாரம் அநுக்தஸமுச்சய மாக அருளிச்செய்கிறார் (ஒருநாளித்யாதி.) "வானிடை, அடிமைத்தொழில்" என்கிற பதங்களைக் கடாக்ஷித்து, "என்பாய்" என்று கொண்டாடுகிறவருடைய ஹார்த்தபாவம் (இங்குத்தையித்யாதி.) அஞ்சவேண்டியிருக்க வென்றது - லௌகிகரஞ்சாநிற்க என்றபடி. இத்தால் - இஹலோகஸௌக்யத்தை யிழக்கவேணுமே! என்று லௌகிகர் மோக்ஷத்துக்கு யத்நம்பண்ணார்களென்கை.

மூ.—பாவியாது செய்தாயென்னெஞ்சமே! பண்டுதொண்டுசெய்தாரை மேவியாட்கொண்டுபோய்விசும்பேறவைக்குமெந்தை, [மண்மிசை கோவிநாயகன், கொண்டலுந்துயர்வேங்கடமலையாண்டு, வானவ ராவியாயிருப்பாற் கடிமைத்தொழில் பூண்டாயே. ௪.

ப-ரை.—என் நெஞ்சமே—, பாவியாது - நிரூபியாமல், செய்தாய்—; பண்டு - முன்பு, தொண்டுசெய்தாரை - அடிமை செய்து போந்தவர்களை, உஜ்ஜீவிப்பிக்கைக்காக, மண்மிசை - இந்த பூமியிலேவந்து, மேவி-திருவவதரித்து, ஆள்கொண்டு - அவர்களை அடிமைகொண்டு, போய் - இங்குநின்றும் அர்ச்சிராதிமார்க்கத்தாலே கொண்டுபோய், விசும்பேறவைக்கும் -பரமபதத்திலே வைக்கு[ம]மவனாய், கோவி நாயகன் - ஸ்ரீகோபீஜந வல்லபனாய், எந்தை - எனக்கு ஸ்வாமியானவனாய், கொண்டல்-மேகங்கள், உந்து - ஒன்றை மற்றொன்று தள்ளாநிற்கும், உயர் - உயர்த்தியை யுடைத்தான, வேங்கடமலை - திருமலையிலே, ஆண்டு - இரண்டு விபூதியையும் அரசாண்டு, வானவர் - நித்யஸூரிகளுக்கு, ஆவியாயிருப்பாற்கு - ப்ராணபூதராயிருக்குமவற்கு - அடிமைத்தொழில பூண்டாயே—. ௪.

என்னையுமறியாமே,(வண்டித்யாதி) வண்டுகளானவை மது பானம்பண்ணி வாழாநின்ற தமிழெல்லையான வடவேங்கடமலை கோயிலாகக் கொண்டு. (அதனோடும்இத்யாதி) அவ்வைஸ்வர்யத்துடனே, அறமேலான அண்டமுண்டு – பரமபதம், அத்தையுமாண்டு இருக்கிறவற்கு அடிமைத்தொழிலை ஏறிட்டுக்கொண்டாயே. ... ... ௫.

(வண்டித்யாதி) வண்டுகளானவை மதுபாந மத்தமாய்க்கொண்டு வாழாநின்றுள்ள திருமலையைத் தனக்கு நித்யவாஸத்துக்கு ஸ்தாநமாகக் கொண்டு. (அதனோடும் மீமிசையண்ட மாண்டிருப்பாற்கு) உபயவிபூதியுக்தனை ஸர்வேஸ்வரனுக்கு. அண்டமென்று - ஆகாஸத்துக்குப்பேர். வெறுமண்டமென்னில் ஸ்வர்காதிகளிலு மேறுமென்று, (மீமிசையண்டம்) என்று-பரமபதத்தைச் சொல்லுகிறது; "மஹாகாஸம், பரமாகாஸம்" என்னக்கடவதிறே. உபய விபூதியுக்தனை ஸர்வேஸ்வரனுக்கு. (அடிமைத்தொழில் பூண்டாயே) அவாப்த ஸமஸ்தகாமனுடைய குறையை ஒருபடி நிரப்பினாயே. திருமலையிலேவந்து புகுந்து இவரை யடிமைகொள்வதற்கு முன்பு உபய[வி]விபூதியோகத்தால் வந்த ஐஸ்வர்யத்தை யொன்றாக நினைத்திலன் காணுமவன்; யாநுமஸ்யன், ஒருகாசு விழுந்தவிடத்திலே கையெல்லாம் புழுதியாகத் தேடாநிற்குமிறே. ... ... ... ௫.

"அதன்" என்றது - திருமலையாய், அது உபலக்ஷணமாய், லீலா விபூதியைச் சொல்லுகிறது; அத்தை யருளிச்செய்கிறார் (உபயேத்யாதி.) (என்னக்கடவதிறே) என்றவநந்தரம், ஆகையாலே என்றுகூட்டுவது. இவரடிமை செய்யாவிட்டால் அவனுக்குக்குறையோவென்ன வருளிச்செய்கிறார் (திருமலையிலேயித்யாதி.) ௫.

நாலாம்பாட்டு.—( பாவியாதித்யாதி. ) "தணிவினியுனக்குச் சொல்லுவன் மனமே தொழுதெழு தொண்டர்கள்தமக்குப்|பிணியொழித்தமரர் பெருவிசும்பருளும் பேரருளாளன்" இத்யாதியாலே பலபடி உபதேஸித்தவராயிருந்தீர், [௪ம] அத்தாலேயன்றோ நான் மோக்ஷ விசாரம் பண்ணுகிறேன், என்னை நீர் பலகாலும் கொண்டாடுவானென்னென்னும் ஸங்கையிலே; நானெத்தனை உபதேஸித்தாலும் வாஸநாபலத்தாலே, "உபதேஸோநிரர்த்தக:" என்னும்படி பண்ணாதே கடுக இசைந்தாயே! என்றுநெஞ்சைக்கொண்டாடுகிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

நாலாம்பாட்டு. (பாவியாதித்யாதி) அத்தைச்செய்வோமோ இத்தைச்செய்வோமோ என்று விசாரியாதே நீ இதிலே துணிவதே என்னெஞ்சமே!. (பண்டித்யாதி) முன்பு ஹூமியிலே அநந்ய ப்ரயோஜநராய் கைங்கர்யம் பண்ணினவர்களை அடிமைகொண்டு பரமபதத்திலே வைக்கும் ஸ்வாமி. (கோவிலித்யாதி†) தனக்கொரு நிர்வாஹகனில்லாத நாயகன்-அநாயகனான நாயகன். (கொண்டலித்யாதி) மேவ பயத்திற் செல்ல வோங்கி அவற்றைத் தள்ளாநின்றுள்ள உயர்ந்த திருவேங்கடமலையிலே நின்று எல்லாரையு மடிமைகொண்டு.

---

நாலாம்பாட்டு.—(பாவியாதித்யாதி) அத்தைச் செய்வோமோ, இத்தைச்செய்வோமோ என்றிங்ஙனே அலமாவாக்கிடவாதே-நிரூபியாதே, இப்படியிலே அத்யவஸிப்பதே!. என்ன அலஷ்யலாஹமோ!, ஸம்ஸாரத்திலே அத்யவஸிப்பதே!. ஶப்தாதிகளை அநுஹவித்திருப்புதோமோ!, ஹகவத் கைங்கர்யம் பண்ணுவோமோ! என்று இங்ஙனே விசாரியாதே, நீயிதிலே துணிவதே!, உன்னாலேயிறே இப்பேறெல்லாம் பெற்றது. (பண்டித்யாதி) முன்பு அடிமை செய்தவர்களை, தான் ஸம்ஸாரத்திலே வந்தவதரித்து, "இவனென்தோழன், எனக்கு மைத்துனன்" என்று சொல்லலாம்படி அவர்களோடே பொருந்தி, அவர்களுக்கு கைங்கர்ய ருசியைப் பிறப்பித்து அடிமையைக்கொண்டு, அதுதான் அவிச்சிந்நமாய்ச் செல்லவேணுமென்று, அதுக்குறுப்பாக பரமபதத்திலே கொடுபோய் வைக்கும் ஸ்வாமி. (கோவி நாயகன்) ஸ்ரீகோபிமாருடன் கலக்குமாப்போலே ஆஶ்ரிதரோடு பரிமாறுமவன். (கொண்டலுந்துயர் வேங்கடம்) மேவங்களைச் சென்று தள்ளும்படி அவ்வளவும் வளர்ந்த ஶிவரங்களையுடைய திருமலையை வாஸஸ்தாநமாகக் கொண்டு. (வானவ

---

"பாவ்யாது" என்றது - ஹாவ்யாதே யென்றாய், நிரூபியாதே செய்தாயென்றொருயோஜனை யருளிச்செய்கிறார் (அத்தை யித்யாதி.) அலமாவாக்கிடவாதே-தடுமாறிக் கிடவாதே. இதுக்கு விவரணம் (நிரூபியாதே யென்றது.) இப்படியிலே - இந்த ப்ரகாரத்திலே. "செய்தாய்" என்றதின் ஃபலிதார்த்தம் (அத்யவஸிப்பதே யென்றது.) இத்தால் - அநாதி வாஸநா பலத்தாலே விஷயங்களை விடமாட்டாதே, என்னுபதேஶபலத்தாலே ஹகவத்விஷயத்தையும் விடமாட்டாதே கிடவாதே, கடுக த்வரியாநின்றாய் யென்றதாய்த்து. "பாவியாது" என்றது - நீட்டிக்கிடக்கிறதாய், ஹவியாதது - ஸம்ஹவியாதது, செய்தாய் என்றர்த்தாந்தர மருளிச்செய்கிறார் (என்னவித்யாதி.) இத்தால் - "துணிவினியுனக்குச் சொல்லுவன்" என்னவே நீ அந்தஹகவத்விஷயத்திலேதானே துணிவதே, இது இந்தவிஹூதியில் கிடைப்பதொன்றோ என்றதாய்த்து. முந்தின அர்த்தத்தை விவரிக்கிறார் (ஶப்தாதிகளை யித்யாதி.) அன்றிக்கே, அடிதொடங்கி ஏகார்த்தமேயாய், ஆழ்வாருடைய ஈடுபாட்டைப் பலவகையா லருளிச்செய்கிறாரென்றுமாம். முன்பு - முற்காலத்திலே, க்ருதாதிகளிலே யென்றபடி. தோழன் - ஸ்ரீ குஹப்பெருமாள், மஹாராஜராகவுமாம். மைத்துனன்-அர்ஜுநன். இவன் ஸ்வர்மஸ்யஞ்ஞனேயாகிலும் மோக்ஷருசி பிறந்தால் அவனோடேதானே "மோக்ஷயிஷ்யாமி" என்றவன் அவனுக்குக்கொடுக்கமாட்டாதே யிரானிறே; அத்தைப்பற்ற (பரமபதத்திலேகொடுபோய் வைக்கும் ஸ்வாமியென்றது.)

---

‡ "கோஇல்நாயகன்" என்று இந்தவ்யாக்யாநத்திற்பாடம்.

மூ.-பொங்குபோதியும்பிண்டியுமுடைப்புத்தர்நோன்பியர் பள்ளியுள்ளு
தங்கள்தேவருந்தாங்களுமேயாக வென்னெஞ்சமென்பாய்!, [றை
எங்கும்வானவர்தானவர்நிறைந்தேத்தும்வேங்கடம்மேவிநின்றருள்
அங்கணாயகற்கின்றடிமைத்தொழில் பூண்டாயே. ரு.

ப-ரை.—என் நெஞ்சமென்பாய் - என்னுடைய மநஸ்ஸென்று அபிமாநிக்க லாம்படியான நீ, பொங்கு-கொம்பும்கிளையுமாகப்பருத்து வாராநின்றுள்ள, போதியும் - அரசமரத்தையும், பிண்டியும் - அசோகவ்ருக்ஷத்தையும், உடை - தங்களுக்குத் தஞ்சமாக வுடைத்தான, புத்தர் - பௌத்தரும், நோன்பியர் - அமணரும், பள்ளியுள்-தங்கள் தேவாலயங்களிலே, உறை - வர்த்த, தங்கள் - தங்களு[டை டைய, தேவரும் - தேவதையும், தாங்களுமேயாக-தாங்களுமேயாகி விடாநிற்கச் சேய்தே; எங்கும் - நாற்புறத்திலும், வானவர் - தேவர்களும், தானவர் - அஸு ரர்களும், நிறைந்து - நெருங்கி, ஏத்தும் - ஸ்தோத்ரம் பண்ணாநின்றுள்ள, வேங்கடம் - திருமலையிலே, மேவிநின்று - பொருந்தியிருந்து, அருள் - ஆஸ்ரிதரிஷ்டங்களைச்செய்தருளுமவனாய், அங்கண்-அழகிய திருக்கண்களை யுடையனாய்,[யரு நாயகற்கு - ஸர்வஸ்வாமியானவனுக்கு, இன்று அடிமைத்தொழில் பூண்டாயே—. ... ... ... ... ... ... ரு.

(வானவரித்யாதி) நித்யஸூரிகளுக்கு நாயகனாயிருக்கிற வவனுக்கு அடிமைசெய்ய ஏறிட்டுக் கொண்டாயே. ... ... ச.

அ.—அஞ்சாம்பாட்டு. (பொங்கித்யாதி)நீரென்னைக் கொண்[உய டாடுகிறதென்னென்ன; இத்தாலே யென்கிறார்.

ரித்யாதி)''ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்'' என்கிறபடியே-ஜ்ஞாநிகளைத்த னக்கு ஆத்மஸத்ராகவுடையனாயிருக்கிறவனுக்குநீயுமாவியானாயே!.

அ.—அஞ்சாம்பாட்டு.—''பாவியாது'' என்று - நீ யிப்படி விசாரியாதே துணிவதே ! என்று, என்னைக் கொண்டாட வேண்டின[உரு ஹேது வென்னென்ன ; (பொங்கு போதியு மித்யாதி) விசாரிக்க வேண்டும்படி யெத்தனை விஷயம் புறம்பே கிடக்கிற தென்கிறார்.

''ஜைவீஸம்பத்விமோக்ஷாய'' என்கிறபடியே வானவர்கள் தேவர்களென்னத்தக்க ஜ்ஞாநிகளை ஆவியாகவுடையவற் கென்றருளிச் செய்கிறார் (ஜ்ஞாநீத்யாதி.) வானவர்க்காவியாயென்றாய்ம்கொள்ளுமளவில்,ப்ரக்ருதத்துக்கு அத்யந்த மநபேக்ஷி[நூய தமிறே யென்று திருவுள்ளம்.நீயுமாவியானாயென்று - ஆதரவிஷயமானா யென்னுமர்யும் கூடாதிறே. ... ... ... ... ... ரு.

அ.—அஞ்சாம்பாட்டு.—(பொங்குபோதியுமித்யாதி.) பௌத்தாதிகளுடைய அல்பாஸ்திரத்வாதி தோஷங்கள் ப்ரத்யக்ஷிக்கலா யிருக்க, இவற்றை விட்டு நித்யமான புருஷார்த்திலே துணிந்ததுக்கே நீராஸ்சர்யப்படுகைக்கு ஹேதுவென்னென்னில் என்கிற ப்ரஸ்நாநுவாதம்பண்ணி ஸங்கதியைக்காட்டுகிறார் (பாவியாதித்யாதி.) ப்ரதிவசநம் தோற்றும்படி ஸாவமருளிச்செய்கிறார் (விசாரிக்கவித்யாதி) மதிகெட்டுப்போம்படி யித்தனைதுர்மதிகளுண்டேயென்று கருத்து. எத்தனைவிஷயம் - அலங்க்யாத விஷயமென்றபடி.

வ்யா.—விஸ்த்ருதமாகப்பணைத்த அரசும்; பிண்டி-அசோகு; இவையிரண்டையும் தங்களுக்கு ப்ரயோஜநமாக நினைத்திருக்கும் பௌத்தரும், ஆர்ஹதரும். (புத்தர் நோன்பியர்) பௌத்தரையும், அமணரையும் சொன்னபடி. (பள்ளியித்யாதி) தங்க ளிருப்பிடங்களிலே [ரு யுறைகிற. (தங்கள் தேவரும் தாங்களும்) அவர்கள் தங்கள் தேவதா ஸ்தாநங்களிலே வரித்த தேவதைகளும் தாங்களுமேயாக. அல்லாதாரடைய முக்தராகலாம்படியாகவாய்த்து. என்னெஞ்சமான நீ. (எங்குமித்யாதி) எங்குமுண்டான தேவர்களும் அஸுரரான ஸ்ரீவைஷ்ணவர்களும் நிறைந்தேத்தும் வேங்கடம் மேவிநின்றருள். (அங்க[ம ணித்யாதி) புண்டரீகாக்ஷனை ஸர்வேச்வரனுக்கு அடிமை செய்ய எழுதிக்கொண்டாயே. ... ... ... ... ரு.

வ்யா.—(பொங்கு போதியும்) விஸ்த்ருத மாகாநின்றுள்ள அரசும். (பிண்டியும்) அசோகவ்ருக்ஷமும். இவையிரண்டையு மாய்த்துத் தங்களுக்கு ப்ரயோஜநமாக நினைத்திருப்பது பௌத்தார்ஹதர்கள். [யரு (புத்தர் நோன்பியர்) பௌத்தரையும் அமணரையும் சொன்னபடி. (பள்ளி யுள்ளுறை தங்கள் தேவரும் தாங்களுமேயாக) அவர்கள், தங்களுடைய தேவஸ்தாநங்களிலே வரித்த தேவதைகளும் தாங்களுமாக. அல்லாதாரடங்கலும் முக்தராம்படியாக வாய்த்து. (என்னெஞ்சமித்யாதி) இவருடைய திருவுள்ளம் அவற்றை அநாதரித்து பகவத்விஷயத்திலே ப்ரவணமாய்த்த தென்றால், பின்னை லோகமாக அவற்றை அநாதரித்து இங்கே ப்ரவணமாம்போலே காணும். (எங்குமித்யாதி) எங்குமொக்க, தேவர்களும் அஸுரர்களும் நெருங்கிநின்று ஏத்தாநின்றுள்ள. அன்றிக்கே, தானவரென்கிறது — ஸ்தாநத்திலுள்ளாராகவுமாம். (அங்கணுயகற்கு) அக்கண்ணில் குளிர்த்திக் கிலக்காவதே !. அக்கண்ணழகிலே "ஜிதம்" என்றெழுதிக்கொடுத்தாயாகாதே !. (அடிமை) "ஜிதம்" என்றெழுதிக் கொடுத்தாருடைய வ்ருத்தியிலே அந்வயித்தாயோ. ... ... ... ரு.

நோன்பியர் - அஸஹ்யராய், அமணரைச்சொல்லுகிறது. பள்ளி - அவர்களுடைய தேவதாலயமென்றருளிச்செய்கிறார் (அவர்களித்யாதி.) "தாங்களுமேயாக" என்றதுக்கு - லோகமெல்லா மவர்களேயாய்க் கெட்டுப்போக என்று அவதாரிகையிலே யருளிச்செய்த தாத்பர்யம் தவிர, தாங்களுமேயாக - தாங்கள் மாத்ரமேயாம்படி யென்று தாத்பர்யாந்தரம் விவக்ஷித்து, உட்கருத்தருளிச் செய்கிறார் (அல்லாதாரித்யாதி.) இவ்வாக்யார்த்தைத் தெரியவருளிச்செய்கிறார் (இவருடையவித்யாதி.) தாத்பர்யாந்தரம் (அக்கண்ணழகிலேயித்யாதி.) ... ரு.

ஆறும்பாட்டு.—(துவரியித்யாதி.) புத்தர்முதலானோர் மாத்ரமன்றிக்கே வைராக்ய ஸூசகவேஷங்கொண்டு அத்யாயம் படிப்பார்படியைச் சொல்லுகின்றாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

௬.—துவரியாடையர் மட்டையர் சமண்தொண்டர்கள் மண்டியுண்டு
தமருந்தாங்களுமேதடிக்க, என்னெஞ்சமென்பாய்!, [பின்னரும்
கவரிமாக்கணம்சேரும்வேங்கடம் கோயில்கொண்டகண்ணார்விசு
அமரநாயகற்கின்றடிமைத்தொழில் பூண்டாயே. [ம்பிடை

ப-ரை.—துவர் - காவி ஏறின, ஆடையர் - வஸ்த்ரத்தை யுடையராய், மட்டையர் - மொட்டைத்தலையராய், சமண்தொண்டர்கள் - க்ஷபணமதத்தை ஆஶ்ரயிக்குமவர்கள், மண்டி - ஒருவர்க்கொருவர் மேல்விழுந்து, உண்டு - புஜித்து, பின்னரும் - பின்னையும், தமரும் - தங்கள் பந்துக்களும், தாங்களுமே - தாங்களுமாக, கைவந்தபடி புஜிக்கையாலே, தடிக்க - உடம்பு பருத்தவாராநிற்க: என்[டைய நெஞ்சமென்பாய்! - என்னெஞ்சமானநீ, கவரிமா - சமரீம்ருகங்களின், கணம் - திரள்களானவை, சேரும் - வந்து சேருகிற, வேங்கடம் - திருமலையை, கோயில் கொண்ட - வாஸஸ்தாநமாக வுடையனாய், கண்ணார் - இடமுடைத்தான, விசும்பிடை - பரமபதத்தில் வர்த்திக்கிற, அமரர் - நித்யஸூரிகளுக்கு, நாயகற்கு - தலைவனானவனுக்கு, இன்று அடிமைத்தொழில் பூண்டாயே—. ... ... (௬)

ஆறும்பாட்டு. (துவரியித்யாதி) துவர்பிடித்த புடவையுடையவர். (மட்டையர்) மயிர்பறிக்கையாலே மட்டையான தலையை யுடைய அமணர். சமண் – க்ஷபணர். (மண்டியித்யாதி) அவர்கள் மேல்விழுந்து புஜித்து, பின்னையும், தங்களுக் குறவாய் தந்நிஷ்டரா யிருக்கிறவர்களும் தாங்களும் இப்போஜநம் பண்ணி ஸ்தூலகா[உடம்
யராக; என்னெஞ்சாவது, கவரிமா திரண்டு வர்த்திக்கிற திருமலையைக் கோயிலாகக் கொண்டு. (கண்ணாரித்யாதி) அகல்விசும்பில் நித்யஸூரிகளுக்கு நாயகனானவனுக்கு இன்று அடிமைசெய்ய ஏறிட்டுக்கொண்டாயே. ... ... ... ... ௬.

ஆறும்பாட்டு.—(துவரியித்யாதி) துவரூட்டி யிருந்துள்ள சிவந்த ஆடையை யுடையராய், தலைமயிரைப் பறித்துப் பொகட்டிருக்கிற, சமண்தொண்டருண்டு-அமணராகிறவர், அவர்கள் தாங்கள் கண்டபடி மேல்விழுந்து புஜித்து, அதுக்குமேலே, தங்களோடொத்துத் தங்கள் தர்ஶநத்திலே ருசியுடையராய் அந்தவேஷதாரணத்தையும் பண்ணியிருக்கிறவர்களும் கடவராயிருக்கிற தாங்களும், ஶரீரமானது தடிக்கும்படியாக. (என்னெஞ்சம்) அவர்கள் செய்தபடிசெய்ய, வ்யாவ்ருத்தமானபடியை யுடைய வுன்னைத்தானென்பன்!. (கவரியித்யாதி) கவரிகளை யுடைத்தான ம்ருகங்களுடைய திரள் வந்துசேருகிற திருமலையை வாஸஸ்தாநமாக வுடையவன். (கண்ணாரித்யாதி) இடம் மிக்கிருந்துள்ள, விசும்புண்டு – த்ரிபாத்[ஆகு
விபூதி, அதிலேயுண்டான அநந்தவைநதேயாதிகளுக்கு நிர்வாஹகனானவனுக்கு. (அடிமையித்யாதி) அமணருடையவ்யாபாரத்தை அநாதரித்து நித்யஸூரிகளுடைய யாத்ரைகளிலே அந்வயித்தாயே. ௬.

கண்டபடியென்றது - கண்டவிடமெல்லாமென்றபடி. "பின்னரும்" என்றது-பின்னையுமென்றாய், அதினர்த்தம் (அதுக்குமேலேயென்றது.) கவரிகளை - சாமரங்களை. "மா" என்றதினர்த்தம் (ம்ருகங்களென்றது.) ... ... ௬.

மூ.—தருக்கினாற்சமண்செய்துசோறுதண்டயிரினாற்றிரளைமிடற்றிடை
நெருக்குவாரலக்கணதுகண்டென்னெஞ்சமென்பாய்!,
மருட்கள்வண்டுகள்பாடும்வேங்கடம் கோயில்கொண்டதனோடும்வானி
அருக்கன்மேவிநிற்பாற்கடிமைத்தொழில் பூண்டாயே. [டை

ப-ரை.—தருக்கினால் - வீண்தர்க்கத்தாலே, சமண்-தங்களுடைய க்ஷபணக ஸித்தாந்தத்தை, செய்து - நிலைநிறுத்தி, தண் - ஶைத்யமான, தயிரினால்-தயிரைச்சேர்த்துக்குழைத்த, சோற்றுத்திரளை - சோற்றின்திரளையை, மிடற்றிடை - தங்கள் மிடற்றிலே, நெருக்குவார் - கண்பிதுங்கும்படி நெருக்குமவர்கள் படுகிற, அது - அந்த, அலக்கண் - துக்கத்தை, கண்டு - பார்த்து; என் நெஞ்சமென்[று பாய்!—, வண்டுகள் - வண்டுகளானவை, மருள்கள் - மருள்முதலான இசையை, பாடும் - பாடாநின்றுள்ள, வேங்கடம் - திருமலையை, கோயில்கொண்டு - வாஸஸ்தாநமாகக் கொண்டு, அதனோடும் - அத்தோடேகூட, வைதிகர் ஆஶ்ரயிக்கும்படி, வானிடை - ஆகாசத்தில்ஸஞ்சரிக்கிற, அருக்கன்-ஆதித்யனுக்கு,மேவிநிற்பாற்கு- அந்தராத்மாவாயுள்ள ஸர்வேஶ்வரனுக்கு, அடிமைத்தொழில் பூண்டாயே—.

ஏழாம்பாட்டு. (தருக்கித்யாதி) கேவல தர்க்கத்தாலே தங்கள் ஸித்தாந்தத்தை ஸ்தாபித்து. "வேதஶாஸ்த்ரா விரோதிநா | யஸ்தர்க்கேணாநு ஸந்தத்தே ஸ தர்மம் வேத" என்கிறபடியே - ப்ரமாணாநுகூலமான தர்க்கங்கொண்டு அர்த்தநிஷ்கர்ஷம் பண்ணுகையன்றிக்கே, ஶுஷ்கதர்க்கங்களைக் கொண்டு அவைதிகமான ஸித்தாந்தஸ்தாபநம்பண்ணி. (சோறித்யாதி) பெருஞ்சோறு என்று ஒன்றுண்டிறே அவர்கள் ஜீவித்துப்போருவது. தயிரும் சோறுமாகத் திரட்டி வ்ரதத்துக் குறுப்பாகக் கண்பிதுங்கும்படி மிடற்றிலே நெருக்குவர்கள்; அப்போது படும் அலக்கணுண்டு - து:க்கம், அத்தைக்கண்டு, என்

ஏழாம்பாட்டு.— (தருக்கினாற் சமண்செய்து) கேவலதர்க்[உரு கத்தாலே தங்களுடைய ஸித்தாந்தத்தை ஸ்தாபித்து. "வேதஶாஸ்த்ராவிரோதிநா|யஸ்தர்க்கேணாநுஸந்தத்தே ஸ தர்மம் வேத நேதர:" என்கிறபடியே ப்ரமாணாநுகூல தர்க்கங்கொண்டு அர்த்தத்தை நிர்வஹிக்கை யன்றிக்கே, ஶுஷ்கமான கேவலதர்க்கங்கொண்டு அவைதிகமாக ஸித்தாந்த ஸ்தாபநம்பண்ணி. (சோறித்யாதி) † வேகுசோறுஎன்[கூய றொன்றுண்டிறே அவர்கள் ஜீவித்துப்போருவது. தயிரும் சோறுமாகக்குழைத்துத் திரட்டி வ்ரதத்துக் குறுப்பாகக் கண்பிதுங்கும்படி மிடற்றிலே நெருக்குவர்கள்; அப்போதுபடும்அலக்கணுண்டு-

ஏழாம்பாட்டு.—(தருக்கினாலித்யாதி.) "தமரும் தாங்களுமே" என்கைக்கு தர்ஶநஸ்தாபகர் சிலரும் அதுக்குட்பட்டார் சிலருமா யிருக்கைக்கு நிமித்தந்தன்னை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

சமண் - க்ஷபணகஸித்தாந்தம். விவரணம் (வேகேத்யாதி.) வேகுசோறு - அவர்களுடைய ஸங்கேதம். (வெஞ்சோறு) என்றும் ஸ்ரீகோஶங்களிலே யுண்டு. தயிரின் சோற்றை ரஸக்ரஹணம் பண்ணவொண்ணாமையாலே விழுங்குவர்கள். இத்தால் - அவர்களுடைய துராசாரம் சொல்லிற்றாய்த்து. ... ... ௭.

† அரும்பதத்துக் கநுகுணமாக "வெஞ்சோறு" என்று சிலஸ்ரீகோஶங்கள்.

மூ.—சேயனணியன்சிறியன் பெரியனென்பதும்சிலர்பேசக்கேட்டிருந்
தே,யென்னெஞ்சமென்பாய்!எனக்கொன்றுசொல்லாதே,
வேய்கள்நின்று வெண்முத்தமே சொரி வேங்கடமலை கோயில் மேவிய
† ஆயர்நாயகற்கின்றடிமைத்தொழில் பூண்டாயே. ௮.

ப-வ்ரை.—பரமபதநாதனை ஆஶ்ரயியுங்கள் என்றால், சேயன் என்பதும்-தூரஸ்தன் என்று குற்றஞ் சொல்லியும், அர்ச்சாவதாரத்தை பஜியுங்கள் என்றால், அணியன் என்பதும் - ஆஸந்நன் என்று அநாதரித்தும், கண்ணனை நண்ணுங்களென்று விபவத்தைக்காட்டினால், சிறியன் என்பதும் - எளிமையைச்சொல்லிக் கைவாங்கியும், வ்யூஹத்தையும் அந்தர்யாமித்வத்தையும்பற்றச்சொன்னால், பெரியன் என்பதும்-எட்டான் என்று பெருமையைச் சொல்லிக்கைவாங்கியும், இப்படி, சிலர்-சிலபுத்திஹீநர், பேச - சொல்லுவதை, கேட்டிருந்தே - கேட்டிருக்கச் செய்தேயும்; என்னெஞ்சமென்பாய் !—, எனக்கு - உன்னைக் கரணமாகவுடைய எனக்கு, ஒன்றுசொல்லாதே - ஒருவார்த்தை சொல்லாமலே ; வேய்கள்நின்று - மூங்கில்களினின்றும், வெள்-வெளுத்த, முத்தம்-முத்துக்கள், சொரி - சொரிகிற, வே[ ்ரு ங்கடமலை - திருமலையை, கோயில் - வாஸஸ்தாநமாக, மேவிய - பொருந்தியிருக்குமவனாய், ஆயர் - இடையர்க்கு, நாயகற்கு - தலைவனானவனுக்கு, இன்றுஅடிமைத் தொழில் பூண்டாயே—. ... ... ... ... ... (௮)

நெஞ்சமான நீ. (மருட்களித்யாதி) மருள் இந்தளமாகிற பண்ணைப் பாடாநின்றுள்ள திருமலையை வாஸஸ்தாநமாகக் கொண்டு. (அநேரும் வானிடைஅருக்கன்மேவி நிற்பாற்கு) அதுடனே கூட, வைதிகராலு ராஶ்ரயிக்கும்படி ஆதித்யாந்தராத்மாவாய் நிற்கிறவனுக்கு இன்று அடிமைசெய்ய ஏறிட்டுக்கொண்டாயே. ... ... ௭.

ஊஹ்வம், அத்தைக்கண்டு. ( மருட்களித்யாதி ) மருள் இந்தளம் என்கிற பண்ணை வண்டுகள் பாடாநின்றுள்ள திருமலையை வாஸ[உ.ரு ஸ்தாநமாகக்கொண்டு.(அருக்கன்மேவிநிற்பாற்கு)வைதிகராலாஶ்ரயிக்கும்படியாக ஆதித்யாந்தராத்மாவாய்க்கொண்டு நிற்கிறவனுக்கு. ( அடிமைத் தொழில் பூண்டாயே ) ஆதித்யாந்தராத்மாவாயிருக்கும் என்றநுஸந்தித்துப் போருகை யன்றிக்கே, கண்ணாலே கண்டடிமை செய்து அநுபவிக்கப்பெற்றாயே நீ. ... ... ... ௭.

எட்டாம்பாட்டு.—( சேயனித்யாதி ) சிறியனென்பார் பெரியனென்பாராய்க் கொண்டு நாட்டார் ஸம்ஶயாத்மாக்களாய் அநர்த்தப்பட்டுப் போகாநின்றார்கள், நீ அவர்களோடு கூடாதே உன்னையுடையவனோடும் கூடாதே, அவன்றிருவடிகளி லடிமையிலே

எட்டாம்பாட்டு.—(சேயனித்யாதி.) கீழ்மூன்றுபாட்டாலே - வாஜ்யருடைய படியைச் சொல்லிநின்றார்; அவ்வளவன்றிக்கே, ஈஶ்வரஸத்பாவமங்கீகரித்து குத்ஸ்டிகளாய்க் கிடக்குமவர்கள்படியைச் சொல்லிக்கொண்டு நெஞ்சைக்கொண்டாடுகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. குத்ஸ்டிகளென்று - துர்மதிகளைச் சொல்லுகிறது.

உன்னை யுடையவனோடும்-கரணதயா உன்னையுடையவெனோடுமென்றபடி.

"எனக்கொன்று சொல்லாதே" என்கிறாரிறே : இத்தால் - "பிரிதிசென்றடை [ரு நெஞ்சே" என்றும் "வதரிவணங்குதும்" என்றும் "சாளக்கிராமமடை நெஞ்சே" என்றும் பலகாலும் நான் சொன்னதுக்கொரு மறுமாற்றம் சொல்லாதேயென்றதாய்த்து. பரமபதநாதனை ஆஶ்ரயிக்கச்சொன்னால், "சேயன்" என்று குற்றம்

†"ஆயநாயகற்கு" என்று சிலமூலஸ்ரீகோஶங்கள்.

மூ.—கூடியாடியுரைத்ததேயுரைத்தாயென்னெஞ்சமென்பாய்! துணிந்
பாடியாடிப்பலரும் பணிந்தேத்திக் காண்கிலார்‡, [துகேள்;
ஆடுதாமரையோனுமீசனுமமரர்கோனும்நின்றேத்தும்வேங்கடத்
தாடுகூத்தனுக்கின்றடிமைத்தொழில் பூண்டாயே. க.

---

ப - ரை.—என்னெஞ்சமென்பாய்!—, கூடி - நாட்டாரோடுகூடி, ஆடி - அவர்கள் புஜித்ததைப் புஜித்து, உரைத்ததே - அவர்கள் சொல்லும் வார்த்தைகளையே, உரைத்தாய் - சொல்லிப் போந்தாய்; உனக்கு இன்னமொரு நல்வார்த்தை சொல்லுகிறேன், அதை, துணிந்துகேள் - அத்யவஸித்துக் கேள் என்ன; ஆகில் சொல்லவேணும் என்ன; பலரும்—, பாடிஆடி - பரவசராய் ஆடுவதாய்க் கொ[டு ண்டு, பணிந்து - வணங்கி, ஏத்தி - ஸ்தோத்ரம் பண்ணி, பின்னையும், காண் கிலார் - உள்ளபடி கண்டறியமாட்டாத வைபவத்தை யுடையனாய், ஆடு-ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களுக்கு ஸமர்த்தர் என்னும் வெற்றியையுடையரான, தாமரையோனும் - திருநாபீகமலத்திற்பிறந்த ப்ரஹ்மாவும், ஈசனும் - ருத்ரனும், அமரர்கோனும்-இந்த்ரனும், நின்று-தங்கள் தங்கள் அதிகாரத்துக்கு அநுகுணமாக[டு இருந்து, ஏத்தும் - ஸ்தோத்ரம் பண்ணுநின்றுள்ள, வேங்கடத்து - திருமலையிலே நித்யவாஸம் பண்ணுமவனாய், ஆடு கூத்தனுக்கு - ஆய்ச்சியரோடு குடக்கூத்தாடின ஸௌசீல்யவானுக்கு, இன்று அடிமைத்தொழில் பூண்டாயே—, ... (க)

எட்டாம்பாட்டு. (செயனித்யாதி) தூரஸ்தன், ஸந்நிஹிதன், சிறியன், பெரியன் என்று சிலர் சொல்லக் கேட்டிருந்து. (என்னெஞ்சமித்யாதி) என்னெஞ்சமான நீ, எனக்கொருவார்த்தை சொல்லாதே. (வேய்கமித்யாதி) மூங்கில்களானவை வெண் முத்தமே சொரிகிற திருமலையை வாஸஸ்தாநமாகப் பொருந்தின. (ஆயர்நாயகற்கு) திருவாய்ப்பாடியி லிடையர்க்கு நிர்வாஹகனானவனுக்கு அடிமைசெய்ய எழுதிக்கொண்டாயே. ... ... ... ... அ.

---

அந்வயிப்படி:. (செயன்) தூரஸ்தனென்பார்கள் சிலர்; (அணியன்) ஆஸந்நனென்பார்கள் சிலர்; சிறியனென்று அவனெளிமையைச் சொல்லிக் கைவாங்காநிற்பர்கள் சிலர்; பெரியனென்று எட்டானென்று அருமையைச் சொல்லிக் கைவாங்குவர்கள் சிலர்; இப்படி தோற்றினார் தோற்றுகிறபடி சொல்லுகிறவற்றைக் கேட்டுவைத்தேயும், என்[நெ நெஞ்சமென்பாய்!, அடிமைத்தொழில் பூண்டாயே!. (எனக்கொன்றுசொல்லாதே) அவர்களோடும் கூடாதே, உன்னை யுடையேனுக்கும் ஒன்றுசொல்லாதே. (வேயித்யாதி) வேய்கள் நின்று வெண்முத்தமே சொரிய, அவ்வொளி வழிகாட்ட வந்து புகுந்தவித்தனையாய்த்து. (ஆயர்நாயகற்கு) *தன்னேராயிரம் பிள்ளைகளுக்குத்[நடு தலைவனானவனுக்கு. "இனவாயர் தலைவன்" என்னக்கடவதிறே. (அடிமை) வரையாதே ரக்ஷகனானவனுக்கு அடிமைசெய்கையிலே ஒருப்பட்டாயே. ... ... ... ... ... அ.

சொல்லுவார்கள்; அந்த்ர அர்ச்சாவதாரத்தை ஸஜாதீயமுகேனாளென்றால, "அணியன" என்று ஆசரியார்கள்; கண்ணை நண்ணுங்கோளென்று விஷவத்தைக்காட்டினால், "சிறியன்" என்பர்கள்; வ்யூஹங்களையும் அந்தர்யாமியையும் பற்றச்சொன்னால், "பெரியன்" என்பர்கள்; எல்லாவற்றுக்கு மொருகுறை சொல்லிக்கொண்டிருக்கும்படியை நீகேட்டிருந்தும் இதிலே யொன்றுகிலு மெனக்கு ப்ரத்யுத்தரம் சொல்லாதே, அடிமைபூண்டாயே! என்று கொண்டாடுகிறாரென்று விவக்ஷித்து, பதார்த்தங்கள் தன்னைக்காட்டுகிறார் (தூரஸ்தனித்யாதி) வேங்கடத்தில் நின்ற விஷவத்திலீடுபட்டாயேயென்று கருத்து. ... ... அ.

---

‡ "காண்கிலர்" என்று பாடாந்தரம்.

ஒன்பதாம்பாட்டு.—(கூடியித்யாதி) நாட்டாருடனே கூடி, அவர்கள் சொல்லிற்றைச் சொல்லி அவர்கள் ஶ்லாகித்தத்தை ஶ்லாகித்து அவர்களுடனே களித்துப்போந்த நீ, அவர்களை விட்டு. (என்னெஞ்சமென்பாய் துணிந்துகேள்) இவ்விஷயத்திலே ப்ரவணமானவுனக்கு இன்னமொன்று சொல்லுகிறேன், அத்தைத்துணிந்துகேள். (பாடியாடியித்யாதி) பாடுவது ஆடுவதாய்க் கொண்டு ஆச்ரயித்து, பின்னையும் காணமாட்டாதபடியான வைபவத்தை யுடையவன். ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைப் பண்ணுமிடத்து, தங்களோபாதி வேறொருத்தர் பண்ணமாட்டாதபடி தாங்களே ஸமர்த்தரான வெற்றியையுடைய ப்ரஹ்ம ருத்ராதிகள் தங்களதிகாராநுரூபமாக ஆச்ரயித்துஸ்தோத்ரம் பண்ணும்படி திருமலையிலேநின்றருளினவனுக்கு. ஆடென்பது-வெற்றி.

---

ஒன்பதாம்பாட்டு.—(கூடியித்யாதி) ஶப்தாதி விஷயங்களிலே ப்ரவணராயிருப்பாரோடே கூடி, அவர்கள் ஶ்லாகிக்கும் விஷயங்களிலே அவகாஹித்து, அவர்கள் விஷயங்களை ஶ்லாகித்துச்சொல்லும் வார்த்தைகளையே சொல்லிப்போந்தாய். (துணிந்துகேள்) இப்போதுஅவற்றைவிட்டு இவ்விஷயத்தில் ப்ராவண்யத்தை யுடையையாயிருக்கிற வுனக்கு இன்னமொரு நல்வார்த்தை சொல்லுகிறேன், அத்தை அவ்யவஹித்துக் கேள். (பாடியித்யாதி) பாடுவதாடுவதாய்க் கொண்டு பலரும்ஆச்ரயித்துப்பின்னையும் காணப்பெறார்கள்; அதுக்குமேலே, ப்ரஹ்மாதிகளும் தந்தாமுடைய அதிகாரார்த்தமாக வந்தாச்ரயியாநிற்பர்கள். (காண்கிலா) என்றுமாம் - இப்படி ஆச்ரயித்தவர்களுங்கூடக் காணப்பெறாதபடியான ஏற்றத்தையுடைய ப்ரஹ்மாதிகளும் வந்தாச்ரயியாநின்றுள்ள வென்னுதல். (ஆடு தாமரையோன்) ஆடுகையென்று-பெருமையாய், அலர்ந்ததாமரையென்னுதல். அன்றிக்கே, ஆடுகை - நடையாடுகையாய், அதிலே வர்த்திக்கிற வென்னுதல். அன்றிக்கே, ஆடுகை - உண்டாகையாய், திருநாபீகமலத்தை உத்பத்திஸ்தாநமாக வுடையவனென்னுதல். அன்றிக்கே, ஆடு-வெற்றியாய், வெற்றியையுடையவென்றுமாம்.

---

ஒன்பதாம்பாட்டு.—(கூடியித்யாதி.) குற்றங்களைச்சொல்லி ஆச்ரயியாதவர்களன்றிக்கே, ஸாயுஜ்யார்த்திகளாய் ஆச்ரயிப்பாரும் ப்ரயோஜநாந்தரபரராய் ஆச்ரயிப்பாருமாகப் பலருண்டு, அவர்களில் வ்யாவ்ருத்தத்தையானேயென்று உகக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

(இன்னமொருநல்வார்த்தை)என்றதுக்கு-"துணிவினியுனக்குச் சொல்லுவன்" என்கிறபாட்டிலே அவனைத்தொழச்சொல்லினதுக்கிசைந்து அப்படியே செய்[ந்]தாய், தொழுமவர்களுக்குள்ளே யிரண்டு கள்ளவழியுண்டு, அவற்றில் போகாதே தொழுகையே ப்ரயோஜநமாகத்தொழவேணுமென்னும்வார்த்தையைக்கேளென்று கருத்து. இப்பாட்டிலே "அடிமைத்தொழில் பூண்டாயே" என்றதுக்கு - ஸ்வீயவத்கரித்து ஸ்துதிபண்ணினமையாய், இவ்வர்த்தத்தை நன்றாக வுபபாதிப்பண்ணொன்று உபதேசிக்கையிலே தாத்பர்யமென்று கொள்ளவேணும். (காண்கிலா) என்றது - பாடாந்தரம். இப்போது, தாமரையோனுக்கும் ஈசனுக்கும் இந்த்ரனுக்கும் விசேஷணமென்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதி.)

மூ.—மின்னுமாமுகில்மேவுதண்டிருவேங்கடமலைகோயில் மேவிய
அன்னமாய்நிகழ்ந்த வமரர்பெருமானை,
கன்னிமாமதிள் மங்கையர் கலிகன்றி யின்தமிழாலுரைத்த விம்
மன்னுபாடல் வல்லார்க்கிடமாகும் வானுலகே. ௰.

ப-ரை.—மின்னும் - மின்னுகிற, மாமுகில் - பெரியமேகங்கள், மேவு - வந்துசேருகிற, தண் - குளிர்ந்த, திருவேங்கடமலை - திருமலையை, கோயில் - கோயிலாகக் கொண்டு, மேவிய - நித்யவாஸம் பண்ணுமவனாய், ஸ்ரஹ்மா மதுகைடபர்கள்கையில் வேதத்தைப்பறிகொடுத்து "கண்ணிழந்தேன், தநமிழந்தேன்" என்று கூப்பிட, அவர்களுக்கு வேதசக்ஷுஸ்ஸைக் கொடுக்கைக்காக, அன்னமாய் - ஹம்ஸ ஸ்வரூபியாய், நிகழ்ந்த - திருவவதரித்தவனாய், அமரர் - நித்யஸூரிகளுக்கு, பெருமானை - நிர்வாஹகனானவன் விஷயமாக; கன்னி - ஒருவராலும் அழிக்கவொண்ணாததாய், மா - பெரிய, மதிள் - மதிளையுடைத்தான, மங்கையர் - திருமங்கையிலுள்ளாருடைய, கலி - பாபத்தை, கன்றி - போக்கின ஆழ்வார், இன் - செவிக்கினிதான, தமிழால் - தமிழாலே, உரைத்த - அருளிச் செய்ததாய், தெஞ்[ம]ரும் தாமும் ஒத்துச்சொன்ன தாகையாலே, மன்னு - எம்பெருமான் திருவுள்ளத்தில் நிலைநிற்குமதான, இப்பாடல் - இத்திருமொழியை, வல்லார்க்கு - அப்யஸிக்குமவர்களுக்கு, வானுலகு - பரமபதம், இடமாகும் - இருப்பிட மாகுமென்கிறார். (௰)

(வேங்கடத்தாடு கூத்தன்) திருவேங்கட முடையா னெழுந்தருளி நிற்கிற நிலைகாணா, வல்லாராடினாப்போலே யாய்த்திருப்பது; அவனுக்கு இன்று அடிமைசெய்ய ஒருப்பட்டாயே. ... ௧.

பத்தாம்பாட்டு. (மின்னுமாமுகிலித்யாதி) மின்னாநின்றுள்ள பெரிய மேகங்களானவை படிந்து குளிர்ந்த திருமலையைக் கோயிலாக

(ஆடுகூத்தனுக்கு) கூத்தாடிவிட்ட சுவடெல்லாம் தோற்றுமாய்த்து வடிவிலே; "மன்றமரக்கூத்தாடி மகிழ்ந்தாயென்றும் வடதிருவேங்கடம் மேய மைந்தாவென்றும்" என்று சொல்லுகிறபடியே. (அடிமைத்தொழில் பூண்டாயே) பலருமவனை ஆச்ரயித்துப் பின்னையும் காணப்பெறார்கள், ஸ்ரஹ்மாதிகள் தந்தா மதிகாரார்த்தமாக ஆச்ரயியா நிற்பர்கள், நீ அவ்விரண்டுகோடியிலு மன்றிக்கே அவன் பக்கலிலே அடிமை புக்காயே. ... ... ... ... ௧.

பத்தாம்பாட்டு.—(மின்னுமாமுகிலித்யாதி) கழுத்தே கட்டளையாக நீரைப்பருகி, தன் வடிவிலிருட்சிக்குத் தானே கைவிளக்குப் பிடித்துக்காட்டினாப்போலே மின்னோடேவருகிறமஹாமேகங்கள் வந்துசேருகிறமஹாமான திருமலையைவாஸஸ்தானமாகக்கொண்டு

(புக்காயே)என்றவநாதரம், இவ்வாமுத்தை நன்றாகக்கேள் என்றுகூட்டுவது. ௧.

பத்தாம்பாட்டு.—(மின்னுமாமுகிலித்யாதி.) தன்வடிவி லிருட்சிக்கு தானே கைவிளக்குப் பிடித்துக்கொண்டு திரியும்மேகங்களைப்போலே, தன்னை யறிகைக்கு ஸாதநமானவேதசக்ஷுஸ்ஸைக் கொடுத்தவனென்று ப்ரக்ஞோபயோகம் திருவுள்ளத்திலேவைத்துக்கொண்டு வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (சமுத்தேயித்யாதி.)

மேவின. (அன்னமித்யாதி) ப்ரஹ்மாதிகளுக்கு வேத த்ருஷ்டியைக் கொடுக்கைக்காக அன்னமா யவதரித்து, அவர்களுக்கு வேத ப்ரதாநத்தைப் பண்ணி, அவர்கள் அவ்வழியாலே ஆச்ரயிக்க நின்ற. (கன்னியித்யாதி) கன்னி-அழிவின்மை. ஒருவராலழிக்க வொண்ணாத பெரிய மதிளை யுடைய திருமங்கையிலுள்ளாருடைய பாபத்தை யோட்டினவர். கலி - பாபம். (இம்மன்னுபாடல் வல்லார்க்கு) திருவேங்கடமுடையானைச் சேர்ந்து அநுபவித்த இத்திருமொழியை அப்யஸிப்பார்க்கு இருப்பிடமாவது பரமபதம். ... ௰.

ஜீயர்திருவடிகளேசரணம்.

---

நித்யவாஸம் பண்ணுகிற, ப்ரஹ்மாதிகள் வேதசக்ஷுஸ்ஸை மீட்டுக்கொடுக்கைக்காக அன்னமாய்வந்தவதரித்து பின்னை அவர்களுக்கு அத்தை மீட்டுக்கொடுத்து அவ்வழியாலே அவர்கள் ஆச்ரயிக்கும்படி ஸுலபனாய் நிற்கிற ஸர்வேச்வரனை. (கன்னியித்யாதி) அரணாகப் போரும்படியாய் ஒருவராலழிக்கவொண்ணாதபடி பெரியமதிளை யுடைத்தான திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான ஆழ்வார் இன்தமிழாலே யருளிச்செய்த இப்பத்தும்வல்லவர்க்கு. பாவகர்ப்பமான அர்த்தமாகையாலே வேதத்தோபாதி என்றுமொக்க நிற்குமாய்த்து. வேதப்ரபாவம் போலேயாய்த்து. (இடமாகும்வானுலகே) பூண்டவடிமை நித்யமாய்ச் செல்லும்தேசத்தை யிருப்பிடமாகவுடையராவர். ... ௰.

அடிவரவு.—வான் உறவு இண்டை பாவியாது பொங்கு துவரி தருக்குச் சேயன் கூடி மின்னு காசை.

திருமங்கையாழ்வார்திருவடிகளேசரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

---

கன்னி - கல்லாலேசெய்யப்பட்டவென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளிச் செய்கிறார் (அரணித்யாதி.) “மன்னு” என்றுவிசேஷித்ததுக்கு பாவம் (பாவகர்ப்பேத்யாதி.) அதாவது - நெஞ்சும் தாமுமொத்துச்சொன்னதாகையாலே எம்பெருமான்றிருவுள்ளத்தில் நிலைநின்றதென்று கருத்து. (பாவகர்ப்பமான) ஸாடோபம். எம்பெருமான் பக்கல் பாவவைர்யத்தோடே சொன்னதென்று ப்ரக்ருதார்த்தம்; பாவத்தை - நெஞ்சை, கர்ப்பமான - தன்னுள்ளே யுடைத்தானவென்று ரஸம். வேதந்தானும் பரமபுருஷஹ்ருதயாநுவர்த்தியா யிருக்குமிறே. கீழ்வாக்யத்தால் ஃபலித்தவர்த்தம் (வேதேத்யாதி.) ... ... ... ... ... ௰.

ஜீயர்திருவடிகளேசரணம்.

மூ.—காசையாடைமூடியோடிக் காதல்செய் தானவனூர்
நாசமாக நம்பவல்லநம்பி நம்பெருமான்,
வேயினன்னதோள்மடவார் வெண்ணெ யுண்டானிவனென்று
ஏசநின்ற வெம்பெருமா னெவ்வுட்கிடந்தானே. க.

ப-ரை.—காசைஆடை - காஷாயவஸ்த்ரத்தை யிட்டு, மூடி - உடம்பை நன்றாக மறைத்து, ஓடி - ராமபயத்தால் பர்ணசாலையிலேவந்து, காதல்செய் - பிராட்டிபக்கல் வ்யாமோஹத்தைப் பண்ணின, தானவன் - அஸுரனான ராவணனுடைய, ஊர் - ஊரானது, நாசமாக - நசிக்கும்படி நினைத்து, நம்பவல்ல-அப்படி செய்து தலைக்கட்டவல்ல, நம்பி - வீரஸ்ரீயால் பூர்ணனான, நம்பெருமான் - நம்முடைய ஸ்வாமியாய்; வேய் - மூங்கிலை, அன்ன - ஒத்த, தோள் - தோள்களையும், மடவார் - மடப்பத்தையு முடைய கோபிமார்கள், சேமித்துவைத்த, வெண்ணெய் - நவநீதத்தை, இவன் உண்டான் என்று - இவன் திருடி பக்ஷித்தானென்று, சிசுபாலாதிகள், ஏசநின்ற - ஹாஸ்யம் பண்ணும்படி எழுந்தருளியிருக்கிற, எம்பெருமான்-என்ஸ்வாமியானவன், எவ்வுள்-திருவெவ்வுள் என்கிற திருப்பதியிலே, கிடந்தான் - கண்வளர்ந்தருளினானென்கிறார். ... (க)

ஆஸ்ரிதவிஷயத்தில், பிராட்டிமார் பக்கல் பண்ணும் விருப்பத்தைப் பண்ணும் ஸ்வபாவனுமாய், அவர்கள் யாதொன்றைச் சொன்னார்கள் அத்தைச்செய்யும் ஸ்வபாவனுமாய், அவடிதங்களை வடிப்பிக்கும் ஸ்வபாவனுமாய், ப்ரஹ்மாதிகளுக்கு எட்டவொண்ணாத பெருமையை யுடைய ஸர்வஹூத ஸம்ஹீத்துமாய், ஸர்வஸஜாதீயனுமான ஸர்வேஸ்வரனுக்கு, ஆஸ்ரிதர்பக்க லுண்டான ப்ரீத்யதிஸயத்தாலே அவர்கள் ஒரு தேஸவிஸேஷத்திலே போனால் செய்யுமடிமையை யிங்கே செய்யலாம்படி திருவெவ்வுளிலே சாய்ந்தருளின ஸௌலப்யத்தை யநுஸந்தித்து இனியராகிறார். ... *

ஆஸ்ரிதவிஷயத்தில் பிராட்டிமார் திறத்திற் பண்ணும் ஓரத்தைப் பண்ணும் ஸ்வபாவனுமாய், அவர்கள் காலாலே காட்டிற்றைத் தலையாலே செய்வானுமாய், அவடிதங்களை வடிப்பிக்கவல்லனுமாய், ப்ரஹ்மாதிகளுக்கு அவிஷயமாம்படி பெரியவனுமாய், ஸர்வஹூத ஸம்ஹீத்துமாய், ஸர்வவிஸஜாதீயனுமான ஸர்வேஸ்வரன், தனக்கு ஆஸ்ரிதர் பக்கலுண்டான இனிமையாலே, அவர்கள் ஸரீரஸம்பந்தமற்று பரமபதத்திலேபோனால் செய்யுமடிமையை *இன்னடையாயினகொண்டு தமக்கேத்தலாம்படியாகத் ¶ திருவெவ்வுளிலே வந்து சாய்ந்தருளினபடியை அநுஸந்தித்தினியராகிறார். ... ... ... *

அ.—காசையாடை ப்ரவேஸம்.—கீழ் நாலுதிருமொழிகளாலே - திருவேங்கடமுடையானைத் தாமும் நெஞ்சுமாய் யதாமநோரதமநுபவித்துத் தேக்கிட்டு நிற்கிறவளவிலே, * நிலையார நின்ற வழகுக்கு மேலே கிடையழகு கண்டநுபவிக்கவேணு மென்னுமாசைபிறந்து ஸந்நிஹிதமான திருவெவ்வுளூரிலெம்பெருமானை யநுபவிக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. பாட்டுக்களில் ப்ரமேயத்தை ஸங்க்ரஹேண வருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதேத்யாதி.) "இன்னார் தூதனென நின்றான்" என்றதால் பலித்தது (அவர்கள்காலாலேயித்யாதி.) "பாலனாகி" என்கிறபாட்டினர்த்தம் (அவடிதங்களையித்யாதி.) இனியராகிறாரென்றது - "கிடந்தானே!" என்கிற ஸ்வரஸஸித்தார்த்தம். ... ... ... ... *

¶ "திருவெவ்வுளூரிலே" என்று சில ஸ்ரீகோஸங்கள்.

முதற்பாட்டு. (காசையாடை) காஷாயவஸ்த்ரத்தை யிட்டு உடம்பை ஆச்சாதித்து, பர்ணசாலையிலே வந்து, ஜநகி என்று பாராதே பிராட்டிபக்கலிலே ஆசையைப்பண்ணி, ராமஸாயத்தாலே ஓடினவனுடைய ஊரானது நசிக்கும்படி திருவுள்ளத்திலே கொண்ட[ருளி, அப்படி செய்யவல்ல ஸர்வசக்தியான என்னுடையனே!. (வேயினித்யாதி) வேய்போன்ற தோளழகை யுடையருமாய் மடப்பத்தையுடைய யசோதாதிகள் வெண்ணெயைக்களவுகண்டமுதுசெய்தான் என்று சிசுபாலாதிகள் ஏசும்படி நின்ற என்னுடையன் திருவெவ்வுளிலே கண்வளர்ந்தான். ... ... ... க.

---

முதற்பாட்டு.— (காசையித்யாதி) காஷாய வஸ்த்ரத்தை யிட்டு உடம்பெங்கும்மறையும்படி மூடி, ராமஸாயத்தாலே பதறிநடந்து போய், ஜநகியென்றுபாராதே, வீதராகர்வேஷத்தையரித்து ராகத்தைப்பண்ணின வையனுடையவூரானது ஸமஸ்தநஸ்ஸ்ரம மாம்படியாகத் திருவுள்ளத்திலே கொண்டருளி, அப்படி செய்து தலைக்கட்டுகை[யிடுக்கீடான வீரஸ்ரீயால் பூர்ணனானவன். (நம்பெருமான்) அப்படி பிராட்டிதிறத்தில் பண்ணின ஓரத்தை நம்பக்கலிலே பண்ணினவன். (வேயித்யாதி) வேயோடொத்த தோள்களையுடையராய் ஆத்மகுணேனு பேதைகளாயிருக்கிற கோபிகளுடைய ஸ்பர்சமுள்ளதொரு த்ரவ்யத்தாலல்லது செல்லாமையை யுடையனாய், அவர்களுடைய வெண்ணெயைக் களவுகண்டு அமுதுசெய்து, அவர்கள் அத்தைச்சொல்லி யேசும்படிநிற்கிற ஸர்வேச்வரன். (எவ்வுட்கிடந்தானே) அறிவுடையார் "ராமோராமோராம:" என்ன, தன்பக்கல் நசையுடையவர்கள் இப்படிபேச, இவையிரண்டையும்கேட்டு, திருவெவ்வுளிலே கண்வளர்ந்தானாய்த்து. ... ... ... ... க.

---

முதற்பாட்டு.—(காசையித்யாதி.) கீழ்த்திருமொழியிலே - "துவரியாடையர்" என்று - வேஷதாரிகள் ப்ரஸ்துதராகையாலே, அப்படிப்பட்ட வேஷதாரிகள் * தலையையறுப்பதே கருமங்கண்டாய் என்னுமர்த்தத்தை யநுஷ்டாநபர்யந்தமாக்கின சக்ரவர்த்தித்திருமகன்படியை யநுஸந்திக்கிறரென்று அவதாரிகை கண்டுகொள்வது.

செய்தானென்னாதே, "அவன்" என்றதுக்குத் தாத்பர்யம் (வீதராகரித்யாதி.) ஓரத்தை-பக்ஷபாதத்தை. "இன்-"சாரியையாய், வேயன்னவென்றாய், அதினர்த்தம் (வேயோடொத்த வென்றது.) ... ... ... ... க.

மூ.—தையலாள்மேல் காதல்செய்த தானவன் வாளரக்கன்
பொய்யிலாத பொன்முடிகளொன்பதோடொன்று மன்று
செய்த வெம்போர்தன்னி லங்கோர் செஞ்சரத்தாலுருள
எய்தவெந்தை யெம்பெருமா னெவ்வுட் கிடந்தானே. ௨.

ப-ரை.—தையலாள்மேல் - நிருபாதிக ஸ்த்ரீத்வத்தை யுடையளான பிராட்டி பக்கல், காதல்செய்த - அபிநிவேசத்தைப் பண்ணினவனாய், தானவன் - ஆஸுர ப்ரக்ருதியாய், வாள் - ருத்ரன்பக்கல் பெற்றவாளைத் தனக்கு ரக்ஷகமாகவுடையனான, அரக்கன் - ராவணாஸுரனுடைய, பொய்யிலாத - வாஸ்தவாகாரமான, பொன்முடிகள்-ஸ்வர்ண கிரீடங்கள் தரித்த தலைகள், ஒன்பதோடொன்றும்-பத்தும், அன்று - பிராட்டியை ராவணன் சிறைவைத்த அக்காலத்தில், செய்த - பண்ணின, வெம் - க்ரூரமான, போர்தன்னில் - செவ்வைப்பூசலிலே, உருள-சிதறி விழும்படியாக, ஓர் - ஒப்பற்றதாய், செம் - நெருப்பையுமிழ்ந்து கொடுவருகையாலேசிவந்த, சரத்தால் - கொலையம்பாலே, எய்த - ப்ரயோகம் பண்ணினவனாய், எந்தை-என்பிதாவாய், எம்பெருமான்-எனக்கு ஸ்வாமியானவன், எவ்வுள்- திரு எவ்வுளிலே, கிடந்தான் - பள்ளிகொண்டருளினானென்கிறார். ... (௨)

பெரி-வ்யா.—இரண்டாம்பாட்டு.— (தையலாளித்யாதி) திரியட்டும், ராமாவதார மநுவர்த்தித்தபடி. பட்டரோபாதியும்போருமாய்த்திவர்க்கு, அவ்வவதாரத்தில் பக்ஷபாதம். சிறியாத்தான், பட்டர் ராமாவதாரத்திலே பக்ஷபதித்திருப்பர் என்றருளிச்செய்யும் வார்த்தை கேட்கைக்காக "பெருமாளுக்கெல்லாவேற்றமுமுண்டாகிலும் ஆஸ்ரிதார்யமாகக் கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோனஇவ்வேற்றமில்லையே" என்ன; "அவர் தூதுபோகாமையல்ல, பிறப்பிற் குற்றங்காணும்" என்றருளிச்செய்தார்; இக்ஷ்வாகுவம்ஸ்யர்கழுத்திலேயோலைகட்டித்தூது போகவிடுவாரைக் கிடையாதே!. அவ்வவதாரத்திலே திருவடி அங்கே போவது இங்கேவருவதாய்க்கொண்டு வார்த்தைசொல்லித் திரிந்த ஏற்றத்தைக் கண்டு, "நாமு மிப்படி ஆஸ்ரிதர்க்காகத் தூது போகப்பெற்றிலோம்!" என்று ‡ செவிசீப்பாய்த்திருந்தது; அதுக்காகவிறே பின்னை வந்தவதரித்து ஆஸ்ரிதர்க்காகத் தூதுபோய்த்தது; க்ஷத்ரியனென்று நிஸ்சயிக்கில் தூதுபோக விடுவாரில்லை! என்று

இரண்டாம்பாட்டு.—(தையலாளித்யாதி.) கீழ்ப்பாட்டிலும் - ராமவ்ருத்தாந்தம் ப்ரஸ்துதமாய், இப்பாட்டிலும் அதுவேயானபடியைக்கண்டு வ்யாக்யாதா ஈடுபடுகிறார் (திரியட்டுமித்யாதி.) திரியட்டும் - புந:, அநுவர்த்திக்கைக் கடியென்னென்ன (அவ்வவதாரத்திலித்யாதி.) (பட்டரோபாதி) என்கைக்கு - பட்டர் ராமபக்ஷபாதியாயிருப்பரோவென்ன (சிறியாத்தானித்யாதி.) இல்லையென்னக்கூடுமோ, உண்டு, தூதுநடவாமைக்கு ஹேதுவேறேயென்று பரிஹரித்தருளுகிறார் (அவரித்யாதிவாக்யத்வயத்தாலே.) இவ்வாஸ்ரித பாரதந்த்ர்ய முண்டென்கைக்கு நியாமகமெதென்ன வருளிச்செய்கிறார் (அவ்வவதாரத்திலேயித்யாதி.) அவர் இக்ஷ்வாகுவம்ஸ்யரானால் க்ருஷ்ணன் யதுவம்ஸ்யனன்றோவென்ன வருளிச்செய்கிறார் (க்ஷத்ரியனென்றித்யாதி.) தூதுபோகவிடச்செய்தேஅறியார்களோ

‡ செவிசீப்பாய்கை - வியப்பாகை, ஆசிக்கை.

இரண்டாம்பாட்டு. (தையலாளித்யாதி) ஜநகிபக்கலிலே காதல் பண்ணின ஶத்ருவான ராவணனுடைய, "தாய்தலை யற்றற்றுவீழ" என்கிறபடியே - பொய்த்தலை யன்றியே, அவன் பூவும் புழுகுமிட்டுப் போற்றிவளர்த்த பத்துத்தலைகளும், அன்றுசெய்த கொடிய போரிலே அற்றுவிழ, அழகிய திருச்சரத்தாலே யெய்த என்ஸ்வாமி, திருவெவ்வுளிலே பள்ளிகொண்டான். ... ... உ.

---

அத்தை மறைத்திறே வளர்ந்தது. அபிஷிக்த க்ஷத்ரியவம்ஶத்தில்பிறக்கில் தூதுபோக விடுவாரைக் கிடையாதே!. (தையலித்யாதி) நிருபாதிக ஸ்த்ரீத்வத்தை யுடையவள்பக்கலிலே, ஜநகியென்றுபாராதே[உய அப்ராப்தமான ஸங்கத்தைப் பண்ணினானாய்த்து; அதுக்கடி-ஆஸுர ப்ரக்ருதியாகையாலே யாய்த்து. (வாளரக்கன்) தேவதை கொடுத்த வாளை விஶ்வஸித்திருந்தானாய்த்து பெருமாள்திருக்கைப் பார்க்க வறியாதே. (பொய்யிலாத) ஆஸுர ஸாவத்துக்குச் சேருமிடத்தில் பொய்யின்றிக்கேயிருக்கிற முடிகளென்னுதல்; அன்றிக்கே, திக்விஜயம் பண்ணி, வீராபிஷேகம் விஜயாபிஷேகம் என்று சிலஉண்டிறே பண்ணுவன; அவற்றுக் குறுப்பான அஜ்ஞாதங்களில் பொய்யின்றிக்கே யிருக்கை யென்னுதல். (செய்த வெம்போர்தன்னில்) ப்ரஹ்மாதிகளைப்போலே இருந்தவிடத்திலே யிருந்து தபோபலத்தாலே ஸங்கல்பித்தல், அந்த ராவணனைப்போலே களவுபூசல் செய்தல்[உ௫ செய்கையன்றிக்கே, நேரே பொருத போரிலே. (ஓர் செஞ்சரத்தால்) "தீப்தபாவக ஸங்காஶை:" என்கிறபடியே - நெருப்பெரிந்து கொடு செல்லுகிறபடியாதல், திண்ணிய மார்விலே பட்ட அம்பில் ரக்த ஸ்பர்ஶத்தாலே வந்த சிவப்பைச் சொல்லுதல். வரபலத்தாலே பூண்கட்டின தலைகள் பனங்காய்போலே உருளும்படியாக எய்த. (என்[உ௫ னை) எனக்கு ஜநகனானவன். எனக்கு ஸ்வாமியானவன். (எவ்வுள் கிடந்தானே) எழுப்பிக் காரியங்கொள்வார் தாழ்வே யுள்ளது, அவன் வந்து சாய்ந்தான். ... ... ... உ.

---

வென்ன (அபிஷிக்தக்ஷத்ரியேத்யாதி.) ஆக, இப்படி கஷ்டயாக்ரமத்திலேயாகிலும் சக்ரவர்த்தித்திருமகனிடத்தில் அஸ்ரீதபாரதந்த்ர்யத்தை ஸாதிக்கும் ஸுட்டரைப்போலே இவரும் வீரவாஸியறியு மவராகையாலே ராவணவதத்தை மாறி மாறியருளிச்செய்வ ரென்றதாய்த்து. தேவதையென்றது - ருத்ரனை. "பொய்யிலாத" என்றதுக்கு "தானவன்" என்றபதத்திலே நோக்காகவொரு தாத்பர்யமருளிச்செய்து, "வாளரக்கன்" என்றதிலேநோக்காக தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (அன்றிக்கேயித்யாதி.) "செய்த - போர்" என்றுவிஶேஷிக்கைக்கு செ[௩௫ய்யாதபோருண்டோ, போரானபோதே வெவ்விதாயிராதோ, விஶேஷிக்கவேணுமோவென்ன வருளிச்செய்கிறார்(ப்ரஹ்மாதிகளையித்யாதி.) தபோபலத்தாலே-ஆலோசநஸாமர்த்யத்தாலே. ராவணவதார்த்திகளாயிறே போரைஸங்கல்பித்தார்கள். களவுபூசலாகில் தன்மேல்அம்பு தையாதிறே, ந்யாயயுத்தமேயிறே வெம்போரென்று திருவுள்ளம். ... ... ... ... ... உ.

மூ.—முன்னோர் தூது வாநரத்தின்வாயில் மொழிந்தரக்கன்
மன்னூர்தன்னை வாளியினால் மாளமுனிந்தவனே!
பின்னோர்தூதாதிமன்னர்க்காகிப் பெருநிலத்தார்
இன்னார்தூதனெனநின்றானெவ்வுட் கிடந்தானே. ௩.

ப-ரை.—முன் - ராமாவதாரத்திலே, ஓர் - அத்விதீயமான, தூது-தூதவாக்யத்தை, வாநரத்தின் - திருவடியினுடைய, வாயில் - வாயாலே, மொழிந்து - சொல்லியனுப்பி, அரக்கன் - ராக்ஷஸனான ராவணன், மன்னு - பொருந்திவர்த்திக்கிற, ஊர்தன்னை - லங்கையிலுள்ளாரை, வாளியினால் - அம்பாலே, மாள - நசிக்கும்படியாக, முனிந்து-சீறியருளினவனாய், அவனே - அந்தசக்ரவர்த்தித்திருமகன்[ய றானே, பின் - க்ருஷ்ணாவதாரத்திலே, ஆதிமன்னர்க்கு - ப்ரதாந ராஜாக்களான பாண்டவர்களுக்கு, ஓர் தூதாகி - ஓர்தூதனாய், பெருநிலத்தார் - பெரியபூமியிலுள்ளார், இன்னார்தூதன் என - "இவன் பாண்டவதூதன்" என்று சொல்லும்படி, நின்றான் - அர்ஜுநனுடைய தேர் முன்னே நின்றவன், எவ்வுள்கிடந்தான்—. (௩)

---

மூன்றாம்பாட்டு. (முன்னோரித்யாதி) முன்பு திருவடி வாயிலே[யரு வார்த்தை சொல்லித் தூதுவிட்டு ராவணன் பொருந்திவர்த்திக்கிற ஊரிலுள்ளார் நசிக்கும்படி திருச்சரத்தை விட்டவனே.

---

மூன்றாம்பாட்டு.—(முன்னித்யாதி) "ஏசநின்ற" என்றது அநுவர்த்திக்கிறது. உதிதாநுதிதஹோமநிந்தைபோலே யிருப்பதொன்றிறே யிது. புக்கபுக்க துறைதோறும் ஸமவ்ருத்விஷயத்திலே கால்தாழ வல்லராய்த்து. (முன்) த்வாபரத்தினுடைய ஆதியிலே, பிராட்டியைப்பிரிந்து ஆற்றாமை மீதூர்ந்து கடலிலேபுக்கு முடியுமளவானவாறே, ஒரு குரங்கின் வாயிலே வார்த்தைசொல்லிவிட்டான். (அரக்கன் மன்னூர்தன்னை) அரக்கனுடைய, வராதிகளாலே பூண்கட்டின ஊரை. (வாளியினால்) ப்ரஹ்மாஸ்த்ராதிகளுக்குக் கேளாதவூரை, மனிசருக்கு ஏகாந்தமான அம்பாலே அழியும்படி சீறினானாய்த்து. (அவனே யித்யாதி) கடலில்நீரே நெய்யாகப் பற்றியெரியவல்ல அம்புடையனா யிருக்கச்செய்தே, ஓரியற்றி யில்லாதாரைப் போலே கழுத்திலே

---

மூன்றாம்பாட்டு.—(முன்னோரித்யாதி.) முதற்பாட்டோடு ஸங்கதிப்ரகாரம் (ஏசவித்யாதி.) இப்படியேசும் விஷயத்தை யிவராசைப்பட்டு ஆதரம்[கூய பண்ணுவானென்னென்ன (உதிதேத்யாதி.) உதிதாநுதித ஹோமவிதிப்ரகரணத்தில், "புரோதயாஜ்ஜுஹுவதி யோம்தி ஹோத்ரம் ப்ராதரந்ஜீதம்தே வதந்தி" இத்யாதி நிந்தை ப்ரசம்ஸா தாத்பர்யகமானாப்போலே, ரோஷிமாருடைய நவநீத சௌர்யத்திலேச்சுக்கும் ஸௌலப்யகுண ப்ரசம்ஸையிலே தாத்பர்யமென்று திருவுள்ளம். கீழ்ப்பாட்டில் ராமபக்ஷபாதம் போய் க்ருஷ்ணபக்ஷபாதமெங்[ஙு கேவந்ததென்ன வருளிச்செய்கிறார் (புக்கவித்யாதி.) த்வாபரத்தினுடைய ஆதியிலே யென்றது - த்வாபரத்துக்கு ஆதி த்ரேதாயுகமென்று கொள்ளவேணும். இத்தால் - வ்யவஹித பௌர்வாபர்யம் தோற்றிற்றாய்த்து. இங்ஙனன்றாகில் "முன்னோர்" என்றும் "பின்னோர்" என்றும் விசேஷிக்க வேண்டாவிறே. "ஓர்" என்றபதத்தாலே ஸூசிதமான தாத்பர்யம் (பிராட்டியையித்யாதி.) "ஓர்தூது -" அத்விதீயமான தூதவாக்யத்தை, வாநரத்தினுடைய வாயாலே, மொழிந்து-சொல்லியனுப்பியென்றபடி ஸ்வார்த்தம். "மன்னூர்-" ஸ்திரமானவூர் என்று ஹேது பூர்வகம்தாத்பர்யமருளிச் செய்கிறார் (அரக்கனுடையவித்யாதி.) இயற்றி - பரிகாரம்.

மூ.—பந்தணைந்த மெல்விரலாள் பாவைதன் காரணத்தால்,
வெந்திறலேறேழும் வென்றவேந்தன், விரிபுகழ்சேர்
நந்தன்மைந்தனாகவாகும் நம்பி நம்பெருமான்,
எந்தைதந்தை தம்பெருமா னெவ்வுட்கிடந்தானே. ௪.

ப-ரை.—பந்து—, அணைந்த-பொருந்திய, மெல்-ம்ருதுவான, விரலாள் - விரல்களையுடையளாய், பாவைதன் காரணத்தால் - நிருபாதிக ஸ்த்ரீத்வத்தை யுடையளான நப்பின்னைப்பிராட்டியைப் பெறுகைக்காக, வெம்-க்ரூரமாய், திறல் - மிடுக்கையுடைய, ஏறு ஏழும் - ரிஷபங்கள் ஏழையும், வென்ற - நிரஸித்து, அத்தாலே, வேந்தன் - * குலவாயர் கொழுந்தாய்; விரி-ப்ரஸித்தமான, புகழ்சேர் - புகழை[யு]டைய, நந்தன்மைந்தனாக - ஸ்ரீ நந்தகோபர் திருமகனாக, ஆகும் - தன்னை அமைத்துக்கொண்டவனாய், நம்பி-ஸமஸ்தகல்யாணகுணபரிபூர்ணனான, நம்பெருமான் - நம் ஸ்வாமியாய், எந்தை தந்தைதம் பெருமான் - நம் குலநாதனானவன், எவ்வுள் கிடந்தானே—. ... ... ... ... ... (௪)

(பின்னோர் தூதித்யாதி) பின்பு த்வாபராந்தத்திலே, ராஜ்யத்துக்கு [யு]ருப்ரயாநரானபாண்டவர்களுக்காகி. (பெருநிலத்தாரித்யாதி) மஹாப்ருதிவியிலுள்ளார் "பாண்டவதூதன்" என்று தன் பேரிட்டழைக்கும்படி நின்றவன், திருவெவ்வுளிலே பள்ளிகொண்டான். ... ௫.

யோலைகட்டித் தூதுபோனானாய்த்து. (ஆதிமன்னர்க்காகி) துர்யோயநாதிகள் ராஜ்யம்பண்ணாநிற்கச்செய்தேயும், பாண்டவர்களை (ஆதி[உம]மன்னர்) என்கிறாராய்த்து, "ராஜ்யப்ராப்தி யிவர்களது, அவர்கள் (க) கிடந்தானைகண்டேறினவித்தனை" என்று; பள்ளிகளும் கள்ளரும் க்ஷேத்ரமாளாநிற்க ஸ்ராஹ்மணர் ப்ரமாணங்களைக் காட்டிவைக்குமாப்போலே. அவர்கள் (ஆதிமன்னர்) என்கிறாராய்த்திவர் ஈஶ்வராபிப்ராயத்தாலே. சிறியார் பெரியாரென்று வாசியின்றிக்கே எல்லாருமொக்க. (இன்னார்தூதனென நின்றான்) பாண்டவர்கள் தூதனென்றவத்தாலே யரித்து நின்றானாய்த்து. ஒருபிறப்பாதல் வ்ருத்தமாதல் லிட்டுச்சொல்ல வொண்ணாதாரைப்போலே தனக்கென்ன இட்டுச்சொல்லலாவதொன்றின்றிக்கே, பாண்டவர்களுக்கு தூதனென்றவத்தாலே யரித்து நின்றானாய்த்து. (ஒருஜந்ம வ்ருத்தாதிகளாலேநிரூபியாமல் இதுவே நிரூபகமாய்த்து.) ‡ "இன்னான் சோற்றாலே யரித்தான், சுவர் மண்ணாலே நின்றது" என்னுமாப்போலே, ஆஶ்ரிதபாரதந்த்ர்யமிட்டுச்சொல்லுவாரைப் பெறில் உண்ணாதே தடிக்கு மாய்த்து. (எவ்வுட்கிடந்தானே) இவ்விடம் நல்ல நீர்வாய்ப்பா யிருந்தது-பூமியிலேயேவிக் கார்யங் கொள்வாரைப் [௫ரு]பெற்றது, இனி இவ்விடம் விட்டுப் போவோமல்லோம் என்று சாய்ந்தானாய்த்து. ... ... ... ... ௫.

"ஆதி" - ப்ரயாநரான, மன்னரென்று ஸப்தார்யம் விவக்ஷித்து, தாத்பர்யம் (துர்யோயநாதிகளித்யாதி.) ஸத்ருஷ்டாந்தம் விவரணம் (பள்ளிகளுமித்யாதி.) "இவ்விடம்" இத்யாதிக்குவிவரணம் (பூமியிலேயித்யாதி.) ... ... ௫.

(க) கிடந்தானை என்பது, கிடந்தானைஎன மருவிக்கிடக்கிறது: படுத்துக்கொண்டிருக்கிற யானையைத் தானே யேறுகை. ‡ துண்டவிதம் க்வாசித்கம்.

நாலாம்பாட்டு. (பந்தித்யாதி) பந்துபொருந்தி யிருப்பதாய், மெல்லிய விரலையுடையளுமாய், நிருபாதிக ஸ்த்ரீத்வத்தை யுடைய நப்பின்னை பொருட்டு. (வெந்திற லித்யாதி) கொடிதாய் மிடுக்கையுடைய ருஷபங்களேழையும் வென்ற ராஜன். (விரிபுகழித்யாதி) ப்ரஸிய்யமான புகழையுடைய ஸ்ரீநந்தகோபர்திருமகனாகத் தன்னை

---

நாலாம்பாட்டு.— (பந்தித்யாதி) திரியவும் க்ருஷ்ணாவதாரமே பின்னாட்டிற்று. க்ருஷ்ணனுக்கு ஆகர்ஷகமாம்படி கையிலே பந்தைப் பிடித்து, அதுதானும் பொருத மார்த்தவத்தை யுடைய விரலையுடையளாய், நிருபாதிக ஸ்த்ரீத்வத்தை யுடைய நப்பின்னைப் பிராட்டியை லபிக்கைக்காக. (வெந்திறலித்யாதி) கணக்காலே அம்பாலே பூசல் செய்யலாம் ஜந்மமன்றே, அஜ்ஜாதிக்கு அடைத்த வெற்றியைக் கொண்டானாய்த்து. ருஷபங்களையடர்த்து அஜ்ஜாதிக்கு ராஜாவானவன். (விரிபுகழ்சேர் நந்தன்) ஆரேனும் பிள்ளை பெறவேணும் என்று நோன்புநோற்க, "எடுத்த பேராளன்" என்று ஃபலத்திலே அந்வயித்துநிற்கப்பெற்ற புகழையுடையனாய்த்து. (ஆகும்) ஒருபிதாவின்றிக்கே தான்தோன்றியான எளிமைதீர ஸ்ரீநந்தகோபர்திருமகனானபின்பாய்த்து "ஸஜலமேகம்" என்னுமாப்போலே உளனாய்த்து. (மைந்தனாகவாகும்) [உந்தமடிகள் முனிவர்] யசோதைப்பிராட்டி அவனை அச்சமுறுத்துகைக்காகச் சொல்லும் வார்த்தையாய்த்து; தான் தாயான எளிமையாலே பொடியமாட்டாளே; அதுக்காக, உங்கள் தமப்பனார் பொடிவர்கிடீர். [உன்னை] செய்ததெல்லாம் பொறுக்கும்படி யன்றிறே தீம்பிலே கைவளர்ந்து நிற்கிறநிலை. [நானித்யாதி] கையிற்கோலைக்காட்டி, "இதிருக்கிறபடி கண்டாயே, இது உன்பேர்" என்னும், இத்தாலே உன்னை நோம்படி

---

நாலாம்பாட்டு.— (பந்தித்யாதி.) "எத்திறம்!" என்று ஆழங்கால் படுத்தும் விஷயமாகையாலே க்ருஷ்ணனிடத்தில் இளமணல் பாய்ந்ததுஸவிக்கிறாரென்கிறார் (திரியவுமித்யாதி.) க்ருஷ்ணன் வந்தணையும்படி பந்தணைந்தாளென்று ப்ரக்ருதோபயோகம் காட்டாநின்றுகொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (க்ருஷ்ணனுக்கித்யாதி.) (கணக்காலே) என்றவாந்தரம், கொள்ளப்போகாதே என்று ஶேஷம். கணக்கு - மைத்துனமைமுறை. இத்தால் - நப்பின்னையைக் கைக்கொள்ளப் போகாது ஏறுகளை கந்யாசுல்கமாக வைக்கையாலே, கேவலக்ஷத்ரிய ஜந்மமாகில் பூசலிலேவென்று கைக்கொள்ளலாம், இரண்டுவழியும் கூடாதே, எருதுகளைத் தழுவிக்கொன்றாலாய்த்து அவளைத்தழுவிக்கொள்ளுவதென்று இவ்வாக்யத்துக்குத் தாத்பர்யம்.

ஆரேனுமென்றது - வஸுதேவதேவகிகளை. எடுத்துவளர்த்த * அசோதைதன் சிங்கத்தை நந்தன் மைந்தனாகச் சொல்லுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (உந்தமடிகளித்யாதி.) எடுத்தபாசுரத்தை வ்யாக்யாநம் பண்ணுகிறார் (யசோதையித்யாதி.) "உன்னை" என்ற பதப்ரயோகத்துக்குத் தாத்பர்யம் (செய்ததெல்லாமித்யாதி.) இது உன்பேரென்று -கோலினபேரைச்சொல்லும். அதாவது- க்ருஷ்ணனெங்கே? க்ருஷ்ணனெங்கே! என்று உன்னைத் தேடித்திரியுமென்கை. இது, "என்கையில்" என்றவிசேஷணஸ்வாரஸ்யம்.

மூ.—பாலனாகிஞாலமேழுமுண்டு பண்டாலிலைமேல்
சாலநாளும்பள்ளிகொள்ளும்தாமரைக்கண்ணன்,எண்ணில்
நீலமார் வண்டுண்டுவாழும் நெய்தலந்தண்கழனி
ஏலநாறும் பைம்புறவி லெவ்வுட் கிடந்தானே. ரு.

ப-ரை.—பாலனாகி-சிறுபிள்ளையாய்,ஞாலமேழும்-ஏழுலோகங்களையும்,உண்டு-திருவயிற்றிலே வைத்து, பண்டு - ப்ரளயகாலத்திலே, ஆலிலைமேல் - ஓராலந்தளிரிலே, சாலநாளும் - அநேககாலம், பள்ளிகொள்ளும்-கண்வளர்ந்தருளின, தாமரைக் கண்ணன் - புண்டரீகாக்ஷனான ஸர்வேச்வரன் ; எண்இல் - எண்ணிமுடியாத, வண்டு - வண்டுகளானவை, நீலம் - கருங்குவளையிலும், நெய்தல் - ஆம்[ய பலிலும், ஆர் - படிந்து, அவற்றிலுண்டான தேனை, உண்டு - பானம்பண்ணி, வாழும் - வாழுகிற, அம் - அழகியதாய், தண் - குளிர்ந்த, கழனி - கழனியையும், ஏலம் - பரிமளம், நாறும் - கமழாநின்ற, பை - பரந்த, புறவில் - புறச்சோலையையுமுடைய, எவ்வுள் கிடந்தான்—. ... ... ... (ரு)

---

அமைத்த பரிபூர்ணனானநம்ஸ்வாமி.(எந்தையித்யாதி)என்னாயன், என் குடிநாயன் என்குலநாயன் திருவெவ்வுளிலே பள்ளிகொண்டான்.ச.

அஞ்சாம்பாட்டு. (பாலனித்யாதி) ஒரு சிறுபிள்ளை ஸப்தலோகங்களையும் வயிற்றில்வைத்து முன்பு, பின்னை ஓராலந்தளிரிலே அநேககாலம் கண்வளர்ந்தருளின புண்டரீகாக்ஷன்.

---

அடிக்கலாமிறே ; அதுக்கு எனக்குக் கையெழுகிறதில்லை. (நம்பி)[உ0 ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய் ஸ்ரீவைகுண்டத்தி லிருந்தவிருப்பிலும் இங்கேவந்தவதரித்துத் தான் தாழநின்றபின்பாய்த்து பூர்ணனாய்த்து. (நம்பெருமான்) நமக்கு நாயன். நம் குலநாயனானவன். (எவ்வுட்கிடந்தானே) ஸர்வவிஷய ஸந்நிதிவானவனைக் காணலாவது பரமபதத்திலேஎன்று அவ்விடத்தில் போகப் பொதிசோறுகட்ட[உரு வேண்டாதே,ஸாந்நித்யம் பண்ணலாம்படி திருவெவ்வுளிலேவந்து சாய்ந்தானாய்த்து. ... ... ... ... ச.

அஞ்சாம்பாட்டு.—( பாலனாகி ) அத்யனும் செம்பால் பாய்கிற பருவத்தை யுடைய பாலனாய், அப்பருவத்திலே ஸகலலோகங்களையு மெடுத்து வயிற்றிலே வைத்து.(பண்டு)தனக்கொரு பரி[ரூய வரில்லாத ப்ரளய காலத்திலே, ஒருபவனான ஆலந்தளிரிலே. (சால) பிள்ளை அகாலத்திலே யுறங்காநின்றான் ! என்செய்தான் ! என்று

---

"எந்தைதந்தை தம்பெருமான்" என்றதுக்கர்த்தம் (நம்குலேத்யாதி.) பொதிசோறு - பாக்குப்பாளையிலே பொதிந்தசோறு. பாதேயமென்றபடி. ... ச.

அஞ்சாம்பாட்டு.—(பாலனாகியித்யாதி)ஈந்தன்மைந்தனைப்போலேபெற்றா[ரூரு ரும் வளர்த்தாருமின்றிக்கே முற்றாக்குழவியானவனை அடியொத்துகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

செம்பால் - தொட்டால் ரக்தம்பொசிகை.

மூ.—சோத்தநம்பியென்று தொண்டர் மிண்டித்தொடர்ந்தழைக்கும்
ஆத்தநம்பி செங்கணம்பி யாகிலும், தேவர்க்கெல்லாம்
மூத்தநம்பி முக்கணம்பியென்று முனிவர்தொழு
தேத்தும் நம்பி யெம்பெருமா னெவ்வுட்கிடந்தானே. சு.

ப.ரை.— தொண்டர் - அநந்யப்ரயோஜநரான ஸ்ரீவைஷ்ணவர்கள், மிண்டி-நெருங்கி, நம்பி - ஸமஸ்த கல்யாணகுணபரிபூர்ணனே!, சோத்தம்என்று - உன்னை ஸேவிக்கிறேன் என்று கைகூப்பிக் கொண்டு, தொடர்ந்து - இடைவிடாமல், அழைக்கும் - ஸ்தோத்ரம் பண்ணுகிற, ஆத்தன்நம்பி - பரமஆப்தனானவன், செங்கண்நம்பி - சிவந்த கண்ணழகால் பூர்ணனாயிருக்கின்றான்; ஆகிலும்-இப்படியிரு[ய ந்தானேயாகிலும், தேவர்க்கெல்லாம் - தேவர்களுக்கெல்லாம், மூத்தநம்பி - மூஸ்னேபிறந்த ப்ரஹ்மாவுக்கும், முக்கண்நம்பி - மூன்றுகண்களையுடைய ருத்ரனுக்கும் அந்தர்யாமியாய் நின்று ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை நடத்துகிறவனே!, என்று—, முனிவர் - ஸநகாதி முனிவர்கள், தொழுது - ஆஸ்ரயித்து, ஏத்தும் - ஸ்தோத்ரம்பண்ணும்படி, நம்பி - பூர்ணனை, எம்பெருமான் - என்ஸ்வாமியானவன், எவ்வுள்கிடந்தானே - திருவெவ்வுளிலே கண்வளர்ந்தருளினான் என்று ஸ்துதிக்கிறார். ... ... ... ... ... ... ... (சு)

(என்னையிலித்யாதி) அநந்யபாதகமான வண்டுகள் கருங்குவளையிலும் நெய்தற்பூவிலும்புக்கு மதுபானம்பண்ணி வாழுகிற அழகிய கழனியையும் நறுநாற்றம் கமழாநின்ற புறச்சோலையையுமுடைய திரு[உய வெவ்வுளிலே கிடந்தான். புறச்சோலை – பாயஸும். ... ரு.

எழுபடுகைக்கு ஒரு யபேராஹரிகளு மில்லையே. (என்னில்) அவைடிதங்களை யடிப்பிக்கும்படி. அது ஆராயப் புக்காலிருக்கும்படி. (நீல மித்யாதி) நெய்தல்பூவிலே படிந்த வண்டுகளானவை மதுபானம் பண்ணி வாழாநின்றுள்ள, நெய்தல்நிலமென்னவுமாம்; அன்றிக்[உரு கே, நெய்தலென்று – ஆம்பலாய், நிலப்பூவிலே படிந்த வண்டுகள் ஆம்பலிலே மதுபானம் பண்ணாநின்றுள்ள வென்னவுமாம்; அன்றிக்கே, நீலநிறத்தை யுடைய வண்டுகள் நெய்தற்பூவிலே மதுபானம் பண்ணுகிற அழகிய குளிர்ந்த கழனியை யுடைத்தா யிருக்கும் என்னவுமாம்.(ஏலமித்யாதி)பரிமள ப்ரவாஹமான பர்யஙத்தை யுடைத்தான தேசத்திலே அரியது செய்யவல்லவனாய்த்துக் கண்வளர்ந்தருளுகிறான்; எழுப்பிக்காரியங்கொள்வார் குறையே. ... ரு.

“எண்ணில்-” எண்ணமில்லாதவன். அதாவது - எண்ணமுடியாதவென்று ஸம்ஹார்யமாய், ஸலிதார்யம்(அவடிதேத்யாதி.) விவரணம் (அதித்யாதி.) (இருக்கும்படி) என்றவநுஸாரம், எண்ணமுடியாது என்றுமேஷம். கொண்டது பிள்ளைத்தனம்; [கரு உண்டது உலகேழும், உறங்குவது ஆலிலைமேல், எங்ஙனே யெண்ணும்படி என்று இவ்வாக்யத்துக்குத்தாத்பர்யம். நீலப்பூ என்று - கருநெய்தல். ஆம்பல்-வெளுத்தது.

ஆறும்பாட்டு. (சோத்தமித்யாதி) அநந்யப்ரயோஜநர் நெருங்கப்புகுந்துசோத்தமிட்டுத்துடர்ந்து ஸ்தோத்ரம்பண்ணும் பரமாப்தன். (செங்கணநம்பி) சிவந்த கண்ணழகால் பூர்ணன். (ஆகிலும்) இப்படியிருந்தானேயாகிலும். (தேவரித்யாதி) தேவர்களுக்கெல்லாம் முன்னே பிறந்த ப்ரஹ்மாவுக்கும், த்ரிணேத்ரனான ருத்ரனுக்கும் அந்தர்யாமியாய் நின்று ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களை நடத்துகிறவனை யென்று ஸநகாதிகள் ஸ்தோத்ரம் பண்ணாநின்ற என்நாயன், எவ்வுள் கிடந்தானே. ... ... ... ... ... ௬

ஆறும்பாட்டு.—(சோத்தம்) அவன் நெஞ்சிரங்கும்படி ஸாரணாகதிவரணம் பண்ணுமாப்போலே தாழ்ந்தார் சொல்லுவதொரு பாசுரம். ஸமஸ்த கல்யாணகுணாத்மகனே ! சோத்தம் என்றுகொண்டு வைஷ்ணவர்கள்ஒருவர்க்கொருவர் முற்பட்டு மேல்விழுந்துமாறுசெய்யவளைக்கும்ஆப்தன்.(நம்பி)பரமாப்தியால்குறைவறநிற்குமவன். இப்படியிருக்கிறவன்று ஹென்னில் (செங்கணம்பி) "யஸ்யேதோயஸ்யாபுருஷ: புண்டரீகாக்ஷஸம்ஜ்ஞித:" என்று - புண்டரிகாக்ஷனாக ப்ரமாண ப்ரஸித்தனானவன். (ஆகிலும்) இப்படியிருந்தானே யாகிலும். (தேவர்க்கித்யாதி) தேவதைகளுக்கெல்லாம் முன்னே பிறந்தானாயிருக்கிறசதுர்முகனுக்கும், லலாடநேத்ரனான ருத்ரனுக்கும் அந்தர்யாமியாய், ஸ்ருஷ்ட்யாதிகள் நடத்துகிறவனென்றுகொண்டு ஸநகாதிக ளேத்தும்படியிருக்கிற பூர்ணனான என்நாயன். ஆக, இப்படி அஸாதாரணதிவ்ய விக்ரஹ யுக்தனாய் இதரவிஸஜாதீயனாயிருக்கச் செய்தேயும் ப்ரஹ்மாதிகளுக்கு அந்தராத்மாவாய்நின்று ஸ்ருஷ்ட்யாதிகளை நடத்துகிறானென்று ஸநகாதிக ளேத்தும்படி யிருக்கிறவன் இங்கே சாய்ந்தானென்றபடி. ... ... ... ... ௭.

ஆறும்பாட்டு.—(சோத்தநம்பி யித்யாதி.) பரிவில்லாத ஸாலனென்று நீர் பரியவேண்டி யிருந்ததோ, என்னுடைய ஸர்வாத்மகத்வத்தை மறந்தீரோவென்ன; அவற்றை மேல் மூன்று பாட்டாலே அநுஸந்தித்துக் கொண்டு ஸ்துதிக்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

"மிண்டி" என்றதினர்த்தம் (ஒருவர்க்கொருவர் முற்பட்டென்றது.) "ஸ்ருதிஸ்ம்ருதி யதாமதாரவ்யாஸ்ர வேதவேதாந்த நிஸ்சய:" எடுத்த ப்ரமாணத்துக்குஉத்தரார்த்தம். தொகுத்தஹாவம் (ஆகவித்யாதி.) ... ... ... ௮.

ஏழாம்பாட்டு.—(திங்களித்யாதி.)

மூ.—திங்களப்புவானெரிகாலாகித் திசைமுகனார்
தங்களப்பன் சாமியப்பன் பாகத்திருந்து வண்டுண்
தொங்கலப்பு நீண்முடியான் சூழ்கழல்சூடநின்ற
எங்களப்பனெம்பெருமா னெவ்வுட்கிடந்தானே. எ

ப-ரை.—கார்ய வர்க்கத்துக்கு உபலக்ஷணமாக, திங்கள்-சந்த்ரனையும், அப்பு-ஜலம், வான் - ஆகாசம், எரி - அக்நி, கால் - காற்று ஆகிற நாலு பூதங்களையும், ஆகி - சரீரமாகக்கொண்டு தான் சரீரியாய்; திசைமுகனார் தங்கள் - நான்கு முகங்களையுடைய ப்ரஹ்மாவுக்கு, அப்பன் - ஜநகனாய்; சாமிஅப்பன் - ஸாமவேத ஸ்வரூபனாய்; வண்டு-வண்டுகள், உண் - மதுபாநம் பண்ணாநின்றுள்ள, தொங்[டு கல் - கொன்றைமாலையையும், அப்பு - கங்காஜலத்தையும், நீள் - நீண்ட, முடி - ஜடையிலேயுடையனாய், பாகத்து - திருமேனியிலொரு பார்ச்வத்திலே, இருந்தான் - இருக்குமவனான ருத்ரனானவன், சூழ் - பூமியெங்கும் பரம்பின, கழல் - திருவடிகளை, சூட - தன் தலையிலே சூடும்படி, நின்ற - நின்றவனாய்; எங்கள் அப்பன்-எங்கள் ஜநகனாய்; எம்பெருமான் எங்கள் ஸ்வாமியுமானவன், எவ்[டு வுள் கிடந்தானே—. ... ... ... ... ... (எ

ஏழாம்பாட்டு. (திங்களித்யாதி) கார்யவர்க்கத்துக்கு உபலக்ஷணமாக சந்த்ரனையும் ஸூக்ஷ்மபூதங்களையும் சரீரமாகக்கொண்டு, தான் சரீரியாய். (திசைமுகனித்யாதி) சதுர்முகனுக்கு ஜநகனானவன். (சாமியப்பன்) ஸாமவேதப்ரதிபாத்யன். "வேதாநாம் ஸாமவே[உடு தோஸ்மி" என்கிற ஸாமவேதஸ்வரூபன். முருகனென்றுமாம். (பாகத்தித்யாதி) பார்ச்வத்திலே வண்டுகள் படிந்து மதுபாநம் பண்ணும் கொன்றைமாலையையும், திருவடி விளக்கின கங்காஜலத்தையும் ஜடையிலேயுடையவன். (சூழ்கழலித்யாதி) * பூதங்களவாகப்பரம்பின திருவடிகளைச் சூடும்படி நின்ற எங்கள் அப்பனானவன் எவ்வுள்கிடந்[உடு தானே. ... ... ... ... ... எ.

ஏழாம்பாட்டு.— (திங்களித்யாதி) கார்யவர்க்கத்துக்கு உபலக்ஷணமாக சந்த்ரனையும், காரணமான ஸூக்ஷ்மபூதங்களுக்கும் உபலக்ஷணமாக நாலையும் சொல்லி, இவற்றுக்கு அந்தராத்மாவாய் நிற்கிறவனென்றபடி. சதுர்முகனுக்கும் ஜநகனானவன். (சாமியப்பன்)[நடு ஸாமவேத ப்ரதிபாத்யனான காரணபூதன். (பாகத்தித்யாதி) வண்டுகள் மதுபாநம் பண்ணாநின்றுள்ள கொன்றைமாலையையும் கங்காஜலத்தையும் ஜடையிலே யுடையனாய், திருமேனியில் ஏகதேசத்திலே யிருக்கிற ருத்ரன், விஸ்த்ருதமான திருவடிகளைத் தலையாலே சுமக்கும்படி நிற்கிறவன். (எங்களித்யாதி) எங்களுக்கு ஜநகனுமாய்,[நடு ஸ்வாமியுமானவன். ... ... ... ... எ.

ஸாமத்தை யுடையவன் - ஸாமியென்றாய், ஹலிதார்யம் (ஸாமவேதேத்யாதி.) ,'தொங்கல்" என்றதினர்யம் (கொன்றைமாலையயு மென்றது.) ... எ.

மூ.—முனிவன் மூர்த்திமூவராகி வேதம்விரித்துரைத்த
புனிதன்பூவைவண்ணனண்ணல்புண்ணியன்விண்ணவர்கோன்
தனியன் சேயன் தானொருவ னாகிலும் தன்னடியார்க்
கினியனெந்தையெம்பெருமா னெவ்வுட்கிடந்தானே. அ.

ப-ரை.— (இ)து தம் பரமாய்க்கிடந்தவன்று, முனிவன் - ப்ரஜைகள் முதலான வற்றை ஸ்ருஷ்டிக்கஸங்கல்பித்தவனாய்; மூர்த்தி மூவர் - ஸ்ருஷ்டி ஸ்திதஸம்ஹாரங்களுக்குக் கடவரான ப்ரஹ்மா விஷ்ணு ருத்ரன் இவர்களுக்கு, ஆகி - அந்தராத்மாவாயிருக்குமவனாய்; வேதம் - வேதார்த்தத்தை, விரித்து - எல்லாருமறியும்படி, உரைத்த - ஸ்ரீகீதையாலே யருளிச்செய்தவனாய்; புனிதன்-பிறருடைய [ஸ] ஸம்ர்த்தியேப்ரயோஜநமாக ஹிதஞ்சொன்ன சுத்தியையுடையவனாய்; பூவை - காயாம்பூப்போன்ற, வண்ணன் - திருநிறத்தையுடையவனாய்; அண்ணல் - ஸ்வாமியாய்; புண்ணியன் - பரமதார்மிகனாய், விண்ணவர் - நித்யஸூரிகளுக்கு, கோன் - தலைவனாய்; தனியன் - ஒப்பற்றவனாய்; சேயன் - யோகிகளாலு மறியவொண்ணாதவனாய்; தான் ஒருவனாகிலும்-இப்படி தான் அத்விதீயனாயிருந்த [ம]னேயாகிலும், தன் அடியார்க்கு - தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு, இனியன் - நல்லவனாய்; எந்தை - எனக்கு ஜநகனாய்; எம்பெருமான் - என்ஸ்வாமியுமானவன், எவ்வுள்கிடந்தானே—. ... ... ... ... (அ)

எட்டாம்பாட்டு. (முனிவனித்யாதி) "ஸப்ரஹ்மா" இத்யாதிப்படி-யேஸர்வமும்ஸ்வாதீனமாய்க்கிடக்கிறவன்று, "வைஹுஸ்யாம்" [உ(ல)] என்று மநநம்பண்ணினவன். (மூவரித்யாதி) ப்ரஹ்ம ருத்ராதிகளை ஸ்ருஷ்டித்து தத்ஜ்ஞாநியாமியாய், வேதார்த்தத்தை யெல்லாருமறியும்படி ஸ்ரீகீதாபநிஷதாசார்யனாய் வெளியிட்ட வேதப்ரத்யயிகன். (பூவையித்யாதி) காயாம்பூப்போன்ற வடிவழகையுடைய ஸர்வேஸ்வரர். "ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்" என்கிறபடியே - பரஸம்ருத்தியே ப்ரயோஜநமாக ஹிதஞ்சொன்ன ஸுத்தி. பரமதார்மிகன். (விண்ணவா

எட்டாம்பாட்டு.—(முனிவன்) இதனுடைய காரணதோவரங்களையிருந்து ஹோம மோக்ஷாதுக்யமாய் கார்யாகாரமழிந்து கிடந்தவன்று, "வைஹுஸ்யாம்" என்று மநநம்பண்ணினவன், பின்பு ப்ரஹ்ம ருத்ராதிகளுக்கு அந்தராத்மாவாயும் ஸ்வேநரூபேணவும் நின்று ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுகிறவன், வேதார்த்தத்தை வ்யக்தமாம்படி வெளியிட்டுச் சொன்னவன். அதாவது – வேதோபப்ரும்ஹணமாக ஸ்ரீகீதையை யருளிச்செய்தபடி. (புனிதன்) "ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்" என்கிறபடியே ஸ்வப்ரயோஜந நிரபேக்ஷமாக பரஹிதமே சொல்லுகையால் வந்தஸுத்தியைச் சொல்லுகிறது. (பூவைவண்ணன்) உபதேசித்த ஹிதம் கிடக்க அஹிதத்தைச் சொல்லிலும் விடவொண்ணாத வடிவையுடையவன். (அண்ணல்) ஸ்வாமி. (புண்ணியன்)

எட்டாம்பாட்டு.—(முனிவனித்யாதி.) இது - இந்தசேதநவஸ்து. "மூவராக" என்றது - வ்யவஹுமன்று, மூவரானவரென்றபடி. நெய்யுண்ணியென்றுப்போலே யென்றருளிச்செய்கிறார் (பின்பித்யாதி.)

மூ.—பந்திருக்கும் மெல் விரலாள் பாவைபனிமலராள்
வந்திருக்கும்மார்வன் நீலமேனிமணிவண்ணன்
அந்தரத்தில்வாழும்வானோர் நாயகனுயமைந்த
இந்திரற்குந்தம்பெருமானெவ்வுட்கிடந்தானே. கூ.

ப-ரை.—பந்து - பந்தானது, இருக்கும்-தங்கிய, மெல்-மிருதுவான, விரலாள் - விரல்களையுடையளாய், பனி - குளிர்ந்த, மலராள்-தாமரைப்பூவைப் பிறந்தகமாக வுடையளாய், பாவை - நாண் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் ஸ்த்ரீத்வகுணங்கள் நிறைந்த பெரியபிராட்டியார், வந்து - அப்பூவில்தரிப்பு அரிதாய் அதினின்றும் வந்து, இருக்கும்-க்ஷணகாலமும் பிரியமாட்டாதே யிருக்கிற, மார்வன் - [யு திருமார்வையுடையனும்; நீலம் - கருங்குவளைப்பூப்போன்ற, மேனி - வடிவழகையுடையனும்; மணி - மணிபோலே, வண்ணன் - ஸௌலப்ய ஸ்வபாவத்தை யுடையனும்; அந்தரத்தில் - ஸ்வர்க்கத்திலே, வாழும்-வாழுகிற, வானோர் - தேவர்களுக்கு, நாயகனும் - நிர்வாஹகனும், அமைந்த - சமைந்த, இந்திரற்கும்-இந்த்ரனுக்கும் —, பெருமான் - ஸ்வாமியானவன். எவ்வுள்கிடந்தானே —. (கூ)

கோன்) * அமரருமமரர்கோனுமடிபணிந்து. (தனியன்) அங்கிரியன். (சேயன்) "போமிடமாம்..." என்கிறபடியே - அப்ராப்யன்; இப்படி யிருந்தானேயாகிலும், தன்னுடையார்க்கு நல்லவன்; அநுக்கூல – எந்தையானவனிலே. எம்பெருமானவன் எவ்வுள்கிடந்தான், அ.

ஒன்பதாம்பாட்டு. (பந்திருக்குமெல்விரலாள்) * பந்தார்விரலியாய், பந்திருக்கும்மெல்லியவிரலையுடையளாய், குளிர்ந்த தாமரைப்பூவைப்

பரமபோர்மிகன். (விண்ணவர்கோன்) * அமரருமமரர்களதிபதி. (தனியன்) அவர்களில் வ்யாவ்ருத்தனானவன். (சேயன்) அவர்களில் நெடுவாசியை யுடையவன்; இப்படி தான் அப்ரதிபனாயிருந்தானேயாகிலும், தன்னையடைந்தவர்களுக்கு இனியவன்; என[உறு கு ஜநகனுமாய், ஸ்வாமியுமானவன். ... ... அ.

ஒன்பதாம்பாட்டு.— (பந்திருக்கும்) ஒருநாளும் பிரிவால் வரும் வ்யஸநமன்றிக்கே நித்யஸம்ஶ்லேஷித்தாலே கையும் பந்துமாய் அது தான் பொறுமை சிவந்து ஸுகுமாரமான விரலை யுடையவள், நிருபாதிக ஸ்த்ரீத்வத்தை யுடையவள், குளிர்ந்த தாமரைப்பூவைப்

"விண்ணையாள்கோன" என்று வ்யாக்யானம் (ஐயர்வித்யார்.) ... அ.

ஒன்பதாம்பாட்டு.—(பந்துத்பாதி.) இப்படி ஸர்வாத்மதயாவந்த ஸர்வாயிசத்வத்துக்கு நிருபகையான லக்ஷ்மீ பதித்வத்தை அநுஸந்திக்கிறுரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

லீலாபரதையும் ஸௌகுமார்யமும் கர்மக்ஜீதஸ்த்ரீத்வமன்றிக்கே யிருக் [கூறு கையும் பிறந்தகத்தில் சீர்மை யுடையவள் "வந்திருக்கும் மார்வுடையவன்" என்று சொல்லுகையால் ஸர்வாயிசத்வம் லக்ஷ்மீஸிதமென்று திருவுள்ளம்பற்றி வாக்யதாத்பர்யார்த்தங்களை யருளிச் செய்கிறார் (ஒருநாளுமித்யாதிகளாலே.)

மூ.—இண்டைகொண்டுதொண்டரேத்த வெவ்வுட்கிடந்தானை
வண்டுபாடும்பைம்புறவில் மங்கையர்கோன்கலியன்
கொண்டசீரால்தண்டமிழ்செய்மாலை யீரைந்தும்வல்லார்
அண்டமாள்வதாணையன்றேலாள்வரமருலகே. ய.

---

ப-ரை.— இண்டை - பூமாலைகளை, கொண்டு - திருவடிகளில் ஸமர்ப்பித்து, தொண்டர் - ஸ்ரீவைஷ்ணவர்கள், ஏத்த - ஸ்தோத்ரம்பண்ணி அடிமைசெய்யும்படி, எவ்வுள் - திருவெவ்வுளிலே, கிடந்தானை - கண்வளர்ந்தருளினவன் விஷயமாக; வண்டு - வண்டுகள், பாடும் - பாடுகிற, பை - பரந்த, புறவில் - பர்யந்தத்தையுடைய, மங்கையர்கோன்-திருமங்கையிலுள்ளார்க்குராஜாவான, கலியன்- [ம ஆழ்வார், கொண்ட - நெஞ்சிலேகொண்ட, சீர் - அவன் கல்யாணகுணங்களை, தண் - இனிமையான, தமிழால் - தமிழ்பாஷையாலே, செய் - அருளிச்செய்ததாய், மாலை - மாலாரூபமான, ஈரைந்தும்-இப்பத்துப்பாட்டையும், வல்லார்-கற்கவல்லவர்கள், அண்டம் - பரமபதத்தை, ஆள்வது - ஆளுமது, ஆணை - நிச்சிதம்; அன்றேல்-அது வேண்டாவாகில், அமருலகு-ஸ்வர்க்கலோகத்தை, ஆள்வர்-ஆளப [மரு பெறுவரென்கிறார். ... ... ... ... ... (ய)

---

பிறந்தகமாகவுடைய பெரியபிராட்டியார், அப்பூ நெரிஞ்சிக்காடோ பாகியாய் திருமார்விலே வந்திருக்கிற வைலக்ஷண்யத்தையுடையவன். (நீலமேனியித்யாதி) கருங்குவளைபோன்ற வடிவழகையுடையனாய், மணிபோலே முன்தானையிலே முடிந்தாளலாம்படி ஸௌலப்ய [உய வாதிகளையுடையவன். (அந்தரத்தித்யாதி) ஸ்வர்க்கத்திலே வாழுகிற முப்பத்துமுக்கோடிதேவர்களுக்குநிர்வாஹகனாகச்சமைந்த இந்த்ரனுக்கு நாயகனானவன், எவ்வுளிலே பள்ளிகொண்டான். ... கூ.

பத்தாம்பாட்டு. (இண்டையித்யாதி) பூமாலைகளைக்கொண்டு ஸ்ரீ

---

பிறந்தகமாகவுடையவள். (வந்திருக்கும்) அப்பூநெரிஞ்சிருள்ளாய் அடிக்கொதித்துவந்து, "அகலகில்லேன்" என்றிருக்கும்படி மார்வுபடைத்தவன்; நீலமான நிறத்தையுடைய மணிபோன்ற வடிவையுடையவன். (அந்தரத்தித்யாதி) இது ஸர்வேச்வரனுக்கு விசேஷணமாதல்; அன்றிக்கே, தேவர்களுக்கு நாயகனாய்ச் சமைந்த இந்த்ரனு[கூய க்கென்னவுமாம். அவனுங்கூடத் தன்னைப்பற்றித் தன் ஐச்வர்யத்தை நடத்தும்படி யிருக்கிறவன். ... ... ... கூ.

பத்தாம்பாட்டு.— (இண்டையித்யாதி) பூமாலைகளைப் பணிமாறி

---

அவனுங்கூடவென்றது - " ஸப்ரஹ்மாஸசிவஸ்ஸேந்த்ர: " என்று கூடவெடுக்க முட்டுப்பொறுத்தவனுங்கூட வென்றபடி. ... ... ... ... கூ.

பத்தாம்பாட்டு.—(இண்டைகொண்டித்யாதி.) பணிமாறி - ஸமர்ப்பித்து.

வைஷ்ணவர்கள்ஸ்தோத்ராதிகளைப்பண்ணி அடிமைசெய்யும்படியாகத் திருவெவ்வுளிலே கண்வளர்ந்தருளினவன். (வண்டுபாடும்பைம் புறவிலித்யாதி) வண்டுகள் மஹாபாநமத்தமாய்ப் பாடுகிற பர்யந்தத்தை யுடைய திருமங்கைக்கு நிர்வாஹகரான வலியையுடைய ஆழ்வார். (கொண்டவித்யாதி) அவன் கல்யாண குணங்களை உள்ளுடையாகக்கொண்டாய்த்து ஆழ்வார் கவிபாடிற்று. சீர்-அழகு. (தண்தமிழ் செய்மாலை) தமிழாலேதொடுத்த மாலை; இப்பத்தும்வல்லார், அண்டமுண்டு - பரமபதம், அத்தை ஆளப்பெறுவர். (அன்றேல்) அது வேண்டாவாகில், ஸ்வர்க்கத்தை ஆளுவர். ... ... ௰.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

---

ஸ்ரீவைஷ்ணவர்களுக்கிங்கே அடிமைசெய்து வாழலாம்படி திருவெவ்வுளிலே கிடந்தவனைக் கவிபாடிற்று. முக்தர் ஸாமகாநம் பண்ணுமாப்போலே மஹாபாநமத்தமாய வண்டுகள் பாடாநின்றுள்ள பரந்த பர்யந்தத்தை யுடைத்தான திருமங்கைக்கு ராஜாவான ஆழ்[௰ரு வார். (கொண்டசீரால்) சீரொன்று - கவிக்குஅலங்காரமாயிருப்பதொன்றுண்டு, அத்தைச்சொல்லிற்றாகவுமாம்; அன்றிக்கே, இங்கேவந்து சாய்ந்தபடியாலே ஹமவத்குணங்களை நெஞ்சிலே யூற்றிருந்து சொல்லியல்லது நிற்கவொண்ணாதபடி அவை ப்ரேரிக்க, பாடினமாலை யென்னவுமாம். இது கற்றார், அண்டத்தை யாளுகை நிஶ்சிதம். (அன்[உ௰ றேல்) அவனைபபற்றியுமித்தைப் பெறுமத்தனையோ! என்று விரக்தராணர்களாகில், அவர்களாளுவது பரமபதம். ... ௰.

அடிவரவு.—காசை தையல் முன் பந்து பாலன் சோத்தம் திங்கள் முனிவன் பந்து இண்டை வில்.

திருமங்கையாழ்வார்திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

---

"பைம்புறவில்" என்றதினர்த்தம் (பர்யந்தத்தை யுடைத்தானவென்றது.) நெஞ்சிலே கொண்ட சீரால் என்றர்த்தாநுஸாரம் (அன்றிக்கே யித்யாதி.) அண்டத்தை - ப்ரஹ்மாண்டத்தை. ஐஶ்வர்யத்தையென்றபடி. ... ... ... ௰.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

# இரண்டாம்பத்து-மூன்றாந்திருமொழி-விற்பெருவிழவும். ப்ரவேசம்.

ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணி ஆச்ரிதவிரோதிகளைப் போக்கி ரக்ஷித்த ஸர்வேச்வரன், "இன்னமாரேனு மாச்ரிதர்க்கு இடர்வரினும் நாம்ஸஹாயராக வேணுமது" என்றுவந்து திருவல்லிக்கேணியிலே நின்றருளினான், நானவனைக் காணப் பெற்றேனென்று ப்ரீதராகிறார். ... ... ... ... ... *

ஆச்ரிதவிரோதிநிரஸநசீலனாய், ஆச்ரிதஸம்ச்லேஷஸ்வபாவனாய், ஆச்ரிதஸுலபனாய், இதர விஜாதீயனாயிருக்கிற ஸர்வேச்வரன்; இக்குணங்கள்தான் தர்மிஅநுவர்த்திக்கிற வோபாதி எங்கும் அநுவர்த்திக்குமவையிறே; இப்படியிருக்கிறவன்; மநுஷ்யராயிருப்பார் புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டாச்ரயிக்கலாம்படி வந்து கிடக்குமாத்ரமன்றிக்கே, ஒருதிர்யக்கு இப்பூவிற்செவ்வி யழியாதபடி திருவடிகளிலே பணிமாறவேணும் என்று இடர்பட, அவ்விடரைத் தீர்க்கைக்காக அதிடர்பட்ட மடுவின் கரையிலே அரைகுலையத்தலைகுலைய வந்து விழுந்து அத்தையாற்றி, இன்னமும்படி யிடர்படுவாருண்டோ! என்றுசாய்ந்தான், நான்கண்டேனென்கிறார். ※

அ.—விற்பெருவிழவின் ப்ரவேசம்.—கீழ்த்திருமொழியில்-இவரை வசீகரித்த ராமக்ருஷ்ணாவதாரங்களும், திருவெவ்வுள் கிடந்ததுதானும், சிங்கவேழ்குன்றத்தில் பரிபூர்ணமாக வநுபவித்த அழகியசிங்கரும், திருவேங்கடத்தில் * திண்ணைமாதுயர் தீர்த்தபடியுமாக, இவையனைத்தையும் நீரும் பாலும் நெய்யும் கன்னலுமமுதுமொருகலத்திலேசேர்ந்தாற்போலே இவர்க்குக்கண்ணாலேயப் பருகலாம்படி திருவல்லிக்கேணியிலே ஐவகைப்பட்டிருக்கிற விருப்பை எவ்வுள்கிடந்தவன் ஸர்வஸ்வதானம்பண்ணக்கண்டநுபவிக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது. இந்தஸங்கதிதன்னை ஸூசிப்பிக்கிறார் (ஆச்ரிதேத்யாதி.) (ஸர்வேச்வரன்) என்றவநந்தரம், இக்குணங்களோடேகூடத் திருவல்லிக்கேணியிலிருப்புக்களைக்காட்டிக் கொடுத்தானென்றபூரிப்பது. இந்தக்குணங்களைக் கீழ்த்திருமொழிலநுபவித்தாரே, இங்குமநுபவிக்கவேணுமோவென்ன வருளிச்செய்கிறார (இக்குணங்கள் தானித்யாதி.) "இண்டைகொண்டு" என்கிறபாட்டையும், மேல் "மீனமர் பொய்கை" என்கிறபாட்டையும்கடாக்ஷித்து ஸங்கத்யந்தர மருளிச்செய்கிறார் (இப்படியித்யாதி.) அதாவது-ஐந்து திருப்பதியையும்ப்ராயேண அநுபவித்தாரென்று கீழ்ஸங்கதியாய், இப்போது திருவெவ்வுளில்கிடையழகையே யநுபவித்தாராகையாலே திருவல்லிக்கேணியிலே சாய்ந்தருளின * என்னையாளுடையப்பனை யநுபவிக்கையை ப்ரயாநப்ரமேயமாக்கி, அதுக்குஉத்தரோத்தரம் ஸௌலப்யம் தோற்றும்படி மற்றைத் திருப்பதிகளையுமநுபவித்துக்கொண்டு, * இண்டைகொண்டு தொண்டரேத்தினமையையும்காட்ட, * ஆனையின் துயரம் தீர்த்தபடியையநுபவிக்கிறாரென்றருளிச் செய்கிறாரென்கை. ... ... ... ... *

மூ.—விற்பெருவிழவும் கஞ்சனும் மல்லும் வேழமும் பாகனும்வீழச்
செற்றவன்றன்னைப் புரமெரிசெய்த சிவனுறுதுயர் களைதேவை
பற்றலர்வீயக்கோல்கையிற்கொண்டுபார்த்தன்றன்தேர் முன்நின்றானை
சிற்றவைபணியால்முடிதுறந்தானைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே.

ப.உரை.—க்ருஷ்ணனை எழுந்தருளப்பண்ணின நலிகைக்காக, வில்பெருவிழவும்-தநுர்யாகமஹோத்ஸவத்தைப் பெருக்கக்கோலின, கஞ்சனும் - கம்ஸனும், அவன் வரவிட்ட விரோதிகளான, மல்லும் - சாணூரமுஷ்டிகராகிற மல்லவர்களும், வேழமும் - குவலயாபீடமென்னும் யானையும், அத்தைநடத்துகையில் வல்லவனான, பாகனும்—, வீழ - விழும்படி, செற்றவன்றன்னை - ஸம்ஹரித்தவனாய்; புரம் எரிசெய்த - த்ரிபுரதஹநம்பண்ணின, சிவன் - ருத்ரன், உறு - அடைந்த, துயர் - குருபாதக பீடையை, களை - போக்கின, தேவை - ஸ்வாமியாய்; பற்றலர் - ஶத்ருக்கள், வீய - நசிக்கும்படி, கோல் - முட்கோலை, கையில் - கையிலே, கொண்டு - பிடித்துக்கொண்டு, பார்த்தன்தன் - அர்ஜுநனுடைய, தேர்முன் - தேர்முன்னே, நின்றானை - ஸாரதியாய் நின்றவனாய்; சிற்றவை-மாற்றுத்தாயான கைகேயியுடைய, பணியால் - சொல்லைக்கொண்டு, முடி - பட்டாபிஷேகம் பண்ணக் கொடுவந்த கிரீடத்தை, துறந்தானை - பரித்யஜித்தவனான ஸ்ரீபார்த்தஸாரதியை, திருவல்லிக்கேணி - திருவல்லிக்கேணியிலே, கண்டேன் - காணப்பெற்றேன் என்கிறார். ... ... ... ... ... (க)

முதற்பாட்டு.— (விற்பெருவிழவித்யாதி) கம்ஸனுடைய பெரிய வில்விழவுக்கு எழுந்தருளி, அந்தவில்லையும் குவலயாபீடத்தையும் அத்தைநடத்துகிற பாகனையும் விழும்படி அடர்த்துப் பொருதவன்றன்னை. (புரமெரிசெய்தவித்யாதி) த்ரிபுரதஹநம்பண்ணின ருத்ரனுக்கு

முதற்பாட்டு.— (வில்) விற்பெருவிழவாய்த்து - ஶத்ருநிரஸநம் பண்ண நினைக்கிறது கையாலே ; பெருக்கக்கோலினதாய்த்து ; அத்தைக்கோலின கம்ஸனும், அவனுக்கு பலமாய் மலைதுள்ளினாப் போலே பெரிய கிளர்த்தியோடே கூடின மல்லவர்களும், அவர்கள் கண்பார்க்கிலும் கண்பாராதே யிடையறவீசும்படி மதிப்பித்து வழியிலே நிறுத்தின ஆனையும், அத்தைத்தள்ளினாலும் அதுதன்னை உயிர்ப்புள்ளதுபோலே நடத்தவல்ல பாகனும். (வீழச்செற்றவன்றன்னை) ஏகோத்யோகத்திலே நிரஸித்தாப்போலே, வினைசெய்த சடக்கு. (புரமித்யாதி) த்ரிபுரதஹநாபதாநத்தாலே ஸஞ்ஜாதாபிமாநனான ருத்ரன்

முதற்பாட்டு.—(வில்லித்யாதி.) ஜந்மஶத்ருவை நிரஸித்திறே பார்த்தஸாரதியாகப்புகுகிறதென்று, அத்தையு மநுஸந்திக்கிறாரென்று அவதாரிகை கண்டுகொள்வது.

மேலே "பார்த்தன்றன் தேர்முன் நின்றானை" என்று ஸௌலப்யமநுஸந்திக்கப் புகுகிறாராகையாலே, அது மஹாகுணமாகைக்காக த்ரிபுராந்தக ஸம்ரக்ஷண மநுஸந்திக்கிறாரென்று திருவுள்ளம்பற்றி தாத்பர்ய மருளிச் செய்கிறார் (த்ரிபுரேத்யாதி.)

ப்ரஹ்ம, ஶாபத்தாலே வந்த தூஷணத்தைப் போக்கி அத்தாலே மிக்க தேஜஸ்ஸையுடையவனை. (பற்றலரித்யாதி) ஶத்ருக்கள் நஶிக்கும்படி உழவுகோலைக் கைபிலே கொண்டு பார்த்தனுடைய தேர்முன்னே ஸாரதியாய் நின்றானை. சிற்றவை-சிறிய தாயார், "என்பிள்ளை[ரு க்கு] ராஜ்யம்வேணும். நீராஜ்யத்துக்கு முடிசூடவொண்ணாது" என என்று அநுபாசத் தலைச்சுமை என்று முடியைத் துறந்தவனை,

... ஆயுமாய் லோகஸாக்ஷுமாயிருக்கிறவன்தலையை யறுத்து பாதகி ... ருக்க; "மதிப்புமாயிருக்கிறவன் எளிவரவு படவொண்ணாது" என்னு ... அதைப்போக்கி, அத்தாலே லோகத்துக்கெல்லாம் தானே [மு] ஆஸ்ரயணீயன் என்னுமிடத்தை வெளியிட்டவனை; "தத்ரநாராயண ஸ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித:" [விஷ்ணுப்ரஸாதாத்] ஸர்வேஶ்வர ... ப்ரஸாதத்தாலே. [ஸுஸ்ரோணி] அவனைக்கிட்டுகையாலே உன் ... பூர்ண ஸகலமாகப் பெற்றதிறே யென்கிறான். (பற்றலரித்யாதி) பற்றலர் வீயக்கோல் கொண்டு - ஶத்ருக்கள், அவர்கள், முடிந்து போம்படி, "ஆயுதமெடுக்கவொட்டேோம்" என்றவாறே குதிரைகளை நடத்தும்கோலைக் கைபிலேகொண்டு. (பார்த்தன்றன் தேர்முன்நின்றானை) ரதியைச்சிறி ஞல் ஸாரதியையிறே பழியச்செய்வது, அவனைப் பின்னேயிட்டுத் தன்னைஅம்புக்கிலக்காக்கி நின்றவனை. (சிற்றவைபணியால் முடிதுறந் தானை) * மாற்றுத்தாய் சொன்ன வார்த்தைக்காக, ப்ராப்தமாய் [உம] வருகிற முடியை ஸந்யஜித்தவனை. [நநூநம்மமகைகேயி] "சக்ரவர்த்தி வார்த்தைசொல்ல மாட்டாமையிருக்கிறானத்தனை, உம்முடைய தம் பிக்குராஜ்யத்தைக்கொடுத்தான், உம்மைக்காடேறப்போகவிடக்காணு மவன் நினைத்திருப்பது" என்று சக்ரவர்த்தி கருத்தைச்சொல்ல;

இவ்விடத்திலே - "தத: ஶாப பரீதேந ஸம்சரதாயமேந ச | வாமாங்குஷ்டேந [உரு] ஸ்ரேஷ்ட ஸம்சிந்நம் தஸ்ய ஶிரோமயா | யஸ்மாதநபராதஸ்ய ஶிரச்சிந்நம் த்வயாமம | தஸ்மாச்சாப ஸமாவிஷ்ட: கபாலீத்வம் பவிஷ்யஸி | ப்ரஹ்மஹா குலிதோபூத்வா சரந் தீர்த்தாநி ... | ததோஹம் தேவதேவேஶ ஹிமவத்பார்ஶ்வமாச்ச ... | தத்ர நாராயண ஶ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித: | ததஸ்தேந ஸ்வகம் பார்ஶ்வம் நகாக்ரேண விதாரிதம் | மஹதீ ஸ்ரவதி தாரா தஸ்யரக்தஸ்ய நிஸ்ஸ [ருய] ... | விஷ்ணுப்ரஸாதாத் ஸுஶ்ரோணி கபாலம் தத்ஸஹஸ்ரதா | ஸ்புடிதம் பஹுதா யாதம் ஸ்வப்நலப்தம் தநம் யதா" என்கிற மத்ஸ்யபுராணவசநங்கள் அனுஸந்தேயங்கள். இங்கு, "தேவ" என்று ஸம்போதித்திருக்கவும், "ஸுஶ்ரோணி" என்றது - ஸாவதாநமென்று தாத்பர்ய மருளிச்செய்கிறார் (அவ னையித்யாதி.) இத்தால்-விஷயாதரனென்னுமது ஸூசிதமென்றுதிருவுள்ளம். [ருரு]

"பிதுர்வசநநிர்தேஶாத்" என்றிருக்க, "சிற்றவைபணியால்" என்று சொல்லக்கூடுமோவென்ன; பெருமாளுடைய அபிப்ராயத்தைக் கண்டருளிச் செய்கிறாரென்று விவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் (நநூநமித்யாதி) "நநூநம் மமகைகேயி கஞ்சிதாஸம்ஸேஶம் | யத்ராஜாநமவோசஸ்த்வம் மமேஶ்வரதாராஸதி" என்று. இந்தஶ்லோகத்தை ஸப்ரகாரமாக வ்யாக்யாநம் பண்ணுகிறார் [சும] (ஶக்ரவர்த்தியித்யாதி.)

மூ.-வேதத்தை வேதத்தின்சுவைப்பயனை விழுமியமுனிவர் விழுங்கும்
கோதிலின்கனியைநந்தனார்களிற்றைக்குவலயத்தோர்தொழுதேத்தும்
ஆதியை யமுதை யென்னையாளுடையப்பனை யொப்பவரில்லா
மாதர்கள்வாழும்மாடமாமயிலைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே ௨

ப-ரை.—வேதத்தை - வேதத்தைத் தனக்கு நிலமாகவுடையனாய்; சுவை - ஆச்ரயித்தவர்களுடையருசிக்குத்தக்கபடி, வேதத்தின் - வேதத்தின், பயனை - பலத்தைக்கொடுக்குமவனாய்; விழுமிய - ஜ்ஞாநாதிகரான, முனிவர் - ஸநகாதி முநிவர்கள், விழுங்கும் - அநுபவிக்கிற, கோது இல் - கோதில்லாத, இன் - இனிய, கனியை - பலம்போலே நிரதிசயபோக்யனாய்; நந்தனார் - ஸ்ரீநந்தகோபர்க்கு, களிற்[று]றை - ஆனைக்கன்றுபோலே யினியனாயிருக்குமவனாய்; குவலயத்தோர் - பூமியிலுள்ளவர்கள், தொழுது - ஆச்ரயித்து, ஏத்தும் - ஸ்தோத்ரம்பண்ணுகிற, ஆதியை - ஜகத்காரணபூதனாய்; அமுதை - அம்ருதம்போலே போக்யனாய்; என்னை ஆளுடை - என்னை அடிமைகொண்ட, அப்பனை - உபகாரகனானவனை; ஒப்பவர் - தங்களுக்குஸத்ருசரானவர்கள், இல்லா - இல்லாத, மாதர்கள் - ஸ்த்ரீகள், [மி]ருவாழும் - வாழுமதாய், மாடம் - மாடங்களை யுடைத்தாய், மா - செல்வம்நிறைந்த, மயிலை - மயிலாப்பூரைப்படைவீடாக வுடைய, திருவல்லிக்கேணிக்கண்டேன்—திருவல்லிக்கேணியிலே காணப்பெற்றேனென்கிறார். ... ... க.

இரண்டாம்பாட்டு. (வேதத்தையித்யாதி) "த்ரைகுண்யவிஷயா வேதா:" என்கிறபடியே - எல்லார்க்கும் ருச்யநுகூலமாக ஹிதம் [உம] சொல்லப்போந்த வேதத்தைத் தனக்கு விஷயமாக வுடையவனை. (வேதத்தினித்யாதி) ருச்யநுகூலமாக ஆச்ரயித்தால் அவர்களாருசியநுகூலமாக ஃபலப்ரதானம் பண்ணுமவனை.

அத்தைக்கேட்டு, "நடுவிலாச்சி! திருவடிகளிலே அழகிதாக ப[ரிவ்ரு]த்தோமென்றிருந்தோம், நம்பக்கலிலே ருசியுண்டாக நினை[க்க] [வே]ண்டாமையிறே நாம்போகச்சொல்லாதே நீயும் கருத்தாகவாகவிசெ[ய்]தது" என்று, "ஐயரோபாதியாகவோ உம்மை நினைத்திருப்ப[து; உம்ம]ை ஈச்வரனாகவும் உம்மை ஈச்வரனையாகவுமிறே [நி]னைத்திருப்பது" என்றாளிறே. (விழுமியவித்யாதி) விரோதியைப் போக்கிக் [கொடுத்]து நிற்குமவனாய், ஈச்வராபிமாநிகளுக்கும் இடர் வந்தால் [நின்று] போக்குமவனுமாய், தனக்கு ஸ்நேஹிகளானார்க்காகத் தன்னை [உப]மாறுமவனாய், போலியான ஸ்நேஹிகளுக்கும் எவிற்றுச்செய்யு[மவ]னுமானவனைத் திருவல்லிக்கேணியிலே காணப்பெற்றேனென்கிறு[ர்.]

இரண்டாம்பாட்டு.—(வேதத்தை) "த்ரைகுண்யவிஷயா [வேதா:"] என்கிறபடியே - எல்லார்க்கும் ஹிதம் சொல்லப்போந்த வேதத்தைத் தனக்கு விஷயமாக வுடையவன். (வேதத்தின் சுவைப்பயனை) வேதோக்தமான கர்மங்களை யநுஷ்டித்து ராஜஸராயும் தாமஸராயும் ஸாத்விகராயுமுள்ளார்க்கு அவ்வவருடைய ருச்யநுகூலமாக ஃபலப்ரதானம் பண்ணுமவன்.

புந:பரதீகக்ரஹணபூர்வகம் பாட்டின் தொகுத்த தாத்பர்யமருளிச்செய்[கி]கிறார் (வில்லித்யாதி.) ... ... ... ... ... க.

இரண்டாம்பாட்டு.—(வேதத்தையித்யாதி.) * கஞ்சன் குஞ்சிபிடித்தடிப்பதற்கு முன்னம் தன் மைந்தனாயிருந்தமையை யநுஸந்தித்துக்கொண்டு, திருத்தேர்த்தட்டில்காட்டின வைச்வரூப்யப்ரதர்சநாதிமுவத்தாலேவெளியிட்டபரத்வத்தையு மநுஸந்தித்துக் கொண்டாடுகிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது. [சு]

(விழுமியவித்யாதி) சிறிய ஸநகாதிகள் அநுபவிக்கிற கோதில்லாத
நல்ல ஃபலத்தை. (நந்தனாரித்யாதி) நந்தகோபன்திருமகனை. (குவ
லயத்தோரித்யாதி) பூமியிலுள்ளார் ஆஶ்ரயிக்கும்படி ஸர்வஜகத்காரண
பூதனாய், நிரவதிகபோக்யனாயுள்ளவனை; என்னையடிமை கொள்ளு[ரு
முபகாரகனை; உபமாநரஹிதமான ஸ்த்ரீரத்நங்கள் வர்த்திப்பதாய்,
மாடமாளிகையையுடைத்தான திருவல்லிக்கேணியிலே கண்டேன்.உ.
மூன்றாம்பாட்டு. (வஞ்சனையித்யாதி) க்ருஷ்ணனை வஞ்சிக்கத்
தாய்வடிவு கொண்டு வந்த பூதனை கதறிக்கொண்டு பூமியிலே விழ,

---

கர்மபாவனையாதல் உபயபாவனையாதலன்றிக்கே, கேவலம் ப்ரஹ்ம
பாவனையே யாயிருக்கும் ஸநகாதிகளுக்கு நிரதிஶய போக்யனாயு
ள்ளவனை. (நந்தனார்களிற்றை) ஸ்ரீநந்தகோபர்க்குத் தன்னுடைய அதிமா
நுஷசேஷ்டிதங்களாலே யெப்போதுமொக்க இனியனானவனை. (குவ
லயத்தோரித்யாதி) பூமியிலுள்ளார், "காரணந்து த்யேய:" என்கிறபடி
யே தன்னையே ஆஶ்ரயிக்கும்படி ஜகத்காரணபூதனாயுள்ளவனை. [ம்ரு
(அமுதை) அவர்களுக்கு ப்ராப்யனாயுள்ளவனை ; அவர்களுக்கு
மெல்லாம் புறம்பாயிருக்கிற வென்னை யடிமைகொண்ட வுபகார
கனை. (ஒப்பவரில்லாவித்யாதி) "ஒருவல்லித்தாமரையாளொன்றிய
சீர் மார்வன்" என்று - பிராட்டி ப்ராதாந்யமேயான பூராணையாலே,
பிராட்டிபரிகரமேயாய்த்து. "நாநயோர்வித்யதேபரம்" என்று அவள்[உம்
விபூதியும் ஈஶ்வரவிபூதியுமாய் இரண்டுகூறாயிறேயிருப்பது. மயி
லாப்பூரென்று-படைவீட்டுக்குப்பேர். ... ... உ.

மூன்றாம்பாட்டு.—(வஞ்சனையித்யாதி) தாய்வடிவுகொண்டு வஞ்
சிக்கவந்த பூதனை கதறிக்கொண்டுபோய் பூமியிலே விழும்படியாக,

---

"விழுமியமுனிவர்-" ஶ்லாக்யரானமுனிவரென்று பதார்த்தமாய், தாத்பர்ய
மருளிச்செய்கிறார் (கர்மேத்யாதி.) விழுப்பு - ஶ்லாக்யதை. "மாதர்கள்வாழும்"
என்று விஶேஷிக்கைக்குஹேதுகதநபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒரு
வல்லியித்யாதி.) பிராட்டிபரிகரமென்கைக்கு ஜ்ஞாபகம் (நாநயோரித்யாதி) "தே
வதிர்யங்மநுஷ்யேஷு புந்நாமா பகவாந்ஹரி: | ஸ்த்ரீநாம்நி லக்ஷ்மீர்மைத்ரேய
நாநயோர்வித்யதேபரம்" என்று ஶ்லோகஶேஷம். ... ... உ.

மூன்றாம்பாட்டு.—(வஞ்சனையித்யாதி.) நந்தனார் களிற்றினுடைய பிள்
ளைச்சேவகத்தைச் சொல்லாநின்றுகொண்டு கிட்டியநுபவிக்கிறாரென்று ஸங்கதி
கண்டுகொள்வது.

மூ.—வஞ்சனைசெய்யத்தாயுருவாகிவந்தபேயலறிமண்சேர
நஞ்சமர்முலையூடுயிர்செகவுண்டநாதனைத் தானவர்கூற்றை
விஞ்சைவானவர்சாரணர்சித்தர்வியந்துதிசெய்யப் பெண்ணுருவாகி
அஞ்சுவையமுதமன்றளித்தானைத் திருவல்லிக்கேணிக்கண்டேனே. ௩.

ப-ரை.—வஞ்சனைசெய்ய - க்ருஷ்ணனை வஞ்சிக்கைக்காக, தாயுருவாகிவந்த- தாய்வடிவு கொண்டுவந்த, பேய் - பூதனையானவள், அலறி - கதறிக்கொண்டு, மண் - பூமியிலே, சேர - விழும்படியாக, நஞ்சு அமர் - விஷம்நிறைந்த, முலை ஊடு - முலைவழியே, உயிர் - அவள்ப்ராணனும், செக - போம்படி, உண்ட - அமுதுசெய்தருளின, நாதனை - ஸர்வசேஷியாய்; தானவர் - அஸுரர்களுக்கு, கூற்றை - ம்ருத்யுவாய்; விஞ்சைவானவன் - வித்யாதரர், சாரணர் - சாரணர், சித்தர் - ஸித்தர் முதலான தேவர்கள், வியந்து - ஆச்சர்யப்பட்டு, துதிசெய்ய-ஸ்தோத்ரம்பண்ணும்படி, பெண்உருஆகி - பெண்வடிவைக்கொண்டு, அன்று - இந்த்ரன் ப்ரஷ்டைச்வர்யனான காலத்திலே, அம்-அழகிய, சுவை-ரஸத்தையுடைய, அமுதம்- அம்ருதத்தை, அளித்தானை - தேவதைகளுக்குக் கொடுத்தவனை, திருவல்லிக்கேணிக்கண்டேன்—. விஞ்சை-வித்யை. ... ... ... (௩)

நஞ்சுபொதிந்த முலைவழியே அவள் ப்ராணன் போம்படி அமுது செய்த ஸர்வசேஷியை. (தானவர்கூற்றை) ஆச்ரிதவிரோதிகளுக்குக் கூற்றமாயுள்ளவனை. (விஞ்சைவித்யாதி) வித்யாதரர் சாரணர் ஸித்தர் உள்ளிட்ட தேவவர்கமடைய விஸ்மிதராய் ஸ்தோத்ரம்பண்ண. (பெண்ணுருவித்யாதி) "பெண்ணாகி யமுதூட்டும் பெருமானார்" என்கிறபடியே - பெண்வடிவைக்கொண்டு அழகிய ரஸத்தை யுடைய அம்ருதத்தை தேவதைகளுக்குக் கொடுத்தவனைத் திருவல்லிக் கேணியிலே கண்டேன். ... ... ... ... ... ௩.

விஷம் நிரம்பினமுலைவழியே அவளுடைய ப்ராணன் போம்படி அமுதுசெய்த. (நாதனை) தனக்குச் சேராத வடிவைக்கொண்டு, ஜமத்துக்குப்ராணனான தன்னை நலியவந்தவளை முடித்துத்தன்னைத்தந்தவன். "ஸ்தந்யம்தத்." (தானவர்கூற்றை) அஸுரவர்கத்துக்கு ம்ருத்யுவானவனை; வித்யாதரர், சாரணர், ஸித்தருள்ளிட்ட தேவவர்கமடைய விஸ்மிதராய் ஸ்தோத்ரம்பண்ணும்படி, புருஷோத்தமனான தனக்குச் சேராத வடிவைக்கொண்டு அம்ருதத்தை அநுகூலரை ஸுஜிக்கும்படி பண்ணினவனை. ... ... ... ... ௩.

* பெண்ணுருவாகி யமுதமளித்ததுக்கு ப்ரதிகோடித்வேந, தாயுருவாய் நஞ்சிட்டவளைக்கொன்றதுக்கு ரஸோக்தி தோன்ற தாத்பர்யமருளிச்செய்கிறார் (தனக்கித்யாதி.) பேய்க்குச்சேராத வடிவிறே - தாயுருவாகை என்று திருவுள்ளம். "தஸ்யாஸ்தாம் பௌக்ஷணை: ப்ராணைஸ்ஸஹநிராயச। ஸ்தந்யம்தத்விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீஜ்ஜகத்குரோ:" என்று வசநசேஷம். (புருஷோத்தமனான தனக்குச் சேராத வடிவைக்கொண்டு) "பெண்ணுருவாகி" என்றதினர்த்தம். "அம்-" ஸுந்தரமான, "சுவை -" ரஸ்யமான, அமுதமென்று பாவார்த்தம். ஆக, தன்னுருவையழித்து வேறுவேஷம்கொண்டாகிலும் விஷமிட்டு * உலகங்கட்கெல்லா மோருயிரை நலியவந்தவளை நலிந்து தன்னை யழியமாறியாகிலும் அநுகூலர்க்குஅம்ருதம்கொடுத்தும் உயிர்களைத் தரிப்பித்தவனென்று சொல்லிற்றாய்த்து.

௪.— இந்திரனுக்கென்றாயர்களெடுத்தவெழில்விழவிற்பழநடைசெய்
மந்திரவிதியிற்பூசனைபெறாது மழைபொழிந்திடத்தளர்ந்தாயர்
எந்தம்மோடினவாநிரைதளராமலெம்பெருமானருளென்ன,
அந்தமில்வரையால்மழைதடுத்தானைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே.

ப-ரை.—இந்திரனுக்கு என்று - மழைபெய்கைக்காக இந்த்ரனுக்கு விருந்திடக்கடவோம் என்று, ஆயர்கள் - இடையர்கள், எடுத்த - ஸங்கல்பித்த, எழில் - அழகிய, விழவில் - யாகோத்ஸவத்திலே, பழநடைசெய் - முன்புசெய்து போரும் க்ரமத்தில், மந்திரவிதியில் - மந்த்ரோக்தமானபடியே, பூசனைபெறாது - பூஜையை அவன் பெறாமையாலே, பசிக்கோபத்தாலே, மழை - கல்வர்ஷத்தை, பொழிந்திட - வர்ஷிப்பிக்க ; ஆயர் - இடையர், தளர்ந்து - மிகவும் நொந்து, "எம்பெருமான் - என்ஸ்வாமியானவனே !, எந்தம்மோடு - நாங்களும், இனம் - இனமினமான, ஆநிரை - பசுத்திரளும், தளராமல் - நோவுபடாதபடி, அருள் - ரக்ஷித்தருளவேணும்," என்ன - என்று அர்த்திக்க ; அந்தம் இல் - அளவிடவொண்ணாதபடியான, வரையால் - கோவர்த்தநமலையாலே, மழை - அம்மழையை, தடுத்தானை - பரிஹரித்தவனை, திருவல்லிக்கேணிக் கண்டேன்—. (௪)

நாலாம்பாட்டு. (இந்திரனித்யாதி) இந்த்ரனுக்குப் பண்டு நடத்தும்படியே ஆயர்கொடுத்த சோற்றை. "துன்னுசகடத்தால்" "அட்டுக்குவிசோறு" இத்யாதிப்படியே மஹோத்ஸவமாகக் கொண்டிருக்கிற சோறு பெறாத பஸிம்ராஹத்தாலே இந்த்ரன் கல்லைவர்ஷிக்க. (மந்திரமித்யாதி) "யதஇந்த்ரஹயாமஹே" இத்யாதி ரிக்குக்களாலே ஆவாஹநம் பூஜிக்கிற பூஜை பெறாதே, கோபத்தாலே கல்வர்ஷமாக

நாலாம்பாட்டு.—(இந்திரனித்யாதி) திருவாய்ப்பாடியிலுள்ளார், த்ரைலோக்யேஶ்வரனான இந்த்ரனுக்கு வர்ஷார்த்தமாக ஆட்டைக்கொரு விருந்திடக்கடவர்களாய், "நாம்பிறந்து வளருகிற ஊரிலே, புரோடாஶத்தை நாய்தின்றாப்போலே ஒருதேவதை வந்து ஸ்வீகரிக்கையாவதென்!" என்று, "நீங்கள் செய்யப் புகுகிறதுதானென்?" என்றுகேட்டான் ; "நாங்கள் இந்த்ரனுக்கு வர்ஷார்த்தமாக விருந்திடப்புகுகிறோம்" என்றார்கள் ; "இந்தமலையன்றோ நமக்கும் பசுக்களுக்கும் ஒதுங்க இடமுந்தந்து புல்லும் தருகிறது, ஆரேனுக்குமோ ப்ரத்யுபகாரம் பண்ணுவது, இம்மலைக்கிடுங்கோள்" என்றான் ; முகத்தைப்பார்த்தொன்றைச் சொன்னால் மறுக்கலாம்படியன்றே யிருப்பது, ஒன்றாகக் கொடு வந்து குவித்தார்கள் (இந்திரனித்யாதி) இந்த்ரனுக்கு என்று இடையரெடுத்த எழிலுடைத்தான விழவில், முன்புசெய்து போரும்படியிலே மந்த்ரோக்தமான படியேபண்ணுகிற அநுஷ்டாநரூபமான பூஜையைப்பெறாமையாலே,

நாலாம்பாட்டு.—(இந்திரனித்யாதி.) ஒருபேய்ப்பெண்ணைப் பிணமாக்கிவிட்டவளவேயோ, த்ரிலோகாதிபனென்றிறுமாந்திருக்கும் இந்த்ரனிறுமாப்பை யறுத்தபடியும் கண்டோமிறே ! என்று, அத்தை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி கண்டுகொள்வது.

வ்யாக்யாநகர்த்தாவும் கதாக்ரமத்தை உபந்யஸிக்கிறார் (திருவாய்ப்பாடியிலித்யாதி.) (கடவர்களாய்) என்றவநுஸாரம், உத்யோகிக்களென்றபூரிப்பது.

**இன்துணைப்பதுமத்தலர்மகள்தனக்குமின்பன், நற்புவிதனக்கிறைவன்,**
**தன்துணையாயர்பாவைநப்பின்னைதனக்கிறை, மற்றையோர்க்கெல்லாம்**
**வன்துணை,பஞ்சபாண்டவர்க்காகி வாயுரைதூதுசென்றியங்கு**
**மென்துணையெந்தைதந்தைதம்மானைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே.**

ப-ரை.— ஆஸ்ரிதர்க்கு, இன் - இனிய, துணை - துணையாய், பதுமம் - தாமரைப்பூவைப் பிறந்தகமாகவுடைய, அலர்மகள் தனக்கும் - பெரியபிராட்டியார்க்கும், இன்பன் - போக்யனாய்; நல் - எல்லாவற்றையும் பொறுக்கும் தன்மையளான, புவிதனக்கு - ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு, இறைவன் - வல்லபனாய்; தன்துணை - தன்னையே துணையாகவுடையளாய், ஆயர்பாவை-இடைப்பெண்ணான, நப்பின்னை[ம தனக்கு - நப்பின்னைப்பிராட்டிக்கு, இறை - ஸ்வாமியாய்; மற்றையோர்க்கு எல்லாம் - அல்லாதாரெல்லார்க்கும், வல் - வலிய, துணை - துணையாய்; பஞ்சபாண்டவர்க்கு - பஞ்சபாண்டவர்களுக்கு, ஆகி - எல்லா வுறவுமுறையும் தானேயாய்க்கொண்டு, வாய் உரை - அவர்கள் சொன்ன வார்த்தைகளை, சென்று - துர்யோதநாதிகள் பக்கலிலே போயறிவித்து,தூது இயங்கும்-ஸ்ரீதூது எழுந்தரு[மரு ளினவனாய்; அத்தாலே, என்துணை - என்போல்வார்கட்கெல்லாம் ஸஹாயபூதனாய்; எந்தை தந்தைதம்மானை-என்குலநாதனானவனை,திருவல்லிக்கேணிக்கண்டேனே—.

---

வர்ஷிக்க. (தளர்ந்தித்யாதி) இடையரும் பசுக்களும் போரத்தளர்ந்து "எங்களோடுகூடப் பசுக்களும் நோவுபடாதபடி ரக்ஷிக்கவேணும் என் நாயனே!" என்ன. (அந்தமித்யாதி) இடையர்க்கும் பசுக்களுக்கும்[உம நோவுவாராத மழையை மலையெடுத்து ரக்ஷித்தவனைத் திருவல்லிக் கேணியிலே கண்டேன். அந்தம் – முடிவு. முடிவில்லாதபடி. ௪.

---

அவன் பரிக்ரஹத்தாலே கோபித்து மஹாவர்ஷமாக வர்ஷிப்பிக்க; அத்தாலே, இடையரானவர்கள் தளர்ந்து, "ரக்ஷகரானஎங்களோடே எங்களுடைய ரக்ஷ்யமான பசுக்களும் தளராதபடி[உரு நோக்கியருளவேணும்" என்ன. இத்தால் – புறம்புண்டான ரக்ஷ்ய ரக்ஷகபாவமும் அப்ரயோஜகமென்றபடி. (அந்தமில்) அந்தமழையினளவல்லாத பெரியமலையாலே மழையைத்தடுத்து.அப்படியே "ஸந்தத-ஸ்வேவர்ஷிணி" என்கிற என்னுடைய ஸம்ஸாரமாகிற வர்ஷத்தைப் பரிஹரிக்க வந்தவன். ... ... ... ௪.

---

பரிக்ரஹத்தாலே யென்றது -"பரிஹஏவபரிஹ:" என்று பரிஹாரஸ்தத்திலே வருத ப்ரத்யயம் ஸ்வார்த்தத்திலே யாய், பரிஹிக்கையாலென்கை. இவ்வளவால் ஃபலித்த ஸ்வாபதேசம் (இத்தாலித்யாதி.) "அந்தமில்" இத்யாதிக்கு ஸ்வாபதேசம் (அப்படியேயித்யாதி.) ... ... ... ... ௪.

அஞ்சாம்பாட்டு.—(இன்துணையித்யாதி.) இப்படி ப்ரஸக்தாநு ப்ரஸக்தமான அதிமாநுஷசேஷ்டிதங்களை யநுஸந்தித்தாராய், * பார்த்தன்றன் தேர்முன்நிற்கைக்கு பூர்வாங்கமான தௌத்யத்தை யநுஸந்தியா, ஸ்ரீஹநுமி நீளா வல்லஹன்செய்தசெயலென்னென்றநுஸந்திக்கிறுரென்றுஸங்கதிகண்டுகொள்வது.

அஞ்சாம்பாட்டு. (இன்துணையித்யாதி) ஆஶ்ரிதர்க்குத் துணையாய், பதுமம் - தாமரைப்பூவை யிருப்பிடமாகவுடைய பெரியபிராட்டியார்க்குப் பித்தன். நற்புவியுண்டு - ஸ்ரீபூமிப்பிராட்டி, அவளுக்கு வல்லபன். தனக்கு உசாத்துணையுமாய் விநோதகீர்த்தநம் பண்ணுகைக்கு உகக்கைப்பாடியான நப்பின்னைப் பிராட்டிக்குவல்லபன். (மற்றையோரித்யாதி) பிராட்டியொழிந்தார்க் கெல்லாம்வலிய துணையாயிருக்கும். எங்கேகண்டோமென்னில் (பஞ்சபாண்டவரித்யாதி) பாண்டவர்கள் ஐவர்க்குமாக அவர்கள்சொன்ன வார்த்தைகளை துர்யோதநாதிகளுக்குச் சொல்லத் தூதுநடந்த இன்துணை. (எந்தையித்யாதி) என் குலநாயகனைத் திருவல்லிக்கேணியிலே கண்டேன். ... ... ௫

அஞ்சாம்பாட்டு.—(இன்துணையித்யாதி) நெஞ்சுக்கினிய துணையாயிருக்கிற, பதுமத்தலர்மகளுண்டு - தாமரைப்பூவை உத்பத்திஸ்தாநமாகவுடைய பெரியபிராட்டியார், அவளுக்கின்பனானவன். (தனக்கும்) எல்லார்க்கும் ஸ்ப்ருஹணீயையாயிருக்கிற பெரியபிராட்டியார்தான் "அகல்கில்லேன்" என்று விரும்பிவர்த்திக்கும்படி அவளுக்கு ஸ்ப்ருஹணீயனானவன். ஸர்வேஶ்வரனான தனக்குங்கூட பொறைக்கு உவாத்தாயிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியார்க்குவல்லபனானவன். (தன்துணையித்யாதி) தன்னையே துணையாக வுடையளான, ஆயர்பாவையுண்டு - நப்பின்னைப்பிராட்டி, அவளுக்கு ஸ்வாமியானவன். (மற்றையோர்க்கித்யாதி) இப்படியிருக்கையாலே அல்லாதாரெல்லார்க்கும் வலியதுணையானவன். (பஞ்ச) ஆஶ்ரிதரான பாண்டவர்களுக்காக, அவர்கள் வாயிற்சொல்லிவிட்ட வார்த்தையை அங்கே சென்று சொல்லுவது இங்கேவந்தறிவிப்பதாய், இப்படி ஆஶ்ரிதவிஷயத்தில் தாழநின்ற நிலையாலே தானே துணை யென்னுமிடத்தை யெனக்கறிவித்தவன். (எந்தை) எனக்குஸ்வாமியாய், என்குலத்துக்குநாயகனானவன்.

"பதுமத்து -" பத்மத்திலே யிருக்கிறவென்றபடி. * நல்பதப்ரயோஜநதாத்பர்யம் (ஸர்வேஶ்வரனித்யாதி) "தனக்கு" என்றதின் கருத்தாகவுமாம். ஸ்ரீபூமிகளை யொருவன் நீர் வார்த்துக்கொடுக்கவேண்டாமையாலே விஶேஷிக்கவேண்டா, நப்பின்னையாகில் ஸாமாந்யேந எருத்தை முறித்தவனுக்குக் கொடுக்கக்கடவோமென்று நினைப்பிட்டவளாகையாலே க்ருஷ்ணனைத் துணையாக விஶ்வஸித்திருந்தாளென்று இவ்வர்த்தம்தோன்ற விஶேஷிக்கிறாரென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (தன்னையேயித்யாதி.) "இடங்கும் -" ஸஞ்சரிக்கிறவென்றாய், இதினர்த்தம் (இங்கேவந்தறிவிப்பதாய்) என்றது. ... ... ... ... ௫.

ஆறாம்பாட்டு.—(அந்தகனித்யாதி.) "அர்ஜுநனுக்கு தௌத்யஸாரத்யங்கள் பண்ணிற்றும் த்ரௌபதியினுடைய மங்கள ஸூத்ரத்துக்காக" என்கிறபடியே இவன் பார்த்தஸாரதியானமைக்கும், கீழ்ப்பாட்டிற்சொன்ன தௌத்யத்துக்கும் ப்ரயோஜநத்தை யநுஸந்திக்கிறாரென்று அவதாரிகை கண்டுகொள்வது.

௬.—அந்தகன்சிறுவனரசர்தமரசற்கிளையவனணியிழையைச்சென்று
எந்தமக்குரிமைசெய்யெனத்தரியாதெம்பெருமானருளென்ன ;
சந்தமல்குழலாள்†அலக்கண் நூற்றுவர்தம் பெண்டிருமெய்திநூலிழப்ப
இந்திரன்சிறுவன்தேர்முன்நின்றானைத் திருவல்லிக்கேணிக்கண்டேனே.

ப - ரை.—அந்தகன் - குருடனான த்ருதராஷ்ட்ரனுடைய, சிறுவன் - பிள்ளையாய், அரசர்தமரசற்கு - ராஜராஜனான துர்யோதநனுக்கு, இளையவன் - தம்பியான துச்சாஸநன், அணி - அலங்கரிக்கப்பட்ட, இழையை - ஆபரணங்களையுடையளான த்ரௌபதியின் பக்கலிலே, சென்று - போய், "சூதிலே உன்னையும் தோற்றார்கள், ஆகையாலே, எந்தமக்கு - எங்களுக்கு, உரிமைசெய் - அடிமைசெய்," என - என்ன ; அவள், தரியாது - அந்யசேஷத்வத்தைப் பொறாமல், "எம்பெருமான்! - என் ஸ்வாமீ, அருள் - என்பக்கல் க்ருபைபண்ணி ரக்ஷிக்கவேணும்," என்ன - என்று அர்த்திக்க; அல் - இருண்ட, சந்தம் - நிறத்தையுடைய, குழலாள் - குழலையுடையளான த்ரௌபதிபட்ட, அலக்கண் - துக்கத்தை, நூற்றுவர்தம் - துர்யோதநன் ப்ராதாக்களான நூற்றுவருடைய, பெண்டிரும் - பார்யைகளும், எய்தி - அடைந்து, அதுக்குமேலே, நூல் - மங்களஸூத்ரத்தையும், இழப்ப - இழக்கும்படியாக, இந்திரன்சிறுவன் - இந்த்ரபுத்ரனான அர்ஜுநனுடைய, தேர்முன் - தேரின்முன்னே, நின்றானை - நின்று ஸாரத்யம் பண்ணினவனை, திருவல்லிக்கேணிக்கண்டேன்—. (௬)

ஆறும்பாட்டு. (அந்தகனித்யாதி) குருடன்பெற்ற பிள்ளையாய்த்து. இத்தால் - அறிவுகேடு பிறந்துடைய தென்கை. (அரசர்தமித்யாதி) ராஜராஜனான துர்யோதநனுக்குப் பின் பிறந்தவன் ; அவனாகிறான் - துச்சாஸநன். (அணியிழையித்யாதி) மஹோத்ஸவமாகையாலே ஸர்வாபரணபூஷிதையாய் நிற்கிறவளைச் சென்று கிட்டி, "சூதிலே உன்னையும் தோற்றார்கள், (எந்தமக்குரிமைசெய்யென) நீ போந்து எங்களுக்கு அடிமைசெய்" என்ன.

ஆறும்பாட்டு.- (அந்தகன்சிறுவன்) குருடன் பெற்ற பிள்ளையாய்த்து. இத்தால் - அறிவுகேடு வழிவழி வருகிறதென்கை. பிதாவானவன் கண்ணற்ற வளர்க்க வளருகையன்றிக்கே தான்கண்டபடி மூலையடியே திரிந்தவன். (அரசரித்யாதி) ராஜராஜனான துர்யோதநனுக்குப்பின் பிறந்தவன். துச்சாஸநனென்றபடி. அவன் கொண்டாடி வளர்க்க செருக்காலே வளர்ந்தவனென்று திம்புக்குறும்பாகச் சொல்லுகிறது. (அணியிழையை) மஹோத்ஸவமாகையாலே ஆபரணங்களாலே அலங்க்ருதையாய் நின்றவள்பக்கலிலே கிட்டி. (எந்தமக்குரிமை செய்யென) சூதிலே உன்னையும் தோற்றார்கள். நீபோந்து எங்களுக்கிழிதொழில் செய்யென்ன.

"அந்தகன்" என்றதுக்குத் தாத்பர்யம் (பிதாவானவனித்யாதி.) கண்ணஞ்ச - கண்ணிலேயஞ்ச. துச்சாஸநனை யிப்படி வர்ணிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (அவனித்யாதி) "யௌவநம் தநஸம்பத்தி: ப்ரபுத்வமவிவேகிதா | ஏகைகமப்யநர்த்தாய கிமுயத்ர சதுஷ்டயம்" என்கிறநாலும் இவனுக்கு புஷ்கலமென்று திருவுள்ளம். அணியப்பட்ட - அலங்கரிக்கப்பட்ட, இழையையுடையவளென்று ஸம்ஹார்யமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (மஹோத்ஸவமித்யாதி.)

† "சந்துஅமர்குழலாள்" என்று பாடாந்தரம்.

(தரியாது) அவள் அநந்யபோஷகத்வத்தைப் பொறுக்கிலளாய்த்து; அவ்வளவிலே, என்ஸ்வாமியானவனே! என்பக்கலிலே க்ருபைபண்ணியருள வேணும் என்ன. "ஆண்பிள்ளைகளான ஸர்த்தாக்களிருக்க அஸந்நிஹித ஜ்யேஷ்டாஸ்யனான க்ருஷ்ணன்பேரைச் சொல்லுவானென்?" என்று எம்பாரைக்கேட்க; "அறிந்தோமோ, முன்பே சில ஸம்ஶ்லேஷங்கள் கேட்டு வைத்தாள்போலேகாணும் - 'மஹாத்யாபாதஸம்பாதமாத்தஸ்மர்த்தவ்யோ ஸஹவாந்ஹரி:' என்று." இதுதன்னை பட்டரைக்கேட்க; "ஸர்த்தாவின்கையைப்பிடித்துக்கொண்டுபோகாநின்றாலும் இடறினால் அம்மே! என்னக்கடவதுகாண்" என்றருளிச்செய்தார். (சந்தமல்குழலாள்) அலைலொத்த குழலாள் என்றுமாம். (சந்தமித்யாதி) சந்தகப்பூ அமர்ந்தகுழலையுடையாளுடைய அத்வைதத்தை, ஶ்ரீயோயநாதிசன்ஸ்க்ரிகள்

---

(தரியாது) அவள் அநந்யபோஷகத்வத்தைப் பொறுக்கிலளாய்த்து. இவ்வளவில், ஸ்வாமியான நீ என்பக்கலிலே க்ருபையைப்பண்ண வேணும் என்ன.

"ஆண்பிள்ளைகளான ஸர்த்தாக்கள் ஸந்நிஹிதராயிருக்க. ஜ்யேஷ்டாஸ்யனான க்ருஷ்ணன் பேரைச் சொல்லுவானென்?" என்று எம்பாரைக்கேட்க; "அறிந்திலோம்! முன்பே சில ஸம்ஶ்லேஷங்கள் கேட்டுவைத்தாள் போலே காணும் 'மஹாத்யாபாதஸம்பாதஸம்ஸ்மர்த்தவ்யோ ஸஹவாந் ஹரி:' என்று." இதுதன்னை பட்டரைக்கேட்க, "ஸர்த்தாவின் கையைப்பிடித்துப் போகாநின்றாலும் இடறினால் அம்மே! என்னக்கடவது காண்" என்றருளிச்செய்தார். (க) அதாயிருக்கச்செய்தே. விசைப்புக்கிடந்தபடி காணும்!‡ (சந்தமல்குழலாள்) சந்தமென்று - நிறம், அல் என்கிற ஶப்தம் - இருளை லக்ஷித்து, நிறமிருண்ட குழலையுடையவளென்னுதல்; அன்றிக்கே, (சந்தமர் குழலாள்) ஸந்தகப்பூ மாறாத குழலையுடையவளென்னுதல்; அவள் பட்ட, அலக்கணுண்டு - வ்யஸனம், அத்வைதஶ்ரீயோயாதிகளுடைய

---

ஸம்ஶ்லேஷம் - சாதிக்கை ஶ்லேஷங்களைக்கை. அதாவது - உபதேசமென்றபடி. "ஜ்ஞாதமேடவலியக் ... " என்பது பூர்வார்த்தம். "எம்பெருமான்! அருள்" என்று இவள் ஶ்ருத்யர்த்தையை அர்த்தித்தால் அவ்வளவைக் கொடுத்துவிட்டவாகாதோ, நாற்றுவர் பெண்டிரையும் நாலிழக்கும்படி பண்ணுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (அதாயிருக்க இத்யாதி.) விசைப்பு - ஸ்நேஹாதிக்யம். "அல" என்று - ராத்ரியாய், அப்படியிருப்பதான குழலென்றும்; 'சந்தமர்' என்றுபாடமாய், அப்போது, சந்து - ஸந்தநதள்ளமமாய் அமருகை - பொருந்துகையாய், அப்படிப்பட்ட குழலையுடையவளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (சந்தமென்றித்யாதி' வாக்யத்ரயத்தாலே.)

(க) (அதாயிருக்கச்செய்தே) இத்யாதிக்கு - "எம்பாரருளிச்செய்த அர்த்தமேயாயிருக்க ஓரபிப்ராயமிருந்தபடிகாணும்! என்று வ்யாக்யாதா ஆஶ்சர்யப்படுகிறார்" என்று அரும்பதாந்தரம்.

மூ.—பரதனும் தம்பிசத்துருக்கனுமிலக்குமனோடு மைதிலியும்
இரவுநன்பகலும்துதிசெய்யநின்றவிராவணாந்தகனையெம்மானை,
குரவமேகமழுங்குளிர்பொழிலூடுகுயிலொடுமயில்கள் நின்றால [னே.
இரவியின்கதிர்கள் நுழைதல்செய்தறியாத் திருவல்லிக்கேணிக்கண்டே

ப - ரை.—பரதனும் - ஸ்ரீபரதாழ்வானும், தம்பி - அவனுக்குத் தம்பியான, சத்துருக்கனும் - ஸ்ரீசத்ருக்நாழ்வானும், இலக்குமனோடு - இளையபெருமாளும், மைதிலியும் - பிராட்டியாரும், மற்றுமுள்ளாரும், இரவும் - ராத்ரத்திலும், நன் - பதார்த்த ப்ரகாசகமான, பகலும் - பகலிலுமம், துதிசெய்ய - ஸ்தோத்ரம்பண்ணு ம்படி, நின்ற - எழுந்தருளியிருக்குமவனாய், எம்மான் - எனக்கு ஸ்வாமியாய், ராவணாந்தகனை - ராவணனை வேரறுத்த சக்ரவர்த்தித்திருமகனை; குரவம் - குரவம்பூ, கமழும் - பரிமளிக்கிற, குளிர் - குளிர்ந்த, பொழிலூடு - சோலைக்குள்ளே, குயிலொடு - குயில்களுடனே, மயில்கள் - மயில்களானவை, நின்று - ஒருபடிப்பட்டு நின்று, ஆல - ஆடுமளவில், இரவியின் கதிர்கள் - ஸூர்யகிரணங்கள், சோலைச் செறிவாலே, நுழைதல் செய்தறியாத - ஒருக்காலும் நுழைந்தறியாத, திருவல்லிக்கேணிக் கண்டேன்—. ... ... ... ... (எ)

படிப்பாடு. (இந்திரன் [illegible]) இந்த்ரபுத்ரனான அர்ஜுநன் தேர்முன்னே, [illegible] காரியமாய் நின்றவனைத் திருவல்லிக்கேணியிலே கண்டேன். ... ... ௬.

ஸ்திரிகளை [illegible], அதிலே தன்னோடொக்க [illegible] தாலுமிருந்தார்களா [illegible]. அவர்களைக் [illegible] பண்ணினானாய் [illegible] த்து. (இந்திரனிக்கு [illegible]) [illegible] அபாரமாகப் பற்றி [illegible] [illegible] இடத்தைச் சொல்லுகிறது. [illegible], அர்ஜுநனு க்கு இந்த்ரன் உதவிற்றிலன். ... ... ... ௬.

(அதில் [illegible] கொருத்தனுக்கு [illegible] குழல் முடிப்பித்தவர் [illegible] அவர்களுக்கு [illegible] சந்தம ா'' என்று [illegible] ''[illegible]'' [illegible] வித்த [illegible] அவர்கள் [illegible] கைப்பிடித்தவர்த்தார்கள் [illegible], அவர்களுக்குள் [illegible] கைப்பிடித்த வரை கள் [illegible] பெற்றார்கள், [illegible] யடி யென்று கருத்து. இப்பாட்டில் [illegible] ஸ்வாபதேசம் [illegible]யாதி.) ... ௬.

ஏழாம்பாட்டு.—பரதனுமித்யாதி.) முதற் [illegible] - * பார்த்தன்றன் தேர் முன்நின்றானுடைய [illegible] போகாதிறக, நமக்கு வழிபறிப்பாரைப் போலே * [illegible] வடிவைக்கொண்டு நிற்கையாலே அங்கேகண்டேனடி. ''சிற்றவை பணியால் முடிதுறந்தானை'' என்றொரு பாசுர மிட்டுப்போந்தாராயிருந்தார்; அவர் நெஞ்சிலே யுறைத்து நெஞ்சைப் பறிக் கையாலே வர்த்தேத்துகிறுரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

ஏழாம்பாட்டு. (பரதனித்யாதி) ஸ்ரீபரதாழ்வானும் ஸ்ரீசத்ருக்நாழ்வானும், இளையபெருமாளும் பிராட்டியாரும்; கண்டவர்களுடன் கேட்டவர்களுடன் வாசியற திவாராத்ரம் ஸ்தோத்ரம் பண்ணாநின்ற. இப்படிஏத்துவது ராவணவயாபதாநமொன்றையுமாய்த்து. (குரவமேயித்யாதி) குரவம்பூ கமழாநின்றுள்ள ஸ்ரமஹரமான சோலைக்குள்ளே, குயில்பாட, மயிலாட. (இரவியித்யாதி) ஆதித்யரஸ்மி நுழைந்தறியாத பொழிலென்று பொழிலுக்கு விசேஷணம். இப்படி சோலைச்செறிவையுடைய திருவல்லிக்கேணியிலே கண்டேன். ... ஏ.

ஏழாம்பாட்டு.—(பரதனும் தம்பி சத்துருக்கனும்) ஸ்ரீபரதாழ்வானும, அவனோடு கையடைப்பான ஸ்ரீசத்ருக்நாழ்வானும. (இலக்குமனோடுமைதிலியும்) இதுவுமிங்ஙனே யொருசேர்த்தி. (இரவுநன்பகலும்) ஸமரகாலத்தில் கண்டநுபவித்தவர்களோடு கேட்டார்வாய் கேட்டாரோடு வாசியற ஏத்தாநிற்பார்களாய்த்து. ஜேஸிகரடங்கலும் திரள் திரளாக நின்றாய்த்து ஏத்துவது. (இரவுநன்பகலும்) நமக்குமோரோரகாலம் நெஞ்சொழிந்தபோது ஏத்துவதொன்றுண்டன்றோ, அங்ஙனன்றிக்கே, திவாராத்ர விபாகமற கிட்டினதனையுமாழங்கால் படுகைக்குடலான விதனை. (இராவணாந்தகனை) இப்படியேத்துவதுதான் ராவணவயம் பண்ணின அபதாநமொன்றுமேயாய்த்து; அவாகமோபாதி நாலும் தோற்று ஏத்தும்படி பண்ணினவனை. (குரவமித்யாதி) குரவம காட்டாநிற்பதாய, ஸ்ரமஹரமான பொழிலினூடே குயில்களோடேகூட மயில்கள் ஸம்ஸ்ரமங்கீதம்பண்ண. (இரவியித்யாதி) ஆதித்யரச்மிகளை நடையாடாத தேசமாய்த்து. "ஹீலோதேதி" என்கிறது அவ்விடத்தை யொழியவாய்த்து. ஏ.

"தம்பி" என்றது - பரதனுக்குத்தம்பி யென்றாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனோடித்யாதி.) இங்ஙனே யொரு சேர்த்தியென்றது - "ஸீதாலக்ஷ்மணம்" என்கிறபடியே தாயும் பிள்ளையுமாயிருக்குமொரு சேர்த்தியென்றுமாம்; "நசவீதாத்வயாஹீநாநசாஹமபி" என்கிறபடியே பெருமாளைப்பிரியில் தரியாமையிலுண்டானசேர்த்தியாகவுமாம்; ராவணவதத்தினன்றுஅயோத்யாபிஷேகத்தினளவுக்குக் கேட்டிருக்கையிலுள்ள சேர்த்தியாகவுமாம். ஸமரம் - யுத்தம். கேட்டார்வாய்கேட்டார் - பரத சத்ருக்நாதிகள். இந்நால்வரையும் சொன்னது - வாநரமுதலிகளுக்கும், ப்ராஹ்மணர்களுக்கும், ரிஷிகளுக்கும், அயோத்யாவாஸிகளுக்கும், ஆழ்வார்களுக்கும், ஆசார்யர்களுக்கும் உபலக்ஷணமென்று விவரிக்கிறார் (தேஸிகரித்யாதி.) அடங்கலுமென்றது - கண்டறிவாரும கேட்டறிவாரு மெல்லாமென்றபடி. நிலவர்க்கெல்லாமொருக்கா லேத்தினால் போராதோ, திவாராத்ர விபாகமற ஏத்தவேண்டுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (நமக்குமித்யாதி.) கிட்டினதனையும் - எத்தனைகிட்டினு மத்தனையுமென்றபடி.

"எம்மானை" என்றதுக்குத்தாத்பர்யம் (அவர்களோபாதி யித்யாதி.) குரவம்-புஷ்பவிசேஷம். பரதாதிகள் ஹட்டரைப்போலேயேத்த, குயில்பாட, மயில்களாட, பரிமளிதமாய் ஸ்ரமஹரமான உத்யாநத்திலே ராமஜீயாகரன் எதிரியான சுதிரவனஞ்சும்படி யிருக்கக்கண்டே னென்று இப்பாட்டுக்குத் தாத்பர்யம். ராவணனுக்கஞ்சின ஸூர்யன் ராவணாந்தகனுக்கஞ்சச் சொல்லவேண்டாவிறே யென்று திருவுள்ளம். ... ... ... ... ... ஏ.

மூ.—பள்ளியிலோதிவந்த தன் சிறுவன் வாயிலோ ராயிரநாமம்
ஒள்ளியவாகிப்போதவாங்கதனுக்கொன்று மோர் பொறுப்பிலனாகி
பிள்ளையைச்சீறிவெகுண்டுதூண்புடைப்ப,பிறையெயிற்றனல்விழிப்பே
தெள்ளியசிங்கமாகியதேவைத்திருவல்லிக்கேணிக்கண்டேனே [ழ்வாய்

ப - ரை.—பள்ளியில - வித்யாசாலையிலே, ஓதி - படித்துவிட்டு, வந்த - தன்னருகேவந்த, தன்சிறுவன் - தன்பிள்ளையான ப்ரஹ்லாதாழ்வானுடைய, வாயில்-திருப்பவளத்தில், ஓராயிரநாமம்-ஸர்வேச்வரனுடைய திருநாமங்களெல்லாம், ஒள்ளியவாகி - அழகாக, போத - தன்னடையேவர, * மாயன் மணிவண்ணன்தாள் பணியும் புத்ரனைப் பெறப்பெற்றோமே! இதென்ன பாக்யம்! என்று ஸந்தோஷிக்க வேண்டியிருக்க, ஆங்கு - அவ்விடத்திலே, அதனுக்கு - அப்படியெம்பெருமான் திருநாமங்களைச் சொல்லியதற்கு, ஒன்றும் ஓர்-சற்றுமினும், பொறுப்புஇலனாகி - பொறுமையில்லாதவனாய்க்கொண்டு, பிள்ளையை - தன்புத்ரனை, சீறிவெகுண்டு - மிகக்கோபித்து, தூண் - அவன்தனக்குப்பொருத்தம்பார்த்து அளந்துநட்ட தூணை, புடைப்ப - அடிக்க, அதிலே, பிறை - மூன்றும் பிறைபோன்ற, எயிறு - பற்களையும், அனல் - நெருப்புப்பொறிகள் சிந்தாநின்றுள்ள, விழி - கண்களையும், பேழ்வாய் - பெரியவாயையுமுடைத்தாய், அப்ரிதர்கட்டி வாழலாம்படி, தெள்ளிய - தெளிந்திருந்துள்ள, சிங்கமாகிய - நர்ஸிம்ஹாவதாரஞ் செய்தருளின, தேவை - தேவனை, திருவல்லிக்கேணிக்கண்டேன்—. ... ... (அ)

எட்டாம்பாட்டு. (பள்ளியித்யாதி) பருவம், பள்ளியோதுகிற பருவம். (தன்சிறுவன்) தன்புத்ரன். சத்ருவின் புத்ரனை சொல்லினும் காலிலேவிழவேண்டும் படியானதிருநாமமாய்த்துச் சொல்லிற்று.

எட்டாம்பாட்டு.—(பள்ளியிலோதிவந்த தன்சிறுவன்) பள்ளியிலோதும் பருவத்திலே சொன்னவையடங்கலும் ப்ரஸாவஹிக்கவேண்டும்படி யிருக்கும்; இதாய்த்துப பருவமிருந்தபடி: அதுக்கு மேலே, தன்வயிற்றிலே பிறந்த ப்ரஜைசொன்னவை யடையப் பொறுக்கவேணும். (வாயிலித்யாதி) அவனப்போது சொல்லிற்று நாலிரண்டே யாகிலும், பருவத்துக்குத்தக்க வளவல்லாதபடி யிருக்கையாலே

எட்டாம்பாட்டு.—(பள்ளியில்த்யாதி.) ராவணனுகனுன புருஷஸிம்ஹத்தைக்கண்டு புகழாநிற்கச்செய்தே, ராவணனுடைய பூர்வஜந்மத்தின் ப்ராதிகூல்யத்தை யநுஸந்தித்து, அவனுக்கும் அநுசனான புருஷஸிம்ஹத்தைக் கண்டு புகழப்புக்காரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

நாலிரண்டேயாகிலுமென்றது - திருமந்த்ரமெட்டெழுத்தேயாகிலு மென்றுமாம்; "நாராயணேதிஸப்தோஸ்தி" என்கிறநாலும், * ஹரிரித்யக்ஷரத்வயமும் இரண்டுமேயென்றுமாம்; விஷ்ணுஷடக்ஷரியாகவுமாம்; "ப்ராதர்தேவேதி க்ஜேஷ்ணேதி ஹோவிந்தேதி வ ஜல்பதாம்|மய்யாஹ்நே மாயராஜ்ணே வ யோவஸாநன்ய த்யதாம்" என்றுஅவன்சொன்னசிலதிருநாமங்களென்றுமாம்.

(ஒள்ளியவாகிப்போத) அழகாகச்சொல்ல. "குழலினிது யாழினிதென்பர்" என்றானே; அதுவுமில்லையாய்த்து இவனுக்கு. (ஆங்கதனுக்கு) அவன்திருநாமத்தைச்சொன்னதுக்கு. (ஒன்றுமித்யாதி) ஒன்றுமொரு பொறுப்பற்று, பிள்ளையை. சீறி - கோபித்து, "அளந்திட்டதூண்" இத்யாதிப்படியே தூணை அடிக்க. (பிறையெயித்யாதி) பிறைபோன்ற எயிறுகளும் அக்நிபோன்ற விழிகளும் பெரியவாயையுமுடைய தெள்ளியசிங்கமான தேவனைத் திருவல்லிக்கேணியிலே கண்டேன். அ.

---

குவாலாகச் சொல்லுகிறார். (ஒள்ளியவாகிப்போத) வயிற்றிற்பிறந்தவன் சொல்லுகையாலே யினிதாயிருக்குமிறே. (ஆங்கு) அவ்விடத்தில். (அதனுக்கொன்றுமோர் பொறுப்பிலனாகி) பள்ளிபோதும் பருவத்திற்சொல்லுவதெல்லாம் பரியமாயிருக்கும்; தன்வயிற்றிலே பிறந்தவன் சொல்லிற்றெல்லாம் இனிதாயிருக்கும; அதுதன்னை சொல்லிலும் ஸிரஸாவஹிக்கவேண்டுமத்தைச்சொல்லிற்று; அபசாரப்ராசுர்யத்தாலே திருநாமம் கேட்கப் பொறுக்கமாட்டாமையாலே முனிந்தானாய்த்து. (பிள்ளையை) திருநாமம் சொன்னதுவே ஹேதுவாக, வயிற்றிற்பிறந்தவனைக் கைவிட்டானவன்; திருநாமம் சொன்னரோடே தமக்கு ஸம்பந்தமாக நினைக்கிறாராகையாலே (பிள்ளை) என்கிறார். (வெகுண்டு தூண்புடைப்ப) கோபத்தாலே, செய்வதறியாதே தூணைத்தட்ட. (பிறையெயிற்று) பிறைபோலே யிருந்த எயிற்றையும், அநலம்போலே யிருந்த கண்களையும், புறப்படவிடாநின்றுள்ள பெரியவாயையுமுடைய. (தெள்ளியசிங்கமாய்) ஹிரண்யனுடைய முதுகின் வாடிகைக்கண்டு பிரகாசியாதே, ஹேதுவேறுமாய், இவ்வழியாலே தானே ஆஸ்ரயணீயனென்னுமிடத்தை வெளியிட்டவன். ... ... ... ... ... அ.

தமஃப்ரசுரனுக்குத்திருநாமங்களொள்ளியவாயிருக்குமோவென்னவருளிச்செய்கிறார் (வயிற்றிலித்யாதி. "ஒன்று, ஓர்" என்றதுக்குத்தாத்பர்யமருளிச்செய்கிறார் (பள்ளிபோதுமித்யாதி.) ஆனாற்பொறுப்பிலனாகைக்கு ஹேதுவென்னென்ன வருளிச்செய்கிறார் (அஸஹ்யேதயாதி.) பொறுப்பிலனானபின்பு அவனுக்குப்பிள்ளையென்னுமது விருத்தமாகையாலே, ஆழ்வார், தமக்குப்பிள்ளையாக அத்யவஸித்தாரென்கிறார் (திருநாமமித்யாதி, "யுவதயஸ்தநயா:" என்றபடி திவ்யதயா அத்யவஸிக்கலாமிறே. பிறக்கன்வார்த்தைபொறுக்கமாட்டாவிட்டால், தூணைப்புடைக்கத்தான்செய்ததற்றமென்னென்ன வருளிச்செய்கிறார் (கோபத்தாலேயித்யாதி.) புறப்படவிடாநின்றுள்ள - நாக்கைப்புறப்படவிடாநின்றுள்ள வென்றபடி. இது "பேழ்" என்றதால் அர்த்தஸித்தம்; * சிங்கபதலக்ஷ்யமாகவுமாம். "தெள்ளிய -" ஹயலேசமின்றிக்கே தெளிந்தவென்றும், "தேவு" என்றும் சொன்னதுக்குத் தாத்பர்யம் (ஹிரண்யனுடையவித்யாதி.) ... ... ... ... ... ... அ

மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான் வேட்கையி னோடு சென்றிழிந்த
கானமர் வேழம் கையெடுத் தலறக் கராவதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்றுநின் றாழி தொட்டானை,
தேனமர் சோலை மாடமா மயிலைத் திருவல்லிக் கேணிக்கண் டேனே. ௯.

ப - ரை.—மீனமர்பொய்கை - மீனமர்பொய்கையிலே, நாள் - அப்போதலர்ந்த, மலர் - புஷ்பங்களை, கொய்வான் - பறித்து எம்பெருமான் திருவடிகளிலே ஸமர்ப்பிக்கவேணுமென்கிற, வேட்கையினோடு - ஆசையாலே, சென்று இழிந்த - வந்திழிந்ததாய், கான் - காட்டிலே, அமர் - ஸஞ்சாரம் பண்ணக்கடவதான, வேழம் - யானையானது, கை - தன் தும்பிக்கையை, எடுத்து - உயரவெடுத்து, அலற - பிளிறும்படி, கரா - முதலையானது, அதன் - அதினுடைய, காலினை - காலை, கதுவ - கவ்வ, அந்தஸமயத்திலே, ஆனையின் - ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய, துயரம் - துக்கம், தீர - தீரும்படி, புள்ளூர்ந்து - பெரிய திருவடியையேறிக்கொண்டு, சென்று - எழுந்தருளி, நின்று - அப்பொய்கைக்கரையிலே நின்று, ஆழி தொட்டானை - திருவாழியைப்பிடித்த ஸர்வேச்வரனை; தேன் அமர் - தேன்மாறாத, சோலை - சோலைகளாலே சூழப்பட்ட, மாடம் மயிலைத் திருவல்லிக்கேணிக் கண்டேனே. ... (௯)

ஒன்பதாம்பாட்டு. (மீனமர்பொய்கை) அருக்ஷய மானதையாலே மத்ஸ்யங்கள் அமர்ந்து வர்த்திக்கிற பொய்கையிலே புதுத செவ்விப்பூவை பறிக்கவென்று அழிந்தவனைக்கிடுக்க. (கானமர்) நறுநாற்றத்தையுடைய ஸ்ரீகஜேந்த்ரன் கையெடுத்துக் கூப்பிட. நாள் - நறுநாற்றம். பூமேல் காலையுடைய பூவையுடைய தானாலே பூநாறுமாப்போலே இதினுடைய புலன் மணமாயுந்து. (காவிக்யாதி) முதலே ஆனையின் காலைக்கதுவ. (ஆனையின்யாதி) அவ்வானையின் க்லேசம்தீர,

ஒன்பதாம்பாட்டு.—(மீனமர்பொய்கை) ஒருநாள் பூத்தேடிப்பெருமையாலே பட்டப்பகல் திரிகிறது, பூத்த தடாகத்தைக்கண்டு, ஸர்வேச்வரனுக்கு நல்லதொரு பூவிட்டதாகவேணுமென்று அறியாதே வந்து செவ்விப்பூவைப்பறிக்கக்கடவ பெரிய ஆசையோடே வந்திழிந்த. (கானமர்வேழம்) காட்டிலே ஸஞ்சாரம் பண்ணக்கடவ யானையானது கையெடுத்துக் கூப்பிடும்படியாக, முதலையானது இதின் காலைக்கதுவ. முதலைக்கு தன்னிலமாய், இதுக்கு வேற்றுநிலமாய்த்து. ஆனை நெடுநாள்பட்ட இடரெல்லாம் போம்படியாக,

ஒன்பதாம்பாட்டு.—(மீனமர்பொய்கை) ஆண்பிள்ளைகளான ஐவருக்கும், பெண்பிள்ளைகளான ஸ்ரீஜநகராஜன் திருமகள் இவர்களுக்கும், பள்ளிப்பிள்ளைகளான சிறுக்கருக்கு முதவினவனைக்கண்டேனே, ஒருதிர்யக்காலே யொருதிர்யக்குக்கு வந்த நோவையும் பொறுமே அரைகுலையத்தலைகுலைய வந்துதவினமையைத் தன்னிலே கட்டின்றி போயதுவிக்கிறொன்று ஸங்கதி கண்டுகொள்வது.

"மீனமர்" என்று விசேஷித்ததுக்கு ஹாவம் (க்ஷுத்ரேத்யாதி.) "கரா" என்றதினர்த்தம் (முதலையென்றது.) ஆனையாயிருந்து நீர்ப்புழுவுக்கைப்பட்டுக் கையெடுத்தலறுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (முதலைக்கித்யாதி.) [illegible] க.

மன்னுதண்பொழிலும்வாவியும்மதிளும்மாடமாளிகையும்மண்டபமும்
தென்னன்தொண்டையர்கோன்செய்த நன்மயிலைத்திருவல்லிக்கேணி
கன்னிநன்மாடமங்கையர்தலைவன்காமருசீர்க்கலிகன்றி [நின்றானை
சொன்னசொன்மாலைபத்துடன்வல்லார் சுகமினிதாள்வர்வானுலகே.௰.

ப - ரை.—மன்னு - நித்யமாய், தண் - குளிர்ந்திருந்துள்ள, பொழிலும்-சோலைகளையும், வாவியும் - நீர்நிலங்களையும், மதிளும் - மதிள்களையும், மாடம் - மாடங்களையும், மாளிகையும் - மேல்மச்சுள்ள க்ருஹங்களையும், மண்டபமும் - மண்டபங்களையு முடைத்தாம்படி, தென்னன் - பாண்டிமஹாராஜாவின் வம்சஸ்தனாய், தொண்டையர்-தொண்டைநாட்டி லுள்ளவர்களுக்கு, கோன-தலைவனான தொண்டைமான்சக்ரவர்த்தி,செய்த - ப்ரதிஷ்டிப்பித்த, நல் - அழகிதாயிருந்துள்ள, மயிலைத்திருவல்லிக்கேணி - மைலாப்பூரைப்படைவீடாகவுடைய திருவல்லிக்கேணியிலே,நின்றானை-நின்றவன்விஷயமாக;கன்னி-அரணாகப்போரும்படியாய், நல் - நன்றாயிருந்துள்ள, மாடம் - மாடங்களையுடைத்தான, மங்கையர்-திருமங்கையிலுள்ளார்க்கு, தலைவன் - ப்ரதாநராய், காமர் - அழகிய, சீர் - ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுடையரான, கலிகன்றி - ஆழ்வார், சொன்ன-அருளிச்செய்ததாய், சொன்மாலை - ஶப்தஸந்தர்ப்பமான, பத்துடன் - பத்துப்பாட்டுக்களையும், வல்லார்-அப்யஸிக்க வல்லவர்கள், இனிதுசுகம்-நித்யாநுபவம்பண்ணும்படியான, வானுலகு - பரமபதத்தை, ஆள்வர் - கிட்டப்பெறுவர்கள். ... ... ... (௰)

"தூவாயபுள்ளூர்ந்து வந்துதுறை" என்கிறபடியே துறையிலே சென்றுநின்று திருவாழியை விட்டவனை. (தேனமரித்யாதி) வண்டுகள் மொய்த்த சோலையையும் மாடமாளிகையையு முடைய திருவல்லிக்கேணியிலே கண்டேன். ... ... ... கூ.

பத்தாம்பாட்டு. (மன்னுதண்பொழிலித்யாதி) குளிர்ந்த பொழிலும் * * * சக்ரவர்த்தி செய்த நன்மயிலாப்பூரில் திருவல்லிக் கேணியிலே நின்றவனை. (கன்னியித்யாதி) அழிவில்லாத மாடங்களை * * *

பெரியதிருவடியை மேற்கொண்டுவந்து, ஆனைக்கிடரின்றிக்கே முதலைக்கே யிடராம்படி திருவாழியை யெவிறையத்து.வண்டுகளமர்ந்த சோலையையும்மாடங்களையுமுடைத்தான மயிலாப்பூரில் திருவல்லிக்கேணிக்கண்டேனே. ... ... ... ... அ.

பததாம்பாட்டு — (மன்னுதண்பொழிலுமித்யாதி) நித்யமாய்க் குளிர்ந்திருந்துள்ளபொழிலும்,நல்ல நீர்நிலங்களும், அரணாகப்போரும்படியான மதிள்களும், மாடங்களும், மாளிகைகளும், மண்டபங்களும், இன்னமும் சொல்லிச் சொல்லாத நன்மைகளுமெல்லா முண்டாம்படியாய்த்து தொண்டைமான் சக்ரவர்த்தி ஏற்றிற்று. (கன்னி) அரணாகப் போரும்படியாய் நன்றாயிருக்கிற மாடங்களை யுடைய

பத்தாம்பாட்டு.—(மன்னுதண் பொழிலுமித்யாதி) சொல்லிச்சொல்லாதநன்மைகளுமெல்லாமென்றது-"நன்மயிலை" என்றுவிசேஷித்தநன் ....... அது வும் இதுவும் என்கிற சகாரதாலே ஸலித்ததென்றுமாம். "கன்னி" என்று - அழியாத பதார்த்தத்தை க்காட்டுகையாலே, (அரணாகப்போரும்படியென்றது.)௰.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

இக்குறிப்புள்ளவிடங்களில் விட்டுப்போன க்ரந்தத்தைக் கோஶாந்தரங்களில் கண்டுகொள்வது.

யுடைய ஆழவாரருளிசசெயதஇபபததுபபாட்டையும வலலவாகள (நகமிதயாதி) ஒருவருததமற பரமபதததை * * * .. ௰.

வாதிகேஸரி அழகியமணவாளசசீயா திருவடிகளேசரணம.

திருமஙகைத துரையாரா (காமருசீரககலிகனறி) ஸபஹணீயமானஸ்ரீ வைஷணவஸ்ரீயையுடைய ஆழவாரருளிசசெயதபததையுமஅஹயஸிகக வலலவாகள (நகமிசீராளவா வானுலகே) நிதயாநுபவம பணண லாமபடியான ஸ்ரீயயிஸஹிதையை யாயிககப பெறுவாகள. ... ௰

அடிவரவு — விலலோத வநதனை நினறான இனதுணை
அஙகணடததன பாரிமின மனனு அனறுமா

திருமஙகையாழவா திருவடிகளேசரணம.

பெரியவாசசானபிளளை திருவடிகளேசரணம.

இரணடாமபதது-நாலாநதிருமொழி அனறாயா பரவேசம.

விரோதிநிரஸநஸீலனுய, பாஙகவிரோதிகளா அநாயாஸேந போககவலலனுமாய, ஸாவஸவாமியான ஸாவேஸவரன, உகந தருளின * ஷிகராபிருபபாா வாாததையைககேடடு அநாயப படுபோகாதே அவனை யாஸரயிதது க்ருதாாதராயப போருஙகோள * * * . *

பாடடுமாசெராந கூடடமாது விரோதிநிரஸநஸீலனுய, பர மைவிரோதிபாபயகளா அநாயாஸேநபோககவலலனுய, ஸாவ ஸவாமியான ஸாவேஸவரன, உகநதருளின நிலஙகளெஙகும பணணு மவிருபபததைத திருநீாமலையிலேபணணிககொணடுவநதுஸநநிஹிதனு [உரு தனுனை, அவஸ்தாாயிருபபாா வாாததையைக கேடடு அநாயப படடுபோகாதே அவனை யாஸரயிதது க்ருதாாதராயப போஙகோள என்று பரோபதேசம பணணுகிறாா. . . *

அனறாயா பரவேசம — சிஙகவேழகுனறததி லிருநதவாறும, திருவே ஙகடததில நினறவாறும, திருவெவவுளில கிடநதவாறுமான விபறறைத திரு[நீா] மலையிலே யொருமுகமசெயதருளியாநிறக, கரிமகரஙகளுககுணடான வைரமதீரக கடடுடையிட்டு நடநதவாறு மநுஸநதிததாராயிருநதாா, இவ வநுஸநதா பரகாஷததாலே, இனனமிபபடி யநுஸநதிககலா மிடஙகளுணடோ என்று திரு வுளளததிலே யாராயாநிறக, திருநறையூா முதலானவைதோறறி, அவையெல லாவறறிலுமுணடான விருபபததைத திருநீாமலையிலே பணணினபடியையநுஸ யிககிறாரெனறு ஸஙகதிகணடுகொளவது. "அவாசெயகைவெறுதது" என்ற[பாடடை] யும, "பேசுமளவனறிதுவமமின" எனறபாடடையு முடகொண்[டருளி]ச செயகிறாா (அநவஹிதராயிதயாதி.) ... ... ...

அன்றாயர்குலக்கொடியோடணிமாமலர்மங்கையொடன்பளவி,அவுணர்க்
கென்றானுமிரக்கமிலாதவனுக்குறையுமிடமாவ திரும்பொழில்சூழ்
நன்றாயபுனல்நறையூர் திருவாலி குடந்தை தடந்திகழ் கோவல்நகர்
நின்றானிருந்தான்கிடந்தான்நடந்தாற்கிடம்மாமலையாவதுநீர்மலையே. ௧

ப - ரை.— அன்று - க்ர்ஷ்ணாவதாரத்தில, ஆயர்குலக்கொடியோடு - *தலைவாயர் கொழுந்தான நப்பின்னை ப்பிராட்டியுடனும், அணி - அழகியதாய், மா - ச்லாக்யமான, மலர்மங்கையொடு - தாமரைப்பூவைப் பிறந்தகமாகவுடைய பெரியபிராட்டியாரம்ஸமானருக்மிணிப்பிராட்டியுடனும், அன்புஅளவி-ஸ்நேஹந்தோற்றக்கலந்து,என்றும்-எக்காலத்திலும்,அவுணர்க்கு-அஸுரர்கள்பக்கல்,இரக்கம்இலாதவனுக்கு - ச்ர்பை யில்லாதவனாய்; இரு - பெரிய, பொழில் - சோலைகளாலே, சூழ்-சூழப்பட்டு, நன்றாயபுனல் - நல்லஜலஸம்ர்த்தியை யுடைத்தான, நறையூர் - திருநறையூரிலே, நின்றான் - நின்றவனாய், திருவாலி-திருவாலியிலே, இருந்தான் - இருந்தவனாய், குடந்தை-திருக்குடந்தையிலே, கிடந்தான் - சாய்ந்தவனாய், தடம் - தடாகங்களாலே,திகழ்-ஒளிவிடாநின்றுள்ள, கோவல்நகர்-திருக்கோவலூரிலே, [௰௩
நடந்தாற்கு - நடந்தவனான ஸர்வேச்வரனுக்கு, உறையும் - நித்யவாஸம் பண்ணும், இடம்ஆவது - ஸ்தாநமாவது, மா-ச்லாக்யமான, மலை - மலையான, நீர்மலை-திருநீர்மலை என்கிறார். ... ... ... ... ... (௧)

முதற்பாட்டு. * * * பிராட்டியுடனும் அழகிய தாமரைப்பூவை யிருப்பிடமாகவுடையபெரியபிராட்டியாருடனும்ஸம்ஶ்லேஷித்து. [௨௰
* * * வாஸம்பண்ணு மிடமாவது. (இரும்பொழிலித்யாதி) பெரிய பொழிலால் சூழப்பட்ட திருநறையூர், திருவாலி, திருக்குடந்தை, இடமு * * * த்திலே. (நின்றானித்யாதி) திருநறையூரிலே நின்று

முதற்பாட்டு.—(அன்றாயர்) முன்பு-பண்டொருநாள், நப்பின்னைப் பிராட்டியோடும், அழகிய தாமரைப்பூவை யிருப்பிடமாகவுடை[௨௫
ய பெரியபிராட்டியாரோடும் விரும்பிக்கலந்து. (அவுணர்க்கித்யாதி) அவர்களுடன் கூடவிருந்தபோதுமகப்பட அஸுரவர்கத்துக்கு ஒருக்காலு மிரக்கமில்லாதவனுக்கு நித்யவாஸம் பண்ணுகைக்கு ஸ்தாநமாவது ; – பரந்த பொழிலாலே சூழப்பட்டு நல்லஜலஸம்ருத்தியை யுடைத்தான திருநறையூர், இப்படிப்பட்ட நன்மைகளையுடைய திருவாலி, திருக்குடந்தை, தடாகங்கள் திகழாநின்றுள்ள திருக்கோவலூர், இவைதுடக்கமானவற்றிலே.(நின்றானித்யாதி)திருநறையூரிலே

முதற்பாட்டு.—(அன்றாயரித்யாதி.) "அன்பளவி" என்றதினர்த்தம் (விரும்பிக்கலந்தென்றது.) அளாவிஎன்றது "அளவி" என்று குறுகிக்கிடக்கிறது. "என்றானும்-" என்றாகிலுமென்றர்த்தமாய்,தாத்பர்யம் (அவர்களுடனித்யாதி.) மூலத்[௩௫
திலே, (கோவல்நகர்) என்றவநந்தரம், இவற்றிலே என்றுஅத்யாஹரித்துக்கொள்வது. வ்யாக்யையிலேயும், (திருக்கோவலூர்இவை ) என்று வாக்யத்தைநிறுத்தி, அநந்தரம், திருநறையூர்என்றஒருபதம்அத்யாஹரிப்பது. இவ்வாக்யத்தை மேலுக்கு ஶேஷமாக்கிக்கொள்வது.

காண்டாவநமென்பதோர்காடமரர்க்கரையனது கண்டவனிற்கமுனே
மூண்டாரழலுண்ணமுனிந்ததுவுமதுவன்றியும் முன்னுலகம்பொறை
தாண்டானவுணனவன்மார்பகலமுகிராலவகிர்ந்தகமுனிந்தரியாய் [தீர்த்
நீண்டான குறளாகிநிமிர்ந்தவனுக்கிடம் மாமலையாவதுநீர்மலையே. உ

ப - ரை.—அமரர்க்கு அரையனது - தேவர்களுக்குத் தலைவனான இந்த்ரனு டையதாய, ஓர் - ஒருவராலு மழிக்கவொண்ணாதபடியான, காண்டாவநம் என்பது - காண்டவவநம் என்னும், காடு - காட்டை, அவன் - அந்தஇந்த்ரன் நின்றே, கண்டு நிற்க-பார்த்துக் கொண்டிருக்க, முனே - அவன்முன்பே, மூர் - பூர் ணமான, அழல் - அக்நியானது, மூண்டு - மேலெழுந்து, உண்ண - புஜிக்கும்படி யடி, முனிந்தது - சீறியருளினவனாய்; அதுவன்றியும் - அதுக்குமேலே, முன் - பூர்வ காலத்தில், உலகம் - புமியின், பொறை-பாரத்தை, தீர்த்து - போக்கி, ஆண் டான் - லோகத்தை ரக்ஷித்தவனாய, அவுணனவன்-ராக்ஷஸனான ஹிரண்யனுடைய, அகலம்-பரப்பு, மார்பு - மார்பை, உகிரால் - திருவுகிராலே, வகிர்ந்த - இரண்டு கூறும்படியாக, முனிந்து-சீறியருளி, * அளந்திட்ட தூணை அவன் தட்டினபோது யெழுந் தே, அரியாய - ஸிம்ஹரூபியாய், நீண்டான - வளர்ந்திட்டவனாய் ; குறளாகி- வாமநரூபியாய்க் கொண்டு, மஹாபலிபக்கலிலே சென்று நீரேற்றபின்பு, நிமிர் ந்தவனுக்கு - த்ரிவிக்ரமாவதாரம் செய்தருளின ஸர்வேச்வரனுக்கு, இடம்ஆவது- நித்யவாஸஸ்தாநமாவது, மாமலையான நீர்மலை—. ... ... ... (உ)

திருவாலியிலே யிருந்து, திருக்குடந்தையிலே கண்வளர்ந்து,
கக்கோவலூர் * * * மலையாவது நீர்மலை. ... ... க.

இரண்டாம்பாட்டு. (காண்டாவந மித்யாதி) காண்டாவந மாவது - இந்த்ரனுடைய ப்ரதிதாபமான * * *
நின்றான், திருவாலியிலே யிருந்தான், திருக்குடந்தை யிலே சாய்ந்தான், திருக்கோவலூரிலே நடந்தான். (இடமமாமலையாவது) [உறு மலையாயிருக்கச்செய்தே அல்லாதவை வாஸஸ்தாந மாகிறதில்லை யிறே; உகந்தருளின நிலங்களெங்கும் பண்ணக்கடவ விருப்பத்தைப் பண்ணிக்கொடுவந்து ஸந்நிஹிதனானதேசம் திருநீர்மலை ... (க)

இரண்டாம்பாட்டு.— (காண்டாவநம) வாண்டவ வநமெ ன்று - இந்த்ரனுடைய காவற்காடாய், அதுதான் ஒருவர்க்கும்

"இடம் - ஆவது - மாமலையான - நீர்மலை" என்று அந்வயித்துக்கொள்வது. நீர்ம லையை "மாமலை" என்று விசேஷிக்க வேணுமோவென்ன (மலையாயிருக்க வித்யா தி.) எங்கும பண்ணக்கடவவிருப்பத்தையென்றது-நின்றதும்,இருந்ததும், கிடந்த தும, நடந்ததுமான விவற்றையென்றபடி. ... ... ... க.

இரண்டாம்பாட்டு.—(காண்டாவநமித்யாதி.) கீழ்த்திருமொழியிலே, "இந் திரன்சிறுவன் தேர்முன் நின்றானே" என்று ப்ரஸ்துதனான இந்த்ரனும், அவ னுதயாநத்தை யழித்தபிள்ளையும், அவனைக்கொண்டு ஸம்ஹாரத்தை நீக்கினபடியை யும், அததோடு தோள்தீண்டியான பிதாபுத்ரர்களுடைய வாய்யவாயக ஹாவ ஸம்பந்தமும் திருவுள்ளத்தில் தோற்றி, அவற்றையநுஸந்தியா, நடந்தானுடைய அபதாநத்தி லீடுபடுகிறாரென்றுஸங்கதி.

"காண்டா" என்று - நீட்டலாய், வகரம் கடைக்குறைத்தலாய் க்கிடக்கிற தென்று விலக்ஷித்தருளிச்செய்கிறார் (காண்டவவநமென்றித்யாதி.)

டாநிற்கச்செய்தே அக்நி ஸஹவான் "எனக்கு விருந்திட வேணும்" என்று அபேக்ஷிக்க, "இந்த்ரன் காட்டை ஸஹ்ஜி" என்று *** ஸிக்கவேணுமென்றத்தைச் சொல்லுகிறது. (அமரர்க்கரையனித்யாதி) இந்த்ரன் பார்த்துக்கொண்டு நிற்க அவன்முன்னே *** (மூன்னுலகமித்யாதி) ஸம்ஹாரநிர்ஹரணம் பண்ணி லோகத்தை ரக்ஷித்தான். (அவுணனித்யாதி) ஹிரண்யனுடைய அகன்ற *** வக்ஷஸ்ஸையாலே நிமிர்ந்தவனுக்கிடமாமலை நீர்மலை. ... ... ... ... உ.

அழிக்க வொண்ணாத படியா யிருக்குமாய்த்து. அர்ஜுநனும க்ருஷ்ணனும் பூம்பந்தேறிட்டு விளையாடாநிற்கச்செய்தே, அக்நி ஸஹவான் "எனக்கு விருந்திட வேணும்" என்று அபேக்ஷிக்க, "நீ இந்த்ரனுடைய காவற்காட்டை ஸஹ்ஜி" என்று விட்டாராய்த்து, அங்கே ஆஸுரப்ரக்ருதிகள் புக்கொதுங்கினவாறே அவர்களை நிரஸிக்கவேணுமென்று; அத்தைச் சொல்லுகிறது. அமரர்க்கரையனுண்டு - இந்த்ரன், அவன்கண்டு நிற்க, அவன் முன்பே. (மூண்டாரழலுண்ண முனிந்ததுவும் அதுவன்றியும்) பேகணித்துப் பிற்காலித்துப் போகக்கடவ அக்நியானது மேல்விழுந்து ஸஹ்ஜிக்கும்படியாகச்சீறி, அதுக்குமேலே. அன்றிக்கே, மூண்டாரென்று - எதிரிட்டவர்களாய், ஶத்ருக்களாச் சொல்லவுமாம். (மூன்னுலகமித்யாதி) மூன்று ஸம்ஹாரத்தைப் போக்கி நிர்வஹித்துப்போந்தவன். ஆஸுரப்ரக்ருதியான ஹிரண்யனுடைய பரந்த மார்வைத் திருவுகிராலே யிரண்டு கூறும்படி கிழித்தருளி. (அரியாய்நீண்டான்) அவனுடைய ப்ரதிஜ்ஞாகாலத்திலே வந்து உதவிற்றிலனாகில் ஸகுணங்கள் ஸாவத்யமாம்போலே. (குறளித்யாதி) ஸர்வாதிகனானதான் வாமநவேஷத்தை பரிக்ரஹித்து நிற்கச்செய்தே மஹாபலி பக்கலிலே சென்றிரந்து திருக்கையிலே நீர் விழுந்தவாறே ஆகாஶாவகாஶமிடமடையும்படி வளர்ந்து அளந்துகொண்டவனுக்கு வாஸஸ்தாநம். ... ... ... உ.

---

இந்திரனநுகூலனன்றோ, அவன்காட்டை அழலுண்ண முனிந்ததுக்கு ப்ரஸக்தியென்னென்ன வருளிச்செய்கிறார் (அர்ஜுநனுமித்யாதி.) "முனே" என்றதினர்த்தம் (முன்பேயென்றது.) மூண்டு, ஆர் - பூர்ணமாக, அழல் - அக்நி, உண்ண என்றுமஸ்த்ரார்த்தமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (பேகணித்தித்யாதி.) பேகணிப்பு - வைவர்ண்யம். இத்தால் - இதுக்குஹேதுவான இந்த்ரனிடத்தில் நின்றும் வந்த லஜ்ஜாபயங்களைச் சொல்லிற்றாய்த்து. அக்காட்டி லிருக்கிற மூண்டாரை முனிந்ததுவும் என்று த்விதீயையாக்கி யருளிச்செய்கிறார் (அன்றிக்கேயித்யாதி.) "நீண்டான்" என்றது - உத்க்ருஷ்டனென்று யருளிச்செய்கிறார் (அவனுடையவித்யாதி) ப்ரஹ்லாதனுடைய வென்றபடி. ... ... உ.

மூன்றாம்பாட்டு.—(அலமித்யாதி.) "மூன்னுலகம்பொறைதீர்த்தாண்டான்" என்னுமது க்ருஷ்ணாவதாரத்துக்கு ப்ரயோஜநப்ரயோஜநமாகையாலே அத்தை ஸப்ரகாரமாக ஸஹிக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

மூ.—அலமன்னுமடற்சுரிசங்கமெடுத † தடலாழியினாலணியாருருவில்
புலமன்னுவடம்புனைகொங்கையினாள் பொறைதீரமுனாளடுவாளமரில்
பலமன்னர்படச்சுடராழியினைப்பகலோன்மறையப்பணிகொண்டணிசேர்
நிலமன்னனுமாயுலகாண்டவனுக்கிடம் மாமலையாவது நீர்மலையே. ௩.

ப-ரை.—அணியார் மிகவும் அழகிய, உருவில் - திருமேனியிலே, அடல் - யுத்தோந்முகமான, ஆழியினால் - திருவாழியோடே, அலம் - கலப்பையையும், மன்னும் - ஸர்வதேசமும் கையில் குடிகொண்டிருக்குமதாய், அடல் - ஶத்ருக்களை கொல்லும்படி மிடுக்கை யுடைத்தாய், சுரி - சுரியையு முடைத்தான. சங்கம் - ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், எடுத்து - தரித்து, முன் - துர்யோதநாதிகள் பொருத அன்று, புலம் - அவரவருடைய சக்ஷுராதி கரணங்களுக்கு, மன்னு - ஸர்வகாலமும் ப்ரவணமாய்க் கிடக்கும்படியாய், வடம் - ஹாரம் முதலிய ஆபரணங்களாலே, புனை - அலங்கரிக்கப்பட்ட, கொங்கையினாள் - முலையை யுடைத்தான ஸ்ரீபூமிப்பிராட்டியுடைய, பொறை - பாரத்தை, தீர - போக்குகைக்காக, அடு - ஶத்ருக்களைக் கொல்லுகிற, வாள் - ஒளியையுடைத்தான, அமரில் - பாரத யுத்தத்திலே, பலமன்னர் - அநேக ராஜாக்கள், பட - நசிக்கும்படி, சுடர் - மிக்க தேஜஸ்ஸையுடைய, ஆழியினை - திருவாழியை, பகலோன் - ஆதித்யன், மறைய - மறையும்படியாக, பணிகொண்டு - காரியங்கொண்டு, அணிசேர் - அழகுமிக்க, நிலமன்னனுமாய் - பூபதியுமாய், உலகு ஆண்டவனுக்கு - லோகபாலநம் பண்ணினவனுக்கு, இடமாவது மாமலையான நீர்மலை—. .. ... (௩)

மூன்றாம்பாட்டு. (அலமித்யாதி) அலமென்று - கலப்பையும், ஸாமையும், ... ஜந்யத்தை நிருப்பவளத்திலே வைத்ததும். (அடலித்யாதி) மிடுக்கையுடைய திருவாழியைக் கையிலே வாங்கியும் ** † சொல்லப்பட்டமுகத்து வடத்தைக் கொங்கையிலே சாத்தப்பட்ட,

மூன்றாம்பாட்டு.—(அலம்) ஹலம், நிரயமாய யுத்யோகமுவமாய சுரியையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யம், இவற்றை யரித்து. (அடலாழியினாலணியாருருவில்) யுத்யோகமுகமான திருவாழியோடே, நன்றாயிருக்கிற திருமேனியிலே, கலப்பை, ஸ்ரீபாஞ்சஜந்யம் என்றிவ்விரண்டை யரிக்கின்றதென்றுதல் (அடுத்து) என்று பாடமாகில், அழகியவடிவோடே, திருவாழியோடே மற்றைத் திவ்யாயுதங்களையும் சேர்த்து. அதாவது — "உபாஸம்ஹார" என்ன, மறைத்தபடி. ஆக, வெளியிடிலும் மறைக்கிலும் ஆஶ்ரிதாயமா யிருந்தபடி. (புலமன்னுமித்யாதி) ஸர்வேஶ்வரனுடைய ஸாவகரணங்களும் தன்பக்கலிலே ப்ரவணமாம்படி ஸாவாபரணங்களாலும் அலங்க்ருதமான திருமுலைத்

"அடல்" என்றதனாயம் (யுத்யோகமுகமாயென்றது.) "உருவில்" என்றது - [சுடு ஸப்தமியாக்கி, "அணியாருருவில் - அடலாழியினால் - அலமன்னுமடற்சுரிசங்கமெடுத்து" என்று அந்வயம் விவக்ஷித்தருளிச்செய்கிறார் (யுத்யேத்யாதி.) "உருவில்" என்றதனைத் தஜ்தீயையாக்கி, பாடாந்தரத்தில் அந்வயமப்படியேயாய், தாத்பர்யம் (அழகிய வித்யாதி.) "வடம்" என்று - ஆரமாய், இது ஸகலாபரணங்களுக்கு முப லக்ஷணம். புனைகை - பூணுகையா யருளிச்செய்கிறார் (ஸாவேத்யாதி.)

† "அடுத்து" என்று பாடாந்தரம்.

மூ.—தாங்காததோராளரியாயவுணன்றனை வீடமுனிந்தவனாலமரும் பூங்கோதையர்பொங்கெரிமூழ்கவிளைத்ததுவன்றியும்,வென்றிகொள்வாளமரில் பாங்காகமுனைவரோடன்பளவிப்பதிற்றைந்திரட்டிப்படைவேந்தர்பட நீங்காச்செருவில் நிறைகாத்தவனுக்கிடம் மாமலையாவது நீர்மலையே.

---

ப-ரை.—தாங்காதது - எதிரிகளால் தடுக்க வொண்ணாதபடி, ஓர்-ஒப்பற்ற, ஆளரியாய் - நரஸிம்ஹமாய், அவுணன்றனை - ஹிரண்யாஸுரனை, வீட - ப்ராணன்விடும்படி, முனிந்து - சீறியருளி, அவனால் - அவன்பரிக்ரஹத்தாலே, அமரும் - தரித்திருக்குமவர்களாய், பூ - பூவால் அலங்கரிக்கப்பட்ட, கோதையர் - மாலைகளையுடையரான ஸ்த்ரீகள், பொங்கு எரி - கிளருகிற அக்நியிலே, மூழ்க - புகும்படி, விளைத்து - பண்ணினவனாய்; அதுவன்றியும் - அதுவேயன்றிக்கே, முன் - துர்யோதநாதிகள பாண்டவர்களுக்கு ஒருகோற் குத்து நிலமும் கொடுக்கவிசையாதவன்று, வென்றிகொள் - வெற்றியோடல்லது மீளாதபடி, வாள் - மதிப்புடைத்தான, அமரில் - யுத்தத்திலே, ஐவரொடு - பஞ்சபாண்டவர்களோடே, பாங்காக - அவர்களுக்குத் தக்கபடி, அன்பு அளவி - ஸ்நேஹம்தோற்றக் கலந்து, பதிற்றைந்திரட்டிவேந்தர் - துர்யோதநாதிகள் நூற்றுவரும், படை - அவர்களுடைய ஸமூஹமும், பட - முடிந்துபோம்படியாக, செருவில் - பாரதயுத்தத்தில், த்ரௌபதியினுடைய, நிறை - ஸ்த்ரீத்வத்தை, நீங்கா - நீங்காதபடி, காத்தவனுக்கு - ரக்ஷித்தவனான ஸர்வேஶ்வரனுக்கு, இடமாவது மாமலையான நீர்மலை—. ... ... ... ... ... ... (௪)

---

புலமங்கையுண்டு-ஸ்ரீபூமிப்பிராட்டி, * * * பலராஜாக்கள்பட.(சுடரித்யாதி) நிரவதிகதேஜோரூபமான திருவாழியாலே ஆதித்யன்மறையும்படி அவனை * * * ... ... ... ... ௫.

தடத்தை யுடைய ஸ்ரீலக்ஷ்மிப்பிராட்டியாருடைய ஹாரமானது போம்படியாக, முன்பு, ஆள்களை முடிக்கிற ஒளியையுடைத்தான பூசலிலே யென்னுதல்; ஆண்பிள்ளைகளாயிருப்பாரை முடிக்கக்கடவ மதிப்புடைத்தான பூசலிலே. (பலமன்னர்பட) நாளொன்றுக்குப் பதினாயிரம் ராஜாக்கள் படும்படியாக, நிரவதிக தேஜோரூபமான திருவாழியை ஆதித்யன் மறையும்படியாகக் காரியங்கொண்டு. அணிசேர்நிலமென்னுதல்; (நிலமன்னனுமாயுலகாண்டவனுக்கு)வக்ரவர்த்தித்திருமகனைச் சொல்லுதல்; அன்றிக்கே, ஸம்ஹாரநிர்வஹணம் பண்ணினபடியைச் சொல்லுகையாலே க்ருஷ்ணனைச்சொல்லுதல். ... ... ... ... ... ௫

---

"வாள் -" மதிப்பென்றுயோஜநாந்தரம்(ஆண்பிள்ளையித்யாதி.)"அணிசேர்" என்றது - *நிலத்துக்கு விஶேஷணமாதல், * மன்னனுக்கு விஶேஷணமாதலென்று யோஜநாத்வய மருளிச்செய்கிறார் (அணிசேரித்யாதிவாக்யத்வயத்தாலே.) ... ... ௫.

நாலாம்பாட்டு.—(தாங்காதவித்யாதி.) * தெள்ளிய சிங்கத்தையும் * தேவகி சிங்கத்தையும் "பொறைதீர்த்தாண்டான், அரியாய்நீண்டான்" என்றநுஸந்தித்ததன்றியே, தட்டுமாற்றியநுஸந்திக்கிறார் ஆராமையாலே யென்று ஸங்கதி கண்டுகொள்வது.

மூ.—மாலுங்கடலாரமலைக்குவடிட்டணைகட்டிவரம்புருவ மதிசேர்
கோலமதிளாயவிலங்கைகெடப் படைதொட்டொருகாலமரிலதிரக்
காலமிதுவென்றயன்வாளியினால் கதிர்நீண்முடிபத்துமறுத்தமரும்
நீலமுகில்வண்ணனெமக்கிறைவற்கிடம் மாமலையாவது நீர்மலையே.ரு.

ப - ரை.—ஒருகால் - ராவணன் கைவிஞ்சினவன்று; மாலும் - திரைக்கிளர்த்தியையுடைய, கடல் - கடலானது, ஆர - நிறையும்படி, மலைக்குவடிட்டு - மலையின்ஶிகரங்களைக் கொண்டு, வரம்புருவ - அக்கரையிலே சென்றுதட்டும்படி, அணைகட்டி - ஸேதுபந்தம்பண்ணி, மதிசேர் - சந்த்ரனைஅளாவும்படி ஓங்கியிருப்பதாய், கோலம்-அழகிதான, மதிளாய - மதிள்களையுடைய, இலங்கை - லங்கையானது, கெட - அழியும்படியாக, படை - ஆயுதங்களை, தொட்டு - பிடித்து, அமரில் - யுத்தத்திலே, அதிர - அதிரும்படி பண்ணினவிடத்திலும், அவன்மேனாணித்திருந்தமையால், இதுகாலம் என்று - இவனைமுடிக்கைக்கு இதுநல்லகாலம் என்று, அயன்வாளியினால் - ப்ராஹ்மாஸ்த்ரத்தாலே, கதிர் - ஒளியுடைத்தான, நீள்முடிபத்தும்-பெரியகிரீடங்கள்தரித்த பத்துத்தலைகளையும் அறுத்து-சேதித்து, அமரும்-திருவயோத்யையில் பிராட்டியுநதானுமா யெழுந்தருளியிருந்தவனாய், நீலமுகில்-காளமேகம்போன்ற,வண்ணன்-திருநிறத்தையுடையனாய்,எமக்குஇறைவற்கு-நமக்குஸ்வாமியானவனுக்கு, இடமாவது மாமலையானநீர்மலை—. ... ரு.

நாலாம்பாட்டு. (தாங்காதநித்யாதி)ஒருவரால்தகையவொண்ணாவபிஹமாய், ஹிரண்யனை முடித்து அவனாலே எல்லாஹோமங் கஞூ * * * ண்ணி. (அதுவன்றியுமித்யாதி) அதொழியவும், வெற்றிகொண்டல்லது நில்லாத அழகுடைய பூசலிலே. (பாங்காகவித்யாதி) * * * உறவுபண்ணி, ராஜாக்களான துர்யோயநாதிகள் நூற்றுவரும், அவர்களுககுப படைத்துணையானவர்தாமும் பட. (நீங்காவித்யாதி) செருவில் தன்னிறைவும் நீங்காதபடி.நிறைவு-அமைதி. த்ரௌபதியுடைய ஸ்த்ரீத்வத்தைப் பரிஹரித்தவனுக்கு. ... ச.

நாலாம்பாட்டு.—(தாங்காதநித்யாதி) எதிரிகளால் தாங்கவொண்ணாத நரஸிம்ஹமாய், ஹிரண்யன் முடியும்படியாகச் சீறி; அவனாலே யரிக்கிற பூங்கோதையருண்டு - ஸ்த்ரீகள், அவர்கள், கிளர்ந்தெரிகிறநெருப்பிலேபுக்குமுடிந்து போம்படிபண்ணி; அதுவேயன்றிக்கே. (வென்றி யித்யாதி) வெற்றிகொண்டல்லது மீளக்கடவதல்லாத மதிப்புடைய பூசலிலே. (பாங்காக)தான்ஸ்வாமியானமுறைதோற்றவிருக்குமாகில் அவர்களோடும் பொருந்தவொண்ணாதிறே; அதுக்காகத்தன்னைத்தாழவிட்டு,அவர்களோடே உறவுபண்ணிக் கலந்து, அற்றைக்குநூற்றுராஜாக்களை வெற்றிகொண்டல்லதுமீளாத பூசலிலே, த்ரௌபதியுடைய ஸ்த்ரீத்வத்தைப்பரிஹரித்தவனுக்கு.ச

"வீட" என்றது - நீட்டலாய், விட - ப்ராணம்விடும்படியென்று ஸம்ஹார்யமாய், ஹிதம் (முடியும்படியென்றது.) அவர்களோடும் - ஐவரோடுமென்றபடி. *அன்பளவிபஹார்யம் (கலந்தென்றது.) "பதிற்றைந்து -" ஐம்பது, "இரட்டி-" அதிரட்டி, நூறென்றபடி; "படைவேந்தர் -" ஆயுயஸஹிதரானராஜாக்களென்றுகண்டுகொள்வது. "நிறைகாத்தவன்" என்றது - வீரபத்நித்வ ப்ரயுக்தபூர்த்தியை ரக்ஷித்தவனென்று ஸம்ஹார்யமாய், ஹிதார்யமருளிச்செய்கிறார் (த்ரௌபதீத்யாதி) ஸ்த்ரீத்வநிபந்தமான அச்சத்தையென்றபடி. அச்சம் - ஸ்த்ரீத்வயர்மமிறே.... ச

**அஞ்சாம்பாட்டு.** (மாலுங்கடலித்யாதி) கத்துகிற கடல் தூர மலைகளையிட்டு அணைகட்டி. (வரம்புருவ) அக்கரையிலே கிட்ட. (மதிசேரித்யாதி) சந்த்ரபதத்திலே கிட்ட ஓங்கின அழகிய மதிளையுடைய லங்கையையழிய. (படையித்யாதி) ஆயுதத்தை அமரிலே[ரு லங்கை யதிரத்தொட்டு ஒருக்கால். (காலமித்யாதி) நல்லகாலம் இவனைமுடிக்க என்று ப்ரஹ்மாஸ்த்ரத்தாலே ஒளிவிடாநின்ற தலையையறுத்து. (அமருமித்யாதி) மீண்டு திருவயோத்யையிலே புகுந்து திருவபிஷேகம்பண்ணி, பதினோராயிரம் ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்த காளமேகம்போன்ற வடிவையுடைய நம்ஸ்வாமிகளுக்கு. ௫.

---

அஞ்சாம்பாட்டு.—(மாலுங்கடல்) ஜலஸம்ருத்தியாலே பிச்சேறின கடலானது. திரைக்கிளர்த்தியை யுடைத்தான கடலென்றபடி. (ஆர) நீரிலாழக்கடவ மலையினுடைய சிகரங்களை முறித்து அணை கட்டி. (வரம்புருவ) அக்கரையிலே சென்று தட்டும்படி. (மதியித்யாதி) சந்த்ரபதத்தளவும்செல்லவோங்கி தர்ஸநீயமாயிருக்கிறமதி[ம ளையுடைத்தான லங்கையானது அழியும்படியாக திவ்யாயுதங்களைப் பிடித்து, யுத்தத்திலே அதிரும்படியாக. அதாவது - கடலையணைசெய்து எடுத்துவிட்டு அடைமதிள்படுத்தி முதல்நாளைப்பூசலிலே கெடும்படியாகப்பண்ணி, "பையல் தானே யினி அநுதாபம் பண்ணி யிளைத்துவருகிறான்" என்று விட்டிருந்தவிடத்து, பின்னையுமவன்[உ-ம மிகைக்கையாலே, "இனியிவனை வைத்துக்கொண்டு நின்று லோகம் ஸஹிக்கையாவது - தேவஜாதியை அச்சமுறுத்துகை; இனியிவனை வைப்போமல்லோம், நல்லகாலம்" என்று, ப்ரஹ்மாஸ்த்ரத்தாலே, ஒளியையுடைத்தாயிருக்கிற பெரிய முடிகள்பத்தையும் அறுத்து. (அமரும் நீலமுகில்வண்ணன்) ராவணவதம் பண்ணின வந[உ.ரு ந்தரம் திருமேனியிற்பிறந்த பௌஷ்கல்யமிருக்கிறபடி. நீலமானது அமர்ந்திருக்கிற முகில்போலே ச்ரமஹரமானவடிவையுடையவன். (எமக்கிறைவற்கு) அவ்வடிவழகாலே யென்னை அநந்யார்ஹனாக்கினவனுக்கு. ... ... ... ... ௫.

---

அஞ்சாம்பாட்டு.—(மாலுமித்யாதி.) ப்ரஹோஷாதிதுருண *பேழ்வாயன்ப்ரஹாவத்தையும், பகலையிரவாக்கின பொய்வாயன்பூசலையும் மாறிமாறிப் பேசியநுஸந்தியாநின்றீர், மஹத்தத்த்வமான கடலையணைசெய்தும் லங்கையை அடைமதிள்படுத்தியும் ராவணனைக்கொன்ற வீரத்தை மறந்தீரோவென்று தான் ஜயஸ்ரீயோடேநின்ற நிலையைக்காட்டக் கண்டநுஸந்திக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

ஸலிதம்(திரைக்கிளர்த்தியையித்யாதி.) ஆர-நிறையவென்றுமவதார்யமா[கு ய், "மாலும்கடலாரமலைக்குவடிட்டு - வரம்புருவ - அணைகட்டி" என்றந்வயமாக்கிக்கொள்வது. அமர்ந்திருக்கிற - த்ஸேஷ்டாஜமாகப் பொருந்தியிருக்கிறவென்று திருமேனிக்கு விசேஷணம். ... ... ... ... ௫.

பாராருலகும் பனிமால்வரையும் கடலும் சுடருமிவையுண்டுமெனக்
காராதெனநின்றவ னெம்பெருமா னலைநீருலகுக்கரசாகிய வப்
பேரானைமுனிந்த முனிக்கரையன்பிறரில்லை நுனக்கெனுமெல்லையினான்
நீராரபேரான் நெடுமாலவனுக்கிடம் மாமலையாவது நீர்மலையே. ௬.

ப - ரை.—ப்ரளயகாலத்திலே; ஆர் - பரந்த, பாருலகும் - பூலோகமும், பனி - குளிர்ந்த, மால் - பெரிதான, வரையும் - பர்வதங்களும், கடலும் - ஸமுத்ரங்களும, சுடரும் - சந்த்ர ஸூர்யர்களும், ஆகிய, இவை - இவற்றை, உண்டும் - அமுதுசெய்தும், எனக்கு—, ஆராதுஎன - போராதென்று, நின்றவன் - எழுந்தருளியிருக்குமவனாய; எம்பெருமான் - எனக்கு ஸ்வாமியாய ; அலைநீர் - அலை[யெ]மோதுகிற கடலாலே சூழப்பட்ட, உலகுக்கு - பூமிக்கு, அரசு ஆகிய - ராஜாக்கள் என்கிற, அப்பேரானை - அந்தப்பேரையுடைய க்ஷத்ரியகுலத்தை, முனிந்த - சீறியருளின, முனிக்கு அரையன் - முநிச்ரேஷ்டனான ஸ்ரீபரசுராமாழ்வானாய்; நுனக்கு - உனக்கு, பிறர் இல்லை - புறம்பானவரொருவருமில்லை, எனும் - எனும்படி, எல்லையினான் - பரகாரியான எல்லையிலேநிற்குமவனாய், நீரார்பேரான் - நீர்வண்ணனெனும திருநாமத்தையுடையனாய், நெடுமாலவனுக்கு - மிக்கவ்யாமோஹத்தையுடையனான ஸர்வேச்வரனுக்கு, இடமாவது மாமலையானநீர்மலை—. (௬)

ஆறும்பாட்டு. (பாராரித்யாதி) பாராருலகும் - மேலொடு உலகும். பாரென்பது - மேல். பாரையும் - ஸ்வர்காதி லோகங்களையும், ஹிமவான் துடக்கமான பர்வதங்களையும், ஸமுத்ரங்களையும், சந்த்ர [ஸூ]ர்யர்களையும் அடைய அமுதுசெய்தும். ஆர்தல் - சமைதலும், நிறைதலும். (எனக்காராதெனநின்றவனெம்பெருமான்) "உன்னடியார்க்கென்செய்வனென்றே யிருத்தி நீ" என்கிறபடியே - அவற்றை வயிற்றிலே வைத்து ரக்ஷித்தும, "இவற்றுக்கொன்றும்செய்திலோம்" என்

ஆறும்பாட்டு.—(பாராருலகும) மண்மிசைஸூமியும. (பனிமால் வரையும்) அந்தஸூமிக்கு ஆணியடித்தாப்போலே யிருப்பதுமாய் மேகங்கள் படிந்து வர்த்திக்கிற குலபர்வதங்களும், ஸமுத்ரங்களும, தேஜஃபதார்த்தங்களும், இவற்றை யடங்க வயிற்றிலே யெடுத்து வைத்து, பின்னையும இவையெனக்குப் போராது என்று தான் கொண்ட கோட்பாடு மாறுதே ரக்ஷ்யமளவுபட்டு ரக்ஷகத்வமே விஞ்சியிருக்குமவன். அதாகிறது-ப்ரஜைகள் விஷயமாக எல்லாம் செய்து பின்னையும ஒன்றும்செய்யாதானா யிருக்கிறபடி. பின்பு ப்ரளயத்தில்நின்று மெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கினத்தை நினையாதே, முன்பு ப்ரளயத்தில் நோவுபட விட்டத்தையே நினைக்கை.

ஆறும்பாட்டு.—(பாராரித்யாதி.) * குரக்கினப்படைகொடு குரைகடல்[தனை] அடைத்ததும், ராவணன்தலையறுத்ததுமொரு தன்னேற்றமோ, "எல்லாவுலகுமோர்துற்றாற்று" என்கிறபடியே மஹத்தத்த்வங்களை விளாக்கொலை கொண்டத்தையும ராவணனைப் பத்துத்தலைப்பூச்சியாக்கின ஸஹஸ்ரபாஹு துடக்கமானாரையும் வென்று இருபத்தொருகால் அரசுகளைகட்டின வீரசரித்ரத்தையும் காணீரோவென்ன ; அத்தைப் பேசுகிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

"மால் -" பெருமையாய், ஸமஷ்டி வ்யாஹார தாத்பர்யம் (அந்தவித்யாதி.) கோட்பாடு - கொண்ட உத்யோகம். "ஆராது" என்றதுக்குத் தாத்பர்யம் (பின்பித்யாதி.)

யிருக்கிற என்நாயன். (அலைநீரித்யாதி) கடல்சூழ்ந்த பூமிக்கு ராஜாக்களான க்ஷத்ரியகுலத்தையறுத்து, பின்பு முனிகளுக்குராஜாவாய் தபஸ்ஸுபண்ணின ஸ்ரீபரசுராமன்; "மழுவிநாலவனியரசை" இத்யாதிப்படியே. (அப்பேரானை முனிந்த) க்ஷத்ரியகுலம் என்கிற பேரானைத்தை முனிந்த. அவர்கள் பெருங்கூட நடையாடாதபடி முனிந்தவன். (பிறரித்யாதி) உனக்குமேலொருவரில்லை என்னும் படி இவற்றை ப்ரகாரமாகக் கொண்டு தான்ப்ரகாரியான எல்லையிலே நிற்கிறவன். (நீராரித்யா)தி நீர்வண்ணனென்கிற திருநாமத்தை யுடைய ஸர்வேச்வரன். ... ... ... ... ௬.

(எம்பெருமான்) இப்படி தான் ஸர்வரக்ஷகனாயிருக்கிற விருப்பைக் காட்டி யென்னை யெழுதிக்கொண்டவன். (அலையித்யாதி) இவ்விடத்துக்குப் பொருள் அழகப்பெருமாளரையர் பலரையும் கேட்டுக்கொண்டு திரிந்தாராய், நம்முடையவர்களிலே சிலர், "ஸர்வேச்வரனைச்சொல்லுகிறதுகாணும்" என்றுவிட்டார்கள். கடல்சூழ்ந்த பூமிக்குயிருந்த ராஜாக்களாய்ப் போருகிறவர்களை அப்பெருங்கூட நடையாடாதபடியாக அழியச்செய்த. (முனிக்கரையன்) ஸ்ரீபரசுராமாழ்வான், இருபத்தொரு படிகால் க்ஷத்ரியவம்சங்களைப் பெரும் நடையாடாதபடி அறுத்துப்பொகட்டானிறே. (பிறரில்லை நுனக்கெனுமெல்லையினான்) உனக்குப்புறம்பாய்உன்னோடொக்கச்சொல்லலாவதொரு பதார்த்தமில்லையென்னும்படி, தன்னையொழிந்ததடைய ப்ரகாரமாய் தான் ப்ரகாரியாய்க்கொண்டு எல்லையிலே நிற்கிறவன். (நீரார்பேரான்) "ஆபோ நாரா இதிப்ரோக்தா:" என்கிறபடியே - ஜலத்திலே கண்வளர்ந்தருளுகையாலே நாராயணனென்னும் திருநாமத்தை யுடையவனென்னுதல்; அன்றிக்கே, நீரென்று - நீர்மையாய், அத்தாலே - ஸ்வபாவமாய், அதாகிறது - சேஷிதவமாய், ஆக, ஸ்வவ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துவும் தனக்கு ப்ரகாரமாக தான் ப்ரகாரியாயிருக்கையாலே நாராயணனென்னும் திருநாமத்தை யுடையவனென்னுதல். ஆக, ஸர்வாதிகனான ஸர்வேச்வரனுக்கு. நீர்வண்ணனென்று திருநாமமே.

"காணீர்" என்று ஸர்வேச்வரன் காட்டிக்கொடுத்தானென்கைக்கு ஸூசகம் இப்படி மென்னுமத்தை யருளிச்செய்கிறார் (இப்படி யித்யாதி.) தாமருளிச்செய்யப்போகிற அர்த்தத்தின் சீர்மை தோற்றும்படி ஐதிஹ்யமருளிச்செய்கிறார் (இவ்விடத்துக்கித்யாதி.) "அப்பேரானை -" அந்தப்பேரிட்டுக்கொண்டவனை யென்று ஸங்க்ஷேபமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (கடலித்யாதி.) "நுனக்கு-பிறரில்லை-எனுமெல்லையினான்" என்றுஅந்வயமாக்கி யருளிச்செய்கிறார்(உனக்கித்யாதி.)எல்லையினான் - எல்லை நிலத்திலே வர்த்திப்பானென்றத்தாலே, ப்ரஸுவென்றது - ஸூசிதம். இரண்டாமர்த்தத்தைப் பற்ற, "நெடுமால்" என்றதுக்கர்த்தம் (ஸர்வாதிகனித்யாதி.) ஸர்வாதிகத்வம் சொல்லுகைக்கு "நீரார்பேரான்" என்று விசேஷிக்கவேணுமோவென்ன (நீரித்யாதி.)ஸ்வாபாவிகசேஷித்வத்துக்குத்தகுதியானபேருடையவனென்றுஸங்க்ஷேபம். நீர்வண்ணன் - ஸ்வாபாவிக சேஷித்வ ஸூசகவிக்ரஹவானென்று இதுக்கு ஸங்க்ஷேபம். ... ௬

மூ.—புகாருருவாகி முனிந்தவனைப் புகழ்வீட முனிந்துயிருண்டசுரன்
நகராயின பாழ்பட நாமமெறிந்ததுவன்றியும் வென்றிகொள் வாளவுணன்
பகராதவனாயிர நாமமடிப் பணியாதவனைப் பணியாலமரில்
நிகராயவனெஞ்சிடந்தானவனுக்கிடம் மாமலையாவது நீர்மலையே. எ.

ப - ரை.—ஆர் - மிகச், தேஜஸ்ஸை - புகர் உடைத்தான, உருவாகி - வடிவை யுடையனாய்க்கொண்டு, முனிந்தவனை - *எங்குமுளன் கண்ணன் என்றமகனைக் காய்ந்த ஹிரண்யன்ப்ராதாவான ஹிரண்யாக்ஷனை, புகழ்வீட - புகழ்போம்படி, முனிந்து - சீறியருளி, உயிர் - ப்ராணனை, உண்டு - முடித்து, அசுரன் - அஸுரனானவனுடைய, நகராயின - படைவீடுகள், பாழ்பட - பாழடைந்து, நாமமெறிந்து - அவன்பேருங்கூடத் தெரியாதேபோம்படி அழியச்செய்து; அதுவன்றியும்- அதுக்குமேலே, வென்றிகொள் - ஜயத்தையுடையனாய், வாள் - வாளையே தனக்குத் துணையாகவுடையனாய், ஆயிரம்நாமம் - எம்பெருமானுடைய ஸஹஸ்ரநாமங்களில் ஒன்றையும், பகராதவன் - சொல்லப்பெறாதவனாய், அடி - திருவடிகளிலே, பணியாதவன் - வணங்காதவனாய், பணியால் - ப்ரஹ்லாதன் சொல்லாலே, அமரில் - யுத்தத்தில், நிகராயவன் - எதிரான, அவுணனை - ஹிரண்யாஸுரனுடைய, நெஞ்சு - மார்வை, இடந்தானவனுக்கு - பிளந்துபொகட்டவனுக்கு, இடமாவது மாமலையான நீர்மலை—. ... ... ... ... ... (எ)

ஏழாம்பாட்டு. (புகரித்யாதி) பௌண்ட்ரகனைச் சொல்லுதல், ஹிரண்யாக்ஷனைச் சொல்லுதல். க்ருஷ்ணனோடொக்க சங்கசக்ரங்களை தரித்து, "நானே வாஸுதேவன்" என்று திரிந்தானாகச் சொல்லக்கடவது பௌண்ட்ரகனை. ஹிரண்யாக்ஷனைப் போது, தானே சொல்லலாமிறே. புகாருருவாய்த்திரிந்தவன், புகழுமவனும் நசிக்கும்படி முனிந்து,

ஏழாம்பாட்டு.—(புகரித்யாதி) பௌண்ட்ரகனைச் சொல்லிற்றுதல்; ஸாம்யத்வமயமாய் ஸ்வாபாவிகதேஜோரூபமான திவ்யவிக்ரஹத்தையுடைத் தோடு போலியாகத் தன்வடிவைப் பண்ணிக்கொடு திரிந்தானென்று சொல்லக்கடவது. ஹிரண்யாக்ஷனைப்போது, தானே சொல்லலாமிறே. புகர்ந்தவடிவை யுடையனாயிருக்கிறவனை, இன்னானென்று சொல்லுகிற க்ரமம்போம்படியாகச் சீறி;

ஏழாம்பாட்டு.—(புகாரித்யாதி. பகலையிரவாக்கினதும் ப்ரதோஷகாலத்திலே, * பேழ்வாயளரிப் பிறந்ததும் ஆஸ்சர்யமாகையாலே, அதுதானே நெஞ்சிலூற்றிருந்து அதேசமயத்திலும் சிங்கத்தையும் சிங்கப்பிரானையும் மீள அநுபவிக்கிறாரென்று ஸங்கதிகண்டுகொள்வது.

ஹிரண்யாக்ஷனென்றபக்ஷத்திலே, ஹிரண்யனுக்கு ப்ராதாவாகையாலே அவனுடைய நிரஸநமும் ப்ரஸ்துதமாய்த்தென்று கொள்வது. "ஆகி" என்னுகிற அநுசிதத்தாலவனுக்கு ஸ்வாரஸ்ய முண்டென்று விவக்ஷித்து, பௌண்ட்ரகனென பக்ஷத்திலே ஸம்ஹார்யம் (ஸாம்யேத்யாதி) போலியுமாகாதவன் போலியானென்று கருத்து. தானே சொல்லலாமிறே யென்றது-ஹிரண்யாக்ஷனும் ஹிரண்யனைப்போலே தேஜோரூபவானா யிருக்கையாலே புகார்ந்த வுருவென்றுசொல்லலாமென்றபடி. புகராலே ஆர்ந்தவடிவை யுடையனாய்க்கொண்டு "கோயம்விஷ்ணு:?" என்று முனிந்தவனை, அவன்புகழ் போம்படி சீறி, ப்ராணன்களைக்கொண்டென்று ஸம்ஹார்யமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (புனருத்தவித்யாதி.)

அவனுயிரைமுடித்து அவனுடையபடைவீடுகளானவைபாழ்பட. (நாமமெறிந்து) நாமம்-பெருமையும், பேரும். (வென்றியித்யாதி) புக்கபோரில் வெற்றிகொண்டல்லதுமீளாதஹிரண்யன். (பகராதவனித்யாதி) ஆயிரந்திருநாமத்திலே ஒருதிருநாமத்தைச் சொல்லித் திருவடிகளில்விழாதவன். (பணியால்) ப்ரஹ்லாதன்சொல்லாலே. [மத்பிதுஸ்த்வத்க்ருதம் பாபம்க்ஷேவ தஸ்யப்ரணஶ்யது] முன்பிவன்பண்ணினஅபராதங்களைப்பொறுக்கவேணும் என்னப் பொறுத்துப் போந்தவன், இவனிருக்கில் இவ்வாத்மவஸ்து நஶிக்குமென்று, நிசாயவன் – எதிரானவன் நெஞ்சிடந்தவனுக்கு. ... ... ... ... ... ௭.

---

பலநகரங்களையும் பண்ணிவைத்தானாய்த்து; அவனதான நகரங்களானவைபாழ்பட்டுப்போம்படியாக, இன்றுனென்கிறவார்த்தைப்பாடும் போம்படியாக அழியச்செய்து; அதுக்குமேலே. (வென்றியித்யாதி) வெற்றியுண்டானாலல்லது மீளானாய், தைவங்கள் கொடுத்தவரங்களையே தனக்கு பலமாக நினைத்திருப்பானாய்; பகருகை-சொல்லுகையாய், ஆயிரம்திருநாமங்களிலொன்றையும்சொல்லாதவன்; என்றதென்-சொல்லப்பெறாதவனென்றபடி; அதுக்குமேலே, திருவடிகளிலே விழுந்துஆஶ்ரயியாதே யிருக்கிறவனை. (பணியால்) ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய வார்த்தையாலே; "ஸம்ஶ்ரீவவஶநாத்" என்னுமாப்போலே. பணிந்து பகர்ந்தவனுடைய வார்த்தையாலே. [மத்பிதுஸ்த்வத்க்ருதம் பாபம்க்ஷேவதஸ்ய ப்ரணஶ்யது] முன்புஅவன் பண்ணின ப்ராதிகூல்யத்தையெல்லாம் பொறுக்கவேணு மென்னப் பொறுத்துப போந்தான்; இனி இவனிருக்கில்இவனுக்குஅநர்த்தம்என்னுமளவில் பின்னை அழியச்செய்துவிட்டானாய்த்து. அமரிலே - யுத்தத்திலே, நானெதிரி என்றுதோற்றினவனுடையமார்வை யிரண்டுகூறும்படிபிளந்து [உறு] பொகட்டவனுக்கு. ... ... ... .. ௭.

"அசுரன்" இத்யாதிக்குத் தாத்பர்யம் (பலவித்யாதி.) என்றதென்னென்றது - அதாவதென்றபடி. ஹ்ருதார்த்தம் (பணிந்தித்யாதி.) ஸமுத்ரத்திலே தன்னைக் கட்டிப்பொகட்டபோது ஸர்வேஶ்வரன் ப்ரஸந்நனாய் "வரங்கொள்" என்ன, என்னுடைய தமப்பனுடைய அபராதத்தைப் பொறுத்தருளவேணுமென்றவன்[ நீ] இப்போது கொல்லச்சொல்லுவனோவென்னவருளிச்செய்கிறார் (மத்பிதுரித்யாதி.) இவன் - ஹிரண்யன். இவனுக்கு - இந்த ஹிரண்யனுக்கு. அதிப்ராதிகூல்யத்தாலே யென்றபடி. "நிசாயவன்" என்றதுக்கர்த்தம் (நானெதிரியித்யாதி.) ... ௭.

மூ.—பிச்சச்சிறுபீலிபிடித்துலகிற்பிணந்தின்மடவாரவர்போலங்ஙனே
அச்சமிலர்நாணிலராதன்மையாலவர் செய்கைவெறுத்தணிமாமலர்தூய்
நச்சிநமனாரடையாமைநமக்கருள்செய்யென வுள்குழைந்தார்வமொடு
நிச்சம்நினைவார்க்கருள்செய்யுமவற்கிடம்மாமலையாவதுநீர்மலையே. அ.

ப - ரை.—பிச்சம் - பிச்சங்களையுடைத்தாய், சிறு - சிறிதான, பீலி - மயிலிறகை, பிடித்து - கையில்பிடித்துக்கொண்டு, உலகில்-லோகத்தில், பிணம் - பிணங்களை, தின்-தின்கிற,மடவாரவர்போல்-பிராசஸ்த்ரீகளைப்போலே, அங்ஙனே - அப்படியே, அச்சம்இலர் - பயமில்லாதவர்களாய், நாண்இலர் - "நிர்வாணிகளாய்த் திரியாநின்றோமே!" என்னும்லஜ்ஜையில்லாதவர்களாய், ஆதன்மையால்-இப்படியிருக்கையாலே,அவர்செய்கை-அவர்கள்செய்துபோருமவற்றைக்கண்டு,வெறுத்து—, அணி - அழகியதாய், மா - ச்லாக்யமான, மலர் - புஷ்பங்களை, தூய் - பணிமாறி, நச்சி - ஸர்வேச்வரனை ஆசைப்பட்டு, நமனார் - யமாதிகள், அடையாமை - கிட்டாதபடி, நமக்குஅருள்செய்என - எங்களுக்கு க்ருபை செய்தருளவேணும் என்று, உள்குழைந்து-நெஞ்சுநெகிழ்ந்து, ஆர்வமொடு-ப்ரீதியுடனே, நிச்சம்-நித்யமாக,நினைவார்க்கு-அநுஸந்திக்குமவர்களுக்கு, அருள்செய்யுமவற்கு - க்ருபை செய்தருளுமவனுக்கு, இடமாவதுமாமலையானநீர்மலை—, என்று பரோபதேசம் பண்ணுகிறார். ... ... ... ... ... ... (அ)

எட்டாம்பாட்டு. (பிச்சமித்யாதி) பிச்சமாகச் சிறுக்கப் பீலியை கையிலேபிடித்து. (பிணமித்யாதி) புடவையைப்போகட்டுப் பிணம் தின்னப்போரும் ஸ்த்ரீகளைப்போலே நிர்பயருமாய் நிர்லஜ்ஜருமான அவர்கள் செய்கைகளைக்கண்டு வெறுத்து. (அணிமாமலரித்யாதி) அழகிதாய் மஹார்ஹமான பூக்களென்னுதல்; மாமலரென்று—

எட்டாம்பாட்டு.—(பிச்சச்சிறுபீலிபிடித்து) பிச்சமாயிருக்கிறசிறு பீலித்தழையைக்கையிலேபிடித்து, லோகத்திலே பிணந்தின்னிகளைப் போலேவஸ்த்ரத்தைப்போகட்டுத்திரியாநிற்பார்களாய்த்து; அவர்களைப்போலே, அப்படியே பிறர் முன்னே நாமிங்ஙனே நிற்கும்படி யெங்ஙனே! என்னுமச்சமாதல், இத்தைப்பிறர் காணில் செய்வதென்! என்னும் லஜ்ஜை யாதலின்றிக்கே திரியாநிற்பார்கள்; இப்படியிருக்கையாலே. (அவர்செய்கைவெறுத்து) வைதிகமர்யாதையும் ஸந்த்யோபாஸநமும் வேதோக்தமான அநுஷ்டாநமு மின்றிக்கே, தாங்கள் நினைத்தபடி செய்து திரியுமவற்றை யநுஸந்தித்து வெறுத்து; அழகிய புஷ்பாத்யுபகரணங்களைக் கொண்டு, அவனை, நச்சி-ஆசைப்பட்டு, யமாதிகள் கிட்டாதபடி நிச்சம் நினைவாரென்னுதல்;

எட்டாம்பாட்டு.—(பிச்சச்சிறுபீலியித்யாதி.) "என்னெஞ்சமென்பாய் நுங்கள்" என்று தந்திருவுள்ளத்துக்குச் சொன்ன வுபதேசம் பலித்துவிட்டபடி கைகண்டவராகையாலே, இப்படி ஆச்ரிதன் சொல்வழி பரதந்த்ரனானபின்பு நீங்கள் துர்மதங்களைக் காற்கடைக்கொண்டு ஆச்ரயியுங்கோளென்று பரோபதேசப்ரவ்ருத்தராகிறாரென்று மேலிரண்டு பாட்டுக்கும் ஸங்கதி கண்டுகொள்வது.
நிர்வாணிகளாய்ப் பிணந்தின்கிற பிராசஸ்த்ரீகளைப்போலே லஜ்ஜாபயமின்றிக்கே நிர்வாணிகளாய், ஜுகுப்ஸையுமாகாதென்று கையிலே வழிசேர்க்கைக்காகப்பிடித்தத்தைப் பிடித்துக்கொண்டு திரிகிற க்ஷபணரென்றுவிவக்ஷித்தருளிச் செய்கிறார் (பிச்சமாயித்யாதி) பிச்சாய்ச் சிறிதாயிருக்கிற மயிலிறகைப் பிடித்துக் கொண்டென்று ஸ்வஷார்யம். கீழ்வாக்யவிவரணம் (அவர்களைப்போலேயித்யாதி) "நச்சி"என்றத்தை"தூய்"என்றத்தோடேகூட்டி ஆச்ரிதர்க்கு விசேஷணமாகவும், "நச்சிநமனார்" என்று மேல்பதத்துக்கு விசேஷணமாகவும், [illegible] யோஜனை யருளிச்செய்கிறார் (அழகிய வித்யாதி வாக்யத்வயத்தாலே.)

பேசுமளவன்றிதுவம்மின்நமர்பிறர்கேட்பதன்முன் பணிவார்வினைகள்
நாசமதுசெய்திடுமாதன்மையாலதுவேநமதுய்விடம்;நாண்மலர்மேல்†
வாசமணிவண்டறைபைம்புறவின்மனமைந்தொடுநைந்துழல்வாரமதிசேர்
நீசரவர்சென்றடையாதவனுக்கிடம் மாமலையாவது நீர்மலையே. ௯.

ப - ரை.—இது - பகவத்விஷயத்தின்சீர்மை, பேசுமளவுஅன்று - நம்மால் சொல்லிமுடியாது; நமர் - நம்முடையவர்களே ! , இந்தச்சீரியஅர்த்தத்தை, பிறர்- நாஸ்திகரானவர்கள், கேட்பதன்முன் - கேட்குதற்குமுன்பே, வம்மின் - வாருங்கள் ; பணிவார் - தன்னைவணங்கினவர்களுடைய, வினைகள் - பாபங்களை, நாசம் செய்திடும்-நசிப்பிக்கும் ; ஆதன்மையால்-ஆகையாலே, அதுவே - அவ்விடமே, [ய நமது - நமக்கு, உய்வுஇடம்-உஜ்ஜீவிக்கைக்கு ஸ்தாநம், மனம் - நெஞ்சு,ஐந்தொடு- சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களிலே, சென்று, அதிலிடையாமல், நைந்து - சிதிலராய், உழல்வார்-க்லேசப்படுமவர்களாய்,மதியில்-அறிவுகேடரான,நீசரவர்-தண் ணியர்க்கு, சென்று—, அடையாதவனுக்கு - கிட்டஅரியனானவனுக்கு, இடமாவது- வாஸஸ்தாநமாவது ; நாள் - அப்போதுஅலர்ந்த, மலர்மேல் - பூவிலேபடிகை [யிரு யாலே, வாசம் - பரிமளத்தையுடைத்தாய், அணி-அழகியதான, வண்டு - வண்டுகள், அறை - சப்தியாநின்றுள்ள, பை - பரந்த, புறவின் - பர்யந்தங்களையுடைய, மா மலையானநீர்மலை—. ... ... ... ... ... ... (௯)

தாமரையாய், தாமரைப்பூவைப் பணிமாறியென்னுதல். (நச்சி) ஸர் வேச்வரனை ஆசைப்பட்டு, யமாதிகள்வந்து கிட்டாதபடி எங்களை [உய ரக்ஷித்தருளவேணும் என்று நெஞ்சுகுழைந்து ப்ரீதியுடனே நித்யாநு ஸந்தாநம் பண்ணுமவர்களுக்கு அருள்செய்யுமவனுக்கு. ... அ.

மூன்றாம்பாட்டு.— (வெம்புமித்யாதி.) "தவம்செய்யவேண்டா, திருச்சித்திரகூடம் - சேர்மின்கள்" என்றீர், நாங்கள் ஸம்ஸாரப்ரளயத்திலழுந்திக்கிடக்க உய்யரிப்பரேறவென்ன ; ப்ரளயார்ணவமக்நையான பூமியை யெடுத்தாப்போல் உங்களை உய்யரிக்கவல்லவனென்கிறாரென்று ஸங்கதி.

வம்பு - புதிசாய், உண் - ஊணுக்குவிஷயமாய், அவற்றையுடைத்தான பொழிலென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஸலேத்யாதி.) பைம்பொன் - அழகிய பொற்பூக்கள். ... ... ... ... ... ௩.

மூ —அருமாநிலமன்றளப்பான் குறளா
　　யவுணன்பெருவேள்வியில் சென்றிரந்த
பெருமான்திருநாமம்பிதற்றி நுந்தம்
　　பிறவித்துயர்நீங்குது மென்கிற்றீர் !
கருமாகடலுள் கிடந்தானுவந்து
　　கவைநாவரவினணைப் பள்ளியின்மேல்
திருமால்திருமங்கையோடாடு தில்லைத்
　　திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. ௪.

ப-ரை.—அன்று - இந்திரன் தன் ராஜ்யத்தையிழந்த அன்று, அரு - அளக்கவரிதான, மாநிலம் - மஹாப்ருதிவியை, அளப்பான் - அளக்கைக்காக, குறளாய் - வாமநரூபியாய், அவுணன் - அஸுரனான மஹாபலியினுடைய, பெருவேள்வியில் - மஹாயாகத்திலே, சென்று இரந்த - சென்று யாசித்த, பெருமான் - ஸர்வேச்வரனுடைய, திருநாமம் - திருநாமங்களை, பிதற்றி - அடைவுகெடச்சொல்லி, நுந்தம் - உங்களுடைய, பிறவித்துயர் - ஜந்மதுக்கத்தை, நீங்குதும் - போக்குவோம், என்கிற்றீர் - என்று சொல்லுகிறீர்; கருமா - மிகவும்பெரிய, கடலுள் - திருப்பாற்கடலிலே, கவைநா - இரண்டு நாவையுடைய, அரவின் அணைப்பள்ளியின்மேல் - திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே, உவந்து - உகந்து, கிடந்தான் - பள்ளிகொண்டருளின, திருமால் - ஸ்ரீயப்பதி, திருமங்கையோடு - பெரியபிராட்டியாரோடே, ஆடு - நித்யவாஸம்பண்ணுகிற, தில்லைத் திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்கள்— ... (௪)

நாலாம்பாட்டு. (அருமாநிலமித்யாதி) அளக்கவரிதான மஹாப்ருதிவியை, தலையோடொப்பிய வொருவராலளக்கப்போகாதே. (அவுணனித்யாதி) அஸுரனுடைய யாகத்திலே வாமநரூபியாய்ச்சென்று இரந்த ஸர்வேச்வரனுடைய திருநாமத்தைச்சொல்லி உங்கள் பிறவியாகிற துக்கத்தைப் போக்கவேணுமென்றிருப்பீர். கருமை-பெருமை; மஹத்தையும்-பெருமையுஞ்சொல்லும் பெரியகடலிலே. இரண்டு நாவையுடைய திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையனாய்க்கொண்டு அதின்மேலே உகந்து பள்ளிகொண்ட ஸ்ரீயப்பதி. (திருமங்கையித்யாதி) பெரியபிராட்டியாரோடே நித்யவாஸம்பண்ணுகிற. ... ... ... ௪.

நாலாம்பாட்டு.—(அருமாவித்யாதி) அளக்கவரிதான மஹாப்ருதிவியை அளக்கைக்காக வாமநரூபியாய், அஸுரனுடைய மஹாயாகத்திலே சென்றாசித்த ஸர்வேச்வரனுடைய திருநாமத்தை அடைவுகெடப்பேசி உங்களுடைய ஜந்மதுக்கத்தைப் போக்குவோமென்று சொல்லியிருப்பீர்!— (கருமாவென்று தொடங்கி) இரண்டுநாவுடைய திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே, கறுத்துப்பெருத்த கடலிலே,[கூடு உகந்து கண்வளர்ந்தருளின ஸ்ரீயப்பதி, பெரியபிராட்டியாரோடேகூட விடாதே ஸஞ்சரிக்கிற தில்லை. ... ... ... ௪.

நாலாம்பாட்டு.— (அருமாவித்யாதி.) ஸ்ரீலக்ஷ்மிப்பிராட்டிக்கு அவன்பரமப்ரணயியாகையாலுதவினானேயாகிலும், அதுகொண்டு நாங்கள்தேறும்படியெங்ஙனேயென்ன; தன்னை ஆச்ரித்தார்க்காகவே தானர்த்தியாய்க்காரியம்செய்து தலைக்கட்டினவனன்றோ, உங்களபேக்ஷிதமும் செய்வனென்றருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

“கடல்கள்தோறும் கண்வளர்ந்தருளுமென்றொரு ப்ரமாணப்ரஸித்தியுண்டு” என்று முன்னே தாம் நிர்வஹித்த நிர்வாஹத்தைத் திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (கறுத்துப்பெருத்தகடலிலே யென்று.) ... ...

மூ.—கோமங்க வங்கக்கடல்வையமுய்யக்
குலமன்னரங்கம் மழுவில்துணியத்
தாமங்கமருள்படைதொட்டவென்றித்
தவமாமுனியைத்தமக்காக்க கிற்பீர் !
பூமங்கைதங்கிப் புலமங்கைமன்னிப்
புகழ்மங்கையெங்கும் திகழப் புகழ்சேர்
சேமங்கொள்பைம்பூம் பொழில்சூழ்ந்ததில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. ௫.

ப-ரை.—கோ - ராஜாக்கள், மங்க - அடங்கவும், வங்கம் -மரக்கலங்கள்நிறைந்த, கடல - கடல்சூழ்ந்த, வையம் - பூமியிலுள்ளார், உய்ய - உஜ்ஜீவிக்கும்படியாகவும், குலமன்னர் - ராஜாக்களுடைய, அங்கம் - சரீரமானது, மழுவில் - மழுவிலே, துணிய-துணியும்படியாகவும், தாம் - தாமே, அமருள்-பூசலிலேபுக்கு, படைதொட்ட - ஆயுதமெடுத்த, வென்றி - ஜயிக்குமவனாய், தவம் - பின்பு தபஸ்ஸு-பண்ணப்புக்க, மாமுனியை-மஹாமுனியான ஸ்ரீபரசுராமாழ்வானை, (பி)ற்தமக்கு - தந்தாமுக்கு, ஆக்ககிற்பீர்-ஆக்கிக்கொள்ளவேணடியிருப்பீர் !; பூமங்கை-பெரியபிராட்டியார், தங்கி-திருமார்விலே தங்கியும், புலமங்கை - ஸ்ரீபூமிப்பிராட்டி, மன்னி-இடவருகேபொருந்தியும்,அத்தாலே,புகழ்மங்கை—, எங்கும்-எங்குமொக்க, திகழ - உஜ்ஜ்வலமாய்விளங்காநிற்க, புகழ்சேர்-புகழையுடைத்தாய், சேமங்கொள்-அரணையுடைத்தான,பைம்பூம்பொழில்சூழ்ந்த-பரந்தபூத்தசோலையாலே சூழப்பட்ட, தில்லைத் திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்கள்—. ... ... (௫)

அஞ்சாம்பாட்டு. (கோமங்கவித்யாதி) ராஜாக்களென்று பேர்பெற்றார் அடங்க. ராஜாக்கள் ஶரீரமானது மழுவிலே துணிய. (தாமங்கமித்யாதி) தாமேபூசலிலேபுக்கு ஆயுதமெடுத்து அவர்களையறுத்துப்பொகட்டுச் சினந்தீர்ந்தபின்பு தபஸ்ஸுபண்ணப்புக்க மஹாமுனியை உமக்காகவேணுமென்றிருப்பீர் !.— (பூமங்கையித்யாதி) பெரியபிராட்டியாரும், ஸ்ரீபூமிப்பிராட்டியாரும் நித்யவாஸம்பண்ணுகையாலே புகழ்மங்கையெங்கும் உஜ்ஜ்வலமாய் விளங்காநின்ற. (புகழ்சேரித்யாதி) மிக்கபுகழையும் அரணையும் அழகியபொழில்சூழ்ந்த தில்லை. ௫.

அஞ்சாம்பாட்டு.— (கோமங்கவித்யாதி) ராஜாக்களென்று பேர்பெற்றாரடங்கலும் மங்க, கடல்சூழ்ந்தபூமி உய்ய, ராஜாக்களுடைய ஶரீரம் மழுவிலே துணித்தவிடத்திலும் கோபம்மாறாதே ஆயுதம்தொட்ட அதிமாத்ரமான மஹாவீர்யத்தையுடையனான ஸ்ரீபரஶுராமாழ்வானைத் தந்தாமக்காக்கிக்கொள்ள வேண்டியிருப்பீர் !.— (பூமங்கையித்யாதி) பெரியபிராட்டியாரும் ஸ்ரீபூமிப்பிராட்டியும் நித்யவாஸம்பண்ணி, புகழ்மங்கை யெங்குமுஜ்ஜ்வலமாய் வர்த்திப்பதும் செய்து, புகழையும் காப்பையுமுடைய பொழில்சூழ்ந்த தில்லை. ௫.

அஞ்சாம்பாட்டு.— (கோமங்கவித்யாதி.) இந்த்ரனுக்குவிரோதியாய் உதாரனானமஹாபலியோலேயோ எங்களுடைய ப்ரபலவிரோதிகள் என்னும் ஜிஜ்ஞாஸுக்களுக்கு விரோதிநிரஸநஶீலதையை யருளிச்செய்யக்கோலி, ஸ்ரீவாமநாவதாரத்துக்கு அநுஜாஹாவியான ஸ்ரீபரஶுராமாழ்வான் வீரசரிதத்தையருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

மழுவில்துணித்தபின்பும் படைதொட்டிருக்கையால் ஶலித்தவர்யம் (கோபம் மாறாதேயென்று.) ... ... ... ... ... ௫.

மூ.— நெய்வாயழலம்புதுரந்து முந்நீர்
துணியப்பணிகொண்டணியார்ந் திலங்கும்
மையார்மணிவண்ணனையெண்ணி நுந்தம்
மனத்தேயிருத்தும்படிவாழவல்லீர்!
அவ்வாயிளமங்கையர் பேசவுந்தா
னருமாமறையந்தணர் சிந்தைபுகச்
செவ்வாய்க்கிளி நான்மறைபாடு தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. சா.

ப - ரை.— நெய - கூரிய, வாய் - வாயையும், அழல - அக்நிபோன்ற தேஜஸ்ஸை யுமுடைய, அம்பு - அம்பை, துரந்து - விட்டு, முந்நீர் துணிய - கடலும்சலங்கி ராவணனும் பரிகாரமும் துணிய, பணிகொண்டு - அசனைச்சாரியுங்கொண்டு, அணி - ஆபரணமாய், அதனாலே, ஆர்ந்து - பூர்ணமாய், இலங்கும் - விளங்காநிற்பதாய், மைஆர - கருமைமிக்க, மணிவண்ணனை - மணிபோன்றவடிவழகையுடையவனை, எண்ணி - அநுஸந்தித்து, நுந்தம - உங்களுடைய, மனத்தே - நெஞ்சிலே, இருத்தும்படி - நித்யவாஸம்பண்ணும்படி, வாழவல்லீர் - வாழவேண்டியிருப்பீர்!; அவ்வாய் - அவ்விடத்திலே, இளமங்கையர - சிறுபெண்கள், தமப்பன்மார்அசயயநம்பண்ணக்கேட்டிருக்கையாலே, அருமாமறை - வேதத்தை, பேசவும் - சொல்லவும், அப்பெண்களுடனேகூட, செவ்வாய்க்கிளி - சிவந்தவாயையுடையகிளிகள், அந்தணர்சிந்தைபுக - ப்ராஹ்மணர்ஹ்ருதயத்திலே புகும்படி, நால்மறை - நான்குவேதங்களையும், பாடி - பாடுகிற, தில்லைத்திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்கள் —.

ஆறாம்பாட்டு. (நெய்வாயித்யாதி) நெய் - கூர்மை. கூரியவாயையும் அக்நிபோன்ற தேஜஸ்ஸையுமுடைய அம்பைவிட்டு. (முந்நீரித்யாதி) கடலும்கலங்கி ராவணனும் பரிகாரமும் துணியப் பணிகொண்டு. (அணியித்யாதி) ஆபரணங்களாலே அலங்க்ருதமாய் விளங்காநிற்பதாய் உருத்தான ரத்நம்போன்ற வடிவழகையுடையவனை, உங்கள்நெஞ்சிலே வைத்து வாழவேண்டியிருப்பீர்!— (அவ்வாயித்யாதி) அவ்விடத்திற் சிறுபெண்கள், தமப்பன்மார் அத்யயநம்பண்ணக்கேட்ட செவியேற்றாலே, அப்பெண்களுடனேகூட, சிவந்தவாயையுடைய கிளிகளானவையும் ப்ராஹ்மணர்ஹ்ருதயத்திலே புகும்படி நாலுவேதங்களையும் பாடும். இளமங்கையர் அருமாமறைபேச, கிளி நான்மறைபாட என்று கொள்வது ... ... ... ... ... சா.

ஆறாம்பாட்டு.— (நெய்வாயித்யாதி) கடைந்து நெய்யிட்ட வாயையுடைத்தாய், நெருப்பையுமிழுகிற அம்பையேவிக் கடலைத் துணித்து, அத்தைப்பணிகொண்டு, உஜ்ஜ்வலமாய் கருமைமிக்கிருந்துள்ள மணிபோலேயிருக்கிற திருநிறத்தோடேகூடின விக்ரஹத்தையுடையவனை அநுஸந்தித்து, உங்களுடைய ஹ்ருதயத்திலே நித்யவாஸம்பண்ணும்படி வாழவல்லீர்!.— (அவ்வாயென்றுதுடங்கி) தன்வாயில் பழுப்புப்போலேயிருக்கிற பாலைகளான பெண்கள் ஓத்துக்கேட்ட செவியேற்றாலே சொல்லவும் ப்ராஹ்மணருடைய ஹ்ருதயத்துக்கேற, சிவந்தவாயையுடைத்தான கிளியானது நல்ல ஸ்வரத்தோடே நாலுவேதத்தையும் பாடாநின்றுள்ள தில்லை. சா.

ஆறாம்பாட்டு.—(நெய்வாயித்யாதி.) மேலாத்தலைதட்டராஜாக்களை வென்றாலும் எங்களுடைய அபாரஸம்ஸாரஸமுத்ரத்தைவெல்லவல்லரோவென்ன; அந்த ராவதாரத்தில் கடலைக்கலக்கின அதிமாநுஷசேஷ்டிதத்தையருளிச்செய்கிறாரென்னலுமாம்.

அணி - ஆபரணமாய், அத்தாலே, ஆர்ந்து-பூர்ணமாய், இலங்குமதாயென்று விக்ரஹவிசேஷணமென்று திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (உஜ்ஜ்வலமா யென்று.) "அவ்வாயிளமங்கையர் - அருமாமறை - பேசவும், அந்தணர்சிந்தைபுக, செவ்வாய்க்கிளி - தான்-நான்மறைபாடு" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னித்யாதி.) ... ... ... சா.

மூ.—மௌவல்குழலாய்ச்சி மென்தோள்நயந்து
மகரம்சுழலச் சுழல்நீர்பயந்த
தெய்வத்திருமாமலர்மங்கைதங்கு
திருமார்வனைச் சிந்தையுள்வைத்துமென்பீர்!
கௌவைக்களிற்றின் மருப்பும்பொருப்பில்
கமழ்சந்துமுந்தி நிவாவலங்கொள்
தெய்வப்புனல்சூழ்ந் தழகாய தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. எ.

ப - ரை.— மௌவல - முல்லைமலரை, குழல்-கருகுழலையுடைய, ஆய்ச்சி - நப்பின்னைப்பிராட்டியுடைய, மென் - ம்ருதுவான, தோள் - திருத்தோளோடே, நயந்து - கலந்து, மகரம் - மகரமத்ஸ்யம் தொடக்கமானவை, சுழல - சுழலும்படி, சுழல - சுழன்றுவருகிற, நீர்பயந்த - கடல்பெற்ற, தெய்வம் - அழகிய, திருமாமலர்மங்கை - பெரியபிராட்டியார், தங்கு - தங்குகிற, திருமார்வனை - திருமார்வையுடையவனை, சிந்தையுள் - நெஞ்சில், வைத்துமென்பீர் - வைக்கவேண்டியிருப்பீர்!; ஸிம்ஹத்தோடே பிணங்குகையாலே, கௌவை - பிளிறுகிற, களிற்றின் - யானையின், மருப்பும் - கொம்பையும், பொருப்பில் - பர்வதத்தில், கமழ் - நறுநாற்றம் கமழுகிற, சந்தம் - சந்தநத்தையும், உந்தி - தள்ளிக்கொண்டுவருகிற, நிவா - வெள்ளாறு, வலங்கொள - வலங்கொள்ளாநிற்கிற, தெய்வம் - அழகிய, புனல்சூழ்ந்து - ஜலம்சூழ்ந்து, அழகாய - தர்சநீயமான, தில்லைத் திருச்சித்ரகூடம் சென்றுசேர்மின்கள்—. ... ... ... ... (எ)

ஏழாம்பாட்டு. (மௌவலித்யாதி) மௌவற் பூவைக் குழலிலே யுடைய நப்பின்னையுடைய ம்ருதுவான தோளுடனே கலந்து. (மகரமித்யாதி) மகரமென்கிற மத்ஸ்யவிசேஷந்தொடக்கமானவை சுழன்று வருகிற கடல்பெற்ற பெரியபிராட்டியார் தங்குகையாலே திருமார்வனென்னும் திருநாமத்தையுடையவனை நெஞ்சிலே வைக்கவேண்டியிருப்பீர். கவ்வை - ஆரவாரம். யானைகள்பிளிறி ஆரவாரிக்க, யாளிகள்கொன்றுபறித்த கோடுகளும் பர்வதத்தில் நறுநாற்றம்கமழுகிற சந்தனத்தையும் கொண்டுவந்துதள்ள நிவாஎன்கிற ஆறு சூழப்பட்டு அழகிய புனல்சூழ்ந்து அழகிய தில்லை. ... ... எ.

ஏழாம்பாட்டு.— (மௌவலித்யாதி) மௌவலோடேகூடின திருக்குழலையுடைய நப்பின்னைப்பிராட்டியுடைய ம்ருதுவான திருத்தோளிலே கலந்து, அங்குண்டான மத்ஸ்யங்கள் சுழலும்படி சுழன்றுவருகிற கடல்பெற்ற பெரியபிராட்டியார்தங்கும் திருமார்வையுடையவனை ஹ்ருதயத்திலே வைத்துக்கொள்வோமென்பீர்!.—(கௌவையித்யாதி) ஸிம்ஹத்தோடு பிணங்கிப் பிளிறுகிற ஆனையினுடைய கொம்பும், மலையில்பரிமளிதமான சந்தநத்தையும் தள்ளி, நிவாஎன்கிற ஆறு வலங்கொள்ளாநிற்கிற விலக்ஷணமான புனல்சூழ்ந்து தர்சநீயமான தில்லை. ... ... ... ... ... எ.

ஏழாம்பாட்டு.— (மௌவலித்யாதி.) "ஸ ஸாரஸமுத்ரத்தைக் கலக்கவல்லவனிருக்கிறதேசத்தில் சென்று சேர்மின்கள்" என்னாநின்றீர், எங்களால்கிட்டப்போமோவென்ன; புருஷகாரபூதர் அருகேயுண்டு, பிற்காலியாதேசென்று சேருங்கோளென்கிறாரென்று ஸங்க்ரஹம்.

மௌவலோடேயென்றது - முல்லைமலரோடேயென்றபடி. அங்குண்டானவென்று - மேலேசொல்லப்படுகிற ஸமுத்ரத்திலுண்டானவென்றபடி. கௌவை - ஆரவாரமாய், (பிளிறுகிற) என்றருளிச்செய்கிறார். ... ... எ.

மூ.— மாவாயினங்கம் மதியாதுகீறி
மழைமாமுதுகுன்றெடுத் தாயர்தங்கள்
கோவாய்நிரைமேய்த் துலகுண்டமாயன்
குரைமாகழல்கூடும் குறிப்புடையீர் !
மூவாயிரநான்மறையாளர் நாளும்
முறையால்வணங்க வணங்காயசோதித்
தேவாதிதேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. அ.

---

ப - ரை.— மா - கேசி என்னும் குதிரையின், வாய்-வாயையும், அங்கம்-உடலையும், மதியாது - ஒருசரக்காகநினையாதே, கீறி - பிளந்துபொகட்டு; இந்த்ரன் வர்ஷிப்பித்த, மழை - கல்வர்ஷத்துக்கு, மா - எல்லாரும் ஒதுங்க இடம்போரும்படிபெரிதாய், முது - பழையதான, குன்று - கோவர்த்தநமென்னும் மலையை, எடுத்து - குடையாக எடுத்து, ஆயர்தங்கள்கோவாய் - இடையர்க்குத்தலைவனாய், நிரை - பசுத்திரளை, மேய்த்து—; ப்ரளயாபத்திலே, உலகு - லோகத்தை, உண்ட - திருவயிற்றிலேவைத்த, மாயன் - ஆச்சர்யபூதனுடைய, குரை - ஆபரணங்களால் சப்திக்கிற,மா-பெருமைதங்கிய,கழல் -திருவடிகளை, கூடும்-சேரவேணுமென்னும், குறிப்புஉடையீர்! - நினைவுடையீர் !; மூவாயிரம் - அநேகம், நான்மறையாளர் - ப்ராஹ்மணர், நாளும் - நாள்தோறும், முறையால் - ஸ்வரூபத்துக்குத்தக்கபடி, வணங்க - ஆச்ரயிக்க, அணங்காய - அப்ராக்ருதமான, சோதி - தேஜஸ்ஸையுடைய, தேவாதிதேவன் - ஸர்வேச்வரன், திகழ்கின்ற - விளங்குகிற, தில்லைத் திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்கள்—. ... ... ... (அ)

---

எட்டாம்பாட்டு. (மாவாயித்யாதி) கேசிவாயையும் அதினுடலையும் ஒருசரக்குப்பண்ணாதேபிளந்து. (மழையித்யாதி) ஆயர்கோவாய், மழைக்கு, யானைகளையுடைய பெரியமலையையெடுத்து அவற்றை மேய்த்து. (உலகுண்டவித்யாதி) ப்ரளயாபத்திலே லோகம் நசியாமே வயிற்றிலே வைத்து ரக்ஷித்தஸர்வேச்வரன் நூபுராத்யாபரணங்களாலே சப்திக்கிற பெரியதிருவடிகளைச் சேரவேணுமென்னும் நினைவுடையீர் !.— (மூவாயிரமித்யாதி) மூவாயிரம் ப்ராஹ்மணர் நாள்தோறும் ஸ்வரூபாநுரூபமாகவணங்குகிற அப்ராக்ருதமானதேஜஸ்ஸையுடைய ஆதிதேவன் விளங்குகிற. ... ... ... அ.

---

எட்டாம்பாட்டு.— (மாவாயித்யாதி) கேசியுடைய வாயோடேகூட உடம்பை அநாயாஸேந இரண்டாகக்கிழித்து, இந்த்ரனால்வந்த மழையிலே பெருத்துப் பழைதான கோவர்த்தநத்தையெடுத்து, ஆயர்தலைவனாய்ப்பசுமேய்த்து,லோகத்தைத்திருவயிற்றிலேவைத்த ஆச்சர்ய ஸம்பதனுடைய, ஆபரணவொலியையுடைத்தாய் போக்யதைமிக்க திருவடிகளைக் கூடவேணுமென்று குறிப்புடையீர் !.— (முறையால்வணங்க அணங்காயசோதி) சாஸ்த்ரங்களில் சொல்லுகிறபடியே ஆச்ரயிக்க, அவர்களுக்காச்ரயணீயனாய் தேஜஸ்ஸையுடைய ஸர்வேச்வரன். ... ... ... ... ... அ.

---

எட்டாம்பாட்டு.— (மாவாயித்யாதி.) கீழ்ப்பாட்டிற்சொன்னபுருஷகாரஸம்பந்தரைமுன்னிட்டாச்ரயித்தார்க்கு விரோதிபாபங்களைப்போக்கி கல்வர்ஷத்தை நீக்கித்தன்வயிற்றிலே வைத்துநோக்கவல்லனென்னுமதுக்கு த்ருஷ்டாந்தமான அபதாநங்களைஸூசிப்பித்து, அவனிருக்கும் தேசத்திலே சேருங்கோளென்கிறாரென்று ஸங்கதி.

அணங்காய - அப்ராக்ருதமான, சோதியென்றாய், அத்தையருளிச்செய்கிறார் (தேஜஸ்ஸையுடைய வென்று.) ... ... ... ... அ.

௯.— செருநீலவேற்கண் மடவார்திறத்துச்
சினத்தோடுநின்று மனத்தால்வளர்க்கும்
அருநீலபாவமகலப்புகழ்சே
ரமரர்க்குமெய்தாத வண்டத்திருப்பீர் !
பெருநீர்நிவாவுந்தி முத்தங் கொணர்ந்தெங்கும்
வித்தும்வயலுள்கயல்பாய்ந்துகளத்
திருநீலநின்றுதிகழ்கின்ற தில்லைத்
திருச்சித்திரகூடம் சென்றுசேர்மின்களே. ௯.

ப - ரை.—செரு - யுத்தத்துக்குப்பரிகரமான, வேல் - வேல்போலேகூரிதாய், நீலம் - நீலம்போலேகுளிர்ந்த, கண் - கண்ணழகையுடையராய், மடவார்திறத்து - மடப்பத்தையுமுடைய ஸ்த்ரீகளிடத்தில், புசிக்கநினைத்தபோகங்களைவிலக்குவார் பக்கல், சினத்தோடு - கோபத்தோடே, நின்று - இருந்து, மனத்தால் - நெஞ்சிலாசையாலே, வளர்க்கும் - வளர்த்து வருமதாய், அரு - போக்கவொண்ணாத, நீலம் - தண்ணிய, பாவம் - பாபமானது, அகல-போம்படி, புகழ்சேர்-புகழை[யுடைய]யுடைய, அமரர்க்கும் - ப்ரஹ்மாதிகளுக்கும், எய்தாத - கிட்டவரிய, அண்டத்து - பரமபதத்தில், இருப்பீர்! - இருக்கவேண்டியிருப்பீர்!, பெருநீர்-மிக்கநீரையுடைய, நிவா - வெள்ளாறு, முத்தம்கொணர்ந்து - முத்துக்களைக்கொணடுவந்து, உந்தி - தள்ளி, வித்தும் - விதைக்கிற, வயலுளெங்கும் - வயல்தோறும், கயல - கயல மத்ஸ்யங்கள், பாய்ந்து உகள - குதித்துத்துள்ள, திருநீலம்-அழகியநெய்தல்மலர், நின்று -எங்குமொக்கப்பரந்து, திகழ்கின்ற - விளங்குகிற, தில்லைச் திருச்சித்திர கூடம் சென்றுசேர்மின்கள்—. ... ... ... ... (௯)

ஒன்பதாம்பாட்டு. (செருவித்யாதி) செருவேல்போலவும் நீலம் போலவும் கூர்த்துக்குளிர்ந்த கண்ணழகையுடையருமாய் மடப்பத்தை யுடைய ஸ்த்ரீகள்விஷயமாக ஸங்கிக்க நினைத்தபோகங்களுக்கு ப்ரதிபந்தகரானவர் பக்கல் சினத்தாலே வளர்த்துவந்த உங்கள் நெஞ்சை யிருளப்பண்ணினபாபமகல. (புகழித்யாதி) புகழையுடைய ப்ரஹ்மாதிகளுக்கும்கிட்டாதபரமபதத்தேயிருக்கவேண்டியிருப்பீர். (பெருநீரித்யாதி) மிக்கநீரையுடைய நிவாவந்து முத்துக்களைக்கொண்டுவந்து தள்ளி வயல்தோறும்வித்த, அத்தாலே அவ்வயலிற்கயல்கள் கல்லிட்டெறிந்தாப்போலே பயப்பட்டுத்துள்ளிப்போக. (திருநீலமித்யாதி) அழகிய நீலமானது விளங்காநின்றவயலையுடைய தில்லை. ௯.

ஒன்பதாம்பாட்டு.— (செருவித்யாதி) யுத்தத்துக்குப் பரிகரமாய் நீலமானநிறத்தையுடைய வேல்போலேயிருக்கிற கண்ணையுடைய ஸ்த்ரீகள்திறத்தில், அதுக்கு ப்ரதிபந்தகர்பக்கல் சினத்தோடே நெஞ்சிலாசையாலே வளர்ந்து பரிஹரிக்கவொண்ணாதே தண்ணிதானஸம்பவத்ப்ரதிபந்தகமானபாபம்போக ப்ரஸித்தரானப்ரஹ்மாதிகளுக்கும் கிட்டவரிய பரமபதத்திலே யிருக்கவேண்டியிருப்பீர் !.— (பெருநீரென்றுதுடங்கி) மிக்கநீரையுடைய நிவாஎன்கிற ஆறு முத்தைக் கொண்டுவந்துவித்துகிற வயலிலே விக்ஷிதமானகயல்கள் பாய்ந்து தாவித்திரிய தர்ஶநீயமான நீலம் நின்று திகழாநின்றுள்ள தில்லை. ... ௯.

ஒன்பதாம்பாட்டு.— (செருவித்யாதி.) தாமுபதேசித்த ஆஶ்ரயணத்துக்கு ஸ்வரூபந்தான் ப்ராப்யாநுபவஜநித ஸ்வாநுபவத்ப்ராப்தி என்றுஸௌரவத்தை நெஞ்சில்படுத்துகிறாரென்று ஸங்கதி.

"நீலம்" என்று - கறுப்பாய், அத்தால் - தண்ணிமையைச்சொல்லுகிறதென்றருளிச்செய்கிறார் (தண்ணிதானவென்று.) விக்ஷிதமானவென்றது - முத்தைவித்துகையாலேகல்லிட்டெறிந்தாப்போலே பயப்பட்டிருக்கிறவென்றபடி. நீலம்-நெய்தல்.

மூ.— சீரார்பொழில்சூழ் தழகாய தில்லைத்
திருச்சித்திரகூடத் துறைசெங்கண்மாலுக்
காராதவுள்ளத்தவர் கேட்டுவப்ப
வலைநீருலகுக்கருளே புரியும்
காரார்புயற்கைக்கலிகன்றி குன்றா
வொலிமாலையோ ரொன்பதோடொன்றும்வல்லார்
பாராருலகமளந்தானடிக்கீழ்ப்
பலகாலம்நிற்கும்படி வாழ்வர்தாமே. ௧0.

ப - ரை.— சீர் ஆர - அழகுமிக்க, பொழில்சூழ்ந்து - சோலையால்சூழப்பட்டு, அழகாய - அழகையுடைத்தான, தில்லைத் திருச்சித்திரகூடத்து—, உறை - நித்ய வாஸம்பண்ணுகிற, செங்கண்மாலுக்கு - சிவந்த கண்ணழகையுடைய ஸர்வேஶ்வரன்விஷயமாக, ஆராத - பகவதநுபவத்தில்திருப்தி பிறவாத, உள்ளத்தவர்-நெஞ்சையுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள், கேட்டு—, உவப்ப - ஸந்தோஷிக்கும்படியாக, அலைநீர் - அலையெறிகிற ஜலத்தையுடைய கடலால் சூழப்பட்ட, உலகுக்கு - பூமியிலுள்ளார்க்கு, அருளே - ப்ரஸாதத்தையே, புரியும் - பண்ணும் ஸ்வபாவத்தையுடையராய், கார்ஆர் - மிகவும்பெருத்த, புயல் - மேகம்போலே, கை-உதாரரான, கலிகன்றி - ஆழ்வார், குன்றா - குறையாத,ஒலி - ஓசையையுடைத்தாம்படியருளிச்செய்த, மாலை - ஸப்தஸந்தர்ப்பத்தையுடைய, ஓரொன்பதோடொன்றும் - பத்துப்பாட்டையும், வல்லார் - அர்த்தத்துடன் கற்கவல்லவர்கள், பார் ஆர் உலகம் - பூமியையும், ஸ்வர்க்காதிலோகங்களையும், அளந்தான் - அளந்துகொண்டவனுடைய, அடிக்கீழ் - திருவடிகளிலே, பலகாலம் - ஸர்வகாலமும், நிற்கும்படிவாழ்வர்- அடிமைசெய்து வர்த்திக்கும்படியான வாழ்வைப்பெறுவர்கள். ... (௧0)

பத்தாம்பாட்டு. (சீராரித்யாதி) அழகார்ந்தபொழிலாலே சூழப்பட்டு அழகிய தில்லைத்திருச்சித்ரகூடத்திலே நித்யவாஸம்பண்ணுகிற புண்டரீகாக்ஷனைச்சொன்ன. (ஆராதவித்யாதி) ஸமவதநுஸவத்தால் ஒருக்காலுமாராத ஹ்ருதயத்தையுடைய ஸூரிகள்கேட்டுகக்க. (அலைநீரித்யாதி) கடல்சூழ்ந்தபூமிக்கு அருளேபண்ணும். (காராரித்யாதி) கார் - பெருமை. மிகவும்பெருத்த மேவம்போலே வரையாதேகொடுத்தகையையுடைய ஆழ்வாரருளிச்செய்த பத்துப்பாட்டையும் வல்லார்.

பத்தாம்பாட்டு.— (சீராரித்யாதி) அழகுமிக்க பொழில்சூழ்ந்து தர்ஶநீயமான தில்லையில் நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேஶ்வரனுக்கு, ஒருநாளும் ஆராத ஸ்நேஹத்தையுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள்கேட்டு ஸந்தோஷிக்க, கடல்சூழ்ந்தபூமிக்கு ப்ரஸாதத்தைப்பண்ணும் ஸ்வபாவராய், கார்காலத்து மேவம்போலே பரமோதாரரான திருமங்கையாழ்வார்குறையாதவோசையையுடைத்தாகவருளிச்செய்ததிருமொழி பத்தும் வல்லார் ;

பத்தாம்பாட்டு.— (சீராரித்யாதி.) "உள்ளம்" என்கிறபதம் லக்ஷணயா ஸ்நேஹத்தைச் சொல்லுமென்றருளிச்செய்கிறார் (ஸ்நேஹத்தையென்று.) "அருளே புரியும்" என்கிற அவயாரணலஹ்யார்யம் (ஸ்வபாவராயென்றது.) ௧0.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

(பாராரித்யாதி) பூமியையும் ஸ்வர்க்காதிலோகங்களையுமளந்தவன்திருவடிகளிலே ஸர்வகாலமுமடிமைசெய்து நிற்கும்படியான வாழ்ச்சியைப்பெறுவர். ... ... ... ... க0.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

---

ப்ருதிவீப்ரப்ருதிமானலோகத்தை யளந்தவன்திருவடிகளின்கீழே காலமெல்லாம் வர்த்திக்கும்படியான வாழ்வைப்பெறுவர். ... க0.

அடிவரவு.— ஊன் காய் வெம்பு அருமா கோ நெய் மௌவல் மாவாய் செருச் சீரார் வாட.

திருமங்கையாழ்வார்திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

ஆக, திருமொழி - உஉ - க்கு, பாட்டு - உஉ0.

மூன்றாம்பத்து - மூன்றாந்திருமொழி-வாடமருதிடை. ப்ரவேஶம்.

திருவவதரித்தபோது துடங்கி விரோதிநிரஸநஶீலனான க்ருஷ்ணன் பூதநாஶகடயமளார்ஜுநாதிகளை நிரஸித்தாப்போலே த்வதநுபவவிரோதியான அவித்யாதிகளைப்போக்க ஆஶ்ரிதஸுலபனாய்க்கொண்டு திருச்சித்ரகூடத்திலே க்ருஷ்ணன் நித்யவாஸம்பண்ணாநின்றான், அவனை நீங்கள் சென்றாஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்கிறார். *

---

க்ருஷ்ணாவதாராதிகளிலிழவுதீரத் திருச்சித்ரகூடத்திலே வந்து ஸந்நிஹிதனானான், எல்லாருமாஶ்ரயியுங்கோளென்கிறார். ... *

அ.— வாடமருதிடைப்ரவேஶம்.— கீழ்த்திருமொழியில் ராமக்ருஷ்ணாதிவிபவங்களிலபதாநங்களை யாஶ்ரயிக்கைக் குறுப்பாகச்சொல்லி, “திருச்சித்திரகூடத்தில் சென்று சேர்மின்கள்” என்றார்; இதுகேட்டசேதநர்க்கு விபவத்தில்நெஞ்சு சென்று அங்கே ஆஶ்ரயிக்கையில் ருசிபிறந்து அதுகாலாதீதமென்று பிற்காலிக்கவும் கூடுமென்று திருவுள்ளம்பற்றி, அந்தவிபவங்களில் விரோதிநிரஸநஶீலதையை பஹுமுகமாகவருளிச்செய்துகொண்டு, அவனே திருச்சித்திரகூடத்துள்ளானென்றுஸம்ஸாரிகள்நெஞ்சில்படுத்துகிறாரென்னும்ஸங்கதியை ஸங்க்ரஹேண ஸூசிப்பிக்கிறார் (க்ருஷ்ணாவதாரேத்யாதி.) ஆதிஶப்தத்தாலே - ராமாவதாரமும், நரஸிம்ஹாவதாரமும் சொல்லுகிறது. ... ... ... *

மூ.—வாடமருதிடைபோகி மல்லரைக்கொன் றொக்கலித்திட்
டாடல்நன்மாவுடைத் தாயராநிரைக்கன்றிடர்தீர்ப்பான்
கூடியமாமழைகாத்த கூத்தனென வருகின்றான்
சேடுயர்பூம்பொழில்தில்லைச் சித்திரகூடத்துள்ளானே. க.

ப - ரை.— கம்ஸன்வரவிட்ட விரோதிகளான, மருதிடை - இரண்டுமருதமரங்களின்நடுவே, வாட - அவைமுறிந்து விழும்படி, போகி - தவழ்ந்துபோய்; மல்லரை - சாணூரமுஷ்டிகராகிறமல்லவர்க்கத்தை, கொன்று - நிரஸித்து; ஒக்கலித்திட்டு - நடைபழகினதாய், ஆடல் - ஆடிக்கொண்டு வருமதாய், நல் - அழகிதான, மா - குதிரைவடிவுகொண்டு வந்த கேஸியை, உடைத்து-கொன்று; அன்று-இந்த்ரன்வர்ஷிப்பித்தவன்று, ஆயர் - இடையருடைய, ஆநிரைக்கு - பசுக்கூட்டத்துக்குவந்த, இடர் - துக்கத்தை, தீர்ப்பான் - தீர்க்கைக்காக,கூடிய - திரண்ட, மாமழை-கல்வர்ஷத்தை, சோவர்த்தநமலையையெடுத்து, காத்த-ரக்ஷித்த, கூத்தன் என-மநோஹரிசேஷ்டிதத்தையுடையவன் என்று எல்லாரும் சொல்லும்படி, வருகின்றான் - வருமவன் ; சேடு - இளகிப்பதித்ததாய், உயர்-ஓங்கின, பூம்[டுடு] பொழில் - அழகியசோலைகளையுடைய, தில்லைச்சித்திரகூடத்து - தில்லைத்திருச்சித்திரகூடத்திலே, உள்ளான்-நித்யவாஸம்பண்ணுகின்றான் ; அவனை ஆஸ்ரயியுங்கோளென்கிறார். ... ... ... ... ... (க)

முதற்பாட்டு. (வாடமருதிடையித்யாதி) வாணூரமுஷ்டிகரைக்கொன்று,ஆவாலங்கொட்டி ஆடஉர்ஸநீயமான குதிரைவடிவுகொ[உம]ண்டுவந்த கேஸியைக்கொன்று. (ஆயரித்யாதி) இடையருடைய பசுநிரைக்கு இந்த்ரனாலே ஆபத்துவந்தவன்று, இடர்தீர்ப்பான். (கூடியவித்யாதி) திரண்டகல்வர்ஷத்தை மலையெடுத்துக்காத்த கூத்தனென வருகின்றான். (சேடித்யாதி) சேடு - திரட்சியும், இளமையும். இளகிப்பதித்து ஓங்கின பொழிலையுடைய தில்லை. ... ... க.

முதற்பாட்டு.— (வாடவித்யாதி) அஸுராவேஸத்தாலே வந்த மருதாகையாலே இவன்கிட்டக்கிட்ட அவைவாட, மருதின்நடுவே போய்.(மல்லரைக்கொன்று)வாணூரமுஷ்டிகரைநிரஸித்து; ஆவாலம் கொட்டி;(ஆடல்)தன்ஸஞ்சாரத்திலேயிவன்அங்யபராணும்படிஆடிக்கொண்டுவந்து தோற்றின கேஸியைக்கொன்று, இடையருடைய பசுநிரைக்கு அன்றிடர்தீர்க்கைக்காக இந்த்ரன்ப்ரேரித்த புஷ்கலாவர்த்தகாதிமேவங்களெல்லாம் கூடிவர்ஷித்தபெருமழையைக்காத்த மநோஹாரிசேஷ்டிதத்தையுடையவன் என்று எல்லாரும்சொல்லவருகிறவன்.—(சேடு) இளமையும், திரட்சியும். ... ... ... க.

முதற்பாட்டு.— (வாடவித்யாதி.) "இணைமருதிற்றுவீழ" என்னுமாப்போலே-முறிந்து விழுகையைச்சொல்லவேண்டியிருக்க, "வாட" என்றதுக்கு - வாடும்போது போனுனென்று விவக்ஷித்து, ஹேதுபூர்வகம் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அஸுரேத்யாதி.) ஒக்கலித்திட்டு - பழகின, ஆடலுடைத்தாய் நல்லதானமாஎன்று ஸவ்தார்யமாய், தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆவாலமித்யாதி.) ஆவாலங்கொட்டுகை - குதிரைநடைபழக்குகைக்குக்கொட்டுகை. ... க.

மூ.— பேய்மகள் கொங்கைநஞ்சுண்ட பிள்ளைபரிசிது வென்றால்
மாநிலமாமகள் மாதர்கேள்வனிவனென்றும் வண்டுண்
பூமகள்நாயகனென்றும் புலன்கெழு†கோவியர்பாடித்
தேமலர்தூவவருவான் சித்திரகூடத்துள்ளானே. ௨.

---

ப - ரை.— பேய்மகள் - பேயான பூதனையுடைய, கொங்கை - முலையில், நஞ்சு - விஷத்தை, உண்ட - அமுதுசெய்தருளின, இது - ஆச்சர்யமான விச்செயல், பிள்ளைபரிசு என்றால் - பிள்ளையுடைய ப்ரகாரம் என்றால்; இவன்—, இளம்பிள்ளையல்லன், மா - பஞ்சாஸத்கோடிவிஸ்தீர்ணையான, நிலமாமகள்மாதர் - ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு, கேள்வன் என்றும்-வல்லபன் என்றும்,வண்டு-வண்டுகள்,உண்-[மதுபாநம் பண்ணவிழுகிற,பூமகள் - தாமரைப்பூவைப்பிறந்தகமாகவுடையபெரியபிராட்டியார்க்கு, நாயகன் என்றும் - பதிஎன்றும், புலன்கெழு - கண்டார்நெஞ்சைக்கவரும் வடிவையுடைய, கோவியர் - இடைப்பெண்கள், பாடி - ஸ்தோத்ரபூர்வகமாகப்பாடி, தேன்மலர் - செவ்விகுன்றாதபூவை, தூவ-பணிமாற, வருவான்-வருமவன், சித்திரகூடத்துள்ளான்—. ... ... ... (௨)

---

இரண்டாம்பாட்டு. (பேய்மகளித்யாதி) பூதனைமுலையில் நஞ்சையுண்ட பிள்ளைப்ரகாரமிது வென்றால். (மாநிலமித்யாதி) இவனிளம்பிள்ளையல்லன், லக்ஷ்மீஸஹிகளுக்குவல்லஹனிவனென்று. (புலமித்யாதி) கண்டாருடைய இந்த்ரியங்கள் பிணிப்புண்ணும்படி அழகையுடைய பெண்கள் இவனைப்பாடிச் செவ்விப்பூவைப் பணிமாறவரும் க்ருஷ்ணன் சித்ரகூடத்துள்ளான். ... ... ... ௨.

---

இரண்டாம்பாட்டு. — (பேய்மகளித்யாதி) பிள்ளையுடையபடி—பேயாய்வந்தஸ்த்ரீயினுடைய முலையில்நஞ்சையுண்ட ஆஸ்சர்யமான செயலென்றால், “இவன் கேவலம் பிள்ளையல்லன், ஸ்ரீஸஹிப்பிராட்டிக்குவல்லஹன், பெரியபிராட்டியார்க்கு நாயகன்” என்று, கண்டாருடைய இந்த்ரியங்களைப்பிணிக்கும் வடிவையுடைய இடைப்பெண்கள்பாடி, செவ்விப்பூவைத்தூவ வருமவன். (பொலன்கெழுகோவியர்) என்று - பொன்னாலே செய்த ஆஹரணத்தையுடைய கோவியரென்னவுமாம். ... ... ... ... ௨.

---

இரண்டாம்பாட்டு.—(பேயித்யாதி.)ஸௌலப்யஸௌர்யாதி அதிமாநுஷ[சேஷ்டிதங்களைச்செய்தவனே சித்ரகூடத்துள்ளானென்றறிந்து நிஸ்சயிக்கும்படியெங்ஙனே? என்னும் ஜிஜ்ஞாஸையிலே; இடைப்பிள்ளையாயிருக்கச்செய்தே ஸ்ரிய:பதியென்று நிஸ்சயித்தார் இடைப்பெண்கள் கண்டீர்களே, அங்ஙனே நீங்களும் கொள்ளுங்கோளென்கிறாரென்று ஸங்கதி.

“பிள்ளைபரிசு - பேய்மகள்கொங்கைநஞ்சுண்ட - இதுவென்றால், மாநிலம்” இத்யாதி என்றந்வயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பிள்ளையித்யாதி.) (பிள்ளையுடையபடி) என்று சில ஸ்ரீகோஸங்களிலுண்டாயிருக்கும்; அப்போது, அந்வயத்திலே திருவுள்ளம். அன்றிக்கே, சிலஸ்ரீகோஸங்களில் (பிள்ளையுடையபடியே) என்றுமுண்டு; அப்போது, பிள்ளையைப்போலே மாநுஷ்யமானபடியே! என்றாய், “பேய்” என்றும் “மகள்” என்றும்சொன்னபதத்வயத்துக்கும்-பேயானதுமநுஷ்யவேஷங்கொண்டதென்று கருத்தருளிச்செய்கைக்கு த்ருஷ்டாந்தமென்று கொள்ளவேணும்; இப்போது, யதாவஸ்திதமேயந்வயம். பொலன் - ஆஹரணம், கெழுமுகை - சேருகையாய், அருளிச்செய்கிறார் (பொலனித்யாதி.) ௨.

---

† “பொலன்கெழு” என்று பாடாந்தரம்.

மூ.—பண்டிவன்வெண்ணெயுண்டானென்றாய்ச்சியர்கூடியிழிப்ப‡
எண்டிசையோரும்வணங்கவிணைமருதூடு நடந்திட்
டண்டரும்வானத்தவரு மாயிரநாமங்களோடு
திண்டிறல்பாடவருவான் சித்திரகூடத்துள்ளானே. ௫.

---

ப - ரை.— இவன - இச்சிறுப்பிள்ளை, வெண்ணெய்உண்டான் என்று - வெண்ணெயைக்களவுகண்டு அமுதுசெய்தான் என்று, ஆய்ச்சியர் - இடைப்பெண்கள், கூடி - திரண்டு, இழிப்ப - பழிக்க; எண்திசையோரும் - எட்டுதிக்கிலுள்ளாரும், வணங்க - ஸேவிக்கும்படியாக, இணைமருதூடு - ஒன்று என்னலாம்படி சேர்ந்து நின்ற இரண்டுமருதின்வடிவுகொண்ட அஸுரர்களின்நடுவே, நடந்திட்டு-தவழ்ந்து போய், அண்டரும் - நித்யஸூரிகளும்,வானத்தவரும் - ப்ரஹ்மாதிகளும், ஆயிர நாமங்களோடு - ஸஹஸ்ரநாமங்களையுஞ்சொல்லி, அவனுடைய, திண் - திண்ணிதான, திறல் - ஆண்பிள்ளைத்தனத்தை, பண்டு—, பாட—, வருவான் - வருமவன், சித்திரகூடத்துள்ளான்—. ... ... ... ... (௫)

---

மூன்றாம்பாட்டு. (பண்டித்யாதி) பண்டு வெண்ணெயைக் களவுகண்டு அமுதுசெய்தானென்று இடைச்சிகள் திரண்டுகூப்பிட. (எண்டிசையித்யாதி) எட்டுதிக்கிலுள்ளாரும் வணங்க, சேரநின்றமருதுகள் நடுவேபோய். (அண்டருமித்யாதி) நித்யஸூரிகளும் ப்ரஹ்மாதிகளும் ஆயிரந்திருநாமங்களைச்சொல்லி, திண்டிறல்பாடவருவான். ௫.

---

மூன்றாம்பாட்டு.— (பண்டித்யாதி) "இவன்வெண்ணெயுண்டான்" என்று இடைப்பெண்கள் கூடியேச, எட்டுதிக்கிலுள்ளாரும் திருவடிகளிலே வணங்கும்படியாக, நிர்விவரமானமருதினுள்ளிட்டுப்போய், இடையர்களும் தேவர்களுமாய் ஆயிரந்திருநாமங்களைச் சொல்லிக்கொண்டு, தன்னுடைய ஆண்பிள்ளைத்தனத்தைப்பண்டுபாடவருவான்.

---

மூன்றாம்பாட்டு.— (பண்டித்யாதி) பேய்முலையுண்டபடியைக்கண்ட இடைப்பெண்கள் மேன்மைபேசினாராகிலும், வெண்ணெயுண்டபோது இடைப்பிள்ளையென்றே ஏசவுங்கண்டோமே! என்ன; வெண்ணெயுண்டுகட்டுண்டு நின்றபோதே, நின்றமருதிறுத்து தேவராலும் இடையராலும் கொண்டாடப்பட்டான் கண்டீரென்று நெஞ்சிலுறைக்கச்சொல்லுகிறாரென்று ஸங்கதி.

அழைக்கை-கூப்பிடுகையாய், ஃலித்தவர்யம்(ஏசவென்றது.) "இவன்" என்று தொடங்கி "திண்டிறல் - பண்டு - பாடவருவான்" என்றந்வயம். ௫.

நாலாம்பாட்டு.— (வளையித்யாதி.) மருதிறுத்தவனவன்றிக்கே பாம்பின்படத்தில்தானேபோய் நடமாடின அபதாநத்தாலும் அவர்கள் பரனென்றிருந்தார்களென்று வியாமகாஞர மருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

---

‡ "அழைப்ப" என்று நஞ்ஜீயர்படியிலும் அரும்பதத்திலும் பாடம்.

மூ.—வளைக்கைநெடுங்கண்மடவாராய்ச்சியரஞ்சியழைப்பத்
தளைத்தவிழ்தாமரைப்பொய்கைத்தண்டடம்புக்கண்டர்காண
முளைத்தவெயிற்றழல்நாகத்துச்சியில்நின்றதுவாடத்
திளைத்தமர்செய்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. ௪.

ப - ரை.— வளை-வளைகளாலே அலங்கரிக்கப்பட்ட, கை - கைகளையும், நெடு-நீண்ட, கண் - கண்களையும், மடவார் - மடப்பத்தையுமுடையாரான, ஆய்ச்சியர்-ஸ்ரீகோபிமார்கள், அஞ்சி - பயப்பட்டு, அழைப்ப - கூப்பிட; தளை அவிழ் - கட்டு அவிழுகிற, தாமரைப்பொய்கை - தாமரைத்தடாகத்தின், தண்- குளிர்ந்த, தடம்-கரையிலே, புக்கு - போய், அண்டர் - இடையர், காண-காணும்படியாக, முளை[மு]த்த—, எயிறு - பற்களையும், அழல் - விஷாக்நியையுமுடைய, நாகத்து உச்சியில்-காளியனுகிற பாம்பின்தலையிலே, நின்று - ஒருபடிப்படநின்று, அது வாட - அது இளைக்கும்படி, திளைத்து - களித்து, அமர்செய்து - பூசல்பண்ணி, வருவான் - வருமவன், சித்திரகூடத்துள்ளான்—. ... ... ... (௪)

நாலாம்பாட்டு.(வளைக்கையித்யாதி)வளைகளாலே அலங்க்ருதமான கையையும் அழகிய கண்ணையுமுடையராய், மடப்பத்தையுமுடைய ஸ்ரீகோபிமாரஞ்சிக்கூப்பிட.(தளைத்தவிழித்யாதி)தளைஅவிழுகிற-கட்டு அவிழுகிற, தாமரைப்பொய்கையில் குளிர்ந்தகரையிலேசென்று,அண்டர்காண – இடையர்காண, முளைத்தபல்லையும் விஷாக்நியையுமுடைய காளியன்தலையிலேநின்று, அதுவாட – அது இளைக்க, அதினுச்சியிலே நின்று திளைத்துப் பூசல்பண்ணிவருவான். ... ... ௪.

நாலாம்பாட்டு.—(வளைக்கையித்யாதி)வளையாலேஅலங்க்ருதமான கையையும், ஸீதைகளாய்ப்பார்க்கும் நோக்கையுமுடைய இடைப்பெண்கள் அஞ்சிக்கூப்பிட, கட்டவிழ்ந்தலர்ந்த தாமரைப்பொய்கையினுடைய ம்ருமஹரமான கரையிலேசென்று; இடையர்காண,முளைத்த வெயிற்றையுடைய பாம்பினுடைய வுச்சியிலேபுக்குநின்று, அதுவாடும்படி கூடவிளையாடி அமர்செய்துவருமவன். ... ... ௪.

“ தளைத்தவிழ்” என்றவிடத்தில், “அத்து” - சாரியைச்சொல்லாய், “தளை-அவிழ்” என்று யருளிச்செய்கிறூர் (கட்டவிழ்ந்தலர்ந்தவென்று.) அமர்செய்து-யுத்தம் பண்ணி. ... ... ... ... ... ... ௪.

அஞ்சாம்பாட்டு.—(பருவமித்யாதி.) கீழ்நாலுபாட்டாலும் - அவனதிமாநுஷ சேஷ்டிதங்களைச்சொல்லி, அத்தால் அவன் பரன்என்றுப்போலே நீங்களுமவனை நிர்ணயித்தாஸ்ரயியுங்கோளென்றூர் ; இனிமேல்பாட்டுக்களில் - நப்பின்னைமுதலானார்க்கு விரோதிநிவர்த்தநமுவத்தாலே யுதவினுப்போலே உங்களுக்கு முதவுவானென்பாராய், அதில் நப்பின்னைக்குதவினவித்தை யிதிலருளிச்செய்கிறூரென்று லமதி.

மூ.— பருவக்கருமுகிலொத்து முத்துடைமாகடலொத்து
அருவித்திரடிகழ்கின்ற வாயிரம்பொன்மலையொத்து
உருவக்கருங்குழலாய்ச்சித்திறத் தினமால்விடைசெற்றுத்
தெருவில்திளைத்துவருவான் சித்திரகூடத்துள்ளானே. ௫
எய்யச்சிதைந்ததிலங்கை; மலங்கவருமழைகாப்பான்
உய்யப்பருவரைதாங்கி யாநிரைகாத்தானென்றேத்தி
வையமெவரும்‡வணங்க வணங்கெழு மாமலைபோலே
தெய்வப்புள்ளேறிவருவான் சித்திரகூடத்துள்ளானே. ௬

ப - ரை.— பருவம் - கார்காலத்திலுண்டான, கருமுகில்ஒத்து - காளமேகம் போலேயும். முத்துஉடை - முத்துக்களை உடைய, மா - கறுத்த, கடலொத்து - கடல்போலேயும், அருவித்திரள் - அருவிகளாலே, திகழ்கின்ற - விளங்காநின்றுள்ள, ஆயிரம் பொன்மலைஒத்து - அநேகமாநபர்வதங்கள்போலேயுமாய், உருவம் - அழகிய வடிவையும், கரு - கறுத்த, குழல் - திருக்குழலையுமுடைய, ஆய்ச்சிதிறத்து - நப்பின்னைப்பிராட்டிக்காக, இனம் - ஒன்றாய்த்திரண்ட, மால்விடை - பெரிய ரிஷபங்களை, செற்று - நிரஸித்து, தெருவில் - வீதியிலே, திளைத்து - களித்துவிளையாடி, வருவான் - வருமவன், சித்திரகூடத்துள்ளான்—. ... ... (௫)

ப - ரை.— எய்ய - * எரிசித்ருமசரத்தாலே இவன்எய்தபோது, இலங்கை - லங்கையானது, சிதைந்து - அழிந்தது; திருவாய்ப்பாடியிலுள்ள இடையரும், நிரை - பசுக்கூட்டமும், மலங்க - கலங்கும்படி, வரும் - வருகிற, மழை - மழையை, காப்பான் - போக்குகைக்காக, உய்ய - அவை உஜ்ஜீவிக்கும்படி, பருவரை - பெரிய மலையை, தாங்கி - எடுத்து, அவற்றை, காத்தான் என்று - ரக்ஷித்தான்என்று, வையம் - பூமியிலுள்ள, எவரும் - எல்லாரும், ஏத்தி - ஸ்தோத்ரம்பண்ணி, வணங்க - ஆச்ரயிக்கும்படியாக, அணங்குஎழு - தேஜோவிஷ்டமான, மா - பெரிய, மலைபோலே - மலையைப்போலே, தெய்வம் - அழகிய, புள் - பெரியதிருவடிமேலே, ஏறி - ஏறிக்கொண்டு, அரைத்தலைத்தலையா, வருவான் - வருமவன், சித்திரகூடத்துள்ளான்—.

அஞ்சாம்பாட்டு. (பருவமித்யாதி) கார்காலத்தில் காளமேகத்தை யொத்து, முத்துப்படுகிற கருங்கடலொத்து. மா - கறுப்பு. (அருவி யித்யாதி) அருவிகளாலே விளங்காநின்ற அநேகம் பர்வதங்களை யொத்து. உருவம் - அழகு. அழகியகருங்குழலையுடைய நப்பின்னை[நிமித்தம்] பொருட்டு இனமான பெரிய விடைகளைச் செற்று, வீதியிலே செருக்காலே யாடிவருவான். ... ... ... ... ௫.

அஞ்சாம்பாட்டு.— (பருவமித்யாதி) வர்ஷுகவலாஹகம்போலேயும், முத்துடைய பெருங்கடல்போலேயும், அருவித்திரள்களாலே விளங்காநின்றுள்ள ஆயிரம் பொன்மலைபோலேயுமாய், அழகிய வடிவையும், கறுத்த திருக்குழலையுமுடைய நப்பின்னைப்பிராட்டி யிடையாட்டத்துக்காக, திரண்டு பெருமையையுடைய ஜ்ஷஹங்களைக்கொன்று, தன்பருவத்திற்பிள்ளைகளோடே தெருவிலே கூடிவிளையாடிவருமவன்.

நபபின்னை க்ஜஷ்ணனோடொத்தநிறமுடையவளென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (வர்ஷுகேத்யாதி.) பொன்மலைபோலேயுமென்றது - ஆஹரணச்சேர்த்தியாலே.

ஆறும்பாட்டு.— (எய்யவித்யாதி.) இதில் - பிராட்டிக்கும் பசுக்களுக்கு முதவினாப்போலே யுதவுமவனென்றருளிச்செய்கிறாரென்ற ஸங்கதி.

‡ "வையத்தவரும்" என்றும் பாடம்.

மூ.—ஆவரிவைசெய்தறிவாரஞ்சநமாமலைபோலே
மேவுசினத்தடல்வேழம் வீழமுனிந்*தழகாய
காவிமலர்நெடுங்கண்ணார்கைதொழவீதிவருவான்
தேவர்வணங்குதண்டில்லைச் சித்திரகூடத்துள்ளானே. ௭.

ப - ரை.— ஆச்ரிதர்க்காக, இவை - இப்படிப்பட்ட (க) ஆனைத்தொழில்களை, செய்தறிவார்ஆர்?-செய்தார்ஒருவருமில்லை;அதாவதென்னென்னில்;மா-பெரிய,அஞ்சநமலைபோலே - அஞ்ஜநகிரிபோலேயாய், சினம்-கோபத்தை, மேவு-ஸ்வபாவமாகவுடைத்தாய், அடல் - மிடுக்கையுடைய, வேழம் - குவலயாபீடம் என்னும் யானை, வீழ - விழும்படி, முனிந்து - சீறியருளி, அழகாய-அழகையுடைத்தாய், காவிமலர்-நீலோத்பலம்போலே கறுத்து, நெடு - நீண்ட, கண்ணார் - கண்களையுடைய ஸ்த்ரீகள், கைதொழ - ஸேவிக்கும்படியாக, வீதி - திருவீதியிலே, வருவானை - எழுந்தருளுமவனை; தேவர்வணங்கு - தேவர்கள்வந்து ஆச்ரயிக்குமதாய், தண் - ச்ரமஹரமான, தில்லைச்சித்திரகூடத்துள்ளான்—. ... ... ... (௭)

ஆறாம்பாட்டு. (எய்யவித்யாதி) இவன்கிட்டினவளவிலே லங்கை அழிந்தது. (எய்ய) அம்புஎய்யவென்னுதல். (மலங்கவித்யாதி) திருவாய்ப்பாடியி லிடையருமிடைச்சிகளும் கலங்கும்படி வந்த மழையைக்காக்கைக்காக. (உய்யவித்யாதி) பசுவாதிகளெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி பெரியமலையையெடுத்து ரக்ஷித்தானென்று பூஸுரரும் மற்றுள்ளாரும் ஏத்திவணங்க. (அணங்கித்யாதி) தைவாவிஷ்டமானதொரு மலைபோலே அப்ராக்ருதமான புள்ளை மேற்கொண்டு வருவான். ௬.

ஏழாம்பாட்டு. (ஆவரிவையித்யாதி) இவ்வரியதொழில் செய்தார்

---

ஆறாம்பாட்டு.— (எய்யவித்யாதி) இவன்பண்டெய்ய, லங்கை அழிந்தது;பசுக்களுமிடையரும் மலங்கும்படியாக வருகிற மழையைக் காக்கைக்காக, அவைஉய்யும்படிக்காகப் பெரியமலையையெடுத்துக் காத்தானென்றேத்தி, பூமியிலுள்ளாரெல்லாரும்வணங்க, தேவாவிஷ்டமான மலைபோலே பெரியதிருவடிமேலே ஏறிவருமவன். ௬.

ஏழாம்பாட்டு.—(ஆவரித்யாதி) எவரிவைசெய்தறிவார்?;

---

(பூமியிலுள்ளாரெல்லாரும்)என்றதுக்கு-"வையத்தவர்"என்கிறபதத்தால் பூஸுரர்களைச்சொல்லிற்றேயாகிலும், ஸத்வப்ரசுரரானவைஷ்ணவப்ராஜ்ஞர்களெல்லாரையும்சொல்லுமென்று திருவுள்ளம். ... ... ... ௬.

ஏழாம்பாட்டு.— (ஆவரித்யாதி.) ஆந்நகரத்தளவேயன்றிக்கே, ஸ்ரீமதுரையில் பெண்களுக்குக் களிறுதருபுணர்ச்சிகொடுத்தவன்உங்களுக்குதவுவனென்கிறாரென்று ஸங்கதி. அதாவது-ஆனையால்வந்த ஆபத்தைப்போக்கித் தன்னைக்கண்ணாரக்கண்டநுபவிக்கக் கொடுத்தானென்கை. க்ருஷ்ணன்மேலே யானைவருமதுவே பெண்களுக்காபத்திறே.

(எவரிவைசெய்தறிவார்) என்றதுக்கு - மூன்றுயோஜநை. அதாவது - செய்த விவை - குவலயாபீடநிரஸநாதி வ்யாபாரங்களை, எவரறிவார் - ஒருவருமறிவாரில்லை என்று ஆழ்வார் தம்மிலே தாம்நொந்து எத்தனைநாளுபதேசித்தாலும்திருந்துவாரரிதாயிருந்ததென்று ஈடுபடுகிறாரென்னுதல்; அன்றிக்கே, ஆச்ரிதர்க்காக

---

(க) ஆனைத்தொழில்கள் - அதிமாநுஷசேஷ்டிதங்கள்.

மூ.—பொங்கு மமரிலொருகால் பொன்பெயரோனை வெருவ
அங்கவனாகமளைந்திட்டாயிரந்தோளெழுந்தாட
பைங்கணிரண்டெரிகான்றநீண்டவெயிறொடுபேழ்வாய்ச்
சிங்கவுருவில்வருவான் சித்திரகூடத்துள்ளானே. அ.

ப - ரை.— ஒருகால் - எங்குமுளன் கண்ணனென்ற தன்மகனைப் ப்ரஹ்லாதனைச் சீறினவன்று, அமரில் - யுத்தத்தில், பொன்பெயரோன் - ஹிரண்யன், வெருவ - அஞ்சும்படி, பொங்கி - கிளர்ந்துதோற்றி; அங்கு - அவ்விடத்திலே, அவன் ஆகம் - அவனுடைய உடம்பை, அளைந்திட்டு - பிளந்து, ஆயிரம்தோளெழுந்தாட - அநேகம் திருத்தோள்களும் தோற்ற வ்யாபரித்து, எரிகான்ற - நெருப்பை உமிழாநின்றுள்ள, பை - பசுத்த, இரண்டுகண் - இரண்டுகண்களையும், நீண்ட—, எயிறு - கோரைப் பற்களையும், பேழ் - பெரிய, வாய் - வாயையுமுடைய, சிங்கவுருவில் - நரஸிம்ஹ ரூபியாய், வருவான் - வருமவன், சித்திரகூடத்துள்ளான்—. ... (அ)

இன்னொன்று சொல்லக் கேட்டறிவாரில்லை. பெரிய அஞ்ஜநகிரிபோலேயிருக்கிறவனாயும் பொருந்தின சினத்தையும் மிடுக்கையுமுடைய குவலயாபீடம் விழும்படி முனிந்த. (அழகியவாதி) அழகிய கருங்குவளைபோன்ற நெடுங்கண்ணையுடைய கன்னியர் கைதொழ வீதி வருவான். (தேவர்வணங்கு) ப்ரஹ்மேசாநாதிகள் வணங்கு. எ.

எட்டாம்பாட்டு. (பொங்கியித்யாதி) கிளர்ந்துகொண்டு யுத்தத்திலே

பெரிய தொரு அஞ்ஜநகிரிபோலே, ஸ்வாபாவிகமான சினத்தையுடைத்தாய் யுத்தோந்முகமான ஆனை குட்டிச்சுவர்போலே விழும்படி சீறி, கருநெய்தல்களாய் கானிமலர்போலே கறுத்து நெடியகண்ணையுடைய ஸ்த்ரீகள் கைதொழும்படி வீதியிலே வருமவன், தேவாதிகள் வணங்கும்திலலைச் சித்திரகூடத்துள்ளானே. ... ... ... ... எ.

எட்டாம்பாட்டு.—(பொங்கியித்யாதி) யுத்தத்திலே பண்டொருகால்

இவ்வருந்தொழில்களைச் செய்தாரார் - ஒருவருமில்லை என்று எம்பெருமானுடைய ஸ்திதத்தை வெளியிடுகிறாரென்றுதல்; அங்கனன்றிக்கே, ஸ்ரீமதுரையில் பெண்களீடுபாடாய், "செய்தறிவார்" என்றவந்தரம், என்று என்றொரு பதத்தை அத்யாஹரித்துக்கொண்டு, (கைதொழும்படி) என்ற பதத்தோடு அந்வயித்துக் கொள்ளவுமாம். (அஞ்ஜநகிரிபோலே) என்றது - (வீதியிலே வருமவன்) என்றதோடந்வயம். (அஞ்ஜநகிரிபோலேயிருக்கிற) என்று - குவலயாபீடத்துக்கு விசேஷணமாகவுமாம். ... ... ... எ.

எட்டாம்பாட்டு.— (பொங்கியித்யாதி.) கீழ்ப்பாட்டிலே - திருந்துவாரொருவருமில்லை என்ற பக்ஷத்தில், தம்முடைய க்ஷாத்ரயத்தாலே திருந்தாதலோகத்தார்க்கு அச்சம் பிறக்கும்படி, விலங்கிப்போனாரெல்லாரும் ஹிரண்யன்பட்டது படுவரென்கிறாரென்று ஸங்கதி; மற்றைப்பக்ஷங்களில், பெண்களுக்குதவினவளவன்றிக்கே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு வந்துதோற்றினாப்போலே யுதவுமவனென்கிறாரென்று ஸங்கதி.

"அமரிலொருகால் பொன்பெயரோனைவெருவ - பொங்கி - அங்கு" இத்யாதியன்வயமுவோவருளிச்செய்கிறார் (யுத்தத்திலேயித்யாதி.)

மூ.— கருமுகில்போல்வதோர்மேனி கையனவாழியும்சங்கும்
பெருவிறல்வானவர்சூழவேழுலகும்தொழுதேத்த
ஒருமகளாயர்மடந்தை யொருத்திநிலமகள் மற்றைத்
திருமகளோடும்வருவான் சித்திரகூடத்துள்ளானே. ௯.

ப - ரை.— கருமுகில்போல்வது - காளமேகம்போலேகறுத்த, ஓர் - ஒப்பற்ற, மேனி-வடிவழகையுடையனாய், ஆழியும்-திருவாழியாழ்வானையும், சங்கும்-ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானையும், கையன - திருக்கைகளிலுடையனாய், பெருவிறல் - மிக்கமிடுக்கையுடைய, வானவர்-தேவர்கள், சூழ-சூழ்ந்து ஸேவித்துநிற்கவும், ஏழ்உலகும்-ஏழுலோகங்களிலுள்ளாரும், தொழுது-ஸேவித்து, ஏத்த - ஸ்தோத்ரம்பண்ணும்படிக்கீடாக; ஒருமகள் ஆயர்மடந்தை - நப்பின்னைப்பிராட்டியோடும், ஒருத்தி நிலமகள் - ஸ்ரீபூமிப்பிராட்டியோடும், மற்றை—, திருமகளோடும்-பெரியபிராட்டியாரோடுங்கூட, வருவான்-வருமவன், சித்திரகூடத்துள்ளான்—. (௯)

ஒருக்கால். (பொன்பெயரோனித்யாதி) ஹிரண்யனஞ்சும்படி அங்க வனுகமனைந்திட்டு ஆயிரந்தோள்களும் தோற்ற வ்யாபரித்து. (பைங்கணித்யாதி) பசுத்த கண்களிரண்டும் அக்நிஜ்வாலையாய்நிற்க, நீண்ட எயிறுகள் பெரியவாயையுமுடைய ஸ்ரீநரஸிம்ஹமாய்வந்தவன். ௮.

ஒன்பதாம்பாட்டு. (கருமுகிலித்யாதி) காளமேகமொத்தவடிவு; கையன சங்கசக்ரங்கள்; மிகமிடுக்கையுடைய தேவர்கள் ஸேவிக்க ஸப்தலோகங்களிலுள்ளாரும் தொழுது ஸ்தோத்ரம்பண்ண. (ஒருமகளித்யாதி) ஒருத்தி நப்பின்னைப்பிராட்டி, ஒருத்தி ஸ்ரீபூமிப்பிராட்டி, மற்றைப் பெரியபிராட்டியாருடனே வருகிறவன். ... ௯.

ஹிரண்யனை வெருவும்படியாகி, அவ்விடத்திலே அவனுடைய வுடம்பை யளைந்து, ஆயிரந்தோள்தோற்ற வ்யாபரித்த, ஜாத்யுசிதமாக எரிகான்றபசுமையையுடைய கண்ணும், நீண்ட எயிறும், பெரிய வாயுமுடைமான ஸிம்ஹரூபத்தைப்புடையனாய்வருமவன். பொங்குதை-மிகுதி. ௮.

ஒன்பதாம்பாட்டு.— (கருமுகிலித்யாதி) காளமேகம்போலேயிருக்கும் வடிவையும், கையில்திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுமுடையனாய், பெரியமிடுக்கையுடையப்ரஹ்மாதிகள்சூழ்ந்துஸேவிக்க, ஸப்தலோகத்திலுள்ளாரும் திருவடிகளிலே விழுந்தேத்த, பிராட்டிமார் மூவரோடுங்கூட வருமவன். ... ... ... ௯.

பொங்குதை-மிகுதியாய், கோபத்தால வந்த மிகுதியாய, ஜ்வலிததவர்யம் (சீறியென்றது.) கான்ற-உமிழ்ந்த. ... ... ... ... ... ௮.

ஒன்பதாம்பாட்டு.— (கருமுகிலித்யாதி.) கீழ் - எம்பெருமானுடைய அபதானங்கள்சொல்லிக்கொண்டுமிக்கை ஆச்ரயணீயயுக்தமாகச்சொல்லி, இவையொன்றுமில்லாவிட்டாலும் விடலாமோ விவனுடையஸௌந்தர்யத்தையென்று திருவுள்ளம்பற்றி, வடிவழகும் ஆயுதச்சேர்த்தியழகும் பிராட்டிமாரோட்டைச்சேர்த்தியும் கண்டு தூர்மாதிகளான ப்ரஹ்மாதிகளும் வணங்கும்படி பாரீரென்று உபதேசிக்கிறாரென்று ஸங்கதி. ... ... ... ... ... ௯.

மூ.—தேனமர்பூம்பொழில்தில்லைச் சித்திரகூடமமர்ந்த
வானவர்தங்கள்பிரானை மங்கையர்கோன்மருவார்
ஊனமர்வேல்கலிகன்றியொண்டமி ழொன்பதோடொன்றும்
தானிவைகற்றுவல்லார்மேல் சாராதீவினைதானே‡. ௧௦.

ப - ரை.— தேன் - வண்டுகள், அமர் - மொய்த்த, பூ - அழகிய, பொழில்- சோலையையுடைய, தில்லைச்சித்திரகூடம் - தில்லைத்திருச்சித்திரகூடத்திலே, அமர்ந்த - நித்யவாஸம்பண்ணுகிற, வானவர்தங்கள் பிரானை - அயர்வறுமமரர்களுக்குத்தலைவனானவனை விஷயமாக; மங்கையர்கோன் - திருமங்கையிலுள்ளார்க்குராஜாவாய், மருவார் - ஶத்ருக்களுடைய, ஊன - ஶரீரத்தில், அமர் - பொருந்திதலைதக்கும்படி, வேல்-வேல்தொழிலில்வல்லரான, கலிகன்றி- ஆழ்வார், அருளிச்செய்த, ஒண்தமிழ்-அழகியதமிழ்பாஷையாலான, இவை ஒன்பதோடொன்றும்-இப்பத்துப்பாட்டையும், கற்று-அர்த்தத்துடன் அப்யஸித்து, வல்லார்மேல்-அதிகரிக்கவல்லவர்கள் பக்கல், தீவினை - பாபங்கள், சாரா - கிட்டமாட்டா. ... ... (௧௦)

பத்தாம்பாட்டு. (தேனமரித்யாதி) வண்டுகள் மொய்த்து அழகியபொழிலையமர்ந்த தில்லைத் திருச்சித்ரகூடமமர்ந்த * அயர்வறுமமரர்களதிபதியை. (மங்கையரித்யாதி) திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகராய், ஶத்ருக்களுடம்பிலே தைக்கும் வேலைவல்ல ஆழ்வாரருளிச்செய்த பத்துப்பாட்டையும் கற்றவர்கள்மேல்சாராவினைகள். ௧௦.

நம்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

பத்தாம்பாட்டு. (தேனித்யாதி) வண்டுகள்படிந்து பூத்த பொழிலையுடைய தில்லையில் சித்திரகூடத்திலே யமர்ந்த*அயர்வறுமமரர்களதிபதியை, திருமங்கைக்குராஜாவாய் ஶத்ருக்கள்ஶரீரமேதனக்கு உறையாகவுடைய வேலையுடைய ஆழ்வாரருளிச்செய்த அழகிய தமிழான விப்பத்துமப்யஸித்தவர்கள்பக்கல், அவர்கள்பண்ணினபாபம் மேலாநுஸந்துக்காகச் சாரா. ... ... ... ௧௦.

அடிவரவு.— வாடப் பேய் பண்டு வளை பரு எய் ஆவர் பொங்கிய கருமுகில் தேனமர் ஒருகுறள்.

திருமங்கையாழ்வார் திருவடிகளேஶரணம்.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

பத்தாம்பாட்டு.— (தேனித்யாதி.) கீழ்ப்பாட்டில் "வானவர்" என்றபதத்தை ஆஶ்ரயிப்பார்க்குறுப்பாக தர்மாதிகளும் வந்தாஶ்ரயிக்கக்கண்டார்களேயென்னவேண்டுகையால், அதுக்காக ப்ரஹ்மாதிகள் பரமாக்கனுரேயாகிலும்,இப்பாட்டில் "வானவர்" என்றதுக்கு - "தங்கள்" என்று அஸாதாரண்யம் தோற்றச்சொல்லுகையாலும், ஆழ்வார்க்கு ப்ரஹ்மாதிகளுக்குப் பிரானென்றது-அதிஶயமாய்த்தோற்றுமையாலும், "அமரர்க்குமெய்தாதவண்டத்திருப்பீர்" என்றுஸ்வரூபத்தைக் கீழ்த்திருமொழியிலருளிச்செய்தத்தோடு இத்திருமொழிக்கு ஏகவாக்யத்தைச்சொல்லுகையாலே ப்ராபயகோட்டிவெடிதரான நித்யஸூரிகளேயாகவேணுமென்றருளிச்செய்கிறார்(அயர்வறுமமரர்களதிபதியையென்று;)இப்பதத்துக்கு அருளிச்செய்த) என்றத்தோடர்வயம். "மருவார்" என்றதினர்த்தம் (ஶத்ருக்களென்றது.) ௧௦.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

‡ "சாரகில்லாவினைதானே" என்று சில ஸ்ரீகோஶங்கள்.

## மூன்றாம்பத்து - நாலாந்திருமொழி - ஒருகுறள். ப்ரவேசம்.

நீங்களவனைப்பெறுகைக்குறுப்பாகப் பண்ணும ஸாயநாநுஷ்டானத்தை அவன்றானுங்களைப் பெறுகைக்குறுப்பாக ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப் பண்ணிக்கொண்டு வந்தான், அவற்றுக்குப்பிற்பாடருமிழக்க வேண்டாதபடி அர்ச்சாவதாரஸுலபனாயநின்றான், அவனிருபடியிதுவானபின்பு,ஆர்ஜித்வம்துடக்கமாக மேலுள்ளவற்றை அவன் தலையிலே யேறிட்டு நீங்கள அவனுகந்தருளுகிற ஸ்ரீராமவிண்ணகரை ஆஸ்ரயியுங்கோளென்கிறார். ... ... ...

முதற்பாட்டு. (ஒருகுறளாயித்யாதி) அவ்விதியமான குறள்வடிவைக்கொண்டு, மஹாப்ருதிவியை "மூவடிமண்" என்றுவேண்டி.[ம

---

நீங்கள் அவனைப்பெறுகைக்குறுப்பாகப பண்ணும ஸாயநாநுஷ்டானத்தை அவன்றான் உங்களைப்பெறுகைக்குறுப்பாக அவதாராதிரூபங்களாலே பண்ணிக்கொடு இங்கேவந்து நின்றானென்றார்; அவன் படியிதுவானபின்பு, ஆர்ஜித்வம் துடக்கமாக மேலுள்ளவற்றையெல்லாம் அவன்கையிலேயேறிட்டு நீங்கள் அவனுகந்த ஸ்ரீராமவிண்ணகரையாஸ்ரயியுங்கோளென்கிறார். இவன்பரமஸக்ருத்ப்ரயத்னமாகப் பண்ணினாலும் அதனுடைய ப்ராதிகூல்ய நிவ்ருத்திமாத்ரத்திலே நிற்கும்படியிறே பேற்றினுடைய வைலக்ஷண்யத்தைப்பார்த்தாலிருப்பது.

முதற்பாட்டு.— (ஒருகுறளாய) வடிவைக்கண்டபோதே சொல்லிற்றையடையக் கொடுக்கவேண்டும்படியான அவ்விதியவாமநனாய். (இருநிலம்) பரப்பையுடைத்தான பூமியை. (மூவடிமண்வேண்டி) தனக்கென்னக் காலபாவுகைக்கு ஓரிடமில்லாதானைப்போலே இத்தையவனுக்காக்கி, அவன்பக்கலிலே யிரந்து. இந்தலோகங்களுடைய இரண்டடி

---

அ.—ஒருகுறளின் ப்ரவேசம். கீழிரண்டுதிருமொழிபாஷ்யமாக - நீங்களொரு ஸாயநாநுஷ்டானம பண்ணவேண்டா, சித்ரகூடத்துள்ளானை யாஸ்ரயியுங்கோளென்னுகின்றீர்; பேற்றினகனத்தைப்பார்த்தால இவ்வளவினாலே ஸலம கைபபடுமென்று நாங்கள் விஸ்வஸிக்கும்படி யெங்ஙனே யென்னும் ஸங்கையிலே, வந்த ஸ்வாமியாகையா லுங்களைப் பெறவேணுமென்று, ப்ராப்தாவும் ப்ராபகனும் ப்ராப்திக் குகப்பானுமவனாயிருக்கையா லுங்களுக்கு விஸ்வஸிக்கத்தட்டென்,அவனிலும் அவனுகந்தவூரை யாஸ்ரயிக்கையேயமையுமென் றருளிச்செய்கிறாரென்னும் ஸங்கதியையருளிச்செய்கிறா(நீங்களித்யாதி.)ஆர்ஜித்வமாத்ரமாகிலும் இவன பக்கலிலேவேண்டாவோ, இதனையு மவன்தலையிலேயேறிட்டு நிர்பரனாயிருக்கக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (இவனித்யாதி;) பேற்றுக்கு அபேக்ஷிதமேவேண்டுவது அதுக்குமேற்பட்ட ஆர்ஜிதவம் முதலானவையெல்லா மிவனுக்கு வேணுமென்கிற நிர்பந்தமில்லையென்று கருத்து. ... ...

முதற்பாட்டு.—(ஒருகுறளித்யாதி.) "மூவடிமண்வேணுமென்று-இருநிலத்தை-வேண்டி" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி தாத்பர்யமருளிச்செய்கிறார் ( தனக்கென்னவித்யாதி.)

மூ.—ஒருகுறளாயிருநில மூவடிமண்வேண்டி
யுலகனைத்துமீரடியாலொடுக்கி யொன்றும்
தருகவெனுமாவலியைச் சிறையில்வைத்த
தாடாளன்தாளணைவீர் ; தக்ககீர்த்தி
யருமறையின்திரள்நான்கும் வேள்வியைந்து
மங்கங்களவையாறு மிசைகளேழும்
தெருவின்மலிவிழாவளமும் சிறக்கும்
காழிச்சீராமவிண்ணகரே சேர்மினீரே. க.

ப - ரை.— ஒரு - அத்விதீயமான, குறளாய்-வாமநவடிவைக்கொண்டு, மஹாபலியக்கலிலே சென்று, இருநிலம் - பரந்தபூமியில்,மூவடிமண் - மூன்றுஅடிமண், வேண்டி - தாவேண்டுமென்று இரந்து, கையிலநீர்விழுந்தவாறே, உலகனைத்தும்-லோகங்களெல்லாவற்றையும்,ஈரடியால்-இரண்டடியாலே,ஒடுக்கி-அடக்கி,ஒன்றும்-மற்றையோரடியும், தருக என்று-தாவேண்டுமென்று, மாவலியை - மஹாபலியை,சிறையில்வைத்த - பாதாளமாகிற சிறையிலேவைத்தவனாய், தாடாளன்-ஆஸ்ரிதர்க்காகத் தாழ்ந்தவன் என்னும் பெருமையையுடையவனது, தாள்-திருவடிகளை, அணைவீர்-கிட்டவேண்டியிருப்பீராயின்; தக்க - அவனுக்குத்தகுதியான, கீர்த்தி-பெருமையையுடைத்தாய், அரு-காண்டற்கரிதான,மறையின்-வேதங்களின், திரள் - திரள்கள், நான்கும் - நாலும், ஐந்துவேள்வியும் - பஞ்சமஹாயஜ்ஞங்களும், ஆறுஅங்கங்களும்—, ஏழிசைகளும்—, மலி-மிக்கிருப்பதாய், விழா - உத்ஸவங்களின்,வளமும்-அழகும், சிறக்கும் - சிறக்குமபடியான, தெருவின் - வீதிகளையுடைய, காழி-காழியில், சீராமவிண்ணகர் - ஸ்ரீராமவிண்ணகரத்தை, நீர்-நீங்கள், சேர்மின் - ஆஸ்ரயியுங்கள்என்கிறார். ... ... ... ... ... (க)

லோகங்களெல்லாவற்றையும் இரண்டடியிலே அடக்கி. (ஒன்றுமித்யாதி) மற்றொரடியுந்தரவேணுமென்று மஹாபலியைசசிறை[உரு] யிலேவைத்த தாடாளன்திருவடிகளைச் சேரவேண்டியிருப்பீர் ; அவனுக்குத்தகுதியானகீர்த்தியை கீர்த்திக்கிற ப்ரகாரத்தையுடைய வேதங்கள்நாலும், பஞ்சமஹாயஜ்ஞங்களும், ஆறங்கங்களும், ஏழிசைகளும், தெருவிலேமிக்க உத்ஸவங்களிலழகும் சிறக்கும் சீராமவிண்ணகரே சேர்மினீரே. ... ... ... ... க.

யாலேஅடக்கி, "மூன்றடிதருகிறேனும் என்றாய், மற்றை ஓரடியுந்தாராயோ" என்று. (மாவலியைச்சிறையில்வைத்த) அநந்தரம், இந்த்ரபதம் அவன்பெறக்கடவனாக அவனைபாதாளத்திலேவைத்த.(தாடாளன்தாளணைவீர்) "ஆஸ்ரிதார்த்தமாகத் தாழ்ந்தான்" என்னும் மேன்மையையுடையவன்திருவடிகளைக் கிட்டவேண்டியிருப்பீர் .— (தக்கவித்யாதி) அபௌருஷேயத்வநிபந்தநமான கீர்த்தியையுடைய வேதங்களினுடையதிரள்கள்நாலும், பஞ்சமஹாயஜ்ஞங்களும், ஆறங்கங்களும், ஏழிசைகளும், தெருவிலேமிக்கிருந்துள்ள உத்ஸவத்தால்வந்த அழகும், இவையெல்லாமடையச் சிறக்கும்படியான காழியில் சீராமவிண்ணகரை யாஸ்ரயியுங்கோள். ... ... . ... ... க.

தாடாளன்-ஸர்வாதிகன். சிறக்கும்படியான-ஸம்ருத்தமாம்படியான. ...

மூ.—நான்முகனாள்மிகத்தருக்கை யிருக்குவாய்மை
நலமிகுசீருரோமசனால் நவிற்று நக்கன்
ஊன்முகமார்தலையோட்டூணொழித்தவெந்தை
யொளிமலர்ச்சேவடியணைவீர் ; உழுசேயோடச்
சூல்முகமார்வளையளைவா யுகுத்தமுத்தைத்
தொல்குருகுசினையென்னச்சூழ்ந்தியங்க எங்கும்
தேன்முகமார்கமலவயல் சேல்பாய்
காழிச்சீராமவிண்ணகரே சேர்மினீரே. ௨

ப - ரை.— நான்முகன் - ப்ரஹ்மாவினுடைய, நாள் - ஆயுஸ்ஸு, மிக - அதிசயி[ய]யிக்க, அத்தாலவனுக்குண்டான, தருக்கை - கர்வத்தை, இருக்கு - ரிக்வேதத்தை, வாய்மை - உச்சரியாநின்றவனாய், நலமிகுசீர் - மிக்கஆசாரத்தையுடையனான, உரோமசனால் - ரோமசனென்பவனாலே, நவிற்று - போக்குவித்து; நக்கன் - நக்நனான ருத்ரனுடைய கையிலே ஒட்டியதாய், ஊன்ஆர் - மாம்ஸமான, முகன்தலையோடு - ப்ரஹ்மகபாலத்தில், ஊண் - இரந்துண்கிறவூணை, ஒழித்த - போக்கின, எந்தை - ஸர்வஸ்வாமியினது, ஒளிமலர் - செவ்விமலர்போன்ற, சேவடி - சிவந்ததிருவடிகளை, அணைவீர் - சேரவிரும்புவீர்களானால்; உழு - உழுகிற, சே - எருதுகள், ஓட - செருக்காலேயோட, சூல்முகமார் - ப்ரஸவகாலமாயிருக்கிற, வளை - சங்குகள், அளைவாய் - வங்குகளில், உகுத்த - ஈன்ற, முத்தை - முத்துக்களை, தொல்குருகு - பெரியகுருகுகளானவை, சினை என்ன - தங்களுடையமுட்டையென்று, சூழ்ந்து இயங்க - சூழப்பறவாநிற்பதாய், அக்காற்றாலே, எங்கும் - பார்த்தவிடமெல்லாம், தேன் - தேன்வெள்ளத்தை, முகமார் - முகத்தாலே சொரிகிற, கமலம் - தாமரைமலர்களையுடைத்தாய், சேல் - சேல்மத்ஸ்யங்கள், பாய் - பாயாநின்றுள்ள, வயல் - வயல்களையுடைய, காழிச்சீராமவிண்ணகரே சேர்மின்நீரே—.

இரண்டாம்பாட்டு. (நான்முகனித்யாதி) நாளென்பது - ஆயுஸ்ஸு. ப்ரஹ்மாவானவன் ''நம்மில்மிக்க ஆயுஸ்ஸுடையாருண்டோ?'' என்று, தன்ஆயுஸ்ஸைப்பார்த்துமிகவும்கர்விக்க, அந்தகர்வத்தை, ரிக்வேதம்உச்சரியாநின்றவனாய் ஆசாரப்ரதானனானரோமசமஹர்ஷியாலே

இரண்டாம்பாட்டு.— (நான்முகனித்யாதி) ரோமசமஹர்ஷியானவன், ''ப்ரஹ்மாக்களென்று சிலர் நீர்க்குமிழிபோலே தோற்றுவது மறைவதாய்ப்போகக்கடவது எத்தனைபேர்'' என்றுரைத்து. சதுர்முகனுடைய ஆயுஸ்ஸின்மிகுதியாலுண்டான அபிமானத்தை, வேதங்களை உச்சரியாநிற்பானாய் ஆசாரப்ராதான்யத்தால்வந்த வேற்றத்தையுடையனான ரோமசமஹர்ஷியாலே,

இரண்டாம்பாட்டு.—(நான்முகனித்யாதி.)தன்னை யிரப்பாளனாக்கி ஆஸ்ரிதர்க்கரியனசெய்யுமவன் வந்திருக்கும் காழிச்சீராமவிண்ணகரை யாஸ்ரயியுங்கோளென்னச்செய்தேயும் ஆறியிருந்தீர்கள், இதுக்கடி - உங்களுடைய ஸ்திரத்வபுத்தியும் பெருமையுமன்றே, ப்ரஹ்மாவினாயுஸ்ஸின்படி கேட்டிகோளே, ருத்ரனெளிவரவையும் கண்டிகோளேயென்கிறாரென்று ஸங்கதி.

(என்றுரைத்து)என்றவநந்தரம், அந்த புராணப்ரஸித்தியைக்கொண்டருளிச்செய்கிறாரென்று ஶேஷம். நான்முகனுடைய, நாளானது - ஆயுஸ்ஸானது, மிக - [அதி]அதிசயிக்க, அத்தாலுண்டான, தருக்கை - கர்வத்தை என்று, ஸ்வாபதேசமருளிச்செய்கிறார் (சதுர்முகனித்யாதி.) "இருக்கு" இத்யாதிக்கு ஸ்வாபதேசமருளிச்செய்கிறார் (வேதங்களையித்யாதி.)

போக்குவித்து, ருத்ரனுடைய கையில் மாம்ஸப்ரசுரமான தலையோட்டிலிரந்தானிறைவனை யொழித்தவெந்தை செவ்விமலர்போன்ற திருவடியைச் சேரவேண்டியிருப்பீர்!. (உழுசேரித்யாதி) உழுகிற ஸந்நுகளானவை ஸர்வத்தாலேயோட, "இப்போது, பின்னை" என்னும்படி பரவசகாலமாயிருக்கிற சங்குகள் அளைவாயிலே புகுத்த முத்தை, பெரியதுநந்துகள் முட்டையென்று நினைத்து விட்டுப்போகமாட்டாதே அருப்பறவாநிற்பதுமாய்,

---

"சதுர்முகஸ்வாமிகளுக்கும் கடவேன், என்னோபாதி ஆயுஸ்ஸுடையாருண்டோ" என்கிற அபிமானத்தைத் தவிர்ந்து. (நக்கனித்[யாதி) ருத்ரனுடைய பித்ராவுமாய் லோககுருவுமாயிருக்கிற வனைத் தலையறுத்து அத்தாலே பாதகியாய் மாம்ஸப்ரசுரமான தலையோட்டிலேயிரந்து அதிலே ஜீவித்துத்திரிகிற எளிவரவைத்† தவிர்த்த ஸ்வாமி. ஜந்துக் கிலவர்களாக ப்ரஸித்தியாயிருக்கிற ; அவர்களிருவருடையவும் அபிமானத்தைக் கழித்தானை[யொழி]த்து. (செவ்விமலர்ச்சேவடியணைவீர்) அவனுடைய ஸ்வாபாவிகமான ஐச்வர்யத்தாலுவந்த புகரையுடைய திருவடிகளைப் பெறவேண்டியிருப்பீர்.—(உழுசேரித்யாதி) அலைபோலேயாய் பெரியமிடுக்கையுடைய சேக்கைகளையிடைபடிய புரளுவது. அவைதவழுமோடினவாறே, "அப்போது பரவசித்தது, இப்போது பரவசித்தது" என்னுந்தோன்றும்படி தொட்டார்மேலேமேலேவாமம்படியிருக்கிற சங்குகள், தான்கிடக்கிற வங்குகளினுடையவாசலிலேபுகுந்துக்காயின்றன ; அவற்றை, தொல்குருகுகண்டு- என்றுமொக்கப்பழகச்செய்தேயும் "இது முத்து, இது முட்டை" என்று வாசியறியமாட்டாதபடி முக்குருகுகள், அவை, தன்னுடைய முட்டையாகக்கொண்டுவிட்டுப்போகமாட்டாதே சுற்றும்பறவாநிற்குமாய்த்து;

---

"நவிற்று" என்றது - சொல்லுகிறகையாய், அதுதானும் நீர்க்குமிழிபோலே யெத்தனைபேர் ப்ரஹ்மாதிகளென்ற வார்த்தையாய், அத்தால்பலித்த நிர்வசிஜத்தியையருளிச்செய்கிறார் (சதுராநநேத்யாதி.) "முகம்" என்றது - முகன் என்றபடி, பதுமையூரன ப்ரஹ்மாவாய, நக்கனுடைய முகனூர்தலையோட்டிலூணை யொழித்தவெந்தை என்றந்வயமாய் ; தாத்பர்யமருளிச்செய்கி[றா]ர் (ருத்ரனுடையவித்யாதி) * மனக்கனுழறிவருமிறே. "நக்கனுடைய" என்றதுக்கு, "ஊண்" என்றத்தோடந்வயம். இவ்வளவுக்கு முட்கருத்தை யருளிச்செய்கிறார் (ஜந்துக்கித்யாதி.) ப்ரஹ்மருத்ராதிகள் போன்ற சேக்கைகளைக் கொண்டு பத்தியுமுமவனுனை வெம்பெருமான் பழம்புணமான ஜநத்தை ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுவிக்க, அவர்கள் "ஈச்வரோஹம்" என்று கைகழியவோட, நம்பூர்வர்கள்போன்ற சங்குகள் ஸ்வஸ்வரூபவரைப்பெறுவிக்க ஆதிமூலமான வெம்பெருமான் தனக்கஸாதாரணபுத்ரத்வப்ரதிபத்தியாலே யிவர்களிடத்தில் வ்யாமுக்தனாயிருக்க, அத்தால் கமலமலர்மேலபாவைமுகக்கமலம்விகஸித்து, அநுராகாதிசயம் வெள்ளமிட, அதிலேதுள்ளாநிற்பர் நித்யஸூரிகளென்னும் வ்யங்க்யார்த்தத்துக்கு ஸூசகமாக, திருப்பதிக்குச்சிறப்பையருளிச்செய்கிறாரென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (அலைபோலேயித்யாதி.) "வளை" என்றதின் அர்த்தம் (சங்குகளென்றது.) அளை - வங்குகள். உகுத்த - ஈன்ற. உ.

---

† "திரிகிறவனுபத்தை" என்று சில ஸ்ரீகோசங்கள்.

௩.—வையணைந்தநுதிக்கோட்டு வராகமொன்றாய்
மண்ணெல்லாமிடந்தெடுத்து மதங்கள்செய்து
நெய்யணைந்ததிகிரியினால் வாணன்திண்டோள்
நேர்ந்தவன்றாளணைகிற்பீர்! நெய்தலோடு
மையணைந்தகுவளைகள் தங்கண்களென்றும்
மலர்க்குமுதம்வாயென்றும் கடைசிமார்கள்
செய்யணைந்து களைகளையாதேறும் காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே.

ப-ரை.— வைஅணைந்த - கூர்மைபொருந்திய, நுதி-முனையையுடைய, கோடு-கொம்பையுடைத்தான, ஒன்று - ஒப்பற்ற, வராகமாய் - பன்றியுருக்கொண்டு, மண் எல்லாம் - பூமிமுழுவதையும், இடந்து - பிளந்து, எடுத்து - தூக்கிக்கொண்டு, ஏறி, ஈஸ்வரத்வத்தால் வந்தசெருக்காலே, மதங்கள் - மதகார்யமான வ்யாபாரங்களை, செய்து - பண்ணி, வாணன் - பாணாஸுரனது, திண் - திடமான, தோள் - புஜங்களை, நெய்அணைந்த - கூர்மைமிகும்படி நெய்பூசிய, திகிரியினால் - திருவாழியாலே, நேர்ந்தவன் - துணித்தஎம்பெருமானுடைய, தாள் - திருவடிகளை, அணைகிற்பீர் - சேரவிரும்புமவர்களே!; கடைசிமார்கள் - பள்ளஸ்த்ரீகள், நெய்தலோடு - நெய்தல்மலரையும், மைஅணைந்த - கருமைமிகுந்த, குவளைகள் - குவளைமலரையும், தம் கண்களென்றும் - தங்கள்கண்களாகவும், குமுதமலர் - சிவந்த ஆம்பல்மலரை, தம் வாயென்றும் - தங்கள் வாயாகவும் எண்ணி, செய் - வயல்களில், அணைந்து - களைபறிக்க இழிந்து, களைகளையாது - களைபறியாமல், ஏறும் - வெறுமனே கரையேறுகின்ற, காழிச்சீராமவிண்ணகரே சேர்மினீரே.— ... ... ௩.

---

தேன்வெள்ளத்தைத் தன் முகத்தாலேசொரிகிற தாமரைத்தடங்களையும் வயலையும் சூழவுடைத்தாய்ச்சேல்பாய்கிற சோலையுமுடைத்தாய் காழிச்சீராமவிண்ணகரைச்சேருங்கோள். ... ... ௨.

மூன்றாம்பாட்டு. ( வையணைந்தவித்யாதி ) வை — கூர்மை. கூரிய முனையையுடைய கோட்டு வராஹமொன்றாய், மண்ணெல்லாமிடந்தெடுத்து, ஈஸ்வரத்வச் செருக்காலே மதகார்யமான வ்யாபாரங்களைப் பண்ணி.

அவை பறக்கிறகாற்றாலே, பார்த்தபார்த்தவிடமெல்லாம், பக்வமாய் தலையிலே மிக்க தேனையுடைத்தாயிருக்கிற தாமரைப்பூக்களலாநிற்குமாய்த்து; அந்தமயூவைப் பாநம்பண்ணின கயல்களானவை பாயாநிற்குமாய்த்து. ... ... ... ... ... ௨.

மூன்றாம்பாட்டு.—(வையித்யாதி) கூர்மை மிக்கிருந்துள்ள முனையையுடைய கொம்பையுடைத்தான அத்விதீயமஹாவராஹமாய், பூமிப்பரப்படைய இடந்தெடுத்துக்கொண்டேறி, ஈஸ்வரத்வத்தால்வந்த செருக்காலே மதகார்யமான வ்யாபாரங்களைப்பண்ணி.

---

மூன்றாம்பாட்டு.— ( வையணைந்தவித்யாதி.) நீங்கள் ப்ரளயாபத்ஸகனானவன்படியறிந்தாஸ்ரயிக்காவிடில் வாணன்பட்டது படுவீர்களென்கிறாரென்று ஸங்கதி.

மூ.—பஞ்சியமெல்லடிப்பின்னைதிறத்து முன்னாள்
பாய்விடைகளேழடர்த்துப் பொன்னன்பைம்பூண்
நெஞ்சிடந்துகுருதியுக வுகிர்வேலாண்ட
நின்மலன்றாளணைகிற்பீர் ! நீலமாலைத்
தஞ்சுடையவிருள்தழைப்பத் தரளமாங்கே
தண்மதியின்னிலாக்காட்டப் பவளந்தன்னால்
செஞ்சுடர்வெயில்விரிக்கு மழகார் காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே. ௪.

ப - ரை.—பஞ்சிய - செம்பஞ்சூட்டிய, மெல அடி - ம்ருதுவான திருவடிகளை யுடைய, பின்னைதிறத்து - நப்பின்னைப் பிராட்டிக்காக, முன்னாள் - முற்காலத்தில், பாய் - கண்டார்மேலே விழுகின்ற, எழ்விடைகள் - ஏழுரிஷபங்களையும், அடர்த்து - அழித்து; பொன்னன் - ஹிரண்யனது, பைம்பூண் - அழகிய ஆபரணங்கள் நிறைந்த, நெஞ்சு - மார்பை, இடந்து - பிளந்து, குருதி - ரக்தம், உக - பீறிப்புறப்பட, உகிர்வேல் - நகங்களாகிறவேலை, ஆண்ட - காரியங்கொண்ட, நின்மலன் - பரிசுத்தனான எம்பெருமானது, தாள் - திருவடிகளை, அணைகிற்பீர் - அணையவிரும்புமவர்களே!; நீலம் - மாடங்களிற்பதித்த நீலரத்நங்கள், மாலை - அந்திப்பொழுதை, தஞ்சுஉடைய - தனக்குத் தஞ்சமாகவுடைய, இருள்-இருட்டை, தழைப்ப - தழைக்கவும், ஆங்கு - அவற்றின் நடுவேயழுத்தின, தரளம் - முத்துக்கள், தண் - குளிர்ந்த, மதியின - சந்த்ரனது, நிலா - நிலவை, காட்ட - காட்டவும், பவளம் - பவழங்கள், தன்னால் - இடையிடையே தாங்களழுத்தப்பட்டிருப்பதினால், செஞ்சுடர் - ஸூர்யனது, வெயில் - காந்தியை, விரிக்கும் - பரப்பவும், அழகு ஆர் - இவற்றாலுண்டாகிற அழகையுடைய, காழிச்சீராமவிண்ணகரே சேர்மின்நீர் —. (௪)

(நெய்யித்யாதி) நெய் - கூர்மை. கூர்மையுடைய திருவாழியாலே, வாணனுடைய திண்ணிய தோள்களைத் துணித்தவன்தாள்[உறு அணைகிற்பீர். (நெய்தலித்யாதி) நெய்தலோடு மையணைந்த குவளைகளைத் தங்கள் கண்களென்றும். (மலரித்யாதி) மலர்க்குமுதத்தை வாயென்றும் கடைசிமார்கள் செய்யைச்சேர்ந்து களைபறிக்க என்று களைபறியாதேபோரும் காழிச்சீராம விண்ணகரைச் சேருங்கோள். ந.

(நெய்) கூர்மை. கூர்மையுடைய திருவாழி. கடைந்துநெய்யிட்டிருந்துள்ள திருவாழியாலே, தேவதாந்தரபஜநத்தைப்பண்ணி அத்தாலேதனக்கு மிடுக்காகநினைத்திருக்கிற வாணனுடையதிண்ணியதோள்களை நேர்ந்தவன்திருவடிகளைக் கிட்டவேண்டியிருப்பீர்!.—நெய்தற்பூவோடேகூட கறுப்புமிக்கிருந்துள்ள குவளைகளைத் தம் கண்களென்றும், மலரையுடைத்தான அரக்காம்பலைத் தந்தாமுடைய வாயென்றும், கடைசிமார் களைபறிப்பதாக அடுத்துவயலிலேயிழிந்து, கண்ணுக்கும் வாய்க்கும் அவற்றோடுண்டான ஸர்வஸாம்யத்தாலே களைபறியாதே போந்தேறுகிற காழியில். ... ... ... ... ந.

"நெய்" என்றதினர்த்தத்தையும் தந்த்ரேணவருளிச்செய்கிறார் (கூர்மையித்யாதி.) "நேர்ந்த" என்றது - துணித்தவென்றபடி. அரக்காம்பல் - சிவந்தஆம்பல். கடைசிமார் - கடைசியான ஜந்மத்தையுடைய பள்ளச்சிகள். ... ந.

நாலாம்பாட்டு. (பஞ்சியவித்யாதி) பஞ்சொத்தமெல்லடி யென்னுதல் ; செம்பஞ்சியிட்டமெல்லடி யென்னுதல். பஞ்சொத்த மெல்லிய வடியையுடைய பின்னைபொருட்டு, பண்டு பொருகிற ரிஷபங்களேழையும் அடர்த்து. (பொன்னனித்யாதி) ஹிரண்யனுடைய அகன்ற மார்வைப்பிளந்து குருதிகொழிக்கும்படி உகிராகிறவேலையாண்ட தேறிய ப்ரத்யக்ஷகன்தாளணைவீர். (நிலமித்யாதி) அவ்வூரில் மாடங்களிலழுத்தின நீலரத்நமானது, மாலையைத்தஞ்சமாகவுடைய ராத்ரியைத்தனக்கபாஶ்ரயமாகவுடைத்தாயிருக்கிற விருளைத்தழைக்க ; நடுநடுவே யழுத்தின முத்தானது, குளிர்ந்தசந்த்ரனுடைய நிலவைக்காட்ட ; பவளமானது, நடுநடுவேகிடந்து புகரையுடைய ஆதித்யனுடைய சிவந்தசுடரைக்காட்டாநிற்க ; இத்தால் - எல்லாக்காலத்திலும் இருவரும் சந்த்ரோதயமும் வெய்யிலுமொக்கக்கண் டநுபவிக்கலாம் தேசமென்றபடி. ௪.

நாலாம்பாட்டு.— (பஞ்சியவித்யாதி) செம்பஞ்சுபோலே மிருதுவான திருவடிகளையுடைய நப்பின்னைப்பிராட்டிக்காக, பண்டொருநாள், கண்டார்மேலேவிழுகிற ரிஷபங்களேழையு மழியச்செய்து ; ஹிரண்யனுடைய ஆபரணங்களாலே அலங்க்ருதமான நெஞ்சை அநாயாஸேந கிழித்துப்போகட்டு ; ரக்தமானது சொரிந்துப்புறப்படும்படியாக, ஆயிட்டுச்செய்தல் ஆயுதத்தாலே அழியச்செய்தல் செய்கையன்றிக்கே, ஆஶ்ரிதவிரோதியைத் தானே கைதொட்டுத் திருத்துகிற வேலாலே யழியச்செய்து அத்தாலுண்டான ஸந்தோஷத்தையுடையவன் திருவடிகளைக் கிட்டவேண்டியிருப்பீர் !.— (நிலமித்யாதி) அவ்வூரில் மாடங்களிலழுத்தின நீலரத்நம், மாலையைத்தனக்குத் தஞ்சமாகவுடைய, அதாவது - ராத்ரியைத்தனக்கபாஶ்ரயமாக வுடைத்தாயிருக்கிற விருளைத்தழைப்ப ; நடுவே யழுத்தின முத்தானது, குளிர்ந்த சந்த்ரனுடைய நிலாவைக் காட்ட ; இடையிடையே யழுத்தின பவளமானது, புகரையுடைய ஆதித்யனுடைய ப்ரகாஶத்தைக் காட்டாநின்றது.—ஆக, ஏககாலத்திலே இருவரும் சந்த்ரோதயமும் வெய்யிலுமொக்கக் கண்டநுபவிக்கும்படியான தேசமாய்த்து. ... ௪.

---

நாலாம்பாட்டு.— (பஞ்சியவித்யாதி.) வாணனைப்போலே கைகழிகைமாத்ரமன்றிக்கே ஹிரண்யன் பட்டதுபடுவீர்கள் அவனையாஶ்ரயியாவிடில், ஆஶ்ரயித்தால் நப்பின்னையிடத்திற்போலே வ்யாமுக்தனாவனென்கிறாரென்று ஸங்கதி.

“ தனக்குத்தஞ்சமாகவுடைய ராத்ரியை” என்றதுக்கு விவரணம் (தனக்கபாஶ்ரயமித்யாதி.) “அழகார்” என்றதின் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆகவித்யாதி.)

௫.— தெவ்வாயமறமன்னர் குருதிகொண்டு
திருக்குலத்திலிறந்தோர்க்குத் திருத்திசெய்து
வெவ்வாயமாகீண்டு வேழமட்ட
விண்ணவர்கோன்றாளணைவீர் ! விகிர்தமாத
ரவ்வாயவாணெடுங்கண் குவளைகாட்ட
அரவிந்தம்முகங்காட்ட வருகேயாம்பல்
செவ்வாயின்திரள்காட்டும் வயல்சூழ் காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே. ௫.

ப - ரை.— தெவ் ஆய - சத்ருக்களாகிய, மறம்மன்னர் - வீரமுள்ள ராஜாக்களுடைய, குருதிகொண்டு - ரக்தத்தாலே, திருக்குலத்தில் இறந்தோர்க்கு - தன் வம்சத்தில் முடிந்தவர்களுக்கு, திருத்திசெய்து - உதகக்ரியையால் திருப்திசெய்வித்து ; வெம் - க்ரூரமான, வாய - வாயையுடைய, மா - குதிரையுருவாய்வந்த கேஸியையும், கீண்டு - கிழித்து, வேழம் - குவலயாபீடமென்னும் யானையை, அட்ட - முடித்த, விண்ணவர்கோன் - அயர்வறுமமரர்களதிபதியினது, தாள் - [ஶ்ரீ] திருவடித்தாமரைகளை, அணைவீர் - சேரவிரும்புமவர்களே !; விகிர்தம் - விலக்ஷணமேறுபாடின்றி, மாதர் - ஸ்த்ரீகளுடைய, அவ்வாய - அப்படிப்பட்ட, வாள் - ஒளி பொருந்திய, நெடு - காதளவும் நீண்ட, கண் - கண்களை, குவளை - நீலோத்பல மலர்கள், காட்ட - காட்டவும், அரவிந்தம் - தாமரைமலர்கள், முகம் - முகத் தெளிவை, காட்ட - காட்டவும், அருகே - ஸமீபத்திலுள்ள, ஆம்பல் - செவ்வலிமலர்கள், செவ்வாயின் - சிவந்த வாயின், திரள் - கூட்டங்களை, காட்டும் - தோற்றுவிக்கும், வயல்சூழ் - கழனிசூழ்ந்த, காழிச்சீராமவிண்ணகரே சேர்மினீர்.— ... ... ... ... ... ... (௫)

அரும்பதம். (தெவ்வாயவித்யாதி) சத்ருக்களாய் மறத்தையுடையராஜாக்களரக்தத்தாலே தன்வம்சத்தில்முடிந்தவர்களுக்கு உதகக்ரியைபண்ணி; "மழுவினால்" இத்யாதி. (வெவ்வாயவித்யாதி) வெவ்வியவாயையுடைய கேஸியைப்பிளந்து, குவலயாபீடத்தை முடித்த விண்ணவர்கோன் தாளணைவீர்.

அஞ்சாம்பாட்டு.— (தெவ்வாயவித்யாதி) சத்ருக்களாய் மறத்தையுடையராயிருக்கிற ராஜாக்களையழியச்செய்து, அவர்களுடைய ருதிர வெள்ளத்தைக்கொண்டு, வம்சத்திலே முடிந்துபோனார்க்கு உதகக்ரியைகளைப்பண்ணி. இவ்வளவாலே — ஸ்ரீபரசுராமாழ்வானை நினைக்கிறது. வெவ்வியதான வாயையுடைத்தாய்க்கொண்டு பயாவஹமாம்படி தோற்றின ஆஸ்ரிதவிரோதியானகேஸிவாயை அநாயாஸேந கிழித்து, குவலயாபீடத்தை முடித்து, *அயர்வறுமமரர்களதிபதியாயிருந்துவைத்து, இப்படி ஆஸ்ரிதவிரோதிகளைக் கைதொட்டுப்போக்குமவன் திருவடிகளைக் கிட்டவேண்டியிருப்பீர் !.—

அஞ்சாம்பாட்டு.— (தெவ்வாயவித்யாதி.) ஹிரண்யனைப்போலே தானபட்டுப்போனவளவன்றிக்கே, "மூவெழுகால்கொன்ற" என்கிறபடியே ப்ரதிகூலரைக் குலமாக அழிக்குமவனிறே, அவன்விஷயத்திலநுகூலித்து ஜீவித்துப்போங்கோளென்கிறாரென்று ஸங்கதி.

திருத்தி - த்ருப்தியென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (உதகேத்யாதி.) "அட்ட" என்றதினர்த்தம் (முடித்தென்றது.)

மூ.—பைங்கண்விறல்செம்முகத்து வாலிமாளப்
படர்வனத்துக்கவந்தனொடும் படையார்திண்கை
வெங்கண்விறல்விராதனுக விற்குனித்த
விண்ணவர்கோன்தாளணைவீர் ! வெற்புப்போலும்
துங்கமுகமாளிகைமே லாயங்கூறும்
துடியிடையார்முகக்கமலச் சோதிதன்னால்
திங்கள்முகம்பனிபடைக்கு மழகார் காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே. ௬.

ப-ரை.—பைங்கண் - பசுமையான கண்களையும், விறல் - மிடுக்கையும், செம்முகம் - கோபத்தால் சிவந்தமுகத்தையுமுடைய, வாலி - வாலியென்னும்வாநரம், மாள - முடியும்படியாகவும், படர்-பரந்த, வனத்து - காட்டிலுள்ளஜந்துக்களைங்கலும் வாரிவாய்ப்பெய்த, கவந்தனொடும்-கபந்தனென்னும் அரக்கனும், திண் - திண்டமான, படை - ஆயுதங்கள், ஆர்-நிறைந்த, கை-கைகளையும், வெம்கண்-உக்ரமான கண்களையும், விறல் - வெற்றியையுமுடைய, விராதன் - விராதனென்னும் ராக்ஷஸனும், உக - உயிர்விடும்படி, வில் குனித்த-வில்லைவளைத்த, விண்ணவர்கோன் - தேவதேவனுன சக்ரவர்த்தித்திருமகனது, தாள்-பாதபங்கஜத்தை, அணைவீர்-அடையவிரும்புமவர்களே !; வெற்புப்போலும் - மலைகள்போலே, துங்கம்-உயர்ந்த, முகம் - முன்ப்ரதேசத்தையுடைய, மாளிகை - மாளிகைகளின், மேல் - மேல்நிலத்திலே நின்று, ஆயம் கூறும்-தோழமைசொல்லியழைக்கின்ற, துடி-உடுக்கைபோலும், இடையார்-மத்யதேசத்தையுடைய ஸ்த்ரீகளது, முகக்கமலம்-முகபத்மங்களினுடைய, சோதி தன்னால் - காந்திகளினாலே, திங்கள் - ஆகாசத்துலாயும் சந்த்ரனது, முகம் - யதநமானது, பனி - துக்கத்தாலுண்டான கண்ணீரை, படைக்கும் - இடைவிடாமற்கொண்டிருக்கும்படி, அழகு ஆர் - அழகுநிரம்பிய, காழிச்சீராம விண்ணகரே சேர்மின்நீரே—. ... ... ... .. ... (௬)

(விகிர்தமித்யாதி) வேறுபட்டவழகையுடைய ஸ்த்ரீகளுடைய ஒளியையுடைத்தான கண்களையும் முகத்தையும் வாயையும், அவ்விடத்தே நின்ற குவளை கண்ணழகையும் தாமரை முகவழகையுங்காட்ட, அருகேநின்ற ஆம்பலானது வாயழகைக்காட்டும் வயல்சூழ்ந்த காழி.

(விகிர்தமாதர்) விஸஜாதீயஸ்வபாவைகளாயிருந்துள்ள ஸ்த்ரீகளுடைய அப்படிப்பட்ட ஒளியையுடைத்தான பரந்தகண்களைக் குவளைகளானவை காட்ட, தாமரைப்பூவானது முகத்தில்தேஜஸ்ஸைக்காட்ட, அருகேஅலர்ந்துநின்ற அரக்காம்பலானது சிவந்த அதரத்தினுடைய திரளைக்காட்டுகிற. ... ... ... ... ௫.

"விகிர்தம்" என்றது-விலக்ஷணவிகாரமுடைய என்றாய், ஸவிதமருளிச்செய்கிறார் (விஸஜாதீயேத்யாதி.) ... ... ... ... ... ௫.

ஆறும்பாட்டு.— (பைங்கணித்யாதி.) ராஜலோகத்தைவென்றவளவேயன்றிக்கே வரபலத்தாலே பெருமிடுக்கனாய் எதிர்நின்றிக்கேயிருந்த வாலியையும் வென்ற மிடுக்கன்கிடீரென்று ராமாவதாரத்தில் வீரசரிதத்தை யினி யிரண்டுபாட்டாலே யநுஸந்தித்து, இவனிருந்ததேசத்தைப் பற்றினவாறே உய்யலாமென்கிறாரென்று ஸங்கதி.

ஆறும்பாட்டு. (பைங்கணித்யாதி) ஜாதிப்ரயுக்தமான கண்ணிற்பசுமையையும், மிடுக்கையும், சீற்றத்தாலே சிவந்தமுகத்தையுமுடைய வாளிபட; பரந்தகாட்டிலேயுண்டான ஸத்த்வங்களையடைய இரண்டுகையாலும்வாரி ஸங்க்ரஹித்துக்கொண்டுவருகிற கபந்தனுடனேகூட, வெவ்வியகண்ணையும் மிடுக்கையுமுடைய விராதன் முடியும்படியாக வில்லை வளைத்த விண்ணவர்கோன் தாளிணையீர். மலைபோலேயோங்கின முகத்தையுடைத்தாயிருக்கிற மாளிகை மேல்நிலத்திலேநின்று அயல் மாளிகையில் தோழிமாரை விளையாடவழைக்கிற பெண்களுடைய முகச்சோதியாலே சந்த்ரமுவம் பனிப்பையுடைத்தாம். பனியென்று-துக்கத்துக்கும், நடுக்கத்துக்கும், குளிர்த்திக்கும்பேர்; இவர்கள் முகத்திற்சோதிக்கு சந்த்ரன் முகங்கெட்டபடி. ... ௬.

ஆறும்பாட்டு.— (பைங்கணித்யாதி) ஜாதிப்ரயுக்தமான கண்ணில் பசுமையையும், மிடுக்கையும், சீற்றத்தாலே சிவந்த முகத்தையுமுடைய வாளி முடியும்படியாக, பரந்தகாட்டிலேயுண்டான ஸத்த்வங்களையடைய இரண்டுகையாலும் வாரிஸங்க்ரஹித்துக்கொண்டுவருகிற கபந்தனோடே கூட. (படையார்திண்கை) திண்ணியபடையார்ந்த கை, வெவ்விய கண்களையும் மிடுக்கையுமுடைய விராதன் முடியும்படியாக, வில்லை வளைத்த. (விண்ணவர்கோன் தாளிணையீர்) விரோதியைப்போக்கி தேவஜாதிக்குக் குடியிருப்பைப் பண்ணிக்கொடுத்த சக்ரவர்த்தித்திருமகன் திருவடிகளை ஆச்ரயிக்கவேண்டியிருப்பீர்!.— (வெற்பித்யாதி) மலைபோலேயோங்கின முகத்தையுடைத்தாயிருக்கிற மாளிகைகளின் மேல்நிலத்திலேநின்று தோழமையைச் சொல்லியழைத்து விளையாடுகிற துடிபோன்ற இடையையுடையரான ஸ்த்ரீகளுடைய முகமாகிற கமலத்திலுண்டான தேஜஸ்ஸாலே சந்த்ரனுடைய முகமானது துக்கத்தை ப்ராபியாநிற்கும்; - "நாமென்ன ஜீவநம் ஜீவிக்கிறோம், இவர்களோடொப்பச்சொல்லாநிற்கச்செய்தே ஒப்புப்போராதபடியிருப்பதே!" என்று துக்கப்படாநிற்குமாய்த்து. சந்த்ரனுக்கு சந்த்ரனிவர்கள்; தேஜஸ்ஸை சந்த்ரனுக்குண்டாக்குமவர்களென்னவுமாம்.

"படர்வனத்து" என்று விசேஷிக்கைக்கு வேறுகபந்தனுண்டோவென்ன; அதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பரந்தவித்யாதி.) ஸத்த்வங்களை-ஜந்துக்களை. விராதனுக்கு விறலைவிசேஷணமிட்டிருக்க, "திண்கை" என்னவேணுமோ வென்னும் சங்கையிலே அந்வயம்காட்டுகிறார் (திண்ணியவித்யாதி.) கபந்தனிடத்தில் வில்குனித்ததில்லையாகிலும், வில்குனித்தது உபலக்ஷணமாய், வாள்பிடித்தமையும் சொல்லக்கடவது. "ததஸ்தௌ தேசகாலஜ்ஞௌ கட்காப்யாமேவ ராகவௌ। அச்சிந்ததாம் ஸுஸம்ஹ்ருஷ்டௌ பாஹூ தஸ்யாம் ஸதேசத:" என்றிறே ப்ரமாணமதி. முகத்தை - அக்ரப்ரதேசத்தை. "ஆயம்கூறும்" என்றதினர்த்தம் (தோழமையைச்சொல்லியழைத்தென்றது.)

"பனி" என்று - கண்ணீராய், அத்தால் தோற்றின துக்கத்தின் ப்ரகாரத்தையருளிச்செய்கிறார் (நாமென்னவித்யாதி.) "பனி" என்றத்தால் - குளிர்த்தியாய், ப்ரஸாதத்தை விவக்ஷித்து, அது படைக்குமென்றர்த்தாந்தரத்தை யருளிச்செய்கிறார் (சந்த்ரனுக்கித்யாதி வாக்யத்வயத்தாலே.) ... ... ... ௯.

மூ.— பொருவில்வலம்புரியரக்கன்முடிகள்பத்தும்
புற்று மறிந்தனபோலப் புவிமேற்சிந்தச்
செருவில்வலம்புரிசிலைக்கைமலைத்தோள்வேந்தன்
திருவடிசேர்ந்துய்கிற்பீர்! திரைநீர்த்தெள்கி
மருவிவலம்புரிகைதைக்கழியூடாடி
வயல்நண்ணி மழைதருநீர்த்தவழ்கால்மன்னித்
தெருவில்வலம்புரி தரளமீனும் காழிச்
சீராமவிண்ணகரே சேர்மின்நீரே. ௭

ப - ரை.— பொரு இல் - ஒப்பு இல்லாத, வலம் - பலத்தை, புரி-கொண்ட,(வ) அரக்கன் - ராவணனாகிய ராக்ஷஸனது, முடிகள்பத்தும் - கிரீடம் ஒன்றும் பத்து த்தலைகளும், புற்று மறிந்தனபோல-புற்றை வெட்டித்திருப்பின் புரைபுரையாய்த் தோற்றுவனபோல, புவிமேல் - யுத்தபூமியிலே, சிந்த - சிதறிக்கிடக்க, செருவில் - யுத்தத்தில், வலம் - வெற்றியை, புரி - தரத்தக்க, சிலை - ஸ்ரீ கோதண்டத்தை தரித்த, கை - கையையும், மலை - ஒருவராலுமசைக்கவொண்ணாப் பர்வதம்போன்ற, தோள - புஜங்களையுமுடைய, வேந்தன் - ராஜபுத்ரரான பெருமானது, திருவடி - சரணம்புஜத்தை, சேர்ந்து - கிட்டி, உய்கிற்பீர் - உஜ்ஜீவிக்கக்கருதுமவர்களே !; வலம்புரி - சங்கங்கள், திரை - அலைகடலை, நீர்த்து - விட்டு, தெள்கி - இளைத்து, போந்தேறி, கைதைக்கழி-கைதைக்கழியை, மருவி-அடைந்து,ஊடு-உக்கழிநடுவே, ஆடி-அங்குமிங்குமுலாவி, பின்பு, வயல் - கழனிகளில், நண்ணி-ப்ரவேசித்து, மழை தருநீர் - மழைஜலம், தவழ் - வந்துவிழுகிற, கால் - வாய்க்காலிலே, தெருவில் மன்னி - தெருக்களில்புக்கு, நீர்வடிந்தவாறே,வலம்புரி-சங்கங்களையும்,தரளம்-முத்துக்களையும், ஈனும்-பெற்றுத்தருகின்ற,காழிச்சீராமவிண்ணகரே சேர்மின்நீரே—.

ஏழாம்பாட்டு. ( பொருவிலித்யாதி ) ஒப்பில்லாத பலத்தைப் பண்ணுகிற ராவணன்தலைபத்தும் புற்றுமறிந்தாப்போலே விழுந்து சிதற. (செருவிலித்யாதி) யுத்தத்திலே வெற்றியைத்தருகிற ஸ்ரீசார்ங்கத்தையும் கையிலேயுடையனாய், மலைபோன்ற தோள்வலியையுடைய சக்ரவர்த்தித்திருமகன்திருவடிகளைச்சேர்ந்து உஜ்ஜீவிக்கவேண்டியிருப்பீர்.

ஏழாம்பாட்டு.— (பொருவிலித்யாதி) ஒப்பில்லாத பலத்[கூய]தைப் பண்ணுநின்றுள்ள ராவணனுடைய தலைகள் பத்தும், புற்றுமறிந்துகிடக்குமாப்போலே, தேவதைகளுடைய வரத்தாலே பூண்கட்டினவை பூமியிலே சிதறும்படியாக, அவனைப்போலே வனுநத்தாலன்றிக்கே யுத்தத்திலே பலத்தைப பண்ணுநின்றுள்ள வில்லையுடையனாய், ஶத்ருக்களால் சலிப்பிக்கவரிதான தோளையுடைய சக்ரவர்த்தித்திருமகனைக்கிட்டி, அவன் விரோதியைப்போக்க அவன்திருவடிகளை ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கவேண்டியிருப்பீர் !.—

ஏழாம்பாட்டு.— (பொருவிலித்யாதி.)புற்றுமறிந்து கிடக்குமாப்போலேயென்றது - புற்றைவெட்டித்திருப்பினால் புரைபுரையாயிருக்குமாப்போலே யென்கை. புரை - பாழி.

(திரைநீர்த்யாதி) கடல்திரையை, நீந்து - விட்டு, என்கிறபோயெ ன்றபடி. வலம்புரியானது, வலமாகப்புரிகிற தாரையையுடைத்தான சுற்றுடையுதாந்து ஸஞ்சரித்து அங்கேபொருந்தி, அக்கழியில்நின் றும் மணிந்தடமேவயலிலேபுகுந்து. (மழையித்யாதி) மேவும்வர்ஷி த்து வெள்ளமெடுத்திரைகிற காலிலேபுகுந்து, அவ்வெள்ளக்கால் வழியே சென்று வயலிலே வலம்புரி முத்தையீன்கிற காழிச்சீராம விண்ணகர். ... ... ... ... ... எ.

எட்டாம்பாட்டு. (பட்டரவித்யாதி) படையுடைத்தாய் அரவொ த்த அழகியஅல்குலையும், பவளம்போன்ற அழகிய சிவந்தவாயையும், மூங்கில்போன்ற அழகிய தோள்களையும், மான்கண்போன்றகண்களையும், பாலொத்தநல்ல சொல்லையுமுடைய மைதுனர்க்காய்.

---

(திரைநீர்த்யாதி) கடலினின்று கரைக்கேறப்போகிறதென்றபடி; அன் றிக்கே, திரை, நீந்து விட்டு, கடலைவிட்டு, வலம்புரியானது போந்தேறி சஞ்சரித்து, தாரையையுடைத்தாயிருக்கிற கழியிலேபோய்ப்புக்கு, அங்கேநின்றுந்தஞ்சரித்து, அந்தக்கழிதான் மால்காலவும்வர வெ ள்ளம்கோத்தடியாலே வயலிலேவந்து கிட்டி, அவ்விடந்தன்னிலே வர்ஷஜலம் தேங்கிநின்று அது வாய்க்காலாலே ஊரிலேவந்து புகுர அவ்வழியாலே தெருவிலேயுமேகி, அங்கே வழிநடக்கமாட்டாமையினாலே போக மாட்டாதே அவ்விடந்தன்னிலேகிடந்து வலம்புரியையும் முத்தையும் ஈன்றிருக்குமாய்த்து. வலம்புரியாற்றிலே வலம்புரிபிறக்கத் தட்டி லவேயிலே. ... ... ... ... ... எ.

எட்டாம்பாட்டு. (பட்டரவித்யாதி) படையுடைத்தாய் அரவு போலேயாய் அழகியதாய் அகன்றிருந்துள்ள நிதம்பப்ரதேசத்தை யுடையவருமாய், பவளம்போலே சிவந்த அதரத்தையுடையவருமாய், மூங்கில்போலே நெடிய தோள்களையுடையவருமாய், மான்போலே மிருந்துள்ள நோக்கையுடையவளாய், பாலென்று சொல்லலாம்படி யினியபேச்சையுமுடையளாயிருந்துள்ள, மயனவென்னமிடாநின்று ள்ள குழலையுடைய ஸ்ரீஸத்யபாமைப்பிராட்டி ஹேதுவாக,

---

"திரை" என்று - கடலைச்சொல்லிற்றாய், நீரில "தெள்க" என்று தேங்குகிற தாய், அதனால் - போந்ததினமை ஸலித்ததென் றருளிச்செய்கிறார் (கட லித்யாதி). திரையை, நீந்து - நீந்தியென்றாய், விட்டென்றாய், என்கி- இவைப்பா லே யீடுபட்டென்றாய், பாடாந்தரத்தில் இப்படிபதவிபாகம் விவக்ஷித்தருளிச்செய் கிறார் (அன்றிக்கேயித்யாதி;) பாடபேதமில்லாமல் கேவலபதத்தைப்பிரித்து அர்த்தா நரம் சொன்னதென்னலாம்படி, "நீந்து" என்று, ரேஃபோடேகூட சில ஸ்ரீகோசங்களிலுண்டு. "மருவு" என்றதின் ஸலிதார்த்தம் (சஞ்சரித்தென்றது.) எ.

எட்டாம்பாட்டு.— (பட்டித்யாதி.) நீங்கள் நான்சொன்னபடி அநுகூலித்திலீர் கோளாகில், ஸ்ரீஸத்யபாமைப்பிராட்டியிடத்திற்போலே உங்களுக்கும் யாமும்ய ஞாய் அர்யனசெய்து கொடுக்குமென்கிறாரென்று ஸங்கதி.

அ.— பட்டரவேரகலல்குல் பவளச்செவ்வாய்ப்
　　பணைநெடுந்தோள் பிணைநெடுங்கண் பாலாமின்சொல்
மட்டவிழுங் குழலிக்கா வானோர்காவில்
　　மரங்கொணர்ந்தானடியணைவீ ரணில்கள்தாவ
நெட்டிலையகருங்கமுகின் செங்காய்வீழ
　　நீள்பலவின்தாழ்சினையில் நெருங்குபீனத்
தெட்டபழம் சிதைந்து மதுச்சொரியும் காழிச்
　　சீராமவிண்ணகரே சேர்மின்நீரே. அ.

ப-ரை.— பட்டு-பட்டுவஸ்திரமணிந்த, அரவு-பாம்பின்படம்போன்றதாய், ஏர்-அழகியதாய், அகல்-பரந்த, அல்குல்-நிதம்பப்ரதேசத்தையும், பவளம்-பவழம்போலும், செவ்வாய்-சிவந்தவாயையும், பணை-மூங்கில்போலே, நெடு-நீண்ட, தோள்-தோள்களையும், பிணை-பெண்மானின் கண்போலே, நெடுங்கண்-நீண்ட மானகண்களையும், பால் ஆம்-க்ஷீரமென்னலாம்படியான, இன்சொல்-இனிய சொற்களையுமுடைய, அப்போதலர்ந்தபூக்களின் ஸம்பந்தத்தாலே, மட்டு அவிழும்-மதுவெள்ளமிடாநின்றுள்ள, குழலிக்கா - அளகபாரத்தையுடைய ஸ்ரீஸத்யபாமைப்பிராட்டிக்காக, வானோர் - தேவதைகளுடைய, ஸ்வர்க்கத்திலுள்ள, காவின் - சோலையிலிருந்து, மரம் - பாரிஜாதவ்ருக்ஷத்தை, கொணர்ந்தான் - பிடுங்கிக்கொணர்ந்து பூமியிலே நாட்டிய ஸ்ரீக்ருஷ்ணனுடைய, அடி - திருவடிகளை, அணைவீர்! - சேரவிருப்பமுடையவர்களே!; அணில்கள் - அணில்களானவை, தாவ - கிளையினின்றும் கிளையில் தத்தித் தாவிப் பாய, நெட்டு - நீண்ட, இலைய - இலைகளையுடைய, கருங்கமுகின் - கறுத்தபாக்குமரங்களின், செங்காய் - பழுக்காய்கள், வீழ - உதிர்வதனாலே, நீள் - நீளமாய் வளர்ந்து தழைத்த, பலவின் - பலாமரங்களின், தாழ் - தாழ்ந்திருக்கிற, சினையில் - கிளைகளில், நெருங்கு - நெருங்கியிருக்கின்ற, பீனம் - பருத்த, தெட்டபழம் - பக்வ பலங்கள், சிதைந்து - சிதைந்து, மது - தேனை, சொரியும் - சொரிகின்ற, காழிச்சீராம விண்ணகரே சேர்மின்நீரே—. ... ... ... ... அ)

(வானோர் இத்யாதி) தேவர்களுடையதாம் ஸ்வர்க்கத்திலுள்ள கல்பகத்தைக் கொண்டு வந்தக்ருஷ்ணனுடைய திருவடியைச் சேரவேண்டியிருப்பீர். (அணில்கள் இத்யாதி) அணில்களானவை ஸஞ்சரிப்பதனாலே நெடிதானஇலையையுடைய பெரியகமுகின் பழுக்காயானது, ஓங்கினபலாவில் தாழ்ந்த சினையிலுண்டு-பணைகள், அவற்றில் நெருங்கிச் செறிந்து பக்வமான பலாப்பழத்திலேவிழ, அப்பழம் சிதைந்து மதுவொழுகும் காழி. ... அ.

என்றுமோக்ஷஸ்வர்க்கத்திலே நிரகைகடைதான வ்ருக்ஷத்தை ஸத்யபாமைக்காக பூமியிலே கொடுவந்துநிறுத்தினவனுடைய. இத்தால்-அரியனசெய்தும் ஆஸ்ரித ரக்ஷணம் பண்ணுமவனென்கை. — (அணிலித்யாதி) அணில்களானவை ஸ்வைரமாகத்தாவ, நெடிதான இலையையுடைத்தாய் கறுத்தநிறத்தை யுடைத்தான கமுகுகளில் சிவந்தகாயானது தொட்டார்மேலே ஜாதை மாகவிழ, ஓங்கினபலாவின் தாழ்ந்தபணைகளிலே நெருங்கி வர்ப்ப தாய், தசைந்து, பக்வமாய், — தொட்டார்மேலே ஜாதைமாயிருக்கிற பழமானது, தேங்கிநிற்கிறதுக்கொரு போக்குக்கண்டு விட்டாப்போலே மதுவெள்ளமிடாநிற்கிற காழியென்கை. ... ... அ.

தெட்டபழம்-பக்வபலம். கனியப்பழுத்தபழமென்று அர்த்தம். (தொட்டார் மேலேயித்யாதி.) ... ... ... ... ... அ.

ரு.— பிறைதங்குசடையானை வலத்தேவைத்துப்
பிரமனைத்தன்னுந்தியிலே தோற்றுவித்துக்
கறைதங்குவேல்தடங்கண்திருவைமார்வில்
கலந்தவன்றாளணைகிற்பீர்! கழுநீர்கூடித்
துறைதங்குகமலத்துத்துயின்று கைதைத்
தோடாரும் பொதிசோற்றுச் சுண்ணம் நண்ணிச்
சிறைவண்டு களிபாடும்வயல்சூழ் காழிச்
சீராமவிண்ணகரே சேர்மினீரே. கூ.

ப-உரை.— பிறைதங்குசடையானை - சந்த்ரனைத் தன் ஜடாமகுடத்தில் அணிந்த ருத்ரனை, வலத்தேவைத்து - வலவருகேவைத்து, பிரமனை - அவனுக்குஜ்யேஷ்டனான ப்ரஹ்மாவை, தன்னுந்தியிலே - தன் திருநாபிகமலத்திலே, தோற்றுவித்து - உண்டாக்கி, கறைதங்கு - ரத்தக்கறை தங்கிய, வேல் - வேல்போன்ற, தடம் - விசாலமான, கண் - திருக்கண்களையுடைய, திருவை - பெரிய பிராட்டியாரை, மார்வில் - தன் திருமார்பிலே வைத்து, கலந்தவன் - அவளோடே நித்யஸம்ச்லேஷம் பண்ணுமவனுடைய, தாள் - திருவடிகளை, அணைகிற்பீர் - சேரவிரும்புமவர்களே!; சிறைவண்டு - சிறகையுடைய வண்டுகளானவை, கழுநீர் - செங்கழுநீர்ப்பூக்களில், கூடி - சேர்ந்திருந்து, ... படியாயும்படி, துறைதங்கு - துறையிலே யுண்டான, கமலத்து - தாமரைப் பூக்களில், துயின்று - பள்ளிகொண்டு, பின்பு, கைதைத்தோடு ஆரும் - பெரியமடல்களையுடைய தாழம்பூவிலே, பொதி - அதனுள் நிறைந்த, சோறு - சாறுகளையும், சுண்ணம் - பொடிகளையும், நண்ணி - தன்னுடம்பிலே படியும்படி, களி - இவற்றாலுண்டான ஸந்தோஷாதிசயத்தால், பாடும் - பாடுகின்ற வயல்சூழ் காழிச்சீராமவிண்ணகரே சேர்மினீரே.— (கூ)

ஒன்பதாம்பாட்டு. (பிறைதங்கியாதி) பிறைபொரு சடையானை வலவருகேவைத்து, அவனுக்கு ஜ்யேஷ்டனான ப்ரஹ்மாவைத் திருநாபியிலே தோற்றுவித்து. (கறையியாதி) கறைகழுவாவேல்போலே செவ்வியையும் கூர்மையையும் புகரையுமுடைய திருக்கண்களையுடைய பெரியபிராட்டியாரைத் திருமார்விலேவைத்து

ஒன்பதாம்பாட்டு.— (பிறையித்யாதி) ஸாயகனுமாய் ஸம்ஹாரகனுமாயிருக்கிற ருத்ரனைத் தன் திருமேனியில் வலவருகேவைத்து, ப்ரஹ்மாவைத் தன்னுடைய திருநாபீகமலத்திலேயுத்பாதித்து, கறைகழுவ அவஸரமில்லாதபடியான வேல்போலேயிருக்கிற பரந்த திருக்கண்களையுடைய பெரியபிராட்டியாரைத் தன் திருமார்விலேசேர்த்து

ஒன்பதாம்பாட்டு.— (பிறையித்யாதி.) ஸ்ரீஸகயமைப்பிராட்டி அதிவில க்ஷணையாகையாலே அவளிடத்தில ஆரியனசெயதானேயாகிலும், நாங்கள் ஊர்மாநிகளன்றோ, எங்களுக்கும் வனிபனசெய்வனென்னப்போமோவென்ன ; அவனுடையவன்னிலைத்தையைப்பட்டிர்கள் - திருவிளிச்சல் வ்யாமுற்றுயுடம்புசொடுத் தாப்போலே கர்தர்காபாலிகளுக்கு முடம்புகொடுத்தானகண்டீர்க ளென்கிருரென்று ஸங்கதி.

(கறைகழுவ அவஸரமில்லாதபடியான) என்றத்தாலே - ஆள்களைவெல்லுகையே ஸ்வபாவமாயிருக்கை ஸூசிக்கையாலே, அநுக்ஷணம் எம்பெருமானை "ஜிதம்" என்னப்பண்ணவல்ல கண்களென்று தாத்பர்யம். "மார்வில்" என்றவநந்தரம், (சேர்த்து என்று அபிப்ராயம் திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிருர் (தன் திருமார்விலேயித்யாதி.)

மூ.—செங்கமலத்தயனனையமறையோர் காழிச்
சீராமவிண்ணகரின் செங்கண்மாலை
அங்கமலத்தடவயல்சூழாலிநாட
னருள்மாரியரட்ட முக்கியடையார்சீயம்
கொங்குமலர்க்குழலியர்வேள் மங்கைவேந்தன்
கொற்றவேல்பரகாலன் கலியன்சொன்ன
சங்கமுகத்தமிழ்மாலை பத்தும்வல்லார்
தடங்கடல்சூழுலகுக்குத் தலைவர்தாமே. ௧௦.

ப-ரை.— செங்கமலம் - அழகிய திருநாபீகமலத்திற் பிறந்த, அயன் அனைய - ப்ரஹ்மாவையொத்த, மறையோர் - ப்ராஹ்மணர்வர்த்திக்கிற, காழிச்சீராமவிண்ணகரின் - காழிச்சீராமவிண்ணகரில் நித்யவாஸம் பண்ணுகிற, செங்கண்மாலை - புண்டரீகாக்ஷன் விஷயமாக; அம் - அழகிய, கமலம் - தாமரைப்பூக்கள் நிறைந்த, தடம் - தடாகங்களும், வயல் - கழனிகளும், சூழ் - சுற்றிலுஞ் சூழ்ந்த, ஆலிநாடன் - திருவாலிநாட்டுக்குத் தலைவராய், அருள்மாரி - அடியார்க்கு அருள்பொழியும் மேகம் போன்றவராய், அரட்டு அமுக்கி - சத்ருக்களை தலையெடாதபடி அமுக்கவல்லவராய், அடையார் - சத்ருக்களுக்கு, சீயம் - ஸிம்ஹம்போன்றவராய், கொங்கு - தேன்நிறைந்த, மலர் - புஷ்பங்களை, குழலியர் - கூந்தலிலுடைய ஸ்த்ரீகளுக்கு, வேள் - காமன்போன்றவராய், மங்கை - திருமங்கைக்கு, வேந்தன் - ராஜாவாய், பரகாலன் - சத்ருக்களுக்கு யமன்போன்றவராய், கொற்றம் - வெற்றிதரத்தக்க, வேல் - வேலைப்பிடித்த, கலியன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்த, சங்கம் - பலர்கூட்டமாய், முகம் - எதிர்கொண்டு அநுபவிக்கலாம்படியான, தமிழ்மாலைபத்தும் - தமிழ்த்தொடையான பத்தையும், வல்லார் - பாடத்தோடே கற்கவல்லவர், தடம் - பரந்த, கடல்சூழ் - கடல்சூழ்ந்த, உலகுக்கு - லோகத்தில், தலைவர் - எல்லாரும் தங்களையே [illegible]க்கும்படி மேலாயிருப்பர். ... ... ... ... (௧௦)

---

உஜ்ஜீவிக்கிறவன் திருவடிகளைச் சேரவேண்டியிருப்பீர். (கழுநீர்த்யாதி) செங்கழுநீரிடமே நித்யஸம்ச்லேஷம்பண்ணி, அத்தாலேவந்த ச்ரமமாறும்படி துறையிலேயுண்டான தாமரைப்பூவிலே பள்ளிகொண்டு, அநந்தரம் பெரியமடலையுடைய தாழம்பூவிலே போய்ப்புக்கு, அதிலுண்டான சாற்றில் சுண்ணத்தைப்பெற்று, சுண்ணமும் அகிலபரிமளமும் தன்னுடம்பிலேயாம்படி அதிலே புரண்டு, சிறகையுடைய வண்டானது களித்துப் பாடாநின்ற வயல்சூழ்ந்த காழி. ... ... ௬.

---

அவளோடே நித்யஸம்ச்லேஷம்பண்ணுகிறவன் திருவடிகளைக் கிட்ட வேண்டியிருப்பீர்!. அபிமாநிகளான ஸ்ரீபூமிகளோடு அநந்யபரையான பிராட்டியோடு வாசியறத் திருமேனியிலே யிடங்கொடுத்துக்கொண்டிருக்கிற பெருமானைப்பெறவேண்டியிருப்பீர்! - (கழுநீரித்யாதி) செங்கழுநீரிலேபோய்ப்புக்கு நித்யஸம்ச்லேஷத்தைப்பண்ணி, அத்தாலேவந்த ச்ரமமாறும்படி துறையிலேயுண்டான தாமரைப்பூவிலே புகுந்து மதுபாநம் பண்ணிப் பள்ளிகொண்டு, அநந்தரம், தாழையுடைய பெரியமடலையுடைத்தான பூவிலேபோய்ப்புக்கு, அதிலகவாயிலுண்டான தாதும் சுண்ணமும் பரிமளமுமெல்லாம் தன்னுடம்பிலேயாம்படி அதிலேகிடந்து புரண்டு, சிறகையுடைத்தானவை மதுபாநத்தாலும் பரிமளத்தாலுமாகக் களித்துப்பாடாநின்றுள்ள. ௬.

---

“சைதை - ஆரும - ஃதாம் - பொதுசோறு” என்றந்வயம் திருவுள்ளம்பற்றியருளிச் செய்கிறார் (தாழையுடையவித்யாதி.) மடலிலே பொதிந்து கிடந்த சோறு - தாதுகள்,

பத்தாம்பாட்டு. (செங்கமலமித்யாதி) அழகிய தாமரைப்பூவை யிருப்பிடமாகவுடைய ப்ரஹ்மாவை யொத்தஸ்ராஹ்மணர்வர்த்திக்கிற காழிச்சீராமவிண்ணகரிலே நிற்கிற என்செங்கண்மாலே. (அங்கமலமித்யாதி) அழகியதாமரைப்பூவையுடைய தடாகங்களையும் வயலையுமுடைத்தான திருவாலிநாடன், அருள்பொழியும்மேவம். (அரட்டித்யாதி) பாஹ்யஸமயங்களில் மிடுக்கைப்போக்குமவராய், ஶத்ருக்களுக்கு ஸிம்ஹம்போலே அநபிபவநீயராய். (கொங்கித்யாதி) தேன்வெள்ளமிடுகிறமலரைக்குழலிலேயுடையஸ்த்ரீகளுக்குக்காமனைப்போன்றவர். (மங்கையித்யாதி) திருமங்கைக்குராஜாவாய், வெற்றிவேலையுமுடைய

பத்தாம்பாட்டு.— (செங்கமலமித்யாதி) "வால்மீகிர் பகவாந் ருஷி:" என்னுமாப்போலே. பெருமாளுக்கு வல்லபனாயிருப்பானொரு திருவிளக்குப்பிச்சன் பலரையும் திருமுன்பே க்ஷேபிக்கிற ப்ரகரணத்திலே, ஆழ்வாரைத்திருவுள்ளமாய், "நம் பக்தர்களுக்கொரு குறைசொல்லிக்காணாய்" என்று திருவுள்ளமானராய்; இப்பாட்டை விண்ணப்பஞ்செய்து, "நாயந்தே! 'தேவரைக்கவிபாட' என்று தொடங்கி தம்மைக்கவிபாடிக்கொண்டார்" என்ன; "அதுவும் நம்மையன்றோ சொல்லிற்று" என்று திருவுள்ளமானர். சதுர்முகஸமரான ப்ராஹ்மணர் திரண்ட தேஶத்தில் சீராமவிண்ணகரிலே நித்யவாஸம்பண்ணுகிற புண்டரீகாக்ஷனைக் கவிபாடிற்று; அழகிய தாமரைகளாலே அலங்க்ருதமான தடாகங்களையுடைத்தான வயலாலே சூழப்பட்ட திருவாலிநாட்டுக்கு ப்ரயோஜநரானவர்; அநுகூலவர்கத்துக்கு ஸர்வஸ்வதாநம்பண்ணுமவர்; எதிரிட்ட ஶத்ருக்கள் தலையெடாதேஅழும்படி பண்ணுமவர்; ஶத்ருக்களுக்கு வந்தணுகவொண்ணாதபடி ஸிம்ஹம்போலே அபிபவநீயரானவர்; எல்லார்க்கும் ஸ்ப்ருஹணீயரானவர்; திருமங்கைக்கு ப்ரயோஜநராயுள்ளவர்; ஸர்வேஶ்வரன் ஆழிபிடித்தாப்போலே ஆஶ்ரிதரக்ஷணத்துக்காகப்பிடித்த வேலையுடையராய்,

நியமம்.— (செங்கமலமித்யாதி.) எம்பெருமானைக்கவிபாடுகிறவர் தம்மைத் தாமே கொண்டாடுவானென்னென்ன; ஆத்மஸ்துதியாகக்கொண்டாடினரென்று விவக்ஷித்து, அதுக்குத்தோஷாபாதமுண்டாகாமல் பரிஹரிக்கிறார் (வால்மீகிரித்யாதி.) ஆத்மஸ்துதியானமாத்ரமன்றிக்கே அதுதானே பகவத்ஸ்துதியென்று பரிஹாராந்தரத்தை ஐதிஹ்யமுகேந அருளிச்செய்கிறார் (பெருமாளுக்கித்யாதி.) நம்மையன்றோசொல்லிற்றென்றது - நம்மநுபவத்தால் வந்தஏற்றத்தால் தம்மைக்கொண்டாடினால் அதுநம்மைக் கொண்டாடினபடியன்றோ வென்றபடி.

"கொங்குமலர்க்குழலியர்வேள்" என்றதுக்கு - தேன் வெள்ளமிடுகிற மலரைக்குழலிலேயுடைய ஸ்த்ரீகளுக்குக் காமனைப்போலேஅநுகூலர்க்கெல்லாம் ரூபகுணத்தாலும் போஷ்டவ்யரென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (எல்லார்க்குமித்யாதி.)

ஆழ்வாரருளிச்செய்த. (சங்கமித்யாதி) தமிழுக்குக்கடவராயிருந்தாரிருந்தவிடத்தே கொண்டாடும்படியான இத்தொடைபத்தையும் வல்லார், பெரியகடல் சூழ்ந்தவுலகில் தலைவராவர். ... ... ௧௦.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவான ஆழ்வாரருளிச்செய்த, †தமிழுக்குக்கடவார் திரளவிருந்தால்இத்தையே யெப்போதுமொக்கக் கொண்டாடவேண்டும்படியிருக்கிற இத்தொடையல்பத்தும்வல்லார். (தடங்கடல்சூழுலகுக்குத்தலைவர்தாமே) ஸர்வேஶ்வரனைப்போலே எல்லார்க்கும் தாங்களே ஆஶ்ரயணீயராவர். ... ... ... ௧௦.

அடிவரவு.— ஒரு நான் வை பஞ்சி தெவ்வாய் பைங்கண்
பொரு பட்ட பிறை செங்கமலம் வந்து.

திருமங்கையாழ்வார் திருவடிகளே ஶரணம்.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

அரட்டமுக்கி அடையார்சீயமாகையாலே பாசுரமென்னு பேர்பெற்றனென்னுமதுதோன்ற யோமார்யத்தைக்காட்டுகிறார் (ப்ரதிபக்ஷத்துக்கு ம்ருத்யுவாதி.) ௧௦.
ஜீயர்திருவடிகளே ஶரணம்.

மூன்றும்பத்து-அஞ்சாந்திருமொழி வந்துனைதடியேன். ப்ரவேஶம்.

எல்லாரும் தந்தாமுக்கு நன்மைவேண்டியிருக்கில் ஸர்வேஶ்வரன் பக்கலிலே ந்யஸ்தபரராய்க்கொண்டு ஶ்ரீராமவிண்ணகரை யாஶ்ரயியுமங்கோளென்றார் – கீழ்; அங்ஙனன்றிக்கே, தம்மளவிலே வந்தவாறே, திருவாலியையிருப்பிடமாகக் கொண்டு அங்கேயெழுந்தருளியிருக்கிற ஆலிநகர்க்கதிபதிதானே ஸ்வயம்வரித்துக்கொண்டு வந்திருக்கிறபடியை யநுஸந்தித்து, "பரமப்ராப்யனாயிருக்கிற நீ என்பக்கலர்த்திவமின்றிக்கே யிருக்கச்செய்தே என்ஹ்ருதயத்திலே புகுந்திருந்தாய்,

எல்லாரும் தந்தாமுக்குநன்மைவேண்டியிருக்கில் ஸர்வேஶ்வரன் பக்கலிலே ந்யஸ்தபரராய்க்கொண்டு ஶ்ரீராமவிண்ணகரை யாஶ்ரயியுங்கோளென்றார் ; அங்ஙனன்றிக்கே, தம்மளவில்வந்தவாறே, திருவாலியையிருப்பிடமாகக்கொண்டுஅங்கேயெழுந்தருளியிருக்கிறஸர்வேஶ்வரன் தானே ஸ்வயம்வரித்துக்கொண்டு வந்திருக்கிறபடியை யநுஸந்தித்து."பரமப்ராப்யனாயிருக்கிறநீஎன்பக்கலர்த்திவமின்றிக்கேயிருக்கச்செய்தே என்ஹ்ருதயத்திலே புகுந்திருந்தாய், எனக்குன்னையொழியச்

அ.—வந்துனைதடியேன் ப்ரவேஶம்.— கீழ் பரோபதேஶத்தில் ப்ரவ்ருத்தரானவர் இப்போது திருவாலியம்மானைக் குறித்துத் தம் த்வரையையறிவிப்பிக்கிறதென்னென்கிற ஶங்கையிலே ஸங்கதியையருளிச்செய்கிறார் (எல்லாருமித்யாதி.) அங்ஙனன்றிக்கேயென்றது-தமக்குத்தாம் நன்மைதேடுகையும், ஒருவருபதேஶிக்க ஒருநியமத்தைப் பற்றியிருக்கையுமன்றிக்கே யென்றபடி. தம்மளவில்வந்தவாறே - தம்மைத்தாமே விசாரித்தவாறே.

† சங்கம் - ஸமூஹம், மோக்ஷியானது, அத்வைத, முகங்கொண்டு - எதிர்கொண்டு அநுபவிக்கும்படியிருக்கை.

மூ.—வந்துனதடியேன்மனம்புகுந்தாய் புகுந்ததற்பின்வணங்குமென்
சிந்தனைக்கினியாய் திருவேயென்னாருயிரே
அந்தளிரணியாரசோகினிளந்தளிர்கள்கலந் தவையெங்கும்
செந்தழல்புரையும் திருவாலியம்மானே. க.

ப-ரை.— அம் - அழகிய, தளிர் - தளிர்களால்வந்த, அணிஆர் - அழகுமிக்கிருக்கிற, அசோகின் - அசோகமரத்தினுடைய, இளந்தளிர்களவை - இளந்தளிர்களானவை, எங்குங்கலந்து - எங்குமொக்கப்பரிமாறி, செம் - சிவந்த, தழல்புரையும் - அக்நியோலிருக்கிற, திருவாலிஅம்மானே - திருவாலியையிருப்பிடமாகவுடையவனே!, வந்து - நானிருந்த விடத்தேவந்து, உனது அடியேன் - ஆச்ரிதவத்ஸ [ம லனான தேவரீர்க்கே தொண்டுசெய்து தரியும் ஸ்வபாவனென்னுடைய, மனம் - நெஞ்சில், நானபேக்ஷியாதிருக்கச்செய்தே, புகுந்தாய் - ப்ரவேசித்தாய்; புகுந்ததற்பின் - நீபுகுந்தபின்பு, வணங்கும் - ஆச்ரயிக்கிற, என்சிந்தனைக்கு - என் மநஸ்ஸுக்கு, இனியாய் - போக்யனானவனே!, திருவே - எனக்கு ஸம்பத்தானவனே!, என் ஆர் உயிர் - உன்னைப்பிரியில் பிழையாதபடி எனக்குதாரகனானவனே! என்று அவன் பண்ணின உபகாரத்தை ஸ்மரித்து அநுபவிக்கிறார். (க)

எனக்கு உன்னைப்பொழியச் செல்வமாமையைப்பிறப்பித்தாய், உன்னைப்பிரிந்தால நான்பிழையாதபடி பண்ணினாய். இங்ஙனேயிருந்தபின்பு, இனி நீபோகில் நான் பிழையேன், போகவொட்டேன், உனக்கென்றனை உபாயமில்லை, ஆனபின்பு, என்னை நித்யகைங்கர்யங்கொண்டருளவேணும்" என்று, ப்ராப்யனானவன்திருவடிகளிலே கைங்கர்யத்தையபேக்ஷித்து. அப்போதேகிடையாமையாலே அதிலக்ரமப்ராப்திபற்றாத தம்முடைய ஆவிஷ்கரித்தாராய்த் தலைக்கட்டுகிறார். ... *

செல்வமையைப் பிறப்பித்தாய், உன்னுடைய விச்லேஷத்திலே நான்பிழையாதபடி பண்ணினாய், இங்ஙனேயிருந்தபின்பு இனி நான் நீபோ[உரு கில் பிழையேன், போகவொட்டேன், உனக்கு என்றனை உபாயமில்லை, ஆனபின்பு என்னை நித்யகைங்கர்யத்தைக் கொண்டருள வேணும்" என்று ப்ராப்யனானவன்திருவடிகளிலே கைங்கர்யத்தை அபேக்ஷித்து; அப்போதேகிடையாமையாலே அதிலக்ரமப்ராப்தி பற்றாமையாலுண்டான தம்முடைய ஆவிஷ்கரித்தாராய்த் தலைக்கட்டுகிறார். *

முதற்பாட்டு.— (வந்து) நிரதிசயபோக்யமான திருவாலியை யிருப்பிடமாகவுடையையாய், நீயிருந்தவிடத்திலே நானேவந்துகிட்ட வேண்டியிருக்க என்பக்கல் அபேக்ஷாமாத்ரமுமின்றிக்கே யிருக்கச் செய்தே நானிருந்தவிடத்திலே நீயேவந்து.

"ஆருயிரே" என்றதைப்பற்ற (வ்ஶ்லேஷத்திலித்யாதி.) "மனம்வாட நீநினையேல்" என்றதைப்பற்ற (இனிநானித்யாதி.) "கைதொழுதெழும் புத்தியேன்" என்றதைப்பற்ற (நித்யேத்யாதி.) "இனிப்போயினாலறையோ வுபாயமொருமாற்றமெந்தாய்" என்னுமதைப்பற்ற (அப்போதேயித்யாதி.) ... *

முதற்பாட்டு.— (வந்தித்யாதி.) "அந்தளிர்" இத்யாதி "அணியாலியம்மானே, வந்து" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி, வருகைக்கொருஹேது சொல்லாமையால ஹேதுவர்த்தத்தையருளிச்செய்கிறார் (நிரதிசயேத்யாதி.)

முதற்பாட்டு. (வந்துனதித்யாதி) "புகுர விட்டவழியடியானென்று" இத்யாதிப்படியே - அடியானென்று பேரிட்டுக்கொண்டாய்த்துப்புகுந்தது. (புகுந்ததற்பினித்யாதி) ஶத்ருவேயாகிலும் தன் மனைத்திலே புகுந்தால் ஆஶ்ரயிக்குமாய்போலே, புகுந்தபின்பாய்த்து வணங்கிற்று; "யஶ்ச ஸர்வான் நித்யமைஶ்வர்யபரிதர்ப்பிதோ" என்றுமாப்போலே. (என்சிந்தனைக்கினியாய்) என்னெஞ்சுக்கு நிரவதிக போக்யனானவனே.

ஶ்ரீபாஞ்சராத்ரக்கிரண்டும் தன்னிலே ஸந்தமாயிடத்தில் இரண்டும் பாதிபாதிவழிவந்துகூடுதல் (க) ஒன்றேவருதல் செய்யுமவனுமிறே; அதில், இவருடையபேற்றுக்கு இவனொருவனே வழிவந்தானிவனாய்த்து. (உனதடியேன்) வருகிறபோதுபுகுருகைக்கடியாக அவன்கையோடுகொடுவந்த ப்ரமாணம். "அடியானிவனென்றெனக்காரருள் செய்யும்" என்றுமாப்போலே - நீயோ உன் கார்யத்துக்குக் கடவாய், நான்காண் என்று, தானே ஸர்வஸங்கல்பமும் நிர்வஹிப்பானுசவாய்த்து மறிட்டுக்கொண்டு புகுந்தது. வந்துபுகுரப்புக்கால், இசையாதே, "அல்லேன்" என்னைக்கு வாய்த்தலையான நெஞ்சிலேவந்து புகுந்தானாய்த்து. அவன்புகுந்த பின்பு இவர்செய்ததென்னென்னில் (வணங்கும்) ஶத்ருமிஹுமேயாகிலும், புகுந்தால் ஆஶ்ரயிப்பவர்களிறே; அவ்வோபாதி, பின்னைவணங்கினாய்த்து; "யஶ்ச ஸர்வான் நித்யமைஶ்வர்யபரிதர்ப்பிதோ" என்னுமாப்போலே. (என்சிந்தனைக்கினியாய்) இப்படிபுகுந்தவன்தானே "போவேன்" என்றாலும் விடவொண்ணாதபடியாய்த்து நெஞ்சுக்கினியனானபடி.

"அபேக்ஷாமாத்ரமுமின்றிக்கே" என்றதைவிவரியாநின்றுகொண்டு, "புகுந்தாய்" என்னவமைந்திருக்கவும், "வந்து" என்கையாலே வருகையில் ஊங்காரத்தைத் தோற்றுகிறதென்று விவக்ஷித்து, திருவாலியம்மானுக்குத் தம்முடைய ஸமுதயத்தால் நெஞ்சு தூரமாய்த்தோற்றுமென்றும், இப்படியிருக்க, வருகைக்குப்ரயோஜநத்தையும்காட்டிக்கொண்டு வ்யாக்யாதாஞ்செய்கிறார் (ஶ்ரீபாஞ்சராத்ரத்யாதி.) அதிலென்றது-ஒன்றேவருமிடத்திலென்றபடி. "உனதடியேன்" என்ற-இவர்ஸ்வரூபஜ்ஞாநம பிறந்தவராகத்தம்மையநுஸந்திக்க, அபேக்ஷாநிரபேக்ஷமாகவந்தானென்னைச்சேருமோவென்றுமின்ன; வாஸ்தவாகாரத்தைப் பற்றி அவன் நினைத்தபடியை யருளிச்செய்கிறானென்கிறார் (வருகிறவித்யாதி.) "உனதடியேன்" என்ற ஆழ்வாருடைய பாசுரமானது ஸர்வேஶ்வரன் கையதானப்ரணவார்த்தமாகையாலே அவன்கையிலேயெழுத்தைத்தாம் கண்டு அர்த்தத்தை அநுஸந்தித்தாரித்தனையாகையால் இந்தபாசுரம் ப்ரமாணமென்று கருத்து. "அடியேன்" என்னவேயமைந்திருக்க, "உனது" என்கைக்குக் கருத்தருளிச்செய்கிறார் (நீயோவித்யாதி.) "மனம்" என்றதுக்குக்கருத்து (வந்துபுகுரவித்யாதி.) "புகுந்ததற்பின்வணங்கும்" என்கையாலே - அவ்யவஹிதகாலத்திலேஸ்வரூபஜ்ஞாநகார்யமானவணக்கமிவருக்குவரஸம்பாவனையில்லையேயென்று ஶங்கோத்ஜீவநமாநுவாதம் பண்ணுகிறார் (அவனித்யாதி.) இதுக்குத்தரம் (ஶத்ருவித்யாதி.) "வணங்கும்" என்கிறப்ராதிகம் ஶங்கைக்கு முடிவுறஅநுஸந்திப்பது. இவர் வசமாகவணங்கினாராகிலும் அவன் சிந்தனைக்கினியனானபடியால் எல்லைநிலத்தைக் காட்டுகிறார் (இப்படியித்யாதி.)

(க) ஒன்றேவருதல் - சரக்குப்பிடிக்கிறவனே முற்றும்போகை.

மூ.— நீலத்தடவரைமாமணி நிகழக்கிடந்ததுபோ லரவணை
வேலைத்தலைக்கிடந்தா யடியேன்மனத்திருந்தாய்
சோலைததலைக்கணமாமயில்நடமாடமழை முகில்போன்றெழுந் தெங்கு
மாலைப்புகைகமழு மணியாலியம்மானே. ௨.

ப - ரை.— ஆலைப்புகை - கருப்பஞ்சாறட்டபுகை, எங்கும் - எவ்விடத்தும், மழைமுகில் போன்று - வர்ஷகாலமேகம்போலே, எழுந்து - மேலெழுவதினால், கமழும்-பரிமளத்தையுடைத்தான, சோலைத்தலை-சோலையிலே, மாமயில்கணம்-பெரிய மயில்கூட்டங்கள், நடமாட-களித்து ஆடாநின்றுள்ள, அணி-அழகிய, ஆலி அம்மானே - திருவாலிநாட்டுக்கு ஸ்வாமியானவனே !; நீலம் - நீலநிறத்தையுடைய, தடவரை - பெரியமலையானது, மாமணி - பெருவிலையனரத்நம், நிகழ-தன்மேல் ப்ரகாசிக்கும்படி, கிடந்தது போல் - சாயவிருந்ததுபோலே, வேலைத்தலை-திருப்பாற்கடலில், அரவணை - திருவனந்தாழ்வான்மேலே, என்னைக்கிட்டுவதற்குமுன்னே, ஸ்ரீகௌஸ்துபம் விளங்கும்படி, கிடந்தாய் - பள்ளிகொண்டவனே !, பின்பு அவஸரம் பெற்றவாறே, அடியேன் மனத்து - சேஷபூதனான என்ஹ்ருதயத்தில், இருந்தாய் - புகுந்து நீங்காதபடி நிலையாக நின்றவனே ! என்று ஈடுபடுகிறார். (௨)

(திருவே) எனக்குஸம்பத்தாயுள்ளவனே. (அந்தளிரித்யாதி) அழகிய தளிராலே அலங்க்ருதமான அசோகத்தினிளந்தளிர்கள் செந்தழலொக்கும் திருவாலியம்மானே. ... ... ... ௧.

( திருவே ) "திருவுக்கும்திரு" என்கிறபடியே - இவருடைய ஸம்பத்தாய்த்து இவன். ( என்னுயிரே ) ஸம்பத்துத்தானும் தாரகம் வேறொன்றாயிருக்கையன்றிக்கே, எனக்குதாரகனானவனே. வ்யதிரேகத்தில் பிழையாதபடியா யிராநின்றுதாய்த்து. (அந்தளிரித்யாதி) எனக்குதாரகனுமாய் நிரதிசயபோக்யனுமானநீ திருவாலியையிருப்பிடமாகவுடையையாய்வைத்து, தனக்கென்னவோரிடமில்லாதாரைப்போலே என்னுடைய ஹ்ருதயத்திலேவந்து புகுந்தாயே !. அழகிய தளிர்களாலே வந்த அழகுமிக்கிருக்கிற அசோகவ்ருக்ஷத்தினுடைய இளந்தளிரானவை எங்குமொக்கப்பரப்புமாறி அம்நிகல்பமாயிராநின்றதாய்த்து. சிவந்தஇளந்தளிர் எங்குமொக்கப் பரப்புமாறித்தளிர்த்துநின்றபோது, எங்குமொக்கநெருப்புக்கொளுத்தினாப்போலே தர்சநீயமா யிராநின்றதாய்த்து. இப்படி அந்யயோக்ஞாநஜநகமான தேசத்தை யிருப்பிடமாகவுடைய ஸர்வேச்வரனாயிருந்துவைத்து என்ஹ்ருதயத்திலே புகுந்திருந்தாயே !. ... ... ... ௧.

(என்னுருயிரே) என்றவிடத்தில் "என்" என்றதை இங்கும்கூட்டி, "என்திரு" என்றவிவக்ஷித்து, ஸஞ்ஜேஷ்டாக மருளிச்செய்கிறார் (திருவுக்குமித்யாதி.) தாத்பர்யமருளிச்செய்து, பலிதார்த்தமருளிச்செய்கிறார் (அழகியவித்யாதி.) திருவாலிநகரை யிங்ஙன்வர்ணித்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் ( சிவந்தவித்யாதி வாக்யத்வயத்தாலே.) ... ... ... ... ... ௧.

இரண்டாம்பாட்டு.— (நீலமித்யாதி.) கீழ்ப்பாட்டில்-மனம்புகுந்தபடியை யருளிச்செய்தார் ; இதில் - ஸுஸ்திரமாய்மனத்திருந்தபடியை யருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

தென்னெல்போய்வருமென்றென்றெண்ணியிராமையென்மனத்தேபுகுந்த
‡ திம்மைக்கென்றிருந்தேனெறிநீர்வளம்செறுவில்
செங்நெற்கூழைவரம்பொரீஇயரிவார்முகத்தெழு‡வாளைபோய்க் கரும்
¶ பங்நற்காடணையுமணியாலியம்மானே. ௫.

ப - ரை.— எறி - அலை வீசாநின்றுள்ள, நீர்வளம - நீர்வளப்பத்தையுடைய, செறுவில்-வயல்களிலுண்டான, செங்நெற்கூழை-வயிரம்பற்றிய செந்நெற்பயிரை, உள்ளிறங்கியழுக்க வொண்ணாமையால், வரம்பு ஒரீஇ-வரப்புகளில் அதின் தலைகளைச்சேர்த்து, அரிவார் - அறுக்கின்றவர்களுடைய, கைப்பிடியிலகப்பட்ட, வாளை-வாளைமதஸ்யங்கள், முகத்து - அவர்கள் முகத்தில், எழப்போய்-எழப்பாய்ந்து [ம] போய், அ - அந்த, நல் - அழகிய, கரும்புக்காடு - கருப்பங்காட்டை, அணையும-சேருகிற, அணியாலி அம்மானே!—; தென்னெல்-தேறலு, போய்—, வரும்-நாளை வரும், என்றென்று எண்ணி-என்று இப்படிப்பல மநோரதத்தது, இராமை-இராமல், என்மனத்தே - அடியேனமனத்தில், புகுந்தது-நீவந்திருந்தது, இம்மைக்கு என்று இருந்தேன்-இவ்வுலகில் எனக்குஇனிமையிலாக்கைக்காக என்றிருந்தேன் என்கிறார்.

இரண்டாம்பாட்டு. (நீலமித்யாதி) நீலநிறத்தையுடைய பெரிய பர்வதத்திலேயொருநிலாத்தம் கிடந்து விளங்குமாப்போலே, திருவநந்தாழ்வான்மேலே திருப்பாற்கடலிலே பள்ளிகொண்டாய்; பின்பு வந்து என்மநஸ்ஸிலேபுகுந்தாய். (சோலையித்யாதி) சோலையிடத்திலே மயில்திரளானவை நிர்த்தம்பண்ண, நீர்கொண்டெழுந்தகாளமேகம் போலே யெழுந்து ஆலைப்புகைகமழுமணியாலியம்மானே. ௨.

இரண்டாம்பாட்டு.—(நீலமித்யாதி) ஒருநீலமணியானது தன்மேலே பெருவிலையனாயிருப்பதொருரத்நம் உஜ்ஜ்வலமாம்படி சாய்ந்தாப்போலேயாய்த்துத் திருவனந்தாழ்வான்மேலே திருப்பாற்கடலிலே அழகிய திருமேனியிலே ஸ்ரீகௌஸ்துபம் விளங்கக் கண்வளர்ந்தருளும்படி. (அடியேன்மனத்திருந்தாய்) திருப்பாற்கடலிலே சாய்ந்தருளிற்று இவர்நெஞ்சிலே புகுருகைக்கு † விலக்காமைக்கு அவஸரம் பெறுமளவுமாய்த்து; விலக்காமைபெற்று இவர்ஹ்ருதயத்திலே புகுந்தபின்பு நிர்த்தக்ஷயனாயிருந்தாருமாய்த்து. (சோலையித்யாதி) சோலைத்தலையிலே பெரிய மயில்திரளானது நடமாடும்படியாக, வர்ஷூகபலாஹகம்போலே தோன்றி,எங்குமொக்க ஆலைப்புகைகமழுமாய்த்து. மழைமுகில்போலே யெழுகிற ஆலைப்புகையைக்கண்டு சோலைத்தலைகணமாமயில் நடமாடாநிற்குமாய்த்து. இப்படி விபரீதஜ்ஞாநஜநகமானதேசத்தை யிருப்பிடமாகவுடையனாயிருந்துவைத்து என்னுடைய ஹ்ருதயத்திலே புகுந்திருந்தாயோ!. ... ... ௨.

இப்போது திருப்பாற்கடலில்கிடக்கையைச்சொல்லுகைக்குத் தாதபர்யகபூர்வகமாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவித்யாதி.) ... ... ௨.

† "புகுந்திருக்கைக்கு" என்று சிலஸ்ரீகோஶங்கள். ‡ "இனமைக்கு" என்றுபாடாந்தரம். ‡ "எழா" என்னும்பாடம் கோஶாந்தரங்களிற்காண்க; அன்றிக்கே, எழு என்பதற்கே எழவெனப் பொருள்கூறுவாருமுளர். ¶ "அன்னல்" என்று, பெரியவாச்சான்பிள்ளைவ்யாக்யாநத்தின் மூந்தினபாடம்.

மூன்றாம்பாட்டு. (நென்னெலித்யாதி) நேற்றுப்போய்த்து, இன்று வந்தது, நாளைத்தானே வரும் என்று இப்படி காலங்கழிந்து, * ஆக்கை விடும்பொழுதெண்ணிக்கொண்டிராமல், என்னெஞ்சிலே புகுந்தது, இஹலோகத்திலே யென்னை வாழ்விக்க என்றிருந்தேன். (இன்மை) என்றபோது, இனிமைக்கென்றாகிறது. (எறிநீரித்யாதி) அலையெறிகிற நீரையுடைய அழகியவயலில் செந்நெல்தலைவரம்புகளிலே ஒருக்கியறுக்க, வாளை முகத்திலேயெழப்பாய்ந்துபோய், செடிமிக்ககருப்பங்காட்டைச்சென்றடையாநிற்கும். (கரும்பந்நற்காடணையும்) அந்த அழகியகருப்பங்காட்டை அணையும். ... ... ௫.

---

மூன்றாம்பாட்டு.— (நென்னெலித்யாதி) "நேற்றுப்போனான், இன்றுவரும்" என்றுகொண்டு மாறாதே மநோரதித்துக்கொண்டிராதபடியாகவென்னுதல்; "நேற்றுப்போய்த்தது, இன்றுவந்தது, நாளையும் வாக்கடவது" என்று மநோரதித்துக்கொண்டு காலம்செல்ல விடவிராம்படி யிராமேயென்னுதல். (என்னித்யாதி) இப்படி மநோரதத்தாலே நான் காலக்ஷேபம்பண்ணாதபடியாக என் ஹ்ருதயத்திலேவந்து புகுந்தது இஹலோகத்திலே எனக்கினிமை விளைக்கைக்காக என்றிருந்தேன். (இம்மை) என்றபோது, இஹலோகத்திலேயென்றாகிறது; (இன்மை) என்றபோது, இனிமையென்றாகிறது. (எறிநீரித்யாதி) அலையெறியாநின்றுள்ள நீரையுடைத்தாய், அழகியதாயிருந்துள்ள, செறுக்களுண்டு - செய்கள், அவற்றிலுண்டான, செந்நெற்கூழையென்று - செந்நெல்தலையாய், அத்தை வரம்பிலே (க) ஒருக்கி அரிகிறவர்களென்னுதல்; "பைங்கூழ்" என்கிறபடியே, கூழையென்றது - கூழென்றாய், செந்நெல்பயிராய், அத்தை அரிவாரென்னுதல். (வரம்பொரீஇ) நேர்கொடுநேர் சென்றிழிந்து அறுக்கவொண்ணாதபடி வயிரம்போலேயிருக்கையாலே வரம்புகளிலே தலைகளைக்கொடுபோந்து ஒதுக்கி, நுனியிலே அரிவர்களாய்த்து; அவர்கள் சேரப்பிடித்தபிடியிலே யகப்பட்ட வாளைகளானவை அவர்கள்முகத்திலே யெழப்பாய்ந்து, ஸாபாயமான நிலத்தைவிட்டு நிரபாயமாக வர்த்திக்கைக்காக அருகேயுண்டான செடிமிக்க கருப்பங்காட்டிலே சென்றடையாநிற்குமாய்த்து; போய், அரணைப்பற்றுமாய்த்து; - அந்த அழகிய கருப்பங்காட்டிலேயடையும். ௫.

---

மூன்றாம்பாட்டு.— (நென்னெலித்யாதி.) கீழ்ப்பாட்டில் - "அடியேன்மனத்திருந்தாய்" என்றார்; அந்த மனத்திருந்தபடிதானும் அவிச்சின்னமாக விருந்தானென்றும், காலவிப்ரகர்ஷம் நெஞ்சில்படாதபடி நிரதிசயபோக்யதையை தோற்ற விருந்தானென்று மருளிச்செய்கிறார் என்று இரண்டுவிதமாக ஸங்கதி.

வீப்ஸாதாத்பர்யம் (மாறாதேயித்யாதி.) "கூழை" என்றது - கதிராகவும் பயிராகவும் அர்த்தத்வயம் திருவுள்ளம்பற்றி, கதிரறுக்கையும் எழுச்சிகொய்கையுமாக்கி க்ரமேண வருளிச்செய்கிறார் (அழகியதாயித்யாதி.) ஒருக்கியென்றது - உறுக்கியென்கை. *அன்னல்பக்ஷத்துக்கர்த்தம் (செடிமிக்கவென்றது.) அந்தநல் லென்றர்த்தாந்தரமருளிச்செய்கிறார் (அந்தவித்யாதி.) ... ... ... ௫.

---

(க) ஒருக்கி - உறுக்கி - சேர்த்து.

மூ.—மின்னின்மன்னு நுடங்கிடைமடவார்தம்சிந்தைமறந்துவந்து நின்
மன்னுசேவடிக்கேமறவாமைவைத்தாயால்
புன்னைமன்னுசெருந்திவண்பொழில்வாயகன்பணைகள்கலந்தெங்கு
மன்னமன்னும்வயலணியாலியம்மானே. ௪.

---

ப - ரை. —புன்னை - புன்னைமரங்களும், செருந்தி - சுரபுன்னைமரங்களும், மன்னு - நிறைந்திருக்கிற, வண் - அழகிய, பொழில்வாய் அகன் - சோலையின் உள்ளே, பணைகள் - பொய்கைகளில், அன்னம் - ஹம்ஸங்கள், எங்கும் கலந்து - எங்குமொக்க ஒன்றோடொன்று சேர்ந்து, மன்னும் - நித்யவாஸம் பண்ணுகிற, வயல் - கழனிகளையுடைய, அணிஆலி அம்மானே—; மின்னில் மன்னு-மின்னோடொத்த,[ம] நுடங்கு - ஸூக்ஷ்மமான, இடை - இடையையுடைய, மடவார்தம்-ஸ்த்ரீகள் பக்கலுண்டான, சிந்தைமறந்து - வாஞ்சையைத்தவிர்ந்து, வந்து-உன்பக்கலிலே வந்து, மன்னு - எப்போதும் ஏகரூபமான, நின் - உன்னுடைய, சேவடிக்கே - அழகிய திருவடிகளையே, மறவாமை-நான்மறவாதபடி, வைத்தாய்-செய்தருளினாய் ; ஆல்!- இதென்ன ஆஶ்சர்யம் ! என்று உகக்கிறார். ... ... ... (மூ)

---

நாலாம்பாட்டு. (மின்னினித்யாதி) மின்னொத்த நுண்ணிய இடையையுடையராய் மடப்பத்தையுமுடையவர்கள் பக்கல், நெஞ்சைவாங்கி,

---

நாலாம்பாட்டு.— நீரிங்ஙனேகிடந்து நெஞ்சுளுக்குப்படாநிற்கிறதென்னென்ன ; ஸ்த்ரீகளை விஸ்மரித்து உன்திருவடிகளை மறவாதபடி பண்ணினாயாகில் இனி நீசெய்வதென்னென்கிறார்.

(மின்னித்யாதி) மின்னோடொத்திருப்பதாய், நுடங்காநின்றுள்ள இடையையுடையரான, மடவாருண்டு – ஸ்த்ரீகள், அவர்கள் விஷயமாக வுண்டான. ( சிந்தைமறந்து ) இவனெப்போதுமொக்க அவர்களை ஹேம்யைகளாக அநுஸந்திக்குமித்தனைபோக்கி, அவைதன்னை இவன்தான் லஷித்தானுகை பெரும்பணியிறே.

---

நாலாம்பாட்டு.—கீழ்ப்பாட்டுசகளோடுஸங்கத்தையத் தாமேகாட்டுகிறார் (நீரித்யாதி;)அர்த்தித்வாதிகளின்றிக்கேயிருக்க வந்து புகுந்து ஸ்திரமாக விருந்தாயென்று வெறுமைசொல்லி நிகர்ஷாநுஸந்தாநத்தால் நோவுபடுவானென், "எனக்சார்பிறர் நாயகரே" என்றுகளித்துக்கொண்டு அநுபவித்திருக்கவொண்ணாதோ என்றுமங்காதாத்பர்யம். உபகாராதிஶயம் என்னையிப்படிபடுத்துகிறதென்கிறாரென்னும் பரிஹாரந்தன்னையருளிச்செய்கிறார் (ஸ்த்ரீகளையித்யாதி.)

"மின்னின்" என்றவிடத்தில், இன் - சாரியையாய், மின்னைமன்னு - அதின் ஸாயுர்ம்யத்தையுடைத்தான என்றுதல்,மின்னில்என்றுஉபமார்யத்தில் பஞ்சமியாய், அத்தைப்போலே யிருக்கிற என்றுதல் ஸம்க்ஷார்யம் விவக்ஷித்து ஸலிதார்யமருளிச்செய்கிறார் ( மின்னோடொத்திருப்பதாயென்று. ) கலவியைமறந்து என்னாதே, "சிந்தைமறந்து" என்பானென்னென்னவருளிச்செய்கிறார் (இவனித்யாதி.) அவைதன்னை - அந்தஹேமங்கள் தன்னை, பெரும்பணி-துர்லபமென்று கருத்து.

மூ.—நீடுபன்மலர்மாலையிட்டுநின்னிணையடிதொழுதேத்துமென்மனம்
வாடநீநினையேல் மரமெய்தமாமுனிவா
பாடலின்னொலிசங்கினோசைபரந்துபல்பணையால்மலிந்தெங்கும்
ஆடலோசையறாவணியாலியம்மானே. ௫.

ப - ரை.—பாடல் - பகவத்காதைகளைப்பாடுகிற, இன்-இனிய, ஒலி-த்வநியும், சங்கின்ஓசை - சங்கத்வநியும், பரந்து - எங்கும்பரவி, பல்பணையால் - பலவகைப் பட்ட வாத்யகோஷங்களால், மலிந்து - மிக்கு, எங்கும் - பார்த்தவிடமெங்கும், ஆடல்ஓசை - ந்ருத்தம்பண்ணும்த்வநி, அறா - மாறாத, அணிஆலிஅம்மானே !—, மரம் - மராமரங்களேழையும், எய்த - ஒருக்காலே விழும்படி எய்த, மாமுனிவா- மாநசீலனே !, நின - உன்னுடைய, இணைஅடி - ஒன்றுக்கொன்றொப்பான திருவடிகளில், பல் - பலவகைப்பட்ட, மலர் - புஷ்பங்களையும், மாலை - கலம்பகன் மாலையையும், நீடு - நெடுங்காலம், இட்டு - பணிமாறி, தொழுது - ஸேவித்து, ஏத்தும் - ஸ்தோத்ரம்பண்ணுகிற, என் - அடியேனுடைய, மனம் - மநஸ்ஸு, வாட - உன்னைப்பிரிந்து தளிர்போலே வாடும்படி, நீ - ஆச்ரிதவத்ஸலனான நீ, நினையேல் - நினையாதொழியவேணும் என்று ப்ரார்த்திக்கிறார். ... ... ... (௫)

---

அவர்களை மறந்துவந்து. (நின்னித்யாதி) உன்னுடைய அழகியதிருவடிகளை மறவாதபடி பண்ணிவைத்தாய். ஆல் - அசை. (புன்னையித்யாதி) புன்னையும் செருந்தியும் செறிந்து அழகிய பொழிலிடத்து உள்ளான நீர்நிலங்களிலும் அன்னங்கள் கலந்து மன்னுகிற வயலையுடைய அணியாலி. ... ... ... ... ... ௪.

---

அப்ராப்தவிஷயங்களிலுண்டான வாஸநையைத்தவிர்த்து,ப்ராப்தவிஷயத்தையாசைப்படப்பண்ணினவிதுதான் பொருந்திறேஉபகாரம்! ; அவற்றைநானேகைவிட்டு,உன்பக்கலிலேவந்து,*ஸதைகரூபமான வுன் திருவடிகளிலே,எனக்கு மறவாமையாகிற பேறுண்டாம்படியாக, நானபேக்ஷிக்கவன்றிக்கே தன்னிர்ப்பந்தத்தைப்பாரோபாதி நிர்ஹேதுகமாகச் செய்தருளினாய். புன்னை, செருந்தி இவை மன்னுநின்றுள்ள அழகிய பொழிலினுள்ளே பொய்கைகளிலே அன்னங்களானவை அந்யோந்யம் கலந்துநித்யவாஸம்பண்ணுகிற வயலையுடைத்தாய் தர்சநீயமான திருவாலியில்நிற்கிற ஸர்வேச்வரனே. ... ... ... ௪.

---

அத்தைமறந்து என்றும், "அடி-மறவாமை" என்றும் சொன்னதுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார்(அப்ராப்தேத்யாதிவாக்யத்வயத்தாலே.)"வைத்தாய்" என்ற பதவாஸனை (நானித்யாதி.) பொழில்வாய் - பொழிலிடமாய், அகன் - அதுக்குள்ளேயிருக்கிற, பணைகள் என்று பாஷ்டார்யம்திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பொழிலினுள்ளேயென்று.) "பணைகள்" என்றதினர்த்தம் (பொய்கைகளிலே யென்றது.) ... ... ... ... ... ... ௪.

அஞ்சாம்பாட்டு.— (நீடித்யாதி.) கீழ்ப்பாட்டில் - அவன்செய்தமஹோபகாரத்தைச்சொல்லுகைக்காக, விஷயாந்தரங்களை மறக்கும்படிபண்ணினாய் என்றார்; அந்தப்ரஸங்கத்திலே, அவை வாஸநாபலத்தாலே மறுவலிடில்செய்வதென் என்று அஞ்சி, "மனம்வாடநினையேல், நினைத்தாயாகில் பிழையேன்" என்றப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதி.

அஞ்சாம்பாட்டு. (நீடித்யாதி) நீடு - காலநீட்சி. "ஒழிவில்காலமெல்லாம்" "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்கிறபடியே - உன் திருவடிகளிலேநல்லபூக்களையும்மாலைகளையும்சாத்தி, "தொழுதெழு" என்கிறஎன்நெஞ்சை. (வாடவித்யாதி) என்மநஸ்ஸானது உன்னைப் பிரிந்து வாடும்படி நினையாதொழியவேணும் மராமரமெய்த மாமுனிவா. (பாடவித்யாதி) ஸமவஸ்மாரையைகளைப்பாடுகிற த்வநியும் ஸங்க த்வநியும். (பல்பணை) பணையென்று - முரசும், பல்லியமும்பெறும்; இயமென்பது - வாத்யம். மலிதல் - மிகுதல். ஸாநத்வநிதுடக்கமானவற்றாலே யெங்கும் மிக்கு ந்ருத்தம் பண்ணுகிற கோஷமும் மாறாத அணியாலி. ... ... ... ... ... ௫.

ஆறும்பாட்டு. (கந்தமித்யாதி) ஸௌகந்த்யவத்தான புஷ்பங்களெட்டையுமிட்டு. அவையாவன - கருமுகை, கற்பகம், நாழல், மந்தாரம், ஸௌகந்தி, செங்கழுநீர், தாமரை, கேதகை.

---

அஞ்சாம்பாட்டு.—(நீடித்யாதி) "ஒழிவில்காலமெல்லாம்" "எண்டிசையுமுள்ள பூக்கொண்டு" என்கிறபடியே - பலவகைப்பட்ட மலரையுடைத்தான மாலைகளையிட்டு, உன்னுடைய ஒன்றுக்கொன்றொப்பாயிருக்கிற திருவடிகளைத்தொழுதேத்துகிற என்னுடைய மநஸ்ஸானது தளிர்போலே வாடும்படியாக நீநினையாதொழியவேணும். (மராமெய்தமாமுனிவா) ஆஸ்ரிதர்க்கு விஸ்வாஸத்தைப் பண்ணிக்கொடுக்குமவனன்றோ!. (மாமுனிவா) எங்களுடைய நினைவுபோலே தப்பிலும் தப்பி பலிக்கிலும் பலிக்கும்படியன்றிறே உன்நினைவிருக்கும்படி. பாட்டிலினிய த்வநி, மற்றுமுண்டான ஸங்கத்வநி, இவைபரம்பி, பின்னையும் பலவகைப்பட்டிருந்துள்ள வாத்யகோஷங்களும்மிக்கு, பார்த்தவிடமெங்கும் ஆடுகிறவர்களுடைய த்வநிமாறாத. பணை - முரசும், பல்லியமும். ... ... ... ... ... ௫.

ஆறும்பாட்டு.— (கந்தமித்யாதி) ஸௌகந்த்யவத்தான விலக்ஷணபுஷ்பங்களெட்டையுமிட்டு. அவையாவன - கருமுகை, கற்பகம், நாழல், மந்தாரம், ஸௌகந்தி, செங்கழுநீர், தாமரை, கைதை.

---

நீட்சி - காலக்ஷேபமான நீட்சியாய், அதுதானும் "இட்டு" என்றதுக்கு விஶேஷணமென்று ப்ரமாணம் காட்டுகிறார் (ஒழிவிலித்யாதி.) (என்கிறபடியே) என்றபின், காலமெல்லாம் என்றபேக்ஷம். மராமெய்த, மாமுனிவா - மஹத்தான, மநநத்தையுடையவனே என்று பாவார்த்தமாய், ஸஹிதார்த்தமருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதர்க்கித்யாதி.) மஹத்த்வத்தை விவரிக்கிறார் (எங்களுடையவித்யாதி.) பல்லியம் என்றதும் - வாத்யவிஶேஷம். ... ... ... ... ... ௫.

ஆறும்பாட்டு.—(கந்தமித்யாதி.) "என்மனம்வாட நீநினையேல்" என்று - நம்மைவிட்டு விஷயாந்தரபரராய்ப்போகாமல் நினைப்பிடச்சொன்னீர், நானும்மைப் பெறுகைக்காகவந்து புகுந்திருக்க அதுக்கு ப்ரஸக்திதானுண்டோ, நீர்தானே வாஸநாபலத்தாலே நம்மைவிட்டு மீண்டுபோக நினைத்திராகில் நாம்செய்வதென் என்னும் ஶங்கையிலே, நானென்னை யுனக்காக்கி த்ருடாத்யவஸாயநிஷ்டனாயிருக்கும்படி நீவந்தபின்பு நான்போகவொட்டுவேனோ வென்கிறாரென்று ஸங்கதி.

மூ.—கந்தமாமல ரெட்டுமிட்டு நின்காமர்சேவடிகைதொழுதெழும்
புந்தியேன் மனத்தேபுகுந்தாயைப் போகலொட்டேன்
சந்திவேள்விசடங்குநான்மறை யோதியோதுவித்தாதியாய்வரும்
அந்தணாளரறாவணியாலியம்மானே. ௬.

ப - ரை.—சந்தி - நித்யகர்மங்களையும், வேள்வி - நைமித்திக கர்மங்களையும், சடங்கு - காம்யகர்மங்களையும், இவற்றின் அநுஷ்டானப்ரகாரங்களை விதிக்கிற, நான்மறை - நாலுவகைப்பட்ட வேதங்களையும், ஆதியாய் - ஸ்ருஷ்டிதொடங்கி, ஓதி - முன்புள்ளவர்களிடத்தில்கற்றும், ஓதுவித்துவரும்-பிறர்க்குக்கற்பித்தும்போருகிற, அந்தணாளர் - ப்ராஹ்மணர், அறா - மாறாதேவர்த்திக்கிற, அணி ஆலி அம்மா[ம]னே!—, கந்தம் - பரிமளப்ரசுரமாய், மா - ச்லாக்யமான, எட்டு மலரும் - எண் வகைப்பூக்களையும், நின் - உன்னுடைய, காமர் - அழகிய, சேவடி - சிவந்த திருவடிகளில், இட்டு-ஸமர்ப்பித்து, கைதொழுது-கையாலேதொழுது, எழும்-உத்தவேணு மென்கிற, புந்தியேன் மனத்து-அத்யவஸாயத்தையுடையனான் நெஞ்சில், புகுந்தாயை-உன்பேறாகவந்து புகுந்தவுன்னை, போகலொட்டேன் - இனிநான்போகவொட்டேனென்கிறார். ... ... ... ... ... (௬)

ஸ்வாபதேசம்- †பரமபோக்யமான திருமந்த்ரத்தால் ப்ரதிபாத்யமான வஸ்துவின்பக்கலிலே தன்னைஸமர்ப்பித்து; "ஸர்வகந்த:" என்கிற வஸ்துவாகையாலே. (காமரித்யாதி) காமர் – அழகு. அழகிய சிவந்த திருவடிகளைத் தொழுதெழவேணுமென்று அத்யவஸாயமுடைய வென்னெஞ்சிலே புகுந்தவுன்னைப்போகவொட்டேன்.

ஸ்வாபதேசம் †பரமபோக்யமான திருமந்த்ரத்தாலே ப்ரதிபாத்யனான வஸ்துவின்பக்கலிலே தன்னை ஸமர்ப்பித்து; "ஸர்வகந்த:" என்கிறவஸ்துவாகையாலே: உன்னுடைய ஸ்ப்ருஹணீயமான சிவந்த திருவடிகளைக் கையாலே தொழுது உஜ்ஜீவிக்கவேணுமென்னும் அத்யவஸாயத்தையுடைய என்னுடைய ஹ்ருதயத்திலே. (புகுந்தாயைப்போகலொட்டேன்) நானுன்னை அபேக்ஷியாதிருக்க நீயேவந்து புகுந்தபின்பு, இனிப்போகலொட்டேன். நின்னையின்றிக்கேயிருக்க வந்த ஸம்பத்தைத் தள்ளுவாருண்டோ!.

"பன்மலர்மாலையிட்ட" என்று கீழ்ச்சொன்னவர், இப்பாட்டில "எட்டு"[கூய] என்று ஒரு ஸங்க்யாவிசேஷம்சொல்லுகைக்கு ப்ரயோஜநமென்னென்ன வருளிச்செய்கிறார் (ஸ்வாபதேசமென்று.) அத்தையருளிச்செய்கிறார் (பரமேத்யாதி.) இத்தால் - பரிமளப்ரசுரமான மலர்போலே ஓரோவெழுத்தே பரமபோக்யமாயிருக்கிற திருவெட்டெழுத்தாலே தத்ப்ரதிபாத்யவஸ்துவில் தன்னை ஸமர்ப்பிக்கை விவக்ஷிக்கைக்காகச் சொன்னதென்றதாய்த்து. * எட்டெழுத்துக்கு பரிமள[கூறு] ப்ரசுரபுஷ்பஸாம்யமுண்டாகைக்கு மூலமென்னென்ன வருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதி.) "நின்" இத்யாதிக்கு பாவார்த்தம் (உன்னுடையவித்யாதி.) "கைதொழுதெழும்புந்தி" என்னும்படி அத்யவஸாயநிஷ்டையுண்டானபின்போ அவன்புகுந்ததென்ன வருளிச்செய்கிறார் (நானுன்னையித்யாதி.) மனத்தேபுகுருகையாவது - நெஞ்சுக்கு விஷயமாகையாலே, இவருக்கு அத்யவஸாயம் பிறந்தபின்பு அவன் புகுருகையென்றொன்றில்லாமையால், முதற்பாட்டிற்சொன்னபடியே முன்னேபுகுந்ததத்தை யருளிச்செய்தாரென்று கருத்து. "ஒட்டேன்" என்றதுக்கு உட்கருத்தை யருளிச்செய்கிறார் (நின்னையின்றிக்கேயித்யாதி.) ... ... ... ௬.

† "அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம் புஷ்பமிந்த்ரியநிக்ரஹ:। ஸர்வபூததயா புஷ்பம் க்ஷமாபுஷ்பம் விசேஷத:॥ த்யாநபுஷ்பம் தப:புஷ்பம் ஜ்ஞாநபுஷ்பம் ததைவ ச। ஸத்யமஷ்டவிதம் புஷ்பம் விஷ்ணோ: ப்ரீதிகரம் பவேத்" என்கிற ச்லோகம் இவ்விடத்தில் அநுஸந்தேயம்.

உலவுதிரைக்கடல் பள்ளிகொண்டுவந் துன்னடியேன்மனம்புகுந்த அப்
புலவபுண்ணியனே புகுந்தாயைப்போகலொட்டேன்
நிலவுமலர்ப்புன்னை நாழல் நீழல் தண்டாமரை மலரின்மிசை மலி
யலவன்கண்படுக்கு மணியாலியம்மானே. ௭.

அஞ்சாம்பாட்டு.— (வாளாயவித்யாதி) அந்தலைபித்தலையாய்த் தன்னைப் பெறவேணுமென்று நாலாசைப்பட்டு நோவுபடாநிற்க தான் தன்னைக் கொண்டருமைப்படுத்தினானென்று சொல்லுங்கோளென்று தூதர்க்கு வார்த்தைசொல்லப்புக்கு, அதுதான் போய், பாவநாப்ரகர்ஷத்தாலே அவன் முன்னே நின்றாளாகக்கொண்டு அவன் றனக்கு வார்த்தைசொல்லிச் செல்லுகிறது — மேலிற்பாட்டுக்கள். ஸ்ரீராமாயணத்திற்படிபோலே யிருக்கிறதாய்த்திதுவும். தூதர்க்கு வார்த்தை சொல்லாநிற்கச்செய்தே, பாவநாப்ரகர்ஷத்தாலே அவன்றன் ஸந்நிதியாகக்கொண்டு அவனுக்குவார்த்தைசொல்லுகிறாளிறே. "க்ஷமமேஸ தம் மஸ்பதே" என்னுமாப்போலே.

அவனினையாமைக்கு ஹேதுவைக்காட்டுகிறதாகத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவாய்ப்பாடியிலித்யாதி.) ... ... ... ... ௭.

அஞ்சாம்பாட்டு.—வாளித்யாதி.) கீழெல்லாம்தூதுவிட்டவள் இப்போது முன்னிலையாகச்சொல்லி நோவுபடுகையெங்ஙனே யென்ன; பேடுகோஸங்கதியருளிச் செய்கிறார் (அந்தலையித்யாதி.)

அஞ்சாம்பாட்டு. ( வாளாயவித்யாதி ) வாள்போன்ற கண்கள் துளிக்க, மென்மையான முலைகள் பொன்பூக்க,

---

(வாளாயகண்பனிப்ப) அத்தலையித்தலையானபடி. எதிர்த்தலையிலே காணக்கடவ கண்ணநீரிறே இவள்கண்ணிலே காண்கிறது !. பிறரைத் தோற்பிக்கைக்கீடான பரிகரமுண்டாயிருக்கச்செய்தே தானிப்படிபட்டது !. கையிலே ஆயுதமிருக்க முடிந்து கிடப்பாரைப்போலே. அவன் போகவொருப்பட்ட ஸமயத்திலே, "போகாதேகொள்" என்று கண்ணாலே விலங்கிட்டு அநுபவிக்கலாயிருக்க, லஜ்ஜையாலே கவிழ்ந்திருந்து "கெட்டேன்!" என்கிறாள். அப்போது அவனைக்கடாக்ஷித்து விட்டேனாகில் அவன்றான் தூறுவிட்டிருக்கலாய்த்தே !. (வாளாயகண்பனிப்ப) ஓராளுமொருநோக்கும்நேரான கண்கள் படு மெளிவரவே!. புரியாய் வைத்து உகிர்ந்தறிந்தேன் என்கிறாள். திருத்தாயார் சொல்லுமாப் போலே சொன்னாளே தன்னைத்தானே; எல்லார்க்கு முள்ளது சொல்லலாயிருக்குமிறே. அவன்றான் "இதொருகண்ணழகே !" என்று [பெரு] சொல்லக்கேட்டிருக்குமே !. அத்தலைக்குறுப்பான ஸ்வஸ்வரூபமும் ப்ராப்யாநுகுணமாயிருக்குமிறே. ( மென்முலைகள் பொன்னரும்ப ) முலைக்கு காரியம் ஸ்வபாவமாயிருக்கச்செய்தேயும், மென்முலை என்கிறது — விரஹஸஹமல்லாதபடியாலே. விரஹஸஹமல்லாத முலைகள் பயலைமைபூக்க.

( வாளாயகண்பனிப்ப மென்முலைகள் பொன்னரும்ப) தன்னைக் கண்டுகொண்டிருக்க வமைந்திருக்கிறதுகாணு மிவள்தனக்கும். இவள்தனக்குமமையும், அவன்றனக்குமமையும். ※ மோவிதே ஹஸீ: இறே. [ஆஹ்லாத சீதநேத்ராம்பு:] ஸம்வஸ் மாஜைகமுஸம ஜநிதஹர்ஷ ப்ரகர்ஷத்தாலே குளிர்ந்த கண்ணநீருந்தானுமாயிருக்கை. [புளகீக்ருத காத்ரவாந்]த்ரிஸரமும் பஞ்சஸரமுமிட்டாப்போலே. [பாமஸாதுவிஷ்ட:]

---

வ்யாக்யாதாவினுடைய ஈடுபாடு (அத்தலையித்யாதிவாக்யத்வயம்.) தாத்பர்யம் (பிறரையித்யாதி.) கண்ணானது ஆயுதமாகிற வழியென்னென்ன வருளிச்செய்கிறார் (அவனித்யாதி.) ஹார்தபாவமருளிச்செய்கிறார் (அப்போதித்யாதி.) ஸங்கதியும் (ஓராளுமித்யாதி.) "குவளையங்கண்ணி" "பனிநெடுங்கண்ணீர்ததும்ப" என்று திருத்தாயார் சொன்னாப்போலே என்று வ்யாக்யாதா அருளிச்செய்கிறார் (திருத்தாயாரித்யாதி.) தாய்சொல்லிற்றைத் தான சொல்லலாமோவென்ன வருளிச்செய்கிறார் (எல்லார்க்குமித்யாதி.) தன் கண்ணழகு தான கண்டபடி யெங்ஙனேயென்ன (அவன்றானித்யாதி.) தான்சொல்லப்போமோ என்றதுக்குப்பரிஹாராந்தரம் (அத்தலைக்கித்யாதி.)

"பனிப்ப" என்றும் "அரும்ப" என்றும் சொன்னத்தால் பலித்த அழகினெல்லைநிலத்தை யருளிச்செய்கிறார் (தன்னையித்யாதி.) ஸம்வஸ்து ஸம்பவருடைய வடிவு வைத்தகண் வாங்கவொண்ணாதிருக்குமென்கைக்கு ப்ரமாண மருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதி. ஆஹ்லாதசீதநேத்ராம்பு: - விரஹக்க ளிரண்டு பார்ஶ்வத்திலும் விழுகையாலும் புளகீக்ருதகாத்ரவானானென்று விவக்ஷித்து, த்ருஷ்டாந்தமருளிச்செய்கிறார்(த்ரிஸரமுமித்யாதி.)முத்துத்தார்வடங்கள் குளிர்த்தியால் மயிர்கூச்சுண்டாகப் பண்ணுமென்று திருவுள்ளம்.

நாள்தோறு முன்னை நினைந்து நைகிறவெனக்கு.

உள்ளீடுமுண்டாயிருக்கை. [த்ரஷ்டவ்யஸ்ஸர்வதேஹிபி:] இப்படியிருப்பதொருவனுளனாகில, அவனைக்காண்கையாய்த்து ஶரீரபரிக்ரஹம் பண்ணினவித்தால் ப்ரயோஜநம். [ஸதா - த்ரஷ்டவ்ய:] இனி ஸதாதர்ஶநத்துக்கொரு தேஶவிஶேஷந்தேடிச் சோறுபொதிந்துகொண்டு அறுகாதப்பயணம் போகவேண்டா. அவனுக்குப்பொருளைவயிற்பிரிய வேண்டா, பிரிகிறதுதான் பொருளுக்காகவே. "இம்முத்தையும் பொன்னையுங்கொள்" என்று பாரித்துக்காட்டினாற்போலே யாய்த்து கண்ணநீரும உடம்பில்வைவர்ண்யமுமிருக்கிறபடி ; "ஒண் முத்தும் பைம்பொன்னுமேந்தி" என்னக்கடவதிறே.

(நாளுநாளுமித்யாதி) வரவுதாழ்க்கைக்கு உன்னை யொருநாள் நினைத்து மற்றொருநாள் மற்றொன்றை நினைக்கிறேனோ. (நாளுநாளும்) ஒருநாள் நோவுபட்டு ஒருநாள்ஸுகித்திருக்கிறேனோ. (நின்னினைந்து நைவேற்கு) என்னையன்றோ நீயறியாதது, உம்மைநீரறியீரோ. "நம்மைப்பிரிந்தார்ஜீவித்திருக்கமாட்டார்கள்" என்றிருக்கவேண்டாவோ. உன்னைக் கண்ணுறைப்புறத்திலுங்கண்டறியாயோ. (நின்னினைந்துநைவேற்கு) அநுஸந்தியா மடியேற்குமவளோநாள். "தேஹமே" என்கிற விது ஆற்றாமையிலே கிடக்கிறது.

மண்ணளந்ததாளாளா) அபேக்ஷையில்லாதார்தலைமேலே வைத்த திருவடிகள் இப்பொன்பூத்தமுலைகளுக்கு அரிதானதே !.

வெளியிலொரு ...னம்பூணாப்போலே கண்ணீராய், இதுசகுஹேதுவான ஹ்ருதய...வம் உள்ளுக்காரணமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (உள்ளீடித்யாதி.) வினைமேல் பிரிவெனவும், பொருள்மேல்பிரிவென்னும் சிலபிரிவுண்டு; அதில், வினைமேல் பிரிவாவது - ப்ரணயிநியைவிட்டுப்போக வேணும்படி வேறொரு கார்யத்தைக்குறித்துப்பிரிகை ; பொருள்மேல்பிரிவாவது - ப்ரணயிநியோட்டை போகத்துக்குறுப்பாக த்ரவ்யார்ஜநம்பண்ணப்போகை ; அவற்றில வினைமேல் பிரிவில்லை என்னுமதனைக் கீழருளிச்செய்தாராய், பொருள்மேல பிரிவும்வர ஸம்பாவனையில்லை யென்னுமதனை உபபாதிக்கைக்காக, இரண்டுவிதமான பிரிவு வரப்ரஸக்தியில்லையென்கிறார் (அவனுக்கித்யாதி.) பொருள்வையில்-பொருள் வினை யென்று சொல்லப்படுமவையில.

"நாளுநாளும்" என்றதை "நினைந்து" என்றதோடுகூட்டி தாத்பர்யமருளிச்செய்து, "நைவேற்கு" என்றதோடுகூடி தாத்பர்யாந்தர மருளிச்செய்கிறார் (ஒருநாளித்யாதி.) "நின்" என்றதுக்குக்கருத்து (என்னையித்யாதி.) "நைவேற்கு" என்று-நைகிறவெமக்கு என்றும்†, எமக்கு என்கிற பஹுவசநத்தால் தோற்றுகிற கௌரவத்தை யருளிச்செய்கிறார் (உம்மையித்யாதி.) * யாவதாஜஸஹிமௌரவ மன்றோ, நீ "துணையாளாகாயே" என்று ப்ரார்த்திக்கிறேயென்ன வருளிச்செய்கிறார் (தேஹீத்யாதி.)

"மண்" என்றபதம்- லக்ஷணயா மநுஷ்யரைச்சொல்லிற்று, உட்கருத்தை யருளிச்செய்கிறார் (அபேக்ஷயித்யாதி.

† இத்தவாக்யம் யோஜ்யம்.

(ஓர்மண்ணளித்யாதி†) ஓரடியாலே ஸ்ரீபூமியையளந்த திருவடிகளையுடையவனே. (வரையெடுத்ததோளாளா) ✻குடந்தைக்கிடந்தோவலனிறே. ✻குன்றமெடுத்தாநிரைகாத்தவனிறே.

(ஓ! மண்ணளந்ததாளாளா ஆரபேக்ஷிக்கத்தான் நீ அன்றெல்லார் தலைமேலும் திருவடிகளை வைத்தது!. ஆர்கண்ணில் கண்ணநீரும் ஆற்றாமையின் வைவர்ண்யமும் கண்டுதான் திருவடிகளைக்கொண்டுவந்து வைத்தது!. உன்னைப்பெறாதே விவர்ணமாயிருக்கிற இம்முலைமேலே திருவடிகளை வைத்தாலாகாதோ!.

(தண்குடந்தைநகராளா) அதுக்குப்பிற்பாடராயிருப்பார்க்கு வந்திருக்கிற தன்னேற்றந்தான் பெறலாகாதோ!. (தண்குடந்தைநகராளா) "இன்னமெல்லே நடப்பித்துக்கொள்வாராரோ என்றோ" என்று ச்ரமஹரமான திருக்குடந்தையிலேவந்து சாய்ந்தபடி.

(வரையெடுத்த தோளாளா) அங்ஙன் "பிற்பாடர்" என்கிற பொதுவன்றிக்கே, விசேஷித்து என்பருவத்திற்பெண்களையுடையாரையும் ரக்ஷித்தவனன்றோ!. (வரையெடுத்ததோளாளா) பசுக்களும் இடையரும் வர்ஷத்திலே தொலையப்புக, மலையையெடுத்துப் பரிஹரித்தாயாய்த்து. ஆச்ரிதர்க்குப்பணிசெய்த தழும்பாயாய்த்துத் திருமேனியடையக்கிடப்பது; "தழும்பிருந்த" இத்யாதி. "நம்மைச்சிலர் கட்டுண்கையாவதென், நாம் சிலர்க்குக் கட்டுண்கையாவதென். இதுபின்னை நாட்டில்[உ]ண்கையாவதென்" என்று, அத்தை மறைக்கப்புக்கான்; ஒருதழும்பாகில் அன்றோ உன்னால் மறைக்கலாவது, உன்னுடம்படங்கலும் ஆச்ரிதர்க்காகக் கார்யம்செய்தத்தால் வந்த தழும்பன்றோ என்கிறாள் [தழும்பிருந்த சார்ங்கநாண் தோய்ந்தவாமங்கை] அழகிய திருக்கையானது, ✻ஜ்யாகிணகர்க்கசமாய்க்கிடக்கும்; அழகிய திருக்கையானது. ஸ்ரீசார்ங்கத்தைப்பிடிக்கையால்வந்ததழும்பைச்சுமந்தது; திருவடிகளானவை, சகடாஸுரநிரஸநம்பண்ணி அத்தால்வந்த தழும்பைச் சுமந்தது; இனி, ✻வீங்கோதவண்ணர்விரல் செய்ததென்னென்றால் [பூங்கோதையாளித்யாதி] கிளர்த்தியையுடைத்தான ஓதம்போலேயிருந்துள்ள வடிவையுடையரானவருடைய திருவிரலானது, பிராட்டிக்காகவிறே சிறுக்கனுக்கு விரோதியான ஹிரண்யனைப்பிளந்து போகட்டது; அப்படிப்பட்டவனுக்கூட, விளைவதறியாதே "இதென்னாகப் புகுகிறதோ" என்று அஞ்சும்படி ஹிரண்யன் மார்வைப்பிளந்து போகட்ட தழும்பிருந்த. உன்னையழித்து ஆச்ரிதர்க்காசப்பார்த்தநீ.

---

"ஓ!" என்றவிஷாதத்தினபடியை விவரிக்கிறார் (ஆர்த்யாதி.)

உட்கருத்தையருளிச்செய்த, கீழ்ப்பதத்தோட்டை ஸமஹிவ்யாஹாரதாத்பர்யகதநபூர்வகம் ஸங்காரியமருளிச்செய்கிறார் (இன்னமித்யாதி.)

வரையெடுத்தமை தோளாலே யாயிருக்க, "தோளாளா" என்று விசேஷிக்கையால், திருமேனியெல்லாம் ஆச்ரிதர்க்காகச் செய்தசெயலில் தழும்பேறினமை தோற்றுகையாலே விசேஷித்தாரென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஆச்ரிதர்க்கித்யாதி.) எடுத்தபாசுரத்துக்குவ்யாக்யாநம் பண்ணுவதாகக் கீழ்ப்பாட்டோடு ஸங்கதிகாட்டுகிறார் (நம்மையித்யாதி.)

---

† "ஓர்மண்ணளந்த" என்று நஞ்சீயர்படியில் பாடம்.

மூ.—தாராயதண்டுளவ வண்டுழுதவரைமார்பன்
போரானைகொம்பொசித்த புட்பாகனென்னம்மான்
தேராரும்நெடுவீதித்திருவாலிநகராளும்
காராயனென்னுடைய கனவளையுங்கவர்வானோ. ௬.

ப - ரை.— வண்டு - வண்டுகளானவை, தாராய - மாலிகையாகிய, தண்துளபம் - திருத்துழாயிலுள்ள, தேனும் சுண்ணமும் வாஸனையுங் கொண்டு, உழுத - சேருக்கின, வரைமார்பன் - அகன்றதிருமார்பையுடையனாய், போர்ஆனை - யுத்தோந்முகமான குவலயாபீடத்தின், கொம்புஒசித்த - தந்தத்தைமுறித்தவனாய், புள்பாகன - பெரியதிருவடியை வாஹநமாக உடையனாய், என்அம்மான் - எனக்கு ஸ்வாமியானவனாய், தேர்ஆரும் - ரதங்கிலையையுடைத்தாய், நெடு - தனக்கும் தன்பரிகரத்துக்கும் பின்னைஎழுந்தருளப்போருமான, வீதி - திருவீதியையுடைய, திருவாலிநகர்ஆளும் - திருவாலிநகரத்தில் நித்யவாஸம்பண்ணுகிறவனாய், காராயன் - ஶ்யாமமான திருமேனியையுடைய ஸ்ரீக்ர்ஷ்ணனுமான ஸர்வேஶ்வரன், என்னுடைய - தன்னையே நினைந்து கையுமடியேயானுடைய, கனவளையும் - கையில்இட்டபொன்வளைகளையும், கவர்வானோ - அபஹரியாநிற்பனோ! என்று தன்னிலே தான் நொந்து படுகிறாள். ... ... ... ... ... ... (௬)

(என்றனக்கித்யாதி) உன்னையன்றித் துணையில்லா வெனக்குத் துணையாகாயே. ... ... ... ... ... ௫.

ஆறும்பாட்டு. (நாராயவித்யாதி) துளவந்தாரில் தாதும்சுண்ணமும் தேனுலே சேறாய் வண்டுகள்புக்கு உழக்கியுழுத வரைமார்வன்.

(என்றனக்கோர்துணையாளனாகாயே) அந்நொய்யமோவர்யநதிரியைப் பொகட்டு,என்னுற்றுமையிலே பாதியைச்சுமக்கவல்லையே !. (துணையாளனாகாயே) என்றது - ஆகவேணுமென்றபடி. ... ௫.

ஆறும்பாட்டு. — (தாராயவித்யாதி, வரைமார்பன்) தனக்கஸாதாரணமான திருத்துழாய்மாலையானது மடல்வெள்ளமிட்டுச் சேறு யாய்த்துத் திருமார்விருப்பது. திருமார்வில்சாத்தின திருத்துழாய்மாலையில் தேனும் சுண்ணமும் பரிமளமும் புறப்பட்டுத் திருமார்வடங்கலும் வண்டலிட்டு வண்டுகளுழுது சேறுசெய்து கிடக்குமாய்த்து. இனி இவர் பொன்னரும்பின முலைகளைக் கொண்டுவந்து நடுகைக்கு நல்லவளவாய்த்து ; இளமுலைகளைக் கொண்டுபோய் நடுமத்தனை.

அந்நொய்ய - அந்தநொய்ப்பமான, தன்னோயைப்பார்த்தால் மலை ஸூக்ஷ்மமென்னலாமென்று கருத்து. பாதியென்றது - "துணை" என்றதைப்பற்ற. ... ௫.

ஆறும்பாட்டு.— (தாரித்யாதி.) கீழ்ப்பாட்டில் - "துணையாளனாகாயே" என்று முன்னிலையாகச் சொல்லாநிற்கச்செய்தேயும், அது உருவுவெளிப்பாடு மாத்ரமாகையாலே கைவளைகழலக்கண்டபடியாலே, முன்னிருந்தவன்கழற்றிக்கொண்டு மறைந்தானென்று தன்னிலே தான்நொந்து படுகிறாளென்று ஸங்கதி.

"தண்டுளவவண்டு" என்னவமைந்திருக்க, "தாராய" என்றத்தாலே - "மதுவிரிதுழாய்முடி" என்னுங்ரூபகமாயிருக்குமென்றருளிச்செய்கிறார் (தனக்கித்யாதி.) சேறுகைக்கு மண்வேண்டாவோவென்னவருளிச்செய்கிறார் (திருமார்விலித்யாதி.)

(போரானையித்யாதி) யுத்தோந்முகமான குவலயாபீடத்தின் கொம்பை முறித்த மஹாபலவான், என்ஸ்வாமி. (தேராருமித்யாதி) தேரும் பரிகரமும்வரும்போது நெருக்குப்படாமல் வரலாம்படியான பெரிய திரு வீதியையுடைய திருவாலிநகரை ஆளும் பெரிய க்ருஷ்ணன்று என்னுடைய பொன்வளையும் கொள்வானே. கனம் – பொன். ௬.

ஆசையில்லாதாரே வேணும்போலேகாணும் மார்வுக்கு; எப்போது மொக்க அணைக்கலாம்படியாய்த்து அம்மார்விருப்பது.

(போரானைகொம்பொசித்த) யுத்தோந்முகமான குவலயாபீடத்தின் கொம்பை அநாயாஸேந முறித்தவன் வருமிடத்தில் வழியில் ப்ரதிபந்தகந்தானுண்டோ. (புட்பாகன்) பெரியதிருவடியை வாஹநமாகவுடையவன், விரோதிநிரஸந ஸ்வபாவனுமாய், தான் வரும்போதே தூரத்திலேகண்டு விடாய்தீரலாம்படியான பரிகரத்தை யுடையவன். (என்னம்மான்) சோளேந்த்ரஸிம்ஹனிலிருப்பைக் காட்டியாய்த்து இவளை அநந்யார்ஹையாக்கிற்று.

(தேராரும்நெடுவீதி) தனக்கும் தன் பரிகரத்துக்கும் இணைந்து வருகைக்குவேண்டும் பரப்புப்போருமாய்த்துத் திருவீதி. * தன்னை ராயிரம் பிள்ளைகளோடே வரலாமாய்த்து. (காராயன்) ச்யாமளமான வடிவைக்காட்டி பஞ்சலக்ஷம்குடியிற் பெண்கள் வளை கவர்ந்தவன், என் கையில் வளைபெறாவிடில் உண்டதுறக்காட்டானாயிராநின்றான். ஸமகாலத்தில் பிறவாதார் வளையும் கொள்ளவேணுமோ. இவனுக்கு ஒரு ராக வளைகொண்டதுவும் உண்டதுறக்காட்டுகிறதில்லைகாணும் இவள் கையில் வளை சேஷிக்கில்!. ... ... ... ௭.

இளமுலைநமெத்தனையானால் நடலாகாதோ, "வளை கவர்வானோ" என்று நோவுபட விடுவானென்னென்னவருளிச்செய்கிறார் (ஆசையித்யாதி;) இதுவாடி. ஆசையுடையனானாலாகாதோ, ஆசையில்லாதாரேவேணுமோ என்று த்வநி; யத்வா, ஸம்ச்லேஷிக்கவேணு மென்னுமாசையில்லாதவண்டேயாகவேணுமோ என்றும் த்வநியாகவுமாம்.

"புட்பாகன்" என்றபதஸமபிவ்யாஹாரதாத்பர்யம் (சோளேந்த்ரேத்யாதி;) ஸ்ரீசத்ருஞ்ஜயன் என்றாப்போலே, சோளேந்த்ரஸிம்ஹனென்று - நம்பெருமாளானைக்குத் திருநாமம். "மஹேந்த்ரமஹாதாயாதும்" என்று-அயோத்யாஜநங்களை யீடுபடுத்தினப்போலே, கோயில் பெருமாளும் அரங்கன் திருமுற்றத்தடியாரை யீடுபடுத்துவர்; அப்படியே இவளும் பெரியதிருவடிமேலிருப்பிலீடுபட்டாளென்றுகருத்து.

"ஆயன்" என்றபதத்தைக் கடாக்ஷித்தருளிச்செய்கிறார் (தன்னைரித்யாதி.) "வளையும்" என்ற உகாரதாத்பர்யம் (ஸமகாலத்திலித்யாதி.) வ்யாக்யாதாவினீடுபாடு (இவனுக்கித்யாதி.) ... ... ... ... ... ௬.

ஏழாம்பாட்டு.—(சொண்டித்யாதி.) கீழ்ப்பாட்டிலே "கனவளையும் கவர்வானோ" என்று தன்னிலேநொந்தவாறே, கழற்றிக்கொண்டுபோனவளையைக் குலுக்கிக்கொண்டு முன்னேதோற்ற, அவனைப்பார்த்து, என் வளைக்கு நான் கடவளல்லேனோ என்று பறிக்கத்துடங்குகிறாளென்று ஸங்கதி.

மூ.—கொண்டரவத்திரையுலவுகுரைகடல்மேல்குலவரைபோல்
பண்டரவினணைக்கிடந்து பாரளந்தபண்பாளா
வண்டமரும் வளர்பொழில்சூழ்வயலாலிமைந்தா என்
கண்டுயில் நீகொண்டாய்க்கென்கனவளையுங்கடவேனே. ௭.

ப - ரை.—பண்டு - மஹாபலிமுதலானவர்களால் இப்பூமிக்கு அநர்த்தமுண்டாவதற்கு முன்னே, அரவம்திரைஉலவு - கோஷத்தையும் அலைகளையுமுடைய, குரைகடல்மேல் - பரந்ததிருப்பாற்கடலில், அரவினணை-திருவநந்தாழ்வான்மேலே, குலவரைபோல்-ஓர்பெரியபர்வதம் சாய்ந்திருந்தாப்போல், கொண்டுகிடந்து-இத்தேசம் ஆஸ்ரிதரக்ஷணத்துக்கு ஏகாந்தஸ்தலமென்று திருவுள்ளத்திற்கொண்டு கண்வளர்ந்தருளி, பின்பு அம்மஹாபலியால் அநர்த்தம் விளைந்தவாறே, பாரளந்த பண்பாளா - பூமியை அளந்து அவனுண்டவுலகைமீட்டு இந்திரனுக்குக்கொடுத்த நீர்மையையுடையவனே, வண்டு அமரும் வளர்பொழில்சூழ் - வண்டுகள்படிந்து ஓங்கினமரச்சோலைசூழ்ந்த, வயல் - கழனியையுடைய, ஆலி-திருவாலியிலிருக்கிற, மைந்தா - யுவாவானவனே, என்கண்துயில் - என் தூக்கத்தை, நீகொண்டாய்க்கு-முற்றுமபஹரித்தவனுக்கு, என் கனவளையும்-என்கையிலுள்ளபொன்வளையும், கடவேனே - இழக்கக்கடவேனே! என்று அவன்விரும்பப் புக்கவாறே என்னதென்று ஒருதலை தானும்பற்றுகிறாள். ... ... ... ... (௭)

ஏழாம்பாட்டு. (கொண்டரவித்யாதி) ஆரவாரித்துக்கொண்டு திரைகள் ஸஞ்சரிக்கிற பரந்த கடல். குரை-பரப்பு. (குலவரையித்[உம்யாதி) பெரியவரைபோலேயிருக்கிற திருவநந்தாழ்வான்மேலே பண்டு கண்வளர்ந்து பூமியையளந்த ஸ்வபாவத்தையுடையவனே. (வண்டித்யாதி) வண்டுகளாலே மொய்த்து வளரப்பட்டபொழிலாலே சூழப்பட்ட வயலாலிமைந்தா!,

ஏழாம்பாட்டு.— (கொண்டு) ரக்ஷணத்துக்குப்பாங்காய் ஆர்த்தருடைய கூக்குரல் கேட்கும் தேசமிதுவென்று திருவுள்ளத்திலே கொண்டு. இவ்விடம் ஆஸ்ரிதரக்ஷணம் பண்ணுகைக்கு ஏகாந்தமான ஸ்தலமென்று திருவுள்ளத்திலே கொண்டு. ஆரவாரத்தையுடைத்தாய்-கோஷியாநிற்பதாய், திரைகளானவை ஸஞ்சரியாநிற்பதாய், பரப்பையுடைத்தான திருப்பாற்கடலிலே ஒருகுலகிரிசாய்ந்தாப்போலேயாய்த்துத் திருவனந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறபடி. குரையென்று - பரப்புக்குப்பேர். அக்கடல் பாழ்த்திரும்படி. ஒருகுலகிரிசாய்ந்தாப்போலே. (பண்டு)மஹாபலிபோல்வாரால் பூமிநோவுபடுவதற்கு முன்பாய்த்து அப்படுக்கையில் கண்ணுறங்குவது. (பாரளந்த பண்பாளா) படுக்கையை விட்டுவந்து இத்தையடைய அளந்து கொண்டாணுய்த்து. ஆக, மஹாபலியாலே அபஹ்ருதமான பூமியைமீட்டு இந்த்ரனுக்குக்கொடுத்த நீர்மையையுடையவனே.

(வண்டமருமித்யாதி) அந்நீர்மைக்குப் பிற்பாடரானருமிழவாமைக்காகவாய்த்துத் திருவாலியிலே வந்துநிற்கிறது. பரிமளம்படிந்தாப்போலேவண்டுகள்படிந்து மதுபானம்பண்ணுநின்றுள்ளஓங்கினபொழிலாலே சூழப்பட்டவயலையுடைத்தான திருவாலியிலே நிற்கிறவனே.

விவரணம் (இவ்விடமித்யாதி.) "அரவம்" என்றதினர்த்தம் (ஆரவாரத்தையென்றது.)

மூ.—குயிலாலும் வளர்பொழில்சூழ்தண்குடந்தைக்குடமாடி!
துயிலாதகண்ணிணையேன் நின்னினைந்து துயர்வேனோ;
முயலாலு மிளமதிக்கேவளையிழந்தேற்கிதுநடுவே
வயலாலிமணவாளா கொள்வாயோமணிநிறமே. .௮.

ப - ரை.—குயில ஆலும் - மதுவுண்டு களித்துக் குயில்கள் ஆலாநின்றுள்ள, வளர்பொழில் சூழ் - ஓங்கின சோலைசூழ்ந்த, தண்குடந்தை - குளிர்ந்த திருக்குடந்தையில்வர்த்தியாநிற்கிற, குடமாடி - குடக்கூத்தாடினவனே, துயிலாத - உறக்கங்கொள்ளாத, கண்ணிணையேன் - கண்ணிணையுடைய அடியேன், நின்நினைந்து - உன்னையே நினைத்துக்கொண்டு, துயர்வேனோ - துக்கிக்கக்கடவேனோ?; முயலாலும் இளமதிக்கே - தன்னுடம்பில் துள்ளுகிறமுயலைப்போக்கமாட்டாமலும் பருவம் நிரம்பாமலுமிருக்கும் சந்த்ரனுக்கே, வளையிழந்தேற்கு - வளைகளையிழந்தவடியேனுக்கு, வயலாலிமணவாளா - கழனிசூழ்ந்ததிருவாலியிலுள்ள ஸ்வாமியே, இதுநடுவே - இப்பாதகவர்க்கத்தினடுவே, நீயும்வந்து, மணிநிறமேகொள்வாயோ - அழகியநிறத்தையும் கைக்கொண்டு என்பத்தைப்பண்ணுவாயோ! என்கிறாள். (௮)

என்காண்டுமிலைக் கொண்டவுனக்கு என்பொன்வளையும் கடவேனோ. ஏ.

திருப்பாற்கடலில் நின்றும் ஸ்ரீவாமநனாயவதரித்து ஸர்வஸ்வமுமிவையகப்படுத்திக்கொண்டாப்போலேயாய்த்து திருவாலியிலேவந்துநின்று தன்யௌவநத்தைக்காட்டி யிவரையகப்படுத்தினபடி. (என்காண்டுயில் நீகொண்டாய்க்கு) திருவாலியிலே உத்தேஶ்யவஸ்து ஸந்நிஹிதமாய்த்தென்றவாறே, கண்ணுறக்கம் ஓடிபோய்த்தாய்த்து. (என்பொன்வளையும்கடவேனோ) என்னுடம்பிலுள்ளது வேணுமாகில்கொள்ளுகிறாய், நான்பொன்னிட்டுக் கொண்ட வளையிலென்ன ப்ராப்தியுண்டு. அவனும் பொன்கொடுத்திறே கொண்டு போகிறது. இவனுக்கும் இவளுடம்பிலுள்ளது கொள்ளும்போது இவள் (க) மேலெழுந்திடவேண்டாகாணும், ஸ்வாபாவிகமானத்தோடு ஔபாதிகமானத்தோடு வாசியின்றிக்கே, என்னதென்றுமித்தனையேயாய் கொள்ளுகைக்கு வேண்டுவது. அவனித்தை விரும்பப்புக்கவாறே, என்னது என்று ஒருதலை தானும் பற்றுகிறாள். ... ... ... ... ஏ.

உடம்பிலுள்ளது - நித்ரை, கடவளல்லேனோ எனது பாவநாரயும் வியக்தி [கூடி தருளிச்செய்கிறார் (நானித்யாதி.) ஸ்த்ரீத்தமான பொன்னிட்டுக்கொண்டவளையை அவன் கொள்ளக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அவனுமித்யாதி.) பொன்கொடுத்து - வைவர்ண்யத்தைக்கொடுத்து. ஆகில், இவளிசைவு வேண்டாவோவென்ன (இவனுக்குமித்யாதி;) ப்ராப்தனுகையால் அவன் பொன்னிட்ட அவள் கைவளையைக்கொண்டானென்று கருத்து. அவனப்படி கைக்கொண்டால இவள் என்னது என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (அவனித்யாதி.) ஏ.

(க) மேலெழுந்திடுகை - ஸம்மதிக்கையென்றபடி. "மேலெழுந்து வேண்டாகாணும்" என்று சில வ்யாக்யாந ஸ்ரீகோஶங்களில்பாடம்; அதுக்கநுகுணமாக, "மேலெழுந்த வளையைக் கொள்ளவேண்டுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (இவனுக்குமித்யாதி வாக்யத்வயத்தாலே.)மேலெழுந்தது வேண்டாகாணுமென்றது- ஸாமாந்யமானதாகாது, விஶேஷமானவளையாகவேணுமென்றபடி" என்று அரும்பதார்த்தம்.

எட்டாம்பாட்டு. (குயிலாலுமித்யாதி) குயில்களானவை சோலையில் ஃபலங்களை புஜித்து ஆலிக்கிற வளர்பொழிலாலே சூழப்பட்ட பரமரம்யமான திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிற குடக்கூத்தனே. (துயிலாதவித்யாதி) கண்ணுறக்கமற்று உன்னையாசைப்பட்டு இளைக்கக்கடவேனோ.

---

எட்டாம்பாட்டு.— (குயிலாலுமித்யாதி) அவ்வூரில்குயில்கள் ஸங்கீர்த்தனம் பண்ணாநிற்குமாய்த்து. அவ்வூரில் குயில்களானவை மயூரபாலனம் பண்ணிக் களித்தாலியாநிற்குமாய்த்து ; இவ்வூரில் குயிலொன்றுமன்றிறே உருவிக்கிடக்கிறது. இடைப்பெண்களுடைய கலாலாம்படி மன்றிலே குடக்கூத்தாடி தன்னழகை ஸர்வஸ்வதானம் பண்ணினவன் பிற்பாடரிழவாமைக்காகத் திருக்குடந்தையிலே ஸந்நிஹிதனானாறே, கண்ணுறக்கம் குடிபோய்த்தாய்த்து. அவன் ப்ரத்யாஸந்நனாயொன்றவாறே உறக்கம்குடிபோய்த்தாய்த் திவளுக்கு. உறங்காமைக்கு † இரண்டுலக்ஷ்மணர்களைப்போலேயாய்த்து கண்களிரண்டும். இளையபெருமாள்பிறந்த முஹூர்த்தத்திலேயாய்த்து இவள்கண்களும் பிறந்தது. "ஜஹெள" என்று ஒருநாளாக விடவேண்டாவாய்த்து. ஆதரஸ்ஸந்தியுமுறங்காதபடி பண்ணவேணுமோ. இக்கண்ணுக்கிலக்காகாவிட்டால் * உட்கண்ணுக்கிலக்காகவேணுமோ. "நெஞ்சென்னுமுட்கண்" என்னக்கடவதிறே. அதுக்கவொட்டாவிட்டால் அகவாய் பெரியதிருநாளாய்ச் செல்லவேணுமோ. (துயர் வேறு) மறந்துபிழைத்தாலோ நாங்கள்.

---

எட்டாம்பாட்டு.— (துயிலித்யாதி.) இப்பாட்டில் "என்கணவனையும் கடவேற்று" என்ற தாவமொருதலைபற்றிமன்றுடாநிற்குமளவிலே அங்கோதயமாக, அவனிருந்து உட்பிடிகருப்பாலியவே கையவனைகழன்றுயிற, அவ்வளவிலும் அவனைக் கொண்டுபோகாதே முன்னிலையாய்த் தோற்றிநின்றபடியைக்கண்டு நிறையழிக்கிற வளையுமாய், அவனைப்பார்த்து நீநிறக்கேடாக்கிக்கொள்வாயோ என்று சொல்லுகிறுளொன்று லெய்தர்.

அவ்வூரில் - திருக்குடந்தையிலென்றபடி. ஹேதுபூர்வகம் விவரிக்கிறார் (அவ்வூரிலித்யாதி.) உட்கருத்து (இவ்வூரிலித்யாதி.) துயிலாதநான் என்னவமைந்திருக்கவும், கண்ணிணைகள் துயிலாதவென்று விசேஷித்து, அதுக்கு ஸஹேதுகதாத்பர்யமருளிச்செய்கிறார் (உறங்காமைக்கித்யாதி;) காண்கையிலாசை கண்களுக்கு ஸ்வாதந்த்ர்யேன பிறந்ததென்று கருத்து. இளையபெருமாள் பிறந்தமுஹூர்த்தத்திலே பிறந்தனவாகில், பிறந்தநாள்தொடங்கி உறங்காதவரன்றிக்கே காட்டுக்கெழுந்தருளினபோதன்றோ நித்ரையின்றிக்கே யிருந்ததென்ன; ஆம், இங்குவிசேஷமுண்டென்று விசேஷத்தையருளிச்செய்கிறார் (ஜஹாவித்யாதி.) "பிழைந்து" என்றபதத்துக்குத்தாத்பர்யம் (ஆதரேத்யாதிவாக்யசதுஷ்டயமும்.) பிழைத்தாலோ-பிழைத்தாலாகாதோவென்றபடி.

† "லக்ஷ்மணர்ப்போலேயாய்த்து" என்று சில ஸ்ரீகோசங்கள்.

மூ.—நிலையாளாநின்வணங்க † வேண்டாயேயாகிலு மென்
முலையாளவொருநாளுன்னகலத்தாலாளாயே
சிலையாளா மரமெய்ததிறலாளா திருமெய்ய
மலையாளா நீயாளவளையாளமாட்டோமே. ௬.

ப - ரை.—சிலைஆளா - ஸ்ரீகோதண்டக்கையனே,மரம்எய்ததிறல்ஆளா - மராமரம் வேரோடுவிழக் கணைவிடவல்லவனே,திருமெய்யமலைஆளா- திருமெய்யத்தில் கண்வளருமவனே,நிலையாளாநின்வணங்க-நான் அநந்யப்ரயோஜனையா யுன்னை ஆஶ்ரயிக்க,வேண்டாயேஆயினும்-வேண்டேனென்றிருந்தாயேயாகிலும்,என்முலையாள-என்முலைகளாட்செய்யும்படி, ஒருநாள்-ஒருநாளாகிலும், உன்அகலத்தால் ஆளாய்-உன் அகன்றமார்பா லணைத்து என்னைநிர்வஹிக்கவேணும் ; நீஆள - நீபரிக்ரஹித்தபின், வளையாளமாட்டோமே - வளைகளைநிர்வஹிக்கைக்குத்தேடமாட்டோமே. (௬)

( முயலாலுமித்யாதி ) முசலகவாயிருக்கிற இளம்பிறைக்கு வளையிழந்திருக்க மதிகேடனையிறே யிவள்வளையைவாங்கிற்று. (இதனடுவே) இவ்வாயகவர்மத்தின் நடுவே. (வயலாலிமணவாளா) ஆலிநகரியிலே நீவந்திருக்கிறது என்னுடைய அழகிய நிறத்தைக் கொள்கைக்கோ. ... ... ... ... ... ௮.

(முயலாலுமித்யாதி) நீ கைதொடனாய் நலியவேண்டும்படியோ என் உஸையிருக்கிறபடி !. தன்கறைகழுவவும் மாட்டாதே தன்குறை பரிஹரிக்கவும்மாட்டாத சந்த்ரனுக்கு வளையிழந்தன்றோ நானிருக்கிறது. தன்னுடம்பிலே துள்ளுகிற முயலைப்போக்கவும் மாட்டாதே, பருவம்நிரம்பாதே யிருக்கிறவனுக்கு வளையிழந்தேற்கு. (இதுநடுவே யித்யாதி) விஹ்ருதியையிட்டு நலிகையன்றிக்கே, நீரும்தூசியேறப்புக்கீரோ ; —போரிலே த்வந்த்வயுத்தம்பண்ணாநிற்கச்செய்தே நடுவே வந்து பொருவாரைப்போலே. விடுநகமும் சம்மட்டியுமிட்டு நலியாநிற்க"அதுபோராது" என்று உடையவன் தானே நலியுமாப்போலே, விஹ்ருதியையிட்டு நலிகைதவிர்ந்து நீதானே கைதொடனாய் நலியப்பார்த்தாயோ. ( கொள்வாயோ மணிநிறமே ) அவன் கூடவிருந்த போது, "இதொருநிறமே !" என்று வாய்புலத்தக்கேட்டிருக்குமே; அல்லது, தன்வடிவைத் தானே ஶ்லாகிக்கிறாளன்றே. ... ௮.

"இளமதிக்கே" என்கிற அவதாரணதாத்பர்யமருளிச்செய்கிறார் (நீயித்யாதி.) கைதொடனாய் - ஸஹாயமாய். * மதிக்கு விஶேஷணமிட்டதால் ஶஸித்தவர்யமருளிச்செய்கிறார் (தன்னித்யாதி.) வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (தன்னுடம்பிலே யித்யாதி.) முயலை - ஶஶத்தை. விஹ்ருதி என்றது-சந்த்ரனை. கீழ்வாக்யவிவரணம் (போரிலேயித்யாதி.) விடுநகம் - விரல்கிட்டி. ... ... ... ௮.

† "வேண்டாயேயாயினும்" என்று சில ஸ்ரீகோஶங்கள்.

ஒன்பதாம்பாட்டு. (நிலையித்யாதி) ஆத்மாநுமாக உன்றிருவடிகளிலே கைங்கர்யம்பண்ணவாய்த்து இத்தை வகுத்தது ; அது திருவுள்ளத்தாலே வேண்டா என்றிருந்தாயாகிலும். (என்முலையாளவித்யாதி) என்முலையானது ஆட்செய்ய,

ஒன்பதாம்பாட்டு.— (நிலையாளாவித்யாதி) ஸத்தையுள்ளதனையுமவன்றிருவடிகளிலே வணங்கி வர்த்திக்குமிதுவேயாய்த்து ஸ்வரூபத்தோடு சேர்ந்தசெயலாவது. (நின்னித்யாதி) அதப்படியேயாகிலும், "இவனுமிப்பேற்றைப்பெறுவான்" என்று அவன் நினைக்கிலிறே அது ஸித்திப்பது. (நிலையாளா நின்வணங்க † வேண்டாயேயாகிலும்) கிடைக்கில் பெறவேண்டியிருப்பது இதுகாணும். கடக்கநின்று ஒரு ப்ரயோஜநங்களைக்கொண்டுபோகையன்றிக்கே, கிட்டநின்று அவன்றிருவடிகளிலே நித்யகைங்கர்யம்பண்ணவாய்த்து ஆசைப்படுவது. ப்ராஹ்மணர் பிச்சேறினாலும் ஓத்துச்சொல்லுமாப்போலே, தலைமகளான ஸமயத்திலும் சேஷத்வாநுரூப வ்ருத்தியையே யாசைப்படுகிறாளிறே. (நிலையாளாநின்வணங்க) என்றத்தாலே - ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணிற்று ; (வேண்டாயேயாகிலும்) என்கையாலே - ப்ராபகநிஷ்கர்ஷம் பண்ணிற்று. அவன்வேண்டியிராதவன்று இப்பேறு கிடையாதிறே. இது நமக்கு உபேக்ஷாவிஷயம் - வேம்பென்றிருந்தாயேயாகிலும். (என்முலையாள) நான் ஸத்தைகொண்டு நிர்வஹித்தேனும்படியாக.

ஒன்பதாம்பாட்டு.— (நிலையாளாவித்யாதி.) இப்பாட்டில் - "கொள்வாயோ மணிநிறமே" என்னச்செய்தேயும், அவனிவளுக்கு முன்னிலையாய்த் தோற்றின மாத்ரமாகையாலே ஒருபடியேதோற்றிக்கொண்டு நிற்க, அது முன்னிலையாகத் தோற்றின மாத்ரமென்றறியாதே, அவன்றானே தன்னை வேண்டாதிருக்கிறானாகக் கொண்டு தான் திருமுலைத்தடங்கள் அணைக்கையிலே கணிசிக்க, செய்வதறியாதே அவனைக்கலவியிரக்கிறாளென்று ஸங்கதி.

நிலைநின்ற ஆளாய்க்கொண்டு நின்னைவணங்கி நித்யகைங்கர்யம்பண்ண உனக்குவேண்டா விட்டாலும் என்று ஸாபிப்ராயமாய், தாத்பர்ய மருளிச்செய்கிறார் (ஸத்தையித்யாதி.) கைங்கர்யத்தைவேண்டுமவர் தாமாயிருக்க, அவனை "வேண்டாயேயாகிலும்" என்கிறதென்னென்ன வருளிச்செய்கிறார் (அதுவித்யாதி.) "ஆகிலும்" என்றதுக்குத் தாத்பர்யம் (கிடைக்கிலித்யாதி;) நிலையாளாய் வணங்குகையே பரமபுருஷார்த்தம், அது கிடையாமையால் "அகலத்தால் - ஒருநாள் - ஆளாய்" என்கிறாளென்று கருத்து. விவரணம் (கடக்கவித்யாதி.) ஒருப்ரயோஜநமென்று- ஸ்வார்த்தமான காதாசித்க ஸம்ஶ்லேஷமென்றபடி. நாயிகையாயிருக்குமிவளுக்கு ஸம்ஶ்லேஷத்தை ப்ரார்த்திக்கையே புருஷார்த்தமாயித்தனைபோக்கி, சேஷவ்ருத்தியையபேக்ஷிக்கக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ராஹ்மணரித்யாதி.) ப்ராஸங்கிகமாக ப்ரமேயஶிக்ஷைசெய்தருளி, வேண்டாயாகிலும் என்னாதே "வேண்டாயே" என்கிற ஏவகாரத்துக்குக் கருத்தருளிச்செய்கிறார் (இதுநமக்கித்யாதி.) வேம்பென்றது - தாத்பர்யாக்ஷரம். அதாவது - த்யாஜ்யமென்றபடி.

† "வேண்டாயேயாயினும்" என்று சில ஸ்ரீகோஶங்கள்.

**உன்திருமார்விலே அவற்றை யடிமைகொள்ளாயாகில். ( சிலையாளா ) ஸ்ரீஶார்ங்கத்தையடக்கி யாளுகிறவனே. ( மரமித்யாதி ) மராமரம் ஏழையுமெய்த பெருமிடுக்கனே.**

---

“கொங்கைகிளர்ந்து குமைத்து” என்று-க்ஷாமகாலத்தில் ப்ரஜைகள் “சோறு, சோறு” என்று அலைக்குமாப்போலே, இம்முலைகளுக்காற்ற மாட்டாதே நோவுபடுமது தவிர்ந்து என்னுடைய ஸ்த்ரீத்வங்கொண்டு நிர்வஹித்தேனும்படி. (என்முலையாள) மத்தகஜத்தைக்கட்டி யாள்வாரைப்போலே என்முலையை நான் நிர்வஹிக்கைக்காக. நமக்கபேக்ஷையின்றிக்கே யிருக்கச்செய்தே உன்ப்ரயோஜநத்துக்காக நம்மையிப்படிசெய்யச்சொன்னாலது செய்யப்போமோவென்ன (ஒருநாள்) நித்யமாய்வருமது தவிருகிறது; ஒருநாள் பிறருக்கந்தவனகாளிலே பரிமாறி னாலாகாதோ. (ஒருநாள்) பலநாள்வேணுமென்றிருக்கவேண்டா, ஒருநாளாகிலுமமையும். அவ்வொருநாள் என்னெஞ்சிலிலையாகில் செய்யப்போமோ வென்ன ( உன்னகலத்தாலாளாயே ) உன்னெஞ்சை நீயுகந்தார்பக்கலிலேவைத்து உடம்பைக்கொண்டணையவமையும்.

நெஞ்சை நினைத்தார்க்குவைப்பது, வேறுமார்வாலெங்கிலமையாவது, இப்படிதான் செய்யவேண்டுகிறதென், வேண்டியிராதவிஷயத்திலே யொருநாள்தான் செய்யவேண்டுகிறதென்னென்ன (சிலையாளா) என் ஆர்த்தத்வநிகேளாமைக்காக. “க்ஷத்ரியைர்தார்யதே” என்கிறபடியே - ஆர்த்தத்வநிகேளாமைக்கன்றோ நீர்விற்பிடித்துக்கொண்டிருக்கிறது. நாம் விற்கொண்டெங்கே காரியங்கொள்ளக்கண்டிருக்கிறதென்ன ( மரமெய்ததிறலாளா ) உன்னைவிஶ்வஸியாதார்க்கும் மறுவேந்திக்காரியம் செய்யுமவனன்றோ; உன்னை ஆஶ்ரயித்த மஹாராஜரார்த்தி போக்குகைக்காக மராமரங்களையெய்து மறுவேந்திக்கொடுத்திலையோ.

---

கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் ( கொங்கையித்யாதி. ) மேலுக்கவதாரிகை (நமக்கித்யாதி.)

(உபேக்ஷாவிஷயம்) என்றத்தைப்பற்ற - “ஒருநாள்” என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்து, (வேம்பு) என்ற தாத்பர்யாநுகுணமாக, “ஒருநாள்” என்றதுக்கு- உக்திப்ரத்யுக்திரூபேண வருளிச்செய்கிறார் (வேண்டியித்யாதி.) வேண்டியிராத விஷயத்தில் - வேம்பான விஷயத்தில். ஒருநாள்தானென்றது - ஒருநாளாகிலுமென்றபடி.

ஒருநாளாகிலுமமையு மென்றது - உனக்கு வேம்பானாலும் வேப்பங்குடிநீர் போலே ஸ்வீகரிக்கலாமென்றபடி. இத்தால் - உனக்குக்கைப்பயம், எனக்கு இனித்தானத்தைச்செய்யவேணுமென்று ப்ரார்த்திக்கிறாளென்றதாய்த்து. பரார்த்தமாக வாகிலும் செய்யவேணும் என்னும் நினைவுவேண்டாவோ என்னும் ஶங்கையயநுவதித்து, “அகலத்தால்” என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவ்வொருநாளித்யாதி.)

அநுவாதபூர்வகம் மேலுக்கவதாரிகை (நெஞ்சையித்யாதி.) கீழ்ப்பண்ணின ப்ரஶ்நத்துக்குத்தரம் (ஆர்த்தத்வநிகேளாமைக்காகவென்றது.) இவ்வர்த்தம் இந்த பக்ஷத்தில் ஸலிக்குமோ வென்ன வருளிச்செய்கிறார் (க்ஷத்ரியைரித்யாதி.)

(திருமெய்யமலையாளா) திருமெய்யத்தில் நீசாய்ந்தருளிற்று எங்களுடைய ரக்ஷணீயமாகவன்றோ. அம்மங்கியம்மாளுடைய சரமதசையிலே, நஞ்ஜீயரறியவெழுந்தருளினவர், அவர்படுகிறக்லேசத்தைக்கண்டு, "இங்குத்தை ஆசார்யஸேவையும் பகவத்குணங்களோடே போது போக்கினபடியுமெல்லாங்கிடக்க, அல்லாதாரைப்போலே இப்படிபட வேண்டுவதே!" என்ன; "'நீயாளவளையாளமாட்டோமே' என்றன்றோ-பகவத்பரிக்ரஹமானால் க்லேசப்பட்டே போமித்தனைகாணும்" என்றார்.

---

பின்னை நீரும் அவ்வவதாரத்திலே வந்துதவிற்றிலீரேயென்ன (திருமெய்யமலையாளா) அவ்விழவு தீர்க்கைக்காகவன்றோ திருமெய்யத்திலே வந்து சாய்ந்தருளிற்று. இருந்தபடியால் உன்பரிக்ரஹமாகையும் கையில்வளை தொங்குகையு மென்றொரு பொருளுண்டோ. இப்போது தன்னாற்றாமையாலே யொன்றைச்சொல்லுகிறாளத்தனைபோக்கி ஒருக்காலும் கையில்வளை தொங்குகைக்கு விரகில்லைகாணும். கிட்டினால் தானே ஹர்ஷத்தாலே பூரித்து நெரிந்திற்றுப்போம்; பிரிந்தானில் தானே கழன்றுபோம். உன்னுடையபரிக்ரஹமாய்எங்களுடைய ஸ்த்ரீத்வங்கொண்டு நோக்குகையென்றொருபொருளுண்டோ.

அம்மங்கியம்மாளுடைய சரமதசையிலே நஞ்ஜீயரறியவெழுந்தருளினவர், அவர்படுகிற க்லேசங்களைக்கண்டு, "இங்குத்தை ஆசார்ய ஸேவைகளும் பகவத்குணங்களைக்கொண்டு போதுபோக்கினபடிகளுமெல்லாம் கிடக்க அல்லாதாரைப்போலே யிப்படி படவேண்டுவதே!" என்ன; "'நீயாள வளையாளமாட்டோமே' என்றன்றோ-பகவத்பரிக்ரஹமானால் க்லேசப்பட்டேபோமித்தனைகாணும்" என்றார்.

---

"நீயாள" இத்யாதிக்குக்கருத்து (இருந்தபடியாலித்யாதி.) இருந்தபடியாலென்றது-நீ மெய்யமலையாளனாயவைத்தும் என்முலையாளஒருநாளாளாதேயிருந்தபடியாலே என்றபடி. நீயென்னையாளவும் நானவளையாளவும் இருவரும் மாட்டோமே யென்று ஸம்ஷார்யமாகையால், அவனிவளையாளமாட்டினால்அத்தால்இவள் இவ்வளையை ஆளவல்லளோவென்ன; வ்யாக்யாதாபரிஹரிக்கிறார் (இப்போதித்யாதி;) ஆற்றாமையால் சொல்லும்பாசுரமத்தனையென்றுகருத்து. நான்திருமெய்யமலையாளனாய்உன்போல்வார்க்குவந்திருக்கிறேனென்றறிந்துவைத்து, "உனைகலத்தாலாளாயே" என்று நான்மற்றுச்சொல்லுகை உன்ஸ்த்ரீத்வத்துக்குச் சேருமோவென்னும் ஸங்கைக்குப் பரிஹாரமாக, "நீயாளமாட்டோம்" என்கிறாளென்று தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடைய வித்யாதி;) நீயாளுகையாலே நாங்களவளையாண்டிருக்க மாட்டோமென்று ஸம்ஷார்யம். இத்தால் - குணாதிகவிஷயமாகையால் ஆறியிருக்கமாட்டோமென்கை.

"வளையாளமாட்டோமே" என்கிற அவதாரணத்துக்கு - பகவத்பரிக்ரஹமானார்க்கு துஃகமேசேஷிக்குமென்று கருத்தாய், அதுக்கு ஸம்வாதம்காட்டுகிறார் (அம்மங்கியித்யாதி.) இப்படி படவேண்டுவதே என்றது - ஆசார்யஸேவை, பகவத்குணாநுபவம், இவையே காலக்ஷேபமாகவிருக்கிற உமக்கு, அதுக்கவகாசமில்லாதபடி ஸம்ஸாரிகளைப்போலே நோவுபடவேண்டிற்றேயென்கை.

மூ.—மையிலங்கு கருங்குவளை மருங்கலரும் வயலாலி
நெய்யிலங்குசுடராழிப்படையானை நெடுமாலைக்
கையிலங்கு வேற்கலியன் கண்டுரைத்த தமிழ்மாலை
ஐயிரண்டுமிவைவல்லார்க் கருவினைகளடையாவே ௧௦.

ப-உரை.—கையிலங்குவேல்கலியன் - ப்ரகாசிக்கிறவேலைக்கையிலேயுடைய ஆழ்வார், மையிலங்குகருங்குவளை - அஞ்சனம்போல் விளங்கும் கறுத்த குவளைமலர்கள், மருங்கு - பார்ச்வத்திலே, அலரும் - விகஸியாநின்றுள்ள, வயல் - கழனி சூழ்ந்த, ஆலி-திருவாலியிலேயிருக்கிற, நெய் - கூர்மையுடைத்தாய், இலங்கு - விளங்காநின்ற, சுடர் - புகரையுடைய, ஆழிப்படையானை நெடுமாலை - திருவாழியைக் கையிலேந்திய ஸர்வேச்வரனை, கண்டு - எதிரில் கண்டு, உரைத்த-அருளிச்செய்த, தமிழ்மாலைஐயிரண்டும் இவைவல்லார்க்கு - தமிழ்த்தொடையாகிய இப்பத்தும் நன்றாக அறிய வல்லவர்களுக்கு, அருவினைகள் - துஷ்கர்மங்கள், அடையாவே-சேரவேமாட்டா என்று நிச்சயிக்கிறார். ... ... ... ... ... (௧௦)

புறப்பட்டபின்பு, நஞ்ஜீயர், பிள்ளையைப்பார்த்து, "முடிகிற விவ்வளவிலு மிவ்வார்த்தைசொல்லுகிறது - விச்வாஸத்தின் கனமான ஹாவபந்யத்திலூற்றமிறே" என்றருளிச்செய்தார்.

ஆக, இப்பாட்டால் - ப்ராப்ய நிஷ்கர்ஷமும், ருசியுடையாரான படியும், ஶரண்யனானவனுக்கு ரக்ஷகத்வம் கண்ணழிவற்றபடியும், இத்தலையி லபேக்ஷைகுறைவற்றிருக்கிறபடியும், இவையெல்லாவற்றையும் சொல்லுகிறது. (நிலையாளா) என்கையாலே-ப்ராப்யமென்னுமிடம் சொல்லிற்று; (மரமெய்த) என்கையாலே-ரக்ஷகத்வம் கண்ணழிவற்றபடியும், இத்தலையிலபேக்ஷை குறைவற்றிருக்கிறபடியும், இவையெல்லாவற்றையும் சொல்லுகிறது. ... ... ... ஸ.

புறப்பட்டபின்பு, நஞ்ஜீயர், பிள்ளையைப்பார்த்து, "முடிகிறவிவ்வளவிலேயுமிவ்வார்த்தைசொல்லுகிறது - விச்வாஸத்தின் கனமான ஹாவ வெங்யத்திலூற்றமிறே" என்றருளிச்செய்தார்.

ஆக, இப்பாட்டால் - ப்ராப்யநிஷ்கர்ஷமும், ருசியுடையார்படியையும், ஶரண்யன்படியையும், அவனுக்கு ரக்ஷகத்வம் கண்ணழிவற்றிருக்கிறபடியையும், இத்தலையில் அபேக்ஷைகுறைவற்றிருக்கிறபடியையும், இவையெல்லாவற்றையும் சொல்லுகிறது (நிலையாளா) என்கையாலே - நித்யகைங்கர்யம் பெறுகையே ப்ராப்யமென்னுமிடம் சொல்லுகிறது; (வேண்டாயேயாகிலும்) என்கையாலே - உபாயஹாவமு மவன்பக்கலிலே யென்னுமிடம் சொல்லிற்று; (என்முலையாளவொருநாள்) என்கையாலே - ருசியுடையார்படி சொல்லிற்று; (சிலையாளா) என்கையாலே-ஶரண்யனைசொல்லிற்று; (மரமெய்த) என்கையாலே-ரக்ஷகத்வம் கண்ணழிவற்றிருக்கிறபடியையும், இத்தலையிலபேக்ஷைகுறைவற்றிருக்கிறபடியையும், இவையெல்லாவற்றையும்சொல்லுகிறது.

"க்லேஶப்பட்டேபோமித்தனை" என்னப்போமோவென்ன ; ஹாவபங்யத்திலுறைப்பாலே அங்ஙன்சொன்னதென்று கருத்தை வெளியிட்டபடியையுங் காட்டுகிறார் (புறப்பட்டவித்யாதி.) ... ... ... ... ... க.

பத்தாம்பாட்டு. (மையிலங்கித்யாதி) மைபோலேவிளங்காநின்ற கருங்குவளையானது பர்யஸ்தத்திலே அலருகிற வயலையுடைய திருவாலி. (நெய்யித்யாதி) நெய் - கூர்மை. கூர்மையையுடைத்தாய் விளங்காநின்ற புகரையுடைய திருவாழியைக்கையிலேயுடைய ஸர்வேச்வரனை.

பத்தாம்பாட்டு.—(மையிலங்கித்யாதி) இதுவாய்த்து பயிரேறுதே தரிசான நிலமிருக்கும்படி. ஊரில்தரிசுகிடக்கும் நிலமிருக்கும்படியிதுவாய்த்து. மையானது மிகவும் விளங்காநின்றுள்ள கறுத்தகுவளைப்பூக்களலர்ந்து கிடக்குமாய்த்து பர்யஸ்தங்களையுடைய. நாள்செல்ல நாள் செல்லக்குறைந்துவருகையன்றிக்கே நிறமுஜ்ஜ்வலமாகாநின்றுள்ளகருங்குவளைகளானவை அலருகிற பர்யஸ்தங்களையுடைத்தான வயலையுடைய திருவாலி. (நெய்யிலங்கித்யாதி புறம்பு அவையும் உள்ளில் அவனுடைய நிறமுமாய் முன்னடிதோற்றுதாய்த்து கையில் திருவாழியன்றாகில். (நெய்யிலங்கித்யாதி) வடிவிலிருட்சிக்கும், குவளைப்பூவால்வந்த விருட்சிக்கும், கையில் திருவாழியால்வந்த வொளியல்லவாகில் முன்னடி தோற்றுதுகாணும். (நெடுமாலை) தூதுவிடவும் வார்த்தைசொல்லவும் மாட்டாதே நிற்கிறன்போலேகாணும். தூதுவிடமாட்டாதபடியாய்த்து அத்தலைபட்டுக்கிடக்கிறது. இத்தலை "ஸர்வ0மாஸா0நஜீவிஷ்யே" என்றால், "நஜீவேயம்" என்னுமித்தலையிறே அத்தலை.

பத்தாம்பாட்டு.— (மையித்யாதி). உட்கருத்தை முந்துறவருளிச்செய்கிறார் (இதவித்யாதி.) செங்கமலங்களுண்டாயிருக்கலாமே, இதுவே என்று சொல்லுகைக்கு நிமித்தமென்னென்னவருளிச்செய்கிறார் ஊரிலித்யாதி;) தேசவிப்ரக்ருஷ்டமான பரமபதமன்றிக்கே, காலவிப்ரக்ருஷ்டங்களான விபவங்களுமன்றிக்கே, கரணவிப்ரக்ருஷ்டமான அந்தர்யாமியுமன்றிக்கே, தாமிருந்ததிருவாலியிலிருந்தவனைக்குறித்துத் தூதுவிடுகையும், அவன் முன்னிலையாகத் தோற்றினதுகக்கொண்டு தன் உடைமையையறிவிக்கையுமாம்படி ஜ்ஞாநவிபாககார்யமான அஜ்ஞாநம் விளைந்தமைக்குத்திருஷ்டாந்தமாக, குவளைகளின ஸம்ருத்தியைச்சொல்லுகிறாரென்று கருத்து. ஒருபடிக்கைகயில் பிரிவுபிறந்தாப்போலே இவர்க்கு இத்திருமொழியிலுறவும்; அத்தையட்டுக்கொண்டு வ்யாக்யாதாக்களுபடுகிறாரென்று கொள்ளுவது. "ஊர்" என்கையாலே - ஆழ்வார்தாமப்படியிருக்கிறாரென்று ஸூசிதமாகிறது; இங்ஙனன்றாகில் இரண்டுவாக்யமும் புநருக்தமாயிறே. இவ்வாழ்வாருடைய லக்ஷகார்யமான அஜ்ஞாநத்தின் ஸீமாவதிக்குப்போரும்படி குவளைக்குள்ள நிறத்தின் மிகுதியைச்சொன்னத்தை நியாமகமாகக்காட்டுகிறார் (மையானதித்யாதி.) "குவளை" என்றபோதே கருமைதோற்றுமே, இங்ஙனிருக்கச்செய்தேயும், "கரும்" என்றும் "மையிலங்கு" என்றும் விசேஷணத்வயமிடுகையாலே தம்முடைய உமைக்குத்ருஷ்டாந்தமாகச் சொன்னாரென்னுமிடம் ஸூசிதமிறே யென்று திருவுள்ளம். வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (நாளித்யாதி. இப்போது * சுடராழியையிட்டு விசேஷிக்கைக்கு உட்கருத்தருளிச்செய்கிறார் (புறம்பித்யாதி.) இத்தால் - விச்லேஷித்தாராக வெண்ணியிருக்கிற தம்படியாலும் அவனும் வ்யாமோஹாதிசயத்தாலே "*மயர்வறமதிநலம்பெற்றவர்இங்ஙன்விச்லேஷித்துப் படுகிறபாடுகாண்கையாலே நான்றானும் விச்லேஷித்தேனாகவேணும்" என்றுகலங்கித் தூதுவிடவும் மாட்டாதே உருவுவெளிப்பாட்டால் வாய்விடவும்மாட்டாதே யிருக்கிறதுசையிலே, நெஞ்சறியுமவனை திருவாழியாழ்வான் இருவருக்கும் வெளிச்சிறப்பைக் கொடுத்தானென்றநுஸந்திக்கிறாரென்று திருவுள்ளம். மேல்வாக்யத்தைவிவரிக்கிறார் (வடிவிலித்யாதி.)

**(கையிலங்கித்யாதி) கையிலே விளங்காநின்ற வேலையுடைய ஆழ்வார் ஸர்வேஶ்வரனைக்கண்டுசொன்ன தமிழ்மாலைபத்தும் வல்லவர்களுக்கு அருவினைகள் சேரா. ... ... ... ... ௰.**

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

---

(கையிலங்கு)ஹட்டர்,"ஸர்வேஶ்வரன் திருமங்கையாழ்வார்க்குப் பக்கக் குதிரையேறிப்போமாகாதே!,அவன்கையில்திருவாழிஅழகுக்குடலாக வொப்பித்திருக்குமத்தனை, இவர்கையில் வேல் ஶத்ருநிரஸநத்தாலே கறைகழுவ அவஸரமின்றிக்கேயிருக்குமாய்த்து." அவன் ஶேஷித்வ ஸூசகமாகத் திருவாழியைப்பிடித்தாப்போலேயாய்த்து இவர் ஶேஷத்வஸூசகமாகத் திருவேலைப்பிடித்தபடி. (கண்டுரைத்த) உக்தார்க்கு வார்த்தை சொன்னபடிகேட்டு அவன் முன்னேவந்து நிற்கக்கண்டு சொன்ன. (அருவினைகளடையாவே) அவனைப்பிரிந்து நோவுபட்டுத் தூதுவிடுகைக்கு ஹேதுவான பாபங்கள் கிட்டாது. ஸர்வேஶ்வரனைப் பிரிந்து தூதுவிடப்புக்கு அதுதானுங்கூட மாட்டாதேபடும் வ்யஸநம்படவேண்டா இப்பத்தையுமப்யஸித்தார்க்கு.தூதுவிடுவானவன்றாய்த்து. ... ... ... ... ... ௰.

அடிவரவு.— தூவிரிய பிணி நீர் தான் வாள் தாராய
கொண்டு குயில் நிலை மையிலங்கு கள்வன்.

திருமங்கையாழ்வார் திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

---

இவ்வாழ்வார் திருவாலியம்மானை விஶ்லேஷித்தாராகக்கொண்டு நோவுபடுகிறவேளையிலே திருவாழியாழ்வான் செய்யூட்டிய புசர்படைத்துத் திருவுள்ளத்தைக் குடிகொள்ள, இவர் அவ்வழகில் கண்வைத்து அவனுள்ளத்தையுங்கண்டு ஈஜதார்யராய், "இச்சேர்த்திக் கென்வருகிறதோ" என்று கையில் வாள்பற்றியிருக்கிறரென்று விவக்ஷித்து, "செய்யிலங்கு" என்று விஶேஷணமிடாமையாலே ஶலித்தகறையைச் சொல்லுகையாலே இப்படிசொல்லலாமென்று ஸம்வாதம் காட்டுகிறார் ( ஹட்டரித்யாதி, இருக்குமாய்த்து என்னுமளவும். ) ஶத்ருநிரஸநத்துக்குடலாக வேலைப்பிடித்தாரென்றருளிச்செய்து, சேவகனுக்கு வேல்நிரூபகமென்று ஸத்ஸம்ப்ரதாயம் தாத்பர்யாந்தரமருளிச்செய்கிறார் ( அவனித்யாதி. ) பாட்டுக்களெல்லாம் கண்டு சொன்னதுகளன்றேயென்ன வருளிச்செய்கிறார் (உக்தார்க்கித்யாதி.) ... ... ... ... ... ௪0.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

---

மூன்றாம்பத்து - ஆறாந்திருமொழி ஸம்பூர்ணம்.

ஆக, திருமொழி - ௨௬ - க்கு, பாட்டு - ௨௬0.

## மூன்றும்பத்து - ஏழாந்திருமொழி - கள்வன்கொல். ப்ரவேசம்.

“திருமெய்யமலையாளா நீயாளவளையாளமாட்டோம்” என்று அவனையின்னாதாக; அவனும், “இப்படி நம்மையின்னாதாம்படி நோவுபடவிட்டோமாகாதே” என்று லஜ்ஜித்து, “என்முலையாள வொருநாளுன்னகலத்தாலாளாயே” என்று இவளாசைப்பட்டபடியே வந்து தன் மார்விலே இவளையாரவணைத்து, இவளுடனேகலந்து, “ஒருநாள்” என்றிவள்சொன்ன ஆற்றாமையைத் திருவுள்ளம்பற்றி, “நிலையாளா நின்வணங்கவேண்டாயேயாகிலும்” என்றதுவும் திருவுள்ளத்திலேகிடந்து, இனி யிவளைவிடப்போகவொண்ணாது என்று இவளையுங்கொண்டு ஒருவரறியாதபடி அர்த்தராத்ரத்திலே புறப்பட்டுப்போக, திருத்தாயார்

---

தூதுவிட்டு உகந்தார்க்குச்சொன்ன பாசுரம் நெஞ்சிலே யூற்றிருந்த அத்தைபாவித்து, பாவநாப்ரகர்ஷத்தாலே அவன்றன் முன்னின்றுகைக்கொண்டு அவனுக்கு வார்த்தைசொல்லும்படி பிறந்த தசாவிசேஷம் அவன் திருவுள்ளத்திலேபட்டு, அதுபொறுக்கமாட்டாதவனுகையாலே தானேவந்து முகங்காட்டி, இவளைக்கூடக்கொண்டு போக; ஆதிவாஹிகரைவரக்காட்டிக்கொண்டுபோம் சிலரை, பெரிய திருவடியை வரக்காட்டிக்கொண்டுபோம் சிலரை, “நயாமி” என்று தானே கொடுபோம் சிலரை; அப்படியே, தானேவந்து அத்தவாளத் தலையாலே மறைத்துக் கொண்டுபோக; அந்தரங்கமாகக்காத்துக்கொடு கிடந்த திருத்தாயாருணர்ந்து படுக்கையிலிவளைக் காணாமையாலே, போனவள் படிகளையும், தனக்கவளையொழியச் செல்லாமையையும், எதிர்த்தலையிப்படி படவேண்டும்படியிருக்கிற விவளுடைய வைலக்ஷண்யத்தையும், தன்னிழவையும் சொல்லிக்கூப்பிடுகிறாளாய்ச் செல்லுகிறது.

---

கள்வன்கொல் ப்ரவேசம்.— கீழ்த்திருமொழியில் பாவநாப்ரகர்ஷத்தாலே “என்முலையாள - உன்னகலத்தாலாளாயே” என்று ப்ரார்த்திக்கச்செய்தேயும் அவன் செய்யாமலிருக்கையால், அவனை “ஆளமாட்டோமே” என்றுகிடந்த இப்பெண்பிள்ளை, இத்திருமொழியில் பின்தொடர்ந்து போனாளாகக்கொண்டு திருத்தாயார் சொல்லுகைக்கு ஸங்கதி யென்னென்ன; வ்ருத்தவர்த்திஷ்யமாண கதாக்ரமேவ வருளிச்செய்கிறார் (தூதுவிட்டித்யாதி.) இத்தால்-மாநஸாநுபவத்தில் ஒரு வைஶத்யத்தாலே அவன் வந்தானாகவும், தன்மகளும் வயலாலிமணவாளனும் ஒருபடுக்கையில் சேர்ந்தார்களாகவும், தான் கிட்டக் காத்துக்கொண்டிருந்தாளாகவும், இங்ஙனிருக்க தான் கண்ணுறங்க, அப்போது “நிலையாளா நின்வணங்கவேண்டாயேயாகிலும்” என்று இவள்சொன்ன இழவு திருவுள்ளத்திற்பட்டு அதுதீர இப்பெண்பிள்ளையைக்கொண்டு புறப்பட, படுக்கையிற்காணாமல் தானும்புறப்பட்டு, கண்டுகொண்டிருக்கவே கொண்டுநடந்தான் என்றொரு தசைபிறந்து அநுபவிக்கிறாளென்றதாய்த்து. (முகங்காட்டி) என்றவநந்தரம், ஸம்ஶ்லேஷித்து என்றுஶேஷம். தானேவந்து கொடுபோனபடியைத்ருஷ்டாந்தபூர்வகம் விவரிக்கிறார் (ஆதிவாஹிகரையித்யாதி.) “கள்வன்” என்றத்தைப்பற்ற (அத்தவாளத்தலையாலேயித்யாதி.) அத்தவாளத்தலை - தலைமுன்தானை.

**உணர்ந்து படுக்கையைப்பார்த்து, படுக்கையிற்காணாதபடியாலே, "இவளைக்கொண்டிவன்போனான், எவ்வழியேபோய் எங்கேபுகுகிறார்களோ,**

---

**அவனிவளைக்கொடுபோகையாவதென்,** — ஸ்வாபதேசத்திலோடுகிறதென்னென்னில்; மாநஸாநுபவமாயிருக்கச்செய்தே பாஹ்யஸம்ஸ்லேஷம்போலே யிருக்கப்பண்ணிக்கொடுத்ததொரு வைசத்யத்தைச்சொன்னபடியிறே. [ஸ்த்திதேமநஸி] * நின்றவாநில்லாநெஞ்சும் ஓரிடத்திலே நிற்கப்பெற்று, உபயாத்மகமான சரீரமுமங்கேயிங்கேசிதிலமாகாதே ஒருபடிப்பட்டு, யாதுக்களுமொன்று மடங்கி ஒன்றாநிமிருகையன்றிக்கே ஸாம்யாவஸ்தையையடைந்து, இப்படி சரீரத்திலே யொருலாகவம்பிறந்து ஸத்த்வமுத்ரிக்தமான ஸமயத்திலே, ஆரேனுமொருவனாகவுமாம், தான் கிழ்ஸம்ஸாரியாய் நின்ற நிலையையும், இத்தைக்கழித்துக்கொள்ளுகைக் கீடாயிருப்பதொரு கைம்முதல் தன்பக்கலின்றிக்கேயிருக்கிறபடியையும், அவனைப்பற்றியே கழிக்கவேண்டும்படியிருக்கிறபடியையும், இதில்நின்றும் கரையேற்றுகைக்கீடான சக்தியும் ப்ராப்தியுமவன்பக்கலிலே யுண்டாயிருக்கிறபடியையு மநுஸந்தித்து அவன்பக்கலிலே ந்யாஸத்தைப்பண்ணுவது. பின்னை பேற்றுக்கு இவ்வளவமையுமோவென்னில்; சரீரத்தைப்பற்றி வருமவற்றுக்கு ஆத்மாஸுகது:க்காநுபவம் பண்ணுமாப்போலே, இவற்றுக்கு வருமவை தன்னதாம்படி விச்வசரீரனுமாய், இவன்றன்னையுமொருக்காலநுஸந்தித்தால் பின்பிவனைப்போலே மறக்கைக்கடியான ஜந்மநிபந்தநமான கலக்கமின்றிக்கே யிருக்குமவனுமாகையாலே அவ்வளவமையும். இப்படி ஒருநாளநுஸந்தித்தவன் ப்ரக்ருதிவச்யனாய் பின்பு தன் தேஹயாத்ரையிலே அந்யபரனாய்த்திரிந்து பின்பு ஸ்மரிக்கைக்குங்கூட யோக்யதையில்லாதபடி * காஷ்டபாஷாண ஸந்நிபனாய்க்கிடக்குமன்று, இவனைப்போலே ஒருக்கால் ஸ்மரித்தால் பின்பு விஸ்மரிக்குமவனன்றிக்கேயிருக்கிற நான் ஸ்மரித்தபடியே யிருப்பன்.

---

"இவளைக்கொடுபோகையாவதென்" என்றத்தை விவரிக்கிறார் (ஸ்வாபதேசத்திலித்யாதி.) * ஸந்நிஷ்டாரூமாகக் கீழ்ச்சொன்ன ச்லோகத்துக்கு வ்யாக்யாநம் (ஸ்த்தித இத்யாதி.) மநஸ்ஸ்வாஸ்த்யாதிகளைச் சொன்னவித்தால்பலித்த அர்த்தத்தையருளிச்செய்கிறார் (இப்படிசரீரத்திலேயித்யாதி.) "ஸ்த்திதேமநஸி" என்று இப்போது சொல்லுகையால்-முன்பு விஷயப்ரவணமாயிருந்தமை தோற்றுகையாலே, அத்தைப்பற்றிவரும்ஸ்மரணவிசேஷத்தையும், "சரீரே-ஸுஸ்வஸ்தே" என்கையால்தோற்றின பூர்வத்திலஸ்வஸ்த்ததையால்பலித்தகர்மயோகாரோக்யோகத்தைப்பற்றிவரும்ஸ்ம்ருதியையும், "மாம்" என்றபதத்தில்விவக்ஷிதமான உபாயபாவத்தைப்பற்றிவரும்நினைவையும், * அஜபதத்திலும் * விச்வரூபபதத்திலும் அர்த்தமான சக்தி ப்ராப்திகளைப்பற்றிவரு மநுஸந்தாநத்தையும் - "ஸ்மர்த்தா" என்றபதத்துக்கு அர்த்தமாகத்திருவுள்ளம்பற்றி, அத்தால் பிறந்த நைர்பர்யாநுஸந்தாநத்தளவு மர்த்தமாகவருளிச்செய்கிறார் (பின்னையித்யாதி, அமையுமென்னுமளவும்.) "தம்" என்றத்தால் ஸச்சித்தாக ஒருநாள் ஸ்மரித்து மறந்திருந்தவனென்று அர்த்தமருளிச்செய்கிறார் (இப்படியொருநாளித்யாதி.)

மூ.—கள்வன்கொல்யானறியேன் கரியானொருகாளைவந்து
வள்ளிமருங்குலென்றன் மடமானினைப்போதவென்று
வெள்ளிவளைக்கைபற்றப் பெற்றதாயரைவிட்டகன்று
அள்ளலம்பூங்கழனி யணியாலிபுகுவர்கொலோ. க.

ப-ரை.—கள்வன்கொல் - கள்ளனோ உடையவனோ, யான் அறியேன்-நானறியமாட்டேனே, கரியான் ஒருகாளை வந்து - கறுத்தவனாயொருயௌவநபுருஷன் வந்து, வள்ளிமருங்குல - நுண்ணிடையையுடைய, என்தன் மடமானினை-நல்ல யுவதியான என்பெண்ணை, போது என்று - வாவாவென்று த்வரைபண்ணி, வெள்ளிவளைக்கைபற்ற-வெள்ளிவளைகளணிந்த கையைப்பிடிக்க, உடனே அவள், பெற்ற தா[யி]யரை-பெற்றதாயான என்னை, இட்டு அகன்று-தனியே கடக்கவிட்டுப்போய், ஒன்று சேர்ந்த இருவரும், அள்ளல் அம்பூம்கழனி-அழகிய பூக்கள்நிறைந்த நீர்நிலங்களை யுடைய, அணி ஆலி-புகழ்ந்த ஆபரணமான திருவாலியிலே, புகுவர்கொலோ - புகுவார்களோ! என்னவோ! என்று தாயார்தசைபனறிட்டுக்கொண்டு அருளிச்செய்கிறார்.

அடியேனுக்கு ஒருவார்த்தை யறிவியாதேபோனாள், நான்றான்[மு]டி கட்டிப்பெற்றிலேன், இருவருமிருவர்க்கு மூமத்தங்காயாய்த்து, என் செய்கிறார்களோ, வழியிலே யென்பிறகவிறதோ!'' என்று திருத்தாயார் வயிறுபிடிக்கிறாள். ... ... ... ...

[மத்பக்தம்] ஸ்மரிக்கைக்கு யோக்யதையில்லாதவன்று ஸ்மரித்திலே யொன்று கைவிடுத்தவ ஹூராயனையோ அவன்பற்றிற்று. [அஹம் ஸ்மராமி] ஐச்வர்யகாமனுக்கும், ஆத்மப்ராப்திகாமனுக்கும், ஹக்திகாமனுக்கும ¶, அந்திமஸ்ம்ருதியுண்டு; இவன் முதலிலே துடங்கி ஸர்வ ஸந்யாஸம் பண்ணினவனாகையாலே இவனுக்காக நான்நினைப்பன். [நயாமி பரமாம் கதிம்] இப்படிநினைத்து நானே கைதொடனாய் வந்து கொடுபோவன். ச்லோகத்வயமென்று, எம்பெருமானுடைய ஸர்வஸ்வமிறே யிவை. ஆளவந்தார் ஸ்ரீபாதத்திலே வர்த்தித்த வைஷ்ணவனை அந்திமஸமயத்தில்பட்ட க்லேசத்தைக்கண்டு பெரியநம்பிக்கும் எம்பெருமானார்க்கும் பிறந்த ஸம்வாதத்தை† நினைப்பது. "மத்பக்தம்" என்றிறேயிடரும் ஹக்திமானையே சொல்லிற்றாலோ, ப்ரபந்நனைச் சொல்லிற்றென்கைக்கு நியாமகராரென்ன ; அவனுக்கு அந்திமஸ்ம்ருதி விதிக்கிற பராஸ்த்ரம். ... ... ... ...

"மத்" என்கையாலே ஹேவதாஷரங்களை வ்யாவர்த்திக்கிறானென்று அருளிச் செய்கிறார் (ஸ்மரிக்கைக்கேத்யாதி.) அந்திமஸ்ம்ருதிதானு மிவனுக்கு வேண்டா, இவன் ஸந்யாஸம் பண்ணுகையாலே நானே அந்தஸ்ம்ருதிதன்னையுமேறிட்டுக் கொள்ளுவனென்கிறானென்று அருளிச்செய்கிறார் ( ஐச்வர்யேத்யாதி. ) ஹக்திகாமனென்றது - ஹக்திஸாத்ய ஹகவத்ப்ராப்திகாமனென்றபடி. ஊழாமி என்னாதே, "நயாமி" என்கையாலே ஹலித்தஸஹாயஹாவத்தை யருளிச்செய்கிறார் (இப்படி நினைத்தித்யாதி.)(என்று) என்றவநுஸந்தரம், பேராய் என்றபேக்ஷம். ...

¶ "ஹக்திமானுக்கும" என்றுசில ஸ்ரீகோசங்களில் காணப்படுகிறதாயினும், பாக்ஷ்யபாடம்அரும்பதத்துக்குச்சேரும். †"ஸம்மோஹத்தை" என்றும்காண்கிறது.

முதற்பாட்டு. (கள்வன்கொலித்யாதி) கள்ளனோ அறிகிறிலேன். கறுத்த நிறத்தையுடையான்

---

முதற்பாட்டு.— (கள்வன்கொல்) "சோரேண" என்று இவளுடைய ஆத்மாபஹாரத்தோபாதியாயிருக்கிறதாய்த்து. உடையவனாகிலுமென்? தன்னுடைமை கொண்டுபோனதும் என்னதென்றுபோந்த வாஸனையாலே. (கொல்) உடையவன் உடைமைகொண்டுபோனானாகையாலும், காணக்கொடுபோகையாலும், கள்வன் என்னப்போகிறதில்லை ; ஆகிலும், கள்வன் என்னலுமாயிராநின்றது மமகாரத்தினுற்றத்தாலே. (யானறியேன்) காத்துக்கிடக்கிற தானறியாளாகில் கொண்டுபோனவனைப்போலேகாணும் கேட்பது.

அறியாயாகிலும் அறிந்த அம்ஸத்தைச் சொல்லலாகாதோவென்ன (கரியானித்யாதி) பிள்ளையமுதனார், "கூடு கிடக்க வாளையுருவிக்கொடு போவாரைப்போலே, தாயாரனைத்துக்கொடுகிடக்கக் கொண்டுபோனான்" என்று நிர்வஹித்தார் ; அத்தைபட்டர்கேட்டருளி, "அத்தனை பணிப்படவேண்டாகாண், சிலகள்ளர்விளக்குக்களையும்பிடித்து 'பிள்ளை, பிள்ளை' என்கிறவளவிலேகொண்டுபோமாப்போலே கொண்டுபோனான் காண்" என்றருளிச்செய்தார்.

முதற்பாட்டு.— வயலாலிமணவாளன வந்துகலந்து கைக்கொண்டுபோனானாகில், அவனை "கள்வன்" என்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (சோரேணேத்யாதி.) "என்றன் மடமானினை" என்று திருத்தாயார் பண்ணின மமகாரத்தை யருளிச்செய்கிறார் (என்னதென்றித்யாதி.) ஆனால் "கொல்" என்று ஸம்சயிப்பானென்னென்ன வருளிச்செய்கிறார் (உடையவனித்யாதி.) "யானறியேன்" என்கைக்கு இனி அறியத்தக்காருண்டோ, இது ஆரைக்கேட்கிறாளென்றருளிசெய்கிறார் (காத்தித்யாதி.) "யானறியேன்" என்கையால் - அறிந்தாரைக்கேட்கை தோற்றுமென்று திருவுள்ளம். இனி அவனைத்தானே கேட்கிறாளாகவேணுமென்று ரஸோக்தி.

இப்படி அவனையே கேட்கிறாளாய்க்கொண்டு இவள் புறப்பட, அசலகத்து நங்கைவந்து ப்ரஸ்நம்பண்ணுகிறாளாக, மேல் "இட்டகன்று" என்னுமளவுக் கவதாரிகை யருளிச்செய்கிறார் ( அறியாயாகிலுமித்யாதி. ) கரியான் காணக்கொடு போகச்செய்தே இவள் கொடுபோகவொட்டுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (பிள்ளையமுதனாரித்யாதி.) கூடு - கத்தியுறை. அனைத்துக்கொடுகிடக்க வென்றது - பெண்ணிடத்தில் மமதையாலே கொடுபோக வொட்டாமல் கட்டிக்கொண்டிருக்க வென்றபடி. யத்வா, பிள்ளையமுதனார்க்கு, பெண்ணும் தானுமாய்ப்படுக்கையிலே கிடக்க காணாதபடிவந்து அவன்கொடுபோனானென்று கருத்தாகவுமாம். இப்பக்ஷத்தில், "கரியான்" இத்யாதிகளும் "கைபற்ற" என்றதும - திருவாலிமணவாளன் மேல் பித்தேறினவள் தன்னைவிட்டுப்போகையாலே அவனே வந்தானாகவேணுமென்று ஊஹித்துச் சொல்லுகிறாளென்று நிர்வஹித்துக்கொள்வது. "இப்படியருமைப்படவேணுமோ, பர்யதோஹாரனாய் தானே கொண்டு நடந்தானென்னலாம்" என்னும் பட்டர்நிர்வாஹத்தையருளிச்செய்கிறார் (அத்தையித்யாதி.) பணிப்படவேண்டா - காணாமல்கொண்டுபோனானென்று சொல்லி இத்திருமொழியில் பதங்களுக்குப் பொருள்கட்டி அருமைப்படவேண்டாவென்கை. பிள்ளைபிள்ளையென்கிறவளவிலே-பிள்ளைபிள்ளையென்றுகூப்பிட்டுக்கொண்டுபின்தொடரச்செய்தேயென்றபடி.

ஒரு காலைவந்து. வள்ளியென்றும் மருங்குலென்றும் பர்யாயம். (வள்ளியித்யாதி) வல்லிக்கொடிபோன்ற இடையையும்

---

(ஒரு) வாய்புகுநீரிலே புக்காரைப்போலே, நிறத்தைச்சொல்லாநிற்கச் செய்தேயும் இன்னதென்று நிர்ணயிக்கமாட்டாதே, “கஶ்விஹஸ்தி”[ரு என்னுமித்தனையாய்த்து. (காலை) போனவிடம் அவன்குற்றமன்றென்கிறாள்; அவன்பருவத்தின்குற்றம். இவள்போனவிடம்பழி யென்று குற்றமாகச்சொல்லுகிற விவள்தனக்கொரு ப்ராப்தியின்றிக்கேயிருக்கச்செய்தே, அப்பருவத்தைச்சொல்லும்படியிறே அது இவள்தன்னையும் துவக்கினபடி. போன என்மகள்தானும் “இதுபழி” என்று நினையாமையில்லை; அநர்ஹம் பார்த்து மீளவொண்ணாதபடியான பருவத்தின் குற்றமென்கிறாள். வைரூப்யத்தைவிளைத்து விட்டார்கள் என்று முறைப்படச்சென்றவளிறே “தருணௌ” என்றாள் ;† பின்பு சொன்னது பூர்வவாஸநையே அநுவர்த்தித்தபடியாலே. அன்றாகில் தான் பட்டத்தை முறைப்படுகிறதுக்கு இது எங்கே உபயோகியாய்ச் சொல்லுகிறாள். நடுவுபிறந்தவற்றையும் ஸம்ஶ்லேஷத்தில் நடுவுபிறந்த விமர்த்தோபாதியாக நினைத்திருந்தாள். (வந்து) நிறமும் பருவமுமிவையாகில் ஸர்ப்பயாகத்தில் ஸர்ப்பங்கள்போலே தானிருந்தவிடத்திலே பெண்பிறந்தாரடையச்சென்று விழவேண்டும்படியிருக்க, வரவுமத்தலையிலேயானால் இவள் போகாதிருப்பளோ. ஆரேனுமாகவுமாம், ஸமவல்லாருமுண்டாகில் அத்தலையில் வரவல்லதில்லை.

(வள்ளியித்யாதி) அவனைக்கொடுவந்த விஶ்வாமித்ரனைச்சொல்லுகிறது. இவனுடைய அழகாய்த்து அவனையழைப்பித்தது. அவனுக்கு அநேகத்தைச்சொல்லிவைத்து இவனுக்கோரழகைச் சொல்ல அமைந்திருக்கிறதிறே; “மாநுங்க” என்று தொடங்கி அவனுக்கு அநேகத்தைச்சொல்லி, இவனை “கொங்கலரேலக்குழலி” என்னுமாப்போலே.

மாமியாரான தான் பருவத்தைச் சொல்லக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (இவள்போனவிடமித்யாதி.) மகள்தான் தன்னையும் விட்டுப்போகை பழியென்றறியாளோவென்ன (போனவித்யாதி.) அநர்ஹமுண்டானாலும் விடவேண்டாதபடியாயிருக்குமோ பருவமென்ன வருளிச்செய்கிறார் (வைரூப்யத்தையித்யாதி.) “தருணௌ” என்றவள் பின்புதன்வைரூப்யத்தைச் சொல்லிமுறைப்படுவானென்னென்ன வருளிச்செய்கிறார் (பின்பித்யாதி.) கொண்டாடினளென்கைக்கு ஜ்ஞாபகமென்னென்ன வருளிச்செய்கிறார் (அன்றாகிலித்யாதி.) ஆனாலும்நாஸிகாச்சேதத்தைமறந்து இங்ஙன்சொல்லக் கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (நடுவித்யாதி.) “வந்து” என்கையாலே-ஸ்வாபதேஶத்தில் பரகதஸ்வீகாரமேயுத்தேஶ்யமென்றுதோற்றுமென்கிறார் (ஆரேனுமித்யாதி.) வல்லிஎன்றது-“வள்ளி”என்றுகிடக்கிறதாய், அதுபோலேயிருக்கிறஇடையைவர்ணிக்கைக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனையித்யாதி.) அழகுஅழைப்பித்ததென்கைக்குநியாமகமென்னென்ன வருளிச்செய்கிறார் (அவனுக்கித்யாதி.)

---

† “பின்பும் பூர்வவாஸநையே” என்று சில ஸ்ரீகோஶங்கள்.

மடப்பத்தையுமுடையளாய், மான்போன்ற விழியையுடைய என் பெண்பிள்ளையை, போகஎன்று. (வெள்ளிவளைக்கையித்யாதி) வெள்ளிவளையிட்ட கையைப்பிடிக்கப்பெற்ற தாயரைவிட்டுப்போய்.

(என்றன்மடமானினை) என்மகளாவது, முக்ஷையாவது — தன்று ஸௌகுமார்யத்தையாதல், ஸ்த்ரீத்வத்தையாதல், போகிற வழியில் அருமையாதல், இவையொன்றையும் நினைக்கமாட்டாத முக்ஷையிறே. (என்றன்) அவன்வந்து கொடுபோகப்புக்கவாறே, "என்மகள்" என்று தானுமொருதலைபற்றுகிறாள். (போதவென்று) "உத்தமர்யமிமதூர" என்றாய்த்து. ஈர்யாஸ்காலைவந்து "போத, போத" என்றதாய்த்து. ஸர்வேச்வரன்பெறுகைக்கு இவன்பண்ணும் கர்மஜ்ஞானம்போலே, அவன்றனிவாய் பெறுகைக்கு பண்ணின ஸாதநானுஷ்டானங்கிறபடி. (வெள்ளிவளைக்கைபற்ற) உக்தியிலேயாகக் கண்டு ஸ்தப்தையாய்நின்றாள்; அவ்வளவிலேவந்து கையைப்பிடித்தான்; "நடரமாணிக்கீதாபாணிர்வால்யே வாலேநபீடித:" என்கிறபடியே — பிடித்த பிடியிலே "அங்கண்ணனுண்டவென்றுநாயிர்க்கோமிது" என்னும்படியாய்த்துப் பிடித்தது. ஏன்பு நெடுங்காலம் தாய்பக்கல் பண்ணின வாஸனை ஏதலடியிலேவந்து கழியும்படியாய்த்து பற்றினபடி. ‡ இடைச்சிகள் பொன்னையும் மாணிக்கத்தையுமழியமாறி வெள்ளிவளையாயிடுவது.

பற்றினபற்றிலேயாற்றமெல்லாவு போறுமென்னில் (பெற்றதாயரை) நான்வளர்த்துக்கொண்ட தாயோ நினைத்தபோது போகட்டுப்போகைக்கு. (இட்டு) போகட்டுப்போகாநின்றாலும், போகட்டேனென்னும் அநுதாபமும் நெஞ்சிலே கிடக்கவேணுமிறே. சிலஅழுக்குகளை போகட்டுப்போமாப்போலே போகட்டு. (அகன்று) தான் விட்டாலும் நமக்குத்தொடர்ந்து சென்று பற்றவொண்ணாதபடி கடக்கப்போய்.

(முக்ஷையாவது) என்றவநுஸாரம், "போத" என்கைக்கு ஹேது என்னுமிடம். காளையானவன்கருத்தறியும்படியான பருவத்தால் ஸௌகுமார்யத்தையும், "மடம்"என்றபதத்தால்ஸ்த்ரீத்வத்தையும்,"அள்ளலம்பூங்கழனி"என்றபதத்தையும் கடாக்ஷித்து முக்ஷையைவிவரிக்கிறார் (தன்னித்யாதி.) பிள்ளையுறங்கும் நிர்வாஹத்தில் முன்கினயோஜனையைப்பற்றவருளிச்செய்கிறார் (அவன்வந்தித்யாதி.) "உத்தமர்யமிமதூர" என்று — தன்கீழ்ஸ்த்ரீயைத் தானே ஸங்கோசமறவ்யவஹரித்தாப்போலே, தன்கீழ்ப்பெண்பிள்ளையைத்தான் "போத" என்றுவிமிர்த்தாளென்கை.

கீழ்த் தான் ஸாபராநுஸந்தாநம் பண்ணியிருக்க, கையைப்பற்றவானென்னென்ன (உக்தியிலேயித்யாதி.) கையைப்பிடித்தானுந்தும் தாய்க்கருத்தியிலிருக்க வொண்ணுதோவென்ன (நடரமாணிக்கீதிந்யாதி;) இளம்பருவத்தில் பிடித்த பிடியிலே அளவுபடப்பிடிக்கப்பட்ட தில்லையாய்த்து."கை" என்கையாலே - ஸம்ஸ்லேஷரஸமறிவிக்குமளவும்பற்றினபற்றுவிட்டானில்லையென்று தோற்றுகையால், அப்படி இவளையுமுண்டு கோதாக்கினனென்கிறு னென்று திருவுள்ளம்.

(போகைக்கு) என்றவநுஸாரம், க்ஷேஷணளைப்போலேயென்று போஷம். "அகன்று" என்று மேலிருக்கச்செய்தே, "இட்டு" என்றதுக்குக்கருத்து (போகட்டித்யாதி.)

‡ "ஐச்வர்யமில்லையோ, 'வெள்ளி' என்கிற தென்னென்ன யருளிச்செயகிறார் (இடைச்சிகளித்யாதி)" என்று அரும்பதாஸாரம்.

மூ.—பண்டிவனுயன்நங்காய் படிறன்புகுந்தென்மகள்தன்
தொண்டையஞ்செங்கனிவாய் நுகர்ந்தானையுகந்தவன்பின்
கெண்டையொண்கண்மிளிரக் கிளிபோல்மிழற்றிநடந்து
வண்டமர்கானல்மல்கும் வயலாலிபுகுவர்கொலோ. ௨.

(கடல்சூழ்ந்தித்யாதி) கடலாலே சூழப்பட்டிருப்பதாய், புறங்கள் பரம்பரந்தேயிருக்குமாப்போலே ஜாலர்வர்மங்கள்சேரும்படியான லங்கையைக்கடந்தான். மாலி, ஸுமாலி, மால்யவான்தொடக்கமானவரை, பெரிய திருவடிமேலே யெழுந்தருளி நிரஸித்ததாகச்சொல்லக்கடவதிறே. (கடந்தானிடந்தான்) அவ்வூரைஜயித்தவன் வாஸஸ்தாநம்.

(முறையாலித்யாதி) ப்ராப்தமானபடியேயென்னுதல்; வேதோக்தமான க்ரமத்தாலே வளர்க்கின்ற அம்நித்ரயங்களையுமுடையராய், நால்வேதர் - அப்படியேநாலுவேதத்தை உச்சரித்திருப்பாராய், பஞ்ச மஹாயஜ்ஞாநுஷ்டாநங்களில் வைகல்யமின்றிக்கே அங்கங்களாலும் கைவந்திருப்பாருமாய், ஸப்தஸ்வரங்களையு முள்ளபடியேயறிந்திருக்கும் ப்ராஹ்மணர். (வணங்கவித்யாதி) இப்படிப்பட்ட விலக்ஷணராஶ்ரயியாநின்றார்களென்கிற புகழையுடைத்தான திருநாங்கூர். ௪.

"முறையால்" என்றது - மேலெல்லாமநுஷங்கிக்கிறதெனறு திருவுள்ளம்பற்றி (அப்படியேயென்றது.) ... ... ... ... ... ௪.

அஞ்சாம்பாட்டு. (இழையாடித்யாதி) பெற்ற தாய்போலே ஒப்பித்துவந்த பூதனையுடைய ஆபரணமசைந்த முலைத்தலையில் நஞ்சை யமுதுசெய்து, இளங்கன்றைக்குணிலாகக்கொண்டு விளவாய்நின்ற அஸுரனையெறிந்து விழவிட்டு, தழைத்துநின்ற வலிதான தாளையுடைய குருந்தைமுறித்து, பெரியதாமரைப்பொய்கையிலே.

அவதாரிகை. அஞ்சாம்பாட்டு.— ப்ரதிகூலவர்க்கத்தைப்போக்கி இடைப்பெண்களோடே ஸம்ஶ்லேஷித்தவன் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினன், நெஞ்சே! அத்தேஶத்தை யாஶ்ரயியென்கிறார்.

வ்யா.—(இழையாடித்யாதி) இழையென்று - ஆபரணம். ஆபரணங்களாடாநின்றுள்ள கொங்கைத்தலைநஞ்சையுண்டு. பூதனை பேய்வடிவைமாற்றி யஶோதைப்பிராட்டிவடிவாக வொப்பித்துவர, அந்த ஆபரணங்களாலே அலங்க்ருதமான முலையில்நஞ்சை யுண்டானாய்த்து. (இளங்கன்றித்யாதி) கன்றாய்நின்ற அஸுரனைக்கொண்டு விளாவாய்நின்ற அஸுரனையெறிந்து, இருவரையும் தங்களிலே முடியும்படி பண்ணி. (தழைத்தித்யாதி) அஸுராவேஶத்தாலே உயிரையுடைத்தாயிருந்த மரமானது இவன் கிட்டச்சென்றவாறே தழைவாடிற்றாய்த்து. வலிய தாளையுடைத்தான குருந்தத்தை முறித்து. (தடந்தாமரையித்யாதி) தனக்கும் பெண்களுக்கும் ஜலக்ரீடைபண்ணுகைக்கு யோக்யமான இடத்தைக் காளியன்புகுந்து தூஷித்துக்கிடக்க, அங்கேபோய்ப் புக்கானாய்த்து; பெண்கள் நீராடப்புக்க விடத்தையுமுடைத்தாய் தாமரையையுமுடைய பொய்கையிலே புக்கு அவர்கள் துகிலை வாங்கினபடியாகவுமாம்; அவன் வர்த்திக்கிற தேஶம்.

(குழையித்யாதி) தழைகளானவையும் பூங்கொடிகளும் மந்தமாருதத்தாலே அசைந்துவர. (மாடே குயில்கூவ) பர்யந்தங்களிலுள்ள சோலையில் புஷ்பங்களினுடைய பரிமளத்தை ஆக்ராணம்பண்ணி, முக்தர் ஸாமகானம்பண்ணுமாபோலே குயில்கள் கூவாநின்றனவாய்த்து. (நீடுகொடிமாடமல்கு) நெடியகொடிகளையுடைத்தான மாடங்களாலே நெருங்கியிருப்பதாய்.

அஞ்சாம்பாட்டு.— (இழையித்யாதி.) யாத்வப்ரகாஶகமான பெரியதிருவடி மேலேறி மாலிமுதலானாரை வென்றவீரத்திலும் பிள்ளைச்சேவகத்தில் திருவுள்ளம் குடிபோயநுபவிக்கிறானென்று ஸங்கதி திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (ப்ரதிகூலேத்யாதி.) பெண்களோடேயென்றது-"தாமரைப்பொய்கைபுக்கான்" என்றதைப்பற்ற.

"தழைவாட" என்று விஶேஷித்ததுக்கு பாவம் (அஸுரேத்யாதி.) விரோதிநிரஸநப்ரகரணாநுகுணமாக காளியன்பொய்கையாக விவக்ஷித்து, அப்போது "தாமரை"என்றுவிஶேஷிப்பானென்னென்னவருளிச்செய்கிறார் (தனக்குமித்யாதி;) ஸ்நாநஸம்ஶ்லேஷக்ரியைக்கநுகுணமாக விஶேஷித்தாரென்று கருத்து. அர்த்தாந்தரம் (பெண்களித்யாதி.)

மூ.—பண்ணேர்மொழியாய்ச்சியரஞ்ச வஞ்சப்
பருவாய்க்கழுதுக் கிரங்கா தவள்தன்
உண்ணா முலை மற்றவளாவியோடுமுடனே
சுவைத்தானிடம் ;-ஓங்குபைந்தாள்
கண்ணார்கரும்பின் கழைதின்றுவைகிக்
கழுநீரில்மூழ்கிச் செழுநீர்த்தடத்து
மண்ணேந்திளமேதிகள் வைகுநாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. ௬.

ப - ரை.— பண்நேர் - கானத்தோடொத்த, மொழி-பேச்சையுடைய, ஆய்ச்சியர் - இடைச்சிகள், அஞ்ச - பயப்படும்படி, தாயுருக்கொண்டுவந்த,வஞ்சம்-வஞ்சனையையும், பருவாய் - பெருத்தவாயையுமுடைய, கழுதுக்கு - பூதனையினிடத்தில், இரங்காது-தான்நோவுபடாமல், அவள்தன்-அப்பூதனையினது,உண்ணா-விஷம்தடவியிருப்பதால் அயலாராலுண்ணமுடியாத, முலை - முலைப்பாலை, அவள்ஆவியோடும் - அவளுயிருடனேகூட, உடனேசுவைத்தான் - ஏககாலத்திலே அமுதுசெய்த ஸ்ரீக்ர்ஷ்ணனுடைய, இடம் - ஸ்தானமாய் ; இளமேதிகள் - எருமைநாகுகள், ஓங்கு - உயர்த்தியையும், பைந்தாள் - பசிய தாளையும், கண்ஆர் - குறுகிணகளுக்களையுமுடைய, கரும்பின் - இக்ஷுதண்டங்களின், கழைதின்று - தலையாடியைத்தின்று, வைகி-சிலகாலம் அவ்விடத்திலேகிடந்து,பின் அவ்வெம்மையாற்றுகைக்காக, கழுநீரில - செங்கழுநீர்ப்பணையில், மூழ்கி-புக்குமுழுகி, உகந்தாம்.[உம் செழுநீர்த்தடத்து-அழகிய நீரையுடைய தடாகத்திலே, போய்முழுகி, மண்ணேந்துவைகும் - கோட்டுமண்கொண்டு கரையேறுகேகிடக்கிற, நாங்கூர்—. (௬)

(குழையித்யாதி) மேவங்கள் ஸஞ்சரிக்கிற சோலையையும்,அவ்விடத்தில் மேவதர்ஸநத்தாலே யாடுகிறமயிலையுமுடைய நாங்கூர். ... ௫.

ஆறும்பாட்டு. (பண்ணேரித்யாதி) பண்ணொத்தபேச்சையுடைய ஆய்ச்சியரஞ்சும்படி,

---

( மழையாடுசோலை மயிலாலுநாங்கூர் ) உயர்ந்தசோலையின் தலையிலே மேவங்கள்ஸஞ்சரிக்க அவற்றைக்கண்டு வர்ஷாவாகக்கொண்டு சோலையில் வர்த்திக்கிற மயில்களானவை ஆடத்தொடங்கும் ; இப்படிப்பட்ட திருநாங்கூரில். ... ... ... ... ... ௫.

அவதாரிகை. ஆறும்பாட்டு.— பூதனையை அப்போதே ப்ராணன் போம்படி முலையுண்ட ஸர்வேஸ்வரன் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே ! அங்கே சென்றநுபவியென்கிறார்.

வ்யா.— ( பண்ணோர்மொழியாய்ச்சியரஞ்ச ) பண்ணோடொத்த மொழியையுடைய இடைச்சிகளஞ்சும்படி.

---

வர்ஷாவாக - வர்ஷமென்றுக்காக. ... ... ... ௫.

ஆறும்பாட்டு.—(பண்ணேரித்யாதி.) பிள்ளைச்சேவகங்களில்வைத்துக்கொண்டு கேவலம் பால்யத்திற்செய்த சேவகமாகையாலே பூதநாநிரஸநம் பின்னுட்டிற்றென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (பூதனையையித்யாதி.)

வஞ்சத்தையும் பெரியவாயையுமுடைய பேய்க்கு ஈடுகொடாதே, அவள்தன்னுடைய, ஒருவருமுண்ணாத விஷத்தைப்பொதிந்தமுலைப்பாலையும்அதுக்குவேறானப்ராணனையுங்கூடவுண்டவனிடம். (ஓங்கித்யாதி) ஓங்கிவளர்ந்து பரந்த அடியையும் பலகண்களையுமுடைய, கரும்பின் கழையுண்டு - குருத்து, அத்தைத்தின்று, அதிலேதங்கி, அவ்வுஷ்ணமாறச் செங்கழுநீரோடையிலேமுழுகி, அதினின்றும்போந்து, பெரிய நீரையுடைய தடாகத்திலே விடாயெல்லாங்கெட்டுக் கரையிலேயேறிக் கரைபொருது, கோடுகளில் மண்ணையும் மரித்துக்கொண்டு இளவெருமைகள் தங்குகிற நாங்கூர். ... ... ... சா.

---

(வஞ்சமித்யாதி) வஞ்சநத்தையுடையளாய், ஸயாவஹமாம்படி ஜாத்யுசிதமான பெரியவாயையுடையளான, கழுதுண்டு - பேய், அதுக்கிரங்காதே. இரங்குகையாவது - நோவுபடுகையாய், அதின்கையில் தான் நோவுபடாதே. (அவள்தனுண்ணாமுலை) விஷமாகையாலே வேறுசிலருண்டாரில்லையிறே; அப்படிப்பட்ட முலை. (மற்றவளாவியோடுமுடனே சுவைத்தானிடம்) விஷத்தை வாங்குகையன்றிக்கே, அதுக்காச்ரயமான ப்ராணனையுங்கூட ஒருக்காலே அமுதுசெய்தவன் வர்த்திக்கிற தேசம்.

(ஓங்குபைந்தாளித்யாதி) உயர்த்தியையுடைத்தாய் பசுமையையுமுடைத்தாய் தாளையுமுடைத்தாய் கண்குறுகின கரும்பினுடைய, கழையுண்டு - தலையாடி, அத்தைத்தின்று, தன்னளவல்லாதபடி மிகத்தின்கையாலே ஸஹிக்கமாட்டாமை அவ்விடந்தன்னிலேஇடம்வலங்கொண்டு விடாயாறி, பின்னைப்போய் அந்த உஷ்ணமாறும்படி செங்கழுநீர்ப்பணையிலே புக்குமுழுகி. (செழுநீரித்யாதி) அழகிய நீரையுடைத்தாயிருக்கிற தடாகத்திலே புக்குமுழுகி, * கோட்டுமண்கொண்டு, அத்தைச்சுமந்து இளருமாய்த்து மஹாவராஹம் கிளர்ந்தாப்போலே. (வைகுநாங்கூர்) பின்னை அடித்து எறவிடவும் போகாதபடி அவ்விடந்தன்னிலேகிடக்குமாய்த்து; அப்படிப்பட்ட திருநாங்கூரில்.— இவ்விடத்தை பிள்ளைவிழுப்பரையரும்ஆப்பானுங்கூட அநுஸந்தித்து, "இரண்டிடத்திலே 'வைகி' என்றுண்டாயிருந்தது, இது செய்யும்படியென்?" என்று ஸட்டரைக்கேட்க; "ஸௌகுமார்யத்தாலே யிரண்டிடத்திலுங்கிடந்தது" என்றருளிச்செய்தார். ... சா.

---

"பகு" என்றதினர்த்தம் (பெரியவென்றது.) "மற்று" என்றத்தாலே - வைலக்ஷண்யம் தோற்றுகையாலே, அத்லைதப்பற்றவருளிச்செய்கிறார் (அதுக்காஶ்ரயமானவென்று.)

ஆர்தல் - மிகுதியாய், அதினர்த்தம் (குறுகினவென்றது.) தலையாடி - கொழுந்தாடை, "வைகி" என்றதுக்குத்தாத்பர்யம் (தன்னளவித்யாதி.) பணையிலே-நீர்நிலத்திலே, (கிளருமாய்த்து) என்றவநுஷூரம், இளமேதிகள்-எருமைநாகுகள் என்று கூட்டுவது.

இதுசெய்யும்படி யென்னென்றது - இரண்டிடத்திலுங்கிடந்து காலத்தைப் போக்கிற்றென்றத்தால் ப்ரயோஜநமென்னென்ன வென்றபடி. ... கூ.

மூ.— தளைக்கட்டவிழ்தாமரைவைகுபொய்கை
தடம்புக்கடங்காவிடங்காலரவம்
இளைக்கத்திளைத்திட்டதனுச்சிதன்மே
லடிவைத்தவம்மானிடம் ;-மாமதியம்
திளைக்கும் கொடிமாளிகைசூழ்தெருவில்
செழுமுத்து வெண்ணெற்கெனச்சென்று முன்றில்
வளைக்கைநுளைப்பாவையர் மாறுநாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. ௭.

ப-ரை.— தளைத்தாமரை - மொட்டுத்தாமரையும், கட்டவிழ்தாமரை-அலர்ந்ததாமரையும், வைகு - தங்குகிற, பொய்கைத்தடம் - ஸரஸ்ஸிலே, புக்கு-ப்ரவேசித்து, அதனுள்ளேயிருந்த, அடங்கா - அடங்காதே கொழுந்தெழாநின்றதாய், விடம்கால் - விஷத்தைச்சக்குகின்ற, அரவம் - காளியன், இளைக்க - இளைத்துப் போம்படி, திளைத்திட்டு - வ்யாபரித்து, அதன் உச்சிதன்மேல - அதின் சிரஸ்ஸிலே, அடிவைத்த - திருவடிகளையிட்டுகர்வபங்கம்பண்ணின, அம்மான - ஸர்வேச்வரனுடைய, இடம் - ஸ்தானமாய்; வளைக்கை - வளையலணிந்தகைகளையுடைய, நுளைப்பாவையர்-நுளைச்சிகள், மாமதியம்-சந்திரனானவன், திளைக்கும்-தாண்டிப்பாய்ப் பெருதேவிளையாடுகிற, கொடி-கொடிகளையுடைய, மாளிகைசூழ்-மாளிகைகளாலே சூழப்பட்ட, தெருவில் - வீதிகளிலே, செழுமுத்து - பெருமுத்துக்களை, வெண்ணெற்கு - வெளுத்தநெல்லுக்கு, என - தருகிறோமென்று, கூவிக்கொண்டேபோக, ஒருவருங்கொளாமையாலே, முன்றில் - ஒவ்வொருவர்வீட்டுவாசல்தோறும், சென்று மாறும் - தாமேவலியப்போய்மாற்றித்திரிகிற, நாங்கூர்—. ... (எ)

ஏழாம்பாட்டு. (தளைக்கட்டவிழ்த்யாதி) மொட்டித்த தாமரையும் கட்டவிழுகிற தாமரையும் தங்குகிற பொய்கைக்கரையிலே

அவதாரிகை. ஏழாம்பாட்டு.— காளியனால்வந்த ஆபத்தைப்போக்கின எம்பெருமான் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே! அங்கே சென்றநுபவி என்கிறார்.

வ்யா.— (தளைக்கட்டவிழ்தாமரைவைகு பொய்கைத்தடம்புக்கு) தளைத்தாமரையும் கட்டவிழ்தாமரையும்;-மொட்டுத்தாமரையும் அலர்ந்த தாமரையும், தங்குகிற பொய்கைக்கரையிலே புக்கென்னுதல்;

ஏழாம்பாட்டு.—(தளையித்யாதி.) கீழ்ச்சொன்ன பூதநாஸ்தநவிஷம் அம்ருதமென்னும்படி பஹுமூலமாக விஷத்தைக் கக்குகிற காளியன்தடத்திலே "அஹியாதாப்ரஹர்த்தாச" என்கிறபடியே தானேபோய் நிரஸித்த செயலாகையாலே இவ்வபதாநத்திலே நெஞ்சுசென்று அநுபவிக்கிறாரென்னும் ஸங்கதியை ஹ்ருதீகரித்துக்கொண்டு, தாத்பர்யமருளிச்செய்கிறார் (காளியனுலித்யாதி.)

கீழ்ச்சொன்னவிரண்டையும் க்ரமேண விவரியாநின்றுகொண்டு, "தடம்" என்று - கரையாக வருளிச்செய்கிறார் (தளையித்யாதி.) "புக்கு" என்ற பதத்தின் ஸ்வாரஸ்யத்தைப் பற்ற, "தடம்" என்றதுக்கு - இடம் என்றாய், அத்தால

சென்று. தடம் - கரை. ஒருவர்க்கு மடங்காதே விஷத்தை உமிழுகி
ற காளியனிளைக்க, அதின் தலையிலே பாய்ந்து நின்று ந்ருத்தம் பண்ணி
னவனிடம். (மாமதியமித்யாதி) பெரிய வந்த்ரனவன் மாடங்களில்
ஸௌம்யதையாலும் அலங்காரத்தாலும் ஸஹவஹாஜ்ஞையாலே ஸஞ்சரி
க்கிறவன், அத்தைமறந்து துவக்குண்டு இங்கே விளையாடுமாய்த்து.
கொடிமுடிந்து வழியிலிட்டால் அவனாலும் போகவொண்ணாதே. (தெ
ருவிதியாதி) திருவீதியிலே அழகிய முத்துக்களை யெடுத்துக்கொண்டு
வந்து கழியருடைய பெண்கள் சென்று முற்றங்களிலே புக்கு
முத்து நெல்லுக்கு மாறும் நாங்கூர். ... ... ௭.

பொய்கையினுள்ளே புக்கென்னுதல். (அடங்காவிடங்காலரவம்) அட
ங்காதேகிளர்ந்தெழாநிற்பதாய், விஷத்தைக் காலாநின்றுள்ள, அரவ
முண்டு-காளியன், அது இளைக்கும்படி வ்யாபரித்து அத்தோடே விளை
யாடி, "அடிச்சியோம் தலைமிசைநீயணியாய்" என்று ப்ரார்த்திக்கும்
படியான திருவடிகளை அதின்தலையிலேயாய்த்துவைத்தது. (அம்மா
னிடம்) இப்படி ஸர்வரக்ஷணங்களையும் பண்ணும் ஸர்வேச்வரன்
வர்த்திக்கிறதேசம்.

(மாமதியமித்யாதி) வந்த்ரனவன் ஜகத்ரக்ஷணத்துக்காக
ஸஞ்சரிக்கிறவன் கொடிக்களிலே துவக்குண்டு, போகப்பெறாதே அவற்
றோடே விளையாடுமாய்த்து; இப்படியேயிருக்கிற கொடிக்களையுடை
த்தான மாளிகைகளாலே சூழப்பட்ட தெருவில். (செழுமுத்து வெ
ண்ணெற்கென) "போகங்கிற நெல்லமையும், அழகியமுத்து" என்
றுநின்றார்கள். (வெண்ணெற்கென) செந்நெல்வேண்டா, வெண்
ணெல்லமையும் என்றுநின்றார்கள். (சென்று) வந்துகொள்வாரில்லை
மிகுதியாலே; கொண்டுசென்று விற்குமித்தனையாய்த்து. முன்றில்[உடு
களிலே - வாசல்களிலே. (விளைக்கை நுளைப்பாவையர்மாறும்) இடை
ச்சிகள் ஒப்பித்துத்தயிர்கடையுமாப்போலே, நுளைச்சிகளும் ஒப்பித்தா
ய்த்து முத்துவிற்கப்போவது; இப்படி அலங்க்ருதைகளான நுளைச்
சிகள் முத்துவிற்கைக்கு ஸஞ்சரிக்கிற திருநாங்கூரிலே. ௭.

---

மெலித்தது-ஸப்தம்யர்த்தமாய், அத்தையருளிச்செய்கிறார் (பொய்கையித்யாதி.) காலா
நின்றுள்ள - கக்காநின்றுள்ள. "திளைத்திட்டு" என்றதினர்த்தம் (விளையாடியென்ற
து.) மிதித்தென்னாதே, "அடிவைத்த" என்றதால் தோன்றின ஏற்பாட்டை
யருளிச்செய்கிறார் (அடிச்சியோமித்யாதி.) அதிப்ராதிகூல்யன் தலையிலும் திருவடிகளை
வைக்கைக்குஹேது அம்மானுகை என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (இப்படி
யித்யாதி.)

வெண்ணெல்லமையு மென்றது - அஶ்லாக்யமான நெல்லமையு மென்கை.

மூ.— துளையார்கருமென்குழலாய்ச்சியர்தம்
துகில் வாரியும் சிற்றில் சிதைத்தும் முற்று
விளையார்விளையாட்டொடு காதல்வெள்ளம்
விளைவித்தவம்மானிடம் ;-வேல்நெடுங்கண்
முளைவாளெயிற்று மடவார்பயிற்று
மொழிகேட்டிருந்து முதிராதவின்சொல்
வளைவாயகிள்ளை மறைபாடுநாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. அ.

ப-ரை.— துளை ஆர் கருமென் குழல-துளைமிக்கிருந்து கறுத்தும்ருதுவான கூந்தலை யுடைய, ஆய்ச்சியர்தம்-கோபஸ்த்ரீகளின், துகில்வாரியும்-வஸ்த்ரங்களை அபஹரித்தும், சிற்றில் சிதைத்தும்-அவர்கள்சிற்றில்களைச் காலாலே பழித்தும், முற்றுவிளையார் விளையாட்டொடு - மிக்கவௌவநம் வாராத பால்யசேஷ்டையான பாலக்ரீடையோடே, காதல்வெள்ளம்- ப்ரேமஸாகரத்தை, விளைவித்த-பிறப்பித்தும் இனையவை போலும் பலவிசித்ரகார்யங்களைச்செய்த, அம்மான்-ஸர்வேஸ்வரனது, இடம்-ஸ்தாநமாய் ; வேல் - வேல்போலே கூர்மையுடைத்தாய், நெடுங்கண - நெடிதான கண்களையும், முளை - முளைக்கிறவளவாய், வாள் - காந்தியையுடைத்தான, எயிற - தந்தபங்க்தியையுமுடைய, மடவார் - வைதிகஸ்த்ரீகள், பயிற்று-அப்யஸிப்பிக்கிற, மொழி - வேதபதங்களை, கேட்டு இருந்து - கேட்டுக்கொண்டிருந்து, பின் அவர்கள் அப்பால் அகன்றவாறே, முதிராத இன்சொல்-கடினமாகாத இனியசொல்லையும், வளைவாய - வளைந்தவாயையுமுடைய, கிள்ளை-கிளிகள், மறைபாடும் - வேதபாராயணம் பண்ணுகிற, நாங்கூர்—. ... ... ... ... (அ)

எட்டாம்பாட்டு. (துளையித்யாதி) துளையாநிற்கிற கருமென் குழலாய்ச்சியர்

அவதாரிகை. எட்டாம்பாட்டு.— திருவாய்ப்பாடியிற் பெண்களோடே நிரவதிகஸம்ஶ்லேஷத்தைப் பண்ணின க்ருஷ்ணன் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினான், நெஞ்சே ! அங்கே சென்றநுபவியென்கிறார்.

வ்யா.— ( துளையார்கருமென்குழலாய்ச்சியர்தம் ) துளையாரென்று-துளைமிக்கிருக்கை. அதாவது-சுருண்டு கறுத்து ம்ருதுவான [கூய குழலையுடையராய், கரையிலே பரியட்டங்களை யிட்டுவைத்து முழுகியேறும் பருவமாயிருந்துள்ள இடைப்பெண்களுடைய.

எட்டாம்பாட்டு.—(துளையாரித்யாதி.) அஞ்சாம்பாட்டில் ப்ரஸ்துதமான "தடந்தாமரைப்பொய்கைபுக்கான்" என்றதுக்கு இரண்டு தாத்பர்யத்தாலே யருளிச்செய்தாராகையாலே முந்தின தாத்பர்யத்தைக் கீழ்ப்பாட்டி லருளிச்செய்தார் ; இரண்டாம்தாத்பர்யத்தை யிப்பாட்டிலே வெளியிடுகிறாரென்றுதல்; அன்றிக்கே, கீழ்ப்பாட்டில் பொய்கைபுக்கது ப்ரஸ்துதமாகையாலே ஸமஜ்தமான வஸ்த்ராபஹாரணத்தை யநுஸந்திக்கிறாரென்றுதல் ஸங்கதிதிருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (திருவாய்ப்பாடியிலித்யாதி.)

துகில் வாரியுமென்றபடி. இப்பொருள் சால அழகிது. துகில் வாரியு மென்கிற ப்ரகரணத்துக்குப் போரச்சேரும். துளை யென்பது - தலைக்கோலம். தலைக்கோலத்தை யுடைத்தாய், கருகி ம்ருதுவான குழலையுடைய ஆய்ச்சியர். அன்றியே, துளை-மூங்கிலாய், துளையான தோளும். கரு .மென்குழலாய்ச்சியரென்றுமாம். ( ஆய்ச்சியரித்யாதி ) இடைப்பெண்கள் பரியட்டங்களை விட்டுவைத்துக் குளிக்கப்புக, அவற்றை வாரிக்கொண்டு குருந்திலே யேறியும், அவர்கள் சிற்றிலிழைத்து விளையாட அத்தையழித்தும், மிகவும் சிறுப் பெண்களுடனேவிளையாடி அவர்களுக்குத் தன் பக்கலிலே ஆசைவெள்ளத்தை விளைவித்த அம்மானிடம். (வேலித்யாதி) வேல்போன்ற கூர்மையையும் புகரையும் ஒழுகுநீட்சியையுமுடைய கண்ணையும், முளைக்கிறவளவாய் ஒளியையுடைய தந்தபங்க்தியை யுடையருமாய், மடப்பத்தையுடைய பெண்கள் அந்யோந்யம் பேசுகிறபேச்சைக் கிளிகள்பேசுகிறதோஎன்றுகேட்டிருந்து,வளைந்தவாயையுடையகிளியானது பண்டு தனக்கு வாஸிதமான மறையைப்பாடும் நாங்கூர். அ.

துளையாநிற்கிறனென்றுமாம்.(துகில்வாரியும்சிற்றில்சிதைத்தும்)அவர்கள் கரையிலேயிட்டுவைத்தபரியட்டங்களை,"மசிமையிலீ கூறைதாராய்"என்னும்படி வாரிக்கொடுபோய்க்குருந்திலே யேறியும், "தீமைசெய்யும் சிரீதராஎங்கள் சிற்றில் வந்து சிதையேல்" என்னும்படி சிற்றில்சிதைத்தும். (முற்றாவிளையார்விளையாட்டொடு) விளையாட்டுக்கு அவ்வருகு காரியங்கொள்ள வொண்ணாதபடியான பருவத்தையுடையவர்கள். யௌவநம் (க) ஊசாடாதபருவம்; அவர்களோடேயுண்டான விளையாட்டோடேகூட. (காதலித்யாதி) அவர்களுக்கு ப்ரேமஸாகரத்தை விளைத்த ஸர்வேஶ்வரனுடைய வாஸஸ்தாநம்.

(வேல்நெடுங்கணித்யாதி) வேல்போலே கூர்மையையுடைத்தாய் நெடிதான கண்களையுமுடையராய் முளைக்கிறவளவாய் ஒளியையுடைத்தான தந்தபங்க்திகளையுமுடையரான ஸ்த்ரீகளானவர்கள். (பயிற்றும்மொழிகேட்டிருந்தும்) அவர்கள் "முத்தமிடீர்" என்றுப்போலே சிலவார்த்தைகள் சொல்லிக்கற்பிப்பார்களே, அவற்றைக்கேட்டிருந்தேயும்; அவைகிடக்கச்செய்தே. (முதிராதவித்யாதி) முற்றாதே யிருக்கையாலே ம்ருதுவாய் இனிதான சொல்லையுடைத்தாய் வளைந்த வாயையுமுடைத்தான கிளியானது. (மறைபாடும்) தனக்கு வாஸிதமான வேதத்தைப் பாடாநிற்கும். அவ்வூரிலுள்ளார் வேதபாராயணம் பண்ணிப்போருகையாலே அதுவேயிறே யிவற்றுக்குவாஸிதமாயிருப்பது; ஆகையாலே இவர்கள் சொல்லுகிறதுகிடக்க அவற்றைச்சொல்லாநின்றனவென்னுதல். அன்றிக்கே, இவர்கள்தாங்கள் உபாத்யாயருடைய பெண்களாகையாலே வேதபதங்களை அப்யஸிப்பிக்க, அவற்றைச்சொல்லாநின்றன வென்னுதல். (முதிராதவின்சொல்) கற்பிக்கிறவர்கள் பேசுப்போலே யன்றிறே இவற்றினுடையபேச்சு; இப்படியிருக்கிற திருநாங்கூர். ... ... ... அ.

துளையாநிற்கிற - ஜலத்திலே துளையாநிற்கிறவர்களான வென்றபடி. அ

(க) ஊசாடுதல் - ஊடாடுதல், நடமாடுதல்.

மூ.— விடையோடவென்றாய்ச்சிமென்றோள்நயந்த
விகிர்தா விளங்குசுடராழியென்னும்
படையோடுசங்கொன்றுடையாயெனநின்
றிமையோர்பரவுமிடம்;-பைந்தடத்துப்
பெடையோடுசெங்காலவன்னம் துகைப்பத்
தொகைப்புண்டரீகத்திடைச்செங்கழுநீர்
மடையோடநின்றுமதுவிம்முநாங்கூர்
மணிமாடக்கோயில் வணங்கென்மனனே. ௯.

ப - ரை.— விடை - ஸம்ச்லேஷத்துக்கு பாதகமான ஸப்தரிஷபங்களும், ஓட - ஓடி நசிக்கும்படி, வென்று - அவற்றை ஜயித்து, ஆய்ச்சி - நப்பின்னைப்பிராட்டியின், மென்தோள் - ம்ருதுபுஜாலிங்கநத்தை, நயந்த - விரும்பின, விக்ர்தா - வ்யாவ்ருத்தமான செயல்களையுடையவனே, விளங்கு - விளங்காநின்றுள்ள, சுடர் - புகரையுடைய, ஆழியென்னும்படையோடு - திருவாழியாகிற ஆயுதத்தோடேகூட, சங்கொன்றுடையாய் - அத்விதீயமாயிருக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுடையவனே, என நின்று - என்று சொல்லாநின்றுகொண்டு, இமையோர் - ப்ரஹ்மாதிதேவர்கள், பரவும் - இடைவிடாதேஸ்தோத்ரம்பண்ணுகிற, இடம் - ஸ்தாநமாய்; பெடையோடு - பெட்டையோடுகூடின, செங்கால - சிவந்தகாலையுடைய, அன்னம் - அன்னமானது, மதுபாநத்தால்முன்னடி தோற்றாமையாலே, பைந்தடத்து - அழகியதடாகத்திலேயுள்ள, தொகைப்புண்டரீகம் - திரண்டதாமரைப்பூக்களை, துகைப்ப - துகைக்க, அத்தாலே, இடை - அத்தாமரைகளின்நடுவேயுள்ள, செங்கழுநீர் - செங்கழுநீர்ப்பூக்களானவை, மடையோட - மடைகள்நிரம்பியோடும்படி, நின்றுமதுவிம்மும் - மதுவெள்ளமிடாநின்றுள்ள, நாங்கூர் —. ... ... ... ... ... (௯)

---

ஒன்பதாம்பாட்டு. (விடையித்யாதி) நப்பின்னைப் பிராட்டியுடன் ஸம்ச்லேஷிக்கைக்கு விரோதியாய்நின்ற ரிஷபங்களேழையும் கொன்று, அவளுடனே ஸம்ச்லேஷித்து வ்யாவ்ருத்தமான செயல்களைச் செய்தவனே

---

அவதாரிகை. ஒன்பதாம்பாட்டு.— நப்பின்னைப்பிராட்டிக்காக எருதேழடர்த்தசெயலையும் திவ்யாயுதங்களோட்டைச் சேர்த்தியழகையும் சொல்லி ஏத்துவார்களைத் திருமணிமாடக்கோயிலிலே நின்றருளினவன், நெஞ்சே ! அங்கேசென்றநுபவியென்கிறார்.

வ்யா.— (விடையோட) நப்பின்னைப்பிராட்டியோட்டை ஸம்ச்லேஷத்துக்குப்ரதிபந்தகமான ரிஷபங்கள் ஓடும்படிவென்று. (ஆய்ச்சிமென்தோள்நயந்த விகிர்தா) அவளுடைய ம்ருதுவான தோளை விரும்பின வ்யாவ்ருத்தமான செயல்களையுடையவனே.

---

ஒன்பதாம்பாட்டு.—( விடையித்யாதி. ) பலகாலும் க்ருஷ்ணாவதாரத்தோடு ஐக்யம் சொல்லாநின்றீர், மணிமாடக்கோயிலிலிருக்குமவன் க்ருஷ்ணனோவென்ன ; ப்ரஹ்மாதிகள் அங்ஙனேத்துகிறார்கள் கேளாயென்கிறாரென்று ஸங்கதியுட்கொண்டருளிச்செய்கிறார் (நப்பின்னையித்யாதி.)

ஓடும்படி - தோற்கும்படி.

மூ.— வண்டார்பொழில்சூழ்ந்தழகாய நாங்கூர்
மணிமாடக்கோயில் நெடுமாலுக் கென்றும்
தொண்டாயதொல்சீர் வயல்மங்கையர்கோன்
கலியனொலிசெய் தமிழ்மாலைவல்லார்
கண்டார்வணங்கக்களியானைமீதே
கடல்சூழுலகுக்கொருகாவலராய்
விண்டோய் நெடும்வெண்குடைநீழலின்கீழ்
விரிநீருலகாண்டுவிரும்புவரே. ௧௦.

ப-ரை.— வண்டு ஆர்-வண்டுகள்மிக்கிருந்துள்ள, பொழில்சூழ்ந்த - சோலைகளாலே சூழப்பட்டு, அழகாய-அழகாயிருக்கும், நாங்கூர்-திருநாங்கூரில், மணிமாடக்கோயில்-திருமணிமாடக்கோயிலிலே நித்யவாஸம்பண்ணுகிற, நெடுமாலுக்கு-ஸர்வேச்வரனுக்கு, என்றும் தொண்டாயதொல்சீர் - நித்யகைங்கர்யத்தில் அதிகரிக்கையாலே வந்த நிரவதிகஸம்பத்தையுடையராய், வயல்மங்கையர்கோன்-கழனிசூழ்ந்த திருமங்கைக்குநாதனாயான, கலியன் - ஆழ்வார், ஒலிசெய் - அருளிச்செய்த, தமிழ்மாலைவல்லார் - தமிழ்த்தொடைபத்தையும் ஸஹ்ருதயமாக அப்யஸிக்கவல்லவர்கள்; கண்டார்வணங்க - கண்டவரெல்லாம் தங்கள் காலிலேவிழுந்து ஸேவிக்கும்படி, களியானைமீதே - மதத்தையுடைத்தன யானைமேலேறி, பவனிவலம்வந்து, பின், கடல்சூழுலகுக்கு ஒருகாவலராய் - ஸமுத்ரஸ்வாகரபர்யந்தையான பூமிக்குத்தாங்களே அத்விதீயநிர்வாஹகராய், விண்தோய - ஆகாசஸ்பர்சமான, நெடுவெண்குடை நீழலின் கீழ் - வெள்ளைக்கொற்றக்குடையின் கீழ் இருந்து, விரிநீருலகாண்டு - ஆவரணஜலவேஷ்டிதமான பூமண்டலத்தையாண்டுகொண்டு, விரும்புவர் - நிரவதிகப்ரீதியுக்தர்களாயிருப்பார்கள். ... ... ... ... (௧௦)

விளங்காநின்ற கடராபுரியாகிற ஆயுதத்துடனே ஸ்ரீபாஞ்சஜந்யத்தைக் கையிலேயுடையவனையென்று நித்யஸூரிகள்வந்து ஸ்தோத்ரம்பண்ணுமிடம். (பைந்தடமித்யாதி) பையென்று - அழகும், குளிர்த்தியும், பரப்பும். அழகாய்க் குளிர்ந்து பரந்ததடாகத்திலே சிவந்த காலையுடைய அன்னம் பேடையும் தானுமாய்ப்புக்குத்துகைக்க, துகைப்புண்ட தாமரைகளில் நின்றுவிழுகின்ற செங்கழுநீரானது, செய்களில் மடைகள் விட்டு வெள்ளமிடும்படி மதுச்சொரியும் நாங்கூர். ... ௬.

(விளங்கித்யாதி) திருநிறத்துக்குப் பகைத்தொடையாக விளங்காநின்றுள்ள கடராபுரியுடைய திருவாழியாகிற ஆயுதத்தோடேகூடின அத்விதீயமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுடையவனே, (எனநின்று) இப்படி சொல்லாநின்றுகொண்டு. (இமையோர்பரவுமிடம்) ப்ரஹ்மாதிதேவர்கள் விடாதே ஸ்தோத்ரம்பண்ணுகிறவிடம்.

(பைந்தடமித்யாதி) அழகிய பொய்கைகளிலே மடப்பாகம்பண்ண இழிந்த சிவந்த காலையுடைய அன்னமானது, பேடையோடேகூட இழிகையாலே மடப்பாகத்தாலே முன்னடி தோற்றுமையாலே ஆஶ்ரயத்தைப் பேணிப் பரிமாற வழிநிறனவில்லை; அத்தாலே துகைக்கப்பட்ட, (தொகையித்யாதி) திரண்ட தாமரைப்பூவின் நடுவே செங்கழுநீரின் மதுவெள்ளமானது மடையாலே போகாநிற்கச் செய்தேயும், அதினுடைய மிகுதியாலே உள்ளே நின்று விம்மாநிற்குமாய்த்து. திரண்டபுண்டரீகங்களின் நடுவே அன்னங்கள் துகைக்க, நடுவுநிற்கிற செங்கழுநீரானது மதுவெள்ளமிடாநிற்கும்; இப்படியிருக்கிற திருநாங்கூரிலே. ... ௬.

பங்கத்தொடையாக - பரஹாரமாக. ஆஶ்ரயத்தை-கமலத்தை. "தொகை-" ஸமூஹமாய், அதினாயம் (திரண்டவென்றது.) விம்மாநிற்கும் - தேங்காநிற்கும். ௬.

பத்தாம்பாட்டு. (வண்டாரித்யாதி) வண்டுகள்மொய்த்த பொழிலாலே சூழப்பட்ட நாங்கூர் மணிமாடக்கோயில் நெடுமாலுக்கு என்றும் தொண்டுபட்ட பெரியசீரையுடைய திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகரான ஆழ்வாரருளிச்செய்த தமிழ்மாலையை அப்யஸிக்க வல்லார். (கண்டார்வணங்கவித்யாதி) கண்டார் கண்டவிடத்திலே வணங்கும்படி, மதயானைமேலே, கடல்சூழ்ந்த பூமிக்கு அத்விதீயநிர்வாஹகராய், ஆகாசத்திலேசெல்ல ஓங்கின வெண்கொற்றக்குடைநிழலிலே. (விரிநீரித்யாதி) கடல்சூழ்ந்த பூமியிடத்திலுள்ளார் கொண்டாடப்படுவர். ஆண்டென்பது-அவ்விடமென்றபடி. விரிநீருலகத்திடத்தாரென்றபடி. கடல்சூழுலகுக்கொரு காவலராயென்று - கடல்சூழுலகு முன்பே சொல்லுகையாலே, விரிநீருலகென்று அதுதன்னையே சொல்லில் புநருக்தமாம்.

“ஐஶ்வர்யத்தைபுருஷார்த்தமாகச் சொல்லுவானென்?” என்று பட்டரைநஞ்ஜீயர்கேட்க; “ஈஶ்வரனேயாகிலும் ஒருக்கால் பிறந்து

---

அவதாரிகை. பத்தாம்பாட்டு.—இத்திருமொழி கற்றார்க்கு பலம் சொல்லுகிறது.

வ்யா.—(வண்டார்பொழில்சூழ்ந்து) சோலையென்று பேர்மாத்ரமாய், மது பாநம்பண்ணஇழிந்த வண்டுடையாய்க் கிடக்குமாய்த்து. (அழகாயவித்யாதி) தர்ஶநீயமான திருநாங்கூரில் திருமணிமாடக்கோயிலிலே நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேஶ்வரனுக்கு. (என்றும் தொண்டாய கோலிநீர்) நித்யகைங்கர்யத்திலே அபிநிவிஷ்டராகையாலே வந்த நிரவதிகஸம்பத்தையுடையராய். (வயல்மங்கையர்கோன்) நல்லவயலையுடைய திருமங்கைக்கு ராஜாவான ஆழ்வார். (ஒலிசெய்த தமிழ்மாலை வல்லார்) ஓசையையுடைத்தாக அருளிச்செய்த தமிழ்த்தொடையாகிற இத்திருமொழியைக் கற்றவர்கள். (கண்டார்வணங்க) அநுகூல ப்ரதிகூலோதாஸீநரென்று வாசியின்றிக்கே, லோகமாகத் தங்கள்காலிலே வந்து விழும்படி மத்தகஜத்தின்மேலேயேறி. (கடல்சூழுலகுக்கொருகாவலராய்) க்ஷத்ரியஜந்மத்திலேபிறந்து * சதுஸ்ஸாகரபர்யந்தையான பூமிக்குத்தாங்களே நிர்வாஹகராய். (விண்டோயித்யாதி) ஆகாசத்திலேசென்று கிட்டும்படியான முத்துக்குடையின் கீழே கடல்சூழ்ந்த பூமியையாண்டு, விரும்பப்படுவர்; நிரவதிகப்ரீதியுக்தராவர்கள்.

“ஐஶ்வர்யத்தை புருஷார்த்தமாகச் சொல்லுவானென்?” என்று பட்டரைக்கேட்க; “‘ஈஶ்வரனேயாகிலும் ஒருக்கால் பிறந்துஅபி

---

ஜிமம்.—(வண்டாரித்யாதி.) “விரும்புவர்” என்றதுக்கு - எல்லாராலும் விரும்பப்படுவரென்றர்த்த மருளிச்செய்து, விருப்பத்தையுடையவரென்றர்த்தாந்தரமருளிச்செய்கிறார் (நிரவதிகேத்யாதி.)

அபிஷேகம் பண்ணவமையும் ஸாமவதபேரேஷமாக்கலாமாகில் என்று காணும் ஆழ்வார்திருவுள்ளமிருப்பது'' என்றருளிச்செய்தார். கo.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஷேகம்பண்ணவமையும் ஸாமவதபேரேஷ மாக்கலாமாகில்' என்று[ரு] காணும்திருமங்கையாழ்வாரிருப்பது'' என்றருளிச்செய்தருளினார். கo.

அடிவரவு.— நந்தா முதலை கொலை சிறை இழை பண் தளை துளை விடை வண்டார் சலம்.

திருமங்கையாழ்வார் திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

(இருப்பது, என்றவாக்கரம். இனி தம்முடையப்ரவந்தம் கற்றவர்க்கு ஸாமவத கைங்கர்யபர்யந்தமான மங்களாபிபத்யம்வேண்டாளன்றிருப்பரோ என்று இவ்வளவு ஆரித்துக்கொள்வது. ... ... ... ... சo.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

மூன்றும்பத்து - ஒன்பதாந்திருமொழி - சலங்கொண்ட. ப்ரவேஶம்.

அரிமகவிரயக்ஷயநுஷவிக்குமிடத்தில் அவயவங்கள்தோறும் விரும்பி அநுஷவிக்குமாப்போலே அங்குள்ளதெல்லா முத்தேஶ்ய மாய், ஆபத்ஸகனாய், ஸர்வலோக ரக்ஷகனான ஸர்வேஶ்வரன், ரக்ஷணத்துக்குப்பாங்கான தேஶமென்று விரும்பிவர்த்திக்கிறதேஶமாகை யாலே, அங்குண்டான திர்யக்குக்களுங்கூட, முக்தரநுஷவம் பண்ணிக்களிக்குமாப்போலே களித்துவர்த்திக்கிற தேஶம்; ஆனபின்பு நீயுமத்தேஶத்தைப்ராபி யென்று திருவுள்ளத்தைக்குறித் தருளிச் செய்கிறார். ... ... ... ... ... *

அரிமகவிஷயத்தையநுஷவிக்குமிடத்தில் அவயவங்கள்தோறும் விரும்பியநுஷவிக்குமாப்போலே, அங்குள்ளதெல்லாமுத்தேஶ்யமாய், ஆபத்ஸகனாய் ஸர்வஜகத்துக்கும் ரக்ஷகனாயிருக்கிற ஸர்வேஶ்வரன் ''ரக்ஷணத்துக்குப்பாங்கான தேஶம்'' என்று விரும்பி வர்த்திக்கிற தேஶமாகையாலே, அங்குண்டான திர்யக்குக்களுமகப்பட, முக்தர் ஸாமவஜநுஷவத்தாலே களிக்குமாப்போலே களித்துவர்த்திக்கும் தேஶ மானபின்பு நீயுமத்தேஶத்தைப்ராபி என்று திருவுள்ளத்தைக்குறித் தருளிச்செய்கிறார். ... ... ... ... *

* சலங்கொண்டவினப்ரவேஶம்.— திருநாங்கூரில் திருமணிமாடக்கோயிலை யநுஷவித்த ஆழ்வார் அங்குள்ள மற்றைத்திருப்பதிகளையுமநுஷவிக்கிறார் இனிப் பத்துத்திருமொழியாலேயென்று திருவுள்ளம்பற்றி, அவையெல்லாவற்றுக்கும் ஸங்ஙதியருளிச்செய்கிறார் (அரிமதேதயாதி.) அங்குள்ளதெல்லாம் - திருநாங்கூர் திருப்பதிகளெல்லாம். (உத்தேஶ்யமாய்) என்றவாக்கரம், தோற்றி என்று ஶேஷம். இத்திருமொழியில் ப்ரமேயத்தையருளிச்செய்கிறார் (ஆபத்ஸகனுயித்யாதி.) *

மூ.—சலங்கொண்ட விரணியன தகல்மார்வங்கீண்டு
தடங்கடலைக்கடைந்தமுதங்கொண்டுகந்தகாளை
நலங்கொண்டகருமுகில்போல் திருமேனியம்மான்
நாடோறும் மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
சலங்கொண்டு மலர்சொரியும் மல்லிகையொண்செருந்தி
செண்பகங்கள் மணநாறும் வண்பொழிலினூடே
வலங்கொண்டுகயலோடி விளையாடு நாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. க,

ப - ரை.— சலம்கொண்ட- மத்ஸரித்துக்கொண்டுதிரிகிற, இரணியனது -[ம] ஹிரண்யனுடைய, அகலமார்வம் - விசாலவக்ஷஸ்தலத்தை, கீண்டு - அநாயாஸேந கிழித்துப்பொகட்டும்,தடம்கடலை - பெரியதிருப்பாற்கடலை, கடைந்து - மதித்து, அமுதம் - அதில்பிறந்த அம்ர்தத்தை, கொண்டு - தேவதைகளுக்குப் பகிர்ந்திட்டுக் கொடுத்தும், இன்னுமிவ்வாறே ஆச்ரிதரக்ஷணம் பண்ணிக்கொண்டு, உகந்த - ஸந்தோஷயுக்தராயிருந்த, காளை - யுவாவாய், நலம்கொண்ட கருமுகில்போல்-அழகிய நீலமேகம்போன்ற, திருமேனிஅம்மான் - திவ்யதேஹத்தையுடையனான ஸர்வேச்வரன், நாடோறும் - ப்ரதிதினமும், மகிழ்ந்து - ஸந்தோஷித்துக்கொண்டு, இனிது - ஆச்ரிதருக்கினிதாம்படி, மருவியுறைகோயில் - அநந்யப்ரயோஜநராய் நித்யவாஸம்பண்ணுகிற தேசமாய்; கயல் - நீரைவிட்டால் தரிக்கமாட்டாத கயல் மத்ஸ்யங்கள், ஓடி - தனக்குவாஸஸ்தாநமான நீரைவிட்டோடி, சலங்கொண்டு மலர்சொரியும்- இசலிஇசலி மலரைச்சொரிகிற, மல்லிகைஒண்செருந்திசெண்பகங்கள் - அழகியமல்லிகைகளும் செருந்திகளும் சம்பகங்களும், மணம்நாறும்-வாஸனையைப்பரப்பவிடுகிற,வண்பொழிலினூடே - வளமிருந்தசோலையிலே, வலங்கொண்டுவிளையாடும் - அப்புஷ்பவாஸநாக்ராணபலத்தாலே துள்ளி விளையாடுகிற, நாங்கூர்—. ... ... ... ... ... ... (ச)

முதற்பாட்டு. (சலங்கொண்டவித்யாதி) ஸ்ரீப்ரஹ்லாதன்பக்கலிலே சீற்றத்தையுடைய ஹிரண்யனுடைய அகன்றமார்வைப்பிளந்து, பெரிய கடலைக்கடைந்து அம்ருதத்தை

முதற்பாட்டு.— (சலங்கொண்ட) சீற்றத்தையிட்டாய்த்து வருத்தது. சீற்றத்தையுடையனாயிருக்கிற ஹிரண்யனுடைய, வரபலத்தாலே திண்ணியதாய் அகன்றமார்வை, தன்னுடைய சீற்றத்தைக் காட்டி வெதுப்பிப் பதஞ்செய்யப்பண்ணி பின்னை அநாயாஸேந கிழித்து,ஒருவரால்பரிக்ஷேபிக்கவொண்ணாதகடலை சக்ரவர்த்திகுமாரங்களைப்போலே பரிக்ஷேபித்துக்கடைந்து,அதில் நல்லுயிரான அம்ருதத்தை

முதற்பாட்டு.— (சலமித்யாதி.) "சலங்கொண்ட" என்று அவனைவிசேஷித்ததுக்குத்தாத்பர்யமருளிச்செய்கிறார் (சீற்றத்தையிட்டித்யாதி.) வாக்யார்த்தம் (சீற்றத்தையுடையனுமித்யாதி.) "அது" என்றதினர்த்தம் (வரபலத்தாலேயித்யாதி.) பிளந்துஎன்னாதே, "கீண்டு" என்று - அநாயாஸம் தோற்றச் சொன்னதுக்கு ஹாவம் (சீற்றத்தைக்காட்டியித்யாதி.) தடம் - விஸ்தாரமென்றருளிச்செய்கிறார் (ஒருவராலித்யாதி.)

தேவர்களுக்குக்கொடுத்துகந்தகாளை. (நலங்கொண்டவித்யாதி) அழகையுடைத்தான காளமேகம்போன்ற திருமேனியையுடைய ஸர்வேஶ்வரன், நாள்தோறும் ஆநந்தித்துஇனிதாகப்பொருந்தி நித்யவாஸம் பண்ணுகிறகோயில். (சலங்கொண்டித்யாதி)ஒன்றுக்கொன்று இசலி இசலிச் சொரிகிற மல்லிகை, அழகியசெருந்தி, செண்பகங்கள், இவை நறுநாற்றம் கமழுமழகியசோலையுள்ளே, அச்சோலையில் மடுவெள்ளத்திலே புக்கு அத்தாலே வலமுடைய கயல்களானவை விளையாடும் நாங்கூர். ... ... ... ... ... க.

---

வாங்கி, "நம்மை ஆஶ்ரயித்ததேவஜாதிகார்யம் தலைக்கட்டப்பெற்றோமே!" என்று அதுபெற்றால் அவர்களுக்கு வருமுகப்பைத் தானுடையனாய், அவ்வமிர்தத்தை ஸ்ருஜித்தார்க்குக்கழியக்கடவ ஜராதிகளைத் தானுடையனாயிருக்கிறவன். (நலங்கொண்டவித்யாதி) அவ்வமிர்தத்தைநாய்க்கிட்டாய் என்னும்படியான வடிவையுடையவன். "யஶ்சமஞ்சோர் இதி" என்கிறபடியே உபயாத்மகமான வடிவையுடையமேகம் திருமேனிக்கொப்பாகப்போராமையாலே வ்யாவ்ருத்தமான வழகையுடைத்தாய், ஶ்ரமஹரமாயிருப்பதொரு மேகம்போலே திருமேனியையுடையனாய், அத்தாலே "இவனேஸர்வேஶ்வரன்" என்று தோற்றும்படியிருக்கிறவன். ப்ரமாணங்கள் புகுந்தபோதாக ஹிரண்யனே நிரஸிக்கவும் கடவனையுமொன்றோது என்று ஏற்கவேவந்து, பெரிய ஹர்ஷத்தோடே நித்யவாஸம் பண்ணுகையாலே ஆஶ்ரிதர்க்கு இனிதானதேஶம்.

(சலங்கொண்டித்யாதி) அதுக்குஹேது விருக்கிறபடி. "ஸங்வைராக்யேணவர்த்திதாஃ" என்கிறபடியே - இசலியிசலி மலரைச்சொரிகிற மல்லிகை, அழகிய செருந்தி, அப்படிப்பட்ட செண்பகம், இவை உடுபரிமளத்தைப் புறப்படவிட. (வண்பொழிலித்யாதி) நீரிலேகிடந்தால் நிறத்தையுடைத்தாய்க் கரையிலே போயிறால் அதின்றிக்கே யிருக்கக்கடவ மத்ஸ்யங்களானவை, அந்நீர்தானுறுத்தும்படி அதிற்காட்டிலும் நிலமித்தானே நன்றாயிருக்கையாலே அச்சோலையில் மணத்தைத்தரும்பண்ணி அத்தாலே மிடுக்குடைத்தாய், முக்தர் ஸாமவேதநாதத்தைப் பண்ணி "அஹமந்நமஹமந்நம்" என்று களிக்குமாப்போலே கயல்களானவை அங்கேயிங்கேதுள்ளி விளையாடாநின்றுள்ள திருநாங்கூர். ... ... ... ... க.

---

"காளை" என்று இப்போது சொல்லுகைக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவ்வமிர்தத்தை ஸ்ருஜித்தார்க்கித்யாதி.) ஸமஷ்டிவ்யாஹாராதாத்பர்யம் (அவ்வமிர்தத்தைநாய்க்கிட்டாயித்யாதி.) "நாடோறும்மகிழ்ந்து - மருவியுறை - இனிதாகோயில்" என்றதீவயம் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்கிறார் (பெரியவித்யாதி.)

அதுக்கு - எம்பெருமான் பெரியஹர்ஷத்தோடேவர்த்திக்கைக்கு. கயல்கள் பொழிலில்விளையாடக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (நீரிலேயித்யாதி.) க.

௨.—திண்ணியதோரரியுருவாய்த் திசையனைத்தும்நடுங்கத்
தேவரொடுதானவர்கள் திசைப்பவிரணியனை
நண்ணியவன்மார்வகலத் துகிர்மடுத்தநாதன்
நாடோறும்மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
எண்ணில்மிகுபெருஞ்செல்வத் தெழில்விளங்குமறையும்
ஏழிசையும்கேள்விகளு மியன்றபெருங்குணத்தோர்
மண்ணில்மிகுமறையவர்கள் மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௨.

ப-ரை.— திசையனைத்தும் - திக்கிலுள்ளவர்கள், நடுங்க - பயப்படவும், தேவரொடுதானவர்கள் - தேவதாநவாதிகள், திசைப்ப-கலங்கவும், திண்ணியதோர் அரிஉருவாய் - த்ருடமாய்அத்விதீயமான ந்ருஸிம்ஹரூபியாய், இரணியனை - ஹிரண்யாஸுரனை, நண்ணி - கிட்டி, அவன் - அவ்வஸுரனது, மார்வகலத்து - விசால வக்ஷஸ்தலத்தில், உகிர்மடுத்த - நகங்களையூன்றிக்கிழித்த, நாதன்-ஸ்வாமி, நாடோறும்மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில்—; எண்ணில்மிகுபெருஞ்செல்வத்து - கணநாதீதமஹத்ஸம்பத்தையுடைத்தாய், எழில்விளங்கு - அழகுவிளங்காநின்றுள்ள, மறையும் - வேதங்களும், ஏழிசையும் - ஸப்தஸ்வரங்களும், கேள்விகளும்-அங்கங்கள்முதலானவற்றால்வரும்கேள்விகளும், இயன்ற - நிறைந்த, பெருங்குணத்தோர்- ஆத்மகுணஸம்பந்நராய், மண்ணில்மிகு - பூஸுரருக்குள்சிறந்தவரான, மறையவர்கள் - ப்ராஹ்மணர்கள், மலிவெய்தும் - நெருங்கிவர்த்திக்கிற, நாங்கூர்—. (௨)

இரண்டாம்பாட்டு. (திண்ணியவித்யாதி) ஹிரண்யனைக்கண்டு பிற்காலியாதபடி திண்மையுடையதொரு ஸிம்ஹமாய், திக்குக்களிலுள்ளாரெல்லாரும் நடுங்க, தேவர்தானவர்கள் கலங்க, ஹிரண்யனைக் கிட்டி அகன்றமார்விலே உகிரைநட்டுப்பிளந்த ஸர்வேஸ்வரன் நாள்தோறும் அழகழிந்து ஸ்நேஹித்துப்பொருந்தி வர்த்திக்கிறதேசம். (எண்ணிலித்யாதி) எண்ணிறந்த ஐஸ்வர்யமும், நிர்தோஷத்வத்தால் வந்த அழகுவிளங்காநின்ற வேதமும், ஸப்தஸ்வரங்களும்,

இரண்டாம்பாட்டு.— (திண்ணியதோரரியுருவாய்) ஹிரண்யனுடைய சீற்றமென்றால் பிற்காலியாதபடியான நரஸிம்ஹமாய், திக்குக்களெல்லாமஞ்ச, அநுகூலப்ரதிகூலவிபாகமின்றியே எல்லாருமொக்கக் கலங்க. (இரணியனைநண்ணி) எரிகிற பெருநெருப்பிலே சென்று கிட்டுவாரைப்போலே க்ரூரனான பையலைத்தீண்டி. (அவன்மார்வகலத்துகிர்மடுத்த) போக்குத்தேடி இடங்காணாமையாலே சுழித்துவருகிற ருதிரவெள்ளத்துக் கொருவழிகண்டு விட்டாப்போலே, அவனுடைய பரந்தமார்பிலே திருவுகிரையூன்றி அவனையழியச்செய்து,[கூறு] தன்னுடைய ஈஸ்வரத்வத்தை நிலைநிறுத்தினவன் நித்யவாஸம்பண்ணுகிறதேசம்.

( எண்ணில்மிகுவித்யாதி ) எண்ணிறந்திருப்பதாய் நிர்தோஷத்வாதிகளால் வந்த நிரவதிகஸம்பத்தையுடைத்தாய், அவ்வழியாலே அழகு விளங்காநின்றுள்ள வேதமும், ஸப்தஸ்வரங்களும்,

இரண்டாம்பாட்டு.— (திண்ணியதோரித்யாதி.) கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துதமான ஹிரண்யநிரஸநத்தை ஸப்ரகாரமாகவநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

ங.— அண்டமுமிவ்வலைகடலு மவனிகளுமெல்லாம்
அமுதுசெய்ததிருவயிற்ற னரன்கொண்டுதிரியும்
முண்டமதுநிறைத் தவன்கண் சாபமதுநீக்கும்
முதல்வனவன் மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
எண்டிசையும் பெருஞ்செந்நெ லிளந்தெங்குகதலி
யிலைக்கொடியொண் குலைக்கமுகோடிசலிவளம்சொரிய
வண்டுபலவிசைபாட மயிலாலுநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ங.

பதவுரை.— அண்டமும் - அண்டங்களையும், இவ்வலைகடலும் - சதாவர்தஸாகரங்களையும், அவனிகளுமெல்லாம் - ஸப்தத்வீபபூமிகளெல்லாவற்றையும், அமுது செய்த - கபளீகரித்த, திருவயிற்றன் - திருஉதரமுடையவனும், அரன் - பாபத்தாலுபஹதனான ருத்ரன், கொண்டு - பரிக்ரஹித்துக்கொண்டு, திரியும் - திரிகிற, முண்டமது நிறைத்து - தலையோட்டைநிறைத்து, அவன்கண் சாபமதுநீக்கும் - அவனையொருபோதும் விடாதேயிருக்கிறபாபத்தைப்போக்கியருளிய, முதல்வனவன் - ஸர்வநியந்தாவானஸ்வாமி, மகிழ்ந்தினிது மருவியுறைகோயில் —; எண்டிசையும் - பார்த்தபார்த்தவிடமெங்கும், பெரும்செந்நெல் - பெரியசெந்நெற்களும், இளம்தெங்கு - இளமையையுடைத்தான நாரிகேளங்களும், கதலி - வாழைகளும், இலைக்கொடி - வெற்றிலைக்கொடிகளும், ஒண்குலைக்கமுகோடு - அழகிதாகக்காய்த்த கமுகமரங்களோடே, இசலி - ஸ்பர்த்தித்துக்கொண்டு, வளம்சொரிய - ஸம்ருத்தியைச் சுரக்க, இவற்றிலேயுக்தமதுபானம்பண்ணி, வண்டு - வண்டுகள், பலஇசைபாட - அநேகராகங்களைப்பாடாநிற்க, அவற்றைக்கேட்டு, மயில்ஆலும் - மயூரங்கள் நர்த்தநம் பண்ணுகிற, நாங்கூர் —. ... ... ... ... ... (ங)

---

இவற்றிலெல்லாம் ச்ரவணத்தால்வந்த ஆத்மகுணங்களையுமுடையராய். (மண்ணவரித்யாதி) பூமியில் வித்வான்களில் மிக்க வேதத்தையுடைய ப்ராஹ்மணர் மிக்க தேசம். ... ... ... உ.

---

அங்கங்களும்,மற்றுமுள்ளவற்றால்வரும்கேள்விகளும்,இவற்றைவாஸனைபண்ணி அதனால் வந்த ஆத்மகுணங்களால் மிக்கிருப்பாராய். (மண்ணவரில்) "பூமியிலிதுக்கிவனே கடவான், இதுக்கிவனே கடவான்" என்னும்படி சமைந்த ப்ராஹ்மணர் நெருங்கிவர்த்திக்கிற தேசம். ... ... ... ... ... உ.

---

"ஏழிசை" என்றது - ஆறங்கங்களுக்கும் மீமாம்ஸாதிகளுக்குமுபலக்ஷணமென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (அங்கங்களும்மற்றுமென்று.) "கேள்வி-" ச்ரவணமென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (உள்ளவற்றாலித்யாதி.) வாஸனைபண்ணியென்றது - மநநத்தை; இது, "இயன்ற" என்றதினர்த்தம். உ.

மூன்றாம்பாட்டு.— (அண்டமித்யாதி.) ஓராபத்தனைப்ரஹ்லாதனுக்குதவினவளவன்றிக்கே, ஸகலலோகங்களையும் வயிற்றிலேவைத்து தன்னாலேதானேயிடர்பட்ட ருத்ரனுக்குமுதவினனென்று ஸௌலப்யத்தையருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

மூன்றாம்பாட்டு. (அண்டமித்யாதி) அண்டமும், அலைமோதுகிற கடலும், ஸமுமிகளும், இவற்றையெல்லாமமுதுசெய்த திருவயிற்றன். (அரனித்யாதி) ஹரன் கையிலே கொண்டுதிரிகிற தலையோட்டைநிறைத்து அவனிடத்து ஸாபத்தைப்போக்கின ஸர்வேஸ்வரன், மகிழ்ந்து ஸ்நேஹித்து நித்யவாஸம்பண்ணுகிற கோயில். (எண்டிசையுமித்யாதி) எட்டுதிக்கும், பெரியசெந்நெலையும் இளந்தெங்குகளையும் வாழைகளையும் வெற்றிலைக்கால்களையும் அழகிய தாறுகளையுடைய கமுகுகளையுமுடைத்தாய், இவைதான் ஒன்றுக்கொன்று இசலி நன்மைகளைச்சொரிய, வண்டுகள் பல இசைகளைப்பாட, மயில்கள் ஆலித்து ஆடும் நாங்கூர். ... ... ... ... ௩.

நாலாம்பாட்டு. (கலையித்யாதி) மேகலைவிளங்காநின்ற அகன்ற அல்குலையுடைய ஸூர்ப்பணகியை

மூன்றாம்பாட்டு.— (அண்டமித்யாதி) அண்டமும், இந்தலோகத்தைச் சூழப்போந்து அலையெறிகிற கடலும், புமிபங்களையுமெல்லாம் அமுதுசெய்த திருவயிற்றையுடையவன். (அரனித்யாதி) ஸாபத்தாலே உபஹதனாயிருக்கிற ருத்ரன் கொண்டுதிரிகிற தலையோட்டைநிறைத்து, அவனை யொருநாளும்விடாதேயிருக்கிற ஸாபத்தைப்போக்கி, இப்படி ஸர்வநியந்தாவானவன் வர்த்திக்கிறகோயில்.

(எண்டிசையித்யாதி) பார்த்த பார்த்தவிடமெங்கும், பெரிய செந்நெல், முக்தர் பஹுவிஸஹிவார்ஷிகராயிருக்குமாப்போலே இளைதாயிருக்கிற தெங்கு, வாழை, வெற்றிலைக்கொடி, அழகிதாகக் காய்த்த கமுகுகளோடேகூடி, ஒன்றுக்கொன்று இசலி ஸம்பத்தியையச் சுரக்க, இவற்றிலே புக்கு மதுபானம்பண்ணி, உள்ளுப்புக்க த்ரவ்யம் இருந்தவிடத்திலிருக்கவொட்டாமையாலே வண்டுகளானவை பல இசைகளையும்பாட, அவற்றைக்கேட்டு மயில்களானவை ஆடாநின்றுள்ள. ௩.

நாலாம்பாட்டு.— (கலையித்யாதி) விளங்காநின்றுள்ள பரியட்டத்தையுடைத்தான அகன்ற நிதம்ப ப்ரதேஸத்தையுடையளாய்க்கொண்டுதோற்றின, ராக்ஷஸஜாதியாகக்கொண்டாடும்படியிருக்கிறபெண்ணை.

"அண்டமும்" என்றது - ஆகாஸமென்றாய், உபரிதநலோகங்களையெல்லாம சொல்லுகிறது. ... ... ... ... ... ௩.

நாலாம்பாட்டு.—(கலையித்யாதி.)நாட்டார்பழத்தைப்போக்கினவளவன்றிக்கே, * நித்யாநபாயிநியான பிராட்டிக்கு உதவினவனென்றநுஸந்தித்து, அந்தப்பிராட்டிபிரிவுவருகைக்கடியான ஸூர்ப்பணகியின் மூக்கறுத்ததோள்வலியை யிப்பாட்டிற்சொல்லி, மேலிற்பாட்டிலே பிராட்டிக்குதவினமையையருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

மூ.—கலையிலங்குமகலல்கு லரக்கர்குலக்கொடியைக்
காதொடுமூக்குடனரியக் கதறியவளோடித்
தலையிலங்கைவைத்து மலையிலங்கைபுகச்செய்த
தடந்தோளன்மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
சிலையிலங்குமணிமாடத்துச்சிமிசைச்சூலம்
செழுங்கொண்டலகடிரியச சொரிந்தசெழுமுத்தம்
மலையிலங்குமாளிகைமேல் மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௪.

ப - ரை.— இலங்குமகலை - விளங்காநின்றுள்ள பரியட்டத்தையும், அகல் அல்குல - அகன்ற நிதம்பப்ரதேஶத்தையுமுடையளாய்க்கொண்டுதோற்றின, அரக்கர்குலம் - ராக்ஷஸகுலத்திற்பிறந்த, கொடியை - கொடிபோலுமிடையையுடைய ஶூர்ப்பநகையினது, காதொடுமூக்கு - கர்ணநாஸிகைகளை, உடன் அரிய - ஏககாலத்திலே அறுக்க, அவள் - அச்சூர்ப்பநகையானவள், கதறி - கோவெனக்கூப்பிட்டு, தலையில - தனதலைமேலே, அம்கைவைத்துஓடி - அழகியகையைவைத்துக்கொண்டு ஓடோடி, மலை - மலையின்மேல இருக்கிற, இலங்கைபுகச்செய்த - லங்கையிலேபுகுமபடிபண்ணின, தடம்தோளன - மஹாபாஹுவான சக்ரவர்த்திதிருமகன், மகிழ்ந்தினிது மருவியுறைகோயில—; சிலையிலங்கு - ஒளிவிளங்குகிற, மணிமாடத்து உச்சிமிசை - மணிமாடஶிகரத்தினமேலே இருக்கும், சூலம் - சூலங்கள், செழுங்கொண்டல - ஸமுத்ரத்திற்புக்கு உதகங்களையும் முத்துக்களையுமுடைய வாரிக்கொண்டு தொட்டாரமேலே தோஷமாமபடி மெள்ளமெள்ள நகழ்ந்துவருகிற மேகங்களினுடைய, அகடுஇரிய - கீழ்வயிற்றைப்பேதிக்க, உடனே, சொரிந்த-ஸ்ரவித்த, செழுமுத்தம-அழகியமுத்துக்களானவை, மாளிகைமேல - மாளிகைகளின்மீது, மலையிலங்குமலிவெய்தும - ஒருமலைமேலே மலைசெய்துவைத்தாப்போற குவிந்துகிடக்கிற, நாங்கூர்—. ... ... ... ... ... ... (௪)

மூக்கையும செவியையுமறுத்துவிட, அவள்தலையிலே கையைவைத்துக் கூப்பிட்டுக்கொண்டோடி மலைமேலேயான லங்கையிலேபுகும்படி செய்தபெரியதோளையுடைய அசசக்ரவர்த்தித்திருமகன் மகிழ்ந்துவிரும்பிவாத்திக்கிறதேஶம்.

தனக்கொரு பரியட்டமும் பெண்மையுமுடையளாய் வந்து தோற்றினளாயத்து. (காதித்யாதி) அவளேறிட்டுக்கொண்டு வந்தவடிவை அப்போககித் தானும்படிபண்ணிவிட்டானாய்த்தது. (கதறியித்யாதி) அந்நேரம் அவளும கூப்பிட்டுககொடு தலையிலே கையைவைத்து மலையின் மேலேயான லஙகையிலே புகும்படிபண்ணின தோள்வலியையுடையவன் நித்யவாஸம்பண்ணுகிற கோயில்.

ராக்ஷஸியையிவரிப்படி வர்ணிக்கைக்கு ப்ரக்ஸதோபயோகமென்னென்னவருளிச்செய்கிறார (தனகித்யாதி;)ஏறிட்டுக்கொண்டுவந்தவடிவையென்றது-அலங்கரித்துக்கொண்டு ஆஹிரூபயத்தோடுவந்தவடிவையென்றபடி. தானும்படி-விரூபையாம்படி. ராக்ஷஸிகளுக்கு வைரூப்யம்ஸஹஜமென்று திருவுள்ளம். இத்தால் - கள்ளவேஷத்தைக்காதலித்துக் காட்டிவிட்டானென்றதாய்த்து. அக்கையென்றது- “அங்கை” என்றுமெலலொற்றாகக்கிடக்கிறதாய், ஶூர்ப்பணகியென்று பேர்பெறும்படி கோரமானகையென்றுதல், அம என்று - அழகாய், விபரீதலக்ஷணயாகோரமானகைஎன்றுதல் ஸ்வாரஸ்யம் கண்டுகொள்வதென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (தலையிலேகையைவைத்தென்று.)

மூ.—மின்னனையநுண்மருங்குல் மெல்லியற்காவிலங்கை
வேந்தன்முடியொருபதும் தோளிருபதும்போயுதிரத்
தன்னிகரிற்சிலைவளைத்தன்றிலங்கைபொடிசெய்த
தடந்தோளன்மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
செந்நெலொடுசெங்கமலம் சேல்கயல்கள்வாளை
செங்கழுநீரொடுமிடைந்து கழனிதிகழ்ந்தெங்கும்
மன்னுபுகழ்வேதியர்கள் மலிவெய்துநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ரு.

ப-ரை.—அன்று-அக்காலத்திலே; மின் அனைய-கொடிமின்னலையொத்த, நுண்மருங்குல் - சிற்றிடையையும், மெல்லியற்கா-மிருதுஸ்வபாவத்தையுமுடையளான பிராட்டிக்காக, இலங்கைவேந்தன-லங்காதிபனான ராவணனுடைய, முடியொருபதும்-கிரீடமிலகும் பத்துத்தலைகளும், தோளிருபதும்-இருபதுகைகளும், போயஉதிர-சதசகலங்களாயுதிர்ந்துபோம்படி, தன்னிகரில்சிலைவளைத்து-ஒப்பற ஓங்கிய தன் கோதண்டத்தைவளைத்து, இலங்கை - லங்காநகரத்தை, பொடிசெய்த - பொடியாக்கின, தடம் தோளன் - மஹாபாஹுவான சக்ரவர்த்தித் திருமகன், மகிழ்ந்தினிதுமருவியுறை கோயில்—, செந்நெலொடு-செந்நெற்களும், செங்கமலம் - செந்தாமரைப்பூக்களும், சேல்கயல்கள்வாளை -சேல்மீன் கயல்மீன் வாளைமீன்களும், ஆகியஇவைகள், செங்கழுநீரொடு- செங்கழுநீர்ப்பூக்களுடனே, மிடைந்து-சேர்ந்துகொண்டு, கழனி யெங்கும் - கழனிகளிலெல்லாம், திகழ்ந்து - ப்ரகாசிக்கவும், மன்னுபுகழ் - நித்யநிர்தோஷமானகீர்த்தியையுடைய, வேதியர்கள் - ப்ராஹ்மணர்கள், மலிவெய்தும்-வீதியெங்கும்நெருங்கி வர்த்திக்கும்படியாகவுமிருக்கிற, நாங்கூர்—. (ரு)

(சிலையிலங்கித்யாதி) மலைபோலே விளங்காநின்றுள்ள மணிமயமான மாடங்களின்மேல் நின்ற சூலங்களானவை, அழகிய கொண்டலானவை கடலிலேபுக்கு நீரையும் முத்தையும் முகந்துகொண்டு கனத்தாலே நகழ்ந்து நகழ்ந்து வருகிறவற்றினுடைய கீழ்வயிற்றைப்பீறிட, அவை கோணிகை வாய்விட்டாப்போலே சொரிந்த நல்ல முத்துக்களானவை. (மலையிலங்கித்யாதி) மாளிகைகளின்மேலே. மலைமேலே மலை செய்துவைத்தாப்போலேயாய்த்துக் குவித்துக்கிடப்பது. ... ச.

(சிலையித்யாதி) சிலையென்று - வில்லுக்கு பர்யாயசப்தமாய், வில்லென்று - ஒளியாய், ஒளிவிளங்காநின்றுள்ள மணிமயமான மாடங்களி னுச்சியின்மேலேயுண்டான சூலமும். இதாய்த்து அவ்வூரில் ஸம்ருத்திகளுடைய விருக்கும்படி. மேகங்களானவை கடலிலேபோய்ப் புக்கு முத்தையுடைய வாரிக்கொண்டு (க) நகழ்ந்து நகழ்ந்து நடக்கமாட்டாதேவரும் ; மாளிகைகளில் சூலங்களானவை இவற்றினுடைய கீழ்வயிற்றைப்போழும் ; முன்பே தொட்டார்மேலே தோஷமாயிருக்கிறவவை முத்தைச்சொரியும். (மலையிலங்குமாளிகைமேல்மலிவெய்தும்) அப்போது ஒருமலைமேலே மலைசெய்துவைத்தாப்போலேயாய்த்துக் குவித்துக்கிடப்பது. ... ... ... ச.

சூலமும் - ஸம்ஹாலங்காரமான பொற்குடங்களின் நுனியும். போழும்-பொத்துக்கும்; பீறுமென்றபடி. ... ... ... ... ... ச.

(க) நகழ்தல் - நகர்தல் - ஊர்தல்.

அஞ்சாம்பாட்டு. (மின்னித்யாதி) மின்னொத்த இடையையும் மார்த்தவத்தையுமுடைய ஸ்ரீஜநகராஜன்திருமகளுக்காக, லங்கேஶ்வரனான ராவணன் தலைபத்தும் தோளிருபதும் அற்றுவிழ. (தன்னிகரித்யாதி) தனக்கொப்பில்லாத ஸ்ரீஶார்ங்கத்தைவளைத்து லங்கையைப் பொடியாக்கின பெரியதோள்களையுடைய சக்ரவர்த்தித்திருமகன் விரும்பி வர்த்திக்கிற தேஶம். (செங்நெலித்யாதி) செந்நெலுடனே, செந்தாமரை, சேலும், வாளையும், செங்கழுநீரோடே நெருங்க, கழனி, இவற்றிலே விளங்கும். (மன்னுபுகழித்யாதி) நித்யநிர்தோஷமான புகழையுடையவேதத்துக்கு வ்யாஸபதம்செலுத்தும் ப்ராஹ்மணர் மிக்க தேஶம். ... ... ... ... ... ௫.

ஆறும்பாட்டு. (பெண்மையித்யாதி) மிக்க ஸ்த்ரீத்வத்தையுடையளாய்வந்த பெரியபேயினுடைய வுயிரானது மாளவுண்டு, பெரிய பேய்ப்பெண்ணை

அஞ்சாம்பாட்டு.— (மின்னனையவித்யாதி) மின்போலேயிருக்கிற நேரியஇடையையுடையளாய் மிதிலஸ்வஹாவையாயிருக்கிற பிராட்டிக்காக, லங்கைக்கு நிர்வாஹகனாயிருக்கிற ராவணனுடைய பத்துத்தலையும்இருபது தோளும் போயுதிரும்படியாக, தனக்கு ஒப்புண்டாகிலும் உபமாநாந்தரங்களாயிருக்கிற வில்லைவளைத்து அன்று லங்கையைப் பொடிபடுத்தின தோள்வலிமைகையுடையவன். பிராட்டிக்குப்பண்ணின வ்யாபாரத்தை அநுகூலரெல்லார்க்கு மொக்கப் பண்ணிற்றாக அவன் ப்ரீதியோடே வர்த்திக்கிற தேஶமாகையாலே, கண்டார்க்கெல்லாமினிதாமபடியிருக்கும்தேஶம்.

(செந்நெலித்யாதி) இதுவாய்த்து கழனியானப்ரதேஶமடையவிருக்கும்படி. செந்நெலோடேகூட, தாமரை, சேல், கயல்கள்,வாளை, செங்கழுநீரோடு மிடைந்து விளங்காநிற்குமாய்த்து வயலடங்க. (மன்னுபுகழித்யாதி) இதுவாய்த்து ஸ்தலமான ப்ரதேஶமிருக்கும்படி. நித்யமான புகழையுடையராயிருக்கிற ப்ராஹ்மணர்மிக்கிருக்கிற. இதுவாய்த்து ஊரும் பிடாகையுமிருக்கும்படி. ... ... ௫.

ஆறும்பாட்டு.— (பெண்மையித்யாதி) * நாரீணாமுத்தமையான யஶோதைப்பிராட்டிவடிவைக்கொண்டு வந்தபூதனையை,

---

அஞ்சாம்பாட்டு.— (மின்னித்யாதி.) மிடைந்து - நெருங்கி. பிடாகையும் - வயலும். ... .. ... ... ... ... ௫.

ஆறும்பாட்டு.— (பெண்மையித்யாதி.) இதே-நரஸிம்ஹாவதாரமும், அநந்தரம், ராமாவதாரமுமாக வநுஸந்தித்தார்; அநந்தராவதாரமாய் ஆழ்வார்களையெல்லாமீடுபடுத்தும் க்ருஷ்ணாவதாரத்தை மேல் மூன்றுபாட்டாலுமநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

மூ.—பெண்மைமிகுவடிவுகொடு வந்தவளைப் பெரிய
பேயினது வுருவுகொடுமாளவுயிருண்டு
திண்மைமிகுமருதொடு நற்சகடமிறுத்தருளும்
தேவனவன் மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
உண்மைமிகுமறையொடு நற்கலைகள் நிறைபொறைகள்
உதவுகொடையென்றிவற்றினொழிவில்லாப்பெரிய
வண்மைமிகுமறையவர்கள் மலிவெய்துநாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௯.

ப-ரை.—பெண்மைமிகுவடிவுகொடு-உத்தமஸ்த்ரீசரீரத்தைத்தரித்துக்கொண்டு, வந்தவளை-வஞ்சிக்கவந்தபூதனையானவள், பெரியபேயினது உருவுகொடு-தன்நிஜமானவிக்ர்தரூபவம்கொண்டு, மாள-மாயும்படி,உயிர்உண்டு-அவள்ப்ராணனைஸ்வீகரித்தும்,திண்மைமிகு-அஸுராவேசத்தால்மிக்கதிண்மையையுடைய, மருதொடு-மருதமரத்தையும், நற்சகடம் - தொடங்கினகார்யத்தைமுடிக்கத்தலைக்கட்டவல்லசக்தியையுடைய சகடத்தையும், இறுத்து - முறித்தும், அருளும் - இன்னுமிப்படியே துஷ்டநிக்ரஹம்பண்ணியருளிய, தேவனவன - நந்தநந்தனனான ஸ்ரீக்ர்ஷ்ணன், மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில— ; உண்மைமிகுமறையொடு - யதாபூதவாதிகளான வேதங்களும், நற்கலைகள் அவற்றின்நல்ல அங்கங்களும், நிறை - இவற்றின்வாஸனையால்வந்தகுணபூர்த்தியும், பொறைகள் - க்ஷமைமுதலானவைகளும்,உதவுகொடை என்றிவற்றின் - உபகர்தி ஔதார்யமென்கிறவிவற்றினுடைய, ஒழிவில்லாப்பெரிய வண்மை - ஓபாதேமிக்கிருந்துள்ளவளங்களும், மிகு - நிறைந்த, மறையவர்கள்-ப்ராஹ்மணர்கள், மலிவெய்தும் - நெருங்கிவர்த்திக்கிற, நாங்கூர்—. (௯)

---

மிகுத்த தாயுருக்கொண்டு வந்தவளைப் பின்னைப்பேயுருவைக்கொண்டு அவளுயிரை மாளவுண்டு.(திண்மையித்யாதி) நிலையுடையமருதுகளுடனே நல்ல சகடத்தையும் முறித்தருளும் க்ருஷ்ணன மிகவும் விரும்பிவர்த்திக்கிறதேசம்.

---

பெரியபேயின்வடிவையுடையளாய்க்கொண்டுமுடிந்துபிணமாய்க்கிடக்கும்படியாகஅவளைமுடித்து,அஸுராவேசத்தாலே மிக்கதிண்மையையுடைய மருது, துடங்கினகார்யத்தைமுடிக்கத்தலைக்கட்டவல்லசக்தியையுடையசகடம், இவற்றையிறுத்தருளி, “ விரோதிபோகப்பெற்றோமிறே!” என்று அத்தாலே தீப்தனான ஸர்வேஶ்வரன் விரும்பிவர்த்திக்கிறதேசம்.

---

சகடத்துக்கு நன்மையேதென்ன ; நல்லபாம்புஎன்னுமாப்போலேக்ரௌர்யாதிஶயத்தைச்சொல்லுமென்றருளிச்செய்கிறார் (துடங்கினவித்யாதி.) “அவன்”என்றத்தால் தோற்றின வேதாந்தப்ரஸித்தியைபற்றவருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரனென்று.)

மூ.— விளங்கனியையிளங்கன்று கொண்டுதிரவெறிந்து
வேல்நெடுங்கணாய்ச்சியர்கள்வைத்ததயிர்வெண்ணெய்
உளங்குளிரவமுதுசெய் திவ்வுலகுண்டகாளை
யுகந்தினிது நாடோறும் மருவியுறைகோயில்
இளம்படிநற்கமுகுகுலைத்தெங்கு கொடிச்செந்நெல்
ஈன்கரும்புகண்வளரக் கால்தடவும்புனலால்
வளங்கொண்டபெருஞ்செல்வம் வளருமணிநாங்கூர்
வைகுந்தவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௭.

ப - ரை.—இளங்கன்றுகொண்டு-வத்ஸாஸுரனைத்தூக்கி, விளங்கனியையுதிர எறிந்து- விளாவாயநின்ற வஸுரனுதிர்ந்துஉயிர்மாயும்படிவீசி, வேல்-வேல்போல, நெடுங்கண் - நீண்டகண்களையுடைய, ஆய்ச்சியர்கள் - கோபஸ்த்ரீகள், வைத்த - தங்களகத்திற்சேமித்துவைத்த, தயிர்வெண்ணெய்-ததிநவநீதாதிகளை, உளம்குளிர - தநதிருவுளளம்குளிரும்படி, அமுதுசெய்து - உண்டு, பின்னும், இவ்வுலகுண்ட - இந்தலோகத்தையடையவமுதுசெய்த, காளை - நவயௌவநன், உகந்தினிது நாடோறு மருவியுறைகோயில—; இளம்படிநல்கமுகு - இளமையைஸ்வபாவமாகவுடைய நல்லகமுகுமரங்களும், குலைத்தெங்கு-குலையையுடைத்தான தென்னமரங்களும், கொடி - வெற்றிலைக்கொடிகளும், செந்நெல - செந்நெற்களும், ஈன்கரும்பு- இனிய கரும்புகளும், ஆகிய இவைகள், கண் வளர -நித்ரை செய்யும்படி, கால்தடவும - கால்தடவாநின்ற, புனலால்வளங்கொண்ட பெருஞ்செல்வம் - ஜலஸம்ருத்தமூலமான ஸிரவஸாம்ராஜ்யங்கள், வளரும - வர்த்தியடையாநின்றுள்ள, அணிநாங்கூர—. ... ... ... ... ... (௭)

---

(உண்மைபித்யாதி) யதாஸஙகவாதியான வேதங்களுடனே, அவற்றினுடைய நன்றான அங்கங்கள், இவற்றில் வாஸனையாலேவந்த ஆத்மகுணங்கள், க்ஷமை, அர்த்திகளர்த்தித்தபோதேகொடுக்கும் ஔதார்யம், இப்படியால்அழகும் ஔதார்யமும் மிக்க ப்ராஹ்மணர் மிக்க நாங்கூர்.

(உண்மைமிக்யாதி) யதாஸஙகவாதியான வேதங்களோடேகூட, அவற்றினுடைய நன்றான அங்கங்கள், இவற்றிலுண்டானவாஸனையாலே வரக்கடவ ஆத்மகுணங்களையுடைய அடக்கம், க்ஷமை, அர்த்திகளர்த்தித்தபோதே அபேக்ஷிதங்களைக் கொடுக்கையாகிற ஔதார்யம், என்றுப்போலே சொல்லுகிறவிவற்றாலொழிவின்றிக்கேயிருக்கிற உதாரானவர்களால் மிக்கிருக்கிற. வண்மை - ஆத்மஸமர்ப்பணம். ௬.

"நிறை" என்றதினர்த்தம் (அடக்கமென்றது.) உதவுகொடை - உதவும்படியான கொடையென்றர்த்தமருளிச்செய்கிறார் (அர்த்திகளித்யாதி.) கீழே ஔதார்யத்தைச் சொல்லி, மீளவும், உதாரரான என்றால புநருக்தமன்றோவென்ன வருளிச்செய்கிறார் (வண்மையித்யாதி.) ... ... ... ...

ஏழாம்பாட்டு. (விளங்கனியித்யாதி) விளவாய்ப்பழுத்து நின்ற அஸுரனை, கன்றாய்த்துள்ளிவந்த அஸுரனையிட்டு உதிரவெறிந்து, வேல்போலே நெடியகண்ணையுடைய ஆய்ச்சியர்வைத்த தயிரையும் வெண்ணெயையும் வயிறுகுளிர அமுதுசெய்து, இந்த லோகத்தையு மமுதுசெய்த தலைவன். காளையென்று - தலைவனுக்குப்பேர். உகந்து இனிதாக நாள்தோறும் பொருந்திவர்த்திக்கிற தேசம். இளமையை ஸ்வபாவமாகவுடைய நல்ல கமுகு, குலைகளையுடைய தெங்கு, வெற்றிலைக்கொடி, செந்நெல், இனியகரும்பு நாள்தோறும் ஒருகண்வைத்து வளர, புனல், கால்நடவும்-அடியிலேதடவிவரும்; இப்படியால்வந்த நன்மையையுடைய பெரிய ஐஸ்வர்யம் வளரும் அழகியநாங்கூர். எ.

---

ஏழாம்பாட்டு.— (விளங்கனியித்யாதி) வத்ஸாஸுரனைக்கொண்டு விளாவாய் நிற்கிற அஸுரன்மேலே உகிரும்படியெறிந்து, வேல்போலே பரந்த கண்ணையுடையராயிருக்கிற இடைச்சிகள் சேமித்துவைத்த தயிரையும் வெண்ணெயையும், ஆஸ்ரிதஸ்பர்ஸமுள்ளதொரு த்ரவ்யமாகையாலே திருவுள்ளமானது குளிரும்படியாக அமுதுசெய்து, அநந்தரம், இந்தலோகத்தையடையத் திருவயிற்றிலேவைத்து, ஸர்வேஸ்வரத்தினுடைய ரக்ஷணத்தைப்பண்ணுகையாலே இளகிப்பதித்திருக்கிறவன்.

(இளம்படி.) இளமையை ஸ்வபாவமாகவுடைத்தாயிருக்கிற கமுகு, குலையையுடைத்தாயிருக்கிற தெங்கு, வெற்றிலைக்கொடி, செந்நெல், இனியகரும்பானது கண்வளரும்படியாகப் புனலானது கால்தடவாநிற்குமாய்த்து. கரும்பானது நாள்தோறும் ஒருகண்ணேறிவரும்படி கால்தடவுமாய்த்துப் புனலானது. நிரவதிக ஸம்பத்தானது மாறாதே செல்லுகிற. ... ... ... ... ... எ.

---

ஏழாம்பாட்டு.— (விளங்கனியித்யாதி.) "வேல" என்றத்தால - நெடுமைதாத்பர்யமாயிருக்க, நெடுமையைச்சொன்னது லக்ஷணயா ஸ்வபுலயவாப்தியென்று (பரந்த) என்கிறார். தயிரும்வெண்ணெயுமமுது செய்தால உள்ளம்குளிருகை அர்த்தஸித்தமாயிருக்க, விசேஷித்ததுக்கு ஹாவம் (ஆஸ்ரிதேத்யாதி.)

இன்கரும்பு என்றது நீட்டிக்கிடக்கிறதாய், அர்த்தமருளிச்செய்கிறார் (இனிய கரும்பென்று.) கால்தடவாநிற்குமென்றது - ஸாது; ஸ்வஹாவார்த்தம் - கால்வழிகளாலே பரம்பாநிற்குமென்று. "கண்வளரும்" என்றதுக்கும் ஸாட்யர்த்தம் ஸ்பஷ்டமென்று திருவுள்ளம்பற்றி, ஸ்வஹாவார்த்தத்தையருளிச்செய்கிறார் (கரும்பானதித்யாதி.) அணிநாங்கூராகைக்குஹேது கீழ்ச்சொன்னதெல்லாமென்று திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார் (நிரவதிகேத்யாதி.) ... ... எ,

மூ.—ஆறுதசினத்தின் மிகுநரகனுரமழித்த
அடலாழித்தடக்கைய னலர்மகட்குமரற்கும்
கூறுகக்கொடுத்தருளும் திருவுடம்ப னிமையோர்
குலமுதல்வன் மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
மாறுதமலர்க்கமலம் செங்கழுநீர்ததும்பி
மதுவெள்ளமொழுக வயலுழவர்மடையடைப்ப
மாறுதபெருஞ்செல்வம் வளருமணிநாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௮.

---

ப-ரை.— ஆறுத - ஒருக்காலாறக்கடவதன்றிக்கேயிருக்கிற, சினத்தின் - கோபத்தையுடையனாய், மிகு - மிகைத்துவாராநின்றுள்ள, நரகன்-நரகாஸுரனது, உரம் - மிடுக்கை, அழித்த—, அடல்ஆழி - யுத்தோந்முகமானதிருவாழியை, தடக்கையன் - தன்பெருங்கையிலேயுடையனாய், அலர்மகட்கும் - பெரியபிராட்டியாருக்கும், அரற்கும் - ருத்ரனுக்கும், கூறுஆக-என்னதென்றுகூறிட்டநுபவிக்கலாம்படி, கொடுத்தருளும்திருவுடம்பன்-தன் திருமேனியைக்கொடுத்துக்கொண்டிருக்கிறஶீலத்தையுடையவனாய், இமையோர்குலமுதல்வன் - நித்யஸூரிகள்திரளுக்கு நிர்வாஹகனான ஸர்வேஶ்வரன், மகிழ்ந்தினிதுமருவியுறைகோயில்—, மாறுதமலர்க்கமலம்- இடைவிடாதமலரையுடையதாமரை, செங்கழுநீர் - செங்கழுநீர்முதலியபூக்கள், ஆகிய இவைகளினின்றும், ததும்பிமதுவெள்ளமொழுக - நெருங்கிப்புறப்பட்டதேன்வெள்ளமெங்குந்தலைதெரியாதபடி பாய்வதினால், உழவர் - கர்ஷகர், வயல்மடையடைப்பமாறுத - தங்கள்தங்கள்கழனிமடைகளை அடைக்க அடைக்கவுமாறாதே வளர்ந்துகொண்டுவருகிற, பெருஞ்செல்வம்வளரும் - மிக்கநீர்ச்செல்வம்நிறைந்த, அணிநாங்கூர்—, ... ... ... ... ... (௮)

---

எட்டாம்பாட்டு. (ஆறுதவித்யாதி) ஆறுதசீற்றத்தையும் மிக்க வலத்தையுமுடைய நரகாஸுரனைக்கொன்ற மிடுக்கையுடைய திருவாழியைப் பெரியகையிலேயுடையவன். (அலர்மகளித்யாதி) பெரியபிராட்டியார்க்கும் ருத்ரனுக்கும் கூறுகக்கொடுத்தருளும் திருவுடம்பன். (இமையோரித்யாதி) நித்யஸூரிகள்திரளுக்கு யாரகாதிகளெல்லாம் தானேயானவன், ப்ரீதி ப்ரகர்ஷத்துடனே நித்யவாஸம்பண்ணுகிறகோயில்.

---

எட்டாம்பாட்டு.—(ஆறுதவித்யாதி) ஒருக்காலாறக்கடவதன்றிக்கேயிருக்கிற சினத்தையுடையனாய் மிகைத்து வாராநின்றுள்ள நரகனுடைய மிடுக்கையழித்த யுத்தோந்முகமான திருவாழியைக் கையிலேயுடையவன், பெரியபிராட்டியார்க்கும் ருத்ரனுக்கும் என்னதென்று கூறிட்டநுபவிக்கலாம்படி திருமேனியைக் கொடுத்துக்கொண்டிருக்கிற ஶீலத்தையுடையவன், நித்யஸூரிகள் திரளுக்கு நாயகனானவன்.

---

எட்டாம்பாட்டு.— (ஆறுதவித்யாதி.) "உரம்" என்றதினாலும் (மிடுக்கையென்றது.) "அலர்மகட்கு" என்றதனாலே - மஹத்வமும், "அரர்க்கு" என்றபூஜ்யோக்தியாலே - அவனுடைய ஸ்வோத்கர்ஷாபிமாநமும், "கூறுக" என்கையாலே- மந்தஸௌஶீல்யமும் தோற்றுகையாலே யருளிச்செய்கிறார் (ஶீலத்தையுடையவனென்று.)

மூ.—வங்கமலிதடங்கடலுள் வானவர்களோடு
மாமுனிவர்பலர் கூடிமாமலர்கடூவி
எங்கள்தனிநாயகனே யெமக்கருளாயென்னும்
ஈசனவன் மகிழ்ந்தினிது மருவியுறைகோயில்
செங்கயலும் வாளைகளும் செந்நெலிடைக்குதிப்பச்
சேலுகளும் செழும்பணைசூழ்வீதிதொறு மிடைந்து
மங்குல் மதியகடுரிஞ்சு மணிமாடநாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமடநெஞ்சே. கூ.

ப - ரை.— வங்கம்மலி - மரக்கலங்களாற்கு றைவற்றிருக்கிற, தடங்கடலுள் - பெரியதிருப்பாற்கடலிலே, வானவர்களோடு மாமுனிவர்பலர்கூடி - தேவர்களோடே ஸநகாதிகளுங்கூடிக்கொண்டுவந்து, முன்பு, மாமலர்கள்தூவி - புஷ்பாத்யுபகரணங்களைத்தூவி, பின்பு, எங்கள் தனிநாயகனே - எங்களுக்குநாதனான ஸர்வேஶ்வரனே, நீர், எமக்கு அருளாய் - எங்கள்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணும், என்னும் - என்று ப்ரார்த்திக்கும்படியிருக்கிற, ஈசனவன் - ஸ்வாமி, மகிழ்ந்தினிதுமருவியுறை கோயில் — ; செங்கயலும் - செவ்வியகயல்மத்ஸ்யங்களும், வாளைகளும் - வாளைமத்ஸ்யங்களும், குளிர்த்தியைப்பற்ற, செந்நெலிடை - செந்நெற்பயிர்களினிடையே, குதிப்ப - தாவ, சேலுகளும் - அப்பயிரினிடையேயிருந்தசேல்மத்ஸ்யங்களும் பகையின்றிக் கூடவேகளித்து வர்த்திக்கிற, செழும்பணைசூழ் - மருதநிலம் சூழ்ந்திருப்பதாய், வீதிதொறும் - தெருக்கள்தோறும், மிடைந்துமங்குல்மதி - ஆகாஶத்திலே ஸஞ்சரிக்கிற சந்த்ரனுடைய, அகடுஉரிஞ்சும் - கீழ்வயிறுதேயும்படியாயுயர்ந்த, மணிமாடம் - மணிமயமானமாடங்களையுடையதாயிருக்கிற, நாங்கூர் —. ... (கூ)

மாறுதபடி தாமரைப்பூவும் செங்கழுநீர்ப்பூவும் மதுததும்பிவெள்ளமிட்டப்பெருக, வயல்கள் பயிர்செய்கிற உழவர் வயல்களில் மடைகளைத் தேன்வெள்ளம்புகப்பயிரழியாதபடி மடைகளைச்செம்ம. இப்படி மாறுத பெருஞ்செல்வம்மிக்கு வருகிற நாங்கூர். ... ... அ.

(மாறுதவித்யாதி) மாறுதமலரையுடைத்தானதாமரை, செங்கழுநீர், இவற்றால்மிக்கு மதுவெள்ளமிட்டுப்பாய, வயலிலுண்டான கர்ஷகரானவர்கள் பயிரழிய வெள்ளம்போமளவானவாறே மடைகளையடைப்பர்கள். (மாறுதபெருஞ்செல்வம்வளரும்) "அங்கேயுடைந்தது, இங்கேயுடைந்தது கிடாய்" என்று "ஸஹ்யப்பெருக்குக் கிடாய்" என்று கூப்பிடுகிற ஆரவாரமேயாய்க்கிடக்குமாய்த்து. அ.

"ததும்பி" என்றதினர்த்தம் (மிக்குஎன்றது.) கீழ்ச்சொன்னதுக்கு உபலக்ஷணமாக செல்வத்தைவிஶேஷிக்கிறார் (அங்கேயித்யாதி.) ... ... ... அ.

ஒன்பதாம்பாட்டு.— (வங்கமித்யாதி.) கீழ்ப்பாட்டில் ஸௌஶீல்யத்தையநுஸந்தித்தவுடனே அவனுடையபரத்வம் திருவுள்ளத்திலூற்றிருந்து அத்தையருளிச்செய்கிறாரென்றுதல், கீழ் க்ருஷ்ணாவதாரம் ப்ரஸ்துதமாகையால் "நாமபர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோமதுராம்புரீம்" என்கிறபடியே - அதுக்கடியான திருப்பாற்கடலையநுஸந்திக்கிறாரென்கிறாரென்றுதல் ஸங்கதி.

ஒன்பதாம்பாட்டு. (வங்கமித்யாதி) மரக்கலங்கள் மிக்க பெரிய கடலிலே, ப்ரஹ்மேசாநாதிகளுடனே ஸநகாதிகளுங்கூடித் தாமரைப் பூக்களைப்பணிமாறி. மாமலர் - தாமரை. (எங்கள்தனிநாயகனே யெமக்கருளாயென்னும்) எங்களுக்கு அத்விதீயனான நிர்வாஹகனே! நீ எங்களைரக்ஷியாய் என்னும் ஸர்வேச்வரன் மகிழ்ந்து இனிதாக வர்த்திக்கிற தேசம். (செங்கயலுமித்யாதி) அழகியகயல்களும் வாளைகளும் செந்நெற்சோலைகளில் குளிர்த்தியைப்பற்ற நடுவேகுதிப்ப, சேல்களானவைகளித்து உகளிக்கும் பெரியமருதநிலம்சூழ். (வீதிதொறுமித்யாதி) ராத்ரியிலே ஸஞ்சரிக்கிற சந்த்ரன் கீழ்வயிறு தேயும்படி ஓங்கின மாடங்களாலே நேர்போகமாட்டாமல் வீதிகள்தோறும் வழிதேடித் திரியும். அன்றிக்கே, வீதிகளெல்லாம் மங்குல்மதி அகடுரிஞ்சும் மணிமாடமென்றுமாம். ... ... ... ... ௯.

பத்தாம்பாட்டு. (சங்கித்யாதி) ஶங்கசக்ராதி திவ்யாயுதங்களை தரிக்கும் புண்டரீகாக்ஷனான ஸர்வேச்வரன்றான் நித்யவாஸம் பண்ணுகிறகோயில்.

---

ஒன்பதாம்பாட்டு.— (வங்கமித்யாதி) மரக்கலங்களால் குறைவற்றிருக்கிற பெரியதிருப்பாற்கடலிலே. மலைக்குச்சிறப்பாக ஆனையையிட்டுச்சொல்லுமாப்போலே, கடலுக்குச்சிறப்பாக மரக்கலங்களையிட்டுச்சொல்லக்கடவது. தேவர்களோடே ஸநகாதிகளுங்கூட புஷ்பாத்யுபகரணங்களைத்தூவி, "எங்களுக்குநாயகனான ஸர்வேச்வரனே, எங்கள்பக்கலிலே க்ருபையைப்பண்ணியருளவேணும்" என்னும் ஸர்வேச்வரன் ப்ரீதிபூர்வகமாக நித்யவாஸம்பண்ணுகிறதேசம்.

(செங்கயலித்யாதி) அழகிய கயலும் வாளைகளும் குளிர்த்தியைப் பற்றச்செந்நெலிடையிலே தாவ, சேல்களானவை களித்து வர்த்தியாநின்றுள்ள மருதநிலம் சூழ்ந்திருக்குமாய்த்து. தெருவுகள்தோறும் ஆகாசத்திலே ஸஞ்சரிக்கிற சந்த்ரனுடைய கீழ்வயிறு தேயும்படியான மணிமயமான மாடங்களையுடைய. ... ... ௯.

பத்தாம்பாட்டு.— (சங்கித்யாதி) ஆச்ரிதார்த்தமாக ஸ்ரீபஞ்சாயுதங்களையும் தரித்துக்கொண்டிருக்கிற புண்டரீகாக்ஷனான ஸர்வேச்வரன் நித்யவாஸம்பண்ணுகிறதேசம்.

---

வங்கங்களைச்சொன்னதுக்கு ப்ரசக்தோபயோகமென்னென்ன வருளிச்செய்கிறார் (மலைக்கித்யாதி.) கவிஸமயியாலே சொன்னாரென்று கருத்து.

(தெருவுகள்தோறும்) என்றவநுஸாரம், மிடைந்திருக்கிற-நெருங்கியிருக்கிற என்று கூட்டியநுஸந்திப்பது. "மங்குல்" என்றதினார்த்தம் (ஆகாசத்திலேயென்றது.) ௯.

பத்தாம்பாட்டு.— (சங்கித்யாதி.) சங்கும், மலிவுடைய - மிடுக்கின்மிகுதியுடைய, தண்டும், சக்கரமும், முதலென்றத்தாலே - மற்றை வாளும் வில்லுமான வ்வற்றைக்கொண்டு கண்முன்னே பூர்வத்திருப்போலே தரித்துக்கொண்டிருக்கிற தாமரைபோன்ற நெடியகண்ணுடைய பிரான்றானென்று வாக்யார்த்தமுட்கொண்டு

மூ·—சங்குமலிதண்டுமுதல் சக்கரமுனேந்தும்
தாமரைக்கண்ணெடியபிரான்றானமரும்கோயில்
வங்கமலிகடலுலகில் மலிவெய்து நாங்கூர்
வைகுந்த விண்ணகர்மேல் வண்டறையும்பொழில்சூழ்
மங்கையர்தம்தலைவன் மருவலர்தமுடல்துணிய
வாள்வீசும்பரகாலன் கலிகன்றிசொன்ன
சங்கமலிதமிழ்மாலை பத்திவைவல்லார்கள்
தரணியொடுவிசும்பாளும் தன்மைபெறுவாரே. ௧௦.

ப-ரை.— சங்கு - சங்கமும், மலி - திருடமான, தண்டு-கதையும், சக்கரம்-சக்கரமும், முதல் - இவைமுதலான சட்காராங்களும், ஆகிய இவற்றை, முன்-கண்முன்னே, ஏந்தும் - தரித்துக்கொண்டிருக்கிற, நெடிய-நீண்ட, தாமரைக்கண்-தாமரைபோன்றதிருக்கண்களையுடைய, பிரான்-மஹோபகாரகரான ஸர்வேச்வரன், அமரும்கோயில்-நித்யவாஸம்பண்ணும் திவ்யதேசமாய், வங்கம்-மரக்கலங்கள், மலி-நிறைந்த, கடல் - கடல்சூழ்ந்த, உலகில் - பூமியில், மலிவெய்து - ஸம்ருத்தமிக்கிருக்கிற, நாங்கூர் - திருநாங்கூரில், வைகுந்தவிண்ணகர்மேல் - வைகுந்தவிண்ணகர் விஷயமாக; வண்டு - வண்டுகள், அறையும் - சப்தியாநின்றுள்ள, பொழில்-பொழிலாலே, சூழ் - சூழப்பட்ட, மங்கையர்தம்- திருமங்கையிலுள்ளார்க்கு, தலைவன் - ப்ரதானராய், மருவலர்தம் உடல் - சத்ருக்கள் சரீரங்கள், துணிய - சின்னம் பின்னமாம்படி, வாள் வீசும் - கட்கத்தைவீசுகிற, பரகாலன்-பரகாலனென்னுந்திருநாமத்தையுடையவராய், கலிகன்றி - கலிவைரியான ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், சங்கம் மலி-கவிஸங்கம் கொண்டாடத்தக்க, தமிழ்மாலை - த்ராவிடப்ரபந்தஸந்தர்ப்பத்தையுடைத்தான, இவைபத்து - இப்பத்துப்பாட்டுக்களையும், வல்லார்கள் - அப்யஸிக்கவல்லவர்கள், தரணியொடு - பூமியையும், விசும்பு - பரமாகாசத்தையும், ஆளும்-ஆளும்படியான, தன்மை - அதிசயத்தை, பெறுவார் - உடையராகப்பெறுவர்கள். (௧௦)

(வங்கமித்யாதி) கடல்சூழ்ந்த பூமியில் மரக்கலம்பெருத்தையுடைத்தான திருநாங்கூரிலே வைகுந்தவிண்ணகர் விஷயமாக. (வண்டறையுமித்யாதி) வண்டுபாடும் பொழில்சூழ் திருமங்கையிலுள்ளார்க்கு தலைவராகர். (மருவலரித்யாதி) சத்ருக்களுடல் துணியும்படி. வாள்வீசும் பரகாலன்கலிகன்றிசொன்ன. (சங்கமித்யாதி) சங்கத்தார் பரிசயம்கொண்டாடும்படியான தமிழ்மாலையிப்பத்தையும் அப்யஸிக்கவல்லவர்கள்,

---

மரக்கலத்தையுடைத்தான கடல்சூழ்ந்த பூமியில் ஸம்ருத்தி மிகுந்திருக்கிற திருநாங்கூரிலே வைகுந்தவிண்ணகரிலே கவிபாடிற்று. கவிபாடினவர் – மதோன்மத்தமான வண்டுகள் ஒலியாநின்றுள்ள பொழிலாலேசூழப்பட்ட திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதானரான[கூறு] ஆழ்வார், சத்ருக்களுடல் துணியும்படியாக வாள்வீசுகிற, பரகாலன்-ஆழ்வார் அருளிச்செய்த, சங்கப்புலவர்கள் திரளவிருந்து தமிழ்கொண்டாடப்புக்கால் இத்தையேகொண்டாடவேண்டும்படியான தமிழ்த்தொடை பத்தையும் வல்லவர்கள்,

---

தாத்பர்யமருளிச்செய்கிறார் ( ஆஸ்ரீதேத்யாதி. ) சங்கப்புலவரென்றது - கவி[ஸமு] ஸம்மதத்தையுடைத்தான சங்கப்பலகையில் வித்வான்களென்றபடி. ... ௧௦.

ஜீயர்திருவடிகளேசரணம்.

உபயவிபூதியையுமாளும்படியான வைபவத்தைப்பெறுவர். ௧0.

நஞ்ஜீயர் திருவடிகளே ஶரணம்.

---

உபயவிபூதியும் தாங்களிட்டவழக்காம்படியான ஸ்வபாவத்தையுடையராகப்பெறுவர். ... ... ... ... ௧0.

அடிவரவு.— சலம் திண்ணிய அண்டம் கலை மின் பெண்மை விளங்கனி ஆறு வங்கம் சங்கு திரு.

திருமங்கையாழ்வார் திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

---

மூன்றாம்பத்து - பத்தாந்திருமொழி - திருமடந்தை. ப்ரவேஶம்.

ஆஶ்ரிதவிரோதிநிரஸநஶீலனாய், ஆஶ்ரிதருடைய ஸர்வாபராத ஸஹனாய், ஶ்ரிய:பதியாய், ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய், ஸர்வ ஶக்தியான ஸர்வேஶ்வரன், பிராட்டிமாருடனே, ஆஶ்ரிதார்த்தமாக அரிமேயவிண்ணகரிலே யெழுந்தருளியிருக்கிற ஶீலகுணப்ராசுர்யத்தை யநுஸந்தித்து, "இவனுமொருவனே! இதுவுமொருகுணமே!" [ம௫ என்று நித்யஸூரிகளிட்டு ஸ்தோத்ரம்பண்ணுகிற ஸர்வேஶ்வர னெழுந்தருளி யிருக்கிற அரிமேயவிண்ணகரிலே நீசென்றாஶ்ரயி யென்று திருவுள்ளத்தைக் குறித் தருளிச்செய்கிறார். ... ❀

---

ஆஶ்ரிதவிரோதிநிரஸநஶீலனாய் ஆஶ்ரிதர்க்கு ஆபத்துக்களிலே தவும் ஸ்வபாவனுமான ஸர்வேஶ்வரன், தான் ஶரண்யனாமிடத்தில் புருஷகாரமாம் பிராட்டிமாரோடேகூடவந்து நிற்கிறபடியை யநுஸந்தித்து, நித்யஸூரிகள் "இதொருஶீலகுணப்ராசுர்யமிருந்தபடியென்!" என்று இகழ்ந்திட்டு ஆஶ்ரயிக்கும்படியாக அரிமேயவிண்ணக ரிலே நித்யவாஸம்பண்ணுநின்றான், ஆனபின்பு நீயுமங்கேசென்று அவ னையாஶ்ரயித்து உன்னுடைய குறைகளெல்லாவற்றையும் தீர்த்துக் [உ௫ கொள்ளப்பாராயென்று திருவுள்ளத்தைக்குறித்தருளிச்செய்கிறார். ❀

---

திருமடந்தைப்ரவேஶம்.— ஶ்ரீவைகுந்தவிண்ணகரில் நரஸிம்ஹராமக்ருஷ்ணா வதாரசேஷ்டிதங்கள் முதலானவற்றை யநுஸந்தித்தஆழ்வார், அடுத்த அரிமேய விண்ணகரிலிருக்குமவனையுமநுபவிக்கவேணுமென்னுமாசையால் அவ்வபதாநங்களை மாறிமாறிப்பேசாநின்றுகொண்டு அநுபவிக்கிறாரென்னும் ஸங்கதியை யுட் [கூ௰ கொண்டு, திருமொழியில் ப்ரமேயத்தை உபக்ஷேபிக்கிறார் (ஆஶ்ரிதவிரோதிநிரஸ நேத்யாதி.) இத்திருமொழியில் நரகாஸுரப்ரஹ்லாதிகளை நிரஸித்தபடிகளைப் பற்ற (விரோதிநிரஸநஶீலனாயென்றது.) "கடலைக்கடைந்தமுதமளிக்கும்" "உண்ட பிரான்" என்றும், "சிறுகுறளாய்" என்றும் சொன்ன அபதாநங்களைப்பற்றவருளி ச்செய்கிறார் (ஆபத்துக்களிலேவந்துதவும் ஸ்வபாவனுமானவென்று.) முதற்பாட் டைப்பற்றவருளிச்செய்கிறார் (தானித்யாதி.) ... ... ...

மூ.— திருமடந்தைமண்மடந்தை யிருபாலுந்திகழத்
தீவினைகள்போயகல வடியவர்கட்கென்றும்
அருள்நடந்திவ்வேழுலகத்தவர் பணிய வானோர்
அமர்ந்தேத்தவிருந்தவிடம் பெரும்புகழ்வேதியர்வாழ்
தருமிடங்கண்மலர்கள்மிகு கைதைகள் செங்கழுநீர்
தாமரைகள் தடங்கடொறு மிடங்கடொறுந்திகழ
அருவிடங்கள் பொழில்தழுவியெழில் திகழுநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௧.

ப-ரை.— திருமடந்தை - பெரியபிராட்டியாரும், மண்மடந்தை - ஸ்ரீபூமிப்பிராட்டியும், இருபாலும் - இரண்டுபார்ஶ்வங்களிலும், திகழ - ப்ரகாஶிக்க, அடியவர்கட்கு - ஆஶ்ரிதர்களுக்கு, என்றும் - எப்போதும், அருள்நடந்து - க்ருபைபண்ணி, அத்தாலே, தீவினைகள் - கொடியபாபங்கள், போய் அகல - விட்டோடும்படி, இவ் வேழ் உலகத்தவர் - இந்த ஸப்தலோகங்களிலுள்ளாரும், பணிய - ஆஶ்ரயிக்கவும், வானோர் - நித்யஸூரிகள், அமர்ந்து - இஸ்ஸம்ஸாரவிபூதியில்சால்பொருந்தி, ஏத்த - ஸ்தோத்ரம்பண்ணவும், இருந்த - நித்யவாஸம்பண்ணுகிற, இடம் - திவ்யதேசமாய்; பெரும்புகழ் - மஹாப்ரஸித்தரான, வேதியர் - ப்ராஹ்மணர், வாழ்தரும் - வர்த்திக்கிற, இடங்கள் - இடங்களையுடைத்தாய், மலர்கள்மிகு - புஷ்பஸம்ருத்தியையுடைய, கைதைகள் - தாழைகளும், செங்கழுநீர் - ரக்தோத்பலங்களும், தாமரைகள் - தாமரைகளும், தடங்கள்தொறும் - தடாகங்கள் தோறும், இடங்கள்தொறும் - பார்த்த பார்த்தவிடமெல்லாம், திகழ - விளங்கவும், பொழில் - சோலையானது, அருவிடங்கள் - ஆகாஶாவகாஶமுடைய, தழுவி - இடைமடைத்துக்கொண்டு ஓங்கி, எழில்திகழும் - அழகுவிளங்காநின்றுள்ள, நாங்கூர் - திருநாங்கூரில், அரிமேயவிண்ணகரம் - அரிமேயவிண்ணகரில் எம்பெருமானை, மடநெஞ்சே - எனக்குவிதேயமான நெஞ்சே, வணங்கு - ஆஶ்ரயி என்று தந்திருவுள்ளத்தைக்குறித்தருளிச்செய்கிறார். (௧)

முதற்பாட்டு. (திருமடந்தையித்யாதி) புருஷகாரபூதையான பெரியபிராட்டியாரும் ஸ்ரீபூமிப்பிராட்டியாரும் எழுந்தருளியிருந்து விளங்க, தீவினைகளானவை விட்டகல,

முதற்பாட்டு.— (திருமடந்தைமண்மடந்தையிருபாலுந்திகழ) "நகஶ்சிந்நாபராத்யதி" என்று - குற்றத்தைப்பொறுப்பிக்கும்பிரா[டி டியும், "புதவிலேகுற்றந்தன்னைக்காண்கிறதென், பின்னைப்பொறுப்பிக்கிறதென்" என்று, குற்றங்கண்டு பொறுக்கையுங்கூட மிகையாம்படியிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியும், இரண்டிடத்திலும்விளங்க. குற்றத்தைப்பொறுப்பிக்கைக்குப் பிராட்டி; குற்றங்கண்டு கைவிடவொண்ணாதவிடத்தில், "குற்றங்கணக்கிடுகிற விதுக்குஹலமென்" என்றிருக்கும் ஸ்ரீபூமிப்பிராட்டி. (தீவினைகள்போயகல) இப்படிப்பட்டபிராட்டிமாருடைய நித்யஸந்நிதியாலே, ஸர்வேஶ்வரனுக்கு ஆஶ்ரிதவிஷயத்து "க்ஷிபாமி ஸம்ஸாரேஷு நராதமாந்" என்கைக்கு விஷயமற்றிருக்குமாய்த்து.

முதற்பாட்டு.— (திருவித்யாதி.) "தீவினைகள் போயகல" என்றபதத்தைக் கடாக்ஷித்து, பிராட்டிமாரிருவரையும் சொன்னதுக்கு உட்கருத்தையருளிச்செய்கிறார் (நகஶ்சிதித்யாதி.) இவர்களுக்கிவை ஸ்வாபாவிகங்களோவென்ன (குற்றத்தையித்யாதி.)

ஆஶ்ரிதர்க்கு, என்று மருள்நடந்து-நாடோறுமருள்பண்ணி. (இவ்வே மூலகித்யாதி) இந்தஸப்தத்வீபவதியான லோகத்திலுள்ளா ராஶ்ரயிக்க. நித்யஸூரிகள் விடாதேநின்று ஸ்தோத்ரம்பண்ண விருந்தவிடம். (பெரும்புகழித்யாதி ) மிக்கபுகழையுடைய ப்ராஹ்மணர் வாழுகிற[வி]விடம். வாழ்தருமிடங்கள்' (மலரித்யாதி) பூக்கள்மிக்க தாழைகள், செங்கழுநீர், தாமரைகள், தடங்கள்தோறும் பார்த்தபார்த்தவிடமெல்லாம் மிக. (அருவிடம்) ஆகாஶம். ஸூக்ஷ்மதையாலே, அருவிடமென்று-ஆகாஶத்தைச்சொல்லுகிறது. ஆகாஶாவகாஶமெல்லாம் பொழில்வளர்ந்து இப்படிப்பட்டஅழகுவிளங்காநின்றுள்ள நாங்கூர். க.

---

பொறுப்பிக்குமவளும் பொறைக்கு உவாத்தானவளும் எப்போதுமொக்க அருகேயிருக்கையாலே ஆஶ்ரிதர்பக்கல் எப்போது மவனருளே நடந்து, அத்தாலே கொடிய அபராதங்கள் † "இவ்வோவிடங்கள் நமக்கிருப்பிடமல்ல" என்றுவிட்டோட, "இப்படியிருக்கிறவிவனல்லது லோகத்திலேவேறு ஆஶ்ரயணீயரில்லை" என்று ஏழு[ம்]வகைப்பட்டலோகங்களிலுள்ளாருமவனை ஆஶ்ரயிக்க, தேவர்களுங்கூடக்கால்பொருந்தவரிதாம்படியான இஸ்ஸம்ஸாரவிபூதியிலே அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தரான நித்யஸூரிகள்பொருந்தி ஆஶ்ரயிக்கும்படியாக விருக்கிறவிடம்.

(பெரும்புகழித்யாதி) இவனை யநுபவிக்கையே யாத்ரையாம்படி சமைகையாலே மிக்கபுகழையுடைய ப்ராஹ்மணர் வர்த்திக்கிறவிடங்களையுடைத்தாய், மலர்கள் மிகு கைதைகள் துடக்கமானவற்றையுடைத்தாயிருக்கிற திருநாங்கூரென்றுதல்; வாழ்தருமிடங்களிலேயுண்டாய் அவர்களுக்குமுப்பாயிருக்கிற மலர்கள் மிகு கைதைகள் துடக்கமானவற்றையுடைத்தாயிருக்கிற வென்றுதல். பூக்கள் மிக்கிருந்துள்ள தாழைகள், செங்கழுநீர், தாமரைகள், இவை, பரந்தபொய்கைகள்தோறும் அவகாஶங்கள்தோறும் விளங்க. இங்கிடமில்லாமையாலே சோலையானது ஆகாஶத்திற்பரப்பையுடைய இடமடைத்துக்கொண்டோங்கி அழகு விளங்காநின்றுள்ள. அருவிடமென்று-ஸூக்ஷ்மதையைப்பற்ற ஆகாஶத்தைச்சொல்லுகிறது. ... ... ... க.

---

"திருமடந்தை மண்மடந்தை யிருபாலுந்திகழ - அடியவர்கட்கு என்று மருள்நடந்து - இவ்வேழுலகத்தவர் பணிய-இவ்வேழுலகு" இத்யாதியாலே அந்வயம்திருவுள்ளம்பற்றி, தத்ருடீகரணமாக வாக்யார்த்த மருளிச்செய்கிறார் (பொறுப்பிக்குமித்யாதி.)

அவர்களுக்குமுப்பாய் - அவர்கள் பண்ணும் ஸமாராதநங்களுக்குமுப்பாய். "அருவி" என்றதினர்த்தம் (பரப்பையித்யாதி.) ம்ருதீ:பதத்தி என்று தோற்றுகையாலே மூர்த்தமான ஆகாஶத்தை "அரு" என்று அமூர்த்தமாகச்சொல்லக்கூடுமோவென்ன வருளிச்செய்கிறார் (அருவிடமென்றித்யாதி.) ... ... க.

---

† "அபராதங்கள்" என்கிறவிடத்தில் "பாபங்கள்" என்று சில ஸ்ரீகோஶங்களிற காண்கிறது.

மூ.— வென்றிமிகுநரகனுரமது வழியவிசிறும்
விறலாழித்தடக்கையன் விண்ணவர்கட்கன்று
குன்றுகொடு குரைகடலைக்கடைந்தமுதமளிக்கும்
குருமணியென்னாரமுதம் குலவியுறைகோயில்
என்றுமிகு பெருஞ்செல்வத்தெழில்விளங்குமறையோர்
ஏழிசையும் கேள்விகளுமியன்றபெருங்குணத்தோர்
அன்றுலகம் படைத்தவனேயனையவர்கள் நாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௨.

---

ப-ரை.— வென்றிமிகு-ஜயம்மிக்க, நரகன்-நரகாஸுரனுடைய, உரம்-பலம், அழிய - நசிக்கும்படி, விசிறும் - வீசாநின்றுள்ள, விறல் - மிடுக்கையுடைய, ஆழி-திருவாழியை, தடம் - பெரிய, கையன்-திருக்கையிலேயுடையனாய், அன்று - கடல் கடைந்து அம்ருதம்வாங்கித் தரவேணுமென்று தேவஜாதி அர்த்திக்கவன்று, விண்ணவர்கட்கு - இந்த்ராதி தேவர்களுக்காக, குன்று கொடு - மந்தரபர்வதத்தை நட்டு, குரைகடலை - கோஷிக்கிற ஸாகரத்தை, கடைந்து - மதநம்பண்ணி, அமுதம் - அம்ருதத்தை, அளிக்கும் - அவர்களுக்கு க்ருபைபண்ணின, குருமணி - ச்லாக்யமான மணிபோன்ற,என்ஆர் அமுதம்-என்னுடைய அத்ருப்தாம்ருதமானவன், குலவி உறை - விரும்பிவர்த்திக்கிற, கோயில் - திவ்யஸ்தாநமாய்; என்றும் - ப்ரதிதிநமும், மிகு-மிகுத்துவருகிற,பெருஞ்செல்வத்து-நிரவதிகஸம்பத்தையுடையதாய், எழில்விளங்கும்-அழகுவிளங்காநிற்பதாய், மறையோர்-வேதத்தையதிக்கரகரித்திருப்பாராய்,ஏழ்இசையும்-ஸப்தஸ்வரங்களும்,கேள்விகளும்-மற்றுமுண்டான அங்கோபாங்கங்களும், இயன்ற-அதிசரித்த, பெருங்குணத்தோர்-மஹாகுணப்ரசுரராய், அன்று—, உலகம் படைத்தவனே அனையவர்கள் - ஜகத்ஸ்ருஷ்டிபண்ணின ப்ரஹ்மாவைப் போலே ஸாபாநுக்ரஹஸமர்த்தரான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற,நாங்கூர்—. (௨)

இரண்டாம்பாட்டு. ( வென்றியித்யாதி ) புக்கபோரில் வென்றி மிகும்படிபொரும் நரகனுடையபலமழியவீசும்மிடுக்கையுடையதிரு வாழியைப் பெரியகையிலேயுடையவன். (விண்ணவரித்யாதி) இந்த்ராதிகளுக்காக மந்தரபர்வதத்தைக் கடலில்நடுநெருசிலே நட்டு அது கதறக்கடைந்து அவர்களுக்கு அம்ருதத்தைக்கொடுத்தருளும்.

---

இரண்டாம்பாட்டு.—(வென்றியித்யாதி)புக்கபுக்க துறைதோறும் வெற்றிகொள்ளக்கடவனாய் இந்த்ராதிகள் குடியிருப்பழித்துத்திரிகிற நரகாஸுரனுடைய மிடுக்கழியும்படியாக வீசாநின்றுள்ள மிடுக்கையுடைய திருவாழியைத்திருக்கையிலேயுடையவன். நரகாஸுரனைநிரஸித்து தேவஜாதிக்குக்குடியிருப்புப் பண்ணிக்கொடுத்துவிட்ட வளவன்றிக்கே, அவர்கள் "எங்களுக்குக் கடல் கடைந்து அம்ருதத்தைவாங்கித்தரவேணும்" என்ன ; அவர்களுக்காக மந்தரத்தைநட்டு, கோஷத்தையுடைத்தாயிருக்கிற கடலைக்கடைந்து, அவர்களுக்கு அம்ருதத்தைக் கொடுத்தவன்.

---

இரண்டாம்பாட்டு.— (வென்றியித்யாதி.) முதற்பாட்டிற்சொன்ன தீவினைகள் போயகலப் பண்ணுகைக்குறுப்பான விரோதிநிரஸநசீலதையையும், ஏழுலகத்தவர் பணிகைக்கு உபயுக்தமான உதவிகளையும் மேற்பாட்டுக்களிலே யருளிச்செய்யக்கோலி, அதில், கீழ்த்திருமொழியில் "ஆமருதசினத்தில்" என்கிறபாட்டிலும் முதற்பாட்டிலும் ப்ரஸ்துதமான நரகநிரஸநத்தையும் அம்ருதமதநத்தையுமருளிச்செய்கிறரிப்பாட்டிலென்று ஸங்கதி.

"உரமது" என்றவிடத்தில் உத்கர்ஷத்தையருளிச்செய்கிறார் (இந்த்ராதிகளித்யாதி.)

மூ.— உம்பருமிவ்வேழுலகுமேழ்கடலுமெல்லாம்
உண்டபிரானண்டர்கள்முன்கண்டுமகிழ்வெய்த
கும்பமிகுமதயானைமருப்பொசித்துக் கஞ்சன்
குஞ்சிபிடித்தடித்தபிரான்கோயில் மருங்கெங்கும்
பைம்பொனொடு வெண்முத்தம் பலபுன்னைகாட்டப்
பலங்கனிகள் தேன்காட்டப் படவரவேரல்குல்
அம்பனையகண் மடவார்மகிழ்வெய்துநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௩.

ப - ரை.— உம்பரும் - தேவர்களும், இவ்வேழுலகும் - இந்தஸப்தலோகங்களும், ஏழ்கடலும் - ஸப்தஸமுத்ரங்களும், ப்ரளயத்தில் நோவுபடப்புக அவை நசியாதபடி, எல்லாம் - இவையெல்லாவற்றையும், உண்ட - அமுதுசெய்த, பிரான் - உபகாரகனாய், க்ருஷ்ணனாய்வந்தவதரித்து, அண்டர்கள் - இடையர்கள், கண்டு மகிழ்வெய்த - கண்டுகந்தும்படி, முன் - அவர்கள்முன்னே, கும்பமிகு - குடம்போன்ற பெரிய மஸ்தகத்தையுடைய, மதயானை - மதமுதித்தமான குவலயாபீடத்தின், மருப்பு - கொம்பை, ஒசித்து - முறித்து, கஞ்சன் - கம்ஸனுடைய, குஞ்சி பிடித்து - மயிரைப்பிடித்து, அடித்த - தலைகீழாகத்தள்ளி முதுகிலேஅறைந்து அவனை முடியச்செய்த, பிரான் - உபகாரகனுடைய, கோயில் - ஸ்தாநமாய்; மருங்கு எங்கும் - பக்கமெல்லாம், பலபுன்னை - பலவானபுன்னைகள், மொட்டும் பூவுமாய்ப் பூத்து நின்று, பைம்பொனொடு - அழகியபொன்னையும், வெண்முத்தம் - வெளுத்தமுத்துக்களையும் கூட்டினாற்போல், காட்ட - காணப்பட, பலங்கனிகள் - பலாப்பழங்கள், தேன்காட்ட - மதுசொரிந்துகாட்ட, படம் - படத்தையுடைய, அரவு எர் - ஸர்ப்பம்போலும் அழகிய, அல்குல் - நிதம்பத்தையும், அம்பு அனைய - சரங்கள் போலும், கண் - கண்களையுமுடைய, மடவார் - ஸ்த்ரீகள், அவற்றைக்கண்டு, மகிழ்வெய்தும் - ஸந்தோஷிக்கிற, நாங்கூர்—. ... ... ... (௩)

குருமணி—ச்ரேஷ்டமான மணிபோன்றபடி. என்னாரமுதம்............
............ கோயில். (என்றுமிகுவிழ்யாழ்) நாள்செல்ல நாள்செல்ல மிக்கு வாராநின்ற ஐச்வர்யத்தையும் அழகு விளங்காநின்ற மறையும் ஸப்தஸ்வரங்களும் இவற்றில் ப்ரவணத்தாலேசேர்ந்த ஆத்மகுணமுடையராய். (அன்றுலகமிந்யாழ்) ப்ரஹ்மாவைப்போலே ஸாபாநும்ரஹஸமர்த்தரான ப்ராஹ்மணர் வர்த்திக்கிற. ... ... ௨.

(குருமணி) அவர்கள் "நீவேண்டா, எங்களுக்கு உப்புச்சாறமையும்" என்ன; பெருவிலையனை தன்படியொன்றும் பாராதே, தன்தோள் நோவும்படி கடலைநெருக்கிக்கடைந்து அவர்களுக்கு அம்ருதத்தை உபகரித்தவன். (என்னாரமுதம்) அவர்களம்ருதம்போலன்றிக்கேதம்முடைய அம்ருதமிருக்கிறபடி. கொண்டாடிக்கொண்டுவர்த்திக்கிறதேசம்.

(என்றுமிக்யாழ்) நாள்செல்ல நாள்செல்ல மிக்குவாராநின்றுள்ள நிரவதிகஸம்பத்தையுடையராய், அத்தாலே அழகுவிளங்காநிற்பாராய், வேதத்தைக்கரைகண்டிருப்பாராய், ஸப்தஸ்வரங்களையும் மற்றுமுண்டான அங்கங்களையும் "இவர்களில் மேற்பட அதிகரித்தாரில்லை" என்னும்படி அதிலுண்டான வாஸனையாலே ஆத்மகுணபரவசருமாய், தனித்தனியே ஜமதக்னிஷ்டிகளுமருமானவர்கள் வர்த்திக்கிற திருநாங்கூரில். ... ... ... ... ... ௨.

ச்ரேஷ்டமானமணி - ஸ்லாக்யமான மணியென்றும், அர்யமருளிச்செய்கிறார் (அவர்களித்யாதி.) "குலவி" என்றதுக்கர்த்தம் (கொண்டாடிக்கொண்டென்றது.) (௨)

மூன்றாம்பாட்டு. (உம்பருமித்யாதி) தேவஜாதியும் ஸகலலோகங்களும் ஸப்தஸமுத்ரங்களும் ப்ரளயத்திலே நசியாதபடி அமுதுசெய்த உபகாரகன். அண்டர் - இடையர், கண்டுகக்க, க்ருஷ்ணனாய்வந்தவதரித்து, குடம்போன்ற பெரியமஸ்தகத்தையுடைய மதமுதிதமான குவலயாபீடத்தின்கொம்பை முறித்து, கம்ஸன்மயிரைப்பிடித்து விழவிட்டு, அவனைத்தகர்த்த உபகாரகன். கோயிற்பக்கமெல்லாம். (பைம்பொனித்யாதி) அழகியபொன்னுடனே வெண்முத்தைப்புன்னைகாட்ட, பலாப்பழங்கள் தேன்சொரிய. (படவரவித்யாதி) அரவின்படத்தையொத்த அல்குலையும் அம்புபோன்ற கண்ணையுமுடையராயிருக்கிற ஸ்த்ரீகள், "இன்னதிலே யின்னதுண்டாகக்கடவது என்று வ்யவஸ்தையின்றிக்கேயிருந்ததீ!" என்று இவைகண்டு ஆஶ்சர்யப்படுகிறவூர். ... ... ... ... ... ௩.

---

மூன்றாம்பாட்டு.— (உம்பருமித்யாதி) தேவஜாதியும், இந்த ஏழுவகைப்பட்டலோகங்களும், இத்தைச் சூழப்போந்திருக்கிற கடல்களேழும், இவையடைய ப்ரளயத்திலே நோவுபடப்புக வயிற்றிலே வைத்துநோக்கின உபகாரகன்; க்ருஷ்ணனாய்வந்தவதரித்து இடையர் கண்டு ப்ரீதராம்படியாக, குடம்போலே பெரியமஸ்தகத்தையுடைத்தாய் மதமுதிதமாயிருந்துள்ள குவலயாபீடத்தினுடையகொம்பைமுறித்து, அநந்தரம் கம்ஸனுடைய மயிரைப்பிடித்துத் தலைகீழாகத்தள்ளி முதுகிலே யறைந்து அவனையழியச்செய்த உபகாரகனுடைய கோயில்.

பரிஸரமடைய. (பைம்பொனொடுவெண்முத்தம்பலபுன்னைகாட்ட) புன்னைகளானவை மொட்டும்பூவுமாய்ப்பூத்துநின்றபோது பொன்னிலே முத்தையழுத்தினாப்போலே காட்டாநின்றது; பலாப்பழங்கள் தேன் காட்டாநின்றது; படத்தையுடைத்தான அரவுபோலே அழகிய அல்குலையுமுடையராய், அம்போடொத்த கண்களையுமுடையரான ஸ்த்ரீகளானவர்கள், "இன்னபோதின்னது, இன்னதிலின்னதுண்டாமென்னும் வ்யவஸ்தையின்றிக்கே யிருந்ததீ!" என்று அவற்றைக்கண்டு த்ருப்தைகளாகிற. ... ... ... ... ௩.

---

மூன்றாம்பாட்டு.— (உம்பரித்யாதி.) கீழ்த்திருமொழியில் "அண்டமும்" என்கிறபாட்டில் - ஆபத்ரக்ஷணமும், "வெண்மைமிகு" என்கிறபாட்டில் - ப்ரஸ்துத பூதநாநிரஸநத்தால் அவனோடொத்த கம்ஸநிரஸநமும் திருவுள்ளத்தில் தோன்றி, அவற்றையிப்பாட்டிலே யருளிச்செய்கிறாரென்று முதற்பாட்டோடே ஸங்கதி.

"அண்டர்கள்" என்றதினர்த்தம் (இடையரென்றது.)

"ஏர்" என்றதினர்த்தம் (அழகியவென்றது.) "காட்ட - மகிழ்வெய்தும்" என்ற வர்த்தமாநநிர்தேசத்தால் - எப்போதும் பழுத்து மதுசொரிந்திருக்குமென்கை ஒலிக்கையாலே யருளிச்செய்கிறார் (இன்னபோதின்னதென்றது.) "புன்னை-பொன்-முத்தம் - காட்ட" என்கையாலே (இன்னதிலின்னதென்றது.) ... ௩.

நாலாம்பாட்டு.— (ஓடாதவித்யாதி.) கீழ்த்திருமொழியில் முதற்பாட்டிலும் இரண்டாம்பாட்டிலும் ப்ரஸ்துதமான நரஸிம்ஹாவதாரத்தாலே - விரோதிநிரஸநமும் ஆஶ்ரிதரூபத்துக்குத்தன்னையமையுமருளிச்செய்கிறாரென்று, இதுக்கும்முதற்பாட்டோடே ஸங்கதி.

மூ.—ஓடாதவாளரியினுருவமதுகொண்டன்
றுலப்பில்மிகு பெருவரத்தவிரணியனைப்பற்றி
வாடாதவள்ளுகிரால்பிளந் தவன்றன்மகனுக்
கருள்செய்தான்வாழுமிடம் மல்லிகைசெங்கழுநீர்
சேடேறுமலர்ச்செருந்தி செழுங்கமுகம்பாளை
செண்பகங்கள் மணநாறும் வண்பொழிலினூடே
ஆடேறு வயலாலைப்புகைகமழுநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௪.

---

ப - ரை.—அன்று-ப்ரஹ்லாதனைநிர்ப்பந்திக்கிறகாலத்திலே; ஓடாத - ஹிரண்யனுடைய பலத்தைக்கண்டு பிற்காலியாத, ஆளரியின்உருவம் கொண்டு - நரஸிம்ஹமானவடிவைக்கொண்டு, உலப்புஇல்-ஸங்க்யாரஹிதமான, மிகுபெருவரத்த-மிகவும் பெரியவரங்களையுடைய, இரணியனை-அந்தஹிரண்யனை, பற்றி-பிடித்து, வாடாத - வளையாத, வள் - தீக்ஷ்ணமான, உகிரால் - நகங்களால், அவன்மார்வை, பிளந்து - இருபிளவாம்படிபண்ணி, அவன்றன்மகனுக்கு - அவன்பிள்ளையான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு, அருள் செய்தான் - அருளைப்பண்ணின ஸ்வாமி, வாழும் இடம்-வர்த்திக்கிற ஸ்தாநமாய்; மல்லிகை - மல்லிகைகளும், செங்கழுநீர் - ரக்தோத்பலங்களும், சேடேறுமலர் - திரளப்பூத்தபூவையுடைய, செருந்தி-சுரபுன்னைகளும், செழு - அழகிய, கமுகம்பாளை - பாக்குப்பாளைகளும், செண்பகங்கள் - செண்பகப்பூக்களும், மணம்நாறும் - பரிமளம்கமழுகிற, வண்பொழிலினூடே - அழகிய சோலையினடுவே, ஆடேறுவயல்-கரும்புஆடுகைக்காக ஏறினவயலில், ஆலைப்புகை கமழும் - ஆலைப்புகைபரிமளிக்கிற, நாங்கூர்—. ... ... (௪)

---

நாலாம்பாட்டு. (ஓடாதவித்யாதி) ஹிரண்யனுடைய வலத்தைக் கண்டு பிற்காலியாத நரஸிம்ஹமான வடிவைக்கொண்டு, முடிவில்லாத தேவர்கள்கொடுத்த வரத்தையுடைய ஹிரண்யனைப்பிடித்து. [உரு (வாடாதவித்யாதி) வளையாதவுகிராலே அவன்மார்வைப்பிளந்து அவன் மகனுக்கு அருள்செய்தான் வாழுமிடம்.

---

நாலாம்பாட்டு.— (ஓடாதவித்யாதி) ஹிரண்யனுடைய முரட்டுடலைக் கண்டால் பிற்காலியாதபடியான நரஸிம்ஹத்தினுடையவெவடிவு ஒன்றுதல்; அன்றிக்கே, நாட்டில்நடையாடாத நரஸிம்ஹமென்னு[டைய] ஒன்றுதல். (உலப்பில்)அஸங்க்யேயமாய் ஓரோவரங்களே முடிவுகாணவொண்ணாதபடியாயிருப்பதாய், வரங்கொடுத்த தேவதைகளுக்குங்கூடக் குடியிருப்பரிதாம்படிபெரியவரத்தையுடையஹிரண்யனைப்பற்றி. (வாடாத) ஹிரண்யனுடைய முரட்டுடலிலே தைத்தால் வளையக்கடவதன்றிக்கே கூர்மைமிக்கிருக்கிற திருவுகிராலே இரண்டுகூறும்படி பிளந்து, அவன்பக்க லிழவுதீரும்படி "அவன்மகன்" என்று ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கலிலே அருளைப்பண்ணினவன் வர்த்திக்கிற தேசம்.

---

"மிகு" என்றதுக்குத்தாத்பர்யம் (ஓரோவித்யாதி.) உகிருக்குவாட்டமாவது-வளைகையென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஹிரண்யனுடையவித்யாதி.) அவன் பக்கலிழவுதீரும்படி யென்றது-ஹிரண்யன் தன்னருளுக்கு விஷயமாகாமல் முடிந்தானே! என்னும் திருவுள்ளத்தில் குறைதீரும்படியென்றபடி.

௫.—கண்டவர்தம் மனம்மகிழ மாவலிதன் வேள்விக்
களவில்மிகுசிறுகுறளாய் மூவடியென்றிரந்திட்
டண்டமுமிவ்வலைகடலுமவனிகளுமெல்லாம்
அளந்தபிரானமருமிடம் வளங்கொள்பொழிலயலே
அண்டமுறு முழவொலியும் வண்டினங்களொலியும்
அருமறையினொலியும் மடவார்சிலம்பினொலியும்
அண்டமுறு மலைகடலினொலிதிகழுநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௫

ப - ரை.—கண்டவர்தம்மனம்-கண்டவர்களெல்லாருடைய நெஞ்சும், மகிழ-ஆநந்திக்கும்படி, மாவலிதன்வேள்வி - மஹாபலியஜ்ஞவாடத்திலே, களவில்மிகு-க்ருத்ரிமத்தில்மிக்கு, சிறுகுறளாய்-வடிவில்சிறுத்தவாமநனாய், மூவடி என்று-மூன்று அடிகள் தரவேணும் என்று, இரந்திட்டு - யாசித்து, அண்டமும் - ஆகாசத்தையும், இ-இவ்வருகான, அலைகடலும் - அலையெறியாநின்றுள்ள ஸாகரங்களையும், அவனிகளும் - ஸப்தத்வீபமான பூமிகளையும், எல்லாம்-இவையெல்லாவற்றையும், அளந்த-அநாயாஸேந அளந்துகொண்ட, பிரான் - உபகாரகன், அமரும் - நித்யவாஸம் பண்ணுகிற, இடம் - தேசமாய்; வளங்கொள் - ஸம்ருத்தியுடைத்தான, பொழில் அயலே - பொழிலின் அருகே, அண்டம் உறும் - ஆகாசத்திலே சென்று வ்யாபிக்கிற, முழவுஒலியும்-வாத்யகோஷங்களும், மதுபாநம்பண்ணிக் களித்துப்பாடுகிற, வண்டினங்கள் ஒலியும் - வண்டுகளின்த்வநியும், அருமறையின் ஒலியும் - துர்க்ரஹ வேதகோஷமும், மடவார் சிலம்பின்ஒலியும் - ஆடுகிற ஸ்த்ரீகளுடைய சிலம்பின் கோஷமும்; அண்டம் உறும் - அண்டபித்தியிலேசென்று, அலை - அலையெறிகிற, கடலின் ஒலி-ப்ரளயார்ணவகோஷம்போலே, திகழும் - விளங்குகிற, நாங்கூர்—.

---

சேடு - திரட்சி. திரளப்பூத்தசெருந்தி, அழகிய கமுகம்பாளை. (செண்பகமித்யாதி) செண்பகப்பூ மணங்கமழுகிற அழகிய பொழிலின்நடுவே ஆடுகையிலேயுற்றவயலில் ஆலைப்புகைகமழும் நாங்கூர். ௧.

---

மல்லிகை, செங்கழுநீர், சேடு - திரட்சி. திரளப்பூத்த பூவை யுடைத்தான செருந்தி, அழகியகமுகம்பாளை, செண்பகம், இவை பரிமளத்தைப் புறப்படவிடாநின்றுள்ள அழகியபொழிலின் நடுவே ஆடு கைக்காக ஏறினவயலில் ஆலைப்புகையானது கமழுமாய்த்து. ௪.

---

ஆடுகைக்காக - கரும்பாடுகைக்காக. ... ... ... ... ௪.

அஞ்சாம்பாட்டு.—(கண்டவரித்யாதி.) கீழ்த்திருமொழியில் நரஸிம்ஹாவதாரமநுபவித்தவர் ராமாவதாரத்திலேபோய் அநுபவித்தார்; அப்படியே இங்கும்-நரஸிம்ஹாவதாராநுஸந்தாநாநந்தரம் ராமாவதாரத்தில் போகவொருப்பட, நடுவே வழிபறிக்காரரைப்போலே களவில்மிக்க குறள்வந்து நெஞ்சைவஞ்சிக்க, அங்கே அகப்பட்டநுபவித்துக்கொண்டு, தேவர்க்குதவினதும் எல்லார்க்குமுதவித் திருவடிகளைப்பரப்பினமையுமநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி. ஆகையிறே, "கண்டவர்தம் மனம்மகிழ" என்று - தன்னெஞ்சு அபஹ்ருதமானத்தையும் ஸூசிப்பித்தது.

அஞ்சாம்பாட்டு. (கண்டவரித்யாதி) அநுகூல ப்ரதிகூல விபாகமன்றியே கண்டாரெல்லாரும் ஆநந்திக்கும்படி, மஹாபலியுடைய யாகத்திலே க்ஷீத்ரிமம்மிக்க குறளாய், மூன்றடிதா என்றிரந்து. (அண்டமுமித்யாதி) ஆகாசத்தையும் அலையெறிகிற கடலையும் ஸப்தத்வீபமான ஸஷ்டிகளையெல்லாமளந்த உபகாரகன் நித்யவாஸம்பண்ணுகிறவிடம். (வளங்கொளித்யாதி) அழகுடைத்தான பொழிலருகே அண்டத்திலே சென்றுகிட்டுகிற வாத்யகோஷங்களும், மதுபாநம் பண்ணிக்களித்துப் பாடுகிற வண்டுகளின்த்வநியும், வேதகோஷமும், ந்ருத்தம்பண்ணுகிற மடவாருடைய சிலம்பொலியும், அண்டத்திலேறச் செல்ல த்வநிக்கிற கடலோசையாலும் விளங்காநின்றுள்ள நாங்கூர்.

---

அஞ்சாம்பாட்டு.— (கண்டவர்தம்மனம்மகிழ) அநுகூலப்ரதிகூல விபாகமின்றிக்கே கண்டவர்கள் நெஞ்சானது மகிழும்படியாக, மஹாபலியுடைய யஜ்ஞவாடத்திலே, "இவன்தேவகார்யம் செய்கிறான்" என்று தோற்றுதபடியாக "நாட்டில் வாமநர்கள் திருவுலகளந்தருளினவிடம்" என்னும்படியான வாமநவேஷத்தை பரிக்ரஹித்து, "எனக்கு மூன்றடிவேணும்" என்று அர்த்தித்து, ஆகாசத்தையும் அலையெறியாநின்றுள்ள கடலையும் த்வீபங்களையுமெல்லாம் அநாயாஸேந அளந்து கொண்ட உபகாரகன் நித்யவாஸம் பண்ணுகிறதேசம்.

(வளமித்யாதி) ஸம்ருத்தியையுடைத்தாயிருக்கிறபொழிலினருகே, ஆகாசத்தில் அவகாசமுள்ளவிடமெங்கும் போய் வ்யாபரிக்கிற வாத்யகோஷமும், மதுபாநம்பண்ணுகிற வண்டுகளினுடைய த்வநியும், வேதகோஷமும், ஆடுகிறஸ்த்ரீகளினுடைய சிலம்பொலியும், அண்டபித்திபிலே சென்று அலையெறிகிற ப்ரளயார்ணவகோஷம்போலே விளங்காநின்றுள்ள. ... ... ... ... ரு.

---

களவில்-களவில்லை என்னும்படி தோற்றுமவனாய், மிகவும்சிறிசாய்க்குறளான வேஷத்தையுடையனாய் என்று ஸௌந்தர்யம் திருவுள்ளம்பற்றி, ஸௌசீல்யமருளிச்செய்கிறார் (இவனித்யாதி;) லோகத்தில் வாமநர்களெல்லாரும் த்ரிவிக்ரமனோடொப்பாரென்னும்படி மிகவும்குள்ளே யென்றபடி.

"அயல்" என்றதினர்த்தம் (அருகேயென்றது.) "முழவொலி" என்றதினர்த்தம் (வாத்யகோஷமென்றது.) ... ... ... ... ரு.

ஆறும்பாட்டு.— (வாளித்யாதி.) நடுவேவழிபறித்தவர் மாண்வேஷத்தை அநுபவித்தவநந்தரம், "மின்னனைய நுண்மருங்குல்" என்கிறபாட்டிலநுபவித்த ராமாவதாரத்தை அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

மூ.—வாணெடுங்கண்மலர்க்கூந்தல் மைதிலிக்கா விலங்கை
மன்னன்முடியொருபதும் தோளிருபதும்போயுதிர
தாணெடுந்திண்சிலைவளைத்த தயரதன்சேயென்றன்
தனிச்சரண்வானவர்க்கரசு கருதுமிடம் தடமார்
சேணிடங்கொள் மலர்க்கமலம் சேல்கயல்கள்வாளை
செந்நெலொடு மடுத்தரியவுதிர்ந்த செழுமுத்தம்
வாணெடுங்கண்கடைசியர்கள் வாருமணிநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௬.

ப - ரை.—வாள் - வாள்போலே கூரிதாய், நெடு - நீண்ட, கண் - திருக்கண்களையும், மலர் - பூஅணிந்த, கூந்தல் - மயிர்முடியையுமுடைய, மைதிலிக்கா - பிராட்டிக்சாக, இலங்கைமன்னன் - லங்காதிபனான ராவணனுடைய, ஒருபதுமுடியும்- பத்துத்தலைகளும், இருபதுதோளும் - இருபதுதோள்களும், போய் உதிர-உதிர்ந்து போம்படி, தாள்-பூட்டப்பட்டநாணையுடைத்தாய், நெடு-நீண்ட, திண்-திடமான, சிலை - வில்லை, வளைத்த - வளையப்பண்ணின, தயரதன்சேய்-தசரதன்பெற்றமகனாய், என்றன் - எனக்கு, தனிச்சரண் - அத்விதியரக்ஷகனாய், வானவர்க்கரசு - நித்யஸூரிநிர்வாஹகன், கருதும் இடம்-வர்த்திக்கிற ஸ்தானமாய்; தடம் ஆர் - பொய்கைகள் நிறைந்திருப்பதாய், சேண் இடம்கொள் - ஆகாசமுள்ள விடமெங்கும் ஓங்கியிருக்கிற, மலர் - பூக்களையுடைத்தான, கமலம் - தாமரையையும், சேல்கயல்கள்வாளை- சேல்கயல்வாளை என்னும் மத்ஸ்யங்களையும், செந்நெலொடும் - செந்நெலோடே, அடுத்து அரிய - அடுத்துப்பிடித்து அறுக்க, உதிர்ந்த - அவற்றினின்று உதிர்ந்த, செழு - அழகிய, முத்தம் - முத்துக்களை, வாள் - வாள்போலே கூரிய, நெடு-நீண்ட, கண் - கண்களுடைய, கடைசியர்கள்-கர்ஷகஸ்த்ரீகள், வாரும் - வாருகிற, அணி- சுந்தரமான, நாங்கூர்— ... ... ... ... (௬)

ஆறும்பாட்டு. ( வாணெடுங்கணித்யாதி ) வாள்போலே கூர்த்து நெடிதானகண்ணழகையும், மலரையுடைய குழலையுமுடைய பிராட்டிக்காக. ( இலங்கையித்யாதி ) லங்கேச்வரனான ராவணன் பத்துத்தலையும் இருபதுதோளும் உதிர, தாளையுடைத்தாய் நெடிதாய் வலியுடைய சிலையைவளைத்த சக்ரவர்த்திதிருமகன். சேயென்று - பிள்ளை. எனக்கு அத்விதியமான புகலிடம், நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகன் விரும்பிவர்த்திக்கிறதேசம்.

ஆறும்பாட்டு.— (வாளித்யாதி) ஊரியைச்சொல்லுதல்; வாள்போலே யிருக்கிற நெடியதிருக்கண்களையும் மலரையுடைத்தான மயிர்முடியையுமுடைய ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்காக, லங்கைக்கு நிர்வாஹகனாயிருக்கிறவனுடைய பத்துத்தலையும் இருபதுதோளும் உதிரும்படியாக,தாளையுடைத்தாய் நெடிதாய்த் திண்ணிதாயிருக்கிற வில்லை வளைத்த தசரதாத்மஜன். சேய் - பிள்ளை. ( என்றன்தனிச்சரண் ) "தயரதற்குமகன்றன்னையன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்னுமாப்போலேகாணுமிருப்பது. * அயர்வறு மமரர்களதிபதி வர்த்திக்கிற ஸ்தானம்.

. "தாள்"என்று-பூட்டாய்,பூட்டப்பட்ட நாணைச்சொல்லுமென்று கொள்வது.

மூ.— தீமனத்தான்கஞ்சனது வஞ்சனையில் திரியும்
தேனுகனும் பூதனைதன்னாருயிரும் செகுத்தான்
காமனைத்தான் பயந்த கருமேனியுடையம்மான்
கருதுமிடம் பொருது புனல்துறைதுறைமுத்துந்தி
நாமனத்தால் மந்திரங்கள் நால்வேதமைந்து
வேள்வியோடாறங்கம் நவின்று கலைபயின்றங்
காமனத்து மறையவர்கள் பயிலுமணிநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௭.

---

ப - ரை.— தீமனத்தான் - பொல்லாதநெஞ்சையுடையனான, கஞ்சனது - கம்ஸன்ப்ரேரணையாலே, வஞ்சனையில் - க்ருத்ரிமவேஷங்கொண்டு, திரியும் - திரிகிற, தேனுகனும் - தேநுகாஸுரனுடையவும், பூதனைதன் - பூதனையுடையவும், ஆர்உயிர் - ப்ராணனை, செகுத்தான் - முடித்தவனாய், காமனை - தன்னழகால்நாட்டைவெருட்டித் திரியும் மந்மதனை, பயந்த - பெற்ற, கருமேனி உடை அம்மான் - கறுத்ததிருமேனியையுடைய ஸ்வாமி, கருதும் இடம் - விரும்பிவர்த்திக்கிற தேசமாய்; பொருது புனல் - திரையோடேபொராநின்றுள்ள புனலானது, துறைதுறை - ப்ரதிதுறையிலும், முத்துஉந்தி - முத்துக்களைத்தள்ளாநிற்பதாய், நா - நாவாலும், மனத்தால் - மனஸ்ஸாலும், மந்திரங்கள் - பகவந்மந்த்ரங்களும், நால்வேதம் - சதுர்வேதங்களும், ஐந்துவேள்வியோடு - பஞ்சமஹாயஜ்ஞங்களும், ஆறுஅங்கம் - ஷடங்கங்களும், நவின்று - அப்யஸித்து, கலைபயின்று - மற்றுமுள்ளஶாஸ்த்ரங்களுமோதி, அங்குஆம் மனத்து - பகவத்ப்ரவணரான, மறையவர்கள் - வைதிகர், பயிலும் - நெருங்குகையால் வந்த, அணி - அழகையுடைய, நாங்கூர்— ... ... (௭)

---

(சேலினித்யாதி) ஆகாஶாவகாஶமடையத் தனக்கே போரும்படியான பெரியபுக்களையுடைய தாமரை, சேல், கயல்கள், வாளைகள், இவற்றைச்செந்நெலோடே அடுத்துப்பிடித்து அரிய, உதிர்ந்து அழகிய[உடு] முத்துக்களைக் கதிர்பொறுக்க வயலிலே யிழிந்தவர்கள், வாள்போலே நெடுமிக்கூரிய கண்ணையுடையார் வாரி மடியிலிடுநாங்கூர். ௬.

---

பொய்கைகள் நிறைந்திருப்பதாய் ஆகாஶமுள்ள விடமெங்கும் வளர்ந்திருக்கிற மலரையுடைத்தான தாமரை, சேல், கயல்கள், வாளை, இவற்றைசெந்நெலோடே அடுந்தறுக்க, உதிர்ந்த அழகியமுத்துக்களை, கதிர்பொறுக்கவிழிந்தவர்கள் வாருவர்களாய்த்து. ... ௬.

---

பொய்கைகள் நிறைந்திருப்பதாயென்றது - பொய்கையெல்லாம் வ்யாபித்திருப்பதா யென்று தாமரைக்கு விஶேஷணம். முத்துக்கள் தாமரையிலும் மீன்களிலு முண்டென்னும் ப்ரஸித்தியைப்பற்ற வருளிச்செய்கிறார் (அழகியவித்யாதி.)

ஏழாம்பாட்டு.—(தீமனத்தானித்யாதி.)கீழ் ராமாவதாரத்தில் போனவரையும் வஶீகரிக்கும்படியான விரோதிநிரஸந பரம்பரையுள்ளது க்ருஷ்ணாவதாரத்திலே யாகையாலே,கீழ்"கஞ்சன் குஞ்சிபிடித்தடித்தபிரான்"என்றுசொன்னத்தால்த்ருப்தி பிறவாமையாலே,இனி மேற்பாட்டுக்களிலெல்லாம் க்ருஷ்ணசரித்ரங்களை வாய்வந்தபடியே பேசியநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

ஏழாம்பாட்டு. (தீமனத்தானித்யாதி) பொல்லாத நெஞ்சையுடைய கம்ஸன்ப்ரேரணையாலே க்ருத்ரிமவேஷங்கொண்டுதிரிகிற யேறுகனுடையவும் பூதனையுடையவும் நற்சீவனைப்போக்கினவன். (காமனையித்யாதி) காமனைப்பயந்த க்ருஷ்ணன் விரும்பி வர்த்திக்கிறதேசம். திரையோடு திரை பொராநின்றுள்ள புனலானது துறைதோறும் முத்துக்களைத் தள்ளாநிற்பதாய். (நாமனத்தாலித்யாதி) நாவாலும் மநஸ்ஸாலும், ஹவ்யமந்த்ரங்களை, நாலுவகைப்பட்ட வேதம், பஞ்சமஹாயஜ்ஞம், அங்கங்கள் துடக்கமானவற்றைப் பலகாலும் அப்யஸித்து பரிசுத்தியோடுகூடினவர் நெருங்குகையாலேவந்த அழகையுடைய நாங்கூர். ... ... ... ... எ.

எட்டாம்பாட்டு. (கன்றதனாலித்யாதி) கன்றாலேவிளவையெறிந்து, அதிற்பழத்துடனே விளவையுதிர்த்தபிள்ளை. எல்லாராலும் விரும்பப்பட்ட அழகிய காளமேகம்போன்ற வடிவழகையுடையவன், பசுக்களை ரக்ஷிக்கைக்காகக் கல்லெடுத்துக் கல்மாரிகாத்துக் குடக்கூத்தாடினவன் கொண்டாடி வர்த்திக்கிறவிடம்.

---

ஏழாம்பாட்டு.— (தீமனத்தானித்யாதி) தீதான நெஞ்சையுடையனாய் – ஹவ்யத்தத்வம் ஓரிடத்திலே யுண்டென்னப்பெறாத நெஞ்சையுடையகம்ஸன்; அவனுக்குறுப்பாய் க்ருத்ரிமத்தாலே நலிவாராய்த் திரிந்த யேறுகன், பூதனை, அவர்களை முடித்துப்போகட்டவன். அற்றில்வந்தால் காமனுக்குமுத்பாதகனாய், அவனளவல்லாதபடி ஸௌந்தர்யமான திருமேனியையுடையனாயிருக்கிற ஸர்வேச்வரன் விரும்பிவர்த்திக்கிற தேசமாய்த்து.

திரையோடு திரைபொராநின்றுள்ள புனலானது துறைதோறும் துறைதோறும் முத்துக்களைத்தள்ளாநிற்பதாய், நாவாலும் மநஸ்ஸாலும், ஹவ்யமந்த்ரங்கள், நாலுவகைப்பட்ட வேதம், பஞ்சமஹாயஜ்ஞம், அங்கங்கள் துடக்கமானவற்றைப் பலகாலுமப்யஸித்து பரிசுத்தியோடுகூடினவர் நெருங்குகையால்வந்த அழகையுடைய. ... எ.

எட்டாம்பாட்டு.— (கன்றதனாலித்யாதி) கன்றாய்நின்ற அஸுரனைக்கொண்டு விளாவாய்நின்ற அஸுரனைமுடியும்படிபண்ணி லீலாரஸமநுபவித்த செல்லப்பிள்ளை; காமருவப்படுவதாய் – ஆசைப்படப்படுவதான, சீருண்டு – ஸ்வபாவம், அத்தையும், ஸௌகுமார்யமாயிருக்கிற திருமேனியையுமுடையவன், பசுக்களைரக்ஷிக்கைக்காக கோவர்த்தனத்தாலே மழைதடுத்து, மன்றிலே ஸர்வாநுபவயோக்யமாம்படி குடக்கூத்தாடினவன் கொண்டாடிவர்த்திக்கிற தேசம்.

---

விவரணம் (ஹவ்யதத்த்வமித்யாதி.) அங்குஆமனதது-ஹவ்யம் விஷயத்துக்காயிருக்கிற மனத்தென்றாய், அதினர்த்த மருளிச்செய்கிறார் *( பரிசுத்தியோடுகூடினவரென்று.) ... ... ... ... ... ... எ.

எட்டாம்பாட்டு.— (கன்றித்யாதி.) "விளங்கனியை" என்றது பின்னாட்டி பின்னும் சிலகூட்டியநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

மூ.— கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்தகாளை
காமருசீர்முகில்வண்ணன் காலிகள் முன்காப்பான்
குன்றதனால் மழைதடுத்துக் குடமாடு கூத்தன்
குலவுமிடம் கொடிமதிள்கள் மாளிகைகோபுரங்கள்
துன்றுமணிமண்டபங்கள் சாலைகள் தூமறையோர்
தொக்கீண்டித்தொழுதியொடு மிகப்பயிலும்சோலை
அன்றலர்வாய்மதுவுண் டங்களிமுரலுநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. அ.

---

ப - ரை.—கன்றதனால் - வத்ஸாஸுரனாலே, விளவு எறிந்து - விளாவாய்நின்ற அஸுரனை எறிந்து, கனி - அதின்பழத்தை, உதிர்த்த - உதிரும்படிபண்ணி பாலக்ரீடாரஸமநுபவித்த, காளை - நவயௌவநனாய், காமரு - எல்லாராலும்விரும்பப்பட்ட, சீர் - அழகிய, முகில்வண்ணன் - காளமேகம்போன்ற வடிவழகையுடையவனாய், முன் - முன்பே, காலிகள் - பசுக்களை, காப்பான் - ரக்ஷிக்கைக்காக, குன்றதனால் - பர்வதத்தாலே, மழை - வர்ஷத்தை, தடுத்து - நிரோதித்து, குடமாடு கூத்தன் - குடக்கூத்தாடினவன், குலவும் இடம் - கொண்டாடிவர்த்திக்கும் தேசமாய ; கொடி - த்வஜங்களையுடைத்தான, மதிள்கள் - ப்ராகாரங்களையும், மாளிகை - மாளிகைகளையும், கோபுரங்கள் - கோபுரங்களையும், துன்று - நெருங்கின, மணி - மணிமயமான, மண்டபங்கள் - மண்டபங்களையும், சாலைகள் - யாக சாலைகளையுமுடைத்தாய், தூ - பரிசுத்தரான, மறையோர் - ப்ராஹ்மணர், தொக்கு ஈண்டி - கூடித்திரளுகையாலுண்டான, தொழுதியொடு - ஆரவாரத்தால் மிக்கிருப்பதாய், மிகப்பயிலும் - மிகவும் நெருங்கின, சோலை - சோலையிலுண்டான, அன்று அலர்வாய் - அப்போது விகஸித்த செவ்விப்பூவில், மது உண்டு - மதுவை ப்பானம்பண்ணி, அங்கு - அவ்விடத்தில், அளி - வண்டுகள், முரலும் - கானம்பண்ணுகிற, நாங்கூர்—. ... ... ... ... ... (அ)

---

(கொடிமதிளித்யாதி) கொடிகளாலே அலங்க்ருதமான மதிள்கள், கோபுரங்கள், நெருங்கின மணிமயமான மண்டபங்கள், யாகசாலைகள், தூயரான ப்ராஹ்மணர்கூடித்திரண்ட ஆரவாரத்தால் மிக்கிருப்பதாய், மிகவும் நெருங்கினசோலையில் அப்போதலர்ந்த செவ்விப்பூவில் மதுவைப்பருகி வண்டுகள் களித்துப்பாடும். ... ... அ.

---

கொடியையுடைத்தான மதிள்கள், மாளிகைகள், கோபுரங்கள், நெருங்கின மணிகளையுடைத்தான மண்டபங்கள், சாலைகள், இவற்றையுடைத்தாய் ; ப்ராஹ்மணர் கூடித்திரண்ட ஆரவாரத்தால் மிக்கிருப்பதாய், சோலையிலுண்டான செவ்விப்பூவிலே மதுபானம்பண்ணி வண்டுகள் பாடாநிற்பதுமான. ... ... ... அ.

---

சாலைகள் - யஜ்ஞஶாலைகள். ... ... ... ... அ.

ஒன்பதாம்பாட்டு.— (அஞ்சனையித்யாதி.) “ஆய்ச்சியர்வைத்ததயிர்வெண்ணெ யாங்குளிரவமுதுசெய்து” என்றதனைக்கூட்டி, உண்டவனையெல்லாம் சொல்லி யநுபவிக்கிறுமென்றஸங்கதி.

மூ.—வஞ்சனையால் வந்தவள்தன் னுயிருண்டு வாய்த்த
தயிருண்டு வெண்ணெயமுதுண்டு வலிமிக்க
கஞ்சனுயிரதுவுண் டிவ்வுலகுண்டகாளை
கருதுமிடம் காவிரி சந்தகில் கனகமுந்தி
மஞ்சுலவுபொழிலூடும் வயலூடும்வந்து
வளங்கொடுப்பமாமறையோர் மாமலர்கள் தூவி
அஞ்சலித்தங்கரிசரணென் றிறைஞ்சுமணிநாங்கூர்
அரிமேயவிண்ணகரம் வணங்குமடநெஞ்சே. ௯.

ப - ரை.—வஞ்சனையால - க்ருத்ரிமவேஷங்கொண்டு, வந்தவள்தன்-வந்தபூதனையுடைய, உயிர் - ப்ராணனை, உண்டு - க்ரஸித்து, வாய்த்த-அருகேயிருந்த, தயிர் உண்டு - தயிரைப்பாநம்பண்ணி, வெண்ணெயமுது உண்டு-வெண்ணெயை அமுது செய்து, வலிமிக்க - மிடுக்குமிக்கிருந்த, கஞ்சன் உயிரது - கம்ஸனுடைய ப்ராணனை, உண்டு - பக்ஷித்து, இவ்வுலகு - இந்தலோகத்தை, உண்ட - திருவயிற்றிலே வைத்தருளின, காளை-யுவாவானவன், கருதும்இடம்—; காவிரி-காவேரிநதியானது, சந்து - சந்தநமரங்களையும், அகில - அகருவ்ருக்ஷங்களையும், கனகம் - ஸ்வர்ணத்தையும், உந்தி - தள்ளிக்கொண்டுவந்து, மஞ்சுலவுபொழிலூடும் - மேகத்தளவும் ஓங்கின சோலையிலும், வயலூடும் - வயலினுள்ளும், வந்து - ப்ரவேசித்து, வளம்கொடுப்ப - ஸம்பத்தைஉண்டாக்க, மாமறையோர - மஹாவேதிகளான ப்ராஹ்மணர், மாமலர்கள்தூவி - ச்லாக்யமானபுஷ்பங்களை ஸமாப்பித்து, அங்குஅஞ்சலித்து-அங்கே அஞ்சலிபண்ணிக்கொண்டு நின்று,அரிசரண்என்று -"ஹரி உனதிருவடிகளே சரணம்" என்று, இறைஞ்சும் - ஸ்தோத்ரபூர்வகமாக ஆச்ரயிக்கிற, அணிநாங்கூர் - அழகிய திருநாங்கூரில், அரிமேயவிண்ணகரம் வணங்கு மடநெஞ்சே—. (௯)

ஒன்பதாம்பாட்டு. (வஞ்சனையித்யாதி) * * * ௯.

ஒன்பதாம்பாட்டு.— (வஞ்சனையித்யாதி) க்ருத்ரிமத்தையுடையளாய் வந்த பூதனையுயிரையுண்டு, கிட்டின தயிரை அமுதுசெய்து, வெண்ணெயமுதுண்டு – வெண்ணெயை அமுதுசெய்து, பெருமிடுக்கனாயிருக்கிற கம்ஸனுடைய வுயிரை உண்டு. அநுகூலர்ப்பாருடைய த்ரவ்யத்தோடு ப்ரதிகூலருடைய ப்ராணன்களோடு வாசியற்றிருந்தபடி. (இவ்வுலகுண்ட) வெண்ணெயமுதுசெய்த வேயாபாதியாய்த்து ஐஹமியையெடுத்து வயிற்றிலேவைத்ததுவும்.

(காவிரியித்யாதி) காவிரியானது, சந்தநம், அகில், பொன், இவற்றைக்கொடுவந்துதள்ளி, மேவபடித்தளவும் செல்லவோங்கின பொழிலூடும் வயலுள்ளிட்டும்வந்து நிரவதிகஸம்பத்தையுண்டாக்க, ஆற்று வரவைக்கண்டு ப்ராஹ்மணர் புஷ்பங்களைத்தூவி அஞ்ஜலிபண்ணி, "ஸர்வேஶ்வரன் நம்முடைய ஜீவநத்துக்குறுப்பாக வரவிட்டான்" என்று அவனை ஆச்ரயித்துவர்த்திக்கிற. ... ... ... ௨௦.

தயிர்வெண்ணெய்களோடொக்க உயிரைவிடங்களை ஊணாகச்சொல்லுகையெங்ஙனேயென்ன வருளிச்செய்கிறார் (அநுகூலேத்யாதி.) ... ... ௯.

* * * இங்குவிட்டுப்போனவ்யாக்யானம் கோசாந்தரத்திலில்லை. ௯.

மூ.—சென்றுசினவிடையேழும் படவடர்த்துப் பின்னை
செவ்வித்தோள்புணர்ந்துகந்த திருமால்தன்கோயில்
அன்றயனுமரன்சேயு மனையவர்கள்நாங்கூர்
அரிமேயவிண்ணகரமமர்ந்த செழுங்குன்றை
கன்றிநெடுவேல்வலவன் மங்கையர்தம்கோமான்
கலிகன்றியொலிமாலை யைந்தினொடுமூன்றும்
ஒன்றினொடுமொன்றுமிவை கற்றுவல்லா ருலகத்
துத்தமர்கட்குத்தமரா யும்பருமாவர்களே. ௧0.

ப - ரை.— ஏறுதழுவினார்க்கு ஸ்ரீஜநகராஜன்திருமகளைக்கொடுக்கக்கடவோமென்று எருதுகளைநிறுத்த, சென்று - தானே அங்கே சென்று, சினம்-க்ரௌர்யத்தையுடைய, ஏழுவிடையும் - ஏழுரிஷபங்களையும், படஅடர்த்து-முடியும்படி பொருது, பின்னை-நப்பின்னைப்பிராட்டியுடைய, செவ்வித்தோள்-அழகியதோளோடே, புணர்ந்து - ஸம்ச்லேஷித்து, உகந்த - ஸந்தோஷித்த, திருமால்தன் - ஸ்ரீய:பதி வர்த்திக்கிற, கோயில்-ஸ்தாநமாய்; அயனும்-ப்ரஹ்மாவையும், அரன்சேயும்-ருத்ரன் பிள்ளையான ஸுப்ரஹ்மண்யனையும், அனையவர்கள் - ஒத்தசாந்தியையும் அழகையுமுடையவர்கள் வர்த்திக்கிற, நாங்கூர் - திருநாங்கூரில், அரிமேயவிண்ணகரம்-அரிமேயவிண்ணகரத்தில்,அமர்ந்த-நித்யவாஸம்பண்ணுகிற,செழுங்குன்றை-அழகிய பர்வதம்போன்ற ஸ்வாமியை ; கன்றிநெடுவேல்வலவன்-கறைமாறுதநெடியவேலைக் கையிலேயுடையராய், மங்கையர்தம்கோமான் - திருமங்கையிலுள்ளார்க்குத்தலைவராய், கலிகன்றி - கலிவைரியான ஆழ்வார், கவிபாடின, ஒலிமாலை - ஒலியுடைய தொடையான, ஐந்தினொடு - க்ருஷ்ணாவதாரங்கள் விஷயமான ஐந்துபாட்டும், மூன்றும் - நரஸிம்ஹவாமநராமாவதாரங்கள் விஷயமான மூன்றுபாட்டும், ஒன்றினொடும் - அர்ச்சாவதாரபரமான முதற்பாட்டும், ஒன்றும் - பலச்ருதியான இப்பாட்டும், இவை - ஆகஇப்பத்துப்பாட்டுக்களையும், கற்று-அப்யஸித்து,வல்லார்-அர்த்தாநுஸந்தாநம் பண்ணவல்லவர்கள், உலகத்து - இஹலோகத்திலே, உத்தமர்கட்கு உத்தமராய் - "எம்மையாளும்பரமர்" என்னும்படியான வைஷ்ணவர்களுக்குத்தலைவராய்,பின்பு, உம்பரும்ஆவர்கள்-நித்யஸூரிகளோடு ஒருகோவையுமாவர். (௧0)

பத்தாம்பாட்டு. (சென்றித்யாதி) ஏறுதழுவினார்க்குக் கொடுக்கக் கடவோமென்று எருதுகளைஸங்கல்பமாகவிட, அங்கேசென்று, சினவிடைகளேழையும்படும்படி பொருது, பின்னையுடைய செவ்வித்தோளுடனே கலந்துகந்த திருமால்தன் கோயில்.(அன்றயனுமரன்சேயும்) ப்ரஹ்மாவும் ருத்ரனும், இவனுடைய பிள்ளை ஸுப்ரஹ்மண்யனையும் ஒத்தவர்கள் நாங்கூரரிமேயவிண்ணகரமமர்ந்த செழுங்குன்றைக்கவிபாடிற்று.

பத்தாம்பாட்டு.— (சென்றித்யாதி) அவைநின்றவிடத்திலே தானேசென்று, சினத்தையுடைத்தாயிருக்கிற ரிஷபங்களேழையும் முடியும்படி அடர்த்து, நப்பின்னைப்பிராட்டியுடைய செவ்வியையுடைத்தான தோளோடே அணைந்துகந்த ஸ்ரீய:பதி வர்த்திக்கிற கோயில். (அன்றித்யாதி) ஸாந்திக்கு ப்ரஹ்மாவும், அழகுக்குஸுப்ரஹ்மண்யனும் ஒப்பாம்படியிருக்கிறவர்கள்வர்த்திக்கிற திருநாங்கூரில்அரிமேயவிண்ணகரமமர்ந்த செழுங்குன்றைக் கவிபாடிற்று.

" "

(வென்றிசெருவேல்வலவன்) ஶத்ருஶரீரங்களிலே தைத்துக் கறை கழுவ அவஸரமின்றிக்கே யிருக்கிற வேலை ஆயுதமாகவுடையராய், திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான ஆழ்வாரருளிச்செய்த ஒலியையுடைத்தான தொடை எட்டுமிரண்டும் பத்தான இவற்றை அப்யஸிக்கவல்லவர்கள், இஹலோகத்திலே வைஷ்ணவர்கள். * பயிலுந் திருவுடையார்யவரேலுமவர் எம்மையாளும் பரமர், அவர்களுக்குத் தலைவராய் பின்னை உம்பருமாவர். ... ... ... ௧0.

நஞ்ஜீயர்திருவடிகளேஶரணம்.

---

(வென்றிசெருவேல்) ஶத்ருஶரீரங்களிலேதைத்துக் கறைகழுவவு மவஸரமின்றிக்கேயிருக்கிற வேலை ஆயுதமாகவுடையராய், திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான ஆழ்வாரருளிசசெய்த ஒலியையுடைத்தான தொடை எட்டுமிரண்டும் பத்தானவிவற்றை அப்யஸிக்கவல்லவர்கள், இஹலோகத்திலே வைஷ்ணவர்கள்; "பயிலுந்திருவுடையார்யவரேலும் - எம்மையாளும் பரமரே" என்னும்படி அவர்களுக்குத் தலைவராய், பின்னை, உம்பருமாவர்கள் - திருவடி திருவனந்தாழ்வானோடே ஒருகோவையாகப் பெறுவர். ... ... ௧0.

அடிவரவு.— திரு வென்றி உம்பர் ஓடாத கண்ட வாள் திமனம் கன்று வஞ்சனை சென்று போது.

திருமங்கையாழ்வார் திருவடிகளேஶரணம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேஶரணம்.

---

இமமத்தில, தந்திருவுள்ளத்தை முன்னிட்டுச்சொன்ன க்ஷீஷ்ணுபதாநங்கள் விஷயமான ஐந்துபாட்டையும், ராஸிம்ஹவாமநராமாபதாநங்கள் விஷயமான மூன்றுபாட்டையும், விஹவவிஷயத்வாவிஶேஷேண க்ரோடீகரித்து (எட்டும் என்றது.) ப்ரஸ்துதமான அர்ச்சாவதாரபரமான முதறபாட்டையும் ஸலீருதியுமாகப்பிரித்தருளிச்செய்தவற்றை ப்ரதிபாத்யவிஷயப்ரதிபாதகதயாக்ரோடீகரித்து (இரண்டுமென்றது.) இங்ஙனன்றாகில், பத்தானவிப்பத்தை எனருல் ஸங்க்யாபரிமாணைமயிலருமையில்லையிறே. ஆக, ஆழ்வாருமிவரும் ஸாபிப்ராயமாக இங்ஙன் ப்ரயோகித்தார்களென்னத்தட்டில்லை. ... ... ... ௧0.

ஜீயர்திருவடிகளேஶரணம்.

---

மூன்றாம்பத்து ஸம்பூர்ணம்.

ஆக, திருமொழி - ௩0 - க்கு, பாட்டு - ௩00.